ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ஆநந்த௵ மாசி௴ [ஸஞ்சிகை 1.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே(அ)நவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஸ்வபாவ பரித்யாகம்.**

ஸங்கீதம் ஸாஹித்யம், சில்பம், சித்ரம், நாட்யம், நாடகம் முதலானவை முற்காலத்தில் பாதகண்டத்தில் நாகரிக லக்ஷணங்களாகக் கொண்டாடப்பட்டன. இவற்றையெல்லாம், இங்கிலீஷ்காரரைப் பஹுமாநிக்க வெண்ணி இந்தியர் துறந்தார்களென்று ஆநந்த குமாரஸ்வாமி எனும் பண்டிதர் மொழிந்தாரெனக் கேள்வியுறுகின்றோம். இவற்றுடன் அத்தகைய பஹுமாந ப்ரயத்நம் நின்றுவிடவில்லை. உண்டி, உடை, நடை, பாவனை முதலான விஷயங்களிலும் இங்கிலீஷ்காரரைப் பஹுமாநிக்க அவர்போல் செய்ய ஆரம்பித்துவிட்டனர். படிப்பது இங்கிலீஷாக முடியவே, பேசுவதும் அந்தப் பாஷையாக வேண்டுமெனும் ப்ரயத்நமு முண்டாயிருக்கின்றது. பிறப்பால் வெள்ளைத் தோல் ஒன்று மாத்ரம் இங்கிலீஷ் படித்தவர்க்கு உண்டாகமாட்டாது.

இதர அம்சங்கள் யாவற்றுள்ளும் இவர் இங்கிலீஷ்காரராகப் பரிணமிக்கப் பரிணமிக்கச் சீர்படுவதாய் எண்ணுகின்றனர்.

ப்ராஹ்மணனாகப் பிறந்த ஓர் சிறுவன் தலையின் மயிரெல்லாம் வளர்த்துக் கத்திரித்துச் சித்திரித்து அழகுபெற்றதாய் எண்ணிக்கொண்டு தந்தைமுன் வந்து நின்றானாம். தந்தை அவனை நோக்கிப் பிள்ளாய்! இப்படிச் செய்யலாமா? என்றனராம். பேசினால், மீசை வைத்துக்கொள்வேன், என்று சொன்னான், சிறுவன். தந்தை மௌனம் வஹித்தனராம். பின்னொரு நாள் வாய் நின்று பீடியின் தூமம் வெளிக்கிளம்பத் தந்தைமுன் விளங்கினானாம். இது உனக்குத் தகாதென்றனராம் பெற்றவர். பேசினால், புகையிலைச் சுருட்டை வாயில் கொண்டு அதன் தூமத்தால் உமது முகத்தைச் சுடுவேன் என்றானாம் குமாரன். தந்தை யேன் மீளவும் பேசுவார்?

சில தகப்பன்மார் இவ்வளவாகிலும் குழந்தை வ்ருத்திக்கு வந்தானே என்று களிப்பர். குழந்தைகள் வ்ருத்தியடையும்வகை, பாந பக்ஷ்யாதிகள் புதியவையாக அப்யஸிக்கப் படுகின்றனவாம். அதை இவ்விடம் யோசித்தல் வேண்டாமென்று எண்ணுகின்றோம்.

**இந்திய கலா ஸங்கங்கள்.**

இந்தியாவில் யூநிவர்ஸிடி எனப் பெயர்கொண்ட கலா ஸங்கங்கள் இதுகாறும் வளர்ந்தபடியை உகக்காமல், இராஜாங்கத்தவரும், அறிந்தவரெனக் கொண்டாடப்பட்ட பெரிய மனிதர்களும், அவற்றிற்கு நூதநமான ஆகாரங்களை அமைக்க நினைக்கின்றார்கள். இந்த விஷயத்தில், தத்காலம் இந்தியாவுக்கு ப்ரயோஜநாந்தரத்தை உத்தேசித்து வரவழைக்கப்பட்ட வித்வான் கெட்டஸ் என்பவரை இந்தத் தேசத்துக்குப் பொருந்திய வண்ணம் உத்க்ருஷ்டமான கலாஸங்கம் இருக்கவேண்டிய ப்ரகாரத்தைப் பற்றி ஒரு இந்தியர் கேட்கவே, அந்த வித்வான், தான் பல தேசங்களிலும் கண்ட முறைகளையும், இந்தத் தேசத்தின் அபேக்ஷிதங்களையும் ஆலோசித்து, தமது நண்பர்க்கு ஓர் நிரூபம் எழுதினார். அது ஜனவரி மாதம் 28உ ஹிந்து பத்ரிகையில் ப்ரசுரப்படுத்தப்பட்டது. அதனின்று அவர் மொழிந்த சில விஷயங்களை இவ்விடம் காட்டுகின்றோம்.

11 [illegible] 1915



“கல்வி கற்க இந்தியர் எங்களிடம் ஸர்வப்ரகாரத்தாலும் வரட்டும். அவர் அப்படி வரவேண்டியது ந்யாயமே. பஹு விஷயங்களை நாங்கள் அவர்க்குக் கற்பித்தல் வேண்டும். ஆனால் வேட்டையிலோ, விளையாட்டிலோ, உத்யோகம்செய்தோ, கிறிஸ்தவனாகியோ, எங்களுடைய பரமஸாம்யம் அடைவதற்காக இந்தியர் எங்களிடம் கற்கவேண்டியதென்று யான் மொழிவேனல்லன். இந்தியர் விஷயமாக எங்கட்குள் மரியாதை வளர, விளையாட்டில் எங்களிலும் சிறப்புற்ற ரணஜித்ஸிங் ராஜகுமாரன் காரணமாயினான். புத்தரைப்போல் ஒருவர் எங்கள் தேசம் இப்போது வந்தாலும், இங்கிலீஷ்காரர் இந்தியரை அவ்வண்ணம் மதிக்கமாட்டார். ஆகிலும் ரணஜித்ஸிங் அவரது பாரம்பர்யமான கொள்கைகட்கும், அவர் பெரியோர் பரமபுருஷார்த்தமென விச்வஸித்தவைகட்கும் புறம்பான கல்வியால் மூடப்பட்டவரன்றோ? கல்வியிலும் விளையாட்டிலும் எம்மைப்போல் இந்தியர்களை ஆக்கி, அவர்க்குரிய அபேக்ஷிதங்களில் அவர்க்கு[illegible] அத்ருப்தியை யுண்டாக்குதல், எங்கட்கும் இந்தியர்க்கும் அபாயத்தை விளைவிக்கும். இதற்காக, இந்தியர்க்குக் கல்வியே தாராமல், அஜ்ஞாநத்தை நிலைப்பிக்கச் சிலர் யோசிப்பவரும் உண்டு. அது மூடப்ரயத்நம்”.

“ஆதலால், உண்மையில் ஆழ்ந்ததும், இயல்பாக வளரத்தக்கதுமான இந்திய கல்வி இந்தியர்க்கு அளிக்கத்தக்கது. அவருடைய பாரம்பராகதமான வித்யையுடன், ப்ரயத்ந ஶீலநத்தை ப்ரகாஶிப்பிக்கும் பஶ்சிம வித்யையும் ஒன்றிச் சேர்ந்ததாகில், அது இந்தியாவுக்கு நன்மை தரும்”.

“எங்கள் மநஸ் முக்யமாக விஷயாஸக்தம். உங்களுடையதோ விஶேஷமாக அந்தர்த்ருஷ்டியில் ப்ரவணித்தது. உங்கட்குள்ளும் யுத்தங்களில் ஜயங்கொண்ட ராஜர்களும், உலக வழக்கில் ஜ்ஞாதாக்களும் இருந்தனர். எங்களிலும் தத்வவிசாரத்திலும், தத்வசிந்தநத்திலும் சிறந்தவர் உண்டு. ஆனால், ப்ரயத்நம், அதிகாரம், வர்த்தகம், ராஜதந்த்ரம், செல்வம், அரசாட்சி இவை எங்கட்குக் களிப்பைக் கொடுக்கின்றன. இந்த விதமாகத்தான் எங்கள் சரித்ரம் வளர்ந்தது. ஸாத்விக தர்மங்களும் விவித தர்ஶநங்களும் உங்களை ஆகர்ஷித்தன. எங்கட்கு தநமும் ஆரோக்யமும் வேண்

கள் எங்களில் மிக்கவரே. கண்கள் காணும் அழகும், ஒளியும் எங்கட்குக் களிப்பைத் தருகின்றன; அழகெனப்படுவதின் ஸூக்ஷ்மார்த்தமும், உலகின் இயல் பரிணமிக்கும் ப்ரகாரமும் உங்கள் ஹ்ருதயங்களில் ஆழ்ந்து நிலைத்திருக்கின்றன. பதார்த்த சாஸ்த்ரங்களும், அவற்றால் வஸ்துக்களை அளத்தலும் நிறுத்தலும், பதார்த்தங்களின் பிரிவுகளும், அவற்றின் அம்சங்களை வெவ்வேறு விதமாகப் பரிணமிக்கச் சேர்த்தலும், இன்னும் எங்களுடையதே. எங்களிடம் வந்து இவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள். ஆகிலும் உமது ப்ராசீனமான நுண்ணிய அறிவால் ப்ரக்ருதியெனப் பட்டதின் ஸூக்ஷ்மங்களை உமது முன்னோர் அறிந்தவண்ணம் அறிவதையும், அதை உட்புகுந்து, அதனுடைய ஸர்வாவஸ்தைகளிலும் இடைவிடாது அதனுடன் பொருந்திநின்ற சாச்வதமான சக்திவிசேஷத்தைத் தர்சிக்கும் திறனையும் நீவிர் விடவேண்டாம். ஜ்யாமெட்ரியெனும் அளவுசாஸ்த்ரத்தில் உம்மிலும் யாம் மிகுந்தோம். பீஜகணிதத்தை அராபியர் உம்மிடம் கற்று எமக்குத் தந்தனர். ஈச்வரன் இவ்விதம் நம்மிருவரையும் பிரித்தனன். ஸ்தூலாகாரங்களை நாம் பகுத்தறிவோம். அவற்றின் ஸூக்ஷ்மாம்சம் உங்கள் புத்திக்குப் புலப்படுகின்றது. ஆகாயத்தை நாங்கள் அளந்து ஆள்வோம். காலத்தின் தத்வத்தை நீங்களே பகுத்தறிந்தீர்கள். க்ரீக் பாஷையின் க்ரந்தங்களால் ஐரோப்பியர் ஜ்ஞாநமறிந்தனர். ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களைப் பரிசோதித்து இன்னும் அவர் தத்வநிலைகளைத் தெரிந்துகொள்வார். நம்மிருவர் கல்விகளும் சேராமல் இருவரும் க்லேசித்தோம். வெளிப்படையான வஸ்துக்களில் எமது புத்தியைச் செலுத்தி, ஆத்மாவின் உண்மையை யாம் கண்டுகொண்டோமில்லை. நீங்கள் ஆத்ம தர்சநத்தில் ஆழ்ந்து, உலகத்தை த்யஜித்து மறந்தும் விட்டீர்கள். உலகத்தை யெல்லாம் வசப்படுத்தி, உயிரை நாம் இழந்தோம். மௌநத்தில் நீர் ஆழ்ந்து, உமது ஆத்மாவை ரக்ஷித்தீர்கள். மற்றது அற்றதால் நீங்கள் குறைகொண்டீரில்லை. நாமிருவரும் ஒருவர்க்குரியதை மற்றவர்க் கீந்து, இருவரும் குணப்படல் ந்யாயமன்றோ? இதுவரையில் உமைப் படிப்பிப்பதில் யாம் மோசம் போனோம். இனி ராஜகுமாரர்களைப் பள்ளிக்கூடப் பிள்ளைகளாக்குவதையும், பண்டிதராகத்தக்கவரை பீ-ஏ-க்களாக்குவதையும், பெங்காளிபாபுக்களைக் கணக்குப்பிள்ளைகளாக்குவதையும்,



மோக்ஷப்ராப்தியை இச்சித்தவனாய்க்கொண்டு, தனக்குள் தனது ஆத்மாவைப் பார்க்கின்றான்."

இது ச்ருதிவாக்யம். ப்ராயேண ஐரோப்பியர் தம்முடைய இந்த்ரியங்கள் போனபடி பாஹ்யவஸ்து க்ரஹணத்திலும், தத்பராமர்சத்திலும் சதுரர்களாய் நின்று, அவற்றை ஸ்வாநுபவங்களுக்கு யோக்யமாகச் செய்கின்றனர். நமது முன்னோரோ, ப்ராயேண விஷயங்களினின்றும் தமது இந்த்ரியங்களைத் திருப்பி, அந்தராத்ம தர்சநத்தில் ரமித்து, அதனுடைய ஸ்வரூபப்ராப்தி நிமித்தம் ப்ரயாஸப்பட்டனர். உலகத்தை அடைந்தநுபவிக்கும் முயற்சியில் உயிரை இழக்கப்போகின்ற நம் சிறுவரை நோக்கி, பஹு ஐரோப்பிய வித்வான்கள் மேல்விவரித்த மாதிரியாக மதியளித்தும், ஐரோப்பிய ஸாமாந்யர் ஸஹவாஸத்தால் நமது சிறுவர் ஆத்மநாச முயற்சியை விட்டொழிகின்றாரில்லை.

**ஸஹவாஸ தோஷம்.**

ஸஹவாஸதோஷம் மிகவும் பெரிது. கிறிஸ்டியன் காலேஜில் படிக்கும் பிள்ளைகளில் சிலர் ஓர்கூட்டம் கூடினராம். அந்தக்கூட்டத்தில் ஓர் சிறுவன், (அவன் ப்ராஹ்மணனாகப் பிறந்திருக்கக்கூடும்.) உண்டியையும், உடையையும், நடையையும், நம்பிக்கைகளையும், படிப்பையும், பாஷைகளையும், மதத்தையும், மற்றவையையும், இங்கிலீஷ்க்காரர்போல் ஹிந்துக்கள் மாற்றுவதைப் பற்றிப் புகழ்ந்துபேசி, இவ்வளவு மாறுபாடும் தன்னை அநார்யனாகச் (Denationalize) செய்யாதென்றும் வெளியிட்டானாம். Nationalize என்றால் to give the character and habits of a nation to - என்று பொருள்பொருந்தும்; அதாவது ஒரு ஜாதியருடைய குணங்களையும் ஆசாரங்களையும் மேற்கொளல். ஆதலால் மேற்கூறிய வண்ணம் பேசிய பிள்ளை, தான் மாற்ற இச்சித்த ஸ்வஜாதிக்குரிய குணங்களையும், ஆசாரங்களையும், நம்பிக்கைகளையும் மாற்றிவிட்ட பிறகு, எதனை ஆச்ரயித்துத் தன்பிறப்பைக் காட்டப்போகின்றானோ தெரியவில்லை. அவனது நிறம் வெள்ளைக்காரர் நிறமாகாது; அவனது சர்மமும் கறுத்துத் தான் கிளம்பும். இவற்றால்தான் இவன் இந்தியனாக நிற்றல்கூடும். ஆனால் தாருதத் என்னும் சிறுமியும், காளிசரணபானர்ஜி எனும் பங்காளியும், கிறிஸ்தவராக இருந்தும், இந்தியராக நின்றாரென்று கூறினான். மைகல் மதுஸூதந தத்தரெனும் கிறிஸ்தவரையும் அவன் சொல்லி

டும். நல்ல வீடுகள், நல்ல உணவுகள், இவை என்றும் நிலைத்திருக்க வேண்டிப் பூமியின்கண் விளையும் பொன்னையும் பொருள்களையும் எங்கள் நாட்டிற்குக் கொண்டு சேர்க்கின்றோம். நீங்கள் ஸ்வலாப ஸந்துஷ்டர்கள்; த்யாகத்தால் புசித்துச் சரீரஸுகத்தைத் தேடுகின்றவர்கள். மனிதரையும் ம்ருகங்களையும் நாங்கள் ஜயிக்க இச்சிக்கின்றோம். அவற்றுள் நிற்கும் ஆத்மதத்வத்தை நீங்க ளறிவீர்கள். பொருள்தேடும் வித்யையை நாங்கள் வேண்டுகின்றோம். ஆத்மவித்யையை நீங்கள் அபேக்ஷிக்கின்றீர்கள். பதார்த்த ஶாஸ்த்ரங்கள் கற்றுச் சரீரங்களை நாங்கள் சேதித்தோம். ஸ்தாவரங்களை வகுத்துப் பேரிட்டோம். ஆனால் உங்களது ஆலயங்களில் கூடமாகக் காப்பாற்றப்பட்ட ப்ரதீகங்களில் ஜீவனுடன் கூடிய ஸர்வ வஸ்துக்களுடையவும் ஜந்மம், வ்ருத்தி, க்ஷயம் முதலானவற்றின் ரஹஸ்யங்கள் காப்பாற்றப்பட்டன. ஜநந மரண தர்மங்களை யடைந்தவற்றின் ரூபங்கள் எங்கட்கும், அவற்றின் உண்மையான தத்வங்கள் உங்கட்கும் புலப்படுகின்றன. புல்லினின்று புஷ்பமும், ஓர் குற்றுயிர்நின்று குதிரையும் பரிணமிக்கும் ப்ரகாரங்களனைத்தும் நாங்கள் சொல்வோம். நீங்கள் ப்ரஹ்மத்தினுடைய முதல் நிஶ்வாஸத்தை க்ரஹித்தீர்கள்; ப்ராணிகளின் உத்பத்தி, ஸ்திதி, நாஶம், புநர்ஜநநம் இவற்றின் ப்ரவாஹங்களைப்பற்றி விஶதமாயும் விஸ்தாரமாயும் நீங்கள் விவரித்தபடி மற்றெவரும் செய்ததில்லை. பூமியின் உள்வரிசைகளையும், அவற்றில் மறைந்திருந்த அபூர்வ ஜெந்துக்களின் அமைப்புகளையும் நாங்கள் வெளிப்படுத்தினோம். உங்களுடைய ப்ராசீந க்ரந்தங்களில் புவநங்களின் உத்பத்தி க்ரமங்களைப்பற்றி ப்ரஸ்தாபம் உண்டு. உங்களுடைய பழைய காவ்யங்களையும் ஸாமாந்ய விஶேஷ ஶாஸ்த்ரங்களையும் உமது பெரியோரைப்போல் நீவிரும் கற்று எங்களுடைய நுட்பமான புத்திக்கு விஸ்தாரத்தை உண்டு பண்ணுங்கள்.”

“யந்த்ரங்கள் ஸஹாயத்தினால் விஸ்தரித்த கைத்தொழில்களை உமக்கு நாம் கொண்டுவந்து தந்தோம். காற்றைப்போல் நெய்த நுட்பமான ஆடையும், நிகரற்ற பட்டு வஸ்த்ரங்களும், விலையற்ற ரத்ந கம்பளங்களும் உமக்கு முன்பே உண்டு. சித்ரமெழுதுவதிலும் ப்ரதிமைகள் அமைப்பிலும் உங்களில் யாம் சிறப்புற்றோம். தொன்றுதொட்டு இதுவரையிலும் கட்டிடங்கள் கட்டுவதில் நீங்



வேளாளரைக் கூலியாட்களாக்குவதையும் விட்டொழிவோம். ஒருவர்க்குள்ளதை மற்றவர்க்கீந்து, இருவரும் இருவகையிலும் சிறப்பதைவிட்டு, ஒருவரை மற்றவராக மாற்றுதல் நலமன்று. விஸ்தரித்தும், விசேஷித்தும் உமது முன்னோர்களால் நீண்டகாலமாக ஶ்ரமப்பட்டு ஸாதித்தவையும், உமது தேசத்திற்குப் பொதுவாகவும், அதனிடம் உள்ள ஒவ்வொரு ஸமுதாயத்திற்குத் தனிப்படையாகவும், தாயாக்ரமத்தில் வந்தவையுமான வித்யைகளையும், நாகரிகத்தையும் நீங்கள் த்யாகம் செய்வதற்கும், அழிப்பதற்கும் ஏற்ற ப்ரயத்நம் செய்கின்றவரும், ஆலோசிக்கத் திறனற்றவருமான ஸ்கூல் வாத்யார்கள், காலேஜ் ப்ரோபெஸர்கள், பாதிரிமார்கள், முதலியோர் முன் செய்த வண்ணமும், இன்னும் செய்கின்ற வண்ணமும், உமது ஸமவாயமும், உமக்குள் ஒவ்வொருவரும் ஆத்மகுணங்களைப் பறிகொடுத்து, யாவரும் நாசமடையப்போகும் மார்க்கத்தை நன்கமைத்து, அதனில் உம்மை இழியச்செய்கின்றன. ஆதலால் உமது பழமையைப் பாதுகாத்து, அதை அநுஸரித்து, அதைச் சீர்படுத்தியும், விஸ்தரித்தும் உமக்கது நன்மையளிக்கச் செய்தலன்றோ உமது கலாஸங்கங்களின் கருத்தாக வேண்டும்.”

என்றிவ்விதமாகவும், இன்னும் பலவிதமாகவும், நமக்கு மற்றவை இல்லாத நன்மைகளை ஐரோப்பியரிடம் நாம் அறியவேண்டும் மென்றும், அதனிமித்தம் நமது பெரியோர் ஆர்ஜித்த வித்யாதநத்தையும், ஆத்மகுண பூர்த்தியையும் நாம் பறிகொடாது, அதையும் காக்கும் வண்ணம் நமக்குள் வித்யாவ்ருத்தி யமைய வேண்டு மென்றும் அந்த வித்வான் மனம்பட மொழிந்தனர்.

**வித்யாபேத காரணம்.**

𑌪𑌰𑌾𑌂𑌚𑌿 𑌖𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌤𑍃𑌣𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌃
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 ।
𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍈𑌕𑍍𑌷𑌤𑍍
𑌆𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍 ।

“ஈஶ்வரன் வெளிவஸ்துக்களை ப்ரகாசிப்பிக்கின்றவையாக இந்த்ரியங்களை நிர்ப்பந்தப்படுத்தினார். (அதாவது, ஸ்ருஷ்டித்தார்.) ஆதலால் பாஹ்யவஸ்துக்களைப் பார்க்கின்றனர். அந்தராத்மாவைப் பார்க்கின்றாரில்லை. விவேகியான ஒருவன் கண்முதலான இந்த்ரியங்களை விஷய க்ரஹணத்தினின்றும் விலக்கி, அம்ருதமெனும்

யிருக்கலாம். காளிசரண பானர்ஜியினுடைய இந்த்யத்வம் நாஷனல் காங்க்ரஸ் ஸபையில் மாத்ரம் ப்ரகாசித்தது. மற்ற இருவரும் புஸ்தகங்கள் எழுதுங்கால், ஆர்ய சரித்ரங்களை ஸ்மரித்து உருகிப்போனார்கள். வணங்கப் போகுங்கால் யூதர் கதைகளை நம்பினார்கள். வினைக்குப் பலஸ்தின தேசமும், விளையாட்டிற்கு ஆர்யாவர்த்தமும் அவர்க்கு உதவின. இப்படியன்றோ அச்சிறுவன் ஸ்வஜாதியைக் காக்க உகந்தான்.

அந்தக் கூட்டத்தில் இதர சிறுவர்கள் அவன் எண்ணியபடி எண்ணினாரில்லை யென்பது நமக்குக் கிஞ்சித் ஆப்'வாஸ ஹேதுவாகின்றது. அந்தக் கூட்டத்தில் அத்யக்ஷஸ்தானம் வஹித்த ஆர்தர் டேவிஸ் துரையவர்கள், இங்கிலீஷ் படிப்பதின் பயன் இந்துக்கள் அகாரண விப்'வாஸங்களை (Superstitious beliefs) நிவர்த்திப்பதென்று மொழிந்தனராம். தெரியாத அம்சங்களில் நம்பிக்கையும், அஜ்ஞானத்தில் ஜநித்த விப்'வாஸங்களும் மேலெழுதிய இங்கிலீஷ் சப்தார்த்தமாகின்றன. இந்த விதமான நம்பிக்கைகள் நமக்குத்தான் உண்டோ? ஐரோப்பியர்க்கிலதோ? அவர்க்கு எதைப் படித்து அவை நிவர்த்திக்கப்போகின்றன? இவ்வித விப்'வாஸங்கள் கிறிஸ்தவர் மதக்ரந்தங்களில் பெருக வில்லையோ? இவற்றை நன்றாக அந்தத் துரை யோசித்தாரோ?

மேலே நாம் ஸ்மரித்த சிறுவனைப் பெற்றவர், இவ்வளவு பரிபாகமடைந்த தம் புதல்வனைப்பற்றி என்னெண்ணுவரோ? பெற்றார், வளர்த்தார்; அவனைப் பள்ளிக்கூட மனுப்பி இங்கிலீஷ் கற்பிக்கத் தம் வயிற்றையும் எம்மட்டும் வஞ்சித்தனரோ? எல்லாம் அவனுக்கு ஓர் ஜீவனோபாயம் உண்டாக்கித் தாம் ஸுகிக்க எண்ணிச் செய்தார்களன்றோ? அவன் கிறிஸ்தவனாகி, டொப்பி தரித்துச் சட்டைக்காரனெனத் தம்முன் விளங்கினானாகில் அவர் குடல் கொதிக்காதோ? இதனோடு அவனுக்கோர் கன்னிகையும் பெண்டாட்டியாக இருந்தாளாகில், அவள் மதத்தையோ மானத்தையோ இழக்காமல் உயிர்வாழ்தலுண்டோ? இப்படிக்கன்றோ காலம் பரிணமிக்கின்றது. அதன் கமநத்தை யார் தடுக்கக்கூடும்?



**ப்ராஹ்மணப் பெண்களின் ப்ரௌடா விவாஹம்.**

ப்ரௌடா விவாஹமும், விதவா விவாஹமும், ஆர்யநாட்டில், த்விஜர்க்குள்ளும், அவரை அநுஸரித்து ஆசரித்த மற்றோர்க்குள்ளும், நீண்டகாலமாக இல்லை. இப்படிப்பட்ட ஸ்த்ரீகட்கு விவாஹநிஷேதம் ஶிஷ்டாசாரமாக வழங்கித் தர்மஶாஸ்த்ர ரூபமாகவும் பரிணமித்தது. ப்ராசீந காலங்களில், இந்த ரூபமான விவாஹங்கள் க்வசித் க்வசித் வழங்கி வந்தன. கந்யாவிவாஹம் வைத்ய ஶாஸ்த்ரப்படிப் பெண்கட்கும், அவர் பால்யத்தில் பெறும் ப்ரஜைகட்கும், மிகவும் சரீரதுர்பல ஹேதுவாகின்றது என்றும், பள்ளிக்கூடங்களில் பெண்கள் படிக்கத் தடையாகின்றது என்றும் நிர்ணயித்த சிலர், தத்காலம் ப்ராஹ்மணர்க்குள் ப்ரௌடையான பெண்கட்கு விவாஹம் செய்தால், கோர்ட்டுகளில் அது அங்கீகரிப்படுவது ஸந்தேஹ விஷயமாயிருக்குமென்று யோசித்து, அவ்வித விவாஹம் சட்டப்படிச் செய்யலாமென்று ஏற்படவேண்டியது ஆவஶிகமெனக் கருதி, அதற்காக ஓர் சட்டத்தை அபேக்ஷிக்கின்றனர்.

நமது தேசத்தில் ஶிஷ்டாசாரம் ஏற்பட்டுத்தான் ஸ்ம்ருதிகள் ஏற்பட்டிருக்கவேண்டும். கந்யைகள் தவிர மற்ற ஸ்த்ரீகள் விவாஹ அநர்ஹரென்று யோசித்துத் தான், அவர்க்கு விவாஹத்தை நிஷேதித்திருப்பர். நம்பூரிகளில் ப்ரௌடா விவாஹம் நடக்கின்றது. பங்காளத்தில் குலீநரென்று முன் பெயர் வஹித்த ப்ராஹ்மணர்க்குள்ளும் ப்ரௌடைகள் கல்யாணம் நடக்கின்றது. நம்பூரிகளில் குடிக்கொருவன் மணம்புரிந்து, மற்றோர் ஶூத்ர ஸ்த்ரீகளுடன் ஸம்யோகிக்கலாம் என்னும் கட்டுப்பாடு, நம்பூரி ஸ்த்ரீகள் அனைவர்க்கும் புருஷர் கிடைப்பதற்கு அவகாஶத்தைக் கொன்றது. குலீநர் என்போர்க்கே யாவரும் பெண்களைக் கொடுக்க ப்ரயத்நப்படவே, ப்ரயோஜநம் பெருத்த விடங்களில் குலீந ப்ராஹ்மணர் ஸங்க்யையை மீறிப் பெண்களைக் கொண்டனர். இதன் பலனாக அவருடைய வீடுகளில் பொருள் கொண்டுவரச் சக்தியற்ற பெண்கள், விவாஹமின்றி இருந்துவிட நேர்ந்தது. இவ்விரண்டு காரணங்களும் நம்பூரிகளிலும், பங்காள குலீநர்களிலும் ப்ரௌடையான பெண்களை மணம்புரிவதும், மணமின்றி நிறுத்துவதுமாகிய வழக்கங்களை உண்டுபண்ணின.

[illegible] "ஸ்ரேயோரூபமான மோக்ஷம் வேறு. போகரூபமான ப்ரியங்கள் வேறு. அவை பிந்நங்களான ப்ரயோஜநங்களைத் தருகின்றனவாய்ப் புருஷனைக் கட்டுகின்றன. இப்படி மநுஷ்யனை ஆச்ரயிக்கின்ற ச்ரேயஸ்ஸையும் ப்ரேயஸ்ஸையும் நன்ருக ஆலோசித்துப் புத்திமான் விவேசநம் செய்கின்ருன். அப்படி விவேசநம் செய்து புத்திமான் ப்ரேயஸ்ஸைக்காட்டிலும் வரணீயமென்று ச்ரேயஸ்ஸையே வரிக்கின்ருன். அல்ப புத்தியுடன் கூடினவன் யோகக்ஷேமார்த்தம், (சரீரஸௌக்யத்தையும், பசுபுத்ர தாராதிகளையும் விரும்பி) ப்ரேயஸ்ஸை வரிக்கின்ருன்." இப்படியன்ருே ச்ருதி சொல்லிற்று?

ப்ராஹ்மணரான மஹர்ஷிக்கள் தம் குலத்தினர் ச்ரேயஸ்ஸையே அடையவேண்டுமென்றும், ப்ரியரூபமான காமங்களை த்யஜிக்கவேண்டுமென்றும், கருதித் தமது வம்சஸ்தர்க்குக் கல்பித்த விதிகளை, ப்ரியரூபமான காமங்களை விரும்பியவர்கள், ப்ராஹ்மணத்வத்தை விட்டும், விடாமலுமிருந்துகொண்டு, ப்ராஹ்மணேதர ஸஹாயிகளாய்ப்போந்து, சட்டநிரூபண ஸபையின் அதிகாரபலத்தைக் கைக்கொண்டு, அதிலங்கநம் செய்ய யோசித்தல், கலிபுருஷன் விடம்பநத்தை ப்ரகாசிப்பிக்கின்றதேயொழிய வேறில்லை.

ப்ராக்ருத ஆசாரங்களை அபிமாநித்தவர் அவற்றை விடவேண்டாம்; இந்தச் சட்டம் அவரைப் பாதிக்கவில்லையே எனக் கேட்பாருண்டு. திருப்பதி தேவஸ்தாந ஸ்கூல்கள் விஷயமான சட்டம் ஏற்பட்டது. அதை விரும்பியவர்கள், அந்தக் கோவிலின் மிகுதி த்ரவ்யத்தையும், இதர கோவில்கள் த்ரவ்யத்தையும் ஸ்கூல்கள் நிமித்தம் செலவிட அபேக்ஷிக்கின்றனர்; அவ்விதமாகப் பத்ரிகைகளில் தமது அபிப்ராயத்தை வெளியிடுகின்றனர். வர்ணாச்ரமிகளுடைய தர்மவிஷயமாக ஓர் சிறிய சட்டம் பிறந்ததாகில், பெரிய சட்டம் பிறக்க ப்ரயத்நம் தானே உண்டாகும். அப்படி எந்தச் சட்டமாவது பிறத்தல் யுக்தமா என்பது தான் விசாரம். அது யுக்தமன்று. அதில் உதாஸீநரான கவர்ன்மெண்டார் ப்ரவேசிக்கமாட்டாரென நம்புகின்ருேம்.

# தத்வ விசாரம்.

ஸ்ரீ பாஷ்யகாரரும், [illegible] (இந்த ... ரூபமான ஸம்ஸார நிவ்ருத்தியானது பக்தி ரூபத்தை யடைந்த உபாஸநத்தால் ப்ரீதனான பரமபுருஷன் ப்ரஸாதத்தால் உண்டாகத்தக்கது) என்று அருளிச்செய்கின்ருர். தேசிகனும், நமஸ்ஸப்தார்த்த விமர்சம் செய்யுமிடம், "அவித்யா கர்ம [illegible] ப்ரக்ருதி ஸம்பந்தாதி ரூபமான ஸர்வாநிஷ்டமும் அத்யந்த நிவ்ருத்தமாக வேணுமென்று அபேக்ஷித்ததாயிற்று. இப்படி அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்தித்தால் இஷ்டப்ராப்தியை அபேக்ஷிக்க வேணுமோ? * * *. [illegible] * * * [illegible] என்று சொல்லுகிறபடியே இஷ்டப்ராப்தி தானே வாரோதோ என்னில், * * * 'தன் அபராதத்தாலே ஸ்வதஃப்ராப்தமான தேவை (கைங்கர்யத்தை) இழந்து கிடக்கிற இவன் என்கூறு நான் பெற வேணும்; அதற்காக என் அபராதத்தைப் பொறுத்தருள வேணும் என்று அபேக்ஷிக்கையில் விரோதமில்லை. இத்தால் ப்ரதிபந்தக நிவ்ருத்தியில், மாணிக்கத்தொளியும் * * * நியதையான ஈச்வரேச்சையாலே பரம்புமாபோலே, இங்கும் ஸ்வாபாவிகமான ஜ்ஞாந விகாஸாதிகள் ஸஹஜகாருண்ய ரூபையான ஈச்வரேச்சையாலே வருகின்றன வென்னுமிடம் தோற்றுகிறது"

இத்தகைய விஶேஷஹேதுக்கள் இல்லாமலிருந்தால், நம்பூரிகளுக்குள்ளும், பங்காள குலீந ப்ராஹ்மணர்க்குள்ளும், அந்யத்ர த்ருஷ்டமான ஶிஷ்டாசாரம் வழங்கிவந்திருக்கக்கூடும். ஆதலால் அவர் வழக்கத்தைக்கொண்டே அதை ஸர்வத்ர மாற்ற முயல்வது யுக்தமன்று.

ஆனால் ஸ்த்ரீகளுக்கும், ப்ரஜைகட்கும் சரீர தௌர்பல்யாதி ஸம்பவத்தை யோசித்தும், ஸ்த்ரீகட்கும் தக்க வித்யாப்யாஸத்துக்கு அவகாஶம் தரும்படியாகவும், தத்கால வழக்கத்தை மாற்றக்கூடாதோ வென்னில், மாற்றவல்ல அதிகாரிகளைக் கொண்டே அதை மாற்றவேண்டும். வேதமறிந்தவராகவும், தர்மத்திலும் லோகஹிதத்திலும் புத்தியைச் செலுத்துபவராகவும் இருக்கும் ப்ராஹ்மணரன்றோ ஶ்ருதி காட்டினபடிக் கர்மங்களிலும் வ்ருத்தங்களிலும் ஸம்சயம் உண்டாகுமளவில் ஸம்மர்ஶிகளா யிருக்கத்தக்கவர். இப்படிப்பட்ட அதிகாரிகளை இந்த ப்ரயத்நத்துக்கு ப்ரவர்த்தகராகக்கொண்டு, லௌகிகரான சட்டநிரூபணஸபையைச் சேர்ந்தவர்கள் ஆசாரவிஷயங்களில் மாறுபாட்டை உண்டாக்கத்தக்கவர். இப்படிப்பட்ட பண்டிதர் இவர்க்கு அகப்படமாட்டாரெனக்கூடாது. சில காலத்தின்முன் காஞ்சிபுரத்தில் கூடிய வித்வத்பரிஷத்தில் ஆசாரசீர்திருத்த ஸபையார்க்கு அநுகூலரான பண்டிதர்களும் இருக்கின்றனரென ஏற்பட்டது. அந்தப் பண்டிதர்களும் 'ஶூத்ரா [illegible]' எனும் வண்ணம், வசநம் கொடுப்பதில் மாத்ரம் தம்முடைய ஸாமர்த்யத்தை முடிக்காமல், தாம் சொல்லும் வண்ணம் நடக்கவும் ஸாமர்த்யத்தை நன்றாகக் காட்டவேண்டும். கேவல லௌகிகர்கள் சேர்ந்து இவ்விஷயத்தில் சட்டம் செய்ய வாரம்பித்தல் உசிதமன்று. சட்டநிரூபண ஸபையோ, நம்மவரெனப்பட்ட சிலருடன் பல பாஹ்யரையும் சேர்த்து அமைக்கப்பட்டது. ஆர்யருடைய ஆசாரசீர்திருத்தத்தில் அதற்கு ஸர்வதா அதிகாரமில்லை. அதிகாரம் வஹித்தால் அது பலாத்காரமாகத்தான் ஏற்படவேண்டும்.

ஆனால் இந்த ஆசாரபேதம் அபேக்ஷிப்பவர்க்கு உதவுமேயன்றி அந்யரைக் கட்டுப்படுத்தாது. அவ்வண்ணமே சட்டம் ஏற்படுமென்பார் சட்டரக்ஷகர்கள். அபேக்ஷிப்பவர் யார்? ப்ரௌடா விவாஹம் ப்ராஹ்மணர்க்கு மாத்ரம் ஶாஸ்த்ரத்தால் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணேதரர் யாதொரு சட்டத்தையும் அபேக்ஷிக்காமல் அவ்விவாஹம் செய்யலாம். இதை அபேக்ஷிப்பவர் ப்ராஹ்மணர் தாமோ என்று கிஞ்சித் யோசிக்கவேண்டும்.



இந்தச் சட்டத்தை ஆமோதித்தார் சென்னையில் மார்கழி மாதம் கூடிய ஸமவாய ஸங்கத்தார். அவர்க்குள் அக்ராஸநம் வஹித்த மைஸூர் யுவராஜர் ப்ராஹ்மணரா? அந்த ஸங்கத்தைச் சென்னைக்கு வரவழைத்த ஸபையார்க்கு அத்யக்ஷராயிருந்த ஸ்ரீநிவாஸய்யங்கார் ஜாதியென்பதே நிவர்த்யம் எனப் பேசினர். ஸங்கத்தாரும் ஸர்வவர்ணஸாங்கர்யத்தை வேண்டினவராய்க்கொண்டு வர்ணங்கள் நசிக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர். ஆதலால் ஜந்மாவஶேஷப்ராஹ்மணராய் ஸங்கத்தை அலங்கரித்த சிலர், இந்தப் புதிய சட்டத்தை அபேக்ஷிக்கின்றனரோ? முன்பே தங்வங்கத்தை யடைந்திருக்கும் இவரது ப்ராஹ்மணத்வம் அவர் இச்சித்தவண்ணம் த்யாகத்தை ஸஹிக்கமாட்டாதோ? கிறிஸ்துவர், பௌத்தர், ப்ரஹ்ம ஸமாஜத்தினர், முதலானவர் அலங்கரித்த ஸங்கமா ப்ராஹ்மணர்க்குள் விவாஹ விஷயமான ஸம்சயத்தைப் போக்கவல்லது? சில காலத்துக்கு முன், சென்னை ப்ரஹ்ம ஸமாஜ மந்திரத்தில் சில பெண்மணிகள் சேர்ந்தனராம். சேர்ந்த அபிப்ராயமோ, ப்ராஹ்மணராகப் பிறந்து, அந்யருடன் ஸஹவாஸம் செய்த நிமித்தத்தால் ப்ரஷ்டராய்ப் போந்து, ப்ரிஸ்டல் நகரத்தில் மரணமடைந்த ராம்மோஹநராயர் ஜநந நாளையோ, மரண நாளையோ கொண்டாடுவது. இந்த ஸமயத்தை இழக்க மன்மின்றி யப்பெண்மணிகளும், ப்ராஹ்மணப் பெண்கள் ப்ரௌடா விவாஹத்தை ஆமோதித்தனராம்.

சென்னை ஸமவாய சீர்திருத்த ஸபையாரோ, தமக்கு அத்யக்ஷராக ஒரு கனவானை உடைத்தாயிருக்கின்றனர். அவர் அபிப்ராயஸத்ருஶமான ஆசாரங்களுடன் கூடினவராயினும், ஜந்மகாலத்தில் ஶூத்ர குலத்தில் உண்டானவர். தத்காலம் அவர் ஜாதிக்குரிய ஆசாரங்களை அதிக்ரமித்துப் பக்திஸாரன் அருளிச்செய்தபடிக்கு 'குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்' எனமொழியத்தக்கவர். அவர் வெளிப்படையாக வர்ணாஶ்ரமவிரோதி. பிப்ரவரி மாதம் 12உ வெள்ளிக்கிழமையன்று தமது ஸபையாருடைய ஓர் ப்ரஸங்காவஸரத்தில், ப்ராஹ்மணர் புருஷார்த்தமெனக் கொள்வதெல்லாம் ஸமுதாய நன்மைக்கு விரோதமாகின்றபடியால், தமது ஸபையைச் சேர்ந்தவரெல்லாம் அவற்றை

என்று அருளிச்செய்கின்றார். ‘ அவித்யாநிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ: ’ எனும் வாக்ய தாத்பர்யத்தைப்பற்றி, ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்குப் பின்னால் உத்தராவஸ்தை முழுவதும் அநுகூலரூபமாக இருக்குமென்று வாதிக்கின்றார். எல்லாம் பகவத் ப்ரஸாத ஜந்யம். பக்தி யோகத்தால் உபாஸகனிடம் ப்ரீதனான பகவான், கேவலம் தனது க்ருபையால் அவனுக்கு ஸ்வரூபத்தைக் காட்டுகின்றான். ஈஶ்வரன் ஸ்வதந்த்ரனாகிலும், பக்தியோக நிஷ்டனுக்கு நியமேந அநுக்ரஹம் செய்வதால் அவனை உபாஸித்தவன் அவனை அடைகின்றானென்று உபநிஷத் கூறியது. அன்றியும், ஹ்ருதயத்தில் பற்றியிருக்கும் ஸர்வகாமங்களும் எப்போது அதைவிட்டு நீங்குமோ, அப்போது உபாஸகன் அம்ருதனாகி இவ்வுலகிலேயே உபாஸந வேளையில் ப்ரஹ்மாநுபவம் பண்ணுகின்றான் என்றும், அந்த ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டானவளவில், ஹ்ருதயத்தின் கட்டுகள் அறுபட்டு, ஸர்வ ஸந்தேஹங்களும் நிவ்ருத்தமாகி, ஸர்வகாமங்களும் க்ஷயிக்கின்றன என்றும், உபநிஷத் வாக்யங்கள் உண்டு. இவற்றின் ஸமுதாயார்த்தம் என்னவென்றால்: உபாஸந நிஷ்பத்தி யுண்டாகில் பகவத் ப்ரஸாதமுண்டாய், அவித்யை, கர்மம், பூர்வ வாஸனை முதலிய ஸர்வ அநிஷ்டங்களும் இவனை விட்டு விலகுகின்றன. இந்த உபாஸகனுக்கு ஸ்வரூப ப்ராப்தி யுண்டாகின்றது. அவனது ஜ்ஞானம் ஸங்கோசமற்று ப்ரகாசிக்க அவனுக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகின்றது. ஸாக்ஷாத்கரித்த பரமாத்மாவை அநுபவிக்காமல் தரிக்கமாட்டானாதலால், ஸ்வரூபாந்தர்கதமானதும், அநுபவ ரூபமானதுமான இவனது சேஷவ்ருத்தி இவனுக்கு ப்ராப்தமாகின்றது.

இந்த உபாஸநம், ஆவ்ருத்த்யதிகரணத்தில், ஸ்ம்ருதி மாத்ரம் அன்றென்றும், ஸ்ம்ருதி ஸந்ததிரூபம் என்றும், ஏகாக்ரசித்த வ்ருத்தியின் நைரந்தர்யம் என்றும், அஸக்ருத் ஆவ்ருத்தமான ஸந்தத ஸ்ம்ருதி யென்றும், ஸ்ரீ பாஷ்யகார வசநமிருக்கின்றபடியை நோக்கினால், அஷ்டாங்கயோக க்ரமம் ஸ்வாமியால் சிந்திக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாகின்றது. பின்னால் ஸூத்ரங்களில் ஶ்ருதியை அநுஸரித்து, உபாஸந ஸம்பந்தமாக ஆஸநம், த்யாநம், நிச்சலத்வம், தேசம், காலம் இவை சிந்திக்கப்பட்டு மிருக்கின்றன. ஆனபடியால் அந்த யோகக்ரமத்தைச் சிறிது விசாரிப்போம்.



‘யோகயுக் ப்ரதமம் யோகீ யுஞ்ஜாநோ ஹ்யபிதீயதே ।
விநிஷ்பந்நஸமாதிஸ்து பரம் ப்ரஹ்மோபலப்திமாந் ॥
யஸ்யாந்தராயதோஷேண தூஷ்யதே சாஸ்ய மாநஸம் ।
ஜந்மாந்தரைரப்யஸதோ முக்தி: பூர்வஸ்ய ஜாயதே ॥
விநிஷ்பந்நஸமாதிஸ்து முக்திம் தத்ரைவ ஜந்மநி ।
ப்ராப்நோதி யோகீ யோகாக்நிதக்தகர்மசயோऽசிராத் ॥
ப்ரஹ்மசர்யமஹிம்ஸாம் ச ஸத்யாஸ்தேயாபரிக்ரஹாந் ।
ஸேவேத யோகீ நிஷ்காமோ யோக்யதாம் ஸ்வமநோ நயந் ॥
ஸ்வாத்யாயஶௌசஸந்தோஷதபாம்ஸி நியதாத்மவாந் ।
குர்வீத ப்ரஹ்மணி ததா பரஸ்மிந் ப்ரவணம் மந: ॥
ஏதே யமா: ஸநியமா: பஞ்ச பஞ்ச ச கீர்த்திதா: ।
விஶிஷ்டபலதா: காம்யா நிஷ்காமாணாம் விமுக்திதா: ॥
ஏகம் பத்ராஸநாதீநாம் ஸமாஸ்தாய குணைர்யுத: ।
யமாக்யைர்நியமாக்யைஶ்ச யுஞ்ஜீத நியதோ யதி: ॥
ப்ராணாக்யமநிலம் வஶ்யமப்யாஸாத் குருதே து யத் ।
ப்ராணாயாம: ஸ விஜ்ஞேய: ஸபீஜோऽபீஜ ஏவ ச’ ॥

* * *

‘ஶப்தாதிஷ்வநுரக்தாநி நிக்ருஹ்யாக்ஷாணி யோகவித் ।
குர்யாச்சித்தாநுகாரீணி ப்ரத்யாஹாரபராயண: ’ ॥

* * *

‘ப்ராணாயாமேந பவநம் ப்ரத்யாஹாரேண சேந்த்ரியம் ।
வஶீக்ருத்ய தத: குர்யாத் ஸ்திதம் சேத: ஶுபாஶ்ரயே ’ ॥

* * *

‘ஶுபாஶ்ரய: ஸ சித்தஸ்ய ஸர்வகஸ்ய ததாத்மந: ।
த்ரிபாவபாவநாதீதோ முக்தயே யோகிநாம் ந்ருப ॥
அந்யே து புருஷவ்யாக்ர சேதஸோ யே வ்யபாஶ்ரயா: ।
அஶுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய: ’ ॥

* * *

என்று அருளிச்செய்கின்றார். '𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃' எனும் வாக்ய தாத்பர்யத்தைப்பற்றி, ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்குப் பின்னால் உத்தராவஸ்தை முழுவதும் அநுகூலரூபமாக இருக்குமென்று வாதிக்கின்றார். எல்லாம் பகவத் ப்ரஸாத ஜந்யம். பக்தி யோகத்தால் உபாஸகனிடம் ப்ரீதனான பகவான், கேவலம் தனது க்ருபையால் அவனுக்கு ஸ்வரூபத்தைக் காட்டுகின்றான். ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகிலும், பக்தியோக நிஷ்டனுக்கு நியமேந அநுக்ரஹம் செய்வதால் அவனை உபாஸித்தவன் அவனை அடைகின்றானென்று உபநிஷத் கூறியது. அன்றியும், ஹ்ருதயத்தில் பற்றியிருக்கும் ஸர்வகாமங்களும் எப்போது அதைவிட்டு நீங்குமோ, அப்போது உபாஸகன் அம்ருதனாகி இவ்வுலகிலேயே உபாஸந வேளையில் ப்ரஹ்மாநுபவம் பண்ணுகின்றான் என்றும், அந்த ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டானவளவில், ஹ்ருதயத்தின் கட்டுகள் அறுபட்டு, ஸர்வ ஸந்தேஹங்களும் நிவ்ருத்தமாகி, ஸர்வகாமங்களும் க்ஷயிக்கின்றன என்றும், உபநிஷத் வாக்யங்கள் உண்டு. இவற்றின் ஸமுதாயார்த்தம் என்னவென்றால்: உபாஸந நிஷ்பத்தி யுண்டாகில் பகவத் ப்ரஸாதமுண்டாய், அவித்யை, கர்மம், பூர்வ வாஸனை முதலிய ஸர்வ அநிஷ்டங்களும் இவனை விட்டு விலகுகின்றன. இந்த உபாஸகனுக்கு ஸ்வரூப ப்ராப்தி யுண்டாகின்றது. அவனது ஜ்ஞாநம் ஸங்கோசமற்று ப்ரகாசிக்க அவனுக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகின்றது. ஸாக்ஷாத்கரித்த பரமாத்மாவை அநுபவிக்காமல் தரிக்கமாட்டானாதலால், ஸ்வரூபாந்தர்கதமானதும், அநுபவ ரூபமானதுமான இவனது மோக்ஷவ்ருத்தி இவனுக்கு ப்ராப்தமாகின்றது.

இந்த உபாஸநம், ஆவ்ருத்யதிகரணத்தில், ஸ்ம்ருதி மாத்ரம் அன்றென்றும், ஸ்ம்ருதி ஸந்ததிரூபம் என்றும், ஏகாக்ரசித்த வ்ருத்தியின் நைரந்தர்யம் என்றும், அஸக்ருத் ஆவ்ருத்தமான ஸந்தத ஸ்ம்ருதி யென்றும், ஸ்ரீ பாஷ்யகார வசநமிருக்கின்றபடியை நோக்கினால், அஷ்டாங்கயோக க்ரமம் ஸ்வாமியால் சிந்திக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாகின்றது. பின்னால் ஸூத்ரங்களில் ச்ருதியை அநுஸரித்து, உபாஸந ஸம்பந்தமாக ஆஸநம், த்யாநம், நிச்சலத்வம், தேசம், காலம் இவை சிந்திக்கப்பட்டுமிருக்கின்றன. ஆனபடியால் அந்த யோகக்ரமத்தைச் சிறிது விசாரிப்போம்.



'𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍋 𑌹𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑌮𑌾𑌧𑌿𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 ॥
𑌯𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌦𑍋𑌷𑍇𑌣 𑌦𑍂𑌷𑍍𑌯𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌸𑌮𑍍 ।
𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍈𑌰𑌭𑍍𑌯𑌸𑌤𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥
𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑌮𑌾𑌧𑌿𑌸𑍍𑌤𑍁 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯𑍋𑌗𑍀 𑌯𑍋𑌗𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌚𑌯𑍋𑌚𑌿𑌰𑌾𑌤𑍍 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌾𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌾𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌨𑍍 ।
𑌸𑍇𑌵𑍇𑌤 𑌯𑍋𑌗𑍀 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌮𑍋 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌮𑌨𑍋 𑌨𑌯𑌨𑍍 ॥
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌶𑍌𑌚𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌤𑌪𑌾𑌂𑌸𑌿 𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌤𑌥𑌾 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌮𑌨𑌃 ॥
𑌏𑌤𑍇 𑌯𑌮𑌾𑌃 𑌸𑌨𑌿𑌯𑌮𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌫𑌲𑌦𑌾𑌃 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌮𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌾𑌃 ॥
𑌏𑌕𑌂 𑌭𑌦𑍍𑌰𑌾𑌸𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌯𑍁𑌤𑌃 ।
𑌯𑌮𑌾𑌖𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑌿𑌯𑌮𑌾𑌖𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌨𑌿𑌯𑌤𑍋 𑌯𑌤𑌿𑌃 ॥
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌖𑍍𑌯𑌮𑌨𑌿𑌲𑌂 𑌵𑌶𑍍𑌯𑌮𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑍁 𑌯𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑌬𑍀𑌜𑍋𑌬𑍀𑌜 𑌏𑌵 𑌚' ॥

* * *

'𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌾𑌰𑍀𑌣𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌪𑌰𑌾𑌯𑌣𑌃' ॥

* * *

'𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍇𑌨 𑌪𑌵𑌨𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑍇𑌣 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌃 ।
𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍈𑌸𑍍𑌤𑌤𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚𑍇𑌤𑌃 𑌶𑍁𑌭𑌾𑌶𑍍𑌰𑌯𑍇' ॥

* * *

'𑌶𑍁𑌭𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌸 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌗𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌨𑌾𑌤𑍀𑌤𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌨𑍃𑌪 ॥
𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰 𑌚𑍇𑌤𑌸𑍋 𑌯𑍋 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌨𑌯𑌃' ॥

* * *

[illegible]

*     *     *



[illegible]

“யோகாப்யாஸம் செய்கின்ற யோகியானவன் யோகநிஷ்பத்திக்குப் பூர்வம் யோகயுக் என்றும், பரமாத்ம ஸாக்ஷாத்காரமடைந்த பிறகு நிஷ்பந்நஸமாதி என்றும் வ்யவஹரிக்கப்படுகிறான். யோகயுக் என்பவனுடைய மநஸ்ஸானது, ஆலஸ்யம் முதலான பத்து வித விக்நங்களால் தூஷிக்கப்பட்டதாகில், யோகம் அநேக ஜந்மங்களாக அப்யஸிக்கப்பட்ட பிறகு, அவனுக்கு முக்தியுண்டாகும். நிஷ்பந்நஸமாதி எனப்பட்ட யோகியானவன், தனது யோகாக்நியால் ஸர்வ கர்மங்களையும் தஹித்துவிட்டு, அதே ஜந்மத்தில் விளம்பமின்றி முக்தியை அடைகின்றான். யோகத்தில் ப்ரக்ராந்தனான யோகியானவன், அந்த விஷயத்தில் தன் மநஸ்ஸுக்கு யோக்யதையை உண்டாக்கும் பொருட்டு, ப்ரஹ்மசர்யம், அஹிம்ஸை, ஸத்யம், பரத்ரவ்யங்களை அபஹரிக்காமை, நிஷித்த த்ரவ்யங்களைக் கொள்ளாமை முதலான தர்மங்களை நிஷ்காமனாய் இருந்துகொண்டு அப்யஸிக்கக்கடவன். மேலும், புத்தியை நிச்சலமாய் நிறுத்தி ஸ்வாத்யாயம், சௌசம், ஸந்தோஷம், தபஸ்ஸு முதலானவற்றை அப்யஸிக்கக்கடவன்; அப்படியே பரப்ரஹ்மத்தினிடம் தன் மநஸ்ஸை பக்தியுடன் செலுத்தக்கடவன். இப்படி ஐந்து யமங்களும் ஐந்து நியமங்களும் சொல்லப்பட்டன. இவை காமத்தால் அப்யஸிப்பவர்க்கு விசேஷித்துப் பலனளிக்கும்; காமமின்றி அநுஷ்டிப்பவர்க்கு முக்தியைக் கொடுக்கும். யோகத்தில் யதநசீலனாய், நியமயுக்தனாய், யமம் நியமம் என விவரிக்கப்பட்ட குணங்களுடன் கூடினவனாய், பத்ராஸநம் முதலாகிய ஆஸநங்களுக்குள் ஒன்றில் இருந்துகொண்டு, யோகாப்யாஸம் செய்யக்கடவன். அப்யாஸத்தால் ப்ராணவாயுவை வசீகரணம் செய்கின்றான்; அது ப்ராணாயாமமென்று அறியத்தக்கது. அது பகவானுடைய மூர்த்தியின் த்யாந ஸஹிதமான மந்த்ரத்துடன் கூடியதாகில் ஸபீஜமென்றும், இல்லாததாகில் அபீஜமென்றும் சொல்லப்படுகின்றது.”

*     *     *     *     *     *

“யோகப்ரகார மறிந்தவன் சப்தாதி விஷயங்களில் ஸதா ப்ரவ்ருத்தமாகின்ற இந்த்ரியங்களை அவற்றினின்றும் திருப்பி, ப்ரத்

யாஹார ஸாதந நிமித்தமாக அவற்றைத் தனது சித்தவ்ருத்தியை அநுஸரிப்பவைகளாகப் பண்ணக்கடவன்.”

* * * * * *

“ப்ராணயாமத்தால் ப்ராணவாயுவும், ப்ரத்யாஹாரத்தால் இந்த்ரியங்களும், வஶீகரணமான பிறகு மநஸ்ஸை ஶுபமான ஆஶ்ரயமாகின்ற பகவானுடைய மூர்த்திதனில் நிலைக்கும்படிச் செய்யக்கடவன்.”

* * * * * *

“யோகிகளின் முக்தியின் பொருட்டு, எங்கும் ஓடுவதும், சஞ்சல ஸ்வரூபத்துடன் கூடினதுமான அவருடைய சித்தத்துக்குக் கர்மபாவனை, ப்ரஹ்மபாவனை, உபயபாவனை எனப்பட்ட மூன்று பாவனைகளையும் கடந்த அந்தப் பகவான் ஶுபமான ஆஶ்ரயமாகின்றான். ஓ புருஷஶ்ரேஷ்டனே! மற்ற யாவரேனும் மநஸ்ஸுக்கு ஆஶ்ரயமாகி நின்றாராகில் அவரெல்லோரும் அஶுத்தர். ஏனெனில் அப்படிப்பட்ட தேவர் முதலானோர் கர்ம நிமித்த ஜந்ம முடையவர்கள்.”

* * * * * *

“இவ்வண்ணம் ஆஶ்ரயமாகும் யாதொரு ஹரியினுடைய ஸ்தூலரூபம் உளதோ, அது இவ்விதமாகச் சிந்திக்கத்தக்கதென்பதைப்பற்றிக் கேளும், ஓ ராஜனே! ஆலம்பநமின்றித் தாரணையானது முடியாது. ஆதலால் ப்ரஸாதாபிமுகமான முகமென்ன, தாமரையிதழையொத்த அழகிய கண்களென்ன, நன்கமைந்த கன்னங்களென்ன, எழிலும் காந்தியும் பொருந்திய விஸ்தீர்ணமான பலகையொத்த நெற்றியென்ன, இருசெவி முற்றும் பொருந்தி அணியப்பட்ட திவ்ய குண்டலாபரணங்களென்ன, மூன்று ரேகைகளுடன் கூடிய ஶங்கமொத்த கண்டமென்ன, சீருடன் வளர்ந்து ஸ்ரீவத்ஸத்தால் அலங்க்ருதமான மார்பென்ன, மூன்றுமடிப்பில் மறைந்துநின்ற நாபியுடன் கூடிய உதரமென்ன, நீண்ட அஷ்டபுஜங்களோ, சதுர்புஜங்களோவென்ன, ஒன்றோடொன்று ஒத்தமைந்த தொடைகளும் முழங்கால்களுமென்ன, வடிவார்ந்த பாத கமலங்களென்ன, இவற்றுடன் கூடினவனையும், நிர்மலமான பீதாம்பர வஸ்த்ரதாரியாயும், கிரீடம், ஹாரம், கேயூரம், கடகம் முதலான திவ்யபூஷணங்களால் அலங்க்ருதனையும், ஶார்ங்கம், ஶங்கம், கதை, கட்கம், சக்ரம் முதலான திவ்யாயுதங்கள், அக்ஷமாலை முதலானவற்றைத் தரிக்கின்றவனையும், வரதஹஸ்தம், அபயஹஸ்தம் இவற்றுடன் கூடினவனையும், முத்ரிகா ரத்நத்தால் பூஷிதனையும் இருக்கின்ற பரப்ரஹ்மமாகிற விஷ்ணுவை, யோகியானவன் ஏகாக்ர சித்தனாகி, பகவந்மயனாய்ப் போந்து, பகவந் மூர்த்தியினிடம் தாரணையானது எவ்வளவுக்குள் த்ருடமாக நிலைக்கின்றதோ, அவ்வளவு பர்யந்தம் சிந்திக்கக்கடவன். ஓ ராஜனே! நடந்தாலும், இருந்தாலும், ஸ்வேச்சையால் வேறு எந்த கார்யம் செய்தாலும், எக்காலம் பகவந்மூர்த்தியானது சித்தத்தினின்று வெளிப்படாது நிற்குமோ, அப்போது அந்தத் தாரணை த்ருடமாக ஸித்தித்ததாக எண்ணக்கடவன். பிறகு ஶங்கம், கதை, சக்ரம், ஶார்ங்கம் முதலான திவ்யாயுதங்களின்றி, கிரீடாதி பூஷணவிஶிஷ்டமாய் அக்ஷமாலையுடன் கூடி மிகவும் ஶாந்தமாயிருக்கும் பகவந்மூர்த்தியைப் புத்திமானான யோகீ சிந்திக்கக்கடவன். அந்த மூர்த்தியினது தாரணையானது முன்னுரைத்தபடி எப்போது நிலைத்து நிற்கின்றதோ, அப்போது கிரீடம், கேயூரம் முதலான பூஷணங்களின்றி மூர்த்திமாத்ர ஸ்மரணம் செய்யக்கடவன். இதன் பிறகு ப்ரத்யங்க ரஹிதனையும், ப்ரதாநமான ஏகாவயவத்துடன் கூடினவனையும், பகவானைப் புத்திமான் சிந்திக்கக்கடவன். பிறகு, (மேல் விவரித்தபடி நாலுரூபமான தாரணையை ஸமர்த்தித்த பின்,) ஆயுத பூஷண ப்ரத்யங்க ப்ரதாநாங்கங்கள் ஆகிய அவயவங்கள் எந்தப் பகவானால் லீலார்த்தம் க்ரஹிக்கப்பட்டனவோ, அந்த அவயவியாகின்ற பகவானிடம் சித்தத்தை ஸ்திரப்படுத்தி த்யாநபரனாகக்கடவன். இப்படித் தாரணையால் ஸித்தித்த பகவத்ரூபவிஷயமான ஸ்மரணையானது, யாதொரு விச்சேதமின்றி, அதைத் தவிர வேறு ஸ்மரணை இடையில் வராமல், அந்த ஸ்மரணைமாத்ரத்தினுடைய ப்ரவாஹரூபமாக நிலைத்ததாகில், அதற்கு த்யாந

மென்று பெயர். அது யமம் முதல் தாரணை பர்யந்தமான ஆறு அங்கங்களால் நிஷ்பந்நமாகின்றது. விக்ரஹாதி விசிஷ்டனாக மேல்சொன்னபடி த்யாநிக்கப்பட்ட அந்தப் பகவானுடைய விக்ரஹாதி விசேஷரஹிதமான யாதொரு ஸ்வரூபம் த்யாநத்தில் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டு மநஸால் க்ரஹிக்கப்படுகின்றதோ, அந்த க்ரஹணத்தை ஸமாதியெனச் சொல்லப்படுகின்றது."

* * * * * *

"அந்தப் பகவானுடைய அபஹதபாப்மத்வாதி கல்யாண குணங்களின் ஆவிர்பாவத்தை அந்த ஸமாதியில் உபாஸகன் அடைந்தவனாய்க்கொண்டு, பரமாத்மாவை யொத்து ஜ்ஞாநாநந்த விசிஷ்டனாகப் பரமாத்மாவுடன் ஸமாநாகாரனாகின்றான். இதைத் தவிர இவன் பூர்வமடைந்துநின்ற தேவநாமநுஷ்யாதி ஆகார பேதங்கள் இவன் அஜ்ஞாநத்தின்பொருட்டு உண்டாகின்றன."

உபநிஷத் வித்யைகளிலும், ரூபகுணவிசிஷ்டனாகப் பகவானுடைய உபாஸநம் செய்ய விதித்திருக்கின்றது. ஏனென்றால், இப்படிக்கன்றிச் சித்தத்துக்கு ஆலம்பநம் ஏற்படாது. ஆலம்பநமின்றித் தாரணையில்லை. தாரணையின்றி த்யாநம் இல்லை. த்யாநமின்றி அதனுடைய எல்லையாகும் ஸமாதியெனும் ப்ரஹ்மஸ்வரூப ஸாக்ஷாத்காரமில்லை. ஆதலால் ச்ருதியில் ஓரிடம் ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியாயும், ஸ்வர்ணமய திவ்யமங்களவிக்ரஹவிசிஷ்டனாயும், புண்டரீகாக்ஷனாயும் உத் எனும் பேருடையனாகவும், பகவானை உபாஸிக்க விதித்திருக்கின்றது. மற்றோரிடம் மநோமயனாகவும் ப்ராணசரீரனாகவும், ப்ரகாசரூபனாகவும், ஸத்யகாமாதி குணவிசிஷ்டனாகவும் உபாஸிக்கச் சொல்லி இருக்கின்றது. இன்னுமோரிடம், அக்நியை சிரஸ்ஸாகவும், சந்த்ர ஸூர்யர்களைக் கண்களாகவும், திக்குகளைக் காதுகளாகவும், வாயுவை ப்ராணனாகவும், ப்ரபஞ்சத்தை ஹ்ருதயமாகவும், பகவானுக்கு ரூபகல்பநம் செய்து உபாஸிக்கச் சொல்லியிருக்கின்றது. இப்படி நாமரூபகுணவிசிஷ்டனாகவே, தேவர்கள் உள்பட ஸர்வசரீரமுடையவனால் பரமபுருஷன் உபாஸிக்கத்தக்கவன். அவனுடைய அவ



தார காலங்களிலும், அவன் பக்தர்களுக்கிரங்கித் தனது தர்சநமளித்த காலங்களிலும், அவன் காட்டிநின்ற உருவங்களைக்குறித்து, ஸ்ரீ விஷ்ணுபுராணத்தினுடைய மேலெடுத்த ச்லோகங்கள், யோக காலத்தில் சிந்திக்கவேண்டிய பகவானுடைய ரூபத்தை வர்ணித்தன.

'தைர்யஸ்வஸ்வ விச்வாத்மா ஸுதாயஜைர்வ்ருதம் ।
ரக்தராஜீவநயநம் யநூச்ரீகராங்கிதம்' ॥

என்று ஸ்ரீராமனுடைய உபாஸ்தியை ஸாத்வத ஸம்ஹிதையில் விதித்திருக்கின்றது. இவை யாவும் மநோகல்பிதமான விக்ரஹங்கள். இவை ப்ர்புத்தரெனப்பட்ட யோகநிஷ்டர்களுக்கு த்யாந விஷயமாகின்றன. ப்ராயேண மநுஷ்யர் யோகத்தில் அதிகாரிகளல்லர். அவர்களுக்கென்று திவ்யமங்களவிக்ரஹங்கள் ஏற்பட்டன. அந்தர்யாமியை இவர் உபாஸிக்க ஒண்ணாதென்றும், யோகிகளுக்கே அவ்வுபாஸநத்தில் அதிகாரமென்றும் காட்டும்,

'க்ஷாந்தம் யோகவிதாம் ஹ்ருத்யாமதிரதாத்மநாம் ।
யோகிநாமேவ ஸாரஸ்ய வநஸ்திது ஹ்ருதயேசயே' ॥

எனும் ச்லோகத்தைத் தேசிகனும் தத்வத்ரயாதிகாரத்தில் எடுத்திருக்கிறார். அவ்விடமே, "அர்ச்சாவதாரமும் மோக்ஷத்தைத் தருமென்னுமிடத்தை

'ஸாக்ஷாத்ரூபாண்யதீதாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம் ।
க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: ॥
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத் ।
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்' ॥

என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச்செய்தான். ஆழ்வார்களும் இவ்வவதார ரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அநுஸந்தித்து, இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்" என்று ஸாதித்தருளினர். இன்னும்

உத்தரக்ருத்யாதிகாரத்திலும், 'நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர । யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்॥' என்றும், * * * சொல்லுகிறபடியே, ஓர் அதிகாரி விசேஷத்துக்காக ஸாந்நித்யாதிகளைப் பண்ணி, பரமை காந்தியான தன்னை யுகந்துவந்து அர்ச்சாவதாரம் பண்ணியிருக்கிற எம்பெருமான் பக்கலிலே, 'ஸர்வாதிஶாயிஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் தத்ருவிம்பயோ:' । என்கிற பூர்த்தியும், 'ஶ்ருதீநாம் ஸ்வாமிநாம் ... வஶ்ருதம் பாபநாஶநம் । பாதகாநாம் ச ஸர்வேஷாம் ஶுத்தி: கிம் புநருபபாதகம்' ॥, என்கிற பாவநதமத்வத்தையும், 'ஸம்ஶ்லேஷநாதிஸ்வாஸ்து பாபஸாரம் ஸம்ஸ்ருதிபத்தஸாம் - கர்மபாஶநா கர்மவிஶ்வ கர்மதகர்த்நிவஶ்வ: - கர்மஹேதூஶ்வ கர்மஹாவஶ்வ நாஸ்திகம் ஸம்வ்ரஜேத்', என்கிறபடியே ப்ரத்யக்ஷாதி ப்ரமாண த்ரயத்திலும் ஹேது பலபாவத்தாலே வரும் மதிமயக்குகளெல்லா வற்றுக்கும் மருந்தாயிருக்கிறபடியையும், 'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்', என்றும் 'தமருகந்ததெவ்வுருவம்' என்கிற பாட்டிலும் சொல்லுகிறபடியே வாங்மநஸாபரிச்சேத்ய மான, ஆச்ரித பாரதந்த்ரியத்தையும், கண்ட கண்கள் மற்றொன் றைக் காணா என்கிற ஆகர்ஷகத்வத்தையும், அநுஸந்தித்து, 'ஹ்ருதீவஹ்ரீயஸம்ஸ்தாநம் ஜநநீவத்ஸநிஷ்டயம் । ஸ்வாயத்தம்ஶிஷ்யவச்சித்ரம் சித்ரவஸ்த்ராஸநேயஸ்தம் । ஸாக்ஷாத்ஸேநாபதேஸ்ஸாக்ஷாத் மாராஸேநவவஸ்தா । விதர்க்ஷேந ததாஸாவேத்ய ஸாதர்க்ஷேந வஸ்தாயவத் । யதாயாதாநம்ராஜாநம் யதாவத்தேஹிநம் । யதா ப்ரியாதிதிம்யோக்யம் ஸமவந்தம் தயாவதேயஸ ॥ யதாவதாத்ரம் ஸ்திதம் ததேயவோவலவரேஸம்' ।, என்கிறபடியே அவ்வோஸம் பந்த வர்க்க பரத்வ ஸௌலப்யாதிகளுக்கு அநுரூபமான வ்ருத்தி யைப் பண்ணவும், அப்போது, 'ஸ்வாஹ்யஸ்காயம் உபேவெதி கிம்விஸ, உபாயநம்வோபஹ்ருதம் ஸோஸாஹம் । ஸபாஶகாமஹ்ரம் ஸ்வயம் நிவேத்ய ஸகாரவஶ்யாஸ ஹரிதாயயாவத்' ॥, என்று



திருவடி நிலைகள் விஷயத்தில் ஸ்ரீ பரதாழ்வான் நடத்தின ராஜ ஸேவகவ்ருத்தியை ஸ்வார்ஜித த்ரவ்யங்களாலே நடத்தவும்" என் கிறபடியே க்ருதக்ருத்யர்களுக்கு உத்தர க்ருத்யம் இருக்கவேண் டியபடியை ஸாதிக்குமிடம், அர்ச்சாவதாரம் செய்திருக்கும் எம் பெருமானிடம் அது மிகவும் த்ருப்திகரமாக நடக்குமென்று காட்டியருளினர்.

இப்படி மோக்ஷ ஸ்வரூபத்தையும், அதை யடைவதற்கு உபாயமாயிருக்கப்பட்ட உபாஸநத்தின் ஸ்வரூபத்தையும், அந்த உபாஸநத்துக்கு அதிகாரிகளாகத்தக்கவருக்கு அவச்யமாயிருக் கும் விசேஷகுணங்களையும், இவற்றைப்பற்றி விவரிக்குமிடத்தே, உபாஸநத்துக்கென்று உபநிஷத்வித்யைகளில் த்யாந விஷயமாக எடுக்கப்பட்ட பகவானுடைய நாமரூபவிசிஷ்டமான மூர்த்திகளை யும், இப்படிப்பட்ட மநோகல்பிதமான விக்ரஹவிசிஷ்டனு கவே பகவான் த்யாநிக்கத்தக்கவன் என்பதையும், இதிஹாஸ புராணங்களில், இந்த த்யாநமெனப்பட்ட உபாஸந க்ரமத்தை யோகசப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகின்ற தென்பதையும், அந்த யோகத்தின் அங்கங்களையும், அந்த ப்ரகரணங்களில் த்யேயமாகும் பகவத்விக்ரஹத்தை வர்ணிக்குமிடம், பகவதவதாராதிகளில் நம க்கு விஹித்தித்தபடிப் பகவானுடைய த்யாநவிஷயமாகும் மூர்த் திகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றதையும், பிற்காலத்தில் ஆகமநிஷ் டர்களாலும், ஆழ்வார் ஆசார்யர்களாலும், நம்முடைய பெரியோர் களாலும், பகவானுடைய அர்ச்சாரூபமான மூர்த்திகள் நமக்கு ஆராதந, த்யாந, ப்ரணம, ஸேவாதிகளுக்கு யோக்யமாகும் ப்ர காரத்தையும் பற்றிச் சற்று விசாரித்தோம்.

பத்ராதிபர்.

# ஸ்ரீ வைகுண்ட நிர்ணயம்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
[illegible] நமோவாகமதீமஹே ।
யஞ்ஜீவேஷ தத்ரைதே தம்பதீ ஜகதாம்பதீ ॥

ஸ்ரீய:பதியாய், நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுணைக தாநனாய், ஸர்வசேஷியான ஸ்ரீமந்நாராயணன் கேவலம் பரத்வத்தில் நித்யவிபுவாய் எழுந்தருளியிருக்கும் இடம் சுத்த ஸத்வ ரூபமான ஸ்ரீ வைகுண்டம் என்பர். அது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்திகளுக்கு அஸாதாரணமானதோர் ப்ரதிதந்த்ரமல்லவோ? 'வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:' இத்யாதி வசநங்களால் ஓதப்படுகிற ஸ்ரீ வைகுண்டம் எங்கென்னில், ஸ்ரீய:பதியான ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருக்கும் திருமலையே தான் என்று நிரூபிக்கலாகும். இதற்கு அடியென் என்னில்:— 'ஸ்ருதிஸிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்பதில் ஸ்ருதி என்பது திருமலையே என்றும், அதன் சிரஸ்ஸில் விதீப்தமான திருவேங்கடமுடையானே, இங்கு சொல்லப்பட்ட 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்றும், ப்ரத்யக்ஷத்தாலும் ப்ரமாணத்தாலும் காணலாம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும், ஸ்தாநவிசேஷாதிகாரத்தில் 'வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரமானது, உத்ப்ரேக்ஷை அதிசயோக்தி, உபமாநம் முதலிய அலங்காரபூரிதமான காவ்யக்ரந்தமன்றிக்கே, கேவலம் தத்வநிரூபணம் பண்ணுகிற ப்ரமாண க்ரந்தம். அது அவ்வோஸ்தாநங்களின் விசேஷங்களைப் பரக்கச்சொல்லும்போது, அதைக் கேவலம் ப்ரமாணவசநமாகவே நினைக்கவேண்டும். இவ்விடத்தில் திருமலையை ஸ்ருதி



ஸ்வரூபமாகச் சொன்னதும் தவிர, 'திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு' என்றும், 'பொன்னுலகம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விசேஷ சப்தங்களெல்லாம் ஸ்ரீ வைகுண்டமன்றிக்கே, ஸ்தாநாந்தரங்கள் ஒன்றுக்கும் ஒட்டாது. நம்மாழ்வாரும் 'ஒழிவில் காலமெல்லாம்,' 'சோதியாகி யெல்லாவுலகும் தொழும் ஆதிமூர்த்தி,' என்று அருளிச்செய்தார். இப்பாசுரங்களை ஸம்ஸ்க்ருதத்தில் ஸங்க்ரஹிக்கும் போது, நம் தேசிகன் 'ஸ்தாநே ந்யஷீதஸ் ஸ்ரௌவ ப்ராஹ்மம் ஸ்தாநம்' என்று உபயோகித்துள்ளார். 'இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்' 'வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்,' என்னும் ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் அநேகம் இவ்விஷயத்தில் ஆதாரமாகச் சொல்லலாமாகிலும், இங்கு ஸாரதமமான ப்ரமாணங்களே எடுத்துச் சொல்லப்பட்டன. இவ்விஷயத்தை இன்னும் ஸ்பஷ்டமாகவும் விளம்பரமாகவும் நம் ஆசார்யன் நிகமநாதிகாரத்தில் காட்டியுள்ளார். அவ்வதிகாரத்தில், ஸ்ரீ வைகுண்டத்தில் பரமாத்மா வாஸுதேவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைச் சொல்லுமளவில், முடிவில், "பரமபத பர்யங்கத்திலே எழுந்தருளியிருக்கிற ஸபத்நீகனான ஸர்வேச்வரன் தாளிணைக் கீழ் ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவில்லா அடிமை செய்யவேண்டும் நாம் என்கிற மநோரதத்தின்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வ வித கைங்கர்யங்களையும் பெற்று வாழ்வார்கள். இப்படி ஸ்ரீய:பதியான நாராயணன் திருவடிகளே உபாய தசையிலும் பலதசையிலும் உபஜீவ்யங்கள்" என்கிறார். ஆகையால் உபாயதசையாகிற முமுக்ஷுதசையிலும், பலதசையாகிற முக்த தசையிலும் கூட அநுபவிக்கவேண்டுமான ஸ்தாநம் ஒன்றே என்று தெரியலாயிற்று. இங்கு ஒழுவில் காலம் என்பதை அநுஸந்தித்ததும், இப்படி ஸ்ரீய:பதியான என்பதையும் மறக்கலாகாது. பரமபதமென்பது ப்ராக்ருதமண்டலத்துக்கு மேற்பட்ட ஸ்தாநத்திலிருக்கிறதென்று அநாதி ஸம்ப்ரதாயமிருக்க, ப்ராக்ருத மண்டலத்திலேயே ஸ்தாபிக்குமது வம்புதானே என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். ஸம்ப்ரதாய விருத்தமான நிர்ணயம் யாருக்

கும் ஸார்த்தமாவது, புருஷார்த்தமாவது ஆகமாட்டாது என்பதை மறக்கவில்லை. கேவலம் தார்க்கிகர்களைப்போல யுக்தி வாதம் மாத்ரமே பண்ணுவதற்கு இது அர்ஹமான விஷயமுமன்று. மேல் கீழ் என்பது உத்க்ருஷ்டத்வ அபக்ருஷ்டத்வ வாச்யங்களன்றிக்கே, ஊர்த்வாதரத்வங்கள் என்று பாவிக்கவேண்டுமோ? ஒரு கடத்தில் உதகத்தைச் சேர்த்து அதில் மணல், சுண்ணும்பு, லவணம், சர்க்கரை முதலானவைகளைக் கலந்து, அவைகளை விவரித்துச் சொல்லும்போது, அவைகளில் மேன்மையானது சர்க்கரை என்னலாமல்லவோ? ஓர் கூட்டத்தில் குரு சிஷ்ய ப்ரசிஷ்யரெல்லாரும் கூடியிருக்குமளவில் சிஷ்ய ப்ரசிஷ்ய வர்க்கங்களைக் கீழாகவும், இவ்வர்க்கம் கீழே அநந்தமாகப் போவது போலவும், மேலே போகும்போது குரு என்கிற ஒரு எல்லை ஏற்படுவது போலவும், இந்தக் கூட்டத்தில் எல்லாவற்றுக்கும் மேலானது குருவென்றும் வழிப்பது அநுபவஸித்தமல்லவா? இங்கு உபரிசப்தம் ஸ்தல உந்நதத்வத்தால் வந்ததல்லவே. இதை உதாஹரணமாகக் கண்டுகொள்வது. இதெல்லாம் ஸ்ரீ வைகுண்ட நிர்ணயத்தில் அஸம்பாவிதமாகாதோ என்னில், அன்று. பக்தரான நமக்கு ஜல தரு பாஷாணாதி ஸ்வரூபத்தில் மலையாகவும், அர்ச்சாரூபத்தில் திருவேங்கடமுடையானாகவும் ஸேவை கொடுக்குமிடத்திலேயே கர்ப்பிதமாய், ஸ்ரீ வைகுண்டத்தையும் ஸ்ரீமந்நாராயணனையும் நாமே முக்ததசையில் காணலாம். ஒரு கடத்தில் உதகத்தைச் சேர்த்து அதில் சர்க்கரையைக் கலந்தால், பார்க்குமவர்க்கு ஜலமாகவே தோன்றுமேயாகிலும், ருசி பார்க்கையில், அல்லது ஏதேனுமொரு சக்தியுள்ள கண்ணாடி முதலான உபாயாந்தரங்களால் ஸோதிக்கையில் சர்க்கரை இருப்பதைத் தெரிந்து கொள்வது போலவும், தசாபேதத்தினாலே இந்தத் திவ்ய நகரிலே ஸ்ரீ வைகுண்டத்தைப் பார்ப்போம் என்பதற்கு யாதொரு ஸம்சயமுமில்லை. ஆகையாலிறே, "வ்யவஸ்தம் ஸிராம் வ்யயஃ ஸ்ரீநிவாஸாநு கம்பயா । உக்ஷவாஸஸ்ய வம்சேத்வ யத்ர த்ருத்வா லகூராயிதம் ॥" என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தார். இந்த ஸம்பந்தம் சரீரசரீரி ஸம்பந்தம் போலவும், சேதநாசேதநங்களுக்கும் ஈசுவரனுக்குமுள்ள சரீராத்ம பாவ ஸம்பந்தம் போலவுமாகும். திருமலை ஆதிசேஷன் என்பதையும் ப்ரமாணமாக்கிக்கொண்டு 'நின்றால் குடையாமிருந்தால் சிங்காதனமாம்' என்பதும் இங்கு அநுபவஸித்தம். ஆகையாலிறே நாம் ஸ்ரீ வைகுண்டத்தையும் ஸ்ரீமந்நாராயணனையும் த்யாகிக்கும் போதெல்லாம் திருமலையையும், அங்கே மற்றொரு திவ்யதேசம் போல் அன்றிக்கே, அஸாதாரணமாக மற்றொரு நாச்சியாரில்லாமல் வக்ஷஸ்தலத்திலே ஸ்ரீ மஹாலக்ஷ்மியைத் தரித்துக்கொண்டு 'ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ,' 'அஹோராத்ரே பார்ஶ்வே' எனும்படி நிற்கும் திருவேங்கடமுடையானையுமே த்யாகிக்க வேண்டுமென்று ஆயிற்று. திருவேங்கடமுடையான் தான் ஸ்ரீமந் நாராயணன் என்பதை ஆழ்வார் திருமந்திரத்துக்கீடாக "வேங்கடத்துறைவாரமுதமோவெனலாம் கடைமை" அதாவது 'நமோ வேங்கடேசாய' என்றும் மஹா அஷ்டாக்ஷரியை அநுஸந்தித்தாரிறே.



இதில் வாசகதோஷங்கள் இருந்தால், பாலனுடைய தோஷயுக்தமான வாசகங்களே பெரியோர்களுக்கு உகப்பாயிருக்குமாப்போல்; இதில் விஷய ப்ராமாணிகத்வத்தைப்பற்றி அடியேனுக்கு யாதொரு பீதியும் ஸந்தேஹமும் தட்டவில்லை. ஏனெனில், நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் ஈஷத்தேனும் வாஸனையில்லாத இந்த அல்ப சேதநனுக்கு இது திருவேங்கடமுடையானது க்ருபாகடாக்ஷத்தால் 'நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் சோதிக்கே', என்னுமாப்போலே ப்ரஸாதிக்கப்பட்ட நீதியானதால் அடியேனுக்கு ஸம்பூர்ணமும் அவிச்சேதமுமான நம்பிக்கை இதில் உண்டாயிற்று.

திருப்பதி சேட்லூர் ராஜகோபால தாஸன் என்கிற

துரைஸாமி அய்யங்கார்,

(சித்தூர்.)

ஸ்ரீரஸ்து.

# வதூ வித்யா விசாரம்.

ப்ரஹ்ம மீமாம்ஸையில் விசாரித்த அபசூத்ராதிகரணந்யாயம் ஸ்த்ரீகள் விஷயத்திலும் ப்ரவர்த்தித்து, ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லை என்று நிர்ணயித்துக் கொடுக்கமாட்டாதா என்று விசாரிப்போம். இதில் ஸ்த்ரீ புருஷ விசேஷமின்றிக்கே, 'ஶூத்ராவர் [illegible],' இத்யாதி ப்ரமாணங்களால் ப்ரஹ்மவித்யாதிகாரம் எல்லோர்க்கும் ப்ராப்தமாயிருக்க, அதில் ஸ்த்ரீகளுடைய ப்ரஹ்மவித்யாதிகாரத்தை மாத்ரம், அபசூத்ராதிகரணந்யாயமோ இன்னும் வேறு ப்ரமாணங்களோ பாதிக்கமாட்டாதென்று நாம் எண்ணுகிறோம். ததாஹி, தேவதாதிகரணமத்வதிகரணங்களில் தேவதைகள் எல்லார்க்கும், எல்லா ப்ரஹ்மவித்யையிலும் அதிகாரமுண்டென்று ஸ்தாபித்தபிறகு, அதிகார ப்ரஸங்கத்தால் சூத்ரர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டா இல்லையா என்று விசாரித்து நிர்ணயிக்க, ஏழு ஸூத்ரங்களடங்கிய அபசூத்ராதிகரணம் ப்ரவர்த்தித்தது. அதில் மூன்று ஸூத்ரங்களால், சூத்ரருக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரத்தை ஸாதிப்பதற்குச் சொன்ன லிங்கம் பாதிக்கப்படுகிறது. மேல் நான்கு ஸூத்ரங்களால் சூத்ரருக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லை என்பதற்கு ப்ரமாணங்கள் சொல்லப்படுகின்றன. அந்த அதிகரணத்துக்கு. 'ஜாநஶ்ருதிர்ஹ பௌத்ராயண:,' என்று தொடங்கி பௌத்ரபுத்ரராயும் ஜாநஶ்ருதியென்று ப்ரஸித்தி பெற்ற ஒருவர், 'ஶ்ரத்தயா தேயம், அஶ்ரத்தயாதேயம்,' என்கிற ஶாஸ்த்ரப்படி, ஶ்ரத்தையோடு பஹு தாநங்களைச் செய்துகொண்டும் அந்நதாநார்த்தம் பஹு பாகசாலியாயுமிருந்தார். அவர்



...ர்வதேசங்களிலிருந்தும் அதித்யாதிகள் வந்து நமது அந்நத்தைப் புசிப்பார்கள் என்று எண்ணி, பஹு ஶ்ரத்தையோடு, ஸர்வ திக்குகளிலும், க்ராமங்களிலும், மார்க்கங்களிலும், அரண்யாதிகளிலும் வந்து தங்கும் வழிப்போக்கர்களுக்கும், ஏழை ஜநங்களுக்கும், ஶீதவாத ஆதபவாரணங்களான கம்பளங்களாலும், அந்நபாநாதிகளாலும், ஶயநாதிகளாலும், வஸ்த்ரங்களாலும், பரிபூர்ணமாயிருந்த அந்நசாலை, மடம், ஸத்ரம் முதலியவற்றை ஏற்படுத்தினார். இப்படி இருக்கும் காலத்தில், ஒருநாள் ராத்ரி, சில மஹான்கள் இவருடைய அந்நாதி தாநங்களால் மிகவும் ஸந்தோஷத்தையடைந்து, கேவல கர்மஶீலரான இவர்க்கு, ப்ரஹ்மஜ்ஞாந ஸம்பாதநத்தில் த்வரையை உண்டுபண்ணவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அப்போது க்ரீஷ்ம காலத்தில் காற்றின் ஸௌகர்யார்த்தமாய் மேலுப்பரிகையில் அநாவ்ருத ப்ரதேசத்தில் ஹம்ஸதூளிகா மந்சத்தில் சயநித்திருக்கும் அந்த ராஜனுடைய கண்களுக்கு லக்ஷ்யமாக ஹம்ஸரூபிகளாகச் சென்றார்கள். அப்போது அந்த ஹம்ஸங்களுக்குள் பின்சென்ற ஹம்ஸமொன்று முன் செல்லும் பக்ஷியொன்றைக் கூவி "ஓ! ஓ! அல்பத்ருஷ்டியுடன் கூடின ஹம்ஸமே! பௌத்ராயணனை ஜாநஶ்ருதியின் தேஜஸ்ஸானது ஸ்வர்க்கதுல்யமாயும் மத்யாஹ்நதுல்யமாயும் வ்யாபித்திருக்கின்றது பார். அந்தத் தேஜஸ்ஸில் நீ அகப்படவேண்டாம்; அது உன்னைத் தஹிக்கவும் வேண்டாம்" என்று சொல்லிற்று. இப்படி ஜாநஶ்ருதியின் ப்ரஶம்ஸையைக் கேட்ட முன்சென்ற ஹம்ஸம், அந்த வார்த்தைகளை ஸஹிக்காததுபோல் "ஓ! ஹம்ஸமே! என்ன மாஹாத்ம்யமுடையவனை எண்ணி, ப்ரஹ்மவித்தமராய் மஹாப்ராஜ்ஞராய் ஶகடத்திலிருக்கும் ரைக்வரைப்போல் நினைத்து, கேவலகர்மடனை அப்ரஹ்மவித்தாய் இருக்கும் இந்த ஜாநஶ்ருதியை ப்ரஶம்ஸிக்கிறாய்?" என்று ப்ரத்யுத்தரம் சொல்லிற்று. பின் சென்ற ஹம்ஸம் "நீ சொல்லும் ரைக்வர் எப்படிப்பட்ட ப்ரபாவமுடையவர்?" என்று கேட்டது. முன் செல்லும் ஹம்ஸம் "ஓ மித்ரா! லோகத்தில் க்ருதமென்றும், த்ரேதையென்றும், த்வாபரமென்றும், கலியென்றும் நான்கு த்யூ

தங்களுண்டு. அவற்றுள் க்ருதம் நான்கு அங்கங்களுடையது; த்ரேதை மூன்றங்கங்களும், த்வாபரம் இரண்டங்கங்களும், கலி ஓரங்கமு முடையன. 'ஶதே பஞ்சாஶத்' எனும் ந்யாயத்தால், க்ருதத்தில் இதர மூன்று த்யூதங்களும் அந்தர்கதங்கள். க்ருதத்தை ஜயித்தால் இதர த்யூதங்களும் ஜயித்த ப்ராயமாம். க்ருதத்தில் எப்படி இதர த்யூதங்கள் உள்ளடங்கினவோ, அப்படியே லோகத்தில் செய்யப்பட்ட ஸர்வ ஶுபகர்மங்களும் எவரது கர்மத்தில் அந்தர்பூதங்களோ, எவர் அறிந்திருப்பதை லோகத்தில் ஸர்வ ஜ்ஞாதாக்களும் அறிகின்றார்களோ அவர்தான் நான் மொழிந்த ரைக்வர்" என்று விடை தந்தது. இப்படி ஜாநஶ்ருதி கேட்கும் படியாகவே ஹம்ஸரூபிகளான மஹாபுருஷர்கள் சொல்லிக் கொண்டே மறைந்தனர். ஜாநஶ்ருதியும் ப்ரஹ்மவித்தான ரைக்வ ப்ரஶம்ஸாரூபமாயும், ப்ரஹ்மஜ்ஞாந மில்லாதபடியால் தனது நிந்தாரூபமாயும் ப்ரவர்த்தித்த ஹம்ஸோக்திகளைக் கேட்டு, ஶோகாக்ராந்தனாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டு அவ்விரவை ஓர் யுகம் போல் போக்கினான். காலையில் எழுந்து,

'வைஶ்யாத்ஸ ப்ராஹ்மணகந்யாயாம் க்ஷத்தா நாம ப்ரஜாயதே ।
ஜீவிகாவ்ருத்திரேதஸ்ய ராஜ்ஞாம் த்வாரஸ்ய ரக்ஷணம்' ॥

என்று சொல்லுகிறபடி ப்ரதிலோம ஜாதியில் பிறந்தவனும், தன்க்கு ப்ரேஷ்யனுமான ஒரு க்ஷத்தாவை அழைத்து, "ஓ மித்ரா! சென்ற ராத்ரியில் சில ஹம்ஸங்கள் என் கட்டிலுக்கு நேர்மேலாக ஆகாசத்தில் சென்றன. அவற்றுள் ஒன்று என்னை ஸ்தோத்ரம் செய்தது. மற்றொன்று என்னை அநாதரித்து, 'லோகத்திலுள்ள ஜ்ஞாநகர்மங்கள் யாவும் எவருடைய ஜ்ஞாநகர்மங்களில் அந்தர்க்கதங்களோ, ஶகடஸ்தரான அப்படிப்பட்ட ரைக்வரைப்போல் எண்ணி இவனை ப்ரஶம்ஸிக்கின்றாயா?' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டது. அதுமுதல், ப்ரஹ்மஜ்ஞாநமில்லாத நான், திர்யக் ஜந்துக்களாலும் நிந்திக்கலானேனே என்று என் மநஸ் வருந்துகின்றது. ஆகையால் அந்த ரைக்வரையே நான் ப்ரஹ்ம வித்யாசார்யராக உத்தேஶித்துவிட்டேன். அவர் எங்கிருந்தபோதிலும் ஶீக்ரமாக அவரைத் தேடி அவரிருப்பிடத்தை நீ அறிந்து வரவேண்டும்" என்று ஆஜ்ஞாபித்தான். க்ஷத்தாவும் ரைக்வரைத் தேடிவந்து அவர் இருக்குமிடம் தெரியவில்லை யென்று ஜாநஶ்ருதியுடன் சொல்ல, ஜாநஶ்ருதி வருந்தி, 'க்ஷத்தா! ப்ரஹ்மவித்துக்களான மஹான்கள் வஸிக்கும் அரண்யங்கள், நதி புளிநங்கள், ஆஶ்ரமங்கள் இவற்றில் தேடிப்பார்,' என்றுரைத்தான். க்ஷத்தா மறுபடி தேடப்போய், ஒரு வண்டியின் கீழ்த் தன்னுடலைச் சொரிந்துகொண்டிருக்கும் ரைக்வர் ஸமீபத்தில் சென்று, "பகவன்! நீர் தானா ரைக்வர்?" என்றனன். அவர் ஆம் எனவே, க்ஷத்தாவும் திரும்பிப்போய் ராஜாவுக்கு ரைக்வர் இருப்பிடத்தைத் தெரிவித்தனன். உடனே ஜாநஶ்ருதி அறுநூறு பசுக்களையும், ஒரு ஹாரத்தையும் ஜாத்யஶ்வயுக்தமான ரதமொன்றையும் உபஹாரமாகக் கொண்டுபோய், ரைக்வரைத் திருவடி தொழுது, "ஓ ரைக்வரே! இந்த உபஹாரங்களைத் திருவுள்ளம் பற்றித் தேவரீர் உபாஸிக்கும் தேவதையை எனக்கு நன்றாகத் தெரியும்படி உபதேசிக்கவேண்டும்" என்று விஜ்ஞாபநம் செய்தனன். அதை ரைக்வர் கேட்டு, தம்முடைய யோகப்ரபாவத்தால், ஜாநஶ்ருதியை ஹம்ஸங்கள் அநாதரித்ததையும், அப்படி அநாதரகர்ப்பமான வாக்யத்தைக் கேட்டதுமுதல் அவன் ஶோகாவிஷ்டனாய் இருப்பதையும், அவனுக்கு ப்ரஹ்மவித்யையை ஸம்பாதிப்பதில் உடனே உத்யோக முண்டானதையும் நன்கறிந்தவராய், அவனுக்கு ப்ரஹ்மவித்யோபதேசாநுகுணமான யோக்யதை இருந்தபோதிலும், "ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாஸத்ரயமதாபி வா । பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத் ।" என்று சொல்லப்பட்ட பரீக்ஷையும் சிரகால ஸேவையுமில்லாமல், "வக்ஷ்யே ந யஸ்மை நவா," என்று சொல்லப்பட்ட இரண்டாவது படியும் தவிர்ந்து, ஸ்வல்பமான அர்த்த ப்ரதாநத்தால் கடுக உபதேசித்தால் அவனுக்கு ப்ரஹ்மவித்யை ப்ரதிஷ்டிதமாகாதென்று நிச்சயித்துப் புன்சிரிப்புடன், "ஓ! ஶோகாவிஷ்டனான ஜாநஶ்ருதியே! ஹாரமும் தேரும் இந்தப் பசுக்களும் உம்மிடமே

இருக்கட்டும். க்ராமமும் க்ரஹமும் களத்ரமு மற்ற எனக்கு இவற்றின் ரக்ஷணத்தில் ஶக்தியில்லை. இந்தப் பொருள்களை ப்ரதி க்ரஹித்துக்கொண்டு, அவற்றால் ஆகர்ஷிக்கப்பட்டவனாக நான் உமக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கமுடியாது” என்று சொன்னார். அதைக் கேட்டு, இங்கிதமறிந்த ஜாநஶ்ருதியும், சிர காலஸேவையு மில்லாமல், விஶேஷமாக அர்த்த வ்ரயமும் இல்லாமல், தான் கொண்டுவந்த ஸ்வல்ப உபஹாரத்திற்காகத் தனக்குக் கடுக ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க ரைக்வருக்குத் திருவுள்ளமில்லை யென்பதை அறிந்துகொண்டு திரும்பினான். மறுபடியும் ஆயிரம் பசுக்களையும், ஶ்ரேஷ்டமான ஹாரத்தையும், ஜாத்யஶ்வயுக்தமான தேரையும், கந்யகாதாநார்த்தமாகத் தன் பெண்ணையும் கொண்டுபோய், “ஸ்வாமிந்! இதோ ஆயிரம் பசுக்கள், இதோ கண்டபூஷணம், இதோ ஜாத்யஶ்வஸஹிதமான ரதம், இதோ தேவரீர்க்குப் பத்ந்யர்த்தமாக அடியேனுடைய கந்யகை. இந்தக்ராமம் இனித் தேவரீர்க்கு ஸொந்தமானது. இவற்றைத் திருவுள்ளம்பற்றி அடியேனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க வேண்டும். மிகவும் ஆர்த்தனான அடியேனைத் திரஸ்கரிக்கக் கூடாது” என்று சொல்லி ப்ரார்த்தித்தான். ரைக்வரும் ஜாநஶ்ருதியினுடைய ப்ரஹ்மவித்யோபதேசத்துக்கு உபாயபூதங்களான உபஹாரங்களை அங்கீகரித்து, “आजहारेमाः शूद्र अनेनैव मुखेनालापयिष्यथाः,” ஹே! ஶூத்ர! இந்தத் தக்ஷிணைகளைக் கொண்டு வந்தாய். இந்த உபாயத்தாலேயே என்னை ப்ரஹ்மவித்யோபதேசத்தை (உனக்குப்) பண்ணும்படிச் செய்விக்கின்றாய்” என்று சொல்லி, ஜாநஶ்ருதிக்கு ஸம்வர்க்க வித்யையை ரைக்வர் உபதேசித்தார். இந்த ஆக்யாயிகை யடங்கிய சாந்தோக்யோபநிஷத் நாலாவது ப்ரபாடகத்தின் ஆரம்பம் முதல், சில கண்டங்கள் அபஶூத்ராதிகரணத்துக்கு விஷயம்.

“आजहारेमाः शूद्र” எனும் வாக்யப்படி ரைக்வர் ஶூத்ர என்று ஜாநஶ்ருதியை ஸம்போதித்து ப்ரஹ்மவித்யையை உபதேஶித்தபடியாலும், ஶூத்ரர்களுக்கும் அர்த்தித்வ ஸாமர்த்



யாதிகள் உண்டாகையாலும், “श्रावयेच्चतुरो वर्णान् कृत्वा ब्राह्मणमग्रतः” என்று அநுமதி பண்ணப்பட்ட பாரதாதி ஶ்ரவண ஜநித ஜ்ஞாநத்தையும், ஸ்வவர்ணோசிதமான பூர்வ வர்ண ஶுஶ்ரூஷாதி ரூபகர்மங்களையும் கொண்டு, ஶூத்ரர்களும் ப்ரஹ்மவித்யை ஸம்பாதிக்கலா மாகையாலும், அவர்க்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டென்று பூர்வபக்ஷம்பண்ணி, ஶூத்ரர்க்குப் பாரதாதி ஶ்ரவணாநுமதி பாபஶாந்த்யர்த்தமென்று அங்குள்ள ப்ரமாணங்களால் ஏற்படுகையாலும் வேதாத்யயந யோக்யதை யில்லாதவனுக்கு வேதோபப்ரஹ்மணம் வ்யர்த்தமாகையாலும், ஜாநஶ்ருத்யுபாக்யாநத்திலுள்ள ஶூத்ரசப்தத்திற்கு ஶோகாவிஷ்டன் என்று அர்த்தமாகையாலும், ஶூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லையென்று, “शुगस्य तदनादरश्रवणात् तदाद्रवणात् सूच्यते हि” என்கிற முதல் ஸூத்ரத்தில் ஸித்தாந்தம்பண்ணி யிருக்கின்றது. “क्षत्रियत्वगतेश्चोत्तरत्र चैत्ररथेन लिङ्गात्,” என்கிற மேலிரண்டு ஸூத்ரங்களால் ஜாநஶ்ருதி க்ஷத்ரியன் என்பதற்கு லிங்கங்கள் சொல்லப்பட்டன.

இதனால் ஶூத்ருக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் இல்லையென்று ஏற்படுமே யொழிய ஸ்த்ரீகளுக்கு அதிகாரமில்லை யென்று ஏற்படாது. இந்த ந்யாயத்தை அதிதேசிக்கவும் முடியாது.

ந்யாயவிருத்தமான ஶூத்ராதிகாரத்தில் ஒருவித லிங்கமும் இல்லையென்று மேற்குறித்த ஸூத்ரங்களால் சொல்லி, ந்யாய ஸித்தமாக ஶூத்ரர்களுக்கு அநதிகாரம் ஶ்ருதி ஸ்ம்ருதிகளால் அநுக்ரஹிக்கப்படுகின்றதென்று மேல்வருகின்ற, ‘संस्कारपरामर्शात् तदभावाभिलापाच्च’ இத்யாதி ஸூத்ரங்களில் சொல்லுகிறார். அதில் ‘संस्कारपरामर्शात्’ என்கிற ஸூத்ரத்தில் ப்ரஹ்மவித்யையை உபதேஶிக்கும்போது உபநயந ஸம்ஸ்காரம் பராமர்ஶிக்கப்படுகையாலும், மந்வாதிகள் ‘न शूद्रे पातकं किञ्चिन्न च संस्कारमर्हति । चतुर्थो वर्ण एकजातिः,’

இத்யாதிகளில், சூத்ரனுக்கு ஸந்த்யாவந்தநாத்யதிக்ரம ப்ரயுக்த தோஷமில்லை; அவன் உபநயநாதி ஸம்ஸ்காரங்களுக்கு அர்ஹனன்று; அவன் ஏகஜாதி; த்விஜாதியன்று என்று ஏற்படுகின்றமையால், அவனுக்கு ப்ரஹ்மவித்யையில் அநதிகாரமே ந்யாயம் என்று நிர்ணயித்தார்.

ஸ்த்ரீகள் விஷயத்திலோ, 'ஸைஷ வைவாஹிக ஸ்த்ரீணாம் ஔபநாயநிக: ஸ்ம்ருத:,' என்று மநுவும், 'விவாஹம் சோபநயநம் ஸ்த்ரீணாமாஹ மநீஷிண: । தஸ்மாச மஹாராஷ்ட்ரேஷு ஸ்ருஷ்டி: ஜநநே தோஷவத்ஸர: ॥' என்று யமனும், விவாஹத்தையே ஸ்த்ரீகளுக்கு உபநயநமாகச் சொல்லுகையாலும், ஸ்த்ரீகளுக்கு விவாஹம் முதற்கொண்டு, உபநீதர்களுக்குப்போல், ஆசௌச விதாயக சாஸ்த்ரமும், ததநுஷ்டாநமு மிருக்கையாலும், த்ரைவர்ணிக ஸ்த்ரீகளும் த்விஜாதியாகையாலும், மேற்குறித்த ஸூத்ரந்யாயம் ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்தியாது.

'ததபாவ நிர்த்தாரணே ச ப்ரவ்ருத்தே:,' என்கிற மேல் ஸூத்ரத்தின் விஷயம் என்னவென்றால்: ஸத்யகாமன் தன் தாயான ஜபாலையைப் பார்த்து "ஓ மாதாவே! நான் ப்ரஹ்மசர்யத்தை அடையவேண்டுமென்று எண்ணுகிறேன்; என்னுடைய கோத்ரம் என்ன? அதைச் சொல்" என்று கேட்டான். தாயும், "அப்பா! நான் யௌவந காலத்தில் பர்த்தாவின் க்ருஹத்தில் தேவபித்ராதித்யப்யாகதர்களுடைய பரிசர்யையில் நிரதையாக இருந்த ஸமயத்தில் உன்னைப் பெற்றேன். அப்போது சுச்ரூஷையில் வ்யாப்ருதமான மநஸ்ஸையான நான், உனது கோத்ரத்தை அறிந்துகொள்ளாமல் போனேன். ஆகையால் நீ ஆசார்யனிடம் சென்று இந்த வ்ருத்தாந்தத்தைச் சொல். 'நான் ஜபாலா புத்ரன்: என் பெயர் ஸத்யகாமன்' என்று நீ சொன்னையானால் அவர் உனக்கு உபநயநாதிகளைப் பண்ணிவைப்பர்" என்று சொன்னாள். ஸத்யகாமனும் ஹாரித்ருமத் புத்ரராகிய கௌதமரை யடைந்து "ஓ பகவன்! ப்ரஹ்மசர்யார்த்தம் சிஷ்யனாக உம்மை அடைகின்றேன். என்னை சிஷ்யனாகத் திருவுள்ளம்பற்ற



வேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். கௌதமரும், "அப்பா! உன் கோத்ரமென்ன?" என்று கேட்டார். அவனும் தாயார் சொன்னபடி அவரிடம் விஜ்ஞாபித்துத் தனது கோத்ரம் தனக்குத் தெரியாதென்று சொன்னான். கௌதமரும், "அப்பா! ஸத்யகாம! தாமஸப்ரக்ருதியாய் ஜநித்துக் குடிலபுத்தியுடன் கூடிய சூத்ரன் விநயாந்விதமாக இவ்விதம் சொல்லமாட்டான். இந்த வார்த்தைகளைச் சொன்ன நீ, ப்ராஹ்மணனாகவே இருக்கவேண்டும்". 'ஸமிதம் ஸோம்யாஹர உப த்வா நேஷ்யே' என்று சொல்லி அவனுக்கு உபநயநத்தைப் பண்ணிவைத்தார். அவனுடைய சிரகாலஸேவையால் ஸந்துஷ்டராகி ப்ரஹ்மவித்யையையும் உபதேசித்தார். இந்தச் சாந்தோக்யத்திலுள்ள கதையைப் பராமர்சித்தால், ஸத்யகாமன் சூத்ரனன்று என்று நிர்த்தாரணம் பிறந்த பிறகே, ப்ரஹ்மவித்யையைக் கௌதமர் அவர்க்கு உபதேசிக்க ப்ரவர்த்தித்தார் என்று ஏற்படுகிறது. ஆதலால் சூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் இல்லையென்று ஏற்படுகிறது. இதனால் த்ரைவர்ணிக ஸ்த்ரீகளின் ப்ரஹ்மவித்யாதிகாரத்திற்கு ஈஷத் பாதகமும் ஏற்படமாட்டாது. 'ச்ரவணாத்யயநார்த்த ப்ரதிஷேதாத்,' என்பதுமேல் குறித்த ஸூத்ரத்திற்கு மேல் ஸூத்ரம். 'பத்³யு ஹ வா ஏதத் ஸ்மசாநம் யச்சூத்ரஸ்தஸ்மாச்சூத்ர ஸமீபே நாத்யேதவ்யம்,' என்கிற வாக்யத்தில், சூத்ரனென்பவன் ஜங்கமமான ச்மசாநமாகையால், அவன் ஸமீபத்தில் வேதாத்யயநம் செய்யக்கூடாதென்று நிஷேதிக்கையால், சூத்ரனுக்கு வேத சப்த ச்ரவணம் அர்த்தாத் நிஷித்தமாகையாலும், ச்ரவண ப்ரதிஷேதத்தாலேயே அத்யயந வேதார்த்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களுடைய நிஷேதங்களும் ஸித்தமாகையாலும், சூத்ரனுக்கு வேத ஜ்ஞாநபூர்வக ப்ரஹ்மவித்யையில், அதிகாரமில்லையென்பது இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம். ஸ்த்ரீகளுக்கு வேதசப்த ச்ரவண நிஷேதமான ச்ருதி ஸ்ம்ருதிகள் இல்லையாகையால், மேலெடுத்த ஸூத்ரந்யாயமும் த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்திக்காது.

'ஸ்த்ரீசூத்ர த்விஜபந்தூநாம் த்ரயீ ந ச்ருதிகோசரா',

என்கிற ஸ்ரீ பாகவத ப்ரதம ஸ்கந்த சதுர்த்தாத்யாய பஞ்சவிம்சத் ச்லோகத்தில், வேதம் ஸ்த்ரீகளின் ச்ரவண விஷயமாக மாட்

டாது என்று சொன்னதற்கும், ஸ்த்ரீஜாதி தாமஸ ப்ரக்ருதியாகை யால், அவர் வேதத்தைக்கேட்டு, அதன் அர்த்தத்தை அறிவ தற்கு அநர்ஹர் என்று தாத்பர்யமேயொழிய, வேத ஶப்தத்தை ஸத்ரீகள் காதுகளால் கேட்கக்கூடாதென்று தாத்பர்யமன்று. இப்படிச்சொன்னால் தான், த்விஜபந்து என்று த்ரைவர்ணிகா பாஸனையும் சேர எடுத்தது ஸங்கதமாகின்றது.

ஶூத்ரனுக்குப்போல் த்ரைவர்ணிகாபாஸனுக்கும் வேதஶப் தம் காதிலும் படக்கூடாதென்று சொல்லும் அநந்யதாஸித்த மான ஶாஸ்த்ராநுஷ்டானங்களைக் காணவில்லை. மஹான்களான ஶ்ரோத்ரியர்கள் அகத்தில் குருபத்ந்யாதிகள் கேட்கும்படியாக மாணவகர்கள் வேதாத்யயனம் பண்ணுவதும், ஆவர்த்திசொல்லுவ தும், பஹு காலமாக ஶிஷ்டாநுஷ்டானத்தில் காணப்படுகிறது. ஶூத்ரன் ஸமீபத்திலிருந்தால் வேதஶப்தத்தை ஶிஷ்டர்கள் உச்ச ரிக்கிறதில்லை யென்பது திருமழிசைப்பிரான் வ்ருத்தாந்தோப ப்ருஹ்மிதமான ஶிஷ்டாநுஷ்டானஸித்தம். இந்த ஶிஷ்டாநுஷ்டா னத்தாலே முன் உதாஹரித்த ஸ்ரீ பாகவத ஶ்லோகத்திற்கு, நாம் முன்சொன்ன தாத்பர்யத்தையே உசிதமாகக்கொள்ள வேண்டு மென்பது ஸித்தம். ஸ்த்ரீகளுக்கு வேத ஶ்ரவண நிஷேதக ப்ர மாண மில்லாததுபோல், வேதாத்யயன நிஷேதக ஸ்பஷ்டதர ப்ரமாணமுமில்லை யென்றே மிதஜ்ஞனை நான் எண்ணுகிறேன். "நஸ்த்ரீஶூத்ரௌ வேதமதீயாதாம்," என்று நையாயிகர்கள் சொல் லும் ஶ்ருதி வாக்யம் அவ்வளவு ப்ராமாணிகமாகத் தோன்ற வில்லை. அது ப்ராமாணிகமாக இருந்தால் ஸ்பஷ்டதரமான அந்த ஶ்ருதிவாக்யத்தை எடுக்காமல், "அத ஹாஸ்ய வேதமுபஶ்ருண்வத ... ," என்கிற ப்ரமாண வாக்யத்தால், ஶூத்ரனுக்கு வேதஶ்ர வணம் நி[ஷேதிக்கப்படாது]. அதனால் ஶப்தஶ்ரவணத்திற்கே அநர்ஹனான அவனுக்கு வேதாத்யயனம் அர்த்தாத் நிஷேதிக்கப் படுகின்றது எ[ன்று], வாசநிக நிஷேதத்தைவிட்டு ஆர்த்திகமான நிஷேதத்தை, ஸ்ரீ ராமாநுஜ பாஷ்ய ஶங்கரபாஷ்யாதிகளில் சொல்லமாட்டார்க[ள்]. ஆகையால் ப்ராமாணிக ஶிரோமணிக ளான பாஷ்யகாரா[திக]ளுக்கு விஷயமாகாத முன்சொன்ன வாக் யம், நையாயிக கல்பி[த]மென்றே எண்ணுகிறோம். மேலும் பார்த் தாவின் சரமக்ரியா[தி]களில் ஸ்த்ரீகளுக்கு ஸர்வமந்த்ரோச்



சாரணமும் ஸ்ம்ருகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீகளுக்கு அத்யயநம் நிஷித்தமானால், அந்த விதி விஷயமான மந்த்ரோச் சாரணம் எப்படி ஶக்யமாகும்? ஶேஷஹோமத்தில் "ஸுமங் கலீரியம் வது:" என்கிற மந்த்ரத்தை உச்சரித்து வதூவரனைப் பார் க்கவேண்டும் என்று ஸ்ம்ருதியில் விதிக்கப்பட்டிருக்கிறது. இப் படி அநேக வேதவாக்யங்களை ஸ்த்ரீகள் உச்சரிக்கவேண்டுமென்று தர்மஶாஸ்த்ரங்களில் விதிக்கக் காண்கின்றோம். ஸ்த்ரீகளுக்கு அத் யயன மில்லாவிட்டால் இவை யாவும் எப்படி ஸங்கதங்களாகும்? இப்படி ஸ்த்ரீகளுக்கு வேதஶ்ரவணமும், கிஞ்சித் வேதாத்யயன மும், நிஷேத விஷயமாகாத அநுஷ்டானங்களாலும், அர்த்தாபத் தியாலும் ஸித்திக்கையால், அபேக்ஷிதங்களான அர்த்தஜ்ஞானா நுஷ்டானங்களும், ஸித்திக்கக் குறையில்லை. ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்ம வித்யாதிகளில் அதிகாரம் உண்டென்பதற்கு ப்ருஹதாரண்ய கத்திலுள்ள மைத்ரேயீ ப்ராஹ்மணமும், கார்கிப்ராஹ்மணமும், இன்னும் பாரதாதிகளிலுள்ள மஹர்ஷி ஸ்த்ரீகளின் வ்ருத்தாந்தங் களும், அநந்யதாஸித்த ப்ரமாணங்களென்று விமர்ஶிகளுக்கு விச தம். 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:', என்று விதிக்கப்பட்ட ஸ்வஶா காத்யயனம் யாவத்து மில்லாவிட்டாலும், ஸ்த்ரீகளும் அர்த்தித்வ ஸாமர்த்யாதி ரூபமான அதிகார ஸம்பத்தியில் ஒரு ப்ரஹ்மவித் யையில் இழிந்தால், ததுபயோகியான வேதாத்யயனாதிகளும், பர்த் ருக்ரியோபயோகி வேதாத்யயனத்தைப்போல், அர்த்தாபத்தி ப்ரமா ணத்தால், அவர்களுக்கு ப்ராப்தங்களாகத் தட்டில்லை. "தஸ்மா ச்சூத்ரோ யஜ்ஞேऽநவக்லுப்த:" இத்யாதி ஶூத்ரனுக்கு யஜ்ஞ ப்ரஹ்மவித்யா நிஷேதக ஶாஸ்த்ரங்கள்போல், த்ரைவர்ணிக ஸ்த்ரீ கள் விஷயத்தில் ப்ரஹ்மவித்யா நிஷேதகமான ஶாஸ்த்ரமில்லையா தலால், ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் நிர்பாதமென்பதை ஶ்ருதப்ரகாஶிகையின் வ்யாக்யானமான பாவப்ரகாஶிகையில் தேவ தாதிகரண ப்ரதம ஸூத்ர ஶ்ருதப்ரகாஶிகா வ்யாக்யானாவஸரத் தில், "ஸுலபம்ஸாவம்," என்று ஆரம்பித்து சொல்லப்பட்டிருக் கிறது.

(இன்னும் வரும்.)

உ. ரா.

ஓர் விஶிஷ்டாத்வைதி.

## கடிதம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ ஸர்வ ஜகத் காரணபூதனான ஸர்வேஶ்வரனும் ஸ்ரீய:பதித்வத்தாலே யன்றோ சிறப்பெய்தியது. அப்படிப்பட்ட லக்ஷ்மீ கடாக்ஷ நோக்கத்திற்கு எல்லைநிலமாய், "கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன, நாளும் கொடுவினை செய்யும் கூற்றின்தமர்களும் குறுககில்லார், விடமுடையரவில் பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும், தடமுடைவய லனந்தபுரநகர் புகுதுமின்றே" என்றும், "ஏய்ந்த பொன்மதி ளனந்தபுர நகரெந்தை" என்றும் ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளியதற்கு இணங்க, நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களும் மலியப்பெற்று, இப்பாரதபூமியின் முகாரவிந்தம் போலப் பொலிவுடையதான திருவநந்தபுரத்தில் விளங்கும் ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சி பால ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மஹாராஜ ராஜே ராமராஜ பஹதூர் ஸ்ரீமூல மஹாராஜா அவர்கள், 23 - 11 - 14-ல் நாச்சியார் கோவில், ஸ்ரீ. உ. வே. வித்வான் அபிநவ ஸரஸ்வதீ நடாதூர் கிருஷ்ணமா சார் ஸ்வாமியை மரியாதையுடன் அழைத்து ஸம்பாவித்து, ஷை ஸ்வாமி உபந்யஸித்த மேன்மையான விஷயங்களைப் பரிவுடன் கேட்டு ஆதரித்து, ஷை ஸ்வாமிக்குப் பெருமை பொருந்திய "அட்டத் தோடா வீரசங்கிலி" என்ற ஸ்வர்ண ஹஸ்தாபரணாதி ஸம்மாந ஸம்பாவனை செய்தார்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ தாஸன்.
(திருவநந்தபுரம்)

---

## ஸ்ரீதேசிக ப்ரபந்தம்.

இஃது, திருவஹீந்த்ரபுரம் பகவத்விஷய வித்வான் ஸ்ரீ. உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியால், பல வ்யாக்யானங்களுக்கு இணங்க, பிழையறப் பரிசோதிக்கப்பட்டு, அடிவரவுடனும், க்ரமமான ப்ரபந்த வரிசையுடனும், நல்ல காகிதத்தில், சுத்தமாயும், எவ்வித பிழையு மில்லாதபடி, மிக த்ருப்திகரமாக, ஸ்ரீமான் கி. ஸ்ரீராமாசார்யர், கொ. ஸுதர்சநாசார்யர், இவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை ப்ரதி 1-க்கு, (முன்னிலும் 2 - அணா குறைத்து) 6 - அணாவாகும். ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமாகவும், ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் விஷயமாகவும் அருளிச்செய்யப் பட்ட அடைக்கலப்பத்துகளும் சேர்ந்தது, ப்ரதி 1 - க்கு 6-அணா, 6 - பையாகும். தபால் சார்ஜ் வேறு.

நமது ஸித்தாந்தத்தில் ப்ரேமையுள்ள எல்லாரும் இந்த க்ரந்தத்தை ஆதரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இது, சென்னை, திருவல்லிக்கேணி தேரடி வீதி 38-வது நம்பர் க்ருஹத்திலிருக்கும் கொ. ஸுதர்சநாசார்யரிடத்தில் கிடைக்கும்.

OFFICE OF THE REGISTRAR OF ... 14 MAY 1915 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ஆநந்தவஷ பங்குனிமீ [ஸஞ்சிகை 2.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 விஜயஸ𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**கோபால க்ருஷ்ண கோகலே.**

மஹாராஷ்ட்ர தேசவாஸியா யிருந்த கோபால க்ருஷ்ண கோகலே யென்பவர் சென்ற மாஸம் இறந்து போய்விட்டார். நாமறிந்தவரையில், இந்தப் பாரத வர்ஷத்தில் பிறந்த யாரைக் குறித்தும், ஸாதாரணமாக யாவந் ஜநங்களும், இவர்க்காகத் துக்கப்படும்வண்ணம், துக்கித்தாரில்லை. ஹிந்துக்களும், மஹம்மதியரும், இந்தியரும், ஐரோப்யரும், இன்னும் அவரையறிந்த யாவரும் அவர் மரணநிமித்தமாகச் சோகிக்கின்றனர். இங்கிலீஷ்காரருடைய பஹுராஜ்யங்களுக்கும், நம் இந்தியாவுக்கும் ஏகாதபத்ரம் தாங்கிய மஹாராஜாதிராஜனாகிய ஜ்யார்ஜ் சக்ரவர்த்தியும் அவர் மரணத்தின் நிமித்தம் தாம் கொண்ட வ்யஸநத்தைத் தெரிவித்தனர். தர்மமே ரூபீகரித்து வந்ததென நமது தேச பரிபால

நத்தைச் சக்ரவர்த்தி ப்ரதிநிதியாக அங்கீகரித்த ஹார்டிஞ்ச் ப்ரபுவும், கோகலேயின் குணங்களைப்பற்றி விஸ்தரித்துப் பேசித் தமது வ்யஸநத்தை ஆவிஷ்கரித்தனர். நமது நாட்டின் பல பிரிவுகளை ரக்ஷிக்கும் அத்யக்ஷர்களும் விஸ்தரேண அவ்வண்ணம் செய்தார்கள். இந்தியாவறிந்த கனவான்கள் அனைவரும், அதன் பாகங்களில் மிக்கவரென விளங்கிய பலரும், ஜில்லாக்கள்தோறும் ப்ரகாசிக்கும் பெரிய மனிதர்களும், ஒரே மநஸ்கராய்க் கோகலே மரண ஜநிதது:க்க ஸாகரத்தில் மூழ்கிப்போய் இருக்கின்றார்கள். ஸாமாந்ய ஜநங்களைப்பற்றிக் கேட்பானேன்?

கோகலே யென்பவர் க்யாதியிலாவது, ஸம்பத்திலாவது விசேஷித்த குலத்தில் பிறந்தாரில்லை. அவரது ப்ரபாவம் ஜந்மாந்தர ஸுக்ருதமடியாகப் பகவத்ப்ரஸாதத்தால் அவர்க்கென்றே ஸாக்ஷாத்தாகக் கிடைத்தது. புத்திவிசேஷத்தால், பதினெட்டாம் பிராயம் முடிவதற்குள், கலாஸங்கத்தில் ஸ்வவித்யையை முடித்தனர். தாநங்கட்கெல்லாம் வித்யாதாநம் சிறந்ததெனக் கருதிச் சரீரயாத்ரைக்குப் போதுமாயிருந்த அல்பவேதநத்தில் த்ருப்தராய்ப்போந்து, பதினெட்டு ஸம்வத்ஸரம் வரையில் புணா நகரத்தின்கண் ஓர் கலாசாலையில் சிறுவர்க்கு வித்யை கற்பித்துக் கொண்டு கழித்தனர். அதன்பிறகு, அவர் ஜீவதசையிலிருந்த பன்னிரண்டு ஸம்வத்ஸரங்களும், அவர் தேசநன்மைக்காக உழைத்துப் போக்கினர்.

அர்த்தார்ஜநத்தில் அவர் இழிந்திருந்தாராகில் அவரைப் போல் யாரும் பணம் சேகரித்திருக்கமாட்டார். ராஜாங்கத்தில் இந்தியர்க்குக் கிடைக்கக்கூடிய ஸர்வோத்க்ருஷ்டமான உத்யோகம், அவர் ஸம்மத மாத்ரத்தால் அவர்க்குக் கிடைத்திருக்கும். இந்தியர்க்குக் கவர்ன்மெண்டார் அளிக்கின்ற உத்க்ருஷ்டமான பிருதெல்லாம் அவர் ஸம்மதிக்காதபடியாலே அவர் பெயரைப் பெரிதாக்கவில்லை. அவர் தமது தேசாபிமாநத்தைக் கருதி, அதற்கென்றே பணிவிடை செய்வதற்குப் பிறந்தாராகையால், அதைத் தவிர்த்து மற்றையாவும் த்ருணமென நிச்சயித்திருந்தனர். அத்வித்தீயமான அவரது ஜ்ஞாநஶக்த்யாதிகளை அவர் ஸ்வதேச நன்மைக்கென்றே அர்ப்பணம் செய்தனர். அமாநித்வம், அதம்ப:, ஆர்ஜவம், அஹிம்ஸா, ஸத்யம், அக்ரோத:, த்யாக:, அபைஶுநம், தயா பூ-



REGISTRAR OF ... 14 ... 1915

தேஷு, அலோலுப்த்வம், மார்தவம், அசாபலம், அத்ரோஹ:, முதலான ஆத்மகுணங்கள் அவரிடம் மிகவும் ப்ரகாஶித்தன. ஸவார்த்தம் ஸ்ப்ருஹையை யொழித்துப் பரார்த்தத்தையே ஸ்வார்த்தமா யெண்ணி, ஸ்வதேசத்தின் க்ஷேமத்தைத் தேசகாலோபாதி ப்ரயுக்தமாயுண்டான வரம்புகட்குள், யாவத் பர்யந்தம் வ்ருத்தி செய்யலாமோ, தாவத் பர்யந்தமே அவருடைய ப்ரயத்நங்கள் ப்ரகாசித்தன. காலதேசவிஶேஷங்களை ஆலோசிக்காமல், நம் தேசத்தினர்க்குச் செல்வத்தாலும், பலத்தாலும் சிறந்த பல தேசத்தாரையொத்து ஏற்படவேண்டிய நன்மைகளை அபேக்ஷித்த சில தேசாபிமாநிகள், கோகலேயைப்போல் ஆத்ம குணங்களாலும் ஜ்ஞாநத்தாலும் மேம்பட்டவராயினும், சாதுர்யமில்லாமல், ராஜாங்கத்தவர்க்கு வெறுப்பையுண்டாக்கித் தாமும் கெட்டுத் தமது நாட்டினரையும் கெடுத்தனர். மண்டையைக் கொண்டு ஒரு கருங்கல்லை உடைக்கப்போனால் மண்டையுடையுமேயன்றிக் கல்லும் உடையுமோ? ஆதலால் கோகலேயினுடைய ஸாமர்த்யம் மிகவும் வியக்கத்தக்கது. தத்காலம் அவரது அகால ம்ருத்யுவானது நமது நாட்டின் தௌர்பாக்யத்தைக் காட்டுகின்றது. அவரது ஸ்தாநத்தை வஹிக்கத்தக்க இந்திய புருஷர் இப்போது யாரும் விளங்கவில்லை. ஆகிலும் அவருடைய நற்குணங்களும் முயற்சிகளும் யாவராலும் அபேக்ஷிக்கத்தக்கவை யாதலால், இப்படி அபேக்ஷிப்பவர்க்குள் சிலர்க்காவது அவர் காட்டின வழியில் நடப்பதற்கு அவை உதவலாம் என்று நம்புகின்றோம். தேசாபிமாநத்தால் பொது நன்மைக்குப் பாடுபடுபவர்க்கெல்லாம் கோகலே ஒரு ப்ரதிமாநமாக எப்பொழுதும் விளங்குவர்.

இது வேதாந்த விசாரத்தை வஹித்த பத்ரிகை யாதலால், ஸாமாந்ய யோசனைக்கு விலக்காக யாம் சிறிது யோசிக்கவேண்டியிருக்கின்றது. கோகலே மிகவும் புண்ய கர்மங்கள் செய்தனர். தாத்ருஶ கர்மபலன் அவரை அநுவர்த்திக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. 'புண்ய: புண்யேந கர்மணா பவதி" என்று உபநிஷத் கூறிற்று. தேசத்துக்கு நன்மையை ஸம்பாதிக்கும் பொருட்டு, அவர் தமக்கு ஜந்மத்தாலும் ஸம்ஸ்காரத்தாலும் கிடைத்த வர்ணாஶ்ரம தர்மங்களை த்யாகம் செய்தனர். அவர் ஐரோப்பா முதலான கண்டங்களில் ஸஞ்சரித்தபடியால், அவ்வாறு

நாம் ஊஹிக்க இடம் கொடுக்கின்றது. அவரை ஸர்வப்ரகாரமாகப் பஹுமாநிப்பவர்களுக்கு வர்ணாச்ரம தர்மங்களில் விச்வாஸம் நீங்கியிருக்கலாம். நமக்கு அவ்வண்ணம் விச்வாஸஹாநி ஸம்பவிக்கவில்லை. "ஶ்ருதிஸ்ம்ருதி ர்மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே । ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ," என்று பகவத் வாக்யமோ, அப்படிப்பட்ட வாக்யமூலமான பகவதாஜ்ஞையோ இருப்பதாக நம்புகின்ற நாம், ஸ்வதர்மமெனப்பட்ட வர்ணாச்ரமோசித கர்மங்களின் ஸ்வரூப த்யாகம், பகவந்நிக்ரஹ ஹேதுவாகு மென்றும் விச்வஸிக்கின்றோம். ஆனாலும் அந்த த்யாகம், லோகோபகாரமடியாகவே கோகலே விஷயத்தில் ஸம்பவித்திருக்குமாதலால், பகவான் அதைப் பாராட்டமாட்டான் என்றும் எண்ணுகின்றோம். அவரது புண்ய கர்மங்களின் ப்ரயோஜநமாக ஸத்வப்ரதாநராய் அவர் மறுபடியும் தேவசரீரமோ மநுஷ்யசரீரமோ கொள்வர். இந்தத் தேசத்தின் அபிமாநம் அவர் மநஸ்ஸைக் கவர்ந்து, அதை எண்ணிக்கொண்டே அவர் ம்ருதரானாராதலால் "தத்ததேவஸ்ஸ மாப்நோதி ஸதா தத்பாவபாவித:," என்னும் ச்ருதிவாக்யப்படி அது இன்னும் சிறக்கப் பயன்பட, நமது தேசத்தின்கண்ணே அவர் மறுபடி ஜநிப்பர். 'நாஸ்த்யக்ருத: க்ருதேந' எனும் வசநப்படி, அவரது புண்ய கர்மங்கள் அக்ருதமாகிற மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்க மாட்டா. மோக்ஷம் 'தரதி ஸுக்ருதம் தரதி துஷ்க்ருதம்' என்று உபநிஷத் வெளியிட்டது.

தாநரூபமான புண்யங்களை மிகவும் ஆர்ஜித்தான் கர்ணன்.

'யஸ்ய ப்ராஹ்மணஸாத்ஸர்வம் வித்தமாஸீந்மஹாத்மந: ।
நாதேயம் ப்ராஹ்மணேஷ்வஸ்தி யஸ்ய ஸ்வமபி ஜீவிதம் ।
ஸதா ஸ்த்ரீணாம் ப்ரியோ நித்யம் தாதா சைவ மஹாரத: ॥
ஸ ப்ராப்தோ நிதநம் பார்த்தாத் கத: பரமிகாம் கதிம் ।'

என்று மஹாபாரத ச்லோகங்கள் கர்ணனைப் புகழ்கின்றன. அந்த ப்ரகரணத்தாலேயே, அவன் ஸூர்யாம்சனாய்ப் பிறந்தவனாதலால், அர்ஜுனன் சரம் அவனது சிரஸ்ஸை அவன் காயத்தினின்று



அறுத்துத்தள்ள அதனின்றும் ஓர் தேஜஸ் வெளிப்பட்டு, வ்யஸநத்துடன் அஸ்தங்கதனாகின்ற ஆதித்யனிடம் சென்று லயித்ததாக மஹாபாரதம் காட்டுகின்றது. நாம் படிக்குங்கால் கேட்ட கதை ஒன்றுண்டு. அதன் உண்மையைப்பற்றி நாம் நிச்சயம் சொல்லோம். ஒரு க்ரந்தத்தில், "ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கையகத்ததோ புறத்ததோ வறியேன், பாவியேன் வேண்டும் பொருளெலாம் பயக்கும் பக்குவந் தன்னில் வந்திலையால், ஓவிலாது யான் செய் புண்ணியமனைத்து முதவினேன் கொள்கநீ யுனக்குப், பூவில் வாழயனும் நிகரிலனென்றால் புண்ணியம் அதனினும் பெரிதோ" எனும் தனிப்பாட்டைப்பற்றி, நமக்குப் பொருள்தந்த தமிழ்ப்பண்டிதர், இது கர்ணனது சரமோக்தி யென்று நமக்குச் சொன்னார். இது இங்ஙனமாகில், அபாரகருணம்புதியான ஸ்ரீ பகவானுடைய க்ருபாபரீவாஹம் எங்ஙனம் விளங்குகின்றது? சரீரம் நிரோகமாயிருக்கையில், மநஸ் துர்பலமடையாதவளவில், ஸர்வந்தராத்மாவான சரண்யனைப் பக்தியுடன் ஒருவன் ஒருதரம் ஸ்மரித்தபோதிலும், அந்த ஸ்மரணையையே போதுமான வ்யாஜமாகத் திருவுள்ளம்பற்றி, அவன் தீர்க்க நித்ரையில் மூழ்கின காலத்தில், கேசவன் அவனைத் தான் ஸ்மரித்தோ, அவனுக்கு அந்திம ஸ்ம்ருதியைத் தந்தோ, தனது திவ்யபதத்துக்கு வரவழைத்துக் கொள்கின்றான் எனும் அர்த்தம் விளங்குகின்ற,

'ஸ்வஸ்தே சேதஸி விக்ரஹே ச கரணே யாவத்ஸலாதேஸ்த்வம்
ஸ்மர்த்தும் த்ருஷ்ட்டம் யதஹம் ஜாதவிச்வாஸஜம் ।
தத்தே யாவதஸ்யாந்தே தீவ்ர நித்ராவசம்
ஸ்வயம் விஹிதஸம்ஸ்ம்ருதி: நயஸி யாஹ தேவஸ்வயஸம் ।'

என்கிற ஸ்ரீ நிகமாந்தார்யன் திவ்யஸூக்தியையும், அதற்கு மூலமாகின்ற 'ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாண ஸந்நிபம்' எனும் வசநத்தையும் யோசித்தால், பகவான், அவனுடைய பக்தர் தவறி நடந்தாலும், அதை ஸாதுக்ருத்யமாகப் பரிணமிக்கச் செய்வன் என நாம் விச்வஸிக்கப் பொருந்தும். கொடையில் மஹத்வமடைந்த கர்ணன், அக்கொடையெல்லாம் பகவதர்ப்பணமாகச் செய்தானில்லை. அக்கொடை யாவும் புண்யமாயினும், முமுக்ஷுவுக்குப் புண்யமும் பாபம் போல் மோக்ஷ விரோதமாகின்றமை

யால், அவற்றின் பலன் அவனைத் தொடராமலிருக்க வேண்டி, அவனுடைய ப்ரயாணகாலத்தில் பகவானும் ஓர் ப்ராஹ்மணனென அவனிடம் சென்று யாசிக்க, வேறொன்றும் கொடுக்க அமையாது, தனது புண்யங்களைப் பகவானுக்குத் தந்தானென, மேலெடுத்த தமிழ்பாட்டு வெளியிடுகின்றது. அவனது புண்யங்கள் யாவும் பகவதர்ப்பணமாகியன்றோ அவனுக்கு ஸ்வரூபப்ராப்தி யுண்டாயிற்று.

கோகலேயினுடைய மதம் நமக்குத் தெரியாது. அவர், நமக்குத் தெரிந்தவரையில் மதத்தைப்பற்றிப் பேசவில்லை. அவர் ஸ்வவர்ணதர்மத்யாகத்தை ஜநஸேவை நிமித்தமாகச் செய்தாராயினும், வர்ணதர்மதூஷகராக விளங்கவில்லை. அவரது கர்மங்களுக்கு லக்ஷ்யம் பொது நன்மையாக விளங்கியதே யன்றி, அது ஈஶ்வரப்ரீதியாக விளங்கியதாகத் தெரியவில்லை. அவரது முயற்சிகளில் ஈஶ்வரன் துஷ்டனானன் ஆகில், அவரது மறுபிறப்பில் அவர்க்குப் பொதுநன்மையையே வ்யாபாரமாகச் செய்து அதன் கருத்தை ஸ்வகைங்கர்யமாகப் பரிணமிக்கும்படி அநுக்ரஹிப்பனென்று ப்ரார்த்திக்கின்றோம்.

**ஸோஷியாலஜீ எனும் ஶாஸ்த்ரம்.**

ஒரு தேசஜநங்களின் ஸமாநமா யிருக்கின்ற நம்பிக்கைகளையும் ஆசாரங்களையும் குறித்து, அவருடைய ஸமுதாயத்திற்கு ஸொஸைடி (society) எனும் ஶப்தப்ரயோகம் இங்கிலீஷ் பாஷையில் உண்டு. அந்தக் கூட்டத்தினுடைய ப்ரதிவ்யக்திகளும் பரஸ்பரம் வஹிக்கவேண்டிய ஸம்பந்தங்களையும், கடமைகளையும், அவர்க்குள் ஒவ்வொருவரும் கொண்டாடக்கூடிய பாத்யங்களையும் பற்றி விவரிக்கும் ஶாஸ்த்ரத்துக்கு ஸோஷியாலஜி (sociology) என்று இங்கிலீஷில் பெயர். ப்ரதிசரீரம் ஜீவன் சரீரவிலக்ஷணனென்றும், சரீரப்ரயுக்தமாக அவன் வ்யாபாரவானாகின்றான் என்றும், அவனுடைய வ்யாபார பலன் அவனைக் கட்டுப்படுத்திப் பார்க்கும் பல விதமான குணாகுணங்களை உண்டாக்குகின்றதென்றும், அதனால் ஜீவன்கள் ஸம்ஸார சக்ரத்தில் அகப்பட்டு, ப்ராக்ருதாம்சங்களின் பரிணாமப்ரவாஹங்களுக்குக் காரணமாகின்றார்களென்றும், நம்முடைய ப்ரமாணக்ரந்தங்களைக் கொண்டு நாம் நம்புகின்றோம். இத்தகைய ப்ரபஞ்



சத்துக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. இதில் ஸம்ஸரிக்கின்ற ஜீவன்கள், அவருடைய சரீரமடியாகவும், ஜந்மகால தேச ப்ரயுக்தமாகவும், ஸம்ஸர்க்க நிமித்தமாகவும், பூர்வகர்ம வாஸனைகளின் பொருட்டும், ஒவ்வொருவர் ஆவிஷ்கரிக்கும் குணங்களிலும் செய்யும் கர்மங்களிலும், தாரதம்யத்தைக் காட்டுகின்றனர் என்பது, நம்முடைய ஶாஸ்த்ரங்களாலும் அநுபவங்களாலும் ஸித்தம். இப்படிக் குணகர்மவிபாகங்கள் மநுஷ்யர்க்குள் உண்டு என்பதை யாவராலும் மறுக்கவொண்ணாது. ஸமாநபக்ஷங்களுடன் கூடின பறவைகள் ஒருமிக்கச் சேர்கின்றன என்பது இங்கிலீஷ் பழமொழி. அப்படியே ஸமாநகுணகர்மங்கள் மநுஷ்யர்க்குள் ஜாதியென்றும் வர்ணமென்றும் வழங்கும் விபாகங்களை உண்டாக்குமென்பதும் உண்மை. ஒரு ஜீவனுக்கேற்ற குணங்களும் கர்மங்களும் அந்த ஜீவன் மரித்தபின் அவை ப்ரகாசிக்கத்தக்க விடங்களிலேயே அதற்குப் புநர்ஜந்மத்தை உண்டாக்கும் என்பது, புநர்ஜந்மத்தை நம்புகின்றவர்கள் மறுக்கக்கூடாத உண்மை. இந்த உண்மை நமக்கு ஶ்ருதிப்ரமாணத்தால் ஸித்தித்திருக்கின்றது. ஜகத்வ்யாபாரம் ஈஶ்வரனுடையது. ஆனாலும் அதைக் கேவலம் ஸாக்ஷாத்காரத்தால் நடப்பிக்கின்ற பகவான் ஜீவகர்மஸாபேக்ஷனாய் நிற்கின்றான் ஆதலால், "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: । தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தாரமவ்யயம்" ॥ எனும் கீதாஶ்லோகம் நிஸ்ஸம்ஶயமாக ஸத்யத்தையே ஸ்தாபிக்கின்றது. இந்த ஸத்யத்தையும், ஶாஸ்த்ரப்ரமாணங்களையும், லோகாநுபவங்களையும் நன்கறிந்து நன்றாக ஆலோசித்துத்தான் மஹர்ஷிகள் தர்மஶாஸ்த்ரங்களை எழுதினார்கள். நம்முடைய ஸோஷியாலஜி அந்த ஶாஸ்த்ரங்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த மஹர்ஷிகள் ஜ்ஞாநத்திலும், பூததயையிலும், நிஸ்ப்ருஹையிலும், தர்மருசியிலும், மற்ற ஸர்வ ஆத்மகுணங்களிலும், உலகத்தில் எங்குமில்லாதபடி விசேஷித்தவர்கள். ஆத்ம குணபூர்த்தி நமது முன்னோர்க்கு உண்டாயிருந்தபடி மற்றெங்கும் விளங்கவில்லை யென்று நாம் த்ருடமாக விஶ்வஸிக்கின்றோம். இந்த ஏற்றம் தமது ஸந்ததியார்க்குக் குறையின்றி நிலைப்பதைக் கருதி, அவர்க்குள் ஶ்ரேஷ்டரெனப்படுவோர் நமக்குத் தர்மப்ரவர்த்தகராய் விளங்கினார்கள்.

இப்போது ஏறக்குறைய ஏழு நூற்றாண்டுக்கு முன் வரையிலும் ஆர்யநாடுகள் ஆர்ய தர்ம ப்ராசுர்யத்தையே அடைந்து நின்றன. அதற்கு முன்னும் தேசாந்தரவாஸிகள் நமது நாட்டில் புகுந்து குடிகொண்டனர் என்பது சில ஆதுநிகர்களுடைய யோசனை. நமது இதிஹாஸ புராணங்கள் காட்டினவழியில் யோசித்தால், நமது நாடுகளில் இவ்வண்ணம் புகுந்து குடிகொண்டவர்கள் கேவலம் அநார்யரெனக் கொள்ளல் கூடாது. மஹம்மதியர் வ்யாபகம் பரவுமுன்னால், தத்காலம் ஆப்கன் தேசமென்றும் துர்க்கிஸ்தாநம் என்றும் பெயர் வழங்கும் நாடுகள், ஆர்ய ஜநங்களால் வ்யாபிக்கப்பட்டிருந்தன. க்ரீக் தேசவாஸிகள் அலெக்ஜாண்டர் நமது தேசபர்யந்தம் படையெடுத்த காலத்தின் பிறகு, இந்தியாவின் மேல் நாடுகளில் ஸ்திரப்பட்டார்கள். அவர் காலக்ரமேண, இந்திய மதப்ரவிஷ்டர்களாய்ப் போந்து, இந்திய தர்மங்கட்குக் கட்டுப்பட்டனர். இவ்வண்ணமே, பரரெனச் சிந்திக்கப்பட்டவரெல்லாம் நம்தேசம் வந்து சேர்ந்து, மதத்தாலும், ஆசாரத்தாலும், நம்முடைய ஜநங்களோடு ஐக்யப்பட்டார்கள். இந்த விஷயம் மஹம்மதியர் இந்தியாவுக்கு வந்தது முதல் மாறிவிட்டது. அரபி தேசத்திலும், யூததேசத்திலும் உண்டான மதங்கள், பரமதங்களை ஸஹிக்கமாட்டா: இன்னும் சொல்லப்போனால் அந்த மதாநுஸாரிகள் பரஜநங்களையும் ஸஹித்திலர். யூதர் சரித்ரம் முழுதும், நிரபராதிகளான ஜநங்களுடன் பலாத்கார யுத்தம் செய்து, அவர்தமை வேரறுத்தலையே ஈஶ்வரப்ரீதியென அவர் கொண்டதாகத் தெரிகின்றது. அவர் மதத்தினின்று கிளைத்தெழுந்த கிறிஸ்து மதமும், மஹம்மத் மதமும், அந்ய மதஸ்தர்களை அபராதிகளாகவே கொண்டு நடத்தின. ஆதலால், யோசனைகட்கு ஈஷத்தும் இடம் கொடாதவண்ணம், ஸ்வமதத்தில் ஆக்ரஹமும் அபிநிவேஶமும் கொண்ட மஹம்மதியர், இந்தியாவுக்கு வந்தபின், இவர் தேசஜநங்களுடன் ஐக்யப்பட்டாரில்லை. நம்முடைய தேவாலயங்களை அழித்தலும், சூறையாடலும், அவற்றில் நின்ற விக்ரஹங்களைத் துண்டித்தலும், "அவற்றில் அபிமாநம் கொண்டவருடைய கொலையும், மஹம்மதியர்க்கு விளையாட்டாய் அமைந்தன. அப்போது, தம்முயிரைக் காக்கவோ, வேறுவிதமான ப்ரயோஜநங்களை அபேக்ஷித்தோ, அநேக ஆர்யஜநங்கள் மஹம்மதியராய் விட்டனர். ஆதலால் மஹம்மதியராண்ட ஆறுநூற்றாண்டு



களில் ஆரம்பித்து, தத்காலம் வரையில், நமது தேசப்ரஜைகளில் நாலிலோர் பகுதி மஹம்மதியராய் விளங்குகின்றனர்.

நூற்றைம்பது வருஷங்களுக்கு மேற்பட்டுக் கிறிஸ்தவரான இங்கிலீஷ்க்காரர் நம் தேசத்தை அரசாள்கின்றனர். இவர் மஹம்மதியரெனக் கோவில்களை அழித்திலர்; இந்திய ஜநங்களைக் கொன்றிலர்; ஸாக்ஷாத்தாக அவரைத் தம் மதத்தில் சேரவும் கேட்டிலர். ஆனால் பாதிரிமார்கள் நம்தேசம் பரவினார்கள்; அவர் நம்மவரைத் தம்மதத்தில் சேரும்படிச் செய்ய ஸர்வரந்த்ரங்களையும் அந்வேஷிக்கின்றனர். ஜீவநோபாயம் இங்கிலீஷ் படித்தால் தான் கிடைக்கும் என்று ஸாதாரணமாக விஶ்வாஸம் உண்டாய்விட்டது. ஆதலால் இங்கிலீஷ் கற்பிக்கும் வித்யாசாலைகளைப் பாதிரிமார் விசேஷமாக ஸ்தாபித்திருக்கின்றனர். அவற்றுள் நம்மவர் படிக்கவேண்டி, அவர்க்குக் கவர்ன்மெண்டு பாடசாலைகளில் காட்டிலும் பல அநுகூலங்களையும் காட்டுகின்றனர். இங்கிலீஷ் கல்வி கிறிஸ்தவர் வஸிக்கும் தேசத்தில் வ்ருத்தியானது. மேலும் அதனுடைய தன்மையும், அதனாலுண்டாகும் சித்தபரிபாகங்களும் நம்முடைய பூர்வசரித்ரத்துக்கு ப்ராதிகூல்யத்திலேயே பர்யவஸிக்கின்றன.

"க்ஷஹம் உந்நிஷ்ப்ராணீத: ஸஹாநீதோ மஹாஶயோ ॥
க்ஷஹம் உந்நீதாநாம் ஸஹநம்ஶ்ருணோதி
மஹாஶநாநாம் ஸஹஸம்ஶ்ருணோதி ।
வ்ருத்ஸகேதச ஸஹதாவிஜ்ஞ்ஷ்டம்
ஸம்ஸமநூஜா ஜோஷமாணா ஸஹந்தி" ॥

எனும் பூர்வஶ்லோகங்கள் காட்டியபடி இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களின் ஸம்ஸர்க்கம் வைதிக ஸம்ப்ரதாய விரோதி யென்பதற்குக் கேட்கவும் வேண்டுமோ? இப்படிக் கல்விகற்றவர்க்குள் சிலர், ஸ்வபரம்பரா தர்மத்தை வெறுக்காத காரணம், ஜந்மாந்தரவாஸநாபலமோ, ஸத்ஸஹவாஸமோ, வேறு விதமான ஸுக்ருதமோ? ஆனால் இவர் தொகை காலக்ரமேண குன்றும்.

இங்கிலீஷ் ராஜ்யமும், இங்கிலீஷ் படிப்பும் பாதிரிமார் உத்யோகமும், நம்மவர் அஶக்தியும், உதாஸீநதையும், நம்முன்னோருடைய தர்ம விஷயமாய் இங்கிலீஷ்படித்த பலருடைய ப்ரதி

கூலாசரணமும், காலக்ரமேண மஹம்மதிய ராஜ்யத்தால் மஹம்மதியர் வ்ருத்தியான வண்ணம், கிறிஸ்தவர் ஜநத்தொகையை மிகுதியாக்கிக் கொண்டுவரும். இதைத் தடுக்க யாராலும் முடியாது. மஹம்மதிய ஸஹவாஸத்தால் சீக்கு மதம் ஜநித்த வண்ணம், கிறிஸ்தவர் ஸஹவாஸம், ப்ரம்மஸமாஜம் முதலாகிய நூதந ஏற்பாட்டுகளை உண்டாக்கின. இங்க்லீஷ் படித்தவரில் ஸநாதந தர்ம ஜுகுப்ஸையானது தாரதமபாவத்தால் பரவுகின்றது. பூர்ண ஜுகுப்ஸை வஹித்தவரைக் கிறிஸ்தவராகவோ, நாஸ்திகராகவோ மாற்றுகின்றது ; சிலரைப் பௌத்தராகவும் செய்கின்றது. விசேஷமான ஜுகுப்ஸை கொண்டவர், ப்ரஹ்மஸமாஜத்தைச் சேர்கின்றனர். மிதமான ஜுகுப்ஸையால் ஆர்யஸமாஜம், ராமக்ருஷ்ண மதம், தியாஸபி முதலான புதுமதங்களைச் சேர்கின்றனர். இவ்விதமாக ஜநங்கள், மனம் போன வழி யெல்லாம் மதங்களை உண்டாக்கிக்கொண்டு, ஒவ்வொருவரும் இந்தியாவை ஒன்று படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு முன்னிருந்த பிரிவுகளுடன் நூதநமான விபாகங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தத் தேசத்துக்கு ஸோஷியாலஜி எனும் சாஸ்த்ரம் வேண்டுமோ? ராஜங்கவிஷயத்தில் ஆர்யரும், அநார்யரும், மஹம்மதியரும், கிறிஸ்தவரும், பௌத்தரும், ஜைநரும், மற்ற யாவத் வகுப்பினரும் ஸமாந ஸம்பந்தமுள்ளவர். இவர்க்குள் இங்கிலீஷ் கற்றவர்கள் யாவரும், ப்ராயேண ஒரு மனதுடன் ஸ்வாராஜ்யத்தை வேண்டுகின்றனர். ஸோஷல் ந்யாயம் ஒவ்வொருவர்க்கும் ப்ரத்யேகமாய் நிற்கும். யாவர்க்கும் பொதுவாகப் பீநல்கோட், ஸாக்ஷ்ய சட்டம், கோர்ட்டுகள் நடவடிக்கைச்சட்டம், கண்ட்ராக்டு சட்டம், காலநிர்ணய சட்டம், முதலானவைகள் அமையக்கூடும். தாயாபாகம், விவாஹம், முதலானவை அந்தந்த வகுப்பினர் மாத்ரம் அவ்வவர்க்கு ப்ரத்யேகமாய் ஸ்தாபிக்க வொண்ணும்.

நாலுவர்ணத்தார்க்கு ஹிந்துக்கள் என்று தத்காலம் பெயர். வர்ணரஹிதர்கள் பாஹ்ய ரெனப்பட்டவர். வர்ணத்தை விட்டவரும், விட விரும்புகின்றவர்களும், தர்மசாஸ்த்ரரூபமான ஸோஷியாலஜிக்கு வெளிப்பட்டவர். அவர்க்கு வேறுவிதமான ஸோஷியாலஜீ வேண்டுமாகில் பண்ணிக்கொள்ளலாம். அப்படிப்பட்டவர்க்கு விவாஹ விஷயமாக ஸிவில் விவாஹசட்டம் முன்னமே இருக்கின்றது.



இவர் தர்ம சாஸ்த்ரங்கள் ஏற்படுத்திய ஸோஷல் கட்டுப்பாடுகளை அதிக்ரமித்து, ஹிந்துக்களாகவும் இருக்க வேண்டுகின்றனராகில், அவர் செய்யத்தக்க தொன்றுண்டு. அவர்கள் ஒன்றுகூடி, வர்ணவிஷயமாயும், ஆச்ரமவிஷயமாயும், வர்ணாச்ரம தர்மங்கள் விஷயமாயும், வர்ணாச்ரமோசித ஆசார ஸம்ஸ்காரங்கள் விஷயமாயும், மதஸம்பந்தமான தமது கொள்கைகள் விஷயமாயும், தங்கள் நிச்சயங்களை ஒன்றுபடுத்தியும், வெளிப்படுத்தியும், தாங்கள், சீக்கு, ப்ரம்மஸமாஜம் முதலான ஏற்பாடுகளைக் காட்டிலும், எங்கெந்த அம்சங்களைக்கொண்டு ஹிந்துக்களா யிருக்க விரும்புகின்றனர் என்பதையும் ஸந்தேஹமற நிச்சயித்துத் தாங்கள் ஓர் புதுவகுப்பினராகிப் பிறகு தங்கட்காகக் கவர்ன்மெண்டாரை விவாஹமுதலான விஷயங்களில் சட்டம் கேட்கவேண்டியது ந்யாயமாகத் தோன்றுகின்றது. அதை விட்டு, ஸநாதந தர்ம வ்ருக்ஷத்தின் மூலத்தில் கோடாரியை ப்ரயோகிக்க யத்நிப்பது ந்யாய விருத்தம். ஹிந்துக்கள் தர்மங்களையும் ஆசாரங்களையும் மாற்ற விரும்புமவர்கள் இங்கிலீஷ் படித்தவரில் சிலர். அவர் ஐரோப்யருடைய ஆசாரங்களை வேண்டுகிறவர்கள். பேரில் மாத்ரம் ஹிந்துக்களென விளங்கி, ஒழுக்கத்தில் ஐரோப்யராயிருக்க இச்சிக்கின்றவர். அந்தப் பெயரையும் நம்மையும் ஸத்யமாக அவர் விட்டொழிந்தால், நமக்கும் ஸநாதந தர்மத்துக்கும் அபாயமும் விட்டொழியும். இவர் நமக்கென்று தாயாபாக விஷயமாயும், விவாஹ விஷயமாயும் சட்டம் கேட்டால், நடுவுநிலைமையைப் பாதுகாக்கவேண்டிய கவர்ன்மெண்டார், இப்படிக் கேட்கப்பட்டவர் அநார்ய கோஷ்டியை அலங்கரிக்கும் வரையில், அவர் வேண்டுகோளை அங்கீகரிக்கமாட்டாரென நம்புகின்றோம். ஹிந்துக்களுடைய ஸோஷியாலஜியை, அந்ய ஜாதியர் ஆசாரத்தை யொக்கும்படி, இவர் அமைக்கவும் மாற்றவும் அதிகாரிகள் அல்லர்.

**மதராஸ் ஸோஷல் ரிபாரம் அஸோஸியேஷன்.**

சென்னைப்பட்டணம் ஸ்மவாய சீர்திருத்த ஸபை கார்யதர்சியான ஓ. கந்தஸாமிசெட்டியாரவர்கள், தாம் கிறிஸ்தவனாகாத காரணத்தைப் பற்றிக் கிறிஸ்தவகாலேஜ் பத்ரிகையில் எழுதின விஷயத்தைப் படித்த டிற்றொரு தத்ஸபா மெம்பர் ஹிந்துப் பத்ரிகையில் எழுதின அம்சங்களைப்பற்றி முன் ப்ரஸ்தாபித்திருக்கின்றோம். செட்டியாரவர்கள்,

பின்னால் தமது தூஷகர்க்குப் பிப்ரவரி மாஸம் 19உ வெள்ளிக்
கிழமை வெளிவந்த ஹிந்து பத்ரிகையில் விடையளித்தனர்.
அதில் ஹிந்துமதமும் கிறிஸ்தவமதமும் முழுமையும் உண்மை
யல்லவென்றும், முழுமையும் பொய்யல்லவென்றும், இரண்டிலு
முள்ள உண்மைகளையும் சேர்த்துத் தாம் நம்புவதாகவும், அத
னால் தன்னை ஹிந்துக்கள் வெறுப்பது ந்யாயமல்ல வென்றும்
சொல்லுகின்றனர். மேலும், கிறிஸ்தவ மத உண்மையைப்பற்றித்
தேவன் அன்பாக உலக சரித்ரத்தில் ஆவிர்பவித்து, ஒவ்வொரு
மனிதனையும், ஒவ்வொரு வ்யாபாரத்தையும் நடப்பித்து, நல்ல
முயற்சிக்கெல்லாம் ஸஹாயம் செய்கின்றனரென்றும், கிறிஸ்து
ஷின் திவ்ய அவதாரத்தின் அர்த்தம் இதுதான் என்றும் உரைத்
தனர். தாம் அங்கீகரித்த ஹிந்துமதத்தின் உண்மையை வெளி
யிட்டாரில்லை. தாம் ஹிந்து மார்க்கத்தை விட்டவரன்றும்.
அதைக் கிறிஸ்தவமதத்தால் விஸ்தரிப்பிக்கின்றனராம். இப்ப
டித் தாம் இருத்தல் நூதந மார்க்க மன்றாம். முன்னமே இதற்கு
ப்ரமாணம் உளதென்று, தமது ஸபாத்யக்ஷரான ஸர் ஶங்கர
நாயர், ஸபையாருடைய கொள்கைகளை விவரிக்குமிடம் உரைத்த
வசநங்களென்று சில வசநங்களை எழுதினார். அந்த அத்யக்ஷ
ரவர்கள் வசநங்களை இதுகாறும் நாம் கேட்டிலோம்; கண்ணுற்றி
லோம். அதில் விஷய வைலக்ஷண்யமாவது, பராமர்ஶத்தால்
உதிக்கும் ஸாத்யவிசேஷமாவது முற்றிலும் இலது. வக்தாவின்
அந்தஸ்தை உத்தேசித்துத்தான் அவற்றை இவ்விடம் யோசிக்
கின்றோம். ஸர் ஶங்கரநாயர் வசநங்களென வெளிப்படுத்திய
தில் இவை கண்டுளோம்:—“ உண்மையாக ஶங்ராசார்யர் புத்
தருடைய விசேஷித்த வசநங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டனர்;
அதாவது, த்ருஶ்யப்ரபஞ்சத்தின் அநித்யத்வம், கர்மத்தில் நம்
பிக்கை, ஒருவர் நிர்வாணமென்றும், மற்றொருவர் பரப்ரஹ்ம
மென்றும் மொழிந்ததில் லயமூலமாக மோக்ஷம். வர்ணபேதத்தை
ஶங்கராசார்யர் ஸஹித்தனரே யன்றி, அதை ஸரியென ஸ்தாபிக்
கவில்லை. அதன் இருப்புக்கு ஓர் வ்யாஜத்தைக் கண்டுபிடித்தனர்.
ம்லேச்சனுக்கும் சண்டாளனுக்கும் வித்யையிலும் மோக்ஷத்தி
லும் அதிகாரம் உண்டென அங்கீகரித்தனர். தென்னிந்தியாவில்
ப்ராஹ்மணேதரர்கள் ஸ்தாபித்த ஶைவ ஸித்தாந்தத்தில், சூத்ர
ஆசார்யர்களும், ஜாதியை வேரில் வெட்டுகின்ற பௌத்த ஜைந



ஸமயங்களைப் பார்த்து ஏற்படுத்திய சூத்ர ஸமாஜங்களும், அங்கீகரிக்கப்பட்டுள. அப்படியே ராமாநுஜாசார்யரும் கிறிஸ்தவருடைய ஸம்ஸர்க்கமடியாகக் கிறிஸ்தவர் நம்பும் அன்பையும் விஶ்வாஸத்தையும் முற்றிலும் தன் தர்ஶநத்தில் ஏற்றுக்கொண்டு அவற்றைக் கர்மத்தைக்காட்டிலும் மேற்பட்டவையாக ஏற்படுத்தினார். அவருடைய நிஜமான ஸம்ப்ரதாயஸ்தரான தென்கலையார், அநேக நூற்றாண்டுகளாய் ஜாதிகளென்பதை வெறும் வகுப்புளாக்கி, மேல் ஜாதிக்குத் தக்கவரான கீழ் ஜாதியரை, மேல்ஜாதிக்குள் சேர்த்துக்கொண்டார்கள். நிஜமான ஹிந்துமத மென்று சொல்லப்படுவது ஸ்த்ரீகளுக்குக் கொடுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தைக் காட்டிலும், வ்யவஹாரத்தில் அதிக ஸ்வாதந்த்ர்யத்தை ராமாநுஜாசார்யர் ஸ்த்ரீகளுக்குத் தந்தனர். மத்வாசார்யர் இதற்கும் மேல் சென்றார். தேவனுடைய குமாரனால் மனிதர் ரக்ஷிக்கப்படுவாரெனும் விஷயத்தைக் கிறிஸ்தவ மதத்தினின்று அவர் எடுத்துக்கொண்டு, அதைத் தனது ஸித்தாந்தத்தின் முக்யாம்ஶமாக்கினார்.” இந்த ரூபமான உக்திகள் மேற்படி கனவான் உபந்யாஸத்தில் வளர்கின்றன. ஶங்கராசார்யர், ராமாநுஜாசார்யர், மத்வாசார்யர் ஆகிய மூவரும் ஏராளமாய் க்ரந்தம் எழுதியிருக்கின்றார்கள். அவற்றுள் நின்று, மேல் வரைந்த உக்திகளுக்கு ஸாதகமாய் ஒரு வாக்யமோ, ஒரு பதமோ, ஓரெழுத்தோ அந்தக் கனவான் எடுத்தாராகில் குணமுண்டு. அவருடைய உக்திகள் ப்ராயேண ப்ராஹ்மண த்வேஷமடியாக வர்ண த்வேஷத்தைக் காட்டுகின்றன. அவருடைய கல்வியாலும், ஜ்ஞாநத்தாலும், ஸஹவாஸங்களாலும் இப்படிப்பட்ட சித்தவ்ருத்தி அவர்க்குண்டானால், அதில் விஸ்மயமடைய ஹேதுவில்லை. அதற்கு ஆதாரமாக அவரடைந்த ஜ்ஞாநத்தை அவர் புத்தியால் பராமர்ஶித்து அவர்க்குத் தோற்றிய யுக்திகளை வெளிப்படுத்தல் ஸஹஜமே. வஸ்து வ்ருத்தியில் இல்லாத அம்ஶங்களை ஸாதகமாக எடுத்துரைத்தல் தர்மவிரோதமென்று யாம் யோசிக்கின்றோம்.

பௌத்தமத பக்ஷபாதிகளான ஐரோப்ய க்ரந்தகர்த்தர்களும், வேதாந்த க்ரந்தங்களைப் பராமர்ஶித்த ஐரோப்யர்களும், முக்யோபநிஷத்துக்கள் பௌத்தர் காலத்துக்கு முற்பட்டன வென்று ஒப்புக்கொள்கின்றனர். ப்ரபஞ்சத்தின் அநித்யத்வ வாதமும், கர்மமடியாக ஜீவன் ஸம்ஸரிப்பதும், உபநிஷத்தால் நமக்

குக் கிடைத்த உண்மைகள். இவற்றைப் புத்தரும் அங்கிருந்து கடன் வாங்கினர். புத்தர் இவற்றை ஶங்கராசார்யருக்குப் போதிக்க அவகாஶமில்லை. ஶங்கரபாஷ்யத்தை இங்கிலீஷ்படுத்திய ஐரோப்பிய பண்டிதரும், ஶங்கரர் ஸூத்ர மதத்தைக் காட்டிலும் உபநிஷத் மதத்தை அநுஸரிப்பதாக அபிப்ராயப்படுகிறார். பரப்ரஹ்மம் வஸ்து; நிர்வாணம் அவஸ்து. ஒரு ஶரீரத்தினின்று மற்றொரு ஶரீரப்ரவேஶம் செய்வதற்குக் கூட, ஜீவாஸ்தித்வத் தைப் புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை. ப்ரஹ்மத்தின் அவித்யாதி ரோஹிதமான அம்சம் ஜீவனென்பர் ஶங்கரர். அதற்கு ஜ்ஞா நத்தால் ஸ்வரூபஸித்தியை உபதேசித்தாரேயன்றி, ஒரு வஸ்து மற்றொன்றில் லயிப்பதை யொத்து லயத்தை உபதேசித்தாரில்லை. ஜீவனெனும் தனி வஸ்துவின் நிஷேதமாத்ரத்தில், இருமதமும் கலக்கலாம். ஆதலால் ஶங்கரர் புத்தரினிடம் அடைந்த உபகாரம் ஶூந்யமே. ஶங்கரராமாநுஜர்கள் வர்ணாஶ்ரமங்களையும் அவற்றிற்குரிய தர்மங்களையும் ஸ்திரப்படுத்தினரென்பதை அபஶூத் ராதிகரணத்திலும், ஸர்வாபேக்ஷாதிகரணத்திலும், விஹிதத்வாதி கரணத்திலும், அக்நிஹோத்ராதிகரணத்திலும், மற்றும் அநேக விடங்களிலும், அவர்களுடைய பாஷ்யங்களில் கண்டுகொள்ளலாம். கீதாபாஷ்ய அவதாரிகையில் ஶங்கராசார், "த்விவிதோ ஹி வேதோக்தோ தர்ம:, ப்ரவ்ருத்திலக்ஷணோ நிவ்ருத்திலக்ஷணஶ்ச, ஜகத: ஸ்திதிகாரணம், ப்ராணிநாம் ஸாக்ஷாதப்யுதய நி:ஶ்ரேயஸ ஹேது: ய: ஸ தர்மோ ப்ராஹ்மணாத்யைர் வர்ணிபிராஶ்ரமிபிஶ்ச ஶ்ரேயோர்திபிரநுஷ்டீயமாந:, தீர்கேண காலேந அநுஷ்டாத்ரூணாம் காமோத்பவாத் ஹீயமாந விவேகவிஜ்ஞாநஹேதுகேந அதர்மேண அபிபூயமாநே தர்மே, ப்ரவர்தமாநே சாதர்மே, ஜகத: ஸ்திதிம் பரிபிபாலயிஷு:, ஸ ஆதிகர்தா நாராயணாக்யோ விஷ்ணு: பௌமஸ்ய ப்ரஹ்மணோ ப்ராஹ்மணத்வஸ்ய ரக்ஷணார்தம் தேவக்யாம்... க்ருஷ்ண: கில ஸம்பபூவ, ப்ராஹ்மணத்வஸ்ய ஹி ரக்ஷணே ரக்ஷித: ஸ்யாத் வைதிகோ தர்ம: தததீநத்வாத் வர்ணாஶ்ரம பேதா



நாம்" ॥ என்று சொல்லுகிறார். இதன் ஸமுதாயார்த்தம் என்னெனில்:— "வேதத்தில் சொல்லப்பட்ட தர்மம் இரண்டு விதம்; (அது) ப்ரவ்ருத்தி லக்ஷணம் என்றும் நிவ்ருத்தி லக்ஷணம் என்றும், (அறியப்பட்டிருக்கிறது) அது, ஜகத்தின் இருப்புக்கும், ப்ராணிகள் யோகக்ஷேமங்களையும் பரம புருஷார்த்தத்தையும் அடைய, ஸாக்ஷாத் காரணமாகின்றது. அந்த தர்மம், ப்ராஹ்மணர் முதலான வர்ணாஶ்ரம நிஷ்டர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்து, பஹுகாலத்தின் பிறகு அநுஷ்டிக்கப்பட்டவர்களுடைய காமவ்ருத்தியால் விஜ்ஞாநம் நஷ்டப்பட்டு, அந்த ஹேதுவால் அதர்மத்தால் தர்மம் ஜயிக்கப்பட்டு, அதர்மம் வ்ருத்தியடையவே, ஜகத்தின் ஸ்திதியைப் பரிபாலிக்க இச்சித்தவராய் அந்த ஆதி கர்த்தாவான நாராயண ஶப்தவாச்யனை விஷ்ணுவானவர், பூமி ஸம்பந்தமான யாவத்தினுடையவும், வேதத்தினுடையவும், ப்ராஹ்மண்யத்தினுடையவும், ஸம்யக் ரக்ஷணத்தின் பொருட்டுத் தேவகீ கர்ப்பத்தில் ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்தாரன்றோ? ப்ராஹ்மண்யத்தினுடைய ரக்ஷணத்தால் வைதிக தர்மம் ரக்ஷிக்கப்பட்டதாகும். ஏனெனில், வர்ணாஶ்ரம தர்ம பேதங்கள் அனைத்தும் ப்ராஹ்மண்யாதீநமாய் இருக்கின்றது."

பகவத்கீதை, நான்காவது அத்யாயம், ஏழாவது ஶ்லோகம், பகவானுடைய அவதரணம் தர்மத்துக்கு ஹாநி ஸம்பவிக்கும் காலங்களிலென்று சொல்லுகின்றது. அவ்விடம் தர்ம ஶப்தத்தை ஶங்கராசார்யர் 'வர்ணாஶ்ரமாதிலக்ஷணம் ப்ராணிநாம் அப்யுதய நி:ஶ்ரேயஸ ஸாதநம்' என்று வ்யாக்யாநம் செய்கின்றார். ராமாநுஜாசார்யரும், 'தர்மஸ்ய' எனும் ஶப்தத்தை, 'வேதோதிதஸ்ய சாதுர்வர்ண்ய சாதுராஶ்ரம்ய வ்யவஸ்தயா அவஸ்திதஸ்ய கர்தவ்யஸ்ய,' என்று வ்யாக்யாநம் செய்கின்றார். இதைப்பற்றி வீண் விஸ்தாரமேன்? ப்ரஸக்தமான அவஸரங்களில் வர்ணாஶ்ரம தர்மஸம்ரக்ஷகராய் அந்த ஆசார்யர்கள் விளங்குகின்றனர். அந்யதா விளங்கவுமில்லை. ஶங்கராசார்யர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் பின் எழுதப்பட்ட ஶங்கரவிஜயம் எனப்பட்ட க்ரந்தங்களிலோ, மற்றெங்கோ, காணப்பட்டதாக யாம் கேள்வியுறும் கதையொன்றுண்டு. அவர் காஶீ நகரத்தில் ஓர் குறுகிய வீதியில் நடக்கும்

கால், ஒரு சண்டாளன் எதிர்வரவும், அவனை விலகி நடக்க யத்தனிக்கவே அந்தச் சண்டாளரூபதாரியான ஶிவன், அவர் ஸித்தாந்தம் செய்த ப்ரஹ்மாத்வைத வாதத்தை அவர் அநுஷ்டாநத்தில் கொண்டுவரவில்லையென மொழிந்ததாக அக்கதை சொல்லும். அக்காலம் ஶங்கராசார்யர் வ்யவஹாரதசையில் நின்றார். வ்யவஹாரிக ஸத்யத்வம் அவர் ஸித்தாந்தத்தின்படி வர்ணபேதங்களுக்கு உண்டு. இந்தக் கதையை அவலம்பித்து அவரெழுதிய ப்ரஸ்தாநத்ரய பாஷ்ய க்ரந்தங்களை அபலாபம் செய்யல், உசிதமாகத் தோன்றவில்லை. ம்லேச்சர்களுடையவும், சண்டாளருடையவும், வித்யா மோக்ஷ விஷய அர்த்தித்வ ஸாமர்த்யாதிகளைப்பற்றி அநுகூலமாயிருக்கும் ஶங்கராசார்யோக்திகளை நாம் கண்டுமிலோம், கேட்டுமிலோம். தென்தேசத்துச் சைவ ஸித்தாந்தம் சூத்ரர்க்கே உரியதன்று. அந்தத் தேசத்து ப்ராசீந வைஷ்ணவ மதத்தையும் சைவ மதத்தையும், ப்ராஹ்மணரும் சூத்ரரு மடங்கிய ஆழ்வார்கள், நாயின்மார்கள் அபிமாநித்தனர். இந்த ஸித்தாந்தங்கள் ஜாதியை த்வேஷித்தோ, அழித்தோ பிறக்கவில்லை. ஈஶ்வரபக்திக்கும், ஈஶ்வர க்ருபையைப் பெறுவதற்கும் யாவரும் அதிகாரிகள் என்று காட்டின. இது வடகலை வைஷ்ணவரும் ஒப்புக்கொள்கினர். இதர ப்ராஹ்மணரும் ஒப்புக்கொள்கின்றனர். ‘[illegible], [illegible], [illegible]’ ‘அந்தண ரந்திய ரெல்லையி னின்றவ னைத்துலகும்’, முதலான வசநங்கள் இதில் ப்ரமாணம். பகவத் ப்ரஸாதத்துக்கும் மோக்ஷத்திற்கும் யாவரும் அதிகாரிகளென்பதால், ஜாதியும், ஜாதிதர்மங்களும் அழிவானேன்? தென்னிந்தியாவின் சைவ ஸித்தாந்தத்தைச் சேர்ந்த சைவார்ச்சகர்கள் இன்னும் ப்ராஹ்மணராகவே இருக்கின்றனர்.

கிறிஸ்தவ ஸம்ஸர்க்கம் ராமாநுஜனுக்கும் ஆநந்த தீர்த்தருக்கும் உண்டு என்பது ஸஹிக்கமுடியாத சொல். இதை ஒப்புக்கொள்பவர் தம் புத்திக்குக் கிஞ்சித்தும் ஶ்ரமம் கொடுத்திலர் என்று எண்ணுகின்றோம். இந்த ஆசார்யர்கள் சரித்ரத்திலாவது, க்ரந்தங்களிலாவது இந்த அநுமாநத்துக்கு ஒரு ஹேத்வாபாஸம் கூட கிடைக்காது. இவர்கள் கிறிஸ்து விஷயமாக ஓர் ஸ்மரணை



கூடப் பண்ணியிலர். ‘[illegible]’ என்று இவர் மதங்கள் சொல்லும். ஸ்வாசார்யர்கள் விஷயத்திலும், பூர்வாசார்யர்கள் விஷயத்திலும், இவர்களுடைய உபகார ஜ்ஞாபந ரூபமான உக்திகள் உண்டு. Faith என்று கிறிஸ்தவர் சொல்வதை ராமாநுஜன் ஸ்மரிக்கவில்லை. அவர் விரும்பியது பக்தியும், ஜ்ஞாநமும்; பக்தி ஶப்தம் ஸ்ரீபாஷ்யத்தில் உபாஸநபர்யாயத்தில் உபயோகப்படுத்தியிருக்கின்றது. ‘[illegible]’ என்று, ராமாநுஜன் பலதரம் விஷயபர்யாலோசனையின் பேரில் விஶ்வாஸம் ஜநிப்பதை வேண்டுகின்றனர். மூடவிஶ்வாஸம் அவர் ஸம்ப்ரதாயத்தில் எடுக்கப்படவில்லை. வர்ணாஶ்ரம தர்மஸ்வரூபத்யாகம் அவர் க்ரந்தங்களில் எங்கும் எடுக்கப்படவில்லை. ஸர் ஶங்கரநாயரவர்கள் ராமாநுஜ ஸித்தாந்தத்தை உண்மையாக வழிபடுபவர் தென்கலையாரென்பதை எங்கு கண்டாரோ? ராமாநுஜன் எழுதிய க்ரந்தங்கள் ஒன்பது. இவற்றுள் எங்காவது வசநமெடுத்துக் கொடுப்பரோ? தென்கலை வடகலையார் மதஸ்வரூபங்களும், அவற்றுள் பேதங்களும், அவர் அறிந்துளரோ? இவற்றிற்கு அநுகூலமாகவும் ப்ரதிகூலமாகவும் மூல ப்ரமாணங்கள் ராமாநுஜன் உக்திகளினின்று எடுத்துக் காட்டுவரோ? ஸோஷல் ரிபாரம் ஸபையார் இஷ்டங்களுக்குத் தென்கலையார் அநுகூலரோ என்பது எமக்குத் தெரியாது. இருகலையார்க்கும் ஸமஸ்தாநத்திலிருக்குமவர், ஒரு கலையாரே ராமாநுஜ மதத்தை நிஜமாகக் கொண்டாடுகின்றனர் என்பதால், மற்றவர் அப்படிக்கிலர் எனும் அபிப்ராயத்தையும் வெளிவிட்டாராதலால், வடகலையார் அவர் விஷயத்தில் விஶ்வாஸ மாந்த்யம் கொள்ள இடம் உண்டாகின்றது. இந்த அபிப்ராயம் விஷயவிசாரத்தின் பேரில் ஸித்தித்திருந்தால் மதிபேதமென்று கொள்ளலாம். அப்போதும் கலாப்ரயுக்த வ்யவஹாரங்களில் அவரிடம் வடகலையார் விஶ்வஸிப்பது கஷ்டம். நாம் கலாவைஷம்யம் கொள்கின்றோமில்லை. அது ஸ்வரூபநாஶஹேதுவாகும். மதிபேதம் லோகத்தில் ஸஹஜம். கலைகளில் பிறந்தவர்க்குக் கலாவிஷயங்களான யோச

னைகள் முற்றிலும் விடா. அந்யர் விஷயவிமர்சை செய்ய அவஸர
மில்லாத தசையில், இத்தகைய எண்ணம் கொள்ளலும் அதை
வெளியிடலும் உசிதமென நமக்குத் தோன்றவில்லை. தென்கலை
யார் தாழ்ந்த ஜாதியாரை உயர்குலத்தில் சேர்த்துக் கொண்டதாய்
ஸர் ரங்காசாரியரவர்கள் சொன்னார்கள். அவர்களப்படிச் செய்தது
நமக்குத் தெரியவில்லை. வாயினால் யாது மொழிந்தாலும், தென்
கலையார் இதுவரையில் சூத்ரனுடன் உண்ணவுமில்லை, மணம்
புரியவுமில்லை. யாதேனுமொரு சூத்ரனை ப்ராஹ்மணன் ஆக்கவு
மில்லை. மற்ற ப்ராஹ்மணரைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்கு ராமாநு
ஜன் என்ன ஸ்வாதந்த்ர்யம் கொடுத்துவிட்டாரோ தெரியவில்லை.

மத்வாசார்யரும் நன்றாக அகப்பட்டுக் கொண்டார். முக்ய
ப்ராணவிஷயமாக 'ஆத்ரு வைஷ்வாநரேண ஜாயதே', என்று ப்ர
ச்னோபநிஷத் சொல்கிறது. முண்டகோபநிஷத்தும் 'வைச்வாநர
ஜாயதே ப்ராண:' என்றது. இதனால் முக்யப்ராணன் ஈச்வர
புத்ரனெனக்கூடும். ஆநந்ததீர்த்தர் அவருடைய அவதார மென்
கின்றார் மத்வஸம்ப்ரதாயஸ்தர். இந்த விச்வாஸங்களை ஸம்
பாதிக்க அவர் கிறிஸ்தவரிடம் போவானேன்? போனதாக எங்
கும் தெரியவில்லை. ஸர் ரங்காசாரியரவர்கள் ஸமவாய சீர்திருத்த
ஸபையின் அத்யக்ஷர். அவர் உக்திகளை நாம் மேல் எடுத்த அவஸ
ரத்தில் அவர் இவ்விதமும் மொழிகின்றனர்:—"நமது பக்ஷம் ஸரி
யானது; சரித்ரம் ஆரம்பமுதற்கொண்டு மதவிஷயமாயும் ஆசார
விஷயமாயும் சீர்திருத்தம் செய்தவர்கள், அந்தப் பக்ஷத்தை ஆச்
ரயித்தனர். உன்னைச் சுற்றிப் பார். அந்யமதமாக இருந்தாலு
ஸரி; உன்னைச் சூழ்ந்தநின்று உனது தேசத்தாருடையவும், வேண்
டுமானால் உலகத்தினுடையவும் வ்ருத்திக்கு அநுகூலமான விஷ
யங்களை நிச்சயிப்பாய்; பிறகு அந்த விஷயங்களோ, அவற்றி
வித்துகளோ அகப்படுமாவென்று உனது ஸொந்த மதத்தின
னோக்கு; பிறகு அவற்றை உனது மதத்தின் அம்சங்களென ஆசா
ரத்துக்குக் கொண்டுவர யத்நப்படு; அந்த மதாநுஸாரிகளாகவு



ன்படி ஆசரிப்பவராகவும் (பிறகு நீ) வர்த்திப்பாய்." இந்தச்
ற்களின் அர்த்தம் என்னென்றால்:—பாரம்பராகதமான விச்வா
ஸங்களைப் பாராமல்; ஒருவனது அறிவுக்கெட்டிய விஷயங்க
ல், தன் நாட்டினர் வ்ருத்திக்குப் பொருந்தியவையாக எண்ணக்
டிய அம்சங்களைக் கைக்கொண்டு, அவை தன் ஸொந்த மதத்
ல் ஆதரிக்கப்பட்டவையாகத் தோன்றினால், அந்த மதாம்ச
ரகவே அவற்றை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவரவேண்டும்.
ால்லாமல் போனால், ஒருவன் தன்னாட்டினர்க்கு நன்மையாகக்
காண்ட விஷயம் ஸ்வமதவிரோதியாக நின்றால், அந்த அம்
ரத்தில் மதத்தைத் திரஸ்கரித்தல் வேண்டுமென்பதும் அர்த்
ாத் ஸித்திக்கின்றது. வஸ்துஸ்திதியில் சீர்திருத்த ஸபையார்
இருவகைப்பட்டவர். ஒரு வகுப்பினர், சாஸ்த்ரத்தை அவலம்
பித்து மாறுதல் வேண்டுமென்பர். இவர் ஸந்தர்ப்பமிருந்தால்,
சாஸ்த்ரார்த்தங்களையும் தங்கால் நம்பிக்கைகளுக்கு விரோதமாக
மாற்ற உடன்படுவர். மற்றொரு வகுப்பினர், சாஸ்த்ரங்களின்
வழியைப் பராமர்சிக்காமலே தங்கள் புத்தியால் ஸாது வென்று
க்ரஹித்தபடி ஆசாரங்களை மாற்ற அபேக்ஷிக்கின்றனர். இரு
வகுப்பினர்க்கும் ஸாதுத்வ புத்தி ஐரோப்யர் வழக்கங்களில் தான்
உண்டு. ஆதலால் ஹிந்துக்களென்றும் ப்ராஹ்மண ரென்றும்
வீணாக ஒரு பெயரைக் காப்பாற்ற எண்ணி இவர்கள் ப்ரயத்
நம் செய்கின்றனர். மேலும் தமது ஸஹாயத்துக்காகக் கிறிஸ்
தவரையும், ப்ரஹ்ம ஸமாஜத்தினரையும், பௌத்தரையும், நாஸ்
திகரையும் கூட்டிக்கொள்கின்றனர். இவர்கள் ப்ரஸங்கங்களுக்
கும் யோசனைகட்கும் பாதிரிமார்கள் ஸ்தாநம் அளிக்கின்றனர்.
இவரை வாஸ்தவத்தில் ஸநாதந தர்மாபிமாநிகளாய் நிற்கும் ஆர்
யர் நம்புவதற்கு இடமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ப்ரபுத்தமுக்தாம்புஜசாருலோசநம்
ஸவிப்ரமப்ரூலதமுஜ்ஜ்வலாதரம் ।
ஶுசிஸ்மிதம் கோமலகண்டமுந்நஸம்
லலாடபர்யந்தவிலம்பிதாலகம் ॥ 35.

35. "பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம் ।
தத் புண்டரீகநயநம் விஷ்ணோர்த்ரக்ஷ்யாம்யஹம் முகம் ॥"

என்கிறபடி நினைத்த மாத்திரத்தில் ஸகல பாபங்களையும் போக்கடிக்குமளவு அதி பாவநமாயும், தாமரஸ புஷ்பம் போன்ற திருக்கண்களுடன் கூடிக்கொண்டு அதி மநோஹரமாயுமுள்ள திருமுக மண்டலத்தின் ஶோபையைக் கீழ்ஶ்லோகத்தினால் அநுஸந்தாநம் செய்துவிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினால் அந்தத் திருமுகத்திலுள்ள ஒவ்வொரு அவயவத்தையும் அநுஸந்தித்து, அந்த அவயவ ஸௌந்தர்யத்தினுடைய சேர்த்தியை அநுபவிக்கிறார்.

ப்ரபுத்தமுக்தாம்புஜசாருலோசநம்-ஸௌம்யமாயும் மலர்ந்துமுள்ள தாமரஸபுஷ்பம்போல அழகாயிருக்கும் திருக்கண்களையுடைய. ஆஶ்ரிதர்களுடைய தர்ஶநத்திலுள்ள ப்ரீதியே கண்களுக்கு ஒரு மலர்ச்சியைக் கொடுக்கின்றது; அவர்களை அநுக்ரஹிப்பதிலுள்ள ஆபிமுக்யமே அவைகளின் ஸௌம்யதை. தவிரவும், இந்த உபமாநம் பகவானுடைய கண்களுக்கே அநுரூபமாகுமே தவிர மற்றை எதற்கும் ஆகாது.



"தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ"

என்று சாந்தோக்யத்தில் பகவானுடைய திருக்கண்கள், கம்பீரமான தீர்த்தத்தில் ஜநித்தும் ம்ருஷ்டமான தண்டையுடைத்தாயும் ஸூர்யனுடைய கிரணங்களினால் விகஸிதமாயுமுள்ள தாமரஸபுஷ்பத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது - அந்தத் தாமரஸபுஷ்பம் போல அமலமாயும் ஆயதமாயும் இருக்கின்றன பகவானுடைய திருக்கண்கள் என்பது கருத்து. இந்தக் காரணத்தினாலேயே அவனுக்கு 'புண்டரீகாக்ஷ:' என்று அஸாதாரண நாமமுண்டு. "கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப் பூப்போலே, அங்கணிரண்டுங்கொண்டு" என்று ஆண்டாள் அநுபவித்திருக்கிறாள்.

ஸவிப்ரமப்ரூலதம்- நெறித்திருக்கும் புருவத்தையுடைய. இது, ஆஶ்ரிதர்களின் வரவினால் ஜநிக்கும் உல்லாஸாதிஶயத்தைக் காண்பிக்கின்றது.

உஜ்ஜ்வலாதரம் - (பவழத்தைக் காட்டிலும் அதிகமான) ப்ரகாஶத்தையுடைய திருவதரங்களுடன் கூடிய.

ஶுசிஸ்மிதம் - 'ஶுசி' என்பதற்கு, 'வெளுப்பாயிருக்கும்' என்று ஒரு அர்த்தம். அப்பொழுது, பகவானுடைய வெளுப்பான புன்சிரிப்பு, சிவப்பாயுள்ள அதரங்களுடன் சேர்ந்து ஒரு விஶேஷித்த ஶோபையைக் கொடுக்கின்றது என்பது கருத்து. 'ஶுசி' என்பதற்கு - 'ஶுத்தமான அபிஸந்தியை யுடைய' என்றும் அர்த்தமுண்டு. அப்பொழுது, ஆஶ்ரிதர்களுடைய கேதத்தை நிரஸித்து ஆஹ்லாதத்தைக் கொடுக்கும் அபிஸந்தியை இந்தப் புன்சிரிப்பு ஸூசிப்பிக்கின்றது என்பது கருத்தாகும்.

கோமலகண்டம் - அழகாயுள்ள கபோலங்களையுடைய. அநுபவிக்குமவர்களுக்கு ஆகர்ஷகமாகஇருக்கின்றது என்பது குறிப்பு

உந்நஸம் - உந்நதமான நாஸா வம்ஶத்தையுடைய. "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" என்கிறபடியன்றோ உள்ளது பகவானுடைய நாஸாலதை?

𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑌾𑌂𑌗𑌦𑌹𑌾𑌰𑌕𑌣𑍍𑌠𑌿𑌕𑌾 -
𑌮𑌣𑍀𑌂𑌦𑍍𑌰𑌕𑌾𑌂𑌚𑍀𑌗𑍁𑌣𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 |
𑌰𑌥𑌾𑌂𑌗𑌶𑌂𑌖𑌾𑌸𑌿𑌗𑌦𑌾𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑌰𑍈 -
𑌰𑍍𑌲𑌸𑌤𑍍𑌤𑍁𑌲𑌸𑍍𑌯𑌾 𑌵𑌨𑌮𑌾𑌲𑌯𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 ‖ 36.

---

‘‘ 𑌲𑌲𑌾𑌟𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌲𑌂𑌬𑌿𑌤𑌾𑌲𑌕𑌂 - நெற்றியின் ஊர்த்வ பாகம் வரையில் தொங்கிக்கொண்டு நிற்கும் முன்நெற்றி மயிர்களையுடைய. பின்புறத்திலேயுள்ள கேஶங்கள் அம்ஸத்தின் [தோள்களின்] எல்லையிலே வருகின்றன வென்று முன்ஶ்லோகத்திற் சொல்லப்பட்டது; இப்பொழுது, முன்நெற்றி மயிர்கள் லலாடமளவு தொங்குகின்றன வென்று சொல்லப்படுகின்றது.

36. இந்த ஶ்லோகத்தில் திவ்யாபரணங்கள் திவ்யாயுதங்கள் இவைகளுடன் கூடியிருப்பதனால் உண்டாகும் ஶோபையை அநுபவிக்கிறார். மேலும், கிரீடம் முதலியவைகளை உடைத்தாயிருப்பது, ஸர்வேஶ்வரத்தன்மையை விளக்குகின்றது என்றும் அபிப்ராயம்.

𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑌾𑌂𑌗𑌦𑌹𑌾𑌰𑌕𑌣𑍍𑌠𑌿𑌕𑌾𑌮𑌣𑍀𑌂𑌦𑍍𑌰𑌕𑌾𑌂𑌚𑍀𑌗𑍁𑌣𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 - ‘𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍍’ - ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும்; அதாவது - ஆயிரம் ஸூர்யன் உதித்தாற்போல ஜ்வலித்துக்கொண்டிருக்கும் என்று தாத்பர்யம். இந்தப் பதம் ‘𑌕𑌿𑌰𑍀𑌟𑌂’ முதலிய எல்லாப் பதங்களோடும் அந்வயிக்கின்றது. - ‘𑌕𑌿𑌰𑍀𑌟’ திருவபிஷேகம்; ‘𑌅𑌂𑌗𑌦’ - தோள்வளைகள்; ‘𑌹𑌾𑌰’ - கழுத்தில் தரிக்கப்படும் பெரிய ஹாரம்; ‘𑌕𑌣𑍍𑌠𑌿𑌕𑌾’ - முத்துவடமாகிற கண்டபூஷணம்; ‘𑌮𑌣𑍀𑌂𑌦𑍍𑌰’ - ஸ்ரீ கௌஸ்துபம்; ‘𑌕𑌾𑌂𑌚𑍀𑌗𑍁𑌣’ - அரைநூல் பட்டிகை; ‘𑌨𑍂𑌪𑍁𑌰’ - திருவடியில் தரிக்கப்படும் சிலம்புகள். ‘𑌆𑌦𑌿’ - இவை முதலிய; அதாவது - அவனுடைய திவ்யாபரணங்கள் அபரிமிதங்கள் என்பதை இது காண்பிக்கின்றது.



𑌚𑌕𑌰𑍍𑌥 𑌯𑌸𑍍𑌯𑌾 𑌭𑌵𑌨𑌂 𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌤𑌰𑌂
𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌧𑌾𑌮 𑌯𑌦𑍀𑌯𑌜𑌨𑍍𑌮𑌭𑍂𑌃 |
𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌦𑌪𑌾𑌂𑌗𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂
𑌯𑌦𑌰𑍍𑌥𑌮𑌂𑌭𑍋𑌧𑌿𑌰𑌮𑌂𑌥𑍍𑌯 𑌬𑌂𑌧𑌿 𑌚 ‖ 37.

𑌸𑍍𑌵𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍍𑌯𑍇𑌣 𑌸𑌦𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌯𑌾 -
𑌪𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌦𑌧𑌾𑌨𑌯𑌾 |
𑌗𑍁𑌣𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌲𑌾𑌸𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃
𑌸𑌦𑌾 𑌤𑌵𑍈𑌵𑍋𑌪𑌚𑌿𑌤𑌯𑌾 𑌤𑌵 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ‖ 38.

---

𑌰𑌥𑌾𑌂𑌗𑌶𑌂𑌖𑌾𑌸𑌿𑌗𑌦𑌾𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑌰𑍈𑌃 - சக்ரம், ஶங்கம், வாள், கதை, ஶார்ங்கம் முதலிய திவ்யாயுதங்களுடன்.

𑌲𑌸𑌤𑍍𑌤𑍁𑌲𑌸𑍍𑌯𑌾 𑌵𑌨𑌮𑌾𑌲𑌯𑌾 - விளங்கிக்கொண்டிருக்கும் திருத்துழாய்களை யுடைய வநமாலை யுடனும். ஸ்பர்ஶத்தினாலும் ரூபத்தினாலும் கந்தத்தினாலும் ஏற்றத்தை யுடைய திருத்துழாய் என்பது தாத்பர்யம்.

இந்த ஆபரணாதிகளினால் பகவான் விளங்குகிறார்; பகவானால் ஆபரணங்கள் விளங்குகின்றன என்று சொல்லுகிறபடி. இந்த ஆபரணாதிகளனைத்தும் சிந்மயங்கள்; அதாவது - தேவதா ஸ்வரூபங்கள் என்று அறியவேண்டும். அவைகளுள், ஸ்ரீ கௌஸ்துபம் என்னும் மணீந்த்ரம் ஜீவதத்வாபிமாநி, பகவானுக்கும் ஸதா ஸ்ப்ருஹணீயம் என்று சொல்லப்படும்.

‘‘𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌭𑌰𑌣𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂
𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑍈𑌰𑌨𑍂𑌪𑌮𑍈𑌃 |
𑌚𑌿𑌨𑍍𑌮𑌯𑍈𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍈𑌶𑍍𑌚
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌰𑍁𑌚𑌿𑌰𑌂𑌜𑌿𑌤𑍈𑌃 ‖ ’’

‘மாலை வஸ்த்ரம் ஆபரணங்கள் இவை யெல்லாம் பகவானுக்கே அநுரூபங்கள், நிருபமங்கள்; ஸம்ஸார கந்தமற்றிருக்கும் தேவதாஸ்வரூபங்கள்; ஸ்வ ப்ரகாஶகங்கள்; பரஸ்பரம் ஶோபாவஹங்கள்’ என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

37, 38, இந்த இரண்டு ஶ்லோகங்களையும் சேர்த்து அந்வயிக்கவேண்டும். பகவான், திவ்யாபரணங்கள் திவ்யாயுதங்கள் இவைகளுடன் கூடினவனாகக் கீழ்ஶ்லோகத்தில் அநுஸந்திக்கப்பட்டான்; இந்த இரண்டு ஶ்லோகங்களிலும் அந்த எம்பெருமானுடைய திவ்யமஹிஷியின் சேர்த்தி அநுஸந்திக்கப்படுகின்றது.

'(த்வம் தவ) ஸாநுராக₃ம் யஸ்யா ஸத₃நம் வக்ஷ: ; யதீ₃ய ஜந்மோத₃தி₄ரேவ தே ப்ரியம் தா₄ம ; ஸமஸ்தம் ஜக₃த் யத₃பாங்க₃ஸம்ஶ்ரயம் ; யத₃ர்த₂ம் அம்போ₄தி₄ரமந்த்₂யப₃ந்தி₄ ச ; (தயா) ஸ்வவைஶ்வரூப்யேண ஸதா₃நுபூ₄தயாபி (ஸதா₃) அபூர்வவத் விஸ்மயம் ஆத₃தா₄நயா, கு₃ணேந ரூபேண விலாஸசேஷ்டிதை: (ஸ்வ) ஸதா₃ ததை₃வோசிதயா தவ ஶ்ரியா (ஸஹாஸீநம்)' [உன்னுடைய திருமார்பை எந்தப்பிராட்டிக்கு வஸிக்குமிடமாகச் செய்திருக்கிறாயோ; எந்தப் பிராட்டி யவதரித்த திருப்பாற்கடல் உனக்கு ப்ரியமான வாஸஸ்தலமாயிற்றோ; உபய விபூதியும் எந்தப் பிராட்டியின் மந்த கடாக்ஷாதீநமாக இருக்கின்றதோ; எந்தப் பிராட்டியைப் பெறுகைக்காக நீ கடல்கடைந்தருளினாயோ; எவளுடைய பிரிவாற்றாமையாலே கடலை யடைத்தருளினாயோ; அப்படிப்பட்டவளும், ஸர்வ ஶக்தனாகிற உன்னால் ஸர்வகாலத்திலும் அநுபவிக்கப்பட்டிருந்தபோதிலும் நித்யாபூர்வம்போல வடிவழகாலும் ஶீலாதிகுணங்களாலும் விலாஸ சேஷ்டிதங்களினாலும் எப்பொழுதும் ஆஶ்சர்யாவஹமாக இருக்கிறவளும், உனக்கே எப்பொழுதும் தகுதியாயிருக்கிறவளுமான உன்னுடைய பிராட்டியாகிற லக்ஷ்மியுடன் (எழுந்தருளியிருக்கும்.)]

கீழ் ஶ்லோகங்களிற் போல, இந்த இரண்டாம் வேற்றுமைப் பதத்திற்கும் மேல் வரும் 'ஸேவே' என்னும் பதமே முடிக்குஞ் சொல்லாம்.

நமது ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் சித் அசித் ஈஶ்வரன் என்னும் மூன்று தத்வங்களுள் ஸ்ரீ என்பவள் பகவானைப்போல ஓர் ஈஶ்வர தத்வமென்றும், அவனைப்போலவே



இவளும் ஜீவன் அசித் என்று சொல்லப்படும் தத்வங்களைக்காட்டிலும் அத்யந்தம் வேறுபட்டவளென்றும், இவளுடைய ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவையெல்லாம் எம்பெருமானுடையவை போன்றனவே யென்றும், இவளும் பகவானும் பத்நீ பதி என்கிற ஸம்பந்தத்துடன் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மோக்ஷம் என்னும் வ்யாபாரங்களில் அந்வயமுள்ளவர்களாக இருக்கிறார்களென்றும், பகவானை நீக்கி ஸ்ரீயும் ஸ்ரீயை நீக்கிப் பகவானும் இல்லை யென்றும், அவர்களிருவருமே சேர்ந்து நமக்கு உத்தேஶ்யர்களென்றும் நமது கொள்கை. இப்படி ஈஶ்வர தத்வத்தின் ஸ்வபாவம் ஸ்ரீக்கு உண்டு என்றாலும், ஸ்த்ரீத்வத்திற்கு ஏகாந்தமாயுள்ள பதி பாரார்த்யமென்னும் ஒருவித பாரதந்த்ரியம் இவளுக்கு உண்டு. ஆனால், அது ஸ்வேச்சா ப்ரயுக்தமே தவிர ஈஶிதவ்ய தத்வங்களுக்கு இருப்பதுபோல ஸ்வத: ப்ராப்த மன்று.

‘‘லக்ஷ்ம்யா ஸஹைவ விஷ்ணு வ்யாப்யம்போ
வ்யாப்யா ஸ்வீயஸ்ய தே₃வஸ்ய ஸா(அ)பி ।
ததா₃(அ)ந்யாநந்ய ஸாதா₄ரண ஈஶித்ருத்வம்
ஶ்ரீஶ்ரீஶயோ ருப₄ய ஸமஸ்தைகஶேஷீ ॥’’

[சித் அசித் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதும் லக்ஷ்மிக்கு வ்யாப்யம். அந்த லக்ஷ்மி தன்னுடைய பதியாகிற ஈஶ்வரனுக்கு வ்யாப்யை. அப்படி யிருந்தாலும், ஸ்ரீ ஶ்ரிய:பதி இரண்டு பெயருக்குமே அநந்யஸாதாரணமான ஈஶித்ருத்வமுண்டு; அவர்களிருவருமே ஸகலமான ப்ரபஞ்சத்திற்கும் ஶேஷியாகிறார்கள்] என்னும் அஹிர்புத்ந்ய வசநம் ஸ்ரீ நிஷ்டமான ஜகதீஶ்வரத்வத்தை நன்கு விளக்குகின்றது. அப்படிப்பட்ட லக்ஷ்மியின் சேர்த்தியைத்தான் இவ்விடத்தில் ஸ்ரீ ஆளவந்தார் அநுஸந்தாநம்செய்கிறார்.

ஸாநுராக₃ம் யஸ்யா ஸத₃நம் க்ருதம் வக்ஷ: - உன்னுடைய வக்ஷஸ்தலத்தை எந்தப் பிராட்டியினுடைய வாஸஸ்தலமாகச் செய்துகொண்டாயோ. பிராட்டி எம்பெருமானுடைய மார்பில் வஸிக்கிறாள் என்பது ப்ரமாண ப்ரஸித்தம்.

"ஶ்ரியமுந்நித்ரபத்மாக்ஷீம் விஷ்ணோர்வக்ஷ:ஸ்தலஸ்திதாம்"

"நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை"

"திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார்"

இத்யாதியான வாக்யங்களே ப்ரமாணம்.

யதீயஜந்மஸ்தலமேவ ப்ரியம் யயௌ - எவள் அவதரித்த ஸ்தலம் உனக்கு இனிதாக அமருமிடமாயிற்றோ.

"தேவதாநவயத்நேந ப்ரஸூதாம்ருதமந்தநே"

[தேவர்களும் அஸுரர்களும் ஶ்ரமப்பட்டு அம்ருத மதநம் செய்த பொழுது, திருப்பாற் கடலிலிருந்து ஆவிர்பவித்தாள்.] என்றும்,

"ந தேஹம் ஸ்வர்க்கமப்யேதே ஸீதே ஸமேதாபி ரோசயே"

[ஹே ஸீதே! உன்னையின்றிக்கே ஸ்வர்க்கம்கூட எனக்கு அபிமதமன்று] என்றும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. லக்ஷ்மியின் பக்கல் ஈஶ்வரனுக்குண்டாயிருக்கும் வ்யாமோஹம் இவ்வளவுதான் என்று பரிச்சேதிக்க வொண்ணாதன்றோ?

ஸமஸ்தம் ஜகதேதச்சராசரம் ஸம்ஶ்ரயம் - ப்ரபஞ்சம் முழுவதும் எந்த லக்ஷ்மியின் கடாக்ஷாதீநமோ. கீழ்ச்சொல்லியபடி சித் அசித் அடங்கிய ஸமஸ்த ப்ரபஞ்சமும் லக்ஷ்மிக்கு ஶேஷபூதமே. உபய விபூதியும் இவளொருத்தியினுடைய கடாக்ஷமுண்டானல் உண்டு, இல்லையானல் இல்லை யென்றன்றோ இருக்கிறது உண்மையான ஸ்திதி? இந்த அர்த்தத்தையே

"ஈஶேஶாநா ஜகத:"

என்னும் ஶ்ருதி சொல்லுகின்றது.

"ஸ்வாம்ஶா ஸ்வயாம்ஶுகா யதவதி ப்ரம்ஹேஶ ஶக்ராதய:
உதீயந்தி ஶ்ரிய: ஸம்ஸ ச ஶுபதராதி ஸ்வதயாராஶ:"

என்று ஸ்ரீ பட்டர், பரப்ரஹ்மம் முதற்கொண்டு ஸகல தேவதைகளும் லக்ஷ்மீகடாக்ஷாயத்தமான பெருமையைப் பெற்றவர்களே யென்று அருளிச்செய்திருக்கிறார்.



யதர்த்தமம்போதிரமந்தி - எந்த லக்ஷ்மியைப் பெறுகைக்காகக் கடலானது கடையப்பட்டதோ. இது ஸ்ரீ க்ஷீராப்தி மதந காலத்தில்.

"தத: ஸ்புரத்காந்திமதீ விகாஸிகமலே ஸ்திதா |
ஶ்ரீர்தேவீ பயஸஸ்தஸ்மாதுத்திதா த்ருதபங்கஜா ||"

[பாற்கடல்கடைந்த காலத்தில், ப்ரகாஶத்துடன் கூடியும் மலர்ந்துமுள்ள ஒரு தாமரைப்பூவில் நின்றுகொண்டு கையில் ஒரு தாமரைப்பூவைத் தரித்தவளாய் ஸ்ரீ என்னும் தேவீ அந்தப்பாற்கடலிலிருந்து ஆவிர்பவித்தாள்] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யதர்த்தமம்போதிரபந்தி ச - எந்த லக்ஷ்மியைப் பெறுகைக்காகக் கடலானது அடைக்கப்பட்டதோ. இது ஸ்ரீ ராமாவதாரத்தில்.

"ஏஷ ஸேதுர்மயா பத்த: ஸாகரே ஸலிலார்ணவே |
தவ ஹேதோர் விஶாலாக்ஷி! நலஸேது: ஸுதுஷ்கர: ||"

[ஹே விஶாலாக்ஷி! உன்னைத் திரும்பிப் பெறுகைக்காக இந்த ஸமுத்ரத்தில் இதோ உன்னால் பார்க்கப்படும் துஷ்கரமான அணையை நளனை ஸஹாயமாகக்கொண்டு நான் கட்டினேன்] என்று ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனே பிராட்டிக்குச் சொல்லியிருக்கிறார்.

"விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ" என்று பரஸ்பரம் விஶ்லேஷ ப்ரஸங்கமேயற்றிருக்கும் இவர்களுக்கு விஶ்லேஷமும் மறுபடி ஸம்ஶ்லேஷமும் எப்படி உபபந்நமாகுமென்று ஶங்கிக்கக்கூடும். இது விஶ்லேஷ அபிநயமே தவிர வேறில்லை யென்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். "ஸ்வஸங்கல்ப நியதா ச ஸ்வதந்த்ரலீலா பயப்ரயோஜநேஹதி." எம்பெருமானுடைய லீலை ஸ்வதந்த்ரமே, தனது ஸங்கல்பத்துக்கே நியதம்; இப்படியிருக்க, அதில் விசார அவகாஶம் எவ்விதத்தில் ஸம்பவிக்கும்?.

இந்த ஶ்லோகத்தில் பிராட்டியினுடைய மேன்மை மூன்றுவது பாதத்திலும், அவள்பக்கல் ஈஶ்வரனுக்கு உண்டாயிருக்கும் வ்யாமோஹம் மற்றை மூன்று பாதங்களிலும் சொல்லப்

படுகின்றன. அடுத்த ச்லோகத்திலும் இவை யிரண்டுமே, ப்ரபஞ் சிக்கப் படுகின்றன.

ஸ்ரீ பட்டர், ஸ்ரீ குணரத்நகோசம் என்னும் லக்ஷ்மீ ஸ்தோத் ரத்தில், எம்பெருமானுக்குப் பிராட்டி பக்கலுள்ள வ்யாமோஹத் தைப் பற்றிப் பேசிவரும்பொழுது,

“ [illegible] ”

[ஹே மைதிலி! உன்னுடைய நாதனாகிற எம்பெருமான், உன் நிமித்தமாகத்தனது வைகுண்டத்தை விட்டு ஸமுத்ரத்தை ஆச்ர யித்திருப்பதையும், கடல்கடைந்ததையும், கடலை அடைத்ததை யும், சிவதநுஸ்ஸை முறித்ததையும், பத்துத்தலை யாக்கனைக் கொன்று அவன் கபந்தத்தை ஆட்டினதையும் நினைக்கும்பொழுது, உன்னுடைய த்ருப்திக்காக அவன் எதைத்தான் செய்யமாட் டான்? என்று தோன்றுகிறது] என்று ஆச்சர்யப்பட்டிருக்கிறார்.

[illegible] - நீயோ ஸமஸ்தமான விச்வத்தையும் சரீரமாக உடையவன்; அப் படி ஸர்வ விக்ரஹத்தாலும் ஸர்வகாலமும் உன்னால் அவள் அநு பவிக்கப்பட்டிருந்த போதிலும்.

“ [illegible] ”

[எம்பெருமானுக்கு ஸகலமும் ஸர்வகாலத்திலும் ஸஹஜமாக ப்ர த்யக்ஷமாக இருக்கின்றது] என்று சொல்லுகிறபடி எம்பெருமா னால் ஸஹஜ ப்ரத்யக்ஷமாக எப்பொழுதும் இந்த ஸ்ரீ, ஸாக்ஷாத் கரிக்கப்பட்டிருக்கவேண்டும். இப்படி ஸார்வகாலிகாநுபவம் இருப் பது, ஒருகால் ஜிஹாஸையை ஜநிப்பிக்குமோ என்னும் சங் கையை நிவாரணம் செய்கிறது பின்வரும் வாக்யம்.

[illegible] - ஜ்ஞாநம் காருண்யம் முதலிய குணங் களினாலும் அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தினாலும் பகவ



தபிமதங்களான லீலாவிசேஷங்களினாலும் எப்பொழுதும் அத் ருஷ்ட பூர்வம்போல ஆச்சர்யாவஹமாக இருக்கிற. “ [illegible] ” என்கிறபடி பார்க்கப் பார்க்க அநுபவிக்க அநுபவிக்கப் புதிதாகவே தோற்றுகிறது இந்த வஸ்து என்று தாத்பர்யம்.

“ பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் ”

“ அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம் ”

என்று ஆழ்வார்களும்

“ [illegible] ”

என்று நித்யஸூரிகளும் எம்பெருமான்திறத்தில் படுமதெல்லாம் பிராட்டிதிறத்தில் எம்பெருமான் படுகின்றான் என்றாயிற்று. அதா வது - எம்பெருமான் ஸ்வரூபத்தினால் அபரிச்சிந்நனாயிருப்பது போல, இவள் போக்யதையாலே அபரிச்சிந்நை என்று கருத்து.

[illegible] - எப்பொழுதும் உனக்கே அர்ஹையாயிருக்கும்.

“ [illegible] ”

[துல்யமான சீலம் வயஸ் சரித்ரம் இவைகளையுடைய]

“ [illegible] ”

[பகவான் தேவதையாக அவதரிக்கும்பொழுது, இவளும் தேவ தையாக அவதரிக்கிறாள்] இத்யாதிகளிற் சொல்லியிருக்கிறபடி, பர வ்யூஹவிபவரூபங்களினால் உண்டான ஸர்வாவஸ்தைகளிலும் எம் பெருமானுக்கு அவள் அநுரூபை என்று தாத்பர்யம்.

‘ [illegible] ’ என்றும் அந்வயிக்கலாம்.

தவ ச்ரியா - உன்னுடைய ஸ்ரீயுடன் நித்ய வ்யவஸ்தித மான பதி பாரார்த்யம் இதனால் சொல்லப்படுகின்றது.

‘ இப்படிப்பட்ட பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கிற உன்னை’ என்று அந்வயம். “ [illegible] ” என்று வாக்ய சேஷம்.

எஸ். வாஸுதேவன்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம்.

ப்ரஹ்லாதன் அந்த பகவத் வாக்யத்தைக் கேட்டு, "பகவந்! உன்னிடமே நிலைத்த பத்தியானது உன்கருணையால் எனக்கு உண்டாகப் போகின்றதெனும் அந்த வரத்தால் நான் க்ருதக்ருத்யனானேன். ஸமஸ்த ஜகத்துக்கும் காரணமாயிருக்கும் உன்னிடம் ஸ்திரமான பக்தி எவனுக்கு உண்டாயிருக்கின்றதோ, அவனுக்குத் தர்மார்த்தகாமங்களால் ஆகவேண்டியதென்ன? முக்தியோ அவன் கையிலிருக்கின்றது." என்று சொன்னான். இதைக் கேட்டு ஸ்ரீ பகவான் மிகவும் ஸந்துஷ்டனாய், "உன் மனஸ் நிஶ்சலமாக என்னிடம் பக்தியுடன் கூடியிருக்கின்றதாகையால், நீ என்னருளால் உத்க்ருஷ்டமான மோக்ஷத்தை அடையப்போகின்றாய்" என்று சொல்லிவிட்டு அவன் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்தர்தானத்தை யடைந்தார். ப்ரஹ்லாதன் பிதாவினுடைய ஸமீபத்தில் சென்று அவன் பாதங்களில் வணங்கினான். ஹிரண்யகஶிபு ப்ரஹ்லாதனை உச்சிமோந்து, அணைந்து, கண்களில் நீர் தாரையாகப் பெருக, "வத்ஸ! நீ பிழைத்திருக்கின்றாயா?" என்று சொன்னான். அந்த மஹா அஸுரனானவன் புத்ரன் விஷயத்தில் தான் செய்த கொடுமைகளை நினைத்து, அநுதாபம் பிறந்தவனாய், அவனிடம் ப்ரீதியும் வைத்தான். ப்ரஹ்லாதனும் தர்மமறிந்தவனாதலால், பிதாவுக்கும் குருக்களுக்கும் ஶுஶ்ருஷை செய்து கொண்டிருந்தான். பிறகு காலாந்தரத்தில் ஸநகாதிகள் ஶாபத்தால், மிகவும் கோபத்துடன் ப்ரஹ்லாதனைக் கொல்ல யத்தனிக்க, ஸ்ரீ பகவான் ந்ருஸிம்ஹாவதாரம் செய்து, அவன் பிதாவை ஸம்ஹாரம் செய்தபிறகு, அவன் தைத்யர்களுடைய ராஜ்யலக்ஷ்மியை யடைந்தான். ப்ராசீந ஸுக்ருத ரூப கர்மபலமாக வந்த ராஜ்ய ஸம்பத்தையும், மிகுந்த புத்ர பௌத்ரர்களையும், ஐஶ்வர்யத்தையும் அடைந்து, அந்தக் கர்மத்தை க்ஷயிக்கச்செய்து, ராஜ்யாதிகளினின்று நிவ்ருத்தனாய், புண்யபாபரூபமான கர்மரஹிதனாய், பகவானுடைய நிரந்தர த்யானத்தால் பரமமான நிர்வாணத்தை யடைந்



தான். இத்தகைய ப்ரபாவத்துடன் கூடினவன் ப்ரஹ்லாதன். யாதொருவன் அந்த மஹாத்மாவினுடைய சரித்ரத்தைப் படிக்கின்றானோ அல்லது கேட்கின்றானோ, அவனுடைய ஆபத்துக்கள் உடனே நஶித்துப்போகின்றன. ப்ரஹ்லாதனை ஸமஸ்த பாபங்களினின்றும் ஸ்ரீ பகவான் எப்படி ரக்ஷித்தாரோ அப்படியே அவன் சரிதத்தைக் கேட்பவனையும் ரக்ஷிப்பர்.

என்றிவ்விதமாக ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ப்ரஹ்லாதன் கதை முடிகின்றது. அவன் விஷயத்தில் அவன் பிதா பண்ணிய அபராதங்களை இவ்வளவுதூரம் விவரித்ததே போதுமென்று ஹிரண்யன் மரணத்தின் விவரத்தை ஒழித்திருக்கக்கூடும். புராணகர்த்தாவின் கருத்து பாமரர்கள் திருப்தியன்று. பொதுவாக ஆஸ்திகர்களுக்குத் தத்வங்களின் விவேகத்தைத் தந்து, பாகவதர்க்குள் உத்தமனது சரித்ரத்தை விளக்கிப் பகவான், பக்தர்கள் விஷயத்தில் மிகவும் அநுகம்பையைப் பாராட்டுகின்றான் எனும் அர்த்தத்தை வெளிப்படுத்துவதே அவர் கருத்தாக இருக்கவேண்டும். ஸர்வ ஜீவன்களிடமும் அந்தர்யாமியைத் தர்ஶிக்க ஸமர்த்தனான ப்ரஹ்லாதன், அந்தந்த ஜீவன்களினுடையவும் அவர்களுடைய சரீரங்களுடையவும் பேதங்களை அலக்ஷ்யம் செய்து, ஸர்வத்ர ஸமனாக நிற்கும் எம்பெருமான் நிமித்தமாக, யாவரிடமும் ஸமத்வத்தைப் பாராட்டினான். அதாவது பகவானிடம் செய்த பக்தியை யாவரிடமும் செய்தான். யாவரிடமும் அநுகூல சிந்தையையும் அநுகூல ப்ரவ்ருத்தியையும் கொண்டாடினான். ப்ரதிகூலமாகும் எண்ணங்களையும் செயல்களையும் விலக்கினான். இது வேதாந்தம் கற்றவருள் பலர் வாக்குகளினின்று வெளிப்படுமாயினும், ப்ராயேண எங்கும் அநுஷ்டானத்தில் ப்ரகாஶிக்கமாட்டாது. ப்ரஹ்லாதன் குறைவின்றித் தான் தெளிந்தறிந்ததைக் குறைவின்றி நடத்திக்காட்டினான். அஸுரபாவமென்பது தேஹமே ஆத்மாவெனும் ப்ரமம். ப்ரஜாபதி வாக்யத்தைக் கேட்டபின் ஆத்மஜ்ஞான ப்ரயோஜனமாய் வரும் ஸர்வகாமங்களின் ப்ராப்தியில் ருசியுடையவராய், ஆத்மாவையறியவேண்டி, இந்திரனும் விரோசனன் என்னும் ப்ரஹ்லாத புத்ரனான அஸுரனும் ப்ரஜாபதியினிடம்சென்று, அவரிடம் தீர்க்ககாலம் ஶுஶ்ரூஷாதிகள் செய்துகொண்டிருக்க, அவரும் அவர்களை ஶோதிக்கவெண்ணி, ஜலாதிகளில் அவர் ப்ரதிபிம்பங்களைக்காட்டி, அதை ஆத்மாவென்று சொல்லவே, விரோச

ன் ஶரீரத்தையே ஆத்மாவென நிஶ்சயித்து, அதையே அலங்
காராதிகளாலும் மற்றவிதங்களாலும் பூஜிக்க வேண்டுமென்று
தன்னைச் சேர்ந்த அஸுரர்களுக்குப் போதித்தான். அவர்கள்
ஹிரண்யகஶிபுவென நாஸ்திகர்களாகப் போந்து, ஶரீர போஷ
ணமே புருஷார்த்தமெனக் கருதி, அது மரித்த பின்னும் அதற்கு
அலங்காராதிகள் செய்து பரலோகத்தை ஜயித்துவிட்டதாக
எண்ணினார்கள். இந்திரன் ப்ரஜாபதியின் ப்ரதமோபதேசத்தில்
திருப்தியடையாமல், அவரிடம் புநருபதேச நிமித்தம் போனான்.
விரோசனன் அப்படிச் செய்தானில்லை. என்றிப்படிச் சாந்தோக்
யோபநிஷத் எட்டாவது ப்ரபாடகத்தால் தெரியவருகின்றது.
இதில் ப்ராசீன ஜாரனியர் முதலானவர் கொள்கையில், பிணங்கள்
மீண்டும் உயிர்த்தெழும் (resurrection) எனும் ப்ரத்யத்தினுடைய
ப்ரஸ்தாபம் உண்டாவென்பதைப் புத்திமந்தர்கள் யோசிக்க
வேண்டியது. மேலே விவரித்த அஸுரபாவத்தை ப்ரஹ்லா
தன் முற்றிலும் விட்டவன். அவன் பிதாவோ, அதில் ஊர்ஜித
மாகி நின்றான். தத்வதர்சந ஸாமர்த்யம் அற்றவர், "உலகத்
தில் ஸர்வபூதங்களினிடம் மித்ரபாவத்தைப் பாராட்டல் அஸாத்
யம். ஏனெனில் ஜநங்கள், ராகம், த்வேஷம், மதம், மாத்ஸர்யம்,
முதலானவற்றால் தபிக்கப்படுகின்றார்கள். "சிலர் தநத்தாலும்,
சிலர், வித்யையாலும் கர்விஷ்டராக, அவையில்லாமல் பலர் தீந
ராயிருக்கின்றனர். ப்ரயோஜந மில்லாமல் சிலர் மற்றோரிடம்
வைத்வைராளாய் நிற்கின்றனர்" என்று சொல்லக்கூடும். அவர்க்
கும், மனம் போனபடிப் போகும் அதமர்களுடைய மார்க்கத்தை
விலகி நிற்கவேண்டுமென்றும், ப்ராயேண உலகமெல்லாம் தாப
த்ரயங்களால்-வருந்த, இப்படி வருந்தும் ஒருவன் தன்னைப்போல்
வருந்தும் பிறரிடம் ராகத்வேஷாதிகள் செய்வது மூடத்தனம்
என்றும், தபிக்கப்பட்டவரைப் பார்த்துக் கருணையே புரியவேண்
டும் என்றும் ப்ரஹ்லாதன் உபதேசித்தான். பிறர் தநத்தாலும்
கல்வியாலும் உயர்ந்தாராகில், அவராகிலும் தாபத்ரயாநுபவம்
அற்றிருக்கின்றாரென. ஸந்தோஷப்படவேண்டுமென்றும், அவரி
டம் பொறாமை கொண்டால் தனக்குப் புண்யக்குறைவும் நேரிடு
வதைத் தெளிந்து அஞ்சவேண்டுமென்றும் உபதேசித்தான். வீரு
நா த்வேஷம் செய்பவர் மூடரென்றும் அப்படி த்வேஷம் செய்வ
தால், த்வேஷிக்கப்பட்டவன் பாபத்தைக் கைக்கொள்கின்றாராகை



யால், ஶோகிக்கத்தக்கவரென்றும் உபதேசித்து, ஸர்வஜநங்களிட
மும் ஸ்நேஹமும் கருணையும் கொண்டாடி, அவருடைய இஷ்டங்
களை யதாஶக்தி பூர்த்திசெய்ய வேண்டுமென்று, மத்யம மார்க்
கத்தை ஸாமாந்யர்க்குக் காட்டினான். எல்லாம் பகவத் பக்திப்
படியாக வரவேண்டும்; ஸர்வ ப்ரவ்ருத்தியும் பகவத்ப்ரீணநமாக
உண்டாக வேண்டும்; பகவான் ப்ரஸந்நனாகில் பரம் நிர்வாணம்
கரஸ்தம். அதனிடம் அபேக்ஷையும், அதனிமித்தம் இதர ப்ரயத்ந
மும் வேண்டியதில்லை யென்றிவ்விதமாகவும் உபதேசித்தனன்.
ப்ரஹ்லாதன் சொற்களும், செயல்களும், யாவராலும் முக்யமாக
ஆதரிக்கத்தக்கன. இவற்றின் ஸ்மரணத்தால், புராணத்தின் பல
ஶ்ருதியில் அறுதியிட்டபடிப் பாபக்ஷயம் ப்ராப்தமாகும். பாப
மடியாக ஸம்பவிக்கும் விபத்துகள் நாராயணனருளால் நீங்கும்.
இவையுண்டாகில், பகவத் ப்ராப்தி விரோதங்கள் முற்றிலும் நஶி
த்து ஸ்வரூபாவிர்பாவம் க்ரமேண வரத்தக்கது.

இவையன்றி, ப்ரஹ்லாதன் சரித்ரத்தில், ஸ்ரீ ந்ருஸிம்ஹன்
சரித்ரம் அந்தர்க்கதம். ப்ரஹ்லாதன் பிறந்தானில்லையாகில், பக
வான் ந்ருஸிம்ஹரூபியாக அவதாரித்தாரில்லையாம். இவ்வளவு
கராளரூபம் பகவான் இதர அவஸரங்களில் கொள்ளவில்லையென்
றால், இத்தகைய பக்தன் இதர காலங்களில் இருந்தானில்லை;
இவனுக்கு நேரிட்ட ஆபத்துகளும் உலகில் மற்றொருவர்க்கு
நேரிட்டதில்லை; இவனிடம் ஹிரண்யன் அபராதப்பட்டவண்
ணம் அபராதம் செய்தவர் மற்றொருவர் கதைகளிலும் கேட்டி
லோம். ஆகையால் ஸர்வ ஸந்தர்ப்பமும் விலக்ஷணமாயமை
ந்தே, பகவத் க்ருபையும் அத்யத்ராத்ருஷ்டமாக ஆவிர்பவித்து,
அவதாரமும் மிக்க வைலக்ஷண்யத்தைப் பொருந்தியது. ஸம
காலத்தில் ஹிரண்யனுக்குக் கராளரூபனாகவும், ப்ரஹ்லாதனுக்கு
ஸௌம்யாகாரனாகவும் பகவான் தர்ஶநம் கொடுத்தான். ஸம
காலத்தில், தன்னடியானிடம் அஸஹ்யாபசாரம் செய்தவனுக்குக்
கோரமான தண்டனையும், பக்தனுக்குப் பரிபூர்ணமான கருணை
யும் அளித்துநின்றான்.

இந்தத் திவ்யசரித்ரம் மூர்த்திகரித்துநின்றதெனப் பகவான்
ஸ்ரீ அஹோபிலத்தில் ஸேவை ஸாதிக்கின்றார். ப்ரஹ்லாதனைப் ப்ரா
ஸாத ஶிகரத்தினின்று ஹிரண்யகஶிபு தள்ளிவித்தபோது, மலை
யின் கீழ்ப்பள்ளத்தில் விழும்படிச்செய்தானெனப் புராணத்தால்

தெரிகின்றபடியால் ஹிரண்யகசிபு ஓர் பர்வதத்தில் அரசாண்டதாகவும், பகவான் பர்வதத்தில் அவதரித்தாரென்றும், ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. நரஸிம்ஹ புராணம் 44-வது அத்யாயத்திலும் “ஸ்ரீசைல சிகரம் ப்ராப்ய [illegible] ஸுரபூஜித: । ஸ்திதோ லோகஹிதாய” “பக்தர்களுக்கு ஹிதம் புரிவதை உத்தேசித்து, ஸுரஜிதனை உத்தம ச்லோகன் ஸ்ரீசைலபர்வத சிகரத்தையடைந்து நின்றான்,” என்றிருப்பதையாலோசித்தால், பகவானுடைய அவதாரமும் அந்தப் பர்வதத்தின்மீதென்று ஊகிக்கக்கூடியதாக விருக்கின்றது. ஸ்ரீ சங்கராசார்யர் தமக்கு ஸம்பவித்த மஹா ஆபத்தில், ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸ்துதித்து, அதனின்றும் ரக்ஷிக்கப்பட்டதாகக் கேள்வியுறுகின்றோம். பிற்காலத்தில் தன் பக்தருள் ச்ரேஷ்டரான பாஷ்யகாரர், தேசிகன் இவர்கள் ஆதரித்த ஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய உகந்து, தானே ஸ்ரீமத் ஆதிவண் சடகோப ஸ்வாமியை ஸ்ரீமதஹோபிலத்துக்கு வரவழைத்து, அந்த விஷயத்தில் நியமித்தான். அதுமுதல் பல ஸ்வாமிகள், ஸ்ரீமதஹோபிலத்தைத் தம் மூலஸ்தானமாக வைத்துக்கொண்டும், ஸஞ்சாரம் இடைவிடாமல் செய்துகொண்டும், அந்த நாட்டிலும் மற்ற ப்ரதேசங்களிலும் ஸம்ப்ரதாயத்தைத் தழைக்கச் செய்தார்கள். அவர்கள் திவ்ய சரித்ரங்கள் மறவாமல் நின்றமட்டும், மடத்தை யடைந்த ஸ்வாமிகள் ஸ்ரீமதஹோபில வாஸமும், தேச ஸஞ்சாரமும் என்பதும், ச்ரமத்தைத் தந்தபோதிலும், பகவதாஜ்ஞை யாகையால் கர்த்தவ்யம் என்றே எண்ணிச் சிறிதாகிலும் செய்து கொண்டு வந்தார்கள். பிற்காலம், ஸ்வாமிகள் ஸ்வதேசவாஸத்தில் ரமித்து, ஸஞ்சாரத்தைக் குறைத்துக்கொண்டுவர, தாத்ருச அபிமானம் க்ரமேண ஸ்வஜநபதங்களையும் விட்டு ஸ்வநகர மாத்ரத்தில் நின்றுவிட்டது. ஆகையால் ஸ்ரீமதஹோபிலத் தெம்பெருமான் எவ்விதம் ஸ்மரிக்கப்படுவன்? ப்ரஹ்லாதன் பக்தியும், அவன் தைத்ய பாலருக்குச் செய்த உபதேசங்களும், இவற்றின் நிமித்தமாக அவன் பிதாவினிடம் அடைந்த துன்பங்களும், இதை, ஸஹிக்க முடியாமல் பகவான் செய்த அவதாரமும் வ்யர்த்தமாயிற்று. “கிம் நு சேதந” என்று அஸுரபுரோஹிதர் சொன்னது தான் நிலைத்துவிட்டதெனத் தோன்றுகின்றது. ஹிரண்யகசிபு முன்தான் சரீரங் கொண்டமையாலன்றோ, சரீராந்த விசிஷ்டனாகப் பக்த



னொருவன் ஏற்படவும், அவன் நிமித்தமாக வாஸுதேவன் அவதரித்துத் தன்னை ஸம்ஹரிக்கவும், நேர்ந்தது: என்றெண்ணித் தன் ஆஸுரமாயைகளால் இந்த நாட்டின்கண் வஸிக்கும் ஸ்ரீவைஷ்ணவரெனப் பெயர்கொண்டவர் அந்தரிந்திரியங்களை அபஹரித்துவிட்டு, தன்னை முன் ஸம்ஹாரம் செய்தவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அவமதிக்கும்படிச் செய்விக்கின்றானோ, என்றெண்ண வேண்டியிருக்கின்றது. ப்ரஹ்லாதனெனப் பக்தன் உண்டாக மாட்டானாயினும், தத்காலம் ஸுதராம் அந்த ஸ்மரணத்துக்குக்கூட ஹேதுவில்லை யானாலும், “அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தீ கருணே த்வஞ்ச குணேஷு ஸார்வபௌமீ । விதுஷீ ஸ்திதிமீத்ருசீம் ஸ்வயம் மாம் வ்ருஷசைலேச்வர பாதஸாத் குரு த்வம் ॥” “ஓ கருணே! நானோ அபராதங்களுக்குச் சக்ரவர்த்தி. நீயோ பகவத் குணங்களில் ஸார்வபௌமியாயிருக்கின்றாய். இப்படி நாமிருவரும் பிந்நமான விஷயங்களில் ராஜ்யாதிகாரம் வஹித்திருக்கின்றோமென்பதை நீயறிந்தவளாய்க்கொண்டு, நீயே என்னை ஸ்ரீநிவாஸனுடைய திருவடிகளில் அடைக்கலமாக்கக்கடவாம்,” என்றுரைக்க அதிகாரிகளில்லையோ? அன்றியும், “காமே [illegible] ப்ரதிகாரம் [illegible] விஜ்ஞ: । கவசாயிதயா த்வயைவ சார்ங்கீ விஜயஸ்தாநமுபாச்ரிதோ வ்ருஷாத்ரிம் ॥” “ஓ கருணே! எனது பாபங்களுக்கு வேறு நிவ்ருத்தி ஹேதுக்களில்லையென்று அறிந்து, சார்ங்கபாணியானவன் துக்கித்தவனாய், உன்னைக் கவசமாக்கிக்கொண்டு என் பாபங்களை ஜயிக்க வேண்டுமென்று உன்னுடன்கூட ஸ்ரீசைல சிகரத்தை யடைந்திருக்கின்றான்” என்றிவ்விதம் யார்தான் யோசிக்கத்தகாது? ப்ரஹ்லாதனை ரக்ஷிக்கவேண்டுமென்று தயாகவசமணிந்தன்றோ அஹோபில பர்வதத்திற்கு எம்பெருமான் எழுந்தருளினது! விபவம் குன்றுவண்ணம், அங்கு அவன் ஆராதிக்கப்பட்டானாகில் சரணாகதர்களுடைய த்ராணம் மற்றெங்கே அங்குபோல் நடக்கும்? ஆதலால் இந்த ஸத்கதையைப் படிப்பவரும் கேட்பவரும் ஒருமித்து, “[illegible] ப்ரியம் [illegible], ப்ரீதி [illegible], [illegible] ஸம்பத் [illegible] ஸ்வஸ்த்யயனம் [illegible]

[illegible] ॥ "ஸ்ரீ ந்ருஸிம்ஹா! மஹாப்ரபோ! உனைத்தவிர மற்ற வற்றுள் பற்றை அறுத்தவர்க்கு உனது திவ்யதேசம் அபாவம் (இன்மை) அடைந்துவிடும் என உண்டாயிருக்கின்ற பயத்தைப் போக்கு. அந்தத் திவ்யதேசத்தின் விபவத்தை வ்ருத்திசெய். உன்னை ஆச்ரயித்தவர்க்கு விபக்ஷர்களை வேர் களை. இவ்விதம் நீ அநுக்ரஹித்தால் ஓ முகுந்தா! உனது திவ்ய தேசத்தில் ஸ்வயமாக ஆவிர்பவித்த உனது திருமேனியை ஸதா நாங்கள் தர்சித்தவராய்க்கொண்டு ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யஸூரிகள் அடைகின்ற பரமாநந்தத்தை இவ்வுலகின்கண்ணே யடைகின்றோம். ஸ்ரீயஃகாந்தனுயும், ஆச்ரித ஜநரக்ஷகனுயும், உத்க்ருஷ்டமானவையும், அந்யத்ராத்ருஷ்டங்களானவையுமான திவ்ய கல்யாணகுண மஹோததியாயும், நீ இருக்கின்ற காரணமடியாக விச்வாஸம் ஜநித்த நாங்கள், இந்த எங்கள் பாரத்தை உன்னிடம் ஸமர்ப்பிக்கின்றோம். இது முதல் ஒவ்வொரு க்ஷணமும் உனது திவ்ய தேசங்களில், கீர்த்தி பொருந்தி ஜ்வலித்துக் கொண்டிருக்கும் உனது திவ்யாயுதங்களை ப்ரயோகித்து உனது நிருபாதிக ப்ரபுத்வத்தை ப்ரகாசிக்கச்செய்" என்றிவ்விண்ணம் ப்ரார்த்திப்பராகில்,

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]' ॥

"ப்ரஹ்லாதன், காகாஸுரன், கஜேந்த்ரன், த்ரௌபதி, விபீஷணன், காளீயன், கோபஸ்திரீகள், அம்பரீஷன், முதலான பஹு பெயர்கள், உனது திருவடிகளை ஆச்ரயித்துப் பயம் நீங்கின வண்ணம் நாங்களும், ஓ ரங்கநாதனே! உன் கருணையால் பய விமுக்தியை அடைவோம்" என்று விச்வஸிக்கவும் கூடும்.

தி. த. ர.

# சூத்ர வித்யா விசாரம்.

(தொடர்ச்சி.)

"[illegible]," (அப்படிக் கில்லாவிட்டால், அத்யயந மில்லாமையினால் சூத்ரனுக்கு வித்யாநிஷேதம் செய்யும்பக்ஷத்தில், மைத்ரேயி முதலான ஸ்த்ரீகள் வித்யையடைவதற்குக் கதியென்ன? ஸம்வர்க்க வித்யையி லிருக்கும் சூத்ரசப்தத்திற்கு க்ஷத்ரியன் எனப் பொருள்படுத்தியவண்ணம் மைத்ரேயி முதலிய சப்தங்களுக்குப் புருஷன் எனப் பொருள்படுத்த ஸித்தாந்திகளுக்கும் சக்யமன்று. இன்னும் யாஜ்ஞவல்க்யருக்கு, இரண்டு பார்யைகள் இருந்தார்கள்: மைத்ரேயியும் காத்யாயநியும் எனும் வாக்ய விரோதமும் உண்டு. ஆதலால் ப்ரதிஷேத பலத்தாலேயே சூத்ரனுக்கு அதிகாரமில்லை;) என்கிற க்ரந்தங்களால் சூத்ர அநதிகார ப்ரஸ்தாவ ஸமயத்தில் உபநிஷத் பாஷ்யகாரரே ப்ரஸங்காத் அருளிச்செய்தார். அந்த பாவப்ரகாசிகாசார்யரே அபசூத்ராதிகரணத்தில் '[illegible]" என்கிற ஸூத்ர வ்யாக்யாநத்தில், மநுஸ்ம்ருதியில், "[illegible]," என்கிற ச்லோகத்திற்கு மேல் "[illegible] ।
[illegible] ।" என்கிற ச்லோகத்தில் தார்மிகர்களான சூத்ரர்களுக்கு மந்ரமில்லா

மல் ஸம்ஸ்காரத்தை அப்யநுஜ்ஞை பண்ணியிருக்கிறபடியால், சூத்ரனுக்கு ஸம்ஸ்காரமில்லையென்று எப்படிச் சொல்லலாம், என்று பூர்வபக்ஷம் பண்ணி, மறுபடி அமந்த்ரகமான ஸம்ஸ்காரம் வித்யோபயோகம் ஆகமாட்டாதென அதற்கு ஸமாதாநத்தை ஸாதித்து, அப்படியானால், அமந்த்ரகஸம்ஸ்காரமுள்ள ஸ்த்ரீகளான மைத்ரேயீ ப்ரப்ருதிகளுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லாமல் போகவேண்டியதாகலால், மேல்சொன்ன ஸமாதாநம் ஸரியல்லவென்று பூர்வபக்ஷத்தை ஸ்திரப்படுத்தி, மற்ற ஸம்ஸ்காரங்கள் இருந்தபோதிலும், வித்யோபயோகியான உபநயந ஸம்ஸ்காரமில்லாமையால், சூத்ரனுக்கு அதிகாரமில்லையென்று ஸித்தாந்தம் பண்ணியிருக்கிறார். இதனால் ஸ்த்ரீகளுக்கு விவாஹமே உபநயநமாகையால், அவர்களுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரத்திற்குப் பாதகமில்லையென்பது அவருடைய ஸித்தாந்தம் என்று ஏற்படுகின்றது. மேலுள்ள '[illegible]' என்கிற ஸூத்ரமும் ஸ்த்ரீகளின் ப்ரஹ்ம வித்யாதிகாரத்திற்குப் பாதகமாகமாட்டாது. அதில், "[illegible]," இத்யாதி ப்ரமாணங்களால் சூத்ரனுக்கு வேதார்த்த ஜ்ஞாநமூலமான ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லையென்று நிர்ணயித்திருக்கிறது. இந்த ஸூத்ரந்யாயமும் த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்திக்க மாட்டாது. ஆகலால் அபசூத்ராதிகரணந்யாயம் த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்திக்காதென்று மஹான்களுக்கு விசதமாகலாம். இதிஹாஸகதமான அருந்ததி அநஸூயாதி வ்ருத்தாந்தங்களை ஆராய்ந்தாலும், ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யை நிஷ்ப்ரத்யூஹம் என்றே தோன்றுகிறது. இக்காலத்தில் பக்தியோகஸமாரம்பம் லுப்தமாயிருக்க, ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகார விசாரத்தில் பலிப்பதென்னவென்றால், தேவதைகளின் ப்ரஹ்மவித்யாதிகார விசாரத்தில்போல், வஸ்து யாதாத்ம்ய ஜ்ஞானமே இங்கும் பலனாகலாம். மேலும் த்ரைவர்ணிகஸ்த்ரீகளையும் சூத்ரஸ்யர்களாக; க்ரஹித்து, "[illegible] யோகா: [illegible]



[illegible]" என்று சூத்ரர்களுக்கு அஸ்ப்ருஷ்டவ்யங்களாகப் பகவானருளிச்செய்த சதுர்த்தஸவித்யாஸ்தாநங்களிலும் ஸ்த்ரீகளுக்கும் அதிகாரம் இல்லையென்று எண்ணியோ, அல்லது வேறு விதத்தாலேயோ '[illegible]' யாவத்ஜ்ஞாதாக்களான யாவச்சிஷ்டர்களும் ஸ்த்ரீகளுக்கு அக்ஷராப்யாஸமும் பண்ணிவைக்காமல், "[illegible]" (இப்படி யறிந்தவன், இதை யறியாதவனுடன் வஸிக்கவேண்டாம்) இத்யாதி ப்ரமாணங்களையும் திரஸ்கரித்து, "ஸாக்ஷாத்பசு: புச்சவிஷாண ஹீந:" (வாலும் கொம்புமற்ற பசுதான்) என்றும், "[illegible]" (ஜ்ஞாநமுள்ள மஹிஷீ தான் மஹிஷீ, கேவல மஹிஷியோ கேவலம் எருமைதான்) என்றும் ரஸிகர்களால் ம்ருகமாகவே கூறப்பட்ட ஸ்த்ரீஜாதியோடு கூடி இருந்தே ஸர்வாநுஷ்டாநங்களையும் அநுஷ்டித்து வருவது தான் ந்யாயமா? அல்லது ஸ்த்ரீகளுக்கும் ப்ரஹ்மவித்யா பர்யந்தமான அதிகார முண்டாகையால், அவர்களுக்கும் பகவத் ஸ்வரூப ரூபகுண விபூத்யாதிகளில் வைஶத்யஹேதுவான ஶாஸ்த்ரஜ்ஞானங்களை யுண்டுபண்ணி, அவர்களோடுகூடிப் பகவந்நித்ய கைங்கர்யங்களை அநுஷ்டிப்பது ந்யாயமா? இதை விசாரிக்கும் புத்திமான்களுக்கு இரண்டாவது பக்ஷமே ந்யாயமென்னும் நிர்ணயத்தை இந்த விசாரக்ரந்த முண்டுபண்ணுமாகையால், அந்த நிர்ணயமே இதற்குப் பலமாகலாம். இந்தத் தீபிகையைப் பார்க்கும் மஹான்கள், இந்த விசாரத்தைச் சோத்யமாக வெண்ணி ஸமாதாநத்தையாவது, இதை எனது ஸித்தாந்தமாக வெண்ணி, இதன் கண்டநத்தையாவது, அல்லது இதே ந்யாயமென்று அப்யநுஜ்ஞையையாவது செய்வார்கள் என்று நம்புகின்றேன்.

(இன்னும் வரும்.)

ஆ. ரா.

ஓர் விஶிஷ்டாத்வைதி.

## வர்த்தமானம்.

# திருவல்லிக்கேணி ஸம்ஸ்க்ருத ஸ்த்ரீ வித்யாலயம்.

1913ஸு டிஸம்பர்மீ முதல், திருவல்லிக்கேணியில் கோஷா ஆஸ்பத்ரிக்கு அடுத்த பெல்ஸ் ரோட்டில் 2/60 நெ. க்ருஹத்தில் ஓர் ஸம்ஸ்க்ருத ஸ்த்ரீ வித்யாலயம் ஸ்தாபிக்கப்பட்டு நடத்திவரப்படுகிறது. அதில், அநேக ஸ்த்ரீகளும், கந்நிகைகளும், வேத ஸ்ம்ருதி புராணங்களில் ப்ரஸித்திபெற்ற இந்த்ராணீ, ஸீதா, த்ரௌபதீ, ஸாவித்ரீ, தமயந்தி, இந்துமதீ முதலான ஸ்த்ரீகளுடைய குணகணங்களையும் அநுஷ்டானங்களையும் தெரிந்துகொள்வதற்காக ஷை ஆலயத்திற்கு வந்து ஸம்ஸ்க்ருதம் படிக்கிறார்கள். ஷை ஆலயத்தில் காலை 7 மணி முதல் 8 மணிவரையிலும், மாலை 2 மணி முதல் 4 மணி வரையிலும் பாடம் நடக்கிறது. ஸ்த்ரீகளும் குழந்தைகளுமாக 60 பேர் படித்துவருகிறார்கள். ஷை ஆலயத்திற்கு உபாத்யாயர் வித்வாந் லக்ஷ்மணஸ்ரௌதி அவர்களும் அவர் தர்மபத்நியுமே. இதில் நடத்தப்படும் பாடங்களாவன:—ரகுவம்ஶம், சம்பு, தேவதா ஸ்தவ மஞ்சரீ, அமரம், ராமோதந்தம், தாதுரூபாவளி முதலியன. இந்த ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் அப்தபூர்த்தி மஹோத்ஸவம், சென்ற டிஸம்பர்மீ நடந்ததாக இப்பொழுது ப்ரசுரமாயிருக்கும் அறிக்கையால் தெரியவருகிறது. அதில் ஸபாத்யக்ஷர்களான ஆனரபில் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் தர்மபத்நியான ஸம்ஸ்க்ருத பண்டிதை மாது ஸ்ரீ கல்யாணி அம்மாள் பின்வருமாறு உபந்யஸித்ததாகத் தெரிகிறது. "தற்காலம் கல்வி அபிவ்ருத்தியாகி வருவதுபோல், நமது புராதந பாஷையாகிய ஸம்ஸ்க்ருதம் இன்னும் நன்றாக அபிவ்ருத்தியாகவில்லை. ஹிந்துக்களாகிய நமக்கு, நமது பூர்வபாஷையாகிய ஸம்ஸ்க்ருதம் படிப்பதால், நல்ல பதிவ்ரதைகளின் சரித்ரங்களைப் படிக்கவும், அவர்கள் வழியை அநுஸரிக்கவும், ஈஶ்வரபக்தி உண்டாகவும், புருஷ பக்தி, பெரியோரிடத்தில் வணக்கம் முதலிய நற்குணங்களுண்டாகவும், ஜ்ஞானமுண்டாகவும், பகவானை ஸ்தோத்ரம் செய்வதற்கும் ஸம்ஸ்க்ருத பாஷையே காரணமாக இருப்பதால், ஒவ்வொரு ஸ்த்ரீயும் ஸம்ஸ்க்ருதம் அவஶ்யம் படிக்க வேண்டும்."

---

25 ... 1915
MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஸு சித்திரைமீ [ஸஞ்சிகை 3.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

ஸ்ரீ விஷ்ணுபுராணம் ப்ரதமாம்ஶம் இருபத்திரண்டாவது அத்யாயத்தில், ஸர்வ தத்வங்களையும் பகவானுடைய அஸ்த்ர பூஷணங்களாய்ச் சொல்லி, 'பூஷணாஸ்த்ரஸ்வரூபஸ்தம் யதைதததிலம் ஜகத் । பிபர்தி மாயாரூபோऽஸௌ ஶ்ரேயஸே ப்ராணிநாம் ஹரி:' ॥ எனும் ஶ்லோகத்தால் முடித்திருக்கின்றது. அந்யத்ர, "ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் । ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥" என்றும் ப்ரமாணமிருக்கின்றது. பகவானுக்கு ஸ்வரூபத்தில் ஶரீரமில்லை. ஆதலால் ஆயுதபூஷணங்களும் கிடையாது. ஶரீரவான்களான உபாஸகர் பகவானை உபாஸிக்கும்பொருட்டு பகவான் ஸ்வயமே



சித்திரை மாஸம்.

ஶரீரவானுகின்றான். இப்படி ஶரீரவிஶிஷ்டனுகவே உபநிஷத் வித்யைகள் பகவானை த்யாநிக்கும்படி விதிக்கின்றன. 'ப்ராணி நாம் ப்ரியமே' எனும் பதங்களை ஸ்ரீதரீய 'வ்யாக்யாநத்தில் "உபாஸகாநாம் ப்ராப்யமாயு விஷயே" என்று பொருள் படுத்தியிருக்கின்றது. 'ஶயாநமேவாஸள' எனும் பதங்கட்கு ஸ்ரீதரீய வ்யாக்யாநமில்லை. ஸ்ரீ விஷ்ணுசித்தரும் அதற்கு "ஈநம் தாஶயமாணவ:" என்று வ்யாக்யாநம் செய்கின்றார். நமது ஸித்தாந்தப்படி முக்தர்களும், அவர்கள் அபிமதப்படி சரீராதிகளைத் தரிக்கின்ற எம்பெருமானை நித்யவிபூதியில் அநுபவிக்கின்றார்கள் என்று ஏற்படுகின்றது. யாவர்க்கும் எளிதில் ஸ்மரிக்கத்தக்க ஶங்கசக்ர கதாவிஶிஷ்டனுன எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை விவரிக்குமிடம், ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் மேலே குறித்த அத்யாயத்தில், புருஷன் என்றும், க்ஷேத்ரஜ்ஞன் என்றும் சொல்லப்பட்ட ஸமஷ்டிஜீவனைக் கௌஸ்துபமணியாகவும், ப்ரதாநமெனும் மூலப்ரக்ருதியை ஸ்ரீவத்ஸமாகவும், புத்தியாகின்ற மஹத்தத்வத்தைக் கதையாகவும், சப்தாதி குணங்களுடன் கூடிய ஆகாசாதி பஞ்சமஹாபூதங்களுக்குக் காரணமான தாமஸாஹங்காரத்தை ஶங்கமாகவும், இந்த்ரியங்களுக்குக் காரணமாகின்ற ராஜஸாஹங்காரத்தைச் சார்ங்கமாகவும், ஸதா சலிக்கின்றதும், வாயுவைக் காட்டிலும் வேகத்தில் சிறந்ததுமான மநஸ்ஸாகின்ற தத்வத்தைச் சக்ரமாகவும், ஸூக்ஷ்ம ஸ்தூல ரூபங்களுடன்கூடிய பூததந்மாத்ரை, பஞ்சமஹாபூதங்கள் இவற்றை முத்து, மாணிக்கம், மரகதம், இந்த்ரநீலம், வஜ்ரம் இவற்றிற்கு, ஸமாந வர்ணங்களுடன்கூடிய வைஜயந்தி யெனப்பட்ட மாலையாகவும், இந்த்ரியங்களைச் சரங்களாகவும், வித்யையையும் அவித்யையையும் அஸி சர்மங்களாகவும், உபாஸகருடைய தர்சந ஸ்மரணார்த்தம் பகவான் அஸ்த்ரபூஷணங்களாகத் தரிக்கின்றான் என்று சொல்லியிருக்கிறது. இதைத் தேசிகன், "புருடன் மணிவரமாகப் பொன்றுமூலப் பிரகிருதி மறுவாக மான்றண்டாக, தெருண்மருள்வாண் மறைவாக வாங்காரங்கள் சார்ங்கஞ்சங்காக மநந்திகிரியாக, இருடீகங்க ளீரைந்துஞ் சரங்களாக விருபூதமாலை வநமாலையாக, கருடனுருவாமறையின் பொருளாங்கண்ணன் கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின்றானே" எனும் பாசுரத்தால்



அருளிச்செய்தனர். இதனால் ஸர்வஜகத்தும் அவனுடைய சரீரமாகின்றபடியால், 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்' 'ஸர்வத்ர அவன் ஆத்மாவாக இருக்கின்றான்' எனும் ஶ்ருதியின் அர்த்தம் செம்மையாய் விளங்குகின்றது. இந்த ஆத்மத்வம் ஸர்வ வஸ்துக்களின் நியமநார்த்தம். அதே ப்ரகரணத்தில் 'பூயாஶ்ச ஸர்வ ஸூதாநாம் ஸ்யமேவ ஹரிஸ்ஸ்தித:' என்பதால் அவன் ஸர்வத்துக்கும் ஆதாரபூதனென்றும் ஏற்படுகின்றது. அவன் ஸர்வஶேஷியென்பது ஸ்வதஸ்ஸித்தம். இந்த மூன்று ஸம்பந்தத்தால் சிதசித்ரூபமான ஜகத்துக்கும் அவனுக்கும் ஶரீரஶரீரி பாவம் நிலைப்பது. தத்வதர்ஶியானவன் புராணத்தில் கண்டிருக்கின்றபடி, "ஸஹம்ஹரிஸ் ஸர்வ மிதம் ஜநார்த்தந: நாந்யத்தத: காரண கார்ய ஜாதம்।" என்று ஸர்வஜகத்தையும் பகவந்மயமாகக் காணக்கடவன். அப்போது தான், "ஶம்ஸ்ரூப்ஜமோ நாயஸ்ய நதஸ்ய்ஹ்மயம்: ஸமேவா த்வா ஸ்ய மபாவம்தி" என்று புராணம் நிஶ்சயிக்கின்றது. இந்த ஶ்லோகத்தின் பொருள்:—"நான் ஹரி:, இந்த ஸர்வமும் ஜநார்த்தநன். காரணகார்ய வஸ்துக்களில் அவனைக்காட்டிலும் வேறொன்றில்லை. இப்படிப்பட்ட சித்தவ்ருத்தி எவனுக்கு உளதோ, அவனுக்கு மறுபடி சரீரப்ராப்தியும் ராகத்வேஷாதி த்வந்த்வரோகங்களுமில்லை" என்றிப்படி யிருக்கின்றது. மைத்ரேயி ப்ராஹ்மணத்திலும், 'ஸர்வம் தம் பராதாத்யோந்யத்ராத்மந: ஸர்வம் வேத,' எனும் வாக்யத்தால், ப்ரஹ்மவ்யதிரிக்தமாக ஒரு வஸ்துவையும் தத்வவித் தர்சிக்கமாட்டானென்று ஏற்படுகின்றது.

இப்படி ஸர்வதேச ஸர்வகால ஸர்வவஸ்துக்களையும் ப்ரஹ்ம சரீரங்களாக ஸாக்ஷாத்கரிக்கவேண்டியது தத்வவித்துக்களுடைய கடமை. அவற்றுள் நிற்கும் ஈஶ்வரனை விலக்கி, அவற்றின் ப்ரதீதிகள் அவர்க்கு உண்டாகக்கூடாது. இப்படி 'வாஸுதேவ ஸர்வம்' என்று அறிந்து அநுஷ்டிக்கும் மஹாத்மா எப்போதும் துர்லபன். விஷயேச்சையும் போகேச்சையும் மேலிட்ட இக்காலத்தில் அவன் அகப்படுவனோ? ஆதலால் பெரியவர்கள் காலதேச விஶேஷங்களைப் பகவத் ஸ்மரண ஸௌகர்யார்த்தம் ஏற்படுத்தி

யிருக்கின்றனர். இவையும் விஷயாஸக்த சித்தமுள்ளவர்க்குப் பயன்படா. மத்யமாதிகாரிகள் இந்தத் தேசகாலவிசேஷங்களையாகிலும் கைப்பற்றி, ஸந்மார்க்க ப்ரவிஷ்டராவார்கள் என்பது மஹர்ஷிகளுடைய யோசனை.

இந்த சைத்ர மாஸம் நவமியில், புநர்வஸூ நக்ஷத்ரத்தில், ஐந்து க்ரஹங்கள் தம்முடைய உச்சஸ்தாநங்களையடைந்து நிற்க, கடக லக்நம் குருவும் சந்த்ரனும் கூடியிருக்க உதிக்குங்கால், “ஜக₃ந்நாத₂ம் ஸர்வலோகநமஸ்க்ருதம் | கௌஸல்யாஜநயத்₃ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம் ||” என்று ஸ்ரீமத்ராமயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீராமனும் அவனுடைய அநுஜர்களும் பகவத்விக்ரஹங்களென்பதற்கு, “தத: பத்₃மபலாஶாக்ஷ: க்ருத்வாத்மாநம் சதுர்வித₄ம் | பிதரம் ரோசயாமாஸ ததா₃ த₃ஶரத₂ம் ந்ருபம் ||” என்றும், ராமனை விஷ்ணோரர்த₄ம் என்றும், பரதனை “ஸாக்ஷாத்₃விஷ்ணோஶ்சதுர்பா₄க₃:” என்றும், லக்ஷ்மண ஶத்ருக்நர்களை விஷ்ணோரர்த₄ ஸமந்விதௌ என்றும், பாலகாண்டத்தின் முதலிலும், உத்தரகாண்டாவதியில், ப்ரஹ்மா ஸ்ரீராமனை நோக்கி விஜ்ஞாபித்ததாக “ஸமஶ்ச விஷ்ணோஸ்த்வம்ஶேந நிஷ்ட₂ராவ்யாபதோ₂ ஸிர்வவ | ஹ்ராதஸ்ய ஸஹதேவோஸ்ஸௌ ப₃ர்பி₄ஶ்ஸ ஸர்கா₃ந்தநம் ||” என்றும், “விதா₄ய வஸுந்த₄ரா விநிஷ்டி₂தௌ ஸ்தா₂நாத்₂தீ | விஷ்ணோ விஷ்ணுவம்ஶஜ: ஸஶரீர: ஸஹாநுஜ: ||” என்றும் இருப்பதை யோசிக்குமிடம், ஸ்ரீராமனும் அவனுடைய ப்ராதாக்களும் சேர்ந்து, ப்ராணிகளின் ஶ்ரேயஸ்ஸின்பொருட்டுப் பகவான் அஸ்த்ரபூஷண ஸம்ஸ்தாந ஸ்வரூபத்தைத் தரிக்கின்றான் என்று சொல்லப்பட்ட திவ்யமங்கள விக்ரஹமாகின்றார்கள் என ஏற்படுகின்றது. அவர்க்குள் ஸ்ரீராமன் தான் பரமாத்மா. அநுஜர்கள் அஸ்த்ரவிஶேஷங்களாகவோ, பூஷணவிஶேஷங்களாகவோ இருந்து, அந்த ஶேஷியினுடைய நிருபாதிகஶேஷர்களாயிருக்கின்றனர். புராண யோசனையை விட்டு, யுக்திவிசாரம் செய்யப்போனால் ஸர்வதத்வங்களும் ஜீவன், ப்ரதாநம், காலம், தேசம், இவற்றுள் அந்தர்கதம். ஜீவன் கௌஸ்துபமணியாகப் பகவத்



சரீரத்தில் விளங்குகின்றான். ஸ்ரீமத்ராமாயணத்தில், ஸர்வஜீவர்க்கும் பகவதநுக்ரஹத்தை ஸம்பாதித்துக்கொடுப்பவளும், புருஷகாரபூதையுமான மஹாலக்ஷ்மீ ஸீதையாக அவதரித்து, ஜீவப்ரதிநிதியாக நிற்கின்றாள். ப்ரதாநம், பகவத்ஶக்திவிசேஷமாக நின்றும், ஜீவகர்மாநுகுணமாக ஈஶ்வரப்ரேரிதமாக ஸர்வப்ரபஞ்சரூபமாயும், அதன்கண் த்ருஶ்யமாகும் ஸர்வ வஸ்துக்களாகவும் பரிணமிக்கின்றது. பகவானுக்கு அத்யந்தஶேஷமாய், அவனுடைய கைங்கர்யத்தில் ஸதா ஈடுபட்டதாய் “நிவாஸஶய்யாஸநபாது₃காம்ஶுகோபதா₄நவர்ஷாதபவாரணாதி₃பி₄: | ஶரீரபே₄தை₃ஸ்தவ ஶேஷதாம் க₃தைர்யதோ₂சிதம் ஶேஷ இதீர்யதே ஜநை: ||” என்றும், ‘சென்றாற் குடையாம் இருந்தாற் சிங்காதநமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம், நெடுமாற் கரவு’ என்றும் விவரிக்கப்பட்டவண்ணம், கேவலம் ஶேஷஸ்வரூபமாய்ப்போந்து, ஆதிஶேஷனெனப்பட்ட ரூபமானது லக்ஷ்மணனாய் வந்தது. இந்த ப்ரதாநத்தின் ப்ரதமபரிணாமமான மஹத்தத்வம் பகவானுடைய கதையாக நிற்கின்றது. பரதஶத்ருக்நர்களைப் பகவானுடைய சக்ரமென்றும் சங்கமென்றும் சொல்வார். புராணோக்தப்ரகாரம் மநஸ்ஸும் தாமஸாஹங்காரமும் அவ்வண்ணம் ஆகின்றன. ஆனால் புராணத்தில் தாமஸாஹங்காரத்தின் முதல் விகாரமான ஆகாசம், சப்தத்தைக் குணமாயுடையதென்று சொல்லியிருப்பதால், ஆகாசமெனும் தேசமே சங்கம். காலமே சக்ரமென்பாருமுளர். ஆகக் காலம், தேசம், வஸ்து, என்று மூன்று தத்வங்களும் ஒரு யோசனையில் பகவானுடைய திவ்யாயுதங்களாயும், மற்றொரு யோசனையில் அவனுடைய ஶரீரங்களாகவும் கொள்ளக்கூடும்.

கைங்கர்யொச்சித்தி கூடாமையால் லக்ஷ்மணன் பகவானைத் தொடர்ந்து அரண்யம் சென்றனர். தநுஶ்ஶராகராங்கிதனாய்ப் பகவான் வநம் போனதலால், பரத சத்ருக்நர்கள் பின் தொடர்ந்தாரில்லை. தநுஸ், ராஜஸாஹங்காரமென்றும், ஶரங்கள் இந்த்ரியங்களாகவும் புராணத்தால் சொல்லப்பட்டபோதிலும், “ஶ்₂வஶாம்ஜ்ரியாநநம் வாரம் மயாஸநோராஜஸீவாரம் | விவேகஶார

ஜாமேந ஸம்நயதி யோகிநாம் ॥" எனும் வசநப்படித் தசாநனாகின்ற ராக்ஷஸனை தநுஸ்ஸாலும் ஶரத்தாலும் போக்கினனாலும், அந்த ராக்ஷஸனே தசேந்த்ரியங்களையே முகங்களாக, அதாவது, விஷயக்ரஹண த்வாரங்களாகக்கொண்ட மநஸ்ஸாக இருந்துகொண்டு, பகவானுடைய த்யாநநிஷ்பத்திக்கு ப்ரதிபந்தகமாயிருந்தபடியால், அந்த த்யாநத்தில் உபக்ரமித்த ருஷிகட்கு, 'ப்ரணவோ தநு:' என்னும் உபநிஷத்வசநப்படி, ப்ரணவவிவரணமான தத்வஜ்ஞாநமாகின்ற வில்லைக்கொண்டு விவேகமாகிற ஶரங்களையெறிந்து, அவர்களுடைய மநஸ்ஸுக்க ஆகின்றது. சஞ்சலவ்ருத்தியைப் பகவான் போக்கினன் என்று

இப்படி ஸாதுபரித்ராணத்தை ப்ரதாநமாகவும், துஷ்டநிக்ரஹத்தை ஆநுஷங்கிகமாகவும் கொண்டு, ஸர்வேஶ்வரன் ஸ்ரீராமனாக அவதரித்த மாஸம் சைத்ரமாஸம். இந்த மாஸத்தில் ஸ்ரீராமனுடைய ஆராதநமும் கைங்கர்யமும் ஜநங்கள் மிகவும் செய்வார்களென்று ராமபக்தர்கள் வேண்டுவார்கள். பகவான் தன்னுடைய அவதாரத்தை மறைத்து, மநுஷ்யவத் ஜீவலோகத்தில் நடித்தனர். அவருடைய திவ்யகுணங்களைப்பற்றி நாரத வசநம் ராமாயணம் முதல் ஸர்க்கத்தில் 8-வது ஶ்லோகம் முதல் 20-வது ஶ்லோகம் வரையிலும், அயோத்யாகாண்டம் முதல் ஸர்க்கத்தில் 6-வது ஶ்லோகம் முதல் 33-வது ஶ்லோகம் வரையிலும் வால்மீகிவசநமும், இரண்டாம் ஸர்க்கத்தில் 27-வது ஶ்லோகம் முதல் ஸர்க்காந்தம் 54-வது ஶ்லோகம் வரையிலும் ஜநங்கள் வசநமும், இன்னும் ராமாயணத்தில் அங்கங்கே ஸங்கோசித்தும் விஸ்தரித்தும் இருக்கின்றபடியைப் பார்த்து, இவ்வளவும், மதிக்ஷயத்தால் முடிந்ததேயன்றி, ராகவன் குணங்களின் பரிமிதியாலன்று என யாவர்க்கும் தோற்றும். முக்யமாக, 'ஸர்வப்ரஜாகாந்தை: ப்ரீதிஸஞ்ஜநநை: ந்ருணாம் । குணைர்விருருசே ராமோ தீப்த: ஸூர்ய இவாம்ஶுபி: ॥' எனும் ஶ்லோகார்த்தம் சிந்திக்கத்தக்கது. இந்த அவதாரத்தில் பகவான், ஸுகம் என்பதின் லேசத்தையும் கண்டிலன். 'ராமோ விக்ரஹவாந் தர்ம:,' என்றிருப்பதால், தர்மத்தில் ஸதா



புத்தியைச் செலுத்திய ஶரண்யனுக்கு, மநுஷ்ய லோகத்ருஷ்டியில் அதர்மப்ரேரிதரான ஜநங்கள் ஸதா துன்பங்களை விளைவித்தனர். பிதாவின் வாக்யத்தை ரக்ஷிக்கும்பொருட்டுத் தனக்குத் தர்மமாக ஸித்தித்த ராஜ்யத்தை த்யாகம் செய்ததுமன்றி, பதினலு ஸம்வத்ஸரம் வநவாஸத்தையும் அங்கீகரித்தான். அந்த வாஸத்திற்கு அத்யந்தம் தகாதவளான பிராட்டியைத் தான் அவளைப் பரிக்கவேண்டியவனென்றெண்ணிக் கூட அழைத்துப்போனன். கைகேயிக்குத் தான் கொடுத்த வரங்களால் நிர்ப்பந்தத்தி லகப்பட்டுக்கொண்ட பிதா, ஸ்வயமே தனது ஆஜ்ஞையை அதிக்ரமிக்கச் சொல்லிக் கேட்டுக்கொள்ளவும், அது அதர்மமென்றும், பிதாவினுடைய க்யாதிக்குக் கேடுண்டாக்குமென்றும் மதித்தீ, அப்படிச் செய்தானில்லை. காட்டில் வஸிக்குங்கால், பரதன் சித்ரகூடம் வந்து ப்ரார்த்தித்தும், பிதாவுக்குத் தான் சொன்ன சொல்லை அபலாபம் செய்யக்கூடாதென ராஜ்யத்திற்குத் திரும்பினனில்லை. இதனல் ராஜ்யம் ஸ்வாமியின் பாதுகையைச் சேர்ந்தது. அரண்யத்தில் மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டு, 'தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந: । நகரஸ்தோ வநஸ்தோ வா த்வம் நோ ராஜா ஜநேஶ்வர: ॥' என்று ப்ரார்த்திக்கப்படவே, அவர்க்குப் பகவான் ராக்ஷஸருடைய உபத்ரவங்களில்லாமலிருக்க அபயப்ரதாநம் செய்தனன். நிர்வைரகளாக இருக்கும் ஸந்தர்ப்பத்தில், ராக்ஷஸர் வதம்ப்ரதி ருஷிகளுக்குச் செய்த ப்ரதிஜ்ஞையைப்பற்றிப் பிராட்டி ஆக்ஷேபிக்கவே, "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம்। ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத: ॥" என்று, ப்ரதிஜ்ஞாபரிபாலநத்தை முன்னிட்டுக்கொண்டு, ருஷிகள் மிகவும் ராக்ஷஸர்களால் பீடிக்கப்பட்டுத் தன்னைச் சரணமாக அடையவே, 'ததவஶ்யம் மயா கார்யம் ருஷீணாம் பரிபாலநம் । அநுக்தேநாபி வைதேஹி ப்ரதிஜ்ஞாய கதம் புந: ॥' என்று ஸமாதாநம் சொன்னன். வாஸ்தவத்தில் தன்னிடம் நிரபராதிகளாய் நின்ற ராக்ஷஸரைப் பகவான் ஹிம்ஸித்தானில்லை. ஶூர்ப்பநகா அவர்களெல்லோரையும் பகவான் பக்கல் ஸாபராதிகளாகச் செய்தனள். அவள் நரமாம்ஸபக்ஷணம் செய்

யவள், பகவானைக் கண்டுகாமமோஹிதையாய்ப் போய், 'அத்₃யேமாம் ப₄க்ஷயிஷ்யாமி பஶ்யதஸ்தவ மாநுஷீம்' என்று ஸீதையைக் கொல்லப்போகவே, பகவான் அவளைத் தடுத்து, லக்ஷ்மணனைப் பார்த்து, அவளுக்கு ஈஷத்ஶிக்ஷையாக, அவளுடைய விரூபகரணத்தைக் குறித்து ஆஜ்ஞாபித்தனன். பிறகு, கரதூஷணாதி வதம், ராவணன் மாரீசனை ஸஹாயமாய்க்கொண்டு ஸீதையை அபஹரித்தல், ஸ்ரீராமபக்தனான ஜடாயு வதம், ஸ்வாமிக்கு ஸீதாவியோகம், இவை யாவும் நேர்ந்தன. ஹநுமான் மூலமாய்ப் பகவான் ஸுக்ரீவன் ஸ்நேஹத்தை யடைந்தான். வாலிக்கு அவன் செய்த பாபத்திற்கு ப்ராயஶ்சித்தரூபமான தண்டனை யளித்து, அவனுடைய இந்த்ராம்ஶமான தேஜஸை விளம்பமின்றி இந்த்ரனுடன் சேர அநுக்ரஹித்தான். இப்படி, லங்கையைச் சேர ஸமுத்ரத்தில் ஸேதுவை நிர்மித்து, விபீஷணனுக்கு அபயம் தந்து, லங்கேஶ்வரனையும் அவனைச் சேர்ந்த ராக்ஷஸர்களையும் கொன்று, ஸீதையை மீட்டனன். ராவணக்ரஹத்தில் சிரகாலவாஸம் ஸீதை செய்தாளென்பதை யோசித்து, அதனால் ப்ரஜைகள் தர்ம மார்க்கத்தை த்யஜிப்பார்களென்று நினைத்து, ஸீதையை அக்நிப்ரவேஶம் செய்வித்தனன். மறுபடியும் ராஜ்ய மடைந்த பிறகு, ஜநங்களுக்குள் ஸீதையைப்பற்றின அபவாதம் பெருகவே, தான் ப்ரஜாரக்ஷணம் செய்வது முக்ய தர்மமென்று கருதித் தனக்கும் பிராட்டிக்கும் முடியாத கஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டு ராஜ்யரக்ஷணம் செய்தனன். "ஸ்நேஹம் த₃யாம் ச ஸௌக்₂யம் ச யதி₃ வா ஜாநகீமபி । ஆராத₄நாய லோகஸ்ய முஞ்சதோ நாஸ்தி மே வ்யதா₂ ॥' என்று ஸ்வாமியின் உக்தியாக ஸ்மரிக்கப்பட்ட ஶ்லோகம் இவ்விடம் யோசிக்கத்தக்கது. முடிவில் தேவர்களுடைய முயற்சியால், அவன் ஸங்கல்பித்த காலத்தில், லக்ஷ்மணனுடைய வியோகம் நேரிடவே, மஹாப்ரஸ்தாந விதியை அநுஷ்டித்து ஸரயூ நதிக்கரையில் தனது வைஷ்ணவ தேஜஸ்ஸில் ப்ரவேஶித்தான்.

இப்படி, உத்தரராமசரித்ரத்தில் அவனது வசநமாக ஏற்பட்ட 'து₃꞉க₂ஸம்வேத₃நாயைவ ராமே சைதந்யமாஹிதம் ।"



எனும் ஶ்லோகார்த்தத்தின்படி, ஸத்யதர்ம பராக்ரமத்வம், லோகத்தில் ஸதா துக்காநுபவத்துடன் கூடி யிருக்குமென்பதைத் தனது திவ்ய சரித்ரத்தால் எம்பெருமான் காட்டியருளினன். தங்களுக்குத் தகாத துன்பத்தை அடையும் மஹான்கள் பகவானுடைய திவ்ய சரித்ரத்தை ஸ்மரிக்கத்தக்கவர்.

"ஸிம்ஹோரஸ்கம் மஹாபா₃ஹும் பத்₃மபத்ரநிபே₄க்ஷணம் ।
ஆஜாநுபா₃ஹும் தீ₃ப்தாஸ்யம் அதீவ ப்ரியத₃ர்ஶநம் ॥
க₃ஜவிக்ராந்தக₃மநம் ஜடாமண்ட₃லதா₄ரிணம் ।
ஸுகுமாரம் மஹாஸத்த்வம் பார்தி₂வவ்யஞ்ஜநாந்விதம் ॥
ராமமிந்தீ₃வரஶ்யாமம் கந்த₃ர்பஸத்₃ருஶப்ரப₄ம் ।" என்று

ஸ்ரீமத் ராமாயணத்திலும், "மையோமரகதமோமறிகடலோமழை முகிலோ, ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்" என்று கம்பனாலும் வர்ணிக்கப்பட்ட அந்த ஸௌந்தர விக்ரஹத்தை யார் தான் இன்றும் நினைக்கக்கூடாது! அந்தத் திவ்ய வதநத்தில் புன்னகை கூட மிகவும் விகஸித்திராது. ஈஷத் துக்கமிஶ்ரமாகவே அந்தத் திருமுகம் பிரகாசித்திருக்கும். ஆகிலும், எவ்வளவு தான் தர்ஶிக்கப்பட்ட போதிலும், முன் தர்ஶித்த ரூபம் இதன்று, எனும்படிக் காணும்போதெல்லாம் நவம்நவமாகத் தோன்றும். ஆதலாலன்றோ 'ரூபௌதா₃ர்யகு₃ணை꞉ பும்ஸாம் த்₃ருஷ்டிசித்தாபஹாரிணம்,' என்று அவனை வர்ணித்தது. இந்த அவதாரத்தைப் பகவான் தனது மஹாகருணாப்ரேரிதனாய்ச் செய்தனன். கிமர்த்தமென்றால்,

'க்ருபே க்ருதஜக₃த்₃தி₄தே க்ருபணஜந்துசிந்தாமணே
ரகோ₄ர்வஹவராங்கி₃த ரவஹயத்₃வமிணயம் த்ராகயா ।
வ்ரஜ்யாதஸித்₃தி₄꞉ ஸக்ருத₃வேக்ஷணா தத₃க்ஷணாத்
ப்ரக்ருஷ்டவஹாவாதக ப்ரஶமஹேதநாவேதநா ॥"

என்று தயாஶதகத்தில் ஸ்ரீதேசிகன் ஸாதித்தருளினர். கேவலம், லோகத்தார் செய்யும் கொடும் பாபநிவ்ருத்தியின்பொருட்டு, அவர்கள் ஒருதரம் பார்த்து ப்ரயோஜநத்தை யடையத்தக்க ஸேதுவைப் பண்ணி, அதனால் ஸமுத்ரத்தைப் பிரிப்பதற்காகவா இந்த

யவள், பகவானைக் கண்டு காமமோஹிதையாய்ப் போய், 'அத்யேமாம் பக்ஷயிஷ்யாமி பஶ்யதஸ்தவ மாநுஷீம்' என்று ஸீதையைக் கொல்லப்போகவே, பகவான் அவளைத் தடுத்து, லக்ஷ்மணனைப் பார்த்து, அவளுக்கு ஈஷத்சிக்ஷையாக, அவளுடைய விரூபகரணத்தைக் குறித்து ஆஜ்ஞாபித்தனன். பிறகு, கரதூஷணாதி வதம், ராவணன் மாரீசனை ஸஹாயமாய்க்கொண்டு ஸீதையை அபஹரித்தல், ஸ்ரீராமபக்தனான ஜடாயு வதம், ஸ்வாமிக்கு ஸீதாவியோகம், இவை யாவும் நேர்ந்தன. ஹநுமான் மூலமாய்ப் பகவான் ஸுக்ரீவன் ஸ்நேஹத்தை யடைந்தான். வாலிக்கு அவன் செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தரூபமான தண்டனை யளித்து, அவனுடைய இந்த்ராம்சமான தேஜஸை விளம்பமின்றி இந்த்ரனுடன் சேர அநுக்ரஹித்தான். இப்படி, லங்கையைச் சேர ஸமுத்ரத்தில் ஸேதுவை நிர்மித்து, வீபீஷணனுக்கு அபயம் தந்து, லங்கேச்வரனையும் அவனைச் சேர்ந்த ராக்ஷஸர்களையும் கொன்று, ஸீதையை மீட்டனன். ராவணக்ரஹத்தில் சிரகாலவாஸம் ஸீதை செய்தாளென்பதை யோசித்து, அதனால் ப்ரஜைகள் தர்ம மார்க்கத்தை த்யஜிப்பார்களென்று நினைத்து, ஸீதையை அக்நிப்ரவேசம் செய்வித்தனன். மறுபடியும் ராஜ்ய மடைந்த பிறகு, ஜநங்களுக்குள் ஸீதையைப்பற்றின அபவாதம் பெருகவே, தான் ப்ரஜாரக்ஷணம் செய்வது முக்ய தர்மமென்று கருதித் தனக்கும் பிராட்டிக்கும் முடியாத கஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டு ராஜ்யரக்ஷணம் செய்தனன். "ஸ்வாஜந்தி ப்ராணாந்தி ஸ்வயம் ப்ராணாந்ஜனகாத்மஜாம் । ராமவம்ஸ ஸ்யாமோதாம்ஸ் ஸ்வஸநாய்யா விவத்ஸலே ॥' என்று ஸ்வாமியின் உக்தியாக ஸ்மரிக்கப்பட்ட ச்லோகம் இவ்விடம் யோசிக்கத்தக்கது. முடிவில் தேவர்களுடைய முயற்சியால், அவன் ஸங்கல்பித்த காலத்தில், லக்ஷ்மணனுடைய வியோகம் நேரிடவே, மஹாப்ரஸ்தாந விதியை அநுஷ்டித்து ஸரயூ நதிக்கரையில் தனது வைஷ்ணவ தேஜஸ்ஸில் ப்ரவேசித்தான்.

இப்படி, உத்தரராமசரித்ரத்தில் அவனது வசநமாக ஏற்பட்ட 'து:கஸம்வேதநாயைவ ராமே சைதந்யமாஹிதம் ।"



எனும் ச்லோகார்த்தத்தின்படி, ஸத்யதர்ம பராக்ரமத்வம், லோகத்தில் ஸதா துக்காநுபவத்துடன் கூடி யிருக்குமென்பதைத் தனது திவ்ய சரித்ரத்தால் எம்பெருமான் காட்டியருளினான். தங்களுக்குத் தகாத துன்பத்தை அடையும் மஹான்கள் பகவானுடைய திவ்ய சரித்ரத்தை ஸ்மரிக்கத்தக்கவர்.

"ஸிம்ஹோரஸ்கம் மஹாபாஹும் பத்மபத்ரநிபேக்ஷணம் ।
ஆஜாநுபாஹும் தீப்தாஸ்யம் அதீவப்ரியதர்சநம் ॥
ப்ரஜவிக்ராந்த கமநம் ஜடாமண்டலதாரிணம் ।
ஸாகரோபம் மஹாஸத்வம் பாயிநம்வஜநாந்திகம் ॥
ராஜீவநீலப்ரகாசம் கம்தர்ப ஸத்ருசப்ரபம் ।" என்று

ஸ்ரீமத் ராமாயணத்திலும், "மையோமரகதமோமறிகடலோமழை முகிலோ, ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்" என்று கம்பனாலும் வர்ணிக்கப்பட்ட அந்த ஸௌந்தர விக்ரஹத்தை யார் தான் இன்றும் நினைக்கக்கூடாது! அந்தத் திவ்ய வதநத்தில் புன்னகை கூட மிகவும் விகஸித்திராது. ஈஷத் துக்க மிச்ரமாகவே அந்தத் திருமுகம் பிரகாசித்திருக்கும். ஆகிலும், எவ்வளவு தான் தர்சிக்கப்பட்ட போதிலும், முன் தர்சித்த ரூபம் இதன்று, எனும்படிக் காணும்போதெல்லாம் நவம்நவமாகத் தோன்றும். ஆதலாலன்றோ 'ரகுவம்சாய மநோஜ்ஞ ஸௌந்தர்ய த்ருஷ்டிசித்தாபஹாரிணம்,' என்று அவனை வர்ணித்தது. இந்த அவதாரத்தைப் பகவான் தனது மஹாகருணைப்ரேரிதனாய்ச் செய்தனன். கிமர்த்தமென்றால்,

'க்ருபே விக்ருத்ய ஜமஸிதே க்ருபணஜந்தூம் தாரணே
ரசோஸஹஸ்ரம் க்ஷிதள ரவ்யமீணயம்த்ராஸ்யா ।
வ்யஜ்ய த்வஸித்திதி: ஸக்ருதவேக்ஷணா தத்க்ஷணாச
வ்ருக்ஷவ ஹாவாதக வ்யஸமேஹ தாநாவேஸதா ॥"

என்று தயாசதகத்தில் ஸ்ரீதேசிகன் ஸாதித்தருளினர். கேவலம், லோகத்தார் செய்யும் கொடும் பாபநிவ்ருத்தியின்பொருட்டு, அவர்கள் ஒருதரம் பார்த்து ப்ரயோஜநத்தை யடையத்தக்க ஸேதுவைப் பண்ணி, அதனால் ஸமுத்ரத்தைப் பிரிப்பதற்காகவா இந்த

அவதாரம்? ஸேதுவைக் கண்ட மாத்ரத்தால் ப்ரஹ்மஹத்யாதி பாபங்கள் போகுமாகிலும், ஸர்வபாபநிவாரண பலமான மோக்ஷம் அதனால் கிடைக்குமோ? இப்படிப் பாபநிவாரணார்த்தம் ஓர் உபாயத்தைப் பகவான் தனது க்ருபையால் ஏவப்பட்டுக் காட்டினனாகிலும், அந்த க்ருபையானது ஸர்வஜகத்துக்கும் ஹிதம் செய்பவளாயும், க்ருபணனானவனும் அகிஞ்சனர்க்கு ஸர்வாபீஷ்டபல ப்ரதையாயுமிருக்கின்றாளென்று ஸாதித்தபடியால், ப்ரலோக நிர்திஷ்டமான ஸேதுவானது ஸாதாரண அணையன்று. ஸரித் பதியென்பதும் ஸாதாரண ஸமுத்ரமன்று. தேசிகனே ஸங்கல்பஸூர்யோதயத்தில், லங்கையைத் தேஹமாகவும், அதைச் சுற்றியிருக்கும் ஸமுத்ரம், ஸம்ஸாரமாகின்ற கடலென்றும் வர்ணித்திருக்கின்றனர். இந்தக் கடலைக்கடக்க ஸேதுவென ஓர் உபாயத்தை அந்த ஸ்தானத்திலேயே விபீஷணனை வ்யாஜீகரித்து லோகத்தார்க்குத் தனது கருணை ப்ரேரிதனாய்க் காட்டியருளினனன்றோ? அது தான் ப்ரபத்தி. அது தான் க்ருபணஜநங்களைக் காப்பது. அது தான் ஸக்ருத் அபேக்ஷணத்தால், அதாவது, ஆசார்யர்கள் முகமாக அறிந்தபடிச் சித்தத்தால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டதாகில், [illegible] ஸஹ-வாதங்களையும் அந்த க்ஷணத்திலேயே நாசம் செய்துவிடும்; விபீஷணனுக்குக்கிடைத்தபடிப் பகவானுடைய ஸாந்நித்யம் உடனே கிடைத்துவிடும். இது தான் இந்த அவதாரத்தின் முக்ய தாத்பர்யம். இதற்காகத் தான் ஸ்ரீராமன் நம்மால் விசேஷமாக த்யாநிக்கத்தக்கவன்.

அவன் கதையைப் படிப்போர்க்கு இந்திவரச்யாமன் ஹ்ருதயத்தில் ஸுப்ரதிஷ்டிதனாக நிற்பன். இன்னும், அவனது ஸுந்தரவிக்ரஹத்தை, எவ்வுள்மாநகரில் அத்ருஷ்டமுள்ளவர் தர்சிக்கக்கூடும். அவனுடைய அவதார உத்ஸவம் அங்கு தான் நடக்கின்றது. அவனது திவ்யமங்களவிக்ரஹ ப்ரதிஷ்டாதிநம் தீர்த்திநமாக அது நடக்கின்றது. ‘ [illegible]
[illegible] ॥’

எனும்படி, ப்ரதிதிநமும் மேல்மேல் உயர்ந்த திவ்ய ஸேவையைத் தருகின்ற எம்பெருமானைத் தர்சிக்கும் பாக்யம் யார்க்குளதோ? அவனுடைய கிங்கரரெனப்பட்டவர், அர்த்தத்ருஷ்ணையில் ஆழ்ந்து, அவனைத் தமது வ்ருத்த்யுபாயமாக அங்கீகரிக்



கின்றனர். அந்த க்ஷேத்ரவாஸிகளான வைதிகரெனப்படுவோர், அர்த்தார்ஜநபரராகித் தாங்கள் செய்ய ஒப்புக்கொண்ட மோக்ஷ வ்ருத்தியை இழக்கின்றனர். லௌகிகரோ, அவன் ஆலயம் செல்வதைக் கௌரவக்குறைவாய் எண்ணிவிட்டு, அவன் திருவீதியலங்கரிக்குங்கால், அவனை நெருங்குவதால், அவனைக் கௌரவப்படுத்துவதாய் எண்ணுகின்றனர். ம்ருகப்ராயரான இதரஜநங்களும் மிகுந்துளர். இவர்கட்காக அவன் அந்த ஸ்தலத்தில் ஸாந்நித்யம் செய்யவேண்டியதில்லை. பின் யார்க்காக அவன் உத்ஸவம் கண்டருளவேண்டும்? தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள் பரமர்ஷிகள், இவர்கள் ஜநங்கட்கு அத்ருஷ்டிகோசரராய்ப் பகவானைத் தர்சிக்கின்றனரன்றோ? ஆனபடியால், “[illegible]
[illegible]
[illegible] ॥” என்று நாம் எண்ணமுற்றிருக்கின்றோம்.

* * * * * *

**வர்ணங்களை அதிக்ரமித்த ஸஹபோஜநம்.**

1915-ம் வருஷம் ஏப்ரல் மாஸம் 8-ம் தேதி ஹிந்து பத்திரிகையில் ஒரு நிருபம் அச்சிடப்பட்டது. அதனால், அடையாற்றில் தியாஸபி தோட்டத்தில் ப்ராஹ்மணராகவும், சூத்ரராகவும், ஐரோப்பியராகவும், பார்ஸியாகவும் பிறந்த நாற்பது பெரிய மனிதர்கள் 6-ம் தேதியன்று ஒன்றாக உட்கார்ந்து போஜநம் செய்தனரென்று வெளியாகின்றது. ப்ராஹ்மணர் பக்கலில் ஐரோப்பியர் முதலானோர் உட்கார்ந்தனராம். இது ஓர் விசேஷ கலிகோலாஹலம். புசித்தவர் பெயர் விவரங்களை ஹிந்து பத்திரிகை காட்டுகின்றது. இந்த ரூபமான ஸஹபோஜநம் சில நாளாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ப்ராஹ்மணனாய்ப் பிறந்தவன் கிறிஸ்தவனாய்ப் பறையருடன் புசிக்கின்றான்; ஸம்பந்தம் செய்து கொள்கின்றான்; ஜாதிநாமத்தை விடானாகிலும், ஜாதியை முற்றிலும் அழிக்கின்றான். மேலே கண்டவிதம் புசித்தவர் தமது ஜாதியை அவ்விதம் வேராறுத்தனரோ?

Universal brotherhood என்பது தியஸாபிகல் ஸொஸைடியினுடைய ஏற்பாடுகளில் ஒன்று. அதை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவர ஸஹபோஜநம் செய்தாரென்று சொல்லப்படுகிறது.

அந்த இங்கிலீஷ் சொற்களின் அர்த்தம் ஸர்வத்ர ஸஹோதரத்வம். ஸர்வத்ர ஸஹோதரத்வம், வஸ்துஸ்வபாவத்தில் இல்லை. இது ஒரு அதிசயோக்தி தான்.

இது ஸம்பாவிதமா? ஆத்மகுணங்கள் ஒவ்வொரு சேதநர்க்குள் பரிணமிக்கலாம். இத்தகைய சேதநர் ஒவ்வொரு தேசத்தில் விசேஷ காரணங்களால் பெருகலாம். மனிதர் யாவரும் ஆத்மகுணபூர்த்தி யடைந்து, த்வந்த்வமோஹ நிவ்ருத்தராய் ஸஹோதரரென வர்த்திப்பாரென்பது ஸ்வப்நகோடிகளில் சேரத்தக்கது. செல்வமும் ஸுகமும் யாவரும் ஸமமாக அடைந்தநுபவிக்கப் பாத்யம் கொண்டாடலாம். ஆத்மகுணஸம்பத்து, பாத்யம் கொண்டாடி லபிக்காது. இதன் தாரதம்யத்தால்தான், வர்ணதாரதம்யம் நிலைத்தது. ஸஹோதரராகப் பிறந்தவர்க்குள்ளும் பரஸ்பர ஸ்நேஹம் ஸர்வஸாதாரணமன்று. ஸ்நேஹமின்மை தான் ப்ரசுரமாகத் தெரிகின்றது. இதற்குக் காரணம் அர்த்தத்தில் ஸ்ப்ருஹை தான்.

இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னும், மஹாபாரத காலத்திலும் லோகத்தார் அர்த்தமடியாகவும், காமமடியாகவும் எப்படிச் சண்டையிட்டனரோ, அப்படித்தான் இப்போதும் சண்டையிடுகின்றனர். ப்ராக்ருத பதார்த்தஜ்ஞாநமெல்லாம் சண்டையில் மனிதரை அதிகமாய்க் கொல்வதற்குத்தான் பயன்படுகின்றது.

தனது ஆத்மாவின் க்ஷேமத்தைத் தேடுகின்றவன் ஜாதிதர்மவரம்புகளை அழிக்கமாட்டான்.

ஆஹாரசுத்தியில்லாமல் ஸத்வசுத்தியில்லை. ஆஹாரசுத்தியென்பது, புசிக்கும் வஸ்துமாத்ரத்தை ஆச்ரயித்ததன்று. காலப்ரயுக்தமாயும், தேசப்ரயுக்தமாயும் ஸம்ஸ்காரப்ரயுக்தமாயும் அதற்குச் சுத்திக்ரமங்கள் நமது பெரியோரால் சிந்திக்கப்பட்டன. அவரிடம் கௌரவம் உண்டாகில் அந்த க்ரமங்களின் பரித்யாக புத்தி ஸம்பவிக்காது.

வேதகாலத்தில் இருந்த ஆசாரங்கள், ஐரோப்யர் ஆசாரங்களைப் போன்றவையென, அவற்றை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவருவதாகச் சிலர் ப்ரயத்நிக்கின்றனர். லோகத்தில்



ஸர்வத்ர ஜ்ஞாநம் வ்ருத்தியாகுமே தவிர குறையமாட்டாது. அநுபவஜந்யஜ்ஞாந மென்பதை மறுக்கவும் கூடாது. நம் பெரியோர் ஆத்மஸ்வரூப ப்ராப்திக்கு அநுகூலமான ஆசாரங்களைத் தான் விதித்தனர். அநாசாரத்தில் வளர்பவருடன் ஸம்ஸர்க்காபேக்ஷையினால் குலதர்மத்யாகம் குணமாக முடியு மென்று தோன்றவில்லை.

காணப்படும் பேதங்களை அநாதரித்து அவற்றிற்கு ஆதாரமாக நிற்கும் ஆத்மைக்யத்தை அறியச் சொன்னார் அத்வைதிகள். ஸர்வபேதங்களிலும் உள்நின்று ஸமாந ஆகாரவிசிஷ்டங்களான ஜீவதத்வங்களையும், அவற்றிற்கும் அந்தராத்மாவாக நிற்கும் பரமாத்மாவையும், அறியச் சொன்னார் மற்ற வேதாந்திகள். இப்படி ஜ்ஞாநவிஷயமாகத்தக்க வஸ்துவின் ஐக்யத்தாலோ, ஜீவதத்வங்களின் ஆகாரைக்யத்தாலோ, பேதங்களை நிராகரிக்கவொண்ணாது. வ்யவஹாரத்தாலோ, பரமார்த்தமாகவோ, பேதிக்கும் பதார்த்தங்களும் உள்ளனவே. அவை த்ரிகுணாத்மகமான ப்ரக்ருதியின் பரிணாமங்கள். அவற்றுள் நின்ற ஜீவன் பஹு ஜந்மங்களெடுத்து, அவற்றிற்கு இயல்பான குணங்களைப் படிப்படியாக ஜயித்துத் தனது ஆத்மகுணங்களின் ப்ரகாசத்தை ஸம்பாதிக்கின்றான். இந்த ப்ரயத்நத்துக்கு, அவனது ஜந்மாந்தர ஸம்பாதிதங்களான வித்யா கர்மங்களும், அவற்றால் அவனுக்குக் கிடைத்த தத்காலஜந்மமும், ஸம்ஸர்க்கங்களும், ஸஹகாரிகளாக நிற்கின்றன. "ஶுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபிஜாயதே" எனும் பகவத்வாக்யத்தை ஸ்மரிக்க வேண்டும். ஜந்மாந்தர ஸத்கர்மபலமாகக் கிடைத்த ப்ராஹ்மணாதி ஜந்மங்களையும் ஸம்ஸர்க்கங்களையும் நாசம்செய்து, பகவான், தேவதைகள், பிதுர்க்கள், இவர்களுக்கு உகப்பை ஸம்பாதிப்பதாக எண்ணுதல் யுக்தியுக்தமன்று. ஜாத்யந்தரர்க்கு அநுகூலம் செய்யவேண்டியதே. இதற்காக ஸ்வதர்மத்யாகம் வேண்டுமெனக் கொள்ளுதல் ந்யாயஸஞ்சாரமற்ற மநஸுக்குத் தான் பொருந்தும்.

* * * * *

**ஹரித்வாரத்தில் கூடிய ஹிந்து ஸங்கம்.**

ஏப்ரல்மீ 9-ம் தேதி வெள்ளிக்கிழமை, இந்தியா தேசத்தினுடைய ஹிந்துக்களெனப்பட்ட ஆர்ய ஸம்ப்ரதாயஸ்தர்களின் ப்ரதிநிதிகள் ஓர் ஸங்கமாக ஹரித்வாரமெனும் புண்ய க்ஷேத்ரத்தில் கூடினார்கள். காஸிம்பஜார் மஹாராஜா அந்த ஸங்கத்தின் அக்ராஸநத்தை வஹித்தனர். ஆர்யமதமென்னும் ஸநாதந தர்மமானது ஸர்வத்ர சாந்தியையும், லோகத்திற்கு ஹிதத்தையுமே அபேக்ஷித்தபடியால், அது மற்றோர் பொருளை அபேக்ஷித்ததன்று எனவும், அது ஸ்வதர்ம நிஷ்டர்களுக்கு ஸ்வாநுஷ்டாநத்தால் புருஷார்த்தங்களைத் தந்து, அந்யதர்ம நிரபேக்ஷமாய் நின்று, பரர் விஷயத்தில் நிந்தை, த்வேஷம் முதலான தன்மைகளைப் பாராட்டுவதில்லை யென்றும், அதனுடைய வித்யைகளும், அதனால் உண்டாகும்ஆத்மகுண ஸம்ருத்தியும், ஐரோப்யர் அமெரிக்கர்களில் விவேகசீலருடைய சித்தங்களை ஸ்வோத்க்ருஷ்ட குணங்களால் ஆகர்ஷிக்கின்றனவென்றும், அந்த ப்ரபு உபந்யஸித்தனர். மேலும், ஆர்யமதாபிமானிகள் வருஷத்துக்கொருதரம் ஒன்றுசேர்ந்து தமது மதத்தின் ஒற்றுமையையும் க்ஷேமத்தையும் ரக்ஷிக்கும் பொருட்டுத் தகுந்த ப்ரயத்நங்களைக் கைக்கொள்ளவேண்டுமென்றும், அவர் அவ்விதம் செய்வதால் அந்யர்கள் சங்கிக்க அவகாசமில்லை யென்றும், அந்யரிடம் த்வேஷத்யாகம் ஸர்வாத்மநா ஆர்யமதத்தை யொத்து மதாந்தரங்கள் பாராட்டுவதில்லையென்றும், இந்த மதத்துக் கெட்டிய அபரோக்ஷ விஷய ஜ்ஞாநம் மிகவும் விஸ்தரித்த தென்றும், மநுஷ்யர்க்குள் ஸம்பாவிதமான மதிபேதங்கள் ஆர்யதர்சநங்களுக்குள் இருந்தபோதிலும், அவை ஸமரஸப்படுத்தத்தக்கவை யென்றும், இப்படிப்பட்ட ஸமரஸத்தை ஸங்கத்தார் தமது முக்ய ப்ரயத்நமாக வஹிக்கவேண்டியவர் என்றும், ஸம்ஸ்க்ருத ப்ராசீந க்ரந்தங்கள் தேசமெங்கும் தேடியெடுக்கப்பட்டு ரக்ஷிக்கத்தக்கவை யென்றும் மொழிந்தனர்.

நமது மதாநுஸாரிகள் நாஸ்திகராகவும், மதாந்தரப்ரவிஷ்டர்களாகவும் பரிணமிப்பதால், அவருடைய ஸங்க்யை குறைகின்



றது; ஆதலால், அதனிமித்தம் சோகிக்கப் பயனில்லை. மதாபிமானிகள் ஒன்றுகூடி ஸ்வரக்ஷணத்தில் தத்பரராகில், ஆர்யமதம் ஜீவித்து நிற்கும்; இம்மதத்திற்கும், இதை வழிபடுபவர்க்கும் உண்டான கஷ்டங்கள் லோகத்தில் மற்றெங்கும் இல்லை. இவ்வளவு அபாயங்களையும் கடந்து ஜீவிக்கின்ற நமது மதம், தத்காலம் அதற்கு ஸம்பவித்திருக்கும் தீங்குகளையும் தாண்டி நிற்குமென்று விச்வஸிக்க ஹேதுவுண்டு. இந்த மதத்தின் உண்மைகள் சாச்வதமான உண்மைகளானபடியால், த்வேஷிகளையும் அவை காலக்ரமத்தில் ஆக்ரமிக்கும். இந்த உண்மைகள்தான் லோகத்தார்க்கு ஆமுஷ்மிக மார்க்க ப்ரகாசஹேதுவாக நிற்கத்தக்கன; "[illegible] ॥" என்று மற்றெந்த மதத்திலாவது வசநமெடுக்கக்கூடுமோ? நமது ஜாதி வ்யவஸ்தைகள் சாச்வதமாகவும் பரமார்த்தமாகவும் ஏற்பட்ட உண்மைகளை அநுஸரித்து உண்டாயின; ஆகிலும் பஞ்சமரெனப்பட்ட ஜாதிகளுக்கு உபகரித்தல்வேண்டும்; அதனால் ஸ்வஜாதிதர்மத்துக்கு ஹாநி ஸம்பவிக்காது; ஆதலால் அவர்களுடைய தைந்யத்தை நிவர்த்திக்க நாம் ஸர்வப்ரகாரமும் யத்நபரராகவேண்டும்; என்று, இவ்வண்ணமும் அந்த மஹாராஜா ப்ரஸங்கித்தனர்.

இந்த உக்திகள் யாவற்றையும் நாம் அப்யுபகமம் செய்கின்றோம். நமது வைதிகஸம்ப்ரதாயஸ்தர்கள் தமக்குள் உண்டாயிருக்கும் பேதங்களைப் பாராட்டாமல், தமக்கு ஒற்றுமைக்குக் காரணமான விஷயங்களை நன்குமதித்து, ஸ்வரக்ஷணார்த்தம் ஸபைகளையும் ஸங்கங்களையும் ஏற்படுத்தவேண்டும். ஜநத்தொகையில் நாம் குறைவோம் என்பது ஸித்தம். அபிமானிகள் முயற்சியுண்டானால் என்றும் நம்மதம் ஜீவித்துநிற்கும். பாஹ்ய சத்ருக்கள் நமக்கு பலநூற்றுண்டுகளாய் உளர். தத்காலம் அவர் அர்த்தபலம், ஐக்யபலம், ப்ரயத்நபலம், தேசபலம், காலபலம், இவற்றை மிகவும் அடைந்திருக்கின்றனர். இந்த அம்சங்களில் நாம் குறைந்தவர். இதனோடு நமக்குள் பிறந்து, நம்மை விட்டு விலகாமலும் இருக்கும் சத்ருக்களை நாம் விசேஷமாக அடைந்து நிற்கின்றோம். இந்த நாட்டில் ஒரு ஹிந்துஸபையும், அதை

யநுஸரித்த வர்ஷஸங்கமும் ஏற்படவேண்டியதை நாம் மிகவும் ப்ராத்திக்கின்றோம்.

*    *    *    *    *    *

10-ம் தேதி மத்யாஹ்நம் அவ்விடம் அகிலபாரதவர்ஷ ஸநாதந தர்ம மஹா ஸங்கம் கூடியது. ஸநாதநதர்மாபிமாநிகளாய் 10,000 பெயர் கூடினராம். அந்த நாட்டு ஶ்ரீஶங்கராசார்யர் அந்த ஸங்கத்தை அலங்கரித்தனராம். தர்பங்கா மஹாராஜா அக்ராஸநம் வீற்றிருந்தனராம். காஶ்மீரமஹாராஜா ஸங்கத்திற்கு விஜயம் செய்தனராம். அக்ராஸநத்தில் அத்யக்ஷர் அருகில் இருக்கும்படி வேண்டப்பட்ட அளவில்; அந்த ராஜஶ்ரேஷ்டர் கைகளைக் கூப்பிக்கொண்டு, தான் க்ஷத்ரியர் என்றும், ப்ராஹ்மணரான ஸங்காத்யக்ஷருடன்கூடத் தான் இருத்தல் யுக்தமன்றென்றும், ஹிந்துக்களில் ப்ராஹ்மணர் ஶ்ரேஷ்டரென்றும், மற்ற யாவராலும் வணங்கத்தக்கவரென்றும் சொல்லி, வேற்றிடம் வீற்றிருந்தனர். பல ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள்ளும் ஒற்றுமையை வேண்டியும், ஹிந்துகலாஸங்கம் ஏற்படுவதையும், அதில் நமது மதஜ்ஞாநத்தைப் படிப்பவர்க்கு உண்டுபண்ணவேண்டியதைப் பற்றியும், தீர்மாநங்கள் செய்யப்பட்டன. இத்தகைய மஹாஸங்கம் வருஷம் தோறும் கூடுவதைப்பற்றி காஶ்மீர மஹாராஜர் வேண்டினர்.

**வர்ணாஶ்ரம தர்ம த்யாகமும் ஹிந்து மதமும்.**

ராமக்ருஷ்ணமதமென்பது ஹிந்து மதமே. ஆனால் அது வர்ணாஶ்ரம தர்மங்கட்கு விரோதியோ என்று அயிர்க்கின்றோம். தத்காலம் ஜாதி தர்மங்களைக் கடந்த ஹிந்துக்களுடைய ஒரு ஸமவாயம் அவஶ்யம் வேண்டுமென்போர் உளர். இப்படிக்கின்றித் தோசாந்தரஸ்தர் நமது மதத்தை அபிமாநிக்க இடம் உண்டாகாது; நமது தேசத்தார்க்கு ஐஹிக விஷயங்களில் க்ஷேமம் உண்டாகாது என்று அவர் சொல்வர். இதை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனாலும், இப்படிப்பட்ட யோசனையால் ஜாதிதர்மத்யாகம் செய்பவர் செய்யட்டும். செய்யாதவரை அவர் இகழ்வானேன்? தூஷிப்பானேன்? அவர்க்கு மாத்திரம் மநஸாக்ஷியெனும் ஸாமக்ரி ஏற்பட்ட



தன்று. ஜாதிதர்மங்களை விஶ்வஸித்து அவற்றினின்றும் தவர்தல் ஈஶ்வரநிக்ரஹஹேதுவாகுமென நினைப்பவரும் ஆத்மஸாக்ஷிகமாய்த்தான் நினைக்கின்றார்கள். ஆதலால் வர்ணாஶ்ரமநிஷ்டர்களான மதாபிமாநிகள் ப்ராசீநமார்க்காநுஸாரிகளாயிருக்கக் குறையில்லை. இவற்றை த்யஜிப்பவர்கள் மதாபிமாநத்தை த்யஜிக்காமலிருப்பரேல், அவர்கள் வேறு வகுப்பினராய்த்தான் நிற்கவேண்டும். வர்ணாஶ்ரம தர்மங்களையும் ஆசாரங்களையும் சீரழித்துக்கொண்டு, ஜாதிக்ருதமான வீண் அபிமாநத்தை இவர் பாராட்டுதல் அந்யாயமே, ராமக்ருஷ்ணமதஸ்தர் இந்த வகுப்பைச் சேரத்தக்கவர். தியாஸபியை அபிமாநித்தவர் ஹிந்துமதஸ்தரெனக் கொள்ளத்தக்கவரா? அவருடைய விஶ்வாஸங்களை ஹிந்துக்கள் அங்கீகரிக்கலாமோ?

அங்நிபெஸண்டு துரைஸானி முதன் முதல் இந்தியாவுக்கு வந்தபோது, தான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவளென்றும், அதன் விசேஷங்களை ப்ராஹ்மணரிடம் கற்கவேண்டினளென்றும் வெளியிட்டனள். ப்ராஹ்மணராய்ப் பிறந்தவர்கள் அவளுக்கு ஶிஷ்யராகப் பரிணமிக்கவே, அவர்க்கு அவள் கற்பிக்கும் திறமையைக் கொண்டாடுகின்றனள். 'ஆசார்யவச ஶிஷ்ய:' எனும்படி, வர்ணாஶ்ரமமற்ற ஆசார்யர்களிடம் வர்ணாஶ்ரம ஶ்ரம் புக்குள் நின்றவர் சென்றால், அவர் அதை த்யாகம் செய்வதில் விஸ்மயம் உண்டோ? காசியின்கண், ஹிந்துக்கள் உபகரித்த பொருள் ஸஹாயத்தைக் கொண்டு, அங்நிபெஸண்டு துரைஸானி ஏற்படுத்திய மத்யஹிந்துகலாசாலை, தியாஸபியினின்று ரக்ஷிக்கப்பட்டது ஹிந்துக்கள் பாக்யமே எனத் தோன்றுகின்றது.

---

# தத்வவிசாரம்.

## அவதார ரஹஸ்யம்.

பகவத்கீதையில், பகவான், தான் அவதரிக்கும் ப்ரகாரத்தை வெளியிடுமிடத்தே, 'अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् । प्रकृतिं स्वामधिष्ठाय सम्भवाम्यात्ममायया ॥ यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत । अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥ परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् । धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥ जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः । त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥" (ஸர்வ ப்ரகாரத்தாலும்) ஜந்மம், நாசம் முதலான விகாரங்களற்ற ஸ்வபாவத்துடன் கூடினவனாயிருந்தும், (ஸர்வாவஸ்தைகளிலும் ஸங்கோசமற்ற ஜ்ஞாநஶக்தியுடன் கூடினவனாயிருந்தும், ப்ரஹ்மாதி ஸ்தம்பபர்யந்தமுள்ள) ஸர்வபூதங்களுக்கும் பரமேஶ்வரனாகவிருந்தும், எனது ஸ்வபாவத்திலேயே இருந்தவனாய்க்கொண்டு, 'आदित्यवर्णं तमसस्तु पारे, क्षयन्तमस्य रजसः पराके' எனும் ஶ்ருதிகளால் நிரதிஷ்டமானபடி, ப்ரக்ருதிமண்டலத்தை அதிக்ரமித்து வைகுண்டமெனும் ஸ்தாநவிஶேஷத்தில், அஸாதாரணமாக நிரதிஶயதீப்தியுடன் கூடின எனது திவ்யமங்களவிக்ரஹ விஶிஷ்டனாய்க்கொண்டு, அதவா, எவள் த்ரிகுணங்களுடன் கூடினவளோ, ஸர்வஜகத்தையும் தன் வசமாக்கி நிற்கின்றவளோ, எவளால் ஸம்பாதிதங்களான போகோபகரணங்களிலே இந்த ஸர்வ ப்ராணிகளும் மோஹித்துப்போய் நிற்கின்றனவோ, அப்படிப்பட்ட வைஷ்ணவீ எனப்பட்ட எனது மாயையை என் வஶமாகவே வைத்துக்கொண்டு, அகர்மவஶ்யனாய், எனது ஸங்கல்பத்தினாலேயே அவதாரம் செய்கின்றேன். ஓ அர்ஜுனா! எந்



தெந்த காலங்களில் வர்ணாஶ்ரமாதி லக்ஷணத்தை யடைந்து, ப்ராணிகளுக்கு அப்யுதய நிஶ்ரேயஸ ஸாதநமாகவிருக்கின்ற தர்மத்துக்கு ஹாநியும், அதர்மத்துக்கு வ்ருத்தியும் உண்டாகின்றனவோ, அந்தந்த காலங்களில் நான் அவதரிக்கின்றேன். ஸந்மார்க்கத்திலிருக்கும் ஸாதுக்களுடைய ரக்ஷணத்தின்பொருட்டும், பாபஞ்செய்யும் துஷ்க்ருதர்களுடைய நாசத்தின்பொருட்டும், தர்மத்தை நன்றாக நிலைநிறுத்தும்பொருட்டும் யுகந்தோறும் உண்டாகின்றேன். (வேதோதித தர்மஶீலர்களாயும், அப்படியிருக்கையிலும் தேவதாந்தர ஸம்பர்க்கமற்ற வைஷ்ணவாக்ரேஸரர்களாயும், என்னை நன்கு ஆஶ்ரயிப்பதில் ப்ரவ்ருத்தர்களாயும், எனது நாமகர்மஸ்வரூபங்கள் இந்த்ரியங்களுக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதபடியால், என்னை தர்ஶித்தாலன்றித் தங்களுடைய ஶரீரதாரணபோஷணாதிகளை அடையாதவர்களாயும், என் விஶ்லேஷத்தில் ஒவ்வொரு க்ஷணத்தையும் கல்பஸஹஸ்ரமாக எண்ணப்பட்டவர்களாயும் இருக்கும் ஸாது ஜநங்கள், மிகவும் கஷ்டப்படுவார்களேயென்று அவர்க்கு எனது ரூபசேஷ்டிதங்களுடைய தர்ஶநத்தையும், அவற்றைப்பற்றிய ஸம்பாஷணையும் தந்து, அவர்களை உஜ்ஜீவிக்கச்செய்யவும், இவர்க்கு விபரீதமாக நடப்பவருடைய விநாஶத்தின்பொருட்டும், எனது ஆராதநரூபத்தை அடைந்த வைதிக தர்மத்தை அதனால் ஆராதிக்கப்பட்டவனை எனது ஸ்வரூபதர்ஶநத்தைக் கொடுத்து ஸ்தாபிக்கும்பொருட்டும் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.) இவ்விதமாக, (கர்மத்தை மூலமாக உடையதும், முக்குணங்களுடன் கூடிய ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ளதுமான ஜந்மமற்றவனும், ஸர்வேஶ்வரனும், ஸர்வஜ்ஞனும், ஸத்யஸங்கல்பனும், இவை போன்ற ஸமஸ்த கல்யாண குணங்களுடன் கூடினவனுமாகிய) என்னுடைய (ஸாதுக்கள் பரித்ராணமென்ன, அவர்கள் என்னை ஆஶ்ரயித்து அநுபவிப்பதென்ன, இத்யாதிகளையே ப்ரயோஜநமாகவுடைய) அப்ராக்ருதமானதும், எனக்கே அஸாதாரணமாகப் பொருந்தியதுமான எனது அவதாரசேஷ்டிதங்களை உண்மையாக யார் அறிகின்றனோ, அவன், தனது தேஹத்தைப் பரித்யாகம் செய்த பிறகு புநர்ஜந்மத்தை யடையமாட்டான். என்னையே அடைவன்". என்று ஸாதித்தருளினர். 'अजायमानो बहुधा विजायते' என்று ஶ்ருதி சொன்னவண்ணம், அகர்மவஶ்யனனபடியால்

பிறப்பற்ற ஈச்வரன் பக்தர்களை அநுக்ரஹிக்கப் பஹுவிதமாக அவதரிக்கின்றான். 'பஜதாம் ப்ராணஸாரம் ஸாத்மனா ஜந்மநா தாஸு' என்று தேசிகன் அருளிச்செய்தபடித் 'தன் அடியார்க்கு அநுபவயோக்யமாகும் அவதாரங்கள் செய்கிறான். ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும், ஆறுவது அம்சத்தில், கேசித்வஜகாண்டிக்ய ஸம்வாத ப்ரகாரணத்தில், பகவானுடையை சக்தித்ரயமாகின்ற ப்ரக்ருதியெனும் ஜடசக்தி, க்ஷேத்ரஜ்ஞனெனும் சித்சக்தி, அவித்யை எனும் கர்மசக்தி, இவற்றால் லோகத்தில் ஸர்வ வஸ்துக்களும் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றபடியால், ப்ரஹ்மா முதல் ஸ்தம்பம் வரையில், யாவும் அவனுடைய ரூபமென்பதை, 'ஸமஸ்தா சக்தயச்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: । தத் விச்வரூபவைரூப்யம் ரூபமந்யத்தரேர் மஹத் ॥' என்று சொல்லி, இது பகவானுடைய மூர்த்தமான விச்வரூபமென்றும், இதைக்காட்டிலும் விலக்ஷணமானதும், அமூர்த்தமானதும், யோகிகளால் த்யானிக்கத்தக்கதும், ஸத்சப்தவாச்யமானபடியால் ஜகத்துக்குக் காரணமாகின்றதுமான பகவத்ரூபத்தை, 'ஸமஸ்தசக்திரூபாணி தத்கரோதி ஜநேச்வர । தேவதிர்யங்மநுஷ்யாக்யா சேஷ்டாவந்தி ஸ்வலீலயா ॥ ஸர்வேச்வரஸ்ய ஸாக்ஷாத்யத்ர நிரவத்யம் ப்ரதிஷ்டிதா: ॥' என்று வர்ணித்து, அந்தப் பகவத்ரூபத்தில் மேலேகூறிய சக்திகளெல்லாம் ப்ரதிஷ்டிதங்களாய் நிற்கின்றனவென்று முடிக்கின்றார். இது தான் 'ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்' என்றும், 'க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே' என்றும், 'ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாததி' என்றும் ச்ருதிகளில் ஸர்வேச்வர: ப்ரஹ்மணஸ்பதி: க்ஷேத்ரஜ்ஞ: ஸர்வபூதாநாம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: । இதைப்பற்றித் தான், மஹாபாரதாதிகளில் 'வேத்தா ஸர்வஸ்ய வேத்யஸ்ய ஸ்ரீமாந் நாராயண: ஸ்வயம்' என்றும், 'ஆதித்யவர்ணம் புருஷம் மஹாந்தம்' என்றும், ச்ருதியில், 'அதிஷ்டாநம் பரம் ப்ரஹ்ம' என்றும், 'நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:' 'நாராயண பரோ ஜ்யோதிராத்மா



நாராயண: பர:' என்றும், விவரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பரமேச்வரன் ஸ்வயமே அவதரிக்கின்றான் எனும் விஷயத்தை, ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்மேலே குறித்த ப்ரகாரணத்தில், 'ஸமஸ்தசக்திரூபாணி தத்கரோதி ஜநேச்வர । தேவதிர்யங்மநுஷ்யாக்யா சேஷ்டாவந்தி ஸ்வலீலயா ॥ ஜகதாமுபகாராய ந ஸா கர்மநிமித்தஜா । சேஷ்டா தஸ்யாப்ரமேயஸ்ய வ்யாபிந்யவ்யாஹதாத்மிகா ॥' "ஸமஸ்தசக்தி விசிஷ்டனான அந்தப் பகவான் தேவர்களிலும், திர்யக்ஜந்துக்களிலும், மநுஷ்யர்க்குள்ளும், அந்தந்த ஜாதிக்குரிய சேஷ்டிதங்களுடன்கூடிய அவதார ரூபங்களைக் கேவலம் தனது லீலார்த்தம் எடுக்கின்றான். அவனது அவதாரங்களும் சேஷ்டிதங்களும் ஜகத்துக்கு ஹிதத்தை உத்தேசித்துச் செய்யப்படுகின்றன; கர்மபலபோகத்தின் பொருட்டல்ல; அப்ரமேயனான பகவானுடைய திவ்யசேஷ்டிதங்கள் மதுரா, கோகுலம், ப்ருந்தாவநம், த்வாரகா, குருக்ஷேத்ரம் முதலான ஸர்வ ப்ரதேசவ்யாபியாய், அபரிச்சிந்நங்களாய், ஹிரண்ய, ராவண, சிசுபால, கம்ஸ, பாணாதி ஸர்வப்ராணிகளாலும் தடுக்கக்கூடாதவையாகவும் இருக்கின்றன" என்கிற ச்லோகங்களால் காட்டப்பட்டது. ஆதலால் யோகிகளால் இந்த அவதாரரூபங்களும் த்யேயம் என்று புராணரத்நத்தில் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமத்ராமாயணத்தில், சதுர்முகஸ்துதி ப்ரகாரணத்தில் ஸ்ரீராமனைக்குறித்து ப்ரஹ்மா, 'பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாம்ச்சக்ராயுதோ விபு:' என்றும், 'ஸீதா லக்ஷ்மீர் பவாந் விஷ்ணு:' என்றும், 'அக்ஷரம் ப்ரஹ்ம ஸத்யம்ச' என்றும் கூறி, ஸ்ரீராமன் ஸர்வேச்வரன் என்பதையும், அவனுடைய அவதார சேஷ்டிதங்களைக்குறித்து, 'அஜோ பவாம்ச ஸர்வாஸ்ய ப்ரஜானாம் ஸ்ருஷ்டிகர்த்தா பவாந் । அஜோ பவாந் நித்ய: ஸநாதந: ஸர்வதேவை:' என்றும், விஷ்ணுபுராண வசநங்களையொட்டி உரைத்திருக்கின்றனர். அதே ஸந்தர்ப்பத்தைக்குறித்து வரையுமிடம், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த பாஸமஹாகவி

162026

அவருடைய அபிஷேக நாடகமெனும் க்ரந்தத்தில், தேவருடைய ஸ்துதியில், ' [illegible] ' என்று, ஸ்ரீராமனையும் ஸீதையையும்பற்றி உரைத்ததில், அவர்களுடைய ஸ்வேச்சாவதாரரூபங்களைத் தர்ஶித்துத் தேவர்கள் க்ருதார்த்தரானார்களென்றும், ராவண ஸம்ஹாரத்தால் அவ்வளவு த்ருப்தி யவர்களுக்கு இல்லையென்றும் கவியினுடைய தாத்பர்யம் வெளியிடப்பட்டது. ஆகையால், நீண்ட காலம் தொடங்கி, அவதாரரூபங்கள் அடியார்களுடைய ஸ்மரணத்துக்கும் த்யாநத்துக்கும் மிகவும் உபகாரமாக இருந்தன எனும் நம்பிக்கை, நம் நாட்டினர்க்குண்டு என்று ஏற்படுகின்றது. பகவானுடைய பரஸ்வரூபத்தைக் காணத் தினப்புற்ற தேவர்களும், அவதார ரூபங்களை அர்ச்சித்தனர் என்பது, ' யஸ்யாவதாரரூபாணி ஸமர்ச்சந்தி திவௌகஸ: । அபஶ்யந்த: பரம்ரூபம், ' என்கிற விஷ்ணு புராண வசநத்தால் ஸ்பஷ்டீக்ருதம். கேநோபநிஷத்தில் தேவர்களின் பொருட்டு ப்ரஹ்மம் அஸுரர்களை ஜயித்ததென்றும், அந்த ஜயத்தையும் அதனால் உண்டான மஹிமையையும் தமதென்று மித்யாபிமாநங்கொண்ட தேவர்முன்பாக, ஈஶ்வரன் ஓர் அத்புத ரூபத்துடன் ஆவிர்பவித்தானென்றும், அந்த ஸ்வரூபத்தை இன்னதென்று அறிய அஶக்தர்களாய்த் தேவர்கள், முதலில் அக்நியையும், பின் வாயுவையும், அதை அறியும்படி அனுப்பினார்களென்றும், அவர்கள் தமது ப்ரபாவத்தை, ப்ரஹ்மத்தின் முன்பாக ப்ரஶம்ஸித்துக் கர்வபங்கமடைந்து திரும்பிய பின்னர், தேவராஜத்வப்ரயுக்தமான அபிமாநத்துடன் இந்த்ரன், ஆவிர்பவித்த ஈஶ்வரன்முன் செல்லவே, அவனுடைய கர்வத்தைப் போக்க நினைத்துப் பகவானும் அந்தர்தாநமடைந்தானென்றும், அவ்விடமே இந்த்ரன் மறைந்துபோன பகவானை த்யானித்துக் கொண்டிருக்க, அவனை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவ்விடம் வந்த உமாதேவியை நோக்கி, இந்த்ரன் மறைந்துபோன ஸ்வரூபத்தைப் பற்றி வினவ, தேவியும், அவன் தர்ஶித்தது ப்ரஹ்மமென்றும், தேவர் ஸம்பாதித்த அஸுரஜயமெல்



லாம் ப்ரஹ்மத்தின் க்ருபையால் உண்டாயிற்றென்றும், அங்ஙநமாக, தேவர் கொண்ட அபிமாநம் மித்யாபூதமென்றும் சொல்லி, ப்ரஹ்ம விஷயமான உபதேசம் செய்தனள் என்றும், மேலே விவரித்த காரணங்களால், அக்நி, வாயு, இந்த்ரன் ஆகிய இந்த மூன்று தேவர்களும் ப்ரஹ்மதர்ஶநத்தை ப்ரதமம் அடைந்து உத்க்ருஷ்டர் ஆயினர் என்றும் சொல்லியிருக்கின்றது. இதனால் ஈஶ்வரனுடைய பரஸ்வரூபம், தேவர்களும் அறியார் என்பதும், பகவான், தேவர் மத்யே, உபேந்த்ரனாக அவதரித்து, அவர்க்கு ஜயத்தைத் தந்தனர் என்பதும், அவருடைய அவதாரரூபங்களைத் தேவர்களும் அர்ச்சிக்கின்றனர் என்பதும் ஸ்பஷ்டம். அவதார ஶரீரங்கள் அப்ராக்ருதங்கள், கேவல பகவதிச்சாஸாத்யங்கள் என்பதைக் காட்ட, " [illegible] " எனும் ஸ்ரீவிஷ்ணுபுராண வசநங்களையும் ஸ்மரிக்கலாம். இப்படி யோகிகளுக்கும் தேவர்களுக்கும் த்யாநத்தால் பரமநிஃஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கும் பகவானுடைய அவதாரரூபசேஷ்டிதங்களைப்பற்றி, மேலெடுத்துரைத்த " ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: " எனும் ஶ்லோகம் அவதாரரஹஸ்யம் தெரிந்தவன் அதே ஜந்மத்தில் முக்தியடைகின்றானென்று காட்டியது. இதற்கு முக்ய காரணம், இவை தர்ஶிக்கவும், கேட்கவும், த்யாநிக்கவும், ஸுகரமாக நின்று, ' யதாக்நிருத்ததஶிக: கக்ஷம் தஹதி ஸாநில: । ததா சித்தஸ்திதோ விஷ்ணுர் யோகிநாம் ஸர்வகில்பிஷம் ॥ ' "கொழுந்துவிட்டெரியும் அக்நி வாயுவுடன் கூடி யுலர்ந்த புல்லைச் சாம்பலாக்கும் வண்ணம், ஹ்ருதயத்தில் த்யாநத்தால் நிலைத்த விஷ்ணுவானவர் யோகிகளுடைய ஸர்வபாபங்களையும் நஶிப்பிக்கின்றார்" எனும் விஷ்ணுபுராண ஶ்லோகத்தில் சொன்னபடியே, அடியார்க்கோர் ஶ்ரமமின்றிக்கே, அவர் பாபங்களைப் போக்குகின்றன. பாபம் நஶித்தால் மோக்ஷம் கரஸ்தம்.

பத்ராதிபர்.

ஶ்ரீ:

ஶ்ரியை நம:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

தயா ஸஹாஸீநமநந்தபோகிநி
ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி ।
பணாமணிவ்ராத மயூகமண்டல-
ப்ரகாஶமாநோதர திவ்யதாமநி ॥ 39.

நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோ-
பதாந வர்ஷாதப வாரணாதிபி: ।
ஶரீரபேதைஸ் தவ ஶேஷதாம் கதை-
ர்யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ॥ 40.

39-40. கீழ் ஶ்லோகத்வயத்தாலே பிராட்டியினுடைய சேர்த்தியை அநுபவித்துவிட்டு, இப்பொழுது, 'அப்படி எழுந்தருளியிருப்பது திருவநந்தாழ்வான் மடியிலே' என்று திருவநந்தாழ்வானுடைய வைபவத்தையும் அவனுடைய வ்ருத்திவிஶேஷங்களையும் இந்த இரண்டு ஶ்லோகங்களினால் அநுபவிக்கிறார்.

இந்த இரண்டு ஶ்லோகங்களும் ஒரே அந்வயம். 'ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி பணாமணிவ்ராத மயூகமண்டல ப்ரகாஶமாநோதர திவ்யதாமநி, நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாந வர்ஷாதப வாரணாதிபி யதோசிதம் தவ ஶேஷதாம் கதை: ஶரீரபேதை: ஶேஷ இதி ஜநை: ஈரிதே அநந்தபோகிநி தயா ஸஹாஸீநம்,



[ப்ரக்ருஷ்டங்களான ஜ்ஞாநபலங்களுக்கு ஆஶ்ரயமாயும், தன்னுடைய பணாரத்ந ஸமூஹங்களுடைய ரஶ்மி மண்டலங்களினாலே ப்ரகாஶியாநிற்கும் அந்த: ப்ரதேஶத்தையுடைய திவ்ய வைகுண்ட விமாநத்தை யுடையதாயும், திருமாளிகையாகவும் படுக்கையாகவும் ஸிம்ஹாஸந மாகவும் மரவடியாகவும் திருப்பரியட்டமாகவும் புல்குமணையாகவும் குடையாகவும் தத்தத்காலத்திற்குத் தகுந்தபடி உனக்கே ப்ரயோஜநமாகும்படி பல ஶரீரங்களை எடுத்துக்கொண்டு அதுகாரணமாக ஸகல ஜநங்களினாலும் 'ஶேஷன்' என்று சொல்லப்படுகிறதாயுமுள்ள திருவநந்தாழ்வானுடைய திருமேனியில் பிராட்டியோடே எழுந்தருளியிருக்கிற], 'த்வாம்' [உன்னை] என்னும் பின்வரும் பதம் முடிக்குஞ் சொல்லாம்.

"வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ।
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ ॥"

[வைகுண்டமாகிற பரலோகத்தில், ஜகத்பதியாயும் அசிந்த்யமான ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையவனுமுள்ள விஷ்ணு, ஸ்ரீயுடனும் ஆப்தர்களான அநுசரர்களுடனும் எழுந்தருளியிருக்கிறான்] என்று புராணங்களில் ப்ரஸித்தமாயிருக்கும் ஸ்திதிதான் இவ்விடத்தில் அநுஸந்திக்கப்படுகின்றது.

ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி - ப்ரக்ருஷ்டங்களான ஜ்ஞாந பலங்களுக்கு முக்ய ஆஶ்ரயமாக இருக்கும். ஜ்ஞாநமும் பலமும் திருவநந்தாழ்வானுக்கு அஸாதாரணங்களான குணங்கள் என்று சொன்னதாயிற்று. இந்து வித ஜ்யோதிஸ் ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகனான படியால் ஜ்ஞாந ப்ரகர்ஷமும், ஸர்வத்திற்கும் ஆதாரமாயுள்ள பகவத் விக்ரஹத்தைத் தரிக்கிறபடியால் பலப்ரகர்ஷமும் இவனுக்கு அநுகுணங்களான குணங்களே. தவிரவும், ஸங்கர்ஷணனென்று பெயருள்ள வ்யூஹ பேதத்தின் அபிமாந விஶேஷம் இவனுக்குண்டு; அதனால், ஸங்கர்ஷணனுக்கு இயற்கையாயுள்ள இந்த குணங்கள் இவனுக்கும் அநு

குணங்கள் என்று சொல்லக்கூடும். அபரிச்சிந்நங்களான கல்யாண குணங்களையுடைய பகவான், ஆஸ்ரித வாத்ஸல்யமடியாக, வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த மூர்த்திகளாகத் தன்னை வ்யூஹித்து, ஆஸ்ரயிக்கும் ஜநங்களுடைய திறமைக்கு அநுகுணமாகத் தனது குணங்களை ஆவிர்ப்பாவஞ்செய்துகொண்டு ஜகத்தை ஸம்ரக்ஷித்து வருகிறான் என்று நம்முடைய கொள்கை. அவைகளுள் ஸங்கர்ஷணன் என்று சொல்லப்படும் மூர்த்திக்கு ஜ்ஞாநம் பலம் இந்த இரண்டு குணங்களும் மேற்கொண்டு நிற்கின்றனவாம்.

"ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸ பவாந் முக்த
போக்யோ பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணஸ் த்வம் ஹரஸி வித
நுஷே ஶாஸ்த்ரம் ஐஶ்வர்ய வீர்யாத் - ப்ரத்யும்ந: ஸர்க தர்மௌ
நயஸி ச பகவந் ஶக்திதேஜோऽநிருத்தோ பிப்ராண: பாஸி
தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ"

என்னும் ஸ்ரீபட்டருடைய ஶ்லோகம் இந்தக் கொள்கையை விவரிக்கின்றது. அப்படிப்பட்ட ஸங்கர்ஷணனுடைய அம்ஶமாகிறபடியால் இந்தத் திருவநந்தாழ்வான், 'ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி' என்று சொல்லப்படுகிறான். தவிரவும்,' பகவானும் பிராட்டியுமாகப் பரிமாறும்போது, 'இந்த அநந்தன் ஒருத்தனுச்சுதே! நம்முடைய துகைப்பை எப்படி ஸஹிப்பன்?' என்று அவனுக்குக் கூசவேண்டாதே, துகைத்துப் பரிமாறலாம்படியான தாரண ஸாமர்த்யத்துக்கு ஆஸ்ரயமாயிருக்குமவன் என்பதை இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் பல ப்ரகர்ஷம் ஸூசிப்பிக்கின்றது என்று ஸ்ரீ பெரியவாச்சாம் பிள்ளையுடைய ஹ்ருதயங்கமமான திருவுள்ளம்.

பணாமணிவ்ராதமயூகமண்டலப்ரகாஶமாநோதர திவ்யதாமநி - 'திவ்யதாமநி' என்னும் சொல், வைகுண்டமென்னும் பகவத் விமாநத்தைச் சொல்லுகிறது. அந்த விமாநத்தின்



ள்ப்ரதேஶம் முழுவதும் இந்தத் திருவநந்தாழ்வானுடைய படங்களிலுள்ள ரத்ந ஸமூஹங்களின் கிரண மண்டலங்களினால் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறதாம். "மணிவிளக்காம்" என்கிறபடியே அந்தத் திவ்யவிமாநத்திற்கு இது ஒரு மங்களதீபமாயிற்று என்பது தாத்பர்யம். பணாமணி வ்ராத மயூக மண்டலங்களினால் ப்ரகாஶியா நிற்கும் உதரத்தையுடைய திவ்யவைகுண்டத்தையுடையவன் என்று வாக்யார்த்தம்.

நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாந
வர்ஷாதபவாரணாதிபி: யதோசிதம் தவ ஶேஷதாம்
கதை: ஶரீரபேதை: ஶேஷ இதி ஜநைரீர்யதே -

எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்குத் தகுந்தபடி, வாஸஸ்தலத்தை இச்சிக்கும் காலத்தில் வாஸஸ்தலமாகவும், யோகநித்ராவஸ்தையில் படுக்கையாகவும், இருந்தால் ஸிம்ஹாஸநமாகவும், நின்றால் மரவடியாகவும், பும்ஸ்த்வத்தை ஆவிஷ்கரிக்கும்பொழுது திருப்பரியட்டமாகவும், ஶயநகாலங்களில் புல்குமணையாகவும், சென்றால் வர்ஷம் ஆதபம் இவைகளைத் தகையும் குடையாகவும், இவ்விதமாக ஶரீரபேதங்களைத் திருவநந்தாழ்வான் எடுத்துக்கொள்ளுகிறான் என்பது ஶாஸ்த்ர ப்ரஸித்தம். இந்த ஶரீரபேதங்களெல்லாம் பகவத்கைங்கர்யத்திற்கே உபயோகப்படுகின்றபடியால், அவை பகவானைக்குறித்து ஶேஷத்தன்மையை அடைந்திருக்கின்றன என்று சொல்லப்படுகின்றன. அது காரணமாகவே பாமர பண்டித ஸாமாந்யமாக ஸர்வ ஜநங்களினாலும் 'இவன் ஶேஷன்' என்று வ்யவஹரிக்கப்படுகிறான் என்பது கருத்து. பகவத் அடிமையில் ருசியுடையார்க்கெல்லாம் இந்த ஆதிஶேஷன் என்னும் ஆழ்வான் உதாஹரணமாகிறானன்றோ? ஆகையினால், அவனுடைய வ்ருத்தி விஶேஷங்களை வாயினாற் சொல்லியாவது, தமக்கு அந்த அடிமையில் உண்டாகியிருக்கும் த்வரையை ஒருவாறு ஸமாதாநம் செய்துகொள்வோம் என்னும் திருவுள்ளத்துடன் ஸ்ரீ ஆளவந்தார் 'நிவாஸ ஶய்யா' இத்யாதியாகப் பரக்க அநுஸந்திக்க ஆரம்பித்தது போலத்தோன்றுகிறது.

" அந்நம் போஜ்யம் மநுஷ்யாணாம் அம்ருதம் ச திவௌகஸாம் |
ஶ்வாதேர் விட்த்ருணமாம்ஸாத்யா: ஸந்தோ தாஸ்யைகஜீவநா:॥"

[மநுஷ்யர்களுக்கு அந்நம், தேவதைகளுக்கு அம்ருதம், நாய் ம்ருகம் இவைகளுக்கு அஶுத்த பதார்த்தங்கள் புல், இவை முதலியவைகளும் போஜ்யமாவதுபோல, ஸத்துக்களுக்கு பகவத் பாகவத தாஸ்யமே முக்யமான புருஷார்த்தம்] என்கிறபடி, ஸாதுக்கள் தாஸ்யைக ருசிகளாகவே இருப்பார்கள்.

இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் 'ஶேஷ:' என்னும் பதத்திற்கு 'பரகத அதிஶய ஆதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ:' என்று வேதாந்திகள் அர்த்தம் சொல்லுகிறார்கள். இதன் ஸ்தூலமான தாத்பர்யமாவது... எந்த வஸ்துவினுடைய ஸ்வரூபத்தின் பரமப்ரயோஜநம் மற்றொரு வஸ்துவுக்கு ஒரு அதிஶயத்தை விளைவிக்கிறதாகவே இருக்கிறதோ, அது மற்றொரு வஸ்துவைக்குறித்து ஶேஷன் என்று சொல்லப்படுகிறது. திருவநந்தாழ்வானுடைய ஸ்வரூபம் முழுவதும் பரமபுருஷனுடைய அதிஶயத்தின்பொருட்டே ப்ரயோஜநப்படுகின்றபடியால், அவன் பரமபுருஷனைக்குறித்து ஶேஷன் ஆகிறான் என்பதில் ஆக்ஷேபமேயில்லை. ஶேஷனைத் தாஸனென்றும், ஶேஷியை ஸ்வாமியென்றும் சொல்லக்கூடும்; ஆனால், சேதநவிஷயத்தில் மாத்திரம் 'தாஸ' 'ஸ்வாமி' என்னும் பதங்கள் லோகத்தில் வ்யவஹரிக்கப்படுகின்றன; 'ஶேஷீ' என்னும் பதங்களோ அசேதந விஷயத்திலும் ப்ரவ்ருத்திக்கும். விஶேஷார்த்தத்திற்கு வேதாந்த க்ரந்தங்களைப் பார்த்துக் கொள்ளுகிறது.

'ஶயிதே' என்னும் பதம் ஸப்தமீ விபக்தியில் ஏகவசநம்; 'அநந்தபோகிநி' என்பதற்கு விஶேஷணம்.

'அநந்த போகிநி - திருவநந்தாழ்வானுடைய திருமேனியில், 'அநந்தன்' என்று திருவநந்தாழ்வானுக்குப் பெயர் வந்ததற்குக் காரணம், அவனுடைய குணங்கள் அநந்தங்களாய் (அதாவது - எல்லை இல்லாதவைகளாய்) இருப்பதே.



தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜோ
யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய: |
உபஸ்திதம் தேந புரோ கருத்மதா
த்வதங்க்ரிஸம்மர்தகிணாங்கஶோபிநா ॥ 41.

" கந்தர்வாப்ஸரஸஸ்ஸித்தா: ஸகிந்நர மஹோரகா: |
நாந்தம் குணாநாம் கச்சந்தி தேநாநந்தோऽயமவ்யய:॥"

[கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், ஸித்தர்கள், கிந்நரர்கள் நாகங்கள் (இன்னும் மற்றவர்கள்) ஒருவரும் எவனுடைய குணங்களின் எல்லையை அறியவில்லையோ, அவன் அநந்தன்] என்கிறபடி குணாநந்த்யமே இந்தப் பெயருக்கு ஹேது. ஈஶ்வரன் ரக்ஷணத்தில் அஸங்க்யாத குணனாகிறாப்போல, இவன் கைங்கர்யத்தில் அஸங்க்யாதகுணன் ஆகிறான். என்பது கருத்து.

தயா ஸஹாஸீநம் - (இப்படிப்பட்ட ஶரீரத்தின்மீது,) கீழ் ஶ்லோகங்களிற் சொல்லப்பட்டுள்ள லக்ஷ்மியுடன் எழுந்தருளியிருக்கும் பூமி முதலிய மற்றைப் பத்நிகள் இருக்கையிலும் லக்ஷ்மி ப்ரதாநையானதனால், அவளை மட்டில் இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்தது.

41. திருவநந்தாழ்வானைப்போல அந்தந்தக் காலத்திற்குத் தகுந்தபடி கைங்கர்யார்த்தமாகவே பலபல ரூபபேதங்களை எடுத்துக்கொண்டு பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்து வரும் பெரியதிருவடியின் சேர்த்தியை இந்த ஶ்லோகத்தினால் அநுஸந்திக்கிறார்.

த்ரயீமயோ யஸ்தே தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜோ விதாநம் வ்யஜநம் (ச பவதி), தேந த்வதங்க்ரிஸம்மர்தகிணாங்க ஶோபிநா கருத்மதா புர: உபஸ்திதம். [வேதங்களை அவயவங்களாக உடைத்தாயிருக்கும் எவன், உனக்கு தாஸனாகவும் ஸகாவாகவும் வாஹநமாகவும் கொடியாகவும் ஆதப நிவாரணமாயிருக்கும் விதாநமாகவும் விசிறியாகவும் ஆகிறானோ,

அப்படிப்பட்டவும், உன்னுடைய திருவடிகளுடைய நெருக்குவதால் ஜநித்திருக்கும் தழும்பினால் விளங்கிக் கொண்டிருக்கிறவுமான கருடாழ்வாரால் ஸர்வதா முன்பே ஸங்கிஹிதனாயுள்ள]. இதற்கும், மேல்வரும் 'ஸவஹம்' என்னும் பதம் முடிக்கும் சொல்.

த்ரயீமய: - வேதங்களை அவயவங்களாகவுடையவன்.

"ஸுபர்ணோऽஸி கருத்மாந் த்ரிவ்ருத்தே ஶிரோ காயத்ரம் சக்ஷு:"

என்றும்,

"தஸ்ய காயத்ரீ ஜகதீ ச பக்ஷாவாஸ்தாம்............"

என்றும் ஶ்ருதிகளில், கருடாழ்வான் ஸர்வ வேத மய விக்ரஹனாகச் சொல்லப்பட்டிருக்கிறான். ஈஶ்வரன் வேத ப்ரதிபாத்யன் போல இவன் வேத ஶரீரன் என்பது கருத்து.

தாஸ: - கிங்கரன். கீழ் விவரித்திருப்பதைப் பார்த்துக் கொள்ளவும். கீழ்ச்சொல்லப்பட்டுள்ள ஶேஷத்வத்தில் இந்தத் தாஸத்வம் ஒருவிஶேஷித்த அம்ஶம். தன்னுடைய வ்யாபாரங்களடங்க ஈஶ்வரனுக்கு அதிஶயத்தை விளைவிக்கத் தக்கவை என்பதைத்தான் இதுவும் குறிக்கின்றது.

ஸகா - ஸ்நேஹிதன். அதாவது - ஸமாநமான சித்தவ்ருத்தியை யுடையவன்.

"ஸமாந வித்யுத்த்விஷம் ஸவிஷ்வக்ஸேந ஶிஷ்டகம்"

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஜகத் வ்யாபாரங்களெல்லாவற்றிலும் ஈஶ்வரன் தன்னோடு கலந்து பரிமாறும்படியான பெருமையைப் பெற்றவன் என்பது தாத்பர்யம்.

வாஹநம் - கமநாவஸ்தைகளில் ஈஶ்வரனுக்குக் கருடாழ்வான் வாஹநமாகிறான் என்பது ஸுப்ரஸித்தம். ஆஶ்ரிதர்களுக்கு ஆபத்துக்கள் நேர்ந்தால் எவ்வித தாமஸமுமின்றிக்கே அவர்களுடைய ஸம்ரக்ஷணார்த்தம் ஈஶ்வரனைக்கொண்டு வந்து சேர்ப்பதான தொழிலையுடையவன் என்பது கருத்து. கஜேந்த்ராழ்வான் முதலியவர்களுடைய ஸம்ரக்ஷணத்தில்



"ஶ்ராஹஸ்ரஸ்ய மஜ்ஜம்ஜந்ய ப்ரபவதி ஸாஹஸம் தார்க்ஷ்யம் ஸா ப்ரஹ்ய யாவஸு"

என்கிறபடி இந்தக் கைங்கர்யத்தைக் கண்டுகொள்ளலாம்.

ஆஸநம் - ஸிம்ஹாஸநம். இது ஈஶ்வரன் நிர்வ்யாபாரனாக இருக்கும்பொழுது. இந்த அவஸரத்தில் வேறு ஒரு கைங்கர்யமும் உபபந்நமாகாததலால், இப்படி யிருப்பதுதான் தனது மேன்மைக்கு ஸத்ருஶம் என்று திருவுள்ளம்பற்றி இப்படி இருக்கிறான் என்பது கருத்து.

த்வஜ: - கொடி. 'கருடத்வஜன்' என்று பகவானுக்கு ப்ரஸித்தியன்றோ? பகவானுடைய வரவை சாதக பக்ஷிபோல எதிர்பார்த்து நிற்கும் ஆஶ்ரிதர்களுக்கு, ஈஶ்வரன் கிட்டுவதற்கு முன்னமேயே 'ஈஶ்வரன் எழுந்தருளுகிறான்' என்பதைத் தூரத்திலேயே ப்ரகாஶிப்பிக்கும் ஸ்வரூபத்தை யுடையவன் என்பது கருத்து.

"பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல்"

"புள்ளூர் கொடியாய்"

இத்யாதிகளில் உண்டாகியிருக்கும் ப்ரஸித்தி இங்கு சொல்லப்படுகின்றது.

விதாநம் - ஆதப நிவாரணமாயிருக்கை.

"மேலாப்பின் கீழ்வருவான்"

என்றும்.

“க்ருதச்சாயம் ஸமீரண பக்ஷவிக்ஷோபணஸம்பவம்”

என்றும் சொல்லியிருக்கிறபடி ஈஶ்வரனுக்கு இவன் ஆதபநிவாரணமாகவும் ஆகிறான் என்று தெரியவருகிறது.

வ்யஜநம் - விசிறி. தன்னை மேற்கொண்டு போம்போது, சாமரங்கள்போலத் தனது சிறகுகளினால் ஈஶ்வரனுக்கு ஒரு ஆஶ்வாஸத்தை ஸம்பாதித்துக்கொடுக்கிறான் என்பது தாத்பர்யம்.

ஸ்வபாதஸம்ஸ்பர்ஶ கிணாங்க ஶோபிநா - ஈஶ்வரனுக்கு வாஹநமாயிருந்து, அப்படி இருக்கும் காலத்தில் அவனுடைய திருவடிகளினால் அழுத்தப்பட்டு அதனால் ஒரு தழும்பைப் பெற்றிருக்கிறான் கருடாழ்வான் என்பது இதனால் ஸூசிதமாகின்றது. தாஸ்யைக ஜீவநனாக இருக்கும் இந்த ஸத்துக்கு இந்தத் தாஸ்ய சிஹ்நம் புகழ்ச்சியைக் கொடுக்குமொரு லக்ஷணமாகுமன்றோ? “ஜ்யாகிண கர்கஶை:” என்று ஈஶ்வரனுடைய திருக்கைகளுக்கு ஒரு லக்ஷணம் கீழ்சொல்லப்பட்டிருப்பதுபோல, இவ்விடத்திற் சொல்லப்படும் இந்த ஸம்மர்த்த கிணமும், கர்மபரவஶர்களாயுள்ள மற்றை ஜீவகோடிகளைப்போலத் தாம் ஆஶ்ரயிக்குங் காலத்தில் தான் ஸம்பவிக்கும் என்று அறியவேண்டும். அஜஹத் ஸ்வ ஸ்வபாவனாக அவதரிக்குமெல்லார்க்கும், அவதார தசையில் ஸம்பவிப்பதை மற்றைத் தசையில் ஆரோபிப்பது அநுபபந்நமன்று.

ஸாநந்த உபஸேவிதம் - ஈஶ்வரனுடைய திருமுன்பே ஆபிமுக்யத்துடன் இவன் இப்படி ஸேவித்து வருகிறான் என்று கருத்து. ஈஶ்வரனுக்கு இந்தக் கருடாழ்வான் ஒரு நிலைக்கண்ணாடியாக ஆகினான் என்பது த்வநிக்கின்றது.

எஸ். வாஸுதேவன்.

# அஹோபில மாஹாத்ம்யம்.

## நான்காவது அத்யாயம்.

ருஷிகள்:—விபுவே! பவநாசிநீ தீர்த்தத்தின் மஹிமையும், பலமும், அவ்விடத்திலுள்ள தீர்த்தங்களின் வைபவமும், தனித்தனியே சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஸௌந்தர்யம் ஒருபொழுதும் அநுபவிக்கப்பட்டதுமில்லை; கேட்கப்பட்டதுமில்லை; பார்க்கப்பட்டதுமில்லை; ஓரிடத்திலுமில்லை. ஸம்ஸாரத்தில் பற்றுள்ள மநஸ்ஸையுடைய நராதமர்கள் இந்தத்தீர்த்தத்தின் பெருமையை அறியார். அந்தோ! கொடுமை. மிகவும் கஷ்டம்! எந்த மனிதன் பரிசுத்தமான பவநாசிநியைப் பார்க்கவில்லையோ, அதில் ஸ்நாநம் செய்யவில்லையோ, அந்தத்துராத்மாவினுடைய ஜந்மம் வ்ருதா; வ்ருதா; வ்ருதாவானது. தவம் வேண்டாம்; தீர்த்த யாத்ரை வேண்டாம்; சாஸ்த்ராப்யாஸம் வேண்டாம்; பல விதமான யாகங்கள் வேண்டாம்; எவன் பவநாசிநீயில் ஸ்நாநம் செய்கிறானோ, அவன் அப்பொழுதே பகவானை, அதன் கரையிலேயே தர்சிக்கிறான். எதனாலே பவநாசிநியின் வைபவம் மனத்தில் வைக்கப்பட்டதோ, அதனாலேயே நாங்கள் உலகத்தில் பூஜிக்கத் தக்கவர்கள்; புவியில் மிகவும் தந்யர்கள். பிரமனே! பகவானாகிய பிரமபுத்ரனே! நாங்கள் க்ருதார்த்தர்களானோம். இப்பொழுது ஒன்பது நரஸிம்ஹர்களுடைய திருநாமங்களையும், இடங்களையும் தனித்தனியே கேட்க விரும்புகிறோம். அதைக்கேட்க ஸந்தோஷமும் உண்டாகிறது. பயமில்லாமலிருக்கிறோம். உண்மையாகச் சொல்லவேணும்.

ஸ்ரீ நாரதர்:—எல்லா ஸ்தலங்களிலும், கஜ தீர்த்தத்தின் கரை மிக்க சுபமானது. அவ்விடத்தில் ந்ருஸிம்ஹன் சத்ருக்களைப் பிளந்துகொண்டே ப்ரகாசிக்கிறார். சக்ராஸநத்தில் எழுந்தருளியிருப்பவராய், சக்ரம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவராய், ஸம்ஸாரத்தில் உழன்று கிடப்பவருடைய வக்ரமான மநஸ்ஸை நாசஞ்செய்துகொண்டே ஸடைகளுடைய கூட்டத்தோடு கூடிய

வராய், அஸுர ஸமூஹத்தைக் கொன்றுகொண்டு, கோரைப் பற்களினால் பயங்கரமான திருமுகத்தோடு கூடியவராய், பயத்தையும் பயப்படுத்துகின்றவராய், கூரிய வஜ்ராயுதம் போல் கடினமான நகங்களினாலே அஸுரர்களைக் கலக்கியவராய், நெற்றிக் கண்ணில் உண்டான கொடிய நெருப்பினால் அளவிடமுடியாத ஆகாரத்தோடு மூன்று லோகங்களையும் எரிப்பவர்போலும், பக்தர்களிடத்தில் க்ருபையினால் எப்பொழுதும் பாவிக்கப்பட்ட அம்ருதம் போன்ற பார்வையுடன் கூடினவராய், எதிரில் கைகுவித்து நிற்கின்ற, ப்ரீதியினால் பூரிக்கப்பட்ட ஸத்பக்தனாகிய ப்ரஹ்லாதனை க்ருபையுடனே அநுக்ரஹித்துக்கொண்டு மிகவும் ஸந்தோஷத்தோடு எழுந்தருளியிருக்கிறார். இந்த ஸ்தலமே ப்ரஹ்மாதிகளாலே உபாஸிக்கப்பட்ட முதன்மையான ஸ்தலம். வேறு அநேகம் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் ஸ்தலங்கள் இருக்கின்றன. ந்ருஸிம்ஹன் இல்லாத ஸ்தலம் உண்டானதுமில்லை. உண்டாகப்போகிறதுமில்லை. புவனங்களிலும், காற்றிலும், வார்த்தையிலும், நெருப்பிலும், அம்ருதத்திலும், ஆகாயத்தினிடத்திலும், மற்ற எல்லாவற்றிலும் ந்ருஸிம்ஹன் இருக்கிறார். தேஹமும் ந்ருஸிம்ஹன். பொருள்களும் ந்ருஸிம்ஹன். நிழலும் ந்ருஸிம்ஹன். யாகங்களில் செய்யப்படுகின்ற ஸவநங்களும் ந்ருஸிம்ஹன். வநங்களும் ந்ருஸிம்ஹன். ஸ்திரீகளும் ந்ருஸிம்ஹமன். எது இருக்கின்றதோ, எது இல்லாததோ, அவையெல்லாம் ந்ருஸிம்ஹன். தேவனாகிய ந்ருஸிம்ஹனை விட மற்ற வஸ்துக்களைத் தெரிந்துகொண்ட மனிதன், இரண்டு கால்களோடு பிறந்திருக்கிற பசுவுக்கு ஒப்பாவன். அதை விடப் பிறக்காமலிருப்பதே உத்தமம். மரித்தலும் உயர்ந்ததாகும். எந்தக் காரணத்தினால் அவன் எல்லாவிடத்திலும் நிறைந்திருக்கின்ற ந்ருஸிம்ஹனைத் தெரிந்துகொள்ளவில்லையோ; புத்திமான்களும், மூடபுத்தியையுடையவர்களாய் ந்ருஸிம்ஹனை அறிந்துகொள்வதில்லை. தேஹம், ஆத்மா, இவைகளைப்பற்றிய பகுத்தறிவில்லாத துஷ்டர்களைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. அப்படிப்பட்ட ந்ருஸிம்மர்களைப்பற்றி க்ரமமாகச் சொல்லுகிறேன். ருஷிகளே! நீங்கள் எல்லாரும் கேளுங்கள்.

அநாதியாகிய பகவான் வேதாசலத்தின் பின்புறத்திலிருந்துகொண்டு, வராஹத்தினுடைய ரூபத்தையடைந்து, பத்நியாகிய



பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறார். அந்த மலையின் உந்நதமான கொடிமுடியில் லக்ஷ்மியோடு கூடியவராய் ந்ருஸிம்ஹன் தெற்கு முகமாக ப்ரகாசிக்கிறார். அந்த இடத்தில் மிகவும் உயர்ந்த நதியொன்று, 'கநகா' என்ற பெயருடையதாய், தனது பெருக்கினால் பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கிக்கொண்டு எப்பொழுதும் ப்ரவஹிக்கிறது. அவ்விடத்தில் ந்ருஸிம்ஹன், முன்பு லக்ஷ்மிக்கு ப்ராதாந்யத்தை ஏற்படுத்தினார். அது முதல், ஜநங்கள் அதை லக்ஷ்மியின் ஸ்தலமாகச் சொன்னார்கள்.

ருஷிகள்:—பகவானே! முன்பு கருடாசலத்தின் வைபவமானது சொல்லப்பட்டது. அதற்கே, நடுவில், வேதாசலம் என்கிற ப்ரஸித்தி எப்படி யுண்டாயிற்று? ப்ரபுவே! இது பெயரில் வித்யாஸமா? அல்லது வஸ்துவிலேயே பேதமா? தபோவான்களுக்குள் ச்ரேஷ்டனாகிய முநிபுங்கவனே! உண்மையைச் சொல்லக்கடவீர்.

ஸ்ரீநாரதர்:—மலைக்குள் உத்தமமான இந்தப் பர்வதம் கருடாசலம் என்ற பெயரையுடையது. வேதாசலம் என்னும் பெயருடைய இந்தப் பர்வதம் அதற்கு ஓர் அங்கமாக இருக்கிறது. முன்பு க்ருதயுகத்தில், துஷ்ட புத்தியையுடைய க்ரூரனான ஸோமகன் என்பவன், தாமரையில் உதித்த நான்முகனிடத்திலிருந்து வேதங்களைத் திருடிக்கொண்டான். பிறகு, ப்ரஹ்மாவும் கலங்கிவிட்டார். சராசரங்களோடு கூடிய மூன்று லோகங்களும் கலங்கின. வர்ணாச்ரம தர்மங்களுடைய ஆசாரமும் நடக்கவில்லை. புருஷோத்தமனாகிய பகவான், இவையெல்லாவற்றையும் பார்த்து, ஸோமகன் என்கிற ராக்ஷஸனையும் கொன்று, வேதங்களையும் திருப்பிக்கொண்டு, துக்கித்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மாவுக்குப் பகவான் மறுபடியும் கொடுத்தார். அப்பொழுது, எல்லா வேதங்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பின்வருமாறு யோசித்தன:—"இந்த ப்ரஹ்மா வரங்கொடுப்பதற்கே ஒருபோதும் ஸமர்த்தரல்லர். ஆகையினால் நாம் தவஞ்செய்வோம். எல்லாரையும் ஜயித்தவர்களாகக்கடவோம். இது நிச்சயம். அஸுரர்களாலாவது, தேவதைகளாலாவது, மநஸ்ஸை ஜயிக்காத மநுஷ்யர்களாலாவது, வேறே சாஸ்த்ரங்களாலாவது,

(இன்னும் வரும்.)

# ஸ்ரீ அழகியசிங்கர்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் சென்ற ஆறுஸம்வத்ஸரமாக வீற்றிருந்த ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ பராங்குஶமஹாதேசிகன் வைகாசி மாஸம் 7-ம் தேதி வியாழக்கிழமைதினம் நித்ய விபூதியை அலங்கரித்தார் எனக்கேழ்விப்பட்டோம். இந்தஸ்வாமி காலத்தில் கீழ் பிரஸ்தாபித்திருக்கும் வ்யவஹாரம் உண்டாயிற்று. இன்னும் வ்யவஹாரங்கள் உண்டாக இந்தஸ்வாமி இடம் கொடுத்தார். திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானத்துக்கு Scheme என்னும் தக்க ஏற்பாடு செங்கல்பட்டுகோர்ட்டில் ஆய்விட்டது. நமக்குத்தெரிந்தவரையில், களத்தூர்ஸ்வாமி காலத்திலும் இந்தஸ்வாமி காலத்திலும் தான் கிரந்த காலக்ஷேபங்கள் மடத்தில் முற்றிலும் இல்லாமலே இருந்தது. ஸ்வாமிகள் எந்தக் காரணத்தினுலாவது காலக்ஷேபம் ஸாதிக்க யோக்யதை இல்லாமலிருந்தால், முன் லாலாபேட்டை வஜ்ரம் ஸ்வாமி அநுஸரித்தபடி, ஸ்தானத்தை தக்கவர்களிடம் கொடுத்து விட்டு ஏகாந்திலர்களாக இருக்கக்கூடாதா? இதுஶிஷ்யர்களுடைய தௌர்பாக்யம். இனி இந்தப் பெரிய ஆஸ்தானம் இவ்வண்ணம் இராதென்று பிரதீக்ஷிக்கின்றோம்.

## ஸ்ரீ அஹோபிலமடம் உயில் கேஸ்

ஶிஷ்யஸபையின் நிர்வாஹ ஸங்கத்தார் ஏகாபிப்ப்ராயமாகச் செய்த தீர்மானத்தின்படிச் சில ஸம்ப்ரதாயஸ்தரால் நாகப்பட்டணம் ஸப்கோர்ட்டில் செய்த வ்யவஹாரமானது உபயவாதிகள் ஒப்புக்கொள்ளுதலின்படி வித்ட்ரா செய்யப்பட்டது. வாதிகள் ஸங்க்யாதீதமாயிருக்கும் ஶிஷ்யர்கள் எனப்பட்டவர்களிடம் எதிர்பார்த்தபடி ஸஹாயம் பெறவில்லை. சில ஶிஷ்யர்கள் வ்யவஹாரம் நடப்பதை அங்கீகரிக்காமல் அதன் தத்கால முடிவைப்பற்றி பரயத்நபரரானதுமன்றி, ஸ்ரீ ஸ்வாமியும் அந்தப்படியே அபிப்ராயப்பட்டார். பின்னுல் ஶிஷ்யரெனப் படுவோர் தாங்கள் கொண்டாடும் பாத்யதையை வ்யவஹார மூலமாயோ அந்யதாவோ ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு யாதொரு பிரதிபந்தகமில்லாம லிருக்கும்படியாகத் தத்கால வ்யவஹாரம் முடிவையடைந்தது.

ஸி. ராஜகோபாலன்,

காரியதர்ஶி.

# கடிதம்.

## ப்ரஹ்ம ஸூத்ர சோத்யத்துக்கு ஓர் ஸமாதாநம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ வேதாந்த தீபிகையின் சென்ற தை மாஸத்திய ஸஞ்சிகையில் ஐ. ரா. என்று கையொப்பமிட்ட ஒரு ஸ்வாமி எழுதின சோத்ய விஷயமாய் சிலவற்றை எழுதத் துணிகிறேன். அந்த ஸ்வாமி! 'தமிழ் தர்க்கம் போல் கழகழப்பாமல், சவுக்கம் தீர' ஓர் ப்ரதிவசநத்தை அபேக்ஷித்த போதிலும், பிரதிவசந ஸ்வரூபம் ஸாதுவானுல் வாசிகமான ஶிக்ஷணம் ஸுலபமாகையாலும், தமிழ்ப் பத்திரிகையில் சுத்த ஸம்ஸ்க்ருத நிர்வசநம் படிப்பவர்களுக்கு க்லேசகரமாகையாலும், மந்தமதியான அடியேனுக்குத் தோன்றியமட்டில், இந்த சோத்ய விஷயமான அதிகரணத்தின் அந்திம ஸூத்ரத்தின் அர்த்தத்தை அடியேன் அறிந்தபடி விவரிக்கிறேன்.

(1) இந்த அதிகரணத்தில் முதல் இரண்டு ஸூத்ரங்களில் பரமாத்மத்வமே ஸாத்யம். மூன்றுவது ஸூத்ரத்தில், ஜீவபேதம் ஸாயத்ம். 4-வது ஸூத்ரத்திலும் ஜீவபேதமே ஸாத்யம். 5-6-வது ஸூத்ரங்களில் '[illegible]' '[illegible]' ஆகிய இரண்டும் ஸாத்யங்கள். இந்த நிஷ்கர்ஷம் ஶ்ருதப்ரகாசிகையால் ஸித்தம். '[illegible]' என்கிற ஸூத்ரப்ரகாசிகையில், "[illegible]" என்றும், '[illegible]

[illegible]' என்றும் இருக்கிறபடியால் இது ஏற்படுகிறது.

(2) ஒரே ஸூத்ரத்துக்கு ஸாத்யத்வயமிருப்பது வாக்யபேத துஷ்டமாகாதோ என்னும் சங்கையை, 'அவிருத்த [illegible]' என்று ஶ்ருதப்ரகாசாசார்யர் தாமே பரிஹரித்திருக்கிறார்.

(3) இனி 5-6-ஸூத்ரங்களில் ஹேதுக்கள் எவை? 5-ல் 'வ்யபதேசாச்' என்று ஒரே ஹேது. இது இரண்டு ஸாத்யத்துக்கும் ஸாதகமாவது எப்படி, யென்றால், 'விஷயவாக்ய[illegible] வ்யபதேசாத், ஜீவாத்மந: தத் வ்யபதேசா[illegible]' என்று ஒரே ஹேதுபதத்தை உபய விதமாய் ஸாதகமாக்க வேண்டும். அதாவது, இந்த ஸூத்ரத்தில் ஜீவபேதமாகிய இரண்டாவது ஸாத்யத்துக்கு அந்வயப்படுத்த 'வ்யபதேசாச்' என்னும் ஹேதுவை 'வ்யபதேசாபாவாச்' என்று பரிணமம் செய்து, 'ஜீவாத்மந:' என்றும் அத்யாஹாரம் செய்யவேண்டியது அநிவார்யமாகிறது. ஜீவாத்ம வ்யபதேசாபாவம் இரண்டாவது ஸாத்யத்துக்கு நிஷ்க்ருஷ்டஹேது வென்றாகிறது. இப்படிச் செய்யாவிடில், ஹேது, உபயஸாதகமாக வழியில்லை.

(4) 6-வது ஸூத்ரத்திலும் ஸாத்யத்வயம் உத்திஷ்ட மென்று முன் சொன்னோம். இங்கே, ஹேது, (1) 'ஶ்ருதே:, கடநாத்' என்று இரண்டு ஹேதுக்களா? அப்படியானால் ஹேதுக்களுக்கு க்ரமமாகவா, யுகபத்தாகவா அந்வயம்? அல்லது (2) ஹேது ஒன்று தானோ? அது எது? என்று விமர்சிக்க வேண்டும். இரண்டு ஹேதுக்களானால், 'கடநாச' என்கிற ஹேதுக்கு இரண்டு ஸாத்யத்தோடும் ஏகாதிகரண்யம் ஏற்படா தாகையால், ஸ்ரீ ஸ்வாமி சொல்லும் அநுபபத்தி ஸித்தமே. இரண்டு ஹேதுக்கள் என்கிற பக்ஷத்தை நிர்ப்பந்தித்தால், 'கடநாச'



என்கிற ஹேதுவை, 'கடநாச' என்று பரிணமித்தே அந்வயிக்கவேண்டும். இது ஸூத்ரசைலிக்கு ஸர்வதா விரோதமல்லவென்று முன் ஸூத்ர விமர்சத்தில் சொன்னோம். ஆகிலும் இந்த யோஜனையில் [illegible]—(1) பாஷ்யாதிகளில் இந்தப் பரிணமம் ஸூசிக்கப்படாதது. அவஸ்திதியும் அநதநமும் ஏகார்த்த மாகையால் பிந்நஹேது த்வயம் ஏற்படாது. (3) விஷய வாக்யத்தில் 'அநதநம்' உபாத்தமாகவில்லை. இது மேலே வ்யக்தமாகும். ஆகையால் ஹேதுத்வய மென்னும் பக்ஷம் ஸரியல்ல.

(5) ஆகையால், இந்த ஸூத்ரத்தில் விவக்ஷிதமான ஹேது '[illegible]' என்கிற ஒன்றே என்று தோன்றுகிறது. பக்ஷம் [illegible] வாக்ய மாகையால் அதை, பரமாத்ம பரமென்றும் ஜீவபரமல்லவென்றும் ஸாதிக்க, பரமாத்ம விஷயமான [illegible]மும், ஜீவவிஷயமான அநதநமும், ஆக [illegible] அந்தந்த ஸாத்ய [illegible]யத்துக்கு ஹேதுவாகிறது. பரமாத்ம விஷய [illegible] போலே ஜீவவிஷய [illegible]மும் வாக்யத்தின் பரமாத்ம பரத்வத்தை ஸாதிக்கலாம். வாக்யம் பரமாத்ம ப்ரகரணஸ்தமான போது, '[illegible]' ஜீவவிஷயமாகையால், வ்யாபார பேதத்தாலே ஜீவபேதம் ஸாதித்ததாகிறது. இப்படியும் இது வ்யதிரேக கர்பந்தானே என்னும் சோத்யம் ஸரியல்ல. அந்வய வ்யதிரேக ரூபமாய் ஸாத்யங்களிருப்பதால், ஹேதுவிலும் வ்யதிரேகாம்சம் ஸ்புரிப்பது அநிவார்யம். முன் சொன்ன தோஷம், [illegible] வ்ருத்தி யல்லவே யென்று; இப்பொழுது சொல்வது ஜீவாத்ம விஷயமான [illegible] வாக்யநிஷ்டமாயே இருந்துகொண்டு முக்யாம்சத்தில் வாக்யத்துக்கு ஜீவபரத்வத்தை நிஷேதிப்பதால், ஸமஞ்ஜஸமான ஹேது தானென்று ஏற்படுகிறது. இப்படி பக்ஷஸாத்ய ஹேதுக்களின் ஸமந்வயம் உசிதமானால் பாரிபாஷிகமான சப்தங்களைக்கொண்டு சேர்படுத்துவது தார்க்கிகர்களுக்கு ப்ரமமாகாது.

(6) அபிதாநமே ஸூத்ர தாத்பர்யமான ஹேது. கேவலம் ஸ்தித்யதநங்களல்ல. அதனுல் தான் 'ஆநந்தாத்' என்கிற பரிணமம் அயுக்தம். விஷய வாக்யத்தில் 'ஆநந்தோ3 ந ஸ்யாத் ஆகாஶீத்' என்கிற அம்சம் ஸ்ருதி சப்தத்தால் நிர்த்தேசிக்கப்பட்டது. 'ஸ்பூ2ர்த்தி' என்கிற அம்சத்தை நிர்த்தேசிக்க, 'ஆநந்த' பதம் ஸ்வரஸமேயொழிய, 'ஆநந்த' பதம் வ்யுத்பத்திக்கு உபகாரமாகாது.

(7) முதல் ஸூத்ரத்தில் 'ஸமந்வயாத்' என்னும் போதும் 'ஸம்யக3ந்வயாத்' என்றே அர்த்தமானபடியால் ஹேது, ஸம்யக3ந்வயநம்தான். அப்படியே இந்த ஸூத்ரத்திலும் அபிதாந சப்தாத்யாஹாரம் ஸூத்ரசைலிக்கு அத்யந்தாநுகுணம். இதை ஸூத்ரங்களில் 'வ்யபதே3ஶாத்' 'உபதே3ஶாத்' 'ஸமாக்2யாநாத்' 'உக்தே:' என்கிற பதங்களால் அந்தந்த விடங்களில் காணலாம். 'ஶ்ருதித்வேந ஸம்யக3ந்வயாத்' என்று ஸூத்ரத்தை அர்த்தம் செய்தாலும் தாத்பர்யம் அதே.

(8) ஹேது ஒன்றுதானென்று ச்ருதப்ரகாசிகாவதாரிகா வாக்யத்தாலும் ஏற்படுகிறது, அதாவது 'ஆநந்த3வ்யாப்த்யர்த2ம் ஹேத்வர்த்த2மாஹ' என்று ஶ்ருதத்வேந ஸூத்ராவதாரிகை. 'ஹேத்வந்தரமாஹ' என்றில்லை. ஆகையால் இந்த அர்த்தம் ப்ரகாசிகாநுகுணமென்றே சொல்லவேண்டும்.

சாஸ்த்ரீயமான பரிஷ்காரத்தில் அஸமர்த்தனை அடியேன் இந்த விஷயத்தில் ப்ரத்யுத்தரமெனக் கருதி எழுதினதை வித்வாங்கள் க்ஷமிக்கவேணும்.

மயிலாப்பூர். டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்3ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ஸ்ரீ சுக்ல ௵ வைகாசி ௴ [ஸஞ்சிகை 4.

த்ரிபு4வநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌ3ரவராம்ப3ரம்
த3தா4நே - வபுரலககுலாவ்ருதாநநாப்3ஜம் விஜயஸகே2
ரதிரஸ்து மேऽநவத்3யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**வைசாக மாஸம் புத்தர்.**

இந்த மாஸம் விசேஷமாக ஆஸ்திகரால் ஸ்மரிக்கத்தக்கது. அந்யர்க்கும் இது சித்தசுத்தி ஹேதுவாகின்றது. இந்த மாதம் பௌர்ணமிதினம் புத்தருடைய ஜநந காலமென்பர். உலகின் கண் உத்பந்நரான மர்த்யர்க்குள் புத்தர் ஓர் மஹாத்மாவென்பதை யாவரும் அப்யுபகமம் செய்யலாம். ஸர்வபூதங்களினிடமும் அவரைக்காட்டிலும் ஸுஹ்ருத்தமர் இருந்திலர். ஆர்ய தர்மங்கள் அவருடைய சரித்ரத்தில் மிகவும் ப்ரகாசித்தன. அவர் ஜந்மத்தால் ஆர்யரே. அவர் கற்ற வித்யைகள் ஆர்யவித்யைகளே. ஆனுலும் அவர் நாஸ்திகவாதங்களை அப்யுகமம் செய்தனர். அஹிம்ஸையை ஸர்வப்ரகாரத்தாலும் கொண்டாடினுர்; ஆதலால் வேதங்களால் விஹிதங்களான அவஸரங்களிலும் அதை அவர் ஸஹிக்கவில்லை; ஆதலால் வேதங்களில் அவர் ப்ராமாணத்வ புத்தியை த்யாகம் செய்தனர். அக்காலத்திலும், இக்காலத்திலும் லோகத்

தில் ஜநங்களில் பெரும்பாலோர் துக்கத்தையே மிகுதியாக அநுபவிக்கின்றனர். ஸர்வஜீவன்களும் ஒன்றை மற்றொன்று ஆகாரமாய்ப் புசிக்கின்றன. அவை யாவும் தம் நிலைமையில் க்ரௌர்ய பாவத்தையே ப்ராயேண காட்டுகின்றன. தநவந்தனை ஒருவன் ஸுகாநுபவம்செய்ய அதன் இன்மையால் வருந்துகின்றவர் பலர். ஶ்ருங்கார ரஸமறிந்த ஒருவன், "மாசறுபொன்னே வலம்புரி முத்தே, காசறுவிரையே கரும்பே தேனே, அரும்பெறற்பாவாய் ஆருயிர்மருந்தே, பெருங்குடி வணிகன் பெருமடமகளே, மலையிடைப்பிறவா மணியே என்கோ, அலையிடைப்பிறவா அமுதே என்கோ, யாழிற்பிறவா இசையே என்கோ, தாழிருங் கூந்தல் தையால் நின்னை", என்று கொண்டு, தன்னுளங்கொண்ட பெண் மணியோடு இல்லறம் நடத்த, அநுரூபமான மனைவியை அடைந்தும் அடையாமலும் வருந்திப் பிழைப்பவர் ஆயிரக்கணக்கில் நேர்வர். வ்யாதியால் வருந்திப் பொறுக்கமுடியாத யாதனையால் உயிரிழக்கும் குழவிகள் கணக்கில. ஏன் வருந்துகின்றோமென்று அவை எண்ணவும் தெரிந்தில. பூகம்பத்தாலும், வெள்ளத்தாலும், ஸமுத்ரத்திலும், அந்யாய யுத்தத்திலும், வ்யாதிகளாலும், துர்பிக்ஷத்தாலும், ஒரே காலத்தில் மரணமடைபவர் ஸங்க்யையைப் பற்றி எண்ணவும் வேண்டுமோ? இப்படி ஜந்துக்களின் துக்காநுபவத்தை மிகவும் சிந்தித்து, இதை ஸஹிக்கும் மஹா கருணா ஸமுத்ரமெனப்பட்ட ஈஶ்வரனுடைய அஸ்தித்வத்தில் புத்தர்க்கு விஶ்வாஸம் குன்றியது. கர்மாத்யக்ஷனில்லாமல் பலம் தரும் கர்மமெனும் ஶக்தியை ஒப்புக்கொண்டு, அதனால் கட்டப்பட்ட சேதநன் மரணாநந்தரம் அநுவர்த்திக்கின்றானென்பதையும் அவர் ஒப்புக்கொண்டாரில்லை. அவர் நிராகரித்தபோதிலும், அவரிடம் நின்ற நித்ய சேதநனுடைய அஸ்தித்வத்தையும், அவருடைய கல்யாணகுணங்களையும் யாம் நம்புகின்றோம். தயாப்ரேரிதராய், லோகஹிதத்தை உத்தேசித்து, அவரால் ஏற்படுத்தப்பட்ட ஸமயமானது ஸத்ஸம்ப்ரதாய விருத்தமானபோதிலும், அவர் தர்மமார்க்கத்தை நாஸ்திகராக நின்றும் ப்ரவர்த்திப்பித்தபடியாலும், அவருடைய ஸமயத்தை லோகத்தில் பெரும்பான்மையோர் வழிபடுவதாலும், அவருடைய தேசஸ்தராயும், அவரது ஆர்யஜாதியைச் சேர்ந்தவர்களாயுமுள்ள யாவரும் அவரை இம்மாஸத்தில் ஸ்மரித்தல் யுக்தமே.



OF THE REGISTRAR OF BOOKS

புத்த ஸமயத்தை வேதாந்த மதத்தால் நிராகரித்த ஸ்ரீஶங்கராசார்யருடைய அவதார மாஸமும் இதுவே.

ஸ்ரீஶங்கராசார்யர் அந்த மஹானுடைய ப்ரஸ்தாநத்ரய பாஷ்யங்களை நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள் படித்தாராகில் அந்த பாஷ்யங்களுக்கும் நம்மிராமாநுஜன் பாஷ்யங்களுக்கும் நேர்ந்த ஒற்றுமையின் விஶேஷங்களை நன்கறியலாம். போதாயநர் மதத்தைப் பலவிடங்களில் ஸ்ரீஶங்கராசார்யர் தூஷித்தாராயினும், போதாயநருடைய வ்ருத்திக்ரந்தம் அவருடைய பாஷ்யத்துக்கு மிகவும் ஸஹாயமாக இருந்திருக்கவேண்டும். அவ்வண்ணமே, தத்வ நிர்ணயம் செய்யும் அவஸரங்களில் பகவத்ராமாநுஜனுக்கு ஶங்கரர் பூர்வபக்ஷியாக நின்றாராகிலும், அவருடைய க்ரந்தங்கள் விஶிஷ்டாத்வைத பாஷ்யங்களுக்கு விஶேஷ உபகாரமாக இருந்திருக்கவேண்டும். அத்வைதி யென்று பெயர் கொள்பவரில் ஆயிரத்தில் ஒருவர்கூட அநுஷ்டாநத்தால் அவ்வண்ணம் ப்ரகாஶிக்கமாட்டார். அஹம்ப்ரஹ்மாஸ்மி என்றறிந்த பிறகு உலக வ்யாபாரம் முற்றிலும் ஒழியவேண்டும். பரமார்த்த தசையில் அத்வைதம் ஸத்யமென்று விஶ்வஸித்தபோதிலும், ப்ராயேண அத்வைதிகள் அநுஷ்டிப்பது விஶிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயமே. மேலும் ஸூத்ரகார மதாநுகுணமாக ஶங்கர பாஷ்யங்களின் மிகுந்த பாகங்களில் விஶிஷ்டாத்வைத முறையே விஶதமாகச் சொல்லப்படுகின்றது.

ப்ராணாதிகரண ஶங்கரராமாநுஜ பாஷ்யங்களையும், ஶங்கர பாஷ்யத்துக்கு ஆநந்தகிரி டீகையையும் பார்த்து, "அத ஏவ ப்ராண:" எனும் ஸூத்ரத்துக்கு வ்ருத்திக்ரந்தத்தில் உதாஹரித்த "ப்ராணஸ்ய ப்ராணம்", "ப்ராணபந்தநம் ஹி ஸோம்ய மந:" எனும் விஷய வாக்யங்களை நிராகரித்து, "ப்ரஸ்தோதா யா தேவதா ப்ரஸ்தாவமந்வாயத்தா" என்று ஆரம்பிக்கும் வாக்யங்களையே விஷய வாக்யங்களாக ஶங்கராசார்யர் எடுத்தபடி, நம்மிராமநுஜனும் எடுத்திருப்பதை யோசித்தால், "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ப்ராணமேவாபிஸம்விஶந்தி", எனும் ஸங்கல்பமும் சிலவிடங்களில் கழிந்து, ஶங்கராபிப்ராயாநுஸாரித்வம் க்வ

சித்வசித் ராமாநுஜன் திருவுள்ளத்துக்குப் பொருந்துமெனவும் தோன்றுகின்றது. இன்னும் பாஷ்யகாரரான ஶங்கரர், ஸ்வோக்திகளாலும், ஸங்க்ஹீதர்களான ஶிஷ்யருடைய வசநங்களாலும், பாகவதரென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுவதைத் தத்வவிசாரத்தில் முன்னமே ஸமர்த்தித்திருக்கின்றோம். "ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்று, பகவான் செய்த ப்ரதிக்ஞையானது, அத்வைதமான தத்வம் தனக்குள் ஸத்வித்யதையை ஸஹிக்குமா ஸஹிக்காதா எனும் யோசநாபேதமொன்றாலேயே, ஸங்கோசத்தை அடையமாட்டாது. நமது தேசத்தின் கீர்த்தியை நிலைநிறுத்தப் பிறந்த மஹா புருஷர்க்குள் ஒருவரான ஸ்ரீஶங்கராசார்யரும், நம்மவர் யாவராலும் இம்மாஸம் ஸ்மரிக்கத்தக்கவர்.

•

**ஶங்கராசார்யருக்கு ஆலயம் கட்டுவதல்**

அவருடைய பக்தர்கள் அவர்க்கு ஆலய நிர்மாணத்தையும் விக்ரஹ ப்ரதிஷ்டையையும் தத்காலம் வேண்டுகின்றனர். இது விஷயத்தில் அவர்கள் யோசிக்கத்தக்க தொன்றுண்டு. ப்ரஹ்மஸூத்ரம் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் முடிவான அதிகரணங்கள் பசுபத்யதிகரணமும் பாஞ்சராத்ராதிகணமும். பசுபத்யதி காரணாரம்பத்தில், ஆநந்தகிரி "[illegible]" என்று பாஷ்ய விவரணம் செய்கின்றார். பாஷ்யத்திலும் "[illegible]" என்றாரம்பித்துக்கண்டநம் செய்யப்படுகின்றது. பாஞ்சராத்ராதி கரண பாஷ்யத்திலும், பாஞ்சராத்ரம் "[illegible]" என்ற பிப்ராயப்பட்டிருக்கிறது. இதனால் பாசுபதம் அப்படிக்கில்லை யென்பதும் விவக்ஷிதம். இப்படிக்கிருக்கையில், பூர்வாதிகரணத்தில் பசுபதி யெனும் தேவதா விஷயத்தில் பாஷ்யகாரருடைய விஶ்வாஸ ப்ரகடந ரூபமான யாதொரு வசநத்தையும் கண்டிலோம். பாஞ்சராத்ராதிகரண பாஷ்யத்தால் ஶங்கராசார்யர் விஷ்ணு பக்தரென்பது நிர்விவாதமாக ஸித்திக்கின்றது. ஆகமாநுஸாரிகளால் ப்ரதிஷ்டிதங்களான ஶைவவைஷ்ணவ தேவாலயங்கள், ஆகமமதங்களை நிராகரித்த ஶங்கராசார்யருடைய விக்ரஹங்களுக்கு இடங்கொடுக்கவில்லை. இதுவரையிலும் பண்டிதர்களான அத்வைதிகள் அதனிமித்தம் ஶோகித்தாரில்லை. ஸ்ரீஶங்கர பகவத்பாதருடைய அவதார தேசம்கூட அவர்க்கு ஓர் ஆலயம் கொண்டிலாத காரணத்தால் அவருடைய யஶஸ்ஸுக்கு யாதொரு குறைவும் கண்டிலோம். தத்காலம் மடாதிபதிகளென்போர் சரித்ரத்தைச் சிந்திக்குங்கால், அவர்க்குள் தப்பிப்பிறந்தனரென்று சொல்லத்தக்கவரும், கூடியமட்டும் ஸச்சரித்ரத்தையே காப்பாற்றினவருமான ஶ்ருங்கேரி மடாதிபதிகள்காலாடியில் தமது ஸம்ப்ரதாய குலபதிக்கு ஆலயம் நிர்மித்தார். இதனாலன்றோ, அத்வைதிகள் ஸ்ரீஶங்கரர்க்கு அந்ய தேசங்களில் ஆலயங்களை அபேக்ஷிக்கின்றனர்? அபேக்ஷித்தாலும் ஶைவவைஷ்ணவ ஆகமாபேக்ஷையின்றி ஸ்வதந்த்ரமாக அவர்க்குக் கோவில் கட்டக்கடவர். அதனுள் ஈஶ்வரனென அவர் உபாஸித்த வாஸுதேவனுடைய விக்ரஹத்தையும் ப்ரதிஷ்டை செய்தாராகில் அவருடைய அத்யவஸாயத்தையும் பஹுமானிப்பாரென எண்ணுகின்றோம்.



**ஶடகோபன்**

ஆனால், நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு இந்த மாஸம் தென்குருகைப் புநிதன் அவதார மாஸமென்பது முக்யமாக யோசிக்கத்தக்க விஷயம். பகவத் விஷயமான ஸர்வ ஶாஸ்த்ரங்களுடைய ஸாரபூதமென்றும், ஶாந்திரஸத்துக்கு ஓரே வாஸஸ்தானமென்றும், ரஜோகுண தமோகுண விஸ்தாரங்களால் யாவரையும் கட்டுகின்ற மாயையின் தரணத்தைப் படிப்பவர்க்கு ஸாதித்துக் கொடுக்குமென்றும், (அதுவும், "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ", என்று ஶரண்யன் சொன்னபடிப் படிப்போர்க்கு அவன் திருவடிகளில் ஸ்வாத்ம ஸமர்ப்பணம் செய்யவேண்டுமென ஓர் த்வரையை உண்டுபண்ணி, அதன் மூலமாக ஸாதித்துக் கொடுக்கும் என்றும்,) ஸம்ஸாரமாகின்ற ஸமுத்ரத்தில் மூழ்கிப் போன ஜநங்கட்கு அதனெல்லை யாகின்ற கரையை அடைவிப்பிக்கத்தக்க ஸாதநமாகின்றதென்றும், இப்படிப்பட்ட மஹாகுணங்களுடன் கூடிய ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது லக்ஷ்மீகாந்தனுகின்ற மஹாநிதியை அஸ்மத் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ப்ரகாஶிப்பிக்கக் கடவதென்றும், இவ்வண்ணமாக நிகமாந்த மஹாதேசிகனால் ஸ்துதிக்கப்பட்ட திவ்ய ப்ரபந்தங்களை நமக்கு அநுக்ரஹித்துத்தந்த மஹாத்மாவை எம்மட்டுந்தான் நினைக்கக்கூடாது? அவர் லோகத்தில் இருந்த காலமெல்லாம், யோகத்தில் பகவானை

அநுபவித்துக்கொண்டும், இதர காலங்களில் பகவத் விஶ்லேஷத்தை ஸஹிக்காமல், அவ்விரஹத்தால் தபித்துக்கொண்டும் ஜீவித்தாராகையால், "[illegible], [illegible]" என்று உபநிஷத் வெளியிட்ட வண்ணம், பாபஶூந்யராய் இருந்து விட்டார். அவரைப்போல் பகவதநுபவம் செய்ய அதிகாரிகள் இலர். ஆனால் அவர் விரஹத்தை விஸ்தாரமாக ப்ரகாஶிப்பிக்கும் பாசுரங்கள் அவற்றைச் சிந்திப்போர்க்கு மஹாகுணங்களை உண்டு பண்ணக் கடவன. அப்படி யவை செய்கின்றனவோ? எம்பெருமான் திருவீதி யலங்கரிக்கும் கால், "[illegible]" எனும் ப்ரகாரம், இதர ஆழ்வார் பாசுரங்களை உரக்கப்பாடிச் செல்லும் வழியே, சடகோபன் பாசுரங்கள் பாடத்தகாவென்றுதானே, அவன் ஆஸ்தாநத்தில் எழுந்தருளி யிருக்கும்கால் அவற்றை அர்த்தாநுஸந்தாநத்துடன் பாடவேண்டிய முறை பகவத் ஸந்நிதிகளில் ஏற்பட்டது? இப்படிக்கெல்லாம் யோசனைகள் உண்டாக, இப்பாசுரங்களைப்பாடப் பாத்யம்கொண்டாடுவதும், பாடும் பாகவதனைப் பலாத்காரமாக விலக்குவதும், இது அத்யாபககோஷ்டி, இதில் நீர் இருக்கத்தகாது, என்று கொண்டு, அஹங்காரத்திலாழ்வதும், ஒருவரை யொருவர் ஸ்ரீவைஷ்ணவர் என்று கொண்டு கைகளாலும் கோல்களாலும் தாக்குவதும், போலீஸாரைக் கொண்டு வருவதும், அவர் கோஷ்டிகளின் மத்யே ப்ரகாஶிக்கக் கைங்கர்யம் செய்கிறதாகப் பாவிப்பதும், "[illegible]" என்று நமது ஸம்ப்ரதாய உத்கர்ஷத்தையும், "[illegible]" என்று யதாகதஞ்சித் ராமாநுஜ ஸம்ப்ரதாய ஸ்தரனைவரும் ஒப்புக்கொள்ளப்பட்ட பரம புருஷனை அந்த ஸம்ப்ரதாயம் காட்டிக்கொடுக்குமென்பதையும், மநமறிந்து சொல்லிக் கொண்டு, பகவத் ராமாநுஜனுடைய தர்சநத்தை ஏனையோர்க்குப் பரிஹாஸ விஷயமாக்குவதும், ஆழ்வார் பாசுரங்களின் கார்யமாயிற்றன்றே? இவை யாவும் ஆழ்வார் நிக்ரஹத்தையும், யதீந்த்ரன் வெறுப்பையும் நம்மவர்க்கு ஸம்பாதித்துக் கொடுக்கமாட்டா



வோ? இந்த அலங்கோலங்களை ஸம்மதிக்கும் ஆசார்யர்கள் உளர் என்று கருதவும் கூடுமோ? பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசார மெனப்பட்ட அபராத கோடிகளில் இவற்றைக் காட்டிலும் விலக்கத்தக்கவையுண்டோ?

**பேரருளாளன்**

இவற்றை நியமேந ஸஹித்துக்கொண்டு, "[illegible]" என்று மஹர்ஷியால் சொல்லப்பட்ட படித் தனது க்ஷமையின் காஷ்டையை லோகத்தார்க்கு ப்ரகாஶிப்பித்துக்கொண்டு, அமரர் கதிபன் அருள் மிகுநாதன், தமர்கட்குகந்துதனி யரசாளும், கச்சி மாநகரிடம் நமது சித்தம் இந்த வைசாகமெனும் மாஸத்தில் செல்லாமல் நிற்குமோ? சடகோபன் பாசுரங்கள் அவற்றைப் பாடுவோர் தமக்குள் [illegible] யாகின்ற அஸூயையை விர்த்திசெய்வதாலும், அவற்றுள் முதல் நூறு பாட்டுகள் வரதன் விஷயமென்று ஆகமாந்தார்யன் திருவுள்ளம்பற்றிய படியாலும், அப்பாசுரங்களும், அவற்றுடன் சேர்ந்து நிற்கும் ஆழ்வார்கள் ப்ரபந்தங்களும், வரதன்முன் அத்யாபகம் செய்பவர்க்குள், அந்த அஸூயையை அந்யத்ர அத்ருஷ்டமான வண்ணம் பரிணமிக்கச் செய்பவையோ? ஸ்தல மாஹாத்ம்யம் சொல்லும் வண்ணம், ஸத்வப்ரதாநராக ஹிரண்ய கர்ப்பன் இதர தேவதைகளுடன் கூடிப் பகவானுடைய தர்சந நிமித்தமாகச்செய்த யஜ்ஞத்துக்குத் தமோகுண மோஹிதரான அஸுரர்கள் யதாசக்தி விக்நங்களை யுண்டு பண்ணிக்கொண்டிருந்தமையால், தேவாஸுர யுத்தங்களின் மத்யே ஆவிர்பவித்த எம்பெருமான், ஸர்வகாலங்களிலும் தத்ஸமமான யுத்தங்களைக்கலா வைஷம்யதூஷித மநஸ்கரான பூஸுரர்கள் புரிவதைக் கடாக்ஷித்துக்கொண்டு, அதுவும் தன்னுடைய கலிகொலாஹலக்ரீடைகளில் அந்தர்கதமெனத் திருவுள்ளம் பற்றுகின்றானோ?

**அவன் ஸௌந்தர்யம்**

இஃதிப்படி நிற்கத் தேவாதிராஜன் திருமுகமண்டலத்தின் "[illegible]" த்தை நிரந்தரமாகத் தர்ஶித்துக்கொண்டிருக்கும் இவர்க்கு மநம் உருகாதோ? ஆறுவது உத்ஸவம் மத்யாஹ்ந காலத்தில், திருமுகம் தூளிவ்யாப்த

மாய், திருமேனியில் அலங்காரமாக அணியப்பட்ட மலர் வர்க்கங்கள் வாடி, திருவாபரணங்கள் சலிக்க, எம்பெருமான் “ [illegible] ”, திருவீதிகள் அலங்கரித்துவிட்டு ஆலயம் நோக்கித் திரும்புங்கால், அவனைத் தர்சித்த அஸ்மதாசார்யன், இப்படி முகுந்தனை ஸேவித்த பிறகும் உருகாத நெஞ்சம் உளதோ என்று, ஸாதிக்கும்படி இருந்தது. இந்த ஸேவையை உத்தேசித்தன்றோ, “ [illegible] ” என்று கோபகந்நிகைகள் தபித்தார்கள். “ [illegible] ”, என்று நம் வேங்கடநாதார்யன் அநுபவித்த வண்ணம், எம்பெருமானுடைய ஒன்றிற்கொன்று பின்னிடாத பல ஸாந்த்ர ரூபங்களைத் தர்சித்து ப்ராந்தியடையாத சித்தமுள்ளவர் பக்கல் யாமென் சொல்வோம்? “ [illegible] ” என்று, அவனே மொழிந்தான். அதைத்தான் ஜ்ஞாபிக்கின்றோம்.

அவனது நாமங்கள்

வரம்தருவார்கள் தேவரென்போர். அம்ருதத்தை அபேக்ஷிப்பார்க்கு அவனொருவனே வரதன். ஆதலாலவனை வரதராஜனெனச் சொல்வாகள். “ [illegible] ” என்று, மற்றோர் தர இயலாத வரத்தைப் பகவானிடம் ப்ரஹ்லாதன் அபேக்ஷித்தபடியால், பகவானையும் வரதர்ஷப னென்று ஸம்புத்தி செய்தான். ஸர்வதேவர்களும், “ [illegible] ” என்றபடிப் பகவத் பாரதந்த்ரர்களாக இருந்தபோதிலும், இந்த ஏற்றம் ஸர்வதிவ்ய தேசங்களிலுமாவிர்பவித்தபடி அவனுக்குப் பொருந்தும். ஆனால் தேவராஜ



னென விசேஷித்துக் கச்சிமாநகரத்தில் அவன் பிருதடைந்த படியை, அவன் உத்ஸவத்தில் ப்ரத்யக்ஷமாகக் கண்டுகொள்ளலாம். அவனவதார நிமித்தமாகவும் வேறு காரணங்களைக்கொண்டும்பரம புருஷன் அந்த நகரத்தில் பற்பல ரூபம் தரித்துத் திருக்கோவில் கொண்டானாயினும், அந்த எல்லா அவதாரங்களின் தேஜஸ்ஸையும் பேரருளாளன் ஆகர்ஷித்துக்கொண்டு ஸேவை ஸாதிக்கின்றானென்றால், அந்த ஸ்தலத்தில் விளங்கும் தேவதாந்தரங்களைப் பற்றிக் கேட்பானேன்? இப்படி ஸர்வாதிசாயித்வமும், வரதர்ஷபத்வமும், பகவானிடம் ப்ரகாசிக்கும் காரணத்தைச் சிந்திக்கப் புகுந்தாலன்றோ, அவனுடைய மஹாதயாதிசயத்வமும், ப்ரணதார்த்தி ஹரத்வமும் செம்மை விளங்குகின்றன?

அவன் விஷயமாக ஆழ்வார்கள் அநுஸந்தானம்

ஆழ்வார்கள் பகவானைப் பாடினார்களில்லையே என்பாருமுளர். அதனாலென்ன? அது ஆழ்வார்க்குக் குறையோ, அருளாளர்க்குக் குறையோ? இன்னும் ஆழ்வார்கள் பாசுரங்களனைத்தும் நாலாயிரத்துக்குள் அடங்கிவிட்டனவோ? இவற்றைச் சேர்த்த காலம் பல பாசுரங்கள் லுப்தமாயிருக்கக்கூடாதோ? சிலர் ஆழ்வார்கள் காலத்தில் வரதன் திவ்யமங்கள விக்ரஹரூபமாக அவதரிக்கவில்லை யெனவும் சொல்வர். சரித்ர விமர்சையில் ஸமர்த்தர்களனைவரும் ஆழ்வார்கள் காலங்கள் இப்போதைக்கு ஆயிரத்தைந்நூறு வருஷமுதல் ஆயிரத்துநூறு வர்ஷத்துக்குள்ளென்று நிஷ்கர்ஷித்திருக்கின்றனர். திருமழிசைப்பிரான் காலமும் திருமங்கை மன்னன் காலமும் காஞ்சிபுரத்தில் பல்லவராஜர்கள் அரசாண்டகாலம். திருமங்கை மன்னன் செங்கணனெனும் சோழராஜனையும், வயிரமேகனெனும் ஸேனைத்தலைவனையும், ஒரு பல்லவராஜனையும் தமது பாசுரங்களில் ஸ்மரித்திருக்கின்றார். பெரியாழ்வாரும் நெடுமாறனெனும் பாண்டியராஜனைச் செப்புகின்றார். இந்த அரசர்கள் காலம் நிர்ணயிக்கப்பட்டதால் ஆழ்வார்கள் காலமும் நிர்ணீதமாயிற்று. இப்போது ஆயிரம் வருஷங்களுக்குமுன் நாதமுனிகள் இருந்தார்.

ஆளவந்தார் தொள்ளாயிரம் வருஷங்கட்குமுன் இருந்தார். அவருடைய அந்த்யகாலம் ராமாநுஜனுடைய பால்யகாலம். அக்காலத்தில் காஞ்சீபுரத்தல் ஸர்வ பகவத் ஸந்நிதிகட்குள்ளும் வரதன் ஸந்நிதி ஶ்ரேஷ்டமா யிருந்ததென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். அந்தக்காலம் முதற்கொண்டு அதன் ஏற்றம் கொஞ்சமும் குறைந்திலது. திருமங்கை மன்னன் காலத்திற்கும் பாஷ்யகாரர் காலத்துக்கும் ஏறக்குறைய இருநூற்றைம்பது முன்னூறு வருஷங்களே வித்யாஸமாகையால், திருமங்கை மன்னன் காலத்தில் இல்லாத ஏற்றம், அதற்கு நூற்றைம்பது இருநூறு வருஷங்கட்குள், வரதன் ஸந்நிதிக்கு உண்டானவண்ணத்தை நிரூபிக்கும் திறன் யார்க்குமில்லை. பூதத்தாழ்வார் செய்யுளிலும் திருமங்கை மன்னன் பாசுரத்திலும் ஸ்மரிக்கப்பட்ட அத்தியூரான் எனும் தெய்வம் வரதன் அன்றெனச்சொல்ல யார்க்கும் பொருந்தாது. வரதனைப்பற்றிய இதர பாசுரங்கள் ஜீர்ணித்துப்போயிருக்கவேண்டும். இப்படிக்கன்றிப் பெருமாள் கோவிலின் மாஹாத்ம்யம் நன்று விளங்கமாட்டாது.

**அவன் மஹிமை**

பகவான் ஹிரண்ய கர்ப்பன் யஜ்ஞத்தில் ஆவிர்பவித்ததும், அவனுக்கு ப்ரஹ்மாவின் ப்ரதிஷ்டையால் திருக்கோவில் உண்டானதும், உத்ஸவாதிகள் நடந்ததும், காஞ்சீ மாஹாத்ம்யத்தில் விவரிக்கப்பட்டதாக நமது ஜ்ஞாபகம். பின் திருக்கோவிலும் உத்ஸவங்களும் லோபத்தை யடைந்ததாகவும், ஜநமேஜயன் எனப்பட்ட ஓர் அரசன் ஸ்வாமியை மறுபடியும் எழுந்தருளச்செய்து, ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளப் பண்ணினதாகவும், புராணம் வெளியிடுவதாக நம்முடைய க்ஞாபகம். இந்த ஜநமேஜயன் அர்ஜுநன் பௌத்ரன் தானோ, அப்பெயர்கொண்ட மற்றொருவனோ என நாமயிர்க்கின்றோம். பாரீக்ஷிதன் அவ்வண்ணம் செய்திருந்தானாகில் அதன் ஸ்மரணம் பாரத பாகவதங்களில் இருக்கவேண்டும். ஆதலால் மஹாத்ம்யத்தில் இவ்வுக்தி ப்ரஶம்ஸாபரமாய் இருக்கலாம். பல்லவராஜ ஶ்ரேஷ்டர்களில் ஒருவன் ஹஸ்திகிரியின்மேல்



பகவானை எழுந்தருளப்பண்ணி யிருக்கலாம். இல்லாவிட்டால் பூர்வம் ஜீர்ணித்துப்போன ஸந்நிதியைப் புதுப்பித்து, உத்ஸவாதிகள் கண்டருளப்பண்ணி யிருக்கலாம்.

ஆனால் சின்ன காஞ்சீபுரம் எம்பெருமான்கள் யார்க்கும் இல்லாதபடி, வரதன் மாத்ரம் பெரிய காஞ்சீபுரம் திருவீதிகளில் உத்ஸவம் கண்டருள்வானேன்? இது ஒரு ராஜன் இஷ்டத்தால் அமைந்ததென்றபோதிலும், அந்த ராஜன் வரதன் விஷயத்தில் மாத்ரம் இவ்வண்ணம் நடப்பானேன்? இதற்கு மாஹாத்ம்யம் காரணத்தைக்காட்டவில்லை. நம்பெரியோர்களும் அதைப்பற்றிச் சிந்தித்திலர். சரித்ரமென்பது அவர் நினைக்காத க்ரந்தம். ஆதலால் மாஹாத்ம்யத்தை அநுஸரித்து நாம் இவ்வண்ணம் அயிர்க்கின்றோம்.

சின்ன காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ந்ருஸிம்ஹன், யதோக்தகாரீ, அஷ்டபுயத்தார், தீபப்ரகாசர் முதலான எம்பெருமான்கள், பேரருளாளன் அவதார ஸௌகர்யார்த்தமாகவும், அதற்கு ப்ரதிபந்தகமாக வந்த அஸுராதிகளின் நிரஸநார்த்தமாகவும் அவதாரம் செய்தனர் என்றும் மாஹாத்ம்யம் காட்டும். இன்னும் அஸுரர்க்கு ஸஹாயமாய் ஶரபரூபம் கொண்டுவந்த ஶங்கரனும் அஸ்திகிரி குஹாவாஸியான ந்ருஸிம்ஹனால் ஶாந்தியை அடைவிக்கப்பட்டனரென்றும், அஸுரர்கள் தமது ஜயத்தை உத்தேசித்து ஶங்கரனை உபாஸிக்கும் நிமித்தமாக ஒரு மாவின் கீழமர்ந்த ஸைகதலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்தார்களென்றும் காஞ்சீபுராணம் சொல்லும். பெரிய காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான்கள் அவதாரத்துக்கும், வரதன் அவதாரத்துக்கும், யாதொரு ஸம்பந்தத்தையும் புராணம் சொல்லவில்லை. அந்த எம்பெருமான்கள் ஒரு பிலத்தின்கண் எழுந்தருளியிருந்த வாமனன் ஸம்பந்தத்தத்தால் அவதரித்ததாக ஏற்படுகின்றது. அந்த பிலமே வாமனன் திருமேனி யென்றும், ப்ரதக்காக அந்தப்பெருமாளுக்குத் திவ்யமங்கள விக்ரஹமில்லை யென்றும்

சொல்லவொண்ணாம். ஆயினும் பிலருபதாரியான வாமநன் தத் ஸமீபத்தில் விக்ரஹரூபமாகவும் எழுந்தருளி நின்றாரென நாம் அத்யவஸிக்கின்றோம். அந்த எம்பெருமான் மஹாபலியின் ப்ரார்த்தனைக்கிணங்கியும், அவனுடைய அநுக்ரஹார்த்தமாகவும், இப்போது ஊரகமெனப்பட்ட திவ்யதேசத்தில் எழுந்தருளி நிற்கும் எம்பெருமான்களாக ஸேவைஸாதித்ததாகப் புராணம் சொல்லும். ஶங்கரனுடைய ஶாபத்தால் காளியென விரூபத்தையும், பர்த்தாவின் வியோகத்தையும், ஸமகாலத்தில் அடைந்த கௌரீ, தனது நிஜரூபத்தையும், பதியின் சேர்க்கையையும், வேண்டி வாமநனைப் பிலத்தின் ஸமீபத்திலிருந்து உபாஸிக்கவே, அவள் தபஸ்ஸுக்கு உண்டான விக்நங்களை நிவர்த்திக்கவென்று, இதர எம்பெருமான்களாகப் பகவான் அவதரித்ததாகவும் ஸ்தலபுராணம் சொல்லும். இவ்வண்ணம் கீழ்காஞ்சியில் வரதன் ப்ரதாந தெய்வமாக நிற்க, மேல்காஞ்சியில் வாமநன் அவ்வண்ணம் நின்றிருக்கவேண்டும். அந்த வாமநன் ஸந்நிதியும், திவ்யமங்கள விக்ரஹமும் எங்கே? பிலம் மாத்ரம் காமாக்ஷி கோவிலில் இருப்பதாகச் சொல்வார்கள்.

இது விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கும்கால், வரதராஜனும் வாமநனும் சேர்ந்தே வரதனாக ஸேவை ஸாதிக்கின்றார்கள் என்றும், வாமநனுடைய பூர்வஸ்தாநம் மேல்காஞ்சியில் இருப்பதால், ஶாதநமாக மஹோத்ஸவத்தைச் செய்துவைத்த ராஜஶ்ரேஷ்டன், பெருமாளுக்கு மேல்காஞ்சியினுடைய திருவீதிகளில் உத்ஸவம் கண்டருப்பண்ணினன் என்றும், பெருமாள் அநுக்ரஹத்தால் தன் ரூபத்தையும், பதிஸாமீப்யத்தையும் அடைந்த ஹைமவதிக்கும், அவளுடைய பதியான ஈஶ்வரனுக்கும் எம்பெருமான் தன் அநுக்ரஹ பரீவாஹரூபமாகவே, தன் உத்ஸவகாலத்தில் அவர்கள் ஆலயத்துக்கு முன்னால் ஸேவைஸாதிக்கின்றானென்றும், பகவான் வாரணாத்ரி ஶிகரஸ்தனாக நிற்பதைவிட்டு, மஹாகஜத்தின் மீது எழுந்தருளுங்கால் அவ்வண்ணம் ஸேவைஸாதிக்கின்றானென்றும், இதன் உண்மையை அறியாத அஜ்ஞாந பலத்தால், இந்த ஸந்தர்ப்பம் பின் காலத்தில் ஏசலாக முடிந்ததென்றும், வரமு



கன் ஸந்நிதியில் குற்றேவல்செய்த ஓர் ராஜகந்நிகையானவள், பெருமாள் பிலத்தைவிட்டு மலையாள எழுந்தருளவே, தானும் அவனுடன் கீழ்காஞ்சி சென்று அவன் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்து, மலையாளன் நாச்சியாரெனப் பெயர்பூண்டனள் என்றும், இப்படி இரண்டு காஞ்சியிலும் ப்ரதாநமாக ஏற்பட்ட இரண்டு அர்ச்சாவதாரங்களும் ஒருமித்து, அந்யத்ர அத்ருஷ்டமான ஏற்றத்தைத் தேப்பெருமாளுக்கு உண்டாக்கினவென்றும் அயிர்க்கின்றோம்.

இப்படிப்பட்ட எம்பெருமானை அநுபவித்துக்கொண்டு, அவன் திருவடிகளில் கைங்கர்யம் செய்துகொண்டு, த்ரிதசாளுடைய ஆநந்தத்தை இவ்வுலகிலே அடைந்துகொண்டு, காலம் போக்குவதைவிட்டு, அவன் முன்னால் அபராத பரம்பரைகளைப் பெருக்கிக்கொண்டு, ஆத்மத்ரோஹம் புரிபவர் ஸங்க்யை பெருத்ததாக எண்ணுகின்றோம். அர்ச்சாவதார தசையில் பகவந்நிக்ரஹம் ப்ரத்யக்ஷத்தில் தெரியமாட்டாது. ஶாஸ்த்ரமறிந்து தான் அதனிமித்தம் அஞ்சவேண்டும். ஆகிலும் ஸ்தலாந்தரங்களைக்காட்டிலும் பெருமாள் கோவிலுக்கு ஓர் அதிஶயம் உளது. பாகவதருடைய ஸத்பாவும் அங்கீகரத்தில் அத்யாபி ஶைத்யத்தை அடைந்திலது. "அத்ரைவ ஸந்நிதௌ வஸந்தி" என்று, இதுவரையிலும் பெருமாள் கோவிலைப்பற்றி வருத்தப்படவேண்டாம். ஆசார வர்ஜிதமானதும், விபரீதமானதுமான துர்புத்தி ஜநங்களில் பெரும்பாலோர்க்கு உண்டாகுமாகில், அவர் ஸத்துக்களை அநுவர்த்திகாததே அதற்குக் காரணமாகும். இந்தக் குணம் அந்த மஹாஸ்தலத்தை விடாத படிப்பேரருளாளன் க்ருபை பண்ணவேண்டும்.

# தத்வவிசாரம்.

## அவதாரரஹஸ்யமும் அர்ச்சாவதாரவைலக்ஷண்யமும்.

ஆதலால் அவதாரகாலங்களில் பகவானைத்தர்சித்த யாவரும் மஹாபாக்யசாலிகள். அவனைக் கண்டகண்கள் மற்றொன்றைக் காணா; அவன் கதைகளைக் கேட்ட செவிகள் மற்றொன்றைக் கேட்காவாம்; இவ்வண்ணம் அவன்ரூபமும் சரித்ரமும் குடிகொண்ட மநங்கள் மற்றோர் சிந்தைக்கு இடங்கொடுக்குமோ? அந்தப் பாக்யம் நமக்கிலது. பின்னகாலத்தினர்க்கு, தாத்ருச தர்சநமும், ச்ரவணமும், த்யாநமும் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹங்களால் உண்டாக வேண்டும். இதை யோசித்துத்தான், ஸர்வேச்வரன் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் பாஞ்சராத்ரம் முதலான ஆகமசாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தான். ஆழ்வார்களும் ஆசார்யர்களும், அந்யவைதிகஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களும், அநேக மஹான்களும் மஹர்ஷிகளும், பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹங்களில் ஈடுபட்டு முக்தியடைந்தார்கள். தேசிகனும், "ஆழ்வார்களும், இவ்வவதாரரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அநுஸந்தித்து, இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போந்தார்கள்" என்றருளிச்செய்தார். இதன்பொருள் வ்யாக்யாநப்படி என்னவென்றால், "இப்படி அவதாரரஹஸ்யமும், அர்ச்சாவதாரமும் ஆயாஸமின்றி மோக்ஷத்தைத் தரவல்லன. இப்படியே சௌநகாதி மஹர்ஷிகள் உபதேசித்தார்கள். ஜர்மாந்தரங்களில் மோக்ஷம்பெறுவதாகின்ற விளம்பத்தை ஸஹியாத ஆழ்வார்கள் பகவானை அநுபவித்த தசையிலும் ஆச்ரயண தசையிலும் அவதாரரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் மிகவும் அநுஸந்தித்தனர். பகவானுடைய பரரூபத்தை அவ்வளவாக அநுஸந்தித்தாரில்லை. தமது அநுஸந்தாநத்துக்கு மூலபலமாகப் பகவானுடைய



பரரூபத்தைக் கண்டமாத்ரமத்தனை போக்கி, அர்ச்சாவதரத்தைப் போலே அதை ப்ரசுரமாக அநுஸந்தித்தாரில்லை." என்றாகின்றது. பேரணியென்றால் மூலபலம்; முன்னே ஸேனை செல்ல அதற்கு ஸஹாயமாகப் பின்னே செல்லும்படை. பரரூபத்தைத் தர்சித்தாரென்பது திண்ணம். ஆகிலும் அதை ஆதாரமாகவைத்துக்கொண்டு, ப்ரசுரமாக அவதாரசரித்ரங்களையும் அர்ச்சாமூர்த்திகளையும் த்யாநித்தனர். நான் அப்ரமேயனைத் தொழுகின்றேன்; நீர் விக்ரஹங்களை வணங்குகின்றீர்கள்; என்று சில மந்தமதிகள் இக்காலம் ப்ரலாபிக்கும் வண்ணம், ஜ்ஞாதாக்களான ஆழ்வார் ஆசார்யர்கள் செய்தாரில்லை. லோகஸங்க்ரஹம் அவர்க்குத் தெரியும். ஆதலால் ப்ராயேண மநுஷ்யர் பரரூபஸாக்ஷாத்காரத்தில் அநர்ஹர் என்பதை நினைத்து, அவர்க்குப் புத்திபேதம் உண்டாகக்கூடாதெனத் தாமும் அவதாரசரித்ரங்களிலும் அர்ச்சாநுஸந்தாநத்திலும் விசேஷமாக ஈடுபட்டார்கள் என்பது ஸ்பஷ்டம்.

இப்படித் தேசிகன் ஸாதித்தபடியை யோசித்தால், ஆழ்வார்கள் அர்ச்சையில் பகவத்ஸாக்ஷாத்காரம் செய்ய இடங்கொடுத்தது பகவானுடைய அவதாரசேஷ்டிதங்கள் என்பது நிஸ்ஸம்சயமாக ஏற்படுகின்றது. அவன் பக்தர்களுக்கிரங்கி அவ்வரால் அநுபவிக்கப்பெற்ற அப்ராக்ருதசரீரங்களை ஸ்வஸங்கல்பத்தால் ஸ்வீகரித்தவண்ணம், அவனவதார சரித்ரங்களை ஸ்மரித்து ஸ்மரித்து, அவன் திருவடிகளில் கைங்கர்யம் பண்ண இச்சிப்பவர், தாமுகந்தபடிச் செய்துகொண்ட அர்ச்சைகளில், அவனது ஸங்கல்பத்தால் அவன் ஸாந்நித்யம் செய்யவும் குறையில்லை; ஸாந்நித்யம் செய்து தன்னடியாரை அநுக்ரஹிக்கவும் குறையில்லை. அவன் அவ்விதம் ஸாந்நித்யம் செய்கின்றானென்றும், அநுக்ரஹிக்கின்றானென்றும் விச்வஸித்து அடிமை செய்தாரை அவன்கைவிடுவன் என்கை பகவானுடைய ஸ்வபாவத்தை அத்யந்தம் அறியாமையைக் காட்டுகின்றது. இப்படிப் பகவதநுபவம் செய்த பஹுமஹாத்மாக்களை நினைக்கும்கால், அவர் யாவரும் மோசம் போயினர்; ஈச்வரன் அவர்க்கு இரங்கமாட்டான்; விக்ரஹங்களைச் சேதிக்கும் நான்தான் ஜ்ஞாநி என்றுபரர் சொல்வதைக் கேட்டு நம்மவரும் அநேகர் மயக்குண்டா

ரல்லவோ? வாங்மநஸங்களுக்கும் இது இத்தகையது என்று எண்ணவும் இடங்கொடாது நிற்கும் பரனை வணங்குகின்றோம் என்பது வாய்ச்சொல்லின்மேல் அர்த்தம் கொள்ளாது. அங்ஙருடைய பக்த்யதிஶயத்தை அறியத்திறனற்று, அர்ச்சைகளையும், அவற்றின்மூலமாகப் பகவானை வழிபடுபவரையும் நிந்தித்தல் பாப கோடிகளில் சேரும், என்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஹேதுவாதிகள் அவதாரங்களையும் தத்பரயுக்தமாக வழங்கும் பகவத்கதைகளையும் நம்புகின்றாரில்லை. நம்புகின்றவரைப் பார்த்து, அவைசரித்ரமல்ல எனவும் சொல்வர். இவை சரித்ரமென யாம் சொல்லப் போகின்றோமில்லை. தத்காலம் சரித்ரங்கள் எழுதுகின்ற விதம் அவதாரஸம்பந்தமாகச் சரித்ரம் யாரும் எழுதினார்களில்லை. இன்னும் ராமாவதாரகாலங்களிலும் க்ருஷ்ணாவதாரகாலங்களிலும் நமது நாட்டில் எழுத்தே இல்லையென்பாருமுண்டு. ஆதலால் சரித்ரங்கள் இல்லை என்பது தூஷணையாகாது. "ருஷயோ மந்த்ரத்ருஷ்டார:" என்பதுபோல், அவதாரரஹஸ்யத்தைத் தமது யோகஶக்தியால் ஸாக்ஷாத்கரித்த மஹர்ஷிகள் இருந்தார்கள். அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களைக் கண்ட பக்தர்களும் இருந்தார்கள். இவர்கள் மூலமாகத்தான் அவதாரசரித்ரங்கள், பரம்பரையாகக் கதையாகப் பெருகின. வால்மீகி, வ்யாஸர் முதலான மஹான்கள் லோகோபகாரமாக இந்தச் சரித்ரங்களை க்ரந்தங்களாக இயற்றினார்கள். இக்ரந்தங்களில்விளங்கும் ஒவ்வொரு சரித்ராம்ஶமும் உண்மையோ என்று, சரித்ரமெழுதுவதில் குஶலர்கள் வினவக்கூடும். இந்த ஸம்ஶயம் பக்தனுக்கு உதிக்க அவஸரமில்லை. கதைகளெல்லாம் கதாபுருஷன் அநுபவமொன்றைப் பற்றியே பக்தனுக்கு உதவுகின்றன. ஸ்ரீபாகவதம் படித்து, அங்ஙத்ர அத்ருஷ்டமானபடிப் பகவத்பக்தியையும் இதரவிரக்தியையும் ஒருவன் ஸம்பாதிக்கையில், அப்புராணகதைகளின் உண்மையைப்பற்றி அவன் ஏன் தன் மநஸ்ஸை க்லேஶிக்கச் செய்வன்? புராணத்தின் கருத்தோ "[illegible]" என்று, ப்ரக்யாதியாக யாரும் அறிவர். கல்நெஞ்சனாய் ஒருவன் நின்றாலன்றிப் பாகவதம் படித்துப் பகவதநுபவம் செய்யாதொழியான். ஆழ்வார்கள் பாசுரார்த்தங்களைச் சிந்தித்து மநம் உருகுங்கால், அவர் ப்ரஸ்தாபிக்கும் பக



வத்கதைகள் வாஸ்தவமா என்று எந்த ஆஸ்திகன் யோசிக்கப் போகின்றான்? கோவிலில் சென்று திவ்யமங்கள விக்ரஹத்தைத் தர்ஶித்து, "நிரந்தரம் [illegible] ॥" என்று பகவானை அநுபவிக்குங்கால், இந்த விக்ரஹத்தில் பகவான் ஸாந்நித்யம் செய்வனா, இது கல்லன்றோ, என்று யோசிப்பவனும் உளனோ? கல்லென்பார்க்குக் கல்தானகப்படும். சரித்ரமா என்று ஶோதிப்பார்க்கு ஸந்தேஹமோ அவிஶ்வாஸமோதான் பலிக்கும். "யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்" எனும் பகவத்வசநமும் அவர்க்கு வீணேயாம். பகவானைக் காணத்திறனற்று, அநுபவிக்க வழியற்று, கண்டாரையும் அநுபவித்தாரையும் நிந்தித்த பயனாக, உண்மையில் நாஸ்திகராவார் பலர்.

பக்தர்க்கு அவதாரகதைகள் உண்மையா யில்லாவிட்டாலும் ஆகவேண்டியதென்ன? அவற்றின் பயன் அவர்மட்டும் அவனுடைய த்யாநமும் அநுபவமுமே. கதைகள் எப்படியானாலும் ப்ரயோஜநம் துல்யமே. ஸம்ஸாரமாகின்ற தீக்கடலில் மூழ்கித் தபிப்பவர்க்கு, "தவ கதாம்ருதம் தப்தஜீவனம் கவிபிரீடிதம் கல்மஷாபஹம்" எனும் ப்ரகாரம், பகவத்கதைகள் பாபங்களைப் போக்கி, ஸ்வரூபப்ராப்தியைக் கொடுக்குமென்பதில் கிஞ்சித்தும் ஸந்தேஹமுண்டோ? கதையைக் கேட்பவர் ஹ்ருதயமலர்மிசையவன் ஏகினானென்றார் திருவள்ளுவர். அவன் அங்கு நிலைக்க, அவர் பாபங்கள் நிலைக்குமோ? பாபம் நஶித்தால் ஸ்வரூபம் தானே ப்ராப்தமாகும். அவதாரங்களே பொய்யென்பர். ஆனாலென்ன? உபநிஷத்வித்யைகளில் எங்கெந்த ரூபகுணவிஶிஷ்டனாகப் பகவான் உபாஸிக்கப்படுகின்றானோ அந்தந்த ரூபகுணவிஶிஷ்டனாகவே ப்ராப்யதஶையில் அநுபவிக்கப் படுகின்றான், என்று முறையிட்டிருப்பதை யேன் எண்ணக்கூடாது? "யே யதா மாம் ப்ரபத்யந்தே" என்கிற ஶ்லோகார்த்தம்

வீணுமோ. ஸ்ரீராமனை த்யாகிப்பவர்க்கு ஸ்ரீராமன் திருவுருவு கொண்டும், ஸ்ரீக்ருஷ்ணனை த்யாகிப்பவர்க்கு ஸ்ரீ க்ருஷ்ணரூபம் தரித்தும் ப்ரஸந்நமாகின்றான் ஈச்வரன். அவன் அவ்வண்ணம் அடியார்க்கு இரங்குவதைத் தடுப்பாருமுண்டோ? அர்ச்சாரூபியாய் உபாஸிப்பவர்க்கும் அவனருள் திண்ணமென்பது ஏகலவ்யன் வ்ருத்தாந்தத்தை ஸ்மரித்தால் விளங்கும். கதைகள் பொய்யானாலும் அவற்றின் சிந்தனையால் ஜநிக்கும் ஜ்ஞாநம் வாஸ்தவம். ஜ்ஞாநமன்றோ முக்திகாரணம். பக்திரூபமடைந்த ஜ்ஞாநம் நிலைத்தபிறகு பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகம் உண்டோ? ‘ந மே பக்த: ப்ரணச்யதி’ எனும் வாக்யம் பொய்யாமோ? பக்தியுண்மையானால், அது உண்டாக உதவிய கதைகள் உண்மையல்லவென்று ஈச்வரன் வெறுப்பனோ? பக்தி யுண்மையாகில் அதனுடைய பரீவாஹமாகச் செய்யப்பட்ட ஆராதநங்கள் ஹேதுவாதிகள் சொல்லுகிறபடி இல்லையென்று ஈச்வரன் பராங்முகமாவனோ? என் ஜாநகீரமணா எனது மனுவைக் கைகொள்ளும், என்று ஒருபக்தன் கதறினால், நான் ஜாநகீரமணனன்று, பொய் சொன்னாய்; மனு ஸரியான கடுதாசியில் எழுதவில்லை; கடுதாசி மடித்தது பிசகு; ஸ்டாம்பு ஸரியாயில்லை; கையெழுத்தில்லை; என்று கோர்ட்டு சிரஸ்ததாரனென ஈச்வரன் பக்தனை த்யஜிப்பனோ? ஸ்வமதாபிநிவேசத்தினால் அந்யமத தூஷகர்களுக்கு இவை ஸாது யோசனைகள். கருணாஸமுத்ரமான பரமேச்வரன் உபாஸநா ப்ரகாரசிந்தையில் ஆழ்வனோ? தன்னடியார் குற்றம் செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்; என்றில்லோ அவன் நினைப்பான். இந்த யோசனைகள் போதும். முன் மதம் நன்றிருந்தது. இப்போது கெட்டது : எனும் மூடயோசனையும் வேண்டாம். பகவத் பக்தர் எக்காலுமுளர். நமது தர்சநங்கள் நன்கே வளர்ந்தன; ஸர்வலோகஹிதத்தை வேண்டியே மஹாநுபாவர்களால் விர்த்திசெய்யப்பட்டன. குற்றம் காண்போர்க்குக் குற்றம் தான் புலப்படும். குறையொன்றுமிலையெனக் கொண்டு அவனுக் காட்செய்பவர்க்கு அவனருள்கிடைக்கும்.



## மோக்ஷோபாயங்கள்.

மோக்ஷமென்பது ஸ்வரூபப்ராப்தி. நமது ஸம்ப்ரதாயப்படி ஈச்வரனொருவனுக்கே நாம் சேஷராக இருக்கும் நிலைமையை அடைதல். ஸ்வரூபம் என்பது யோசனாபேதங்களுக்கு இடங் கொடுத்தபோதிலும், அதன் ப்ராப்தி மோக்ஷம் என்பது ஸர்வ ஸம்ப்ரதாயங்களுக்கும் பொது. இதை அடைவதற்கு ஈச்வர ப்ரஸாதம் முக்யஹேதுவானாலும், ஈச்வரன் வைஷம்ய நைர்க்ருண்ய ரஹிதனானபடியால், ப்ரஸாதார்ஹருக்கே ப்ரஸாதம் செய்கின்றான். அந்த அர்ஹதையும் உபாஸகருடைய சித்தபரிபாகத்தை ஆச்ரயித்திருக்கின்றதாகையால், அதைமாத்ரம் பகவான் சிந்திப்பனேயன்றி, அதற்குப் பரம்பரையாகக் காரணமாக நின்ற கதைகளின் தத்வாம்சத்தைப்பற்றி அவன் விசாரிக்கமாட்டான். அது எந்தரூபமான ஆராதனைகளால் ப்ரகாசிக்கின்றதோ, அவற்றின் க்ரமத்தையும்பற்றிச் சிந்திக்கமாட்டான். பக்தியோகம், வாக்யார்த்தஜ்ஞாநம், ப்ரபத்தி, கேவலபக்தி, பாகவதஸம்ச்ரயம் சேஷத்வஜ்ஞாநம், இந்தவிதமாக மோக்ஷகாரணங்களைப் பலவிதமாக மோக்ஷார்த்திகள் யோசித்தபோதிலும், அந்தந்த ஸம்ப்ரதாயஸ்தர், அவ்வவர் ஸம்ப்ரதாயங்களில், மோக்ஷோபாயமாகவோ, பகவத்ப்ரஸாதத்தை அடைவதற்கு வ்யாஜமாகவோ, மற்றெந்த பெயராலோ விவரிக்கப்பட்ட சித்தபரிபாகங்களில் ஒன்றை அடைந்தாராகில், அவையாவும் ஏறக்குறைய ஏகரூபமாகத்தான் நிலைக்க ஏற்படும். சித்தபரிபாகம் என்றால் கேவலஜ்ஞாநமன்று. வேதாந்த க்ரந்தங்கள் மிகவும் நன்றாகப் படித்தவர் பலர், அவர் அறிந்தவற்றைத் தமக்கு உபயோகப்படுத்தாமல், அதைப்பரோபகாரமாகவே விநியோகிக்கின்றனர். இவர்க்கு நற்கதியுண்டாகாது. ஜ்ஞாநம் நிலைத்தபடியே அநுஷ்டாநமும் உண்டாகவேண்டும். இந்த விதமான சித்தபரிபாகம் கிடைத்ததாகில், ஒருவன் எந்த ஸம்ப்ரதாயநிஷ்டனானாலும், பகவத் க்ருபைக்குப் பாத்ரனாவான். தன்னாத்மாவுக்கு அவித்யை நிவர்த்தித்த பின்னுண்டாகும் அதனுடைய சுத்த ஸ்வரூபமே ப்ரஹ்மம் என நினைத்து அதை

யடைந்தவர்க்கும், மோக்ஷத்திற்கு உபாயமாகவோ, பகவத்க்ருபைக்கு வ்யாஜமாகவோ கொண்டமார்க்கத்தில் குறையற நின்றவர்க்கும், "யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஶ்ரிதா: । அத மர்த்யோऽம்ருதோ பவதி ॥ யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: । அத மர்த்யோऽம்ருதோ பவதி ॥" எனும் உபநிஷத்வாக்யார்த்தங்கள் கைகூடலாம். ஹ்ருதயத்தைப் பற்றி யிருக்கின்ற ஐஹிகவிஷய காமங்களும் கட்டுகளும் நிவர்த்தித்தால், உற்றது வீடு எனக்கூடும். ஒருவன் கொண்ட வழியில் பரமம் ஸாம்யம் அவனுக்குக் கிடைக்காவிட்டாலும், அது கிடைக்கும் வழிகளில் யாதேனு மொன்றிலாவது அவன் நிலைப்பான். ஆனபடியால் நமது ஸம்ப்ரதாயப்படி மோக்ஷோபாயமாக நமது ஆசார்யர்கள் நிச்சயித்த ஶரணாகதியின் ப்ராபவத்தைப்பற்றி நாம் விசாரிக்கப் புகுவதில், தர்ஶநாந்தரஸ்தர் விஶ்வாஸங்களை நாம் பழிப்பதாக எண்ணுதல் ஒண்ணாது.

## ப்ரபத்தி.

"தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி । நாந்ய: பந்தா அயநாய வித்யதே ॥" என்றும், "தமேவ விதித்வாऽதிம்ருத்யுமேதி । நாந்ய: பந்தா வித்யதேऽயநாய ॥" என்றும் ஶ்ருதி அறுதியிட்டிருக்கின்றது. இதனால் ஶ்ருதியால் நிர்திஷ்டமானபடிப் பகவானை அறிந்தவர்தான் மோக்ஷத்தை அடைவர்கள் என்பது ஶ்ருதிப்ரஸித்தம். அந்த அறிவைத்தான் வேதநமென்றும் உபாஸநமென்றும், பக்தியென்றும், பக்தியோகமென்றும் சொல்வார்கள். அதன்ஸ்வரூபத்தைப்பற்றி முன்விஸ்தாரமாக விசாரித்தோம். மோக்ஷத்துக்கு வேறுவழியில்லை யென்றும் மேலெடுத்த ப்ரமாணங்கள் சொல்கின்றன. அப்படியிருக்க வேறு உபாயம் கல்பிக்கக்கூடுமோ என்று சோத்யம் பிறக்கலாம். ப்ரபத்தி எனும் ந்யாஸவித்யையானது மநுஷ்யர்களால் கல்பிதமன்று. அதுவும் ஶ்ருதி ப்ரஸித்தங்களான வித்யைகளில் அந்தர்கதம். ஶ்வேதாஶ்வதரோபநிஷத்தில், "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச



ப்ரஹிணோதி தஸ்மை । தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே ॥" "யாதொரு பகவான் தனது நாபியினின்று ஹிரண்டகர்ப்பனை ஸ்ருஷ்டித்து, அவர்க்கு வேதத்தை அளித்து ஜகத்ஸ்ருஷ்டி யோக்யதையை உண்டுபண்ணினரோ, மோக்ஷோபயோகியான தன்விஷய ஜ்ஞாநத்தை ஸ்வாநுக்ரஹத்தால் தருகின்ற அந்த ஜ்யோதிர்மயனை பரமாத்மை நான் கேவலம் மோக்ஷத்தை அபேக்ஷித்தவனுய்க்கொண்டும், பலாந்தரங்களை அபேக்ஷிக்காமலும் ஶரணமடைகின்றேன்", என்கிறவாக்யம் உளது. அதன்பொருள், நமது ஸம்ப்ரதாய பாஷ்யத்தையும் ஶங்கராசார்பாஷ்யத்தையும் அநுஸரித்து இங்கு வெளியிடப்பட்டது. இந்த ஶ்ருத்யர்த்தத்தை அநுஸரித்த,

> தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
> ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ॥
> தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: ।
> நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ॥

'என்னிடம் நிரந்தரயோகத்தை ப்ரார்த்தித்தவர்களாய் பஜிக்குமவர்களுக்கு, எந்த ஜ்ஞாநத்தால் அவர்கள் என்னை அடைவார்களோ, அந்தப் பரிபாகதசையை யடைந்த ஜ்ஞாநத்தை நான் ப்ரீதிபூர்வகமாகத் தருகின்றேன். அவர்களுக்கு ஶ்ரேயஸ் உண்டாக வேண்டுமெனும் தயாஹேதுவால், நான் அவர்களுடைய மநோவ்ருத்தி விஷயமாக இருந்துகொண்டு, எனது கல்யாணகுணவிஶிஷ்டதிவ்ய மங்களவிக்ரஹத்தை அவர்களுக்கு ஆவிஷ்கரித்தவனுய்க்கொண்டு, அவர்களுடைய ப்ராசீநகர்மரூபமான அவித்யையால்உண்டானதும்,எனதுப்ராப்திவிரோதியா யிருப்பதுமான அஜ்ஞானமெனும் இருளை ப்ரகாஶிக்கின்ற என்னைப்பற்றிய ஜ்ஞாநரூபமான விளக்கால் போக்கடிக்கின்றேன்." எனும் பகவத்கீதா ஶ்லோகங்கள் இவ்விடம் ஸ்மரிக்கத்தக்கன. பஜதாம் எனும் சப்தத்துக்கு ஸேவமாநாநாம் என்று ஶங்கராசார்யர் வ்யாக்யாநம்

செய்கின்றார். ப்ரீதிபூர்வகம் எனும் சப்தங்களுடன் அதைச்சேர்த்து அர்த்தம் செய்தால் கேவலம், பகவானிடம் ஸங்கிதராய், அவனுடைய கைங்கர்யம் செய்பவர் என்றாகின்றது. ஶரணாகதி என்பதும் இத்தகையதோர் ஜ்ஞாநவிஶேஷம். பகவான் தன்னடியார் ஸேவையை உகந்து, அவரிடம் ப்ரஸந்நனாகி, அவர் ஹ்ருதயத்தில் நின்று, அவருடைய அஜ்ஞாந நிவ்ருத்திபூர்வகமாக, ஸ்வவிஷய ஜ்ஞாநத்தை யவர்க்கு அளித்து, அவரைத் தன்னிடம் வரும்படிச் செய்கின்றானென்பதை வெளியிடும் கீதாவாக்யங்களுக்கு இணங்க, பக்தனான ஓர்புருஷன் இதர விரக்தி பூர்வகமாக, அவனுடைய ப்ராப்தி யொன்றையே அபேக்ஷித்தவனாய்க் கொண்டு, அவனைச் சரணமடைந்தானாகில், அவனுக்கு ஸர்வேஶ்வரன் ஸ்வவிஷய ஜ்ஞாநத்தை ப்ராகாஶிப்பித்துத் தன் ஸாயுஜ்யத்தை அளிக்கின்றான் என்று உபநிஷத்கூறியது. ஆதலால் உபநிஷத் வித்யைகளில் ஶரணாகதியும் ஒன்று. ஸ்வவிஷய ஜ்ஞாநம் என்றால், ஸமஸ்த கல்யாணகுணோபேதமான பகவத்திவ்ய மங்களவிக்ரஹ தர்ஶநம், என்று ராமாநுஜன் வ்யாக்யாநம் செய்கின்றார். இந்த ரூபஸாக்ஷாத்காரத்தைத்தான், பகவான் தன்பக்தர்களுடைய மநோவ்ருத்தி விஷய மாகின்றானெனச் சொன்னதாகவேண்டும். இது ஶரணாகதியின் பலனாகப் பக்தியோக நிஷ்டனுக்கு உபாஸந வேளையிலும், ப்ராப்ய தசையிலும், ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டனுக்கு, இங்கே உத்தரக்ருத்யத்திலும், ப்ராப்ய தசையிலும் ஸம்பவிக்கும். இரண்டுக்கும் ஶாஸ்த்ர ஜ்ஞாநம் நியமந பூர்வவ்ருத்தம். அதுதான் ஒருபுருஷனை மோக்ஷோபாயாநுஷ்டாநத்தில் ப்ரவர்த்திப்பிக்கச் செய்கின்றது. முன்னெடுத்த கீதாஶ்லோகங்களில் ஶரணாகதி சப்தம் கண்டோக்தமாய்ச் சொல்லாமல்போனாலும், அதில் அதிகாரிகளுடைய அநுபவத்தை அவற்றிற்கு முன்வரும், ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ப்ராணா: எனும் ஶ்லோகத்தால் பகவான் விவரித்திருக்கின்றார். கீதா ப்ரகரணாந்தரத்தில், தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத । தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தா-



நம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம் ॥ எனும் ஶ்லோகத்துக்கும், ஸாதாரணமாக ப்ரகாசிக்கும்பொருள், தத்பூர்வஶ்லோக நிர்திஷ்டனான அந்தர்யாமியும், கர்மாநுகுணமாக ப்ராணிகளை ஸம்ஸார சக்ரத்தில் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டிருக்கிறவனுமான ஸர்வேஶ்வரனை, ஸர்வாத்மநா ஶரணமடைந்தால், அவனுடைய ப்ரஸாதம் உண்டாய், அவனது ஸர்வோத்தமமானதும், ஸர்வகர்ம பந்தோபஶமமானதும், நித்யமானதுமான வைஷ்ணவம் பரமபதம்கிடைக்கும் என்றாகின்றது. ஸ்தலாந்தரத்திலும், பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே, என்பதால், இந்த ஸர்வஜகத்தும் வாஸுதேவாத்மகம் என்றறிந்தவன், அநேக ஜந்மாவஸாநே அந்த ஜ்ஞாநத்தை அடைந்து, மோக்ஷார்த்தம் பகவத் ப்ரபதநம் செய்கின்றான், என்று ஏற்படுகின்றது. இப்படிப் பகவத் ஶரணாகதியை குஹ்யாத் குஹ்யதரம் ஜ்ஞாநம் என்று, ஸ்ரீக்ருஷ்ணன் தமேவ ஶரணம் கச்ச என்னும் ஶ்லோகத்தின் பின்னால் உரைக்கின்றார். பூர்வம், தானே அந்தர்யாமி எனும் உண்மையை ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: என்று அருளிச்செய்திருந்தும், அந்தர்யாமியை ஈஶ்வர சப்தத்தால் சொல்லி, மறுபடியும்தானே ஈஶ்வரன் எனும் ஜ்ஞாநதார்ட்ய நிமித்தமாக, ஸர்வதர்ம பரித்யாக பூர்வகமாகத் தன்னையே ஶரணமடையும்படியாகப் பகவான் அர்ஜுநனுக்கு முடிவாக உபதேசித்து, அந்த ஶரணாகதியின் பலனாகத் தனதுக்ருபையால் ஸர்வபாபக்ஷயத்தையும் காட்டியருளினார். பாபம் க்ஷயித்தால் மோக்ஷம் பலிக்கும் என்பது அர்த்தாத்ஸித்தம். ஆதலால் பகவத்ஶரணாகதி யெனும் வித்யாவிஶேஷமானது உபநிஷத்தில் குறிக்கப்பட்டும், பகவானால் கீதையில் பலதரமும் விதிக்கப்பட்டுமிருக்கின்றது. இப்படிக்கீதையில் விதிக்கப்பட்டது பக்தியோக நிஷ்டனுக்கு அங்கப்ரபத்தியாகவும், அகிஞ்சனுக்கு ஸ்வதந்த்ர ப்ரபத்தியாகவும் முடிகின்றது. இருவர்க்கும் கோலின பலம் ப்ரபத்தியினால் ப்ரஸந்நனான ஈஶ்வரனுடைய க்ருபையால் உண்டாகின்றது.

ப்ரஹ்ம ஸூத்ரத்தில் த்ருதீயாத்யாய த்ருதீயபாதத்தில் ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணத்திலும் விகல்பாதிகரணத்திலும் உபநிஷத்வித்யைகளின் நாநாத்வத்தையும், அவற்றின் பலம் ஏகரூபமென்பதையும் ஸமர்த்தித்திருக்கின்றது. இங்கே ஸ்ரீபாஷ்ய பங்க்தியில் வித்யைகளை விவரிக்குமிடம், முடிவில்வரும் ஆதிசப்த வ்யாக்யாநமாக, ச்ருதப்ரகாசிகாசார்யர் ஆதிசப்தத்தால் ந்யாஸ வித்யை விவக்ஷிதமென்று, பகவத்ராமாநுஜனுடைய திருவுள்ளத்தை வெளியிடுகின்றார். விகல்பாதி கரணத்திலும், ஸுக்ருஷ்டிநுபூர்வ ணை ந்யாஸவித்யாஸிஷ்டா, என்று உபநிஷத் வித்யைகளுடன் ந்யாஸ வித்யையும்சேர்த்து, அதற்கும் அந்த வித்யைகளுடைய பலந்தான் பலமென அருளிச்செய்கிறார்.

கீதையில் ந்யாஸவித்யையை குஹ்யாத்குஹ்யதமம் என்றன்றோ பகவான் அருளிச்செய்தார்? அப்படியே தைத்தரீயோபநிஷத்தில், ந்யாஸவித்யா ப்ரகரணத்தில், தத்வித்யா ப்ரசம்ஸநமாக, ய ஏவம் வேதேத்யுபநிஷத் தேவாநாம் குஹ்யம் (இது மஹோபநிஷத் ப்ரதிபாத்யம், தேவர்களுக்கும் மறைக்கப்பட்டு அறியத்தக்கது) என்று சொல்லியிருக்கிறது. ப்ரபதநத்துக்குக்கரண மந்த்ரமான ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத எனும் மந்த்ரத்தில் வருகின்ற உபாஸீ சப்தத்திற்கு ஸாதநம் உபாஸீத என்று வ்யாக்யாந மிருக்கின்றபடியையும், ஜீவன் பரமாத்ம சேஷன் எனும் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் ப்ரணவத்தால் ஸ்வாத்ம ஸமர்ப்பணவிதி அங்கிடம் ப்ரகாசிக்கின்ற படியையும்கண்டு, ந்யாஸ வித்யை உபநிஷத் வித்யைகளில் ஒன்றென்பதை யார்தான் மறுக்கக்கூடும்.

இந்த வித்யைக்கு மற்றவித்யைகளைக் காட்டிலும் ஏற்றத்தைப் பகவான் லோகஹிதத்தை உத்தேசித்து ஸ்வயமே ஸ்வாவதாரங்களில் காட்டியருளினன்.

பத்ராதிபர்.

# அஹோபில மாஹாத்ம்யம்.

## நான்காவது அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

புராணங்களாலாவது, இதிஹாஸங்களோடு கூடிய ஸ்ம்ருதிகளாலாவது எப்படி நமக்கு அவமாநமுண்டாகாதோ, அப்படிக்கு நாம் ப்ரயத்நம் செய்யக்கடவோம். இதில் ஸம்சயமில்லை," என்று காடுகள்தோறும் போயின. எல்லா வேதங்களும் பர்வதத்திலேறி, லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு முன் புறத்தில் ரோமாஞ்சம் உண்டாகும்படி அதிபயங்கரமான தபஸ்ஸைச் செய்தன. பிறகு பகவான் ப்ரஸந்நனாகி, ஜடையைத் தரித்து, அந்த வேதங்களைப் பார்த்து "உங்களைக்குறித்து ஸர்வலோகமும் மயிர்க்கூச்செறியும்படி தவஞ்செய்கிறபொழுது, ஆத்மஜ்ஞாநமில்லாதவன் போல் கோரமான தவத்தை நீங்கள் ஏன் செய்கிறீர்கள்?" என்றார். அப்போது வேதங்கள் "ஸர்வமும் தெரிந்த ஜ்ஞாநதனே! ஹிதத்தையும் அஹிதத்தையும் தேவரீர் அறியமாட்டீரோ? ப்ரபுவே! ஈசனே! அயலார்போல் ஏன் மயக்குகிறீர்?" என்றன.

ஸ்ரீபகவான்:—உங்களுடைய கதையெல்லாம் அறிவேன். அது அவ்வாறே ஆகக்கடவது. நிச்சயம். இந்த்ராதி தேவதைகளாலும், அஸுரர்களாலும், மற்றும் எவராலும், வேதங்களே! ஒருபொழுதும் உங்களுக்கு அவமாநம் உண்டாகப்போகிறதில்லை. அவ்வாறு எவர்கள் வேதங்களின் மார்க்கங்களை நிந்திக்கிறார்களோ, அவர்கள் எல்லாரும் பாஷண்டிகளாவர். எந்த சாஸ்த்ரங்களும், புராணங்களும், இதிஹாஸங்களும், ஸ்ம்ருதிகளும் உங்கட்கு விருத்தங்களோ, அவைகள் அதிகமாயிருந்தபோதிலும், பல விதங்களாக இருப்பினும், கள்ளுடன் சேர்ந்த கங்காஜலம் போலக் கெட்டவைகளாகும். இது முதல் இந்தப் பர்

வதத்தை, இவ்வுலகம், உங்களுடைய பெயரைக்கொண்டு வேத பர்வதம் என்று சொல்லப்போகிறது. நிச்சயம். இப்படி உங்களுக்கு வரம் என்னால் அளிக்கப்பட்டது'' என்று சொல்லி அந்தர்த்தாநம் அடைந்தார். அது முதல் இந்தப் பர்வதத்துக்கு வேதபர்வதம் என்கிற பெயர் உண்டாயிற்று. லக்ஷ்மீ கடாக்ஷம் விழுந்ததனால் இந்தப் பர்வதம் எப்பொழுதும் பழங்கள் புஷ்பங்கள், கொடிகள், இவைகளால் நிறைந்து ப்ரகாசிக்கின்றது. வேதாசலத்தின் மேற்குப் பாகத்தில், லக்ஷ்மீ இருக்கும் இடத்திற்கு அருகில், தென் திசையை நோக்கிக்கொண்டு பகவானை யோகாநந்த ந்ருஸிம்ஹன், மஹாத்மாவான ப்ரஹ்லாதனுக்கு யோகாப்யாஸத்தைச் செய்துவைத்தார். அது முதல் லோகங்கள் அவரை யோகாநந்தர் என்று சொல்லுகின்றன. அதற்கு வாயு திக்கில், பகவானை ந்ருஸிம்ஹன், யோகாநந்த ரூபியாய்க் குகையில் ப்ரகாசிக்கிறார். கருடாசலத்தின் தெற்கில் பாவநம் என்ற தீர்த்தம் இருக்கிறது. அங்கு பகவானாகிய விஷ்ணு நரசிங்க ரூபத்தைத் தரித்தவராயிருக்கிறார். அந்த ந்ருஸிம்ஹன் தன்னை அடைந்த ஜந்துக்களுக்கு வேண்டியதைக் கொடுக்கிறார். கருடாசலத்தின் மேற்றிசையில், ஸமீபத்தில் குந்துமணி மரம் ஒன்று இருக்கிறது. அதன் அடியில் ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். அதற்குத் தென்மேற்கு மூலையில் ஒரு மைல் தூரத்தில் குடைபோல் கவிழ்ந்துகொண்டிருக்கும் ஆலமரத்தின் நிழலில் ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். அதற்கு வடக்கில் பர்வதங்களினால் சூழப்பட்ட தீர்த்தங்களுள் மேலான பார்க்கவ தீர்த்தத்தில் ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். அசலச்சாயமேரு வென்கிற பர்வதத்தின் நடுவில் ஜ்வாலா ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஒன்பது ந்ருஸிம்ஹர்களும் ஒன்பது விதமான மாதிரிகளை யுடையவர்கள். ஒவ்வொரு ந்ருஸிம்ஹனுடைய ப்ரபாவமே, ப்ருஹ்மாவினாலும் சொல்ல முடியாது. ஆனாலும், கொஞ்சம் கொஞ்சம் தனித் தனியே வரிசைக்ரமமாகச் சொல்லுகிறேன்.

மதுஸூதநனாகிய பகவான் வராஹ ரூபியாய் இங்கே எழுந்தருளியிருக்கிறார். இது, க்ஷேத்ரங்களுக்குள் உத்தமோத்தமமான வராஹக்ஷேத்ரமென்று சொல்லப்படும். இவ்விடத்தில்



பகவானுடைய ஸந்நிதியில், வ்ருதநியமத்தோடு கூடியவர்களாய், எவர்கள் வைஷ்ணவ மந்த்ரத்தை ஜபம் செய்கிறார்களோ, ஏழு அல்லது ஐந்து தினங்களுக்குள்ளாகவே அவர்கள் ஸித்தியைப் பெறுகிறார்கள். ஸந்தேஹமே இல்லை. பூமியில் விருப்பமுள்ளவர்களாயினும், ராஜ்யத்தில் விருப்பமுள்ளவர்களாயினும், எந்த மனிதர்கள் இந்த ஸ்தோத்ரத்தைக் கொண்டு, காலையிலும் மாலையிலும் நியதர்களாய் 6 - மாஸகாலம் ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அவர்கள் விரும்பியவற்றை அடைவார்கள். "ஸர்வரூபியாயும், கத்தியைத் தரித்தவராயுமிருக்கிற தேவரீரை நமஸ்கரிக்கிறேன்; இதிலிருந்து இப்பொழுது என்னைத் தரிக்கக்கடவீர். முன்பு நான் உம்மிடத்திலிருந்தே உண்டானவள்; உம்மாலேயே தரிக்கப்பட்டவள். ஜநார்த்தநனே! உம்முடைய ரூபமாகவே இருந்தவள். அப்படியே ஆகாயம் முதலிய பூதங்களும், மற்றும் எல்லாம் உம்முடைய ரூபமே. பரமாத்மாவே! உம்மை நமஸ்கரிக்கின்றேன். புருஷரூபியே! உம்மைத் தொழுகின்றேன். ப்ரதாநவஸ்துவாயும் காலமாகவு மிருக்கிற உம்மை ஸேவிக்கிறேன். எல்லாப் பூதங்களையும் படைப்பவர் நீர்; தந்தையும் நீர்; நாசம் செய்பவரும் நீர். ஸ்ருஷ்டிக்கு முதலில் இருக்கிற பரப்ப்ருமமும் நீர். விஷ்ணு ருத்ரர்களுடைய ரூபத்தைத் தரித்தவரும் நீரே. லோகங்களை யெல்லாம் விழுங்கியபின், லோகமெங்கும் ஓரே ஸமுத்ரமாகச் செய்த காலத்திலும், ஜ்ஞாநவான்களால் த்யாநிக்கப்படுகிற தேவரீரே மிகுதியாக இருக்கிறீர். கோவிந்தனே! உம்முடைய பரரூபத்தை ஒருவரும் அறிய வில்லை. அவதாரங்களிலுள்ள ரூபத்தைத் தேவதைகள் பூஜிக்கிறார்கள். பரப்ருஹ்மமே! முமுக்ஷுக்கள் உம்மையே ஆராதித்து முக்தியை அடைந்தார்கள். வாஸுதேவனை ஆராதிக்காமல் எவன்தான் மோக்ஷத்தை அடைவான்? எந்த ரூபம் மநஸ்ஸினாலும் புத்தியினாலும் அறியத்தக்கதோ, கண் முதலியவைகளால் அறியக்கூடாததோ அப்படிப்பட்ட ரூபங்களெல்லாம் உம்முடையதே. நான் உம்முடைய மயமானவள். உம்மையே ஆதாரமாக உடையவள். உம்மாலேயே ஸ்ருஷ்டிக்கப்பட்டவள். உம்மையே ஆச்ரயித்தவள். ஆகையினாலேயே என்னை மாதவியென்றே அறியத்தக்கவளாய்ச் சொல்லுகிறது. எல்லா ஜ்ஞாநமு மாகிறவரே! ஸ்தூல ரூபியானவரே! ஆநந்த மயமானவரே! அவ்யக்திரூபியே!

வ்யக்தரூபமான ப்ரபுவே! பராபர ரூபியே! ப்ரபஞ்சரூபியே! யஜ்ஞபதியே! தோஷமில்லாதவரே! ஜயிக்கக்கடவீர். யஜ்ஞமும் நீரே. வஷட்காரமும் நீரே. ஓங்காரமும் நீரே. அக்நிகளும் நீரே. வேதங்களும் நீரே. ஆறு அங்கங்களும் நீரே. ஹரியே! யஜ்ஞ புருஷனும் நீரே தான். ஸூர்யன் முதலிய க்ரஹங்களும், தாரைகளும், நக்ஷத்ரங்களும், எல்லா உலகமும், ரூபத்தோடு கூடிய வஸ்துக்களும், அரூபியான வஸ்துக்களும், கண்ணால் காணக்கூடியதும், காணக்கூடாததும், என்னால் சொல்லப்பட்டதும், சொல்லப்படாததுமாகிய எல்லாம், பரமேச்வரனான புருஷோத்தமனே! நீரே தான். உம்மை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன்" என்று பூமிப்பிராட்டி பகவானைக் குறித்து ஸ்தோத்ரம் செய்தாள். இதை எந்த மனிதர்கள் படிக்கிறார்களோ, லோகத்தில் மனிதர்களைக் கேட்பிக்கிறார்களோ, அவர்கள் உயர்ந்த ஸித்தியை அடைகிறார்கள். பூமியிலுள்ள எல்லாப் பலன்களையும் அடைகிறார்கள். வேதாசலத்தினுடைய அழகிய சிகரத்தில் லக்ஷ்மீ க்ஷேத்ரம் என்று சொல்லப்பட்டதல்லவோ? அவ்விடத்தில் பகவானாகிய விஷ்ணு, ந்ரஸிம்ஹ ரூபியாய் லக்ஷ்மியோடு கூட வஸிக்கிறார். எந்த மநுஷ்யர்கள் லக்ஷ்மியினிடத்தில் பக்தியுள்ளவர்களாய் இம்மையில் ஸம்பத்தையாவது, இந்த்ர பதவியையாவது விரும்பி, லக்ஷ்மீ ந்ரஸிம்ஹனுடைய அஷ்டாக்ஷரத்தை, ஹோமமும் செய்ததன் மிகுதியைப் புஜித்துக்கொண்டு, 6-மாஸகாலம் ஜபிக்கிறார்களோ, அவர்கள் ஏராளமான ஸம்பத்தையும் அல்லது விரும்பினவற்றையும் அடைகிறார்கள். யோகாநந்த ந்ரஸிம்ஹனுடைய க்ஷேத்ரம் யோக க்ஷேத்ரம் என்று சொல்லப்படும். அவ்விடத்தில் யோகிகளான ருஷிகள் தவத்தைச்செய்து அதன் ஸித்தியைப் பெற்றார்கள். முன்பு, சதுர்முகனாகிய ப்ருஹ்மா, சஞ்சலமான மநஸ்ஸோடு கூடியவராய், அவ்விடத்தில் கோவிந்தனை ஆராதித்து, ஸ்திரமான மநஸ்ஸையுடையவராக ஆனார். மனிதர்களுக்கு மநஸ்ஸு ஸ்திரமாகி விட்டால் பூமியில் கிடைக்காதது எது? பாவநமான இந்த க்ஷேத்ரரத்நம் லோகத்தையெல்லாம் பரிசுத்தப்படுத்துவதாகச் சொல்லப்படும். இவ்விடத்தில் பரத்வாஜர், முன்பு ப்ரும்மஹத்தையைப் போக்கடித்துக்கொண்டார். எவர்கள் பஞ்சமஹாபாதகங்களைச் செய்தவர்களோ, எவர்கள் உபபாதகமுடையவர்களோ, எவர்கள் ஜாதிக்கு நழுவுதலைச்



செய்தவர்களோ, எவர்கள் வேறே சில பாபங்களைச் செய்தவர்களோ, அவர்கள் எல்லோரும் இந்த க்ஷேத்ரத்தைத் தர்சித்ததனாலேயே அந்தப் பாபங்களிலிருந்து விடப்படுகிறார்கள். பகவான் சார்ங்கத்தையும் சக்ரத்தையும் தரித்தவராய் எந்த காஞ்சமரத்தின் அடியில் வஸிக்கிறாரோ, பவநாசிநீயின் அண்டையிலிருக்கிற அது, காஞ்சக்ஷேத்ரம் என்று சொல்லப்படும். எவர்களுக்கு ஸ்நாநத்தில் இஷ்டமோ, எவர்களுக்கு ஜ்ஞாநத்தில் விருப்பமோ, அவரவர்கட்கு அந்தந்த பலத்தைப்பகவானாகிய ந்ரஸிம்ஹன் கொடுத்தார்.

முன்னொரு காலத்தில் தூர்வாஸஸ்ஸால் சபிக்கப்பட்ட கோபிலரென்னும் முனிச்ரேஷ்டர் மந்த்ரராஜனை ஜபித்துக்கொண்டே கொஞ்ச காலம் தவம் செய்தார். வித்வானாகிய கோபிலர், மநஸ்ஸில் எல்லா சாஸ்த்ரங்களிலும் தேர்ந்தவராகவேண்டுமென்று விரும்பினார். பிறகு பகவான், ப்ரஸந்நனாகி அன்புடன் கோபிலரை நோக்கிப் பின் வருமாறு சொன்னார்:—"உம்மிடத்தில் ஸந்தோஷமடைந்தேன். உமக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது. உமக்கு சாஸ்த்ரஜ்ஞாநத்தைக் கொடுத்தேன். ஸாராஸாரவிவேகமுடையவனாய், எல்லா சாஸ்த்ரங்களிலும் ஸமர்த்தனாகி, முடிவில் வைராக்யத்தைப் பெற்று, என்னுடைய இடத்திற்கே வரக்கடவீர். இது முதல் எவர்கள் இங்கே என்னைக் குறித்து மந்த்ரச்ரேஷ்டமான ந்ரஸிம்ஹ மந்த்ரத்தை ஜபிக்கிறார்களோ அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கிறேன்" என்று, கோபிலரிடத்தில் சொல்லிவிட்டு அங்கேயே அந்தர்தானத்தை அடைந்தார். அப்படியே சத்ரவட க்ஷேத்ரமும் இந்த்ரன் முதலியவர்களால் ஆச்ரயிக்கப்பட்டது. எங்கே பகவான் கீழ்த்திசையை அநுக்ரஹித்துக்கொண்டு, ந்ஸிம்ஹரூபியாய் எழுந்தருளியிருக்கிறாரோ, அந்த க்ஷேத்ரத்தில் ஸித்த கந்தர்வ யக்ஷாதிகள் அநேகமாயிரமாய்ப் பலவிதமான காநங்களால் புருஷோத்தமனைக்குறித்துப் பாடுகிறார்கள். ஹாஹா ஹூஹூ என்னும் கந்தர்வர்கள் மேருவினின்று வந்து, ந்ரஸிம்ஹன் திருமுன்பே ஸ்வரத்தோடு கூடிப் பாடினார்கள். நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்கிற இந்த ஸப்த ஸ்வரங்களும் மங்களத்தைக் கொடுக்கத்தக்கவைகள்,

இவைகளின் பேதத்தையும், காலங்களின் அளவையும் தெரிந்துள்ளவர்களாகவிருக்கிற அவர்களைப் பார்த்து ஹரியானவர் அதிக ப்ரீதி யடைந்தவராய் ச்ரேஷ்டமான வரத்தைக் கொடுத்தார். "இது முதல் லோகத்தில் பாடகர்களுள் நீங்களே உத்தமர்கள். லோகத்தில் உங்களைப் போன்ற பாடகர்கள் உண்டாகப் போகிறதில்லை. எவர்கள் பரத சாஸ்த்ரத்தில் நியதமான க்ரமத்தைச் சொல்லுகிறார்களோ, அவர்கள் உங்களைக் கானத்தில் தேர்ந்தவர்களாயும் ப்ரஸித்தர்களாயும் இருப்பதாகச் சொல்லப் போகிறார்கள். அப்படியே பார்க்கவ க்ஷேத்ரம் என்னும் பெயரையுடைய ஒரு க்ஷேத்ரமிருக்கிறது. அது ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கிற புண்யகரமான ஓர் ஸ்தலம். அங்கே தான் மூன்று லோகங்களையும் ரக்ஷிக்கிற அக்ஷய தீர்த்தமிருக்கிறது. அதன் கரையிலுள்ள பர்வதத்தில் ந்ரஸிம்ஹன் ஸமீபத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாமரைகளாலும் ஸௌகந்தங்களாலும், மலர்ந்த நீலோத்பலங்களாலும், நான்கு பக்கங்களிலும் கடப்பை மரங்களாலும், நீர்வஞ்சிக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டதாயும், ஹம்ஸங்களாலும், நீர்காக்கைகளாலும் நிறைந்து, ஸம்ஸார தாபத்தைப் போக்குவதில் மேலானதாயுமிருக்கிற பலா, பாதிரி, கமுகு, முதலிய அநேக பழங்களோடு கூடிய மரங்கள் நிறைந்த வனங்களாலும், உபவனங்களாலும், சூழ்ந்த அக்ஷய தீர்த்தம், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியதாகச் சொல்லப்பட்டது. எவன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நியமங்களோடு கூடியவனாய், உறுதியான வ்ருத்தத்தையுடையவனாய், பரபக்தியோடு அதோக்ஷஜனாகவும் தேவேசனாகவும் இருக்கிற பகவானைப் பூஜிக்கிறானோ, அவனுடைய ஓரடியினாலேயே பரமபுருஷனுடைய பதவியான மோக்ஷம் ஆக்ரமிக்கப்பட்டதாகிறது. எவனுடைய கையில் மோக்ஷமே இருக்கிறதோ, அவனுக்கு அற்பமான ஸுகங்கள் எவ்வளவு? இப்பொழுதும் பார்க்கவர் அவ்விடத்தில் உறுதியான தபஸ்ஸைச் செய்கிறார். எவர்கள் பார்க்கவரை அநுஸரித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிற பக்தவத்ஸலனைத் தாம் தாம் இஷ்ட பலத்தைக் கருதினவர்களாய், ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அல்லது நமஸ்கரிக்கிறார்களோ அவர்கள் ஸித்தியை அடைவார்கள். இந்தத் தீர்த்தத்தை அடைந்து வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகள் ந்ரஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தினால் தங்கள் தங்கள் பதத்தை யடைந்தார்கள்.



ஜ்வாலா க்ஷேத்ரம், என்னும் முக்தி க்ஷேத்ரம், பிசாசு முதலிய கெட்ட க்ரஹங்களைப் போக்கத்தக்கது. அங்கே வ்ருதத்தோடு நியமமாக இருக்கிற ருஷிகள் அதிக கவலையில்லாமலே இருக்கிறார்கள். எவர்கள் கார்த்திகை மாஸத்தில் நியமத்துடன் கூடியவர்களாய், நெய்யினாலாவது, எண்ணெயினாலாவது தேவதேவனுடைய ஸந்நிதியில் தீபமேற்றுகிறார்களோ, அவர்கள் தேஜஸ்ஸோடும் காந்தியோடும் கூடியவர்களாய்ப் பகவானுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறார்கள். ஆயிரம் ஸூர்யன் உதித்தாற்போன்ற தேஜஸ்ஸையுடையவராயும், வஜ்ராயுதம் போலிருக்கிறவராயும், தன்னுடைய கண்களினால் நெருப்பைக் கக்குகின்றவராயும், மின்னலின் ஸமூகத்துக்கு ஸமானமான ஸடைகளால் பயங்கரமாயும், திவ்யமாயும் கூர்மையாயுமுள்ள நகங்களால் ப்ரகாசிக்கின்ற அநேகம் பாஹுதண்டங்களால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற தேஹத்தையுடையவராயும், அநேக பேதங்களையுடையவராயும், பிளக்கப்பட்ட ஹிரண்யனுடைய தேஹத்தை அணிந்தவராயுமுள்ள பெரிய ரூபத்தையுடைய ந்ருஸிம்ஹனைப் பஜிக்கிறோம். இப்படி ஒன்பது க்ஷேத்ரங்களுடைய மஹிமையும் சொல்லப்பட்டது. ந்ருஸிம்ஹனால் அடையப்பட்ட இன்னும் அநேக க்ஷேத்ரங்களும் இருக்கின்றன.

சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்.

# ஜநகநந்தினி.

## ஓர் உபாக்யாநம்.

காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா, என்று, ஆகமாந்தார்யனாலும், நகர்கட்குள் காஞ்சியெனக் கவிஶ்ரேஷ்டனாலும் புகழ்பெற்ற கச்சிமாநகர்கண், ப்ராஹ்மணரில் உயர்குலத்தோ ரெனப்பட்டவரும், ஆத்ரேய வம்சத்தில் பிறந்தவருமான கேசவாசார்யரெனப் பெயர்வழங்கிய வித்வானொருவர் இருந்தார். அவர் க்ருஷ்ணபக்தர். ஸாமான்ய சாஸ்த்ரங்களிலும், வேதாந்த சாஸ்த்ரங்களிலும் கரைகண்டவர். ஜ்ஞாநத்தாலும், அநுஷ்டாநத்தாலும் கீர்த்தி பொருந்திய புண்டாரீசாக்ஷமிஶ்ரரெனும் பெரியோரை ஆசார்யனாக அடைந்தவர். ஸச்சரித்ர மெனப்பட்ட வைதிக தர்மங்களைப் பகவானுடைய ஆஜ்ஞா கைங்கர்யங்களென நினைத்து நியமத்துடன் அநுஷ்டித்துக் கொண்டுவந்தவர். பரமபுருஷன் க்ருபையால் பிதாமூலமாகக் கிடைத்த அற்பமான பூஸ்திதியினின்று கிடைத்த தான்யத்தைக் கொண்டு, த்ருப்தியுடன் சரண்யன் ஆராதனத்தைச் செய்து கொண்டு சரீரயாத்ரையை நடத்திக்கொண்டுவந்தார். ஸத்ஸங்கத்தினால் அவர் காமம், குரோதம் முதலான துர்குணங்களைக் கூடியமட்டும் ஜெயித்தவர். ஆசார்யன் இருக்கையிலும் அநேக சிஷ்யர்களால் ஆஶ்ரயிக்கப்பட்டவர். அவர் தம்பெரியோர் வஸித்த இடம்படாத தம்முடைய இல்லமதில், கற்பில்சிறந்த ஹரிப்ரியை எனும் மனைவியுடனும், பத்தாம்பிராயத்தை முடித்திலாத அழகில்சிறந்த ஜநகநந்தினி யெனப் பெயர்வாய்ந்த தமது பெண்மணியுடனும், இல்லறம் நடத்திவந்தார்.



ப்ராஹ்ம முஹூர்த்த மெனப்பட்ட அருணோதயத்திற்கு முன்பாகவே இவர் துயிலெழுந்து, பகவானுடைய நாமங்களை உச்சரித்துவிட்டு, “ பவக்கடலில்களித்து விளையாடும் நலமறியாத மானிடர்கள், தாமரைக்குளத்தில் விளையாடக் காலிட்ட மதங்கொண்ட யானையானது முதலையால் ஆக்ரமிக்கப்பட்டதுபோல், ஒருகாலத்தில் தம்முடைய தீவினையால் ஆக்ரமிக்கப்படுகின்றார். அந்தக் கஜேந்த்யன் தனக்கோர் ரக்ஷகரைக் காணாமல் ஜகத்காரணனை நினைத்துக்க-வவே, எங்கும் நிறைந்த இறைவன், தன்பக்தன் துயர்நீக்கத் துரிதமாய்க் கருடன்மீதேறி வருபவனென, அவனுக்குக் காட்சிதந்து காத்தானன்றோ? தீவினையில் மூழ்கித்தமது ரக்ஷணத்தில் அஸமர்த்தராய்க்கதறும் எம்போலியரையும் அந்தப்பகவான் ரக்ஷிக்கட்டும். அதற்காக இந்த விடியற்காலத்தில் அவனை நான் ஸ்மரிக்கின்றேன்; மநத்தாலும், வாக்காலும், சிரத்தாலும், பரமபுருஷனான நாராயணன் திருவடிகளை வணங்குகின்றேன். பூர்வம் என்னால் ஸம்பாதிதங்களான எனது ஸர்வபாபங்களினின்றும் எனக்கு அபயம்தரவல்ல பரமனை இவ்விடியற்காலத்தில் பஜிக்கின்றேன் ” என்றிவ்விதமாகப் புருஷோத்தமனைத்யாநித்தார்.

பிறகு ஶாஸ்த்ரம் விதித்த நியமங்களைத் தவறாமல் தத்காலம் கர்தவ்யங்களை யநுஷ்டித்துவிட்டு, ஶ்வேதபுஷ்கரிணிக்குச்சென்று, ஸ்நாந ஸந்த்யோபாஸநாதி ஆஜ்ஞா கைங்கர்யங்களை முடித்துக் கொண்டு, அந்த வித்வான் ஸ்வாவாஸம் வந்து சேர்ந்தனர்.

அவர் எழுந்திருந்து பகவானுடைய நாமங்களை உச்சரிக்குமளவில் விழித்துக்கொண்ட அவருடைய பத்நி வீட்டிற்குரிய ஶுத்திகளைச் செய்துவிட்டு, ஜநகநந்தினியை எழுப்பி, உசிதமான கோலங்களால் க்ரஹத்தை அலங்கரிக்கும்படி ஏவிவிட்டு, ஸ்நாநார்த்தம் அநந்த ஸரஸ்ஸுக்குச் சென்றனள். புருஷன் திரும்புவதற்குமுன்பே வீட்டிற்குத்திரும்பி அவராகமநத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனள். ஜநகநந்தினியும் வீட்டை ரங்கவல்லிக

ளால் அலங்கரித்துவிட்டுக் குளித்துச் சுத்தமான ஆடைதரித்து முகாலங்காரம் செய்துகொண்டு நின்றனள்.

கேசவாசார்யரும் வீட்டையடைந்து கைகால்கள் அலம்பிக் கொண்டு, ஆசமநம்செய்து, ஔபாஸநத்தால் அக்நிரூபதாரியான ஜநார்தநனை ஆராதித்துவிட்டு, எம்பெருமானுடைய ஸந்நிதியை நெருங்கி, அபிகமநா ராதநார்த்தமாக உசிதமான ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்துவிட்டுத் தன்வீட்டின் நடைத்திண்ணைமீது உட்கார்ந்து, க்ரந்தாவலோகனம் செய்து கொண்டிருந்தார்.

அவருடன்முன் காலக்ஷேபம் செய்தவர்களும், அவர் குருவினிடம் அப்போது காலக்ஷேபம் செய்பவர்களும், அவருடைய சிஷ்யர்களும் அக்காலம் அவரிடம் வருவதுவழக்கம். அந்தவழக்கப்படி மாதவாசார்யரென்பவரும், பத்மநாபாசார்யர் என்பவரும் அன்று கேசவாசார்யர் இல்லம் சென்றனர். வந்தந ப்ரதிவந்தநாதிகள் செய்துமுடித்தபிறகு, பின் விவரிக்கின்றபடி அவர்க்குள் ஸம்பாஷணைகள் நடந்தன. பத்மநாபாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, “ஸ்வாமிந்! அடியேனுக்கோர் ஸம்சயம் உளது. அதைத் தேவரீர் நிவர்த்திக்கவேண்டும். விசேஷ சாஸ்த்ரத்தின் அப்யாஸம் அநுஷ்டாநத்தில் பரிணமிக்க வேண்டும். நம்போலொத்தவர் ஸம்பாதிக்கும் ஜ்ஞாநத்துக்கும் நமது அநுஷ்டாநத்துக்கும் மிகுந்த வித்யாஸம் தென்படுகின்றது” என்றனர். “சொல்வதை விசதமாய்ச் சொல்லும்படி ப்ரார்த்திக்கின்றேன்” என்று கேசவாசார்யர் மொழிந்தார். பிறகு மாதவாசார்யர் “அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்கின்றேன். ஸம்சயவிஷயம் எங்களுக்குள்ளாகச் சர்ச்சைசெய்யப்பட்டது. சாஸ்த்ரஜ்ஞாநத்தின் ப்ரயோஜநம் பரமபுருஷார்த்தத்தை அடைவிக்கும் உபாயத்தில் புருஷனை ப்ரவ்ருத்திக்கச் செய்யவேண்டிய தன்றோ? இப்போது பண்டிதர்களுடைய அநுஷ்டாநங்களைப் பர்யாலோசித்தால், அந்த விஷயத்தில் ஸம்சயம் ஜநிக்கின்றது. உபாயாநுஷ்டாநம் அவர்



செய்யாதிருக்கவில்லை. ஆனால் ஜ்ஞாநத்துக்குத் தக்க சித்தபரிபாகம் அவரிடம் ப்ரகாசிப்பதாகத் தெரியவில்லை.” என்றனர்.

“தேவரீர்களுடைய உக்திகளில் கிஞ்சித் வைபரீத்யத்தை அபேக்ஷித்தவனாக அடியேன் இருக்கின்றேன்.” என்றுரைத்தார் கேசவாசார்யர். பத்மநாபாசார்யர் “ஆத்மஜ்ஞாநம் ஹ்ருதயத்தின் கட்டுகளை அவிழ்த்து நிவ்ருத்திமார்க்கத்தில் புருஷனை மூட்ட வேண்டும்; சித்தத்தில் பற்றிய காமங்கள் முற்றிலும் அதனால் நசிக்கவேண்டும். இவ்வண்ணம் சாஸ்த்ரம் முறையிடுகின்றது. ஜ்ஞாநம் சாஸ்த்ர பரிசயத்தால் உண்டானபின்பும், தாரபுத்ராதிகளிடம் பற்று நிலைக்கின்றது. அவருடைய போஷணார்த்தம் வித்வான்களும் ஸதா ப்ரவ்ருத்தர்களாய் நிற்கின்றார்கள். இவர்களும் உபாயாநுஷ்டாநம் செய்துவிட்டு, க்ருதக்ருத்யரெனத் தம்மை நினைத்துக்கொண்டு, ஸ்வநிஷ்டையின் ஸ்வரூபத்தை மறக்கின்றார்களன்றோ?” என்றுரைத்தார். உடனே மாதவாசார்யர் “ஆத்மாவைப்போல் ஸர்வப்ராணிகளையும் பார்க்கவேண்டிய தன்றோ? பண்டிதர் ஸமதர்சிகளா யிருக்கவேண்டும். அப்படி யிருக்கத்தமரென்றும் பிறரென்றும் பேதபுத்திதான் பெரியோருடைய அநுஷ்டாநங்களில் தெரிகின்றது” என்று சொன்னார்.

இதைக்கேட்ட கேசவாசார்யர் சிறிது யோசித்து விட்டுப் பின்வருகிறபடி யுரைத்தார். “தேவரீர்கள் ப்ரச்நங்கள் மிகவும் ஸரியாவாகவே யிருக்கின்றன. பகவத் ப்ராப்திக்கு உபாயங்கள் பலவாறாக விதிக்கப்பட்டன. இவற்றின் பலம்மாத்ரம் ஏகரூபமானது. கூடியவரையில் ஹ்ருதய பரிபாகம் எல்லா உபாய நிஷ்டர்களுக்கும் ஏகரூபமாகப் பரிணமிக்க வேண்டும். உபாயங்களில் குருத்வ புத்தியும் லகுத்வபுத்தியும், ஒவ்வொன்றின் அநுஷ்டாநத்தால் உண்டாகும் க்லேசங்களின் தாரதம்யத்தைப் பொறுத்து உதிக்கின்றன. பகுஜநங்கள் கடைத்தேறவேண்டும் எனும் ஸங்கல்பத்தைக்கொண்ட கருணைக்கடலாகிய நம்மிராமாநுஜனை லகுவான உபாயத்தைத் தமது ஸம்ப்ரதாயஸ்தர்க்குக் காட்டியருளினார்.

இதுதான் ப்ரபத்தி. த்ருஶ்ய பதார்த்தங்களில் பேதத்தை அநாதரித்து ஸர்வத்ரஸமனாய் நிலைத்திருக்கும் அந்தர்யாமியான புருஷனைத் தர்சிக்க வேண்டு மென்றால், மோக்ஷத்தை அபேக்ஷித்து உபாயாநுஷ்டாநம் செய்தவர்க்கெல்லாம் இது சாக்ஷாத்ப்ரத்யக்ஷ விஷயமன்று. இந்த விஶ்வாஸம் அவர் சித்தங்களில் த்ருடப்படவேண்டும். அந்த விஶ்வாஸ தார்ட்யம் அவருடைய அநுஷ்டாநத்தால் தெரியவேண்டும். எவ்வுயிர்க்குள்ளும் இருப்பவனான ஶரண்யனிடம் நாம் கொண்டபக்தியானது, அவ்வுயிர்க்கெல்லாம் நம்மைச் செந்தண்மை பூண்டொழுகச்செய்யும். பகவான் பொருட்டு ஸர்வத்ர அநுகூலபுத்தியும், ப்ரதிகூல ப்ரவ்ருத்தியை விலக்குவதும் ப்ரபந்நன் நியமமாக அநுஷ்டிக்கத்தக்கவன். லோகத்தில் புருஷரைக் கெடுப்பவை இச்சையும் த்வேஷமும். அஹங்காரமடியாகத் தமது சரீரங்களில் அபிமானமும், சரீர ஸம்பந்திகளிடம் மமதையும் இச்சையா லுண்டாகின்றன. இந்த இச்சையெனும் காமத்துக்கு ப்ரதிபந்திகளாய் நேரிடும் மனிதரிடம் க்ரோதமும், அதன்பயனான த்வேஷமும் உண்டாகின்றன. ஆதலால் அஹங்கார மமகாரங்களைச் சக்தியுள்ளவரையில் புருஷன் ஜெயிக்கவேண்டும். இந்த ஜெயம் அப்யாஸத்தால் ஸித்திக்கவேண்டும். ஜந்மாந்தரங்களில் அப்யாஸ தார்ட்யமுள்ளவர் ஸுலபமாக அவற்றை ஜெயிக்கின்றனர். ஶாஸ்த்ரஜ்ஞாநமும், சக்தியுள்ளவரையில் அதற்குத் தக்கபடி ஒழுக்கமும் ஏற்பட்டதாகில், மநுஷ்யர் ப்ராயேண பல உத்தேஶ்யங்களால் ப்ரவ்ருத்திமார்க்க நிஷ்டர்களா யிருக்கின்றபடியால், இந்த ப்ரவ்ருத்தியில் ஏற்பட்ட ஆபிமுக்யத்தையே ஸ்வாராதநமாகப் பரிணமிக்கும்படிக் கீதாசார்யன் அநுக்ரஹித்தனர். முதலில் வர்ணாஶ்ரமோசித கர்மங்களை அவன் பண்ணின ஆஜ்ஞையை அநுஸரித்து அவன் ப்ரீணநமாகச் செய்யும் பக்ஷத்தில, அவை அவன் கைங்கர்யமாக முடிகின்றன. அவற்றுள் ஸங்கத்யாகமும் பலத்யாகமும் நிஜமாக ஏற்படுமாகில், அவை பந்தத்தின்பொருட்டு ஆகமாட்டா. தாரபுத்ராதிகளுடைய போஷணையும், அதற்கு ஸஹாயமாக நிற்கும் வ்ருத்தியும், இன்



னும் ஒவ்வொரு புருஷனுடைய ஸ்திதியடியாக நேர்ந்த வ்யாபாரங்களும், பகவதாராதனமாகக் கொண்டாடப்படுவது ஈஶ்வராஜ்ஞை. தாரபுத்ராதிகளும் தாரபுத்ராதி ரூபமாகப் புருஷனுக்கு விஶ்வா ஸார்ஹராகக்கூடாது. அவர்க்குள் நின்ற அந்தர்யாமியினிடம் நமக்கு இருக்கவேண்டிய அன்புதான் அவரிடம் நாம் பாராட்டும் அன்பிற்குக் காரணமாகத்தக்கது. இவ்வண்ணம் அன்பானது ஒவ்வொரு பாகவதனாலும் ஸர்வத்ர பாராட்டப் பொருந்துமா என்று கேட்கவேண்டாம். பாராட்டத்தான் வேண்டும். இது சித்தத்தில் நிலைக்க யாவர்க்கும் பொருந்தும். சித்தத்தின்படி வாக்கும் இருக்கலாம். க்ரியாவிஷயங்களில் தாரதம்யம் ஏற்படுவது ஒவ்வொரு புருஷனுடைய சக்தியையும், அவனுக்குண்டாகும் அவகாசங்களையும்பொறுத்தது. தாரபுத்ராதி போஷணம் ஒவ்வொரு புருஷனுக்கும் தர்மமாக ஏற்பட்டது. உபபத்திக் குறைவால் ஒருவனுக்கு அவர் போஷணமே பெரும்பாரமாகலாம். அவன் அந்யருடைய போஷணத்தைப்பற்றி க்ரியாவானாகவேண்டாம். புருஷன் தாரபுத்ராதி போஷணத்தையும், கர்தவ்யமென்று நினைத்துப் பகவத் ப்ரீணநமாகவும், அந்த விஷயத்தில் தனது பற்றை விலக்கியும், செய்தானாகில், அவன் நிஷ்டைக்குக் குறையிலது. உபபத்யதிஶயம் உள்ளவன் அதற்கேற்றபடிப் பரோபகாரத்தையும் அநுஷ்டிக்கத்தக்கவன். அது அவனுக்கு ஸ்வதர்ம கோடிகளில் சேரும். இவ்விதமாக ப்ராப்தமாகும் ஆராதநம் விபுலமாயிருக்கவேண்டுமென்பது ஸ்ரீக்ருஷ்ணன் திருவுள்ளமன்று. அதில் புருஷனை மூட்டுகின்ற பக்தியின் ஆதிக்யத்தைத்தான் அவன் விரும்புகின்றான். ஆதலால். பகவான்.

> 𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
> 𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥
> 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
> 𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

என்றருளிச்செய்தான். சக்திக்குத் தக்கபடிச் செயப்பட்ட அல்ப பூஜையையும் அவன் அங்கீகரிப்பது புருஷனுடைய பக்தியைப் பொறுத்தது. பெரிதாயோர் கார்யம் செய்தெனக்கு அர்ப்பணம்

செய்யென்று அவன் கேட்கவில்லை. எதை உன் சக்திக்கு அநுகுணமாக நீ செய்கின்றையோ அதை (அதாவது, அதன் பலத்தை) எனக்குத்தந்துவிடு என்றவன் சொல்லியிருக்கின்றான். ஆதலால் பெரியோர் க்ரியாவந்தராயும், ஸங்கிஹித பந்துபோஷகராகவும் இருக்கக்குறையில்லை. "நியதம் ஸங்கரஹிதம், அராகத்வேஷத: க்ருதம் கார்யம் கர்ம ஸமாசர, ஸ்வயமேவ நியதம் ச்ரேய:, [illegible] ஜ்ஞாநாக்நி தக்³த⁴கர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா:, யஜ்ஞோ தாநம் தபஸ்சைவ பாவநாநி மநீஷிணாம், ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா ப²லாநி ச, கர்தவ்யாநீதி மே பார்த்த நிஸ்சிதம் மதமுத்தமம்." இத்யாதி வசநங்களை ஆலோசித்தால், பெரியோருடைய அநுஷ்டாநம் உபபந்நமாகத்தோன்றும். பகவானுடைய ஆஜ்ஞையை ஸ்மரித்துக்கொண்டு, தாம் அதன்படி அநுஷ்டிப்பதாக எண்ணிக்கொண்டு, ஸங்கிஹிதமான கர்மங்களைக் கர்தவ்யம் எனும் புத்தியால் செய்துகொண்டு, அவற்றினிடம் ஸங்கத்தை விலக்கிச் செய்தாராகில், அவருடைய ஜ்ஞாநத்துக்கும், க்ருதக்ருத்யதாபுத்திக்கும், தோஷம் சொல்லவொண்ணாது." என்று சொன்னார்.

இவ்வண்ணம் சிறிது காலம் ஸம்பாஷித்துவிட்டு மாதவாசார்யரும், பத்மநாபாசார்யரும் புறப்பட்டுப்போனார்கள். இவர்கள் வார்த்தைகளையும், தனது பிதாவின் உக்திகளையும், தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, ஜநகநந்தினி விடாமல் கேட்டனள். ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் அவளுக்கு மஹான்களுடைய க்ரஹத்தில் ஜந்மம் உண்டாயது. அந்தக்காரணத்தினாலும், அநவரதம் ஸாதுக்களுடைய வார்த்தைகளைக் கேட்பதினாலும், அவற்றைப்பற்றிப் பிதாவுடன் ஸம்பாஷிப்பதாலும், அந்யர்க்கு விளங்காத தத்வார்த்தம் யாவும் அவள் புத்தியில் தெளிவுடன் பதிந்தன. மற்றவர் சென்ற பிறகு பிதாவின் முன்சென்று, தண்டனிட்டு, இவ்வண்ணம் மொழிந்தனள்.



"அப்பா! அந்த ஸ்வாமிகளுடைய ப்ரச்நைகளையும் தேவரீர் விளம்பிய ஸமாதாநங்களையும் கேட்டேன். தேவரீர்க்கும் அடியேனுக்கும், பிதாவென்றும் புத்ரியென்றும், ஓர் ஸம்பந்த விசேஷத்தை நம்பி, அதனிமித்தம் ஸந்தோஷமும் கொண்டிருந்தேன். அந்த ரூபமான ஸம்பந்த ஜ்ஞாநத்தை அஸ்மதாதிகளிடம் தேவரீர் ஒழித்து வர்த்திப்பதாக அடியேன் நினைக்கும்படி நேரிட்டது."

"ஆனல் என்ன? நீ ஸாமாந்ய ஸ்த்ரீபுத்தி யுள்ளவளன்றே? தத்வார்த்தங்களை ஸததம் சிந்திப்பவளென்று உன்னை நான் எண்ணுகின்றேனே. விபீஷணன் தாரபுத்ராதிகளை த்யாகம்செய்துவிட்டு ராகவனைச் சரணமடையவில்லையா? ஸர்வபந்துக்களையும் நிவர்த்தித்துப் பகவானிடம் கோபஸ்த்ரீகள் அடிமை செய்ய விரும்பவில்லையா? தாரபுத்ராதிகளும், வித்தபோகங்களும் எந்தப் பரமாத்மா நிமித்தமாக நம் விச்வாஸத்துக்குப் பாத்ரமாகின்றனவோ, அந்தப் பரமாத்மாவினிடம் நமக்கு இருக்கவேண்டிய அன்பு அளவிடக்கூடியதன்றே! அவன் ஸர்வத்ர இருக்கின்றனையால், அவன்பொருட்டு ஸர்வமும் அவனைப்போல் அன்புடன் தர்சிக்கத்தக்கவையன்றோ? இந்த அன்பானது கேவலம் சரீர ஸம்பந்த ஜ்ஞாநத்தால் உண்டாகும் அன்பைக்காட்டிலும் மிக்கதன்றோ? ஆதலால் அத்தகைய அன்பை உன்னிடம் நான் பாராட்டுவதால் உனக்கு ஸந்தோஷம் குறைவானேன்?" என்று கேசவாசார்யர் கூறினர்.

இதைக்கேட்ட பெண்மணி, "அப்பா! நான் உம் பெண் என்பது நம்மிருவர்க்கும் தனிமையில் ஏற்பட்ட ஸம்பந்தம். இதனால் பரஸ்பரம் உண்டாகும் விச்வாஸம் நம்மிருவர்க்கும் அந்யத்ர உண்டாகாது. அந்தர்யாமி சிந்தனையால் உண்டாகும் விச்வாஸம் எல்லாரிடமும் ஸமந்தானே" என்றனள்.

"ஆகிலும் அந்த அன்பானது சரீர ஸம்பந்த ப்ரயுக்தமாக ஜநிக்கும் அன்பைக்காட்டிலும் ஆழ்ந்ததன்றோ?" என்று அவள் பிதா உரைத்தார். பெண்மணியும், "அது அப்படியிருக்கலாம். பகவத் ஸம்பந்த மடியாகவரும் அன்பை அடியேனிடம்போலவே மற்ற யாவரிடமும் தேவரீர் ஆவிஷ்கரிக்கவேண்டுமன்றோ?" என்று கேட்டாள். அதற்குக் கேசவாசார்யர், "மாநஸீகமாக அப்

படித்தான் இருக்கவேண்டும். வாக்கும் மநஸை அநுஸரித்துச் செல்லும். க்ரியையில், எனது பக்தி ஸங்நிஹித பந்துபோஷணத்தில் மாத்ரம் பர்யவஸிக்கும். பகவத் ஸங்கல்பத்தால் இது எனக்கு விஹிதமான பரம். உன்னுடைய ஐஹிக ஸம்ரக்ஷணையைப் பரமபுருஷன் என்னை வ்யாஜமாகக்கொண்டு நடத்துகின்றனாகையாலும், அந்த விஷயம் நமது சரீர ஸம்பந்தமடியாக ஏற்பட்டதாகையாலும், க்ரியையில், மற்றோரைக்காட்டிலும் உன்னிடம் நான் ஸமதர்சநரூபமான அன்பை விசேஷமாகப் பாராட்டுகின்றேன். ஆதலால் நீ வ்யஸநப்பட அவஸரம் இலதே. ஆழ்வார் பாசுரத்தை மறந்தையோ? வேதத்தின் படிப் புருஷனுக்கு ஏற்பட்ட ஆயஸ் நூறு வருஷம். அதில் பாதி உறக்கத்தில் கழிகின்றது. மிகுதியுள், பைசவம், பால்யம், வார்த்தகம் இவற்றின் பங்குகள் நீங்கப் பிணியாலும், துன்பத்தாலும் பீடிக்கப்பட்ட காலங்களையும் கழித்துப்பார்த்தால், சரீரங்களிலும், அவற்றால் வரும் ஸம்பந்தங்களிலும் பற்றுள்ளவர் மதியுள்ளவர் ஆகமாட்டார். ஆதலால் சரீரஸம்பந்தங்களை அதிகமாகப் பாராட்டவேண்டாம். பகவத் சேஷத்வம் ஸர்வஸமம். அந்த ஜ்ஞாநத்தாலும், பகவான் நம்மிருவரையும் ஐஹிகத்தில் சேர்த்துவைத்தபடியால், சேர்ந்து நாம் அவனுக்குச் செய்யும் ஆராதநத்தாலும், நமக்குள் உண்டாயிருக்கும் ஸ்நேஹமன்றோ வியக்கத்தக்கது? ஸமுத்ரத்தில் காற்று மழையில் ஒரு கட்டையுடன் மற்றொன்று சேர்ந்து, இரண்டும் சில காலம் கூடி மிதந்துகொண்டுபோய்க் காலாந்தரத்தில் ஓரலையால் பிரிக்கப்பட்டுத் தனித்தனியே பிரிந்துபோவதுபோல், சில ஆத்மாக்களின் கர்மபலமாக அவற்றிற்குச் சரீர ஸம்பந்தம் நேரிட ஜந்மமுண்டாவதும், அந்தக் கர்மம் அநுபவத்தால் முடிந்த பிறகு, அந்தச் சரீரிகள் ஒவ்வொன்றின் சரீர நாசத்தால் பிரிந்துபோகின்றதும் ஸஹஜந்தானே. பெண்ணே! ஜ்ஞாநமுள்ள உனக்கு இவ்விதமாக யோசனைகள் உதிக்கலாமோ?" என்று ஸமாதாநம் கூறினர்.

இதற்குள் மாத்யாஹ்நிகஸ்நாந ஸமயம் கிட்டவே கேசவாசார்யர் எழுந்துவிட்டார். ஜநகநந்தினியும் தனக்குரிய க்ருஹவ்யாபாரங்களைச் செய்யப்போனாள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ௵ ஆனி௴ [ஸஞ்சிகை 5.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**பாளையங்கோட்டை சைவஸங்கம்.**

பாளையங்கோட்டையில் சைவஸபை பொன்றிருக்கின்றதாம். அதனால் கூட்டப்பட்ட ஒரு சைவ ஸங்கம் ஜூன் மாஸம் 19-ம் தேதி அவ்வூர் ஹிந்துகலாசாலை முன்னால் கூடியதாம். ஸோமஸுந்தரம் பிள்ளை யென்றொருவர் ஸங்கத்தினர்க்கு நல்வரவு அளித்தனராம். உத்தம பாளையவாஸியான, டி. ஸுப்ரஹ்மண்ய முதலியார் என்பவர் ஸங்காத்யக்ஷராய் வரிக்கப்பட்டாராம். அவர் தொண்டைமண்டலம் வேளாளராம். அவர் ஐரோப்பாவுக்குப் போயினராம். அதனால் அவர்க்கோர் ஏற்றம் உண்டாயதாம். தேவாரம் பாடியபின், ஸங்கத்தின் வ்யாபாரங்களைத் தொடங்கினராம். சைவ ஸபை முப்பது வருஷங்களுக்கு முன் ஏற்பட்டதாம். த்ராவிட பாஷையில் பயிற்சியும், தர்மஸொத்துக்களின் ஸரியான பரிபாலநமும், த்ராவிட மதத் ஜநங்களுக்கு விச்வாஸத்தை யுண்டுபண்ணுவதும், இந்த பயங்களை நிறைவேற்றும் முறைகளைக் காட்டுவதும், அந்த

ஸபையின்கருத்துகளாம். அக்ராஸநாதிபதியின் உபந்யாஸத்தை நோக்கினால், பூர்வம் ஹிந்துக்களில் ஜாதிபேதங்கள் இல்லையென்றும், நிஷ்கர்ஷிக்கக்கூடாத காரணங்களையிட்டு, ஆரியர் முதலில் ஜாதிபேதங்களை யுண்டாக்கினாரென்றும், அநேக நூற்றாண்டுகளின் அநுபவத்தால் ஜாதியென்பது ஒரு பெரிய தீங்கென்பதும், தேசத்தின் வ்ருத்தியை அது தடுக்கிறதென்பதும் விளங்குகின்றதென்றும், படிப்பால் தான் ஜாதியெனும் கேட்டை வேர்பிடுங்கலாமென்றும், அந்த முடிவைச் சைவஸங்கம் ஸாதிக்கவேண்டுமென்றும், நன்னடத்தையும் தர்மமும் மதத்துக்கு ஆதாரங்களென்றும், பழையகாலத்து த்ராவிடர்க்குள் இக்குணங்கள் மிகவும் ப்ரகாசித்ததாகவும், தத்கால த்ராவிடரும் அவ்வண்ணமாக ஸங்கத்தார் முயலவேண்டுமென்றும், அவரது அபிப்ராயங்கள் வெளியிடப்பட்டன.

ஸங்கத்தவர் செய்த தீர்மானங்கட்குள், ஹிந்துக்கள் ப்ரௌடையான பெண்கட்கு விவாஹம் செய்வதால், அது வ்யவஹாராநுகுணமாக விருக்குமோவென்று ஸந்தேஹம் ஜநிப்பதால், ப்ரௌடா விவாஹ சட்டத்தை ஆமோதிக்கின்றனரென்பதும், உத்தரவாத மறியாத சில வைதிகப்ராஹ்மணர்கள், ஶாஸ்த்ரப்படி அவ்விவாஹம் நிஷித்த மென்பதை ஸங்கத்தவர்கள் நிரஸிக்கின்றனரென்பதும் விசேஷமாய் ப்ரகாசிக்கின்றன.

ஶாஸ்த்ரங்கள் ப்ரௌடா விவாஹத்தை நிஷேதிப்பது ஹிந்துக்களைக் குறித்ததன்று; ப்ராஹ்மணரைக் குறித்துத் தான் அந்நிஷேதம் விதிக்கப்பட்டது. சைவஸபையாரும், ஸங்கத்தாரும் ப்ராயேண சூத்ரரா யிருப்பாரென்று எண்ணுகின்றோம். அவர்கள் ஜாதிபேதங்களை அழிக்க முயல்கின்றாரல்லவா? சட்டமும் ப்ராஹ்மணரைப் பற்றித்தான் வேண்டப்பட்டதாக எண்ணுகின்றோம். சைவஸங்கத்தார் ஏன் அதைப்பற்றி வ்ருதா ப்ரமம் கொண்டாரோ தெரியவில்லை. சட்டத்திற்கு உபகாரமான தீர்மானங்கள் இவ்வண்ணம் பெருகுவதைச் சட்டஜநகர்கள் ஸந்தோஷித்தபோதிலும், ராஜாங்கத்தார், ஸம்பந்தமற்றவர்களுடைய தீர்மானங்களைப் பாராட்டமாட்டாரென நம்புகின்றோம்.

சிவன் ஆர்யதேவதை யென்றும், ஆகமங்களால் விஸ்தரித்த சைவஸமயம் ஆர்யநாட்டில் ஜநித்ததென்றும், நாம் எண்ணுகின்



றோம். இந்த மதம் த்ராவிடநாட்டில் பெருகவே, சிவபக்தரான நாயன்மார்கள் செய்த ஸ்தோத்ரங்கள் த்ராவிடர்க்கென்றே உதவின. இவற்றை த்ராவிட சைவர் விச்வஸித்து, அவற்றைக் கொண்டு சிவனை வழிபடுவதால் த்ராவிட சைவமென்று ஓர்மதம் உளதெனச் சொல்லக்கூடுமோ? ஆழ்வார்கள் செய்த ஸ்தோத்ரங்களால் த்ராவிட வைஷ்ணவமும் அவ்வண்ணம் தழைத்ததென்னலாம். இவ்வண்ணம் பெயர்கொள்ளும் ஸமயங்களில், ஆர்யரிடத்தும், அவர் ப்ரமாண க்ரந்தங்களிடமும், முதலில் உதாஸீநதையும், பின்னால் அவிச்வாஸமும், முடிவில் த்வேஷமும், பரம்பரையாக உண்டாவதைக் கண்ணுற்று, ப்ராஹ்மணரெனப்படுவோர் யோசிக்கத்தக்கவர். த்ராவிட சைவரும், த்ராவிட வைஷ்ணவரும் வர்ணாச்ரமங்கட்கும், அவற்றின் தர்மங்கட்கும் விரோதிகளாய்ப் பரிணமிக்கின்றனர். இதற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்கள் செய்யுள்களும் இடங்கொடுக்கவில்லை. கால பேதம் இதற்கு எம்மட்டும் காரணமாகின்றதோ என்பதையும் யோசிக்கவேண்டும்.

சைவஸங்கத்தார் இனித் தாமதமின்றி, வேளாளரும், கைக்கோளரும், செட்டிகளும், கோனான்களும், வண்ணான்களும், குயவன்களும், அம்பட்டரும், நாகஸ்வரக்காரரும், கள்ளரும், மறவரும், சாணார்களும், அகமுடையவரும், பள்ளிகளும், படையாச்சிகளும், கருணீகரும், தொட்டியரும், வேடரும், வில்லியரும், குறவரும், குருவிக்காரரும், நாயகரும், நட்டுவரும், துளுவரும், தோட்டக்காரரும், பள்ளரும், பறையர்களும், வள்ளுவரும், பணிசெய்பவர்களும், மற்றோரும், ஒன்றுகூடி, ஒருவர்க்கொருவர் பெண்களைக் கொடுக்கவும் வாங்கவும், ஸஹபோஜநமும் செய்யவும், வேண்டிய முயற்சிகளைத் தேடுவார்களென்று நம்புகின்றோம். இவருடன் கூடி யொன்றுபடச் சில பார்ப்பினரும் காத்துகொண்டிருக்கின்றனர் என்பது அவர்க்குத் தெரிந்த விஷயமே.

இப்படி யுண்டாகப் போகின்ற ஜநம் விப்ரத்வேஷத்தை விசேஷமாக வஹிக்குமென்பதை விப்ராபிமாநிகள் சிந்திக்கவேண்டும். அதற்கிருப்பிடம், தமிழ்நாடும் கேரளநாடுமாக ஏற்படும். ஆனால் ஜாதிக்ருதமான வழக்கங்களும், அபிமாநங்களும் எளிதில்

அழியமாட்டா. ஆர்யத்வேஷத்தால் மட்டும் த்ராவிடஜாதியார் என்பவர் ஐக்யத்தை அடையலாம். இதர அம்சங்களில் அவர்க்குள் ஐக்யம் ஸமீபகாலங்களில் உண்டாகுமென்று தோன்றவில்லை.

*    *    *    *    *    *

**ஸர்வஇந்தியா ஹிந்துஸபை.**

ஸநாதநதர்ம ரக்ஷணார்த்தமாக ஆர்யாவர்த்தத்தில் ஸ்தாபிதமான ஹிந்து ஸபையைப் பற்றியும், இவ்வருஷம் அதன் முயற்சியால் ஹரித்வாரத்தில் நடந்த ஸங்கத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கின்றோம். அதன் நிர்வாஹஸபைக்குக் காஸிம்பஜார் மஹாராஜா ஸர், மணீந்த்ர சந்த்ர நந்தி, எம்., ஏ., கெ., ஸி., ஐ., ஈ.; எனும் ப்ரபு அத்யக்ஷ ஸ்தாநத்தை வஹித்தார். ஹாநரபில், பண்டிட் மதன்மோஹன் மாளவ்ய, ஸர். டாக்டர். அஸுதொஷ மூகர்ஜீ, எம். ஏ., டி. எல்., ஸர். குருதாஸ் பாநர்ஜீ, எம். ஏ., டி. எல்., பாபு மோடிலால் கோஸ், முதலிய பல கநவான்களும், அநேகம் மஹந்துக்களும், ஸ்வாமிகளும், அந்த ஸபையின் மெம்பர்களாகத் தெரியவருகின்றனர். இந்த ராஜதாநியின் மெம்பர்களின் ஸங்க்யை மிகவும் குறைந்திருக்கின்றது. டாக்டர். டி. எம். நாயர்., ப்ரொபஸர், ஸி. ஆர். டி. நாயுடு. பி. ஏ., இவ்விருவருடன் சென்னைமாநகர மெம்பர்கள் முடிவுறுகின்றனர். ராஜதாநி மெம்பர்கள், ராமநாதபுரம் கெ. சேஷாத்ரி அய்யரும், திருச்சினாப்பள்ளி, டி. வி. ஸாமிநாதய்யர், பி. ஏ., எல். டி., என்பவர்களேயாம். இப்படி ஸநாதநதர்ம ரக்ஷகர்கள் த்ராவிடநாட்டில் ஏற்பட்டாராகில், பாளையங்கோட்டை சைவ ஸபையாரும், சென்னை ஸோஷல் ரிபாரம் ஸபையாரும் கொண்ட கருத்துகள் ஸபலமாகக்கூடியவைகளே."

*    *    *    *    *    *

**பகவத்கீதையைப்பற்றிய ஓர் ப்ரஸ்நம்.**

நம் நாட்டில் பெரிய உத்யோகம் செய்த ஸர் சந்தாவர்க்கர் என்பவர் 'லிடரரி ஜர்னல்' எனும் மாஸாந்த்ர பத்ரிகையில் எழுதுகின்றார். இங்கிலீஷ் படிக்கும் பிள்ளை யொருவன் தன்னை ஸ்ரீக்ருஷ்ணனைப்பற்றிக் கேட்டதாகவும், அப்பெயர் கொண்ட வ்யக்தி யொருவன் இருந்ததுண்டோ



வென்றும், கீதையில் கண்ட விஷயங்கள் நடந்ததுண்டோவென்றும், அச்சிறுவன் தன்னை வினவினதாகவும், இவ்வினாக்கட்கு நேர் மறுமொழியாகத் தானொன்றும் இயம்பாமல், அச்சிறுவனையே அவனுக்குள் கர்த்தவ்யாம்சங்களை த்யாகம் செய்ய ஏவுகின்ற புத்தி அர்ஜுநனென்றும், அவற்றைச் செய்யும்படிப் போதிப்பது க்ருஷ்ணனென்றும், அவ்வண்ணம் கீதையானது ஒவ்வொரு புருஷனுக்குள்ளும் திநந்தோறும் நடக்கும் விஷயமென்றும் ஸமாதாநம் அளித்ததாகவும் எழுதியிருக்கின்றார்.

இப்படி யோசனைகள் செய்யக்கூடும். குருக்ஷேத்ரம் சரீரம். அதில் அந்தர்யாமியாக நிற்கும் ஈச்வரன் ஸ்ரீக்ருஷ்ணன்; ஜீவன் அர்ஜுநன். ஜீவனுக்கு ஹிதமாகப் பகவானால் கொடுக்கப்பட்ட அந்தரிந்த்ரியங்களுக்கும் பாஹ்யேந்த்ரியங்களுக்கும், அபிமாநி தேவதைகள் இதர பாண்டவர்களும் அவர்க்கு அநுகூலர்களும்; காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் இவை துர்யோதநாதிகள். ஒவ்வொருவனுக்குள்ளும் இக்குணங்கட்கும் ஆத்மகுணங்கட்கும் நடக்கும் யுத்தம்தான் பாரதயுத்தம். லங்கை சரீரம்; அதைச் சுற்றிய கடல் ஸம்ஸாரம்; ராவணன் மநஸ்; அவன் பத்து சிரங்களும் மநோவசமாய் நிற்கும் பத்து இந்த்ரியங்கள். அவன் அநுகூலர்கள், காமம் முதலான துர்க்குணங்கள். ஸ்ரீராமன் அந்தர்யாமியான ஈச்வரன்; ஸீதை ஜீவன்; வாநரர்கள் இந்த்ரியாபிமாநிகளாகிய தேவர்கள்; அவை விஷயாஸக்தங்களாய்ப் புருஷனைக் கெடுப்பதை ஸஹிக்காதவர்கள். ஸம்ஸார சக்ரத்திலகப்பட்டுக்கொண்டு தேஹமாகின்ற காராக்ரஹத்தில் அடைபட்டு, விஷயங்களுக்கும் இந்த்ரியங்களுக்கும் வசமான மநஸ்ஸாகிற நிசாசரனால் தகையப்பட்டுத் தன் நாதனாகின்ற பரமபுருஷனைத் தன் மீட்சி நிமித்தமாக த்யாநிக்கும் ஜீவனுடைய ரக்ஷணார்த்தமாகப் பகவான், தேவர்களால் சூழப்பட்டுப் பாபக்ரியைகளில் ப்ரவ்ருத்தமான தன்னடியானுடைய மநஸ்ஸையும், அதற்கு ஸஹாயமாயுள்ள விஷயேந்த்ரியங்களையும் சமிப்பதுதான் ராமாயணம்.

இந்த ரூபமாக ஸர்வ இதிஹாஸங்களையும் கதைகளையும் அர்த்தம் செய்துவிடலாம். நம்முடைய பூர்வீகர்களும் இவ்விதம் யோசித்திருக்கின்றனர். இந்த யோசனைகளை ஒப்புக்கொண்டு, பகவானுடைய அவதாரங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் மித்யை

என்பார்க்கு அவை யாதொரு ப்ரயோஜநத்தையும் தாரா. பஞ்ச தந்த்ரகதையைக் கேட்டுப் பரமபுருஷார்த்தம் அடைவதுண்டோ?

நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
சக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ॥
பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

என்று, பகவான் கேவல கர்மங்களால் தனது ஸாக்ஷாத்காரம் கிடையாதென்றும், அநந்ய பக்தியொன்றினால் தான் தன்னை யறியவும் தர்சிக்கவும் அடையவும் கூடுமென் றருளிச்செய்தானன்றோ? அந்தப் பக்தியின் பரீவாஹமாகக் கர்மங்களை யநுஷ்டித்துத் தனக்கு அர்ப்பணம் செய்யவும் விதித்தான். ஒவ்வொரு புருஷனுடைய அந்த:கரணத்திலும் அவனது பூர்வகர்மம் பூர்வவாஸனை இவற்றின்படியே குத்ஸித யோசனைகளோ, அவற்றைத் தடுக்கின்ற ஸாதுயோசனைகளோ உண்டாகின்றன. இந்தக் குத்ஸித யோசனைகள் அர்ஜுநனுடையதோ? ஸாதுயோசனைகள் ஸ்ரீக்ருஷ்ணனுடையதோ? கர்மாநுகுணமாகப் புத்தி, மநஸ், இந்த்ரியங்கள் இவற்றை ப்ரவ்ருத்திக்கச் செய்வது ஈச்வரனுடைய சக்திதான். தான் அந்தர்யாமி யென்றும், ஸர்வ பாபநிவாரணத்வாரா மோக்ஷத்தை யடைய இச்சிப்பவன் தன்னைச் சரணமடைய வேண்டுமென்றும், பகவான் அர்ஜுநனுக்கு உரைத்ததையும், அதை விச்வஸித்து அவ்வண்ணம் எத்தனையோ கோடி ப்ரஜைகள் அநுஷ்டித்ததையும் பஞ்சதந்த்ரகதை யாக்கலாமோ? சந்தாவர்க்கர் பேச்சைக் கேட்டுச் சிறுவன் நடந்தானாகில் அவன் ஆத்மாவுக்குப் பகவானுடைய ஸாயுஜ்யம் கிடைக்குமோ?

திருவள்ளுவர் பொருளில்லார்க் கிவ்வுலகில்லை யென்றும் அருளில்லார்க்கு மேலுலகு இல்லை யென்றும் சொன்னார். மோக்ஷத்வ ஜ்ஞாநத்துடன் பகவானிடம் பக்தி செய்யாதவனுக்கு அருள் உண்டாகாது. அருளைத் தேடினால் பொருள் கிடைக்காது. பொருளைத் தேடுவோர் அருளைத் தேடுவோர்க்கு ஆசார்யராக அமையக்கூடாது.

துலுக்கர் ஆர்யருடைய சரீரங்களைச் சேதித்தார்கள். தத்கால வித்யை ஆத்ம சௌர்யத்துக்கு ஹேதுவாகின்றது. ஈக்ஷத்



யதிகரணத்தில் ஸத்வித்யா விஷயமான ஸத்தென்பது ப்ரக்ருதியா, ப்ரஹ்மமா என்று ஸம்சயம் ஜநித்து, ஈக்ஷணம் அசேதந தர்மம் அன்றென்றும், ஸத்தை உபாஸிப்பவன் மோக்ஷமடைவன், அசேதநத்தைப்போல் ஹேய ஸ்வரூபத்தை அடையமாட்டானென்றும், உபநிஷத் சொல்வதால், ஸத் ப்ரஹ்மமே என்று ஸாதிக்கப்பட்டிருக்கிறது. கேவலம் பதார்த்த விமர்சையி லாழ்ந்தவர்கள், ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷண வஸ்துவின் அஸ்தித்வத்தைச் சிந்தியாமலும், சில காலம் அதன் இன்மையையும் ப்ராயேண கொண்டாடுகின்றன ராதலால், பரதசக்ரவர்த்தி, மான்குட்டியின் ஸ்மரணத்துடன் மரணமடைந்து, மானாகப் பிறந்த வண்ணம், அவர்களும் ஸதா அசேதந ஸ்மரணத்தால் மரணாநந்தரம் அசேதந துல்யமான புநர்ஜநநத்தை அடையவும் கூடும்.

அன்றியும் கிறிஸ்தவரான தத்கால வித்யா ப்ரேரகர்கள் 4500 வருஷத்துக்குமுன் நோவா என்பவனும் அவன் குடும்பமும் தவிர, மற்ற யாவத் ப்ரஜைகளும் நாசமடைந்ததாக நம்பி, அதற்குப் பகுகாலத்தின் பிறகு, ஆர்யசரித்ரம் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று ஸாதிக்கின்றனராகையால், ஆர்ய ராஜவம்சங்களை நம்புகின்றாரில்லை. அதை நம்பினால், யூதர் மதக்ரந்தங்களில் விச்வாஸம் குறையவேண்டும். அவர் மதப்படி ஈச்வரன் யூதர் ஒருவர்க்கே உதவி செய்தான்: ஏனையோர்க்கு அவன் யாதொன்றும் செய்திலன். இந்த மோஹம் காலக்ரமேண குன்றியதாகிலும், அதன் பூர்வவாஸனை அத்யாபி அவரை விட்டதன்று. அவரும் அவருடைய அபிப்ராயங்களை ஆமோதித்த நம்மவர்களும், நமது நாட்டில் ஈச்வரன் அவதரித்ததையும், அவன் திவ்ய சேஷ்டிதங்களையும் மறுப்பதில் ஆச்சர்யமுளதோ?

ராமாயண பாரதங்கள் சரித்ரமென எழுதப்படவில்லை யாகிலும், ஸமுதாயமாக அவற்றின் கதைகள் நம் நாட்டினர் நம்பக் கூடியவையே. அக்காலம் நம் நாட்டினர்க்கு எழுத்தே தெரியாதென்பாருமுளர். ஈச்வரன் அவதரணம் செய்கின்றான் எனும் நம்பிக்கை, முதலில் ஆர்யநாட்டில் உண்டாய தென்பதை நம்பாத மதியீனன், இக்காலம் இருப்பனெனத் தோன்றவில்லை. இந்த விச்வாஸம் விசேஷமாக ஸ்ரீராமனிடமும் ஸ்ரீக்ருஷ்ணனிடமும் ஜநித்ததற்குக் காரணம், அது வாஸ்தவமா யிராவிட்டால், ஸரியாக

ஏற்படாதென்பதை முன்னமே வெளியிட்டிருக்கின்றோம். அவதாரம் வாஸ்தவமில்லையாயினும், அந்த விச்வாஸத்தையிட்டு அந்த மஹா புருஷர்களிடம் ஈச்வரத்ருஷ்டி பண்ணுமவர்க்கு ஈச்வரன் க்ருபை பண்ணுவானென்பதில் ஸந்தேஹமில்லை. வீண் பிடிவாதம் செய்து, வாஸ்தவமாயுள்ள அவதாரங்களின் நிஷேதம் செய்யல் ஈச்வர நிக்ரஹ ஹேதுவானாலும் ஆகலாம்.

* * * * * *

**ஐரோப்யவான்கள் ஹிந்துமதத்தைப் புகழ்தல்.**

ஏப்ரல் மாஸம் 3-ம் தேதி மேய்ல் பேபரில் ஜர்மானியர் இந்தியா தேசத்தாரிடம் கொண்ட கௌரவத்தைப் பற்றி எழுதியிருக்கின்றது. மாக்ஸ் முல்லர், பால்ட்யூஸன் முதலான வித்வான்கள் இந்தியருடைய வேதாந்தத்தைப்பற்றியும், அவருடைய கல்வியைப் பற்றியும் விசேஷித்துப் புகழ்ந்திருக்கின்றனர். மாக்ஸ் முல்லர் என்பவர், க்ரீக்தேசத்தாரைப் பார்க்கிலும், ஐரோப்பாகண்டத்தில் மத்யகாலத்திலும், தத்காலத்திலும் பெருகிய தத்வவிமர்சிகளைப் பார்க்கிலும், ப்ராசீந இந்திய வேதாந்திகள் ஆத்மஜ்ஞாநத்தை விஸ்தாரமாக அறிந்தனரென்றும், தத்காலம் நாகரீகஸ்தாநங்களாயெண்ணப்படும் சந்தைக் கூட்டத்தை யொத்த ஐரோப்ய நகரங்களைக் காட்டிலும், இந்தியாவின் அரண்யங்களில் ஆத்மஸ்வரூப விமர்சநம் நன்கு செய்யப்பட்டதென்றும் சொல்லியிருக்கின்றார். பால்ட்யூஸன் என்பவர், 'ஸ வா அயம் ஆத்மா ப்ரஹ்ம' எனும் உபநிஷத் வாக்யத்தைப் பற்றி, யோசிக்குமிடம், அந்த வாக்ய நிர்த்திஷ்டமான ஜீவப்ரஹ்ம ஐக்யமானது, உபநிஷத்துக்கும், அவற்றின் காலத்துக்கும், தேசத்துக்கும் அதிக்ரமித்த விசேஷமுடையதென்றும், அந்த விசேஷம் லோகத்தார் அனைவர்க்கும் யோசனைக்கெட்டாத குணம் கொடுப்பதென்றும், இனிவரும் காலமும், அக்காலத்தில் மனிதர் எங்கெந்த நூதநாம்சங்களைக் கண்டறியப்போகின்றார் என்பதும் நாமறியக்கூடாததாயினும், மேலெடுத்த உபநிஷதர்த்தத்தை அதிக்ரமித்து, அறியக்கூடிய தொன்றுமில்லையென்றும், அது சாச்வதமாக நிலைத்து நிற்குமென்றும், உபநிஷத் ருஷிகள்தான் அந்த நித்யமஹிமையை அடைந்தாரென்றும், ப்ரக்ருதிக்குள்ளும், ப்ராக்ருத விகாரங்களுக்குள்ளும், அந்தராத்மாவாக நிற்கும் விகாரமற்ற



ப்ரஹ்மத்தைத் தம் ஒவ்வொருவர்க்குள்ளும், அவர் தான் கண்டனர் என்றும் சொல்லியிருக்கின்றார்.

ஷோபன்ஹாயர் என்பவர், லோகமெங்கும் உபநிஷத்தையொத்து நமக்கு ஹிதத்தையும் மேன்மையையும் தரவல்ல க்ரந்தங்களில்லையென்றும், தான் ஜீவிக்கையிலும் தானிறக்கும்போதும் அவையே தனக்கு ஆச்வாஸ ஹேதுவாக நிற்குமென்றும் வெளியிட்டனர்.

விக்டர் கூஸன் எனும் ப்ராஞ்சுதேசவித்வான், இந்திய தேசத்தாருடைய இதிஹாஸ நாடக காவ்ய க்ரந்தங்களையும், அவருடைய வேதாந்த க்ரந்தங்களையும் ச்ரத்தையுடன் வாசித்தால், ஐரோப்யருடைய அல்ப ஸாமர்த்யம் வெளியாகின்றதென்றும், உயர்ந்த தத்வவிசாரங்களை நம் தேசத்தாரிடம் கண்டு, அவர் முன் தாம் பணியவேண்டுமென்றும் கூறினர்.

ப்ரெடரிக் ஷ்லீகல் எனும் ஜர்மானிய வித்வான், பரப்ரஹ்மத்தின் வாஸ்தவஜ்ஞாநத்தை ப்ராசீந இந்தியர் அடைந்தனர் என்றும், அவரது க்ரந்தங்கள் தெளிவாயும், கம்பீரமாயும், மஹிமைபொருந்தியுமுள்ள வசநங்களால் பகவானை வர்ணித்திருக்கின்றனவென்றும், அவருடைய வேதாந்தமாகின்ற ஸூர்யன் முன், ஐரோப்யர் தத்வவிசாரம் ஓர் நெருப்பின் பொறிபோன்றதென்றும் உரைத்தனர். பகவத்கீதையைப் படித்துவிட்டு அந்த வித்வானோ, அப்பெயர் தரித்த மற்றவரோ "ப்ராஹ்மணர்க்குள் ஆசார்ய பக்தி அத்யுத்க்ருஷ்ட தர்மமென மதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஓ அதிபரிசுத்தரான மஹர்ஷியே! பகவத்ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிப்பவரே! உமது தெய்வீகமான வசநங்களால் மநஸுக்கு இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு ஆநந்தத்தைத் தந்து, சாச்வதமானவையும், ப்ரஹ்ம ஸம்பந்தமானவையுமான மஹாவிஷயங்களினிடம் அந்த மநஸைச் செலுத்துகின்ற இந்த க்ரந்தத்தைச் செய்தவரே! மர்த்யர்க்குள் முடிவாக உமக்கு எந்தப் பெயர் வாய்த்தாலும் ஸரி, நான் உம்மைப் பரமவஸ்துவென்று ஸம்புத்தி செய்கின்றேன்; எப்போதும் உமது அடிலைப்பை நோக்கித் தொடரக் குதூஹலிக்கின்றேன்" என்று மொழிந்தனர்.

வான் ஷ்ரோடர் எனும் ஜர்மானிய ப்ரோபஸர், 1899-ம் வருஷம், ஐரோப்யர்க்கு இந்தியர் மதத்தால் உண்டாகும் ப்ரயோஜநங்களைப்பற்றி உபந்யஸிக்கையில், 2500-வருஷங்களுக்கு முன்னிருந்த பைதாகொரஸ் எனும் க்ரீக்வித்வான், தமது தத்வநிர்ணயங்களை இந்தியரிடம் கற்றதாகவும், அவர் காலத்துக்குமுன்னமே யூக்ளிட் 47-வது ப்ராபஸிஷன் இந்தியர்க்குத் தெரிந்ததாகவும் உரைத்தனர்.

ஹம்போல்ட் எனும் ஜர்மானியர், தான் பகவத்கீதையைப் படிக்கும் வரையில் தனக்கு ஆயுஸ்ஸைக் கொடுத்த ஈஶ்வரனை ஸ்தோத்ரம் செய்கின்றனர். இன்னும் பல ஜர்மானியரும், அவர்க்குள் முடிவாக க்யாதியடைந்த நீசியென்பவரும் இந்தியருடைய வேதாந்தத்தைப்பற்றி மிகவும் பக்தியுடன் பேசுகின்றனர்.

தத்காலம் ஜர்மானியர் இந்தியருடன் யுத்தம் செய்கின்றனர். அவரை நாகரீக மற்றவரெனவும் சொல்கின்றனர். ஆனால் அவர் மநஸ்ஸானது வைரத்தால் தூஷிக்கப்படாதிருந்தக்கால், இந்தியர் மேன்மையை அவர் அறிந்தவண்ணம் யாரும் அறிந்திலர்.

*  *  *  *  *  *

**நம் சிறுவர் ஸ்வ தர்மங்களை த்யாகம் செய்யல்.**

இப்படிப் பூஜிக்கப்பட்ட நமது மதமானது இங்கிலீஷ் படிக்கும் இந்திய சிறுவரால் மதிக்கப்படாமல் போவதேன்? இது ஸம்ஸர்க்கதோஷம். ஸம்ஸர்க்கமும் ஜந்மாந்தர வாஸனையால் ஏற்படவேண்டும். இந்தியர்களுக்குக் கலாசாலைகளில் ஸாமாந்ய ஜ்ஞாநத்தைப் போதிப்பவர் ப்ராயேண பாதிரிமார்களும், இந்துமத வாஸனையற்ற ஐரோப்ய வாத்யார்களும், இவர்களிடம் கல்விகற்ற இந்தியருமே. ஹிந்துமதத்தைத் தெரிந்துகொண்டு அதைப் புகழ்கின்ற ஐரோப்ய வித்வான்களுடைய ஜ்ஞாநத்திலும், க்யாதியிலும் ஓர் லேஶத்தையும் அடைந்திராதவர், இந்தியர்க்குக் கல்வி கற்பிப்பதும் தவிர, அவருடைய பூர்வ வித்யைகளையும் அநுஷ்டாநங்களையும் ஸதா நிந்தாஸ்தாநங்களாகக் கொண்டிருக்கின்றாராதலால், அவரிடம் படிக்கும் இந்திய சிறுவரும் மோஹத்தை அடைய இடமுண்டாகின்றது. ஆசாரங்களை வேறுபடுத்த முயல்கின்ற ஸோஷல்ரிபாரம் ஸபையைச் சேர்ந்த ம-ா-ா-ஶ்ரீ. கே. பி. ராமநாதய்யர் என்பவர், ஏப்ரல்மீ



11௳ தென் இந்தியன் ஸபையார் முன் உபந்யஸிக்குங்கால், "மதஸம்பந்தமான நிர்ணயங்களில் அவிஶ்வாஸம் வளர்கின்றமையால், ஜநங்கள் பரலோகங்களில் வைத்திருப்பதாய் எண்ணப்படும் நிதிகளின் பொருட்டு இவ்வுலகில் அநுபவிக்கக்கூடிய நன்மைகளை விட்டுவிட மனங்குறைந்திருக்க நேர்கின்றது" என்று சொன்னார். இது உண்மை. ப்ரியங்களைத் தேடி யநுபவிக்கும் ப்ரயத்நங்களில் ஆழ்ந்து, ஐரோப்பர் மதமென்பதை லோகஸங்க்ரஹத்துக்காக அங்கீகரித்தாலும், பரலோக ஸாதநமாக அதை வழிபடுவார்களில்லை. அவர் சிஷ்யர்களாய் இந்தியர்கள் ஆனபோது, 'ஶூந்யா-ஶ்வஸ ஶிஷ்யாஃ' எனும் வசநம் நிருபிக்கப்படுகின்றது. இதனால் நம்மவர்க்குள் துராசாரங்களும், குவாஸனைகளும், குதர்க்கங்களும், அக்ருத்ய கரணங்களும், க்ருத்யவர்ஜநங்களும், பெரியோரிடம் நிந்தையும், ஸ்வதர்மங்களில் த்வேஷமும், ஸ்வமதத்தில் அவிஶ்வாஸமும், ஶரீராதி தௌர்பல்ய ஹேதுகங்களான அநுஷ்டாநங்களும், நூதநமான வ்யாதிகளும், வ்ருதா த்ரவ்ய வ்ரயங்களும், மநோவாக்காயங்களின் வ்ருத்தி பேதங்களும், நாளுக்கு நாள் வ்ருத்தியாய்க்கொண்டுவருகின்றன. ஆர்யர் இருப்பையே சரித்ரங்களால் அறியவேண்டிய காலமும் ஸமீபித்திருக்கின்றதென எண்ணுபவரும் உண்டு.

**பாபு மோடிலால் கோஸ் உபந்யாஸம்.**

வங்கதேசத்து ப்ரோவின்ஷல் ஸங்கத்தில் அக்ராஸ்தாநத்தை வஹித்த பாபு மோடிலால் கோஸ் என்பவர், "நமது கர்த்தவ்யங்களில் நாம் ஸாதிக்கக்கூடாததும், நம் முன்னோரால் ஸாதித்திராததும் ஒன்றுமில்லையென்பதை நாம் மறக்கவொண்ணாது. * * * நம் முன்னோர் வ்யாஜ்யம் என்பதை அறிந்திலர். அதன் கேடுகளை வேரறுக்காவிட்டாலும், அதைக் குறைக்க நாம் சக்தரன்றோ? நமது ஸாதாரண வ்ருத்திகளில் நாம் த்ருப்தரானால், அந்யதேச ஸாமக்ரிகளின் ஆவஶ்யகத்தை த்யஜிக்கலாம். நமக்கு வேண்டிய வஸ்த்ரங்களனைத்தையும், நமக்கு வேண்டிய பாத்ரங்களையும், நகைகளையும், உப்பு முதலான ஸர்வ பதார்த்தங்களையும் முன்னால் நாமே செய்து கொள்ளவில்லையா? இவற்றையும், மற்றவைகளையும் நாம் மறுபடியும் செய்துகொள்ளக்கூடாது? மித வ்ரயத்துடன் பிழைக்

வான் ஷ்ரோடர் எனும் ஜர்மானிய ப்ரோபஸர், 1899-ம் வருஷம், ஐரோப்பியர்க்கு இந்தியர் மதத்தால் உண்டாகும் ப்ரயோஜனங்களைப்பற்றி உபந்யஸிக்கையில், 2500-வருஷங்களுக்கு முன்னிருந்த பைதாகொரஸ் எனும் க்ரீக்வித்வான், தமது தத்வநிர்ணயங்களை இந்தியரிடம் கற்றதாகவும், அவர் காலத்துக்குமுன்னமே யூக்ளிட் 47-வது ப்ராபஸிஷன் இந்தியர்க்குத் தெரிந்ததாகவும் உரைத்தனர்.

ஹம்போல்ட் எனும் ஜர்மானியர், தான் பகவத்கீதையைப் படிக்கும் வரையில் தனக்கு ஆயுஸ்ஸைக் கொடுத்த ஈச்வரனை ஸ்தோத்ரம் செய்கின்றனர். இன்னும் பல ஜர்மானியரும், அவர்க்குள் முடிவாக க்யாதியடைந்த நீசியென்பவரும் இந்தியருடைய வேதாந்தத்தைப்பற்றி மிகவும் பக்தியுடன் பேசுகின்றனர்.

தத்காலம் ஜர்மானியர் இந்தியருடன் யுத்தம் செய்கின்றனர். அவரை நாகரீக மற்றவரெனவும் சொல்கின்றனர். ஆனால் அவர் மனஸ்ஸானது வைரத்தால் தூஷிக்கப்படாதிருந்தக்கால், இந்தியர் மேன்மையை அவர் அறிந்தவண்ணம் யாரும் அறிந்திலர்.

* * * * * *

**நம் சிறுவர் ஸ்வதர்மங்களை த்யாகம் செய்யல்.**

இப்படிப் பூஜிக்கப்பட்ட நமது மதமானது இங்கிலீஷ் படிக்கும் இந்திய சிறுவரால் மதிக்கப்படாமல் போவதேன்? இது ஸம்ஸர்க்கதோஷம். ஸம்ஸர்க்கமும் ஜந்மாந்தர வாஸனையால் ஏற்படவேண்டும். இந்தியர்களுக்குக் கலாசாலைகளில் ஸாமாந்ய ஜ்ஞாநத்தைப் போதிப்பவர் ப்ராயேண பாதிரிமார்களும், இந்துமத வாஸனையற்ற ஐரோப்ய வாத்யார்களும், இவர்களிடம் கல்விகற்ற இந்தியருமே. ஹிந்துமதத்தைத் தெரிந்துகொண்டு அதைப் புகழ்கின்ற ஐரோப்ய வித்வான்களுடைய ஜ்ஞாநத்திலும், க்யாதியிலும் ஓர் லேசத்தையும் அடைந்திராதவர், இந்தியர்க்குக் கல்வி கற்பிப்பதும் தவிர, அவருடைய பூர்வ வித்யைகளையும் அநுஷ்டாநங்களையும் ஸதா நிந்தாஸ்தாநங்களாகக் கொண்டிருக்கின்றாராதலால், அவரிடம் படிக்கும் இந்திய சிறுவரும் மோஹத்தை அடைய இடமுண்டாகின்றது. ஆசாரங்களை வேறுபடுத்த முயல்கின்ற ஸோஷல்ரிபாரம் ஸபையைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ. கே. பி. ராமநாதய்யர் என்பவர், ஏப்ரல்மீ



11வ தென் இந்தியன் ஸபையார் முன் உபந்யஸிக்குங்கால், “மதஸம்பந்தமான நிர்ணயங்களில் அவிச்வாஸம் வளர்கின்றமையால், ஜநங்கள் பரலோகங்களில் வைத்திருப்பதாய் எண்ணப்படும் நிதிகளின் பொருட்டு இவ்வுலகில் அநுபவிக்கக்கூடிய நன்மைகளை விட்டுவிட மனங்குறைந்திருக்க நேர்கின்றது” என்று சொன்னார். இது உண்மை. ப்ரியங்களைத் தேடி யநுபவிக்கும் ப்ரயத்நங்களில் ஆழ்ந்து, ஐரோப்பர் மதமென்பதை லோகஸங்க்ரஹத்துக்காக அங்கீகரித்தாலும், பரலோக ஸாதநமாக அதை வழிபடுவார்களில்லை. அவர் சிஷர்களாய் இந்தியர்கள் ஆனபோது, ‘[illegible]’ எனும் வசநம் நிருபிக்கப்படுகின்றது. இதனால் நம்மவர்க்குள் துராசாரங்களும், குவாஸனைகளும், குதர்க்கங்களும், அக்ருத்ய கரணங்களும், க்ருத்யவர்ஜநங்களும், பெரியோரிடம் நிந்தையும், ஸ்வதர்மங்களில் த்வேஷமும், ஸ்வமதத்தில் அவிச்வாஸமும், ஶரீராதி தௌர்பல்ய ஹேதுகங்களான அநுஷ்டாநங்களும், நூதநமான வ்யாதிகளும், வ்ருதா த்ரவ்ய வ்ரயங்களும், மநோவாக்காயங்களின் வ்ருத்தி பேதங்களும், நாளுக்கு நாள் வ்ருத்தியாய்க்கொண்டுவருகின்றன. ஆர்யர் இருப்பையே சரித்ரங்களால் அறியவேண்டிய காலமும் ஸமீபித்திருக்கின்றதென எண்ணுபவரும் உண்டு.

**பாபு மோதிலால் கோஸ் உபந்யாஸம்.**

வங்கதேசத்து ப்ரோவின்ஷல் ஸங்கத்தில் அக்ராஸநத்தை வஹித்த பாபு மோதிலால் கோஸ் என்பவர், “நமது கர்த்தவ்யங்களில் நாம் ஸாதிக்கக்கூடாததும், நம் முன்னோரால் ஸாதித்திராததும் ஒன்றுமில்லையென்பதை நாம் மறக்கவொண்ணாது. * * * நம் முன்னோர் வ்யாஜ்யம் என்பதை அறிந்திலர். அதன் கேடுகளை வேரறுக்காவிட்டாலும், அதைக் குறைக்க நாம் சக்தரன்றோ? நமது ஸாதாரண வ்ருத்திகளில் நாம் த்ருப்தரானால், அந்யதேச ஸாமக்ரிகளின் ஆவசியகத்தை த்யஜிக்கலாம். நமக்கு வேண்டிய வஸ்த்ரங்களனைத்தையும், நமக்கு வேண்டிய பாத்ரங்களையும், நகைகளையும், உப்பு முதலான ஸர்வ பதார்த்தங்களையும் முன்னால் நாமே செய்துகொள்ளவில்லையா? இவற்றையும், மற்றவைகளையும் நாம் ஏன் மறுபடியும் செய்துகொள்ளக்கூடாது? மிதவ்ரயத்துடன் பிழைக்

கும் விஷயத்தில், நம் முன்னோர், தமது சிறிய ஆஸ்திகளின் வரும்படியைக்கொண்டு, தமது ஸ்வதந்த்ர மிழக்காமலும், ஸுகமாகவும் பிழைக்கவில்லையா ? ஐம்பது வருஷங்களுக்கு முன் அவர் செய்ததை யாம் இப்போது செய்யப் பொருந்தியதே. அவர்களுக்குக் கவர்ன்மெண்டு உத்யோகமில்லை : ஆயினும் ஸுகமாய் ஜீவித்தனர். அவர் ஸந்தோஷமாயும் த்ருப்தியாயும் இருந்தனர்; ஏனென்றால், அதிவ்ரயமின்றியும், ஆரோக்யத்துடனும் அவர் பிழைத்தனர். நமது படித்த சிறுவர்கள், தம் முன்னோர் காட்டின வழியைத் தொடர்ந்தாரேல், அவர் யாதொரு உத்யோகத்துக்கும் போக வேண்டாம். இந்த ஸேவகாவ்ருத்தியானது ஆத்மகுணங்களுக்கு ஹாநியை நியமேந உண்டுபண்ணுகின்றது. முடிவாக, நமது தேசம் க்ஷேமப்படவேண்டுமாகில், நாம் வீண் வ்ரயமின்றிப் பிழைக்கவேண்டும்; நமது யோகக்ஷேமார்த்தம், நமக்குள்ள ஸாமக்ரிகளுடனும், நமக்கு ஸாத்யமான முயற்சிகளுடனும் தான், நாம் த்ருப்தராகவேண்டும்; அதாவது நமது ஆசாரங்களையும், வ்ருத்திகளையும், கூடியமட்டும் நமது ஜாதிக்கொத்தபடி திருத்தவேண்டும். விலையுயர்ந்த கோட்டுகளையும், பூட்ஸ்களையும், சிலகாலம் டொப்பிகளையும் நாம் அணிவானேன் ? நம் முன்னோர் பாதரக்ஷையின்றியும், கோட்டுகளற்றும், டொப்பிபோடாமலும், நம்மை விடப் பலிஷ்டராகவும் ரோகமற்றும் இருந்தார்களே !" என்றிவ்வண்ணம் மொழிந்தனர். இதை இங்கிலீஷ் படித்தவர் யாவரும் ஒப்புக்கொள்ளமாட்டார். நடை, உடை, நம்பிக்கைகள், உண்டி, பாநம், உபந்யாஸம், கூட்டம், குமுதம், ஆட்டம், நாடகம், பாட்டு, படிப்பு, பாஷை, இவை பலவற்றுள்ளும் இங்கிலீஷ்காரரெனத் திருந்துவோர் பெருகுவார்கள் என்பதை யாம் நம்புகின்றோம். ஆகிலும், தொன்முறை மனத்தைத் துறவாநிற்பவர், பன்முறையியம்பப் பழமை காப்பர், என்றிவை யாமிங்கெழுத வமைந்ததாம், கன்றுகுணிலாக் கனியுதிர்த்துகந்தோன், எண்ணியபடியே யாவுமியல்வன, புண்ணியம் உளதேல் புவிதனில் அவன்சொல் நின்றவனடியார் நினைவுறப் பெருகும், அன்றெனில் அவனி யகத்தையி லாழ்வதே !

# தத்வவிசாரம்.

## விபீஷண ஶரணாகதி.

ஶரணாகதியினுடைய ஸர்வாங்கங்களும் புஷ்கலமாய் ப்ரகாசிக்கும் விபீஷண ஶரணாகதியை நோக்குங்கால், விபீஷணன் ஸ்ரீராமனுடைய ஸாமீப்யத்தை யடைந்து, ஸுக்ரீவாதிகளைக் கண்டு, அவர்களுடன், 'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:' ॥ 'ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே। நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்' ॥, "புத்ரர்களையும் பத்நிமார்களையும் த்யாகம் செய்துவிட்டு, ராகவனைச் சரணமடைகின்றேன். மஹாத்மாவும் ஸர்வலோகரக்ஷகனுமான ராகவனிடம், ஸமீபத்தில் நெருங்கிய விபீஷணனாகிய என்னைப்பற்றி விஜ்ஞாபநம் செய்யுங்கள்" என்று உரைத்தார். ஸ்வாமி ஸந்நிதியை அடைந்தபோதும், 'பவந்தம் ஸர்வபூதாநாம் ஶரண்யம் ஶரணம் கத: । பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச । பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச' ॥ "ஸர்வ ப்ராணிகளுக்கும் ரக்ஷகனான தேவரீரை நான் சரணமடைகின்றேன். லங்கையும், மித்ரர்களும், செல்வங்களும் என்னால் முற்றிலும் த்யாகம் செய்யப்பட்டன. இனி எனக்கு ராஜ்யமும் ஜீவநமும் ஸுகமும் தேவரீரைப் பொறுத்தன" என்று விஜ்ஞாபநம் செய்தார். ஸர்வலோக சரண்யத்வமும், ஸர்வபூத சரண்யத்வமும் பரமாத்மாவினுடைய அஸாதாரண லிங்கங்கள். ஸ்ரீராமனை மஹாத்மாவென்றதும், 'அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ।' என்று, விஶ்வாமித்ரர் சொன்னவண்ணம் சொன்னபடி. "நானும்,

வஸிஷ்டரும், மற்ற தபோநிஷ்டர்களும், மஹாத்மாவர்ன ஸ்ரீராமனே உண்மையாக அறிவோம். அவன் பிதா வென்று நினைத்துக் கொண்டிருக்கும் நீ யறியாய்'' என விஶ்வாமித்ரர் தசரதனுக்குச் சொன்னதால், தசரதன் தன் புத்ரனெனவும் ஓர் மநுஷ்யனெனவும் ராமசந்த்ரனை நினைத்தது மித்யை என்றும், அவனது அவதாரரஹஸ்யம் தபோநிஷ்டர்களுக்குத் தான் தெரியுமென்பதும் ஸ்பஷ்டமாகின்றது. இந்த விசேஷ ஜ்ஞாநம் விபீஷணனுக்கு உண்டு. ஸ்வாமியைப் பஞ்சவடியில் தர்சித்த காலத்தில், ஶூர்ப்பணகா, தன் ப்ராதாக்கள் வ்ருத்தாந்தங்களைச் சொல்லுமிடத்தே, மற்ற ராக்ஷஸர்களைக் காட்டிலும் விபீஷணன் விலக்ஷணன் என்பதை, 'விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:'। எனும் ஶ்லோகத்தால் முன்னமே சொல்லி யிருக்கின்றாள். இந்த விஷயத்தை ஹநுமான், ராவணன் ஸதஸ்ஸில், தானே யறிந்து கொண்டார். ஸுக்ரீவன், விபீஷணன் விஷயத்தில் ஸம்ஶயப்படவே, ஹநுமான், அவருடைய ஶீலமறிந்தவராய், அவருடைய குணங்களை ஸ்வாமியினிடம் விஜ்ஞாபித்தனர். கைகஸீ எனும் ராவணாதிகள் மாதா, ஸ்வ பிதாவின் வேண்டுகோளின் பேரில், விஶ்ரவஸ் எனும் புலஸ்த்ய புத்ரரிடம் சென்று, தாருண வேளையில், புத்ர விஷயமான ப்ரார்த்தனையைச் செய்தாள். அந்த மஹர்ஷியும், அத்தகைய காலத்தில் அவள் ப்ரார்த்தித்தபடியினால், 'தாருணாந் தாருணாகாராந் தாருணாபிஜநப்ரியாந் । ப்ரஸவிஷ்யஸி ஸுஶ்ரோணி ராக்ஷஸாந் க்ரூரகர்மண:'॥ என்று சொன்னார். மறுபடி, அவள் அவரிடம் அப்படிப்பட்ட புத்ரர்களைத் தான் இச்சிக்கவில்லை யென்று வணங்கிக் கேட்கவும், 'பஶ்சிமோ யஸ்தவஸுதோ பவிஷ்யதி ஶுபாநநே । மம வம்ஶாநுரூபஶ்ச ஸ தர்மாத்மா ந ஸம்ஶய:'॥ என்று அநுக்ரஹித்தார். ஆதலாலன்றோ, அவருடைய கடைசீ புத்ரனான விபீஷணன் ப்ரஜாபதி குல யோக்யராயும், தர்மாத்மாவாகவும் பிறந்தார். ஸ்ரீராமன் பரமாத்மாவென்றும், அவன் திருவடிகளில் கைங்கர்யத்தைப் பரமப்ராப்யமாக விபீஷணன் ஸம்பா



தித்துக் கொண்டானென்றும் அறிந்தவர்க்குத்தான், ப்ரஜாபதி குலார்ஹதை எனும் பதங்களின் உண்மையான பொருள் விளங்கும். ஆதலால் பிதாவின் அநுக்ரஹத்தாலோ, தனது ப்ராசீந ஸுக்ருதத்தாலோ, ஸ்ரீராமன் ஸர்வேஶ்வரன் என்பது விபீஷணனுக்குத் தெரியும். இன்னும், இவர் முன்பாகவே, ஹநுமான் ராவணனுடன், 'ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ்சதுராநநோ வா ருத்ரஸ்த்ரிணேத்ரஸ்த்ரிபுராந்தகோ வா । இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம்'॥ எனும் ஶ்லோகத்தினால், ஸ்ரீராமன் ஸர்வ ஈஶ்வரர்க்கும் பரமமான மஹேஶ்வரன் என்பதைச் சொன்னானன்றோ? இப்படி யோசித்தால் தான், விபீஷணன் ஸ்ரீராமனை ஸர்வலோக ஸர்வபூத ஶரண்யன் என்று சொன்ன உண்மை வெளிப்படும். அவை கேவலம் பூஜார்த்தம் உரைத்த சொற்கள் அல்ல.

இப்படி விபீஷணன் பண்ணின ஶரணாகதி காமப்ரேரிதமென்று நினைப்பார் பலர். அந்த யோசனை ராமாயணத்தை ஸாதாரணமாகப் படிப்பவர்க்கு உண்டாகின்றது. 'பவத்கதம் மே ராஜ்யம்' என்று ஸ்ரீராமன்முன் விபீஷணன் சொன்னானன்றோ? அவர் வரவைப்பற்றி ஹநுமானும், 'ராஜ்யம் ப்ரார்த்தயமாநஶ்ச புத்திபூர்வமிஹாகத:'। "ராஜ்யத்தை ப்ரார்த்தித்தவராய்க்கொண்டு புத்திபூர்வமாக இங்கே வந்தார்" என்றுரைக்கவில்லையா? இன்னும் பகவானே 'ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ:' என்று ஸுக்ரீவனுடன் சொல்லவில்லையா? மேலும் தன்னைச் சரணடைந்த விபீஷணனை நோக்கி, 'அஹம் ஹத்வா தஶக்ரீவம் ஸப்ரஹஸ்தம் ஸபாந்தவம் । ராஜாநம் த்வாம் கரிஷ்யாமி ஸத்யமேதச் ச்ருணோது மே'॥ "நான் ராவணனை ப்ரஹஸ்தனுடனும் பந்துக்களுடனும் கொன்று, உன்னை ராஜாவாக்குகின்றேன்; இதை உனக்கு ஸத்யமாகச் சொல்கின்றேன்," என்று பகவான் சொல்லவில்லையா? ஆதலால் விபீஷண சரணாகதி ராஜ்யார்த்தமென்பதில் ஸந்தேஹமுண்டோ என்று யோசனை செய்யத்தக்கதே.

ஆனால் ஸ்ரீரகுநாதன் அவதாரதசையில் ப்ராயேண தன் நிலையைப்பற்றிப் பரோக்ஷ ப்ரியனாய் நின்றான். அவன் உண்மை ஸீதைக்குத் தெரியும்; பரதலக்ஷ்மணர்க்குத் தெரியும்; ஹநுமானுக்கும் விபீஷணனுக்கும் தெரியும்; இன்னும் த்ரிஜடையும் தெரிந்து கொண்டாள். 'யஸ்ய விக்ரமமாஸாத்ய ராக்ஷஸா நிதனங்கதா: । தம் மன்யே ராகவம் வீரம் நாராயணமநாமயம்' ॥ "எவனுடைய பராக்ரமத்தை ஸமீபித்தவர்களாய்க்கொண்டு ராக்ஷஸர்கள் மரணமடைந்தார்களோ, அந்த வீரனை ராகவனைப் (பயக்ருத்) பயநாசகனை நாராயணனென்று நினைக்கின்றேன்", என்று ராவணனும் யோசித்தான். ஆயினும் வ்யவஹார தசையில் தன் ஸ்வரூப ப்ரகாசத்தில் பகவானுக்குத் திருவுள்ளமில்லை. ஆதலால், வ்யவஹாரானுகுணமாக ஸம்பாஷணைகளை அவனும் அவனது நிலையறிந்தோரும் செய்தாராகில், அவற்றில் விஸ்மய ஹேதுவில்லை. ஆனால் அவர்களுடைய ஸர்வோக்திகளும் அப்படிக்கில்லை. ஆதலால் தான் விமர்சிக்கத் தக்கவர் விஷய பராமர்சத்தை நன்கு பண்ணவேண்டும்.

முதலில், தன் வரவை ஸ்வாமியினிடம் விஜ்ஞாபிக்கக் கேட்டபோது, விபீஷணன் தனது தாரபுத்ராதிகளை த்யாகம் செய்துவிட்டு, ஸர்வலோகசரண்யனை யடைந்ததாகச் சொன்னார். மற்றோர் அபிப்ராயத்தை வெளியிட்டாரில்லை. ஸர்வலோக சரண்யனென்று ராமனைச் சொன்னபோது, எந்த ரூபமாகப் பகவானுக்கு அப்பெயர் பொருந்துமோ, அந்த ரூபமாகப் பகவானை எண்ணித்தான் அவனிடம் அவர் வந்தவர். தாரபுத்ராதி த்யாகம் முன்னமே செய்து விட்டாராகையால், பகவானிடம் ஐஹிக விஷயமாக யாதொன்றையும் அபேக்ஷித்திலர் என்பது ஸித்தம். ஸ்வாமியின் முன்பாகத் தனது ப்ரதமோக்திகளை வெளியிடுங்கால், 'பவந்தம் ஸர்வலோகாநாம் ஶரண்யம் ஶரணம் கத:', என்று சொன்னாரன்றோ? ஸர்வலோக சரண்யத்வம் பூமியின் ஏகதேசத்துக்கு அரசனாயிருப்பவன் விஷயமாக ப்ரசம்ஸா ரூபமாகச் சொல்



லக்கூடு மென்றாலும், ஸர்வபூத சரண்யத்வம் அவன் விஷயத்தில் முற்றிலும் பொருந்தாத ஸ்துதி. பகவானுடைய தத்வமான நிலையை யறிந்து சரணாகதி பண்ணின விபீஷணர், அதற்குப் பொருந்திய பலனை அபேக்ஷிப்பரேயன்றிப் பொருந்தாத ஐஹிக விஷயங்களையும் அபேக்ஷிப்பரோ? மேலும் 'பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச' । என்று சொன்னபடியால், அவர் அபேக்ஷித்தார் என்று சொல்லக்கூடிய லங்கையும் ஸம்யக் த்யாகம் செய்யப்பட்டதாயிற்றே. மித்ராணி என்பதால், எவர் நிமித்தம் ராஜ்யமும் செல்வமும் வேண்டப்படுமோ, அப்படிப்பட்ட பார்யை, மக்கள், பந்துக்கள் உள்பட பூர்வ மித்ரர்களனைவரும் த்யாகம் செய்யப்பட்டார்கள். அவர் ஸுக நிமித்தமாக அபேக்ஷிதங்களான பொருள்களும் தநாநி எனும் சப்தத்தால் த்யாகம் செய்யப்பட்டன. இப்படி, 'பதிஸுதாந்வயப்ராத்ருபாந்தவாநதிவிலங்க்ய தேऽந்த்யச்யுதாகதா:', என்று கோப கன்னிகைகள் பகவானிடம் சென்றவண்ணம், விபீஷணனும் ஸர்வஸங்க த்யாக பூர்வகமாக, ஸ்வாமியினிடம் சரணாகதி செய்தார். ஆனால் 'பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச', என்று சொன்னாரே, அதன் கருத்தென்ன வென்றால்: சொல்கின்றோம். முன் அவர்க்கு ராஜ்யம் இலது. லங்காராஜ்யம் ராவணனுடையது; இவருடையதன்று. ஆதலால் ராஜ்ய சப்தத்தால் முன்னிருந்ததைப் போக்கி, அதை ஸ்ரீராமனிடம் மறுபடியும் கேட்டபடியெனத் தகாது. ராஜ்யம் என்றால், இவ்விடம் வாஸயோக்யமான ப்ரதேசம் என்று சொன்னால் தான் பொருந்தும். முன், ராவணராஜ்யே வஸித்தவர், இப்போது ஸ்ரீராமராஜ்யே வாஸத்தை அபேக்ஷித்தார். ஜீவிதம் என்றதால், தன்னாயுளைப் பகவத் கைங்கர்யத்தில் கழிக்க அபேக்ஷித்தபடி. ஸுகாநி என்றதால், ஸமீபவாஸத்தாலும் கைங்கர்யத்தாலும் கிடைக்கும் ஸுகம் என்றபடி. இந்த யோசனைகளால் ராஜ்ய சப்தமும் கிங்கரஸ்யாபி ராஜ்யம் என்று பொருள் படலாம். இன்னும், "நானுன்னைச் சரணடைந்தேன்; பூர்வ ஸங்கங்களனைத்தையும் துறந்தேன்; இனி

எனக்கு ஆயுளோ, செல்வமோ, ஸுகமோ, எல்லாம் உன்னைப்
பொறுத்தது," என்று சொல்வதால், பகவத் பாரதந்த்ரியத்தை
அபேக்ஷித்ததாகுமே யன்றி, ஸர்வேச்வரங்களை வேண்டியதாகமாட்
டாது. முடிவில் ஸுக்ரீவன் பகவானிடம் ப்ரார்த்தித்த ‘ஸக்யாஞ்ச
க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபி: த்வமேந்த்ர ஸமவந்து ராகவ’ । எனும் வாக்
யத்தின்படியே, பகவானுடைய பரிஜநங்களில் விபீஷணன் சேர்ந்
தார்.

ஆனால் பகவான் விபீஷணனுக்கு லங்காராஜ்யம் கொடுத்
தாரே யென்றால், அது அவருடைய க்ருபா பரீவாஹத்தில்
சேர்ந்தது. ஸர்வோத்தமனான ப்ரஹ்லாதனை நோக்கி, அபே
க்ஷித்த வரங்களைக் கேட்கும்படி ரக்ஷகன் ஆஜ்ஞாபிக்கவே,
‘யதி தாஸ்யஸி மே காமாந் வராம்ஸ்த்வம் வரதர்ஷப
ஹ்ருத்யஸம்ரோஹம் பவதஸ்து வ்ருணே வரம்’ ; காமாநாம்
டப்ரதர்க்குள் ச்ரேஷ்டனே! எனக்கு இஷ்டமான வரங்களை நீ ஈசனே! அபீஷ்
கொடுக்கின்றாயாகில், என் ஹ்ருதயத்தில் காமங்கள் உதிக்காத
படி உன்னிடம் வரம் கேட்கின்றேன்" என்று ப்ரஹ்லாதன்
கூறினான். இன்னும் ‘அஹம் த்வகாமஸ்த்வத்பக்தஸ் த்வம்ச ஸ்வாம்யநபாச்ர
ய:’ । "நானோ காமமற்ற உன் பக்தன்; நீயோ ப்ரயோஜநாந்தர
அபிஸந்தியில்லாத என் ஸ்வாமி" என்றும் சொன்னான். ஆகிலும்
"நைகாந்திநோ மே மயி ஜாத்விஹாசிஷ ஆசாஸதே
அமுத்ர ச யே பவத்விதா: । ததாபி மந்வந்தரமேததத்ர தைத்
யேச்வராணாம் அநுபுங்க்ஷ்வ போகாந்" ॥ "உன் போன்ற
எனது பரமைகாந்திகள் என்னிடம் ஐஹிகமாயும் ஆமுஷ்மிக
மாயுமுள்ள ப்ரோயஜநங்களை இச்சிக்கின்றாரில்லை. ஆனாலும் இவ்
வுலகில் இம்மந்வந்தரம் வரையில் தைத்யேச்வரர்களுடைய
போகங்களை அநுபவிப்பாய்" என்று ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அவ
னுக்கு ஆஜ்ஞை செய்தார். அப்படியே அநந்யப்ரயோஜநனைப்
பகவானைக் கிட்டிய விபீஷணனுக்கும் பகவத் கருணையால் லங்கா
ராஜ்யமும் ஆநுஷங்கிகமாக ஸித்தித்தது.



விபீஷண சரணாகதியை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஸர்வபூதங்களுக்கும் தான் சரண்யன் என்பதையும், ஸாங்கமாகத் தனைச் சரணமடைந்தவர்க்கெல்லாம் தான் அபயப்ரதனாக நிற்பதையும், ஸ்ரீராமன் முதலில் மநுஷ்யலோகத்தில் காட்டியருளினார். ஹநுமான் தவிர, மற்ற ஸசிவர்கள் விபீஷணனை அங்கீகரிக்கக்கூடாதென்று தடுத்தும்,

‘மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந ।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்’ ॥

என்று பகவான் மொழிந்தனர். மித்ரபாவம் என்றால் ராமாயணத்தில் சரணாகதத்வம் அர்த்தமாகின்றது. ஸர்வலோகசரண்யனான ராகவனை சரணமடைகின்றேன் என்று சொல்லிக்கொண்டு விபீஷணன் வந்தார்; அவரை ஸ்வாமி மித்ரபாவத்துடன் வந்தவனாக அபிப்ராயப்படுகின்றார். பூர்வம் ஸுந்தரகாண்டத்திலும் பிராட்டி ராவணனைப் பார்த்து,

‘விதிதஸ்ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி’ ॥

என்றுரைத்தனள். "ஸதாம் தர்மம் அறிந்தவராகையால் ராகவன் சரணாகதவத்ஸலன். அவன் அப்படிப்பட்டவனென்று லோகமெங்கும் ப்ரஸித்தம். ஆதலால் ஓ ராவணா! உனக்கு ஜீவிக்க இஷ்டமுண்டானால் அவனுடன் உனக்கு மைத்ரீ (ஸ்நேஹம்) உண்டாகட்டும்" என்று பிராட்டி வசநதாத்பர்யம் ஆனபடியால் ராமாயணத்தில் மித்ரசப்தம், சரணமடைதலைக் காட்டுகின்றது. ஸம்ப்ராப்தம் என்பதால், அங்க வைகல்ய மில்லாமல் விபீஷணன் சரணமடைந்தார் என்பதை விளக்குகின்றது; அதாவது, புத்ர தாராதிகளுடைய பரித்யாக பூர்வகமாகச் சரணமடைந்தார் விபீஷணன். சரணாகதனை மித்ரனென்பதும், சரணாகதனிடம் பகவான் கொண்ட கௌரவத்தை ஸூசிப்பிக்கின்றது. நத்யஜேயம் கதஞ்சந, என்று சொன்னபடியால், சரணாகதனுடைய

திரஸ்கார விஷயத்தில் தன்னுடைய ஶக்தியின்மையைப் பகவான் வெளியிடுகின்றார். தான் ஈஶ்வரனாய், ஸர்வஶக்தனாயிருந்தும், ஶரணாகத த்யாகத்தில் அஶக்தனென்பது, அந்த ஶக்தியின்மை தனது ஸ்வபாவத்தில் அந்தர்கதமாகி நின்று, தனது கல்யாண குணங்களில் சேர்கின்றதெனத் தாத்பர்யம். ஶரணாகதன் தோஷ யுக்தனானாலும் அந்தக் கல்யாணகுணரூபமான அஶக்தியானது அப்படியே நிற்கும். ஆதலால் பகவான் 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என்றுரைத்தான். அதுஷ்டர்களுடைய பரிக்ரஹத்தில் விஶேஷமில்லை. அபராதிகளுடைய ரக்ஷணத்தில் தான் ஏற்றமுண்டு. ஆதலால் ஸுக்ரீவாதிகள் மொழிந்த தோஷங்கள் விபீஷணன் பக்கல் நின்றாலும், 'நானுன்னைச் சரணமடைந்தேன்' என்று அவன் சொன்ன மாத்ரத்தாலேயே, 'அவனை நான் பரிக்ரஹிக்காமல் விடமாட்டேன்' என்றல்லோ பகவான் தன் திருவுள்ளத்தைக் காட்டினான்? இப்படித்தான் ஶிஷ்டர்கள் அநுஷ்டானமிருக்குமென்று, 'ஸதாமேதத் அகர்ஹிதம்' என்று ஸாதித்தருளினார். அகர்ஹிதமென்றால் பூஜிதமென்றர்த்தம். இதை நிஷ்கர்ஷிக்கும் பொருட்டுப் பின்னால் கபோத வ்ருத்தாந்தத்தைப் பகவான் ஸ்வயமே விவரித்தருளினான். தன்னிலையறியாத ஸுக்ரீவாதிகளை த்ருப்தி செய்ய அப்படிச் செய்தாரேயன்றித் தன் ப்ரவ்ருத்திக்கு ஶிஷ்டருடைய அநுஷ்டானம் யோசிக்க வேண்டியதென்கிற தாத்பர்யம் ஸ்ரீராமனுக்கு உதிக்காது.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# * ஆர்ய வித்யை.

(தொடர்ச்சி)

வித்யையின் முக்யாம்ஶங்களாக மேற்கூறப்பட்ட விஷயங்களைக் கவனித்து, இவ்விரண்டு பத்ததிகளின் (அதாவது, ஸ்வதேசவித்யாபத்ததி, விதேசவித்யாபத்ததி) உபயோகத்தைப் பரீக்ஷித்தால் இவைகள் இப்போது நடைபெற்று வருகிறபடி ரொம்பவும் ந்யூநமாயிருக்கின்றனவென்பது ஸ்பஷ்டமாகிறது. ஸ்வதேச பத்ததியில் முன்னே மநுஷ்யனுக்கு ஸம்ஸ்காரார்ஹமென்று கூறப்பட்ட சரீரம், புத்தி மநஸ், ஆத்மா, இவைகளில் புத்தி என்கிற அம்சம் தவிர மற்றெதுவும் கவனிக்கப்படுகிறதில்லை. புத்தி ஸம்பந்தப்பட்ட வரையில் கூட அதன் ப்ரதாந சக்திகளாகிய ஊஹாபோஹம், அர்த்தவிஜ்ஞாநம், தத்வஜ்ஞாநம், அதன் உட்பிரிவாகிய கல்பநாசக்தி அல்லது ப்ரதிபை இவைகளைக் கொஞ்சங்கூட வ்ருத்தி பண்ணாமல் கேவலம் அநுவாகத்தால் சப்தாநுபூர்வியைத் தரிப்பதே ஸர்வஸ்வமாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. விதேச பத்ததியானது சில வர்ஷங்களுக்கு முன் இருந்த ப்ரகாரம் மேற்சொல்லப்பட்ட ஸம்ஸ்க்ருத வித்யாபோதந க்ரமத்தையே பெரும்பாலும் அநுஸரித்து ஸ்மரண தாரணங்களையே அவலம்பித்திருந்தது. இப்போது சில வர்ஷங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் புது மாதிரியான போதநாப்ரகாரமானது முன்னிருந்த க்ரமத்தின் குறைவுகளைப் போக்கி, புத்தியின் எல்லாக் குணங்களையும், அதாவது ஊஹாபோஹாதிகளை ஸமமாக வ்ருத்தி பண்ணுவதை அவசியமாகக்கொண்டிருப்பதாகவும், முன்போல் ஞாபக சக்தியை மாத்ரம் தேர்ச்சியடைவிப்பது உசிதமல்லவென்று, அந்த மார்க்கத்தை அவலம்பிக்கவில்லையென்றும் இதன் ப்ரவர்த்தகர்களால் உத்கோஷிக்கப்படுகிறது. ஆனால், சற்று கவனித்தால், இது புத்தி

* ப்ரமாதீசஹு ஆனிமாதத்து ஸஞ்சிகையில் இதன் முன்பாகம் வந்திருக்கிறது.

யின் ஒரு சக்தியையும் வ்ருத்தி பண்ணாமல், பிள்ளைகளுக்குப்
போது போக்கான சில நிஷ்பலக்ரியைகளைச் செய்யக் கற்பிப்ப
தோடு சரிதார்த்தமாகிறதென்று நமக்குப் புலப்படுகிறது. முன்
வழங்கி வந்த ரீதியை அநுஸரித்துத் தாரணாதிகளான சில புத்தி
சக்திகளாவது ஸம்ஸ்கரிக்கப்பட்டது போய், ஒரு வித தேர்ச்சி
யுமில்லாமல் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை விட்டு வருங்காலத்
தில் வய: ப்ரயுக்தமான மாறுதல் தவிர, மற்ற அம்சங்களில்
பள்ளிக்கூடத்தில் படிக்க ஆரம்பித்தபோது இருந்ததற்குச் சற்
றேறக்குறைய அதிக வித்யாஸமில்லாமலிருப்பதைக் காணும்படி
நேரக்கூடியதாயிருக்கிறது. இப்போது நடைபெறும் பத்ததியின்
ஸ்வரூபத்தைத் தெரிவிக்க ஒரு சிறிய உதாஹரணம் போதுமா
னது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அக்ஷராப்யாஸ வகுப்பு
துவக்கி, ஸுமார் ஐந்து வர்ஷத்துக்குக் குறையாமல் ஸர்வ ஸாதா
ரணமாய் ஸங்கீதம், அபிநயம், சித்ரம் எழுதுவது, மண் முதலிய
த்ரவ்யத்தால் பிம்பங்கள் செய்வது முதலியவை முக்ய பாடங்க
ளாகச் சொல்லிவைக்கப்படுகின்றன. இதற்குத் தனியாக உபாத்யா
யர்கள், ஸங்கீத வித்வான்களாவது சித்ரகாரர்களாவது கிடை
யாது. மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கும் உபாத்யாயர்களே
இவைகளையும் கற்பிக்கின்றார்கள். பிள்ளைகளில் ஸங்கீதத்தில் அபி
ருசியுள்ளவர்களுக்கு ஸங்கீதம், சித்ரம் எழுதுவதில் ஊக்கமுள்
ளவனுக்கு சித்ரகர்மம், என்கிற வ்யவஸ்தையும் கிடையாது.
எல்லாருக்கும் எல்லாம் ஸ்தூலமாய்ச் சொல்லிவைக்கப்படுகிறது.
இதன் ப்ரயோஜநம் என்னவென்றால், ஒருவருக்கும் ஒன்றும்
தெரியாமற்போவது தான். ஆயினும் இந்தப் பாடங்கள் மிகவும்
ஊக்கத்துடன் நடத்தப்படுகின்றன. பரீக்ஷகர்கள் இந்தப் பாடங்
களை முக்யமென்று நினைத்து, இவைகளில்லாத பள்ளிக்கூடங்
களை ராஜாங்கத்தின் ஆதரவுக்குப் பாத்ரமல்லவென்று தீர்மானிக்
கிறார்கள். இந்த பத்ததி கொஞ்சங்கூட ஸாதுவல்லவென்பது
சொல்லவேண்டுவதில்லை. ஸங்கீதம், அபிநயம், சித்ரகர்மம், இவை
கள் ஸர்வஸாதாரணமாய் அப்யஸிக்கக்கூடிய கலைகள் அல்ல.
ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் அதில் அபிருசி ஜந்ம ஸித்தமாய்
அமைந்துள்ளவர்களுக்கே அந்தந்த கலையில் யோக்யதை தேறு
மேயொழிய, எல்லாரும் அவைகளில் ப்ரவேசிப்பது நிஷ்பலமா
கவே முடியும். மேலும் அந்தந்த கலைக்குத் தனியாய் அதில்



ப்ரவீணனாயிருக்கும் ஆசார்யன் கற்பித்தால் உபயோகமிருக்குமேதவிர, யாராவது சொல்லிக்கொடுப்பதென்பது பரிஹாஸ்யமான ஆரம்பம். இதற்கு நிதர்சநம் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகிறது. இப்போதிருக்கும் பள்ளிக்கூடங்களின் ஸமீபத்தில்போகும்போதே, கர்ணகடோரமான ஸங்கீதமென்று சொல்லப்படும் கோஷமும், உள்ளே நுழைந்தால், பார்க்க ஸஹிக்காத சித்ரங்களென்று சொல்லப்படும் கிறுக்கின காகிதங்களும் நமக்கு அதி துஸ்ஸஹமான உத்வேகத்தை விளைவிக்கின்றன. இப்படிப்பட்டவிபரீதாநுஷ்டாநத்தால் யாருக்குத்தான் உபயோகமோ தெரியவில்லை. அப்யஸிக்கப்படும் கலைக்கும் இதனால் உபகாரமில்லை. அப்யஸிக்கும் பாலர்களுக்கும் யாதொரு வ்ருத்தியுமில்லை. ப்ரத்யுத, உபய பக்ஷத்திலும் ஹாநியே இதனால் ஸம்பவிக்கின்றது. உதாஹரணமாகக் கூறப்பட்ட இந்த விஷயத்தில் எப்படியோ, அப்படியே தான் மற்றெல்லா அம்சங்களிலும் இப்போதைய நவீந பத்ததிக்கு வைபரீத்யமே முக்ய தர்மமாயிருக்கின்றது.

இதம்பரமாய், ஸம்ஸ்கரிக்க ஆரம்பித்த புத்தி சக்திகளே இந்த கதியை அடைந்திருக்க, மநுஷ்யனுடைய மற்ற மூன்று அம்சங்களாகிய சரீரம், மநஸ், ஆத்மா என்பவைகளைப்பற்றிக் கதை ஏது? அவைகள் இருப்பதாகவே எண்ணங் கிடையாது. இவ்விதமாக நம் பாலர்களுடைய வித்யை மிகவும் சோச்யமான பாரிப்லவத்தை அடைந்திருப்பதால், அதை நாம் முக்மாய்க் கவனித்து ஒழுங்கு செய்யவேண்டியது நமது முதற்கடைமை என்று நாம் உணர்ந்து, நடவடிக்கை நடத்தவேண்டியிருக்க, அதை அவ்வாறு எண்ணாமல், இதர விஷயங்களைக்காட்டிலும் இதில் சிரத்தைக்குறைவு நமக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்க, ஒவ்வொரு விவேகியின் ஹ்ருதயத்திலும் மிகுந்த துக்கமுண்டாகிறது.

வித்யை தான் மநுஷ்யர்களுக்கு ஸர்வ ப்ரகாரமான ச்ரேயஸ்ஸுக்கும் காரணம். வித்யா விரஹம் தான் ஸர்வ ப்ரகாரமான அநிஷ்டத்துக்கும் மூலகாரணம். ஜ்ஞாநத்தால் ஆநந்தமென்றும், அஜ்ஞாநத்தால் துக்கமென்றும் நம் பெரியோர்கள் அநாதியாய்ச் சொல்லிவருவதும் இது தான். யதார்த்தமான லோகஜ்ஞாநம் தான் யதார்த்தமான பரலோக ஜ்ஞாநத்தை ஸாதிக்கும். லோகஜ்ஞாநமில்லாமல் பாரலௌகிக ஜ்ஞாநம் ஸாதாரணமாய் ஸித்திப்பத

ரிது. இது தான் "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்" என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வயம் லோகபரீக்ஷையினால் ஒருவனுக்கு அநுபவஸித்தமாகிற தோஷங்களைப் பார்த்து, அதில்ஹேயதா புத்தி நிலைபெற்று, அதன்பேரில் ஏற்படும் நிர்வேதம் தான் அவனைப் பரவித்யைக்குத் தகுந்த அதிகாரியாக்குகிறது. ஜிஜ்ஞாஸை ஏற்பட்டால் தான் வித்யோபதேசத்துக்கு அவஸரம். இது வரையில் ஜ்ஞாதமாயிருக்கும் விஷயங்களில் அபர்யாப்தி தோன்றினால், தானே அதற்கு மேற்பட்டு விஷயமிருக்கிறதா வென்று ஜிஜ்ஞாஸை உண்டாகும். இதுவரையில் கோசரமாயிருக்கும் விஷயங்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை யதார்த்தமாக அறிந்துகொண்ட பிறகு, அவைகளில் அபர்யாப்தாபுத்தி உண்டாகக்கூடும். ஆகையால் லோக பரீக்ஷைக்கு வேண்டிய வித்யையைப் பூர்ணமாய் அப்யஸித்து, யதார்த்தமான லோக ஜ்ஞாநத்தை ஸம்பாதித்து, அதிலிருந்து பரலோக ஜ்ஞாநமாகிய மேல்படியில் ஏறுவது தான் ஸாதாரணமான க்ரமம். இதைத் தான் நம் பெரியோர்கள் பல ஸந்தர்ப்பங்களில் விசத விசதமாய்க் கூறியிருக்கிறார்கள். 'பரலோகத்தையே உத்தேசித்து இந்த லோகத்தை நாம் கவனிக்கவேண்டியதில்லை. இந்த லோகம் இருப்பதாகவே நாம் நினைக்கக்கூடாது. இதைத் தெரிந்துகொள்வதற்கு ப்ரயத்நம் செய்யவேண்டியதில்லை. இதைச் சேர்ந்த கர்த்தவ்யங்கள் நமக்கு ஒன்றுமில்லை. ஸாக்ஷாத்தாக, அதாவது, இந்த லோகத்தின் ஸம்பந்தம் எவ்விதத்திலும் இல்லாமலே நாம், பாரலௌகிக ஜ்ஞாநம் ஸம்பாதிக்கவும், பரலோக ஸாதநமான கார்யங்கள் செய்யவும் வேண்டும்' என்பதாக நம் பெரியோர்கள் அபிப்ராயம் என்று இப்போது ஸஹஜமாய் அநேகர் சொல்வதை நாம் அறிந்திருக்கிறோம். அது மிகவும் தப்பிதம். லோகாநுபவமும், லோக ஜ்ஞாநமும் மிக்வும் அவசியம்; அது தான் முதற்படி. அதை அவலம்பித்துத் தான் மேலே செல்ல முயற்சிக்கவேண்டும். ஆகையால் லோகத்தை ஸரியாய் அறிந்து, அதன் குண தோஷங்களை உணர்ந்து, அது நமக்கு ஒரு ஸோபாநமே யல்லாது பரமாவதியல்லவென்று செம்மையாய் அநுபவத்தில் அறிந்து, அதில் ப்ராப்யதா புத்தியையும், அதைச் சார்ந்து ஏற்படும் உத்கடமான ஆஸக்தியையும் விலக்கி, மேல் விஷயங்களில் நோக்குடன், ஸமக்ர



மான உபாயாநுஷ்டாநம் பண்ணவேண்டியது தான் நமக்கு ப்ராப்தமானது. ஆகையால் இவ்விதமான ஸந்மார்க்கத்தை நமக்குச் செப்பனிட்டு வைத்திருக்கும் "ஶ்ரோதவ்ய: ஶ்ருதிவாக்யேப்யோ மந்தவ்யம் ஶாஸ்த்ரம்", என்று அந்வர்த்தமாக ப்ரஸித்தி பெற்ற நம் மூத்தோர் வாக்யங்களின் உண்மையை நாம் ஸரிவரத் தெரிந்துகொண்டு, அந்த மார்க்கத்தில் வித்யாப்யாஸம் செய்யும்பக்ஷத்தில், நமக்கு ஸர்வ பல ஸித்தியும் உண்டாகுமென்பதற்கு ஸந்தேஹமில்லை.

அந்த மார்க்கத்தின் ப்ரகாரம் ஶ்ருதியிலும், மந்வாதி ஸ்ம்ருதிகளிலும், ஸூத்ரங்களிலும் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. இதிஹாஸங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. இதம்பரமாக ப்ரவ்ருத்தித்த நாரதசிக்ஷை முதலிய க்ரந்தங்களிலும் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதைப் பூர்ணமாய்த் தெரிந்துகொண்ட விவேகிகள், அம்மார்க்கத்தை ஏற்படுத்தின மஹர்ஷிகளுடைய ஆசயத்தையும், அவர்கள் வாக்யங்களின் தத்வார்த்தத்தையும் மயர்வற வுணர்ந்து, தங்களுடைய அநுபவத்தையும் ஒட்டி, இப்போதிருக்கும் தேசகாலாதி ஸந்நிவேச விஶேஷத்தியையும் பராமர்சித்து, தகுந்தபடி நம் ஆர்யபாலர்களுக்கு ஒரு வித்யாபதம் ஏற்படுத்தவேண்டியது, ஆர்ய குலத்தில் அபிமாநமும் அக்கறையுமுள்ள ஒவ்வொருவரும் வஹிக்கவேண்டிய பரமாயிருக்கிறது.

இது விஷயத்தில் என்னென்னவிதமான நிஷ்பத்தி செய்யவேண்டியதென்று ஸம்பூர்ணமாக விவரிக்கவாவது, அல்லது திக்தர்சநம் பண்ண யத்நிக்கவாவது, நான் ஸர்வ ப்ரகாரமாயும் அசக்தனாயிருந்தபோதிலும், இதிலிருக்கும் ஆஸ்தையாலும், இப்போது நம் தேசத்தில் வித்யைக்கு ஏற்பட்டிருக்கும் மாலிந்யத்தால் உண்டாகும் துக்கத்தினாலும், இது நம் தேசத்தின் க்ஷேமத்தைக்குறித்து நாம் கவனிக்கவேண்டிய முக்யாம்சமென்று ஆஸ்திகர்களும் தேசாபிமாநிகளுமான புத்திமான்களுடைய மநஸ்ஸில்

வேரூன்றச் செய்துவிட்டால், அவர்களால் தகுந்த பரிஹாரம் ஏற்படும் என்கிற நம்பிக்கையாலும், என் புத்திக்கு எட்டியவரையில் சில அபிப்ராயங்களை இதில் வெளியிடுகிறேன்.

மேலே கூறியவாறு மநுஷ்யனுடைய நாலு அம்சங்களாகிய சரீரம், புத்தி, மநஸ், ஆத்மா, இவைகள் ஒன்றுக்கொன்று உபகாரமாக, அதனதன் குணங்களாலும், சக்தியாலும், வ்யாபாரத்தாலும் மற்றொன்றைப் போஷித்துக்கொண்டு, எல்லாம் ஒருமிக்க மநுஷ்யனுடைய நிச்ரேயஸத்தை ஸாதிப்பதற்குத் தேவையான ஸம்ஸ்கார ப்ரக்ரியை தான் வித்யையென்று நிஷ்கரிஷிக்கப்பட்டது. இவற்றுள், ஒவ்வொன்றின் ஸ்வரூபமும், ஸ்வபாவமும் வேறுபட்டதாகையால் அததற்குள்ள ஸம்ஸ்கார ப்ரகாரமும் வித்யாஸப்பட்டதாகவே இருக்கிறது. அதாவது, சரீரத்துக்கு ஆசாரமும், புத்திக்கு அத்யயநமும், மநஸ்ஸுக்கு அப்யாயாஸமும், ஆத்மாவுக்கு த்யாநமும் ஸம்ஸ்காரங்களாக ஏற்பட்டிருக்கின்றன. ஸமீசீநமான வித்யையின் பல மென்னவென்றால், இந்த அம்சங்களில் ஒவ்வொன்றுக்கும் ஏற்படும்ஸம்ஸ்காரத்தால், அந்தந்த அங்கமும் (அதாவது மேற்கூறிய அம்சமும்) அந்யாத்ருசமான தேர்ச்சியை யடைவதுடன், அதனாலேயே இதர அம்சங்களின் சக்தியை வ்ருத்திபண்ணுவதற்கு ஸஹகாரியாயிருந்து, ஸர்வஸாநத்தில் அங்கியின் பரமச்ரேயஸ்ஸை ஸாதிப்பது தான்.

இப்படிப்பட்ட ஒற்றுமை ஏற்பட்டால், ஒரு அங்கத்தின் சக்தியை மாத்ரம், அல்லது சில அங்கங்களின் சக்திகளை மாத்ரம் வ்ருத்திசெய்து, அதனால் இதர அங்கங்களின் சக்திக்குக் குறைவு உண்டுபண்ணுவதும், ஒரு அங்கத்தின் சக்திக்கும், மற்றொன்றின் சக்திக்கும் ஸங்கர்ஷம் உண்டாக்கி, வைஷம்யத்துக்கு ஹேதுவைத் தேடிக்கொள்வதும் ஸத்வித்யையின் லக்ஷணமல்ல. ஒரு ரதத்தில் கட்டப்பட்ட இரண்டு குதிரைகளையும் ஸாரதியானவன் கடிவாளங்களால் பிடித்துத் தான் உத்தேசித்த வழியில் நடத்துவது போல், சரீரம் - புத்தி - என்கிற இரண்டு அச்வங்களையும், ஜீவாத்மா, இந்த்ரியவர்க்கங்களுடன் கூடின மநஸ்



ஸாகிற கடிவாளங்களால் பிடித்து நடத்துகிறான். ரதத்தின் அச்வங்கள் ஒவ்வொன்றும் புஷ்டமாகவும், பலமுள்ளதாகவு மிருக்க வேண்டியது அவச்யம். ஆனால் ஒரு அச்வத்தின் சக்தி, மற்றொன்றின் சக்தியுடன் சேர்ந்து, இரண்டும் ஒருமிக்க ரதத்தை உத்தேசித்த இடத்துக்கொண்டுபோனால் மாத்ரம் யுக்தமே தவிர அச்வங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இழுத்தாலாவது, இரண்டும் சேர்ந்து விபரீத மார்க்கத்தில் கொண்டுபோனாலாவது, அநர்த்தமே ஸம்பவிக்கும். இப்படியே கடிவாளமும் உறுதியாயிருக்கவேண்டியது அவச்யம் தான். ஆனால் ரதத்தை ஓட்டுகிறவனுடைய கைக்கு அடங்கியும், ம்ருதுவாகவும், இழுத்த வழியில் இழுக்கும்படி வச்யமாகவும் இராமல், கைக்கு அடங்காமலும், கடிநமாகவும், ஸ்வாதீநமில்லாததாகவு மிருந்தால் கார்யகாரி யாகமாட்டாது. இவ்வளவும் ஸரியாய் அமைந்திருந்தும், ரதத்தின் நேதாவுக்கு நல்ல வழி கண்ணுக்குப் புலப்படாமல் அபாயமான மார்க்கமே நல்லதாகத் தோன்றினால், எல்லாம் வ்யர்த்தமாகவே பர்யவஸிக்கும். இது போலவே நம்முடைய சரீரம், புத்தி இவ்விரண்டின் சக்தியையும் அநுகூலமான மார்க்கத்தில், நாம் மேன் மேலும் வ்ருத்தி செய்யவேண்டியது. மநஸ்ஸையும் செம்மையாய்ப் பரிஷ்கரித்து, நிர்மலமாக்கி, ஆத்மாவிற்கு வசப்பட்ட கையாளாகச் செய்யவேண்டியது. ஆத்மாவும் அநவரதம் அவிச்சிந்நமான பகவத்த்யாநத்தினால், தன் ஸ்வரூப ஸ்வபாவங்களையும், தன்னிடம் நியந்தாவாகிய ஸர்வாந்தர்யாமியும் ஸர்வசேஷியுமான பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும், விசதமாய் ஸாக்ஷாத்கரித்து, நிச்ரேயஸ பதவியில் தன்னையும், மேற்கூறப்பட்ட தன் அங்கங்களையும் செலுத்தவேண்டியது. இது தான் ஆர்ய வித்யையின் பரமபலம்.

வித்யை இப்படி மஹா பலமுள்ளதென்று நம் பெரியோர்களான மஹர்ஷிகள் உணர்ந்திருந்தபடியால் தான், அவர்கள், ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தத்தைப்பற்றி மிகவும் ப்ரசம்ஸித்து, விசேஷமான கவனத்துடன் அதற்கு வேண்டிய அம்சங்களை விவரித்

திருக்கிறார்கள். மற்றெல்லா விஷயங்களைக் காட்டிலும் ப்ருஹ்ம சர்யம், குருகுலவாஸம் இவைகளை ப்ரதானமாகக் கைக்கொள்வதற்குக் காரணமும் இதுவே. உபநயநம் என்பது ஒரு சிறுவனை வித்யாக்ரஹணத்துக்கு அதிகாரியாக்குவதற்குத் தேவையான ஸம்ஸ்காரம். அது துவக்கி, அவன் வித்யாபரிஸமாப்தி வரையில் ஆசார்யன் வீட்டிலேயே இருந்து வித்யாக்ரஹணம் பண்ணவேண்டியது. அது முதல் அவனுக்கு, ஆஹாரம், நித்ரை, மற்றுமுள்ள ஶாரீரமானஸ வ்யாபாரங்கள் எல்லாவற்றைக் குறித்தும் நியமம் ஏற்பட்டுவிடுகிறது. இனி அவன் முன்போல் காமசாரனாகவும், காம பக்ஷகனாகவும் இருக்கமுடியாது. இது விஷயமாய் தர்ம ஶாஸ்த்ராதிகளில் ஸாதாரணமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்களோடு, அந்தந்த ஆசார்யன் அந்தந்த ஶிஷ்யனுடைய ஸ்வபாவத்தை யறிந்து, அவனுக்குத் தக்கபடி ஏற்படுத்தும் விஶேஷ நியமங்களும் அநுஷ்டிக்க வேண்டியவைகள். ஒரு வைத்யன் ஆர்த்தனுக்கு மருந்து கொடுப்பதிலும், பத்யம் வைப்பதிலும், வைத்ய ஶாஸ்த்ரத்தில் ஸாதாரணமாய்ச் சொல்லியிருக்கும் விதிகளை ஆலோசித்துச் செய்வதுடன், அந்த வ்யக்தியின் தேஹக்கூறை அநுபவத்தால் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கபடியும் சிகித்ஸையை நடத்தவேண்டியது அவஶ்யமா யிருப்பது போல், ஆசார்யனும் தன் ஶிஷ்யனுடைய ஸ்வபாவத்தை நன்றாய் அறிந்து, அதற்கு அநுகுணமாக அவனுக்கு நியமாதிகள் ஏற்படுத்தவேண்டியது அவஶ்யம்.

நியமத்தை ஆஹாரநியமம், சேஷ்டாநியமம் என்று இருவகைப் படுத்தலாம். ஆஹாரநியமம் இருந்தால் தான் சேஷ்டாநியமம் ஸித்திக்கும். அஸாத்விகமான ஆஹாரங்களை உட்கொண்டால், அஸாத்விகமான சேஷ்டைகளுக்கும் காரணமாகுமென்பது ஒவ்வொருவருக்கும் அநுபவஸித்தம். "ஆஹார ஶுத்தௌ ஸத்வஶுத்தி:, ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:" என்று சொல்லியபடி ஆஹாரசுத்தி ஏற்பட்டால், சரீரம் பவித்ரமாக்கப்பட்டு, அதன் சேஷ்டைகளெல்லாம் பரிசுத்தமாய், அதன் மூலமாய் மனஸ்ஸுக்கு சுத்தி உண்டாகிறது. பரிசுத்தமான மனஸ்ஸினால் ஆத்மாவுக்கு ஸ்வரூப ஜ்ஞானம் உண்டாய், மேன்மேலும் ஶ்ரேயஸ்கரமான



ப்ரவ்ருத்திகளைக் கைக்கொள்ளுகிறான். இவ்விருவகை நியமமும் தான் ப்ருஹ்மசாரிக்கு ஶாரீர ஸம்ஸ்காரம். இது தான் முன்னமே ஆசாரமென்று கூறப்பட்டது.

இந்த ஸம்ஸ்காரம் நடந்து கொண்டிருக்கையிலேயே, அத்யயநத்தால் புத்தி ஸம்ஸ்கரிக்கப்பட்டு வரவேண்டியது. அத்யயநம் என்றால், அர்த்த ஜ்ஞாந ஸம்பாதநம். கேவலாநுவாகமல்ல. இந்தப் பதத்தின் வ்யுத்பத்திக்கு விருத்தமாய், அநுவாகாப்யாஸம் என்கிற அர்த்தம் இதற்கு என்ன காரணத்தினால் ப்ரஸித்தி யடைந்திருக்கிறதோ தெரியவில்லை. ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஶக்தியைச் செம்மையாய்க் கண்டுகொண்டு, அதற்கு அநுகுணமாய் கணஶ:கணஶ: அவனுக்குப் போதம் உண்டாக்குவதால் அர்த்த ஜ்ஞாநம் நிஷ்பந்தமாகிறது. அர்த்த ஜ்ஞாநம் ஶிஷ்யனுக்குக் கொஞ்சம் ஏற்பட்டவுடன், அதை மேன்மேலும் ஆவாபோத்வாபாதி ப்ரகாரங்களால் வ்ருத்திசெய்து, யதார்த்தமான அர்த்த ஜ்ஞாநம், அதை யதாவத்தாக ப்ரதிபாதநம், முதலிய புத்தி ஶக்திகளைப் படிப்படியாகப் பெருக்கச் செய்ய வேண்டியது ஆசார்யன் கடமை. ஒரு சிறு நெருப்புப் பொறியைக் கொஞ்சங் கொஞ்சமாய் முதலில் மூச்சுக் காற்றினால் ம்ருதுவாக ஊதி, ரொம்பவும் அல்பமான வைக்கோல், ஓலை முதலிய இந்தந ஸாமக்ரிகளை மிதமாகக் கொடுத்து, அந்தப் பொறியை ஜ்வலிக்கும்படி செய்து, பிறகு க்ரமேண, சுள்ளி, கட்டை முதலியவைகளைச் சேர்த்து, மேன்மேலும் பெரிய அக்நியை வளர்த்துவது போல, ஆசார்யன் முதலில், பால புத்திக்குத் தகுந்தபடி லலிதமான விஷயங்களை ப்ரியமாகப் போதித்து, சிஷ்யன் புத்தியில் ப்ரகாஶத்தை உண்டாக்கி, பிறகு படிப்படியாய் மஹார்த்தங்களில் அதற்கு ப்ரவேஶம் உண்டுபண்ணுவது தான் ஸரியான முறையாகும்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

# ஜநகநந்தினி.

## ஓர் உபாக்யாநம்.

(தொடர்ச்சி.)

ஜநகநந்தினி பன்னிரண்டாவது பிராயத்தைக் கடக்குங்கால் வைசாக உத்ஸவம் வந்தது. பகவத் ஸேவார்த்தம் பஹு ஜநங்கள் காஞ்சீபுரத்தில் கூடினர். வேறு உத்தேச்யங்களாலும் அந்நகரத்தில் அநேகர் கூடினார்கள். கல்யாண வார்த்தைகள் முடிப்பதற்கு அக்காலம் தகுந்ததென்று வருபவர்களும் உண்டு. அநேகம் ப்ராஹ்மணப் பெண்கட்கு வரன்கள் அமைந்தனர். வைதிகஸார்வபௌமரான கேசவாசார்யர் பெற்று வளர்த்த பெண்மணிக்கு ஓர் தக்க வரன் அமையவில்லை. பாஷாந்தரப் பயிற்சியும், ப்ரஷ்டர்களுடைய ஆசாரங்களும், கூடி வளர்வதால், தத்வார்த்த விமர்சியான தன் புத்ரியைப் பாஷாந்தரம் படித்தவர்க்குத் தானம் செய்ய அவர் இச்சிக்கவில்லை. வைதிகவ்ருத்தியும், தாரித்ரியமும், கூடியே நிற்றலால் பெண்ணைப் பரிக்க உபபத்தி யற்றவர்க்கும், அவளைக் கொடுக்க அவர் இசைந்தாரில்லை. இவ்வண்ணம் வரன் கிடைக்காமல், சாஸ்த்ரம் வரம்பிட்ட வயதை அவள் அதிக்ரமிக்கப் பார்த்து அவர் வருந்தினார். வைதிக குலப்ரஸூதரான பாஷாந்தரம் படித்தவர்க்குக் கொடுக்க முடிவாகத் தன் மனஸைத் திருப்பினாராயினும், அவர் யோசித்த ஒவ்வொரு ஸ்தாநங்களிலும் கேட்கப்பட்ட வரதக்ஷிணையை நினைக்க நினைக்கத் திடுக்கிட்டுப் போயினர்.

வைநதேயன் மீதேறித் திருவீதிகள் அலங்கரித்துவிட்டு வரதன் ஸந்நிதிக்குத் திரும்பினார். பகவான் பின்னால், வேதகோஷ்டியில் கைங்கர்யம் செய்துவிட்டுக் கேசவாசார்யர் இல்லம் சென்றனர். தத்கால நியதமான ஆஜ்ஞா கைங்கர்யங்களை அநுஷ்டித்துவிட்டு, ச்ரம பரிஹார நிமித்தமாக நடைத் திண்ணையில் படுத்



துக்கொண்டார். ஸாயங்காலம் வந்த பிறகு ஜநகநந்தினி வீட்டினின்றும் வீதியில் இறங்கினாள். வீட்டின் முன் வீதியில் தண்ணீர் தெளித்து, மண்ணினைப் போக்கி, ரங்கவல்லிகளால் அந்த ப்ரதேசத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

"ஜநகம்! கோலமிடுகின்றையோ?" என்றொரு சிறுவன் சொல்ல, முகமெடுத்துப் பார்த்தனள். "எப்போது வந்தாய் ஸ்ரீநிவாஸா?" என்று அவனை வினவினள்.

"நேற்றிரா இவ்விடம் வந்தேன். உத்ஸவத்தின் கூட்டத்தால் உன்னை இதுவரையிலும் பார்க்கத் தடையாயிற்று. ஸுகமாயிருக்கின்றையா?" என்று சிறுவன் மொழிந்தான்.

"ஸுகமே யிருக்கின்றேன். உன் பள்ளிக்கூடம் மூடிவிட்டார்களோ? ஸௌக்யமாக இருக்கின்றையோ?" என்று ஜநகநந்தினி கேட்டாள்.

"பள்ளிக்கூடம் மூடித்தான் இவ்விடம் வந்தேன். நான் ஸௌக்யம் தான். என்ன இவ்வளவு விஸ்தாரமாக இந்த வீண் தொழில் செய்கின்றையே?" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"இது வீணென்பதும் நன்றென்பதும் அபிப்ராயபேதம். உன் போல் நானதை நினைக்கின்றேனில்லை" என்றாள் ஜநகநந்தினி.

"என்ன? விக்ரஹங்களை வைத்துக்கொண்டு விளையாடுகின்றீர்கள்? ஜநங்களுக்கு உபகாரமான தொழில்களில் காலங் கழித்தல் நலமன்று"? என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"ஆத்மா உஜ்ஜீவிக்கும் வழியென்று நம்பி, வாக்குக்கும் மநஸுக்கும் எட்டாத ஸ்வரூபத்துடன் கூடிய பரமேச்வரனை, அவன் இட்ட கட்டளையென்று நம்பினபடியே, திவ்ய மூர்த்திகள் மூலமாக, அவற்றுள் அவன் ஸாந்நித்யம் செய்கிறான் என்று விச்வஸித்து உபாஸிக்கும் ஜநங்களை, இவ்வளவு எளிதாக நிந்திப்பது ஸத்வ்ருத்தமென்று எண்ணுகின்றையோ? இதுதானா உன் படிப்பின் ப்ரோயஜநம்? இந்த விஷயத்தில், உன் புத்தியை மயக்கினவர்களுடைய விஷமோக்திகளைத் தவிர, உனக்கு அபரோக்ஷமான அநுபவம் ஏதாவதுண்டோ? என்ன ஸ்ரீநிவாஸா? இப்

படிக் கெட்டுப்போனாயே ?" என்று ஜநகநந்தினி வெறுப்புடன் சொன்னாள்.

"ஆத்மா உண்டென்றும் பரமேச்வரன் ஒருவன் இருக்கின்றான் என்றும் உனக்கெப்படித் தெரியும் ?" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"அதில் சாஸ்த்ரம் ப்ரமாணம்; ஆப்தர்களென நாம் மதிக்கும் மஹாத்மாக்களுடைய அநுபவமும், அதை வெளிப்படுத்தும் வாக்யங்களும் ப்ரமாணம். சரீரங்களெனப்பட்ட ப்ரக்ருதியின் விகாரங்களில் சேராமல், உன்னிடமும், மற்று யாவரிடமும், தனக்குத் தானே ப்ரகாசிக்கும் சேதநர்கள் ப்ரமாணம்" என்றாள் பெண்மணி.

"ஜநகம் ! என்னமோ மனம் போனபடிப் பேசிவிட்டேன். என்னை நீ மன்னிப்பாய். அப்பா எங்கே இருக்கிறார் ?" என்றனன் சிறுவன்.

"உள்ளே இருக்கின்றார்" என்று சொல்லிவிட்டு, ஜநகநந்தினி தன் கார்யத்தைப் பார்த்தனள். ஸ்ரீநிவாஸனும் உள்ளே சென்றனன். அங்கவன் சிறிது நேரம் கழித்து வெளிப்பட்டவரையில், ஹஸ்திகிரீசன் எழுந்தருளப் போகின்ற வீதியை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். பிறகு உள்ளே ப்ரவேசிக்கும் கால், நடையில் எழுந்து உட்கார்ந்திருந்த தன் பிதாவைப் பார்த்தாள்.

கேசவாசார்யரும், பெண்ணே ! உனக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் உரத்த குரலாய் வார்த்தை நடந்ததே ! என்ன விஷயம் ?" என்றனர்.

ஜநகநந்தினியும், அப்பா ! என்ன சொல்வேன் ! எம்மட்டும் அவன் கெட்டுப்போனான் ? நான் பெருமாள் எழுந்தருளும் வீதியலங்காரம் செய்தது வீண் தொழிலாம். விக்ரஹங்கள் வைத்துக் கொண்டு விளையாடுகின்றோமாம். ஆத்மாவும் இல்லையாம். ஈச்வரனும் இல்லையாம். இவ்வண்ணமெல்லாம் அவன் பேசினான்" என்றுரைத்தாள்.

"அதற்குத் தக்கபடி நீ விடைதந்தாயன்றோ ? பெண்ணே ! உங்கட்குள் ஸம்பாஷணையை நான் கிஞ்சித்துக் கேட்டேன். ப்ராசீந ஸுக்ருதத்தால், உனக்கு மேதையும், ஸத்ஸங்கமும் கிடைக்கவே, நீ நாஸ்திக வாதங்களால் சலிக்கப்படமாட்டாய்.



உனது ஸம்ஸர்க்கம் உன்னை இவ்வண்ணம் ஆக்கியது, அவனுடைய ஸம்ஸர்க்கம் அவனை அவ்வண்ணம் போக்கியது", என்று சொன்னார் கேசவாசார்யர்.

"அப்பா ! காவ்ய க்ரந்தங்கள் தான் அடியேனுக்குத் தேவரீர் கற்பிக்கின்றீர். தத்வவிஷயங்கள் வாசிக்காமல், கேள்வியால் மாத்ரம் ஈஷத் அறிகின்றேன். அவற்றுள் நிஷ்க்ருஷ்டார்த்தங்களைத் தேவரீர் அடியேனுக்கு க்ரந்தங்கள் மூலமாகத் தெளிவிக்கக் கூடாதோ ?" என்றனள் ஜநகநந்தினி.

"குழந்தாய் ! அதக்குத் தகுந்த காலத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டுக், கேசவாசார்யர் எழுந்து ஸந்நிதிக்குச் சென்றார். ஸூர்யாஸ்தமநம் ஆன பிறகு பேரருளாளன் ஸந்நிதி வீதியில் எழுந்தருளிவிட்டார். அந்த வீதியில் தன்னுடைய க்ருஹத்தின் முன்பாகத் தன் தாயுடன் ஜநகநந்தினி நின்றுகொண்டு எம்பெருமானுடைய உத்ஸவ வைபவத்தைத் தர்சித்தனள்.

முதலில் ஆனை, குதிரை, வாத்ய விசேஷங்கள், அவள் முன் வீதியைக் கடந்தன. இவற்றின் முன்பும், பின்பும், பகுத்தறிவற்ற பாமரஜநங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சென்றனர். அவற்றின் பின்னால், அவ்யக்தமான கோஷத்துடன் அத்யாபக கோஷ்டிகள் சென்றன. அவற்றிற்கு ரக்ஷகராகப் பல போலீஸ் உத்யோகஸ்தர்களும் ஓர் கோஷ்டிபோலச் சென்றார்கள். சிறிய திருவடிமீது ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான், அந்தத் திருவடியின் ஸந்நிதிப் புறத்தே எழுந்தருளுமுன், அத்யாபகர் பெருமாள் முன்பாக எதிர் நின்று, ஆழ்வார் பாசுரங்களைச் சக்தியுள்ள வரையில் உரக்கப் பாடி நிறுத்தும் பர்யந்தம், போலீஸார் அதிகாரத்துக்குப் பயந்த வாஹநம் சுமப்போர், கடற்கரையில் அலைகள் கரைமேல் மோதிப் பின்னிடுவதைப்போல், வாஹநம் சுமக்கும் வருத்தம் தாளாமல் முன்னும் பின்னுமாக நடைகொண்டு நின்றிருந்தார்கள்.

இப்படி அத்யாபக கைங்கர்யத்தை நின்று கடாக்ஷித்த எம்பெருமான், அது முடிவுற்றவுடன், அவ்விடம் விளம்பித்த காலத்தை, அதன் பின்னால் தான் நடக்கும் வேகத்தால் ஸமமாக்க எண்ணுபவன்போல், அதி சீக்கிரமாகச் செட்டிவீதியைக் கடந்தான். இதையெல்லாம் ஜநகநந்தினி நோக்கி நின்றனள் அத்யபாக

கோஷ்டியின் பின்னும், எம்பெருமான் முன்பாகவும், தமது குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகும், மற்ருேர் பார்க்க வேண்டுமென்று ஆவல்கொண்ட ஆடவர்கள், வாய்பற்ற வெற்றிலை பாக்கை மென்றுகொண்டு, ஒருவர்க்கொருவர் கைகளைப் பற்றிக்கொண்டு, உல்லாஸமாய் வார்த்தையாடிச் சிரித்துக்கொண்டு நடந்தார்கள்.

இவர்பின் பெருமாள் எழுந்தருளினுர். முன்னடந்தவரைப் போல் தமைப் பிறர் நினைத்தலை வேண்டாத மற்ருேர், அவரைப் போல் ஆடை முதலானவற்றை அணிந்தாராயினும், தேப்பெருமாள்பின் கூட்டங் கூட்டமாகச் சென்றனர். இவர் கூட்டத்தால் விதியில்லாமல் பின்னிட்ட வேதகோஷ்டிகள் வருவதைப் பெண்மணி கண்டாள். அவற்றின் மத்யே, தனது பிதாவையும் தர்ஶித்தாள். வேதத்தின் மதுர ஸ்வரங்களை ஆநந்தத்துடன் கேட்டு அநுபவித்தனள். இதற்குள், அந்தக் கோஷ்டிகளின் பின்னுல் அநுயாத்ரை செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் கண்டனள். இப்படி ஸர்வேஶ்வரன் உத்ஸவம் கண்டருளின போதிலும், அதில் ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்ற குற்றங்களை அவள் கண்டாளில்லை. தன் ஜநகனுல் தனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஸ்ரீபாகவத ஶ்லோகங்களை அவள் அநுஸந்தித்துக் கொண்டிருந்தாள். அவையாவன :—

[illegible]



[illegible]

ஹரிः ॥ இவற்றின் பொருள் :—

“ ஸத்வாதி குணங்களுடைய வைஷம்யத்தால் உண்டாகும் மஹத் அஹங்காரம் முதலானவற்றின் உத்பத்திக்கு முன்னுல், நாமரூப விபாகமற்றதும், ஸூக்ஷ்ம தசையுடன் கூடியதுமான ஜகத்துக்கு ஆதாரபூதனை ஈஶ்வரன், ப்ரக்ருதி, ஜீவன், கர்மம், எனப்பட்ட அவனுடைய ஸகல சக்திகளும் தூங்கும் வண்ணம் இருக்க, யோகநித்ராவஶனுய் நிற்கும் ப்ரளயமாகும் இரவில், சிதசித்ரூபமான அவனது ஶரீரம் நிஷ்ப்ரபஞ்ச தசையாகும் ஸூக்ஷ்மாவஸ்தையுடன் நிற்கையில், அவன் ஒருவனே இருந்தனன் என ஶ்ருதிகளால் உத்கோஷிக்கப்பட்ட, அந்தப் புராதந புருஷனன்ருே இந்த ஸ்ரீக்ருஷ்ணன். அவன்தான், மறுபடியும், நாமரூப ரஹிதங்களான ஜீவன்களுக்கு நாமரூபாதிகளை அவற்றிற்குக் கரண களேபர ப்ரதாநத்தால் செய்ய இச்சித்தவனுய்க் கொண்டு, தனது வீர்யத்தால் ப்ரேரிதமானதும், அவனம்சபூதனை ஜீவனை மோஹிக்கச் செய்வதும், ஸ்ருஷ்டிக்கு அபிமுகமாயிருக்கப்பட்டதுமான ப்ரக்ருதியை, ஸ்ருஷ்டி நிமித்தம் அதிஷ்டாநம் செய்தது மன்றி, அந்த ஜீவன்களுக்குக் கார்

யாகார்ய நிஶ்சயத்தின் பொருட்டு ஶாஸ்த்ரத்தையும் அநுக்ரஹித்தளித்தனன். ஜிதேந்த்ரியர்களும், யோகிகளும், நித்யஸூரிகளும் நிரந்தரமான பக்தியுடன் கூடிய புத்தியினால் எவனுடைய பரமபதத்தை ஸாக்ஷாத்கரிக்கின்றார்களோ, அந்த நாராயணன் தான் இந்த ஸ்ரீக்ருஷ்ணன். ஆதலால், அவன் தூரம் சென்று அவனைப்பற்றி நமக்குண்டான ஜ்ஞானத்தைப் போக்கடிக்கத் தகான். ஓ, ஸகி! யாதொரு ஈஶன் ஒருவனே கேவலம் லீலைக்காக ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து, காத்துத் தனக்குள் அடக்குகின்றானென்றும், அந்த ஜகத்வ்யாபாரத்தில் ஸங்கமற்றிருக்கின்றான் என்றும், வேதங்களிலும், உபநிஷத்துகளிலும், ப்ரஹ்மஸ்வரூப ரஹஸ்யங்களைச் சொல்லுபவர்களாலும், நிரந்தரமாகப் பாடப்பட்ட திவ்ய சரித்ரங்களுடன் கூடினவனோ, அவன் தான் இவன். எக்காலங்களில் தமோகுண வ்யாப்தமான புத்தியுடன் கூடின மன்னர்கள் அதர்ம கார்யங்களைச் செய்துகொண்டு ஜீவிக்கின்றனரோ, யுகந்தோறும் அக்காலங்களில், இந்த ஸ்ரீக்ருஷ்ணனே, ஜகத்தின் ரக்ஷணத்தின்பொருட்டு, அவதார ரூபங்களை ஸ்வீகரித்தவனாய்க்கொண்டு, தர்மத்தையும், ஜ்ஞானம் முதலான தனது கல்யாண குணங்களையும், ஸத்யப்ரதிஜ்ஞையையும், ஸச்சரித்ரத்தையும், பக்தாநுகம்பையையும், அத்புத கீர்த்தியையும் ப்ரகடனம் செய்கின்றான். எந்தக் காரணங்களால் கேட்பவர்க்கு ப்ரியமான கீர்த்திபொருந்திய இந்தப் புருஷோத்தமன், தனது அவதாரத்தாலும், திருவடித் தாமரைகளின் விந்யாஸத்தாலும், ஸத்காரம் செய்தானோ, அந்தக் காரணங்களால் யதுவம்ஶம் ஸர்வ ஶ்லாக்ய மாயிற்றென்பது என்ன ஆச்சர்யம்? மதுரைக்கிருப்பிடமான மதுவநமும் மிகவும் புண்ய ப்ரதேச மாயிற்றென்பது மஹதாஶ்சர்யம்! இன்னும் அத்யாஶ்சர்யம்! த்வாரகையானது பூமிக்குப் புண்யமான யஶஸ்ஸை உண்டுபண்ணிக்கொண்டு, ஸ்வர்க்கத்தின் யஶஸ்ஸைத் திரஸ்காரம் செய்கின்றதென்பது. ஏனெனில், அந்நகரவாஸிகள் ப்ரதிதினமும் அநுக்ரஹத்துடன் செலுத்தப்பட்ட ஸ்மித பூர்வாவலோகநத்தை யுடைய தம்முடைய நாதனை ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்க்கின்றார்கள். வ்ருத விசேஷங்களாலும், புண்ய ஸ்நானங்களாலும், ஹோம விசேஷங்களாலும் இந்த ஈஶ்வரன், அவன் திருவடிகளை ஆஶ்ரயித்த பத்நீமார்களால் ஜந்மாந்தரங்களில் நன்கு ஆராதிக்கப்பட்டான் என்



பது திண்ணம். ஏனெனில், ஓ ஸகிகளே! எவனிடம் பற்றிய மநஸ்கராய்க் கோபகந்நிகைகள் ஸம்மோஹம் அடைந்தனரோ, அவனுடைய அதராம்ருதத்தை அடிக்கடி அவர்கள் பானம் செய்கின்றனரன்றோ? ஸத்கர்மாநுஷ்டான மற்றதும், ஸதாசார வர்ஜிதமானதுமான ஸ்த்ரீ ஜந்மத்தையும், இந்த ஸ்ரீ க்ருஷ்ணபத்நீகள் மிகவும் சோபநமாகச் செய்தார்களன்றோ? ஏனென்றால், அந்த ஸ்த்ரீகள் க்ரஹங்களினின்று, அவர்கள் நாதனை புண்டரீகாக்ஷன், அவர்களுக்குப் பாரிஜாதம் முதலான ப்ரிய வஸ்துக்களைக் கொண்டு தந்து, ஆநந்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு, ஒருபோதும் வெளிப்படாமல் நிற்கின்றான்.” இவ்விதம் சொல்லிக் கொண்டிருந்த ஹஸ்திநாபுர ஸ்த்ரீகளுடைய விசித்ர வார்த்தைகளைத் தனது புன்னகையுடன் கூடிய கடாக்ஷத்தால் அநுக்ரஹித்துக்கொண்டு ஸ்ரீஹரி: புறப்பட்டுப் போனார். இவ்விதமாகத் தேவாதிராஜனை, மத்துறு மிகுத்த தயிர் மொய்த்தவெண்ணெய் வைத்ததுணுமத்தனென்று, ஜநகநந்தினி அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில் பெருமாள் எழுந்தருளிவிட்டார். ஜநகநந்தினியும் தன் தாயுடன் இல்லத்துக்குள் சென்று உரிய தொழில்களைச் செய்துகொண்டிருந்தாள்.

அவளை அன்று கண்டு பேசிய ஸ்ரீநிவாஸன் எனும் சிறுவன் சென்னைமாநகரத்தில் கலாஸங்க மத்யம பரிக்ஷையில் தேறி, பி. ஏ. எனப்பட்ட உத்தம பரிக்ஷைக்காகக் கலாசாலை யொன்றில் படித்துக் கொண்டிருந்தான். அவன் நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் பிறந்து, வைதிகர் எனப்பட்ட மாதாபிதாக்களை அடைந்தவன். அவன் தாய், கேசவாசார்யர் ஸஹோதரி யானபடியால், பந்துத்வ ப்ரயுக்தமான பரிசயத்துடன் ஜநகநந்தினியுடன் ஸம்பாஷித்தனன். அந்யாத்ருசமான அவளுடைய புத்தியாலும், அவளுடைய ஸுந்தர விக்ரஹத்தாலும் ஆகர்ஷிக்கப்பட்ட சித்தத்துடன் கூடினவனாய், அவனுடைய தாய்தந்தையர் அவன் விவாஹத்தைப்பற்றி அந்யத்ர எவ்விடத்தில் யோசித்தபோதிலும், அந்த யோசனைக்குக் கொஞ்சமும் இடம் கொடாமல், தன் மநோபாவத்தையும், அன்று வரையில் அவர்க்கும் தெரிவிக்காமல் இருந்தான். அநுராகத்தால் தன் மாதுலன் மகளை அன்று தர்சிக்க வந்தவன், நன்றாக யோசிக்காமல் அவள் மநஸுக்குத் தாபத்தை யீந்த நிமித்தம் வருத்தப்பட்டான். இனித்

யாகார்ய நிஶ்சயத்தின் பொருட்டு ஶாஸ்த்ரத்தையும் அநுக்ரஹித்தளித்தனன். ஜிதேந்த்ரியர்களும், யோகிகளும், நித்யஸூரிகளும் நிரந்தரமான பக்தியுடன் கூடிய புத்தியினால் எவனுடைய பரமபதத்தை ஸாக்ஷாத்கரிக்கின்றார்களோ, அந்த நாராயணன் தான் இந்த ஸ்ரீக்ருஷ்ணன். ஆதலால், அவன் தூரம் சென்று அவனைப்பற்றி நமக்குண்டான ஜ்ஞாநத்தைப் போக்கடிக்கத் தகான். ஓ, ஸகி! யாதொரு ஈஶ்வரன் ஒருவனே கேவலம் லீலைக்காக ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து, காத்துத் தனக்குள் அடக்குகின்றானென்றும், அந்த ஜகத்வ்யாபாரத்தில் ஸங்கமற்றிருக்கின்றான் என்றும், வேதங்களிலும், உபநிஷத்துகளிலும், ப்ரஹ்மஸ்வரூப ரஹஸ்யங்களைச் சொல்லுபவர்களாலும், நிரந்தரமாகப் பாடப்பட்ட திவ்ய சரித்ரங்களுடன் கூடினவனோ, அவன் தான் இவன். எக்காலங்களில் தமோகுண வ்யாப்தமான புத்தியுடன் கூடின மன்னர்கள் அதர்ம கார்யங்களைச் செய்துகொண்டு ஜீவிக்கின்றனரோ, யுகந்தோறும் அக்காலங்களில், இந்த ஸ்ரீக்ருஷ்ணனே, ஜகத்தின் ரக்ஷணத்தின்பொருட்டு, அவதார ரூபங்களை ஸ்வீகரித்தவனாய்க்கொண்டு, தர்மத்தையும், ஜ்ஞாநம் முதலான தனது கல்யாண குணங்களையும், ஸத்யப்ரதிஜ்ஞையையும் ஸச்சரித்ரத்தையும், பக்தாநுகம்பையையும், அத்புத கீர்த்தியையும் ப்ரகடநம் செய்கின்றான். எந்தக் காரணங்களால் கேட்பவர்க்கு ப்ரியமான கீர்த்திபொருந்திய இந்தப் புருஷோத்தமன், தனது அவதாரத்தாலும், திருவடித் தாமரைகளின் விந்யாஸத்தாலும் ஸத்காரம் செய்தானோ, அந்தக் காரணங்களால் யதுவம்ஶம் ஸர்வ ஶ்லாக்ய மாயிற்றென்பது என்ன ஆச்சர்யம்? மதுரைக்கிருப்பிடமான மதுவநமும் மிகவும் புண்ய ப்ரதேச மாயிற்றென்பது மஹதாஶ்சர்யம்! இன்னும் அத்யாஶ்சர்யம்! த்வாரகையானது பூமிக்குப் புண்யமான யஶஸ்ஸை உண்டுபண்ணிக்கொண்டு, ஸ்வர்க்கத்தின் யஶஸ்ஸைத் திரஸ்காரம் செய்கின்றதென்பது. ஏனெனில், அந்நகரவாஸிகள் ப்ரதிதினமும் அநுக்ரஹத்துடன் செலுத்தப்பட்ட ஸ்மித பூர்வாவலோகநத்தை யுடைய தம்முடைய நாதனை ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்க்கின்றார்கள். வ்ருத விசேஷங்களாலும், புண்ய ஸ்நாநங்களாலும், ஹோம விசேஷங்களாலும் இந்த ஈஶ்வரன், அவன் திருவடிகளை ஆஶ்ரயித்த பக்தமார்களால் ஜந்மாந்தரங்களில் நன்கு ஆராதிக்கப்பட்டான் என



பது இன்னம். ஏனெனில், ஓ ஸகிகளே! எவனிடம் பற்றிய மநஸ்கராய்க் கோபகந்நிகைகள் ஸம்மோஹம் அடைந்தனரோ, அவனுடைய அதராம்ருதத்தை அடிக்கடி அவர்கள் பாநம் செய்கின்றனரன்றோ? ஸத்கர்மாநுஷ்டாந மற்றதும், ஸதாசார வர்ஜிதமானதுமான ஸ்த்ரீ ஜந்மத்தையும், இந்த ஸ்ரீ க்ருஷ்ணபத்நீகள் மிகவும் சோபநமாகச் செய்தார்களன்றோ? ஏனென்றால், அந்த ஸ்த்ரீகள் க்ரஹங்களினின்று, அவர்கள் நாதனை புண்டரீகாக்ஷன், அவர்களுக்குப் பாரிஜாதம் முதலான ப்ரிய வஸ்துக்களைக் கொண்டு தந்து, ஆநந்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு, ஒருபோதும் வெளிப்படாமல் நிற்கின்றான்.'' இவ்விதம் சொல்லிக்கொண்டிருந்த ஹஸ்திநாபுர ஸ்த்ரீகளுடைய விசித்ர வார்த்தைகளைத் தனது புன்னகையுடன் கூடிய கடாக்ஷத்தால் அநுக்ரஹித்துக்கொண்டு ஸ்ரீஹரிஃ புறப்பட்டுப் போனார். இவ்விதமாகத் தவாதிராஜனை, மத்துறு மிகுத்த தயிர் மொய்த்தவெண்ணெய் வைத்துணுமத்தனென்று, ஜநகநந்தினி அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில் பெருமாள் எழுந்தருளிவிட்டார். ஜநகநந்தினியும் தன் தாயுடன் இல்லத்துக்குள் சென்று உரிய தொழில்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அவளை அன்று கண்டு பேசிய ஸ்ரீநிவாஸன் எனும் சிறுவன் சென்னைமாநகரத்தில் கலாஸங்க மத்யம பரிக்ஷையில் தேறி, பி. ஏ. எனப்பட்ட உத்தம பரிக்ஷைக்காகக் கலாசாலை யொன்றில் படித்துக் கொண்டிருந்தான். அவன் நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் பிறந்து, வைதிகர் எனப்பட்ட மாதாபிதாக்களை அடைந்தவன். அவன் தாய், கேசவாசார்யர் ஸஹோதரி யானபடியால், பந்துத்வ ப்ரயுக்தமான பரிசயத்துடன் ஜநகநந்தினியுடன் ஸம்பாஷித்தனன். அஸாத்ருசமான அவளுடைய புத்தியாலும், அவளுடைய ஸுந்தர விக்ரஹத்தாலும் ஆகர்ஷிக்கப்பட்ட சித்தத்துடன் கூடினவனாய், அவனுடைய தாய்தந்தையர் அவன் விவாஹத்தைப்பற்றி அந்யத்ர எவ்விடத்தில் யோசித்தபோதிலும், அந்த யோசனைக்குக் கொஞ்சமும் இடம் கொடாமல், தன் மநோபாவத்தையும், அன்று வரையில் அவர்க்கும் தெரிவிக்காமல் இருந்தான். அநுராகத்தால் தன் மாதுலன் மகளை அன்று தர்சிக்க வந்தவன், நன்றாக யோசிக்காமல் அவள் மநஸுக்குத் தாபத்தை யீந்த நிமித்தம் வருத்தப்பட்டான். இனித்

தனது மனோரதத்தை வெளிவிடாவிட்டால், அது கார்யத்தில் முடியமாட்டாதென்று நிச்சயித்துத், தன் மாதாபிதாக்களுடன் அதைப்பற்றி ப்ரஸ்தாபிக்கக் கருதினான். தன் மாதுலனிடம் தான் வைத்த கௌரவத்தால், அந்த ப்ரஸ்தாபத்தைத் தானே யவரிடம் செய்தானில்லை. அவரை விட்டுத் தனதில்லம் சென்றவுடன் தன் தாயான கநகவல்லியைக் கண்டு, "அம்மா! நீண்ட காலமாய் என் மநம் கொண்ட ரஹஸ்யத்தை உன்னிடம் சொல்லுகின்றேன். அப்பாவுடன் யோசித்து அதை நிறைவேற்றத் தக்க ப்ரயத்நத்தை நீ செய்தல் நலம். இவ்வாறன்றி, நீங்கள் எனக்கு விவாஹமென்றொன்றை முடித்தல் முடியமாட்டாது. எந்தப் பெண்ணைப்பற்றி நீங்கள் என்னிடம் சொன்னாலும் பயனில்லை. எனக்கு மனையாள் வேண்டுமென்று நீங்கள் நினைத்தீராகில், ஜநகநந்தினியை அதனிமித்தம் கொள்ளல் வேண்டும். அது உங்கட்கு ஸாத்யமாகாவிட்டால் உங்களுடைய வம்சம் என்னால் வ்ருத்தியாகாதென்பதை அறிந்து கொள்வீர்கள்" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான். பெருமாள் எழுந்தருளிவிட்டபடியால், அவன் பிதா வரதாசார்யரும் வேதபாராயண கைங்கர்யம் செய்ய ஸந்நிதிக்குப் போய்விட்டார். கனகவல்லியும் தான் கொஞ்சமும் எதிர்பார்க்காத வண்ணம் புத்ரனுடைய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டாள். தன்னுடைய தமையன் அதற்கிணங்கமாட்டாரென்று பயந்தாள். அவரிணங்காவிட்டால், தன் புத்ரனுடைய பிடிவாதத்தை நினைக்கவும் பயந்தாள். நின்றவிடத்திலே நின்று, சிறிது காலம் யோசனையில் ஆழ்ந்து இருந்தாள். பிறகு தன் புருஷனுடன் விஷயத்தை ப்ரஸ்தாபிக்க நிச்சயித்துக்கொண்டு, வீட்டுவேலைகளைப் பார்க்கச் சென்றனள்.

அன்றிரவு உத்ஸவாநந்தரம் வரதாசார்யர் அகத்துக்குவந்து சேர்ந்தனர். அப்போது அவர் பார்யை தன்னுடைய மகன் சொன்ன விஷயத்தை அவரிடம் மொழிந்தனள். அதைக்கேட்டு வரதாசார்யர் ஸந்தோஷித்தாரில்லை. "அது ஸாத்ய விஷயமன்றே. ஸாதாரண ஜநங்கள் அந்த ரூபமான ஸம்பந்தங்கள் செய்துகொள்கின்றாள். வ்யபதிஷ்டர்கள் அவ்வண்ணம் செய்யமாட்டார்களே. பையனோ பிடிவாதம் செய்கின்றானே. நாளைக்குக் காலையில் நாமிருவரும் உன் தமயனைப் போய்ப் பார்ப்போம். பகவத் ஸங்கல்பம் இந்த ப்ரயத்நத்துக்கு அநுகூலமாக விருக்குமென்று தோன்றவில்லை" என்று அவர் சொன்னார்.

பத்ராதிபர்.

# வர்த்தமானம்.

**வரதக்ஷிணை வாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று பரோடா ஸமஸ்தானத்தில் ஒரு சட்டம்:**—பரோடா மகாராஜா அவர்கள் தன்னுடைய ராஜ்யத்தில் வரதக்ஷிணை வாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று தன்னுடைய ராஜாங்கத்திலுள்ள சட்டநிர்மாணசபையில் சட்டம் ஏற்படுத்துவதற்காக ஒருமசோதா சட்டம் கொண்டுவந்திருக்கிறார்களாம்.

* * * * * *

**இராமேசுவரம் தேவஸ்தானத்தின் ஆதரவில் பிரஸங்கங்கள்:**—நாளது ஆனந்த ஞு ஆடி உத்ஸவகாலத்தில் ஹிந்து மதஸம்பந்தமான சில உபந்யாஸங்கள் நடந்தன. பல ஜனங்கள் கேட்டுத் திருப்தி அடைந்தார்கள். அதுபோலவே மாசி பிரஹ்மோத்ஸவத்திலும் அருமையான உபந்யாஸங்கள் நடைபெறும்படி தேவஸ்தானத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரகாரமே ஒவ்வொரு பெரிய தேவஸ்தானங்களிலும் ஒவ்வொரு உத்ஸவத்திலும் நடப்பித்தால் அளவற்ற நன்மை யுண்டாகும்.

* * * * * *

**அமெரிக்காவில் தபால் கொண்டுபோக ஆகாசக்கப்பல்கள்:**— ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசங்களுக்கும், ஒரே தேசத்தில் ஒரு பட்டணத்திலிருந்து மற்ற பட்டணங்களுக்கும் தபால்கள் இன்னும் சீக்கிரமாகவும் சுலபமாகவும் போகவர ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அமெரிக்கா தேசத்தில் ஆகாசக்கப்பல்கள் வழியே தபால் அனுப்புகிறதென்று தீர்மானித்து இரண்டாயிரம் ஆகாச கப்பலோட்டிகளைத் தயார் செய்திருக்கிறார்களாம்.

* * * * * *

**சென்னைப்பட்டணத்தில் மணலிஹாஸ்டல் என்ற ஒரு வித்தியார்த்தி கிருஹம்:**—ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருடைய நாளில் மதராஸில் பெருத்த வியாபாரம் செய்துவந்த சரவணமுதலியார் என்னும் பிரபு பிரதிதினமும் என்றென்றைக்கும் நூறு பிராமணர்களுக்கு அன்னம் போடுவதற்காகவென்று சில சொத்துக்களைவிட்டு ஒரு தர்மத்தை ஏற்படுத்தி நடத்திவந்தார். இப்போது அவருடைய வம்சஸ்தர்களாயும். படித்தவர்களாயும், ஐசுவரியவான்களாயும் இருக்கும். மகா-௱-௱-ஸ்ரீ சரவண முதலியார் அவர்களும் கிருஷ்ணசாமி முதலியார் அவர்களும், வித்தியா தர்மத்தின் அருமையையும் பெருமையையும் தெரிந்து அந்தத்தர்மத்தை மாற்றி உயர்ந்த படிப்பு படிக்கும் பிள்ளைகளில் 100 பேருக்கு இனமாக இருக்க இடமும் கொடுத்து சாப்பாடுபோட்டு உதவி செய்வதாக

மணவிஹாஸ்டல் என்னும் ஒரு இடம் ஏற்பாடு செய்து அதில் அந்த பிள்ளைகளுடைய உபயோகத்துக்காக ஒரு புஸ்தகசாலையும் ஸ்தாபித்து சிலவருஷங்களாக நடத்திவருகிறார்களாம். அதில் படித்து M. A., B, A., முதலான பெரிய பரீக்ஷைகளில் தேறினவர்கள் அனேகம் பேர்கள் உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கிறார்களாம். அடிக்கடி அந்த கனவான்கள் இருவரும் அந்த ஹாஸ்டலுக்குப்போய் கவனித்து அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து தங்களுடைய சொந்த குழந்தைகளைப்போல அன்புபாராட்டுகிறார்களாம். கலாசாலைகளிலுள்ள ஒவ்வொரு இடங்களிலும் இவ்விதமான தர்மங்கள் ஏற்படுமானால் முன்னுக்கு வரக்கூடிய புத்திசாலிகளான ஏழைப்பிள்ளைகள் எவ்வளவு பேருக்கு உபகாரமாயிருக்கும்.

* * * * * *

**பம்பாயில் அநாத வித்தியார்த்தி கிருஹங்கள்:**—பெரிய பட்டணங்களில் ஆதரிப்பாரற்ற அனேகம் சிறுவர்கள் துஷ்டர்களுடைய வசத்தில் அகப்பட்டு துன்மார்க்கங்களில் அமைந்து தாங்களுங் கெட்டுப் பிறருக்கும் தீங்கை விளைவித்து வருகிறார்கள். அவர்களுடைய நயத்தைக் கருதியும் ஜனஸமூஹத்தினுடைய நயத்தைக் கருதியும் அப்படிப்பட்ட சிறுவர்களை ஆதரித்துப் படிப்பித்து நல்வழிப்படுத்தவேண்டியது அவசியம். பம்பாயில் சில தேசாபிமானிகள் அநாத வித்யார்த்தி கிருஹங்களை ஏற்படுத்தி அவைகளில் அவ்விதமான சிறுவர்களுக்கு இடம்கொடுத்து அவர்களைப் போஷிக்கவும் படிப்பிக்கவும் அவசியமான பொருளைச் சம்பாதித்து அவர்களை அன்புடன் ஆதரித்து நல்வழிப்படுத்துவதையே தங்களுடைய வேலையாக ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறார்களாம். குழந்தைகளின் ரக்ஷணார்த்தம் என்ற ஒரு ஸங்கம் சிலவருஷங்களுக்குமுன் அவ்விதமான நோக்கங்களுடன் சென்னைப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தேவையான பொருளுதவி இல்லாதபடியாலும் அதை வஹித்து நடத்துவதற்கு வேண்டிய உத்ஸாகமுள்ளவர்கள் கிடைக்காதபடியாலும் இதுவரை அதனுடைய நோக்கங்கள் சிறிதும் நிறைவேற வில்லை. அந்த ஸங்கத்தின் 7-வது வருஷ மஹோத்ஸவம் சென்ற பிப்ரவரி௴ 6௳ நடந்தேறியது. மதராஸ் கவர்னரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அனேக கனவான்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தன்னால் இயன்றமட்டும் பொருளுதவிசெய்து அந்த ஸங்கத்தை ஆதரித்து அந்ததர்மத்தைப்பரிபாலனம் செய்யவேண்டும் என்று கவர்னரவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். உடனே நெல்லூர் ஜில்லா முதுக்கூர் என்னும் கிராமத்திலுள்ள வெங்கம்மாள் என்பவர்கள் சகல செலவும்போக வருஷம் 1-க்கு ரூ 300-க்குக் குறையாமல் வரும்படி வரக்கூடிய 10 - ஏக்கர் நஞ்சை நிலங்களை அந்த ஸங்கத்துக்கு நன்கொடையாக அளித்தார்களாம். இனி அந்த ஸங்கத்தின் காரியங்கள் நன்றாய் நடைபெறும் என்று நம்புகிறோம்.

* * * *

162026
THE REGISTRAR
1515
600

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ ஆடி௴ [ஸஞ்சிகை 6.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே -
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஹரித்வார உத்ஸவம்.**

(1) ஜூலை மாஸம் "மாடர்ன் ரிவ்யூ" பத்ரிகையில், அந்தப் பத்ராதிபர், அவர் போன்ற மற்றொருவரை அநுஸரித்து, ஹரித்வார கும்பமேளத்தில் கூடிய ஸாது எனப் பெயர்கொண்ட துறவிகளுக்கு அறிவிப்பது யாதெனில்: "நீங்கள் ஐஹிக ஸுகங்களைத் துறந்தீர்; உமது ஆத்மாக்களின் ஜ்ஞாந வ்ருத்தியையும், குணபரிபாகங்களையும் உத்தேசித்துச் சரீரங்களை நிராகரித்தீர்; இனி உலகத்தைத் துறக்க எண்ணவேண்டாம்; அதைக் காட்டிலும், அதற்கு வ்ருத்தியையும், யசஸ்ஸையும் உண்டாக்க யத்தனிப்பீர்கள்; ஏனெனில், அது உமது த்யாகபூர்வகமான க்ரியைகளை அபேக்ஷிக்கின்றது. மிக்க தூரத்தில் எங்கோ இருக்கும் பரமபதத்தில் உங்கள் ஸொந்த ரக்ஷணத்தை விரும்பி, நீங்கள் க்லேசித்தல் கூடாது. ஆனால், இன்மையாலும் துன்பத்தாலும் வருந்தும் ப்ராணிகள் நிறைந்த இவ்வுலகின் ரக்ஷணத்தின் பொருட்டு

நீங்கள் ப்ரமப்படவேண்டும்; எப்படியென்றால் உங்கள் ஜ்ஞானசக்ஷுஸ்ஸால் அறியப்பட்ட பரலோகத்தை இவ்வுலகத்தில் வரும்படிச் செய்வீர்கள்.''

அந்தப் பத்ராதிபர் ப்ரஹ்ம ஸமாஜத்தினர்.

(2) ஆர்ய ஸமாஜ பத்ரிகையாகும் குருகுல ஸமாசாரத்தில் (ஜூன்மாஸம்) ஹரித்வார மஹாகும்பத்தைப்பற்றிய கண்டனக் குறிப்பை அப்பத்ராதிபர் இவ்வகை முடிக்கின்றார்:—'' வெளிவாருங்கள். இழக்கக் காலமில்லை. இந்தப் பொம்மை பூஜைக்கு, இந்த விக்ரஹாராதனத்துக்கு, இந்த அத்யந்த அகாரண விச்வாஸத்துக்கு, விரோதமாக ஒரு படையெடுத்தலைக் கூட்டுவோம். படித்த மூடர் சிலர், விக்ரஹ பூஜையை ஸத்யுக்திகளால் ஸ்தாபிக்க முயல்வார். அவர்கள் விக்ரஹங்களில் நிற்கும் ஒரு தேவனைத் தாங்கள் தொழுவதாகச் சொல்வர். அவர்களிடம் க்ஷமையைப் பாராட்ட வேண்டாம். அவர்கள் தக்காலம் நீங்கிப்போன அடிமைகள் வ்யாபாரத்தை நிலைநிறுத்த ப்ரயத்நித்த க்யாதி பெற்ற அமெரிக்கா குடியரசின் தென்நாடுகளை யொத்தவர். இவ்விஷயங்களில், பொறுமை பாபம்; அரை மநஸுடன் கண்டித்தல் இன்னும் கொடியது. இவ்வித வழக்கங்களுக்குக் காரணமாகும் விக்ரஹ பூஜை, ஸத்யுக்திகளால் பரிஷ்கரிக்கக் கூடியதாயினும், வேருடனும் கிளையுடனும் வெட்டத்தக்கதே''.

* * * * * *

இது ஆர்ய ஸமாஜத்தினர் யோசனை.

**தத்கால வித்யை.**

(3) ஏப்ரல் மே மாஸத்திய குருகுலஸமாசாரத்தில், குருகுல கலாசாலையின் வித்யாப்யாஸத்தைப் பற்றி எழுதுவதில் இந்த உக்திகள் காணப்படுகின்றன. ''வேதம், ஸ்ம்ருதிகள், தர்சநங்கள், சாஸ்த்ரங்கள், ராமாயணம் மஹாபாரதம், இவற்றை முற்றிலும் விலக்குவதாலும், ஹிந்துக்களுடைய அவதார புருஷரென்ன, பக்தரென்ன, இவர்கள் சரித்ரங்களுடைய நிஷேதத்தாலும், ஹிந்துக்களின் பூர்விகர்களிடம் மதிப்பை யுண்டாக்கத்தக்க ஸந்நிவேசங்களின் அபாவத்தாலும், பஹு ப்ரகாரமாக ஹிந்து ஸம்பந்தமான ஸர்வத்தினுடையவும் ஊர்ஜிதமான தூஷணையாலும், (கிறிஸ்தவ ஸ்கூல்களிலும், கலாசாலைகளிலும்) ஹிந்து சிறுவர்க்குள், வ்யக்தமாக மத விஷயங்களில் விரோதமோ, நிந்தையுடன் கூடிய உதாஸீநதையோ உண்டாய்விட்டன. இத்தகைய ஸந்நிவேசங்கள் தேசப்ரயுக்தமாயோ, ஜாதிப்ரயுக்தமாயோ, ஸரியான மரியாதையை ஜநிப்பிக்க முற்றிலும் தகாதவை; இம்மரியாதையின்றித் தேசாபிமாநமும், வ்ருத்ததார்ட்யமும் ஒருநாளும் பரிணமிக்கமாட்டா. இப்பள்ளிக்கூடங்களில் படித்து வெளிப்பட்டவர்கள், வெளியர்கக் கிறிஸ்தவ ராகாவிட்டாலும் அதைக் காட்டிலும் கெட்டுப்போனவராய், ஹிந்துத்வேஷிகளாய்ப் போந்தார்கள்.''



* * * * * *

**ராஜாராம் மோஹன்ராய்.**

(4) '' ராஜாராம் மோஹன்ராய் என்பவரைப் போன்ற மனிதர்............வெளிப்படையாகக் கிறிஸ்தவ மதத்தை ஸ்துதித்து, ஹிந்துக்களுடைய தர்மத்தையும் நாகரிகத்தையும் தூஷித்தனர். ராஜா, தனது செல்வத்தாலும், அந்தஸ்தாலும், இங்கிலீஷில் விசேஷ ஜ்ஞானத்தாலும், ஹிந்துமதத்தை இன்னும் நன்றாக அழித்து, கிறிஸ்தவமதத்துக்கு அதிகமான உபகாரத்தைச் செய்யும் நிமித்தமாகத் தான் வெளிப்படையாகக் கிறிஸ்தவராகவில்லையென்று சொன்னார்.''

(5) இன்னும் அதே ப்ரகரணத்தில், ஆதம் எனும் ஒரு பாதிரி, வீட்டில் அவர் ஆகாரம் அருந்தினரென்றும், அப்போது பாதிரி வேலைக்காரரை விலக்கினரென்றும், அவர்கள் தான் செய்ததை வெளியில் ப்ரஸ்தாபித்துத் தான் ஜாதியிழந்ததைப் பஹிரங்கப்படுத்துவாரென்று பயந்ததாகவும், அவர் இங்கிலாண்டிலிருந்த போது, ரஹஸ்யமாய் வெள்ளைக்காரர் வீடுகளில் சாப்பிட்டாரென்றும், இந்தியாவில் தனது நிலைமை கெடாதிருக்க வேண்டுமெனக் கருதி, வெளிப்படையாக அவ்வண்ணம் புசித்திலர் என்றும், கல்கத்தாவில் கிறிஸ்தவ மிஷனை ஸ்தாபிக்க 5000 ரூபாய் சந்தா கொடுத்தனர் என்றும், பால்டிமோர் எனும் பட்டணத்திலிருந்த ஒரு அமெரிக்கா பாதிரிக்குத் தன் ப்ராணனுக்கு அபாயம் நேரிட்டபோதிலும், அவர்களுக்குத்தான் உபகரிக்க இச்சிக்கிறதாகவும், இயேசுவும் அவர் சிஷ்யர்களும் ஏற்படுத்திய மதம் யுக்திக்குப் பொருந்தியதாகவும், மோஸஸ் முதலானவர் வெளிப்படுத்திய ப்ரமாணங்கட்கு ஒத்ததாகவும், தேவன் ஒருவன் என்பதும், கிறிஸ்

துவின் மிஷனும் எங்கும் பரவ வேண்டிய காலத்தைத் தான் கோலினதாகவும் எழுதினாரென்றும், அவர் வேண்டுகோளின் பேரில் ஸ்காட்லெண்டு சர்ச் ஸபையார் தமது முயற்சியை இந்தியாவுக்குப் பரவச்செய்ய வேண்டப்பட்டாரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

* * * * * *

**ப்ரவ்ருத்தி மார்க்கப்ரியர்.**

இவற்றுள் (1)ம் விஷயத்தைப்பற்றி யாம் சொல்வதென்னென்றால், அந்த வசனங்களை ஸாதுக்கள் ஆதரித்தால், அவர் பரோபகாரம் செய்வார்களாவர். வக்தாவுக்கு லோகாந்தரத்தில் விச்வாஸ மாந்த்யம் ப்ரகாசிக்கின்றது. ஈச்வரனிடம் அநந்ய பக்தியின்றி ஆத்மாவுக்குப் பரமசாந்தி இல்லை. ஈச்வர பக்தர்க்குள் ப்ரவ்ருத்தி மார்க்க ப்ரியர்கள் பரோபகாரத்தை ஈச்வர ப்ரீதிக்காகச் செய்து, ஈச்வரார்ப்பணம் செய்யக்கடவர். நிவ்ருத்தி மார்க்க ப்ரியர் இந்த லோகத்திலேயே ஈச்வரனிடம் தமது சித்தத்தை முற்றிலும் செலுத்தி நிற்பர். ஒருவரை மற்றொருவர் நிந்தித்தல் பாபம்.

* * * * * *

**பரலோகம் இவ் வுலகம் வாராது.**

பரலோகம் இவ்வுலகம் வாராது. இவ்வுலகத்தின்கண் ஜந்மம், வ்ருத்தி, ஜரை, மரணம் முதலியவை மநுஷ்ய சரீரங்களை விடமாட்டா. வ்யாதி, துர்பிக்ஷம், பந்துவியோகம், இத்யாதி காரணங்களால் மனிதர் துன்பப்படுவது நிலைத்துதான் நிற்கும். என்றைக்கு உலகரீதி மாறியது? அலெக்ஸாண்டர் பரர் நாடுகளைப் படையெடுத்துப் பிடித்து எவ்வளவு ப்ரஜைகளைக் கொன்றான்? ரோம் தேசத்தார் எவ்வளவு நாடுகளின் ஸ்வாதந்த்ரியத்தை அழித்தார்? அதற்கென்று எவ்வளவு ஜநங்களைக் கொன்றனர்? மகம்மதியர் எவ்வளவு ராஜ்யங்களை அழித்தனர்? எவ்வளவு ஜநங்களைக் கொன்றனர்? ஸ்பேய்ன் தேசத்தினர் அமெரிக்கா கண்டத்தில் ராஜ்யங்களழித்ததும், ஜநங்களைக் கொன்றதும், யார் மறக்கக்கூடும்? இந்தக் கூத்துகளை ஏஷியா கண்டத்தில் போர்ச்சுகல் தேசத்தார் எம்மட்டும் நடத்தினர்? பலவந்தமாக மகம்மதியராகவும் கிறிஸ்தவராகவும் செய்யப்பட்ட ஜநத்தொகையை யோசியுங்கள். தற்கால யுத்தத்தை யோசியுங்கள்.



ஐரோப்பியர் இதர கண்டங்களையும் அவற்றின் ப்ரஜைகளையும் தமக்கு உட்படுத்தினார்கள். முதலில் பலத்த தேசங்களாகிய, இங்கிலாண்டு, ப்ரான்ஸ், ரஷ்ஷியா, இவை அதிக தேசங்களைப் பற்றின. ஜர்மனி புதிதாய் உயர்ந்தது. ஆதலால், அது பற்றிக் கொள்ளப் பூமியில் புதுநாடுகளில்லை; இங்கிலாண்டு, ப்ரான்ஸ், ரஷ்ஷியா, இந்தத் தேசத்தார் கைக்கொண்ட நாடுகளைப் பலாத்காரமாகக் கவரவன்றா ப்ரக்ருத யுத்தம்? அவர்க்குத் தெரியாமலே, ஜர்மானியர் 40 வருஷங்களாக இந்த யுத்தத்திற்கு ப்ரயத்நம் செய்தனர். இதன் முடிவுக்குள் எவ்வளவு ஜநங்கள் இறப்பர்? யாருக்குத் தான் துன்பமும் துக்கமும் வளராமல் இந்த யுத்தம் முடிவுறும்? இப்படித்தான் பரலோகம் இவ்வுலகம் வரக்கூடும்.

பகவானையும், அவன் ஸ்வரூப குணங்களையும், அவனுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தையும், நம் ஆத்மாக்களுடைய சாச்வதமான நன்மையையும் நினைப்பவன், பரலோகத்தை இவ்வுலகிலா காணக் கருதுவான்? தன் மட்டும் கருதலாம்; அப்போது பகவானை நினைத்து, மற்றவற்றுள் பற்றை அறுத்துக் கருதவேண்டும். நிவ்ருத்தி மார்க்கம் ருசித்தவர், ப்ரவ்ருத்தி மார்க்கத்தை ஆதரிக்கமாட்டார். ப்ரவ்ருத்தியில் ருசியிருந்தால் அதைப் பரோபகாரமாகவும், பகவத் ப்ரீணநமாகவும் செய்தல் வேண்டும். இதை ஜநங்கள் தனித்தனியாகச் செய்தாலும், சேர்ந்து செய்தாலும் வித்யாஸமில்லை.

நித்யனான ஆத்மாவுக்கு அநித்ய சரீரங்களுடைய போஷணத்தால் பரமசாந்தி உண்டாகாது. மநுஷ்ய சரீரங்களுடைய ஸுகத்தை ப்ரதாநமாக எண்ணுபவர் உயர்ந்த மதத்தைச் சார்ந்தவரென்பது ப்ரமையே.

* * * * * *

**அர்ச்சா விஷய த்வேஷம்.**

ப்ரஹ்ம ஸமாஜமும், ஆர்ய ஸமாஜமும் ஆர்ய மதத்தை முற்றிலுமோ அதன் சில பாகங்களையோ த்வேஷித்துப் பிறந்தன. (2) லக்கமிட்ட விஷயத்தை யோசித்தால் ஆர்ய ஸமாஜத்தினர், விக்ரஹங்களையும், தேச விசேஷங்களில் மாஹாத்ம்ய விச்வாஸங்களையும் அழிக்க விரும்புகின்றார் என்று ஏற்படுகின்றது.

குருகுலபத்ராதிபர் அதை நிறைவேற்றுவதற்காகத் தம்மவருடைய தோள்வலியை ஆஶ்ரயிக்கின்றார். அவர் புத்தி பலத்தை ஆஶ்ரயிக்காத காரணம், அவர் இஷ்டத்தை அது ஸாதித்துக் கொடாதெனும் நிச்சயம் தான். மஹம்மதியர் மிகுந்ததும், அவரால் சிரகாலம் ஆளப்பட்டதுமான பஞ்சாப் தேசத்திலும், அதன் அருகாமையிலும், பூர்வம் ஸநாதந தர்மநிஷ்டராய் இருந்தவர்க்குள்ளும் இத்தகைய யோசனைகள் உதிப்பது ஸஹஜமே. அஹிம்ஸை பரம தர்ம மெனப்பட்டது. பரர்க்குச் சரீரத் துன்பம் உண்டு பண்ணுவதும், மனவருத்தம் உண்டாக்குவதும் ஹிம்ஸையே. ஆர்ய ஸமாஜத்தினர்க்கும், ஏனையோர்க்கும் ஹிந்துக்கள் துன்பம் நினைப்பாரல்லர். அவர் விஶ்வஸித்துப் புரியும் பகவதாராதநத்தைப் பலாத்காரமாக அழிக்க விரும்பினால் பரஹிம்ஸா ரூபமான பாபம் ஸித்திக்கு மென்பதில் யாம் கிஞ்சித்தும் ஸந்தேஹம் கொள்ளோம்.

*   *   *   *   *   *

**கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள்.**

குருகுல சமாசாரத்தின் (3) - வது உக்திகளை நாம் ஆதரிக்கின்றோம். தத்கால வித்யாப்யாஸம் தேசநன்மையை ஸாதிக்கமாட்டாது. அது இந்தத் தேசத்தாருடைய வித்யை, விசேஷகுணங்கள், நாகரிகம் இவற்றை அழித்துவிடும். பொது த்ரவ்யத்தினின்று ராஜாங்கத்தாரிடம் உபகாரமடைந்து, பொதுவான கலாஸங்கத்தாருடைய அநுமதியையும் பெற்றுக் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில், பாதிரிமார் ஹிந்துக்களுக்கு ஸ்வமதத்தைப் போதிப்பது உசிதமோ? அபேக்ஷிக்காதவர்க்கு அந்த மதபோதநம் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று சிலர் கேட்டால், வித்யாசாலைகள் குறைந்துபோமென்றும், ஹிந்துக்கள் இந்தக் கஷ்டம் படவேண்டுமென்றும், கிறிஸ்வரும், அவரிடம் அபிமாநித்த ஹிந்துவெனப் பெயர்கொண்டவரும், ஆக்ஷேபிக்கின்றனர். இப்படிச் செய்வதில், பரர் உன்னிடம் எவ்வண்ணம் நடக்கவேண்டுமென்று இச்சிக்கின்றையோ, அவ்வண்ணமே நீயும் பரரிடம் நட-எனக் கிறிஸ்து சொன்னதையும் மறக்கின்றார்கள். ஸ்வமதத்தில் துரபிநிவேஶம் கொண்டவரும், நூதநமாய்ப் பரமத ப்ரவிஷ்டர்களும், நாஸ்திகரும் ந்யாயவிசாரம் செய்யத்தகார். கிறிஸ்தவர்



பள்ளிக்கூடங்கள் குறைந்தால் வேறு பள்ளிக்கூடங்கள் உண்டாகாதென்று எண்ணுதல் ப்ரமையே.

*   *   *   *   *   *

**ப்ரஹ்ம ஸமாஜம்.**

(4), (5) லக்கமிட்ட வசநங்களின் உண்மை நமக்குத் தெரியாது. மதங்களை உண்டாக்கினவர் ஸாதாரணமாக இந்த லோகத்தை த்யஜித்தவராகவும், லோகாந்தர ஸாக்ஷாத்கார முள்ளவராகவும் எண்ணப்படுவார். ப்ரஹ்ம ஸமாஜ காரண பூதர் ஐஹிக த்யாகம் செய்தவரன்று; ஆமுஷ்மிக ஸாக்ஷாத்காரம் உள்ளவருமன்று. அவர்க்கும், மற்ற ப்ரஹ்மஸமாஜ வ்யாபகர்க்கும் கிறிஸ்தவர் ஸஹவாஸமும், அவர் மதத்தில் பக்ஷபாதமும் உண்டென்று தோன்றுகின்றது. ஒரு மதத்தையும் அவர் பூர்ணமாகக் கொள்வாரில்லை. எல்லாவற்றுள்ளும் சில பாகத்தை எடுத்துக் கொண்டும், சிலவற்றைத் தள்ளியும், மதங்களுக்குள் 'greatest common measure' எனத்தகும் பொதுவான அம்சங்களை அவர் ஆதரிப்பதில், அவருடைய இச்சைக்குமேல் அவர் மதத்துக்கு ப்ரமாணம் ஸித்திக்காது. அவர் விஶ்வஸிக்கும் அம்ஶங்களுக்கு, அவர், தமது மநஸையே ஸாக்ஷியாகக் கொள்வர். இப்படிப்பட்ட மநோகதியை யோகிகள் தவிர மற்றோர் அடையாரென்றும், ப்ரஹ்மம் ஶாஸ்த்ரம் ஒன்றினாலேயே அறியத்தக்க தென்றும் வேதாந்த நிர்ணயமிருக்கின்றது. பூர்ணமாகக் கிறிஸ்தவ்ராக இஷ்டப்படாதவர்க்கு ப்ரஹ்மஸமாஜம் ஓர் ஆஶ்ரயம்.

எந்த ஸமாஜத்தினிடமும் நமக்கு த்வேஷமில்லை. அபிப்ராய பேதங்கள் விவாத விஷயமானாலும், ஹிந்து மதத்தினர் அதைக் குறித்து த்வேஷம் கொள்ளார். அவர்க்குள் நின்று வெளிப்பட்டவர் தான் அவரிடம் மிகவும் த்வேஷம் பாராட்டுகின்றார்.

*   *   *   *   *   *

**தத்வத்தின் நிலை.**

சரீரவானான சேதநன் சரீரவியோகாநந்தரம் தான் அநுவர்த்திப்பதை நம்பாவிட்டால், சரீரவானாக இருக்கும் தனக்கும், சரீரவான்களாயிருக்கும் பிறர்க்கும், தத்கால ஸ்திதியில் இஷ்ட ஸாதநங்களையும் அநிஷ்ட நிவ்ருத்தியையும் புருஷார்த்தமாக எண்ணி, அவற்றினிமித்தம் மாத்ரம் ப்ரயாஸப்படுவது யுக்தமே. ஆமுஷ்மிக

த்தை நினைக்காமல் ஐஹிகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்பதும் அவனுக்கு ஸஹஜமே. அவன் தடஸ்தனாகில், தனது நாஸ்திகதையை லஜ்ஜையின்றி அப்யுபகமம் செய்வன். தெய்வத்தையும் லோகாந்தரத்தையும் அவன் நம்புவதாகச் சொன்னால் அவனை யாவரும் நம்பமாட்டார்; நம்பவும் கூடாது.

காலம், தேசம், சேதநாசேதந ரூபமான வஸ்துக்கள், இவற்றை சூந்யவாதி தவிர, மற்றவர் ஒப்புக்கொள்வர். இவற்றின் ஆநந்த்யம் ஸாக்ஷாத்தாக நமக்குப் புலப்படாது. அது அநுமாநத்தால் ஊகிக்கத்தக்கது. அந்த ஊகம் அவற்றின் எல்லையற்ற இருப்பில் விஶ்வாஸம் த்ருடமாய் ஏற்படப் போதுமானது.

இப்படி அநாத்யநந்தமான காலம், எல்லையற்ற தேசம், ஸங்க்யாதீதமான சேதநவர்க்கம், எங்கும் பரவிய ப்ரக்ருதியின் ப்ரவாஹம், இவற்றின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாய் நிற்கும் ஈஶ்வரன், இந்தத் தத்வங்களை ஆஸ்திகர் யாவரும் ஒப்புக்கொள்வர். ஈஶ்வரனுக்கு மற்றவை ப்ரகாரங்கள். ஈஶ்வரனை யன்றியில், பிந்நமான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுடன் கூடிய மற்ற தத்வங்களுக்குச் சேர்க்கையும், சேர்ந்துண்டாகும் ப்ரவ்ருத்திகளும் அவற்றின் நையத்யமும் கடிக்கமாட்டா.

நித்யசேதநன் ஒருவன் நித்யரான பகு சேதநர்க்கு ஸகல புருஷார்த்த ப்ரதனென்று ஶ்ருதி கூறியது. அவனுடைய ப்ரகாரங்களான சித் அசித் பதார்த்தங்களின் ஸ்தூல ஸூக்ஷ்மாவஸ்தைகள் தான் ஸ்ருஷ்டி ப்ரளய மெனப்படும்.

இருப்பும், ஜ்ஞாநமும், ஆநந்த்யமும் தான் ப்ரஹ்மத்தின் தன்மையை நிரூபிக்கும் குணங்கள். அநந்தமான காலதேசவஸ்துக்களால் அளவிடக்கூடாது ப்ரஹ்மத்தினுடைய அநந்தமெனும் தன்மை. ப்ரஹ்மம் ஸர்வவ்யாபி யானபடியால், ஸர்வத்தையும் உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கின்றான் நாராயணன் என்று ஶ்ருதி சொல்லிற்று. ஸர்வ வஸ்துக்களின் நியமநார்த்தம் அவற்றின் உள்ளேயும், சேதநர்களுடைய ஹ்ருதய குகையிலும், அவன் இருக்கின்றானெனவும், அவன் ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் காரணபூதன் என்றும், சேதநர்களால் உபாஸிக்கத் தக்கவனென்றும் ஶ்ருதி சொல்லிற்று.



அவனுடைய ஸர்வவ்யாபகமானதும் ஸத்யம், ஜ்ஞாநம், அநந்தம் எனும் அவன் தன்மையை விளக்கும் குணங்களால் நிர்தேசிக்கப்பட்டதுமான ரூபத்தைச் சேதநர் ஸாக்ஷாத்கரிக்க யோக்யரல்லர். ஒவ்வொருவர் ஹ்ருதயத்தில் அவன் நிற்கும் நிலையில் யோகிகள் மாத்ரம் அவனைத் தர்ஶிக்கவல்லவர். அதுவும், அவருடைய யோக நிஷ்பத்தி காலத்தில் தான் கடிக்கும்.

இதரர், ரூபகல்பனை மாநஸீகமாகவோ, மற்ற விதமாகவோ, செய்யாமல் அவனை உபாஸிக்க இயலாது. ஒரு வஸ்துவில் ப்ரஹ்ம த்ருஷ்டி செய்தாவது ப்ரஹ்மத்தை அவர் உபாஸிக்கக்கூடும். இத்தகைய அதிகாரிகளுக்கு அவதார காலங்களில் அவதார ரூபங்களும், மற்ற காலங்களில் அர்ச்சைகளும், உபாஸநார்த்தம் உதவுகின்றன. இது உண்மை. ஜ்ஞாதாக்கள் இந்த அம்ஶங்களை மறுக்கமாட்டார்.

இப்படிப் பகவத் ரூபமொன்று த்யாநவிஷய மாகாமலும், பகவத் கதைகள் ஸ்மரணவிஷய மாகாமலும், பகவத் பக்தி யுண்டாவது துஸ்ஸாத்யம். நமது வர்ணங்களில் பிறந்து, நமது தர்மத்தைத் துறந்தவர்கள், ஈஶ்வரனை உபாஸிப்பதாகச் சொன்னால், ஒரு விதமான சித்தாலம்பநமுமின்றி அது உண்டாகுமென்று நாம் நம்பமாட்டோம். மதாந்தரர்களுக்குக் கதைகளும் உண்டு; அக்கதைகளை யொட்டி, ஈஶ்வரனுக்கு யாதேனுமோர் ரூபகல்பனையும் பொருந்தும். ஆதலால் ஓர் மதஸ்தர், அந்ய மதஸ்தருடைய உபாஸநா ப்ரகாரங்களைப் பற்றித் தூஷித்தல் மூடத்தனம். ஸர்வ ஸமனான ஈஶ்வரன், ஸர்வ தேசஸ்தராலும் உபாஸிக்கப்படுகின்றான். உபாஸநா ப்ரகாரங்கள் விதியில்லாமல் பேதிக்கும். அவன் விஷயமாகச் செய்யப்பட்ட நாமரூபகல்பனைகளும் பேதிக்கும்.

நமது ஸம்ப்ரதாயஸ்தர் மிகவும் உகந்த மார்க்கம், ஶேஷவ்ருத்தி யெனப்படும். ஸ்வரூபத்தில் நாம் அவன் தாஸர்கள்; அவன் நமக்கு ஸ்வாமி; அவனைப்பற்றி நாம் அத்யந்தம் பரதந்த்ரர்கள்; அந்தப் பாரதந்த்ர்யம் லோகத்தில் பதிவிஷயமாகப் பத்நீக்கு உண்டு; நாயகன் விஷயமாக நாயகிக்கு உண்டு; தன் மனங்கொண்ட நாயகிக்குப் புமான் யாது தான் செய்யமாட்டான்? அவ்வண்ணம் ஈஶ்வரன் தன் பக்தனுக்குச் செய்யாததொன்றுமில்லை. தன் நாதனுக்கன்றி நாயகி உயிர்தரிக்காள். அவ்வண்

ணமே ஈஶ்வரனுடைய நிருபாதிக தாஸனென சேதநன், அவனுக்
கென்றே யிருப்பதுடன் தனக்கென யாதையும் புரியான். ஈத்
ருஶ பக்தன், தன்னுடைய பதிபாரார்த்யத்தை நினைக்கும் பக்ஷத்
தில், அவன் பக்தி, ஶ்ருங்கார ரூபமாகப் பரிணமிக்கக் கண்
டோம். இது ஸ்த்ரீகட்கு ஸுகரமாய் அமைகின்றது.

நமது ஸம்ப்ரதாய ஆசார்யர்களில் இவ்வண்ணம் பக்திசெய்த
வர்க்குள் நம் சடகோபன் ஶ்ரேஷ்டர். அவர்க்குப் பகவத் ப்ரே
மை கஷ்டத்தால் ஸித்தித்தது. ஒரு கஷ்டமும் இல்லாமல் அது
ஸ்வபாவத்தில் ஆண்டாளுக் கமைந்தது. சடகோபன் வீடுபெறு
மளவும் பகவத்விஷயமாக விரஹாநுபவம் பண்ணினார். விஷ்ணு
சித்தன் கோதையோ, அவளுடைய இளமைப் பருவத்தில், அவன்
பிரிவைப்பற்றி வருந்தினாளில்லை. அந்ய புருஷஸ்மரணை அவளுக்கு
உண்டாக அவகாஶமே யில்லை. இப்படிப் பகவத் பாரதந்த்ரி
யாநுஸந்தாநத்துக்கும், அதற்குசிதமாக அவனுக்கே ஆட்செய்வ
தற்கும், ஸ்த்ரீஜந்மம் புருஷஜந்மத்தைக் காட்டிலும் பொருந்தி
யது. இதனாலன்றோ ஸத்கர்ம ஜ்ஞாநாதி ஸாமக்ரி இல்லாமலே
வ்ரஜாங்கனைகள் விஶேஷித்தனர். அவர்களுடைய அநுபவத்தை,
அவரடைந்த விஶ்லேஷரூபமான கஷ்டத்தை, அவ்வளவாக அநு
பவிக்காமல், கண்ணன் அநுபவம் கரஸ்தமென நினைத்து ஆண்டா
ளிருந்தனள். அவ்வண்ணம் தாம் அடைந்த பகவதநுபவத்தை
நமக்குக் காட்டியருளினார் மாலுகந்த நம்மாசிரியர். இக்கலியுகத்
தில், தத்கால ஸ்திதியில், அவர் காட்டிய வழிக்கு மேற்பட்ட
தொன்று உண்டென்று நினைத்தல் ப்ரமை யென்று சொல்வோம்.

அர்ச்சாவதார ஸஹாயமின்றி, அநந்தன் அவதாரங்களை அநு
பவித்து நற்கதியடைந்த மஹாத்மாக்கள் யுகாந்தரங்களில் இருந்
தார்கள். இவ்விரண்டு உபகாரங்களுமின்றி உபநிஷத் வித்யை
கள் வெளியிட்டபடி த்யாந நிஷ்பத்தியால் பரமனை அடைந்த
வர்களும் யுகாந்தரங்களில் உளர். இவ்வதிகாரிகள் இக்காலம் உண்
டாகமாட்டார். வ்யாஸ ஶுகாதிகளால் வ்ருத்தி பண்ணப்பட்ட
மதத்தையும், ஶங்கர ராமாநுஜ ஆநந்ததீர்த்தாதிகளால் அப்யுபக
மம் பண்ணப்பட்ட மார்க்கத்தையும் தூஷித்து, மந்தமதிகள் ஏற்
படுத்தும் ஸமயங்களை ஆர்ய வம்சங்களில் உண்டானவர் ஆதரித்
தல் காலத்தின் கொடுமையன்றோ!

# தத்வவிசாரம்.

## விபீஷண ஶரணாகதி.

(தொடர்ச்சி)

வ்யாத கபோதோபாக்யாநம் மஹாபாரதத்தில், சாந்தி பர்வத்
தில் 143, 144, 145, 146, 147, 148, அத்யாயங்களில் விஸ்தரேண
சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு வேடன் பக்ஷிகளைப் பிடித்துக்
கொண்டு காட்டில் திரியுங்கால், மிகுந்த காற்றுமழை யுண்டாகிப்
பூப்ரதேசமெங்கும் நீர்மயமாகி, அவனுக்குக் குளிரும் பசியும் வ்ரு
த்தி யடைந்து, அவன் வருந்தி ஸஞ்சரிக்கையில், குளிரால் நொந்து
கீழே விழுந்திருந்த ஒரு பெண்புறாவை அவன் பிடித்துப் பஞ்ச
ரத்தில் அடைத்துவிட்டு, ஓர் பெரிய வ்ருக்ஷத்தின் கீழ் சென்றான்.
அப்போது ஆகாசமும் மேகம் நீங்கி, நக்ஷத்ரங்கள் ப்ரகாசிக்க
விளங்கிற்று. வேடன் தன் க்ராமத்துக்கு மிகவும் தூரத்தில் தானி
ருப்பதை யறிந்து, அந்த வ்ருக்ஷத்தின் கீழ் அந்த ராத்ரியைப்
போக்க நிச்சயித்தான். கையைக் கூப்பிக்கொண்டு, மரத்தைப்
பார்த்து, 'இந்த மரத்தின்கண் எந்தத் தேவதைகளிருக்கின்றார்
களோ அவர்களை நான் ஶரணமாக அடைகின்றேன்', என்று
சொல்லிவிட்டு, ஓர் கல்லின்மீது தலையை வைத்துக்கொண்டு,
உதிர்ந்த இலைகளைப் படுக்கையாகப் பரப்பித் துக்கத்துடன் படு
த்து நித்ரை போயினான். அந்த மரத்தில் வஸித்த ஆண் கபோதம்,
காலையில் வநத்தில் ஸஞ்சரிக்கச் சென்ற தன் பேடை, வழக்கப்
படி ஸாயங்காலம் திரும்பி வாராமையால், துக்கித்துக்கொண்டு,
"காற்றுமழை பெரிதா யடித்தது; என் ப்ரியை திரும்பி வந்தா
ளில்லை; ஏனவள் இன்னும் வந்திலளோ? காரணம் தெரியவில்லை.
காட்டில் என் ப்ரியை க்ஷேமமாய் இருக்கின்றனளோ? அவளில்
லாமல் என் வீடு ஶூந்யமாக இருக்கின்றதே? பார்யை யற்ற

வீடு அரண்ய மெனப்படும். செந்தாமரைக் கண்ணியும், சித்ரா
கையும், மதுர பாஷிணியுமான என் காந்தை வாராமல் போனால்
நான் பிழைக்கமாட்டேன். நான் சாப்பிடாமல் அவள் புசிக்
மாட்டாளே! அந்தச் சீலமுடையாள் நான் குளிக்குமுன் குளிக்
மாட்டாளே! நான் படுக்காமல் சயனிக்க மாட்டாளே! நான் ஸ
தோஷித்தால் தானும் ஸந்தோஷப்படுவள். நான் துக்கித்தால்
தானும் வ்யஸநப்படுவள். நான் தூரம் சென்றால் தைந்யத்தை
அடைவள். நான் கோபித்துக்கொண்டாலும் ப்ரியமாகப் பேசு
வள். பதிதர்மத்தை என்றும் அநுஷ்டிப்பவள். ப்ராணனிலும்
அவள் எனக்கு ப்ரியை. அத்தகையை பத்நீயுடையவன் அன்றோ
தந்யன். அவள், நான் பசியில் வருந்தி நிற்பே னென்பதை அறி
வளே! அவளுக்கு என்னிடம் அநுராகம் உண்டே! ஸ்திர பக்தி
யுண்டே! ஸ்நேஹம் உண்டே! அவளேன் இன்னும் வரவில்லை?
பார்யையைக் காட்டிலும் பரமமான அர்த்தம் உலகத்தில் உண்
டோ!" என்று ப்ரலாபித்தது. அதை வேடன் கூட்டி லகப்பட்ட
பெண் புறா கேட்டு, "அஹோ! இப்படிப்பட்ட ப்ரியனைப் பதி
யாக உடைய என்னதன்றோ ஸௌபாக்யம்! எவளிடம் புருஷன்
ஸந்தோஷப்படுகின்றானோ அவளன்றோ ஸ்த்ரீ! புருஷன் உகந்த
ஸ்த்ரீயினிடம் தேவர்களும் துஷ்டராகின்றார்கள். எந்த ஸ்த்ரீயி
னிடம் புருஷன் ஸந்தோஷிக்கின்றா னில்லையோ, அவள், பூங்கொத்
துடன் கூடிய லதை காட்டுத்தீயினால் கொளுத்தப்படுவது போல்,
சாம்பலாய்ப் போய்விடுவள்", என்று சிந்தித்துவிட்டு, வேடன்
கூட்டினின்றும், துக்கத்துடன் புருஷனைப் பார்த்து, "உமக்கு ஶ்ரே
யஸ்ஸைச் சொல்கின்றேன். காந்தனே! சரணாகதனை ரக்ஷியும்;
இந்த வேடன் உமது வாஸஸ்தாந மடைந்து தூங்குகின்றான். அவன்
குளிராலும் பசியாலும் வருந்துகின்றான். அவனுக்கு உபசாரம்
செய்யும். ப்ரஹ்மஹத்தி கோஹத்தி செய்பவரும், சரணாகதனைக்
கொல்பவரும் ஸமாநமான பாபிகள். நாம் பக்ஷிகள். நமக்குச் சக்தி
யுள்ளவரையில் க்ருஹஸ்த தர்மாநுஷ்டாநம் செய்வோம். அதனால்
மரணாநந்தரம் அக்ஷய்யமான லோகங்கள் நமக்குக் கிடைக்கும்.
நீர் புத்ரவானாக இருந்தும், உமது தேஹப்ரமத்தைப் பாராட்டா
மல், இந்த வேடன் த்ருப்தியடையும்படி அவனை உபசரியும்"
என்று இவ்விதமாக அந்தப் பெண்புறா சொல்லிற்று. ஆண்புறா
வும் அதைக் கேட்டுச் சக்தியுள்ளவரையில் வேடனுக்கு உபசாரம்



செய்து. அவனைப் பார்த்து, "உனக்கு ஸ்வாகதம்; உனக்கு நான்
என்னசெய்யட்டும்? வ்யஸநப்படாதே. உனது வீட்டில் இருப்ப
தாய் எண்ணிக்கொள். நீ எங்களைச் சரண மடைந்தபடியால், விஶ்
வாஸத்தால் சொல்கின்றேன். நீ சத்ருவானபோதிலும், எங்கள்
வீட்டுக்கு அதிதியாக வந்துவிட்டாய். உனக்கு உசிதமான பூஜை
யை நாங்கள் செய்யவேண்டும். மரம், தன்னை வெட்ட வருபவனுக்
கும் நிழல் தருகின்றது. பஞ்சமஹா யஜ்ஞத்தில் ப்ரவர்த்தித்த
க்ருஹஸ்தன் விசேஷமாக அதிதி பூஜையைப் பண்ணவேண்டும்.
ஆதலால் வ்யஸநப்படாதே. நீ எது கேட்டபோதிலும் அதை
நான் செய்கின்றேன்" என்று சொல்லிற்று. வேடன் தன்னைக்
குளிர் பாதிக்கின்றதென்றும், அதைப் போக்கவேண்டுமென்றும்
கேட்டனன். புறாவும் சுஷ்க பர்ணங்களைக் கூட்டிவிட்டு, ஒரு
கொள்ளிக்கட்டையை ஸம்பாதித்துக் கொண்டுவந்து, அவற்றின்
மீதெறிந்து, வேடனைக் குளிர்காயச் சொல்லிற்று. வேடனும் குளிர்
காய்ந்துவிட்டு, மிகவும் ஸந்தோஷம் கொண்டு, என்னைப் பசி
பாதிக்கின்றது, உன்னிடம் ஆஹாரத்தை அபேக்ஷிக்கின்றேன்"
என்றனன். கபோதமும் "உன் பசியைப் போக்க எனக்கு ஸாமர்த்
யம் இல்லை. அன்றன்று கிடைப்பதைக் கொண்டு நாங்கள் ஜீவிக்
கின்றோம். யாதொன்றும் சேர்த்து வைப்போமில்லை", என்று
சொல்லிவிட்டு, முகம் குன்றிப்போய்ச் சிறிது காலம் யோசித்து
விட்டு, "உன்னை த்ருப்தி செய்கின்றேன். நிமிஷம் பொறு" என்று
வேடனுடன் சொல்லிவிட்டு, உடனே சுஷ்க பர்ணங்களில்
நெருப்பை மூளச் செய்துவிட்டு, வேடனைப் பார்த்து, "அதிதி பூஜை
யில் ருஷிகள், தேவதைகள், மஹாத்மாக்களான பிதுர்க்கள், இவர்க
ளுடைய உத்க்ருஷ்டமான தர்மாசரணத்தை நான் கேட்டிருக்
கின்றேன். ஆதலால் அதிதிபூஜா விஷயத்தில் நான் புத்தியினால்
நிச்சயித்ததைச் செய்கின்றேன். அந்தப் பூஜையை அங்கீகரித்து
என்னை நீ அநுக்ரஹிக்கவேண்டும்," என்று ப்ரதிஜ்ஞை செய்து
விட்டுச் சிரித்துக்கொண்டே, அந்த அக்நியை மூன்றுதரம் வலம்
வந்து, அதில் ப்ரவேசித்துவிட்டது. உடனே வேடன் அதைப்
பார்த்துச் சிந்தையி லாழ்ந்தான். "இதென்ன, நான் செய்தேன்!
நான் பாபி, யாவரும் வெறுக்கும் தொழிலுடையோன். எனக்கும்
கோரமான அதர்மம் ஸம்பவித்ததே!" என்று சொல்லி அவன்
ப்ரலாபித்தான். "என்ன இந்த ரூபமான கர்மம் செய்தேனே!

நல்ல கர்மங்களை விட்டேனே! நிந்தார்ஹனானேனே! மஹாத்மாவான கபோதம் ஸ்வமாம்ஸத்தை அக்நியில் சுட்டு எனக்குத் தந்ததே! நான் ப்ராணனை விடுகின்றேன். எனக்குப் பெண்டாட்டி எதுக்கு? பிள்ளைகள்தான் ஏன் வேண்டும்? மஹாதர்ம மூர்த்தியான கபோத மன்றோ எனக்குத் தர்மம் உபதேசித்தது? இனி என் தேஹத்தைச் சோஷிக்கச் செய்கின்றேன். உபவாஸங்கள் அநுஷ்டித்துப் பரலோகோபாயத்தைத் தேடுகின்றேன்" என்று சொல்லித் தனது தடி, வலை, கூடு, முதலானவற்றை எறிந்துவிட்டுப் பெண்புறாவையும் விட்டுவிட்டு, மஹா ப்ரஸ்தாநத்தை உத்தேசித்து நடந்தான். பெண்புறாவும் தன் புருஷனை நினைத்துப் புலம்பியது:—"ஓ காந்தனே! உமக்கு நான் என்றும் விப்ரியம் செய்தேனில்லையே! என்னைத் தனியாக விட்டுச் சென்றீரே! ஓ காந்தனே! நீர் என்னை லாளநத்துடன் பஹுமாநித்து வளர்த்தீரே! ஸ்நேஹத்துடனும், மனோஹரமான மதுராலாபங்களுடனும் என்னுடன் ஸம்பாஷித்தீரே! உம்முடன் நான் பர்வதங்களின் குஹைகளிலும், நதிகளின் தாரைகள் விழுமிடங்களிலும், அழகிய மரங்களின் உச்சிகளிலும் ரமித்தேனே! உம்முடன் ஆகாசத்தில் ஸஞ்சரித்து ஸுகமடைந்தேனே! இனி எனக்கு எல்லாம் போய் விட்டதே! பிதா ப்ராதா புத்ரர்கள் இவர் கொடுப்பது மிதம். அமிதமாகக் கொடுப்பவர் பர்த்தாவன்றோ? பர்த்தா தான் நாதன். அவர் தான் ஸுகம் தருவோன். அவர்தான் ஸ்த்ரீகட்குச் சரணமளிப்போன். நாதனே! உனைப்பிரிந்து இனி எனக்குப் பிழைத்திருக்கக் கார்யமில்லை" என்று இவ்விதமாக அப்புறா துக்கித்துப் புலம்பித் தானும் நெருப்பில் விழுந்துவிட்டது. பின்பு ஸுக்ருதிகளான மஹாத்மாக்களால் பூஜிக்கப்பட்டவனும், சித்ர மால்யாம்பரதரனும், ஸர்வாபரண பூஷிதனுமான தனது பர்த்தா, விமாநகதனாயு மிருக்கக் கண்டு, அவனுடன் சேர்ந்து ஸ்வர்க்கலோகம் சென்றது. வேடனும் இந்த வ்ருத்தாந்தங்களைக் கண்டு, கோரமான வனங்களில் ப்ரவேசித்து, முடிவில் தவாக்நியினால் எரிக்கப்பட்ட சரீரத்தைத் துறந்து, தானும் தனது தபஸ்ஸால் ஸ்வர்க்கம் சென்றனன்.

இந்த உபாக்யாநத்தைப் பகவான் ஸ்மரித்தார். பின்னும் கண்வபுத்ரரான கண்டு என்பவருடைய ஶரணாகத த்ராண விஷய



மான ப்ராசீந காதையையும் சொன்னார். அதில் இந்த ஶ்லோகம் உளது:—"𑌬𑌦𑍍𑌧𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌂 𑌦𑍀𑌨𑌂 𑌯𑌾𑌚𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍 । 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥" "ஓ ராஜனே! கைகளை அஞ்ஜலியில் குவித்துக்கொண்டும், தனது கார்ப்பண்யத்தைக்காட்டிக்கொண்டும், ப்ரார்த்தனையுடன் சரணமடைந்தவன், பூர்வத்தில் சத்ருவாக இருந்தபோதிலும், ஆந்ருஶம்ஸ்யம் எனப்பட்ட தயாகுணத்தை ரக்ஷிக்கும்பொருட்டு, அவனைக் கொல்லல் கூடாது." அடுத்த ஶ்லோகத்தினால், அவன் ஸ்வரக்ஷண விஷயத்திலோ, ஸ்வாமிமத விஷயத்திலோ, விளம்பத்தை ஸஹிக்காதவனாய், ஸ்வாபராத நிமித்தம் பயம் கொண்டவனா யிருந்தாலும், அந்த விஷயத்தில், விளம்பத்தை ஸஹித்துக்கொண்டு, ஸ்வாபராத நிமித்தம் பயமற்றவனாக விருந்தாலும், அயலார் முன்னிலையில் ஶரணாகதனாக வந்தானாகில், அவன் சத்ருவானாலும், ஶாஸ்த்ரார்த்தம் அறிந்தவனால் ஸ்வப்ராண பரித்யாகம் செய்தாவது ரக்ஷிக்கத்தக்கவன் என்று ஏற்படுகின்றது. இப்படி ஶாஸ்த்ரார்த்தத்தையும், லோகத்தில் ஸத்துக்களுடைய அநுஷ்டாநத்தையும், அநுஸரித்து, ஶரணாகதியின் ப்ரபாவத்தை வெளிப்படுத்திய பிறகு, ஸ்வாமி, தனது நிரங்குஶமான பாரமைஶ்வர்யத்தையும் காட்டியருளுகின்றார். "𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌯 𑌤𑌵𑌾𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌚 𑌯𑌾𑌚𑌤𑍇 । 𑌅𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮 ॥ 𑌆𑌨𑌯𑍈𑌨𑌂 𑌹𑌰𑌿𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌦𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌯𑌾𑌭𑌯𑌂 𑌮𑌯𑌾 । 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑍋 𑌵𑌾 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥" "ஒரேதரம் எனைச் சரணமாக த்யாகித்து, நான் உனது ஶேஷபூதன் என்று ப்ரார்த்திக்கும் ஸர்வ ப்ராணிகளின் பொருட்டும் அபயத்தைத் தருகின்றேன். இது எனது வ்ரதம். ஆதலால் இதை நான் எப்போதும் பரித்யாகம் செய்ய அஶக்தன். ஆதலால் ஸுக்ரீவனே! விபீஷணனை அழைத்துக்கொண்டு வா. உங்கள் முன்னால், புத்ரதாராதி ஸர்வத்தையும் ஸம்யக் த்யாகம்செய்து என்னைச் சரணமாக அடைந்தேனென அவன் சொன்னதே போதும். அத்தருணமே அவனுக்கு அபயம் தந்தேன். வந்தவன் விபீஷணனானாலும் ஸரி, மஹாபராதியான ராவணனே ஸ்வயம் வந்தாலும் ஸரி, நான் அபயம் தந்து

விட்டேன். சரணமடைந்தேனென அவன் உச்சரித்ததே போதுமானது." இந்த ச்லோகங்களால், பகவத் சரணாகதி மநஸால் ஸ்மரிக்கப்பட்டபோதிலும், வாக்கினால் உச்சரிக்கப்பட்டபோதிலும், நிரபராதிகள் விஷயத்திலும், ஸாபராதிகள் விஷயத்திலும், ஸக்ருத் அநுஷ்டாந மாத்ரத்தால் பலிக்குமென்று விளங்குகின்றது. இந்த சரணாகதியின் ப்ரபாவம் பகவானுடையது. இதைச் செய்தவனை அவன் ரக்ஷிப்பதென்று வ்ருதம் கொண்டிருக்கின்றான். இந்த உபாயத்துக்கு அதிகாரிகள் ஸர்வப்ராணிகளும். தேசிகனும் அவர்களை 'அந்தணரந்தியர் எல்லையினின்ற வனைத்துலகும்,' என்று ஸாதித்தருளினார். "துராசாரோபி ஸர்வாசீ க்ருதக்நோ நாஸ்திக: புரா । ஸமாச்ரயேத் ஆதிதேவம் ச்ரத்தயா சரணம் யதி । நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: ॥" "முன்னால் துர்வ்ருத்தங்களுடன் கூடினவனையும், ஸர்வ பக்ஷகனையும், நன்றிமறந்தவனையும், நாஸ்திகனையும் இருந்தானாகிலும், ப்ரபத்யநுஷ்டாந காலத்தில் ச்ரத்தையோடு ஸர்வகாரண காரணனைச் சரணடைந்தானாகில், அந்தப் பரமாத்மாவின் ப்ரபாவத்தையிட்டு அவனை நிர்தோஷனாக அறிவாய்" என்று ப்ரமாணம் உளது. நிர்தோஷ மென்றதால், ந்யாஸம் ஸர்வ பாபங்களுடைய நாசத்தை உண்டுபண்ணு மென்கின்றது. இது ந்யாஸத்தால் உண்டாவது அன்று. ந்யாஸத்தை வ்யாஜமாக அங்கீகரித்த பகவத் ப்ரஸாத ஜந்யம்.

ஸர்வ பூதங்களுக்கும் அபயம் தருகின்றேன் என ஸ்ரீராமன் மொழிந்தார். இதை ஈச்வரனன்றி மற்றோர் சொல்லத் தக்கவரன்று. ஜடாயு மரணகாலத்திலும், "மயா த்வம் ஸமநுஜ்ஞாத: கச்ச லோகாந் அநுத்தமாந்" என்று ஸர்வேச்வரனை படியாலன்றோ பகவான் அவ்வண்ணம் சொன்னார். அபயம் என்றால் மோக்ஷம். "அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே, அபயம் ஹி வை ப்ரஹ்ம, அபயம் ஹி வை ப்ரஹ்ம பவதி ய ஏவம் வேத", என்கிற உபநிஷத் வசநங்களில் அபய சப்தம் மோக்ஷார்த்தத்தில் உபயோகப்படுத்தியிருக்கிறது.

'ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத:'।



"தயையானது ஸர்வதர்மங்களினும் ச்ரேஷ்டமானதென்று, உன்னிடமே நான் கேட்டிருக்கின்றேன்" என்று, ஸ்ரீராமனுக்கு ஸீதை ஹநுமான் மூலமாகத் தெரிவித்தனள். ஆதலால் பரமாத்மினுடைய குணங்களில் அது உத்க்ருஷ்டமானது. "க்ருபணஜந கல்பலதிகாம் க்ருதாபராதஸ்ய நிஷ்க்ருதிமாத்யாம் । வ்ருஷகிரிநாததயே த்வாம் விதந்தி ஸம்ஸாரதாரிணீம் விபுதா: ।" "அகிஞ்சனர்க்குக் கற்பகக்கொடியாயும், அபராதம் செய்தவர்க்கு முக்யமான ப்ராயச்சித்தமாயும் இருக்கும் ஸ்ரீநிவாஸன் தயையே! ஜ்ஞாதாக்கள் உன்னை ஸம்ஸாரத்தைக் கடப்பிப்பவளாக நிச்சயித்திருக்கின்றார்கள்." எனும் தயாசதக ச்லோகம் நிர்க்குப் பகவத்கருணை தான் மோக்ஷோபாயம் என்று காட்டுகின்றது. ஆனபடியால்தான் அந்தக் கல்யாணகுண விசிஷ்டனான ஸ்ரீராமன், அதை ரக்ஷிக்கும்பொருட்டு, அஸஹ்யாபராதம் புரிந்தவனும் தன்னிடம் சரணாகதனாகில், அங்கீகரிக்கத் தக்கவனென்று சொன்னார். இப்படி விபீஷண சரணாகதியை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, ஸர்வேச்வரன், ஸர்வ ஜநங்கட்கும் பரமச்ரேயஸ்ஸை யடையும்படியான உபாயத்தைக் காட்டியருளினான். நமது நாட்டிலுள்ள வைதிக ஸம்ப்ரதாயங்க ளனைத்தும் ஸ்ரீராமனைப் பகவானுடைய பரிபூர்ணவதாரமென ஒப்புக்கொள்கின்றன. ஸ்ரீமத் ராமாயணத்தினுடைய ப்ராமாண்ய பாவத்தையும் அங்கீகரிக்கின்றன. லோகத்தில் ஸத்புருஷர்கள் சரணாகத த்ராணத்தை நியமேந அநுஷ்டித்தார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளாமல் விடார். ஆகவே, மஹா அபராதிகள் விஷயத்திலும், ஸக்ருத் ப்ரபதந மாத்ரத்தால், பகவான் தயாபரிதனாய், 'அபயப்ரதன் ஆகின்றேன்' என்றும், இதைத்தன் வ்ரதமெனத் தவறுதலின்றி நடத்துவதாயும் சொன்ன வசநத்தை விச்வஸித்து, அந்த உபாயத்தை அநுஷ்டிப்பதைக் குறித்து சங்கிப்பானேன்? அவன் பொய் சொல்வனா? "அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந, ராமோ த்விர்நாபிபாஷதே, ஸத்யம்

ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் । நஹி ப்ரதிஜ்ஞா
ஸம்ஶ்ருத்ய ”, “பொய் நான் முன் சொன்னதில்லை ; எப்பே
தும் சொல்வேனு மல்லன்”, “ ராமன் இருமொழி யுரைக்கமாட
டான் ” “ஸீதே ! என் ப்ராணனை விட்டாலும் விடுவேன், லக்ஷ்
மணனுடன் உன்னையும் விட்டாலும் விடுவேன் ; ப்ரதிஜ்ஞையை
செய்துவிட்டு அதை விடமாட்டேன் ”, என்றிவ்விதம் அவ
உரைத்திருக்கின்றனே. “ ஸ்ரீநிவாஸஸ்ய காருண்யாதிவ ரூபவ
ணீம் ”, எனும்படியும், “ அவ்யயம் ஹி தத்ஜம் ரஸ்யஸ
ஜநகாத்மஜா ”, எனும்படியும், பிராட்டிக்கு நித்ய வாஸஸ்தாநம
யிருக்கும் ஏற்றத்தை யடைந்த பகவான், அவனது தயையே
ரூபிகரித்து வந்ததெனச் சொல்லக்கூடிய ஸீதையால், ஶரண
மதவத்ஸல: என்றன்றே வர்ணிக்கப்பட்டனன். ஆதலால் ஶரண
கதியின் பெருமையை மநுஷ்யலோகத்தில் ஸ்தாபிக்கவென்றே
நாராயணன் ராகவனு யவதரித்தனர்.

## ஸ்ரீ க்ருஷ்ணோக்திகள்.

பிறகு தனது ஸர்வேஶ்வரத்வத்தைக் குறையின்றிக் காட்டி
யருளிய அர்ஜுநன் ரதத்திலே, அவனை வ்யாஜமாக வைத்துக்
கொண்டு ஜகத்ஹிதத்தை உத்தேஶித்துத் தத்வநிரூபணம் செய்
யுங்காலத்திலே, “ ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ’
என்று சொல்லிக்கொண்டு ஜ்ஞாநத்தின்பொருட்டுச் சரணமடை
ந்த அர்ஜுநனை நோக்கி,

> ‘மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேபி ஸ்யு: பாபயோநய: ।
> ஸ்த்ரியோ வைஶ்யாஸ் ததா ஶூத்ராஸ் தேபி யாந்தி பராம் கதிம் ॥
> கிம் புநர் ப்ராஹ்மணா: புண்யா: பக்தா ராஜர்ஷயஸ் ததா ’ ।

என்றருளிச்செய்தனன். ஜந்மத்தால் பாபிஷ்டர்களும், “ ஸ்த்ரிய
ஏஜஸ்வ தஸ்ய காதராயதீ ”, என்பதுபோல், க்ரஹவ்யாபா
ரோசித ப்ரஜ்ஞாஶாலிகளான ஸாதாரண ஸ்த்ரீகளும், கேவல



ஐஹிக விஷயங்களில் வ்யாஸக்த மநஸ்கரான வைஶ்ய ஶூத்ரர்
களும், பகவத் ஸமாஶ்ரயண மாத்ரத்தால் பரமஶ்ரேயஸ்ஸை
அடைவார்கள் ; ஆதலால் ஜந்மத்தால் புண்யகர்மங்களிலும் பக
வத் பக்தியிலும் சிறந்த ப்ராஹ்மணர்களும் க்ஷத்ரியர்களும் பர
மாத்வை ஆஶ்ரயித்து மோக்ஷமடைவர் என்பதைப்பற்றிக் கேட்
பானேன் என்பது அதன் பொருள். ஆஶ்ரயித்த மாத்ரத்தால்
பாபிஷ்டர்களும் மோக்ஷ மடைவார்கள் என்பதால், பகவான்
இந்த இடத்தில் ப்ரபதநத்தைத் தான் உத்தேஶித்திருக்கவேண்
டும். பாபம் பகவானிடம் ஶரணுகதியைத் தடுக்கு மென்னும்
விஷயத்தை, “ ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே
நராதமா: । மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ।”
எனும் ஶ்லோகத்தால் ஸாதித்தருளினர். துஷ்க்ருதிகள் என்றால்
பாபத்தொழிலுடன் கூடினவர். இவர் நால்வகைப்பட்டவர் ; மூடர்
நராதமர், மாயையால் அபஹரிக்கப்பட்ட ஜ்ஞாநத்துடன் கூடி
னவர், அஸுர ஸ்பாவத்தை யடைந்தவர். மூடர் என்பவர், அஹ
ங்கார மமகாரமெனும் விதைகளால் வளர்ந்த அவித்யா வ்ரு
க்ஷத்தை என்றும் ஆஶ்ரயித்தவர். நராதமர் என்போர், பகவத்
கதைகளைக் கேட்டுப் பகவத் விஷயத்தில் ஸமுதாய ஜ்ஞாந
மடைந்தவரேனும், பகவத் விஷயத்தில் ஆபிமுக்யம் அற்றவர்.
பகவத் விஷய ஜ்ஞாநத்தை ஸம்பாதித்த பிறகும் யுக்திவாதங்
கள் செய்துகொண்டு, அதன் ப்ரயோஜநத்தை அடையாமல் பக
வந்மாயைக்குள் அகப்பட்டுக்கொண்டு ஸம்ஸரிக்கின்றவர் மாயை
யால் அபஹ்ருதமான ஜ்ஞாநஸஹிதர். ஜ்ஞாந மிருந்தாலும் இல்
லாவிட்டாலும், சரீரமே ஆத்மாவென நினைத்தவரெனச் சரீர
போஷணத்திலேயே ப்ரவ்ருத்தராய், நைஸர்கிகமாகப் பகவத்
த்வேஷத்தைக்கொண்டாடுகின்றவர் அஸுர ஸ்வபாவத்தை அடை
ந்தவர். இவர்கள் பகவத் ப்ரபத்தி செய்கின்றாரில்லை என்பது
மேலெடுத்த ஶ்லோகத்தின் தாத்பர்யம். ஈஶ்வரனுகிய தன்னை
ஸர்வப்ரகாரத்தாலும் சரணமடையும்படி ஸ்ரீ க்ருஷ்ணன், அர்ஜு
நனுக்கு ஸாக்ஷாத்தாக விதித்தனர். அதன் பலனுக ஈஶ்வரப்ர

ஸாதமும், தத்ப்ரஸாத பலனாக பரமசாந்திரூபமான மோக்ஷமும் கிடைக்குமென்று, "தமேவ ஶரணம் கச்ச" எனும் ஶ்லோகத்தால் ஸாதித்தருளினார். இதர உபாயங்களை ஸம்யக் பரித்யாகம்செய்து, தன்னையே ஶரணமடையும்படி மறுபடியும் விதித்து, அந்த ஶரணாகதிபலன் தனது ப்ரஸாதத்வாரா ஸர்வபாபக்ஷய மென்றும், கண்டோக்தியாகச் சரமஶ்லோகத்தினால் வெளியிட்டனர். கீதா ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டது அங்கப்ரபத்தி யானபோதிலும், உத்தேஶித்த ப்ரயோஜநத்தைத் தரவல்ல பகவானுடைய க்ருபையானது, ப்ரபதநம் செய்தவனுக்கு உபாஸந நிஷ்பத்தியை உண்டாக்குவதுபோல், பகவானுடைய பரமஸ்தாநத்தையும் கொடுக்க வல்லது. இந்த அர்த்தம், "தமேவ ஶரணம் கச்ச" எனும் ஶ்லோகத்தின் ஶப்தங்களின் அர்த்தயோசனையால் த்ருடமாக ஏற்படும். "மாம் வ்யபாஶ்ரித்ய யாந்தி பராம் கதிம்", எனும் சப்தங்களும் அந்த அர்த்தத்தைத்தான் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

"தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே" ॥

"த்ரிகுண ஸ்வரூபையானவளும், ஈஶ்வரனாகிய என்னை யாஶ்ரயித்தவளுமான இந்த விஷ்ணுமாயையானவள் யாவராலும் அதிக்ரமிக்கப் படாதவள். என்னையே யார் சரணமடைகின்றனரோ, அவர்தாம் இந்த மாயையைத் தாண்டுகின்றனர்" என்கிற ஶ்லோகமும் பகவத்ப்ரபதந மொன்றினாலேயே மாயாதரண பலனை பகவத்ஸாயுஜ்யத்தை யடையக்கூடும் எனக் காட்டுகின்றது. ஆகவே கீதையில் பல ஶ்லோகங்களால் பகவான் ப்ரபதந மொன்றினாலேயே, யாவரும், அநிஷ்டநிவ்ருத்தி ரூபமாயும், இஷ்டப்ராப்திரூபமாயும் வ்யவஹரிக்கப்பட்ட மோக்ஷத்தை அடையக் கூடுமென்பதை, ஸ்வயமே காட்டியும் விதித்துமருளினான்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

# ஜநகநந்திநீ.

திருவஷ்டாக்ஷர த்யாநஶ்லோகத்தின் அர்த்தத்தை ஹ்ருதய கமலத்தில் ஸாக்ஷாத்கரிக்க அஶக்தரான பல முமுக்ஷுக்களிடம் க்ருபை கொண்டு, பேரருளாளன், அந்த ஶ்லோகார்த்தம் மூர்த்தீகரித்ததென, நாலாம் திருநாள் காலை உத்ஸவத்தில் ஸேவை ஸாதிக்கின்றான். நித்யவிபூதியிலன்றி அந்தஸேவை அவ்வண்ணமே அந்யத்ர இவ்வுலகில் கிடைப்பதரிது. அதற்குக் காரணம், முமுக்ஷுக்களும், க்ருதக்ருத்யர்களும், அந்தத் திவ்யதேசத்தை யொத்து, அந்ய ஸ்தலங்களில் அவ்வளவாகக் கூடுதலில்லை. ஆனாலும், நித்ய ஸூரிகள் தர்சிக்கத் தகுந்த தனது ரூபத்தை ஸர்வ பாமரர்களும் தர்சிக்கத் தகாது எனும் திருவுள்ளத்தால் தானோ, அர்ச்சகர்களுக்குக் கஷ்டம் கொடாமல், அந்தத் திவ்யரூபத்தைத் தரிக்கின்றானில்லையோ? தன் பரம்பாவத்தை அறியாத பூஜகர்கள், தமக்கு ப்ராயேண ஒரு பலத்தையும் கருதாமலும், அடையாமலும், பரர் தங்களை மெச்சவேண்டுமென்று செய்யும் ப்ரயத்நத்தை உகந்தருளானாலும், அவர்கள் ஶ்ரமப்படுகின்றாரென க்ருபாவசனாகித் தாமஸித்து அந்த ஸேவையை அங்கீகரிக்கின்றானோ? அந்த விஷயம் மந்தமதிகளான எமக்கு வெளிப்பட்டிலது. எவ்விதமாயோ, ஶேஷவாஹநத்தில் பெருமாள் எழுந்தருளத் தாமஸிக்கவே, வரதாசார்யரும் அவர் பார்யையும், கேசவாசார்யர் நிவாஸத்துக்குச் சென்றார்கள்.

நடையில் உட்கார்ந்து புஸ்தகம் பார்த்துக்கொண்டிருந்த கேசவாசார்யர், வரதாசார்யரைக் கண்டவுடன், "எழுந்தளவேண்டும்", என்று சொல்லிக்கொண்டு எழுந்துவிட்டார். உடனே தம்முடைய ஸஹோதரியையும் பார்த்து, "அம்மா! வா, எது ஸயத்

நீகராய் எழுந்தருளியது? ஏதோ விசேஷம் இருக்கவேண்டுமென்று ஊகிக்கின்றேன். என்ன திருவுள்ளம்?" என்று மொழிந்தார்.

"விசேஷமிருக்கின்றது. வெளியிடவும் கஷ்டமாயிருக்கின்றது. அவள் சொல்லுவள், திருச்செவி சாற்றவும்" என்றனர் வரதாசார்யர்.

"கநகவல்லி! உன் பர்த்தா ஆஜ்ஞாபிக்கின்றார். எந்த அபிப்ராயத்தால் வந்தனை?" என்றனர் கேசவாசார்யர்.

"என்னவென்று சொல்லுவேன்? நேற்று அஸ்தமந ஸமயத்தில் ஸ்ரீநிவாஸன் என்னிடம் வந்தான். தான் விவாஹம் செய்து கொள்ளும் பக்ஷத்தில், ஜநகநந்தினியைத் தவிர்த்து மற்றொரு பெண்ணையும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேனென்று என்னுடன் சொல்லிவிட்டுப் போய்விட்டான். ராத்ரி உங்கள் ஜாமாதாவுடன் அதை விஜ்ஞாபித்தேன். அவர் ஆஜ்ஞாபித்தபடி அவருடன் இவ்விடம் வந்திருக்கின்றேன்" என்று கநகவல்லி சொன்னாள்.

உடனே வரதாசார்யரும், "இன்று காலை அடியேன் பையனைப் பார்த்து வார்த்தை சொன்னேன். அவன் அந்த விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருக்கின்றான். அவன் க்ஷேமம் தேவரீரையும் பொறுத்ததன்றோ? ஆதலால் அதைத் தேவரீருடன் ப்ரஸ்தாபிக்க வேண்டுமென்று வந்திருக்கின்றோம்" என்று சொன்னார்.

"ப்ரஸ்தாபிக்க வெண்ணிய விஷயத்தின் யுக்தாயுக்த விசாரம் செய்ததா?" என்றார் கேசவாசார்யர்.

"செய்துதான் இவ்விடம் வந்தோம். பையன் நிச்சயத்தை ஸம்சயமின்றி அறிந்த பிறகு, அவன் க்ஷேமத்தை உத்தேசிப்பதன்றோ யுக்தம்? அவன் இஷ்டத்தை நாங்கள் நிறைவேற்றாவிட்டால், அவனுக்கு க்ஷேமம் உண்டாகாது. ஆதலால் அந்த விஷயத்தில் தேவரீரும் அநுகூல யோசனையைப் பண்ணவேண்டு



மென்பது அடியேனுடைய ப்ரார்த்தனை" என்று சொன்னார் வரதாசார்யர்.

"பந்துப்ரியர், பந்துக்கள் இஷ்டத்தைச் செய்யவேண்டியதே. தர்மத்தைக் காப்பாற்ற எண்ணுபவர், அக்ருத்யகரணத்தையும் ஆசரிக்கக் கூடாது. ஶாஸ்த்ரம் நிஷேதிக்கும் ஸம்பந்தத்தை எவ்விதம் நான் அங்கீகரிக்கக் கூடும்?" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"தக்ஷிண தேசத்தில் இப்படிப்பட்ட ஸம்பந்தங்கள் அநுஷ்டாநத்தில் வந்துகொண்டிருக்கின்றனவே" என்றனர் வரதாசார்யர்.

"அபிஜாதர்க்குள் ஶிஷ்டாசாரத்தை மதிப்பவர் இப்படி எங்கேயாவது ஸம்பந்தம் செய்துகொண்டதைத் தேவரீர் காட்டக்கூடுமோ? அப்படியடியேன் செய்துவிட்டால் அடியேனுக்கு க்யாதி விரோதம் வாராதோ? "ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர் மரணாததிரிச்யதே" எனும் பகவத் வசநத்தை மறந்ததோ?" என்றனர் கேசவாசார்யர்.

"ஆனால் அடியேனுக்கு என்ன கதி?" என்றார் வரதாசார்யர்.

"[illegible]" என்று ஸ்ம்ருதி சொன்னபடியால் ஶிஷ்டாசாரமெனப்பட்ட தர்மத்தை அடியேன் த்யஜிக்கமாட்டேன். ஹிதவசநத்தால் ஸ்ரீநிவாஸன் புத்தியை மாற்றவேண்டும். அந்த ப்ரயத்நத்தைத் தேவரீர் வஹிக்கவேண்டும். அடியேனும் அவனைப் பார்த்தால் சொல்லுகின்றேன்" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"அடியேன் அந்த ப்ரயத்நத்தைச் செய்தேன். அது பயன்படவில்லை. தேவரீர் ப்ரயத்நத்தின் ப்ரயோஜநத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அடியேன் இவ்வண்ணம் தேவரீரிடம் வந்ததை க்ஷமிக்க ப்ரார்த்திக்கிறேன்" என்று சொல்லி எழுந்து விட்டார் வரதாசார்யர். உடனே அவரும் அவர் பத்நியும் ஸ்வக்ருஹம் சென்றனர்.

உள்ளே யிருந்த ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும், அவசமாய் அந்த ஸம்பாஷணையைக் கேட்டார்கள். அவர்கள் இருவரும் கேசவாசார்யரைக் குறித்து மிகவும் பரதந்த்ரர்கள். அந்தப் பாரதந்த்ர்யம் அவர்க்கு அத்யந்தம் இஷ்டமாயிருந்தபடியால், ப்ரஸ்தாப விவாஹ விஷயத்தில் அவர் ஸரியாக நடப்பர் எனும் விச்வாஸம் அவர்க்குள் த்ருடமாய் நிலைத்திருந்தது. ஸ்ரீநிவாஸன் தன்னைப் பார்யார்த்தம் அபேக்ஷிக்கின்றான் எனும் விஷயம் அன்று தான் ஜநகநந்தினிக்குத் தெரியும். முதல்நாள் ஸாயங்காலம் அவன் தன்னுடன் ஸம்பாஷிக்கையில், முடிவாகச் சொன்ன சொற்களின் தாத்பர்யத்தை ஜநகநந்தினி கிஞ்சித் யோசித்தாள். பகுநாள் பழக்கத்தால் ஸ்ரீநிவாஸனிடம் அவளுக்கு அபிப்ராயமும், ஓர் உத்தேசத்தைக் குறிக்காமல், அநுகூலமாகவே யிருந்தது. ஆனால் அவனுக்கும் தனக்கும் விவாஹத்தைச் சாஸ்த்ரம் ஸம்மதிக்கமாட்டாது என்பதையும் யோசித்தாள். தன்னுடைய பிதா தனக்குப் பதியாக யாரை வரித்தபோதிலும், அந்தப் புருஷன் தான் தனக்கேற்ற புருஷனாகத் தக்கவன் என்றும் நிச்சயம் செய்தனள். ஆனால் பிதாவின் நிச்சயத்திற்குத் தான் ஸ்ரீநிவாஸனைப்பற்றி யவருடன் சொன்ன சொற்கள் எம்மட்டும் ஸஹாயம் செய்தனவோ என்பதை எண்ணினாளில்லை.

இதற்குள் பெருமாள் ஸந்நிதி வீதியில் எழுந்தருளும் வேளை கிட்டியது. கேசவாசார்யர் வரதாசார்யர் முதலானவர்கள் கைங்கர்யார்த்தம் ஸந்நிதிக்குப் போய்விட்டார்கள். ஜநகநந்தினியும் ஹஸ்திகிரீசனுடைய வீதி ஸோதந கைங்கர்யத்தை ச்ரத்தையுடன் முடித்தனள். முன் விவரித்தவண்ணம் உத்ஸவ விபவத்தைத் தர்சித்து ஆநந்தம் கொண்டனள். வைகுண்டநாதன் அவன் தான், ஜத்காரணன் அவன்தான், முக்திப்ரதன் அவன்தான் என்று ஸர்வ ஸம்சயங்களும் அறுத்தொழிந்தவண்ணம் தேவாதிராஜன் ஸேவை ஸாதிக்க, ஆஸ்திகர் யார்தான் கண்ணாரக் கண்டு உகக்காது நிற்பர்? ஸத்ஸங்கத்தின் பலத்தைப் பூர்ணமாய் அடைந்து அநுபவித்த நம் கதாநாயகி, புளகாங்கிதையாய் எம்பெருமான்



ஸௌந்தர்யத்தி லீடுபட்டனள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இவ்வண்ணம் அவள் திருவடி ஸந்நிதியின் அருகில் நிறுத்தப்பட்ட பரமனை உள்ளடக்கி, வெளிமறந்து, அநுபவிக்குங்கால், சடபட என்றொரு சப்தம் அவள் காதில் விழுந்து அவள் த்யாநத்தைக் கெடுத்துவிட்டது. உடனே மேற்புறம் திரும்பி நோக்கினாள்; போலீஸார் இரண்டு ஸ்ரீவைஷ்ணவச் சிறுவர்களின் கையைப் பிடித் தழைத்துப் போவதைப் பார்த்தாள். பெருமாள்கோவிலில் பிறந்த பெண்பிள்ளைக்கு அது அத்யாபக ஸம்ப்ரமமென்று ஒருவர் சொல்லவும் வேண்டுமோ? உத்ஸவத்துக்கே அது ஓர் அங்கமாயிருக்கின்றது. ஆதலால், உடனே பெருமாள் அவ்விடத்தினின்று எழுந்தருளிவிட்டார். ஜநகநந்தினி மாதாவைத் தொடர்ந்து இல்லத்துக்குள் சென்றனள்.

பெருமாள் ஸந்நிதிக்குத் திரும்பி எழுந்தருளின பிறகு வேத பாராயண கைங்கர்யத்தை முடித்துவிட்டுக் கேசவாசார்யரும் வரதாசார்யரும் இல்லங்கட்கு வரும்போது, ஸ்வக்ரஹத்தின் வாசலில் ஸ்ரீநிவாஸன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து, இருவரும் அவனிடம் சென்றனர். அவர் வருவதைக் கண்டு ஸ்ரீநிவாஸன் எழுந்து நின்றான். கேசவாசார்யரும் வரதாசார்யரும் திண்ணை மீது உட்கார்ந்தனர்.

கேசவாசார்யர், “ஸ்ரீநிவாஸா! நீ ஜநகத்தைப் பார்யார்த்தம் அபேக்ஷித்ததாக உன்னுடைய மாதாபிதாக்கள் சொன்னார்கள்” என்றனர். ஸ்ரீநிவாஸன் “ஆம் அபேக்ஷித்தேன்,” என்று விடை தந்தனன்.

“பிள்ளாய்! அது சாஸ்த்ரநிஷித்தமான ஸம்பந்தம். அதை என்போன்றவர் ஸம்மதிக்க ஏற்கமாட்டாது. நீ படித்தவன்; புத்திசாலி. இப்படிப்பட்ட யோசனை உனக்கு உதிக்கலாமோ? லோகத்தில் பெண்களா கிடையாது? எங்கேயாவது தகுந்ததோர் கந்நிகையைப் பற்றி உன் அபிஸந்தியைத் தெரிவித்தாயாகில், அந்த விஷயத்தில் நாங்கள் ப்ரயத்நபரர் ஆகின்றோம். அக்ருத்ய

கரணத்தில் நீ பிடிவாதம் செய்யத்தகாது " என்று சொன்னா கேசவாசார்யர்.

" தேவரீர் ஏன் வீண் ப்ரமம் கொள்ளவேண்டும்? ' [illegible] ' ! என்று வசநமில்லையா? ' [illegible] '. தேவரீர் ஸமாதாநம் சொல்லி அதன் ப்ரவ்ருத்தி மாறமாட்டாது. அடியேனுக்கு ஜநகம் கிடைக்காவிட்டால் அடியேனுடைய விவாஹத்தைப் பற்றிய ப்ரஸ்தாபம் வேண்டியதில்லை " என்றனன் ஸ்ரீநிவாஸன்.

" நீ ஸம்ஸ்க்ருதம் படித்தது வீண்போகவில்லை. மநஸ் ப்ராயேண இந்த்ரியவஶ்யமா யிருக்கும். அதை யுக்தாயுக்த விசார ஸமர்த்தமான புத்தியால் ஜயிக்கவேண்டும். அப்படிப்பட்ட விசாரத்துக்குப் பெரியவர்களுடைய வார்த்தை அநுகூலம் செய்யும். நீ மநஸ் எனப்பட்ட பேய்க் குரங்குக்கு இடம் கொடுத்து, அது போனவழியை ப்ரமாணமாகக் கொண்டாயாகில் உன் விஷயத்தில் நாங்கள் செய்யக்கூடிய நன்மை யாதொன்றுமில்லை. ' [illegible] '," என்று சொல்லிவிட்டுக் கேசவாசார்யர் எழுந்துவிட்டார். வரதாசார்யரும் எழுந்தார். கேசவாசார்யர் தம்முடைய இல்லம் சென்றனர்.

அதன் பிறகு ஸ்ரீநிவாஸன் யாருடனும் சொல்லாமல் கச்சி நகரை விட்டொழிந்தனன். சென்னையில் அவன் படிக்கும் கலாசாலை மூடிநின்றது. அங்கே அவனுக்கு அப்போது வ்யாபாரம் இல்லை. அவன் போன இடம் அவனுடைய தாய்தந்தையர்க்குத் தெரியவில்லை. அவன் நிமித்தமாக அவர் துக்கத்தி லாழ்ந்தனர்.

ஸ்ரீநிவாஸன் இவ்வண்ணம் போய்விட்டதைக் கேள்வியுற்றுக் கேசவாசார்யரும் வருந்தினர். அதன்மேல் அவர் செய்யத்தக்கதொன்றுமில்லை. ஜநகநந்தினிக்கு ஸ்ரீநிவாஸன் செயல் ஸாதாரணமான வருத்தத்தை யுண்டுபண்ணியது என்றால் உண்மை விளங்காது. தனது விவாஹம் தன் இச்சையால் முடியத் தக்கதன்று என்பது அவளுக்குத் தெரியும். அவளுடைய விவாஹபாரம் அவள்



பிதாவைச் சேர்ந்தது. அவளுக்காகப் புருஷனை அவர்தான் வரிக்கத் தக்கவர். ஆனபோதிலும், தன்னுடைய அத்தான் தன்னைப் பார்யார்த்தம் விரும்பினதும், அந்த விருப்பம் ஈடேறாத துக்கத்தால் அவன் மறைந்து போனானென்பதும், அவள் மனத்தில் சில கலக்கத்தை விளைவித்தன.

உத்ஸவம் யதாபூர்வம் நடந்தது. பேரருளாளன் சந்த்ரப்ரபையில் அன்றிரவு ஸேவை ஸாதித்தனர். பகவானுடைய திவ்யரூபத்தைத் தர்சித்து அதில் ஈடுபட்டனள் ஜநகநந்தினீ. ஆனாலும் அவள் முகமாகிய சந்த்ரன் ஈஷத் வைகுண்யம் அடைந்திருந்ததை ஹரிப்ரியை கண்டனள்.

" ஜநகம்! என்ன உன்முகம் நித்தம்போல் இல்லையே. கொஞ்சம் வ்யஸநக்குறி தென்படுகின்றதே " என்றனள் ஹரிப்ரியை.

" அம்மா! எனக்குத் தெரிந்ததோர் காரணமில்லை. ஸ்ரீநிவாஸன் யாருடனும் சொல்லாமல் எங்கேயோ போய்விட்டானாம். அதனால் அத்தையும் அவள்புருஷனும் மிகவும் துக்கப்படுகின்றனராம். அதைக் கேள்வியுற்றேன். அது என் மநத்தில் கொஞ்சம் கலக்கம் உண்டாக்கியது. அக்கலக்கம் முகத்தில் ப்ரதிபலித்திருக்கலாம் " என்று சொன்னாள் ஜநகநந்தினீ.

" ஏன் ஸ்ரீநிவாஸன் அப்படிச் செய்தான்? " என்றனள் தாய்.

" அம்மா! அவர் க்ரஹம் சென்று அதை நீ விசாரிக்கக் கூடாதா? போய் விசாரித்துவா ", என்று சொன்னாள் ஜநகநந்தினீ. இதற்குள் பெருமாள் செட்டிவீதி கடந்தார். வேதபாராயண கோஷ்டிகள் நெருங்கவே, அந்த பம்பத ப்ரஹ்மாநுபவம் செய்துவிட்டு ஹரிப்ரியையும் அவள் மகளும் உள்ளே சென்றனர்.

அன்றையதினம் பூர்ணசந்த்ரன் வானம் நிறைந்து ப்ரகாசித்தனன். சந்த்ரிகையைத் தாங்கிய பதார்த்தங்கள் யாவும் புது நிறம் கொண்டு விளங்கின. உத்ஸவம் பகவானுடையதென்றெண்ணாமல், தங்களுடையதென்று மோஹங்கொண்ட மூடஜநங்கள் களித்து விளையாடினார்கள். புருவ விகாரங்களறியாது, லோக ரீதி

யை அதிக்ரமிக்காத ப்ரீதியால் புருஷரிடம் ஸ்நேஹம் பாராட்டும் கிராமப்பெண்கள், மல்லிகை மலர்ச்சரங்களை நிரவதிகமாக வாங்கி, அவற்றின் சுமை தாங்காதவண்ணம் தங்கள் கூந்தலின் பின்னல்கட்டுகளைச் சுற்றிச்சுற்றி யணிந்ததுமன்றித் தமது க்ரஹாதிபர்க்கும் குடுமி மயிரெல்லாம் மறையும்படி சுற்றினார்கள். வாய் சிவக்க வெற்றிலை பாக்குகளை மூன்றுருவதுடன் முழுவாயிலடக்கிக் கொண்டு, புருஷர்க்கும் போதுமான அளவு மெல்லக் கொடுத்துக் கங்கைகொண்டான் மண்டபம் போய்த் திரும்புமளவும் வேண்டிய தாம்பூலத்ரவ்யங்களைக் கைப்பற்றினார்கள். உபபத்திக் குறைவால் வண்டிகளின் மீதேறிமண்டபம் செல்ல வழியற்ற தம்பதிகள், வேதபாராயண கோஷ்டிகளின் முன்னும் பின்னுமாகச் சிரித்துப் பேசிக்கொண்டு, சீக்கிரமாய் நடந்தனர். க்ருஷியில் பலத்தவர், தமது உழவுமாடுகளையோ கலப்பை மாடுகளையோ கூண்டுவண்டிகளில் கட்டிக்கொண்டு வைசாக உத்ஸவம் காண ஊரினின்று வந்தவர், மண்டபம் போக வண்டிகளைக் கட்டிக்கொண்டு, ஆறுபெயர் உட்காரத்தக்க விடத்தில் பதினைந்துபேர் ஏறிக்கொண்டு, ஸந்தோஷம் தாங்காமல் ஸவாரி விட்டு வீதியைக் கடந்தனர். நகரப் பெண்களோ நாணயம்பெற்ற ஆடைகளைக் கோணாமல் தரிக்கப் பலதரம் உடுத்திக் களைந்து, முடிவான உடை ஸரியாயிருக்கின்றதோவென, முன்னே பலதரம் குனிந்தும்; பக்கங்களில் திரும்பியும் பார்த்துவிட்டுக் கண்ணாடிகளைக் கைக்கொண்டு, காதணிகள் அமையவைத்தும், கழுத்தணிகள் விளங்கவைத்தும், அளக ஸம்யமநத்தை ஆதரத்துடன் திருத்தி, முகத்தில் கோணல்கள் முழுதும் நீங்கினதாய் நினைத்துக்கொண்டு, மெல்லியதோர் முல்லைச்சரத்தைக் கூந்தல் கட்டின்மீது வைத்துக், கொஞ்சமாய்த் தாம்பூலமருந்தித், தமது நாகரிகம் நடைபெறவே, மண்டபம் போக நினைத்து வீட்டு வாசல்களில் நின்றனர். இவர்க்குள் சிலரைப் புருஷர் வாடகை வண்டிகள் பேசி ஏற்றிக்கொண்டு மண்டபம் சென்றனர். மற்றோர்க்குப் புருஷர் வண்டிகள் பேசிக் கொண்டுவிட்டு, மண்டபம் நடந்தார்கள். சிலர்க்குப் புருஷர் வண்டிகள் அமைத்துத் தந்துவிட்டு, அவரைக் காட்டிலும் ரஸம் தந்த அந்ய ஸ்த்ரீகள் நிமித்தமாக அந்யத்ர சென்றனர். சிலர் புருஷர் மதிப்புக்கு லக்ஷ்யமானாரில்லை. இவர் தாமே வண்டிகள் அமைத்துக்கொண்டனர். புருஷர் கூடவராத ஸத்ரீகளுக்குப்



பந்துக்களான இதர புருஷர், மண்டபம் செல்லத் துணையாயினர். சிலர்க்கு, ஸ்வபுருஷர்களைக் காட்டிலும் அந்யரே ஸ்நிக்தரா யிருந்தபடியால், அவருடன் கூடி, அவர்கள் போயினர். இவ்வண்ணம் பௌர்ணமிதினம் உத்ஸவம், கச்சிமாநகரத்தில் கூடிய ஜநங்களுக்கு உத்ஸாஹ விஷயமாயிற்று. சந்த்ரன் அறியாமல் அவனுக்குள் நின்று, அவனை ஸ்வ ஶரீரமாகக்கொண்டு நியமநம் செய்யும் பரமன், அவ்வுண்மைகளை யாவர்க்கும் தெரிவிக்கத் திருவுள்ளங்கொண்டு, அர்ச்சா ரூபியாய், சந்த்ரபிம்பம் போன்றதொரு வாஹநத்தில் தர்சநம் தந்து, உபநிஷத் கூறிய வண்ணம் "நான் தான் உமது ஆத்மாவும் அந்தர்யாமியும் ஆகின்றேன். உமது சரீரத்திலிருந்த போதிலும்நான் அம்ருதன்" என்றுவற்புறுத்தியும், அவனிடம் புத்தி லயிக்காமல், அவனை வ்யாஜமாகக்கொண்டு, வஸந்தருது, சந்த்ரன், ஸாயங்காலம், சந்தநம், புஷ்பம், தாம்பூலம், ஶ்ருங்காரம், இவற்றுள் சிக்கிக்கொண்டு, உத்ஸவம் தமதென்றெண்ணி விளையாடிய ஜநங்களைப்பற்றி என் சொல்வோம்?

இவர்கள் விளையாட்டை வெறுத்த ஶரண்யன், இவர்களைச் சிக்ஷிக்கக் கருதினான் போலும். வரதாசார்யரும் அவர் பார்யையும் ஸ்ரீநிவாஸன் போனதை நினைத்து வருந்தி வீட்டின்கண்ணே நின்றுவிட்டனர். ஹரிப்ரியையும் ஜநகநந்திநியும் ஸந்தர்ப்பக் குறைவினால் மண்டபம் என்றும் போவதில்லை. ஸ்ரீநிவாஸனைப் பற்றிய யாவும் ஹரிப்ரியை தெரிந்துகொண்டனள். ஆதலால், அவளும் ஜநகமும் கிஞ்சித் வ்யஸநத்துடன் அன்றிரவைப் போக்கினர். இப்படித் தன்னடியாள் முகங்குன்றியதைப் பேரருளாளன் களித்தானில்லைபோலும். கச்சி வீதியில் அவன் எழுந்தருளினவுடன், ஆகாசம் மேகங்களால் மூடப்பட்டது. உத்ஸவம் த்வரிதமாக நடந்து, பெருமாள் கங்கைகொண்டான் மண்டபம் நெருங்குமுன் சிறுதூறல் ஆரம்பித்துவிட்டது. பெருமாள் மண்டபத்தில் நுழைந்தார். பெருமழையாய்ப் பரிணமித்தது. வேடிக்கை காணவும், விளையாடவும் வந்த ஜநங்கள் சிதறிப்போயினர். மழையிலடிபட்டு ஒழுகும் வண்டிகளி லேறிக் கஷ்டத்துடன் வீடுகளைப் போய்ச் சேர்ந்தனர். அர்த்த ராத்ரியில் மழை நின்ற பிறகு, பகவான் திரும்பி ஸந்நிதிக்குப் போய்ச் சேர்ந்தனர்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# கடிதங்கள்.

## I

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய வயோநிஷ்கர்ஷத்தைப்பற்றி ஓர் விஜ்ஞாபனம்:—லௌகிகாநுபவப்படி ஸ்ரீரகுநந்தநன் துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநார்த்தமாயும், 'சாதுர்வர்ண்யஸ்ய ரக்ஷிதா' எனும் வசநப்படி, வர்ணாஶ்ரம தர்மங்களை அநுஷ்டித்துக் காட்டவேண்டியதற்காகவும், அவதாரம் செய்தது த்ரேதாயுகத்தில் சைத்ர சுக்ல நவமி கடக லக்நத்தில் என்பது ஸ்பஷ்டமாக ஏற்பட்டிருக்கிறது. அது முதல் அயோத்யா நகரத்தில் ஸ்ரீரகுநந்தநன் அநுஜர்களோடு கூடச் சில காலம் எழுந்தருளியிருந்து, விதிப்படி உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களைப் பெற்று, வேதவேதாந்தங்களைக் கற்று, ஸந்துஷ்டராய் எழுந்தருளியிருந்தார். பிறகு விவாஹார்த்தம் தசரதர் யோசிக்குங்கால், விஶ்வாமித்ரர், ஸ்வாமியை யாகரக்ஷணார்த்தமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகும்போது, தசரதர், 'ஊநஷோடஶவர்ஷோ மே ராமோ ராஜீவலோசந:' என்று ஸ்ரீராகவனுக்கு இன்னும் பதினாறு வயஸ் ஸரியாக ஆகவில்லை என்று சொன்னார். (பாலகாண்டம் 20-வது ஸர்க்கம்) பிறகு விவாஹம் முடிந்து, ஸீதாபிராட்டியுடன் அயோத்யா பட்டணத்தில் சில காலம் எழுந்தருளியிருந்து, வநவாஸத்துக்குப் புறப்படுங்கால், கௌஸல்யா, 'தஶ ஸப்த ச வர்ஷாணி தவ ஜாதஸ்ய ராகவ' என்று சொல்லி யிருக்கின்றாள். (அயோத்யா காண்டம் 20-வது ஸர்க்கம்) அதனால் ஸ்வாமிக்கு அப்போது பதினேழு வயஸ் என்று ஏற்படுகின்றது. ஆரண்யகாண்டம் 38-வது ஸர்க்கத்தில் மாரீசன் வாக்யம், 'பாலோ த்வாதஶவர்ஷோऽயமக்ருதாஸ்த்ரஶ்ச ராகவ:' என்று, பன்னிரண்டு வயஸில் அஸ்த்ரவித்யை நன்றாகத் தெரியாத தஶையில் ராகவன், தன் விஷயத்தில் செய்ததை அவன் ராவணனுடன் சொன்னதாக ஏற்படுகிறது. ஆரண்யகாண்டம் 47-வது ஸர்க்கத்தில், "துஹிதா ஜநகஸ்யாஹம் மைதிலஸ்ய மஹாத்மந: । ஸீதா நாம்நாஸ்மி பத்ரம் தே ராமஸ்ய மஹிஷீ ப்ரியா । உஷித்வா த்வாதஶ ஸமா இக்ஷ்வாகூணாம் நிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ ॥" என்று, ஸீதா தான் விவாஹாநந்தரம் அயோத்தியில் 12 ஸம்வத்ஸரம் இருந்ததாகவும், பிறகு வநவாஸத்துக்கு எழுந்தருளினதாகவும் ஸாதித்தருளினார். இந்தப்படிக் கணக்குப் பார்த்தால், அக்காலம் சக்ரவர்த்தித் திருமகனுக்கு முப்பத்தியேழு வயஸ் நிறைந்து, முப்பத்தியெட்டாவது ஆரம்பித்திருக்கவேணும். மாரீசவாக்யப்படி, விஶ்வாமித்ரருடைய யாகரக்ஷண காலத்தில் 12 வயஸ். பிறகு 12 ஸம்வத்ஸரம் அயோத்யாவாஸம். பிராட்டி ராவணனுடன் ஸம்பாஷித்த காலத்தில், வநவாஸம் 13 வருஷமாயிற்று. கௌஸல்யா வசநப்படி 30-வயஸ் நடந்து 31-வது வயஸாகவேணும். இப்படியிருக்க ஆரண்யகாண்டம் 47-வது ஸர்க்கத்தில் பிராட்டி, "மம பர்தா மஹாதேஜா வயஸா பஞ்சவிம்ஶக: । அஷ்டாதஶ ஹி வர்ஷாணி மம ஜந்மநி கண்யதே ॥" என்றும் சொல்லியிருக்கின்றாள். இதனால் தன் பர்த்தாவுக்கு வநவாஸாரம்பத்தில் வயஸ் 25 என்றும், தனக்கு அப்போது வயஸ் 18 என்றும் ஏற்படுகின்றது. இதற்கு, அல்பபுத்தியுடைய அடியேனுக்கு ஸமாதாநம் ஏற்படாததால் தீர்க்கதர்சிகளாயும், வைஷ்ணவாக்ரேஸரர்களாயுமிருக்கிற பாகவதர்களுடைய ஸமாதாநத்தை அபேக்ஷிக்கிறேன்.

சோகத்தூர் கோபாலாசார்யர் தாஸன்

ஸ்ரீநிவாஸன்.

## II

கோயமுத்தூர், பீளமேடு-கா. எ. அப்பாய்நாயுடு அவர்களுக்கு:—

தங்கள் கடிதத்தில் கண்ட விஷயங்களைப் பார்த்தேன். கர்ணன், 'மத்ப்ராப்திகாம் மதிம்' என்று, மஹாபாரதம் சொல்வதால் கர்ணனுக்கு மோக்ஷமுண்டென்று ஏற்படுகின்றது. "தேஹாந்தே கர்ணஸ்ய நிஷ்க்ராந்தஸ்ய । தேஜஸ்ஸூர்யப்ரபம் விப்ராய விவேஶ" என்பதால்,

கர்ணன் ஶரீரத்தினின்றும் ஒரு தேஜஸ் வெளிப்பட்டு ஸூர்யனில் லயித்த தென்றும் விளங்குகின்றது. அந்த தேஜஸ் வ்யஸநத்துடன் ஸூர்யனிடம் லயித்ததாக நாம் எழுதினோமில்லை. வ்யஸநத்துடன் அஸ்தங்கதனுகின்ற ஆதித்யனிடம் சென்று லயித்ததாக எழுதினோம். "ஸம்தபகமண்டலு * * * ஜராஶோகம் ஸமுத்தீர்ணாக்ஷர:" என்று பாரதம் சொல்கின்றது. மஹாபாரதம் ப்ரமாணமெனும் நம்பிக்கை விலகும்படி யாம் எழுதியது இன்னதெனத் தெரியவில்லை. கர்ணனுடைய புண்ய கர்மங்கள் அவற்றிற்குரிய பலத்தைக் கொடுக்குமாகில், அந்தப் பலாநுபவத்தின் பொருட்டுக் கர்ணன் ஜந்மமெடுக்க வேண்டியிருக்கும். அவை பகவதர்ப்பணமான பிறகு தான் அவனுக்கு முக்தியோ, ஸூர்யனில் லயமோ ஸம்பவிக்கும். ஸூர்யன், ஒரு அதிகாரிதேவதையானபடியாலும், அந்த அதிகாரம் ஒருகால நியமத்தைப்பற்றி உண்டாயிருப்பதாலும், அவனுடைய அம்ஶபூதனை கர்ணனும், அந்த அதிகாரம் நடக்கவேண்டிய வரையில், அவனிடமே லயிக்க வேண்டும். அப்படி லயிக்காவிட்டால், அதிகாரியான ஸூர்யனுக்குக் குறைவு நிலைக்கும். இந்த லயத்தையே பரமகதியென்று சொல்லலாம். கர்ணஶரீராபிமாநியாய், ஸூர்யாம்ஶ விலக்ஷணனாய், ஒரு சேதநன் இருந்தால், பரமகதி அவனுக்குண்டாயிருக்கலாம். ப்ரமாணக்ரந்தம் அளித்தவரையில் ஸமாதாநம் ஏற்படுமேயன்றி, இவ்விஷயங்களில் யுக்திவாதங்கள் செய்யப் பொருந்தாது.

கீதாவாக்யம் வேதவிருத்த மென்பது வார்த்தையோடு முடிவுறும். பகவான் அவதரிப்பதில்லை யென்பதற்கு வேதம் ப்ரமாணம் கொடாது. பகவான் பிறப்பில்லாதவன் என்பதற்குப் பொருள், கர்மாயத்த ஶரீரமெடுக்க மாட்டான் என்பதே. "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" எனும் ஶ்ருதி அவதார ஶரீரங்களைத் தரிக்கின்றா னென்பதற்கு ப்ரமாணம். 'ஸ உ ஶ்ரேயாந் பவதி, ஜாயமாந:' என்பதும் ப்ரமாணம். வேதத்தையும் ப்ரஹ்மஸமாஜத்தினர் ஒப்புதல் இல்லையே. அவர் வீண் வார்த்தைகளை நம்ப வேண்டாம். சென்ற வருஷம் ஆடிமாஸம் பத்ராதிபரின் குறிப்புகளைப் பாருங்கள். அவ்விடம். ப்ரஹ்ம ஸமாஜத்தினர் அவதாரவிஷயமாகச் செய்யும் தூஷணங்களைப் பரிஹரித்தோம். அவர் மதம் ஆபாஸம் என்பதைப்பற்றி இந்த மாஸம் கிஞ்சித் எழுதுகின்றோம்.

பத்ராதிபர்.



III

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ பாஷ்யம் மூன்றாவது அத்யாயம், நாலாவது பாதத்தில், விதுராதிகரணத்தில், 'அந்தரா சாபி து தத்த்ருஷ்டே:' என்கிற ஸூத்ரபாஷ்யத்தில், அநாஶ்ரமிகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் உண்டா இல்லையாவென்று உபக்ரமித்து, அநாஶ்ரமிகளுக்கு ஆஶ்ரமாங்க தர்மாநுஷ்டாநமில்லை யாகையாலும், ப்ரஹ்மவித்யை கர்மயோகத்தை அங்கமாக உடையதாகையாலும், அநாஶ்ரமிகளுக்கு ப்ரஹ்மவித்யை அஸம்பாவிதமென்று பூர்வபக்ஷம் பண்ணிக்கொண்டு, "ரைக்வ வாசக்நவீ ஸம்வர்த்தப்ரப்ருதீநாம் அநாஶ்ரமிணாமபி ப்ரஹ்மவித்ப்ரதிஷ்டத்வம்", இத்யாதி வாக்யங்களினால், இவர்களுக்கும் ப்ரஹ்மவித்யை உண்டென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதிகரணஸாராவளியிலும், 'பீஷ்மாதௌ த்ருஷ்டமேதத்' என்றிருக்கிறது. ரங்கராமாநுஜ ஸ்வாமி அநுக்ரஹித்த ஶ்ருதப்ரகாஶிகா வ்யாக்யாநமான பாவப்ரகாஶிகையில், அக்நீந்தநாத்யதிகரணத்தில் "பீஷ்மஸ்து யதோக்த ஜாமதக்ந்யேந தாரஸம்பந்த நிவ்ருத்த்யநந்தரம் வீதராகத்வேந ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞயா பஶ்சாத் தாத நிவ்ருத்த்யநந்தரம் தாராணாம் யதோக்த ஸாங்கத்யாத் வஸிஷ்டேதி தேந யஜ்ஞாத்யநுஷ்டாநம்" என்றிருக்கிறது. மேற்படி க்ரந்தத்தினால் ஸ்ரீ பீஷ்மருக்குப் பத்நீ இருந்ததாகவும், அவர் யாகம் செய்ததாகவும் ஏற்படுகிறபடியால், பீஷ்மர் அநாஶ்ரமி என்கிற ஸ்ரீ பாஷ்ய அதிகரணஸாராவளி க்ரந்தங்களுக்கும், பாவப்ரகாஶிகைக்கும் விரோதம் இருக்கிறதுபோல், அடியேனைப்போன்ற மித ப்ராஜ்ஞர்களுக்குத் தோன்றுகிறபடியினால், இந்த ஸம்ஶயத்தை ஜ்ஞாதாக்களான ஆஸ்திகர்கள் பரிஹரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். ஆனால், ஸ்ரீ பீஷ்மர் ஸ்நாதகராயிருந்த காலத்தை உத்தேசித்து, ஸ்ரீ பாஷ்ய தேசிக திவ்யஸூக்திகள் பிறந்தனவென்றும், விவாஹிதரான பிறகு ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொண்டாரென்றும், பிறகு யாகாதிகளைப் பண்ணினாரென்றும் க்ரந்த விரோதத்தைப் பரிஹரிக்கலாமோ வென்றாலும், அது, அவருடைய ப்ராதாவான விசித்ரவீர்யனுடைய மரணாநந்தரம் வம்ஶவ்ருத்திக்காக நீர் விவாஹம் பண்ணிக்கொள்ளுமென்று ஸத்யவதி சொன்னதாக இருக்கும் பாரத வாக்யத்தோடு விரோதிக்கு மாகையால், உசிதமன்று. முன் க்ருததாரராய்ப் பிறகு தாரவியோகமடைந்து இருந்த பீஷ்மரை விவாஹம் பண்ணிக்கொள்ளச் சொன்னாள் என்பதற்கு உசிதப்ரமாணம் அடியேனுக்குத் தெரியவில்லை.

ஆடி மாஸம் 10௳
புத்தன்கோட்டகம்.

ஸ்ரீநிவாஸாய பூ:.

## IV

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம꞉.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ அழகியசிங்கர் திருநாட்டுக்கு எழுந்தருளின விஷயத்தைப் பற்றியும், திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதி ஸ்கீம் விஷயத்தைப் பற்றியும் அஹோபிலம் மடம் உயில் கேஸ் விஷயமாகவும், மேற்படி ஸபா கார்யதர்சியவர்களால் ப்ரசுரம் செய்யப்பட்டதைப் பார்த்தேன்.

ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ ஶடகோபமஹாதேசிகன், ஸ்ரீ ஶடகோபராமாநுஜ மஹாதேசிகன், இந்த ஸ்வாமிகள் காலத்தில், நடந்தபடிப் பின்னிட்டு ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு க்ரந்த காலக்ஷேபம் பண்ண ஸரியான ஆநுகூல்யம் இல்லாதபடியால் அவரவர்கள் இஷ்டப்ரகாரம் இதர ஸ்வாமிகளிடத்தில் ஆஶ்ரயித்து, ஸந்நிதி அந்வயமில்லாமல் விலகிப்போவதைப் பற்றி மிகவும் சோகிக்கவேண்டியிருக்கின்றது. மேலும் ஸந்நிதியில் சில ஸ்வாமிகள் முதலே ஸஞ்சாரம் எழுந்தருளாமல், ஸ்வதேசங்களில் இருந்துகொண்டு தூரதேச ஸம்ப்ரதாயஸ்தர்களை அநாதரவு பண்ணிவிட்டபடியால் ஸந்நிதியினுடைய ஶிஷ்யஸம்பத்தும் குறைவுபட்டது.

அடியேன் கொஞ்சகாலத்திற்கு முன் ஸ்ரீ அஹோபிலம் திவ்யதேச யாத்ரையாய்ப் போயிருந்தேன். மலையின்மேல் ஸந்நிதியில் ஆராதநமே யில்லாமல் ப்ரஹ்மோத்ஸவம் முடிந்தவுடன் திருக்காப்பைச் சாத்தியிருந்தது. ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு கீழ் அஹோபிலம் வந்து சேர்ந்தேன். அவ்விடத்திலிருந்த பூஜகரை விசாரித்ததில், அவர், ப்ரஹ்மோத்ஸவாநந்தரம் ஒரு பக்ஷம் வரையில் ஸந்நிதியின் திருக்காப்பை நீக்குகின்ற வழக்கம் இல்லையென்றும், அப்போது ப்ரஹ்மாதி தேவர்கள் பெருமாளுக்கு ஆராதநம் செய்கின்றார்கள் என்றும் சொன்னார். நம்முடைய தேசங்களில் ப்ரஹ்மோத்ஸவம் முடிந்தவுடன் நடக்கின்ற விடாயாற்றி உத்ஸவ ஸ்தாநத்தில் ஸ்ரீமத் அஹோபிலத்தில் திருக்காப்பைச் சாத்திவைப்பது வழக்கமெனும் தப்பு ஸமாதாநத்தைக் கேட்டு எனக்கு மனம் கலங்குகின்றது. இப்போது புது அழகியசிங்கர் ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளியிருக்கிறார். வடதேசங்களில் லக்ஷாதிகாரிகளான அநேக ரெட்டிமார்களும், ராஜாக்களும், ஸ்ரீ வைஷ்ணவ ஶிஷ்யர்களும் பஞ்சஸம்ஸ்கார மில்லாமல் வருத்தப்படுவதாக நேரில் தெரிந்துகொண்டேன். அநேக க்ராமங்களில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குச் சொந்தமான பூமிகள் அந்யாக்ராந்தமாய்ப் பராதீநமாய் விட்டதாகக் கேள்விப்படுகிறேன். கர்நூல் ஜில்லா கோயில் குண்ட்லா தாலூகா ஒய்யாலவாடா க்ராமத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குச் சொந்தமான ஏறக்குறைய 25 ஏகர் இனாம் நிலங்கள், முன்காலத்தில் ராஜாக்களால் ஸ்வாமிக்கு நித்யப்படி தீப அகண்டத்திற்காக விடப்பட்டு, இனாம் டைடில்டீட்டில் அந்த விஷயம் காணப்பட்டும் இருக்கிறது. அதைப் பார்த்து நான் மிகவும் வ்யஸநத்தை யடைந்து அந்த க்ராமத்துக்குப் போனேன். அங்கே முனுசீபு கர்ணம் இவர்களை விசாரித்ததில், அந்தப் பூமிகள் ஒரு பூஜாரி ஸ்வாதீநத்தி லிருப்பதாயும், அவற்றின் வரும்படிகளில் காலமேகம் ஸ்வாமிக்குச் சேருகின்றதில்லை யென்றும் தெரியவந்தது. இதே ரீதியாய் இன்னும் பல க்ராமங்களிலும் ஸ்வாமிக்குப் பாத்யப்பட்ட இனாம் பூமிகள் பராதீநமாய்ப் போய்விட்டன. ஶிஷ்யஸம்பத்தும், உபபத்யாதிக்யமும் தான் ஸ்ரீ அஹோபிலமடத்துக்கு க்யாதியை உண்டுபண்ணின. இவற்றுள் ஶிஷ்யஸம்பத்து நாளடைவில் குறைவுபட்டது. ஸொத்துக்கள் ஸரியாகப் பாதுகாக்கப்படாமல் அவையும் மடத்துக்குக் குறைந்துகொண்டு வருகின்றன. இதற்கு முக்ய காரணம், வைதிகத்திலும் லௌகிகத்திலும் விசேஷ ஸாமர்த்யம் உள்ள பெரியமநுஷ்யர்களைத் தக்க சம்பளம் கொடுத்தாவது மடத்து ஏஜெண்டாக ஏற்படுத்தாதது தான். இப்போதாவது தகுந்த ஏஜெண்டுகளை நியமித்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமிக்குச் சொந்தமா யிருக்கிற ஸகல ஸொத்துக்களுக்கும், அந்தந்த க்ராம ரிஜிஸ்டர்களைப் பார்த்துக் குறிப்பெடுத்து, ஒரு ஜாப்தா தயார் செய்துகொண்டு, மேற்படி ஸொத்துக்களை ஸ்வாதீநப்படுத்திக்கொள்ள ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் புது அழகியசிங்கர் ஸரியான ஏற்பாடு செய்வர் என்று ப்ரார்த்திக்கிறேன்.



கர்நூல் ஜில்லா கலெக்டர் துரையவர்கள் ஸ்ரீமதஹோபிலம் தேவஸ்தாநம் சீர்திருத்தல் விஷயமாய் மிகுந்த ஶ்ரத்தை எடுத்துக்கொண்டு நேரில் போய்ப் பார்த்து, இஞ்சினீர் இலாகா மூலமாக அவஶ்யம் செய்யவேண்டிய மராமத்து வேலைகளைப்பற்றி மதிப்புச்சிட்டு தயார்செய்ய உத்தரவு செய்திருக்கிறதாகவும், அதன் மொத்த தொகையை அழகியசிங்கர் ஸர்க்கார் ஸ்வாதீநத்தில் வைத்து வேலை நடத்தவேண்டியதென்றும், அப்படிச் செய்யத் தவறினால் தேவஸ்தாநம் இனாம் வகைராக்களை மாற்றிவிடுவதாக அழகியசிங்கருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறதாகவும் கேள்விப்பட்டேன். இதற்கு முக்ய காரணம், நம்முடைய ஶிஷ்யஸபையார் சென்ற ஸம்வத்ஸரம் அஹோபிலத்தில் சேர்ந்து நடத்திய மஹாஸங்கத்தின் ப்ரயத்நமென்று எண்ணுகிறேன். அந்த ப்ரயத்நமின்றி இது நடக்காது. இப்போது புது அழகியசிங்கர், கர்நூல் கடப்பை ஜில்லாக்களில் ஒரு ஸம்வத்ஸரகாலம் ஸஞ்சாரம் பண்ணினால், மேற்படி ஸந்நிதி மராமத்துக்காக இரண்டு மூன்று லக்ஷம்

ரூபாய் அதிக ஸுலபமாகச் சேகரிக்கக்கூடும். அதைக்கொண்டு அந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்யலாம். சென்ற ஸம்வத்ஸரம் மடத்து ஏஜெண்டு ஈ. குப்புஸ்வாமி அய்யங்கார் மேற்படி தேவஸ்தாந விஷயமாகப் போட்ட ஜீர்ணோத்தாரண நோட்டீஸ்படி, ஸரியான ப்ரயத்நம் செய்யாமல் விட்டுவிட்டபடியால், இப்போது ஸர்க்கார் த்வாரா மராமத்துகள் நடத்தும்படி ஏற்பட்டது. அந்த கர்நூல் ஜில்லா வாஸிகளான அநேக ப்ரபுக்கள் திருவெவ்வுளூர் வீரராகவன் ஸந்நிதிக்கு ஏற்பட்ட ஸ்கீம் மாதிரியாக, அஹோபிலம் ஸந்நிதிக்கும் ஒரு ஸ்கீம் ஏற்படவேண்டிய ப்ரயத்நங்களை யோசிக்கின்றதாகக் கேள்விப்படுகின்றேன். முன் அழகியசிங்கர் காலத்தில், அவர் அநேக வ்யவஹாரங்களுக்கு இடங்கொடுத்த மாதிரி, இப்போதிய அழகியசிங்கர் இடங்கொடாமல், அஹோபிலம் தேவஸ்தாநம் ப்ரஹ்ம உத்ஸவத்தில் வரும் குத்தகைத் தொகைகளை ஸ்வாமியினுடைய நித்ய ஆராதநத்துக்கு உபயோகப்படுத்தும்படி ப்ரார்த்திக்கிறேன்.

திருவெவ்வுளூர் தேவஸ்தாநம் ஸ்கீம் வ்யாஜ்யம் ஒருவாறாக முடிந்தது. அப்படி முடியாமலும், வாதிகள் அதற்கு ஒப்புக்கொள்ளாமலும் வ்யவஹாரம் விசாரணைக்கு வந்திருந்தால், மேற்படி தேவஸ்தாநம் தர்மகர்த்தாக்களும், அவர்களது ஏஜண்டுகளும், அஜாக்ரதையினாலும், தெரிந்தும், மேற்படி ஸந்நிதிக்கு உண்டாக்கிய ஏராளமான நஷ்டங்கள் ஸர்க்கார் த்வாரா மேற்படி தேவஸ்தாநத்துக்கு மடத்தினின்று வஸூலிக்க நேரிட்டிருக்கும். இப்படி நேரிட்ட நஷ்டங்களுக்குக் காரணம், அழகியசிங்கர்கள் தங்களுடைய பூர்வாச்ரம ஸம்பந்திகளை அந்தப் பெரிய தேவஸ்தாநம் விசாரணைக்கு நியமித்ததும், அவர்கள் மேல் தாங்கள் யாதொரு மேல்விசாரணை செய்யாமல் இருந்ததும் தான். முன் அழகியசிங்கரால் தம்முடைய பூர்வாச்ரம மாப்பிள்ளை, காளி வீரராகவய்யங்கார் என்பவர், மேற்படி தேவஸ்தாநம் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டனர். அவர் இறந்துபோகையில், அவர் வைத்திருந்த கணக்குப்படி, தேவஸ்தாந சிட்டாவில் கையிருப்பாகக் காட்டிய தொகை ஸுமார் ரூபாய் ஆயிரம். அதன் பிறகு தேவஸ்தாநத்தை ஒப்புக்கொண்ட மடத்து ஏஜெண்டு, அந்தத் தொகையை அது முதல் ஒரு வருஷமாகியும், நாளது வரையில் தேவஸ்தாநத்துக்குச் செலுத்தவில்லை. மேற்படி தேவஸ்தாநம் ச்ரோத்ரியம் புங்கத்தூர் க்ராமத்தில் நாளது வருஷம் புதியதாய் விதிக்கப்பட்ட இரண்டாம்போகம் தண்ணீர்தீர்வையை நிவர்த்தித்துக்கொள்ள ஸரியான ப்ரயத்நமும் அவர் செய்யவில்லை. மேற்படி தேவஸ்தாநத்துக்குச் சொந்தமான ஸந்நிதிவீதி முதலான புறம்போக்கு ஸ்தலங்களைப்பற்றி வேண்டிய வ்யவஹாரமும் அவர் நடத்தாமல், அதைப்பற்றிக் கோர்ட்டிலிருந்த கேஸை



யும தள்ளிக்கொண்டுவிட்டார். முன் ஏஜெண்டு தேவஸ்தாநத்தின் அநேக கைங்கர்யங்களை நீண்டகாலம் பூர்த்திசெய்யாமல் துறைவாய்விட்டார். அவை அப்படியே இருக்கின்றன. பூஸ்திதிகளாலும், அமாவாஸ்யைகளிலும் தேவஸ்தாநத்துக்கு வரும்படிகள் விசேஷமாக வருகின்றன. அப்படியிருக்க, இந்த ஏஜெண்டுகள் தேவஸ்தாநத்துக்கு எப்போதும் ‘கடன் கடன்’ என்று முறையிடுகின்றார்கள். இந்த விஷயங்களைப்பற்றி இப்போது இருக்கும் அழகியசிங்கராவது பராமர்சித்து அவற்றைச் சீர்திருத்தவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

முன் திருக்குடந்தை அழகியசிங்கர் காலத்தில், யாதொரு சம்பளமில்லாமல், கைங்கர்யமே ப்ரதாநமென்று, ஏஜெண்டு ஸ்தாநத்தை வகித்த ஹைகோர்ட்டுவக்கீல் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸந்நிதி வரும்படிகளினின்று மிகுதி செய்து, அதற்கு ஸ்திரமான ஆஸ்திகளை ஸம்பாதித்து வைத்தார். அப்படிச் செய்தால் தான் தேவஸ்தாந கார்யம் ஸரியாக நடக்கும். ஜநங்களுக்கு வரவர பக்தி ச்ரத்தை குறைகின்றன. ஆதலால் கேவலம் அமாவாஸ்யை வரும்படியை நம்பக்கூடாது. பூஸ்திதியை வ்ருத்திபண்ணினால் தான் தேவஸ்தாநத்துக்குப் பயமில்லை. தேவஸ்தாந விசாரணையைத் தக்கபடி நிர்வஹிக்கத் திறமற்றவரை ஏஜெண்டுகளாய் ஏற்படுத்துவதும், அவர்களுக்குத் தேவஸ்தாந த்ரவ்யத்தினின்று சம்பளம் கொடுக்கிறதெனும் புது வழக்கமும், இவ்விதமாய்த் தேவஸ்தாநத்துக்குப் பல நஷ்டங்களை உண்டுபண்ணுகிறதும், இந்த ஆஸ்திகளுக்கு மிகவும் க்லேசத்தை உண்டுபண்ணுகின்றன. இவற்றை நிவர்த்திக்க எந்த மஹான் ஏற்படுவனோ வென்று ஸ்ரீ வீரராகவனை அநவரதம் ப்ரார்த்திக்கிறேன்.

மேற்படி ஸ்கீம் வ்யாஜ்யத்தில் வாதிகள் இரண்டு ஸந்நிதி சிஷ்யர்களை ஏஜெண்டுடன் திருவாபரண சாவிகள் முதலானவற்றை வைத்துக்கொள்ளும்படி கோர்ட்டார் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, மடத்து ஏஜெண்டு குப்புஸ்வாமி அய்யங்கார் அதிக ச்ரமப்பட்டு அந்தத் தொழிலுக்கு எந்த மதஸ்தரையாவது ஏற்பாடு செய்யலாமென்று ஸ்டேட்மெண்டு கொடுத்து அதே மாதிரியாகக் கோர்ட்டில் எந்த ஹிந்துவாவது நியமிக்கப்படலாம் என்று தீர்மாநம் ஆயிற்று.

உயில் கேஸைப்பற்றிப் போன ஸம்வத்ஸரம் வேதாந்த தீபிகையில், பிராது வகைராக்கள் அச்சிடப்பட்டு எல்லா சிஷ்யர்களும் பார்க்க அநுகூலமாயிருந்தது. சிஷ்யர் என்பவரிடத்தில் வாதிகள் எதிர்பார்த்தபடி ஸஹாயம் பெறாமல் போனது சோகிக்கத்தக்கதே. ஆகிலும் எந்த நிபந்தனைகள் பேரில் இந்த வ்யாஜ்யம் உத்ட்ரா (Withdraw) செய்யப்பட்டதோ அவற்றை எல்லா சிஷ்யர்களும் தெரிந்துகொள்ளும்படித் தெரிவிக்கவேண்டுமென்று ஸபா கார்யதர்சியை ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸிம்ஹாஸந தாஸன்,

## V

ஐரோப்பா யுத்தம் - 1915 - வருஷம் ஆகஸ்டு மாஸம் 4 - ம் தேதி நம்முடைய ராஜாங்கத்தார் ஜர்மனி தேசத்து ராஜாங்கத்தாருடன் யுத்தத்திற் காரம்பித்து ஒரு வருஷம் முடிவாகின்றது. அன்றையதினம் பூமியெங்கும் மிகவும் விஸ்தரித்த ப்ரிடிஷ் ராஜ்யத்தின் பல பிரிவுகளிலும் பட்டணங்கள் தோறும் ப்ரஜைகள் கூடி, நம்முடைய ராஜாங்கத்தவர் தர்மரக்ஷணத்தின் பொருட்டு ஆரம்பித்த யுத்தமானது அவர்க்கு ஜெயத்துடன் முடிவு பெறும் வரையில், அவர் அதை விடாமல் நடத்தவேண்டுமென்று தீர்மாநம் அளித்தார்கள்.

நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன் ப்ரஷ்ஷியா தேசத்துக்கும், அக்காலம் ஸேனையில் பலத்ததென்று யாவரும் எண்ணிய ப்ராஞ்சு தேசத்துக்கும் யுத்தம் நடந்தது. அப்போது யுத்த ஸந்நாஹத்தில் சிறந்த ப்ரஷ்ஷியா தேசமானது, ஸந்நாஹமற்றிருந்த ப்ராஞ்சு தேசத்தை எளிதில் தோல்வி யடைவித்தது. அக்காலம்தான் ஜர்மனியானது ஐக்யப்பட்டு, ப்ரஷ்ஷியாவின் ராஜாவான முதலாவது வில்லியம் என்பவர் ஜர்மனி சக்ரவர்த்தியாக ஏற்பட்டார். அவருடைய பௌத்ரன் தத்கால ஜர்மன் சக்ரவர்த்தி.

ஜர்மனி தேசத்தவர்கள் அவருடைய ராஜாங்கத்தவர்க்கு ஐக்யப்பட்டுப் பலவருஷங்களாக ப்ரக்ருத யுத்தத்திற்கு ப்ரயத்நம் செய்து கொண்டிருந்தனர். அதற்குத் தக்க காலம் ஸம்பவித்ததென்றும், அதில் தமக்கு ஜெயம் நிச்சயமென்றும், த்ருடமான எண்ணம் உதித்த பின்பு தான் ஜர்மானியர் இந்த யுத்தத்தைத் தொடங்கினார்கள். பெல்ஜியம் தேசத்தைக் காரணமின்றிப் படையெடுத்தார்கள். அது ஒரு சிற்றரசு. அதைப் பார் ஆக்ரமிக்கக்கூடாதென்று ஜர்மனி, ப்ராஞ்சு, ப்ரிடிஷ் முதலான ராஜாங்கத்தார் அதற்கு அபயப்ரதாநம் பண்ணியிருக்கின்றனர். ஆதலால் ஜர்மனி அந்த ப்ரதிஜ்ஞையைக் கடந்து அந்நாட்டைத் தானே கவர்ந்தது. ஆதலாலன்றோ ப்ரிடிஷ் ராஜாங்கத்தார் இந்த யுத்தத்தில் அந்வயிக்க நேர்ந்தது.

இப்போது பெல்ஜியம் தேசத்தில் சற்றேறக்குறைய முழுவதும் ப்ராஞ்சு தேசத்தின் வடகீழ்பாகமும் ஜர்மானியர் வசமாகச் சென்ற பத்து மாதங்களா யிருக்கின்றன. ரஷ்ஷியா தேசத்தின் போலண்டு நாட்டின் சிலபாகமும் அவ்வளவு காலமாக ஜர்மானியர் வசத்திலிருக்கின்றது. இதற்குப் பதிலாக ரஷ்ஷியா தேசத்தார் ஜர்மனியுடன் சேர்ந்த ஆஸ்ட்ரியா தேசத்தின் ஓர் பாகமாகிய கலிஷியா எனும் பிரிவைப் பற்றியிருந்தனர். சென்ற இரண்டு மாஸத்துக்குள்ளாக ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசத்தார்கள் ரஷ்ஷியா தேசத்தாரிடமிருந்து கலிஷியாவைக் கைப்பற்றினதுமன்றி ரஷ்ஷியாவைச் சார்ந்த போலண்டு நாட்டின் மிகுந்த பாகத்தையும் கவர்ந்தார்கள். அந்நாட்டு ராஜதாநியான வார்ஸா நகரமும் அவர்க்குள்ளாயது. இதனுடன் நிற்காமல் ரஷ்ஷியா தேசத்தார் ஸேனையானது ஜர்மானியர் ஸேனைக்கு முன் பின்னிட்டுக்கொண்டே யிருக்கின்றது. மேல் பாகத்திலோ சென்ற



பத்து மாதமாக உபயத்ரார்களுடைய ஸேனைகள் அநேகமாக நின்ற விடத்திலேயே நின்றுகொண்டிருக்கின்றன.

ஸமுத்ரம் முழுவதிலும் ஜர்மானியருடைய ஸேனைக்கப்பல்களும் அவருடைய வர்த்தகக் கப்பல்களும் எங்கும் நிற்காமலிருக்க, ப்ரிடிஷ் ஸேனைக் கப்பல்கள் செய்துவிட்டன. ப்ரிடிஷ் வர்த்தகக் கப்பல்களும் அவர்களுடைய மித்ரர்களுடைய கப்பல்களும் ஸமுத்ரத்தில் இஷ்டப்படி ஸஞ்சரிக்கின்றன. ஜலத்தின் கீழ் ஸஞ்சரிக்கும் சிறு கப்பல்கள், ஸப்மரைன் எனும் பெயர் கொண்டவைகளாய் எல்லா ராஜாங்கத்தார்க்கும் உண்டு. இவற்றின் ஸஞ்சாரம் ஸமுத்திரத்தின்மேலே ப்ரயாணம் செய்பவர்க்குத் தெரியாது. படைக்கப்பலை ஸப்மரைன் கப்பல்கள் அண்டமாட்டா. ஜர்மானியர் ஸப்மரைன் கப்பல்கள் யார்க்கும் தெரியாமல் ஸமுத்ரங்களில் பாவி ஜநங்கள் ஸஞ்சாரத்துக்கும் வர்த்தகத்துக்கும் உதவுகின்ற பல தேசத்தாருடைய கப்பல்களைக் கண்டவிடங்களில் நாசம் செய்து ஸமுத்ரத்தில் மூழ்கும்படிசெய்து, ஜநங்களைக் கொல்லுகின்றன. இவ்வளவன்றி ஜர்மானியர்க்கு ஸமுத்ரங்களில் யோக்யதை யுண்டாகவில்லை.

இதர கண்டங்களில் ஜர்மானியர் பற்றியிருந்த காலனி எனும் நாடுகள், ப்ரிடிஷ் ராஜாங்கத்தாராலும் அவர்களுடைய மித்ரர்களாலும் பிடிக்கப்பட்டன. யுத்தத்தின் தத்காலஸ்திதி இவ்வண்ண மிருக்கின்றது.

ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசமிரண்டிற்கும் ஜநத்தொகை 12 கோடி. ரஷியா ஒன்றிற்கு மாத்ரம் ஜநத்தொகை 12 கோடி. ப்ரிடிஷ் ராஜ்யம் ஐரோப்பா கண்டத்தில் மட்டும் 5 கோடி ஜநத்தொகை கொண்டது. ப்ராஞ்சில் 4 கோடி ஜநங்களும், இடலி தேசத்தில் 4 கோடி ஜநங்களும் இருக்கின்றன. இப்படி ஜர்மனி ஆஸ்ட்ரியாவைக் காட்டிலும் ப்ரிடிஷ் ராஜ்யத்துக்கும் அவர் துணைவர்க்கும் இரட்டிப்பு ஜநங்கள் இருந்தும், ஐரோப்பா யுத்தத்தில் இது வரையிலும் ஜர்மனியார்க்கு அநுகூலமா யிருப்பானேன்?

இதற்கு ஸமாதாநம் என்னவென்றால், ஜர்மனியார் பல வருஷங்களாய் யுத்தத்திற்கு ஸர்வமுயற்சியும் செய்தனர். அவர் அவ்வண்ணம் செய்கின்றாரெனும் ஸந்தேஹத்தைக் கொஞ்சமும் கொள்ளாமல் இதர தேசத்து ராஜாங்கத்தார் இருந்துவிட்டார்கள். ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசங்களில் இருக்கும் எல்லா ஆண்பிள்ளைகளும் யுத்தத்தொழிலில் பயிற்சி யடைந்தார்கள். இந்த யுத்தத்திற்கு வேண்டிய ஸர்வ ஸாமக்ரிகளும் ஜர்மானியரால் அநேக வருஷங்களாய்ச் சேகரிக்கப்பட்டன. அவர்கள் கப்பல்படையானது நமது ராஜாங்கத்தார் படைக்கு ஸரியாகவில்லை. ஆதலால் அவர்கள் எதிர்பார்த்த யுத்தத்தில் அதைப் பந்தோபஸ்து செய்வதற்காக அவர்கள் தேசத்தின் வடக்கேயுள்ள வடகடலுக்கும் பால்டிக் கடலுக்கும் ஸம்பந்தமுண்டாக, நாட்டுக்குள் கீல் கால்வாய் என்றொரு கால்வாயை அபரிமிதமான பொருள் செலவிட்டு வெட்டினார்கள். அதற்குள் அவருடைய போர்க்கப்பல்கள் அபாய

பயமின்றி நிற்கின்றன. கால்வாயின் இருகோடியிலும் பெரிய பீரங்கிகள் ஸ்தாபித்த கோட்டைகள் நம்மிராஜாங்கத்தார் கப்பல்கள் அவ்விடங்களை நெருங்கவொட்டாமல் தடுக்கின்றன. இந்தக் கால்வாய் வேலை முடிந்தவுடன் ஜர்மானியர் சண்டைக்காரம்பித்தனர்.

சண்டையாரம்பத்தில் நம்மிராஜங்கத்தாரும் அவர் மித்ரர்களும் ஸேனைத் தொகையில் கூட பகைவரைக்காட்டிலும் குறைந்திருந்தனர். இப்போது ஸேனைத்தொகையில் பகைவரைக் காட்டிலும் இவர் மிக்கவரே. ஆனால் பீரங்கிகளிலும் மற்ற ஆயுதங்களிலும் இவர் பகைவரைக் காட்டிலும் இன்னும் குறைந்திருக்கின்றனராதலால் ஐரோப்பா கண்டத்தில் பகைவரே மிகுந்து நிற்கின்றார்கள். பகைவருடைய ஆயுதங்களின் ஆதிக்யத்தை யோசிக்க யாவர்க்கும் விஸ்மயம் உண்டாகின்றது. ஆதலால் நம்மிராஜாங்கத்தவர்களும் அவர் துணைவர்களும் தம்முடைய ஆயுதங்களை வ்ருத்திசெய்ய மிகவும் ப்ரயத்நிக்கின்றார்கள். இவர்க்கும் அவர்போல் அஸ்த்ரபலம் ஏற்படும் வரையில் இவர்கள் தங்களுடைய ஸேனைகளைப் பகைவர் பீரங்கிகளுக்கு வீணாக இரையாக்கக் கூடாதென்று, ஜர்மனியின் மேல்புறத்தில் இருந்த விடத்தை விட்டு முன்னிடாமல் இருக்கின்றார்கள். ஜர்மனியின் கீழ்ப்புறம் சண்டைசெய்யும் ரஷ்ஷியா தேசத்தார் தங்கள்ஸேனையை ரக்ஷித்துக்கொண்டு தமது போலண்டுநாட்டையும் பறிகொடுத்துப் பின்னிடுகின்றார்கள்.

நம்மவர்களும் தங்களுடைய அதிகமான ஜநத்தொகைக்குப் பொருந்த ஸேனைத்தொகையை வ்ருத்திசெய்கின்றனர். ஆதலால் இருபுறத்திலும்ஸேனையின் நஷ்டம் ஸமாநமாய் உண்டாய்க்கொண்டிருந்தாலும், முடிவில் ஸேனையில் ஆதிக்யம் நமது பக்கத்தார்க்கு ஏற்படும். ஆயுதங்களும் பகைவர்க்குப் போல் இவர்க்கும் காலக்ரமேண ஏற்படும். ஸர்வ தேசங்களினின்றும் ஸாமக்ரிகள் இவர்க்குக் கிடைக்கின்றன. ஜர்மானியர்க்கு அவ்வண்ணம் இல்லை. செல்வத்திலும் இவர் பெருத்தவர். ஆதலால் இவர் காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கின்றனர். ஜர்மானியரோ சீக்ரமாக ஜெயத்தை அபேக்ஷிக்கின்றனர்: அதாவது, நம் பக்கத்தவருடைய ஸேனைகளை நாசம்செய்ய முயல்கின்றனர். அந்த எண்ணத்திற்கு நமது பக்கத்தார் இடங்கொடாது ப்ராப்தகாலம் வரையில் எப்படியாவது நமதுஸேனைகளை ரக்ஷிக்கவேண்டுமென்று நிச்சயம் செய்திருக்கிறார்கள்.

ஆதலால், நாம் இன்னும் பொறுக்கவேண்டும். ஜர்மானியர் அதர்மத்தை முன்னிட்டுக் காரணமின்றிச் சண்டைக்காரம்பித்தார். நம் ராஜங்கத்தாரும் அவர் துணைவர்களும் தர்ம ரக்ஷணத்தின் பொருட்டும், ஸ்வரக்ஷணத்தின் பொருட்டும் யுத்தம் செய்கின்றனர். என்றும் தர்மத்தையே ரக்ஷித்த பகவான் அவர்கள் பக்கத்திலிருக்கவேண்டும் என்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ௵ ஆவணி௴ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆவணி மாஸம்.** இந்த ப்ரபஞ்சத்துக்கு ஶ்ராவணமாஸம் பரமபாவநத்தைத் தந்தது. கீதையைப் படித்துப் பின் ஏனையோர் மதக்ரந்தங்களையும் படித்துக் கீதாம்ருதம் அளித்தவனைப் போல் மநுஷ்ய லோகத்தில் சரீரமெடுத்த மற்றொருவனை நினைக்கற்பாலதோ? நினைப்பாருளர். உளரேல் அவர் புத்தி பயன்பட்டதன்று. எம்மட்டுந்தான் மர்த்யன் மர்த்யர்க்கு உதவுவான்? அம்ருதனை அம்ருதப்ரதன் அருளின்றி மர்த்யன் அம்ருதனாகவொண்ணுமோ? சேதநன் அசேதநங்களுக்கு உட்பட்டுத் துக்காநுபவம் செய்கையில், “இவ்வண்ணம் யானும் மற்றோரும் ஏன் பிறந்தோம்? ஏன் வருந்துகின்றோம்?” என நினைத்தல் விடாது. அசேதநம் உளதென்றால், சேதநன் அறியத்தான் அது உளது. அதன் அஸ்தித்வத்தை நிலையாக வெண்ணி, அதன் விஜ்ஞாதாவை இறப்பொடும் நசிப்பதாக வெண்ணுவோர் உலகத்துக்கு நல்வழி காட்டுவோர் ஆவரோ? “விஜ்ஞாதா

நசிப்பனோ? நசியானோ? யாமது அறியவல்லோமல்லோம். இவ்
கிருந்து ஸுகப்படும் வழி தேடுவோம்" என்பார் மிகுந்த இவ்வுலகு.
இதனால் நமது முடிவென்னென்றால், லோகஸங்க்ரஹத்துக்காக
வாயினால் மாத்ரம் தமது ஆத்மாக்களையும், அவற்றின் ஸ்வாமியை
யும் ஒப்புக்கொண்டு, ஒழுக்கத்தால் அவ்விச்வாஸ மற்றவரென
நின்றவரை அவ்வகுப்பில் தான் சேர்க்கவொண்ணும். இங்கு
ஸுகப்படும் வழியைத் தேடாதவர் ஆயிரத்தி லொருவர் உண்
டோ? இவர், பரமனை யடிபணிந்து சிற்றின்ப மிழந்தா லென்செய்
வோ மெனப் பயந்த கற்றறிமூடர் மிகுகின்ற காலமிது. இவர்
கண்களுக்கு முன்னம் கண்ணன் அகலாமல் நின்றாலொழிய
அவனை அவர் நம்பார். மநுஷ்யர்க்கு ஐஹிக ஸுகங்களைத் தேடும்
போதமும் வேண்டுமோ? அதைத் தேடுதல் அவர் ஸ்வபாவத்தி
லமைந்ததன்றோ? உலகமெங்கும் ஒருவர்க்கொருவர் உதவிக்
கொண்டு, யாவரும் பசியாமல் வேண்டிய அளவு சுவைத்த உண்டி
அருந்தவும், சரீரங்களில் ரோகமின்றி வன்மை பெருகவும், ஸ்த்ரீ
புமான் சேர்க்கையால் உண்டாகும் ச்ருங்காரஸுகம் சக்தியுள்ள
வரையில் அநுபவிக்கவும், கண்ணுக்கேற்ற ஆடைகளும் அணிக
ளும் இயன்றமட்டும் தரித்து ஸந்தோஷிக்கவும், வேடிக்கையாய்க்
கூடவும், பேசவும், சிரிக்கவும், பாடவும், ஆடவும், இவ்வுலகம்
பரிணமிக்கவேண்டுமென எண்ணங்கொண்ட நம்மவர்க்கு, மர்த்
யர் தன்மை மாறுபடாதென்றும், இவ்வித முயற்சிகளை உலகத்
தோர் விடமாட்டாரென்றும், அவற்றின் இன்றியமையாத முடிவை
ஐரோப்பாவின் போர்க்களங்களில் பாரீரெனவும் சொல்கின்றோம்.
"பரலோகத்தை நாம் மறுத்திலோம்; பரலோகமென இவ்வுல
கத்தைச் செய்ய முயல்வோம்" என்பாரு முண்டு. ஸசரீரர்க
ளுடைய இவ்வுலகம் அசரீரர்களுடைய அவ்வுலகமென எவ்வண்
ணம் ஆகும்? அங்கும் முக்தர் சரீரவான்க ளாகின்றாரெனில்,
அது கர்மவச்ய சரீரமன்று; இச்சையால் க்ரஹிக்கத்தக்கது.
ஆதலால், இவ்வுலகில் ராஜதர்மமாக ஏற்பட்டதும் ஜந்மம்,வ்ருத்தி,
ஜரை, மரணம் முதலிய விகாரங்களுக் குள்ளடங்கிய சரீரவான்க
ளான ப்ரஜைகளின் க்ஷேமத்தைப் பெருக்குவதுமான முயற்சி
கள் ராஜாங்கத்தாராலும், ஏனையோராலும் செய்யப்படுவதை
நாம் நிந்திக்கின்றோமில்லை. ஆனால் இவற்றை எக்காலும் வாயி
னால் பாடி மனத்தினால் சிந்தித்துக்கொண்டு, மநோவாக்குகளின்



வ்யாபாரங்களினின்று, மாயனை மன்னும் வடமதுரைமைந்தனைத்
தூயப்பெருநீர் யமுனைத்துறைவனை ஒழித்தல் ச்ரேயஸ்கரமோ?
ஆதலால் ஆழ்வார் பாசுரத்தை நினைத்தல் வேண்டும்.

"இன்றுசாதல் நின்றுசாதல் (இவை) அன்றி யாரும் வைய
கத்து, ஒன்றி நின்று (அதாவது நிலைத்து) வாழ்தலின்மை கண்டு
நீச ரென்கொலோ, அன்று பாரளந்த பாதபோதை (அதாவது,
திருவடித்தாமரையை,) யொன்றி வானின்மேல், சென்று சென்று
தேவராய் (அதாவது நித்யஸூரிகளால்,) இருக்கிலாத வண்
ணமே"?

இப்படி நாம் நினைக்கப்பெற்றால், குலசேகரன் சொல் நன்கு
மனம்படும். அதெங்ஙனமென்றால்,

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந் தன்னொடுங் கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! வென் றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே."

"மார னார்வரி வெஞ்சிலைக் காட்செயும்
பாரி னாரொடுங் கூடுவ தில்லையான்
ஆர மார்வ னரங்க னனந்தன் நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே
உண்டி யேயுடை யேயுகந் தோடுமிம்
மண்ட லத்தொடுங் கூடுவ தில்லையான்
அண்ட வாணன ரங்கன்வன் பேய்முலை
உண்ட வாயன்றன் உன்மத்தன் காண்மினே".

இங்ஙனம், பகவானிடம் ப்ரேமைகொண்டு நடத்தலால் பித்
தன் போன்றும், உன்மத்தன் போன்றும், அந்ய சித்தமுடையவ
ராய் ஸர்வேச்வரனைப் பற்றினார் மஹாத்மக்கள். முன் ஆத்ம
சௌர்யம் செய்தவராயினும்,

'[illegible]
[illegible]
[illegible]'

எனும் வண்ணம், பழைய மார்க்கத்தைத் துறந்து, பரமனை நம்பி,
அவன் பாதங்களில் சரணம் புகுந்தவரை, அவன் தோஷமற்றவ

ராக்குவனன்றே? ஆதலால் கலியனும், (முன்காலம்) “கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன் கண்டவா திரிதந்தே னேலும், (இப்போது) தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன் சிக்கெனத் திருவருள் பெற்றேன், உள்ளெலா முருகிக் குரல் தழுத் தொழிந்தேன் உடம்பெலாங் கண்ணநீர் சோர, நள்ளிருளளவும் பகலும் நான் அழைப்பன் நாராயணவென்னும் நாமம்” என்றருளிச் செய்தாரிறே.

இத்தகைய பக்தியெனும் மஹாநதியை நமது நாடெல்லாம் பெருகியோட அளித்த மாதவன் திருவவதாரத்தைக் கொண்டது இந்த ஶ்ராவணமாஸம். தேவகியும் வஸுதேவரும் பக்திசெய்தபடி யென்ன, யசோதை பக்திசெய்தபடி யென்ன, ஆய்ச்சியர் மனமுருகிக்கொண்ட காதலென்ன, அர்ஜுனன் பண்ணின ஸ்நேகமென்ன, பீஷ்மர், விதுரர் முதலானோர் கொண்ட பக்திரூபமான ஜ்ஞாநமென்ன, உத்தவர், அக்ரூரர் இவர்கள் செய்த பக்தியென்ன, வேதவ்யாஸர், ஶுகர் இவர்கள் பண்ணின ஸாக்ஷாத்காரமென்ன, ஆழ்வார்களுடைய விவித அத்புதமான அநுபவமென்ன, கௌராங்கன் முதலான பக்தஸமாஜத்தாரின் ப்ரேமையென்ன, இவ்வளவுக்கும் இடங்கொடுத்து, இன்னும் எவ்வளவுக்கும் எட்டாத மஹத்வத்தை யணிந்த எம்பெருமான் அவதாரத்தையும் திவ்ய சேஷ்டிதங்களையும் உன்னுத கன்னெஞ்சரும் உளரென்றால், ஸிதையாயும், அஸிதையாயும், ரக்தையாயும், தன் வலையில் சிக்கிய ஜீவன்களுக்குச் சிற்றின்பங்களைக் கறக்கின்றவளுமான அஜையினுடைய ப்ரபாவம் அது. அதனால்தான் ‘பக்த்யா த்வநந்யயா’ என்றருளிச்செய்தனன். பகவானை அடையும் மார்க்கம் ஒன்றன்று. மநுஷ்யர் ஸ்வபாவம் பேதிக்கும் வண்ணம் அதுவும் பேதித்து நிற்கும். அதனால்தான் ‘யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்’, என்று அவன் அருளிச்செய்தான். இந்த உண்மையை யறிந்தவர்க்கன்றே அவன் அவதார உண்மை தெரியப்போகின்றது.

பகவான் அவதரிக்கும் ஸமயத்தை இவ்வண்ணம் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது :—

“அத ஸர்வகுணோபேத꞉ கால꞉ பரமஶோபந꞉ ।
யர்ஹ்யேவாஜநஜந்மர்க்ஷம் ஶாந்தர்க்ஷக்ரஹதாரகம் ।



திஶ꞉ ப்ரஸேதுர்ககநம் நிர்மலோடுகணோதயம் ।
மஹீ மங்கலபூயிஷ்டபுரக்ராமவ்ரஜாகரா ॥
நத்ய꞉ ப்ரஸந்நஸலிலா ஹ்ரதா ஜலருஹஶ்ரிய꞉ ।
த்விஜாலிகுலஸந்நாதஸ்தபகா வநராஜய꞉ ॥
வவௌ வாயு꞉ ஸுகஸ்பர்ஶ꞉ புண்யகந்தவஹ꞉ ஶுசி꞉ ।
அக்நயஶ்ச த்விஜாதீநாம் ஶாந்தாஸ்தத்ர ஸமிந்தத ॥
மநாம்ஸ்யாஸந் ப்ரஸந்நாநி ஸாதூநாமஸுரத்ருஹாம் ।
ஜாயமாநேऽஜநே தஸ்மிந் நேதுர்துந்துபயோ திவி ॥
ஜகு꞉ கிந்நரகந்தர்வாஸ்துஷ்டுவு꞉ ஸித்தசாரணா꞉ ।
வித்யாதர்யஶ்ச நந்ருதுரப்ஸரோபி꞉ ஸமம் முதா ॥
முமுசுர்முநயோ தேவா꞉ ஸுமநாம்ஸி முதாந்விதா꞉ ।
மந்தம் மந்தம் ஜலதரா ஜகர்ஜுரநுஸாகரம் ॥
நிஶீதே தமஉத்பூதே ஜாயமாநே ஜநார்தநே ॥
தேவக்யாம் தேவரூபிண்யாம் விஷ்ணு꞉ ஸர்வகுஹாஶய꞉ ।
ஆவிராஸீத்யதா ப்ராச்யாம் திஶீந்துரிவ புஷ்கல꞉ ॥

தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம் சதுர்புஜம் ஶங்ககதாத்யுதாயுதம் । ஶ்ரீவத்ஸலக்ஷ்மம் கலஶோபிகௌஸ்துபம் பீதாம்பரம் ஸாந்த்ரபயோதஸௌபகம் ॥ மஹார்ஹவைடூர்யகிரீடகுண்டலத்விஷா பரிஷ்வக்தஸஹஸ்ரகுந்தலம் । உத்தாமகாஞ்ச்யங்கதகங்கணாதிபிர்விரோசமாநம் வஸுதேவ ஐக்ஷத ” ॥

“பகவானிடம் உத்பந்நரான சதுர்முகனுடைய நக்ஷத்ரமான ரோஹிணியானது, அநுகூலமாய் நின்ற அஶ்விநி முதலான நக்ஷத்ரங்களுடனும், ஸூர்யன் முதலான க்ரஹங்களுடனும், இதர நக்ஷத்ரங்களுடனும் கூடி நிற்கவும், திக்குகள் ப்ரஸந்நமாயிருக்கவும், நிர்மலமான நக்ஷத்ரோதயத்துடன் ஆகாஶம் விளங்கவும், பட்டணங்கள், க்ராமங்கள், கோஷ்டங்கள் இவைகள் க்ஷேமம் பொருந்தப் பூமி நிற்கவும், நதிகளில் தெளிந்த ஜலம் ப்ரவஹிக்கவும், மடுக்கள் தாமரைமலர்கள் சோபையைத் தாங்கவும், வநங்களில் வ்ருக்ஷபங்க்திகளின் பூங்கொத்துகள் எங்கும் பக்ஷிகளும்

வண்டுகளும் சப்தித்துக்கொண்டிருக்கவும், வாயு தூளியின்றியும்
ஸுகந்த ஸுகஸ்பர்சத்துடனும் ஸஞ்சரிக்கவும், த்விஜர்களுடைய
மந்தமாய் நின்ற அக்நிகள் மிகவும் ஜ்வலிக்கவும், ஸாதுக்களுடைய
வும், தேவர்களுடையவும், சித்தங்கள் ப்ரஸந்நமா யிருக்கவும்,
ந்தப் பகவான் அவதரிக்க அபிமுகனாய் இருக்க, ஸ்வர்க்க லோ
த்தில் துந்துபிகள் முழங்கவும், கிந்நரர்களும் கந்தர்வர்களும்
டவும், ஸித்தர்களும் சாரணர்களும் ஸ்துதிக்கவும், வித்யாதர
்த்ரீகள் அப்ஸரஸ்ஸுகளுடன் கூடி ஸந்தோஷத்துடன் ஆட
ும், முனிவர்களும் தேவர்களும் களிப்புடன் கூடிக் குஸுமங்களை
ற்புறமும் இறைக்கவும், மேகங்கள் ஸமுத்ரத்தை அநுஸரித்து
ந்தமாகக் கர்ஜிக்கவும், அர்த்தராத்ரியில் இருள் மிகுந்து நிற்
ப் பகவான் அவதாராபிமுகனாய் நிற்க, ஸர்வ குணங்களுடன்
கூடிக் காலமானது ஶுபதரமாயிருக்கையில் தேவதைபோன்ற
தோற்றமுடைய தேவகியினிடம், ஸர்வப்ராணிகளுடைய ஹ்ரு
தயங்களிலிருக்கும் விஷ்ணுவானவர், கீழ்த்திசையில் எல்லாக் கலைக
ளுடன் கூடிச்சந்த்ரன் உதிப்பதென ஆவிர்ப்பவித்தனர். தாமரைக்
கண்களுடனும், சங்கசக்ர கதாபத்மங்களைத் தாங்கிய சதுர்புஜங்க
ளுடனும், ஸ்ரீவத்ஸமெனும் மறுவுடனும், கண்டத்தில் ப்ரகா
சிக்கும் கௌஸ்துப மணியுடனும், பீதாம்பரதாரியாகவும், நீருண்டு
நீபூதமான மேகம்போல் வர்ணத்தால் ஸுந்தரமாகவும், விலை
யற்ற ரத்நங்களால் நிர்மிதமான கிரீடமென்ன, குண்டலங்க
ளென்ன, இவற்றின் காந்தியால் வ்யாபிக்கப்பட்ட ஸங்க்யாதீத
மான குந்தலங்களுடனும், ஶ்லாக்யமான அரைநூன்மாலை, தோள்
வளையல், கங்கணங்கள் முதலான திருவாபரணங்களால் ப்ரகாசிக்
கின்ற ஆஶ்சர்யமான அந்தக் குழந்தையை வஸுதேவர் கண்டார்."

மேலே விவரித்தவண்ணம், தேசமும், காலமும், சேதநாசேதநரூபமான ஸர்வ வஸ்துக்களும், பகவானுடைய அவதரணத்தை எதிர்பார்த்தவண்ணமிருக்கையில், ஸ்ரீக்ருஷ்ணன் அவதரித்தான். அவனுடைய திவ்ய சரித்ரவிஸ்தாரத்தை இங்கு எழுதப்போகின்றோமில்லை. அப்படிப்பட்ட அவதாரம் அந்யத்ர த்ருஷ்டமன்று. ஸர்வேஶ்வரனுடைய அவதரணம் இருக்கும் தன்மையை அவ்விடத்தில் காணலாமேயொழிய மற்றெங்கும் காண இசையாது. அந்த விஷயத்தைப்பற்றித்தான் இங்கே கிஞ்சித் யோசிப்போம்.



'𑌨 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂𑌚𑌨 ।
𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿' ॥

"அர்ஜுநா! மூன்று லோகங்களிலும் ஸர்வேஶ்வரனான எனக்கு யாதொரு கர்த்தவ்யமும் இல்லை. ஏனெனில் என்னால் அடையத்தக்கதும், இதுவரையில் அடையாப்படாததும் யாதொன்றுமில்லை. ஆகிலும் லோகரக்ஷணவ்யாபாரமான கர்மங்களை அநுஷ்டிக்கின்றேன்."

'𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥
𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌦𑌹𑌮𑍍 ।
𑌸𑌂𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃' ॥

"ஆலஸ்யமின்றிக் கர்மம் செய்யாமல் நான் எப்போதாவது இருப்பேனாகில், ஶ்ரேஷ்டனென மதிக்கப்பட்ட எனது மார்க்கத்தை மநுஷ்யர் ஸர்வப்ரகாரத்தாலும் அநுவர்த்திப்பர். லோகரக்ஷணார்த்தம் நான் செய்யவேண்டிய கர்மங்களை நான் செய்யாமல் விட்டால், இந்த லோகங்கள் நஷ்டமாய்ப்போகும். ப்ரஜைகளின் அநுக்ரக நிமித்தம் ப்ரவ்ருத்தனான நான் லோகஸாங்கர்யத்தைச் செய்தவனாய்க்கொண்டு இந்த ப்ரஜைகளையும் நாசம் செய்தவனாவேன்."

'𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥
𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍' ॥

"ஆத்மாவைப்பற்றின ஸம்யக்ஜ்ஞாநமற்றவர் கர்மங்களில் பற்றுடையவராய் எப்படி அவற்றைச் செய்கின்றனரோ, அப்படியே, ஓ அர்ஜுநா! வித்வானானவன், லோகஸங்க்ரஹம் செய்ய இச்சித்தவனாய்க் கொண்டு, கர்மங்களில் பற்றையொழித்து அவற்றைச் செய்யக்கடவன்; அவன் கர்மத்தில் ஸங்கமுடைய ஆத்மஸ்வரூப விவேகமற்றவர்க்கு அக்கர்மங்களில் அவிஶ்வாஸம் உதிக்கும்படிப் புத்திபேதத்தை உண்டாக்கத்தகான். வித்வான் கர்மயோக நிஷ்டனாக இருந்துகொண்டு ஸர்வ கர்மங்களையும் தானே அநுஷ்

டித்து அஜ்ஞர்க்கு அவற்றுள் ப்ரீதியை உண்டு பண்ணக்கடவன்." இந்த ரூபமாக ஸ்ரீக்ருஷ்ணன் வசநமிருக்கின்றது.

இதன் தாத்பர்யம் என்னெனில், ஸர்வேச்வரன் அவாப்த ஸமஸ்த காமனுயிருந்தும், லோகாநுக்ரஹார்த்தம் ஜகத்வ்யா பாரத்தை விடாமல் நடத்துகின்றான்; அவன் அவதாரம் செய்யும் காலங்களிலும், லோகஹிதத்தில் ஸதா ப்ரவ்ருத்தனாய் அந்தந்த அவதார சரீரங்களுக்கு ஸங்கிஹிதமான கர்மங்களை லோகோப காரமாகச் செய்கின்றான்; அப்படிக்கு அவன் செய்யாவிட்டால், லோகஸாங்கர்யமும் ப்ரஜைகளின் நாசமும் ஏற்படும்; ஆதலால், ஆத்மஸ்வரூப ஜ்ஞாநமுள்ளவர்களும், அந்த ஜ்ஞாநத்வாரா பகவத் பக்தி பண்ணுகின்றவர்களும், அந்த ஜ்ஞாநத்தையும் பக்தியையும் ஈஷத்தும் துறக்காமல் கர்மயோகநிஷ்டராக நின்று ஸங்கிஹித கர்மங்களை த்யாகபுத்தியுடன், ஸங்கமுள்ளவர் செய்வதுபோல் செய்து, பகவதர்ப்பணம் பண்ணக்கடவர்; அப்படி அவர் செய்யும் பக்ஷத்தில், அவருடைய நிஷ்டைக்கும் குறைவில்லை; கர்மத்யா கத்தில் அதிகாரமற்ற பஹுஜநங்களும் லோகம் தழைப்பதற்கு ஆதாரமாயுள்ள அவ்வவர்க்கு நியதமான ஸர்வ கர்மங்களையும் விடாமல் செய்வர் என்பதுதான்.

ஸ்ரீக்ருஷ்ணன் இருந்தகாலத்தில் அவனைப்போல் வ்யாபார வானுக யாரும் இருந்ததில்லை. அஹங்கார மமகார மெளப்பட்ட அஜ்ஞாநத்தால் புத்திகெட்ட கம்ஸன், ஜராஸந்தன், சிசுபாலன், நரகன், பாணாஸுரன், துர்யோதநன் முதலான பல ராஜர்கள் மிகவும் அதர்மங்களில் ப்ரவ்ருத்தராய்ப் பரஹிம்ஸாரூபமான க்ரியைகளைச் செய்வித்த அக்காலத்தில், ஸ்ரீக்ருஷ்ணன், நேராக வும், இதரர்களை நிமித்தமாகக்கொண்டும், லோகஹிம்ஸகர்களை நிரஸித்தும், ஸாதுபரித்ராணம் செய்தும், இந்த லோகத்தார்க்கு பரம்ச்வதமான ச்ரேயஸ்ஸுக்குக் காரணமாயுள்ள தனது திவ்ய சரித்ரத்தைத் தந்தும், வ்யாபாரவானுக இருந்தான். தனது நிரங் குசமான ஐச்வர்யத்தைக் கொஞ்சமும் விடாமலும், ஸர்வசக்தி மானுன தான் ஸர்வநியந்தாவாக இருக்கையிலும், அஹங்கார விமூடாத்மாக்கள் தாம் கர்த்தாக்களென நினைக்கக் குறையின்றி ஜகந்நியமநத்தை நடத்துவதுபோல், தன் காலத்திய ராஜர்களும் வீரர்களும் தமதெனக் கர்மங்களை அபிமாநித்துச் செய்ய இடந்



தந்து, தானே யாவத்தையும் நடப்பித்தான். அவர்க்குள் ச்ரேஷ்டனை அர்ஜுநனைப் பார்த்து 'நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந்' என்றருளிச்செய்தானிறே. இதனால் பகவானுடைய திருவுள்ளம் தன் பக்தர் நிஷ்காம கர்மாநுஷ்டாநம் செய்யவேண்டுமென்பதே. அப்படிப் பகவான் கர்மவானுக இருக்கையில், இச்சாத்வேஷம் முதலான த்வந்த்வ மோஹங்களால் அவனது உள்ளம் சிறிதும் கலங்கியதன்று. அவனுக்கு எத்தருணமும் கோபமில்லை; வ்யஸநமில்லை; ஒன்றைப்பற்றி இச்சையில்லை; த்வேஷமுமில்லை. 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்று அவன் சொன்னபடி ஸர்வஸமனுகவே யிருந்தான். பாரத சரித்ரம் முழுவதும் பார்க்கில், அவனுக்குக் கோபம் வரத்தக்க அவஸரங்கள் பலவுண்டு; வ்யஸநம்உண்டாகத்தக்கவை பலவுண்டு. லோக விடம்பநார்த்தம் சில உக்திகளோ, வ்யாபாரங்களோ, அவனுல் செய்யப்பட்டபோதிலும், சித்தகாலுஷ்யம் அவனுக் கெப்போது மில்லை யென்பது அவனது சரித்ரத்தைச் சிந்திப்போர்க்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். ஸ்வயம் யாதொரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்காமல் பரோபகார நிமித்தமாகவும், தர்மத்தைக் காக்கும்பொருட்டும், ஸதா வ்யாபாரவனுயிருந்த பகவான், தன் பக்தர்களும் யதோசிதம், தன்போல் க்ரியாவான்களாயிருக்க வேண்டுமென்பதைக் கீதையினுல் காட்டியருளினுன். அவனிடம் மஹாப்ரேமை கொண்ட கோபீஜநங்களும் அவர்போன்ற மற்றோரும் ப்ரவ்ருத்திமார்க்கத்தை அவலம்பிக்க இடமில்லை. ஆழ்வார்களும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவரே. உபநயநமின்றித் துர்யாச்ரமம் பெற்ற ஸ்ரீசுகர்க்கு யாது க்ரியை பொருந்தும்? இப்படி நிவ்ருத்திமார்க்க நிஷ்டரைப் பகவான் கீதையில் புகழ்ந்தாரே யன்றி நிந்தித்தாரில்லை. ஆனுல், நிவ்ருத்திமார்க்கத்துக்கு அதிகாரிகள் மிகவும் குறைந்தவர் ஆதலால், ப்ராயேண, 'நஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் । கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ॥' என்று அவன் ஸாதித்த ப்ரகாரம், யாவரும் ப்ரவ்ருத்திமார்க்காதிகாரிகளாதலால், அவர்கள் க்ஷேமப்படும் மார்க்கத்தைத் தன் சரித்ரத்தாலும், உபதேசங்களாலும் காட்டியருளி, மோக்ஷமார்க்கமென்று விதிக்கப்பட்ட உபாயங்களில் அநதிகாரிகளுக்குத் தன் திருவடிகளில் சரணுகதியையும் உபதேசித்தருளினுன்.

ஸதயோவா வேவதாஸீயஸீதவஸீக்ஷாஸோஸேவவாஸ:, ஸ்மரா நம்

ஸ்மரதி மாவேவபரிசிஷோரம்’ என்று, ஒரு பக்தன் பாலனைப் பகவானை நினைத்துப் பக்திசெய்தான். குழந்தையாய் எண்ணி யசோதை பகவத்கைங்கர்யம் செய்தாள். காந்தனைக் கோபஸ்த்ரீகள் நினைத்து நினைத்து உருகினார்கள். புத்ரனாய் எண்ணினார்கள் தசரதர், வஸுதேவர், கௌஸல்யா, தேவகீ இவர்கள். ஸகாவாய் அர்ஜுநன் நினைத்தான். ஸ்வாமியாயும் ஸர்வேச்வரனாயும் பார் எண்ணிப் பக்தி பண்ணினார்கள். அர்ஜுநனும் உத்தவரும் ஆசார்யனைக் கொண்டார்கள். இந்த விஷயத்தில், ‘ஸதீவ ப்ரிய ஸதோரம் ஜநநீவ ஸூநு: | ஆவாயபூர்வ ஶிஷ்யவச் சித்ரம் சித்ரவச் ஸாஸேவ்யச ஸாஸிம் || ஸோதிகேவ ந ஸஹோதேவ ந ஸஹா பிதேவ ஸஹா | பிதேவ தயா ஸாவேப்ய ஸாதநேவ நவ ஶாயவ: || யயா யஶோதாநம் ராஜாநம் யயாவ ஸேவகஸஹிதம் | யயா ப்ரியாதிதிம் யோகஸ்ய ஸமபந்தம் தயாவரூபயேச | யயாவ பந்தும் ஸ்டியிகம் ஷவேஷவேஷா ஸவீரச ஸமிம்’ || எனும் ச்லோகங்களை எடுத்துரைத்து, அவற்றில் காட்டிய ஸம்பந்தங்களுக்கேற்றபடி, அவனிடம் பரத்வத்தையோ, ஸௌலப்யத்தையோ, ஸ்நேஹத்தையோ, காமத்தையோ, ப்ரேமையையோ, பக்தியையோ பண்ணி, அவற்றிற்கு அநுரூபமான வ்ருத்தியை க்ருதக்ருத்யர் பண்ணத்தக்கவரென்று தேசிகன் ஸாதித்தருளினார். இவ்விதமாக லோகத்தைப் பரிபூர்ணமாக அநுக்ரஹிக்கக் கருதிப் பரிபூர்ணாவதாரம் செய்தருளிய புருஷோத்தமனை ஒவ்வொரு முஹூர்த்தமும் க்ஷணமும் நாம் ஸ்மரிக்கவேண்டியிருக்க, இம்மாஸத்தை அதற்காக ப்ரத்யேகமாகக் குறிப்பானேன் என்றால், த்ருணதுல்யமான அர்த்தார்ஜநத்திலும் ஐஹிகபோகங்களிலும் இழிந்த பாமரர் மிகுந்த காலத்தில், அந்த மாஸம் அவனது அவதார மாஸமானபடியால், அதுவாகிலும் அவன் ஸ்மரணார்ஹம் ஆகவேண்டுமெனும் உத்கடேச்சையால் யாம் இது எழுதத் துணிந்தோம்.

* * * * * *



திலக் வித்வான் எழுதிய கீதா ரஹஸ்யம்.

திலக் என்னும் மஹாராஷ்ட்ர வித்வானும் தேசாபிமாநியுமான மஹான் கீதாரஹஸ்யமென்றொரு க்ரந்தத்தை மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றார். அது நாம் அறிந்தோர் பாஷையில் இல்லாத காரணத்தைப்பற்றி வ்யஸநமுறுகின்றோம். அவ்வண்ணம் வ்யஸநங்கொள்பவர் ஸங்க்யை அநந்தமாயிருக்கும். விஷய ஸாத்ருச்யத்தாலும், சப்தப்ரயோக ஸாத்ருச்யத்தாலும், கீதையை எழுதினவர் மஹாபாரதத்தை எழுதினவரேயென்று அவர் நிச்சயம் செய்ததுமன்றி, கீதை எழுதப்பட்ட காலம் 2,400 வருஷங்களுக்கு முன்னெனவும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். பாகவத தர்மம் புத்தர் காலத்துக்கு முற்பட்டதென்பதை நம் ஸம்ப்ரதாயஸ்தர் விச்வஸித்திருக்கின்றனர். அதைத் திலக் வித்வான் ஸ்திரப்படுத்திக் கீதையில் உபதேசரூபமாக ப்ரசம்ஸிக்கப்பட்ட நிஷ்காமகர்மமெனும் கர்மயோகம், வேதங்களில் கர்மகாண்டங்களில் எடுக்கப்பட்டு, ஈசாவாஸ்யம் முதலான உபநிஷத்துகளால் ஸ்திரீகரணம் செய்யப்பட்டுப் பாகவத தர்மத்தால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கின்றதாக அவர் நிச்சயிக்கின்றார். பாஞ்சராத்ர ஸ்ம்ஹிதைகள் பாகவத ஸம்ப்ரதாயத்துக்கு ஆதாரமாய் நிற்கின்றன. மஹாபாரதத்திலேயே ‘பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்’ எனும் வசநத்தை யோசித்தால், அந்த ஸம்ஹிதைகளால் ஏற்பட்ட பாகவத ஸம்ப்ரதாயத்துக்குக் கீதாசார்யன் பரமாசார்யனாகின்றான். ஆதலால் பாஞ்சராத்ரம் மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில் மிகவும் ப்ரசம்ஸிக்கப்பட்டு, ப்ரஹ்மஸூத்ரங்களிலும் யோசிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், கீதாசாஸ்த்ரத்துக்கும் பாகவத தர்மத்துக்கு ஸாத்ருச்யம் அநிவார்யம். இந்த அம்சங்களை ஆதுநிகர் ப்ராயேண கவனிக்கின்றாரில்லை. கீதை கர்மயோக ஸ்தாபநார்த்தம் உண்டாயிருக்க, நிவ்ருத்தி மார்க்கத்தை மிகவும் உபதேசித்த கிறிஸ்துவின் உக்திகளுக்கும் கீதாசாஸ்த்ரத்துக்கும் ஒற்றுமையுண்மட்டன உண்டாகும் ப்ரமையைத் திலக் கண்டிக்கின்றார். இவை யாவும், திலக் வித்வான் எழுதிய க்ரந்தத்தைப் பராமர்சித்த ஒருவர் ஜூலை 19-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் எழுதிய நிரூபத்தைப் படித்து நாம் எழுதினோம்.

# தத்வ விசாரம்.

## ப்ரபத்தியின் ஸ்வரூபமும் ப்ரகாரங்களும்.

(தொடர்ச்சி.)

இந்த ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையும், 'இதன் அங்கங்களை
யும், இதன் அநுஷ்டாநப்ரகாரங்களையும் பரமேச்வரன் தன்
முகமாய் உண்டான பாஞ்சராத்ரஸம்ஹிதைகளில் விஸ்தரேண
விவரித்துளன். கீதையில் தான் விதித்த உபாயத்தின் விஸ்தாரங்
களை ஸ்வயமே பாஞ்சராத்ர ஸம்ஹிதா மூலமாகக் காட்டியருளி
ஞன். அவற்றின் ஸாரங்களை நம் வேங்கடநாதார்யன் பல ரஹஸ்ய
க்ரந்தங்களால் வெளியிட்டனர். அவை யாவும் குருமுகத்தா
லறியத்தக்கவை. அவற்றுள் ஸர்வச்ரேஷ்டமானது ரஹஸ்யத்ரய
ஸாரம். அதன் அர்த்தங்களை யாமிங்கு வெளியிடத் துணியோம்.
ஆகிலும், நிகமாந்தமஹாதேசிகன் வசநங்களில் சிறிதை இவ்விடம்
எழுதத் துணிகின்ரும். அவ்வண்ணம் செய்வதில், தற்காலத்
தமிழ் நடைக்குப் பொருந்த ப்ரதிபதங்களால் அந்தப் பரமாசார்
யன் உக்திகளை எடுத்தெழுதுவோம். இவ்வுலகத்தில், தெய்வ
வசத்தால் தீரனுய்ப் போந்த ஆயிரத்தில் ஒருபுருஷன், முதலில்,
அம்ருதம்போல் ரஸித்து, பரிணமத்தில் விஷம்போல் தீங்கை
உண்டாக்கும் பாஹ்யபதார்த்தங்களைப் பரித்யாகம் செய்தவ
னுய்க்கொண்டு, பகவதநுபவாபேக்ஷயா பரிமிதமான பலத்துடன்
கூடின கேவலாத்மாநுபவ நிமித்தமும் ப்ரயாஸைப்பட இஷ்ட
மற்று, நிரதிசயமானதும், மஹாநந்தத்தைத் தருவதுமான ஸ்ரீயஃ
பதியினுடைய பரிபூர்ணநுபவத்தில் அத்யந்த ப்ரீதியுடையவனுய்,
ஸம்ஸாரத்தை த்யஜிக்க இச்சைகொண்டவன் (முமுக்ஷு) ஆகின்
ருன். முமுக்ஷுக்கள் பரமபுருஷார்த்தத்தை அடைவதற்கு ஏற்ற
உபாயங்களில் ப்ரவ்ருத்தராகின்ருர். ப்ரபந்நரென்றும் பக்த
ரென்றும் அவர் இருவகைப்பட்டவர். இருவரையும் ப்ரபந்நர்



என்னலாம். ஏனெனில், ப்ரபத்தியை ஸாக்ஷாத் உபாயமாகக்
கொள்பவன் அத்வாரக ப்ரபத்திநிஷ்டன் என்றும், பக்தியோக
நிஷ்பத்தியின்பொருட்டு, அதனங்கமாக அதை அநுஷ்டிப்பவன்
ஸத்வாரக ப்ரபத்திநிஷ்டன் என்றும் சொல்லப்படுவர். இரண்டு
அதிகாரிகளையும் பக்தரெனவும் கூடும். ப்ரபந்நன் ப்ரபத்தி பல
மாகப் பகவத் பக்தியை அபேக்ஷிக்கின்ருன். அங்கப்ரபத்தியை
அநுஷ்டிக்கும் பக்தியோகநிஷ்டன், ப்ரபத்தியின் ப்ரயோஜநமா
கப் பக்தியோகமெனப்பட்ட மோக்ஷஸாதநமாகும் பக்தியை
அபேக்ஷிக்கின்ருன். இரண்டு உபாயமும் பகவத்ப்ரஸாதமூல
மாகப் புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொடுக்கின்றன. ஏதேனு
மொரு ப்ரகாரமாகவுமாகும், யாரேனு மொருவர் அநுஷ்டிக்கவு
மாகும், ப்ரபத்திக்கல்லது ஸர்வேச்வரன் பரம புருஷார்த்தம்
கொடுக்கவிரங்கான்.

'[illegible] ।
[illegible]' ॥ என்றும்,
'[illegible]', என்றும், 'நற்பால
யோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்',
என்றும், சொல்லுகிற பாகவதர்களுடைய அபிமாநம், திவ்ய
தேசவாஸம், நாமஸங்கீர்த்தநம், முதலானவை மோக்ஷத்திற்கு
ஸாக்ஷாத் உபாயங்கள் ஆகமாட்டா. அவற்றில் ஸம்பந்தித்த
புருஷனை அவை, உபாஸநத்திலோ, ப்ரபத்தியிலோ, ப்ரவ்ருத்
திப்பித்து அவற்றின் மூலமாகப் புருஷார்த்தத்தை அடை
விக்கும். பக்தி யோகத்தில் அகிஞ்சநனுக்கு அதிகாரமில்லை.
பக்தியோகநிஷ்டன் அவனது ப்ராரப்தகர்மம் முடிந்தவளவில்
அந்திம ப்ரத்யயத்துடன் சரீரத்தை த்யாகம்செய்து மோக்ஷத்தை
அடைவான். ப்ராரப்தகர்மம், உபாஸநத்தில் அவன் அந்வயித்த
ஜந்மத்திலோ, ஜந்மாந்தரத்திலோ, முடிவுறும். ஆதலால்
மோக்ஷத்தைப்பெற, இப்படிப்பட்ட விளம்பத்தைப் பொறுக்கா
மல், உபாயாநுஷ்டாநம் பண்ணின உடனே, அந்தச் சரீராவ
ஸாநத்திலோ, மோக்ஷத்தை அபேக்ஷிப்பவனுக்குப் பக்தியோகத்தி
லதிகாரமில்லை, ப்ரபத்தியில் யாவர்க்கும் அதிகாரமுண்டு; அது

ஸர்வ அநிஷ்டங்களையும் போக்கவல்லது; ஸர்வேஷ்டங்களையும் ஸாதித்துக் கொடுக்கும்; லகுவா யநுஷ்டிக்கத் தக்கது; ஒரே தரம் அநுஷ்டிக்க வேண்டியது; கோலின காலத்தில் பலம் தர வல்லது; யாதொன்றாலும் தகையக்கூடாதது; அதற்குரிய பலத்தைக் குறித்து மீண்டோர் உபாயத்தை ஸஹிக்காது. அதில் தனக்கு அதிகாரத்தை யறிந்து அதை உபாயமாகப் பற்றினவனுக்குப் பகவானுடைய பரிபூர்ணாநுபவத்துக்கு ப்ரதிபந்தகம் இல்லை. 'ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:। பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி'॥ "ஓ ராமசந்த்ர! அவதாரரூபத்தைத் தரிக்கும் உன்னிடம் எனது பரமஸ்நேஹமானது பராபவத மாய் நிலைத்து நிற்கின்றது. ஹே வீர! உன்னிடம் எனது பக்தி அசஞ்சலமாய் இருக்கின்றது. இங்கேயே உனக்குப் பணிவிடை செய்துகொண்டு உன்னை யநுபவிக்கின்றேன். உனது பரஸ்வரூபாதிகளில் எனது மநஸ் செல்லவில்லை" என்று, இளையபெருமாள் ஸர்வலோகசரண்யன் பக்கல் விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்ட வண்ணம், இந்தச் சரீரத்தோடு இருந்துகொண்டு கைங்கர்யம் பண்ணவேண்டுமென்கிற அபிஸந்திக்கு அநுகூலமாய் நிற்கும் அர்ச்சாவதாரஸங்கம். இந்தக் கைங்கர்யாபேக்ஷையாலன்றோ ப்ரபந்நன் தனது சரீராவஸாநபர்யந்தம் மோக்ஷம் விளம்பிப்பதை ஒப்புக்கொள்கின்றான்? ஆதலால் ப்ரபத்யநுஷ்டாநக்ஷணம் முதற் கொண்டு, இவ்வுலகில் ப்ராப்தமாகும் கைங்கர்யத்தை முதலாகவும், தேஹாவஸாநத்தில் பரிபூர்ணப்ரஹ்மாநுபவரூபமான மோக்ஷம் முடிவாகவும் இருக்கும் பலந்தான் ப்ரபத்யநுஷ்டாந பலம்.

'கிம் வா ஜகதீஜஸ்ய ப்ரஸந்நே த்வயி துர்லபம்'। "ஸர்வஜகத்காரணனான நீ ப்ரஸந்நனாகில் என்ன தான் துர்லபம்?", 'தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம்'। "அவன் ப்ரஸந்நனாகில் கிடைக்காத தொன்றுண்டோ?", என்று சொல்லுகிறபடியே, ஸர்வேச்வரன் ஸகல பலப்ரதனாகையாலே, அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தியும் ஸகல பல ஸாதநமாகும். 'தாவதார்த்திஸ்



ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா ஸுகம்। யாவந்நயாதி சரணம் த்வச்சரணம் பாபநாசநம்'॥ "கோலின பலத்துக்கு ப்ரதிபந்தகமாய் நிற்கும் ஸர்வபாபங்களையும் நிவர்த்திக்கின்ற உன் திருவடிகளில் எது பர்யந்தம் சரணாகதி செய்கின்றானில்லையோ, அது பர்யந்தமே புருஷனுக்குத் துக்கம் (ஐச்வர்யத்தையிழந்த துக்கம்), அவ்வளவு பர்யந்தமே ஆசை (நூதநமான ஐச்வர்யத்தில் ஆசை), அவ்வளவு பர்யந்தமே மோஹம் (ஆத்மஸ்வரூப அஜ்ஞாநத்தாலுண்டாகும் மோஹம்), அவ்வளவு பர்யந்தமே அஸுகம் (பகவத் ப்ராப்தி விரோதமான ஸம்ஸாரம்) என்கிறபடியே, ப்ரபத்தி கோலின காலத்திலேயே ஸர்வ பலஸாதநமென்று மஹர்ஷிகள் அறுதியிட்டார்கள். இப்படிப்பட்ட ஏற்றத்தை நினைத்தே, "ஸக்ருதிந்த்ர காமாஸ்ஸ்வர்க்கே ஸாம்ப்ரதாயவிதோ விதுஷோயா। நாஸ்ய ப்ரீதி ஸாரஞ்ஜலேஸ்யந் க்ஷமாம் கோடிபகீஜவி॥" என்கிற ச்லோகத்தால், கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக நிஷ்டர்களான சுத்த சரித்ரத்துடன் கூடினவர்கள், ப்ரபந்நனுடைய மஹிமையில் ஏகதேசத்துக்கும் தக்கவரல்லர் என்று சொல்லப்பட்டது. ப்ரபந்நன், "பரம் கத்வா ஸர்வபூதோ ஹ்யக்ஷயம் ப்ராப்ய பஞ்சாவிம் மோதே ப்ராந்தம் வைத்யம்। ஸ்வகர்மத்யாகேன ப்ராப்ய தேஹிகைவல்ய மோதே"॥ "தேஹாவஸாநத்தில், ஸர்வபந்தவிநிர்முக்தனாகிப் பரமபுருஷனுக்கே பாரதந்த்ரனாய்ப் போந்து அகர்மவச்யனாகையாலே, நிகரற்ற ஸ்வதந்த்ரனாகிப் பகவானுடன் கூட ஸர்வகாமங்களையும் அநுபவிக்கின்றான்; அதாவது ஸர்வவிதகைங்கர்ய யோக்யனாகின்றான்" என்றும் சொல்லப்பட்டது.

இப்படி அபிமத பலமான பரமபுருஷார்த்தத்துக்கு உபாயமாக ந்யாஸவித்யையைப் பற்றுகிறவன், வேறு உபாயங்களை அபேக்ஷிக்கவேண்டாம். அவனுக்கு அந்த வித்யையில் அதிகாரம் இருக்கின்றபடியை அறியவேண்டும். அதிகாரமாவது உபாயாநுஷ்டாநத்தில் ஸாமர்த்யமும், அதனுடைய பலத்தில் அபேக்ஷையும். இவற்றுள் ஸாமர்த்யமாவது, சாஸ்த்ரார்த்தத்தை

அறிந்துகொள்வதும், அறிந்தபடி அதை அநுஷ்டிக்கவல்லமையும், பக்தியோகாதிகளில், சாஸ்த்ரம் அநுமித்தபடி ஜாதி குணங்கள் முதலான யோக்யதையுமாம். இவற்றை யுடையவனுக்கு ப்ரயோஜனமாக அநுவதிக்கப்பட்ட ஸாத்யம்தான் மோக்ஷமெனும் பலன். அப்பலனை ஸாதித்துக்கொடுப்பது அதனிமித்தமாக விதிக்கப்பட்ட சரணாகதி யெனும் உபாயம். இங்கே பக்தி யோகாதிகளைப்பற்றிச் சிந்திக்கின்றோ மில்லை. சாஸ்த்ரத்தினால் ப்ரபத்யதிகாரி அறிந்துகொள்ளவேண்டும் ஜ்ஞாநம், ஈச்வரனுக்கும் இவனுக்கும் உள்ள ஸம்பந்தஜ்ஞாநம்; அதாவது இவன் ஈச்வரனுக்கு சேஷபூதன் என்பதுதான்: இதனுடன், உபாயாந்தரங்களைப்பற்ற இவனுக்கு அதிகாரமில்லை யென்பதைக் காட்டும் ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும் இவன் அறியவேண்டியவையே. ஆகிஞ்சந்யம் என்றால் உபாயாந்தரங்களைப்பற்ற இவனுக்கு ஜ்ஞாநமும் ஸாமர்த்யமும் இல்லாமை. ஜ்ஞாநமும் ஸாமர்த்யமும் இருந்தபோதிலும், உபாயாந்தரங்களைப் பற்றுவதால் பரமபுருஷார்த்தமாகிற பலம் விளம்பிக்கும் எனும் ஜ்ஞாநம் இவனுக்குண்டாகி, அந்த விளம்பத்தை ஸஹியானாகில், கடுகப் பலம் பெறுவதற்கு ப்ரபத்தியைப் பற்றும்போது இவனுக்கு அநந்யகதித்வம் ஸித்திக்கின்றது. அநந்யகதித்வ மென்பதில் கதிசப்தம் அடையவேண்டுகின்ற பலமென்றர்த்தம். இப்பலம் தவிர, ப்ரயோஜநாந்தரங்களில் இவன் விமுகனாகி நிற்கை அநந்யகதித்வம். அபரிமித பலார்த்திகளாகிற ஸம்யக்ஜ்ஞாநத்துடன் கூடினவர்கள், பரிமித பலரூபமான ப்ரயோஜநாந்தரங்களைக் கொடுக்கும் தேவதாந்தரங்களை ஸேவிக்கமாட்டார்களாகையால், "ப்ரஹ்மாணம் சிதிகண்டஞ்ச யாச்சாந்யா தேவதாஸ் ஸ்ம்ருதா: । ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்" என்கிற ப்ரமாணத்தை இங்கே ஸ்மரிக்கவேண்டும். ஆதலால், இவன் அபேக்ஷித்த பலத்துக்கு ப்ராபகரெனத் தேவதாந்தரங்களைப்பற்றி இவனுக்கு யோஜனையுண்டாகக் கூடாதாகையால் சரண்யாந்தர வைமுக்யமும், ப்ரயோஜநாந்தர வைமுக்யத்தால் அர்த்தஸித்தமாய் அநந்யகதித்வத்தில் அந்தர்கதம். இந்த சரண்



யாந்தர வைமுக்யம் தேவதாந்தரங்களும் தனையொக்கப் பகவத்பரதந்த்ரர் எனும் நிச்சயத்தாலும், அவர்கள் தரக்கூடிய பலாந்தரங்களில் வைமுக்யத்தாலும் ஸித்தம். தீவ்ரமான முமுக்ஷுத்வமன்றிக்கே, தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை ப்ரார்த்திப்பதால், தேஹாநுவ்ருத்தியாகின்ற ப்ரயோஜநாந்தரம் ஸம்பவிக்கின்றதே யென்றாலோ, அதனால், தேஹாவஸாநம் வரையில் பலம் விளம்பிக்குமே தவிர மோக்ஷம் தவிராது. இது ஐஹிகமான ப்ரயோஜநாந்தரம். இதன் ஸம்பந்தத்தால் அநந்யகதித்வமெனும் அதிகாரம் போகாது. ஆமுஷ்மிகரூபமான ப்ரயோஜநாந்தர ஸ்பர்சம் அதிகார ஹாநியை உண்டாக்கிவிடும். காகாஸுர வ்ருத்தாந்தத்தில், "ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத:" "பிதாவினாலும், இதர தேவர்களாலும், மஹர்ஷிகளாலும், அவன் கைவிடப்பட்டவனாய்க்கொண்டு, மூன்று லோகங்களிலும் தனக்கோர் ரக்ஷகரைத் தேடிச் சுற்றிவிட்டு, அந்த ஸ்ரீராமனையே சரணமாக அடைந்தான்" என்றிருப்பதில், பிதா முதலானவர்களால் கைவிடப்பட்டதால் சரண்யாந்தர வைமுக்யமும், அவனையே சரணமடைந்தானென்பதால் ஆகிஞ்சந்யமும் ஸூசிதமாயிற்று. இன்னும், "அகிஞ்சநோ நந்யகதி:", என்று ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரத்திலும், "அநாகதாநந்தகால ஸமீக்ஷயாபி அத்ருஷ்டஸந்தாரோபாய: தச்சரணாரவிந்தயுகள ப்ரபத்தே ரந்யோபாய: கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதயிதுமசக்தோ நா:", "இனி வரப்போகின்ற எல்லையற்ற காலங்களைப்பற்றி யோசித்தாலும், ஸம்ஸாரத்தைக் கடக்க ஓர் உபாயத்தைக் காணாதவனாய், அவனை யடையும்பொருட்டு, அவனுடைய திருவடிகளில் பண்ணும் சரணாகதியைக்காட்டிலும், ஆயிரம் கோடி கல்பம் வரையிலும் எனக்கு வேறொரு உபாயம் இல்லையென்று எண்ணுகின்றவனாய்", என்று ஸ்ரீரங்க ஸ்ரீவைகுண்ட கத்யங்களிலும், 'புகலொன்றில்லா வடியேன்', என்று நம்மாழ்வார் பாசுரத்திலும், இந்த ப்ரபத்யதிகார விசேஷ மிருக்கின்றபடியை யோசிக்கவேண்டும்.

இவ்வளவதிகாரம் பெற்றால், இதற்கு ஜாத்யாதி நியமம் இல்லாத படியால் யாவர்க்கும் இதில் அதிகாரம் உண்டென்பது ஸ்பஷ்டம். இவ்வர்த்தங்களைப் பின்வருகிற ஶ்லோகத்தால் க்ரோடீகரிக்கின்றார்.

"ஸக்ருஜ்ஜ்ஞாந ஶக்த்யாபாவ: ப்ரதிநியததா ஶாஸ்த்ரத: பயப்ராப்தாவஸ் காலக்ஷேபாக்ஷமத்வம் க்ஷிதிநியதிவஶாச் சார்த்த திஶேஷாதிஷு | ஸாகல்யோக்த்யாதிபேதா வ்ருத்திஸ்தா நிஜாயத்யா ஸம்ஶ்ரயந்தே ஸாத: ஶ்ரீஶம் ஸ்வதந்த்ர ப்ரபதநவிதிநா முக்தயே நிஷ்க்ரிஞ்சநா: " ॥

"பக்தியோகம், ஜ்ஞாநயோகம், கர்மயோகம் இவற்றைப் பற்ற ஸாமர்த்யமில்லாமை, அந்த யோகங்கள் விஷயமான ஜ்ஞாநமில்லாமை, அவற்றைப் பற்றுவதில் ஶாஸ்த்ரம் விதித்தபடி ஜாதி குணாதிகளின் இன்மையால் சாஸ்த்ரம் இடங்கொடுக்காமை, பலம் விளம்பிப்பதை ஸஹியாமை, என்று, அத்ருஷ்டவஶத்தால் முமுக்ஷுக்களுக்கு ஸம்பவிக்கின்ற நாலு அதிகாரங்களில், ஒவ்வொன்றின் ஸம்பந்தத்தாலும், இரண்டிரண்டினுடைய ஸம்பந்தத்தாலும், மும்மூன்றின் ஸம்பந்தத்தாலும், நான்கினுடைய ஸம்பந்தத்தாலும், பதினைந்து ப்ரகாரமாகப் பேதிக்கின்ற ஸ்வாதிகாரத்தையுடைய ஸம்யக்ந்யாயநிரூபணத்தில் ஸமர்த்தரான மஹான்கள், தங்கட்கு ஆகிஞ்சந்யம் ஸித்தமென்று மஹாவிஶ்வாஸத்துடன் கூடினவர்களாய், முக்தியின்பொருட்டு லக்ஷ்மீகாந்தனை ஸ்வதந்த்ர ப்ரபத்யநுஷ்டாநத்தால் ஆஶ்ரயிக்கின்றனர்."

அன்றியும் "அந்தணரந்திய ரெல்லையினின்ற வனைத்துலகும், நொந்தவரே முதலாக நடந்கி யனன்னியராய்" எனும் பாசுரத்தினால், ஸர்வஜாதீயர்க்குள்ளும் ஸம்ஸாரத்தால் கஷ்டப்பட்டவரே ப்ரதாநராக, ஶோகாவிஷ்டர்களாயும், ப்ரயோஜநாந்தரங்களில் விமுகராயும் இருப்பவர் யாவரும், தன்னை ஶரணமடையவேண்டுமென்று யாவராலும் அதிக்ரமிக்கக்கூடாத ஸஹஜகாருண்ய விஶிஷ்டனாய் ஈஶ்வரன் நிற்பதை வெளியிடுகின்றார்.

பத்ராதிபர்.

# ஆர்ய வித்யை.

(தொடர்ச்சி)

இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் கவனிக்கவேண்டியதாகிறது. அர்த்தஜ்ஞாநம் பாஷாஜ்ஞாநத்தை அவலம்பித்திருக்கிறது. புத்திக்கு பாஷை, சரீரத்துக்கு ஆஹாரத்தின் ஸ்தாநத்திலிருக்கிறது. ஆஹாரத்தின் ஸாராம்ஶத்தை க்ரஹித்து ஶரீரம் போஷிக்கப்படுவதுபோல், பாஷாரூபமான சப்தங்களின் அர்த்தத்தை க்ரஹித்து புத்தி விசாலமாகிறது. ஶப்தார்த்த ஸம்பந்தம் நித்யமென்பது நம் பெரியோர்களின் கொள்கை. அந்யர்கள் பாஷை ஸாங்கேதிகமென்றும், சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் நிஜமான ஸம்பந்தம் ஒன்றும் இல்லையென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஒரு ந்யாயமுண்டு. ஒரு அர்த்தத்தைத் தெரிவிக்க ஒரு ஶப்தம் அந்த அர்த்தத்தின் சரீரம்போல் அப்ருதக்ஸித்தமாக உண்டாகிறது. அப்படி உண்டான சப்தத்துக்கும் அதன் அர்த்தத்துக்குமுள்ள ஸம்பந்தம் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. பிறகு அந்த சப்தம் பஹு ப்ரகாரமான உச்சாரண ஶக்தியுடைய விவித ஜநங்களால் உச்சரிக்கப்படுவதாலும், இன்னும் பலவித காரணங்களாலும், வெவ்வேறு ரூபத்தை அடைகிறது. அப்படிக்கு ஏற்படும் பிரிவுகள் தான் வெவ்வேறு பாஷைகளாக லோகத்தில் ப்ரசாரத்தை அடைகின்றன. இவ்விதமாக ஓரே சப்தம் பலவிதமான திரிபுகளை அடைவதால், ஆதியில் ஏற்பட்ட ஶப்தார்த்த ஸம்பந்தத்தை ஜ்ஞாபிக்கக்கூடிய அம்சங்கள் மறைந்துவிடுகின்றன. அவ்விதம் விபரிணாமம் அடைந்த சப்தங்களுக்கும் அவைகளின் அர்த்தங்களுக்கும் ஸம்பந்தமே தெரியாமல் போய்விடுகிறது. அதனால் ஸம்பந்தமில்லையென்றே நினைக்க ஹேது உண்டாகிறது. இயற்கையாய் ஒரு பாஷையில் ஏற்பட்ட குறைய எல்லா சப்தங்களும் உருமாறியிருந்தால், அந்த பாஷையையே பேசுபவர்கள் சப்தார்த்தங்களுக்கு ஸம்பந்தமே கிடையாதென்று

வ்யவஹரிப்பதில் ஒன்றும் ஆஶ்சர்யமில்லை. இதற்கு சில உதாஹரணங்கள் கூறலாம். ‘ஸ்ரீ’ என்கிற ஸம்ஸ்க்ருத பதம் தமிழில் ‘திரு’ என்று மாறியிருக்கிறது. ‘ஸ்ரீ’ என்பது ‘ஸ்ரீயதீதிஸ்ரீ:’ என்கிற வ்யுத்பத்தியால் ‘ஸ்ரீ’ என்கிற தாதுவிலிருந்து நிஷ்பந்நமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளுகிறோம். ‘திரு’ என்கிற தமிழ்ப் பதத்தை எவ்விதமாய்த் தமிழில் வ்யுத்பத்தி பண்ணுகிறது? இப்படியே ‘ஶ்லக்ஷ்ணம்’ என்கிற ஸம்ஸ்க்ருத பதம் ‘சன்னம்’ என்றும், ‘லக்ஷ்யம்’ என்பது ‘இலக்கு’ என்றும், ‘இலக்கியம்’ என்றும், ‘த்யூதம்’ என்பது ‘சூது’ என்றும், ‘மநுஷ்ய:’ என்பது ‘மனிதன்’, என்றும் திரிபு அடைந்திருக்கின்றன. ஒருவன் மாறுவேஷம் பூண்டால், தன் அந்தரங்க பந்துக்களுக்குக்கூட அடையாளம் தெரியாமற் போய்விடுவதுபோல், பதங்கள் இதர பாஷைகளில் மாறுபாடு அடைவதால், தங்களுடைய அர்த்த சக்தியை ஸூசிப்பிக்க முடியாதவண்ணம் பரிணாமத்தை அடைகின்றன. ஸம்ஸ்க்ருதம் தவிர வேறு எல்லா பாஷைகளுக்கும் இதே கதிதான். ஸம்ஸ்க்ருதம் ஒரு பாஷை தான் ஶப்தார்த்த ஸம்பந்தத்தை இன்னமும் தெளிவாய்த் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதில் தான் ஒவ்வொரு ஶப்தமும் க்ரியா வாசியான தாதுவிலிருந்து நிஷ்பந்நமாயிருக்கிற தென்பதைக் காட்டக்கூடியதாயிருக்கிறது. இதனால் அது ஆதி பாஷை என்று ஏற்படுவதுடன், அதன் ஶப்தங்கள் அர்த்தத்துக்கு அவ்யபிவஹித ஸம்பந்தமுடையவைகளானதால் அர்த்தஜ்ஞாநம் அதிஶீக்ரமாய் ஏற்படுவதற்கு அந்த பாஷையே முக்ய ஸஹகாரி யென்றும் நிஶ்சயிக்கவேண்டியதாயிருக்கிறது.

ஶப்த ஶக்தியை நம் பெரியோர்கள் பூர்ணமாய் அறிந்திருந்தார்கள் என்றும், அர்த்தபோதம் நமக்கு உண்டாக்குவது மாத்திரமல்லாமல், ப்ரபலமான க்ரியா நிஷ்பத்திகளும் ஶப்தப்ரயோகத்தால் ஸாதிக்கக்கூடுமென்றும், அவ்விதமே நம் பெரியோர்கள் ஸாதித்துவந்தார்கள் என்றும், ஸம்ஸ்க்ருத பாஷையில் அநாதியாய் ஏற்பட்டிருக்கும் மந்த்ர ஶாஸ்த்ரங்கள் முதலியவைகளால் ஸ்பஷ்டமாகிறது. இது காரணமாகத் தான் வேதங்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமாயிருக்கும் அர்த்த கௌரவத்தோடு ஶப்தாநுபூர்விக்



கும், ஸ்வரவர்ண க்ரமத்துக்கும், அந்யாத்ருஶமான குணம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விதையிலிருந்து உத்பத்தியாகும் மரத்தில் புஷ்பங்கள் புஷ்பித்து, அந்தப் புஷ்பங்களே வாஸ விசேஷத்தால் பலங்களாகப் பரிணமிப்பதுபோல், பகவானுடைய ஸங்கல்பத்தினால் ஶப்தப்ருஹ்மமாகிய வேதங்கள் வெளியிடப்பட்டு, அவைகளின் பாவத்தை அநுஸரித்தே ஜகத்ஸ்ருஷ்டி ஏற்பட்டிருக்கிறது. ஶப்தத்தின் ஸ்வரூபத்தையும் சக்தியையும் யதாவத்தாய் நம் பெரியோர்கள் அறிந்திருந்தபடியால் தான், அவர்கள் ஶப்தாத்யயநத்தை முக்யமான கர்மமாக விதித்து, அதை அநுஷ்டிக்காமற் போவதால் ஏற்படும் ப்ரத்யவாயத்தையும் கூறியிருக்கிறார்கள். ஶப்த ஸ்வரூபத்தை அறிய வல்லமையில்லாத அந்ய தேசத்தார்க்கும், அவர்களிடமே குருகுலவாஸம் பண்ணித் திருப்தியடைந்திருப்பவர்களுக்கும், இம்மாதிரி ஶப்தத்துக்கு நம் பெரியோர்கள் கல்பித்திருக்கும் கௌரவம் ஸரியல்லவென்றும், அது ப்ரமத்தினாலோ, மோச எண்ணத்துடனோ, ஸங்கேதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயம் இருந்தபோதிலும், அவ்வபிப்பிராயம் விபரீதமென்பது ப்ரத்யக்ஷமாய் நிரூபிக்கக்கூடியதாயிருக்கிறது.

இதையெல்லாம் யோசிக்குமிடத்து, அர்த்த ஜ்ஞாநம் ஸம்பாதிப்பதற்கு விஷயந்தான் முக்யமென்றும், பாஷை ப்ரதாநமில்லையென்றும், எந்த பாஷையை வேண்டுமானாலும் அப்யஸித்து ஜ்ஞாநம் ஸம்பாதித்துக் கொள்ளலாமென்றும், இன்ன பாஷை தான் இன்ன விஷயத்துக்கு அல்லது இன்ன அதிகாரிகளுக்கென்று நியாயம் இல்லை யென்றும் சொல்வது யுத்தமல்ல. ஜிஜ்ஞாஸையுடையவன் ஸம்ஸ்க்ருதத்தை அநாதரம் பண்ணி, பாஷாந்தரங்களைக்கொண்டு ஜ்ஞாநம் ஸம்பாதிக்க யத்தனிப்பது, பசியினால் வருந்துகிறவன் ஸித்தமாயிருக்கும் ஷட்ரஸோபேதமான ம்ருஷ்டாந்நத்தைத் தள்ளிவிட்டு பேய்க்கரும்பைக் கடித்து க்ஷுச்சாந்தி பண்ணிக்கொள்ள முயற்சிப்பதுபோல் ஆகிறது.

மேலும் ‘[illegible]’ என்று கவி சொன்னபடி அர்த்தமே தனக்கு ப்ரியதமமான ரூபத்தை எடுத்துக்கொண்டு ஆவிர்ப்பவித்தாப்போல், மஹர்ஷிகளுடைய வாக்குகளிலிருந்து நிர்க்களமாய் ப்ரவஹித்திருக்கும் ரஸபரிதமான திவ்யஸூக்திகளுக்கு ஸமாநமாய் ஹ்ருதயங்

கமமான க்ரந்தங்கள் வேறெங்கே இருக்கக்கூடும்? ஆகையால் ஸர்வோத்க்ருஷ்டமான ஆர்யபாஷையைத் தவிர்த்து, வேறு எந்த பாஷையை அவலம்பித்தாலும், ஆர்ய புத்திக்கு ஸமுசிதமான ஸம்ஸ்காரம் ஏற்படாதென்பது தீர்மானம். ஆர்யமநःபரிபாகமும் தகுந்த ப்ரகர்ஷத்தை அடையமாட்டாது என்பதும் நிச்சயம்.

ஆனால் இப்போது சிரகாலமாய் ஆர்யபாஷாப்ரசாரம் குறைவுபட்டு, அப்பாஷையின் தத்வமே இன்னதென்று அறியப் படாமலிருப்பதால், அதை முன்போல் மறுபடியும் ஸர்வோப ஜீவ்யமாக்குவது அஸாத்யமென்று சங்கை உண்டாகக்கூடும். ஆனால் ஆதிகவி முதலான மஹர்ஷிகளின் க்ரந்தங்களில் ஆர்ய பாஷை இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறபடியால், அந்த க்ரந் தங்களை அவலம்பித்துக் கொஞ்சங் கொஞ்சமாய் ஆர்ய பாஷையை மறுபடியும் ஸந்துக்ஷணம் பண்ணக்கூடுமென்று அப்பாஷையின் மஹிமையையும், அந்த க்ரந்தங்களின் குணங்களையும் அறிந்த ஸூக்ஷ்மதர்ஶிகளுக்கு அநுபவஸித்தமாகும். இவ்விதமாக ஆர்ய பாஷாப்ரசார முண்டாக்கி, அப்பாஷையின் நிஜமான ப்ரணா டியை வித்யார்த்திகளுக்கு ப்ரதர்ஶநம் பண்ணி, அதில் அவர்கள் நிஷ்ணாதர்களாய், அதில் ஸர்வ வ்யவஹாரங்களும் நடத்த யோக் யர்களாகத் தேர்ச்சியடைவிப்பது ஆர்ய வித்யாப்ரவசநத்தின் ப்ரதம பீடிகை. ஸம்ஸ்க்ருத பாஷாஜ்ஞாநம் ஸரியாய் ப்ரதிஷ்டி தமாய்விட்டால், அர்த்தஜ்ஞாநம் கூடவே ஸித்தித்துவிடும் என்ப தற்கு ஆக்ஷேபமில்லை. ஸரியான அர்த்தஜ்ஞாநம் ஏற்பட்டால் ஶீலவ்ருத்தங்கள் பரிஷ்கரிக்கப்படுமென்பதற்கும் ஸந்தேகமில்லை. இதனுடன் யமநியமாத்யநுஷ்டாநங்களும் ஸரஸமாக அமையும். இவ்வெல்லா ப்ரகாரங்களாலும் புத்தி, க்ரமேண ஶுபஸ்ரூஷ மாய் மநஸ்ஸும் நிர்மலமாய், விவேகம் மேன்மேலும் வ்ருத்தி யடைய ஆஸ்பதமுண்டாகிறது. விவேகவிருத்திக் கநுகூலமாய் யதார்த்தமான பகவத்பக்தியும் ஸித்திக்கிறது. அதனால் ஒருவன் பகவத்ப்ரஸாதத்துக்குப் பாத்ரமாய், ஸர்வ ஶ்ரேயஸ்ஸுகளுக்கும் பாஜநமாகிறான். ஆகையால் இவ்வரிசையாக ஆர்யவித்யை நமக்கு ஸர்வ ப்ரகாரமான ஸத்ஸம்ஸ்காரத்தை உண்டாக்கி, பரமபுரு ஷார்த்தத்துக்கு யோக்யர்களாக்குகிறதென்பது தீர்மானம்.

ஆனால் இக்காலத்தில் ஸம்பவித்திருக்கும் பல விதமான அஸௌகர்யங்களையும் குளறுபடிகளையும் உத்தேசித்து, ஆர்ய



வித்யா ப்ரவசநோபாயம் எவ்விதமென்பதைப்பற்றி மிகுந்த சிந் தைக்கு இடமுண்டாகிறது. ராஜபாஷையை அப்யஸிக்கவேண்டிய அவஶ்யத்தையும், வ்ருத்தி ஸம்பாதித்துக்கொள்வதில் இருக்கும் நிர்ப்பந்தத்தையும், நம் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் மதபேதங்களை யும் யோசித்து, நம்மில் பலர் ஆர்ய வித்யாப்ரவசநம் இந்தக் காலத் துக்கு யுக்தமல்ல என்கிறார்கள். இப்போது ஸாத்யமுமல்லவென்று நிராசையாகக் கைவிடுகிறார்கள். ஆனால் வஸ்துஸ்திதியை மட்டில் செம்மையாய்ப் பர்யாலோசனை செய்யும்பக்ஷத்தில், நம்முடைய தத்கால நிலைமையாகிய அநிர்வசநீயமான ஊர்ஜிதியானது, நாம் ஆர்ய வித்யையையும் ஆர்யபாஷையையும் கைவிட்டதாலொழிய வேறில்லையென்றும், இன்னும் எவ்வளவுக் கெவ்வளவு இந்த அநா தரம் வ்ருத்தியாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய தைந் யமும் விருத்தியடையுமென்றும், இந்த அநாதரத்தை மாற்றி எவ் வளவு சீக்ரமாய் நம்முடைய ஸ்வவித்யையை அவலம்பிக்க முயற்சி செய்கிறோமோ, அவ்வளவு சீக்ரமாய் நமக்கு ஊர்ஜிதி நிவ்ருத்தி உண்டாகுமென்றும் புத்திமான்களுக்குப் புலப்படும். ஆகையால் ஆர்ய வித்யா ப்ரவசநத்துக்கு எவ்விதமான இடையூறுகள் இருந்த போதிலும், அவைகளை எப்பாடு பட்டாவது விலக்கி, நாம் ஏகோ பித்து அதை ஸாதிக்கவேண்டியது நம் முதற் கடமையாக நிச்ச யித்துக்கொள்ளவேண்டியது. அப்படிப்பட்ட உறுதியும், அதற் கநுகுணமான ஆர்த்தியும், ஆர்ய வம்சத்தில் பிறந்திருக்கும் நமக்கு ஏற்பட்டு விட்டால், அது விஷயத்தில் பகவானுக்கு க்ருபை உண் டாகி நாம் இஷ்டஸித்தி அடைவோம் என்பது உண்மையே.

விசாரிக்குமிடத்து, நாம் அஸௌகரியங்களாகவும் உபரோ தங்களாகவும் நினைக்கும் அம்சங்கள் அவ்வளவு பெரிதல்லவென் றும், அவைகளையெல்லாம் நாம் எளிதில் விலக்கி ஸரியான வித்யா பத்ததி திருத்திக்கொள்ளலாமென்றும் நினைக்க இடமுண்டாகி றது. அதை இப்போது விவரிக்க இடமில்லாமையால் பின்பு விசதமாய்க் கூறப்படும்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

# ஜநகநந்தினீ.

மறுநாள்காலை ஒருசாமப் பொழுதில், பெருமாள் நாச்சியார் திருக்கோலம் தரித்துக்கொண்டவராய்த் திருத்தண்காவில் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்தார். வேதபாராயண கோஷ்டியில் கேசவாசார்யரும், மாதவாசார்யரும், பத்மநாபாசார்யரும் ஒரே ஸ்தலத்தில் உட்கார்ந்திருந்தனர். அப்போது பத்மநாபாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! வரதாசார்யர் தம் குமாரர்க்காகத் தேவரீருடைய கந்நிகையை அபேக்ஷித்ததாகவும், அதற்குத் தேவரீர் ஸம்மதிக்காதபடியால், வரதாசார்யருடைய புத்ரன் ஊரை விட்டுப் போய்விட்டதாகவும், வரதாசார்யர் அதனிமித்தம், கைங்கர்யத்துக்கும் எழுந்தருளாமல், சோகாதுரராக இருப்பதாகவும் செவியுற்றேன். விஷயமென்ன?" என்று சொன்னார்.

"விஷயம் தேவரீர் ச்ரவணத்துக்கு வந்திருக்க, அதைப் பற்றி அடியேனைக் கேட்பானேன்?" என்றனர் கேசவாசார்யர்.

"அப்படிக்கன்று, ச்ருதமான விஷயம் வாஸ்தவமாவென்று கேட்டபடி" என்றார் மாதவாசார்யர்.

"அடியேன் உக்தியால் அதன் வாஸ்தவம் ஏற்படவில்லையா?" என்றார் கேசவாசார்யர்.

"அந்த ஸம்பந்தத்தில் என் திருவுள்ளக்குறைவு?" என்றனர் பத்மநாபாசார்யர்.

"அது அஸங்கதமாயிருந்தால், வரதாசார்யர் அதைப்பற்றித் தேவரீரிடம் ப்ரார்த்தித்திருக்கமாட்டாரே" என்றனர் மாதவாசார்யர்.



"ஆனால் தாத்ருச ஸம்பந்தத்தைத் தேவரீர்கள் அப்யுபகமம் செய்கின்றாற்போலிருக்கின்றதே" என்றார் கேசவாசார்யர்.

"வரதாசார்யருடைய புத்ரன் தேவரீர் புத்ரியைத்தவிர மற்றொரு கந்நிகையை மணப்பதில்லையென்று அத்யவஸித்திருக்கின்றானாம். அவனைப் பெற்றவர் புத்ரப்ரேமையினால் அவ்வித ஸம்பந்தத்தை அபேக்ஷிக்கின்றார்கள். த்ராவிடதேசத்தில் அது ஆசாரத்திலிருக்கின்றது. ஆனபடியால் தேவரீர் ஸஹோதரி புத்ரன் விஷயத்தில் ஈஷத் க்ருபை பண்ணக்கூடாதா?" என்றார் பத்மநாபாசார்யர்.

"ஆனால் தேவரீர்கள் இந்த ரூபமான விவாஹ விஷயத்தில் யுக்தாயுக்தவிசாரம் செய்து நிர்த்தாரணம் செய்துவிட்டதாக யோசிக்கின்றேன்" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"அவர்கள் கஷ்டப்படுகின்றார்களென்றும், விவாஹம் நடந்தால் மிகுந்த வித்யாஸம் தென்படவில்லையென்றும், யோசித்தோம். தர்மசாஸ்த்ர நிஷேதத்துக்குத் தேசாசாரம் பரிஹாரமெனவும் நினைத்தோம்" என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"ஸஹோதரி கஷ்டம் அடியேனுக்குத் தெரியாதா? அவளும் வரதாசார்யரும் வருந்தினால், தேவரீர்கள் வருந்திய அளவு அடியேன் வருந்தமாட்டேனோ? சாஸ்த்ர நிஷேதத்தை ஒப்புக்கொண்டதே: "தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ । ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்தும் இஹார்ஹஸி" । எனும் பகவத்வசநத்தை ஸ்மரித்ததோ? தேசாசாரமென்று சொன்னது சிஷ்டாசாரமெனத் தக்கதோ? சிஷ்டாசாரம் இதை ஸம்மதித்தது எங்கேயாவது தேவரீர்கள் கண்டதுண்டோ? அடியேன் தேசாசாரமென்பதை அநுஷ்டித்துவிட்டால், சிஷ்டரெனப் பெயர்கொண்டவர்கள் சாஸ்த்ரவிச்வாஸித்வத்தை ஸ்வவிஷயத்தில் கொண்டாடுகின்றதில்லையென்று தேவரீர்களே சொல்ல நேரிடாதோ?" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"தேவரீர் கந்நிகைக்கு விவாஹம் விளம்பிக்கின்றதே. அதைப் பற்றித் தேவரீர் யோசித்துத்தா னிருக்கவேண்டும். வரதாசார்யர் குமாரர்க்கும் கொடுக்கத் தேவரீர் ஸம்மதிக்கவில்லையே. குழந்தையை எவ்விடம் தானம் செய்ய எண்ணியிருக்கின்றது?" என்று சொன்னார் மாதவாசார்யர்.

"தானம் செய்ய அடியேன் ஸித்தமாயிருக்கின்றேன். ப்ரதிக்ரஹீதாவைத் தான் காணவில்லை. அடியேனுக்கும் அதனிமித்தமாகத் தேசாடநம் செய்யச் சக்தியில்லை. அடியேனைக்காட்டிலும் ஸமர்த்தர்களாயிருக்கும் தேவரீர்கள் அடியேனுக்கு ஸஹாயம் செய்யக்கூடாதோ" என்றனர் கேசவாசார்யர்.

"அடியோங்கள் விசாரிக்கின்றோம்." என்றனர் பத்மநாபாசார்யர். இதற்குள் திருச்சிந்நம் ஊதிவிட்டார்கள். வரதன் தேசிகன் ஸந்நிதியை விட்டு எழுந்தருளிவிட்டார். மேல்விவரித்தபடி ஸம்பாஷித்த மூவரும் கைங்கர்யார்த்தம் வேத கோஷ்டியை அலங்கரித்தனர்.

"ஜயதி தைவிகம் ஜநநாப்ஜஸ்ய சுக்ல ஹஸ்திநா ஸம்ஸ்து ஹி" - இந்த ச்லோகார்த்தம் ஆறாவது திருநாள் காலையில் எவனுக்கு மனம்புகாதோ, அவன் ஜந்மம் வ்ருதா. பெருமாளை ஸேவித்துவிட்டு அவன் தான் இவன் என்றெண்ணாத கன்னெஞ்சம் இருக்குமோ? இப்போது, "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" எனும் ச்ருத்யர்த்தம் இவனிடந்தான் பொருந்தும் என்று யோசிக்க வேண்டாம்; 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்' எனும் தர்மங்களால் நிருபிக்கப்பட்ட ஸ்வரூபவான் இவன் தானென்றும் எண்ணவேண்டாம்; 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்று அவனைப்பற்றி நினைத்துப் பயம் கொள்ளவேண்டாம்; அவன் ஸ்வரூபம் அஸ்மதாதிகளுக்கு எப்படித் தெரியுமென்று வ்யஸநப்படவும் வேண்டாம். ஒவ்வோருயிரும் யாவர் கண்கட்கு மிலக்கான வெம்பெருமானைத் தயிதனென்றல்லோ அப்போது கொள்ளவேண்டும். இப்போது நம்முன் ஸேவை ஸாதிக்கும் ஸுந்தர விக்ரஹத்தை ப்ருந்தாவநத்தில் தர்சித்த வ்ரஜாங்கனைகள் அவ்வண்ண மன்றோ



ஸம்புத்தி செய்தார்கள். விஷ்ணுராதனும் ஸ்ரீ பகவானைப்பார்த்து, 'க்ருஷ்ணம் விதுஃ பரம் காந்தம் நது ப்ரஹ்மதயா முநே' என்று சொன்னானன்றோ? அவனைக் கேவலம் காந்தனா யெண்ணினார்கள். ஏன் அவர் ப்ரஹ்மமென்று எண்ணவேண்டும்? ப்ரஹ்மம் யாதென்றால், 'யதோ வா இமாநி' என்றாரம்பித்து, 'தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி' என்று முடியும் ச்ருத்யர்த்தம் விசாரித்தன்றோ அது ஏற்படும்? அதற்காக 'ஜந்மாத்யஸ்ய யதஃ' என்கிற ஸூத்ர பாஷ்யமும் காலக்ஷேபம் செய்யவேண்டு மன்றோ? இப்படி, ஜகத்காரணனென்றும், அந்தர்யாமியென்றும், அம்ருதப்ரதனென்றும், பரமம் மஹேச்வரனென்றும், பரப்ரஹ்மமென்றும் அறியவல்லவர் அறியட்டும். கோபீஜநவல்லபன் தன்னைக் காந்தனாய் வரித்தவர்க்கு அந்தக் கஷ்டமெல்லாம் வேண்டாவாம். அவனைத் தயிதனென்றும் காந்தனென்றும் அடைந்தவர்க்குத் 'தய்' எனும் தாதுவின் அர்த்தத்தால் ஸித்தித்த பரமக்ருபையை அவனே பண்ணக் காத்திருக்கின்றான். இவ்வண்ணம் பகவான் ஸந்நிதிவீதியி லெழுந்தருளவே, "அவன்தான் இக்கச்சியூரில் அவதரித்தான். அதனால் அவ்வூர் உயர்ந்தது. மஹாலக்ஷ்மியும் அந்தக் காரணத்தால் அந்நகரத்தை விடாமல் அலங்கரித்து நிற்கின்றாள்" என்றல்லோ அவனழகில் ஈடுபட்ட ஜநங்கள் சிந்திக்க வேண்டும். 'த்ருணாம் நிமேஷ பயஸாயுஜாய வ்ருத்தி ஸுமவதோ ஸுவி' எனும் வண்ணம், தர்சிக்கப்பட்டவர்க்குப் பரமபுருஷார்த்தப்ரதனான கோபாலனாய் வரதன் ஸேவை ஸாதிக்கின்றான்.

"நீரகத்தாய் நெடுவரையி னுச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்தகச்சி
யூரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகாவுள்ளாய்
உள்ளுவா ருள்ளத்தாய் உலகமேத்தும்
காரகத்தாய் கார்வானத் துள்ளாய்கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால்மன்னு
பேரகத்தாய் பேராதென் னெஞ்சினுள்ளாய்
பெருமானுன் திருவடியே பேணினேனே".

எனும் வண்ணம் நெடுவரையின் உச்சி மேலோன் கச்சியில் பலவுருவாய் நிறைந்து நின்று, பின் உள்ளுவார் உள்ளத்தானுகி, அங்கும் பேராதிருக்கும் திருவுருவைக் கொள்ளக் கண்ட ஜநங்கள் கோபீஜநபாவத்தை மநஸ்ஸால் அடைந்து,

கல்லெடுத்துக் கன்மாரி காத்தாயென்றும்
காமருபூங் கச்சியூ ரகத்தாயென்றும்
வில்லிறுத்து மெல்லியள்தோள் தோய்ந்தாயென்றும்
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தேயென்றும்
மல்லடர்த்து மல்லரையன் றட்டாயென்றும்
மாகீண்ட கைத்தலத்தென் மைந்தாவென்றும்
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லேயென்று
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றுளே.

எனும் வண்ணம் மனமுருகப்போகாதோ? மற்றவர் அநுபவம் எங்ஙனமாகிலு மிருக்கட்டும். ஜநகநந்தினி இவ்வண்ணமெல்லாம் பகவானைக்கண்டு சிந்தித்தாள்; உட்கொண்டாள்; அவ்விடம் விட்டுப் பேரானை யநுபவித்தார். "[illegible]।' என்று தேசிகன் ஸாதித்தது அவளுக்குப் பலித்தது. '[illegible]॥' என்று கோபாலவிம்சதி ச்லோகத்தை அநுஸந்தித்தனள்.

பெருமாள் மண்டபமேற எழுந்தருளித் திரும்புங்கால், மீளவும் ஸந்நிதி வீதி யலங்கரித்தபோது மலர்வர்க்கம் வாடி, நீண்ட மென்மாலைத் தோளசையவும், ஸ்ரீபாதம் தாங்கியவர் அடிவைப்பால் கிளம்பியுயர்ந்த வீதியின் ரேணுக்களால் மலினமடைந்த கொண்டையும், திருமேனியும், ஸேவிப்பவர்களுடைய த்ருஷ்டிகளையும் உள்ளங்களையும் கவரவும், எம்பெருமான் வேகமே நடப்பதை நோக்கி, நம் கதாநாயகி "இந்தப் பாக்யம் எனக்கருளிய லோகநாதன் இதன் மேல் என்ன பாக்யம் தான் தரப்போகின்றுன்" எனச் சிந்தித்து நின்றனள்.



அவள் சிந்தித்தவண்ணம், அவளுக்கு அநுக்ரஹிக்க ஸங்கல்பித்த மஹா தயாதீபன், அயோத்யா ஜநங்கள், "[illegible]॥" என ப்ரார்த்தித்துப் பெருத பாக்யத்தை அவளுக்குத் தரக் கருதினுன். அவ்வண்ணம் பெருமாளை அன்று ஸாயங்காலம் ஸந்நிதி வீதியில் ஜநகநந்தினி தர்சித்தனள். நாற்புறமும் சூழ்ந்து நடந்த ஜநக்கூட்டமாகின்ற ஸமுத்ரத்தின்மீது, ஜலத்தின் மேல் நிச்சலமாய் ஸஞ்சரிக்கும் நாவமெனக் கஜேந்த்ரன் நிச்சலமாய் வஹிக்கப்பட்டானுதலால், பெருமாள்ஸேவை யாவர்க்கும் த்ருப்தியாய் லபித்தது.

ஸாயங்காலம் ஸந்நிதிக்குச் செல்வதற்கு முன், கேசவாசார்யர் ஜநகநந்தினியை அழைத்து, "குழந்தாய்! உனக்கு விவாஹோசிதகாலம் கடக்கின்றது. காலதேச வைகுண்யத்தால் தக்க வரன் கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. உனக்குப் பன்னிரண்டு பிராயம் முடியப்போகின்றது. உனக்கு ஐஹிக விஷயங்களிலும் ஸாமாந்யமான பெண்களைக்காட்டிலும் ஜ்ஞாநம் விசேஷித்திருக்கின்றது. என்னுடைய ப்ரயத்நம் உன்னுடைய க்ஷேமத்தை முக்ய லக்ஷ்யமாயுடையது. ஆதலால் உனது பாவம் இருக்கின்றபடியைச் சொன்னுயானுல், அதற்கு அநுகூலமாக நானும் ப்ரயத்நம் செய்கின்றேன்" என்று சொன்னுர்.

இதைக்கேட்டு ஜநகநந்தினியும் "அப்பா! அடியேனை இப்படித் தேவரீர் கேட்கலாமோ? அடியேன் ப்ரஹ்மகுலத்தில் ஜநித்தேன்; அதிலும் தேவரீர் புத்ரியாகப் பிறந்தேன். அடியேனுக்கு அபாந்தவக்ருதமான ஸ்நேஹப்ரவ்ருத்தி யுண்டாகமாட்டாதே. அடியேனுக்கு விவாஹப்ரயுக்தமாக யாதொரு வ்யக்தி விசேஷத்திலும் பாவம் உதிக்கவில்லை. அது தேவரீருடைய திருவுள்ளத்தை அநுஸரித்துப் பின்னுல் ஏற்படும்" என்று சொன்னுள்.

"குழந்தாய்! ஸ்ரீநிவாஸன் உன்னையே விவாஹம் செய்துகொள்வதாக நிச்சயம் செய்துகொண்டு, அதற்கு நான் ஸம்ம

திக்காத காரணத்தினல், இந்த ஊரைவிட்டு எங்கேயோ போய் விட்டானும். அதனிமித்தம் உன் அத்தையும் அவள் பர்த்தாவும் வ்யஸநத்தில் மூழ்கியிருக்கின்றனர்கள். எனக்கும் அதைப்பற்றி வருத்தமாயிருக்கின்றது. அவனுக்கு உன்னைத் தாநம் செய்வதில் ஶாஸ்த்ரம் நிஷேதிக்கின்றது. எனக்கும் க்யாதிவிரோதம் உண்டாகும். ஆனாலும் உனக்கு அவனைப் பர்த்தாவாக அடைய விருப்பம் உண்டானல் சொல். உன் க்ஷேமத்தின் பொருட்டு மேற்சொன்ன ப்ரதிபந்தங்களை நான் பாராட்டாமல் விடுகின்றேன்" என்று சொன்னர் கேசவாசார்யர்.

"அப்பா! பந்துத்வப்ரயுக்தமான பரிசயம் தவிர வேறு விதமான விருப்பம் அவனிடம் அடியேனுக்கில்லை. ஆதலால் தேவரீர் வேறு யோசனை செய்து ஶாஸ்த்ரத்தையும் திரஸ்கரிக்க வேண்டாம்; க்யாதிவிரோதமும் ஸம்பாதிக்கவேண்டாம். தேவரீர் எந்த வரனைப்பார்த்து அடியேனைத் தாநம் செய்தாலும் ஸரியே; அந்தப் புருஷனையே அடியேன் பர்த்தாவாக விஶ்வஸித்துப் பூஜிக்க ஸித்தமாயிருக்கின்றேன்" என்று ஜநகநந்தினி மொழிந்தாள். கேசவாசார்யர் உடனே ஸந்நிதிக்குச் சென்றார்.

வைசாக உத்ஸவத்தின் விபவம், யானை வாஹநத்தின்மீது வரதன் முரங்கன் வீதி எழுந்தருளிக் கச்சிவீதியில் திரும்பிக் கச்சீஶ்வரன் கோவில் முன்பாகப் பூப்பந்தலின் கீழ் அமர்ந்தகாலையில் ப்ரகாசிப்பது போல், வேறு அவஸரங்களில் ப்ரகாசிக்கமாட்டாது. அன்றும், பெருமாள் அந்த ராஜவீதியை மெள்ளமெள்ளக் கடந்து, மண்டபத்தின் கீழ்ப்புறமாக ஏகாம்ரேசன் ஆலயத்தின் முன் சென்றபோதன்றோ அவ்விபவத்தின் பரமாவதி ஏற்படுகின்றது. அங்கே நடப்பதை ஏசலென்பார். யாரைப் பார்த்துப் பகவான் ஏசவேண்டும்? ஏகாம்ரநாதனை நோக்கி "என்னைப் பார், என்னழகைப்பார்; உன்னைப்பார், உன்னுருவைப்பார்" என்று சொல்லவா தேவாதிராஜன் அங்கு சென்றனன்? இரண்டு நாள் அவன் அங்கேகிச் சங்கரனை ஏசவும், ஒருநாள் அவனை ஏச்



சங்கரன் பரிவாரத்துடன் விஷ்ணுகாஞ்சிக்குச் செல்லவும், யார் ஏற்பாடு செய்தார்களோ தெரியோம். மந்தமதிகள் களித்துத் தமக்கு உள்ள அறிவையும் இழந்து, பித்தம் தலைக்கேற இவை ஸமயமாகின்றன. ஸ்தலபுராண ப்ரகாரம், தன் அநுக்ரஹத்தை யடைந்த பார்வதிக்கும், அவள் தவம் முடிவுபெற்ற பலனாக வந்து அவளை மணம்புரிந்த த்ரிலோசநனுக்கும், வருஷத்துக்கொருதரம் ஸேவை ஸாதிக்க எழுந்தருளினனென்றால் பொருந்தும். மற்றவையெல்லாம் மநுஷ்யக்ருதம். "ப்³ரஹ்மவிஷ்ணுஶிவாக்²யாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி ஸமவாப்நோத்யேக ஏவ ஜநார்த³ந:", என்றும், "ப்³ரஹ்மத்வே ஸ்ருஜதே விஶ்வம் ஸ்தி²தௌ பாலயதே ஹரி: | ருத்³ரரூபாய கல்பாந்தே", என்றும், "ஸம்ஸ்ருஷ்டிஸ்தி²திநாஶாநாம் ஸமவாப்நோதி யோ ப³லம் | ஸ ஏவ ஸர்வேஶ்வரஸ்ஸம்ஹர்த்தா கரோதி," என்றும், ஸ்ரீ விஷ்ணுபுராண வசநங்களை ஆதரித்துத் தேவாதிராஜன் தானே சங்கரனுக அவதரித்த உண்மையை அது தெரியாதவர்க்கு உணர்த்தும்படி ஏகாம்ரநாதன் கோவில் முன் சென்று காட்டுகின்றானெனக்கூடும். இந்த விஷயம் எங்ஙனமாகிலும், ஒருமாவின் கீழமர்ந்த தேவன்கோவில் உருவமைந்த மண்டபத்தினுள்ளேநிற்கும், கரிமாவின் மேலிருந்த கடவுள் தன்னைக் கண்ணாரக் கண்டுகக்கும் காதல்தன்னல், அத்தெருமண்ட கூட்டத்தையும், தீவட்டி வெளிச்சத்தையும், மத்தாப்பூவின் மிகுந்த ப்ரகாசத்தையும், மற்ற ஸந்நிவேசத்தையும் ஒருதரம் கண்டவர், வாழ்நாள் முழுவதும் அவற்றை மறக்க முடியாது.

இப்படி ஏசல் என்பது முடிந்தது. பெருமாளும் கங்கைகொண்டான் மண்டபத்தில் எழுந்தருளினர்.

மங்களதீர்த்தக் கரையில் கேசவாசார்யர் போய் உட்கார்ந்தனர். உடனே பத்மநாபாசார்யரும் அதே ஸ்தலத்தில் வந்து உட்கார்ந்தார். அவர் கேசவாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! நாவல்பாக்கம் நரஸிம்ஹாசார்யர் உத்ஸவத்துக்கு எழுந்தருளியிருக்கி

றார். அவருடைய ஜேஷ்டகுமாரன் வீரராகவனும் வந்திருக்கின்றான். அவன் மைஸூர் பாடசாலையில் தர்க்கம் வ்யாகாரணம் இரண்டிலும் நல்ல பாண்டித்யத்தை ஸம்பாதித்துக்கொண்டு இவ்விடம் வந்திருக்கின்றான். தேவரீருடைய கந்நிகைக்குத் தக்கவராக அடியேனுக்குத் தோற்றுகின்றது” என்று சொன்னார்.

“பிள்ளையைக் கடாக்ஷித்ததோ?” என்றார் கேசவாசார்யர்.

“பிள்ளையைப் பார்த்தேன். அவனுக்கு இருபது, இருபத்திரண்டு வயஸ் இருக்கும். பார்வைக்கு விலக்ஷணமாயும் இருக்கின்றான்” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

“தேவரீருடைய உக்திகள் திருப்தியாயிருக்கின்றன. அந்த ஸ்வாமியோடு இந்த விஷயத்தைப் பற்றி யாதேனும் ப்ரஸ்தாபித்ததுண்டோ?” என்று கேட்டார் கேசவாசார்யர்.

“ஸாக்ஷாத்தாக ப்ரஸ்தாபிக்க வில்லை. பிள்ளையினுடைய யோக்யதையைப் பற்றி ஸம்பாஷிக்கையில், அவனுக்கு க்ரஹஸ்தாச்ரமத்தை ஸம்பாதித்துக்கொள்ள யுக்த வயஸ் வந்துவிட்டதாகவும், தகுந்த கந்நிகை நேரிட்டால் விவாஹம் செய்துவிடலாமென்றும் அந்த ஸ்வாமி அபிப்ராயப்படுகின்றார்” என்றனர் பத்மநாபாசார்யர்.

“நாளை மத்யாஹ்நம், அடியேனுடைய க்ரஹத்துக்கு க்ருபைசெய்து எழுந்தருளினால், இரண்டுபேரும் அந்த ஸ்வாமியைப் போய்த் தண்டன் ஸமர்ப்பித்து விஷயத்தை ப்ரஸ்தாபிப்போம்” என்று சொல்லி முடித்தார் கேசவாசார்யர்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

# ப்ராஹ்மண்ய ஸ்வரூபம்.

## மதங்கோபாக்யாநம்.

“ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய: க்ருத:, ஊரூ ததஸ்ய யத்வைச்ய:, பத்ப்யாம் சூத்ரோ அஜாயத,” என்று ச்ருதியிலும், ‘முகபாஹூரு பஜ்ஜாநாம்’, என்று மந்வாதி ஸ்ம்ருதிகளிலும், ‘சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்,’ என்று கீதாதிகளிலும், ஜந்மஸித்தங்களாகச் சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யத்தை, ஏதோ சில ஜ்ஞாநாநுஷ்டாநங்களால் அடைய விரும்பி, அப்படியே தாங்கள் அடைந்துவிட்டதாகவும் நினைத்துக்கொண்டு, ப்ராஹ்மணர் என்று பெயர்பூண்டு, சில ப்ராஹ்மணோபாஸர்களையும் தங்கள் அந்தேவாஸிகளாக்கி, கீழ்ச்சொன்ன ப்ராஹ்மண்யம் ஸர்வ ஸாதாரண மென்று, ஆங்காங்கு ஸப்ரமாணம் உபந்யஸித்து வரும் அதுநாதந சில மதஸ்தர்களையும், சில நான்காவது வர்ணத்தாரையும், நாம் ஸுப்ரஸித்தமாகப் பார்க்கிறோம். இது விஷயமாய்ப் பஞ்சமவேதமென்று ப்ரஸித்தியடைந்த ஸ்ரீ மஹாபாரதத்தில் ஆநுசாஸநிக பர்வத்தில், மூன்றாவது அத்யாயத்தில், சொல்லப்பட்டிருக்கும் ஓர் உபாக்யாநத்தையும் இன்னும் ப்ரமாணாந்தரங்களையும் எழுதப்படுகிறது.

மேற்படி அத்யாயத்தில் ஸ்ரீ தர்மபுத்ரர் ஸ்ரீ பீஷ்மரைப் பார்த்து “புத்திமத்வம், சாஸ்த்ரஜ்ஞாநம், அநுஷ்டாநம், முதலிய ஸத்குணங்களாலும், வயஸ்ஸினாலும், வ்ருதங்களினாலும், உம்மைப் போன்றவர்கள் யாருமில்லை. ஆகையால் தர்மம் தெரிந்தவர்க்குள் ச்ரேஷ்டரான உம்மைக் கேட்கின்றேன். க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என்னப்படுகிற மூன்று வர்ணத்தாரும் மஹத்தான தபஸ்ஸினாலாவது கர்மத்தினாலாவது சாஸ்த்ரஜ்ஞாநத்தினாலாவது, யாதொரு உபாயத்தினால் ப்ராஹ்மண்யத்தை அடையக்கூடுமோ? அதை எனக்குச் சொல்லவேண்டும்” என்று ப்ரச்நம் பண்ணினார்.

அதைக் கேட்ட ஸ்ரீ பீஷ்மர், "ராஜனே! ப்ராஹ்மண்யம் மற்ற மூன்று வர்ணஸ்தரால் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அடைய முடியாதது. அது ஸர்வப்ராணிகளுக்கும் உத்தமமான ஸ்தா நம். அநேக யோநிகளில் பிறந்துபிறந்து ஸம்ஸரிக்கின்ற ஜீவன் புண்ய விசேஷத்தால் ப்ராஹ்மணனாக ஜநிக்கின்றான். இது விஷயத்தில் ஒரு சண்டாளனுக்கும் ஒரு கர்த்தபிக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்." என்று சொல்லி அந்த ஸம்வாதத்தை உரைக்கத் தொடங்கினார்.

"ஒரு ப்ராஹ்மணனுக்கு ஸர்வ ஸத்குணாலங்க்ருதனான மதங்கன் என்று ஒரு புத்திர னிருந்தான். அந்தப் புத்திரன், யாகம் செய்வதற்குரிய ஸாமக்ரிகளைச் சேகரிப்பதற்காகப் பிதாவினால் நியமிக்கப்பட்டுக் கோவேறு கழுதைகள் கட்டிய ரதமொன்றின் மேல் ஏறிக்கொண்டு போகையில், அக்கழுதைகளில் ஒன்றை அதன் தாய் காண அதன் மூக்கில் வ்ரணம் உண்டாகும்படி மிகவும் அடித்தான். அதனிடம் மிகவும் அன்புகொண்ட அந்தக் கர்த்தபி மூக்கில் வ்ரணத்துடன் கூடிய அந்தக் கழுதையைப் பார்த்து, மிகவும் க்லேசப்பட்டு, "நீ வருத்தப்படாதே. இவன் சண்டாளனாகையினால் உன்னை அடிக்கின்றான். ப்ராஹ்மண ஜாதியில் பிறந்தவன் ஹிம்ஸை செய்யமாட்டா னென்றும், எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹத்துடன் இருப்பானென்றும் சொல்லப்படுகிறது. ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆசார்யனாய் ஹிதத்தைச் சொல்லுகிற அந்தணன் ஹிம்ஸையைச் செய்வானோ? இவனோ பாபம் செய்வதையே ஸ்வபாவமாக உடையவன். ஆகையால் பாலனான உன்னிடத்தில் தயை இல்லாதவனாய்த் தனது சண்டாள ஜாதிக்குரிய தொழிலை அநுஷ்டிக்கின்றான். ஜாதிஸ்வபாவமானது புத்தியைக் கெடுத்துவிடுகின்றது," என்று சொல்லிற்று.

கர்ணகடோரமான அந்த வார்த்தைகளைக் கேட்ட மதங்கன் உடனே ரதத்தை விட்டிறங்கி அத்தாய்க் கழுதையை நோக்கி, "ஓ கர்த்தபி! என்னுடைய தாயானவள் எவனால் தூஷிக்கப்பட்டாள்? எந்தக் காரணத்தினால் என்னைச் சண்டாளனென்று அறிகின்றாய்? எந்தக் காரணத்தினால் என்னுடைய ப்ராஹ்மண்யம் போய்விட்டது? ஓ புத்திமதியான ராஸபி! இவற்றையெல்லாம் ஸத்யமாக எனக் குரைப்பாய்," என்று கேட்டான்.



அதைக்கேட்ட கர்த்தபி, அந்த ப்ராஹ்மணபுத்ரனைப் பார்த்து, "நீ நாவிதனான ஒரு சூத்ரனால் அதிக மதமுள்ள ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயினிடம் உண்டானாயாதலால் சண்டாளனாகப் பிறந்தாய். அதனால் உனக்கு ப்ராஹ்மண்யம் போய்விட்டது," என்று சொல்லிற்று.

அதைக் கேட்டு மதங்கன் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான். அங்கு அவன் பிதா அவனைப் பார்த்து, "உன்னை யாகம் செய்யவேண்டிய ஸாமக்ரி ஸம்பாதநத்துக்காக அனுப்பினேன். நீ ஏன் வ்யர்த்தமாகத் திரும்பிவந்தனை? (க்ஷேமமாயிருக்கிறாயா? ஸ்வாஸ்த்ய) உனக்கு ஸௌக்யக் குறைவு உண்டாயிற்றா என்ன?" என்று கேட்டார்.

அதற்கு மதங்கன், "ஓ பிதாவே! சண்டாளயோநியில் ஜநித்தவனுக்கும் மற்ற நிஹீநஜாதியில் ஜநித்தவனுக்கும் எப்படி க்ஷேமம் உண்டாகும்? எவனுக்கு எனது தாய் போன்றவள் தாயாகின்றாளோ, அவனுக்கு எவ்விதமாவது ஸௌக்யம் உண்டாமோ? மநுஷ்ய ஜாதியில் பிறவாத திர்யக்கான கழுதையானது நான் ப்ராஹ்மணஸ்த்ரீயினிடம் சூத்ரனுக்குப் பிறந்தவனெனச் சொல்லுகின்றது; ஆகையால், அதனிமித்தம் நான் மஹத்தான தபஸ் செய்யப்போகின்றேன்" என்று சொல்லிவிட்டுத் தபஸ்ஸில் நிலைத்த புத்தியைக் கொண்டவனாய், ஒரு பெருங்காட்டை யடைந்து, கடோரமான தபஸ்ஸை அநுஷ்டித்து, ப்ராஹ்மண்யத்தை ஸுலபமாக அடையவெண்ணித் தனது தபஸ்ஸால் தேவர்களுக்கும் தாபத்தை உண்டுபண்ணினான்.

அப்படித் தபஸ் செய்யும் மதங்கனிடம் தேவேந்த்ரன் ப்ரஸந்நனாகி "நீ மாநுஷ ஸுகங்களை விட்டு எதற்காகத் தபஸ் செய்கின்றாய்? வேண்டிய வரங்களைக் கேள்; தருகின்றேன்," என்று சொல்ல, அவன், "ப்ராஹ்மண்யத்தை அடைய ஆசைப்பட்டுத் தபஸ் செய்கின்றேன். அந்த வரனைக் கொடுத்தீராகில் தபஸ்ஸை விட்டுப் போகின்றேன்" என்று சொன்னான்.

அதற்கு இந்த்ரன், "ஓ மதங்கனே! ஒரு காலத்திலும் உன்னால் அடையக்கூடாத ப்ராஹ்மண்யம் உன்னால் விரும்பப்படுகிறது. மஹத்தான புண்யம் செய்யாதவர்களால் அடையமுடியாத ப்ராஹ்மண்யத்தைக் குறித்து ஆசைகொண்ட துர்புத்தி யடைந்த

நீ தபஸ்ஸினால் நசித்துவிடுவாய். ஆதலால் தபஸ்ஸை விட்டுவிடு. ஸர்வப்ராணிகளுக்குள் எந்த ப்ராஹ்மண்யம் சிறந்ததோ, எது தபஸ்ஸை அதிக்ரமித்ததோ, தேவாஸுர மநுஷ்யர்களுக்கும் எது பரிசுத்தியைத் தரக்கூடியதோ, அந்த ப்ராஹ்மண்ய விஷயத்தில் ஆசைப்பட்டுத் தபஸ் செய்வதால், நீ நசித்துவிடுவாய். சண்டாள யோநியில் பிறந்த உன்னால் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் அந்த ப்ராஹ்மண்யம் அடையத்தக்கதன்று," என்று சொன்னார்.

இதைக் கேட்ட மதங்கன் ப்ராஹ்மண்யத்தில் ஆஸ்தை கொண்டு, ஒற்றைக் காலில் நின்றுகொண்டு நூறு வருஷகாலம் த்ருடமான ஸங்கல்பத்துடன் உக்ரமான தபஸ்ஸைப் பண்ணினான். மறுபடியும் அவனிடம் இந்த்ரன் ப்ரஸந்நனாகி, "ஓ சிறுவனே! நீ ஒருநாளும் ப்ராஹ்மண்யத்தை அடையப்போகின்றதில்லை. நீ ஸாஹஸம் செய்யாதே. இது உனக்குத் தர்மமன்று. ப்ராஹ்மண்யத்தை அடைய இச்சித்து அமார்க்கத்தில் ப்ரவர்த்தித்து நசித்துவிடுவாய். ஓ துர்புத்தியுடையவனே! இந்த ஜந்மத்தில் உன்னால் ப்ராஹ்மண்யம் அடைய முடியாதது. நான் அடிக்கடித் தடுத்தும் கேட்காமல் தபஸ்ஸைச் செய்கின்றாய். திர்யக் யோநியில் பிறந்த ஜீவன், மானிட ஜந்மத்தை முதலில் அடையும்போது, சண்டாளனாகவோ சக்கிலியாகவோ பிறக்கின்றான். பிறகு, ஆயிர வருஷகாலம் அந்தச் சரீரத்தோடு இருந்து, அதன் பிறகு, சூத்ர ஜந்மாவை அடைகின்றான். சூத்ரஜாதியில் மூவாயிரம் வருஷமிருந்து, வைஶ்யனாய்ப் பிறக்கின்றான். ஆறாயிரம் வருஷம் வைஶ்யனாயிருந்து, பிறகு க்ஷத்ரியனாய் ஜநிக்கின்றான். அந்த ஜாதியில் ஆறாயிரம் வருஷங்களிருந்து, பின்பு நிஹீந ப்ராஹ்மணனாகின்றான். அப்படி ஐந்நூறு வருஷமிருந்து, ஜாபக ப்ராஹ்மணனாய் ஜநிக்கின்றான். நானூறு வருஷம் வரையில் அந்த ஜந்மத்திலிருந்து, பிறகு ஶ்ரோத்ரிய ப்ராஹ்மணனாய்ப் பிறக்கின்றான். அந்த ஜந்மத்தில் பகு காலமிருந்து, காமம் க்ரோதம் முதலான சத்ருக்களை ஜயித்து, (ஆத்மஜ்ஞாநத்தை யடைந்து, பக்தியைப் பண்ணி,) மோக்ஷத்ந்த யடைகிறான். ஓ மதங்கனே! இவ்விதம் தெரிந்த நான் உன்னை ஏவுகின்றேன். வேறு வரனைக் கேள். ப்ராஹ்மண்யம் உன்னாலடையமுடியாது என்பது ஸுப்ரஸித்தம்" என்று சொன்னார்.



தேவேந்த்ரன் இவ்வாறு மொழிந்ததும், அதைக் கேட்காமல் த்ருடாபிஸந்தியோடு ஆயிரம் வருஷம் வரையில் ஒற்றைக்காலை மாத்ரம் பூமியில் வைத்துக்கொண்டு நின்று, மதங்கன் தபஸ்ஸைப் பண்ண, அப்போது ப்ரஸந்நமான இந்த்ரன், முன்போலவே ப்ராஹ்மண்யம் மதங்கனால் அடையமுடியாது என்று சொன்னான்.

அப்போது மதங்கன், "இந்த ஆயிரவருஷ காலம் ஒற்றைக் காலில் நின்றுகொண்டு கடோரமான தபஸ்ஸைப் பண்ணினேனே. ஏன் எனக்கு ப்ராஹ்மண்யத்தைக் கொடுக்கக்கூடாது?" என்று வினவ, இந்த்ரன், "சண்டாளயோநியில் பிறந்தவனால் ஒரு காலத்திலும் ப்ராஹ்மண்யம் அடைய முடியாதது; ஆகையினால் வேறு வரனைக் கேள்; உன்னுடைய தபஸ் வ்யர்த்தமாக வேண்டாம்" என்று சொன்னார்.

அதைக் கேட்ட மதங்கன், அதிக வருத்தத்தோடு கூடினவனாய்க் கயாக்ஷேத்ரத்துக்குப் போய், அங்குஷ்டத்தினால் நின்றுகொண்டு, வ்ருதத்தால் சரீரம் எலும்பு சர்மம் இவை மாத்ரம் சேஷமாக இருக்கும்படி, நூறு வருஷம் வரையில் உக்ர தபஸ்ஸைச் செய்ய, இந்த்ரன் ப்ரஸந்நனாகி, மதங்கன் கையைப் பிடித்துக்கொண்டு, "ஓ மதங்கனே! ப்ராஹ்மண்யம் உனக்கு விருத்தமானது. அதை நீ அடைய முடியாது. அதை அடைந்தவர்களும், அது காமம் முதலான சத்ருக்களால் சூழப்பட்டிருக்கின்றபடியால், அதை ஸரியாக ரக்ஷித்து ஸுகத்தை யடைகின்றனர். அதை ஸரியாகக் காப்பாற்றாதவர்கள் அதிக துக்கத்தை அடைவார்கள். ஆகையால் ஸர்வப்ராணிகளுடைய யோகக்ஷேமங்களும் ப்ராஹ்மணனிடம் நன்றாக ஏற்றிடப்பட்டிருக்கின்றது. ப்ராஹ்மணர் மூலமாகத் தேவர்களும் பித்ருக்களும் த்ருப்தியைப் பொருந்துகின்றனர். ஸர்வபூதங்களின் மத்யே, ப்ராஹ்மணன் உத்க்ருஷ்டன் எனப்படுகின்றான். ப்ராஹ்மணன் எதெதை இச்சிக்கின்றானோ, அதை அப்படியே செய்கின்றான். அநேகம் யோநிகளில் ஜீவன் ஸஞ்சரித்து மறுபடியும் மறுபடியும் பிறந்து, ஏதேனுமொரு முடிவான ஜந்மத்தில், ப்ராஹ்மண்யத்தை இவ்வுலகில் அடைகின்றான். ஸம்ஸ்காரமற்ற புத்தியுடையவரால் அடையக்கூடாத ப்ராஹ்மண்யத்தில் ஆசையை நீ துறந்து, வேறு வரம் கேள். இந்த வரம் உனக்கு ப்ராப்தமாகாது" என்று சொன்னார்.

சாத்ரிகளுக்கு, ‘வைஶாகே ஶுக்லபக்ஷே து ரக்ஷணார்த்தம்’, என்கிற சக்ராப்ஜ மண்டல தீக்ஷையைப் பெறுவதற்கு யோக்யமான காலமென்று அதை எடுக்கப்பட்டிருக்கின்றது. ‘வைஶாகே ச ஸம்ஸ்காரஃ’, என்று வைசாக மாஸம் சக்ராங்கநத்துக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

இது நிற்கப் பஞ்சகால பராயணர்கள், யோக காலத்தில் அநுஸந்திக்கிற ஶாஸ்த்ரத்தாலே இதை ஶ்ருதி நிர்த்தேசிக்கையாலும் இந்த மாஸம் ஸர்வோத்க்ருஷ்டம்.

‘யோ ப்ரஹ்மாணம் விதநாதி பூர்வம்। யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை’ ॥ என்கிறபடியே ஹிரண்ய கர்ப்பனுக்கு உபதேசித்த வேதங்களை மதுகைடபர்கள் அபஹரிக்க, பகவான் மதுகைடபர்களை ஸம்ஹரித்து ப்ரஹ்மாவுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்தான். இம்மாஸம் அம்மதுஸூதநனை அதிஷ்டாந தேவதையாக உடையது.

‘வ்யாப்தோ ஜகாயயவஃ’, என்று ஶ்ருதிப்ரஸித்தனை ப்ரஹ்லாதன், கண்ணன் எங்குமுளன் என்று சொல்ல, ‘ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்’, என்கிறபடியே, அவன் வாக்யத்தை மெய்யாக்குவதற்காகவும், ‘வ்யாப்திம் ச பூதேஷ்வகிலேஷு’, என்கிறபடியே, நாராயண ஶப்தத்தில் தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸ த்வயஸித்தங்களான, தன்னுடைய அந்தர்வ்யாப்தி பஹிர்வ்யாப்திகளை ஸத்யம் ஆக்குகைக்காகவும், தன் ப்ருத்யனை சதுர்முகன், மநுஷ்யனும், ம்ருகங்களாலும், ஆயுதத்தினும், பகலிலும், ராத்ரியிலும், ஹிரண்யனுக்கு மரணம் உண்டாகாதபடிக் கொடுத்த வரத்தை ஸத்யமாகச் செய்யவும், ‘ஸந்த்யாயாம் நரஸிம்ஹரூபம்’, என்கிறபடியே, நரங்கலந்த சிங்கமாய் ஸந்த்யாகாலத்தில், ‘விதார்ய ஹிரண்யவக்ஷஸ்ஸ்தலம்’, என்கிறபடியே, தன் வள்ளுகிரால் ஹிரண்யனைக் கல்மார்வங்கீண்ட நம் சிங்கபிரான் அவதரித்த மாஸமாகையாலும், இந்த மாஸம் எல்லாராலும் ஸ்மரிக்கத்தக்கது.

பெருமாள் கோவில்
ஆடிமீ 26உ.
நாச்சியார் ஸந்நிதி – வரததாஸன்.

ஸ்ரீ:.
ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஸு புரட்டாசிமீ [ஸஞ்சிகை 8.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**காஞ்சீபுரம்.**

இந்தியாவில் நகரநிர்மாண விஷயமாக ராஜாங்கத்தாரால் வரவழைக்கப்பட்ட ப்ரொபெஸர் கெட்டிஸ் என்பவர் காஞ்சிபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அதன் விசாலமானவையும், இருபுறங்களிலும் வ்ருக்ஷபங்திகளாலும், நன்கமைந்த வஸதிகளாலும் அலங்கரிப்பட்டவையுமான வீதிகளையும், தேவாலயங்களையும் யோசித்து, இவ்வித நகரம், இந்தியாவிலும், பூமியில் மற்றெங்கும் காண இயலாதென்றும், நகரங்களின் அமைப்பு காஞ்சிபுரம் அமைந்த வண்ணம் ஏற்படுதல் யுக்தமென்றும் அபிப்ராயப்பட்டனர். நகர்க்குள் கச்சிமாநகரம் முக்யமானதென்பது பெரியோர் கொள்கை.

**தாழ்த்திய ஜாதியரை உயர்த்தும் ஸபை.**

ஹிந்துமதமென்பதற்கு ப்ரச்சந்ந விரோதிகளும் ப்ரகாச விரோதிகளும் கூடும் ஸ்தலங்கள் பலவற்றுள், சென்னைநகரின் கிறிஸ்தவ கலாசாலையைச் சேர்ந்த ஆண்டர்ஸன் ஹால் என்பது ஒன்று. கீழ்ப்படுத்தப்பட்ட ஜநங்களை உயர்த்தும் ஸபையெனக்கூடிய Depressed classes Mission என்



THE REGISTRAR OF ... NOV 19.. MADRAS

சாத்ரிகளுக்கு, '[illegible]', என்கிற சக்ராப்ஜ மண்டல தீக்ஷையைப் பெறுவதற்கு யோக்யமான காலமென்று அதை எடுக்கப்பட்டிருக்கின்றது. '[illegible]', என்று வைசாக மாஸம் சக்ராங்கநத்துக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

இது நிற்கப் பஞ்சகால பராயணர்கள், யோக காலத்தில் அநுஸந்திக்கிற [illegible]யாலே இதை ஶ்ருதி நிர்த்தேசிக்கையாலும் இந்த மாஸம் ஸர்வோத்க்ருஷ்டம்.

'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை' ॥ என்கிறபடியே ஹிரண்ய கர்ப்பனுக்கு உபதேசித்த வேதங்களை மதுகைடபர்கள் அபஹரிக்க, பகவான் மதுகைடபர்களை ஸம்ஹரித்து ப்ரஹ்மாவுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்தான். இம்மாஸம் அம்மதுஸூதநனை அதிஷ்டாந தேவதையாக உடையது.

'[illegible]', என்று ஶ்ருதிப்ரஸித்தனை ப்ரஹ்லாதன், கண்ணன் எங்குமுளன் என்று சொல்ல, 'ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்', என்கிறபடியே, அவன் வாக்யத்தை மெய்யாக்குவதற்காகவும், 'வ்யாப்திம் ச பூதேஷ்வகிலேஷு சாத்மந:', என்கிறபடியே, நாராயண ஶப்தத்தில் தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸ த்வயஸித்தங்களான, தன்னுடைய அந்தர்வ்யாப்தி பஹிர்வ்யாப்திகளை ஸத்யம் ஆக்குகைக்காகவும், தன் ப்ருத்யனான சதுர்முகன், மநுஷ்யனாலும், ம்ருகங்களாலும், ஆயுதத்தினாலும், பகலிலும், ராத்ரியிலும், ஹிரண்யனுக்கு மரணம் உண்டாகாதபடிக் கொடுத்த வரத்தை ஸத்யமாகச் செய்யவும், 'ஸ்தம்பே ஸபாயாம் ந ம்ருகம் ந மாநுஷம்', என்கிறபடியே, நரங்கலந்த சிங்கமாய் ஸந்த்யாகாலத்தில், '[illegible] ஹிரண்யவக்ஷஸ்ஸ்ரீ', என்கிறபடியே, தன் வள்ளுகிரால் ஹிரண்யனைக் கல்மார்வங்கீண்ட நம் சிங்கபிரான் அவதரித்த மாஸமாகையாலும், இந்த மாஸம் எல்லாராலும் ஸ்மரிக்கத்தக்கது.

பெருமாள் கோவில்<br>ஆடிமீ 26உ. } நாச்சியார் ஸந்நிதி – வரததாஸன்.

THE REGISTRAR OF ... NOV 19.. MADRAS

ஸ்ரீ:.
ஸ்ரீமதே ஹயக்ரீவ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ வருஷம் புரட்டாசிமீ [ஸஞ்சிகை 8.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**காஞ்சீபுரம்.** இந்தியாவில் நகரநிர்மாண விஷயமாக ராஜாங்கத்தாரால் வரவழைக்கப்பட்ட ப்ரொபெஸர் கெட்டீஸ் என்பவர் காஞ்சீபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அதன் விசாலமானவையும், இருபுறங்களிலும் வ்ருக்ஷபங்திகளாலும், நன்கமைந்த வஸதிகளாலும் அலங்கரிப்பட்டவையுமான வீதிகளையும், தேவாலயங்களையும் யோசித்து, இவ்வித நகரம், இந்தியாவிலும், பூமியில் மற்றெங்கும் காண இயலாதென்றும், நகரங்களின் அமைப்பு காஞ்சீபுரம் அமைந்த வண்ணம் ஏற்படுதல் யுக்தமென்றும் அபிப்ராயப்பட்டனர். நகர்க்குள் கச்சிமாநகரம் முக்யமானதென்பது பெரியோர் கொள்கை.

**தாழ்த்திய ஜாதியரை உயர்த்தும் ஸபை.** ஹிந்துமதமென்பதற்கு ப்ரச்சந்ந விரோதிகளும் ப்ரகாச விரோதிகளும் கூடும் ஸ்தலங்கள் பலவற்றுள், சென்னைநகரின் கிறிஸ்தவ கலாசாலையைச் சேர்ந்த ஆண்டர்ஸன் ஹால் என்பது ஒன்று. கீழ்ப்படுத்தப்பட்ட ஜனங்களை உயர்த்தும் ஸபையெனக்கூடிய Depressed classes Mission என்

ஞொரு ஸபையார் அங்கே ஸமீபத்தில் கூடினார்கள். அவர்க்குள் பேசியவர், “ஓ ஹிந்துமதமே! நீ தாழ்ந்த ஜாதியரை மேல்படுத்தும் ப்ரயத்நவிரோதியானால் உனக்கு மரணதண்டனை விதிக்கப்படும். ஆனால் நீ நல்ல பிள்ளையென்று நம்புகிறோம். அப்படிச் செய்யமாட்டாய். நீ தாழ்த்திய ஜாதிகளைக் கிறிஸ்தவரும் மஹம்மதியரும் ஏற்றுக்கொள்கின்றார்கள் பார். அதற்காகக் கிறிஸ்தவ பாதிரிமார்க்கு நாம் வந்தநம் அளிக்கின்றோம்; கெட்டுப்போகாதே. தாழ்ந்த ஜாதியரைப் பணத்தைச் செலவுசெய்து உயர்த்து; அவரை உனக்குள் வைத்துக்கொள்” என்று இவ்விதமாகப் பொருள் விளங்க உபந்யாஸம் செய்தனர்.

இதற்காக ஹிந்துமதம் அவர்க்கு மிகவும் க்ருதஜ்ஞதை பாராட்டுமென்று நம்புகின்றோம். ஐயோ! இக்காலத்தில் இப்படி முதுகைத் தட்டி அதை ஆதரிப்பவரற்று அது கலங்குகின்றதே!

ஹிந்துமதம் அந்யமதஸ்தர் ப்ரயத்நத்தால் நசித்துப் போகுமென்று எண்ணிப் பரிஹாரம் சொல்பவரைக் கேட்கின்றோம். அது நசித்துப்போனாலென்ன? உலகத்தவர்க்குத்தானே அது நசிக்கும்? அது உண்மையாயின் அதனுடைய நாசத்தால் உண்டாகும் நஷ்டம் உலக்கத்தவருடையதா? அதனுடையதா? அது உண்மை யில்லாவிட்டால் அது நசிப்பது நன்மைதானே.

செல்வமும் வன்மையும் எந்த மதஸ்தர்க்கு உண்டோ அவர் அந்யமதஸ்தர்களைத் தமக்குட்படுத்துவது ஸஹஜமே. அதனுடன் ஸ்வமதாபிமாநமும் ஐக்யமும் அவர்க்குண்டாய், அந்ய மதஸ்தர்க்கு அவையில்லாவிட்டால், அவர் ஜயிப்பதும் ஸஹஜமே. ஐக்யமும் அபிமாநமும் மஹம்மதியர்க்கு உண்டு. இயேசுவென்பவர் ஆடுகள் தேட, மஹம்மதியர் ஸமாஜம் இடங்கொடாது. ஆண்டர்ஸன் ஹாலில் கூடும் ஹிந்துக்களாகப் பிறந்தவர் ஹிந்துமதாபிமாநம் அற்றவர்; ஹிந்துக்களுடன் ஐக்யமும் இல்லாதவர். இந்தக் கூட்டத்தில் தேவ இடையனான கிறிஸ்துவின் பட்டிக்குள் சேர்க்கக் கூடிய ஆட்டுக்குட்டிகள் கிடைப்பதரிது. ஆயினும், இவர் சொற்களைக் கேட்கும் பள்ளிக்கூடப் பிள்ளைகளில் அவை கிடைக்கலாம்.

தாழ்த்தப்பட்ட ஜாதிகளாவது என்ன? யார் அவரைத் தாழ்த்தினார்கள்? நமக்குக் கிறிஸ்தவர் ஹீதன் (Heathen) எனப் பெயர் அளித்திருக்கின்றனர். அந்த சப்தார்த்தம் பொய்த் தேவ



ரைத் தொழுபவர்; அதாவது கிறிஸ்தவராகாதவர் என்பது தான்.
கிறிஸ்தவரும் மஹம்மதியரும் நம்மை நம்பாதவர் (Infidels) என்று
அழைக்கின்றனர். அவர் மதங்களை நம்பாத காரணத்தால் நாம்
இந்தப் பெயரை அவரிடம் அடைந்தோம். நாம் ஆர்யரென்றும்,
நாம் வஸித்த நாடு ஆர்யநாடென்றும் சொல்லிக்கொள்ளக்கூடிய
காலத்தில், அந்ய தேசத்தவரை நாம் ம்லேச்சரென்று சொன்னோம்.
அதன் பொருள் அவர் அநார்யர்; அதாவது ஆர்ய பாஷை பேசா
தவர்; ஆர்யகொள்கைகட்குப் புறம்பானவர் என்றர்த்தம். ஆர்யர்
நான்கு வர்ணத்தில் அடங்கியவர். அநார்யர்க்குள் ஆர்யாசாரங்களை
ஒப்புக்கொண்டவர் சூத்ரரெனப்பட்டார் என்பாருமுளர். இவர்
தாழ்த்திய ஜாதியரன்று. சண்டாளரென்பவர் தான் தாழ்த்திய
ஜாதியரெனச் சொல்லப்பட்டவர். அவர்களுடைய க்ரூர கர்மங்க
ளால் அவர்க்கு அப்பெயர் வாய்த்தது. ப்ராஹ்மண ஸ்த்ரீகளிடம்
சூத்ர புருஷரால் உண்டானவர் சண்டாளரெனப்படுபவர்; இது
முன்காலத்திய கதை; இக்காலத்துக்குப் பொருந்தாது. இவர்களை
யார் தாழ்த்தியது? எந்த நாட்டில் இத்தகைய ஜநங்கள் தாழாது
நிற்பர்? இவரும், குணங்களில் குன்றாமல் ஏழ்மைத்தனத்தால்
தாழ்த்தப்பட்ட ஜநங்களும், ஐரோப்பிய நகரங்கட்குள் ஏராள
மாய் இருக்கின்றனரே? நம் நாட்டைப் பழிப்பானேன்?

ஹிந்துமதம் இவர்க்கு உண்டி உடை கொடுத்தல் கூடாதென
வில்லையே. அவர்க்குப் படிப்பு கூடாதெனவில்லையே. இவர்க்காக
உழைக்கும் பாதிரிமார், இவரைப்போல் தமது நாட்டில் வருந்தும்
ஜநங்களுக்காக உழைக்கக்கூடாதோ? அவர் கிறிஸ்தவரா யிருக்
கின்றபடியால், கிறிஸ்தவராகாத நம் தாழ்ந்த ஜாதியரைக் கிறிஸ்
தவராக்க உழைக்கின்றனர். ஆய்விட்டாராகில், அவர்க்கு உண்டி
உடை தருகின்றனர்; உத்யோகம் தருகின்றனர்; பழகிய யானை
யைக் கொண்டு புதிய காட்டு யானைகளைப் பிடிக்கும் வண்ணம்,
அந்யரைக் கிறிஸ்தவராக்க அவரை உபயோகிக்கின்றனர். அவர்க்
கும் ஹிந்துக்களுக்கும் வ்யவஹாரம் உண்டானால், அவர்க்காக
வ்யவஹாரத்தில் வ்யாபிரிக்கின்றனர். இதெல்லாம் செய்வர். ஆனால்
தமது பெண்களை அவர்க்குக் கொடார். அவர் பெண்களையும் தாம்
கட்டிக்கொள்ளார். அவருடன் ஸஹபோஜநத்துக்கும் இசையமாட்
டார். ஸர்க்காரில் நிலம் ஸுகமாக ஸம்பாதித்துக் கிறிஸ்தவரான
தாழ்ந்த ஜாதியர்க்கு ஈவர். அவரைத் தமக்காக அவற்றுள் உழைக்க

வும் செய்வர். தமக்கு அவரைப் பணிவிடை செய்யச் சொல்லுவர். ஹிந்து மேல்ஜாதியர்க்கு இவ்விதத்தொழில் செய்தவரைத் தமக்கு அத்தொழிலே செய்யும்படி மாற்றுவர். இதற்காக ஆண்டர்ஸன் ஹாலில் பாதிரிமார்க்கு வந்தநம் கிடைக்கின்றது.

முன்போலவா கிறிஸ்தவரான சண்டாளர் இருக்கின்றனர்? அவர் நன்றாக உண்கின்றார், உடுக்கின்றார், படிக்கின்றாரே எனக் கூடும். பாதிரிமார் அவர் அப்படியாக உதவுகின்றனர். பாதிரிமார்க்குப் பணமுண்டு. ஹிந்துக்கட்கு அவ்வண்ணம் பணமில்லையே! ஹிந்துக்களில் வக்கீல்களும் உத்யோகஸ்தரும் பணக்காரர். இவருள் பலர் ஆண்டர்ஸன் ஹாலில் கூடுகின்றனர். அவர் புண்யம் ஸம்பாதிப்பதை யார் தடுக்கின்றார்கள்? அதற்காகக் கேட்பாரற்றுப் போன ஹிந்து மதத்தைப் பழிப்பானேன்?

நமக்கும் செல்வமும் செல்வாக்கும் இருந்தால், ஆண்டர்ஸன் ஹாலில் கூடுகின்றவரை யொத்த சிலர்க்குப் பொருள் கொடுத்து, லண்டன் நகரம் கீழ்க்கோடியிலும், அப்படிப்பட்ட இதர ஐரோப்ய நகர பாகங்கட்கும் அனுப்பி, அங்கு கஷ்டப்படும் ஜநங்களைப் பார்த்து, "உங்களைக் கிறிஸ்தவர் அநாதரவு செய்கின்றனர்; எங்கள் மதத்தைச் சேருங்கள்," என்று சொல்லிச் சிலரை ஹிந்துக்களாக்கலாம். இன்னும் பாதிரிமார்க்கு இந்நாட்டில் சாயும்வண்ணம், நமக்கும் அங்கு சாய்கால் கிடைத்தால், இன்னும் என்னென்னமோ செய்யலாம். அங்கே நமக்கொரு ஹால் கிடைத்தால், அவ்விடம், கிறிஸ்தவராகப் பிறந்த சிலர் கூடிக் கிறிஸ்தவரைப் பழித்து, நமக்கு வந்தநமும் அளிக்கலாம். ஆனால் அது ஊமன் கண்ட கனாவல்லவோ? ஆண்டர்ஸன் ஹாலில் கூடுபவர் இவற்றையெல்லாம் நினைக்கவேண்டும்.

பஞ்சமர் படித்தால் ஹிந்துமதம் கஷ்டப்படுவானேன்? அவர் க்ரூரகர்மங்களை யொழித்தால் வருந்துபவர் யாவர்? அவர்கள் செத்த மிருகங்களை உண்ணாமல் விட்டால் யார்க்கென்ன துன்பம் விளையும்? அவர்கள் உடம்பிலும் உடையிலும் உண்டியிலும் அழுக்கைப் போக்கினால் எவன்தான் அழப்போகின்றான்? இதற்கெல்லாம் ஹிந்து மதத்தைப் பழிப்பதேன்?

இந்த நாட்டில் இங்கிலீஷ் படித்தவர் அனைவரும் மெய்வருத்தம் கொள்ளாமல் பிழைக்கப் பார்க்கின்றனர். பாதிரிமார் ப்ரயத்



நம் பயிர்த்தொழிற்கு ஆளின்றிச் செய்கின்றது. ஐரோப்பியர் லாபம் பெற வ்ருத்திசெய்யும் காபீ, டீ, கரும்பு முதலான பயிர்த்தோட்டங்கட்காகக் கங்காணியர் வலையில் சிக்கிய கூலிவேலை செய்யும் ஜநங்கள் தேசத்தை விட்டொழிகின்றன. ராஜாங்கத்தார் செய்யும் நிலவரி உயர்த்தும் செட்டில்மெண்டுகள் ஒருபுறம் நிலைத்து நிற்கப், பயிர்செய்யும் கூலியாட்கள் பலர் ப்ரயத்நத்தால் மற்றோர் புறம் அத்தொழிலை விட்டகல, மிராசுதார் படும்பாட்டையும் ஆண்டர்ஸன் ஹால் உபந்யாஸிகள் உன்னுவாராக. தேசத்தின் மர்யாதைகளை எவரும் சீரழிக்கலாம். ஓர் புதிய மர்யாதையை ஒருவரும் உண்டாக்க இயலாது. செய்யும் தொழிலின் விளைவை நினைக்காது, ஏதோ ஒரு க்யாதியை நயமாய் ஸம்பாதிக்க எண்ணும் ஜநங்கட்கு, அஜ்ஞர்களுக்குப் புத்திபேதம் உண்டாக்கவேண்டாமெனும் பகவத்வாக்யம் பயன்படுமோ?

**நாராயணய்யா கேஸ்.**

நாராயணய்யா என்றொருவர் தன் குமாரர்களான க்ருஷ்ணமூர்த்தி நித்யாநந்தன் எனும் சிறுவர்களை, ஒரு எழுத்துமூலமான உடன்படிக்கையின்படி பெஸண்டு துரைஸானியினிடம் ஒப்பிவித்ததும், பிறகு அந்தத் துரைஸானி சிறுவர்களைச் சீமைக்கு அனுப்பி அங்கே படிப்பு சொல்லிக்கொடுப்பித்ததும், பிறகு நாராயணய்யா என்பவர் தன் குமாரர்களைக் கைப்பற்ற வ்யவஹாரம் செய்ததும், அது மதராஸ் ஹைகோர்ட்டு அசல் ஸைட்டில் அவர்க்கு அநுகூலமானதும், அந்தக் கோர்ட்டு அப்பீல்ஸைட்டில் இரண்டு ஜட்ஜிமார்கள் நாராயணய்யாவுக்கு இன்னும் அநுகூலமான தீர்மானம் ஈந்ததும், பிறகு பெஸண்டு துரைஸானி சீமை அப்பீல் செய்ததும், அவ்விடம் ஜட்ஜிகள் மதராஸ் ஹைகோர்ட்டுக்கு சீமையிலிருக்கும் சிறுவர் ஸ்வாதீந விஷயமான வ்யவஹார விமர்ஶநத்தில் அதிகாரம் முற்றிலும் இல்லையென்று அபிப்ராயப்பட்டு, அந்தக் கோர்ட்டாருடைய இரண்டு தீர்மானங்களையும் மாற்றிவிட்டதும், முடிவில் நாராயணய்யா குமாரர்கள் பெஸண்டு துரைஸானி ஸ்வாதீநமாயும், தங்கள் இச்சையாலும், சீமையிலேயே நிலைத்திருக்கின்றனரென்பதும் யாவரும் அறிந்திருக்கலாம். பெரியவர்கள் ஸம்பந்தப்பட்ட வ்யவஹாரமானதால் அது மிகுந்த ஸந்தடியை உண்டாக்கியது.

**அதைப்போன்ற மற்றொரு கேஸ்.**

சைதாபேட்டைதாலூகா பரங்கிமலையில் நம்மாள் எனும் பறைச்சி தன்னுடைய 10,8 வயதுள்ள இரண்டு பிள்ளைகளை ஹிக்ஸன் எனும் பாதிரியினிடம் அக்ரீமெண்டுபடி ஒப்பிவித்தனளாம். சென்ற நவம்பர் மாஸம், நம், தன் பிள்ளைகளைப் பார்க்கப் பாதிரிவீட்டுக்குச் சென்றனளாம். திரும்புங்கால், பிள்ளைகள் அவளுடன் ஓடிப்போய் விட்டார்களாம். பிள்ளைகளுடன் தாய் எங்கேயோ போக ஸித்தமாயினளாம். பாதிரி துரை போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பிராது செய்தனராம். அந்த உத்யோகஸ்தர் நம்மாளைக் கைதுசெய்து, அவள் குமாரரையே அவள் அக்ரமமாகக் கைப்பற்றினாள் என மாஜிஸ்ட்ரேட் முன் சார்ஜு செய்தனராம். மாஜிஸ்ட்ரேட் அது குற்றமன்றெனப் பிராதைத் தள்ளிவிட்டாராம். பிள்ளைகளோ மறுபடி பாதிரிவசமாயினராம். ஜெயிலினின்று தப்பினதே போதுமென்று அவர் தாய் இருந்துவிட்டனளாம். ஹைகோர்ட்டாருடைய தீர்மானம் அவளுக்குப் பயன்படவில்லை. இந்தக் கேஸில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லையென வாதம் ஜநிக்காது. ஆனாலென்ன? வ்யவாஹாரத்தின் பயன் ஏழைகளுக்கு உண்டோ? நாராயணய்யாவுக்குப் பலர் உபகரித்தார்கள். நம்மாளுக்கு உபகாரிகள் கிடைக்கமாட்டார். தாழ்த்திய ஜாதியரை உயர்த்தும் ஸபையார் இந்த விஷயத்தைக் கவனிப்பரோ? மேல்விவரித்த விஷயம் 1915௵ ஏப்ரல்மாஸம் 12௳ ஹிந்து பத்ரிகையில் வெளிவந்தது.

**வர்ணபேதத்தைப்பற்றிப் பாஹ்யர் உக்திகள்.**

ஸெப்டம்பர் மாஸம் வெளிவந்த 'மாடர்ன்ரிவ்யூ' எனும் பத்ரிகையில், ஒரு இங்கிலீஷ்காரர் ஜாதியைப்பற்றித் தமது அபிப்ராயத்தை வெளியிட்டனர். அவர் முடிவான நிச்சயங்களாவன: (1) ஜாதியின் முக்யாம்சம் புசிப்பதையும் குடிப்பதையும் பற்றின நியமங்கள். (2) ஜாதிக்கும் Race எனப்பட்ட மநுஷ்யர்க்குள் நேர்ந்த பிரிவுக்கும் ஸம்பந்தமில்லை. (3) ஜாதி ஆர்யர் படையெடுப்புக்குமுன் த்ராவிடர்க்குள் உண்டாயிருந்தது.

இந்த நிச்சயங்களை எழுதியபிறகு, அந்த ஐரோப்பியர், பி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் என்பவர் எழுதிய "இந்தியாவை ஆர்யர் படையெடுத்தாரெனும் மித்யை," "ப்ராசீந இந்தியாவில் ஜநங்களின் இருப்பு," "இந்தியாவில் குடிகொண்ட ஆர்யரிடம் த்ராவிடர் தம் படிப்பைக் கற்றனரா?" எனும் புஸ்தகங்களைப் பாராமல் அவற்றை நிச்சயித்து விட்டதாகவும், அய்யங்கார் இந்தியாவின் பழைய கல்வி த்ராவிட கல்வியென்று ருஜு செய்துவிட்டதாகவும், அவர் புஸ்தகங்களை யாவரும் படிக்கவேண்டுமென்றும் எழுதி முடித்தனர்.



இந்தியாவை மஹம்மதியர் கைப்பற்றிய காலத்தில், பல ஆர்யரான இந்தியர் மஹம்மதியராய்விட்டு, ப்ராசீந மஹம்மதியரைவிட இந்தியர்க்கும், அவர் மதத்திற்கும் கேடு செய்தனர். இந்தவிதமாக அறுநூறு வருஷகாலம் மஹம்மதியர் ஆளுகையும் இந்துக்கள் மஹம்மதியராவதும், நடந்துகொண்டு வந்தன. இப்போது கிறிஸ்தவர் ஆளுகையில் கிறிஸ்தவ மதத்திற்கு அத்தகைய அநுகூலம் நேர்வதில் ஸம்சயமென்ன? பூர்ணமாய்க் கிறிஸ்தவராகாத பலர், கிறிஸ்தவர்க்கு அநுகூலராகவும், இந்தியர் மதவிரோதிகளாகவும் முடிகின்றனர்.

இவரும், ஐரோப்பியரும் நமது மதத்தைப் பற்றியும், ஜாதியைப் பற்றியும், சிந்திப்பது, நாமவற்றைப்பற்றிச் சிந்திப்பதுபோல் ஏற்படாது. ப்ராஹ்மண்யம் ஜந்மத்தால் உண்டாவதாயினும், கர்மத்தால்தான் அது காப்பாற்றத்தக்கது. அதைப் பாதுகாக்காமல் விட்டவரிடம் அது விளங்காது. ஸுதராம் அதை நிந்திப்பவரிடம் அது ப்ரகாசிக்குமோ?

**காலதேச வைகுண்யம்.**

யுக்திவாதங்களால் பகலை இரவாகவும், இரவைப் பகலாகவும் முடிக்கலாம். பலபேர் பல ரூபமான நூதந அபிப்ராயங்களை நம் தேச சரித்ரத்தைப்பற்றியும் வெளியிடுகின்றனர். தேசம் பலவாறான அந்தச் சித்ரங்களையடைந்திருக்கின்றது. மஹம்மதியர், கிறிஸ்தவர், பௌத்தர், ஜைநர், ப்ரஹ்மஸமாஜத்தினர், ஆர்யஸமாஜத்தினர், தியாஸபியைச் சேர்ந்தவர், நாஸ்திகர், ஆகிய இவர் நம் வைதிக தர்மத்துக்குப் பாஹ்யசத்ருக்கள். த்ராவிடர் எனப்பட்டவர், அவ்வண்ணம் ஆய்க்கொண்டிருக்கின்றனர். வைதிக மதத்துக்கு உட்பட்ட, ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர், சைவர், தென்கலை, வடகலை முதலான பிரிவுகள் ஒன்றையொன்று த்வேஷிக்கின்றன. இந்த ஸ்திதியில், நம் சிறுவர்க்குப் படிப்பென்றால்

இங்கிலீஷ் பள்ளிக்கூடப் படிப்பும், உபாத்யாயர் என்றால், ப்ரா யேண தர்சநபாஹ்யருமாய் ஏற்பட்டால், நம் சிறுவருடைய தத் காலநிலைமை கார்யகாரண பாவத்தால் ஸம்பாவிதமன்றோ ?

நம் பிள்ளைமார்கள் யாதொன்றும் விசாரிக்காமலும், விசாரிக்க அதிகாரமின்றியும் பள்ளமடையில் இறங்குவதும் ஸஹஜமே. குடிக்காதவர்க்குக் குடிப்பவர் கற்பிக்கவும், புகைவிடும் வாயர் புகைவிடாவாயரைத் தம் சிஷ்யராக்கவும், போஜ்யாபோஜ்ய நியமத்துடன் பிறந்தவர்க்கு ஸர்வபக்ஷகர் உபாத்யாயராவதும், ஸ்நாந போஜந நியமமுள்ளவர், அவற்றைத் துறந்தவரிடம் படிப்பதும், ஸநாதந தர்மத்துக்குள் பிறந்தவர் பாஹ்யர் வசமாய் நிற்பதும், தேசகால வைகுண்யத்தால் நேர்ந்தமையால், இவ்விதம் யோசனைகள் செய்யத் தக்க சிறுவர்க்கு யாம் மொழிவதொன்றுண்டு. ''நம் தர்சநவிரோதிகள் உக்திகளைக் குரு வாக்யமாகக்கொள்ளவேண்டாம். அவர் உக்திகட்கு ப்ரமாணங்கள் காட்டினால், அவற்றை நீர் நேராகச் சோதித்த பின் அவர்களுடைய தீர்மாநங்களின் ஸாதுத்வத்தைப் பற்றி யோசிப்பீர்கள். நேராகச் சோதிக்கத் திறனில்லாமல் போனால் திறனுள்ள தர்சநாபிமானிகளைக் கேட்டுத் தெளிவீர்கள்'' என்பதுதான்.

நம் சிறுவர் பிறந்த மதங்களையும் ஆசாரங்களையும் பற்றி, அவர்க்கு, இவற்றைத் துறந்தவரும், இவற்றிற்குள் பிறவாதவரும், சொல்வது என்னென்றால், "பழைய நம்பிக்கைகளைப் பழையதென்று நம்பவேண்டாம். நீங்கள் அவற்றை உமது புத்தியால் ஆலோசித்தபின் அவை உண்மையாகத் தோற்றினால் நம்புங்கள். இல்லாவிடில் அவற்றை த்யாகம் செய்யுங்கள்" என்பதுதான்.

**படிக்கும் சிறுவர்க்கு யாமுரைப்பது.**

யாமும் நம் சிறுவர்க்குச் சொல்வதென்னெனில், "பெரிய உத்யோகம் செய்கின்றனரென்றும், ஏராளமாய்ப் பணம் ஸம்பாதிக்கின்றனரென்றும் எண்ணி அவர் சொல்லும் வாக்யங்களை நம்பவேண்டாம். அவற்றையும் உமது புத்தியால் சோதித்துப் பின் அவற்றின் உண்மையைப் பற்றித் தெளிவீர்கள்" என்பதே.

ஆனால் இவ்விதம் நாம் உரைத்தோமென்று, இது தான் நமது நிச்சயமெனக் கொள்ளல் கூடாது. "சிறுவர்களே! நீங்கள்



என உமை ஸம்புத்தி செய்கின்றார். நீங்களார்? உமது சரீரமா?
நான் என்றும், நீ என்றும் விவரிக்கப்பட்ட வஸ்துவின் நிஜ ஸ்வரூ
பத்தை முதலில் அறிவீர்கள். அதன் பின்பு, புத்தியென்று உரைக்
கும் வஸ்து யாதென்றும், அது உண்மையை அறியவல்லதாவென்
றும் யோசிப்பீர்கள். உமைச் சொல்லும் வண்ணம், உமக்கு ப்ரிய
மாகச் சொல்லும் மனிதர்கள், பாலர்க்குச் சொன்னாராகில், பாலர்
விஷயசோதனை செய்து நிஷ்கர்ஷிக்கத் தக்கவரா? நிஷ்கர்ஷை
செய்ய யோக்யதை உமக்கு எப்போது உண்டாயது? எவ்வண்
ணம் உண்டாயது? இதை யோசிப்பீர்கள்."

"மநஸாக்ஷி யென்றொரு சப்தமுண்டு. அதன் உதவியால்
நிஷ்கர்ஷை பிறக்கின்றதென்பாருளர். மநஸாக்ஷி எத்தகையது?
அதை நியமேந நம்பவொண்ணுமா? மநஸாக்ஷியென்னும் ஸாமக்ரி
யாவர்க்கும் உளது. அது பல பெயர்க்குள் பலவிதமானவையும்
பரஸ்பரவிருத்தமானவையுமான நிஷ்கர்ஷைகளை உண்டுபண்ணு
கின்றது. இப்படிப்பட்ட நிஷ்கர்ஷைகளை எவ்வண்ணம் நீங்கள்
விச்வஸிக்கலாம்? நீங்கள் ஜீவநோபாயங்களை ஸம்பாதித்துக்கொ
ள்ள வேண்டுமென்று கருதி, உமக்கு அத்யந்த ஹிதரான தாய்
தந்தையர்கள், தாங்கள் பல கஷ்டங்களைப் பட்டுக்கொண்டு, உமக்
குப் பணங்கொடுத்துப் படிக்கச்சொல்லவும், உம்மை அவரிஷ்ட
ங்கட்கு விரோதமாக நடக்க ஏவுகின்றவரும், உமக்காக ஒரு
காசளவும், வ்ரயம் செய்யாதவரும் சொல்லும் வார்த்தைகளைப்
பத்யமென்று ஏன் எண்ணவேண்டும்? அவரை மூடரென்பார்
உமது நாதந ஸ்நேஹிதர்கள். இவர்தான் மூடராயிருக்கக்
கூடாதோ? யுக்தாயுக்த விசாரம் செய்ய, தீர்க்கமான கல்வி, ஸர்வ
தோமுகமாக வித்தித்து, அதன்மேல், அந்தரிந்த்ரிய பாஹ்யேந்
த்ரிய ஜயமுண்டாய், சாந்தியடைந்த நிர்மல சித்தமானது ஒருவ
னுக்கு அத்யந்தம் வேண்டும். இப்படிப்பட்டவரா உமக்கு ஆண்
டர்ஸன் ஹால் முதலான இடங்களில் மதியுரைக்கின்றனர்? இந்த
ரூபமாக உமது சித்தம் பரிணமித்தபிறகு யுக்தாயுக்த விசாரம்
செய்வீர்கள். தீர்க்கயோசனையின்றி லோகமர்யாதைகளை அழித்தீ
ராகில், உம்மால் இழக்கப்பட்ட நிலைமையானது மீண்டும் உமக்குக்
கிட்டமாட்டாது."

# தத்வவிசாரம்.

இதன்மேல் இவ்வுபாயத்தின் அங்கங்களைப் பற்றி யோசிக்கின்றார்.

> 'ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் ।
> ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா ।
> ஆத்மநிக்ஷேபகார்பண்யே ஷட்விதா ஶரணாகதி:',

என்கிற ச்லோகங்களின்படியே, ஸர்வசேஷியான ஸ்ரீய:பதியைக் குறித்துத் தான் செய்யும் கார்யங்களிலும், செய்யாமல் விடவேண்டியவைகளிலும், அவனுக்கு அபிமதமானபடி அநுவர்த்திக்கவேண்டுமென்பது தான், ஆநுகூல்யத்தின் ஸங்கல்பமும் ப்ராதிகூல்யங்களின் வர்ஜநமும். ப்ராதிகூல்யங்களினின்று நிவ்ருத்தியானது அபாயபரிஹாரம். அபாயமென்றால் ஆஜ்ஞாதிலங்கநம். பரமபுருஷன் அபிமதம் இருக்கும்படியை சாஸ்த்ரத்தால் அறிந்துகொண்டு, அதற்கு அநுகுணமாக ப்ரவ்ருத்தியும், அதற்கு விரோதமானவற்றினின்று நிவ்ருத்தியும், இவன் கைக்கொள்வதாக ஸங்கல்பிப்பதற்குக் காரணம், பகவான் விஷயமாக இவனுக்குண்டான பாரார்த்ய ஜ்ஞாநம். அதாவது, பகவானுக்கு இவன் ஸ்வரூபத்தால் சேஷபூதன் என்பது. மஹாவிச்வாஸமென்பது, 'ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸாச்சாபீஷ்டோபாயகல்பநம்' என்கிறபடியே, பின் சொல்லப்போகின்ற சங்கைகள் பிறந்தால், ப்ரபத்யநுஷ்டாநம் ஸித்திக்காதாகையால், தாத்ருச ஸந்தேஹங்கள் உதிக்காமல் தடுத்து, மஹாவிச்வாஸம் ப்ரபத்யநுஷ்டாநத்தை ஸித்திக்கச் செய்யும். தவிரவும், அந்த விச்வாஸத்தாலன்றோ பிற்காலத்தில் அவன் தன்னை நிர்ப்பரனாக வெண்ணிக்கொள்ளக்



கூடும்? அன்றேல், அநுஷ்டாநகாலத்தில் கூட மநஸுக்கு ஸங்கமின்றி, பின்பு உபாயாந்தரமொன்றில் அந்வயிக்கவும் நேரிடும். இந்தக் கஷ்டங்களை மஹாவிச்வாஸம் நிவர்த்திக்கும். ஸர்வஜ்ஞன் ஸர்வத்ர ஹிதத்தையே செய்பவன். இவன் ஸ்வரூபத்துக்கு உசிதமல்லாத விஷயங்களை, இவன் கேட்டுத்தான் அவன் கொடுக்க நேரும். ஸ்வரூபத்துக்கு உசிதமான பரமபுருஷார்த்தத்தைக் கேட்காமலே கொடுத்து ரக்ஷிக்கமாட்டானோ? நீ எனக்கு ரக்ஷகனாக வேண்டுமென்று சரண்யனைக் கேட்கவும் வேண்டுமோ? என்றால், எவ்வித புருஷார்த்தமென்பதும், புருஷன் அர்த்திப்பதாலன்றோ அப்பெயர் கொள்ளவிசையும்? அர்த்திப்பதும் வைராக்யமின்றியுண்டாகாது. ஆதலால் பரமபுருஷார்த்தமும் புருஷன் அர்த்திக்கத்தான் ஈச்வரன் கொடுக்க இசையும். இப்படி அர்த்திப்பதும் "வீடுபெற் றிறப்பொடும் பிறப்பறுக்கு மாசொலோ", "கூவிக் கொள்ளும் கால மின்னும் குறுகாதோ?" என்பதுபோல் ஸம்பவிக்கும் ஜ்ஞாநவிசேஷம். ஆதலால் 'ஸ்வத்யாயஷ்டோ நமோவாசயேச்ச' என்றும், 'கோப்த்ருத்வவரணம் நாம ஸ்வாபிப்ராய நிவேதநம்' என்றும், ப்ரமாணங்களிருக்கிறபடியை நோக்கி, கோப்த்ருத்வவரணமும் சரணாகதிக்கு அங்கமாக அபேக்ஷிக்கப் படுகின்றது. கார்ப்பண்யமாவது முன்சொன்ன ஆகிஞ்சந்யாதிகளுடைய அநுஸந்தாநம். 'கார்பண்யேநாப்யுபாயாநாம் விநிவ்ருத்திரிஹேரிதா', என்கிறபடி உபாயாந்தரங்களினின்று புருஷன் தனது கார்ப்பண்ய சிந்தையால் நிவ்ருத்திக்கின்றான்.

இப்படி ஐந்து அங்கங்களுடன் கூடிய அங்கியாகிற சரணாகதி ஷட்விதா சரணாகதி என்று சொல்லப்பட்டது. ஏழு அங்கங்களுடன் கூடிய ஸமாதியாகின்ற அங்கியுடன் சேர்த்து அஷ்டாங்கயோகமெனப்படும். ப்ரமாணாந்தரங்களும், சரணாகதியை அங்கியென்றும், அதற்கு அங்கங்கள் ஐந்தென்றும் சொல்லுகின்றன. 'நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத: । ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: ஶரணாகதிரித்யபி' ॥ என்பதால்,

நிக்ஷேபமென்றும், ந்யாஸமென்றும், ஸந்யாஸமென்றும், த்யாக மென்றும், ஶரணாகதி யென்றும் ப்ரபத்திக்குப் பெயர்கள். அது ஐந்து அங்கங்களுடன் கூடியது என்று வெளியாகின்றது.

'[illegible] ।
[illegible] ।
[illegible]',

"பரமபுருஷனை உத்தேசித்து ஶரணாகதி ரூபமான நமஸ்கா ரத்தைச் செய்கின்றேன் என்கிற இதுவே எனக்கு ஶாஶ்வதமான புருஷார்த்தம்; இதைக்காட்டிலும் அந்யதாபூதமான ஸர்வமும், ஶேஷதைக ரஸிகனான எனக்குப் புருஷார்த்தம் ஆகமாட்டா; இவ்விதமாக பலத்யாகரூபமான ப்ரதாநமானதோர் அங்கம் சொல் லப்பட்டது. பலத்தில் இச்சையானது இந்த அங்கத்திற்கு விரோ தியாகின்றது." இப்படி அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா ப்ரோக்தமான மற்றோரங்கமும் மோக்ஷார்த்தமான ப்ரபத்திக்கு நியமேந அவஶ்ய யம். கர்மயோகம் முதலான ஸர்வ நிவ்ருத்திதர்மங்களிலும் பலத் யாகம், ஸங்கத்யாகம், கர்த்ருத்வத்யாகம் முதலானவை அநுஸந் தேயங்கள். ஆதலால் இந்தப் பலத்யாக ரூபமான அங்கத்தின் அநு ஸந்தாநம், மோக்ஷார்த்திக்கு ஸாங்க ப்ரயதந காலத்தில் கார்யம். அப்படியே முன்னே விவரித்த அங்கபஞ்சகங்களும் ந்யாஸவித் யாநுஷ்டாந காலத்தில் உபயுக்தங்களே. அவையன்றி ஆத்மநிக்ஷே பம் பூர்த்தியாகாது.

ப்ரபத்திப்ரமாணங்கள் சொல்லப்பட்டன.

ப்ரபத்தி விஷயமான ஶாஸ்த்ரரூப ப்ராமாண பலங்கள் முன்பே எடுத்துக் காட்டப்பட்டன. ஶ்ருதிக ளுக்கும், பகவானுடைய வாக்யங்களென விஶ்வ ஸிக்கப்பட்ட ஸ்ம்ருதிகளுக்கும், யுக்திகளால் துர்பலம் ஏற்றத் தகாதாயினும், இது செய்வார் உளராகையால், ஸ்ரீமத்ராமாயண ப்ரகரணங்க ளில் இந்த ஶரணாகதியானது ஸபரிகரமாகப் பண்ணப்பட்ட அவ ஸரங்களையும், அவற்றில் அது ஸபலமாக விருந்ததையும் எடுத் துக் காட்டினபிறகு, லௌகிக த்ருஷ்டாந்தங்களையும் பரிகர விபா காதிகாரத்திலே கிஞ்சித் காட்டுகின்றார். பின்னால் ஶங்கா பரிஹா ரங்களும் செய்கின்றார்.



ஶங்காபரிஹாரங்கள்.

ஸார்வஜ்ஞ ஸர்வஶக்தி யுக்தனாய், கர்மாநுரூப பலப்ரதனாய், ஸர்வோபகார நிரபேக்ஷனாய், இதர தேவதை கள் போல் க்ஷிப்ரகாரியன்றிக்கே யிருப்பானாய், ஸமாதிக தரித்ரனுமா யிருக்கின்ற ஸர்வேஶ்வ ரன், அநந்தமான அபராதமுடையார்க்கு அபி கம்ய னாகையும், மோக்ஷவிரோதியான அநந்தாபராதங்களை யுடை யார்க்கு அளவில்லாத பலத்தைத் தருகையும், அதை அல்ப வ்யா பார நிமித்தம் தருகையும், விளம்பியாமல் தருகையும், தனது லக்ஷ்யத்திற்கு அத்யந்தம் அநர்ஹன் விஷயத்தில் தாரதம்யத்தை யோசிக்காமல் தருகையும், கூடுமோ வென்று ஶங்கைகள் உதிக்க லாம். இவற்றிற்கு நிவர்த்தகங்கள் பகவானுடைய ஆகாரவிஶேஷங் கள். அவையாவன :—புருஷ்கார, ஸம்பந்த, குண, வ்யாபார, ப்ர யோஜநம் என்பவை. இவை பகவானுடைய திருநாமங்களாகின்ற ஸ்ரீமான் என்பதிலும், நாராயணன் என்பதிலும் தோற்றுகின்றன. பரமபுருஷன் ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியா யிருந்தபோதிலும், புருஷகாரபூதையான லக்ஷ்மி விஶிஷ்டனாகவே மோக்ஷார்த்தியால் ஸ்வரக்ஷணார்த்தம் வரிக்கப்படுகின்றானாகையால், அந்தப் புருஷ கார விஶேஷத்தால், இவனுடைய ப்ராப்தி விரோதிகளாகின்ற அநந்தாபராதங்களையும் க்ஷமிக்கின்றானென்றும், இவன் விஶ்வ ஸிக்க இடமுண்டாகின்றது. இந்த ப்ரகாரமாக ஆஶ்ரித ஜநங்க ளுடைய அபராதங்களை அறியாதவன் போல் நிற்பதால், ஶரண் யன், ஸஹஸ்ரநாமத்தில் 'அவிஜ்ஞாதா' என்றொரு நாமத்தால் ஸ்து திக்கப்படுகின்றான். புருஷகார விஶேஷத்தைப் பற்றி, "ஸ்ரீ நிவா [illegible], என்றும், [illegible], என்றும், [illegible], என்றும், [illegible], என்றும், [illegible]" என்றும், தேசிகன் அருளிச்செய்

திருப்பதை ஸ்மரித்தும், லோகமாதா வென்றும், லோகஜநநீ என்றும், நிஸ்ஸம்ஶயமாக அமரத்திலும் ஸிருதடைந்த ப்ரகாரத்தை நினைத்தும், அவளை முன்னிட்டுச் செய்யப்பட்ட ப்ரபதநம், பகவானால் மறுக்கவொண்ணாதென்பதை நிச்சயிக்க வேண்டும். ஈஶ்வரன் கர்மாநுரூப பலப்ரதனே யாகிலும், 'தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே', என்று ப்ரஹ்மவித்யா ப்ராப்தியின் பலனாக மோக்ஷவிரோதியாக நின்ற ஸர்வபாபங்களும் க்ஷயிக்கின்றன வென்று ஶ்ருதி வெளியிட்டபடி, ந்யாஸவித்யா ப்ராப்தியாலும் ஸர்வபாபமும் க்ஷயிக்க வேண்டுமாகையால், இந்த ப்ரபத்திரூப வ்யாஜத்தால் பகவான் ப்ரஸந்நனாகையும், அவனுக்கும், ப்ரபந்நனுக்கும் ஸ்வதஸ்ஸித்த ப்ராப்தமான ஸ்வாமித்வ தாஸத்வ ஸம்பந்த நிமித்தமாக, தாயம்போல் இவனுக்குக் கிடைக்க வேண்டிய கைங்கர்யரூபமான அளவில்லாத பலத்தை அவன் தருகையும் ஸஹஜமே. இன்னும். "நிராலம்பஸ்ய ந தாவத்ருதேஹ ஹேஷோ ஸாதூநாம் தவைவாக்ஷயம் க்ஷேமம் । ரக்ஷா நிரபேக்ஷாயா: ஸர்வஸந்தேஹ்யாயா ந ஜாது ஸாது ரக்ஷணே ஜிஹாஸதி", எனும் வண்ணம், மேற்குறித்த ஸம்பந்த பலத்தால், ஈஶ்வரன் ப்ரபந்நனை ஒழிக்க நினைத்தாலும், இவன் ஒழியமாட்டான் என்று அறியத்தக்கது. அவாப்த ஸமஸ்த காமனாகையால், பரரால் யாதொரு உபகாரத்தையும் ஈஶ்வரன் அபேக்ஷியான். ஆகிலும், எல்லையற்ற கருணை அவனுடைய குணமன்றோ? இந்தக் குணத்தினுடைய மஹிமையையும் விஸ்தாரத்தையும் தயாஶதகத்தில் யாவரும் கண்டுகொள்ளக்கூடும். ஆனபடியால் ப்ரபந்நன் செய்கின்ற அல்ப வ்யாபாரத்தை விஶேஷமாக ஆதரித்துத் தன் ஸாயுஜ்யத்தை அவனுக்குத் தருகின்றான். இந்தக் கருணையானது நிருபாதிக மென்பதற்கு நிகமாந்தார்யனுடைய 'நிர்வ்யாஜ நிஸ்ஸீம தயாஸரித:' எனும் வசநமே போதும். மற்றுள்ள ஶாஸ்த்ரார்த்தங்களுக்கு விளம்பித்துப் பலம் கொடுப்பானே யாகிலும், அநந்யஶரணனுடைய ப்ரபத்திக்கு, தனது ஔதார்யத்தாலும், தன்னுடைய ஸங்கல்பமாத்ரத்தாலும்



விபீஷணாதிகளுக்குப் போலே, கோலின காலத்தில் இவனுடைய அபேக்ஷிதத்தைக் கொடுக்கும். இந்த ஶங்காநிவர்த்தகம் ஈஶ்வர வ்யாபார மென்றார். வ்யாபாரம் ஸங்கல்பரூபம். அந்த ஸங்கல்ப விசேஷம் தன்னடியானுடைய ரக்ஷணத்தில் ஸர்வப்ரகாரமாகவும் ப்ரவ்ருத்திக்கின்றது. இது மற்றொன்றையும் ஸஹகாரியாக அபேக்ஷிப்பதில்லை. பகவான் ஸமாதிகதரித்ரன்; அதாவது அவனுக்கு ஸமருமில்லை; அதிகமானவருமில்லை. ஆகிலும் 'ஜடிகாய க்ருஷ்ணாய,' என்பதுபோல், தன் தாஸன் எவ்வளவு நீசனான போதிலும், முமுக்ஷுவாய்த் தான் விதித்தபடிச் சரணமடைந்தவன் பேறே தன் பேறாக எண்ணி, அவன் ரக்ஷணத்தை ஸ்வப்ரயோஜநமாகச் செய்கின்றானாகையால், தரம் பாராதேயும் ஸ்வப்ராப்தியை அவனுக்குத் தருவது ந்யாயமே. 'பவேயம் ஶரணம் ஹி வ:' என்று தன்னைத் துன்பப்படுத்திய ராக்ஷஸ ஸ்த்ரீகளுக்கும் அபயமளித்த மஹாலக்ஷ்மீ, தன் ப்ரஜைகள் ரக்ஷணார்த்தமாகப் பகவானைக் கேட்டால், அவன் மறுக்கமாட்டான் என்று எண்ணவேண்டியதாயிற்று. ஆதலால் இப்படி விவரித்த விஶேஷங்களுடன் கூடின புருஷகாராதிகள் ஐந்தையும், ஸதாசார்ய கடாக்ஷவிஶேஷத்தாலே தெளிந்தவனுக்குத் தான் மஹாவிஶ்வாஸம் பிறக்கும். கர்ம ஜ்ஞாந பக்தி யோகங்களில் இழிய அநர்ஹதையைத் தன் மஹா அபராதங்களால் ஸம்பாதித்தவனையும், 'ப்ரஹ்மஶிவே நீத:' என்கிற ஶ்லோகத்தின்படி, ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகளாலும் ஸ்மரிக்கக்கூடாத பகவத் பரிஜந பாவமெனும் பலத்தை அபேக்ஷிக்கும்படியான சாபல்யமுடையவனையும் இருக்கும் புருஷன், காய க்லேஶமில்லாததும், பொருள் வ்ரயம் வேண்டாததும், ஸக்ருத் அநுஸந்தாநத்துடன் கூடினதோ, ஸமுதாய் ஜ்ஞாநமாத்ரத்தோடு ஸக்ருத் உச்சரிக்க வேண்டியதோவாகின்ற ப்ரபத்தியெனும் மிகவும் லகுவான உபாயத்தைக் கொண்டு, அந்த குருதரமான பலத்தைத் தான் அபேக்ஷித்த காலத்தில் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டு, அதற்கு ஜந்மத்தாலும் நடத்தையாலும் தான் அநர்ஹனாய் இருப்பதை நினைத்தானாகில், அவனுக்கு மஹாவிஶ்வாஸம்

பிறப்பது துர்லபம். ஆகிலும் இவ்விடத்தில் ஸர்வேஶ்வரனுடைய பரத்வத்தை மாத்ரம் யோசித்து, உபாயத்தைப் பற்றாது அகல்வானாகில், "ந மாம் து³ஷ்க்ருதிநோ மூடா⁴: ப்ரபத்³யந்தே நராத⁴மா: । மாயயாபஹ்ருதஜ்ஞாநா:" எனும் பகவத் வாக்யப்படி நராதமனாய்ப் பிறந்து கெட்டானவன். அப்படியாவதைக் காட்டிலும், இடைச்சிகளைப் போல் விவேகமில்லையாகிலும், அவனுடைய ஸௌலப்யத்தை அறிந்து, 'அங்கலனுடை யொருவனை நணுகினம் நாமே', என்று ஆழ்வார் அருளிச்செய்ததை ஸ்மரித்து, ஸௌலப்யாதி ஸமஸ்த கல்யாணகுண விஶிஷ்டனான பரமபுருஷனை விஶ்வஸித்து ஆஶ்ரயிப்பவனே பரமாஸ்திகன். உபாயமென்றால் ஓர் வ்யாஜமாத்ரம், "ஸர்வஜ்ஞோऽபி ஹி விஶ்வேஶ: ஸதா³ காருணிகோऽபி ஸந் । ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" । எனும்வண்ணம், ஸர்வஜ்ஞனும் மஹாகாருணிகனுமான பகவான் கர்மாத்யக்ஷனுமானபடியால், ஸர்வமுக்திப்ரஸங்க பரிஹாரார்த்தம் ரக்ஷ்யனான சேதநனுடைய, "நீ எனக்கு ரக்ஷகனாயிரு", என்று அநுஸந்திப்பதோர் அபேக்ஷையை எதிர்பார்க்கின்றான்.

**ப்ரபத்தியின் அநுஷ்டாந ப்ரகாரம்.**

அங்கங்களுடனும் அங்கியுடனும் கூடிய ப்ரபத்தியைப் பற்றின ஶாஸ்த்ரத்தில், ஆத்மநிக்ஷேபம் என்று சொல்லப்பட்ட அங்கியினுடைய ஸ்வரூபம், ஆபரணத்தை, உடையவனிடம், அதை அவன் தானே ரக்ஷித்துக்கொண்டு பூணும்படியாகக் கொடுப்பதுபோல் இருக்கும்; அது ஸர்வரக்ஷகனாய் ஸர்வஶேஷியாய்த் தோற்றின ஸர்வேஶ்வரனைக் குறித்துத் தனது அத்யந்த பாரதந்த்ரிய விஶிஷ்டமான ஶேஷத்வாநுஸந்தாந கர்ப்பமாயிருக்கும். ஶேஷத்வாநுஸந்தாநம் என்றால், தன்னுடைய ஸ்வரூபமே அவனுக்கு ஶேஷபூதம்; அதாவது, தனது இருப்பே அவனுடைய கைங்கர்யத்தின் பொருட்டு, என்றெண்ணுதலாம். இதற்குப் பரந்யாஸமெனும் அநுஸந்தாந விஶேஷம் உத்தேஶ்யமாயிருக்கின்றபடியால், இதைப் பரந்யாஸ ப்ரதாநமென்று



அருளிச்செய்தார். இதன் கருத்து, ஸ்வரூபமே அவனுடைமையாதலால், அதன் ரக்ஷணபரமும் அவனுடையதென்னும் நிச்சய ஜ்ஞாநம். ஆதலால் தன்னுடையவும், தனதென்று அபிமாநித்தவற்றினுடையவும், ரக்ஷண வ்யாபாரத்திலும், அந்த ரக்ஷணத்தின் பலத்திலும், தான் பரதந்த்ரனானபடியால் தனக்கு ஸ்வாதீநமும் இல்லை; அவை, தன்பொருட்டும் செய்யப்பட்டவையல்ல; ஸ்வதந்த்ரனான பரமேஶ்வரன் தன் ப்ரயோஜநத்தை உத்தேஶித்தே, தனது நிர்ஹேதுக தாஸனை ரக்ஷிக்கின்றான்; அவன் உடைமையான ஆத்மாவைத் தன்னதென்றும், அவன் பொருள்களாய் நின்ற சரீரத்தையும் தத்ஸம்பந்திகளையும் தன்னுடைமைகளென்றும், மித்யாபிமாநம் கொண்டு, ஸம்ஸரித்துக் கொண்டுநின்ற அளவில், இவனுக்குத் தத்வஜ்ஞாநமுண்டாய், ஸ்வரக்ஷணத்தில் ஸர்வப்ரகாரமாகத் தன்னுடைய அஶக்தியைத் தெளிந்து, பரமகாருணிகனான ஶரண்யன் விதித்ததோர் வ்யாஜமாத்ரமான உபாயத்தை அவன் கொடுத்த கரணகளேபராதிகளைக் கொண்டு பற்றுவதில், அவன் ப்ரதாந கர்த்தாவென்றும் பலி என்றும் அறிந்து, இவ்விதமாகத் தனக்கு ஏற்பட்ட பராதீந பரார்த்த கர்த்ருத்வத்தை நினைத்துத் தனக்கு அவற்றில் அந்வயம் இல்லாமையை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆகிறது.

ஶரணாகதி யெனும் அநுஸந்தாந விஶேஷம், 'ஸாத்⁴யோபாயநிக்ஷேபணம்' எனும் ப்ரமாணத்தால், விதிக்கப்பட்டிருக்கின்றது. இதை அநுஷ்டிக்கும் ப்ரகாரமாவது: ஸர்வஶேஷியாயும் ஸ்வதந்த்ரனுமான ஈஶ்வரன், தன் ப்ரயோஜநமாகவே ரக்ஷிக்கின்றானாகையால், அவனைத் தவிர மற்றொருவர்க்கும் தகாததும், மற்றொருவர்க்கும் ஆதீநமற்றதுமான ஶேஷத்வத்தை ஸ்வரூபமாகத் தாங்கி, அவனுக்கே அத்யந்த பரதந்த்ரனான புருஷன் 'ஆத்மீயம் ந மம', என்கிறபடி, நானும் எனக்குரியேனல்லேன், ஒரு வஸ்துவையும் நிருபாதிகமாக என்னதெனக் கொள்வேனுமல்லேன்; 'ஸ்வயம் ஶ்ரீஶக்திப்ரஸக்தஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: । ஸ்வரக்ஷணைகஶக்தஸ்ய கோ வா ஹேதும் ப்ரரக்ஷணே ।' "ஈஶ

வரப்ரேரணம் இல்லாவிட்டால், மண்ணுங்கட்டியைப் போன்றவனும், ஈச்வரனுக்குப் பாதந்த்ரனானவனும், தன் ரக்ஷணவிஷயத்திலும் அசக்தனுமான சேதநனுக்கு அயலார் ரக்ஷணவிஷயத்தில் ப்ரஸங்கமேது?” என்கிறபடியே, என்னையும் என்னதென்று பேர் பெற்றவற்றையும், நானே ஸ்வதந்த்ரனாயும், ப்ரதாந பலியாயும் ரக்ஷித்துக்கொள்ள யோக்யனுமல்லேன்; ‘ஆத்மா ராஜ்யம் தநஞ்சைவ களத்ரம் வாஹநாநி ச । ஏதத் பகவதே ஸர்வம் இதி தத் ப்ரேக்ஷிதம் ஸதா ॥” “தானும், தனது ராஜ்யமும், தநமும், களத்ரம், வாஹநங்கள் முதலான ஸர்வமும் பகவச்சேஷபூதம் என்று அவனால் நிரந்தரம் பாவிக்கப்பட்டன”, என்று மஹாபாரதத்தில் உபரிசரவஸு விஷயமாகச் சொல்லப்பட்டபடி, விவேகிகள் அநுஸந்தித்த க்ரமத்திலே, நானும், என்னுடையவையெனப்பட்ட யாவும் பகவானுடைய வஸ்துக்கள், என்றிவ்விதமாக அத்யவஸிக்க வேண்டும். மேலும், ‘ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே’, என்பதால், ‘ஆத்மாநம் மயி நிக்ஷிபேத்’, எனும் விதிவாக்யத்துக்கு, ஆத்மாவினுடையவும் ஆத்மீயங்களுடையவும் ரக்ஷணபாரத்தைப் பகவானிடம் ஸமர்ப்பித்தல் என்பது தாத்பர்யம் ஆகையாலும், ‘நஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்’ என்பதால், ஸர்வேச்வரனை ஹரியைத் தவிர மற்றெவர்க்கும் ரக்ஷணவிஷயத்தில் ஸாமர்த்யம் இல்லாதபடியாலும், ஆத்மாத்மீயங்களுடைய ரக்ஷணபரமும், ஸர்வரக்ஷகனை அவனுடையதே; ‘ஸ்வேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா । கேசவார்ப்பணபர்யந்தா ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே ॥’ (அவனால் ரக்ஷிக்கப்படுமிவனுக்கு ரக்ஷண பலத்தில் ஸ்வஸம்பந்தமில்லாமையானது, கேவலம் ஸ்வஸம்பந்த நிஷேதமாத்ரமாக அநுஸந்தித்தால் போதாது; பலமும் கேசவனுக்கே ஸமர்ப்பிக்கப் படவேண்டியது; அதாவது பலத்தில் தன் ஸம்பந்த நிஷேதத்தையும், அது பகவானுடையதே என்பதையும் அநுஸந்திக்க ப்ராப்தம்) என்கிற ப்ரமாணப்படி ரக்ஷண பலமும் ப்ரதாந பலியான அவனதே என்று பாவிக்கையும் அவச்யம் வேண்டும்.

பத்ராதிபர்.

# ஸ்ரீராமனுடைய வயோநிஷ்கர்ஷம்.

ஸ்ரீராமனுடைய வயோநிஸ்சயத்தைப்பற்றிச் சென்ற மாஸத்தில் ஒரு ஸ்வாமி ப்ரஸ்நரூபமான கடிதம் ஒன்று எழுதியிருக்கின்றார். வ்யாக்யாநங்களைப் பார்த்தால், அந்த ஸ்வாமிக்கு ஸமாதானம் ஒரு விதம் ஏற்பட்டிருக்கும். பாலகாண்டம் இருபதாம் ஸர்க்கத்தின் இரண்டாவது ஸ்லோக வ்யாக்யாநத்திலும், அயோத்யாகாண்டம் 20 - வது ஸர்க்கத்திலும் அந்த விஷயம் சிந்திக்கப்பட்டிருக்கின்றது. விஸ்வாமித்ரர், ஸ்வாமியைத் தன்னுடன் அனுப்பும்படித் தசரதரைக் கேட்டபோது, தசரதர், ஸ்ரீராமன் ஊநஷோடசவர்ஷனென்றும், ராக்ஷஸரோடு அவனுக்கு யுத்தயோக்யதை இல்லையென்றும் சொன்னதாக ஏற்படுகின்றது. அதற்கு ஸமீபித்த காலத்தில்தான் ஸீதாவிவாஹம். ஊநத்வம் பதினாறு வர்ஷத்துக்குக் குறைந்த பன்னிரண்டு பதிமூன்று வர்ஷங்களிலும் ஏற்படலாம்; அதற்குச் சில மாஸக்குறைவாலும் ஏற்படலாம். ஆரண்யகாண்டம், 47 - வது ஸர்க்கத்தில் ஸீதை ராவணனுடன் ஸம்பாஷிக்கும்போது, தனக்கு வநவாஸாரம்பத்தில் 18 - வயதென்றும், ஸ்ரீராமனுக்கு அப்போது வயஸ் 25 - என்றும் சொல்லித் தான் விவாஹாநந்தரம் 12 - ஸம்வத்ஸரம் அயோத்யாவாஸம் செய்ததாகவும், பிறகு 13 - வது வருஷத்தில் ராமபட்டாபிஷேக ப்ரயத்நம் நடந்ததாகவும் சொல்லியிருக்கிறபடியால், தன் விவாஹகாலத்தில் ராமனுக்கு 12 - வயதென்று சொன்னதாயிற்று. ஆரண்யகாண்டம் 38 - வது ஸர்க்கத்தில், மாரீசன் ராவணனுடன் ஸம்பாஷிக்கையில் விஸ்வாமித்ர யாக ஸமயத்தில் ஸ்ரீராமனைக்குறித்து ‘பாலோ த்வாதசவர்ஷோऽயம் அக்ருதாஸ்த்ரஶ்ச ராகவ:” என்று தசரதர் விஸ்வாமித்ரருடன் உரைத்ததாகக் கூறியிருக்கின்றான். ஆனபடியால், விஸ்வாமித்ரர் தசரதரை ப்ரார்த்தித்தபோதும், ஸீதா

விவாஹகாலத்திலும், ஸ்ரீராமனுக்கு வயஸ் 12 - என்பதும், பிறகு 12 - வருஷம், ஸ்வாமி அயோத்யாவாஸம் செய்தனரென்றும், அதன் பிறகு 13 - ம் வருஷம், அதாவது, ஸ்வாமியினுடைய 25 - வது வருஷத்தில் வநவாஸாரம்பம் என்றும் சொல்லக்கூடும். ஸீதையும் ராவணனுடன் அப்படியே சொன்னாள்.

ஆனால் அயோத்யாகாண்டம் 20 - வது ஸர்க்கத்தில் “ உஶஸப்தவஷா௱ணி தவஜாதஸ்ய ராவவ । அஸிதாநிப்ரகாங்க்ஷந்த்யா மயா து:கபரிக்ஷயம் ॥ ”, என்று கௌஸல்யாவசந மிருக்கின்றதே யென்றால், ‘ ஜாதஸ்ய தவ ’ என்றால் உபநீதஸ்ய தவ - அதாவது நீ பிறந்தபிறகு, உஶஸப்தவஷா௱ணி - பதினேழு வர்ஷங்கள், து:கபரிக்ஷயம் ப்ரகாங்க்ஷந்த்யா - உனது யௌவராஜ்ய பட்டாபிஷேகத்தினால் எனது துக்கநிவ்ருத்தியை எதிர்பார்த்து நின்ற என்னால், அஸிதாநி - இருக்கப்பட்டன, கழிக்கப்பட்டன, என்று அந்த ஸ்லோகார்த்தம். அங்கே ஜாதஸ்ய என்றால், இரண்டாவது பிறப்பாகிய உபநயநம் என்று அர்த்தம் செய்கின்றார்கள். அது க்ஷத்ரியர்க்குக் கர்ப்பகாலம் முதல், 11 - வது ஸம்வத்ஸரத்தில் ப்ராப்தமானபோதிலும், கர்ப்பகாலம் முதல் 9 - வது ஸம்வத்ஸரம் முதற்கொண்டு க்ஷத்ரியர்க்கு உபநயநகாலம் சொல்லப்பட்டிருப்பதாலும், ராஜஸ்ரேஷ்டரான தஶரதர், தன் புத்ரனுக்கு 8 - வது வயஸில் உபநயநம் செய்வித்திருப்பர். யுவராஜத்வ அபேக்ஷை ஸ்வாமியின் உபநயநத்தின் முன் கௌஸல்யைக்கு உதித்திருக்கமாட்டாது. அதனால் கௌஸல்யா சொன்ன பதினேழு ஸம்வத்ஸரம் அதன்பிறகு நடந்தது; வநப்ரவேஶகாலத்தில் ஸ்வாமிக்கு வயஸ் 25 - தான்; என்றிப்படி ஒரு நிர்ணயம் செய்கின்றார்கள்.

சிலர், ‘ ஊநஷோடஶவஷ௱: ’ என்பதால், விஶ்வாமித்ரர் வந்த காலத்தில் ஸ்வாமிக்கு 16 - வது வயஸ் நடந்ததென்றும், அது முடிவாகவில்லை யென்றும் சொல்கின்றனர். ஊந - என்பதால் 16 - வது வயஸ் பூர்ணமாகவில்லை யென்று அர்த்தம் செய்கின்றனர். 16 - வயது பூர்ணமானபிறகு தான் யுத்தம் செய்ய யோக்யதை



162026

க்ஷத்ரியர்க்கு உண்டாகின்றது. ஆனபடியால் தஶரதர் ஸ்ரீராமனு
க்கு அந்தக் காலம் யுத்தயோக்யதை இல்லையென்றபடி. இது இப்
படியாகில் ஸீதாவசநப்படி விவாஹாநந்தரம் 12 - வர்ஷம் அயோ
த்யாவாஸமும், 13 - வது வர்ஷத்தில் வநவாஸாரம்பமும் என்று
கின்றது. அப்போது ஸ்வாமிக்கு வயஸ் 27 - 28 - என்று முடிகின்
றது. க்ஷத்ரியர்க்கு கர்ப்ப ஏகாதஶ ஸம்வத்ஸரத்தில் உபநயநமா
கின்றபடியால், ததநந்தரம் கௌஸல்யா 17 - வர்ஷம் ஸ்வாமியி
னுடைய யௌவராஜ்ய பட்டாபிஷேகத்தை ப்ரதீக்ஷித்தா ளென்
றால், வநவாஸாரம்பத்தில் ஸ்வாமிக்கு 27 - 28 வயஸ் என்பது ஏற்
படுகின்றது. மாரீசவசநம், விஶ்வாமித்ரருடன் தஶரதவசநத்தை
அநுவதிக்கிற தாகின்றபடியால், அங்கே பாலன் என்று சொன்னது
16 - வது வயஸிலும் பொருந்தும். 16 - வயஸ் பூர்ணமாகித்தான்.
யௌவநகாலம் ப்ராப்தமாகின்றது. ‘ த்வாதஶவஷ௱: ’ என்று
மாரீசன் சொன்னது, முன் அவனிடம் பட்டதை நினைத்துக்கொ
ண்டு, மறுபடி ஸ்ரீராமனுடன் யுத்தம் செய்ய ராவணனால் ஏற்படு
மென்று பயந்து, ப்ராந்தியால் சொல்லப்பட்டதென்று உரைப்பார்.
கேவலம் 12 - வர்ஷத்தில் ‘ அவன் என்னைப் படுத்திய பாட்டைக்
கேள் ’ என்று ராவணனுக்குப் பயம் உண்டாக்க அவ்வண்ணம் சொ
ன்னதென்றும் சொல்வர். மாரீசனை ஸ்வாமி வாயவ்யாஸ்த்ரத்
தால் ஸமுத்ரத்தில் தள்ளினகாலத்தில், ஸ்வாமியை மாரீசவாக்
யத்தில் அக்ருதாஸ்த்ரன் என்பதால் இந்த ஸமாதாநம் யுக்தமென்
பர். மாரீசவசநத்துக்கு இப்படி ஸமாதாநம் சொன்னால், ஸீதை
வய ஸாபஞ்சவிம்ஶக: ’ என்று, ஸ்பஷ்டமாக, வநவாஸாரம்பத்
தில் ஸ்வாமிக்கு 25 - வயஸ் என்கின்றாளே என்றால், பஞ்சவிம்ஶக:
என்பதில், க எனும் எழுத்து, பஞ்சவிம்ஶதுல்யன் என்று அர்த்
தம் தரும் என்றும், தேவர்கள் எப்போதும் 25 - வயஸ்ஸுள்ளவ
ர்தலால், ஸ்வாமிக்கும் 25 - வயஸ்ஸுடையவரென நித்யயௌ
வநத்வம் பொருந்து மென்பர்.

இப்படி வ்யாக்யாதாக்கள் யோசிக்கின்றனர். இதற்கு மேல்
யோசனை யார்க்குத்தான் உண்டாகும்? வநவாஸாரம்பத்தில்
தனக்கு வயஸ் 18 - என்று ஸீதை கண்டோக்தமாய்ச் சொன்

R65m211,N10VD

ளுள். அதனுல் அவளுக்கு விவாஹகாலத்தில் வயஸ் ஆறு என்று ஏற்படுகின்றது. இந்த யோசனையை அங்கீகரித்து உத்தாராம சரித்ரத்தில் பவபூதியும் ஸீதை கல்யாணகாலத்தில் [illegible]வென்று அபிப்ராயப்பட்டனர். இதை முதலங்கம் '[illegible]' எனும் ஶ்லோகத்திலும், '[illegible]', எனும் ஶ்லோகத்திலும், '[illegible]', எனும் ஶ்லோகத்திலும் காணலாம்.

அயோத்யாகாண்டம் 118-வது ஸர்க்கத்தில் ஸீதாவாக்யம், '[illegible] ॥' என்றிருக்கின்றது. '[illegible]' என்பதை வ்யாக்யாதாக்கள் '[illegible]' என்றும் '[illegible]' என்றும் அர்த்தம் செய்கின்றனர். கல்யாணம் செய்யக்கூடிய வயஸ் என்றாலும், யௌவநம் வந்துவிட்டதென்றாலும், விவாஹ காலத்தில் ஸீதைக்கு ஆறுவயஸ் ஆயிற்றென்றும் விஶ்வாஸம் பொருந்தமாட்டாது. ஜநகர் ஸீதைக்கு விவாஹோசிதவயஸ் வந்ததென்று தெரிந்துகொண்ட பிறகு, உசிதமான காலத்தில் ஸீதைக்குக் கல்யாணம் செய்யாத நிமித்தம், ஜநங்களுடைய திரஸ்காரத்தை அடைந்தனர் என்றும், அதனுல் '[illegible] ॥' என்றும் பின் ஶ்லோகங்கள் வெளியிடுகின்றன. ஸரியான வரனை ஸம்பாதிப்பதற்கு ஜநகர், நரேந்த்ரர்களை வரவழைத்து, அவர் முன்னிலையில் ருத்ரசாபத்தை வளைத்து நாணேற்றுபவனுக்கே ஸீதையைக் கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை பண்ணினுரென்றும், அந்தத் தநுஸின் தோலநத்திலும் அசக்தராய், மன்னர்கள் அதை நமஸ்கரித்துச் சென்றாரென்



றும், அதன்பிறகு, '[illegible] ॥' என்று, ஜநகருடைய ப்ரதிஜ்ஞைக்குப் பருகாலம் பிறகு ஸ்ரீராமன் மிதிலைக்கு எழுந்தருளினுனென்றும், ஸீதையின் வச நங்களால், ஸீதைக்கு விவாஹத்துக்கு நீண்ட காலம் முன்பே, விவாஹோசிதகாலம் உண்டாயிற்றென்று ஏற்படுகின்றது. பால காண்டம் 65-வது ஸர்க்கத்திலும் இந்த விவரங்கள் ஜநகருடைய வசநங்களால் ஸித்திக்கின்றன. ராஜஶ்ரேஷ்டர்கள் மிதிலாபுரியை ஒரு வருஷ காலம் தகைந்தன ரென்றும், பிறகு ஜநகரால் ஒட்டப் பட்டன ரென்றும், அதற்குச் சிலகாலம் கழித்து ஸ்ரீராமன் அவ்விடம் வந்ததாகவும் ஏற்படுகின்றது.

விவாஹநந்தரம் அயோத்யாநகரத்தை அடைந்தபிறகு, ஸ்ரீ ராமனும் அவன் அநுஜர்களும், அவ்வவருடைய பத்நீமார்களுடன் [illegible]கித்திருந்தனரென்று, '[illegible]' '[illegible]' '[illegible]' எனும் ஶ்லோ கத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஶ்லோகார்த்தம் வ்யாக் யாதாக்களால் விவ்ரிக்கப்படவில்லை. அந்த ஸர்க்கம் முடிவில் '[illegible] ॥' என்கிற ஶ்லோகமும், அதன் பின்னுல் அவர்களுடைய பரஸ்பரானுராக வர்ணத்தையும் யோசித்தால், விவாஹகாலத்தில், ஸீதா [illegible] வாக இருந்திலள் என்பது ஸ்பஷ்டம். அவள் அயோநிஜையாய் ஜநகருக்கு ப்ராப்தமானுள். தத்பூர்வமே அவள் பூமியில் தனது தேஜஸ்ஸால் சிலகாலம் வஸித்திருந்தனள் ஆதலால், அக்காலத் தையும் சேர்த்துப் பார்த்தால்தான், விவாஹகாலத்தில் அவளுக் குப் பதிஸம்யோகஸ[illegible]மான வயஸ்ஸானது ப்ராப்தமாயிருந்த தென்று ஏற்படும்.

ஆதலால் ஜநகரை அவள் பிதாவாக அடைந்தபிறகு, 6 - ஸம்வத்ஸரம் கழிந்தது அவளுடைய விவாஹகாலத்தில் என்று சொல்லவேண்டும். பூமியினின்றும் அவள் உத்பத்தி காலத்தை யோசித்துத்தான், அவளுக்கு வநவாஸாரம்பத்தில் 18 - வயஸும், ஸ்வாமிக்கு அப்போது 25 - வயஸுமென்று அவள் ராவணனுடன் சொல்லியிருக்கவேண்டும்.

இன்னும் மற்ற ஸர்வ ஸந்தர்ப்பங்களையும் யோசித்தால், ஸ்ரீ ராமன் 16 - வது வயஸில் லோகத்ருஷ்ட்யா 12 - வது வயஃ க்ரமத்தை யடைந்த ஸீதையைக் கல்யாணம் செய்துகொண்டார் என்னலாம். ஸீதாவசநம் வநவாஸாரம்பத்தில் அவர்க்கு 25 - வயஸ் என்றும், அவளுக்கு 18 - வயஸ் என்றும் இருக்கின்றதே யென்றால், இது அந்தத் திவ்ய தம்பதிகளுடைய நித்ய யௌவநத்தை ஸூசிப்பிக்கின்றதென்னலாம்.

இதிஹாஸ க்ரந்தங்களில் பூர்வம் இல்லாத ஶ்லோகங்களும், ஸர்க்கங்களும், அத்யாயங்களும், அங்கங்கே ப்ரக்ஷிப்தங்களென ஸுலபமாக ஊஹிக்கக்கூடியவையாய் இருக்கின்றன. இதுவுமன்றி, பகவானுடைய அவதாரங்களில், அவன் வயஸ்ஸைப் பற்றி யோசனை உதித்தபடி, மற்றும் அநேக விஷயங்களைப்பற்றி பூர்வோத்தர விரோதங்களால், தக்க ஸமாதாநம் தத்காலம் ஏற்படுவது கஷ்டம். இந்த அம்சங்கள் நமது ப்ராசீந ஸம்ப்ரதாயத்திற்குத் தத்காலம் ஸம்பவித்திருக்கின்ற ப்ரச்சந்ந விரோதிகளுக்கும், ப்ரகாச விரோதிகளுக்கும், தூஷணங்கட்கோ, நிந்தைக்கோ ஸ்தாநங்களாகின்றன. இவற்றைப்பற்றி முன்னும் யோசித்திருக்கின்றோம். பின்னும் யோசிக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். விதேசவித்யா ரூபமான வ்யாக்ரமானது நம் சிறுவர் சித்தங்களாகின்ற அஜங்கள்மேல் பாய்ந்து, அவற்றைக் கொண்டு, அவர்களுடைய ஆத்மநாசத்தை விசேஷமாகச் செய்கின்றது. இப்போது குன்றிப்போன ஸாதுஜநங்கள் அவர்களை எவ்வண்ணம் ரக்ஷிக்க நேரும்?

பத்ராதிபர்.

# ஜநகநந்திநீ.

ஆறும் திருநாள் அர்த்தராத்ரியில் பகவான் ஸந்நிதிக்குத் திரும்பினார். ஸந்நிதி கிங்கரர்க்கு நித்ரைபோவதற்கு அவகாசமில்லை. வேதபாராயணம் செய்பவரும் நேரிட்டவிடங்களில் சிறிதுகாலம் ஶயநித்துக்கொண்டனர். உத்ஸவ, விபவங்களால் ஆகர்ஷிக்கப்பட்ட மநஸ்ஸுடன் கூடினவர்க்கு நித்ரையென்பது நிலைத்துவராதென்பது அநுபவஸித்தம். அதுவுமன்றிப் பகவான் ரதாரோஹணத்துக்காக எழுந்தருளப்போகின்றான் என்பதை நகரத்தில் யாவரும் அறியவேண்டி, வெடிமருந்தின் வ்யயத்தை மிகுதியாக அன்றிரவு செய்துகொண்டிருந்தனர். மூன்றாவது யாமம் முடிவுறுமெல்லை அடுக்குப்பட்டை போட்டுவிட்டார்கள். உடனே துயிலெழுந்து நின்ற யாவரும் ஸந்நிதிக்குள் வெள்ளை வெளிச்சத்தைக் கண்டனர்; மணியோசையையும் கேட்டனர்; க்ஷணத்துக்குள்ளாக அத்புதமான ஸேவையுடன் வரதனும் ஸேவைஸாதித்தனன். பெருமாள் தர்சநபதமாயினர் என்று சிந்திப்பதற்குள், சிந்தித்தவர் நிற்குமிடத்தைக் கடந்து எழுந்தருளிவிட்டார். பின்தொடர்வதற்கும், தக்க வலியற்றவர் பகவானைப் பின்தொடர ஸமர்த்தராகவில்லை. எவரும் அவனுடைய திருக்கோலத்தைக் கண்டு மகிழக் காலம் நேரவில்லை. பின்னிருந்தவர் முன்போட யத்தநித்து, ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டுபோய் முன்னே நிற்கவும், கண்ணில்பட்ட எம்பெருமான், மேகத்தின்கண் ஓடுகின்ற மின்னலையொத்துக் கண்பட்டும், படாமல் எழுந்தருளிவிட்டான். பெருமாள் முன் சென்றவர்கட்கு வேகமாய் நடக்க அமைந்ததேயன்றித் திரும்பிப் பெருமானைத் தர்சிக்க அமைந்திலது. இப்படி ஆதுரப்பட்ட ஜநங்களிடம் க்ருபைகொண்ட ஸர்வேச்வரன், இவர்கள் அநுக்ரஹ நிமித்தமாக அங்கங்கு சிறிது நின்று நின்று போயினன்.

இவ்வேகமேன்? இந்த அவஸரம் எதற்கு? இப்படிக் கேட்ட ஜனங்கட்கு ரதாரோஹணத்திற்கு லக்நம் தவறக்கூடாதெனப் பகவான் வேகமே எழுந்தருளலாயிற்றென்பர் ஸந்நிதிகிங்கரர். அங்ஙனமாகில், சற்றுமுன்னுகவே எழுந்தருளத்தகாதோ வென்றால், "ஆறாந்திருநாள் உத்ஸவம் முடிய ஸாவகாசமாயிற்று; உடனே பெருமாள் ரதோத்ஸவத்திற்கு எழுந்தருள வேண்டும்; யார் தூங்கினார்கள்? எங்களுடைய கஷ்டத்தை யார் மதிக்கின்றார்கள்?" என்பார் கிங்கரர். இதெல்லாம் லோகத்ருஷ்டி. அர்ச்சாரூபியாக ஸேவைஸாதிக்கும் பரமாத்மா, அவனது கிங்கரரெனப்பட்டவருடைய இஷ்டங்கட்கும் வ்யாபாரங்கட்கும் அடங்கினவன் ஆகின்றான். விபவாவதாரங்களில் 'ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய' அவதரிப்பதுபோல், அர்ச்சைகளில் அவன் அவதரணம் செய்கின்றானில்லை. அர்ச்சாவதாரங்களைக்கொண்டு பகவான் யாதொரு ஸாது பரித்ராண துஷ்டநிக்ரஹ ரூபமான வ்யாபாரங்களும் செய்கின்றானில்லை. தனது ஸர்வசக்திவிசிஷ்ட ஸ்வரூப ப்ரகடநமும் பண்ணுகின்றானில்லை. ஆக, விபவாவதாரங்களுக்கும், இவற்றுக்கும் ஸமாநமான அம்சம் யாதெனில், அகர்மவச்யத்வமும், ஜகத்தின் உபகாரமும் தான். அங்கே, லோகஹிதம் அவனுக்கே உரியதான ரக்ஷண வ்யாபாரத்தில் அந்தர்கதங்களான ஸாது பரித்ராணம், துஷ்டநிக்ரஹம், தர்மஸ்தாபநம் இத்யாதிகளாய் ப்ரகாசிக்கின்றது. இங்கே, அது அவனுடைய பக்தர் தர்சித்து அநுபவிக்க யோக்யமாவதும், தர்சிக்காத காலத்தில் த்யாநவிஷயமாவதும், உசிதமான கைங்கர்யங்கள் செய்ய இடங்கொடுப்பதும், ஆகிய இந்த ரூபங்களுடன் அமைகின்றது. ஆதலால், அடியார் ரஸித்தபடி அநுபவம் செய்வதாகின்ற ஹிதம் ஒன்றை உத்தேசித்து, 'பிம்பாக்ருத்யாத்ர நா பிம்பே ஸாமக்ர்யாவதிஷ்டதே' என்னும்படி, அர்ச்சையைப்போன்ற அப்ராக்ருதரூபத்தைத் தரித்தவனாய்க்கொண்டு, அர்ச்சையில் ஸாந்நித்யம் செய்கின்றான். இந்த உண்மையைக் கோவில் பரிஜநங்கள் ப்ராயேண பராமர்சிப்பதில்லை. பராமர்சிப்பவர்க்குத் தத்காலம் எம்பெருமானைத் தர்சித்து ஸ்புரிக்கும் யோசனைகளை இவ்விடம் விவரிக்கிறோம்?



பாணன் முதலானவர்களுடன் யுத்தம்செய்யப் போனபோதும், ருக்மிணியின் ப்ரார்த்தனைக்கு இணங்கி அவளை ரக்ஷிக்கச் சென்றபோதும், பகவான் ரதமேறிச் சென்றனர். அந்த அவஸரங்களில், அநிருத்தனைப் பாணன் வசத்தினின்று மீட்பதற்கும், சேதிக்கோனையும் அவன் மித்ரர்களையும் நிராகரித்து ருக்மிணியை அழைத்துக்கொண்டு போவதற்கும், பரமனுக்கு த்வரையுடன் ரதாரோஹணம் செய்ய நேர்ந்ததென்றால், அத்தகைய த்வரை இப்போதுண்டாவானேன்?

உபநிஷத்தில், சரீரத்தை ரதமாகவும், ஆத்மாவை ரதியாகவும், புத்தியை ஸாரதியாகவும், மநஸ்ஸைக் கடிவாளமாகவும், குதிரைகளை இந்த்ரியங்களாகவும், விஷயங்களை மார்க்கங்களாகவும் வர்ணித்து, ஸாரதிரூபமான புத்தியைக்கொண்டு மநஸ்ஸை ஸ்வாதீநத்தில் வைத்துக்கொள்பவனுக்கு, இந்த்ரியங்களை அடக்கியாளப் பொருந்துமென்றும், அவன்தான் 'ஸம்ஸாரசக்ரத்தைத் தாண்டி முமுக்ஷுக்களால் ப்ராப்யமான விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றானென்றும் சொல்லியிருக்கின்றது. அர்ஜுந ரதத்தில் பகவான் ஸாரதியாய் எழுந்தருளியிருந்து, அவனுக்கு ஜ்ஞாநோபதேசம் செய்ததும், காயத்ரீ மஹாமந்த்ரப்படி, யாவர்க்கும் புத்திப்ரேரகனாய் அவன் இருப்பதையிட்டு ஒருவாறாகப் பொருந்தலாம். ஆனால் புத்திக்கு அபிமாநிதேவதையான ப்ரஹ்மா ஸாரதியாகவும், மநஸ்ஸின் ஏகதேசமான அஹங்காராபிமாநிதேவதையான ருத்ரன் கடிவாளமாகவும், இந்த்ரியாபிமாநிதேவதைகளான இதர தேவர் குதிரைகளாகவும், ப்ரபஞ்சமே விஷயமாகவும் அமைந்த ரதத்தில் பரதேவதையான வரதன் எழுந்தருள த்வரை கொண்டதென்னோ?

கலிகாலத்தில் லோகம் மிகவும் விஷயாஸக்தமாகவும், வித்தார்ஜந வ்யாபாரத்தில் ஸர்வ பாபக்ரியைகளிலும் ப்ரவ்ருத்தமாயும், கெட்டுப்போனதைக் கடாக்ஷித்துத் தன்னை ரதஸ்தனாகத் தர்சித்தமாத்ரத்தால் முமுக்ஷுத்வ ஸம்பாதநத்துக்கு யோக்யதையைத் தரவல்ல ஸுக்ருதம் எளிதில் ஜநங்கள் ஸம்பாதித்துக் கொள்ளக்கூடும் என்று திருவுள்ளம்பற்றி, த்வரைகொண்டு, அங்கர்கண் வந்து சேர்ந்த யாவர்க்கும் ரதஸ்தனான தனது தர்சநத்தைத் தருவதற்காக இவ்வண்ணம் எழுந்தருளுகின்றானோ?

'रथस्थं केशवं दृष्ट्वा पुनर्जन्म न विद्यते', என்று வசநமிருக்கின்றதன்றோ?

"यस्याङ्घ्रिपङ्कजरजःस्नपनं महान्तो वाञ्छन्त्युमापतिरिवात्मतमोऽपहत्यै । यर्ह्यम्बुजाक्ष न लभेय भवत्प्रसादं जह्यामसून् व्रतकृशान् शतजन्मभिः स्यात् ॥" என்று ஸ்ரீபாகவதத்தில் ஸ்மரித்தவண்ணம், "ஓ! தாமரைக்கண்ணா! யாதொரு உன்னுடைய திருவடித்தாமரைகளின் ரஜஸ்ஸுக்களால் ப்ரோக்ஷணத்தை உமாபதியைப்போன்ற மஹான்கள் தமது அஜ்ஞாநநிவ்ருத்தியின்பொருட்டு வேண்டுகின்றனரோ, அப்படிப்பட்ட உனது க்ருபையை நான் அடையாமற் போனால், உபவாஸாதிகளால் க்ருஶமாய்ப்போன எனது ப்ராணன்களை த்யஜிக்கின்றேன். இப்படி அடிக்கடி நான் ப்ராணத்யாகம் செய்து பஹு ஜந்மாந்தரமாவது உன் ப்ரஸாதத்தை அடைவேன்" என்று ருக்மிணியின் ஸந்தேஶத்தைக் கேட்டமாத்ரத்தில், 'रथः संयुज्यतामाशु दारुकेत्याह सारथिम्', என்று த்வரையுடன் ஸாரதியை அழைத்து ரதத்தை ஸித்தம் செய்யப் பகவான் ஆஜ்ஞாபித்தனன். அக்காலம் த்வரைக்குக் காரணம் விளங்குகின்றது. உத்ஸவகாலத்தில் யார்தான் பகவான் த்வரையுடன் ரதமேறும்படி அபேக்ஷித்தார்களோ?

யாரும் அபேக்ஷித்தாரில்லை. அநிருத்த த்ராணத்தில் நேர்ந்த த்வரை இப்போது பகவானுக்குண்டாயது என்று சொல்லவொண்ணுமோ? பகவானுடைய பௌத்ரனும், அம்சபூதனும், பகவானுடன் நித்யம் த்வாரவதியில் வஸித்துக்கொண்டுமிருக்கையில், அவன் ப்ரக்ருதியின் குணங்களாலும், ப்ராக்ருத விகாரங்களாலும், தகையப்படாதவன் என்றும், அகர்மவஶ்யன் எனவும் சொல்லவொண்ணும். அவனும் சித்ரலேகையினுடைய யோகபலமெனும் மாயாசக்தியில் சிக்கினவனைக்கொண்டு, சரீரமெனத்தகும் ஶோணிதபுரத்தில் உஷையெனும் பாணபுத்ரியின் அநுபவத்தால் அபஹரிக்கப்பட்ட ஸர்வேந்த்ரியோபேதனாய், தன்



காலம் போவதையும் நினைத்தானில்லையென்று, 'नाहर्गणान्स बुबुधे ऊषयापहृतेन्द्रियः', எனும் ஸ்ரீபாகவத வாக்யத்தால் ஸ்மரிக்கப்பட்டது. அவனிருப்பிடத்தை நாரதரால் தெரிந்துகொண்டு ஸ்ரீக்ருஷ்ணன் வ்ருஷ்ணிகுல வீரருடன் சென்று, பாணனை ஜெயித்து அவனை மீட்டனர். அவ்வண்ணமே கர்மவஶ்யராய் ப்ரக்ருதியின் சுழலில் சிக்கி விஷயாஸக்த சேதனராய்ப் போந்த பாமரஜநங்களுடைய ரக்ஷணார்த்தம், பகவான் த்வரைகொண்டனன் எனத்தகாதோ? அவர்க்குப் பகவானிடம் பக்தியில்லாமலும், சிலகாலம் அவனிடம் அவர் த்வேஷம் பாராட்டியிருந்தாலும், 'समोऽहं', எனும் ஶ்லோக தாத்பர்யப்படி, ஶரண்யன் தன்னுடைய அம்சபூதரான ப்ரஜைகளை ரக்ஷிக்கும் நிமித்தம், தத்காலம் ஸந்நிதியைவிட்டு, விபுதவைரிகளை விரட்டி ஓடச்செய்யும் கண்டாநாதத்துடன், ரதாரோஹணத்துக்காக எழுந்தருளுகின்றான் எனத்தகும்.

இவ்விதமாய் ஸேவைஸாதித்த எம்பெருமானை ஜநகநந்தினி தர்சித்தனள். அவள் பிதா பெருமாளுடன் கைங்கர்யநிமித்தமாகச் சென்றனர். தன்னுடன் கைங்கர்யம் செய்துகொண்டு வந்த பத்மநாபாசார்யரையும் தூரத்தினின்று கண்டனர். பகவான் ரதத்தின் மீது எழுந்தருளின பிறகு இருவரும் ஒருவரோடொருவர் ஸம்பாஷித்துக்கொண்டு க்ரஹங்களுக்குத் திரும்பினார்கள். முடிவாகப் பத்மநாபாசார்யரை மத்யாஹ்நத்தின்மேல் தனது இல்லம் வரும்படி ப்ரார்த்தித்துவிட்டுக் கேசவாசார்யர் அவரை விட்டுப் பிரிந்தனர்.

அன்று மத்யாஹ்நம், ஆனைக்கட்டிவீதியில், நாவல்பாக்கம் ராமாநுஜாசார்யர் இறங்கியிருந்த வீட்டின் வீதித் திண்ணையின் மேல், அந்த ஸ்வாமியும், கேசவாசார்யரும், பத்மநாபாசார்யரும் உட்கார்ந்திருந்தனர். இதர விஷயமான வார்த்தைகள் சிலகாலம் நடந்தபின், பத்மநாபாசார்யர் ராமாநுஜாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! கேசவாசார்யர் தேவரீரிடம் ஒரு கார்யத்தை உத்தேசித்து எழுந்தருளியிருக்கின்றார்" என்றனர்.

"ஸாதிக்கவேணும். ஏன் இவ்வளவு யோசனை? என்ன திருவுள்ளம்?", என்று சொன்னார் ராமானுஜாசார்யர்.

"கேசவாசார்யருக்கு ஒரு கந்நிகை இருக்கின்றாள். அவளுக்கு ப்ராசீந ஸுக்ருதத்தாலும், பிதாவின் அநுக்ரஹத்தாலும் ஸம்ஸ்க்ருத பாஷையில் வ்யுத்பத்தி நன்றாக உண்டாயிருக்கின்றது. ஸதா ஸத்துக்களுடைய ஸஹவாஸத்தால் ஸம்ப்ரதாய ஜ்ஞாநமும் யதோசிதம் அவளுக்கு உண்டு. இப்படிப்பட்ட ஸுதையைத் தக்க வரனைத் தேடித் தாநம்செய்ய அபேக்ஷிக்கின்றார். தேவரீர்கள் குமாரருடைய ஜ்ஞாநத்தையும் ஸௌசீல்யத்தையும் பற்றி மிகவும் கேள்விப்பட்டு அவரை ஜாமாதாவாக அடைய விரும்புகின்றார்", என்று பத்மநாபாசார்யர் உரைத்தார்.

"ஸ்வாமியினுடைய ஸம்பந்தம் ஸர்வதா ப்ரார்த்திக்கத்தக்கது. அது கிடைத்தால் அது அடியேனுடைய பாக்யவிசேஷமன்றோ? குமாரன் யுக்தவயஸ் வந்தவனாதலால், அவனுடன் ப்ரஸ்தாபிக்காமல் ப்ரத்யுத்தரம் சொல்வது உசிதமன்று. அந்த விஷயம் தேவரீரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. இன்றைக்கோ, நாளைக்கோ, அவனுடன் வார்த்தைசொல்லி, அடியேனே ஸ்வாமியின் திருமாளிகையில், ஸ்வாமியை வந்து தண்டன் ஸமர்ப்பித்துக்கொள்கின்றேன்" என்றுரைத்தார் ராமானுஜாசார்யர். இன்னும் இதர விஷயங்களைப்பற்றிக் கிஞ்சித் ஸம்பாஷித்துவிட்டு அவர்கள் பிரிந்தார்கள். திரும்புங்கால் பத்மநாபாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, "அந்தஸ்வாமியினுடைய அபிப்ராயம் எப்படியிருக்குமோ? ஒன்றும் பிடிகொடுத்து அவர் வார்த்தை சொல்லவில்லையே", என்று சொன்னார்.

"அந்த ஸ்வாமியின் பரிசயம் அடியேனுக்கு விசேஷமாகக் கிடையாது. அவருடைய உக்திகளால் அநுமிக்கக் கூடியதற்குமேல், அடியேனுக்கு யாதொன்றும் தோன்றவில்லை", என்று சொன்னார் கேசவாசார்யர்.

"ஆனால் எவ்வண்ணம் அந்த வார்த்தைகளைத் தேவரீர் க்ரஹித்தது?", என்றார் பத்மநாபாசார்யர்.

"அவருடைய குமாரர் தேசாந்தரம் சென்று பாஸ்த்ரஜ்ஞாநம் ஸம்பாதித்துக்கொண்டு வந்திருக்கின்றார். யுக்தவயஸ்ஸுடன்,



விஷய விமர்சநம் செய்யத்தக்கவராக ஏற்படுகின்றது. அவரு
டைய அபிப்ராயங்களைத் தெரிந்து கொள்ளாமல் நமக்கு அந்த
ஸ்வாமி யாது விடை தரக்கூடும்? ஆதலால் அந்த ஸ்வாமியின்
வார்த்தைகளில் அடியேன் யாதொரு வித்யாஸத்தையும் கண்டி
லேன்" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"கந்யாவித்ரூஸம் டீ-ீவாய", எனும் வசநம் பூர்வமே
யுள்ளது. தத்காலத்தில் பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஸம்பந்திகளி
டம் த்ரவ்யத்தையும் அபேக்ஷிக்கின்றனர். அந்த ரூபமான யோ
சனை அந்த ஸ்வாமிக்குண்டாயிருக்குமோ வென்று ஸந்தேஹிக்
கின்றேன்", என்றுரைத்தார் பத்மநாபாசார்யர்.

"அந்த ஸந்தேஹம் ஸர்வத்ர ஜநிக்கலாம். ஆனால் அர்த்த
த்ருஷ்ணை பாஷாந்தரம் கற்ற பிள்ளைகள் விஷயத்தில்தான் உண்
டாவதாகத் தெரிகின்றது. வைதிகர் குமாரர் வைதிகராகவும் உப
பத்யற்றவராகவு மிருந்தால் அர்த்தத்ருஷ்ணை யுண்டாக வேண்
டிய சங்கை உதிப்பானேன்?", என்றனர் கேசவாசார்யர்.

"ப்ராஹ்மணர்க்குள் ஆபிஜாத்யம், பரம்பரையாக ஜ்ஞாநம்,
வைராக்யம், ஸத்கர்மாநுஷ்டாநம் இவற்றால் விசேஷித்தவர்க்குத்
தான் ஏற்பட்டது. அபிஜாதர், ப்ராயேண தநவந்தராயிருக்க அவ
காசமில்லை. ஆத்மஸம்ஸ்காரத்தைப் பரோபகாரமாகச் செய்வதா
லும், ஸந்யாஸம் பூண்டதா யெண்பித்து ப்ராஹ்மண்யம், ஸந்யா
ஸம் இவற்றைப் பழிக்கச் செய்துகொண்டு ஆர்ஜித்த த்ரவ்யத்
தைக் கூச்சமின்றிப் பூர்வாப்ரமிகளுக்கு உதவுவதாலும், சில
வைதிகரெனப்படுவோர் குடும்பங்கள் தநவந்தர் குடும்பங்களை
னத் தோற்றுகின்றன. அந்யர் லௌகிகவ்ருத்தியை மேற்கொண்டு
பணக்காரர் ஆகின்றார்கள். இவர்களுடைய பிள்ளைகளை அபேக்ஷிப்
பவர் தகுந்தபடி அப்பிள்ளைகளுக்கு மரியாதையாக அர்த்தவ்ரயம்
செய்யவேண்டியிருக்கின்றது. வைதிக வ்ருத்தியைத் தவறாத பிள்
ளைகட்குப் பெண்களைக் கொடுக்க இசையாமல், பணக்காரப்பிள்
ளைகள் வேண்டுமென்று கொண்டு, பணம் தேட்கின்றாரென்று
வருத்தப்படுவது மூடத்தனம். அந்தக் குற்றம் தேவரீரிடம்
இல்லை. நாவல்பாக்கம் ஸ்வாமி அர்த்தத்ருஷ்ணை கொள்ள ந்யாய
மில்லை. அந்த ஸ்வாமி வார்த்தைகளால் தாத்ருப அபிப்ராயம்

அவர் சித்தத்தில் குடிகொண்டதோ வென்று ஸந்தேஹித்தேன். இரண்டு நாட்குள் எல்லாம் விஶதமாய் ஏற்பட்டுவிடும்", என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

இதற்குள் கேசவாசார்யர் க்ரஹம் ஸமீபித்துவிட்டது. பத்மநாபாசார்யரிடம் விடைபெற்றுக்கொண்டு கேசவாசார்யர் இல்லம் சென்றனர். வழக்கப்ரகாரம் ஸாயங்கால வேளையில் நகரத்தவர்களும், உத்ஸவார்த்தம் வந்தவர்களும், பெரிய காஞ்சீபுரம் ராஜவீதியில் பகவான் ரதத்தின்மீது எழுந்தருளுவதைத் தர்ஶிக்க வந்துகூடினர். அங்கு கேசவாசார்யரும், பத்மநாபாசார்யரும், மாதவாசார்யரும், வேதபாராயண கோஷ்டியில் இருந்தனர். அந்த ஸமயத்தில் நாவல்பாக்கம் ராமாநுஜாசார்யரும் அவர் குமாரரும் அந்தப் பக்கமாக வரவே, பத்மநாபாசார்யர் அந்தப் பிள்ளையைக் கேசவாசார்யருக்குக் காட்டினார். பிள்ளை இருபத்திரண்டு பிராயங் கடந்தவனானபோதிலும் ப்ரஹ்மதேஜஸ் ப்ரகாசிக்க விளங்கினான். கேசவாசார்யர் அவனைப் பார்த்து அவன் தன் புத்திரிக்குத் தக்க புருஷன் என்று த்ருப்தராயினர். கைங்கர்யத்தை விட்டுவிட்டுப் பிள்ளையைப் பார்த்துக்கொண்டுபோக அவர் எண்ணினாரில்லை. ஆனால் பத்மநாபாசார்யர் தனது ப்ரஸ்தாபத்தின்பேரில் உண்டான ப்ரயத்நம் ஸபலமாகவேண்டுமெனும் இச்சையால், கோஷ்டியைவிட்டு ராமாநுஜாசார்யர் இருந்தவிடம் சென்றனர்.

பத்மநாபாசார்யரைப் பார்த்து ராமாநுஜாசார்யர், "எழுந்தருளவும். இதோ தாஸன் இருக்கின்றான். க்ரஹஸ்தாஶ்ரமத்தில் ப்ரவேஶிக்க அதிக விருப்பத்தை அவன் காட்டவில்லை" என்று சொன்னார்.

"ஏன் அப்படி யோசிக்கவேண்டும்? இந்தக் காலத்தில் இவ்வளவு வயஸு பர்யந்தம் ப்ரஹ்மசர்ய வ்ருதத்தைக் காப்பாற்றுபவர் இல்லையே" என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"அடியேன் ஸாமாந்ய ஶாஸ்த்ரஜ்ஞாநம் ஸம்பாதித்தேன். இன்னும் மீமாம்ஸையை முடித்துவிட்டு ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் செய்யவேண்டும். விவாஹம் அடியேனுடைய இஷ்டப்ராப்திக்கு விக்நம் செய்யாதா?" என்று சொன்னான் வீரராகவன்.



"தத்காலவிவாஹம் எப்படி விக்நம் செய்யும்? பெண் உம்மிடம் உடனே வரப்போகின்றாளா? விவாஹாநந்தரம் மூன்று நான்கு ஸம்வத்ஸரம் வரையில் வித்யாவ்ருத்தியை நீர் செய்துகொண்டிருக்கலாமே. நீர் இவ்வளவு ஜ்ஞாதாவாய் இருக்க, க்ஞாதாவெனத் தகும் அபூர்வமான கந்நிகை உமக்குக் கிடைக்கும்போது நீர் விரோதம் செய்யலாமோ? உம்மிடம் அவள் வருங்காலத்தில் யாஜ்ஞவல்க்யரிடம் மைத்ரேயி வந்தவண்ணம் வருவளே" என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"என்ன ஸ்வாமிந்! வித்யாகர்வம் கொண்ட பெண்ணை மணந்தால் விபரீதத்தில் பர்யவஸிக்கும்" என்றனன் வீரராகவன்.

"கேசவாசார்யர் பெண்விஷயமாய் இப்படி யாரும் சங்கிக்கமாட்டார். ஸ்வலாபஸந்துஷ்டரும், ஶாந்தரும், பரமஸாதுவுமான அந்த ஸ்வாமியுடன் ஸஹவாஸம் ஸர்வ தௌராத்ம்யத்தையும் நிவர்த்திக்குமே. அவருடைய குழந்தையைப்பற்றி இப்படி எண்ணலாமோ?" என்றார் பத்மநாபாசார்யர்.

"பத்மநாபாசார்யா! க்ஷமித்தருள. அடியேன் தாஸனுடன் வார்த்தைசொல்லி அவனை இணங்கச்செய்கின்றேன். ஏடுகளைப் பார்த்தமாத்ரத்தினால் லோகாநுபவம் உண்டாய்விடுமா? அடியேனுக்கு இந்த ஸம்பந்தத்தில் மிகவும் திருப்தியுண்டாயிருக்கின்றது. பெருமாள் திரும்பி ஸந்நிதிக்கு எழுந்தருளினபிறகு அடியேன் அந்த ஸ்வாமியை வந்து தண்டன் ஸமர்ப்பித்துக்கொள்கின்றேன். தேவரீரை முன்கொண்டே அப்படிச் செய்கின்றேன்", என்று சொன்னார் ராமாநுஜாசார்யர்.

பகவான் ரதத்தின்மேல் மூன்று நாள் எழுந்தருளியிருந்தார். மூன்றாம்நாள் ராத்ரி ஸந்நிதிக்குத் திரும்பினார்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌭𑍁𑌕𑍍𑌤𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌶𑍇𑌷𑌭𑍋𑌜𑌿𑌨𑌾
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌨𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮𑌭𑌰𑍇𑌣 𑌯𑌦𑍍𑌯𑌥𑌾 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌣 𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌨𑌾 𑌨𑍍𑌯𑌵𑍇𑌦𑌿 𑌤𑌤𑍍-
𑌤𑌥𑌾𑌽𑌨𑍁𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌮𑍁𑌦𑌾𑌰𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥ 42.

42. “𑌵𑌿𑌶𑌾𑌲 𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 𑌪𑌰𑌾𑌵𑌰𑌾𑌲𑌯𑌂” என்னும் ஶ்லோகத்தினால் தமக்கு ஸம்பவித்திருந்த பக்த்யதிஶயம் தாங்க முடியாமல் பகவானுடைய பாதாரவிந்தத்தை ஸாக்ஷாத்கரிப்பதில் ஒருவித ஆவலை வெளியிட்டு, “𑌕𑌦𑌾 𑌪𑍁𑌨𑌃” என்னும் ஶ்லோகத்தினால் ஶீக்ரமாகவே அந்தப் பாதாரவிந்தத்தின் ஸம்ஶ்லேஷ விஶேஷத்தை ப்ரார்த்தித்து, பிறகு “𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌪𑍀𑌤 𑌵𑌾𑌸𑌸𑌂” இத்யாதி பதினான்கு ஶ்லோகங்களினால், அப்படிப்பட்ட ஸாக்ஷாத்கார ஸம்ஶ்லேஷாநந்தர பாவியான ஸர்வவித கைங்கர்யத்திற்கும் உத்தேஶ்யனாயுள்ள பகவானை, ஸமஸ்தமான கல்யாணகுணங்கள் திவ்ய மங்கள விக்ரஹம் லக்ஷ்மீ நித்யஸூரிகள் இவர்களுடன் விஶிஷ்டனாக அநுஸந்திக்கிறார். கீழ் விவரிக்கப்பட்ட 39, 40, 41 ஆகிய இந்த மூன்று ஶ்லோகங்களினால், ப்ரதாநதமர்களான அநந்த கருட விஷ்வக்ஸேநரென்னும் மூன்று நித்ய ஸூரிகளுள் முதல் இருவருடைய வைஶிஷ்ட்யத்தை அநுஸந்தித்துவிட்டு, இந்த 42 - வது ஶ்லோகத்தில் மூன்றாமவராகிய விஷ்வக்ஸேநருடைய வைஶிஷ்ட்யத்தை அவருடைய தாஸ்ய ஸாம்ராஜ்யமுகமாக அநுபவிக்கிறார்.



நமது ஸித்தாந்தத்தில், ஸாத்விகர் அறியவேண்டும் தத்வம் பரதத்வம் அவரதத்வமென்று இரண்டு வகைப்படுமென்றும், அவைகளுள் பரதத்வமென்பது ஸாக்ஷாத் ஶ்ரிய:பதியான புருஷோத்தமனேயென்றும், அவரதத்வமென்பது சேதநம் அசேதநமென்று இரண்டுவகைப்படுமென்றும், அவைகளுள் சேதந தத்வமென்பது நம்மால் ஜீவனென்று வ்யவஹரிக்கப்படும் பதார்த்தமேயென்றும், அசேதநதத்வமென்பது புருஷோத்தமன் ஜீவன் இவரிருவரிலும் வேறுபட்ட எல்லாப் பதார்த்தமுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் ஜீவனென்னும் தத்வமானது - பத்தரென்றும், பந்தரஹிதரென்றும் இரண்டு வகைப்படும். பத்தரென்பவர், பல செய்வினை வன் கயிற்றால் கட்டுண்டு பிறவிக்கடலுள் நின்று துளங்குகிற சேதநரே. பந்தரஹிதரென்பவர், முக்தரென்றும் நித்யரென்றும் இரண்டு வகைப்படுவர்; இவர்களுள் முக்தரென்பவர் - பூர்வம் கர்மத்தால் பத்தராயிருந்து பரமபுருஷன் திருவருளால் அந்தப் பந்தம் நிவ்ருத்தியாகி அவன்பக்கலில் ஶாஶ்வதமாக வீடு பெற்றவர்கள். நித்யரென்பவர் - ஒரு பொழுதும் கர்ம பந்தத்திற்கு உட்படாதவராய், நித்யமான பரிபூர்ண பகவதநுபவத்தையுடையராய் நித்யஸூரிகளென்று சொல்லப்பட்ட அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான அயர்வறும் அமரர்கள். இவருக்குப் பகவதபிமத விபரீத ருசியில்லாமையாலே ஒரு காலத்திலும் கர்ம ஸம்பந்தமன்றிக்கே அதிகாரி நியமத்தோடே கூடின கைங்கர்ய ப்ரவாஹம் அநாத்யந்தமாக இருக்கும். இவர்களைப் பற்றித்தான் ‘𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃” என்று ஶ்ருதி சொல்லுகின்றது. இந்தப் பந்தரஹித ஜீவராகிற நித்யஸூரிகளுடைய வைஶிஷ்ட்யத்தை இவ்விடத்தில் ஸ்ரீ ஆளவந்தார் அநுஸந்திக்கிறபடி.

இந்த நித்யஸூரிகளுக்கு அதிகாரி நியமத்தோடு கூடிய கைங்கர்யமுண்டு என்று சொன்னோம். திருவநந்தாழ்வானுக்கும் கருடாழ்வானுக்கும் சில கைங்கர்யங்கள் நியதங்களாக இருப்பது போல், விஷ்வக்ஸேநருக்கும் ஸர்வஸேநாநிர்வாஹகராக இருப்பது அஸாதாரணமான கைங்கர்யம். உபயவிபூதி விஷயமான தன்

னுடைய ஸர்வ பரத்தையும் பகவான் இவர் பக்கலிலே வைத்தி
ருக்கிறபடியால், 'ஸ்ரீவைகுண்டத்தில் இவரிட்ட வழக்காகவே
இருக்கின்றது' என்று சில பக்தர்கள் கொண்டாடியிருக்கிறார்கள்.

"த்வதீயபுக்தோஜ்ஜிதசேஷபோஜிநா, த்வயா நிஸ்ரு
ஷ்டாத்மபரேண, ப்ரியேண ஸேநாபதிநா யத்யதா ந்யவேதி,
உதாரவீக்ஷணை ஸ்ததா நுஜாநந்தம் (ஸமாநம்)"-[நீ அமுது
செய்து கைவாங்கின ப்ரஸாதத்தினால் தரிக்குமவராயும், உன்
னாலே தன் பக்கலிலே வைக்கப்பட்ட லோக நிர்வஹண பரத்தை
யுடையவராயும், ஸர்வருக்கும் அபிமதராயுமுள்ள ஸேநாபதியாழ்
வாரால் யாதொரு கார்யம் யாதொருபடி விண்ணப்பம் செய்யப்
பட்டதோ, அந்தக்கார்யத்தை அப்படியே அளவற்ற தயை முத
லியவற்றை ஸூசிப்பிக்கக் கூடிய கடாக்ஷங்களால் அநுக்ரஹி
த்து நிற்கும் (உன்னை)].

த்வதீயபுக்தோஜ்ஜிதசேஷபோஜிநா - புஜிக்கும் பொ
ருட்டுப் போஜநபாத்ரத்திலே வைக்கப்பட்டுள்ளதில் புஜிக்கப்படா
மல் கைவாங்கி நிற்பது, 'புக்தோஜ்ஜிதம்' என்று சொல்லப்படும்.
'இப்படி உன்னால் விலக்கப்படும் சேஷத்தை புஜிக்கும் சீலத்தை
யுடைய' என்பது வாக்யார்த்தம். 'சேஷ' என்னும் பதத்திற்கு -
அப்படி விலக்கப்பட்டதில் ஏகதேசம் என்றும் அர்த்தம் கொள்ள
லாம். ஸாமாந்யமாக உச்சிஷ்டம் அபோஜ்யமானாலும், ஸ்வாமியி
னுடைய சேஷம் போஜ்யமே என்பது குறிப்பு. தாஸ்ய ஸம்பந்தத்தி
னுள்ள ஐகார்யத்தைக் காட்டுகிறது இந்த விசேஷணம்.

த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண - உன்னால் தம் பக்கலிலே
வைக்கப்பட்ட ஆத்ம பரத்தையுடைய; அஸுரர்களை நிராகரிப்பது
முதலிய வ்யாபாரங்களில் ஸேநாபதியாக இருக்கும் பாரத்தை
இவர் பக்கலில் பகவான் கல்பித்திருக்கிறான் என்பது தாத்பர்யம்.
'ஆத்மபரம்' என்பதற்கு - தனது பரம் என்று அர்த்தம். 'தனக்
குள்ள ஸமஸ்த பரத்தையும் இவர்பக்கலில் ஈச்வரன் வைத்திருக்
கிறான்' என்பது இதன் அர்த்தமன்று. 'ஸ்ரீ வைகுண்டத்தில்



இவரிட்ட வழக்காகவே இருக்கின்றது' இத்யாதியாகச் சிலர் பேசி
யிருப்பது, பகவதீதமான இவருடைய ப்ரபாவாதிசயத்தை ப்ர
ஸம்ஸிக்கும் பொருட்டேயாகும். ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது, ரக்ஷிப்
பது, ஸம்ஹரிப்பது, ஜீவன்களுக்கு மோக்ஷம் கொடுப்பது இவை
யெல்லாம் பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரணங்களான தர்மங்கள்.
முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் இவை ஸம்பவிக்கமாட்டா. ஆகை
யால், இவ்விடத்தில் விஷ்வக்ஸேநர் பக்கலில் வைக்கப்பட்டதாகச்
சொல்லப்படும் பரம், ஸேநாபதி ஸம்பந்தமான பரமென்று விவரிக்
கப்பட்டிருக்கின்றது. அதாவது - பக்தர்களுடைய ஸ்வாமி ஸேவை
க்கு இடையூறாக நேரும் விக்நங்களை ஶமநம் செய்வது, பரிஜநங்
களை நியோகிப்பது முதலிய வ்யாபாரங்கள் ஸேநாபதி யாழ்
வானைச் சார்ந்தது என்று ஸித்திக்கின்றது. ஸ்ரீ வைகுண்டகத்
யத்தில், "[illegible]
ஸேநேச ந்யஸ்தஸமஸ்தாத்மைச்வர்யம்" என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அரு
ளிச்செய்திருக்கிறார் என்பது உண்மையே. ஆனால், இதற்கு - பகவா
னாற் கொடுக்கப்பட்ட அதிகாரம் கொண்டவராய், ஸ்ரீ ஸேநாபதி
யாழ்வான், அந்தந்தக் காலங்களில் ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வ்யா
பாரங்களை உத்தேசித்துப் பகவானிடத்தில் விஜ்ஞாபநம் செய்து
கொள்ளுகிறா ரென்றும், ஸ்வத: ஸர்வஜ்ஞனான பகவான் அவரால்
அப்படி விஜ்ஞாபநம் செய்துகொள்ளப்பட்டபடியே தான் அநுஷ்
டிப்பது போல விளையாடுகிறா னென்றும், இவ்விதமாகத்தான்
ஸேநாபதியாழ்வானுக்கு ஜகத் வ்யாபார வ்யபதேசம் அந்வயிக்
கும் என்றும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் பாஷ்யம் அருளிச்
செய்திருக்கிறார். 'ந்யஸ்தஸமஸ்தாத்மைச்வர்யம்' என்பதற்கும்
ஸேநா நிர்வஹண ரூபமான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறான்
என்று விவரணம் காணப்படுகின்றது. இப்படி வ்யாக்யாநம் செய்
யாவிட்டால், விஷ்வக்ஸேநருக்கும் ப்ரஹ்மலக்ஷணம் ப்ரஸங்
கிக்கும்.

ப்ரியேண ஸேநாபதிநா யத்யதா ந்யவேதி -
இப்படி பகவதபிமதராயுள்ள ஸேநாபதியாழ்வானால் எது எப்படி
விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டதோ. 'இவர் விண்ணப்பத்

தின் ஸ்வரூபம் என்ன? அதன் ப்ரகாரம் என்ன?' என்பதைப் பகவான் அநுஸந்திப்பதே இல்லை என்பது தாத்பர்யம். ஸ்ரீவைகுண்டத்தில் எல்லாரும் பகவதபிமதர்களே, பரஸ்பரமும் அபிமதர்களே; ஆனாலும், இவ்விடத்தில் ஸேநாபதியாழ்வானுக்கு விசேஷித்து 'ப்ரியேண' என்னும் விசேஷணம் ப்ரயோகித்திருப்பது, இப்படிப்பட்ட விஜ்ஞாபநம் செய்துகொள்ள அவர் அதிகாரியென்பதையும், அப்படி அவரால் விஜ்ஞாபநம் செய்துகொள்ளப்படுமவை யெல்லாம் பகவானுக்கு அபிமதமே யென்பதையும் ஸூசிப்பிக்கும் பொருட்டே. ஈஸ்வரன் இவருக்தியைப் பின்செல்வது போல நடப்பதும் அவனுடைய லீலாவிசேஷமே. 'ந்யவேசிதஸ்' என்பதற்குப் பதிலாக 'நிவேசிதம்' என்னும் ஒரு பாடமும் உண்டு. அப்பொழுது 'தஸ்' என்னும் ஒரு பதத்தை அத்யாஹாரம் செய்துகொள்ளும்படி ஸம்பவிக்கும்.

உதாரவீக்ஷணேந ஸந்தத்யாதாநந்தம் - அந்தக் கார்யத்தை அந்தப்ரகாரமே தனது உதார கடாக்ஷங்களாலே அநுக்ரஹிக்கும். கடாக்ஷங்களின் உதாரஸ்வபாவமாவது - அநவதிகமான தயை ஸௌஹார்த்தம் முதலிய குணங்களை ஸூசிப்பிக்கும் ஸ்வபாவமே. ஈஸ்வரனுடைய திருக்கண்களானதனால் பூர்ணமான ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் நிறைந்திருக்கின்றனவென்பதையும், ப்ரக்ருதத்தில் ஸேநாபதியாழ்வானால் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களெல்லாம் தனக்கு அபிமதங்களானவை யாதலால் பிறருக்கு ஆநந்தத்தைக் கொடுக்குமளவு அந்தத் திருக்கண்கள் மலர்ந்திருக்கின்றனவென்பதையும் இந்த 'உதார' என்னும் விசேஷணம் குறிக்கின்றது.

'பரமபதத்திலும் ஜீவன்களுக்குள் இப்படிப்பட்ட வைஷம்யமுண்டோ? அநந்த கருட விஷ்வக்ஸேநர்களுக்குள் ஒவ்வொருவருக்கும் விக்ரஹம் வேறுபட்டிருக்கின்றதென்றும், அதிகாரமும் வெவ்வேறாக இருக்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றதே!' என்று ஒரு சங்கை இவ்விடத்தில் ஜநிக்கக்கூடும். நித்யருக்கும் பகவானுக்கும் ஜ்ஞாநம் ஸமமே, போகமும் ஸமமே என்பது தான்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ௵ ஐப்பசி௴ [ஸஞ்சிகை 9.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**வேதாந்ததேசிகன் வைபவம்.**

புரட்டாசி மாஸம் குறிப்புகள் வரையும் காலத்தில், யாம் மறந்துபோன நம் கடமையை நமக்கு நினைப்பூட்டும் விஷயங்கள் வெளிப்பட்டன வாகையால், அம்மாஸத்தை நமக்குப் பாவநமாக்கிய மஹாசார்யன் ஸம்பந்தமாக இவ்விடம் சில வற்றை எழுதத் துணிகின்றோம். அமரர் சத்ருக்களை விரட்டியோடச் செய்கின்றதும், பத்மாஸஹாயனுடைய திருவாராதந காலத்தில் உபயோகப்படுவதுமான ஸ்ரீவேங்கடநாதன் கண்டையே நம் தேசிகனாய்த் திருவவதாரம் செய்ததென ஜ்ஞாதாக்களால் அநேக உபபத்திகளைக் கொண்டு உத்ப்ரேக்ஷிக்கப்படுகிறதென்று ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயத்தில் தேசிகன் காலத்தில் தேசிகனாலேயே உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உத்ப்ரேக்ஷைக்கு முதற்காரணம், ஸ்வாமியினுடைய மாதாபிதாக்கள் கண்ட ஸ்வப்நம். ஸஹகாரி காரணங்களிலொன்று ஸ்ரீநிவாஸன் தீர்த்தநிகத்

தில் ஸ்வாமியினுடைய அவதாரம். நைநாராசார்யரும் இந்த உத்ப்ரேக்ஷையை அநுவதிக்கின்றார். ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞையால் வேங்கடநாதார்யன் வேதாந்ததேசிக பதத்தில் நிவேசிக்கப்பட்டன ரென்று தேசிகனுடைய பல க்ரந்தங்களில் சொல்லியிருக்கின்றது. லோகம் அறியவும், ஸர்வ விதுஷர்களும் புகழவும், கவிதார்க்கிகஸிம்ஹமனென்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும், கொண்டாடப்பட்டார் தேசிக னென்பது யாவரும் அக்காலம் முதல் இதுவரையிலும் ஸம்மதித்த விஷயம். ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரத்வம் ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கநாயகி அளித்த விருது. இக்காலத்தில் போல, அக்காலமும், வேதம் கேதமடையவும், முநிஜநங்களுடைய வசநங்கள் நித்யம் அவமாநிக்கப்படவும், வர்ணஸாங்கர்யம் எதிர்பார்க்கப்படவும், புராணங்கள் ப்ரமாணகோஷ்டியினின்று விலக்கப்படவும், மாயாவாதம் தழைக்கவும், ஶூந்யவாதம் அங்கீகரிக்கப்படவும், ஸநாதநதர்மத்தின் ரக்ஷகனுக விஷ்ணு கண்டாம்சமாய்த் தேசிகன் அவதரித்தாரென்று மஹான்களால் வெளியிடப்பட்டது. பாரதவர்ஷத்தை வடக்கே வளைந்த சாமீகர பர்வதம் முதற்கொண்டு, அதனுடைய தக்ஷிணவதியாய் நின்ற லங்காபுரம் வரையிலும், ஆசார்ய ரெனப் பெயர்கொண்ட அனைவரையும் ஸம்புத்தி செய்து மஹாகவி வெங்கடாசார்யர் கேட்டனர். எப்படியென்றால், "உங்களை நான் பணிந்து யாசித்து இவ்வார்த்தைகள் மொழிவேன். அப்படிப்பட்ட கவித்வமென்ன, தர்க்க பாண்டித்யமென்ன, மீமாம்ஸா ஶாஸ்த்ரத்திலும் வேதாந்தத்திலும் ஶ்ரமப்பட்ட புத்தியென்ன, இவற்றுள் நிகமாந்ததேசிகனுக்கு ஸமமானவரை நீங்கள் கண்டதுண்டோ? ஸத்யமாகச் சொல்கின்றேன். சொல்லுங்கள்." என்றிவ்விதமாக ப்ரதிஜ்ஞை செய்தார். இதனால், புதஜநங்கள் தேசிகன் மஹிமையை எவ்வண்ணம் கொண்டாடின ரென்பது தெரியவில்லையா? தொட்டயாசார்யர் ப்ரப்ருதிகள் அத்வைதிகளுடன் வேதாந்தவிஷயமான வாதம் செய்து அந்த அவஸரத்தில் தேசிகனுடைய திவ்யஸூக்திகளால் அநுகூலத்தை யடைந்து தேசிக பக்தியால், "ஸம்ப்ரதாய பரிசயமற்றவரும், யதிராஜனுடைய ஸூக்திகளின் தாத்பர்ய மறியாதவரும்; குத்ருஷ்டிகளின் கர்வத்தைச் சமிப்பிக்காதவரும், அந்யருமான அநாகமாந்தார்யர்களால் போதும்போதும்" என்று அவர்கள் சொல்லும்படி யிருந்ததன்றோ? இதனுடைய தாத்பர்



யம், ஸ்வாமியினிடம் இந்தக் குணவிசேஷங்கள் நன்கமைந்தன வென்பதே. ஸ்வாமியினுடைய பகு க்ரந்தங்களுக்கு வ்யாக்யாதாவான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரால் "இப்படிக் கவிதார்க்கிக ஸிம்ஹமனுடைய காவ்யங்களில் லளிதமாயிருக்கு மவற்றில்கூட, இவ்வண்ணம் நன்கு சிந்திக்கப்பட்டால் ஒவ்வொரு பதத்திலும் விஶேஷார்த்தங்கள் ப்ரகாசிக்கின்றன," என்றல்லோ நம் தேசிகனுடைய கவிதாசக்தி ஸ்துதிக்கப்பட்டது. "நாலு வேதங்களிலும் பரிஶ்ரமம் ஒருவர்க்கு உண்டாகலாம். அப்போது சாஸ்த்ரங்களில் விவேகம் ஜநிக்காது. சாஸ்த்ரங்களில் விவேகமும் உண்டாயிருக்கட்டும். அப்போது ஸாஹித்ய ஜ்ஞாநமும் கவித்வமும் சேரமாட்டா. அவையும் சேர்ந்ததாக வைத்துக்கொள்வோம். அப்போது, விநயம், ஆசாரம், பக்தி, க்ஷமை முதலான கல்யாண குணங்கள் விளங்கமாட்டா. நாலு வேதங்களையும் அப்யஸித்த ஶ்ரமமும், சாஸ்த்ரங்களில் விவேகமும், ஸாஹித்ய ஜ்ஞாநம், கவித்வம், விநயம் முதலான கல்யாணகுணங்கள், இவை யாவும் வேதாந்ததேசிகனை ஆஶ்ரயித்து விளையாடுகின்றன" என்று மஹான்களால் நம் நிகமாந்த மஹாதேசிகன் கொண்டாடப்பட்டனர். யாதொரு தேசிகனுடைய சரித்ரமானது ஸத்துக்களுடைய ஸதாசரிதத்தை வ்யவஸ்தை செய்கின்றதோ, யாதொரு தேசிகனுடைய வசநங்கள் ஸகல ஸம்ஶயங்களையும் நிவர்த்திக்க முக்யாதாரம் ஆகின்றனவோ, ஸகல தர்ம ஶூந்யரான மநுஷ்யர்க்கும் யாதொரு தேசிகனுடைய கருணையானது கதியாய் நிற்கின்றதோ, அந்த ஸகலதந்த்ர நிர்வாஹகர் நமக்கு ஶரண் மாகட்டு மென்றும், க்ஷாந்தி, ஶாந்தி, ஶுசித்வம், விஷயஜயம், தீரத்வம், நிஸ்ப்ருஹத்வம், ஶேஷத்வம், லக்ஷ்மீநாதன் அவனடியார் இவர் விஷயமாகப் பாரதந்த்ரியம், கலக்கமின்மை, படுத்வம், ம்ருதுத்வம், ஸமத்வம், வஶித்வம், நிர்ப்பரத்வம், அஸூயையில்லாமை, இவை யாவும் தேசிகனுக்கு ஜந்மம் முதல் வஸித்து நின்றனவென்றும் அண்ணன் ஸாதித்தருளினர். இன்னும் ஸ்வாமியினிடம் பக்தியற்றவர் இராமாநுஜனுக்கு அப்ரியர் ஆவார் என்றும், அப்படிப்பட்டவர் விஷ்ணு காருண்யத்தை அடையமாட்டா ரென்றும் சொன்னார். ஸாங்க்யம், யோகம், மீமாம்ஸை, குருமதம், சைவம், ஜைநம், ஶங்கராயம், சார்யமதம், பாஸ்கரமதம், பௌத்தமதம் யாதவப்ரகாசமதம், இவற்றைப்பற்றிய ஶாஸ்த்ரங்களின் பரிசயத்தால் கர்வம்கொண்ட

வாதிகள் அனைவரையும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் நிரஸநம் செய்தவர் என்றும் சொல்லியிருக்கின்றார்.

இந்த ரூபமாக ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தை ரக்ஷித்து ஸ்தாபித்த தேசிகனுக்கு ஶத்ருக்கள் நேரிடாமல் இருப்பரோ? அண்ணன் காலத்தில் சிலர் தேசிகனைத் தூஷிக்கவே, ஸ்ரீராமனையும் ஸ்ரீ க்ருஷ்ணனையும் தூஷிக்க ராவணன் ஶிஶுபாலன் முதலானோர் உண்டானவண்ணம், தேசிகனையும் தூஷிப்பவர் உண்டானார் என்பதில் ஆச்சர்ய மென்னென்று அண்ணன் உரைத்தனர்.

தேசிகன் க்யாதிலாப பூஜை முதலியவற்றை ஈஷத்தும் வேண்டினவரன்று; ஸ்ரீ வைஷ்ணவர் விஷயமாக மிகவும் பாரதந்த்ரியத்தை மேற்கொண்டவர். நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர் எல்லோர்க்கும் அவரே குரு, அவரே தெய்வம், அவர்தான் நமக்கு ப்ராப்யரும் ப்ராபகருமாக நிற்பவர். வைதிகதர்மமெனும் வர்ணாஶ்ரம தர்ம ரக்ஷகராக ஸ்வாமி விளங்கினாராதலால், அந்த தர்மத்யாகத்திலும், வர்ணஸாங்கர்யத்திலும் ருசியுடையோர் நம் தேசிகனை வழிபடாமல் விலகிவிட்டனர்.

**தேசிகன்விஷயமான துரபிப்ராயங்கள்.**

இது இப்படி நிற்க, சென்ற செப்டம்பர் மாஸம் 24-ம் தேதியன்று, காஞ்சீபுரம் வடகலையாரில் சிலர் ஹைகோர்ட்டுக்குச் செய்துகொண்ட மனு ஒன்றைத் தள்ளுங்காலத்தில், அப்படிச் செய்த ஜட்ஜிகள் அந்த வ்யவஹாரம் (Vexations) துன்பம் உண்டாக்குவதென்றும், (of a Sectarian character) கக்ஷிவிஷயமானதென்றும், (Promoted by bigotry) தகுந்த காரணமற்ற விஶ்வாஸத்தால் வ்ருத்தி செய்யப்பட்டதென்றும் சொன்னார்கள். இது வ்யவஹார ரிகார்டுகளை நன்கு மதித்துச் சொன்ன முடிவாக எண்ணத்தக்கதன்று. இப்படி யோசித்த ஜட்ஜிகளில் ஒருவரான கனம்பொருந்திய டி. சதாசிவய்யர், இந்த மாதம் 4-ம் தேதி விக்டோரியா பப்ளிக் ஹாலில், தேசிகன் கால சரித்ரத்தைப்பற்றி ஒருவர் உபந்யாஸம் செயயவே, அப்போது அக்ராஸநத்தை வஹித்துத் தேசிகன் பால்யகாலத்தில் (Sectarianism) கக்ஷிவிஷயமான அபிமாநமும், (Bigotry)



அகாரண விஶ்வாஸமும் கொண்டவரென்றும், வயஸ் வந்தபின்பு இந்தக் குறைகளை ஜயித்தனரென்றும் வெளியிட்டனர்.

இவ்விதமாகக் கக்ஷியில் அபிமாநமும், அகாரணவிஶ்வாஸமும் தேசிகனுக்கும் ததீயாளுக்கும் குற்றமாக ஆரோபிக்கப்பட்டன. இப்படி ஆரோபித்தவர் அப்படிச் செய்வதற்கு நிர்த்தேசிக்கக் கூடியதோர் காரணத்தைக் காட்டியுமிலர். தார்க்கிகர்க்குள் ஸிம்ஹமெனப் பெயர் பெற்றவர், தக்க காரணமின்றி ஏதேனுமொரு விஶ்வாஸம் கொண்டாரென்பது ஸுதராம் சிந்திக்கக் கூடியதன்று. அவருடைய ஸம்ப்ரதாயமான ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைக் கக்ஷியெனச் சொன்னால் ஶங்கரமதம், பௌத்தமதம், ஜைநமதம், சைவம், மத்வமதம், ராமக்ருஷ்ணமதம், தியாஸபி, ஆர்யஸமாஜம், ப்ரஹ்மஸமாஜம், கிறிஸ்தவ மதத்தின் உட்பிரிவுகள், மஹம்மதியமதம், அந்யமதங்கள், இவை யாவற்றுள்ளும் அவ்வண்ணமே கக்ஷியெனக் கூடாததோர் மதமுண்டோ? உண்டென்றால் அச்சொல்தான் மிகுதியாய் நிற்கும். 'ஸமய கோடிகள்' என்று இவற்றை ஒரு பெரியவர் சொன்னார். ஒவ்வொன்றை அபிமாநித்துப் பரதூஷணையை நிரஸித்து அதை ஸ்தாபித்தவர் எல்லோரும் கக்ஷிகளை அபிமாநித்தவரே. தத்காலம் காரணம் காட்டாமலே தூஷிக்கின்றவர் பெருகுகின்றார்கள். அத்வைதத்திற்கு விஶிஷ்டாத்வைதமும், விஶிஷ்டாத்வைதத்துக்கு அத்வைதமும் நியமேந பூர்வபக்ஷங்களாய் நின்றன. உபய ஸித்தாந்த க்ரந்தங்களிலும், வாதப்ரகரணங்கள் கக்ஷிகளை ஆதரித்தே வளர்கின்றன. ப்ரதிவாதிகள் ஸமாந சப்தங்களாலே அந்த க்ரந்தங்களில் தூஷிக்கப்படுகின்றனர். யாம் கேள்விப்பட்ட வரையில் ராமாநுஜ பாஷ்யத்தில் பூர்வபக்ஷிகளாய் எண்ணக்கூடிய அத்வைதிகள் க்ரந்தங்கள் இப்போதில்லை. அவர் அங்கே தூஷிக்கத்தான் படுகின்றனர். ஸ்ரீபாஷ்யத்தைத் தூஷித்துக் கண்டந கண்டநகாத்யமெனும் அத்வைத வாத க்ரந்தம் பிறந்ததெனக் கேள்வியுற்றோம். அதை நிரஸிக்கத் தேசிகன் ஶததூஷணியை ஸாதித்தருளினார் என்றும் செவியுற்றோம். அதைத் தூஷித்து க்ரந்தங்கள் அத்வைதிகள் செய்தனர். இப்படி ப்ரஹ்மாநந்தீயம், ந்யாயபாஸ்கரம் வரையில் வாதக்ரந்தங்கள் பெருகியுள. ஸ்ரீ ஶங்கராசார்யரும் ஸ்வக்ரந்தங்களில் பூர்வபக்ஷிகளைத் தூஷிக்கின்றார். த்வைதவாதிகளை ஸம்யக் தூஷிக்கின்றனர். இந்த க்ரந்தங்கள் யாவும் தர்க்கநடையில் வ்ருத்தியாய் நின்றன. யாமெ

தர்க்கவாஸனையுமின்றித் தத்கால மதாபிமானிகள் பரஸ்பர தூஷணை செய்கின்றனர். ஆகையால் இந்த விஷயத்தில் தேசிகனைப் பொறுக்கி யெடுத்துத் தூஷித்தல் ந்யாயவிரோதம். அவருடைய க்ரந்தாவலோகநம் செய்யாதவர் என்று ஊகிக்கத்தக்கவர்கள் இப்படிக் கெல்லாம் ஆரம்பித்துட்டால் யார் என்ன செய்யலாம்? அத்வைத விஷயத்தில், க்ரந்தங்கள் எழுத ஆரம்பித்தமுதல், யாவதாயுஷம், தேசிகன் ஏகாபிப்ராயத்தைக் கொண்டவரே. யதிராஜஸப்ததி அவர் பால்யத்தில் எழுதவில்லை. ஶததூஷணி பால்யத்தில் எழுதிய க்ரந்தமன்று. அவர் முடிவாய் எழுதிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் மாயாவாதிகளைத் தாம் கண்டித்த விஷயத்தைப் பற்றி, ‘ஸுஸதாம் மதேவராவலி நிவபூராவிதஃ’, என்று ஸாதித்தருளினர். தேசிகன் ஸாதித்த வாதக்ரந்தங்கள் எல்லாம் அத்வைத மதத்தை நிரஸிக்கப் பிறந்தன. தேசிகன் காலத்தில் தென்கலையார் வடகலையார் எனும் விபாகமேயில்லை. ராமாநுஜன் காலத்துக்குப் பிறகு எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், எனப் பரம்பரையாய் ஏற்பட்ட ஆசார்யர்கள் ஸ்ரீரங்கத்தில் வஸித்தனர். இவர்க்குள் பின்பட்ட நால்வர் அதிகமாக ஆழ்வார் பாசுரார்த்தங்களைச் சிந்தித்தவர்கள். அப்படியே காஞ்சீபுரத்தில், திருக்குருகைப்பிரான்பிள்ளான், கிடாம்பி ஆச்சான், ராமாநுஜப்பிள்ளான், ஸ்ரீரங்கராஜர், நடாதூர் அம்மாள், ராமாநுஜாசார்யர், தேசிகன், இவர்களால் அலங்க்ருதமான ஆசார்ய பரம்பரைகள் விளங்கின. இவர்கள் ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயமெனும் ஆழ்வார் பாசுரார்த்தங்கள், இரண்டையும் காலக்ஷேபம் ஸாதித்தார்கள்.

பிள்ளை லோகாசார்யர், பெரியவாச்சான்பிள்ளை முதலானவர்கள் ஸ்ரீரங்கத்தில் வியாபகராக இருக்கையில், அங்கே அத்வைதிகளால் ராமாநுஜ தர்சநத்துக்கு இடையூறு நேரிடவும், அவரால் அழைக்கப்பட்டுத் தேசிகன் ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். பரவாதிகளை நிரஸித்தார். ஸ்ரீரங்கநாதன் ஆஜ்ஞையால் வேதாந்தாசார்யரென்றும், ஸ்ரீரங்கநாயகி அநுக்ரஹத்தால் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்றும் பெயர்களும் அளிக்கப்பட்டார். அவ்விடம் அவர் வஸித்த காலத்தில், ஸம்ப்ரதாய நிரூபண விஷயத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்த ஆசார்யர்களுக்கும், காஞ்சீபுரத்தில் இருந்த ஆசார்யர்



களுக்கும் அபிப்ராய பேதங்கள் வெளிப்படவே, ஸ்வாசார்யர்களுடைய மதத்தை ஸ்தாபிக்கும் பொருட்டும், தென்னாசார்யர்களுடைய அபிப்ராயங்கள் சில ஔசித்யங்களைக் கொண்டு ஏற்பட்ட அதிவாதங்களெனக் காட்டவும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமெனும் க்ரந்தம் ஸாதித்தருளினர். தேசிகன் எழுந்தருளியிருந்த காலம் வரையில் அதற்கு விரோதமாக யாதொன்றும் எழுதப்படவில்லை. “க்ருஸா நமஸ-ராவ தகஃ கெவிஸ ஸக்ருஸாம் ஹஸத்ரு கவரூதெ” - என்கிறபடியே, தர்க்கபாண்டித்யத்தாலே நினைத்த தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே, நாம் ப்ரமாணஶரணராய்ப் போருகிறது”-என்று ஸ்வாமி ஸாதித்தபடியே, ப்ரமாணஶரணராய், அந்த க்ரந்தமும் மற்றெல்லா க்ரந்தங்களும் தேசிகன் வெளிப்படுத்தினர். தேசிகன் திருவுள்ளம் நமக்கு ப்ரமாணமாகும்படியே, அங்ஙு ஆசார்யர்கள் காட்டிய மார்க்கங்களை அவர்களுடைய சிஷ்யர்கள் அபிமானிக்க யாம் குறை சொல்கின்றோமில்லை. இவர்க்குள் தேசிகதூஷகராய் வெளிவருமவர்கள், தக்க காரணங்களை வெளிப்படுத்தித் தூஷித்தாராகில், அத்தூஷணங்களை யாம் போதிக்கப் பொருந்தும். காரணங்களைக் காட்டாமலும், தேசிகன் க்ரந்தங்களை ஸக்ருதாவது அவலோகநம் செய்தனரென்று எண்ணவும் இடமின்றி நிற்கக் கிஞ்சித்தும் வாஸ்தவத்துடன் பொருந்தாதபடித் தூஷித்தல் யுக்தமன்று. இவ்வண்ணமே ஸர் ஶங்கரநாயர் என்பவர் ஸோஷல்ரிபாரம் ஸபாத்யக்ஷராயிருந்து, ராமாநுஜனை ஸரியாக வழிபடுபவர் தென்கலையாரென்றுரைத்ததைப்பற்றி முன்பே யோசித்திருக்கின்றோம்.

ஸர் ஶங்கரநாயர் இன்னுமோர் உந்நதமான லௌகிக ஸ்தாநத்தை இப்போது அடைந்தனர். அதைப்பற்றி அவருடைய மித்ரர்கள் அவர்க்கு அக்டோபர் மாஸம் 9 - ம் தேதி விருந்தளித்தார்கள். அங்கே அவர் பேசுங்கால், இவ்வாறு மொழிந்தனர் :— “ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் விஷயமாக எவரும் மனமறிந்த பக்ஷபாதத்தைச் சாட்டமாட்டாரென்று நான் நம்புகின்றேன். ஒருவேளை புத்தி பூர்வமற்ற பக்ஷபாதம் இருக்கக்கூடும்; ஏனெனில் அவர்கள் தமது ஸம்ஸர்க்கங்களென்ன, பூர்வ பயிற்சியென்ன, இவற்றின் விளைவுகளை த்யஜிக்கச் சக்தரன்று; ஆனால் அவர் எல்லோரும் அதை அதிக்ரமிக்க முயன்றவரே.” இது ஸத்யம். கலாப்ர

யுக்தமான வ்யவஹாரங்கள் ஸதா உத்பந்நங்களாகின்றமையால்,
கலாவிஷயமாக, ஹைகோர்ட்டு ஜட்ஜிகளைப்போல் படித்தவரும்,
புத்திமான்களுமாயிருக்கின்ற கலாபிமாநிகளை, ஸத்ஹேது வின்றி
விஸ்வாஸம் (Bigotry) கொண்டவரென்றும், கக்ஷிவிஷயமான
துரபிமாநம் (Sectarianism) கொண்டவரென்றும், ஒரு கலை
யார்தான் ராமாநுஜன் தர்சநத்தை உண்மையாய் வழிபடுவ ரென்
றும், இருகலையிலும் சேராத ஹைகோர்டு ஜட்ஜிகள், கலாவிஷய
மான விசாரத்துக்கு ஸாமர்த்யமும் அவஸரமு மின்றிக்கே என்
ணுவதும், எண்ணியபடி வெளிப்படுத்துவதும், யுக்தமாய் ஏற்
படமாட்டாது.

கனம் பொருந்திய ஸதாசிவய்யர் கொண்ட அபிப்ராயத்தால்
தேசிகனை ஒரு வடகலையாலும் துறக்கப் போகின்றானில்லை. ஆனால்
பெரிதானதோர் ஸமஸ்தாநத்தை வஹிக்கின்றவர்கள், தம்மிடம்
வ்யவஹார ஸமாநத்தின் பொருட்டு வருகின்றவர்கள் கஷ்டப்படும்
படியாக, வ்யவஹாரஸம்பந்தமற்ற உக்திகளைத் தமது உபந்யாஸங்
களினின்று நிவர்த்தித்தாராகில் அது நன்றாயிருக்கு மென்று
நம்புகின்றோம்.

**பாதிரிமார் ஆலோசனை ஸங்கங்கள்.**

சென்ற சில நாட்களாக நித்யமாக வெளிவரும் இங்கிலீஷ்
பத்திரிகைகளை வாசித்தால், பாதிரிமார்கள் பல
விடங்களில் கூடினார்களென்று தெரிகின்றது.
தமது மதத்தை க்ராமங்கள் தோறும் பஹிரங்க
மாக ப்ரஸங்கிக்கின்றார்கள். கவர்ன்மெண்டார்
உதவியைக் கொண்டும், பிள்ளைகளிடம் சம்ப
ளம் வாங்கியும், கிறிஸ்தவரிடம் பணம் சேகரித்தும், இயன்ற
மட்டும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தும், பிள்ளைகட்குப் பல
வந்தமாகத் தம் மதத்தைக் கற்பிக்கின்றனர். வைத்யசாலைகள்
ஏற்படுத்தி, ஏழ்மைத்தனத்தால் அவ்விடம் வரும் ஹிந்துக்களுக்
குப் போதகரைக் கொண்டு தம் மதத்தைப் போதிப்பிக்கின்றனர்.
இவர்கள் செய்யும் வ்யாபாரங்களால் நம் தேசத்தவர்க்கு ஐஹிக
பலன்கள் உண்டாகின்றன. அதனால் அவர்க்கு ஜந்மஸித்தமான
ஸ்வமதத்தில் விஶ்வாஸம் குறையவும் வழியுண்டாகின்றது. ஸ்வ
மதாபிமாநம் விலகிய மநஸ்கரான ஹிந்துக்கள், பாதிரிமார் ப்ரயத்
நங்களைப் பற்றிச் சோகிக்கின்றாரில்லை. இவர்க்குள் பலர் வைதிக



தர்மதூஷகர் ஆனபடியால், தாம் இப்போது கிறிஸ்தவராக ஸித்த
மாயிராராயினும், பாதிரிமார் ப்ரயத்நங்கள் தமது உத்தேஶ்யங்
களை ஸாதித்துக் கொடுக்குமென்றெண்ணி, அவர்க்கு உபபலமாக
வும் இருக்கின்றனர்.

ஒரு பாதிரி, தமது கூட்டத்தாரால் கிறிஸ்தவ மதம் பல
நூறு க்ராமங்களில் ப்ரஸங்கிக்கப் பட்டதென்றும், அவ்விடங்க
ளில் அநேகமாயிரம் ஜநங்கள் அதைக் கேட்டாரென்றும், நூறு
நூறாக ஹிந்துக்கள் கிறிஸ்தவராக ஸித்தமாயிருக்கின்றன ரென்
றும் சொன்னார். இப்படி இந்தியா வெங்கும் ஹிந்துக்கள் ஸ்திதி
நிற்க, இதைப்பற்றி ஒரு பேபரிலும் ஒருவனாலும் துக்கோதர்க்க
மான எழுத்துக்களைக் காண்கின்றோமில்லை.

ஸ்வமதாபிமானிகளான ஹிந்துக்கள், ஸ்வமதத்தைத் தெரி
ந்துகொண்டே தமது சிறுவர்கள் தத்காலம் அநிவார்யமான இங்
லீஷ் வித்யைகளைக் கற்கும்படி, ஓர் கலாஸங்கம் ஏற்படுத்த
வெண்ணி, அதனிமித்தமாக ஸ்வமதஸ்தர்களிடம் பணமும் சேக
ரித்தார்கள். அவர் ப்ரயத்நத்தை ராஜாங்கத்தார் ஈஷத் ஆதரித்
துக் கலாஸங்கம் ஏற்படுத்தவும் உதவி செய்தார்கள்.

இதைச் சில ஹிந்துக்கள் ஸஹிக்கின்றாரில்லை. ஹிந்துமதத்
தை அதில் „பிறந்த பிள்ளைகட்குக் கற்பித்த லென்பதைக் கேட்
டால், அவர்கட்குக் கர்ணகடோரமா யிருக்கின்றது. ஒருவர் கிறிஸ்
தவர் பாடசாலைகளில் ஹிந்து சிறுவர்க்குக் கிறிஸ்தவ மதத்தைப்
பலவந்தமாய்ப் போதித்தலைத் தடுக்க முயல்கின்றார். மற்றொரு
ஹிந்து அந்த ப்ரயத்நத்தை ஸஹிக்காமல் பேபர்களுக்கு எழுது
கின்றார்.

ஸர்வ மதங்களுடைய ப்ரமாண க்ரந்தங்களிலும் தூஷிக்கத்
தக்க அம்சங்கள் உண்டு. ஆயினும், ஹிந்துக்கள் ஸ்வமத விரோதி
களாவதை யொத்து, மஹம்மதியரும் கிறிஸ்தவரும் ஆவதைக்
காணோம். ஹிந்து சிறுவர்கள் பொருள் தேடும் வழியென்று
நம்பி, இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்து, அருள் தேடும் வழியைத்
தம்மட்டும் மூடிவிட்டார்கள்.

# தத்வவிசாரம்.

பிறகு இரண்டு ஶ்லோகங்களால், "ப்ரபத்தியையோ, பக்தியையோ, கர்மயோகம் முதலானவற்றையோ, உபாயமாகப் பற்றுகின்ற முமுக்ஷுக்கள் எல்லார்க்கும், தமது ஸ்வரூபத்தையும், தமது ரக்ஷணபலத்தையும் ஶ்ரிய:பதியினிடம் ஸமர்ப்பித்தல் ஸமானமே; பக்தர் முதலானவர்க்கும் ஶேஷத்வாநுஸந்தானமும், பலம் ப்ரதானபலியான ஈஶ்வரனுடையது என்ற அநுஸந்தானமும், வேண்டியதே; அகிஞ்சனன் ரக்ஷணபரத்தையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல் வேண்டும். இது ப்ரபத்தியெனும் அங்கியில் அந்தர்கதம்; ப்ரபன்னர்க்குள், மோக்ஷார்த்திகளும், இதர பலார்த்திகளும், ரக்ஷணபரத்தைப் பகவானிடம் ஸமர்ப்பித்தல் வேண்டும்; மோக்ஷத்தை அபேக்ஷித்தவர் மாத்ரம், அதற்கும் மேல்பட்டு, ஸ்வரூப பலங்களையும் ஸமர்ப்பித்தல் வேண்டும்" என்று நிஷ்கர்ஷிக்கின்றார்.

பலார்த்தியாய் உபாயாநுஷ்டானம் பண்ணுகிற ஜீவன் பலியாயிருக்க, ஈஶ்வரன் ப்ரதானபலியாவது, எப்படியென்று ஆக்ஷேபித்து, அசித்தின் பரிணாமங்கள் ஈஶ்வர ஸங்கல்பத்தால் உண்டாவதால், அவற்றின் ப்ரதான ப்ரயோஜனம் ஈஶ்வரனுடையது; ஜீவகர்மாநுகுணமாக அவை உண்டாக்கப்படுவதால், அவற்றின் அவாந்தர பலித்வம் ஜீவனுக்கும் உண்டு; ஜீவனுக்கும் ஈஶ்வரன் தானே கொடுத்த புருஷார்த்தங்களும், ஸர்வஶேஷியான அவனுக்கே உகப்பாயிருக்கையாலே, அவன் ப்ரதான பலியாகின்றான்: இவற்றாலும் ஜீவனுக்கு அவாந்தரபலித்வம் உண்டு: என்றிவ்விதமாக ஸமாதானம் அருளிச்செய்கின்றார்.

பிறகு யாமுநாசார்ய ஸ்தோத்ர விஷயமாகச் சிந்திக்கின்றார். அதில், 22-வது ஶ்லோகத்தால், ஸ்ரீ ஆளவந்தார், தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், அநந்யகதித்வத்தையும், ஸ்பஷ்டமாகச் சொல்லித் தமக்குப் பக்தியோகாதிகளில் அதிகாரமில்லாமையை



யும் ஆவிஷ்கரித்து, ஶரண்யன் திருவடிகளில் ப்ரபதநம் செய்கின்றார். அதன் தொடர்ச்சியாக, அடுத்த ஶ்லோகத்தால், பகவத்ப்ராப்தி விரோதியாக நின்ற, தமது அநந்தாபராதங்களை ஸ்மரித்து, அவற்றால் பவக்கடலில் மூழ்கி நிற்கும் தமக்குப் பகவான் ஒரு கரையைப் போல் ப்ராப்தமானதையும், அவனது அபார காருண்யமே தம்முடைய ரக்ஷணத்திற்கு முக்யஹேதுவாயிருப்பதையும் அடுத்த 24-வது ஶ்லோகத்தால் வெளியிட்டு, இப்படிப்பட்ட கருணாநிதியான பகவான், ஶரணாகதனை ரக்ஷியாதொழியான் என்பதை 25-வது ஶ்லோகத்தாலும், ஶரணாகதனான தாமும் அவன் திருவடிகளை விட்டகல்வதில்லையென்பதை 26-வது ஶ்லோகத்தாலும், அவனது திருவடிகளில் நிலைத்த பக்தியை அடைந்த தாம், மற்றொரு ப்ரயோஜநத்தை ஸ்மரிப்பதில்லையென்பதை அடுத்த ஶ்லோகத்தாலும் விவரிக்கின்றார். அவனது திருவடிகளில், எப்போதாகிலும், யாராலாகிலும், எப்படியாகிலும் ஒரு தரம் ஸமர்ப்பிக்கப்பட்ட அஞ்ஜலி ரூபமான ப்ரபதநம் ஸர்வபாப நிவாரணத்தை முன்னிட்டுக்கொண்டு, பரமபுருஷார்த்தத்தைத் தந்து அதன் ஸ்வரூபமான கைங்கர்யத்தின் பரம்பரையை ஒழிவில் காலமெல்லாம் நீடிக்கச் செய்யுமென்று, 28-வது ஶ்லோகத்தால் ப்ரபத்தியின் ப்ராபவத்தை ஸ்துதிக்கின்றார். பின்னால் அக்கைங்கர்யத்துடன் கூடின பகவத்பரிஜநபாவத்தைத் தாம் என்றடைவதென்று, 47-வது ஶ்லோகம் வரையில் சிந்தித்து, 48-49-வது ஶ்லோகங்களால், ஸம்ஸாரத்தில் வீழ்ந்து, ஶரணாகதனான தம்மை, க்ருபையால் ரக்ஷிக்கப் பகவானை வேண்டுகின்றார்; 50-வது ஶ்லோகத்தால் ஶரண்யன் தயைக்குத் தாமே அநுரூபமான விஷயமென்கிறார். தமக்கும் பகவானுக்கும் உள்ள தாஸத்வ ஸ்வாமித்வ ஸம்பந்தம், ஒழிக்கவும் ஒழியாததாகையால், அவன் தயை தம்மை ரக்ஷிக்கவேண்டிய முறையை 51-வது ஶ்லோகத்தால் வேண்டுகின்றார்.

இதன் பிறகு, 'வபுராதிஷு' என்கிற ஶ்லோகம் வருகின்றது. இதற்கு வேதாந்ததேசிகன் தாத்பர்யம் ஸாதிக்கின்றார்:— ஒரு ராஜா ரத்நத்தை உட்கொண்ட ஒரு பையை முத்ரையிட்டு ஒரு ஸேவகன் கையில் கொடுக்க, ஸேவகனும் உள்ளிருக்கும் மாணிக்கத்தின் ஸ்வரூப ஸ்வபாவங்களை விஶதமாக அறிந்துகொள்ளாமல், அந்த மாணிக்கங்கொண்ட பையை முத்ரையுடன்

யாக வந்ததால் அது பராதீந கர்த்ருத்வம். மமதா த்யாகமெனில், அநுஷ்டிக்கப்பட்ட கார்யம் தனதெனும் அபிமாநத்தை விலக்கல். அதன் ப்ரதாந பலமும் தனதெனும் யோசனையை விலக்குதல் பலத்யாகம். தான் அநுஷ்டிப்பது அந்தப் பலத்தைக்குறித்து ஸாக்ஷாத் உபாயமாகாது; அவ்விஷயத்தில் ஈச்வரனே ஸாக்ஷாத் உபாயம்; அவன் ப்ரஸாத நிமித்தம், அவனிட்ட கட்டளையில், ப்ரபத்தி, ஓர் வ்யவஹித காரண மென்றறிதல் பலோபாயத்வ த்யாகம். ப்ரபத்யங்கங்களாகச் சொல்லப்பட்ட ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளுடையவும், அங்கியாகின்ற ஆத்மநிக்ஷேபத்துடையவும் அர்த்தாநுஸந்தாநம் அநுஷ்டாநகாலத்தில் வேண்டும். இவ்வர்த்தங்களை ப்ரகாசிப்பிக்கும் சரணாகதி மந்த்ரமாகிய த்வயம். அதை உச்சரித்துத் தனது ஆத்மாவையும், அதன் ரக்ஷண பலத்தையும், அதன் ரக்ஷண பரத்தையும் தன் ஸம்பந்த மறுத்துப் பகவான் திருவடிகளில் ஸமர்ப்பிப்பது ப்ரயத்தியென்றாகின்றது. அதன் முன்பு ஸ்வாசார்யனையும், ஆசார்ய பரம்பரையையும், ப்ரணாம த்யாநாதிகளால் அடையவேண்டும்.

ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள், உபாயபரிகரங்களாய் ஸக்ருத் அநுஸந்தேயங்களாகிலும், அவை இவன் அநுஷ்டிக்கும் உபாயத்துக்குப் பலனாகச் சரீராவஸாநபர்யந்தம் நிலைத்திருக்கவேண்டும். ஆகையால் இருந்த நாள் வரையில் நிரபராத கைங்கர்யத்தையும், மரணாநந்தரம் மோக்ஷத்தையும் பலமாக வேண்டி ப்ரபத்தி பண்ணுவார்கள் நிபுணர் - என்றிவ்விதமாக ப்ரபத்தி விசாரத்தை முடிக்கின்றார்.

பத்ராதிபர்.

# ஜநகநந்திநீ.

பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளின பிறகு, உத்ஸவம் ஆரம்பித்துப் பத்தாவது தினத்தில் எட்டாவது திருநாள் ஸம்பந்தமான உத்ஸவம் நடந்தது. அன்று மத்யாஹ்நம் நாவல்பாக்கம் ஸ்வாமி பத்மநாபாசார்யருடன் கேசவாசார்யர் க்ருஹத்தை நோக்கி நடந்தார். "பத்மநாபாசார்ய! பிள்ளையாண்டான் கல்யாணத்தில் மிகுந்த குதூஹலத்தைக் காட்டுகின்றானில்லை. ஆனாலும் அவனுக்கு வயஸ் இருபத்திரண்டு ஆய்விட்டது. அவனுடைய விவாஹம் இனி விளம்பிக்கத் தகாது. ஆதலால் அடியேன் வார்த்தையை அவன் கேட்க இசைந்திருக்கின்றான். அபிஜாதரும், ஜ்ஞாதாவும், பரமைகாந்தியுமா யிருக்கப்பட்ட கேசவாசார்யர் ஸம்பந்தம் விசேஷமாகக் கொண்டாடத் தக்கது. பெண்ணினுடைய யோக்யதையைப் பற்றியும், சீலத்தைப் பற்றியும் தேவரீரும் த்ருப்தியாய்ச் சொல்லுகின்றபடியால், ஸக்ருத் அவலோகந மாத்ரத்தால் அடியேனும் அதைத் தெரிந்துகொள்கின்றேன். என்ன ஸாதிக்கின்றது?" என்று ராமாநுஜசார்யர் சொன்னார்.

"இப்படித் தேவரீர்க்கு ஸ்நுஷை கிடைப்பது கஷ்டம். பெண்ணைப் பார்த்தவுடன் தேவரீர் ஸந்துஷ்டராகு மென்பதில் அடியேனுக்கு ஸம்சயம் இல்லை. ஆனால் தேவரீர் குமாரர் ஸ்வவிவாஹ விஷயத்தில் உதாஸீநரா யிருக்கின்றா ரென்பது ஈஷத் சகித ஹேதுவாகின்றது" என்றார் பத்மநாபாசார்யர்.

"தேவரீர் சகிதப்படுவானேன்? வாசித்துப் புத்திமானாயிருக்கின்ற பிள்ளை கல்யாணமென்றால் வெளிப்படையாக ஸந்தோஷப்படுவனோ? அப்படிச் செய்வதில் அவனுக்கு லஜ்ஜை யுண்டாகாதோ? அவன் மநவில் கொண்ட எண்ணத்தை ஆவிஷ்கரிப்பனோ? அவன் நடத்தை லோகத்தோடு ஒத்து இருக்கின்றது. அப்படித்தான் புத்திமான்கள் இருப்பார்கள். பிதாவினிடம் மர்யாதை யுள்ள புத்ரர்கள் ஸ்வவிவாஹ விஷயத்தில் பிதாவின்

அபிப்ராயத்தையே அநுஸரித்து நடப்பர். 'ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி' என்று சக்ரவர்த்தித் திருமகனுடைய சரித்ரத்தில் ஏற்படவில்லையா?" என்றார் ராமாநுஜாசார்யர்.

"தேவரீர் குமாரர் சக்ரவர்த்தித் திருமகனை அநுஸரித்து நடந்தால் போதுமானது. இன்னும் தேவரீர் ஸாதித்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தை யோசிக்கவும். 'குணாத்ரூபகுணாச்சாபி ப்ரீதிர்பூயோப்யவர்த்தத', என்று, ஸீதையின் ஸௌந்தர்யத்தாலும் கல்யாணகுணங்களாலும் ராமனுக்கு அவளிடம் ப்ரீதி மேன்மேலும் வ்ருத்தியடைந்ததென்று தெரிகின்றதே. கேசவாசார்யர் கந்நிகையினிடம் தேவரீர் குமாரர்க்கு ப்ரீதி வளரும்படி ரூபமும் குணமும் ஏற்பட்டேயிருக்கின்றது" என்றார் பத்மநாபாசார்யர்.

இப்படி ஸம்பாஷித்துக் கொண்டே போய்க் கேசவாசார்யர் இல்லம் வந்து சேர்ந்தார்கள். அங்கே நடைத்திண்ணைமேல் உட்கார்ந்திருந்த கேசவாசார்யர் இவர்களைப் பார்த்தவுடன் எழுந்திருந்து "எழுந்தருளவேண்டும்" என்று சொன்னார். மூவரும் திண்ணையில் உட்கார்ந்தனர். "அன்று ஸாதித்தவண்ணம் ஸ்வாமி எழுந்தருளிவிட்டார்," என்று பத்மநாபாசார்யர் சொல்லிவிட்டு உள்ளே சென்று ஒரு தட்டு வாங்கிக்கொண்டு வந்தார். அதில், ராமாநுஜாசார்யர் கொண்டுவந்த வெற்றிலை, பாக்கு, மஞ்சள், புஷ்பம், பழம், வஸ்த்ரம் இவற்றையெல்லாம் வைத்தனர்.

"பகவான் ஜலக்ரீடைக்கு ஸந்நாஹமாய் எழுந்தருளியிருக்கின்றான். தேவிகளுடன் அவன் மஞ்சனமாடிக் களித்ததும், விசேஷித்து, அவர் திருவடிகள் ஸம்பந்தத்தால் பாவநதமமாகப் பண்ணப்பட்டதுமான தீர்த்தத்தை அபேக்ஷித்து ஸந்நிதிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றார்கள். தேவரீர் குழந்தை சற்று இங்கே வருவளோ? அவள் கையில் ஒரு தாம்பூலம் கொடுத்துவிட்டு ஸந்நிதிக்குப் போவோம்" என்று சொன்னார் ராமாநுஜாசார்யர்.

"பாக்யம்", என்று சொல்லிவிட்டுக் கேசவாசார்யர் எழுந்து உள்ளே நடந்தார். ராமாநுஜாசார்யர் வரப்போகின்றார் என்று



கேசவாசார்யர் எதிர்பார்த்த போதிலும், அவர் வந்த ப்ரகாரத்தையும், ஸமயத்தையும் அவர் எதிர்பார்த்தாரில்லை. ஆதலால் அன்றையதினம் வெள்ளிக்கிழமை யென்று, ஜநகநந்தினி ஸ்நாநம் செய்த வண்ணம் க்ருஹவ்யாபாரங்களில் வ்யாஸக்த மனத்தினளாய் இருந்தாள். பிதாவால் அழைக்கப்பட்டபோது, தன் தேஹத்தை விசேஷமாக அலங்கரிக்க அவகாசமற்று நின்றாள்.

'ச்ரமோத்பவ சிசிரஸ்வேத வ்யஸ்தகேசம் மந்தாகினீ
மாருத தரளாலகா ... ஸம்ஸ்ப்ருஷ்டி ।
... ஜ்வலத்கபோல ...
நிராபரண ஸுந்தரச்ரவணபாச ஸௌம்யம் வபு:' ॥

ரமப்பட்டதால் உத்பந்நமான வேர்வை ஜலத்தால் குளிர்ச்சியை அடைவிக்கப்பட்டதும், மந்தாகிநியினின்று உண்டாகி மந்தமா யடிக்கின்ற காற்றினால் நாற்புறமும் சலிக்கின்ற முன்னெற்றி மயிர்களால் ஈஷத் மறைக்கப்பட்டதுமான நெற்றிக்கட்டாகின்ற சந்த்ரனுடைய காந்தியுடன் கூடினதும், குங்குமப்பூவின் பூசுதலால் உண்டாகும் களங்கமற்று ப்ரகாசிப்பதுமான கபோலத்துடன் கூடியதும், ஆபரணமற்றிருந்தும் ஸுந்தரமான செவிகளுடன் கூடிக் கண்களுக்கு ரம்யமானதுமான முகமானது காணப்பட்டது" என்று ரகுவீரன் ஸீதையை ஸ்மரித்துச் சொன்னதாக மஹாகவி வாக்ய மிருக்கின்றபடித் தன் புத்ரி தோன்றியும், 'கிமிவ ஹி மதுராணாம் மண்டநம் நாக்ருதீநாம்' "மதுரமான ஆகாரங்களுக்கு எதுதான் அலங்காரமாகாது?" என்றும், "ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதநவிதே: ப்ரஸாதநவிசேஷ:", "ஆபரணத்துக்கும் அவள் ஆபரணமாயிருக்கின்றாள், அலங்கார வ்யாபாரத்துக்கும் அவள் அலங்காரமாயிருக்கின்றாள்" என்றும், காளிதாஸன் வர்ணித்தபடியே, மற்றொரணி வேண்டாமல் மதுரமான தோற்றமுடைய தன் குமாரியை, அலங்கார விதாநாபேக்ஷையின்றித் தன்னகத்து நடைக்குக் கேசவாசார்யர் அழைத்துக்கொண்டு போனார். "ஸ்வாமிக்குத் தண்டன் ஸமர்ப்பி" என்று அவர் சொல்

வதற்குள், ராமாநுஜாசார்யரையும், பத்மநாபாசார்யரையும் தனித் தனியே ஜநகநந்திநி ஸேவித்தனள்.

இப்படி வணங்கிநின்ற கன்னிகை[illegible] ராமாநுஜாசார்யர் பார்த்தார். வானமும் சசியும் வளம் நீங்கவே, வாய்ந்த கூந்தலில் வைத்த முகத்தினளும், கானவர்படை கண்டதோர் மானெனக் காட்சி தந்திடும் கண்ணினளுமான அப்பெண்மணியை நோக்கவும், விஸ்மயமும் ஸந்தோஷமும் ஒன்றுகூடி மனம் நிறைந்து வெளிப்பட்ட வதநத்துடன் கூடினவராய், மந்தஸ்மிதராய்ச் சிறிதுகாலம் பார்த்துவிட்டு, "பேரருளாளன் [illegible] ஸர்வமங்களமும் உண்டாக்கட்டும்", என்று சொல்லி, மேலேகுமித்த [illegible] ளடங்கிய தாம்பூலத் தட்டை அவளிடம் கொடுத்தனர். ஜநக[illegible] னியும் அதைக் கைநீட்டி வாங்கிக்கொண்டு உள்ளேசென்று [illegible] ப்ரியையினிடம் கொடுத்தாள்.

"கேசவாசார்ய! அடியேனுக்கு மிகவும் த்ருப்தியாயிருக்கிறது. இது எதிர்பார்த்த விஷயமே. அடியேனுடைய மநஸ் மிகவும் ஸந்துஷ்டமா யிருக்கின்றது. தேவரீர் குமாரத்தியின் நக்ஷத்ரமென்ன?" என்று சொன்னார்.

அதற்குக் கேசவாசார்யர், "அவள் நக்ஷத்ரம் உத்தர பல்குநீ" என்றனர்.

"பிள்ளையாண்டான் நக்ஷத்ரம் ச்ரவணம். நல்ல பொருத்தமாய் அமைந்திருக்கின்றது. வேறொன்றும் விசாரிக்க வேண்டியதில்லை. தேவரீர் முகூர்த்தத்தை நிச்சயித்து முகூர்த்த பத்ரிகை அனுப்பிவிடலாம்", என்று சொல்லிவிட்டு ராமாநுஜாசார்யர் எழுந்தார். மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். "ஸந்நிதிக்கு எழுந்தருளவில்லையா?" என்று கேசவாசார்யரைப் பத்மநாபாசார்யர் கேட்டனர்.

"முன்னே ஸ்வாமிகள் எழுந்தருளினால், இதோ பின்னே வந்துகொண்டே இருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டுக் கேச



வாசார்யர் உள்ளே சென்றனர். மற்றவர்கள் ஆலயத்துக்குச் சென்றார்கள்.

"ஜநகம்! அந்த ஸ்வாமியின் குமாரருக்கு உன்னைத் தாநம் செய்ய நிச்சயித்திருக்கின்றேன். உனக்கு ஏதாவது சொல்லவேண்டுமோ? இருந்தால் சொல்" என்றனர் கேசவாசார்யர்.

"அப்பா! தேவரீர் திருவுள்ளப்படி நடப்பதுதான் அடியேன் ஸ்வரூபம். அதுதான் அடியேனுக்கு ஸந்தோஷம் தரக்கூடியது. தேவரீர் செய்வதில் அடியேன் யுக்தாயுக்த விசாரம் செய்யத்தகுமா? தேவரீர் அடியேனுக்காக வரித்த புருஷனைப் [illegible]ாவாகப் பகுமாநித்து, த்ருப்தியோடு சுச்ரூஷை செய்[illegible]. தேவரீர் அந்த விஷயத்தில் கிஞ்சித்தேனும் ஸம்சயப் [illegible]வேண்டாம்" என்று சொன்னாள் ஜநகநந்திநீ.

பிறகு கேசவாசார்யர் கோவிலுக்குச் சென்றார். அன்று மத்[illegible]ஹநம் வரதன் திருப்பாய்ந்தாடித் திருமஞ்சநம் கண்டருளு[illegible]ன்றான் என்பார். இது ஸேவார்த்திகள் முன் நடப்பதன்று. [illegible]வர், இது பகவான் நடத்தியதாகப் பாவிக்கமாத்ரம் அதிகாரி[illegible]ள். பாய்ந்தாடும் மஞ்சநம் ஜலக்ரீடை. இதை யமுனைத்துறைவன் [illegible]முனையாற்றிலே கோபஸ்த்ரீகள் களிக்க அவர்களுடன் சேர்ந்து நடத்தினானென்று ஸ்ரீ பாகவதம் சொல்லும். வசீக்ருத ஸ்வமாயையை அதிஷ்டிதனுய்க் கொண்டு, அம்மாயையால் ஸர்வபூதங்களையும் ப்ரமிக்கச்செய்யும் பரமேச்வரன், ராஸக்ரீடை, ஜலக்ரீடை முதலான திருவிளையாட்டுகளை நிஜமாகச் செய்தருளினானோ, அவ்வண்ணம் கோபஸ்த்ரீகளுக்குக் காட்டியருளினானோ, இரண்டுமின்றி இக்கதை, தன்னை ஆச்ரயித்துப் பரவப் பார்த்துக் களிக்கின்றானோ, யாமறியோம். அவாப்த ஸமஸ்த காமனுக்கு, ராஸக்ரீடாதிகளால் என்ன அபூர்வமான ஆநந்தம் உதிக்கப்போகின்றது? "அநுக்ரஹாய பூதாநாம் மாநுஷம் தேஹமாஸ்தித: । பஜதே தாத்ருசீ: க்ரீடா யா: ச்ருத்வா தத்பரோ பவேத்" என்கிறபடி, லோகாநுக்ரஹார்த்தமாக, மர்த்யர்க்குள்

அவதாரம் செய்த ஶரண்யன், மேலேசொன்ன க்ரீடைகளில் அநுபவித்தவனெனத் தன்னைக் காட்டினான்; ஏனென்றால், அந்தக் கதைகளைக் கேட்டாவது, மர்த்யர் தன்னடியை ஆச்ரயிக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றினான் ஸர்வேச்வரன். வ்ரஜக்ரஹங்களில் வஸித்த புருஷரனைவரும், ஸ்வக்ரஹங்களில் ஸ்வஸ்த்ரீகளெல்லாரும், அவ்வவர்க்குரிய வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தராய் நிற்கக் கண்டுகொண்டிருக்கையில், அந்த ஸ்த்ரீகளே தனது ஸாமீப்யத்தை அடைந்தவர்களாய் நினைத்துக் கொள்ளும்படி விளையாடும் லோகநாதன் செய[illegible]ார்தான் இப்படியென்று அறியக் கூடும்? இந்த விளையாட்டில் அநுபவிக்கத் த[illegible]ின் தேவிமார்களுக்கு இடமற்றுப்போக, அவர்க்கும் அரியதோ[illegible]ரீதி டாரஸத்தை ஸர்வஸங்க பரித்யாக பூர்வமாகத் தன்னையடை[illegible]ர்ன் வ்ரஜாங்கனைகட்குத் தந்தருளிய பெருமானைத் தமக்கும் அ[illegible] தர, அவர் வேண்டத் தந்தருளுகின்றானோ அறியோம். அவ[illegible]ர்டைய ஸர்வேச்வரத்வம் நிஸ்ஸம்ஶயமாக விளங்க, "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று ச்ருதி சொல்லிற்று. ஸந்தர்ப்பமறியாத குத்ருஷ்டிகள் ஹ்ரீசப்தத்தை லஜ்ஜாபிமாநி தேவதை யென்று பொருள் படுத்துவர். லஜ்ஜைக்கும் அபிமாநிதேவதையொன்றை அவர்வேண்டுவார் போலும். தே எனும் சப்தம், தவ என்று ஸ்பஷ்டமாய் விளங்க, அதற்கு அபார்த்தம் சொல்லுவர். ஆதலால் பத்நீசப்தத்திற்கும் அபார்த்தம் பண்ணுவர். "எனது அபரையான ஜடப்ரக்ருதியை அறி. ஜீவரூபையான எனது பராப்ரக்ருதியையும் அறி" என்று கீதையில் கண்ணனால் உரைக்கப்பட்டும், "ஸர்வபூதங்களிடமும் உள்ள த்ரிகுணாச்ரயையான உனது அபரையான ஶக்திக்கும், இந்த்ரியங்களுக்கும், வாக்குக்கும், மநஸுக்கும் எட்டாதவளும், ஜ்ஞாதாக்களா லறியத்தக்கவளுமான ஜீவாபிமாநியான பரமேச்வரியையும் நமஸ்கரிக்கின்றேன்," என்று புராணரத்நத்தில் ப்ரஹ்லாத ஸ்துதியில் வர்ணிக்கப்பட்டிருக்கும், சித், அசித், இரண்டுக்கும் அபிமாநி தேவதைகளான ஸ்ரீதேவியையும் பூதேவியையும் என்றும் தன்னிருபுறமும்கொண்டு,



தன் பாரமைச்வர்யத்தை ப்ரகடநம் செய்யும் பேரருளாளன், அந்தத் தேவிகளுடன் அன்று ஜலத்தில் பாய்ந்தாடினான் போலும். அப்படித் தன்னுடையவும் தன் தேவிமார்களுடையவும் திருமேனி ஸம்பந்த மடைந்த திவ்யதீர்த்தத்தை ஸேவார்த்திகளுக்கு அநுக்ரஹித்துத் தந்தனன்.

அவ்வநுக்ரஹமும் விபலமாகும்படி ஸ்ரீவைஷ்ணவரென்று பெயர்வஹித்த பலர், கோஷ்டியாக நின்றுப் பகவத்கிங்கரர் ஒவ்வொருவரிடமும் சென்று தீர்த்தம் ஸாதிக்குமட்டும் பொறுமையற்றவராய், ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தீர்த்தம் ஸாதிப்பவ[illegible] கஷ்டப்படுத்தித் தீர்த்தம் தமக்குமின்றி, அயலார்க்கும் [illegible]ாமல் போகும்படி செய்கின்றார்கள். ஸத்வ ப்ரதாநராகப் [illegible]தவர், ப்ராஹ்மணரெனும் க்யாதியை நியமேந கெடுத்தாரா[illegible] அவர் ஜந்மத்தைப் பற்றிச் சங்கிக்கவும் நேரிடும்.

ஸந்நிதியினின்று ஸ்ரீவைஷ்ணவர் திரும்புங்கால், மாதவாசார்[illegible] கேசவாசார்யரைப் பார்த்து, "கேசவாசார்ய! குழந்தைக்குவிவாஹம் நிச்சயமானதாகக் கேள்விப்பட்டேன். 'ஸஹீநாம ஸ்ரீ காமமேவ' தேவரீர் கந்நிகை வாழ்க்கைப்படப் போகின்றாளென்று விசேஷேண ஸந்தோஷமா யிருக்கின்றது" என்று சொன்னார்.

"எல்லாம், ஶரண்யன் க்ருபையை அநுஸரித்த அவனுடைய ஸங்கல்பாதீநமாக நடக்கின்றது," என்றனர் கேசவாசார்யர். இதற்குள் இவர்கள் நின்றவிடம் தேடி, ராமாநுஜாசார்யரும், பத்மநாபாசார்யரும் வந்து சேர்ந்தார்கள். ஸ்வாமிந்! பெருமாள் அத்புதமாய் ஸேவை ஸாதிக்கின்றனர். கோபாலன் திருவிளையாட்டைப் பக்தர்க்குக் காட்டும்போது, கோபலனாக ஸேவை ஸாதிக்கின்றான். ஆனால் ஸேவார்த்திகள் யாவரும் த்ருப்தியாகத் தர்சிக்க அவகாசம் கொடுக்கவில்லை. அதற்குத் தக்க ஸௌகர்யத்தை ஸந்நிதி விசாரணைகர்த்தர்கள் பண்ணிக்கொடுக்க வேண்டும்," என்று சொன்னார் ராமாநுஜாசார்யர்.

இதற்குக் கேசவாசார்யர் ப்ரத்யுத்தரம் அளித்திலர். மாதவாசார்யர், "ஸந்நிதி தர்மரக்ஷகர்கள் என்ன செய்யலாம்? இந்த மூடஜனங்களைக் கடாக்ஷிக்கவும். யாவருக்கும் கிடைக்க வேண்டியதும் கிடைக்கக்கூடியதுமான பகவத் ப்ரஸாதத்தை யாருக்கும் கிடைக்க வொட்டாமல் செய்கின்றனவே. இவர்களை அடிப்பதா, திட்டுவதா, என்ன செய்யலாம்? விசாலமான இந்த மண்டபத்தின்கண் எல்லாரும் வரிசையாக நின்றிருந்து, அவ்வவர் ஸ்தானத்தினின்று பெருமாளை ஸேவிக்கவும், பெருமாள் தீர்த்தத்தை வாங்கிக் கொள்ளவும் கூடாதா? இவருடைய அஜ்ஞானம் விசாரணைகர்த்தர்கள் அதிகாரத்துக்கும் அதிக்ரமித்த விஷயம் [illegible] ன் சொன்னார்.

அதன்பிறகு எல்லாரும் அவ்வவர் இல்லங்கட்குச் செ[illegible]னர். அன்று அஸ்தமனத்திற்குப் பெருமாள் குதிரைவாகனத்[illegible] மேல் ஸேவை ஸாதித்தனர். இந்த ஸேவை தேசிகனால் கொண்டாடப்பட்டது. வழியில் கலியனுக்குப் பகவதநுக்ரஹம் ப்[illegible]ப்தமானபடியை நம்மவர்க்குள் வழங்கும் கதையின் ப்ரகாரம் ந[illegible]த்திக் காட்டுகின்றனர். திருமங்கைமன்னன் பாசுரங்களைப் படித்[illegible]பின், படித்தவர் சித்தங்களில் அந்த மஹானுடைய நற்குணங்கள் ஒருவாறு ப்ரதிபலிக்கின்றன. அவற்றைச் சிந்தித்துக் கதையையும் பராமர்சித்தால், அக்கதை அவர்க்குப் பொருந்துமாவென்று புத்திமான்கள் யோசிக்கத்தக்கதே. கதைகளுக்குக் காலில்லையென்பர். இராமாநுசன் அவதாரகாலத்தில் ஹிமாசலம் முதல் ஸேது பர்யந்தம், துலுக்கருடைய ஆளுகை முதலே இல்லையென்பது சரித்ரத்தால் ஸ்பஷ்டம். யதீந்த்ரன் நித்யவிபூதியை அலங்கரித்து 50, 60 ஸம்வத்ஸரம் ஆனபிறகன்றோ டில்லிநகராண்ட ப்ருத்வீராஜனும், கந்யகுப்ஜாதிபனான ஜயசந்த்ரனும், மஹம்மத்கோரி யெனும் துலுக்க மன்னனால் கொல்லப்பட்டு, அவர் ராஜ்யங்கள் துலுக்கர் வசமாயின? ஆதலால், பாஷ்யகாரர் காலத்தில் துலுக்கர் நம்தேசம் வந்திலர். ஸம்பத்குமாரனை அவர் கொண்டு போயிலர். பெருமாளை மீட்டுக்கொண்டுவர, பாஷ்யகாரர்



டில்லிக்குச் செல்ல ஸந்தர்ப்பம் நேரிட்டிலது. அவ்விடம்நின்று அவர் திரும்பினதாவது, திரும்புகால் அவர்க்கு யாதொரு பயஹேது உண்டானதாவது யோசனைக்குக் கிட்டவில்லை. வெள்ளைசாற்றுபடிக்கும் வ்யாஜம் உண்டானதில்லை. பஞ்சமர் சேரிக்குப் போகவும் அவஸரமில்லை. துலுக்கநாச்சியாரொருத்தி யாதவாத்ரிக்கு அக்காலம் வரவும் வழி யேற்படவில்லை. பஞ்சமரைக் கோவிலுக்குள்விடக் காரணமும் உதிக்கவில்லை. காரணமின்றி மேலேவிவரித்தபடிக் கதையொன்று ஏற்படவில்லையா? அப்படியே திருமங்கைமன்னன் க்யாதிக்கு விரோதமாகக் கதையொ[illegible] கட்டிவிட்டாரெனத் தகாதா? தன்னுடைய நைச்யாநுஸந்[illegible] விவரணமாகத் திருமங்கைமன்னன் பாசுரங்கள் பாடினாரா[illegible] அவரைத் தீவட்டிக்கொள்ளைக்காரனாக்கி விடவேண்டுமா? [illegible]டைநாள்களில் மதபேதம் த்வேஷகாரண மாயிற்றென்பது [illegible]ந்தம். அத்யாபி அந்த மூடத்தனம் புத்திமந்தர் என்போர் பல[illegible] விட்டதன்று. ப்ராயேண மதப்ரவர்த்தகர் எனப்பட்ட பல[illegible]ம் இந்த ரூபமான குற்றத்தை விலக்கினவர்களல்லர். ஆதலால் [illegible]ங்கையர்கோன், சமணர் சாக்கியர் முதலானோர் பொருள்களைப் [illegible]கவத் கைங்கர்யநிமித்தம் பலாத்காரமாகக் கொண்டாரெனும் [illegible]தையை ஒருவிதமாக ஒப்புக்கொண்டாலும், ஸ்வஜநங்கள் விஷயத்திலும் அப்படி நடந்தாரென்பதை யாம் எங்ஙனம் விச்வஸிக்கக் கூடும்?

காளமேகனெனும் கவி, தேவாதிதேவன் திருக்கச்சியூருடையான் மாவேறி வீதிவரக் கண்டு, ஓர் பெண் மணிக்கு அரையிலுடுத்த வாடையானது பட்டு, காலில் பாய்ந்ததென்று ஒரு வெண்பா பாடினான். இந்த யோசனை பெருமாளுடைய ஸௌந்தர்யாதிசயத்தைக் காட்டுகின்றது. இந்தத் தோற்றத்துடன் பரிமேலழகன் முரங்கன்வீதி யோடிக் கச்சிவீதி யலங்கரித்து, ஒருமாவின் கீழர்க்குத் தர்சநம் தந்து, பிறகு மண்டபமேற வெழுந்தருளி, மீண்டும் அங்குநின்று புறப்பட்டுத் தன் திருக்கோவில் எழுந்தருளினான்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸதாவிமுக்தக்லேசமலை: ஸ்வபாவத:
த்வதாநுகூல்யைகரஸை: ஸ்தவோசிதை: |
க்ருஹீததத்தத்பரிசாரஸாதநை:
நிஷேவ்யமாணம் ஸசிவை யதோசிதம் ||

---

நமது ஸித்தாந்தம். ஆனாலும், விக்ரஹத்திலும் அதிகாரத்திரு இப்படிப்பட்ட வைஷம்ய முண்டு; அது போகத்திலாவது ஜ்ஞா நத்திலாவது எவ்வித தாரதம்யத்திற்கும் காரணமாகாது; அது பகவானுடைய நித்யேச்சா ஸித்தம் என்று நாம் அறியவேண்டு.

43. அநந்த கருட விஷ்வக்ஸேநர் நீங்கலாக எப்பொழுதும் பகவானுக்குக் கைங்கர்யத்தைச் செய்துகொண்டு ததேகருசிக ளாய்க் காலங் கழித்துவரும் வேறு நித்யஸூரிகள் அநேக ருண்டு. அவர்களுடைய தாஸ்யைக ஸம்ருத்தி இவ்விடத்தில் அநுஸந்திக்கப் படுகின்றது. "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்பதன்றோ பரம பக்தர்களுடைய ப்ரார்த்தநை?

ஸ்வபாவதோ ஸதாவிமுக்தக்லேசமலை: த்வதாநுகூல்யைகரஸை: ஸ்தவோசிதை: க்ருஹீததத்தத்பரிசாரஸாதநை: ஸசிவை யதோசிதம் நிஷேவ்யமாணம் [அநாதிகால மாக எவ்வித க்லேச மலங்களும் அற்றவர்களாகவும், ஸ்வபாவத்தி னாலேயே உன்னுடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்வதையே போக்யமாக அநுபவிக்கிறவர்களாகவும், ஸ்வரூப ரூப குணங்களி



னால் உனக்கு அநுரூபர்களாக இருக்கிறவர்களாகவும், சத்ரம் சாமரம் முதலிய கைங்கர்யோசித பரிகரங்களை ஆதராதிசயத் தால் கைவிடாமல் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கிறவர்க ளாகவு முள்ள உன்னுடைய ஸசிவஸமூஹங்களால் யதோசிதம் ஸேவிக்கப்படாநின்றுள்ள உன்னை.]

ஸ்வபாவத: - இயற்கையாகவே; அதாவது- ஒருகாலும் இவர் ருக்கு க்லேச மென்பதே இல்லை யென்று தாத்பர்யம். கர்ம பத் தர்க இருக்கும் ஸம்ஸாரிகள் ஒருகால் க்லேசங்களால் ஆக்ராந் தராகி, பிறகு உபாயத்வாரா அவைகளிலிருந்தும் நிவ்ருத்த ர்கள்; இவரோ, ஒருபொழுதும் க்லேசத்தினால் தொடப் படாதவர் என்பது தாத்பர்யம். இந்த 'ஸ்வபாவத:' என்னும் பத 'ஸதாவிமுக்தக்லேசமலை:' என்பதோடு சேர்ப்பதுபோல, 'த்வதாநுகூல்யைகரஸை:' என்பதோடும் சேர்க்கலாம். பொழுது, ஸத்தா ப்ரயுக்தமாகவே உன்னுடைய கைங்கர்யத் அவர்களுக்கு ருசி யென்று அர்த்தம் கொடுக்கும்.

ஸதாவிமுக்தக்லேசமலை: - நிர்தூதங்களான ஸகலவிதக்லே சங்களையும் மலத்தையும் உடைத்தாயிருக்கிறவர்கள். க்லேசங் கள், ஐந்து வகைப்பட்டவை; அவையாவன - அவித்யா, அஸ்மிதா (அதாவது - அஹங்தை), ராகம், த்வேஷம், அபிநிவேசம். 'மலம்' என்பதற்கு - ப்ரக்ருதி ஸம்பந்தம் என்று அர்த்தம். இப்படிப்பட்ட க்லேசங்களும் ப்ரக்ருதிஸம்பந்தமும் அற்றவர்கள் என்பது தாத் பர்யம். ப்ரக்ருதிஸம்பந்தம் இருக்கும் இடங்களிலெல்லாம் இந்த க்லே சங்கள் இருக்கிறபடியால் இவை இரண்டையும் வெவ்வேறாகப் படிப்பது ஸரியன்று என்று நினைக்கக்கூடும். அந்த சங்கைக்கு இடம் கொடாமல், 'க்லேசங்களாகிற மலத்தை' என்றும் வாக் யார்த்தம் சொல்லலாம்.

த்வதாநுகூல்யைகரஸை: - உனக்கு அடிமை செ ய்வதிலேயே எப்பொழுதும் ருசியை உடைத்தாயிருக்கிற. பகவா

ணுக்கு அடிமை செய்வது தான் பரம போக்யம் என்று தாத்பர்யம்; இது, முக்தர்களுக்கு ஏதோ ஒருநாள் தொடங்கி ஏற்பட்டிருக்கின்றது; நித்யருக்கு அநாதிகாலமாக ஸத்தா ப்ரயுக்தமாகவே இருக்கின்றது.

தவோசிதை: - அநாதியாக ஸர்வஜ்ஞர்களா யிருக்கிறபடியாலும், அப்ராக்ருத விக்ரஹம் முதலியவற்றை யுடைய யிருக்கிறபடியாலும், உனக்கே அநுரூபர்கள் என்பது கருத்து.

ஶுத்³தா⁴ந்தஸ்த²பரிவாரஜநை: - சத்ர சாமர த்வாரபாலர்கள் முதலிய நித்யர்கள் பலருண்டு. அவரவர்கள் தங்கள் கைங்கர்யத்துக்குத் தகுந்த ஸாதநங்களைக் கையில் பிடித்து நிற்கிறார்களாம்.

ஸசிவை: - மந்த்ரிகளால். நித்யஸூரிக ளெல்லாரும் பகவானுக்கு மந்த்ரி ஸ்தாநீயராகிறார்கள் என்பது கருத்து. அதாவது ஒரு மஹாராஜனுக்குப் பல மந்த்ரிகள் பல பல விபூதி ஶேஷ நிர்வஹணத்தில் நியுக்தர்களாக இருப்பது போல, பகவானுக்கும் அந்தந்த ஸேவையிலும் அந்தந்த விபூதிஶேஷ நிர்வஹணத்திலும் நியுக்தர்களாக இருக்கிறார்கள் ஸகல நித்யர்களும். ஆகையால், அவர்கள் 'ஸசிவா:' என்று இவ்விடத்தில் வ்யவஹரிக்கப் பட்டிருக்கிறார்கள். "வாத்ஸல்யத்தாலே அவன் முறையழியப் பரிமாற நினைத்தாலும் அவனை முறையுணர்த்தி அடிமை செய்யுமவர்கள் நீதிவானவரிறே. ஆஶ்ரித ரக்ஷணத்தில் தேவரை ப்ரேரிக்கு மவர்களிறே" என்பது, ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் ஹ்ருதயங்கமமான வ்யாக்யாநம்.

யதோசிதம் நிஷேவ்யமாணம் - அந்தந்த அதிகார நியோகத்திற்கும், ஸேவ்யனுடைய அபிப்ராயத்திற்கும், தமக்கு இயற்கையாயுள்ள தாஸத்வத்திற்கும் தக்கபடி ஸேவிக்கப்படாநின்றுள்ள (உன்னை).



அபூர்வநாநாரஸபா⁴வநிர்ப⁴ர...
ப்ரபு³த்³த⁴யா முக்³த⁴வித³க்³த⁴ ஶீலயா |
க்ஷணாணுவத் க்ஷிப்த பராதி³காலயா
ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபு⁴ஜம் || 44.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

44. இப்படிப்பட்ட பகவான், தனது ஸர்வ வ்யாபாரங்களிலும் பிராட்டியை நாநாரஸங்களால் உகப்பித்துக் கொண்டிருக்கிறான். நமது ஸித்தாந்தத்தில், அவாப்தஸமஸ்த காமனும் பரிபூர்ணனு முள்ள பகவான், தனது ஸங்கல்ப மாத்ரத்தால் விசித்ர சிதசித் மிஶ்ரமான இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதும், ரக்ஷிப்பதும், த்வம்ஸம்செய்வதுமான இந்த வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருப்பது முழுவதும் லீலார்த்தமே என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸப்தத்வீபங்களுக்கு அதிபதியாயும் ஸம்பூர்ணமான ஶௌர்ய வீர்ய பராக்ரமங்களை யுடையவனுமுள்ள ஒரு மஹாராஜன் கேவலம் லீலார்த்தமாகவே கந்துகம் முதலிய க்ரீடைகளில் எப்படி ப்ரவ்ருத்திக்கிறானோ, அப்படியே ஸர்வேஶ்வரனும் கேவலம் லீலையை முன்னிட்டே ஜகத்வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கிறான் என்பது நிர்துஷ்டமே. பகவான் இந்த வ்யாபாரங்களனைத்தையும் பிராட்டியுடன் கூடியேசெய்துகொண்டு அவளை உகப்பித்து அதனால் பெரியதொரு ஆநந்தத்தை அநுபவித்து வருகிறான் என்பது தான், இந்த ஶ்லோகத்திற் செய்யப்படும் அநுஸந்தாநம். தனிமையாக இந்த வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்தால் அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தி ரஸவத்தாகாதன்றோ? இந்த அர்த்தத்தை, பஞ்சஸ்தவத்தில் ஒன்றாகிய ஸ்ரீ ஸ்தவத்தில்

"ஸ்வஸ்தி ஶ்ரீர் தி³ஶதாத³ஶேஷஜக³தாம் ஸர்கோ³பஸர்க³ஸ்தி²தீ: ஸ்வர்க³ம் து³ர்க³திமாபவர்கி³கபத³ம் ஸர்வம் ச குர்வந் ஹரி: | யஸ்யா வீக்ஷ்ய முக²ம் தத³ிங்கி³தபராதீ⁴நோ விதா⁴த்தேऽகி²லம் க்ரீடே³யம் க²லு நாந்யதா²ऽஸ்ய ரஸதா³ ஸ்யாதை³கரஸ்யாத்தயா ||"

என்று ஸ்ரீ கூரத்தாழ்வான் அநுஸந்தித்திருக்கிறார். ஸமஸ்த சிதசிந் மிஸ்ரமாயுள்ள இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது முதலிய வ்யாபாரத்தில் பகவானுக்கு ஏற்படும் வ்யஸநத்தை, ஆநந்தாதிஸயத்தை ஸூசிப்பிக்கும் தனது கடாக்ஷங்களினால் பிராட்டி ரஸவத்தாகச் செய்கிறாள் என்று,

"ஸ்ரீரங்கேஸ ஜயேத விஹ்ருதிஷு வ்யஸநம் ஹரேஃ।
க்ரீடாதிஸயகாரிண்யா ஸ்ரியா தத்ஸோச்சயா ஸதா ॥"

என்னும் ஸ்ரீகுணரத்நகோஸத்தின் ஆதிம ஸ்லோகத்தினால் ஸ்ரீ பட்டரும் அநுக்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ நிகமாந்த மஹாதேஸிகனும், ஸ்ரீ ஸ்துதியில்,

"உபசித குருபோதி ப்ரதித ஸ்ருதி வித்யா விஹித பத ப்ரகாஸ் ப்ரஸாதாத்
ஸ்ரியமநுகலயந்தீம் த்வம் ஹம் ஹரிசரண ஸமாஸ்ரிதாம் நமாமி ।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே கிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதேகரஸ்யாத் தயா ॥"

என்னும் ஸ்லோகத்தில், இந்த ஜகத் வ்யாபாரத்தை ஒரு சொக்கட்டான் விளையாட்டுப் போலவும், ப்ரக்ருதியைச் சொக்கட்டான் பலகை போலவும், ஸத்யலோகம் முதலிய லோகங்களை அதன் கட்டங்கள் போலவும், ப்ரஹ்மா ருத்ரர் முதலிய கர்ம பத்த ஜீவகோடிகளை அதன் காய்கள் போலவும் வர்ணித்துப் பேசி, ஸ்ரீரங்க தம்பதிகளுடைய ஸங்கல்பங்களை இரண்டு ஆடுங்கருவிகள் என்று த்வநியால் விளக்கி, அவர்கள் இருவரும் கூடியே ஜகத்வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்துப் பரஸ்பரம் உகப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்றும்,

"க்ரீடாம் ஸ்ரீர்யதி ஹேதிர் ஹரேஃ"

என்பதனால், பிராட்டியின் த்ருப்திக்காகவே பகவான் ஜகத் வ்யாபாரமாகிற லீலையைச் செய்கிறா னென்றும் அருளிச்செய்திருக்கிறார்.



"ஸ்வச்சந்த நாநாரஸபாவ நிர்ப்பரப்ரபந்தயா க்ஷணக்ஷணவர்த்திஷ்ணு பராதிகாரயா ஸ்வாதுபூர்வியா ஸ்ரீயா ஸமேதம் புருஷம் ஸமாஸ்ரயே" [அபூர்வமான நாநாவித ரஸத்தையும் பாவத்தையும் அடக்கிக்கொண்டதும், பாரதிகாலத்தைக்கூட ஒருக்ஷணத்தின் ஏகதேஸம்போலத் தோன்றும்படி நித்யநிரதிஸமாயும் அந்தந்தத் தஸாநுகுணமாய் முக்தமாயும் விதக்தமாயுமுள்ளதுமான லீலையாலே பிராட்டியை மிகவும் உகப்பியாநின்றுள்ள மஹாபுருஷனாகிற உன்னை.]

ஸ்வச்சந்த நாநாரஸபாவ நிர்ப்பரப்ரபந்தயா - எம்பெருமானுடைய லீலையில் உள்ள ரஸபாவ பரம்பரையில் மேல் மேல்வரும் ரஸபாவங்கள் கீழ் அநுபவிக்கப்பட்டவற்றைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணங்களாக இருக்கின்றன வென்பதைக் குறிக்கின்றது, இந்த 'ஸ்வச்சந்த' என்னும் பதம். "நவநவோந்மேஷாஃ" என்கிறபடி பார்க்கப் பார்க்கப் புதியது போலத் தோன்றுவதன்றோ ரஸவிஸேஷ முடையதாகும்? ஒரு வஸ்துவை அநுபவிக்குங் காலத்தில், அந்த அநுபவத்தால் ஸர்வேந்த்ரிய ஸுகாஸ்வாதமும் ஏற்பட்டு இதர விஷயங்களில் மெய் மறதியும் ஸம்பவித்தால், அந்த அநுபவத்தில் ரஸம் இருக்கின்றது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். 'யேந ரஸ்யதே' என்கிறபடியே அந்த அநுபவத்தைத் தவிர்த்து மற்றை யெல்லாவற்றிலும் மெய்மறதியை உண்டாக்குமதுவே ரஸம். இப்படி ரஸங்கள் வீரரஸமென்றும், ஸ்ருங்காரரஸமென்றும் இத்யாதியாகப் பலவகைப்படும். பாவங்களும் இம்மாதிரியே பலவகைப்படு மென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட ரஸபாவங்கள் பகவானுடைய லீலையில் பஹுமுகங்களாக நெருங்கி இருக்கின்றனவாம். 'நிர்ப்பர' என்பதற்கு - நெருங்கும்படி என்று அர்த்தம், 'ப்ரபந்த' என்பதற்கு - 'ஸம்பந்த' அதாவது - க

டப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். இதனால், அபூர்வ நாநா ரஸ பாவங்களால் நெருங்கும்படி கட்டப்பட்டிருக்கின்றது பகவானுடைய லீலை என்று ஆயிற்று; அதாவது - லோகலீலையிற்போல வல்லாமல், பற்பல ரஸங்களும் பற்பல பாவங்களும் பகவானுடைய லீலையில் காணப்படுகின்றன என்பதாம்.

க்ஷணாணுவத் க்ஷபித பராதிகாலயா - சதுர்முகனுடைய ஆயுஸ்ஸுக்குப் பரகாலம் என்று பெயர். ஆதி ஶப்தத்தால், கணக்கற்ற சதுர்முகருடைய காலம் க்ரஹிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட பெரிய காலங்களெல்லாம், பகவானுடைய லீலாநுபவ காலத்தில் ஒருக்ஷணத்தின் ஸூக்ஷ்மதமமான ஏகதேஶம் போலக் கழிந்துவிடுகின்றனவாம். அதாவது - அப்படிப்பட்ட நித்ய நிரதிஶய ஸ்வபாவத்தை உடையது அந்த லீலை யென்பது தாத்பர்யம்.

முக்த வித்க்த லீலயா - எம்பெருமானுடைய லீலையில் மௌக்த்யம் வைதக்த்யம் இரண்டும் கலந்து நிற்கின்றன வென்பதால், அதன் அத்புத தமத்வம் வெளிப்படுகின்றது. காவ்யங்களில் நாயிகைகள் முக்தை மத்யை ப்ரகல்பை யென்று மூன்றுவகைப்படுவார்களென்றும், புதிதாக யௌவநம் அடைந்து காமம் ஈர்ஷ்யை முதலியவைகளால் கஷாயிதையா யிருப்பவள் முக்தையென்றும், யௌவநம் வந்து ஸ்வல்ப காலம் சென்ற பிறகு ஒருவிதமான தார்ஷ்ட்யத்தை அவலம்பித்து இருப்பவர்கள் மற்றை இருவரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. காமிகளுக்கு இம்மூவருடைய லீலையும் போக்யங்களே. ஆனால், ஒருவனுடைய காந்தை முக்தையாகவும் முக்தையல்லாமலும் இருக்க முடியாது. பகவானுடைய லீலையிலோ, மௌக்த்யம் வைதக்த்யம் ஸகலமும் ஒரே காலத்தில் பொருந்தியிருக்கின்றன வென்பதுதான் ஆஸ்சர்யம். பிராட்டியுடன் பரிமாறுவதைப் பற்றிப் பேசுவதாதலால், எம்பெருமானுடைய லீலைகள், இவ்விடத்தில் லோகரீதியை அநுஸரித்து வர்ணிக்கப்படுகின்றன,



மஹிஷீம் ப்ரஹர்ஷயந்தம் - "அகலகில்லேனிறையும்" என்கிறபடி ஒருபொழுதும் விஶ்லேஷத்தை ஸஹிக்காமல் இருக்கும் பிராட்டியை மிகவும் உகப்பியாநின்றுள்ள. 'ப்ரஹர்ஷயந்தம்' என்னும் வர்த்தமான நிர்தேஶத்தால், எப்பொழுதும் இதே வ்யாபாரமாக இருக்கிறான் பகவான் என்னும் திருவுள்ளம் வெளிப்படுகின்றது.

மஹாபுஜம் - பருத்து நீண்டுள்ள திருக்கைகளை யுடைய (உன்னை).

"பாஹுச்சாயாமவஷ்டப்ய யஸ்ய லோகோ மஹாத்மந:" என்று திருவவதாரதஶையிற் சொல்லியிருக்கிறபடி, 'லோகங்கள் எல்லாவற்றையும் ஸம்ரக்ஷிக்கக் கூடியவளவு பருத்து நீண்டுள்ள திருக்கைகளை யுடையவனை' என்பது இவ்விடத்தில் விவக்ஷிதம். அதாவது - லோகம் முழுவதும் அவனுடைய பாஹுச்சாயையை அவஷ்டம்பித்து நிற்கின்றதாகையால் நாமும் அதை அவஷ்டம்பித்து நிற்போமென்று தமக்குள்ள ஒரு விஶ்வாஸாதிஶயத்தை இந்தப் பதத்தால் ஸூசிப்பிக்கின்றார். "கீழ்ச்சொன்ன லீலாரஸத்தாலே உகப்பிக்குமவன் என்பது மாத்ரமன்று; அணிமானத்தடவரைத் தோளாலே அணைத்து கப்பிக்கும் என்றும் தாத்பர்யம்; ஸ்வரூபகுணங்களிற் காட்டில் ரூபகுணமிறே இனியதாயிருப்பது!" என்பது ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் அந்யாத்ருஶமான அபிப்ராயாவிஷ்காரணம்.

எஸ். வாஸுதேவன்.

# ருக்விதாநம்.

ருக்விதாநம் எனும் க்ரந்தம் ஒரு ஶௌநகரால் இயற்றப்பட்டது. அவரை மஹர்ஷி யென்றும் சொல்வார்கள். மௌர்யனை சந்த்ரகுப்தன் எனும் அதிராஜன் அரசாண்ட காலத்துக்கு முன், பாடலீபுரத்தில் நவநந்தர்கள் எனப்பட்ட மஹாபத்மனும் அவனுடைய எட்டு புத்ரர்களும் ஆண்டாரென்று புராணங்களால் தெரிகின்றது. இந்த மஹாபத்மனுடைய மந்த்ரி யொருவர் ஶௌநகரென்று பெயர் கொண்டவர். ஸம்ஸ்க்ருத பாஷா பரிசய ஶ்ரேஷ்டரான ஐரோப்யர்கள் அந்த ஶௌநகர்க்குப் போதாயநரென்று வேறு பெயரும் உண்டென்றும், அவர்தான் ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு வ்ருத்திக்ரந்தம் இயற்றினரென்றும் சொல்வர்; ருக்விதாந கர்த்ருத்வத்தையும் அவருடையதென்று நினைத்து, அக்ரந்தம் 2,300 வருஷங்கட்கு முன் உண்டாயதென்றும் நினைப்பர்.

ருக்விதாநம் முதல் ஶ்லோகத்தில், கலிதோஷத்தால் வேதங்களுக்கும் மந்த்ரங்களுக்கும் ஶக்தி போய்விட்டதென்றும், அந்தத் தோஷநிவ்ருத்திக்காக த்விஜன் காயத்ரீயை ஆஶ்ரயிக்க வேண்டு மென்றும் சொல்லியிருக்கின்றது. இதனால் ருக்விதாநம் கலியுகத்தில் உண்டாயதென்று சொல்லக்கூடும். காயத்ரீ ஜபம் முதலானவற்றை விதித்தபடி முடித்தபின், ஸர்வ வேதமந்த்ரங்களுடையவும் ஸித்தியை அடையக்கூடுமென்று ருக்விதாநத்தில் சொல்லி யிருக்கின்றது. பின்னும் அக்ரந்தத்தில் ஸப்த வ்யாஹ்ருதி ஸம்புடமாக காயத்ரீயின் ஜபத்தையும், ஜபத்தின்முன் காயத்ரீ ந்யாஸத்தையும், அதன் ஸித்தியின் பொருட்டு அதைக்கொண்டு ஹோமத்தையும், தர்ப்பணத்தையும் சொல்லியிருக்கின்றது. பின்னால் ப்ராஹ்மண போஜநமும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் மந்த்ரந்யாஸம் செய்வதெனும் வழக்கமும், மந்த்ரஸித்திக்காக, மந்த்ரஜபம், மந்த்ரத்தைக் கொண்டு ஹோமதர்ப்பணங்கள், ப்ராஹ்மணஜபோநம், எனப்பட்ட ஸம்ப்ரதாயமும் ருக்விதாந காலத்திற்கு முன்பட்டதென விளங்குகின்றது.



ருக்வேத ஸூக்தங்கள், வர்க்கங்கள், மந்த்ரங்கள், இவற்றுள் ஸித்தியை அடைவதற்காக அவற்றை விதிக்கப்பட்ட ஸங்க்யையின்படி, விஷ்ணுவின் ஆலயங்களிலும், சிவாலயங்களிலும், ஜபிக்கும்படி ருக்விதாநத்தில் சொல்லியிருக்கின்றது. ஐம்பது தரத்துக்கு மேற்பட்டு சிவாலயத்தையும், அதற்கும் மேற்பட்டு விஷ்ணு ஸந்நிதியையும் அவ்விடம் குறிப்பிட்டிருக்கின்றபடியால், ருக்விதாந காலத்திற்குப் பகுகாலம் முன்பட்டே இவ்வாலயங்களின் ஸம்ருத்தி ஆர்யாவர்த்தத்தில் உண்டென்று ஸ்பஷ்டமாகின்றது. மற்றொரு தேவதையினுடைய ஆலயத்தைப்பற்றி அந்த க்ரந்தத்தில் ப்ரஸ்தாபம் இல்லை.

ப்ரஹ்மஸூ[illegible]த்திலும், மஹாபாரதம் மோக்ஷதர்மத்திலும், பாஞ்சராத்ராகம[illegible]ப் பற்றியும், பாசுபதாகமங்களைப் பற்றியும் ப்ரஸ்தாபம் இருக்கின்றபடியாலும், 2,300-வருஷங்களுக்கு முன் நம் தேசத்தில் வஸித்த க்ரீக் தேசத்தாரால், அக்காலம், ருத்ரனையும் ஸ்ரீ க்ருஷ்ணனையும் நம் தேசத்தில் ஜநங்கள் உபாஸித்தனரென்று எழுதப்பட்டிருக்கின்றபடியாலும், ஆகமங்களும், ஆலயங்களும், விஷ்ணு சிவன் எனப்பட்ட தேவதைகளுடைய உபாஸ்தியும், புத்தன் காலத்துக்கு மிகவும் முற்பட்டன வென்பது விளங்கவில்லையா?

ருக்விதாநம் 20 - வது ஶ்லோகத்தில், இதிஹாஸ புராணங்களும், ஷடங்கங்களும் சொல்லப்படுகின்றபடியால், இதிஹாஸபுராணங்கள் ருக்விதாந காலத்திற்கு முன்பே, ப்ரஸித்தமாக, ஆர்யர்க்குள் இருந்தனவென்று விஶ்வஸிக்கப் பொருந்தும். இன்னும் 229 - வது ஶ்லோகமான, “ [illegible] ” எனும் ஶ்லோகத்தின்படி, ருக்வேதம் 4 - வது அஷ்டகம், 7 - வது அத்யாயம், 13 - வது வர்க்கம், 5 - வது மந்

த்ரஜபத்தால், வ்யாஸர் சொன்ன புராணார்த்தம் யதார்த்தமாகத் தெரியுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ருக்விதாந காலத்தில் வ்யாஸ க்ருதங்களான புராணங்களில்லையென்பார் இதைக் கவனிப்பாராக. அடுத்த 230 - வது ச்லோகம் மேலே குறித்த மந்த்ரத்துக்கு அடுத்து நிற்கும் மந்த்ரஜபத்தால் மஹாகாவ்யங்களில் விச்வாஸமும், அவிச்வாஸ நிவ்ருத்தியும் பலிக்கு மென்று சொல்கின்றது. மஹாகாவ்ய சப்தம் வால்மீகி க்ருதமான ஆதி காவ்யமெனும் ஸ்ரீமத் ராமாயணத்தை முக்யமாகக் குறிக்குமென் மென்பதை ஸர்வ ஆஸ்திகனும் அங்கீகரிப்பான்.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில், ஆறாவது அத்யாயம், மைத்ரேயி ப்ராஹ்மணமெனும் ஐந்தாவது ப்ராஹ்மணத்தில் இதிஹாஸ புராணங்களைப்பற்றிச்சொல்லப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யோபநிஷத், ஏழாவது ப்ரபாடகத்திலும், 'இதிஹாஸபுராணம் பஞ்சமம் வேதம்' என்று வசந மிருப்பதால், 'வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந்' எனும் வசநப்படி, ருக்வேதாதிகளைப் போல், பஞ்சமவேதமென ப்ரஸித்திபெற்ற மஹாபாரதமும் இதர இதிஹாஸங்களும், புராணங்களும், உபநிஷத் காலங்களிலே இருந்ததாய்த் தெரிகின்றது. பௌத்த சரித்ர விமர்சியான ரிஸ்டேவிஸ் எனும் ஐரோப்பியர் மேற்குறித்த உபநிஷத்துக்கள் 2,600 வருஷங்கட்கு முற்பட்டன வென்று ஒப்புக்கொள்கின்றார்.

'வ்யாஸவ்யாஸாத்ஸமக்ஷ்ருதி நாராயணஸ்யாஜ்ஞயா' என்று ஆரம்பிக்கப்பட்ட மஹாபாரதம் அவ்வண்ணம் முதலில் இல்லையென்றும், ஸ்ரீராமசரிதம் முதலில் ஸ்ரீராமனை அவதாரபுருஷனைக நினைத்து எழுதப்படவில்லை யென்றும், உபநிஷத்திலேயே வேதங்களைப்போல் புருஷார்த்த ப்ரதமென விச்வஸிக்கப்பட்டுப் பஞ்சமவேதமென எண்ணப்பட்டவையும், வால்மீகி க்ருதமும் வ்யாஸோக்தங்களுமான இதிஹாஸபுராணங்களைத் தேசிங்குராஜன் கதையாக நினைத்து, யுக்த்யாபாஸங்களால் கக்ஷி சொல்கின்ற ஸம்ஶயாத்மாக்கள் ருக்விதாநம் முதலான க்ரந்தங்களைச் செம்மையாய்ப் பார்க்கமாட்டாரோ?



ருக்விதாநத்தில் பல ச்லோகங்களில், கடோபநிஷத்தில் வெளியிட்டிருக்கின்றபடி, 'தத் விஷ்ணோ: பரமம் பதம்' 'தான் ஸர்வ முமுக்ஷுக்களால் ப்ராப்யம்' என்று காட்டப்பட்டிருக்கின்றது. 30 - வது ச்லோகத்தில் 'ஸஹஸ்ரசீர்ஷா ஸ்வம் தத்தேநா' எனும் வர்க்கத்தை ஜபம் செய்கிறவன், 'ப்ரஹ்மாத்யை: பூஜித: ஸம்யக் விஷ்ணோ: ஸாயுஜ்யமாப்நுயாத்' என்று, ப்ரஹ்மாதி தேவர்களால் வணங்கப்பட்டவனாய் நாராயண ஸாயுஜ்யத்தை அடைகின்றானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. 38 - வது ச்லோகத்தில், 'விஷ்ணோர்நுகம்' எனும் ஸூக்த ஜபத்தினால், முதலில் விஷ்ணுபக்தியும், அதன்பிறகு ஜ்ஞாநோதயமும், முடிவில் விஷ்ணு ஸாயுஜ்யமும் பலமெனக் கண்டிருக்கின்றது. 'ப்ராஜாபத்யம் பக்தஸ்ய ஸர்வாஸாம் ஜ்ஞாநோதயம்' எனும் ச்லோகார்த்தம் இதனால் த்ருடப்படுகின்றது. 155 - வது ச்லோகத்தில், 'ஜயம்தேவா' என்றாரம்பிக்கும் அத்யாயத்தை த்ரயோதசியில் ஜபிக்கின்றவன் யமராஜ தர்சநமின்றி விஷ்ணுலோகம் செல்வன் என்றிருக்கின்றது.

236 - வது ச்லோகம் முதல் 240 - வது ச்லோகம்வரையில், 'தத்விப்ராஸோ' மந்த்ரஜபத்தால், மரணகாலத்தில் மஹாவிஷ்ணு ஸ்மரணம் உண்டாமென்றும், 'ஸஹஸ்ரசீர்ஷா' மந்த்ரஜபத்தால் ஸ்ரீவைகுண்டத்தில் விஷ்வக்ஸேநாதிகளுடன் வாஸத்தை அடைகின்றானென்றும், 'இதம் விஷ்ணு:' மந்த்ரஜபத்தால் ஸ்ரீவைகுண்டத்தில் ஜயாதிகளுடன் கூடினவனாய்க்கொண்டு பகவானுடைய ஸாரூப்யத்தை அடைகின்றானென்றும், 'த்ரீணி பதா' மந்த்ரஜபத்தால் வைநதேயாதிகளுடன் கூடிக்கொண்டு பகவானுடைய ஸாந்நித்யத்தை யடைகின்றானென்றும், 'விஷ்ணோ: கர்மாணி' மந்த்ரஜபத்தால் விஷ்வக்ஸேநாதிகளுடன் விஷ்ணுஸாயுஜ்யமடைகின்றானென்றும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 252 - வது ச்லோகத்தில், 'தேவஸ்ய' மந்த்ரஜபத்தால் மரண

காலத்தில் விஷ்ணு தேஜஸ்ஸை அடைகின்றனென்று சொல்லியிருக்கின்றது. 349 - வது ஶ்லோகத்தில் 'ஷோடஶயாந' மந்த்ர ஜபத்தால் மஹாவிஷ்ணுவினிடம் ஸதா ஏகபுத்தி யுண்டாமென்றிருக்கின்றது. 432 - வது ஶ்லோகம், 'வேதாக்ஷராணி யாவந்தி படிதானி த்விஜாதிபி: | தாவந்தி ஹரிநாமானி கீர்த்திதானி ந ஸம்ஶய: ||' "எவ்வளவு பர்யந்தம் வேதாக்ஷரங்களை த்விஜர்கள் படிக்கின்றனரோ, நிஸ்ஸம்ஶயமாக அவ்வளவு பர்யந்தம், அவர்கள் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்தவராகின்றார்" என்று வெளியிடுகின்றது. இங்கே,

"ஆதியந்த மரீயென யாவையும்
ஓதினரல கில்லன வுள்ளன
வேதமென்பன மெய்ந்நெறி தன்மையன்
பாதமல்லது பற்றலர் பற்றிலார்."

எனும் கம்பன் செய்யுளைச் சிந்திக்கலாம்.

இன்னும் 357 - வது ஶ்லோகத்தில் ஒவ்வொரு தினமும் ஸுபர்ண மந்த்ரத்தை ஏகவாரம் ஜபிப்பதால் பரமாத்மாவில் புத்தி லயிக்குமென்று சொல்லப்பட்டதால், விஷ்ணுவுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் ஸித்திக்கின்றது. 359 - ஶ்லோகம் 'ப்ரஹ்மஹ்ருதயம்' எனும், மந்த்ரஜபத்தால், ப்ரஹ்மஜ்ஞாந முண்டாகுமென்றும், 366 - வது ஶ்லோகம் 'த்ர்யம்பகம்' எனும் மந்த்ர ஜபத்தால், ம்ருத்யு பயம் நீங்கிப் பரமாத்மாவில் ஸம்ஸ்தாநம் உண்டாகுமென்றும் சொல்லுகின்றன.

இப்படி ஸர்வேஶ்வரன் விஷ்ணுவென்றும் அவன் ஸ்ரீவைகுண்டத்தில் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாலும், முக்தராலும், ஸதா அநுபவிக்கப்படுகின்றனென்றும் சொல்லி, அவனை அடைவதற்கு உபாயமாகின்ற மந்த்ரஜபங்களை விவரித்தும், ருக்விதாநம் ப்ரகாசிக்கின்றது. ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தம் ப்ரஶஸ்தமாக இப்போதுபோல் ஆர்யநாட்டில் 2,300 வருஷங்களுக்கு முன்னமே பரவியுள்ளது. இது 2,000 வருஷங்களுக்கு முன்பட்ட பாஸ



கவியின் நாடகங்களாலும் ஸுப்ரஸித்தம்; 2,300 வருஷங்கட்கு முன்பட்ட ப்ரஹ்மஸூத்ரத்தாலும் ஸ்பஷ்டம். இந்தப் பாகவத ஸம்ப்ரதாயம் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் வெளியிட்டபடி, த்வாரகா நாதனைப் பரமாசார்யனாகவும், பரம்பராப்யனாகவும் அடைந்து, மஹாபாரத யுத்தகாலம் முதற்கொண்டு வ்ருத்தியடைந்தது. அதற்கு முன்னும் ஸ்ரீமந்நாராயணனை, ஆலய ப்ரதிஷ்டை ஸஹிதமாய் ஸ்ரீமத்ராமாயணத்தில் கண்டபடி, அயோத்தி மன்னர்கள் உபாஸித்தனர்.

ருக்விதாநத்தைப் பக்ஷபாதமும், வக்ரபுத்தியு மின்றிப் படிப்பவர்க்கு, ஸ்ரீமத்ராமாயணம், மஹாபாரதம், வ்யாஸோக்த புராணங்கள், சைவ வைஷ்ணவ ஆலயங்கள், இவை, கிட்டத்தட்டத் தத்காலமிருக்கின்றபடியே ஐரோப்பியரால் ஶௌநகர் காலமெனப்பட்ட 2,300 வருஷங்கட்கு முன்னமே இருந்தனவென்பது புலப்படும். ஶௌநகர் அக்காலத்துக்கும் முன்பட்டவரென்று நாம் நம்புகின்றோம். மேற்சொன்ன யாவும், நம் பெரியோர் விஶ்வஸித்த ப்ரகாரமே பகுகாலமாக இருக்கவேண்டு மென்பதில் ஸந்தேஹமில்லை.

ருக்விதாநத்தில் ஸர்வ அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் வேதமந்த்ரங்களின் ஜபத்தால் ஸித்திசொல்லியிருக்கின்றது. அதைப்பற்றி விசாரம் இவ்விடத்தில் நாம் செய்கின்றோமில்லை. 409,410,411 - வது ஶ்லோகங்களால் வேதாக்ஷரங்களைப் பணத்துக்கும் போஜநத்துக்கும் ஆசைப்பட்டு விநியோகம் செய்கின்றவரை ப்ரூணஹத்தி செய்பவராகவும், சண்டாளராகவும், சொல்லியிருக்கின்றது. அவர்கள் க்ரஹங்களில் போஜநம் செய்கின்றவனுக்கும் ப்ராயஶ்சித்தம் விதித்திருக்கின்றது. 186 - வது ஶ்லோகத்தில் வேதநிந்தை செய்பவனுக்கு ப்ராயஶ்சித்தம் விதித்திருக்கின்றது. இக்காலத்தில் பாபமென ஶங்கிக்காத பகு அக்ருத்யங்கள் ருக்விதாநகாலத்தில் பாபமாக எண்ணப்பட்டனவென்று தெரிகின்றது.

பத்ராதிபர்.

காலத்தில் விஷ்ணு தேஜஸ்ஸை அடைகின்றனென்று சொல்லியிருக்கின்றது. 349 - வது ஶ்லோகத்தில் 'ஓம் நமோ நாராயணாய' மந்த்ர ஜபத்தால் மஹாவிஷ்ணுவினிடம் ஸதா ஏகபுத்தி யுண்டாமென்றிருக்கின்றது. 432 - வது ஶ்லோகம், 'வேதாக்ஷராணி யாவந்தி படிதானி த்விஜாதிபி: । தாவந்தி ஹரிநாமானி கீர்த்திதானி நஸம்ஶய: ॥' "எவ்வளவு பர்யந்தம் வேதாக்ஷரங்களை த்விஜர்கள் படிக்கின்றனரோ, நிஸ்ஸம்ஶயமாக அவ்வளவு பர்யந்தம், அவர்கள் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்தவராகின்றனர்" என்று வெளியிடுகின்றது. இங்கே,

"ஆதியந்த மரியென யாவையும்
ஓதினால இல்லன வுள்ளன
வேதமென்பன மெய்ந்நெறி தன்மையன்
பாதமல்லது பற்றலர் பற்றிலார்."

எனும் கம்பன் செய்யுளைச் சிந்திக்கலாம்.

இன்னும் 357 - வது ஶ்லோகத்தில் ஒவ்வொரு திநமும் ஸுபர்ண மந்த்ரத்தை ஏகவாரம் ஜபிப்பதால் பரமாத்மாவில் புத்தி லயிக்குமென்று சொல்லப்பட்டதால், விஷ்ணுவுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் ஸித்திக்கின்றது. 359 - ஶ்லோகம் 'வைஷ்ணவ மௌஹூர்த்த' எனும், மந்த்ரஜபத்தால், ப்ரஹ்மஜ்ஞாந முண்டாகுமென்றும், 366 - வது ஶ்லோகம் 'ஸஹஸ்ராம' எனும் மந்த்ர ஜபத்தால், ம்ருத்யு பயம் நீங்கிப் பரமாத்மாவில் ஸம்ஸ்தாநம் உண்டாகுமென்றும் சொல்லுகின்றன.

இப்படி ஸர்வேஶ்வரன் விஷ்ணுவென்றும் அவன் ஸ்ரீவைகுண்டத்தில் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாலும், முக்தராலும், ஸதா அநுபவிக்கப்படுகின்றனென்றும் சொல்லி, அவனை அடைவதற்கு உபாயமாகின்ற மந்த்ரஜபங்களை விவரித்தும், ருக்விதாநம் ப்ரகாசிக்கின்றது. ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தம் ப்ரஶஸ்தமாக இப்போதுபோல் ஆர்யநாட்டில் 2,300 வருஷங்களுக்கு முன்னமே பரவியுள்ளது. இது 2,000 வருஷங்களுக்கு முன்பட்ட பாஸ



கவியின் நாடகங்களாலும் ஸுப்ரஸித்தம்; 2,300 வருஷங்கட்கு முன்பட்ட ப்ரஹ்மஸூத்ரத்தாலும் ஸ்பஷ்டம். இந்தப் பாகவத ஸம்ப்ரதாயம் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் வெளியிட்டபடி, த்வாரகா நாதனைப் பரமாசார்யனாகவும், பரம்பராப்யனாகவும் அடைந்து, மஹாபாரத யுத்தகாலம் முதற்கொண்டு வ்ருத்தியடைந்தது. அதற்கு முன்னும் ஸ்ரீமந்நாராயணனை, ஆலய ப்ரதிஷ்டை ஸஹிதமாய் ஸ்ரீமத்ராமாயணத்தில் கண்டபடி, அயோத்தி மன்னர்கள் உபாஸித்தனர்.

ருக்விதாநத்தைப் பக்ஷபாதமும், வக்ரபுத்தியு மின்றிப் படிப்பவர்க்கு, ஸ்ரீமத்ராமாயணம், மஹாபாரதம், வ்யாஸோக்த புராணங்கள், சைவ வைஷ்ணவ ஆலயங்கள், இவை, கிட்டத்தட்டத் தத்காலமிருக்கின்றபடியே ஐரோப்பியரால் ஶௌநகர் காலமெனப்பட்ட 2,300 வருஷங்கட்கு முன்னமே இருந்தனவென்பது புலப்படும். ஶௌநகர் அக்காலத்துக்கும் முன்பட்டவரென்று நாம் நம்புகின்றோம். மேற்சொன்ன யாவும், நம் பெரியோர் விஶ்வஸித்த ப்ரகாரமே பகுகாலமாக இருக்கவேண்டு மென்பதில் ஸந்தேஹமில்லை.

ருக்விதாநத்தில் ஸர்வ அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் வேதமந்த்ரங்களின் ஜபத்தால் ஸித்திசொல்லியிருக்கின்றது. அதைப்பற்றி விசாரம் இவ்விடத்தில் நாம் செய்கின்றோமில்லை. 409,410,411 - வது ஶ்லோகங்களால் வேதாக்ஷரங்களைப் பணத்துக்கும் போஜநத்துக்கும் ஆசைப்பட்டு விநியோகம் செய்கின்றவரை ப்ரூணஹத்தி செய்பவராகவும், சண்டாளராகவும், சொல்லியிருக்கின்றது. அவர்கள் க்ரஹங்களில் போஜநம் செய்கின்றவனுக்கும் ப்ராயஶ்சித்தம் விதித்திருக்கின்றது. 186 - வது ஶ்லோகத்தில் வேதநிந்தை செய்பவனுக்கு ப்ராயஶ்சித்தம் விதித்திருக்கின்றது. இக்காலத்தில் பாபமென ஶங்கிக்காத பகு அக்ருத்யங்கள் ருக்விதாநகாலத்தில் பாபமாக எண்ணப்பட்டனவென்று தெரிகின்றது.

**பத்ராதிபர்.**

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம்.

[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீவைஷ்ணவர்களான பாகவதோத்தமர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம். ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை ஸம்பந்தமாக ஸ்ரீ வைஷ்ணவர்களின் வார்ஷிக மஹாஸங்கமொன்று நாலைந்து வர்ஷங்களாக பற்பலவிடங்களில் நடைபெற்றுவருகின்றது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 1910-வது வர்ஷம் மார்கழி மாஸத்தில் தஞ்சாவூரிலும், 1911-ல் நீடாமங்கலத்திலும், 1912-ல் மதுராந்தகத்திலும் இந்த ஸங்கம் சேர்ந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகப்பாகவே நடைபெற்றுவந்தது. 1913-வது வர்ஷத்திய மஹா ஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்த வேண்டும் என்னும் ஆஸ்தை சிலருக்கு இருப்பதாகத் தெரியவந்ததன்பேரில், இந்த ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் அதைப்பற்றி ஆலோசித்து, மார்கழி மாஸத்தின் ஶைத்யம் ஸ்ரீ அஹோபிலத்தில் அஸஹ்யமாக இருக்குமென்று எண்ணி, அந்த மார்கழிக்கு அடுத்த பங்குனி மாஸத்தில் அவ்வர்ஷத்திய ஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்திலேயே நடத்தினார்கள். ஆரம்பத்தின் குருத்வத்தையும் தமக்கு இருந்த ஸாமக்ரிகளின் ந்யூநதையையும் ஆலோசித்துப் பார்த்து, 'இந்த ஸங்கம் எவ்விதம் நடைபெறும்?' என்று ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் மனம் தளர்ந்து நிற்க, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், தனது கடாக்ஷத்தால் அந்த ஸங்கத்தை எவ்வித குறைவுமில்லாதபடி பரிபூர்ணமான நிஷ்பத்தியுடன் நிறைவேற்றிக்கொண்டான். ஸாது கைங்கர்யங்களெல்லாவற்றிலும், 'நம்மை நிமித்த மாத்ரமாக வைத்துக்கொண்டு பகவானே ப்ரவ்ருத்தித்து கைங்கர்யங்களைப் பூர்த்திசெய்துகொள்ளுகிறான்' என்னும் உறுதியுடன் நாம் ப்ரவ்ருத்தித்தால், அவைகளின் நிஷ்பத்தியைப் பற்றி நாம் ப்ரமிப்பதற்காவது ஶோகிப்பதற்காவது எவ்வித காரணமும் இராதன்றோ? இந்த ஸ்ரீ அஹோபிலத்துச் சங்கம் 1914-வது வர்ஷத்தில் நடைபெற்றபடியால், அதே வர்ஷத்தில் மற்றொரு ஸங்கம் அநாவஶ்யமாயிற்று. நாளது 1915-வது வர்ஷத்திய ஸங்கத்தை வருகிற மார்கழி மாஸத்தில்



திருவெவ்வுளூர் திவ்யதேஶத்தில், ஸ்ரீ வீரராகவன் கடாக்ஷத்தை முன்னிட்டு நடத்தலாமென்று இதன் ப்ரவர்த்தகர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ப்ராயேண இதன் க்ரமம் முழுவதும் யதாபூர்வம் வித்வத் ஸதஸ்ஸும் உபந்யாஸங்களும் அடங்கியதாகவே இருக்கும். அதன் விஸ்தாரத்தை, ஸகலமும் நிஷ்க்ருஷ்டமானவுடன், உத்தேஶம் இன்னும் 10 அல்லது 15 தினங்களுக்குள்ளாக ப்ரசுரம் செய்வோம். இந்த ப்ரயத்நத்தின் ஸாதுத்வத்தை உணர்ந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்களெல்லாரும் அந்த ஸங்ககாலத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, தங்கள் தங்களால் இயன்ற வரையில் அதற்கு உதவியைச்செய்து, அதை நிர்விக்நமாக நடத்திவைக்க வேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஶிஷ்ய ஸபையின் முக்கிய உத்தேஶம் என்னவென்றால்-ஆத்யந்திகமான நிஶ்ரேயஸத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடியதான நமது ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்தியைத் தேட முயல்வதே. நம்மவரில் அநேகர், ஶக்த்யபாவத்தினாலோ அப்ரத்யக்ஷ வித்யையிலுள்ள ஔதாஸீந்யத்தினாலோ, தத்வாந்வேஷணத்தில் மனத்தைச் செலுத்தாமலே, ஐஹிகஶ்ரேயஸ் ஸாதகங்களான ஸாமக்ரிகளைத் தேடுவதில் வ்யாப்ருதர்களாகக் காலத்தைக் கழிக்கிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம். இவர்களுக்கு விபரீத ருசி இல்லாமையாலே, நமது ஶாஸ்த்ரங்களின் ஸாரதமங்களான அம்ஶங்களை ஸுலபங்களாகவும் இவர்களுடைய ஜ்ஞாந கோசரங்களாகவும் செய்தால், அவைகளின் ஸ்வாது ஸ்வபாவத்தை உணர்ந்து ஒருகால் இவர்கள் தத்வாந்வேஷண மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கலாமென்றும், இப்படி ஒருகால் இவர்கள் திரும்பிவந்தால் இவர்களுடைய பலத்தைக்கொண்டு விபரீத ருசியுள்ளவர்களையும் மீட்சி பெறும்படிச் செய்ய ஸம்பாவனை ஜநிக்கலாமென்றும் எண்ணி, இந்த ஸபா ப்ரவர்த்தகர்கள், சென்ற ஐந்து வர்ஷகாலமாக ப்ரதிவர்ஷமும் வித்வத் ஸதஸ் சேர்ப்பதும், உபந்யாஸாதிகளை நடத்திவைப்பதும், ப்ரதிமாஸமும் இதிஹாஸ புராணாதிகளிலுள்ள தர்மங்களையும் மற்ற ஶாஸ்த்ர விசாரங்களையும் பத்ரிகா ரூபமாக ப்ரசுரம் செய்து அந்தப் பத்ரிகையை ஸ்வல்ப க்ரயத்திற்கு ஸாமாந்ய ஜநங்களுக்குக் கூட எட்டும்படி ப்ரசாரம் செய்வதும், இத்யாதியான உபாயங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கிறார்கள். இந்த ப்ரவ்ருத்தி முழுவதும் வீணாகிவிட்டது என்று சொல்லமுடியாது. மனோரதம்

யாவத்தும் நிறைவேறுவிட்டாலும், இந்த ப்ரவ்ருத்தி சிலருக்காவது உபகாரகமாக இருக்கிறது என்றும் பகவந்முகோல்லாஸகரமாக இருக்கிறதென்றும் த்ருடமாகச் சொல்லலாம். ஆனாலும், 'ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி' என்கிறபடி ஸ்வல்ப காலமாக இதற்குச்சில விக்நங்கள் ஸம்பவித்திருக்கின்றன. பலவிடங்களில் இதன் ப்ரவர்த்தகர்களின் அபிஸந்தியினுடைய அந்யதாக்ரஹணம் ஏற்பட்டிருக்கின்றது; இந்த ப்ரவ்ருத்திக்கு ஆதாரபூதர்களாக இருந்தவர்களிற் சிலர் ஶரீர தர்மத்திற்கு உட்பட்டு இவ்வுலகிலிருந்து விலகிவிட்டார்கள்; புதிதான ஓர் ஆரம்பத்தில் ஸ்வபாவமாக ஸம்பவிக்கும் உத்ஸாஹமும் காலக்ரமேண ஶைதில்யத்தை அடைகின்றது; இந்த ஸதஸ்ஸுக்கு வேண்டுவதான அர்த்த ஸம்பத்தும் அநேக காரணங்களினால் போராததாக இருக்கின்றது. அநேக ஆஸ்திகாக்ரேஸரர்கள் தீப்யமாநர்களாக எழுந்தருளியிருக்குங் காலத்தில் பகவத் கைங்கர்ய ரூபமான இந்த ப்ரவ்ருத்திக்கு ஒருவிதகுறைவும் ஸம்பவிப்பது ந்யாய்ய மன்றாகையால், அந்த ஆஸ்திகர்க்ரேஸரர்களிடம் இந்த ஸ்திதியை விஜ்ஞாபநம் செய்து கொண்டால் இதற்கு ஒரு ப்ரதீகாரம் ஸம்பவிக்குமென்று எண்ணி இவ்வர்ஷத்திய மஹாஸங்கம் ஒரு விஶேஷாபிஸந்தியுடன் சேர்க்கப்படுகின்றது. ஆகையால் ஸமஸ்த ஆஸ்திகர்களும் அக்காலத்தில் எழுந்தருளி, ஜகத்திற்கெல்லாம் ஶ்ரேயஸ் ஸாதகமான இந்த ப்ரயத்நத்தை அநுக்ரஹித்து, மேன்மேல் அபிவ்ருத்த மாகும்படி கடாக்ஷிப்பார்களென்று த்ருடமாக நம்புகிறோம். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அப்படியே கடாக்ஷித்து ப்ரயத்நத்தைப் பூர்த்தி செய்து வைப்பன் என்பதற்கு ப்ரவர்த்தகர்களின் அந்தஃகரண ப்ரவ்ருத்தியே ப்ரமாணம்.

இந்த வர்ஷம் இந்த ஸபையைப் பொதுவைஷ்ணவ ஸபையாகச்செய்து, அதற்கு வேண்டியபடி ஸபையின் விதிகளை மாற்ற வேண்டுமென்றும், அப்படிச் செய்வதால், எல்லா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயிகளின் சேர்க்கையும் ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு உபகாரகமாக ஆகுமென்றும் ஸபையின் ப்ரவர்த்தகர்களில் பலருக்கு எண்ண மிருக்கிறது. ஆகையால் ஸ்ரீ மடத்துச் சிஷ்யர்களும் சிஷ்யர்களல்லாத மற்ற ஆஸ்திகர்களும் மேல் விவரித்தபடி திருவள்ளூரில் நாளது டிசம்பர்மீ கடைசியில் சேரப்போகிற ஸதஸ்ஸுக்கு பஹுவாய் எழுந்தருளி ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு ஹேதுவான கார்யங்களை ஸ்திரமாக ஏற்பாடு செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஸதஸ்ஸின் உபந்யாஸ விவரங்கள் பிந்தி விஜ்ஞாபநம் செய்யப்படும்.

மேற்படி ஸபையின் நிர்வாஹ அங்கத்தினர்.

OFFICE OF THE REGISTRAR ... FEB ... MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸவருஷம் கார்த்திகைமீ மார்கழிமீ [ஸஞ்சிகை 10 & 11.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸபையின் ஐந்தாவது வருஷ ஸங்கம்.** நம்முடைய ஸபையின் மஹாஸங்கமெனப்பட்ட ஸம்வத்ஸரோத்ஸவம் நாளது மார்கழிமீ 13-14-15-ம் தேதிகளில் திருவெவ்வுளூரில் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியில் நடந்தது. பகு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த ஸங்கத்தை அலங்கரித்தார்கள். ராவ் பஹதூர். ஸ்ரீமான். எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் ஸங்கத்தின் அத்யக்ஷதையை நிர்வஹித்தனர். ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குப் பரமோபகாரமாயிருக்கும் விலக்ஷணமான பல உபந்யாஸங்கள் அந்த ஸங்க திநங்களில் செய்யப்பட்டன. ஸங்கநிமித்தமாக எழுந்தருளின ஸ்வாமிகளுக்காகத் திருவெவ்வுளூர் ஸ்வாமிகள் அத்யத்புதமாகத் ததீயாராதநம் நடப்பித்தனர். ஸங்கத்தின் முடிவில் ஸ்ரீ வீரராகவன் திவ்யோத்ஸவம் கண்டருளினன்.

யொரு ஸங்கம் கூடி, அதன் முடிவில் ஜாதி வரம்பில்லாமல் 300 ஹிந்துக்கள் ஸஹபோஜநம் செய்தனராம். அவர்கள் பெயர் வெளிப்படவே, அவர்களை, ஜாதியார்கள் பஹிஷ்காரம் செய்தனராம். 100 பெயர் ஜாதிகளுடன் சேர ப்ராயச்சித்தம் செய்துகொண்டனராம். இது ஜாதிநிஷ்டர்கள்செய்த க்ரூரக்ருத்யமாம். சில காலத்துக்குமுன் எல்பின்ஸ்டன் காலேஜில் படித்த ஹிந்துக்கள்பலர், ஜாதியை அழிக்க ரஹஸ்யமாகக் கூடினராம். தங்களுக்குப் பரமஹம்ஸரெனப் பெயர் வைத்துக்கொண்டனராம். கிறிஸ்தவர் ஸ்பர்ஶித்த ரொட்டியையும், துலுக்கர் தொட்ட ஜலத்தையும் புஜிப்பதாய் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டனராம். இரண்டொரு வருஷம் இந்த ஸபை இவ்வண்ணம் நடந்ததாம். பிறகு அவர்க்குள் ஒரு அயோக்யன் அவர் பெயரை வெளிப்படுத்திவிட்டானாம். ஹிந்துக்களுக்குள் கலகம் உண்டாயிற்றாம். ஸபை செத்ததாம். பிறகு அவர்க்குள் ஒருவரான பந்தார்கர் என்பவர், மதத்தை மாற்றாமல் ஜாதி அழியாதென்று நினைத்து ப்ரார்த்தனை ஸமாஜம் உண்டாக்கினராம். அவர்க்குள் மற்றவர் ஒரு பார்ஸியின் உதவியால் அவன்வீட்டுப் பின்புறத்தில் ஜாதியை அழிக்கத்தக்க உணவுகளை ரஹஸ்யமாய்ப் புஜித்தனராம். இப்படிப்பட்ட ஜாதியழித்தலை டாக்டர் வில்ஸன் துரை வெறுத்தனராம். யோக்யரான யார்தான் வெறுக்கமாட்டார்கள்? இவர்கள் ஜாதியிலிருக்கின்றதாக இவர் பந்துக்கள் எண்ணவும், அந்தப் பந்துக்களுடன் தங்கள் அதிக்ரமங்களை அவர்களுக்கு அறிவிக்காமல் இவர்கள் கலக்கவும், இது ஸரியென்று எந்த யோக்யன் சொல்லுவன்? டாக்டர் வில்ஸன் வெறுப்பைக்காட்டிய கடிதம் வெளிப்படவே, ஜட்ஜ் டிலாங்கு, இப்படி ஹிந்துக்களுக்கு ஜாதியை அழிக்க யார் சொல்லிக்கொடுத்தாரென்று கேட்டனராம். இப்படிக் கேட்டது ந்யாய விரோதமென்று சந்தாவர்க்கர் சொல்லுகின்றார். அவருடைய ந்யாய விசாரம் அவர்க்கே பொருந்தும். பிறகு ஒரு விதவாவிவாஹம் நடந்ததாம். அதற்குச் சிலர் மூஞ்சிகளை மூடிக்கொண்டு சாப்பிடப்போனாராம். அவரை அயலார் தெரிந்துகொள்ளாதபடிப் போலீஸ் உத்யோகஸ்தர் சேவகர்களை அனுப்பிக் காத்தனராம். ஆனால் எப்படியோ சாப்பிட்டவர் பெயர் வெளிவந்ததாம். அவரைப் பஹிஷ்காரம் செய்தனராம். அவரில் சிலர் ப்ராயச்சித்தம் செய்துகொண்டனராம். மற்றோர் கடிதத்தில் சந்தாவர்க்கர் ஜாதி



மர்யாதைகளை அழித்த மஹான்கள் நடத்தையைப்பற்றியும், நீண்டகாலம், கெடாதிருந்த நம்மிராஜதானியில் பார்ப்பாரெனப் பிறந்த பலர், ஜாதியற்றவருடன் புஜித்ததைப்பற்றியும் பேசுகின்றார்.

இப்படிப்பட்ட ருஜுமார்க்கத்தில் பிறந்து ஆர்ஜவத்தில் வளர்ந்த வர்ண சத்ரு ஸபையானது ஸங்கமாய்க் கூடினதாம். மூக்கரையன் கதை இப்படித்தான் ஏற்பட்டது. இங்க்லீஷ் வித்யாசாலையில் ஸம்ஸர்க்கதோஷம் அநிவார்யம். அதனால் கெட்டவர் அபோஜ்ய போஜநங்களையும் விசேஷ பாநங்களையும் அபேக்ஷிக்க அமையும். முதலில் தம்மினத்தார்க்குத் தெரியாமல் அவர்கள் இஷ்டப்ராப்தியை அடைந்தனர். தெரிந்தபின் சிலர் ப்ராயச்சித்தம் செய்துகொண்டனர். சிலர் செய்யாமல் முஷ்கரமாக நின்றனர். நின்றவர் தங்கள் வகுப்பை ஸர்வ முயற்சியாலும் பெரிதாக்கினர். அவர்க்குள் சிலர் தங்கள் இச்சைப்படி நடக்க ஸௌகர்யத்தைவேண்டிக் கிறிஸ்தவரானார். சிலர் ப்ரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்தார். சிலர் மதமென்பதைச் சிந்திக்காமல் நாஸ்திகராய் நின்றார். முன்காலத்தைவிட ஆசாரவிப்லவமாக அக்ருத்ய கரணங்கள் இப்போது பெருகுகின்றன. ஜாதிக்கட்டுப்பாடும் குறைகின்றது. இதுவும் போதாமல் ஸங்கம் கூடுகின்றார்கள்.

பகுமாஸங்களாக வைதிக ஸம்ப்ரதாயங்கட்கு விரோதம் வளர்கின்ற வண்ணங்களைப்பற்றிச் சிந்தித்தோம். அவற்றிற்கு ப்ரச்சந்ந விரோதிகளும் உளர்; ப்ரகாசவிரோதிகளும் உளர்; அவர்க்குப் பாஹ்யசத்ருக்களும் உளர்; ஆந்தரவிரோதிகளும் உளர். யாவரும் வைதிக தர்மநாசத்தைக்குறித்து ஸர்வப்ரகாரத்தாலும் ப்ரயத்ந பரர்களாய் விளங்குகின்றனர்.

ஆகையால் வைதிக தர்மரக்ஷணார்த்தம் ப்ரயத்நத்தை, அபிமாநிகளாயிருக்கும் சிலராவது செய்ய அமையாதோ? இவ்விராஜதானியில் அபிமாநிகளாக நூறு பெயர் இருக்கமாட்டாரோ? இவர் ஏன் ப்ரயத்நபரர் ஆகக்கூடாது?

ஸர்வமதங்களிலும் கிளைகள் உண்டு. அவை பரஸ்பரம் த்வேஷிப்பதும் ஸஹஜம். ஆனால் அவர் யாவர்க்கும் மதபாஹ்யரால் அபாயம் ஸம்பவித்தால் அவர் ஸ்வரக்ஷணார்த்தம் ஒன்றாகக் கூடக் காண்கின்றோம். வைதிக தர்மங்களின் பேதங்களோ வென்றால்

யொரு ஸங்கம் கூடி, அதன் முடிவில் ஜாதி வரம்பில்லாமல் 300 ஹிந்துக்கள் ஸஹபோஜநம் செய்தனராம். அவர்கள் பெயர் வெளிப்படவே, அவர்களை, ஜாதியார்கள் பஹிஷ்காரம் செய்தனராம். 100 பெயர் ஜாதிகளுடன் சேர ப்ராயஶ்சித்தம் செய்துகொண்டனராம். இது ஜாதிநிஷ்டர்கள்செய்த க்ரூரக்ருத்யமாம். சில காலத்துக்குமுன் எல்பின்ஸ்டன் காலேஜில் படித்த ஹிந்துக்கள்பலர், ஜாதியை அழிக்க ரஹஸ்யமாகக் கூடினராம். தங்களுக்குப் பரமஹம்ஸரெனப் பெயர் வைத்துக்கொண்டனராம். கிறிஸ்தவர் ஸ்பர்ஶித்த ரொட்டியையும், துலுக்கர் தொட்ட ஜலத்தையும் புஜிப்பதாய் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டனராம். இரண்டொரு வருஷம் இந்த ஸபை இவ்வண்ணம் நடந்ததாம். பிறகு அவர்க்குள் ஒரு அயோக்யன் அவர் பெயரை வெளிப்படுத்திவிட்டானும். ஹிந்துக்களுக்குள் கலகம் உண்டாயிற்றும். ஸபை செத்ததாம். பிறகு அவர்க்குள் ஒருவரான பந்தார்கர் என்பவர், மதத்தை மாற்றாமல் ஜாதி அழியாதென்று நினைத்து ப்ரார்த்தனை ஸமாஜம் உண்டாக்கினராம். அவர்க்குள் மற்றவர் ஒரு பார்ஸியின் உதவியால் அவன்வீட்டுப் பின்புறத்தில் ஜாதியை அழிக்கத்தக்க உணவுகளை ரஹஸ்யமாய்ப் புஜித்தனராம். இப்படிப்பட்ட ஜாதியழித்தலை டாக்டர் வில்ஸன் துரை வெறுத்தனராம். யோக்யரான யார்தான் வெறுக்கமாட்டார்கள்? இவர்கள் ஜாதியிலிருக்கின்றதாக இவர் பந்துக்கள் எண்ணவும், அந்தப் பந்துக்களுடன் தங்கள் அதிக்ரமங்களை அவர்களுக்கு அறிவிக்காமல் இவர்கள் கலக்கவும், இது ஸரியென்று எந்த யோக்யன் சொல்லுவன்? டாக்டர் வில்ஸன் வெறுப்பைக்காட்டிய கடிதம் வெளிப்படவே, ஜட்ஜ் டிலாங்கு, இப்படி ஹிந்துக்களுக்கு ஜாதியை அழிக்க யார் சொல்லிக்கொடுத்தாரென்று கேட்டனராம். இப்படிக் கேட்டது ந்யாய விரோதமென்று சந்தாவர்க்கர் சொல்லுகின்றார். அவருடைய ந்யாய விசாரம் அவர்க்கே பொருந்தும். பிறகு ஒரு விதவாவிவாஹம் நடந்ததாம். அதற்குச் சிலர் மூஞ்சிகளை மூடிக்கொண்டு சாப்பிடப்போனாராம். அவரை அயலார் தெரிந்துகொள்ளாதபடிப் போலீஸ் உத்யோகஸ்தர் சேவகர்களை அனுப்பிக் காத்தனராம். ஆனால் எப்படியோ சாப்பிட்டவர் பெயர் வெளிவந்ததாம். அவரைப் பஹிஷ்காரம் செய்தனராம். அவரில் சிலர் ப்ராயஶ்சித்தம் செய்துகொண்டனராம். மற்றோர் கடிதத்தில் சந்தாவர்க்கர் ஜாதி



மர்யாதைகளை அழித்த மஹான்கள் நடத்தையைப்பற்றியும், நீண்ட காலம், கெடாதிருந்த நம்மிராஜதானியில் பார்ப்பாரெனப் பிறந்த பலர், ஜாதியற்றவருடன் புஜித்ததைப்பற்றியும் பேசுகின்றார்.

இப்படிப்பட்ட ருஜுமார்க்கத்தில் பிறந்து ஆர்ஜவத்தில் வளர்ந்த வர்ண ஶத்ரு ஸபையானது ஸங்கமாய்க் கூடினதாம். மூக்கரையன் கதை இப்படித்தான் ஏற்பட்டது. இங்க்லீஷ் வித்யாஶாலையில் ஸம்ஸர்க்கதோஷம் அநிவார்யம். அதனால் கெட்டவர் அபோஜ்ய போஜநங்களையும் விசேஷ பாநங்களையும் அபேக்ஷிக்க அமையும். முதலில் தம்மினத்தார்க்குத் தெரியாமல் அவர்கள் இஷ்டப்ராப்தியை அடைந்தனர். தெரிந்தபின் சிலர் ப்ராயஶ்சித்தம் செய்துகொண்டனர். சிலர் செய்யாமல் முஷ்கரமாக நின்றனர். நின்றவர் தங்கள் வகுப்பை ஸர்வ முயற்சியாலும் பெரிதாக்கினர். அவர்க்குள் சிலர் தங்கள் இச்சைப்படி நடக்க ஸௌகர்யத்தைவேண்டிக் கிறிஸ்தவரானார். சிலர் ப்ரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்தார். சிலர் மதமென்பதைச் சிந்திக்காமல் நாஸ்திகராய் நின்றார். முன்காலத்தைவிட ஆசாரவிஷயமாக அக்ருத்ய கரணங்கள் இப்போது பெருகுகின்றன. ஜாதிக்கட்டுப்பாடும் குறைகின்றது. இதுவும் போதாமல் ஸங்கம் கூடுகின்றார்கள்.

பகுமாஸங்களாக வைதிக ஸம்ப்ரதாயங்கட்கு விரோதம் வளர்கின்ற வண்ணங்களைப்பற்றிச் சிந்தித்தோம். அவற்றிற்கு ப்ரச்சந்ந விரோதிகளும் உளர்; ப்ரகாஶவிரோதிகளும் உளர்; அவர்க்குப் பாஹ்யஶத்ருக்களும் உளர்; ஆந்தரவிரோதிகளும் உளர். யாவரும் வைதிக தர்மநாஶத்தைக்குறித்து ஸர்வப்ரகாரத்தாலும் ப்ரயத்ந பரர்களாய் விளங்குகின்றனர்.

ஆகையால் வைதிக தர்மரக்ஷணார்த்தம் ப்ரயத்நத்தை, அபிமாநிகளாயிருக்கும் சிலராவது செய்ய அமையாதோ? இவ்விராஜதாநியில் அபிமாநிகளாக நூறு பெயர் இருக்கமாட்டாரோ? இவர் ஏன் ப்ரயத்நபரர் ஆகக்கூடாது?

ஸர்வமதங்களிலும் கிளைகள்உண்டு. அவை பரஸ்பரம் த்வேஷிப்பதும் ஸஹஜம். ஆனால் அவர் யாவர்க்கும் மதபாஹ்யரால் அபாயம் ஸம்பவித்தால் அவர் ஸ்வரக்ஷணார்த்தம் ஒன்றாகக் கூடக் காண்கின்றோம். வைதிக தர்மங்களின் பேதங்களோ வென்றால்

யொரு ஸங்கம் கூடி, அதன் முடிவில் ஜாதி வரம்பில்லாமல் 300 ஹிந்துக்கள் ஸஹபோஜனம் செய்தனராம். அவர்கள் பெயர் வெளிப்படவே, அவர்களை, ஜாதியார்கள் பஹிஷ்காரம் செய்தனராம். 100 பெயர் ஜாதிகளுடன் சேர ப்ராயச்சித்தம் செய்துகொண்டனராம். இது ஜாதிநிஷ்டர்கள்செய்த க்ரூரக்ருத்யமாம். சில காலத்துக்குமுன் எல்பின்ஸ்டன் காலேஜில் படித்த ஹிந்துக்கள்பலர், ஜாதியை அழிக்க ரஹஸ்யமாகக் கூடினராம். தங்களுக்குப் பரமஹம்ஸரெனப் பெயர் வைத்துக்கொண்டனராம். கிறிஸ்தவர் ஸ்பர்சித்த ரொட்டியையும், துலுக்கர் தொட்ட ஜலத்தையும் புஜிப்பதாய் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டனராம். இரண்டொரு வருஷம் இந்த ஸபை இவ்வண்ணம் நடந்ததாம். பிறகு அவர்க்குள் ஒரு அயோக்யன் அவர் பெயரை வெளிப்படுத்திவிட்டானாம். ஹிந்துக்களுக்குள் கலகம் உண்டாயிற்றாம். ஸபை செத்ததாம். பிறகு அவர்க்குள் ஒருவரான பந்தார்கர் என்பவர், மதத்தை மாற்றாமல் ஜாதி அழியாதென்று நினைத்து ப்ரார்த்தனை ஸமாஜம் உண்டாக்கினராம். அவர்க்குள் மற்றவர் ஒரு பார்ஸியின் உதவியால் அவன்வீட்டுப் பின்புறத்தில் ஜாதியை அழிக்கத்தக்க உணவுகளை ரஹஸ்யமாய்ப் புஜித்தனராம். இப்படிப்பட்ட ஜாதியழித்தலை டாக்டர் வில்ஸன் துரை வெறுத்தனராம். யோக்யரான யார்தான் வெறுக்கமாட்டார்கள்? இவர்கள் ஜாதியிலிருக்கின்றதாக இவர் பந்துக்கள் எண்ணவும், அந்தப் பந்துக்களுடன் தங்கள் அதிக்ரமங்களை அவர்களுக்கு அறிவிக்காமல் இவர்கள் கலக்கவும், இது ஸரியென்று எந்த யோக்யன் சொல்லுவன்? டாக்டர் வில்ஸன் வெறுப்பைக்காட்டிய கடிதம் வெளிப்படவே, ஜட்ஜ் டிலாங்கு, இப்படி ஹிந்துக்களுக்கு ஜாதியை அழிக்க யார் சொல்லிக்கொடுத்தாரென்று கேட்டனராம். இப்படிக் கேட்டது ந்யாயவிரோதமென்று சந்தாவர்க்கர் சொல்லுகின்றார். அவருடைய ந்யாயவிசாரம் அவர்க்கே பொருந்தும். பிறகு ஒரு விதவாவிவாஹம் நடந்ததாம். அதற்குச் சிலர் மூஞ்சிகளை மூடிக்கொண்டு சாப்பிடப்போனாராம். அவரை அயலார் தெரிந்துகொள்ளாதபடிப் போலீஸ் உத்யோகஸ்தர் சேவகர்களை அனுப்பிக் காத்தனராம். ஆனால் எப்படியோ சாப்பிட்டவர் பெயர் வெளிவந்ததாம். அவரைப் பஹிஷ்காரம் செய்தனராம். அவரில் சிலர் ப்ராயச்சித்தம் செய்துகொண்டனராம். மற்றோர் கடிதத்தில் சந்தாவர்க்கர் ஜாதி



மர்யாதைகளை அழித்த மஹாங்கள் நடத்தையைப்பற்றியும், நீண்ட காலம், கெடாதிருந்த நம்மிராஜதானியில் பார்ப்பாரெனப் பிறந்த பலர், ஜாதியற்றவருடன் புஜித்ததைப்பற்றியும் பேசுகின்றார்.

இப்படிப்பட்ட ருஜுமார்க்கத்தில் பிறந்து ஆர்ஜவத்தில் வளர்ந்த வர்ண ஶத்ரு ஸபையானது ஸங்கமாய்க் கூடினதாம். மூக்கரையன் கதை இப்படித்தான் ஏற்பட்டது. இங்க்லீஷ் வித்யாஶாலையில் ஸம்ஸர்க்கதோஷம் அநிவார்யம். அதனால் கெட்டவர் அபோஜ்ய போஜனங்களையும் விசேஷ பானங்களையும் அபேக்ஷிக்க அமையும். முதலில் தம்மினத்தார்க்குத் தெரியாமல் அவர்கள் இஷ்டப்ராப்தியை அடைந்தனர். தெரிந்தபின் சிலர் ப்ராயச்சித்தம் செய்துகொண்டனர். சிலர் செய்யாமல் முஷ்கரமாக நின்றனர். நின்றவர் தங்கள் வகுப்பை ஸர்வ முயற்சியாலும் பெரிதாக்கினர். அவர்க்குள் சிலர் தங்கள் இச்சைப்படி நடக்க ஸௌகர்யத்தைவேண்டிக் கிறிஸ்தவரானார். சிலர் ப்ரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்தார். சிலர் மதமென்பதைச் சிந்திக்காமல் நாஸ்திகராய் நின்றார். முன்காலத்தைவிட ஆசாரவிஷயமாக அக்ருத்ய கரணங்கள் இப்போது பெருகுகின்றன. ஜாதிக்கட்டுப்பாடும் குறைகின்றது. இதுவும் போதாமல் ஸங்கம் கூடுகின்றார்கள்.

பகுமாஸங்களாக வைதிக ஸம்ப்ரதாயங்கட்கு விரோதம் வளர்கின்ற வண்ணங்களைப்பற்றிச் சிந்தித்தோம். அவற்றிற்கு ப்ரச்சந்ந விரோதிகளும் உளர்; ப்ரகாஶவிரோதிகளும் உளர்; அவர்க்குப் பாஹ்யஶத்ருக்களும் உளர்; ஆந்தரவிரோதிகளும் உளர். யாவரும் வைதிக தர்மநாஶத்தைக்குறித்து ஸர்வப்ரகாரத்தாலும் ப்ரயத்ந பரர்களாய் விளங்குகின்றனர்.

ஆகையால் வைதிக தர்மரக்ஷணார்த்தம் ப்ரயத்நத்தை, அபிமாநிகளாயிருக்கும் சிலராவது செய்ய அமையாதோ? இவ்விராஜதாநியில் அபிமாநிகளாக நூறு பெயர் இருக்கமாட்டாரோ? இவர் ஏன் ப்ரயத்நபரர் ஆகக்கூடாது?

ஸர்வமதங்களிலும் கிளைகள்உண்டு. அவை பரஸ்பரம் த்வேஷிப்பதும் ஸஹஜம். ஆனால் அவர் யாவர்க்கும் மதபாஹ்யரால் அபாயம் ஸம்பவித்தால் அவர் ஸ்வரக்ஷணார்த்தம் ஒன்றாகக் கூடக் காண்கின்றோம். வைதிக தர்மங்களின் பேதங்களோ வென்றால்

பொதுவான அபாயம் பலமாய் ஸம்பவித்தபின்னும் ஒன்று சேர வேண்டிய சிந்தை யற்றிருக்கின்றன.

சிலர் ஆலோசனை என்னவென்றால் - ஆர்யஸம்ப்ரதாய பேதங்கட்குப் பொதுவாக விஶ்வஸிக்கத்தக்க அம்ஶங்கள் இல்லையென்பது தான். இது ஸரியல்ல.

பொதுவாக விஶ்வஸிக்கப்பட்ட வேதம் ஒன்றே. வேதம் என்றால் வேதாந்தமும் அதற்குள் அந்தர்க்கதம். இவற்றின் உபப்ரஹ்மணங்களாய்ப் பெருகின இதிஹாஸங்களும் புராணங்களும் யாவர்க்கும் பொதுவாய் இருக்கின்றன. இவற்றை ஆஶ்ரயித்து உண்டான தர்ஶனங்களில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரரெனப்பட்ட வர்ணஸ்தர்கள் யாவரு மிருக்கின்றனர். யாவர்க்கும் பரமாசார்யனாய் க்ருஷ்ணத்வைபாயனர் விளங்குகின்றார். யாவரும் வேதபாஹ்யரால் தம் தர்சனங்கட்கு ஸமமாக ஸம்பவிக்கிற உபரோதங்களின் நிவர்த்தியின் பொருட்டு ஒன்றுகூட அமையாதோ?

**ஒரு ஐரோப்யர், பாதிரிமார் முயற்சியைச் சிந்தித்தல்.**

சென்னை ம்யூநிஸிபாலிடி எனும் நகரஸபைக்கு அத்யக்ஷரான மலோனிதுரை இந்தியன் ரிவ்யூவில் பாதிரிமார் முயற்சியைப்பற்றி எழுதுவதில் பின்வருகின்றபடி அங்கங்கு அபிப்ராயங்களை வெளியிடுகின்றனர். முதலில் பாதிரிமாரைக் கண்டநம் செய்யத் தான் எழுதவில்லையென்று சொல்லுகின்றார். அவர் எழுதியதை வாசித்தாலும் அவர்களுக்கு அநுகூலராகத்தான் எழுதியிருப்பதாகத் தோன்றுகின்றது. கிறிஸ்தவமதத்தைச் சேரும் இந்தியர்க்குள், மற்றை எல்லா மதஸ்தர்க்குள்ளும் இருக்கின்றபடிப் பகு அயோக்யர்கள் இருக்கின்றனராம். தன் மதத்தை மாற்றுகின்றவன், ஹ்ருதயத்தில் பெருகுகின்ற விஶ்வாஸத்தாலும், ஸாராஸார விவேசநம்செய்து, முழுதும் பக்ஷபாதம் நீங்கிப் புதுமதம் உயர்ந்ததென எண்ணியதாலும், மதத்தை மாற்றவேண்டுமென்றால், கிறிஸ்தவரானவர்க்குள் மிகவும் பெரும்பாலர் அவ்வண்ணம் கிறிஸ்தவமதத்தில் ப்ரவேசித்தவரல்லர் என்கின்றார். ஒரு புதிய பாதிரி பொறுமையுள்ள தென்னிந்திய ஜநங்கள்மீது தனது மதஸம்பந்தமான ப்ரஸங்கத்தை ப்ரயோகிக்க யத்நிக்கையில், அவரை ஜ்ஞாநமற்று மரத்தையும் கல்லையும் தொழுகின்றவரென எண்ணினனாகில் அதைக் காட்டிலும் பொய்யாக அவன் ஆலோசிக்கத்தக்கதில்லையென்கிறார்.



கொஞ்சம் பழக்கத்தால் இந்த ப்ரமம் அவனுக்கு நீங்கி, இம்மாதிரி விவரணங்களை அவன் அச்சிடும் பத்ரிகைக்காக மாத்ரம் வைத்துக்கொள்கின்றான் என்கிறார். ஆனாலும், அப்பாதிரிக்கு ஸ்வமதத்தின் உண்மையானது, இயற்கையானதும் மறுக்கக்கூடாததும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமான ஏற்றத்தை உடையதெனும் நம்பிக்கை ஸுலபமாய் நிவர்த்திக்க முடியாதது; விவேசநம் செய்து ஹார்த்தமாக நம்புகின்றவன் தன் நம்பிக்கையை த்யஜிக்கமாட்டான்; தன் நம்பிக்கை தான் நம்பத்தக்கதெனும் நம்பிக்கையையும் த்யஜிக்கமாட்டான்; ஆனால் மிகவும் ஆலோசித்தபிறகு தான் முதலாகவும் முடிவாகவும் உள்ள தத்வங்கள், பல சித்தங்கட்குப் பலவாறாகப் புலப்படுமென்பதை, அறியப்பொருந்தும்; முடிவான நிஷ்கர்ஷங்களுடன் கூடிய ப்ரமாண க்ரந்தம் உண்டென்பது, மனிதர் அநுபவத்தில் மிகவும் ஆஶ்சர்யப்படத்தக்க வார்த்தை; அது உண்டென்று ஒப்புக்கொள்ளச் சொல்வதும் மிகவும் வியக்கத்தக்கதே; இன்னும் ஸார்வத்ரிகமாகத் தத்வவிசாரம்செய்ய நைஸர்கிகமான ஶக்தியும் இச்சையும் கொண்ட (இந்திய) ஜநங்களைக் (கிறிஸ்தவ மதக்ரந்தங்களைப்பற்றி) இப்படிக் கேட்க இயலாது; என்றிவ்வண்ணம் சொல்கின்றார். தத்வவிமர்ஶிகள் சிலகாலம் எவ்வளவு தீவ்ரமாக வாதிக்கின்றாராயினும், அவர், ப்ராயேண அபிநிவேஶமற்றவர்; ஒவ்வொரு ஹிந்துவும் பர்யவஸாநத்தில் தத்வவிமர்ஶியே; ஆதலால், பாதிரிமார் ப்ரஸங்கத்தையும் இஷ்டத்துடன் கேட்க அவன் காதுகொடுக்கின்றனன்; ஸாதாரண ஹிந்துவானவன் கிறிஸ்தவருடைய முத்தேவரையும், அவரில் ஒரு தேவன் கிறிஸ்துவாய்ப் பிறந்தாரென்பதையும் பற்றித் தர்க்கிக்கான்; மோஸஸ் புஸ்தகங்கள் விவரித்த ப்ரபஞ்சஸ்ருஷ்டி, மநுஷ்யபரம்பரை முதலானவற்றின் ஆபாஸத்தைப்பற்றிக் கிறிஸ்துவின் சரித்ரத்தின் ஸாரத்தை மறுக்கமாட்டான்; கிறிஸ்து மதத்திலும் தனது மதத்திலும் அஸம்பாவிதாம்ஶங்களையும், மித்யா பாகங்களையும் கழித்து, உண்மையாய் ஏற்றுக்கொள்ளக்கூடியதும், அவ்வண்ணம் ஒருவேளை இருக்கக்கூடியதுமான பாகங்களையும், அவன் ஆலோசித்துப் பார்த்தால், தன்மதத்தை மாற்றிக்கொள்ளவேண்டியதற்காக மிகுதியான பாகம் (கிறிஸ்துமதத்தில்) அவனுக்கு யாதொன்றும் விளங்கமாட்டாது; கிறிஸ்தவனும் ஹிந்துவும், உயிர்ப்பையும் இறப்பையும், ஈஶ்வராஸ்தித்வத்தை

யும், அவனுடைய ஜகந்நியந்த்ருத்வத்தையும், ஸமமாக ஒப்புக்கொள்கின்றனர்; அதன்மேல், புத்திபூர்வமான காரணம் யாதேனுமொன்றால், ஒரு ஹிந்துவைக் கிறிஸ்தவனாகச் சொல்லமுடியாது; என்றிவ்விதமாக எழுதுகின்றார்.

உண்மையாகவே, ஹிந்து கிறிஸ்தவனாகக் காரணம், உலகத்தில் இன்னும் நன்றாகப் பிழைக்கக்கூடுமென்பதே; பகுபெயர், மதங்கட்கு ஆதாரமாயுள்ள உண்மைகளைப்பற்றி ஆலோசிக்கின்றாரில்லை; அந்த்யஜாதியர் தலைகளைத்தூக்கி மனிதரென நிற்கவும், இதுவரையிலும் கிடைக்காத படிப்பை அடையவும் உதவுகின்ற மதமானது அநேகரை வசீயப்படுத்தும்; ஆராயத்தக்கவரும், கிறிஸ்தவமதம் நித்யவாழ்க்கைக்கு உதவுகின்ற வண்ணத்தால் ஆகர்ஷிக்கப்படுகின்றனர்; தத்யமான பழையஹிந்து மதப்படி அதன் தர்ம நிச்சயம் (Ethics) உயர்ந்ததே; ஆகிலும் தத்கால ஹிந்துக்கள் தர்மத்தை வெளிப்படையாய் அநுஸரிக்க ப்ரயத்நப்படுகின்றாரேயன்றி, அதனால் தம் ஹ்ருதயங்களை பரிசுத்திசெய்கின்றாரில்லை; என்றிவ்விதம் ஆலோசிக்கின்றார். பாதிரிகள் முயற்சி ஹிந்துக்கள் மட்டும் தான் பயன்படுகின்றது; துலுக்கர் விஷயத்தில் அதுபயன்படவில்லையென்கிறார்.

ஒவ்வொரு திநமும் தர்மத்தின் தவறாமையைப்பற்றிக் கிறிஸ்தவமதம் போதிக்கின்றது, நிர்ப்பந்திக்கின்றது; அதனால் மற்ற மதங்கட்கு அது உயர்கின்றது; இந்த அம்சத்தில் மற்ற மதங்கள் இதைப்போன்றால், கிறிஸ்தவமதம் பெருகமாட்டாது; என்கிறார்.

ஒரு பெரிய அமெரிக்கர் சொன்னாராம்:—ஒரு ஹிந்துவைக் கிறிஸ்தவனாக்கி வைத்துக்கொள்ள ஏராளமாய்ச் செலவுசெய்ய வேண்டியிருக்க, ஒரு ஹிந்து மதப்ரவர்த்தகர் ப்ரயாணசெலவு மட்டும்செய்துகொண்டு அமெரிக்காவுக்கு வந்து பகு ஶிஷ்யர்களை ஸம்பாதித்தார்; மேல்பார்வை வேண்டாமலே, அவர்கள் அவ்வண்ணமே இன்னும் இருக்கின்றனர் என்றாராம்.

இந்த விஷயங்களை ஆலோசிப்பதில் நாம் எண்ணியதை வரைகின்றனம். தத்கால வித்யையை அப்யஸித்தவர்க்குள் மேலே விவரித்தபடி ஆலோசனைகள் உண்டாவது ஸஹஜம். இந்த முடிவுக்குப் பாதிரிமார்கள் விலக்காகின்றனர்.



கிறிஸ்தவராகின்றவர் தத்வநிரூபணம் பிழையறச்செய்து நிச்சயம் பிறந்து அவ்வண்ணம் ஆகின்றாரில்லை. துலுக்கர் ராஜ்யத்தில் ஹிந்துக்கள் துலுக்கரானார். அவ்வண்ணமே இப்போது கிறிஸ்தவராகின்றார். டர்க்கி யாண்ட தேசங்களில் கிறிஸ்தவராய் இருந்தவர் துலுக்கராய்ப் போனதைப் பார்க்கவும். பைபில் கதைகள் நடந்த நாடுகளில் துலுக்கர்தாம் பெருகுகின்றார்; யூதரும், கிறிஸ்தவரும் மிதமாக வஸிக்கின்றனர். இதை, 'யதா ராஜா ததா ப்ரஜா:' என்று நம் பெரியோர் சொன்னார்.

அயோக்யர் ஸர்வமதங்களிலும் ஸமமாகத்தான் பெருகுகின்றனர். தர்மநிச்சயம் தெரிந்து அநுஷ்டிப்பவர் ஸமமாகத்தான் இருப்பர். தெரிந்து அநுஷ்டிக்காதவரும் ஸமமாகத்தான் இருப்பர். தெரியாமல் அநுஷ்டிப்பவர் தொகையும், அநுஷ்டிக்காதவர் தொகையும் அப்படியே. இதில் ஹிந்துக்கள் குறைகின்றாரென்பது மித்யை. அப்படி இருந்தாலும், 550 வர்ஷம் துலுக்கர் ஆளுகைக்குட்பட்டும், 150 வர்ஷம் ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்டும், பாரதந்த்ர்யம் அடைந்தவரை, ஸ்வாதந்த்ர்யம் ஒன்றும் தவறாதவருடன் ஒப்பிடலாமோ? ஆயிரக்கணக்காய்ச் சம்பளம் வாங்குகின்றவர், 20 ரூபாய்க்குத் தாளம்போடும் தைந்யரைப் பற்றி இவ்விதம் ஆலோசிக்கலாமோ? பாதிரிமார் பள்ளிக்கூடங்களில் பலவந்தமாய்ப் பைபில் படித்து, அவர் செய்யும் தேவப்ரார்த்தனையைப் பஹுமாநிக்க வேண்டியவரைத் தர்மநிச்சயப்படி அநுஷ்டிக்கக் கேட்கலாமோ? கிறிஸ்தியன் கலாசாலை கலக்கம் (Commotion) வந்தபடியும் முடிந்தபடியும் மலோனி துரை சிந்திப்பரோ? நமது நாட்டில் தத்காலப் படிப்பின் முறைகளில், தர்மநிச்சயத்திற்கும், அதன்படி அநுஷ்டாநத்துக்கும், அவகாசம் எம்மட்டும் உளது? டர்க்கியின் ஆளுகைக்குட்பட்ட பல்கரும், க்ரீக் தேசத்தாரும், மற்றவரும், ஹிந்துக்களைக் காட்டிலும் எம்மட்டும் தர்மாநுஷ்டாந சீலராயிருந்தனர்? ஹிந்துக்களுக்கு மதமென்றால், (1) நான் யாவன், (2) மரணாநந்தரம் அநுவர்த்திக்கின்றேனோ, (3) எனக்கேன் சரீரஸம்பந்தம் வந்தது, (4) எனது நிஜஸ்வ

“ [illegible] ”

என்கிற கீதாசாரியன் வாக்யத்தை அநுஸரித்து தேவரீர்கள் கிருபைகூர்ந்து ஸகலத்தையும் எல்லோரும் ஆநந்திக்கும்படி நடத்திவைத்து, த்ருணப்ராயமான அடியேனை வ்யாஜமாத்திரமாக்கி இந்த ஸபையில் முடிவுபெறவேண்டிய காரியங்களை எவ்விதக் குறைவுகள், விகல்பங்கள், மநோவிகாரங்கள், விக்நங்கள் உண்டாகாமல் முடிப்பித்து ஆநந்தித்தருள ப்ரார்த்திக்கிறேன். மிதபுத்தியான தாஸனை இவ்விதம் அநுக்கிரகித்தும் அபிமாநித்தும் இந்த ஸ்தாநத்தில் கௌரவித்ததற்கு தாஸனுடைய க்ருதஜ்ஞதையை திருவுள்ளம் பற்றவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஸமாஜத்திற்கு திவ்ய தேசத்தின் ஔசித்யம்.

இந்த ஸபைகூடுவதற்கு ஸ்ரீமடத்துச் சிஷ்யஸபையார்கள் இந்தத் திவ்விய தேசத்தை நிர்ணயித்தது மிகவும் ந்யாயமாயும் உசிதமாயுமே தோன்றுகின்றது. இது ஸ்ரீ வைஷ்ணவர்களனைவர்களும் களிக்கவும், ஸ்ரீ அழகிய சிங்கரும் உகந்தருளவும் மிகப்பிராப்தமான இடம். இந்த ஸ்தலத்தில் ஸ்ரீமடத்து அழகிய சிங்கர்களில் அநேகர் பிரவசித்தர்களாய் எழுந்தருளி இருந்ததுபற்றி இதை இந்நாட்டில் ஸ்ரீமடத்துக்குப் பிரதாந ஸ்தலம் என்றே சொல்லக்கூடும்.

இந்த ஸ்தலத்தில் ஸ்ரீ வீரராகவன் தேவஸ்தாநம் ஸ்ரீ மடத்தின் பரிபாலநத்தில் இருந்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்தஸ்தலத்து எம்பெருமானை ஆழ்வார்களில் ப்ராசீநரான திருமழிசைப்பிரானும் கலியனென்கிற கவிச்ரேஷ்டராகிய திருமங்கைமன்னனும் மங்களாசாஸநஞ்செய்து க்ரந்தங்களில் பாடி இருக்கிறார்கள்.

“ நீலமார்வண் டுண்டுவாழும் நெய்தலந் தண்கழனி
ஏலநாறும் பைம்புறவி லெவ்வுள் கிடந்தானே ”

என்கிற பாசுரத்தில் இந்நாட்டு வளமும்,

“ மூத்தநம்பி முக்கணம்பி யென்றுமுனிவர்தொழு
தேத்தும் நம்பி ” என்பதால் ஸ்ரீமந்நாராயணனே ப்ரஹ்மருத்ராதி ரூபனென்றும்,

“ வேதம் விரித்துரைத்த புனிதன் ” என்றும், “ தன்னடியார்க்கினியன் ” என்றும்,



“ பாவை பனிமலராள் வந்திருக்கும் மார்பன் ” என்று மிப்புடைகளில் பகவானுடைய பரத்வ ஸௌலப்யங்களும் ஸஞ்ஜ்ஞையாயிருப்பதும், நாராயணனென்னும் நாமத்தையே நாடியவதரித்த கலித்வம்ஸனால் விசதமாய் அநுஸந்திக்கப்பட்டிருக்கிறது. இந்த “ எவ்வுள்கிடந்தானை ” ச்சரணமடைந்து அடியேன் இதரவிஷயங்களைப் பிரஸ்தாவிக்கிறேன்.

நிகழும் ஐரோப்பா யுத்தத்தில் நமது சக்கரவர்த்திக்கு
ச்ரேயஸ் ஜயப்பிரார்த்தநம்.

இப்பொழுது ஐரோப்பாவில் நமது சக்கரவர்த்திக்கும் நம் ஆங்கிலேய தேசத்துடன் மித்திரபாவமுள்ள பிரான்ஸு, ருஷ்ஷியா, ஸர்வியாதேசஸ்தருக்கும் ஜர்மேனி சக்கரவர்த்திக்கும் நடந்துவரும் பயங்கரமான யுத்தவிஷயத்தைச் சிறிது பிரஸ்தாவிப்பது யுக்தமாயிருக்கும். துஷ்டநிக்ரஹமும் சிஷ்டபரிபாலநம் பண்ணுவதும் ராஜாக்களுக்குமுதன்மையான தர்மம் என்று உத்தேசித்தும், தருமமாயும் நீதியாயும் உள்ள ராஜாக்களுடைய பரஸ்பரம் அநுபந்தங்களையும் உடன்பாடுகளையும் க்ஷேமத்தையும் எவ்விதமும் பாதுகாக்கவேண்டிய விதிகளையும் அநுசரித்தும், நமது ஸார்வபௌமரான சக்கரவர்த்திக்கு இப்பொழுது இந்த யுத்தம் நேர்ந்திருக்கிறது. துர்யோதநாதிகளைப்போல அஸூயையினாலும் பொறாமையினாலும் ராணுவப்பயிர்ச்சியின் கர்வத்தாலும் ஜர்மேனி அரசன் காரணமின்றி நமது ஆங்கிலேய தேசத்துடன் ஒற்றுமையாயும் ஸ்நேகமாயுமுள்ள பிரான்ஸ் தேசத்திற்கு இடஞ்சல்செய்து, அதன்மூலமாய் நமது சக்கரவர்த்திக்கும் ஆங்கிலேய ராஜ்யத்தினது பெருமைக்கும் விருத்திக்கும் ஹாநிசெய்யக்கருதி, அதற்காக அநியாயமாய் நிரபராதியான நடுவில் இருந்த ஒரு சிறு ஸம்ஸ்தாநத்தை ஆக்ரமிக்க முயன்றனர். இவ்விதமான கஷ்டங்களை நிவர்த்திசெய்யவும், சக்கரவர்த்திகளானாலும் தன் பராக்கிரமமே பெரிதென்று கர்வப்படாமல் லோக தர்மங்களிலும் நீதிகளிலும் பரஸ்பர ராஜதர்மங்களிலும் எல்லைகடவாமல் நடப்பது தான் ராஜநீதிக்கும் ஈச்வர ஆஜ்ஞைக்கும் உரியதென்று அகங்காரங்கொண்ட ஜெர்மேனியாருக்குக் காட்டிக்கொடுக்கவும், நமது சக்கரவர்த்தி இந்த யுத்தத்தில் பிரவேசிக்கும்படி நேர்ந்தது. இந்த ப்ரஸக்தியில் நமது தேசத்தவர்களுடைய ராஜபக்தி அதிக

ரூபமென்ன, (5) ப்ரக்ருதியின் ஸ்வரூபமென்ன, (6) ஈச்வரன் ஸ்வரூபகுணங்களென்ன, (7) சித், அசித், ஈச்வரன் - இவர்க்குள் பரஸ்பர ஸம்பந்தமென்ன, (8) மோக்ஷஸ்வரூபமென்ன, (9) அதை அடைய உபாயங்களின் ஸ்வரூபமென்ன, (10) அதை அடையத்தக்கவனாக இஹத்தில் நான் வர்த்திக்கும்படியென்ன, (11) ஜீவன்களின் பரஸ்பர ஸம்பந்தமென்ன, (12) மரணாநந்தரம் அவர்கள் கதியென்ன, என்று இந்த ப்ரச்நங்களுக்கு யுக்தமான ப்ரத்யுத்தரம் அளிப்பதுதான். இவற்றிற்கு ப்ரத்யுத்தரங்கள் யோகிகளுக்கன்றி மற்றோர்க்கு ப்ரத்யக்ஷத்தில் கிடைக்கா. யோகிகள் அநுபவமெனத்தக்க சாஸ்த்ரங்களில், எது இந்த வினாக்களுக்கு யுக்தமான விடைகள் அளிக்கின்றதோ, அந்த சாஸ்த்ரம் தான் ஹிந்துக்களுக்கு ப்ரமாணம். அது ஹிந்துக்கள் ப்ரமாண க்ரந்தமே. மற்றவர் ப்ரமாணக்ரந்தங்களில், மேற்குறித்த ஆலோசனைகள் இல்லை. அவற்றிற்கு விடையும் இல்லை. பூமியில் செம்மையாய்ப் பிழைக்க, மதம் வேண்டாம். பகுநாஸ்திகர்கள் (Agnostics) மற்றோரெல்லாரையும் காட்டிலும் மிகுதியாகத் தர்மாசரணம் செய்தனர். மதமென்பது லோகாந்தரவிஷயம். லகுவான சொற்களால் லகுவான சில விஷயங்களை லகுவாய்ச்சொல்லி விட்டால் மதமேற்படுமென்பது மூடவசநம். பரமார்த்த விஷயங்கள் லகுவாய் ஏற்படமாட்டா. அவற்றைப்பற்றி ஆலோசிக்காமல் மனிதர் கிறிஸ்தவராகில், அது காலதேசவைகுண்யத்தைப் பொறுத்தது.

விவேகாநந்தர் அமெரிக்காவுக்குப் போய் அதிக செலவுசெய்யாமலே பகுசிஷ்யர்களை ஸம்பாதித்தனர். அவ்விதம் இதர ஹிந்துக்கள் முயன்றால் நம் மதம் விஸ்தரிக்கும். அதற்கும் கிஞ்சித் உபபத்திவேண்டும். அதுவும் நமக்கில்லை. நமக்குள் ஒற்றுமையும் இல்லை.

---

OFFICE OF THE REGISTRAR OF ...
13 FEB 1915
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நம:.

## ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை.

## 5-வது (திருவெவ்வுளூர்) மஹாஸங்கம்.

# அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

### ஸ்ரீவைஷ்ணவ மஹாஸமாஜத்திற்கு விஜ்ஞாபநம் :

இவ்விடம் சேர்ந்திருக்கும் இந்தப்பெரும் ஸபையைப் பிரகாசிக்கவும் கௌரவிக்கவும், அதிக ஆதரவாலும் பூர்ணமான அன்பினாலும் எழுந்தருளி, இதில் நடக்கவேண்டிய காரியங்களில் மகிழ்ந்து உதவிசெய்து தலைக்கட்டிவைக்கத் திருவுள்ளம்பற்றி வீற்றிருக்கும் வித்வான்கள், பரமைகாந்திகள், பாகவதோத்தமர்கள், பிரபுக்கள், அனைவர்களுக்கும், ஜ்ஞாநாநுஷ்டாந சீலவிருத்தம் முதலிய எவ்வகையிலும் பேதையும் அல்பனுமான அடியேன் நமஸ்கார வணக்கங்களுடன் கொஞ்சம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளத்துணிகிறேன். தாஸன் வார்த்தைகளுடையவும் அபிப்பிராயங்களுடையவும் பிழைகள் யாவற்றையும் பொறுத்து, அநுக்ரஹிக்கக்கூடிய அம்சங்களைத் திருவுள்ளம்பற்றப் பிரார்த்திக்கிறேன். இவ்விதம் ஸர்வோத்கிருஷ்டர்களான மஹாபுருஷர்கள் கூடிய ஸபையில் தேவரீர்களால் நியமிக்கப்பெற்ற அக்ராஸநத்தை வஹிக்க அநர்ஹதையால் மிகவெட்கத்தை அடைந்தும், தேவரீர்களுடைய நியமநத்தையும் ஸ்வாபாவிகமான கிருபையையும் க்ஷமையையும் சரணம்பற்றி, அல்ப பதார்த்தத்தையும் சிறப்பிவிக்கிற தேவரீர்களுடைய ஸஹஜகல்யாணகுணாதிசயங்களைப்பற்றுகநம்பி, இந்த ஸ்தாநத்தைத் தேவரீர்கள் நியமநப்பிரகாரம் வஹிக்கிறேன். ஆயினும் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்கமாக எதிர்பார்க்கிற விஷயங்களை அடியேனிடம் எதிர்பாராமலே,

பலமாய் வேரூன்றிக் கிளைகிளைத்து ஓங்கி பக்குவதசையை அடைந்து வருகிறதென்று நமது தேசப்பொருளுதவியாலும் ஆதரவாலும் நமது ஜநசரீர உதவியாலும் இன்னும் பலவாறாகவும் ஸர்வஜந ஸாக்ஷிகமாய் வெளியாகிவருகிறது. அவ்வாறே நமது சக்கரவர்த்தியும் அவரது முதன்மையான மந்திரிகளும் நமது ஆங்கிலேய நேசர்களும் நம்மிடம் வைத்திருக்கும் அன்பும் மதிப்பும் அளவற்றதென்று விசதமாய்ப் பிரகாசிக்கின்றது. அன்றியும் நம்முடைய தேசஸ்தர்களாசயத்தை கிரகிக்காமல் கொஞ்சம் ஸந்தேகமாய் வர்த்தித்த சில ஆங்கிலேய பிரபுக்களுக்கும் மற்றவர்களுக்கும் நம்மிடத்தில் விசேஷ விச்வாஸமும் ஸஹோதரபாவமும் விர்த்திசெய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்தயுத்தம் நமக்கு விசதமாயும் ஸஹஜமாயுமுள்ள உறுதியான ராஜவிச்வாஸத்தின் ஊக்கத்தை அறியாமல் தடுமாறி குருட்டெண்ணம் வைத்திருந்த நமது சத்ருக்களின்புத்தி மாந்தியத்தையும் தெரிவித்து, அவர்களை தலைகுனியும்படி செய்துவிட்டது. இந்திரஜித் யுத்தத்தைப்போல் அதர்மமான யுத்தம் செய்துவரும் ஜர்மேனி தேசத்தார்கள் சீக்கிரத்தில் பராஜயத்தை அடைந்து, அவர்களுடைய ராணுவப்பயிர்ச்சியினாற்கொண்ட இறுமாப்பு வேரறுந்து, நமது சக்கரவர்த்தியும் நமக்கு ஒற்றுமையாய் ஏகமநஸ்கராய் நமது ஸைந்நியங்களுடன் யுத்தத்தை நடத்திவரும் பிரான்ஸ், ருஷ்ஷியா தேசத்தவர்களும் விஜயத்தை யடைந்து, வீரர்களாயும் தர்மரக்ஷணர்த்தம் ஸகலவிதமான ஆபத்துகளையும் அடைந்து தைரியமாக யுத்தம் செய்து தற்காலம் தமது நாட்டையும் ஒருவாறு இழந்துள்ள பெல்ஜியர்கள் தம்தேசத்தை பூர்ணமாக வடைந்து, விசேஷலாபமும், யஶஸ்ஸும், ஸர்வஸுகமும் பெருகும்படி பக்தஜநாபீஷ்டபூரண துரந்தரனான நமது ஸ்ரீ வீரராகவன் கிருபைசெய்ய நாம் எல்லோரும் இந்தசபையின் உபக்கிரமத்திலேயே எம்பெருமானை பிரார்த்திக்க வேண்டியது அவசியம்.

### ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபை.

இந்த மகாஸங்கத்தைச் சேர்த்துவைத்திருக்கும் சிஷ்யஸபை ஸாதாரண வருஷம் சித்திரை மாஸம் ஏற்படுத்தப்பட்டு அது முதல் நடந்துவருகின்றது. ஸ்ரீ ஸந்நிதிசிஷ்யர்களில் ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் சிறந்தவர்களும் ஸ்ரீ ஸந்நிதிக்கு உண்டாகும் ஏற்றத்தில் சந்தோஷத்தையும் குறைவுகளில் சோகத்தையும் அடைகிற



வர்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயம் விர்த்திபெற்று புகழ்ச்சியடைந்து நாநாதேசங்களில் பரவியோங்குவதில் விசேஷ சிரத்தையும் ஊக்கமும் உண்டாக ஸதா சிந்தையுள்ளவர்களுமான சில பிரபுக்களால் சிஷ்யஸபை ஆதியில் சேர்க்கப்பட்டு அவர்களால் இயன்றவரையில் உத்தேச கார்யங்களுக்கு அநுகுணமான நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### ஸபை பிரவர்த்தகர்களின் உபகார ஸ்மரணம்.

அப்படி நடத்திவருகிறவர்களில் முக்கியமாக ஒருவரையும் நிர்த்தேசித்துக் கூறுவது அசாத்தியமாயினும், தங்கள் காலத்தையும் ஜ்ஞாநத்தையும் சரீரப்பிரயாஸத்தையும் மிகவு முதாரமாக இந்த விஷயத்தில் செலுத்திவருகிறவர்களில் முதன்மையாக உ. வே. ஸ்ரீ திவான் பீகதூர் டி. டி. ரங்காசாரியர் ஸ்வாமியையும், உ. வே. ஸ்ரீ டி. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமியையும், உ. வே. ஸ்ரீ வாஸுதேவாசாரியர் ஸ்வாமியையும், காரியதர்சி, உ. வே. ஸ்ரீ. வி. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமியையும், க்ருதஜ்ஞதையுடன் நாம் நினைக்கவேண்டியதா யிருக்கிறது. இதல்லாமல் வெளிஜில்லாக்களிலும் கிராமங்களிலும் உ. வே. ஸ்ரீ டி. கோதண்டராமய்யங்கார் முதலான கனவான்களும் பிரபுக்களும் பரமைகாந்திகளும் இந்த ஸபாவிஷயத்தில் நிரம்பவும் ச்ரத்தைவைத்து பற்பல ஆகாரங்களால் உபகரித்து வந்திருக்கிறார்களென்பதும் இந்த மகாஸபையோர்களனைவருக்கும் விசதமாயே இருக்கலாம்.

சில்மாஸங்களாக சிஷ்யஸபையாருக்கும் அசேஷ ஸ்ரீ வைஷ்ணவகோஷ்டிக்கும் மறக்கவொண்ணாததும் மறுபடி பூரிகக ஒண்ணாததுமான கஷ்டமொன்று நேர்ந்திருக்கிறது. ரிஜிஸ்ட்ரார் ஜனரல் அவர்களுக்கு அஸிஸ்டான்டாகவும் பிறகு ஜாயின்ட் ஸ்டாக்கு கம்பெனி ரிஜிஸ்ட்ராராகவும் லௌகீக நிர்வாகங்களை வஹித்து தமது சீலம் அநுஷ்டாநம் கொள்கை முதலியவற்றால் எல்லோருக்கும் பூஷணமாக விளங்கிய உப. ஸ்ரீ, வ. ராகவாசாரியார் நித்தியஸூரி பதவியைக் கைப்பற்றி அருளினதால் இந்த ஸபையும் ராஜாங்கத்தாரும் இதரர்களும் அந்தப் புண்ணிய புருஷன் ஸகாயத்தை இழக்கும்படி நேர்ந்துவிட்டது. இதன் விஷயமாக நமது வியாகுலத்தையும் அந்த ஸ்வாமியினிடத்தில் நமது க்ருதஜ்ஞதையையும் தேவரீர்கள் நியமநத்தை புரஸ்கரித்து அடியேன் வெளியிடுகின்றேன்.

## ஸ்ரீ அழகியசிங்க ரநுக்ரஹ அபிமாந ப்ரார்த்தநை.

ஸம்பிரதாய காரியங்களில் பரஸ்பர அபிப்பிராய பேதங்கள் உண்டாவது ஸஹஜமே. அக்காரணத்தால் மாத்திரமே ஒருகால் சிஷ்யஸபையாரின் உத்தேசங்கள் பிரகாசியாமல் ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருவுள்ளத்தில் இதுவரையில் ஸ்வல்ப அதிசங்கை இருந்திருந்தபோதிலும் இப்பொழுது ஸ்ரீ ஸந்நிதியை அலங்கரிக்கும் மகாநுபாவனும் ஜ்ஞாநாநுஷ்டாந ஸெவதியுமான அழகியசிங்கர் சிஷ்யஸபையாரை அபிமாநித்து புத்திரவாத்ஸல்யத்திற்கு அதிகமான சிஷ்யவாத்ஸல்யத்தை வைத்தருளி விசேஷ அன்பும் ஆதரவும் பாராட்டுவாரென்று நம்புகிறேன். உத்தரோத்தரமும் இந்தஸபையின் அபிப்பிராயங்களும் தீர்மானங்களும் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்திற்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கும் ஸ்ரீ ஸந்நிதிக்கும் பெருமை மேல்மேலும் அபிவிருத்தியை செய்யத்தக்கவை யென்று திருவுள்ளம்பற்றி, ஏதேனும் ஸ்வல்பம் அப்யுபகமம் பண்ணத்தகாதவைகளை யதாஸுகம் யதோசிதம் சீர்திருத்தி எல்லோருக்கும் ஹிதகரமான காரியங்களை பிரவர்த்திப்பிவித்து ஸபையை அபிமாநித்து அதன் காரியங்களை அநுஷ்டாந பரிபந்தம் நிறைவேற்றி கௌரவப்படுத்தி கடாக்ஷிக்கும்படி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய ஸம்ரக்ஷகர்களான ஸ்ரீ அழகியசிங்கரையும் இதராசார்யர்களையும் பரமைகாந்திகளையும் அநேக ப்ரணாம பூர்வகமாகப் பிரார்த்திக்கின்றேன்.

## சிஷ்யஸபை வ்ருத்தாந்தம்.

சிஷ்யஸபையின் சென்ற காலவ்ருத்தாந்தங்களையும் இனி பின் நடக்கவேண்டிய ப்ரகாரங்களையும் சிஷ்யஸபை பிரஸிடென்டு உபய. ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியார் விஸ்தரித்து ப்ரஸ்தாவிக்கக் கூடியதால் அடியேன் அது ஸம்பந்தமாக விஜ்ஞாபிக்கத்தக்க விஷயங்கள் அதிகமாய் இங்கு ஒன்றுமில்லை.

## ஸபையை விஸ்தரிக்கத்தக்க ஆலோசனைகள்.

இந்த ஸம்வத்ஸரம் இந்த சிஷ்யசபையின் கார்யங்களில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயம் முழுவதும் அந்வயிக்கும்படி அதன் பெயரைமாற்றி சில ஏற்பாடுகளைப் நூதநமாய் செய்யவேண்டியதாய் ஸ்ரீ வைஷ்ணவப் ப்ரபுக்களான சிலர்களால் ஆலோசிக்கப்பட்டு



அதுவிஷயமும் இந்தஸங்கத்தில் பிரஸ்தாவிக்கப்படும். எந்தமட்டும் காரியங்களை ஸௌகரியமாய் ஸ்பர்த்தைக்கிடமன்றியில் நிறைவேறுவதற்கு உசிதமாக விஸ்தரிக்க வேண்டுமென்பது இந்தமஹாஸங்கத்தில் விமர்சிக்கவேண்டிய அம்சம்.

தென்கலை வடகலை ஆகிய உபயஸம்பிரதாயதஸ்தர்களும் ஒன்றாகச்சேர்ந்து ஸ்ரீ வைஷ்ணவ ஸபையை நடத்துவதுமிகவும் உசிதமே. ஆகிலும் முதலிலேயே அவ்வளவு பிரபலமாக விஸ்தரிப்பதற்கு பூர்வபீடிகையாக உபயஸம்பிரதாயஸ்தர்களிலும் பெரியோர்களையும், மஹநீயர்களையும் ஆலோசித்து அவர்களுடைய அபிமாநத்தினுடைய அவலம்பத்தை அடைந்து இந்த வருஷத்தில் ஸமீகரணம்செய்ய ஏற்பாடுகளை முன்னாலேயே ஆராய்ந்து இந்த மகாஸங்கத்தாருக்கு விஜ்ஞாபிக்கப்போதுமான சாவகாசமில்லாமல் போய்விட்டது. ஆகிலும் அது ஸம்பந்தமாகவும் எவ்விதமான ஏற்பாடுகள் தென்கலை வடகலை அனைவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களையும் ஓர் ஐக்கியஸபயார்களாகச்சேர்க்க உசிதங்களென்பது இந்த ஸதஸ்ஸில் நிர்ணயிக்கப்படுமானால் அவ்வாறு இந்த ஸபையின் நியமநத்தைப்பெற்றவர்கள். பிரவர்த்தித்துத் தமது மநோரதங்களை பூரணம்செய்ய முயலக்கூடும். இது ஸங்கதி எப்படியானாலும், வடகலை ஸம்பிரதாயஸ்தர் முழுவதும் சேர்ந்து அப்பியுபகமம் பண்ணும்படியான விதமாய் சிஷ்யஸபையை விஸ்தரித்து அதற்குசிதமான பெயரையிட்டு அதுவிஷயமாய்த் தகுந்த ஆலோசனைகளையும் தேவரீர்கள் அனைவர்களும் ஸாதரமாயும் நிர்மத்ஸரமாயும் ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாய க்ஷேமத்தையும் நன்மையையும் உத்தேசித்து ஸம்பிரதாய வ்ருத்திக்கு அநுகுணமான பரிசீலநையை ஏகமநஸ்ஸாய்ச்செய்து நிர்ணயிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

## ஸம்பிரதாயத்தின் மேன்மை.

நமது ஸம்பிரதாயத்தின் மேன்மையையும், உயர்த்தியையும், ஸாதாரணமாக இஹத்திலும் பரத்திலும் மநஸ்ஸுக்கு சாந்தியையும் சந்தோஷத்தையும், உண்டாக்கக்கூடிய அதின் தன்மையையும், பாரமார்த்திகமாய் ஸித்தாந்திதமான யாதாத்ம்யார்த்தங்களுக்கு விரோதமன்றியும் குறைவன்றியும் பகவதாஜ்ஞாநுஜ்ஞா ரூபமான தர்மாநுஷ்டாநங்களுக்கு ஒற்றுமையாயும்

இருக்கும் தன்மையையும், ஸம்பிரதாயார்த்தங்களில் ச்ரவணத்தாலாவது மநநத்தாலாவது பரிசீலநத்தாலாவது தேர்ச்சி அடையாத மந்தப்பிரஜ்ஞனான தாஸன் விவரிக்கத்துணியவில்லை. துணிவதும் ஸாஹஸகிருத்யம். அந்த அம்சங்களை இந்த ஸதஸ்ஸில் நடக்கப்போகிற பரமைகாந்திகளான ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்களின் உபந்நியாஸங்களையும் வாக்கியார்த்தங்களையும் மஹாமநஸ்கர்களான ஸப்யகோஷ்டியுடன் ஸஹ்ருதயமாய்க்கேட்டு ஸந்தோஷத்தை அடையப் பிரதீக்ஷிக்கிறேன்.

## ஸம்பிரதாயத்தின் தற்காலநிலைமை.

நமது ஸம்பிரதாயச் சிறப்பையும் ஏற்றத்தையும் மிக்கவுணர்ந்திருக்கும் ஸபையார்களுக்கு, தத்காலநிலைமையை உத்தேசித்து, இந்த ஸபையை விஸ்தரிக்க வேண்டுவது அவசியமென்பது தெளிவாக இருக்கும். நமது ஸம்பிரதாயங்களில் ஆசாரிய பரம்பரையைப்பற்றியும் நமது ஸம்பிரதாயங்களுக்குள் அவாந்தர அபிப்பிராய பேதங்களால் அந்தந்த ஆசாரிய பரம்பரையை அநுஸரித்தவர்களுக்கு சிற்சில ஆசாரங்களிலும் அநுஸந்தாநக்கிரமங்களிலும் உண்டாயிருக்கும் வ்யத்தியாஸங்களைப் பற்றியும், ஆதுநிகர்களான சிலர்களும், பாச்சாத்தியாநுஷ்டாநங்களையும் நடையுடைபாவனை ஆஹாரக்கிரமங்களையும் அநுவர்த்திக்குமவர்களும், பலவாறாக எண்ணி நமது ஸம்பிரதாய பரிபாடியைப் பரிவதித்தும் ஹேளநம்செய்தும், இனி மேன்மேலும் ஸம்ப்ரதாய போஷணத்திற்குக்காரணமான நம்சிறுவர்களுக்கு ஸாமாந்யமாய் திருஷ்டாதிருஷ்டார்த்தங்களை ஸாதிக்கவல்ல நமது ஸம்ப்ரதாயங்களில் திருஷ்டவிருத்தமில்லாத அம்சங்களில்கூட பிராமாணிக மாந்த்யத்தை உண்டுபண்ணி வருகிறார்கள். இதனால் சிஷ்டாநுஷ்டாநங்களில், நம்முடையவர்களுக்கு மேன்மேலும் அவிச்வாஸமும் அகௌரவமும் ஔதாஸீந்யமும் ஏற்பட்டிருப்பது தெரிந்தவிஷயமே.

அநாதியாக வேதோபநிஷத்துக்களால் அநுக்கிரஹீதமாயும், இதிஹாஸபுராண ஸ்ம்ருதிவாக்கியங்களால் உத்கோஷிக்கப்பட்டும், பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் பிரஸித்தியடைந்தும், டங்க போதாயன திரமிடாத்யாசாரிய ஸூக்திகளால் உபஜீவிக்கப்



பட்டும், ஸ்ரீபாஷ்யகாரரால் ஸ்தாபிக்கப்பட்டும், ஸ்ரீ நிகமாந்ததேசிகனால் ஸம்ரக்ஷிக்கப்பட்டுமுள்ள இந்த அத்புதமான ஸம்ப்ரதாயமும் ஸித்தாந்தமும் வளர்ந்து வ்ருத்தியடைய ஜ்ஞாநாநுஷ்டாந வைசத்யமுள்ள ஆசாரிய பரம்பரைகள் ஏற்பட்டன. அதை அநுஸரித்து க்ருஹஸ்தாச்ரமிகளாய் எழுந்தருளியிருந்த ஆசாரியர்களுக்கு, லோகத்தில் ஸஹஜமாய் ஸம்பவிக்கக்கூடிய துர்த்தசைகளும் கஷ்டங்களும் தன்மூலமான ஸ்கலநங்களும் அதனால் சிஷ்யர்களுக்கு அவிச்வாஸமும் ச்ரத்தைக் குறைவும் காண, ஸம்பிரதாய ரக்ஷணார்த்தம் ஸ்ரீ மடங்களும் ஏற்பட்டன. அந்த ஆஸ்தாநங்களில் சிஷ்யர்களுக்கு விசேஷபிரதிபத்தியை உண்டுபண்ணி ஸித்தாந்தத்தை ஸ்திரீகரணம்செய்ய துரீயாச்ரம ஸ்வீகாரம்செய்துகொண்டு கேவலம் வைராக்ய ஜ்ஞாநாநுஷ்டாநங்களுடன் எழுந்தருளியிருக்கும் பாகவதோத்தம ஸ்வாமிகள் பூர்ண கிருபையுடன் நிர்வாகம் செய்தருளினார்கள். சிஷ்யமநோரஞ்சநார்த்தமாயும், அந்தந்த மஹாஸந்நிதிகளைக் கடாக்ஷித்தருளிய எம்பெருமான்களின் ஆராதநார்த்தமாகவும், காலக்ஷேபங்களாலும், தமது சிஷ்டாசாரங்களினாலும், ஜ்ஞாநத்தாலும், உலகத்திற்கு வழிகாட்டி, சிஷ்யர்களுக்கு ஸம்பிரதாயங்களிலும் கர்மாநுஷ்டாநங்களிலும் தேர்ச்சியை உண்டாக்க ப்ராப்தமான பரமைகாந்திகளை ஆதரிக்கவும், சிஷ்யர்களுக்கு ப்ராதாந்யமாய் ஜ்ஞாநகர்மாநுஷ்டாந ஸாதநங்களாயும் ஆநுஷங்கிகமாக சரீரதாரணமாயும் வ்ருத்திஸாதநமாயுமுள்ள அர்த்தங்களையும் வித்யைகளையும் அந்தந்த இடங்களில் போதிப்பதற்காகவும், விசேஷமாக த்ரவ்யங்களும் பூமிகளும் ஏற்பட்டன. இவைகளினால் ஸம்பிரதாயம் சிறந்து விருத்தியையும் தேர்ச்சியையும் அடைந்து வந்தது. மறுபடியும் இந்த விதமான லௌகிகஸம்பந்தங்களினால் சில சைதில்யங்கள் ஸ்ரீ ஸந்நிதிகளில் ஏற்படுவதாய் அதிசங்கை உண்டாயிற்று. இதனாலும், அல்லாமலும் சில அபிப்பிராய பேதங்களாலும், சில அநுஷ்டாந பேதங்களாலும், முநித்ரயமென்கிற சில ஸ்தாநங்கள் ஏற்படும்படி நேர்ந்தது. இவ்விதம் இந்த ஸம்பிரதாயத்தில் பிந்நமான கிளைகள் ஏற்பட்டதின் மூலமாய், தத்தத் காலதேச ஸம்ஸர்காநுகுணமாக அஸூயையினாலேயோ, த்ருஷ்டப்பிரயோஜனங்களினாலேயோ, மாத்ஸர்யத்தாலேயோ, ஸ்வாபாவிகமாகவே அநேக தோஷங்களும் குறைவுகளும் ஏற்பட்டு அவை

களைப் புரஸ்கரித்து அந்யர்களும் ஸ்வகீயர்களுமே வஸ்துவிசாரம் செய்யாமலும், செய்ய ஸாத்யமில்லாமலும், ஸம்பிரதாயத்தையும் ததேகசரணர்களான பரமைகாந்திகளையும், அவர்களநுஷ்டானங்களையும் தூஷிக்கவும் உதாஸீநம் செய்யவும் அநாதரிக்கவும் நேர்ந்து, ஸம்பிரதாயங்கள் விசேஷமான துர்த்தசையையடைந்து வருகிறதை நாம் பிரத்தியக்ஷமாகக் கண்டுவருகிறோம். நம் ஸம்பிரதாயஸ்தர்களுக்குள்ளேயே மடங்கள் ஆலயங்கள் முதலான ஸ்தலங்களில் தந்தம் ஆசாரிய ஸம்பிரதாயங்களை அநுஷ்டித்து, தந்தம் ஆசாரியர்களைப் பிரகாசிப்பிக்கும் வகையில் பிரகாரபேதங்களும் வேறுபாடுகளும் ஏற்பட்டிருப்பதற்கும், அவரவர்களின் அகங்கார ஆக்கிரகங்களே முக்ய காரணங்கள். இதுபற்றி நியாயஸ்தலங்களில் நம் ஸம்பிரதாயஸ்தர்கள் அடிக்கடி போகும்படிக்கும், பிறர் முன்னிலையில் பரஸ்பரம் நமது பரமைகாந்திகளானவும் நித்தியஸூரியம்சர்களானவுமான ஆசார்யர்கள் பக்கல் அபசாரங்களைச்செய்து ஒருவரை ஒருவர் ப்ரத்வேஷித்து, தந்தம் கொள்கைகளுக்கு அநுகூலமாய் முறையிட்டுக்கொள்ள வேண்டிவருகிறது. அப்பொழுது நம் ஸித்தாந்தத்திலுள்ள ஸூக்ஷ்மார்த்தங்களை அறியாத நியாயாதிபதிகள் செய்யும் நிர்ணயங்கள் மறுபடியும் வைஷம்யங்களை வ்ருத்திசெய்ய ஹேதுக்களாகின்றன. மற்ற ஸித்தாந்திகளும், பாஶ்சாத்திய சாஸ்த்ரங்களே மேன்மையுள்ளவைகளென்று நம்பும் நம்மவர்களும், ஸ்ரீ வைஷ்ணவர்களிலுள்ள ஸ்பர்த்தைகளைப்பற்றிப் பரிஹஸிக்கவும் நேரிடுகிறது. நம்முடைய வைஷம்யங்கள் இப்படி இருக்க, பிறரிடம் நாம் தோஷாரோபணம் செய்ய இடமில்லை.

## இதற்குப் பரிஹாரம்.

இவ்விதமான துர்க்கதியையும் துக்கத்தையும் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தேடவும், நம்முடைய ஸம்பிரதாயஸ்தர்கள் எல்லோருமே ஒருமைப்பட்டு ஸம்பிரதாயங்களுக்கு அஸாதாரணமான தத்வயாதாத்ம்யம், உபாயம், பலம் ஆகிய தத்வத்ரயம், அர்த்தபஞ்சகம் முதலான முக்கிய விஷயங்களில் ஐகமத்யமாய் நிர்வாஹங்கள் செய்யவும், ஆசார்யபக்தி விஶ்வாஸங்களைப் பிரகாசித்துக் கொண்டாடவேண்டியதான ப்ரஸக்திகளில் ஒரு ஸம்ப்ரதாயத்திற்கு மற்றொன்று விகாதமும் விரோதமும் பகவத் பாகவதாபசாரமு மில்லாமல் பொதுஸ்தலங்களில் நடந்துவரவேண்டியதற்குத் தக்க யோசனைகளைச்செய்யவும், மற்ற ஏகதேச ஸ்தலங்களில் அவரவர்கள் அபிருசிப்படி மற்றொரு ஸம்பிரதாய பாகவதர்களுக்கு அபசாரமின்றி நடக்கும்படியான ஏற்பாடுகளை யோசித்து அநுஷ்டாநத்திற்கு கொண்டுவரவும், இந்த ஸபையே முக்கியமான உபகரணமாயிருக்கக்கூடியது.



இந்தக் கார்யத்தைத் தலைக்கட்ட ஸம்ப்ரதாயங்களின் க்ஷேமத்தைக் கருதியும், தம் தம் சில வ்ருத்தங்களாலும், க்ஷமை ஶமம் முதலிய ஸாத்விகமான ஆத்மகுண பூர்த்தி பொருந்தியும், "ஸம்யிஜ்ஞூம்ஹி ஸாயவம்" என்று சொல்லுகிற கணக்கில் பரஸ்பரம் ஸமரஸம் செய்யும் தன்மையும், தம் தம் ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய கௌரவத்தையும் நம்பிக்கையையும் விஶ்வாஸத்தையும் அடைந்திருப்பவர்களான ஜ்ஞாநநிஷ்டையையுடைய ப்ரபுக்கள் அடங்கிய உள் ஸபைகள் முதலியவற்றை ஏற்பாடுசெய்து, அவர்கள் மூலமாய் வேண்டிய ஸாதநங்களைத் தேடுவதும், இன்னும் இதர மார்க்கங்களையும் நாம் சிந்தித்தும், தீர்மானிப்பது உத்தமமாய் இருக்கும்.

## சீர்திருத்த ஸபைகள்.

தத்காலம் சீர்திருத்த ஸபைகள் என்று சொல்லப்படுகிற வர்ணாஶ்ரமதர்மங்களுக்கு வினை விளைவிக்கும் ஸபைகள் அனேகம் ஏற்பட்டு அனேக பிரபுக்கள் அவைகளை யதாருசி ஆதரித்து வருகிறது நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குப் பரலோக பாதகங்களாய் இருப்பது மல்லாமல் ஐஹிகத்தில் பல அநர்த்தங்களுக்குக் காரணங்களாகவு மாகின்றன.

இவைகளால் நம் சிறுவர்கள் மனம் மாறி, அவர்கள், சிஷ்டாசார ஸம்பிரதாய வாஸனைகளும் சிஷ்டாக்ரேஸரர்களுடைய ஸம்ஸர்க்கங்களும் இல்லாமல், வர்ணாஶ்ரமத்திற்கு அத்யந்தாவஶ்யகமான நித்தியகர்மங்களில் கூட க்ஷணகாலம் மனம்செல்ல இடமின்றியில், லௌகிகரீதிக்கும் அந்யமதஸ்தருடைய ஆதரவுக்கும் முக்கியமென்று பிரமித்து அநுஷ்டிக்கும் அம்சங்களுக்கு உரியதான படிப்பை மாத்திரம் பாடசாலைகளில் அப்யஸித்து, அவ்விடத்திய

ஸம்ஸர்க்கத்தினாலுண்டாகிற வர்ணாச்ரமவிருத்தமான ஆசாரம், நடை, உடை பாவனைகளிலேயே த்ருடப்படுகிறார்கள். அங்கும் நமது வேதங்களையும் சாஸ்திரங்களையும் மதிக்காத போதகர்களின் உபந்யாஸங்களில் ஈடுபட்டுப் பகுத்தறிவில்லாத சிறுவர்கள் நமது ஸம்பிரதாயத்தில் அச்ரத்தையையும் அப்ராமாண்ய புத்தியையும் பெறுவதுடன் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்தை முற்றிலும் இழந்து விடுகிறார்கள்.

## ஸ்த்ரீகளில் வர்ணாச்ரம தர்மத்தில் ச்ரத்தைக் குறைவு.

இவ்வித விபத்துக்கள் ஸாமாந்யமாக புருஷர்களிடம் மாத்திரமே விச்ரமித்து நிற்கவில்லை. விசேஷமாக சலிக்கும் புத்தியுள்ள ஸ்திரீகளுக்குள்ளும் இவைகள் புகுந்தேறியிருக்கின்றன. பிரதாந நகரங்களில் பிரபுக்களுடைய க்ரஹங்களிலும், ஸ்த்ரீ பாடசாலைகளிலும், வைதிகாநுஷ்டாநங்களை அபஹஸித்து த்வேஷிக்கிறவர்களுடைய ஸகவாஸத்தாலும், ஆஸ்திக்யத்திற்கும் சாஸ்த்ர ப்ராமாண்யத்திற்கும் ஆசாரங்களுக்கும் விருத்தங்களாயுள்ள நாஸ்திக யுக்திகளோடு பரமஹிதம்போல் உபந்யஸிக்கப்படும் வ்யாஸங்கள் அடங்கிய பத்திரிகைகளாலும், குழந்தைகளாய் செல்வமாய் வளர்ந்துவரும் ஸ்த்ரீகளுக்கும், தமது வர்ணாச்ரம தர்மங்களிலும், அதற்கு அநுரூபமான ப்ராசீன நடை உடை பாவனை அடக்கம் இவைகளிலும், வாஸனைகள் குறைந்து, ஐஹிக விஷய ஸுகோதர்க்கங்கள்போல விளங்கும் பயிற்சிகளிலும் அநுஷ்டாநங்களிலும் ப்ரீதி ஜநித்துவருகிறது.

இன்னும் நாவல்கள் என்று பெயர் விளங்கிய பாச்சாத்திய கிரந்தங்களின் பரிபாடியை அநுஸரித்தும், அநுவதித்தும், அத்தேசத்தார்களின் நீதிப்படி, சிறந்ததாயும் நிக்ருஷ்டமாயும் எண்ணப்படும் ஸ்திரீகளின் ஆசாராநுஷ்டாநங்களையே பிரகடனம் செய்தும் வர்ணாச்ரம தர்ம நீதிபபடி த்யாஜ்யோபாதேய அநுஷ்டானங்களுக்குப் பிரகடனமும் பிரகாசமும் வெளிப்படுத்தாமலும், சில சமயங்களிலும் சில வ்யக்திகளிடம் காணப்படும் கர்ஹிக்கக்கூடிய சில காரியங்களை ஸாமாந்யாசாரம்போல் அதிவாதம் செய்தும் எழுதப்பட்டுவரும் சில கிரந்தங்களுடைய ப்ரசாரத்தாலும் இவ்விதமான புத்திபேதம் ஸ்திரீகளுக்கு உண்டாகக்கூடிய அவகாசமிருக்கிறது.



இவ்வித விபரீதங்களுக்கு அநுகூலமாகவே பிந்தியகாலம் இக்குழந்தைகள் வர்த்திக்கவேண்டிய க்ரஹஸ்ததர்மங்களில், குடும்பங்களின் ஒற்றுமைக்கு அநுகுணமான நடத்தைகளை விருத்தி செய்ய வேண்டியதை யோசியாமல், அவர்களுக்கு நவீனமான ஆசரணையில் ருசி அபிவிருத்தியாகும்படியான கல்விகளைக் கற்பித்தும், அவைகளை நாம் அநுமோதித்தும் வருவது எவ்வளவுமட்டும் நம்முடைய தேசாசாரங்களின் மகிமைக்கு ஒற்றுமை என்பதை தேசாபிமானிகள் நிரம்பவும் சிந்திக்கவேண்டியது. நமது சாஸ்திரங்களிலும் புராணப்பிரஸித்தங்களான கதைகளிலும் ஸ்த்ரீகளைக் கௌரவித்து ஸம்மாநித்துப் புருஷர்கள் வர்த்திக்கவேண்டிய விதிகளையும் ஆசாரங்களையும் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கக்கூடிய பயிற்சிகளையும் விமர்சிக்குமிடத்தில், நம்முடைய அநுஷ்டாந ஆசாரங்களும் ஸ்திரீ பயிற்சிகளும் மற்ற நாகரிகமடைந்து ஸம்பத்துடனிருக்கும் பிறதேச அநுஷ்டாந ஆசாரங்களையும் கல்வியையும் காட்டிலும் குறைவுபட்டவையல்லவென்று வ்யக்தமாக ஏற்படக்கூடியது.

நமது தேச ஸ்திரீகளின் ஸாத்விக குணங்களும் அவர்களுக்குப் பர்த்தாவினிடமுள்ள அநுராகமும், விச்வாஸமும் ஸ்திரீகளுக்கு விசேஷ உத்கிருஷ்டமும் மதிக்கத் தக்கதுமான லஜ்ஜை, அடக்கம், மானம் முதலிய குணங்களும் மற்ற தேசஸ்திரீகளிடத்தில் காட்டிலும் எவ்விதத்திலும் குறைவல்லவென்றும், நாம் நமது ஸ்திரீகளின் குணங்களைக் கொண்டாடத்தக்கது நியாயமென்பதில் ஸந்தேகமில்லை. கிரகஸ்த தர்மங்களுக்கும், கிரகஸ்தாச்ரமத்துக்குரிய ராஜஸ தாமஸகுணங்கள் குறைந்து ஸாத்விகம் மேலிட்டு இருக்கும் ஸுகங்களுக்கு அனுகூலமான நாகரிகம் பெற்ற பயிற்சிகள் ஸ்வாபாவிகமாய் ஸம்ஸர்க்கத்தாலும் ஸகவாஸத்தாலும், அந்தந்த குடும்ப பிராசீந அநுஷ்டான வாஸனைகளாலும் ஸ்திரமாக நமது ஸ்திரீகளிடம் இருக்கின்றனவென்று நம் யாவருக்கும் தெரிந்தவிஷயமே. ஜாஸ்தியாய் அக்ஷராப்யாஸர்களாய் நமது கிரகஸ்த ஸ்திரீகள் இல்லையென்று ஒருகால் சொல்ல அடுக்கும். அக்ஷராப்பியாஸமும் இதரதர்மாநுஷ்டாநுகுணமாகவும் ஸ்திரீ ஜாதிகளுக்கு அத்யந்தம் ஆவசிகமான மற்ற குணாநுரூபமாகவும் கற்பிக்கவேண்டியது மிகவும் நியாயமே. ஆயினும் கேவலம் கிரந்த ரசந ஸாமர்த்யத்தாலாவது, ஸதஸ்ஸில் உபந்யாஸம் பிரஸங்கம்

செய்யத்தகுந்த வல்லமையினாலாவது கிரந்தாவலோகநம் செய்யக்கூடியமகிமையினாலாவது மனுஷ்யர்களுக்குப் பயிற்சி உண்டாக வேண்டும் என்கிற நியமமும் இல்லை. இவைகள் அவ்வயபசரிதமாக பரஸ்பர ஸத்காரிகளாயும் இருப்பதாகத் தெரியவில்லை. படிப்பு குணப்பயிற்சிக்கும் அபிவிருத்திக்கும், ப்ரதாநமான காரணம் என்பதில் ஸந்தேகமில்லை யாயினும், அது ஸ்திரீகளுக்கு ஸ்வரூப லக்ஷணமான பிரதான குணங்களுக்கு ஸங்கோசம் வர எவ்வித ப்ரகாரங்களாலும் அவகாசமில்லாதவாறு, ஸ்திரீ ஸ்வரூப ஸ்வபாவமான ஸ்வதர்மங்களில் சிரத்தையும் அபிமானமும் ருசியும் உண்டாகும் விதமும் அவைகளுக்கு லோபகந்தமு முண்டாகாதவிதமாயும் கல்விகற்பிக்க வேண்டியதென்று விஜ்ஞாபிக்கின்றேன்.

## வேதாந்த தீபிகை.

இப்படிப்பட்ட அநிஷ்டங்களை நிவர்த்திக்கத் தகுந்த உபாயங்களைத் தேடி வரவேண்டியது நம் ஸபையின் முக்கிய தாத்பர்யமாக இருக்கவேணும். இந்த மஹாகார்யத்தை நடத்த வேண்டியதின் பொருட்டு சிஷ்யஸபையார் உபக்ரமத்திலேயே "வேதாந்த தீபிகை" என்று பெயர்பெற்ற ஒரு மாஸ ஸஞ்சிகையை பிரஸித்தம் செய்துவருகின்றார்கள். அதில் காயிக மாநஸிக ச்ரமங்களையும், த்ரவ்ய லோபங்களினால் ஏற்படும் கஷ்டங்களையும் சந்தோஷமாக ஸஹித்து, மஹா மநஸ்விகளான உ-ஹ-ய. ஸ்ரீ. திவான் பகதூர். ரங்காசாரியர், ராஜகோபாலாசாரியர், வாஸுதேவாசாரியர் முதலான லௌகிக வைதிக ஜ்ஞாநத்தையுடைய ப்ரபுக்களும், மற்றும் சில பண்டிதர்களும் விசேஷ உபகாரங்களைச் செய்து வருகின்றார்கள். இதில் ஸர்வர்களுக்கும் ஹ்ருதயங்கமமாயும் விஷய கௌரவத்தாலும் மாதுர்யத்தாலும் ஸுந்தரமாயுமுள்ள வாக்ஜரிகளாலும் அநுமோதிக்கும்படியான வ்யாஸங்கள் விசேஷமாக ப்ரஸித்தம் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீமத் ஆசார்ய விபவங்களையும் ஸ்ரீ வைஷ்ணவாநுஷ்டாந உத்கர்ஷங்களையும் ஆசார்ய சரித்ரங்களையும் யாவரும் அறிந்து ஆநந்திக்கும்படி விவரணங்கள் செய்யப்படுகின்றன. இந்தப் பத்ரிகையை வெளிப்படுத்தும் ஸ்வாமிகளுக்கு நமது க்ருதஜ்ஞதையை அளிக்க வேண்டியது நமதுகடமை. இந்த க்ரந்தத்தில் ஸாரதமமான



சில அம்சங்கள் ஸாமாந்யஸ்திரீபாலர்களுக்கும், ஸம்ப்ரதாய வாஸனையில்லாத சில பாச்சாத்ய கலாவ்யுத்பந்நர்களான ப்ரபுக்களுக்கும் கொஞ்சம் துரூஹமாயிருக்கலாமென்று சிலர் அதிசங்கை செய்கின்றார்கள். ஆகையால் அப்படிப்பட்ட விஷயங்களில் கொஞ்சம் மணிப்ரவாளரீதியை ஸங்கோசித்துச் சற்று லளிதமான ரசனையுடன் வ்யாஸங்கள் ஏற்பட்டால் யாவருக்கும் உபயோகமாக இருக்கும். மேலும் ஸ்வதந்த்ரமாக ஸம்ப்ரதாய விஷயமாய் சில வ்யாஸங்கள் ஆங்கிலேயபாஷையிலும் ஏற்படுமேயானால் அவை ஆங்கிலேய காலேஜுகளில் வித்யாப்யாஸம் செய்யும் பிள்ளைகளுக்கும், கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கும், மிக உபயோகமா யிருக்கும். ஆகையால் இந்த பத்திரிகையை மேன்மேலும் விருத்தி செய்வித்து சந்தாதாரர்களையும் ஆயிரக்கணக்காய் சேர்த்து வ்யாஸங்கள் மூலமாய் சாஸ்திர சிஷ்டாசாரங்களை ப்ரசாரப்படுத்துவது நமது பாகவதோத்தமர்களுக்கு உரித்தானவும் பகவந்முகோல்லாஸகரமுமான வ்ருத்தியாகும்.

## ஸ்ரீ மடாதிபதிகளும் கோவிலதிகாரிகளும் செய்யக்கூடியது.

இது நிற்க, இந்த விஷயத்தில் நமது ஸ்ரீ ஸந்நிதி மடங்களிலும் தேவாலயங்களிலும் நிர்வாஹகர்களான ஆசார்யர்களும் மற்றவர்களும் ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு உபகரிக்கக்கூடிய பிரகாரங்கள் அநேகம் உள்ளன. சாஸ்த்ர ஜ்ஞாநோபயுக்தமாயும் லௌகிக வ்ருத்திக்கு உபயோகமாயு மிருக்கும் கீர்வாண பாஷையையும், ரிஷிகளாலும் ஆழ்வார் ஆசார்யர்களாலும் ஸகலபாவநமாய் பரிக்ரஹிக்கப்பட்ட தமிழ்பாஷையையும், லௌகிக வ்ருத்திக்கும் தேசவ்ருத்திக்கும் மேன்மைக்கும் காலாநுகுணமாய் அத்யந்தம் அவச்யமான ஆங்கிலேய பாஷையையும்சேர்த்து நமது தேசத்தவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும், ஆசாரங்களிலும் அநுஷ்டாநங்களிலும் சிக்ஷிக்கத்தக்க ஸ்வயம் நிஷ்டையையுடைய மஹாந்களை அங்கங்கு ஏற்படுத்தியும், இப்பொழுது உண்டாகும் அதிக்ரமங்களை க்ரமேண குறைக்க முயலவதுதான் முக்கியமாக ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் செய்யவேண்டிய கார்யம். அவ்வாறு ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு ஏற்ற பாடசாலைகளை ஊர்ஜிதப்படுத்தி அதற்கு சிஷ்டர்

களை நியமித்து ஸர்வகாலமும் பாடசாலைகளில் கற்கும் சாஷயா களை வர்ணாச்ரமாநுஷ்டாநங்களில் வர்த்திக்கும்படி செய்வது மேன்மையாகவிருக்கும். ஸ்ரீ ஸந்நிதியின் வருமானங்களில் ஒரு பாகம் இந்த விஷயத்தில் விநியோகப்படுத்தப்பட்டால், ஸந்நிதிக்கு விசேஷ மேன்மையும் ஸ்ரீந்ருஸிம்ஹன் உகந்தருளவும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய பரமைகாந்திகளுக்கு வ்ருத்தியுபாயமாயும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் தழைக்கவும் ஹேதுவாயிருக்கும்.

இப்படி பல கார்யங்களுக்கு அநுகூலமான இந்த ஸபை, ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியிலும் இன்னும் ஆசார்யர்கள் ஸந்நிதியிலும் ஸவிநய ப்ரணாமங்களுடன் உசிதமான விண்ணப்பங்களைச் செய்து ஸம்ப்ரதாய ரக்ஷணத்துக்கு வேண்டியபவிதமாய் முயற்சிகள் செய்ய, பல்லாண்டு பல்லாண்டாக அபிவ்ருத்தியடைந்துவர கடாக்ஷித்தருளும்படி இந்த மஹா ஸதஸ்ஸைப் பிரார்த்திக்கின்றேன்.

இது விஷயத்தில் விஜ்ஞாபிக்கக்கூடிய அம்சங்கள் இன்னும் எவ்வளவோ இருந்தும், விசேஷ ஜ்ஞாநவைபவம் பெற்ற ஸூக்ஷ்மதர்சிகளான ஸதஸ்யர்களுக்கு அல்பஜ்ஞனான தாஸன் அவைகளை விஸ்தரிக்கவேண்டியது அநாவச்யம். ஏதோ ஸ்தாநாநுகுணமாக விஜ்ஞாபநம் செய்கிறது என்கிற ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்து அடியேன் ப்ரஸ்தாபிக்கப்புகுந்த விஷயங்களில் குறைவான அம்சங்களைப் பூர்ணம்செய்துகொண்டும், தோஷமான அம்சங்களைத் தள்ளி, அவைகளில் குணாவிஷ்கரணங்களைச் செய்தும், குழந்தையின் மழலைச்சொல்லை மாதாக்கள் அபிநந்திக்கிறது போல் அடியேன் அதிப்ரஸங்கங்களை க்ஷமித்தருளப் பிரார்த்திக்கிறேன். இவ்வளவு காலம் அடியேனுடைய ஸம்பாஷணங்களைப் பொறுத்துத் திருச்செவிசாற்றி அடியேனைக் கௌரவப்படுத்தினதை எப்பொழுதும் மறவாமல் வர்த்திக்கிறேனென்று திருவுள்ளம் பற்றப் பிரார்த்திக்கிறேன்.

ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸபையின் நோக்கங்கள்.*

க்ஷுண்ணோத்தம் விநதவாஞ்சித ஸம்ப்ரதாநே-
ஷ்வாஸ்ரிதம் கநகவல்லிகயா ஸநாதம் ।
ஸ்ப்ருஷ்டாவநம் ந ஹ்ருதயஸ்ய ஹி தைவதம்
ஸ்ரீவீரராகவ ஹரிம் ஹ்ருதயம் நமாமி ॥

ஸ்ரீமத்ருஸிம்ஹ விஹிதே ஸுபதே ஸதாநாம்
வாசாம் ப்ரவாஹ தருணீ நிரஸ்த தோஷாம் ।
வேதாந்த வேத்ய ஜயந்து ப்ரணதோஸ்மி நித்யம்
ஸ்ரீநாத யாமுந யதீஶ்வர தேஶிகேந்த்ராந் ॥

இங்கு ஸபைசேர்ந்திருக்கும் அபேக்ஷ வித்வாங்களுக்கும் மஹாங்களுக்கும் ப்ரணாம பூர்வகமான விஜ்ஞாபநம். இந்த ஸபை ஆரம்பித்த 5-வர்ஷத்துக்கு மேற்பட்ட காலத்தில், இந்த ஸபையார் செய்ய உத்தேசித்து ஒருவாறு நிறைவேறிவந்திருக்கிற அம்சங்களையும், இனி இந்த ஸபையாருக்குக் கர்த்தவ்யமான அம்சங்களையும் பற்றிக் கிஞ்சித் உபந்யஸிக்க வேண்டி, ஸ்ரீ அக்ராஸநாதிபதியின் இனிமையான உபந்யாஸத்தைக் கேட்ட தேவரீர்களுக்கு ஒருகால் அருசிகரமாயிருக்குமாகிலும், ப்ரக்ருதத்துக்கு உசிதமாகுமென்று தோன்றுவதால், ஸபையின் கார்ய நிர்வாஹகர்களுக்காக அடியேன் சில விஜ்ஞாபநங்களைச் செய்யத் துணிகிறேன். முதலில் ஸ்ரீ அக்ராஸநாதிபதி ப்ரஸ்தாவித்த

ஸப்யர்களுக்கு வந்தநம்.

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் ஸ்ரீ திருவெவ்வுளூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் ஐந்தாவது மஹாஸபையில் ஸ்ரீ. உ. வே. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

இரண்டு விஷயங்களை அடியேனும் கொஞ்சம் அநுவதிக்க நியமநத்தை ப்ரார்த்திக்கிறேன். முதலாவது,

**தத்கால யுத்தம்.**

[illegible]யால் பூபாரம் தீரவேணுமென்று எண்ணி உண்டானதுபோலிருக்கிற தாத்காலிக மஹா யுத்தம், நாம் கேள்விப்பட்ட மஹாபாரத யுத்தத்தைக் காட்டிலும் மிகவும் பெரியது. முன் யுத்தத்தில் 18 - அக்ஷௌஹிணீகள், அதாவது சுமார் 36 - லக்ஷம் யோதர்களும் ரதகஜதுரகங்களும் சண்டையிட்டன. இப்போது நடக்கும் யுத்தத்திலோ, ஒரு திறத்திலேயே இங்கிலீஷ்காரர்களுக்குச் சுமார் 30 - லக்ஷமும், ப்ராஞ்சுக்காரர்களுக்குச் சுமார் 40-லக்ஷமும், உருஷியர்களுக்குச் சுமார் 50 - லக்ஷமும் வீரர்கள் சேர்ந்திருக்கிறார்கள். எதிரிகளில் ஜர்மானியர்களுக்கு 60 - லக்ஷமும், ஆஸ்த்ரியர்களுக்கு 30 - லக்ஷமும் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி இருதிறத்திலும் 200-லக்ஷத்துக்கு மேற்பட்டு பரஸ்பர ஜயத்துக்கு உத்யுக்தர்களாயிருக்கிறார்கள். இந்த பயங்கரமான யுத்தத்தில் ஜீவநாசகர ஸாமக்ரீ முற்காலத்து யுத்தத்தைக் காட்டிலும் பஹுமடங்கு அதிகமாயிருக்கிறது. வெடிமருந்து சேர்ந்த பெரிய யந்த்ரங்கள் 20,25 - மயில் தூரத்திற்கு அப்பால் உள்ள கோட்டை கொத்தளங்களை இடிப்பதும், சல்ய வர்ஷணங்களான Bombs என்னும் லோஹ கோளங்கள் ஏககாலத்தில் ஆயிரம் பேர்களை ஹதமாக்குவதும், மோஹகரமான Asphyxiating gas என்னும் ஆவியால் பூர்ணமான பஸ்த்ரிகைகள் போர்வீரர்களுக்கு மதிமயக்கத்தையும் ஹிம்ஸையையும் ஜநிப்பிப்பதும், ஆகாசயாநங்களில் ஸஞ்சரிப்பவர்கள் யதேச்சையாய் யுத்தாநர்ஹமான ஸாது ஜநங்களையும் ஹிம்ஸிப்பதும், ஸமுத்ரங் களில் வ்யாபாரார்த்தமாய் ப்ரவர்த்திக்கும் கப்பல்களையும் அதிலுள்ள ஜநங்களையும் அகஸ்மாத்தாய் க்ஷணத்தில் Sub marine என்னும் அந்தர்ஜ்ஜலகோராயுதங்கள் க்ஷணத்தில் முழுக அடித்துக் கொல்வதும், இன்னமும் இதுபோன்ற பல அக்ருத்யங்கள் இந்த யுத்தத்தில் நடந்துவருவதை நினைத்தால், முன் மாயிகளான அஸுரராக்ஷஸாதி சத்ருக்கள் இதிஹாஸ புராணங்களில் செய்ததாகச் சொல்லப்படுகிற கூடயுத்த ஸாஹஸங்கள் மிகவும் அல்பங்களாயும் பொறுக்கக்கூடியவைகளாயும் ஆகின்றன. மேலும்முன் யுத்தத்தில் மநு யாஜ்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகளிலும், சுக்ராசார்ய கௌடில்ய காமந்தகீயாதி சாஸ்த்ரங்களிலும், அதர்மயுத்தத்தை நிந்தித்திருப்பதுபற்றி தர்ம யுத்தமே ப்ராயிகமாய் நடந்துவந்தது.



''𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇''

என்று கீதாசார்யன் சொல்லியிருக்கிறார். மேலும்,

'' 𑌤𑌵𑌾𑌹𑌂𑌵𑌾𑌦𑌿𑌨𑌂 𑌕𑍍𑌲𑍀𑌬𑌂 𑌨𑌿𑌰𑍍𑌹𑍇𑌤𑌿𑌂 𑌪𑌰𑌸𑌂𑌗𑌤𑌂 ।
𑌨𑌹𑌨𑍍𑌯𑌾𑌦𑍍 𑌵𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌂𑌚 𑌯𑍁𑌦𑍍𑌧𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌕𑌾𑌦𑌿𑌕𑌂 ॥ ''

என்று மநுயாஜ்ஞவல்யாதிகளும்,

𑌨𑌪𑌾𑌨𑍀𑌯𑌂 𑌵𑌿𑌷𑌯𑍁𑌤𑌂, 𑌨𑌶𑌯𑌾𑌨𑌂, 𑌨𑌪𑌾𑌨𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌸𑌕𑍍𑌤𑌂, 𑌨𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌹𑌾𑌰𑍇𑌣, 𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌂, 𑌨𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌂, 𑌨𑌵𑌾𑌜𑌿𑌨𑌂, 𑌨𑌸𑌾𑌰𑌥𑌿𑌂, 𑌨𑌦𑍂𑌤𑌂, 𑌨𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌰𑌾𑌜𑌾, 𑌸 𑌨𑍍𑌯𑌾𑌯𑌃 ''

என்று சங்கரும், இப்படிப் பல மஹர்ஷிகள் அதர்ம யுத்தத்தை நிந்தித்திருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் நம்முடைய சத்ருக்களோ அதர்ம யுத்தமே பீதிகரமாய் ஜயாவஹமாகு மென்று கருதி, அதை விடாமல் செய்துவருகிறார்கள். அவர்களை யடக்க, நம் ராஜாக்கள் அது போன்ற யந்த்ராதிகளை உபயோகித்தாலும், தர்மசிந்தை யுள்ளவர்க ளாகையால், அக்ரமமான கார்யங்கள் ஒன்றையும் செய்யவில்லை. இப்படி தர்மயுத்தம் செய்து லக்ஷம் லக்ஷமாய் சரீரங்களை யுத்தத்தில் விடுகிற வீரர்கள் நல்ல கதியை யடைவார்கள்என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் ப்ராயேண இந்த யுத்தத்தினால் அவயஹாநி இல்லாமலும் பொருள் நஷ்டமும் தேசஹாநியும் அடையாத நம்போன்றவர்கள் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. தர்மயுத்தம் செய்துவரும் நம் ஆங்கிலேயர்களும் அவர்களுக்கு உதவியான ப்ராஞ்சு ருஷியா தேசத்தவர்களும் சீக்ரம் விஜயம் பெற்று இந்தக் கோரயுத்தத்தை முடிக்கவேணுமென்று தேவாஸுர ஸமரவிஜயியான பகவாந் நாராயணனை நாம் நிரந்தரம் ப்ரார்த்திக்க வேண்டும். தநவ்யயத்தையும் ப்ராணவ்யயத்தையும் கணக்குப பாராமல் ரக்தத்தையும் தங்கத்தையும் ஜலம்போல் வாரி இறைக்கும் மஹாமதிகளான நம் அரசர்களுககு நம்முடைய உறுதியான விச்வாஸத்தையும் க்ருதஜ்ஞதையையும யதாசக்தி த்ரவ்யோபகாரத்தையும் பூர்ணமாய்

வெளியிடவேணும். இந்த யுத்தத்தில் ஜயமுண்டாகும் வரையில் உத்ஸாஹம் குறையாமல் யுத்தம்செய்து சத்ருக்களின் கர்வத்தை அடக்கினாலொழிய, இதர தேசங்கள் உஜ்ஜீவித்து க்ஷேமத்தை அடைய மார்க்கமில்லை யாகையால், இந்த மஹாயுத்தம் நிற்கும் வரையில், நாமும், நம்மைப்போன்ற இதர தேசத்து ஆங்கிலேய ப்ரஜைகளும், ஜாகரூகர்களாய் நம் சரீரம் நீங்கலாக மற்றெல்லா தநங்களையும் ராஜவசமாக்கியாவது இந்த யுத்தத்தில் ஜயத்தை ஸாதிப்பது ஸ்வதர்மமாயும் ஆத்மஹிதமாயும் அநிவார்யமாயும் எண்ணப்படவேணும். இந்த விஷயத்தில் நாம் ஏகோபித்து ராஜாங்கத்தாருக்கு நம்முடைய விச்வாஸத்தையும் உறுதியையும் வெளிப்படுத்தி ஒரு தீர்மாநத்தைச் செய்து அனுப்பவேண்டியது ஆவச்யகம்.

சென்ற வர்ஷத்தில் நம் ஸபைக்கு முக்ய ஸஹ்ருத்தாயிருந்து பரமபதத்தை யடைந்த ஸ்ரீமாந் ராகவாசார்யரின் குணங்களைக் கொஞ்சம் ஸ்மரிப்பது இந்த ஸபைக்கு யுக்தமாகிறது. ஐந்து வர்ஷகாலமாக அந்த மஹாநுபாவருடன் அடியோங்கள் ப்ராத்ரு துல்யமாய்ப் பழகினோம். அவருடைய மதி வைபவத்தையும், பகவத்பக்தியையும், அக்ருத்ருமமான பாகவத விச்வாஸத்தையும், அந்யாத்ருசமான உத்ஸாஹத்தையும், அசைக்கக்கூடாத தைர்யத்தையும், குறைவற்ற பொறுமையையும், தீர்க்கதர்சித்வத்தையும், ஸர்வரஞ்சகதையையும், கர்த்தவ்யங்களில் அந்தகாமித்வத்தையும், ஸௌலப்யத்தையும் இன்னும் அடியேனுடைய வாக்குக்கு அகோசரமான குணாதிசயங்களையும் எண்ணி, அடியேனும் அடியேனைப்போன்ற மற்ற ஸபை கார்யாதிக்ருதர்களும் அங்கத்தினர்களும் அடைந்திருக்கும் துக்கம் ஏராளமானதாகவே இருக்கிறது. இரண்டு வர்ஷங்களுக்குமுன் ஸ்ரீ அஹோபிலத்தில் ஸபை சேரும்படிசெய்து, நம்மில் அநேகர் அந்தத் தூரதேசத்துக்குப் போய் ஸ்ரீந்ருஸிம்ஹனை ஸேவிக்கும்படி செய்த பரிச்ரமத்தையும் உத்ஸாஹத்தையும் நினைத்தால், ஸ்ரீ ராகவாசார்யரின் மஹோபகாரத்தை நம் காலம் உள்ளவரையில் நாம் மறக்க இடமில்லை. ஆகையால் பகவந்நியமநம் இப்படி இருந்ததை ஸஹித்து, நாம் கூடின இந்த ஸமயம் அவர் வியோகத்தால் இந்த ஸபைக்குண்டான சோகத்தையும், அவரால் நாமடைந்த பரமோபகாரங்களையும், அவைகள் நம் சிந்தையிலிருந்து ஒருகாலும் மாறாதென்பதை



யும் விவரித்து, அவருடைய ஸமீப பந்துக்களுக்கு நம் துக்கநிவேதநத்தை ஒரு தீர்மாநரூபமாகச் செய்யவேணும் என்றும் ப்ரார்த்திக்கிறேன்.

**ஸபையின் உத்தேசங்கள்.**

சென்ற ஐந்து வர்ஷங்களில் இந்த ஸபை இரண்டு நோக்கங்களை முக்யமாய் வஹித்திருந்தது. அதாவது, யதாசக்தி ஸ்ரீஅஹோபில மடத்தின் லௌகிக ஸாம்ப்ரதாயிக கார்யங்கள் சரிவர நடக்க வேண்டிய விஷயமாய் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கு தத்தத்காலோசிதமாக விஜ்ஞாபநம் செய்யவேணுமென்றும், ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தின் வ்ருத்தியை யதாசக்தி தேடவேண்டுமென்றும் ஆகிய இந்த இரண்டு விஷயங்களே. இவைகளில், ப்ரதம விஷயத்தில் இந்த ஸபையின் வ்யக்ரதை ப்ராயேண தெரிந்த விஷயமே. ஸாதாரண வர்ஷம் சித்திரை மாஸத்தில் ஸபை சேர்ந்து, அந்த வர்ஷம் அக்டோபர் மாஸத்தில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருமேனி தளர்ந்த ஸமயத்தில் ந்ருஸிம்ஹபுரத்துக்குச் சில பேர்கள் போய்க் கூடி ஸ்ரீ அழகிய சிங்கரிடம் சில விஜ்ஞாபநங்கள் செய்தோம். பிறகு நடந்த பரிணாமத்தால் அந்த விஜ்ஞாபநங்கள் ஸபலங்களாகவே யாயின. பிறகு அந்த வர்ஷத்திலும் மறு வர்ஷங்களிலும் தஞ்சாவூர், நீடாமங்கலம், மதுராந்தகம் முதலான இடங்களில் வார்ஷிக ஸங்கங்கள் சேர்ந்து ஸந்நிதி விஷயமாய்ச் சில சீர்திருத்தங்கள் செய்வது உசிதமென்றும், அவைகளை ஸ்ரீ அழகிய சிங்கர் செய்துவைக்க வேணுமென்றும் ப்ரார்த்தித்தோம். இந்த அம்சம் இன்னும் நிஷ்பத்தியாகாவிட்டாலும் இந்த ப்ரார்த்தநை யுக்தமாகையாலும் த்ரவ்ய ரக்ஷணம் எல்லாருக்கும் அபீஷ்டமாகையாலும் இதில் பலம் விளம்பித்தாவது கிடைக்குமென்று நம்பியிருக்கிறோம்.

“ 𑌨𑍇𑌹𑌾𑌭𑌿𑌕𑍍𑌰𑌮𑌨𑌾𑌶𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ”

என்கிற ந்யாயம் இதற்கும் அநுகுணம். ஆனால் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்கள் அநேக ஆயிரங்கள் இருந்தபோதிலும், அதில் பரதாம்சமாவது நம் ஸபையில் சேர்ந்து மடத்தின் ஸொத்துக்களும் த்ரவ்யங்களும் வ்யர்த்தமாகக்கூடாது என்கிற எண்ணம் பிரபலித்து, உத்கோஷத்துடன் அர்த்த பரிபாலநத்துக்கு யுக்தமான அம்சங்களை ஒருமித்து ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம்செய்தால், அது

பலிக்காமல் போகாது. ஆனால் சில சிஷ்யர்கள் விசேஷமான ஆலஸ்யத்தினாலோ, ந்ருஸிம்ஹன் த்ரவ்யங்களை ந்ருஸிம்ஹனே பார்த்துக்கொள்ளட்டும் என்கிற அநாதரவினாலோ, ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் த்ரவ்ய ஹாநியில் தாத்பர்யமுள்ளதாயிருக்கும் என்கிற ப்ரமத்தால் அது விஷயத்தில் ப்ரவர்த்திக்க அநிஷ்டத்தாலோ, அல்லது எப்படி ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருவுள்ளமிருந்தாலும் அது தங்களுக்கு ப்ரமாணமென்கிற அபிநிவேசத்தாலோ, ஆசார்ய பக்த்யதிசயத்தை உசிதத்துக்கும் தத்கால ரீதிக்கும் அநுகுணமான விதமாய்க் காட்டி, இந்தக் காரணங்களினால் அடியோங்களின் ப்ரயத்னங்களில் சிலர் உதாஸீனர்களாயும் சிலர் தோஷக்ராஹிகளாயும் இருந்துவருகிறார்கள். இது யுக்தமான கார்யமல்ல. விசேஷமான பூமிகளையும் த்ரவயங்களையும் ஸ்ரீ அழகிய சிங்கர் துரீயாச்ரமமடைந்தும் பரிபாலிப்பது ஸம்ப்ரதாய வ்ருத்திக்காகவும் சிஷ்யவர்க்கங்களுடைய ஆமுஷ்மிக ச்ரேயஸ் ஸாதனங்களான கார்யங்களை ஸம்பாதிக்கவும் தான். இந்த உத்தேசங்களுக்கு அநுகுணமில்லாத த்ரவ்ய வ்யயங்களும், சிஷ்யர்கள் அபிஸந்தியையும் நன்மையையும் உபேக்ஷிப்பதும் ஸ்ரீ ஸந்நிதிக்குக் குறைவாகவே முடியும். ஆகையால் இந்த விஷயத்தில் இந்த ஸபையார் செய்து வந்ததும் இனிச் செய்யப்போகிறதும் பஹு சிஷ்யஹிதமானதாகவே எண்ணிச்செய்கிற கார்யம். ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்தானத்தில் எழுந்தருளுகிறவர்கள் ஜ்ஞாநாநுஷ்டான வைராக்ய ஸம்பன்னர்களாயிருப்பதே ஸ்ரீ ஸந்நிதியின் கௌரவத்துக்கும் ச்ரேயஸ்ஸுக்கும் தகுந்தது. ஆகையால் இந்த விதமான ஸ்வாமிகள் எழுந்தருளவேணுமென்றும், அதற்குப் பூர்வாங்கமாக சிஷ்ய ஜனங்கள் அபிப்ராயத்தைப் புது நியமன காலங்களில் ஸ்ரீ அழகியசிங்கர்கள் கலக்கவேண்டுமென்றும் உத்தேசித்து, இந்த எண்ணம் ஸித்திக்க 2 - வருஷங்களுக்கு முன் ஸிவில் கோர்ட்டில் இந்த ஸபையாரில் அநேகர்கள் முயற்சியால், சிலர் வாதிகளாய் நின்று, தாவா செய்யப்பட்டது. இதற்கு முன் எழுந்தருளியிருந்த மன்னார்குடி அழகியசிங்கர் திருநாட்டை அலங்கரிக்கவே, ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனாகிய இப்போது எழுந்தருளியிருக்கும் அழகியசிங்கர் ஆஸ்தானத்தை வஹித்து வருகிறார். இந்த ஸ்வாமி ஜ்ஞாநத்தாலும் அநுஷ்டானத்தாலும் வைராக்யத்தாலும் ஆஸ்திகதையாலும் சிஷ்



யர்களிடத்தில் ஹித புத்தியாலும் பகவத் பக்தியாலும் மிகவும் அபிவந்த்யராயும் ஸ்ரீ ஸந்நிதிக்குப் பூஷணமாயும் இருந்துகொண்டு தத்காலம் மேற்கு ப்ரதேசத்தில் யாத்ரையாய் எழுந்தருளியிருக்கிறார். இந்த அழகியசிங்கர் திருவுள்ளத்தில், ஸ்ரீ ஸந்நிதியின் அபிவ்ருத்தியே தமக்கு உத்தேச்யமாகவும், சிஷ்யர்கள் ஆநுகூல்யமே தன் க்ருத்யமாயும் நினைத்து வருவதாலும், ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தமாயுள்ள வ்யாஜ்யங்கள் அநிஷ்டமாயிருப்பதாலும், மேற்சொன்ன வ்யாஜ்யமும் இன்னமும் இரண்டொரு வ்யாஜ்யங்களும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுள்ளத்தையும் ஔசித்யத்தையும் அநுஸரித்து ஒருவாறாக ராஜி செய்யப்பட்டன. இனி சேஷமாய் நிற்கிற வ்யாஜ்யங்களும் ஔசித்யத்தை நாடி ராஜி செய்யப்படவேண்டுமென்றும், இதில் செலவாகிற தனத்தைத் திருப்பணிகளில் செலவழிப்பதில் தமக்குப் பூர்ணஸம்மதம் என்றும் அடியேனுக்கு நேரில் நியமனமானதுடன், ஸமீபத்தில் அடியேனுக்குக் கிடைத்த ஸ்ரீமுகத்தினாலும் விளங்குகிறது. உசிதஜ்ஞராயும் உபசாந்தராயும் ஸௌலப்ய பூர்த்தியும் சிஷ்யர்களிடத்தில் க்ருபையும் பொருந்தின அழகியசிங்கர், இனி இந்த ஸந்நிதியின் லௌகிக கார்யங்களையும், ஸபையின் முந்திய வர்ஷத்திய விஜ்ஞாபனங்களையும், இனி நாம் செய்யப்போகிற விஜ்ஞாபனங்களையும் செவிசாத்தி அப்யுபகமம் செய்து அநுக்ரஹித்து, பஹு ஸம்வத்ஸரங்கள் ஆஸ்தானத்தில் எழுந்தருளி இருந்து, ஆதிவண்சடகோபஸ்வாமி, ஷஷ்ட பராங்குசஸ்வாமி, ஶ. நேர்ப மஹாதேசிகன், பிள்ளைபாக்கம் ஸ்வாமி முதலானவர்கள்போல ஜ்ஞாநத்தாலும் விஜயயாத்ரைகளாலும் ஸ்ரீ ஸந்நிதியின் வைபவத்தை உத்தரோத்தரமாய் வ்ருத்திசெய்து ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளரச் செய்யவேணும் என்று பகவானை நாம் எல்லோரும் ப்ரார்த்திக்க வேண்டும்.

**ஸம்ப்ரதாய வ்ருத்தி.**

அடியேன் ப்ரஸ்தாவித்த இரண்டு உத்தேசங்களில் ஸம்ப்ரதாய வ்ருத்தி என்னும் அம்சவிஷயமாய் இந்த ஸபையார் செய்து வந்தது, வருஷாந்தங்களில் அங்கங்கே ஸதஸ்சேர்த்து பண்டிதர்களால் உபந்யாஸங்களை ஏற்பாடு செய்ததும், ‘வேதாந்த தீபிகை’ என்னும் பத்ரிகையை ப்ரசுரம் செய்துவருவதும் தான். நம்மில் அநேகர் ஸம்ப்ரதாய விஷயங்களில் ஜ்ஞாந ஸம்பாதனத்

துக்கு அவகாசமில்லாமலும், ஆசார்யர்களிருந்தும் அவர்களிடம் போய்க் காலக்ஷேபாதிகள் செய்ய ஸௌகர்ய மில்லாதவர்களாயும் சிலர் ஶ்ரத்தை மாந்த்யத்தால் இந்த விஷயத்தையே மநஸ்ஸில் வைக்காதவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் தந்தம் ஆசார்யர்களிடத்தில் க்ரந்தோபதேசங்கள் பெற்றாலும், அதற்குச் சிந்தநாரூபமாயும், அப்படி ஆசார்யோபஸதநம் செய்யாதவர்களுக்கும் இதரர்களுக்கும் ப்ரரோசனையை உண்டுபண்ணுவதற்காகவும் இந்த உபந்யாஸங்களும் பத்ரிகைகளும் உபகாரகமாகும். இதில் ஶ்ரத்தையுள்ளவர்கள் த்ரவ்யோபகாரத்தை விசேஷமாய்ச் செய்யும் பக்ஷத்தில், இந்த ஸங்க காலங்களில் வித்வத் ஸதஸ்ஸுகளும் பண்டித ஸம்மாநங்களும் ஏற்பாடு செய்வதுடன், நிரந்தரமாய் 2,3 - வித்வான்களை ஸபையின் உபந்யாஸகர்களாய் ஏற்பாடுசெய்து, அங்கங்கு க்ராமங்களில்போய் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் செய்யும்படி செய்யலாம். இதை உத்தேசித்தே சென்ற வர்ஷத்தில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமியை அடியோங்கள் ப்ரார்த்தித்து, பகவத்விஷயம் முதலான அம்சங்களை ப்ரதிவாரம் ஒருநாள் உபந்யஸிக்கும்படி ஏற்பாடு செய்தோம். இப்படிப்போன்ற இன்னும் சில ஸ்வாமிகளும் பற்பல விடங்களில் உபந்யஸித்து வருவார்களாகில், பஹுஜநங்களுக்கு உபகாரகமாயிருக்கும். இப்படிப்பட்ட ஸம்ப்ரதாய ப்ரசாரத்தைப் பூர்ணமாய்ச் செய்ய த்ரவ்யம் முக்யமாய் வேண்டும். ஆகிலும் தத்கால மிருக்கும் பண்டிதர்களுக்குப் பிறகு இந்த வைதிக ஸம்ப்ரதாயத்தை யார் ப்ரவர்த்திப்பிப்பார்களென்று நினைத்தால் மிகவும் சோககரமாயிருக்கிறது. அப்படிப்பட்ட துரவஸ்தை வராமல் ஸம்ப்ரதாயத்தைப் பாதுகாப்பது இந்த ஸபைக்கும் ஶ்ரத்தாளுக்களான ப்ரபுக்களுக்கும் முக்யமான கடமை.

**வேதாந்த தீபிகை.**

‘வேதாந்ததீபிகை’ என்னும் பத்ரிகை விஷயமாய் ஏற்கெனவே அக்ராஸநாதிபதி சொல்லி யிருப்பதாலும், நேரிலும் இங்கு எழுந்தருளி யிருக்கும் ஸ்வாமிகளுக்கு அதைப்பற்றித் தெரிந்திருக்கு மாகையாலும் அதிகமாய் அடியேன் அதுவிஷயம் விஸ்தரிக்க வேண்டுவதில்லை. இந்தக் காலத்தில் ப்ராசீந க்ரந்தங்களை



விட்டுப் படித்தவர்கள் எல்லோரும் பத்ரிகைகளையே சரணமாய்ப் பற்றி யிருக்கிறார்கள். நாம் ப்ரதிதிநம் பத்ரிகைகளை ப்ரதீக்ஷித்து ஸமாசாரங்களை அறிய ஶ்ரமப்படுகிறதுபோல், நம்முடைய அவஶ்யமான நித்யகர்மங்களிலாவது போஜநாதிகளிலாவது அவ்வளவு ஶ்ரத்தை வைக்கிறதில்லை. இப்படி அவஶ்யமாயிருக்கிற பத்ரிகை மூலமாகவே ஸர்வ ஜ்ஞாநங்களும் நம் மநஸ்ஸுகளில் ஏறவேண்டியது காலாநுகுணமாய் விட்டது. அநேக கேவல தேச ஸமாசாரங்களில்லாத விஷயங்களிலும் ஸாப்தாஹிகமாயும் பாக்ஷிகமாயும் மாஸிகமாயும் த்ரைமாஸிகமாயும் பத்ரிகைகள் ஏற்பட்டுவிட்டன. இந்த ரீதியை அநுஸரித்துத் தந்தம் உத்தேசங்களை ப்ரகடநம் பண்ணவும், தந்தம் விஷயங்களில் சர்ச்சைகள் செய்யவும் பத்ரிகைகளே இக்காலத்தில் அவஶ்யமாகிவிட்டன.

இந்த அநுஷ்டாநத்தை அவலம்பித்தே கொஞ்சம் அநுசிதமானாலும், பஹுஜந ஸௌகர்யத்திற்காக வேதாந்ததீபிகையிலும் ஸாம்ப்ரதாயிக விஷயங்கள் எழுதப்பட்டு வருகின்றன. பத்ரிகாரோபிதமான விஷயங்களை நாம் ஸௌகர்யப்பட்ட ஸமயங்களில் பார்க்கலாம். விஷய விமர்ஶத்தை த்வரைப்படாமல் செய்யலாம். நாமிருந்த விடத்திலேயே இருந்து செய்யலாம். தபால் மூலமாய்ப் பஹுஜநங்களுக்கு ஏககாலத்தில் விஷயம் ஹ்ருதயங்கமமாகும். இந்த ஸௌகர்யங்களை உத்தேசித்து ஏற்பட்டிருக்கும் பத்ரிகைகளில் ஒன்றான வேதாந்ததீபிகை, நம் ஸம்ப்ரதாயத்தில் ஒன்றே இதுவரையில் இருக்கிறது. ஐந்து வர்ஷமாய் இது நடந்துவந்தபோதிலும், இன்னும் நூற்றுக்கணக்காய்ச் சந்தாதாரர்கள் ஏற்பட்டால், இன்னும் இதை விஸ்தரித்துச் செவ்வையாய் நடத்தலாம். ஆகையால் இது விஷயத்தில் எல்லோரையும் க்ருபை செய்யும்படி பிரார்த்திக்கிறேன். மேலும் பத்ரிகை விஷயத்தில் பண்டிதர்களுக்கு ஒரு விசேஷ விஜ்ஞாபநம். நம் பண்டிதர்கள் தீபிகைக்கு எழுதும் விஷயத்தில் நிரம்பவும் ஸங்கோசிகளாய் இருக்கிறார்கள். ஒரு கால் பத்ரிகையில் வரும் ஸரளமான விஷயங்கள் தங்கள் புத்திவ்யாபாரங்களுக்கு அநர்ஹங்களென்றோ, அல்லது, ரஹஸ்யவிஷயங்களை ப்ரசுரம்செய்வது அநுசிதமென்றோ, அல்லது பத்ரிகையில் விந்யாஸ க்ரமம் அவர்கள் அப்யாஸத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லையோ, வேறு ஏது காரணமோ, இதுவரையில் பத்ரிகைக்கு விஷய ப்ரதாநம் செய்த ஸ்வாமிகள் மிகவும் ஸ்வல்பர்கள்தான்.

உ.ஸ. ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசாரியர், உ.ஸ. ஸ்ரீ. இஞ்சிமேடு ரங்கநாதாசாரியர், உ.ஸ. ஸ்ரீ. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஆகிய இந்த சில ஸ்வாமிகளைத் தவிர, மற்ற ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்களின் அநுக்ரஹம் இந்தப் பத்ரிகைக்கு இதுவரையில் விசேஷமாய்க் கிடைக்கவில்லை. இது ஆரம்பித்தது முதல் உ.ஸ. ஸ்ரீ. வாஸுதேவாசாரியரும், பிந்தி இரண்டு வருஷகாலமாய்த் திவான் பஹதூர் ரங்காசாரியர் ஸ்வாமியும் இந்த பத்ரிகைக்கு ஹஸ்தாவலம்பம் கொடுத்திராதபக்ஷத்தில், இதை ஏற்படுத்தின ஸபையார், இதை மேல்நடத்தும் விஷயத்தில் அப்ரக்தர்களாய் ஶோகார்ணவ மக்நர்களாகவே போயிருப்பார்கள். இந்த பத்ரிகை விஷயத்தில் க்ருபைசெய்து, அஶேஷ ஸ்ரீ வைஷ்ணவ வித்வாங்களும் இனி யதாசக்தி விஷய ப்ரதாநம் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

**ஸபையைப் பொதுவைஷ்ணவ ஸபையாக்குதல்.**

ஸ்ரீ மடத்தின் சீர்திருத்தத்தில் தத்காலம் எழுந்தருளி யிருக்கும் அழகியசிங்கர், சிஷ்ய விஜ்ஞாபநங்களுக்கு இசைந்து அநுக்ரஹிப்பார் என்கிற நம்பிக்கை இருப்பதினாலும், ஸம்ப்ரதாய வ்ருத்தியையே முக்ய நோக்கமாகக் கொண்டுள்ள இந்த ஸபையின் அபிப்ராயத்தில் ஸ்ரீ மடத்துச் சிஷ்யர்கள் மாத்ர மல்லாமல் எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸமமான ஆஸ்தையும் அபிஸந்தியுமுள்ளவர்களாகையாலும், இந்த ஸபைக்கு "ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை" என்கிற நிர்த்தேசத்தை மாற்றி "ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபை" என்றாவது "ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸபை" என்றாவது பெயர் வைத்து, இப்போதுபோல் மடத்துச் சிஷ்யர்கள் மாத்ரமே யல்லாமல் எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அங்கத்தினர்களாய் இருக்கக் கூடிய மாறுபாட்டையும், அதற்கு அநுகுணமான விதிகளின் மாறுபாட்டையும் செய்யவேணுமென்று இரண்டுவருஷ காலமாய் சில ஸுஹ்ருத்துக்களுக்கும் ஸபையின் நிர்வர்த்தகர்களுக்கும் அபிப்பிராயம் உண்டாயிருந்தது. இதை அநுஸரித்து இந்த வர்ஷத்தில் இந்த மாறுபாட்டைச் செய்யலாமென்று நிச்சயித்து, அதற்கநுகுணமாய் விதிகளையும் அமைத்து, நாளைக் காலையில் அங்கத்தினர் ஸபையில் விஜ்ஞாபநம் செய்ய உத்தேசித்திருக்கிறோம். இப்படி விஸ்தரிக்க வேண்டியதில் ஆவஶ்யகதையை ஸ்ரீ அக்ராஸநாதிபதியே எடுத்துச்சொல்லி யிருப்பதால் அதில் வக்தவ்யம் அதிகமாயில்லை. மடம் முநித்ரயம் என்கிற ஸம்ப்ரதாயங்களில் சில பேதங்கள் அமுக்யமான விஷயங்களில் இருந்தாலும், ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம் எல்லாம் அபிந்நமானதாலும் ஸம்ப்ரதாய பேதங்களில் ஆக்ரஹம் ஸர்வஜ்ஞர்களுக்கு விசேஷமாயிராதாகையாலும், எல்லா மறிந்த ஸப்யர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஐகமத்யத்தையே ப்ரதாநமாய்க்கொண்டு இந்த ஸபையில் இரண்டு ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து இதை மேல் நடத்திவரும்படி நிர்ணயிப்பார்களென்று நம்புகிறேன். ஒவ்வொரு ஸம்ப்ரதாயத்திலும் ஆசார்ய பரம்பராபேதம் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு ஸ்வாசார்யனை பூஷிப்பதுடன் இதராசார்யரை தூஷிப்பதும் அநாதரம் செய்வதும் ஸ்ரீ வைஷ்ணவ தர்மமில்லையே! ஆகையால் இரண்டு ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஸ்வாசார்யத் தனியன்களை ஸ்வக்ரந்த காலக்ஷேபாவஸரங்களில் அநுஸந்தித்தாலும் பரஸ்பரம் ஸம்பந்தாதிகள் செய்து ஸ்நேஹ ப்ரவ்ருத்திசெய்வதுபோல் ஸம்ப்ரதாய வ்ருத்தியிலும் அதற்காக ஏற்பட்ட ஸபையிலும் ஒன்றுசேர்ந்து ஸபையின் உத்தேசங்களை ஏகமுகமாய்ச் செய்ய யத்நிக்க வேணும்.



இப்படி இரண்டு வடகலை ஸம்ப்ரதாயங்களையும் ஒன்று சேர்த்து ஸபை ஸம்பந்தப்பட்ட விஷயங்களில் ப்ரவர்த்திக்கச் செய்வது மாத்ரமே போதாத கார்யம் என்றும், ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை அநுஸரித்த தென்கலை வடகலை என்னும் இரண்டு ஸம்ப்ரதாயஸ்தர்களையும் ஒன்று சேர்ப்பதுதான் உத்தமமான காரியம் என்றும், அந்த நிஷ்பத்தியில் சில ஶ்ரமங்களிருந்தாலும் துஸ்ஸாத்யமான தொன்றுமில்லை யென்றும், அப்படிச் செய்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஐகமத்யம் பரிபூர்ணமாகி இதர மதஸ்தர்களுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் கௌரவம் விசேஷிக்குமென்றும், தத்காலத்தில் நாம் ஒரு ஆளுகையில் வர்த்திப்பதன் மூலமாய் ஸர்வஜ நாநுகூல்ய புத்தியுண்டாவதற்குப் பேதங்கள் வரவரக் குறைய வேண்டியது அவசியமென்றும், இந்தப் பேதங்கள் இருப்பதாலும் தத்ப்ரயுக்தமான மாத்ஸர்யங்கள் ஏற்படுவதாலும் நமக்குள் விவாதங்கள் உண்டாகவும், ஸ்ரீ அக்ராஸநாதிபதி விவரித்த வண்ணம் நாம் பரிபவப்படவும், இதரர்கள் நம்மை ஹேளநம் செய்யவும் ஆஸ்பதமாயிருக்கிறதென்றும், நாம் இந்த பேதங்களைக்

குறைக்க முயல்வதே யுக்தமென்றும், அதற்காக இந்த ஸபையை ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் பொது ஸபையாகச் செய்வதற்கு இதுதான் தருணமென்றும், எல்லா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயங்களிலுள்ள சில ஸுஹ்ருத்துக்கள் அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார்கள். ஆகையால் தேவரீர்களுக்கு விஜ்ஞாபநம் செய்யப்போகிற விதிகள் அப்படிப் பொது ஸபைக்கு அநுகுணமாகவே இருக்கும். இந்த ஸபையில் எழுந்தருளி யிருக்கும் வடகலை தென்கலை ஸ்வாமிகளுக்கு இது யுக்தமென்றும், இங்கு எழுந்தருளியிராத இதர ஸ்வாமிகளும் அபிநந்திக்கக்கூடியதாயிருக்கும் என்றும், ஸாமாந்யமாய் ஸம்ப்ரதாய பேதங்கள் இருந்தாலும் பொதுவாய் ஸாத்யமான அம்சங்கள் அநேக மிருக்குமென்றும், மாத்ஸர்யம் விரோதம் முதலானவை இல்லாமல் ஸபையைப் பொதுவாக்கலாமென்றும் எண்ண முண்டானால் அந்தப்படிச் செய்வதில் அடியேனுக்கும் இஷ்டம். அப்படிச் செய்வதினால் உடனே வடகலையார் ஸ்ரீ நிகமாந்ததேசிகனையாவது தென்கலையார் மணவாள மஹாமுனியையாவது த்யஜிக்க வேண்டிவரும் என்கிற ப்ரமம் வேண்டாம். அவரவர்கள் ஆசார்யர்களிடத்தில் பக்திக்கும் ப்ரதிபத்திக்கும் குறைவொன்று மில்லாமலிருக்கச்செய்தே இதராசார்யர்களிடத்தில் அத்வேஷமும், அவர்கள் வைபவஶ்ரவணத்தில் ஸஹநமும், அவர்கள் உத்ஸவாதிகளில் அகேதமும் பொதுவான ஆழ்வார்கள், எம்பெருமானார், பகவான் - இவர்களிடத்தில் க்ரஹங்களிலும் தேவாலயங்களிலும் வர்த்திப்பதில் ஸமமான வ்ருத்தியும் பாத்யங்களும் அநுஷ்டித்து இந்தப்படி ஸாம்யபுத்தியைப் பாவிக்க வேணும். இப்படி ஸாத்யமானால் இப்போது ஏற்பட்டிருக்கும் திவ்யதேசோபப்லவரூபமான விவாதங்கள் முடிவுக்கு வரவும் கூடும். ஆனால் ஏற்கனவே பஹுதூரம் பரவியிருக்கிற பண்டித பாமர ஸாதாரணமான கலாபேத ப்ரயுக்த த்வேஷங்கள் எவ்வளவு தூரம் ஸமாதாநமாகக்கூடுமென்றும், அதற்கு நம்மில் சிலருடைய ஐகமத்யம் ஏற்பட்டாலும் அதை எவ்வளவு ஸாதிக்கக் கூடும் என்றும் நாம் அதிசங்கை பண்ணலாம். இந்த கலாபேத த்வேஷம் பயங்கரமான ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பிடித்த பிசாசமாக ஆய்விட்டது. இதை உச்சாடநம் செய்து விடுவிக்க ஆஸ்திகர்களனைவரும் முயலவேண்டியது அவசியம். அதற்கு இதை த்வாரமாக எண்ணி இப்போது இந்த ஸபையை விஸ்தரித்து ஏற்பாடு



செய்ய எல்லாரும் நிச்சயித்தால் அது உத்தமம்தான். அது ஸாத்யமில்லையென்றும் தீர்க்க விரோதங்கள் ஶமநமாகி ஒத்து வர்த்திப்பது கூடாதது என்றும் அபிப்ராயப்பட்டால் முன் சொன்னபடி வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள்ளாவது ஐகமத்யம் ஏற்பட்டு இந்த ஸபையை நடத்துவது அவசியம்.

**பின் செய்ய வேண்டிய கார்யங்கள்.**

இப்படி ஸபையை யதோசிதம் விஸ்தரித்து இந்த ஸங்கத்தின் முக்யோத்தேசத்தைப் பூர்த்தி செய்தால், பிறகு ஸபையார்கள் செய்யவேண்டிய கார்யங்கள் ஸபையின் விதிகளில் அநுக்ரமித்திருக்கிற உத்தேசங்களடங்கிய விதியினால் விளங்கும். பஹுதூரம் ஶ்ரவணம்பண்ணி கிந்நர்களாயிருக்கக்கூடிய தேவரீர்களுக்கு கேதத்தை அதிகமாக்காமல் இனி இரண்டொரு விஷயங்களை மாத்ரம் விஜ்ஞாபநம் செய்து இந்த வ்யாஸத்தை உபஸம்ஹரிக்கிறேன்.

முதலாவது :—நம் ஸித்தாந்தம் ஸ்ரீ நாதமுனிகள் காலம் முதல் இதுவரையில் முக்யாம்சங்களில் ஏகவிதமா யிருந்தபோதிலும், நமக்குள் அநுஷ்டாந பேதங்கள் பலவுண்டாயிருப்பது விரோதங்களுக்கு ஹேதுவாயிருப்பதால் அவைகளை யதாஶக்தி ஸமீகரணம் செய்ய நாம் பிரயத்நம் செய்யவேண்டும்.

இரண்டாவது : — கர்மாநுஷ்டாந விதிகள் சென்ற 3,000 வர்ஷங்களாய் ஏகரீதியாய் இருந்தனவென்று பரீக்ஷகர்கள் எண்ணமாட்டார்கள். ஆதியில் ஶ்ரௌதவிதிகளே முக்ய தர்மமாயும், ஶ்ரௌதாநுகாரியான ஸ்மார்த்த தர்மங்கள் வரவர ப்ரபலித்தும், சிலகாலம் இரண்டும் ஸமப்ரதாநமாயும், பிறகு, ஶ்ரௌதாநுஷ்டாநங்களுக்கு லோபமும், சிற்சில ராஜாக்கள் காலங்களில் அவைகளுக்குப் புநஃப்ராசுர்யமும், பலவாறாகச் சில யாகங்களுக்கும் வ்ரதங்களுக்கும் அநுஷ்டாந ஹாநியும் உண்டாயிருக்கிறது. இனி, முன்போல் விஹிதமான ஷோடஶ ஸம்ஸ்காரங்களையும் ஷண்ணவதி ஶ்ராத்தங்களையும் பூர்ணமான மந்த்ரஜபங்களையும் செய்யவேண்டியது அவசியமென்று எண்ணினால், அதற்கு அதிகாரிகள் ப்ராயேண எவரும் ஏற்படமாட்டார்கள். ஆகையால் இப்படிப்பட்ட அநுஷ்டாநங்களில் காலாநுகுணமாய் முக்யாம்ஶத்தை

நிஷ்கர்ஷித்து அதில் ஜ்ஞாநத்தையும் ப்ரத்தையையும் நம் சிறுவர்களுக்கு உண்டுபண்ண வேணும்.

மூன்ருவது :—விதிப்படி செய்யும் நித்யகர்மங்களிலும் துரூஹமான ஜக்குக்களை விசேஷமாய் இருப்பதால் பக்திவர்த்தகமான புராண ச்லோகங்களோ, ஜ்ஞாதாக்களால் புதிதாய்க் கல்பிக்கப்பட்ட ச்லோகங்களோ எவையாவது கேவலம் ஸ்வல்ப வ்யுத்பத்தி யுள்ளவர்களுக்கும் அர்த்தம் ஸ்புரிக்கக்கூடிய விதமாய் மேற்படி மந்த்ரங்களுக்குப் பதிலாகவோ அதிகமாகவோ அநுஷ்டிக்கப்படவேணும். இப்பொழுது ஜபகாலங்களில் வாசிக க்ரியைக்கும் மாநஸ வ்ருத்திக்கும் ஏற்பட்டிருக்கும் அஸம்பந்தத்தாலே ப்ராயேண ஜபங்களில் விசுவாஸம் குறைந்திருக்கிறது. இதை நிவ்ருத்திசெய்ய முயலவேணும்.

நான்காவது :— நம்மில் லௌகிகர்களுக்கு ப்ராயேண தேவாலயகமநமும் அர்ச்சாவதார ஸேவையும் அநபிமதங்களாகவே ஆகிவிட்டன. இதற்கு ஒருவாறு தேவஸ்தாநங்களில் விவாதங்கள் காரணமானாலும், அந்த ஸ்தாநங்களில் பக்திவ்ருத்திக்கும் ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தும் உபகாரகமான உபந்யாஸாதி ஆகர்ஷகங்கள் இல்லாததே முக்ய காரணமென்று தோன்றுகிறது. ஆகையால் தேவாலயங்கள் சரிவரப் பரிபாலிக்கப்பட்டு யதாகாலம் ஆராதநாதிகள் செய்து வருவதையும், விசேஷமான ஏகாதசி முதலான ஹரிதிநங்களில் ஜ்ஞாநபக்தி ஜநகங்களான உபந்யாஸங்கள் செய்துவருவதையும் ஏற்படுத்த இந்த ஸபையார் யதாசக்தி யத்நிக்கவேணும்.

ஐந்தாவது :— நம் அழகிய சிங்கர் ஸந்நிதியிலும் இதர ஆசார்யர்கள் ஸந்நிதியிலும் விஜ்ஞாபநம்செய்து, அவர்கள் மூலமாயும், வேறுவிதமாய் நேரிலும், இந்த ஸபையார் வித்வாந்களைக்கொண்டு பல க்ராமங்களிலும் நகரங்களிலும் வேதாந்த ப்ரவர்த்தநமும் உபந்யாஸங்களும் விசாரங்களும் நடக்கும்படியான உபாயங்களைத் தேடவேணும்.

ஆறுவது :— இனி ஸம்ப்ரதாய ரக்ஷணத்திற்கு முக்யமான ஒரு உபாயமுண்டு. அதாவது நம் சிறுவர்கள் பாஷாந்தரப் பயிற்சிக்குப் பாதகமன்றிச் சில காலத்தை ஸம்ஸ்க்ருத சிக்ஷணத்திலும் அவச்யாநுஸந்தேயமான ஸ்தோத்ரங்களின் மநநத்திலும் உபயோகிக்கும்படி செய்யவேணும். உபயுக்த வேதபாகங்களின் அத்யயநமும் பால்யாவஸ்தையில் செய்தாலொழியப் பிறகு ஸாத்யமில்லை.



கடைசியாகப் பண்டிதர்கள் விஷயமாய் விஜ்ஞாபநம் செய்ய வேண்டியது ஒன்றிருக்கிறது. தத்காலம் நம் ஸித்தாந்தத்தில் கௌரவபுத்தியுள்ள பாச்சாத்யர்களும் படிப்பில் தேர்ந்த நம் தேசத்திய ப்ரபுக்களும் நம் இதிஹாஸ புராணங்கள் விஷயமாகக் கொண்டிருக்கும் அபிப்ராயங்களை, நம் பண்டிதர்கள் அறியவேண்டும். இவர்களைக் கேவல நாஸ்திகர்களென்ருவது அஸஹ்ருத்துக்களென்ருவது ஒதுக்கிவிடுவது யுக்தமல்ல. இது கேவலம் கலிப்ராசுர்யத்தால் உண்டான தோஷமன்று. பாச்சாத்ய வித்யையின் பலமாக நிருபண சக்தியும், அபூர்வ க்ரந்த பரிசயங்களினுல் உண்டான விவிதஜ்ஞாந ப்ரபாவபலமாக விஷயவிமர்சமும் அந்யாத்ருசங்களாய்த் தத்காலம் உண்டாயிருக்கின்றன. இவைகளை உபேக்ஷித்தல் பண்டிதர்களின் பாண்டித்யத்திற்கும் கௌரவத்திற்கும் குறைவாகும். நம் வேதங்களிலும் புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் சொல்லி யிருப்பதெல்லாம் ஸ்வார்த்த விஷயத்தில் யதாவத் ப்ரமாணமென்று நம் மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களில் சொல்லப்படவில்லை. “ஸ ஹாஷி யஜ்ஞாயுதீ யஜமாநோ நா ஸஞ்ஜஹாஸமத்யாதி” இத்யாதி வாக்யங்களில் ப்ரத்யக்ஷ விரோதத்தைப் பார்த்து அப்ராமாண்யத்தை சங்கிப்பவர்களுக்கு, “ தஷ, ஸவரேஷ்யபுவாதவாகெக்ஷிவ ஸத்ராவி சவ்யாயபு வாய ஸபா ஜொஷகவாச” “தாத்பர்ய விஷய ஸங்கஸ்யாயபுஸ்ய விரஹகவாச” என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸேச்வர மீமாம்ஸையில் அநுக்ரஹித்திருக்கிருர். உபநிஷத்துக்கும் ஸ்வார்த்த ப்ரமாண்யத்தை ஸித்தாந்திக்கிற நம்மாசாரியர்கள், முக்யார்த்த பாதக மில்லாத இடங்களில் தான் அப்படி நிர்ப்பந்திக்கிருர்கள். இதை ஆசார்யன்,

“வ்யுத்பத்த்யாதி விரோதஸ்த்வ சவ்யாபெயெ பூதத்ருதஸ்யதே ।
த்துளவமாதிகீவ்ருத்தி சநஸ்யதாயபு ஸத்தா ॥
யத்ர ஸ்வதீநிரீதாதள தாசவயம் தவெவக்ஷணாத ।
சவ்யாஉசவ்யாவிவாக்ஷஷ்டியபு ஸதோ விதிநிதஃ ।”

என்று ஸங்க்ரஹித்திருக்கிறார். ஆகையால் ஸர்வபுராண நிர்த்திஷ்டமான அம்சங்களும் ஸ்வமுக்யார்த்தத்தில் ப்ரமாணங்களென்று ப்ரமித்து நிர்ப்பந்திப்பது சரியல்ல. இந்த ந்யாயம் ஆதுநிகமான கவிசரித்திரங்களிலும் கேவலம் ஐதிஹ்ய பரம்பராவகமான ஆழ்வாராசார்யர்கள் சரித்திரங்களிலும் உண்டு. இதற்குச் சில உதாஹரணங்கள் சொல்வது உபயுக்தமாகும். ப்ரஸித்தங்களான ஸூர்யசந்த்ரோபராகங்கள் ராஹு கேது ரூபமான அஸுரர்களுடைய ஆக்ரமணங்களினால் உண்டாகின்றனவென்கிற புராண ஸமாதாநம் அதத்யமென்றும், ஸூர்ய ரச்மியின் திரோதாநத்தினால் உண்டாகின்றனவென்றும், ஆர்யபட்டரின் க்ரந்தங்களாலும் நவீநதந்த்ரங்களாலும் ஆதுநிகர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே. புராணங்களில் புவநநிர்மாண வர்ணநங்களும் பூகோளஸந்நிவேசாதி வர்ணநங்களும் ப்ரத்யக்ஷ த்ருஷ்டமான தத்யத்துக்கு விபரீதங்களென்பதும் பிரஸித்தம் தான். ராஜவம்சாநு சரிதங்களில் புராண பாரத ராமாயணாதிகளின் பரஸ்பர விரோதங்களையும் அஸம்பாவிதமான காலபரிமாணங்களையும் நம் பண்டிதர்கள் விமர்சிக்கவேண்டியது அவச்யமாயிருக்கிறது. ப்ராசீநர்களான காளிதாஸன் போன்ற கவிகளும், அர்வாசீநரான தண்டி பவபூதி முதலானவர்களும் ஸமகாலீநர்கள் என்னும் போஜ சரித்ரத்தின் கட்டுக்கதைகளையும் தத்யமென்றே நம்பிவருவது சரியல்ல. நம்மாழ்வார் வரையிலுள்ள ஆழ்வார்கள் ஸ்ரீ க்ருஷ்ண பகவானுக்கு ஸமகாலீநர்களென்றும் சிலர் ப்ராசீநர்களென்றும் சொல்லுகிற ஐதிஹ்யங்களின் தத்யம், பல அநுபபத்திகளால் பராஹதங்களென்பதை நம் பண்டிதர்கள் அவதாநிக்கவேண்டும். நம்முடைய வேதாந்ததீபிகையில் உபய ஸ்ரீ. திவான் பஹதூர் - ரங்காசாரியர் ஸ்வாமி ஸமீபத்தில் நிர்த்தேசித்திருக்கிற ஓர் ஸம்சயமுண்டு. அதாவது, ஸ்ரீ பாஷ்யகாரர் காலம் முடிவுவரையில் துருஷ்கர்கள் ஸிந்து நதீ ப்ராந்த்யத்துக்குக் கிழக்கில், டில்லி முதலான ஸ்தாநங்களை ஆக்ரமிக்கவில்லையென்று சரித்ரத்தினால் நன்றாய்த் தெரிவதால், அந்தக் காலத்தில் டில்லியில் துருஷ்க சக்ரவர்த்தி ப்ரஸ்தாவத்துக்கும், ஸம்பத்குமாரனை டில்லிக்குக் கொண்டுபோன ப்ரஸ்தாவத்துக்கும், ஸ்ரீ பாஷ்யகாரர் டில்லிக்கு எழுந்தருளி ஸம்பத்குமாரனை மீட்டுவந்ததாய்ச் சொல்லும் ஐதிஹ்யத்துக்கும், மூலங்கள் ம்ருக்யங்களென்றே எண்ணவேண்டி



வருகிறது. இன்னும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் காலத்தில் ப்ரபோத சந்த்ரோதய கர்த்தாவாகிய ஸ்ரீ க்ருஷ்ணமிச்ரர் என்கிற அத்வைத வேதாந்தி ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளினதாகவும், அவரை நம்மாசார்யன் ஸங்கல்ப ஸூர்யோதயம் செய்து ஜயித்தாரென்றும் சொல்லியிருக்கும் ஐதிஹ்யமும், க்ருஷ்ணமிச்ரர் என்பவர், நம் ஆசார்யனுக்கு 190 வருஷங்களுக்கு முன் இருந்த கீர்த்திவர்மசண்டிலன் என்னும் (சேதிதேசத்தில்) களஞ்சரபட்டணத்து ராஜாவின் வித்வான் என்று தெரிகிற சரித்திராம்சத்தினால் அஸம்பத்தமாய்க் காணப்படுகிறது. நம் பாஷ்யகாரர் மைஸூரில் ஜைநர்களைக் கல்காணமாட்டிவைத்த கதைகள், ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரஸித்தியை அதிகப்படுத்த வேணுமென்றவர்களின் புத்தி கல்பிதங்களென்றும், உண்மையில் நடந்தவைகளல்லவென்றும் நன்றாய் விளங்குகிறது. இப்படிப் புராண சரித்ரங்களிலும் ஆசார்ய சரித்ரங்களிலும் பல அம்சங்கள் விமர்சிக்கப்படவேண்டியவைகள் இருப்பதை மேற்படி புராணாதிகளாலேயே தத்தோத்தரங்களாய் எண்ணாமல், பூர்வபக்ஷிகளின் அபிப்ராயங்களையும் அவர்களின் யுக்திகளையும் விமர்சிக்க வேண்டியது நம் பண்டிதர்களின் கடமை. இந்த விதமாய் நம் பண்டிதர்களின் புத்தி செலவழிந்தால் சாஸ்த்ரஜ்ஞாநமும் சாஸ்த்ர விசாரங்களும் லோபிக்குமென்று சிலர் சங்கிக்கலாம். ஆகிலும் தத்காலம் ப்ரஸரிக்கும் அப்ராமாண்ய புத்தியை ஒருவாறு நியமித்து ப்ரதாந தத்வாம்சங்களை ரக்ஷிப்பதும் அவச்யகரணீயமாகையால் இந்த விஷயத்தையும் இங்கே பிரஸ்தாவித்தேன்.

நிகமநம்.

இப்படிப் பல விஷயங்களிலும் கர்த்தவ்யங்களிருப்பதை அடியேன் சொன்னது தேவரீர்களுக்குத் தெரியாத விஷயம் என்று சொன்னதல்ல. இவைகளை நாம் இத்தருணத்தில் அவதாநிக்க வேண்டியதற்காக மாத்ரம் ஜ்ஞாபகப்படுத்தினேன். எந்தெந்த அம்சங்களில் எவ்வளவு ஸாத்யமோ, எவ்வளவு தூரம் த்ரவ்யத்தினால் ஸஹாயம் கிடைக்கிறதோ, அதை அறிந்து, மேல்நடக்க வேண்டிய கார்யங்களை நிர்ணயித்து அநுக்ரஹிக்கும்படி எல்லா ஸ்வாமிகளையும் ப்ரார்த்திக்கிறேன். அடியேனுடைய வசநங்களைப் பொறுமையுடன் ச்ரவணம் செய்த விஷயத்தில் க்ருதஜ்ஞனாய் எல்லா ஸ்வாமிகளுக்கும் வந்தநம் செய்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸதஸ்யர்களுக்கு ஸ்வாகதம். *

இந்த ஸதஸ்ஸில் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகளுக்கு விஜ்ஞாபநம் :—

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் சோள தேசத்தைச் சேர்ந்த ந்ருஸிம்ஹபுரத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில், ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய நன்மையைக் கருதி 'ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை' என்கிற ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டு அதன் ஸம்பந்தமாகச் சென்ற சில வர்ஷங்களில் தஞ்சாவூர், நீடாமங்கலம், ஸ்ரீ மதுராந்தகம், ஸ்ரீ அஹோபிலம், இந்த இடங்களில் மஹா ஸங்கங்கள் கூட்டப்பட்டு, அவ்விடங்களில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்திக்கு உபகாரகமாக வித்வத் ஸதஸ்ஸுகளும் உபந்யாஸங்களும் நடைபெற்றுவந்தன. இந்த மடத்துக்குக் காரணபூதரான ஸ்ரீ மதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் காலம் வரையில், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருந்த ஸந்நிதியாயும், அது முதல் நாளதுவரையில் அவனுடைய ஆதீநத்திலிருக்கிறதாயுமுள்ள மேல் அஹோபிலம் கீழ் அஹோபிலத்துக் கோயில்கள் மண்டபங்கள் - இவைகளின் ஜீர்ணோத்தாரணத்தை உத்தேசித்து ஒரு மஹா ஸங்கம் கடந்த வர்ஷம் ஸ்ரீ அஹோபிலத்திலேயே கூட்டப்பட்டது.

* இது சென்ற மார்கழி மாஸததில் ஸ்ரீ திருவெவ்வுளூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் ஐந்தாவது மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.வெ. ஈக்காடு. ராகவாசார்யரால் செய்யப்பட்ட ஸ்வாகத உபந்யாஸம்.



இவ்வர்ஷமும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆதீநத்திலிருக்கிற திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியிலே ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் ஆதரணையில் இந்த மஹா ஸங்கம் கூடும்படியாகவும், ஸித்தாந்த விஷயமாய் வித்வாங்களால் செய்யப்படும் உபந்யாஸங்களைக் கேட்டு ஆநந்திக்கவுமாக, சிஷ்ய ஸபையின் அங்கத்தினருடைய ப்ரார்த்தனைக் கிணங்கி எழுந்தருளியிருக்கிற பாகவதோத்தமர்களுக்கு, இந்த ஸ்தலவாஸிகளுடைய நியமநத்தை முன்னிட்டுக்கொண்டு யதாவத்தாய் அளிக்கும் நல்வரவைத் திருவுள்ளம்பற்ற வேண்டுமாக ப்ரார்த்திக்கிறேன்.

இந்த ஸ்தலமாஹாத்மியத்தில் சொல்லியபடி, அகஸ்தியருடைய ஆச்ரமத்தில் உண்டாகி, நடுவில் விந்த்ய பர்வதத்துக்குத் தென்முனையிலிருக்கும் வெள்ளிமலையை அடைந்து, புண்யகரமான வெள்ளத்தினால் நிறைந்து பால்போல நீரை யுடையதாகிய க்ஷீர நதி என்னும் மஹாபுண்ய நதிக்கு வடபுறத்திலிருக்கும் தேவநிர்மிதமான ஒரு மடுவின் தீர்த்தமானது, தர்சநத்தினாலும் ஸ்பர்சத்தினாலும் ஸ்நாநத்தினாலும் ப்ரஜைகளின் மநஸ்ஸிலுண்டாகிய ஸகல தாபங்களையும் ஒழிக்கத்தக்கதானதால், 'ஹ்ருத்தாபநாசநீ தீர்த்தம்' என்று புகழ்பெற்ற புஷ்கரிணி ஒன்று இந்தத் திவ்யதேசத்திலிருக்கிறது. முன் க்ருத யுகத்தில் புண்யகரமான பதரிகாச்ரமத்தில புரு புண்யரென்கிற ஒரு ப்ரஸித்தமான தபஸ்வீ, தான் புத்ரனை அடைய வேண்டுமென்ற சிந்தையினால் சாலி யஜ்ஞம் செய்து அடைந்த சாலிஹோத்ரர் என்று பெயர்பெற்ற புத்ரனும் தபஸ் பண்ணிக்கொண்டிருந்து, சிலகாலம் கடந்தபின் விஷ்ணு ஸாயுஜ்யத்தை அபேக்ஷித்து, ஹ்ருத்தாபாசநீ கரையில் தபஸ்செய்ய நிச்சயித்து, இந்த க்ஷேத்ரத்தை அடைந்தார். இந்த க்ஷேத்ரத்தில், ஸிம்ஹம் புலி முதலிய துஷ்ட ம்ருகங்களால் பயங்கரமாகிய மஹாவநம் இருந்தபடியாலும், அதில் முனிவர்களின் யஜ்ஞங்களுக்கு அநுகூலமான யஜ்ஞவிருக்ஷங்கள் முதலானவைகள் இருக்கப்பெற்று, தபஸ்ஸுக்குத் தகுந்தபடி இருந்த தபோவநத்தில் பகவாந் ஸுலபமாக மனிதருடைய கண்களுக்குத்

காணப்படுகின்றபடியால் 'வீக்ஷாரண்ய' மென்று ப்ரஸித்தமாகச் சொல்லப்படுகின்றது. ஒருதரம் செய்த புண்யமானது பலவிதமாகப் பலிக்கும் தேசமாகையால் 'புண்யாவர்த்த' மென்னும் பெயரும் பெற்றதாயிற்று. அப்போது தெய்வ யோகத்தினால் தை அமாவாஸ்யை வர, அந்தப் புண்ய காலத்தில் ஹ்ருத்தாபநாசநீ தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்ய வருகிற ப்ருஹ்மாதி ச்ரேஷ்டர்களையும், ப்ருகு முதலிய ரிஷிகளையும், அருந்ததி முதலான தேவிமார்களையும், அப்ஸரஸ் ஸ்திரீகளையும், நாரதாதி மஹாயோகிகளையும், மநுஷ்யர்களையும், மநுஷ்யஸ்த்ரீகளையும், ஆகாசத்திலும் பூமியிலும் நாலாபக்கத்திலும் கண்டு, சாலிஹோத்ர ரிஷி ஆநந்தித்து, அதுமுதல் தாமும் தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்தார். அடுத்த தை அமாவாஸ்யையில் எம்பெருமான் ஸாக்ஷாத்தாக எழுந்தருளி சாலிஹோத்ர மஹர்ஷியினிடத்தில் பசிதீர த்ருப்தியாய் ப்ரஸாதம் பெற்று மறைந்து விட்டார். அதற்கு அடுத்த தை அமாவாஸ்யை திநம் முன்போலவே முதிர்ந்த வயதுடையவராய் எழுந்தருளி, சாலிஹோத்ர மஹர்ஷியை 'அந்நம் தேஹி ஜலம்தேஹி' என்று கேட்டு த்ருப்தியடைந்த பிறகு, நித்ரை செய்ய இடம் கொடுமென்று கேட்டபடி கொடுக்க, ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரன் சேஷசயநத்தில் ஸுகமாக சயநித்துத் தமது வலக்கையை ரிஷியினுடைய திருமுடியில் ஆதரித்து வைத்தருளி, தமது நாபீகமலத்தில் வஸிக்கிற சதுர்முகனுக்கு ப்ரணவத்தின் பொருளை உபதேசிப்பதற்காக ஜ்ஞாந முத்ரையை இடது கையில் வைத்துக்கொண்டு, ஸகல ப்ரபஞ்ச ரக்ஷணத்தில் விழித்துக்கொண்டிருப்பதாகிய யோகநித்ரையைச் செய்தருளினார். அதுமுதல் இதற்குக் 'கிங்க்ருஹபுரம்' என்றும், ஸ்தலாதிபதிக்கு 'எவ்வுள்கிடந்தான்' என்றும் பெயர்கள் உண்டாயின. ஒரு காலத்தில் மது கைடபர்களை ஸம்ஹாரம் செய்த இடமானதால் இந்த ஸ்தலத்திய விமாநத்திற்கு விஜயகோடிவிமாநமென்னும்பெயர் உண்டாயிற்று. மற்றோர் காலத்தில் இந்த க்ஷேத்ரத்தைச் சேர்ந்த தர்மஸேந புரம் என்னும் பட்டணத்து ராஜாவின் கந்நிகையாகிய கநகவல்



லித் தாயாரை மணம் புரிந்து ஸ்ரீ வீரராகவன் எழுந்தருளியிருக்கிறார். ஸேவித்தவர்களுக்குப் புண்யத்தைத் தருவதாகிய எம்பெருமானுடைய திருக்கோயிலும் புண்ய தீர்த்தமும் லோகத்தைப் பரிசுத்தமாக்கவல்லதாகிய தபோவநமும் இந்த க்ஷேத்ரத்தில்தான் மேற்சொன்னபடி சேர்ந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெருமை பெற்றதாயும், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸம்ப்ரதாயத்துக்குத் தக்கபடியும் உள்ள ஸ்வச்சமான இந்த வடகலை திவ்ய தேசம், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருப்பதால், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் மஹா ஸங்கத்தைத் திருவெவ்வுளூரில் நடப்பிப்பது அவச்யமாகத் தோன்றி, வைதிக லௌகிக ச்ரேஷ்டர்களான தேவரீர்கள் எழுந்தருளும்படி ப்ரார்த்திக்கப்பட்டது. இந்த மஹா ஸங்கத்துக்காக எழுந்தருளின ஸ்வாமிகளுக்கு ஷோடச உபசாரமும் செய்து நன்றாய் ஆதரிக்கவேண்டுமென்கிற பரிபூர்ணமான இஷ்டம் இந்த ஸ்தலவாஸிகள் யாவருக்கும் இருக்கிறது. ஆனபோதிலும் சக்திக்கு இயன்றமட்டில் திருவெவ்வுளூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் நடக்கிற ததீயாராதநத்தை க்ருபையாய்த் திருவுள்ளம்பற்றி, ததீயாராதநத்தில் நேரிடும் ஏற்றக்குறைவுகளையெல்லாம் பராமர்சியாமல், இதர இடங்களில் நடைபெற்ற மஹாஸங்கங்களின் மாதிரிக்குக் குறைவில்லாமல், இதைப்போன்ற ஸதஸ்ஸுகளை இனி மேலும் வர்ஷந்தோறும் அநேக இடங்களில் நடத்தவேண்டுமென்கிற அபிஸந்தி ஜநிக்கும்படியாகவும், இந்த ஸதஸ்ஸை மூன்று நாளும் சரிவர நடப்பிக்கும்படிக்கும் மிகவும் வணக்கமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஐந்தாவது வார்ஷிக மஹாஸங்கம்.

பரம காருணிகனான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தினால், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் ஆதரணையில் ஐந்தாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம், ஸ்ரீ திருவெவ்வுளூரில் நாளது 1915-ம் வருடம் டிஸம்பர் மாஸம் 28,29,30-ம் தேதிகளில் பூர்வமே நிர்த்திஷ்டமான க்ரமத்தை அநுஸரித்து மிகவும் சிறப்பாகவும் எல்லாருக்கும் ஆஹ்லாதகரமாகவும் நடைபெற்றது. இந்த ஸபையின் கார்யதர்ஸிகளுள் அந்யதரரான ஸ்ரீமான் சித்தூர் ஸி. ராஜகோபாலாசார்யர், நாலு நாள் முன்னதாகவே திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் இந்த மஹாஸங்க நிர்வாஹார்த்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள கமிடியாருடைய ஸஹாயத்தை அவலம்பித்து, ஸங்க நிஷ்பத்திக்கு அபேக்ஷிதமாயுள்ள பூர்வாங்கங்களெல்லாவற்றையும் எவ்வித குறைவுமின்றிக்கே நடத்திவைத்தார். அந்தக் கமிடியாருள் அந்யதமர்களான ஸ்ரீ. உ.ஹ. ஈக்காடு ராகவாசார்யர் ஸ்ரீ. உ.ஹ. டி. பி. ஸ்ரீநிவாசாசார்யர் ஸ்ரீ. உ.ஹ. வேதாந்தாசார்யர், ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதிக்கு ஏஜண்டாக ஸ்ரீ ஸ்வாமியினால் நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ உ.ஹ. தேரழுந்தூர் ரங்காசார்யர், இன்னும் ஸ்ரீ திருவெவ்வுளூர் நிவாஸிகளான சில ஆஸ்திகாக்ரேஸரர்கள், இவர்களின் பரிஶ்ரமத்தால் அந்தப் பூர்வாங்கங்கள் அனையவும் பூர்ணங்களாகவே இருந்தன. ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையாக ஸாதித்தருளின அநுமதியை முன்னிட்டு ஸ்ரீ மடத்தில் ததீயாராதநத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளும், ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியில் ஸங்கம் சேர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அநேக ஸ்வாமிகள், ஸங்கத்திற்குப் பூர்வதினத்திலேயே ஸ்ரீ வீரராகவனுடைய மங்களாஶாஸநத்தை உத்தேஶித்து எழுந்தருளியிருந்தார்கள். ஸங்க தினத்தின் ப்ராத:காலத்தில், சென்னைப்பட்டணத்திலிருந்து, ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசார்யர், ஸங்கத்திற்கு அக்ராஸநாதிபதியாக வரிக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்காருடன் திருவெவ்வுளூர்க்கு எழுந்தருள, அவ்விடத்திற் சேர்ந்திருந்த கமிடியாரும் மற்றை ஸ்வாமிகளும், வாத்ய கோஷத்துடன் மிகவும் உத்ஸாஹத்துடன் ஸ்ரீவீரராகவன் ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு அவர்களை எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ மடத்தில் அவர்களுக்கு உத்திஷ்டமாக ஏற்பாடு செய்திருந்த ஸந்நிவேஶத்திற்குக் கொண்டு போய்விட்டனர்.

28-ம் தேதி மங்களவாரத்தில், மத்யாஹ்நம் ததீயாராதநாநந்தரம் சுமார் 12-மணிக்கு ஸங்கார்த்தம் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளெல்லாரும், ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியில் அதி விஸ்தாரமான கொலுமண்டபத்தில் ஸாநந்தமாகவும் அதிகுதூஹலத்துடனும் ஒன்று சேர்ந்தனர். ஸபையின் அங்கத்தினர்களாகவும் அதிதிகளாகவும் உபந்யாஸ ஶ்ரவணத்தில் கௌதுகமுள்ளவர்களாகவும், எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளின் ஸங்க்யை சற்றேறக்குறைய இருநூறு இருக்கலாம். ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீ. உப. திருவல்லிக்கேணி டி. நரஸிம்ம ஐயங்கார், ஸ்ரீ. உப. திருப்பதி அநந்தாசார்யர், ஸ்ரீ. உப. மயிலாப்பூர் எஸ். வாஸுதேவாசார்யர், ஸ்ரீ. உப. ஆர்ணி துரைஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. உப. ப்ரோதத்தூர் ஸுந்தராசார்யர் முதலிய ஸபையின் அங்கத்தினர்களும், ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய வித்வாங்களும், ஸ்ரீ. உப. மைஸூர் எ. கோவிந்தாசார்யர், ஸ்ரீ. உப. திருவெவ்வுளூர் என். ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய அதிதிகளும், இன்னும் அநேக ஆஸ்திக ஶிரோமணிகளும் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். மறு தினத்தில் ஸ்ரீ. உப. திருவல்லிக்கேணி எம். ஒ. பார்த்தஸாரதி ஐயங்கார், ஸ்ரீ. உப. மயிலாப்பூர் எஸ். வரதாசார்யர், ஸ்ரீ. உப. பெருமாள் கோயில் எம். கே. தாதாசார்யர், ஸ்ரீ. உப. மயிலாப்பூர் வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீ. உப. தஞ்சாவூர் கோபால ஐயங்கார் முதலிய ப்ரமுகர்களும், ஸ்ரீ. உப. ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ. உப. நடாதூர் க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் முதலிய வித்வாங்களும் எழுந்தருளியிருந்தார்கள். தஞ்சாவூரிலிருந்து ஸ்ரீ. உப. டி. கோதண்டராம ஐயங்கார், தமக்கு ஸதஸ்ஸுக்கு வரவொட்டாமல் நேர்ந்த அநுபபத்தியைக் கண்டு, கார்யதர்ஶி ஸ்ரீ. உப. சித்தூர் ராஜகோபாலாசார்யருக்கு ஒரு பத்ரிகை எழுதி, அவ்விதம் தாம் வரக்கூடாமல் போனது பற்றித் தமக்குள்ள வருத்தத்தை ஸதஸ்யர்களிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளும்படி ப்ரார்த்தித்திருந்தார். இந்த ஸங்கத்திற்கு வரவேண்டுமென்று ஆஸ்தையுள்ள இன்னும் மற்றை ஸ்வாமிகளுள் அநேகர், அம்மாதிரியாகவே கார்யதர்ஶிக்குப் பத்ரிகை நியமித்திருந்தார்கள்.

சுமார் 12-மணிக்கு எல்லாரும் சேர்ந்தவுடன், ரிஸெப்ஷன் கமிடியின் அத்யக்ஷரான திருவெவ்வுளூர் ஸ்ரீ. உப. ஈக்காடு ராகவாசார்யர், ஸாதரமாக எல்லாருக்கும் ஸ்வாகதம் சொல்லி, அந்தக் காலத்தில், ஸ்ரீ திருவெவ்வுளூரின் ஸ்தல மாஹாத்ம்யத்தின் பெருமையையும், இம்மாதிரியான

ஸங்கத்திற்குள்ள அதன் ஆநுரூப்யத்தையும் விஸ்தாரமாக உபபாதநம் செய்தார். அந்த உபபாதநம் இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. பிறகு ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், உசிதமான வசநத்தினால் ஸ்ரீ. உப. ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்காரை ஸங்கத்தின் அக்ராஸநாதிபதியாக இருக்க ப்ரார்த்தித்தார். இதை எல்லாரும் கரகோஷத்துடன் அங்கீகரிக்க, அந்த ஸ்வாமி, அக்ராஸநாதிபதியாக இருப்பதை ஒத்துக்கொண்டு, பிறகு தமது பாண்டித்யத்தையும் ஸித்தாந்தாபிமாநத்தையும் விளக்கும் ஓர் அத்புதமான உபந்யாஸத்தைச் செய்தார். அதில், இப்பொழுது ஜகத்திற்கு ஆதங்ககரமாக நடந்து வரும் ஐரோப்பா மஹாயுத்த ஸம்பந்தமான ஜர்மன் தேஶத்தாருடைய அக்ரமங்களையும், நமது ராஜாங்கத்தாருடைய தர்ம ப்ரவ்ருத்தியையும் பற்றி நன்றாக உபபாதநம் செய்து, தர்ம பதத்திற் செல்லும் நமது ராஜாங்கத்தாருக்கு முடிவில் பூர்ண ஜயம் வரவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். பிறகு ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையார் செய்து வரும் ஶ்ரேயஸ்கரங்களான பலவித முயற்சிகளை ஶ்லாகித்து, அது ஸம்பந்தத்தில் ஸ்ரீ. உப. வி. ராகவாசார்யருடைய அதிதுக்ககரமான தேஹவியோகத்தால் ஸபைக்கு நேர்ந்த ஹாநியைப்பற்றி மிகவும் ஶோகித்து, பகவத் கைங்கர்ய ரூபமான ஸபாப்ரவ்ருத்தியில் முயன்று நிற்கும் ஆஸ்திகர்கள் விஷயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபையாக ஶ்லாகா பூர்வகம் அநுக்ரஹிக்க வேண்டுமென்றும், அவர்களுடைய முயற்சி உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகும்படி கடாக்ஷிக்க வேண்டுமென்றும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷகர்களான ஸ்ரீ அழகிய சிங்கரையும் இதர ஆசார்யர்களையும் ஸவிநயம் கேட்டுக்கொண்டார். பிறகு ஸ்ரீ அஹோபில மடத்தின் ஶிஷ்யர்கள் மாத்திரமல்லாமல், ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஒன்று சேரும்படி இந்த ஸபையை விஸ்தரிக்க ஸபையாரிற் சிலர் செய்யும் முயற்சியைப்பற்றித் தமக்குத் தோன்றும் ஸம்மதியை வெளியிட்டு, அப்படி ஒன்றுசேர்ந்து ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் ஏகமநஸ்கர்களாய் ப்ரவ்ருத்திக்கும் பக்ஷத்தில் ஸ்ரீ வைதிக ஸம்ப்ரதாயத்திற்கு ஆஸந்நமாயிருப்பதுபோலத் தோன்றும் விபத் நிவாரிதமாகுமென்பதையும், இப்பொழுது ஸ்ரீ வைதிக ஸித்தாந்தத்திற்கு விரோதிகளாக முளைத்திருக்கும் அநேக ஸபையார்களைக்குறித்து நாம் ஔதாஸீந்யத்தை வஹித்தால் மஹத்தான தீமை விளையுமென்பதையும், ஏற்கெனவே புமான்களிடம் மாத்திரமின்றிக்கே ஸ்த்ரீகளிடத்திற்கூட அவர்களுடைய ப்ரயத்நத்தால் மிக அபதப்ரவ்ருத்தி உண்டாகியிருக்கின்றது என்பதையும் நன்றாக எடுத்து விவரித்தார். பிறகு, "வேதாந்த தீபிகை" என்னும் பத்ரிகை விஷயமாக அதன் ப்ரவர்த்தகர்களுக்குக் கிடைக்கும் ஸஹாயம் போதாததாக இருக்கின்றது என்றும், அதை ஆஸ்திகரெல்லாரும் உபகரித்தால் ஸம்ப்ரதாயத்திற்கு மஹத்தான ஶ்ரேயஸ் ஸம்பவிக்குமென்றும் சொல்லிவிட்டு, கடைசியாக ஸ்ரீ மடாதிபதிகளும் கோயிலதிகாரிகளும் ஸம்ப்ரதாய அபிவ்ருத்தி ஸம்பந்தமாகச் செய்யவேண்டிய சில அம்ஶங்களைப் பற்றிப் பரக்கப்பேசி தமது உபந்யாஸத்தை உபஸம்ஹரித்தார்.



அது முடிந்தவுடன், ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், ஸபையின் நோக்கங்களைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்ய ஆரம்பித்து, முதலில் ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸபையைக் குறித்து எவ்வித பாராங்முக்யத்தையும் வஹிக்காமல் அதிமாத்ரம் க்ருபையுடன் அபிமுகராக எழுந்தருளியிருக்கிறாரென்றும், அநேக வர்ஷங்களாக ஸபையார் விஜ்ஞாபநம் செய்துகொண்ட விஷயங்களாகிற ஸ்ரீ அஹோபிலம் முதலிய திவ்ய ஸந்நிதிகளுடைய ஜீர்ணோத்தாரணம், ஸ்ரீ ஸந்நிதிக்குச் சொந்தமான ஜங்கம ஸ்தாவர சொத்துக்களின் ஸமீசீந பரிபாலநம், இவைமுதலிய அம்ஶங்களில் ஸ்ரீ அழகிய சிங்கர் மிக்க ஶ்ரத்தையைச் செலுத்தி, ஸ்ரீ ஸந்நிதியை உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகச் செய்வதில் பூர்ணோத்ஸாஹத்துடன் கூடியிருக்கிறாரென்றும், இப்படி ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையுடன் கடாக்ஷிப்பதுபற்றி ஶிஷ்யர்கள் அனைவரும் அவரிடம் க்ருதஜ்ஞராக இருக்கவேண்டுமென்றும் விஜ்ஞாபநம் செய்துகொண்டு, பிறகு இந்த ஸபையை ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் சேரக்கூடியதான ஒரு பொது ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜமாக விஸ்தரிக்கவேண்டுமென்றும், ஒரே வைதிக மதத்தை ஆஶ்ரயித்திருக்கும் நமக்குள் பரஸ்பரமிருக்கும் ஸ்பர்த்தையையும் கலஹத்தையும் நாம் மறந்து, நம்மால் இயன்றவளவு ஒருவருக்கொருவர் ஸௌஹார்த்தத்தையும் ஐகமத்யத்தையும் தேடவேண்டுமென்றும், அப்படித் தேடுவதுதான் நம்முடைய வைதிகமதத்திற்கு லக்ஷணமாக இருப்பதுடன் நமக்கு ஆத்யந்திக ஶ்ரேயஸ் ஸாதநமாகவும் இருக்குமென்றும், அங்கு எழுந்தருளியிருந்த எல்லாருடைய புத்தியிலும் பதியும்படி விஶதமாக விவரித்தார்.

பிறகு, பின்வருமாறு சில தீர்மாநங்கள் செய்யப்பட்டன:—

(1) ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் ஆதரணையிற் சேர்ந்திருக்கும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தினரனைவரும், இந்தத் தேஶத்துச் சக்ரவர்த்தியினிடம் தமக்குள்ள த்ருடமும் பூர்ணமுமான ராஜ விஶ்வாஸத்தை ஸவிநயம் ஆவிஷ்கரிப்பதுடன், ப்ரிட்டிஷ ராஜாங்கத்தால் இந்தத் தேஶத்திற்குக் கிடைத்திருக்கும் பலவித நன்மைகளை உணர்ந்தவர்களாய், இப்பொழுது நடந்து வரும் ஐரோப்பா கண்டத்திய மஹா யுத்தத்தில் தமது ராஜாங்கத்தார் ஶீக்ரம் ஜயமடையவேண்டுமென்றும், அப்படி ஜயமடைவதற்கு அபேக்ஷிதமான ஸஹாயத்தைத் தம்மால் இயன்ற வரையிற் செய்யத் தாம் உத்ஸாஹ ஸம்பந்நர்களாக இருக்கிறார்களென்றும் ஸவிநயம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறார்கள்.

[இந்தத் தீர்மாநம் அக்ராஸநாதிபதியினால் ஸதஸ்யர்களுக்கு விஜ்ஞாபநம் செய்துகொள்ளப்பட்டு, ஸதஸ்யரெல்லாராலும் ஸோத்ஸாஹம் ஆமோதிக்கப்பட்டது.]

2. இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தினரனைவரும், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளுக்கு அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராராகவும், இந்த ஸபையின் உபஸபாத்யக்ஷர்களுள் ஒருவராகவும் இருந்து இப்பொழுது காலம் சென்ற ஸ்ரீ. உ.ப. வி. ராகவாசார்யர் விஷயமாக அதிமாத்ரம் துக்காக்ராந்தர்களாக இருப்பதுடன், அந்த மஹான் இந்த ஸபை விஷயமாக வைத்திருந்த ஆஸ்தையையும், அதற்காகப் பட்டிருக்கும் பரிஶ்ரமத்தையும், மஹத்தான உபகார ஸ்ம்ருதியுடன் ஒருபொழுதும் மறவாமல் ஸதா ஆதரித்து வருகிறார்கள். [இதுவும் அக்ராஸநாதிபதியினால் விஜ்ஞாபிக்கப்படவே, எல்லாரும் எழுந்து அதை ஆமோதித்தார்கள்.]

3. இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தினரனைவரும், ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆஸ்தானத்தில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயமாகப் பூர்ண ப்ரதிபத்தியுள்ளவர்களாக இருக்கிறார்களென்றும், இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் யாத்ரோத்ஸவம் கண்டருளும் விஷயமும், க்ரந்த காலக்ஷேபாதிகள் குறைவற நடந்துவரும் விஷயமும் எல்லாருக்கும் மிக்க ஆநந்தத்தை ஜநிப்பிக்கின்றனவென்றும், இதும்பாலே பல்லாண்டு பல்லாண்டாக ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்து ஸமஸ்த சேதநவர்க்கத்திற்கும் ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுப்பர் என்னும் விஶ்வாஸம் பூர்ணமாக எல்லாருடைய மனஸ்ஸிலும் இருக்கின்றதென்றும், பக்தி புரஸ்ஸரமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறார்கள். [இதுவும் எல்லாராலும் ஆமோதிக்கப்பட்டது.]

4. ஸங்கத்தின் இரண்டாவது தினத்தின் ப்ராதஃ காலத்தில் ஆலோசிக்கப்படும் ஸபா ஸம்பந்த விதிகளைப் பூர்வம் பரிஶீலனம் செய்யும் பொருட்டுப் பின் குறிக்கப்படும் ஸ்வாமிகளெல்லாரும், ஒரு கமிடியாகச் சேர்ந்து முதல் தினம் ராத்திரியிலேயே அவைகளைப்பற்றிச் சர்ச்சை செய்து, மறுநாள் அவற்றின் விஷயமான அவர்களுடைய அபிப்ராயத்தை நியமிக்கவேண்டுமென்று இந்த ஸங்கம் ப்ரார்த்திக்கின்றது :—

1. ஸ்ரீ. உ.ப. திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யர்.
2. ,, ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.
3. ,, டி. ராஜகோபாலாசார்யர்.
4. ,, எஸ். வாஸுதேவாசார்யர்.
5. ,, வி. ராஜகோபாலாசார்யர்.
6. ,, ஈ. ராகவாசார்யர்.
7. ,, டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர்.
8. ,, டி. நரஸிம்ம ஐயங்கார்.
9. ,, புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.
10. ,, குமார சக்ரவர்த்தி ஐயங்கார்.
11. ,, டி. இ. ராமாநுஜாசார்யர்.
12. ,, கே. எஸ். கிருஷ்ண ஐயங்கார்.



13. ,, திருப்பதி ஜகந்நாதாசார்யர்.
14. ,, டி. அநந்தாசார்யர்.
15. ,, ஏ. கோவிந்தாசார்யர்.
16. ,, வி. வ. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

[இதுவும் எல்லாராலும் ஆமோதிக்கப்பட்டது]. பிறகு, அன்றைய மத்யாஹ்ந ஸங்கம் கிஞ்சித் விஶ்ரமார்த்தம் கலைந்தது.

மறுபடியும் பகல் 3 - 30 - மணிக்கு ஸங்கம் உபக்ரமித்தது. ஸ்ரீ. உ.ப. கபிஸ்தலம் தேஶிகாசார்யருடைய திருமேனி கொஞ்சம் அஸ்வஸ்தமாக இருந்தபடியால், அவர் ஸங்கத்திற்கு எழுந்தருளவில்லை. அதற்குப் பதிலாக ஸ்ரீ. உ.ப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாசாசார்யர், 'கர்மாநுஷ்டாநம்' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். அநேகப்ரமாணங்களைக்கொண்டு நித்ய நைமித்திகளுபகர்மங்களெல்லாம் ஸர்வ ப்ரகாரத்தாலும் அநுஷ்டிக்கவேண்டியவையென்றும், முக்கிய கல்பரீதியாக அவைகளை இந்நாளில் அநுஷ்டிப்பது துஸ்ஸாத்யமானால் அஶக்தர்களுக்கு விஹிதமாயுள்ள கௌண கல்பரீதியாகவாவது அவைகளை எல்லாரும் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், ஏதாவது ஒரு காரணத்தினால் அவைகளுக்கு லோபம் ஸம்பவிக்கும் பக்ஷத்தில், அது ஜகத்தின் க்ஷேமத்தின் பொருட்டே யாகுமென்றும், ஆகையால் இந்த ஸங்கத்தில் ஸந்நிஹிதர்களாக இருக்கும் ஸ்வாமிகளெல்லாரும் தாம் யதாஶக்தி கர்மங்களை அநுஷ்டிப்பதுடன் தம்மால் இயன்றமட்டும் மற்றவர்களையும் அநுஷ்டிக்கும்படி செய்ய முயலவேண்டுமென்றும் ப்ரமாண புரஸ்ஸரமாக உபபாதித்தார். பிறகு மைஸூரிலிருந்து இந்த ஸங்கத்தை உத்தேஶித்தே ஸர்வ ஶ்ரமங்களையும் அநாதரித்து மிக்க ஆஸ்தையுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ.ப. எ. கோவிந்தாசார்யர், "ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் ஸ்திதி" என்னும் விஷயத்தைப்பற்றி அத்யாதருஶமான ஓர் உபந்யாஸத்தைச் செய்தார். பூர்வ காலங்களில் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு இருந்த ஸ்திதியையும், வர்த்தமாந காலத்தில் அதற்கு இருக்கும் ஸ்திதியையும், பவிஷ்யத் காலத்தில் அதற்கு ஸம்பவிக்கப்போகும் ஸ்திதியையும் பற்றி அநேக ப்ரமாணங்களைக்கொண்டு எல்லாரும் ரஞ்ஜிக்கும்படியாகவும், எல்லாரும் ஒத்துக் கொள்ளும்படியாகவும் சற்றேறக்குறைய இரண்டு முஹூர்த்தகாலம் விஸ்தாரமாக ப்ரஸ்தாவித்தார். ஸ்ரீமந்நாராயணனே பரமமான தைவமென்றும், அவனுடைய அவதார சேஷ்டிதங்களே அநாதிகாலங்களாக எல்லாராலும் கொண்டாடப்படுகின்றனவென்றும், இந்த ஸ்ரீ வைஷ்ணவமதம் ஜகத்முழுவதும் வ்யாபித்து எல்லாருக்கும் பூர்ணமான ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கப்போகின்றது என்றும் உபபாதநம் செய்து, அப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை, நாம், நமக்குள்ளிருக்கும் பரஸ்பர ஸ்பர்த்தையினால் பிறருக்குப் பரிஹாஸாஸ்பத மாகும்படி செய்வது ஸரியல்ல வென்றும், ஸகல வைஷம்யங்களையும் மறந்து ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நாமெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸை ஸம்பாதிக்க ப்ரயத்நப்பட வேண்டுமென்றும் பல

விதமாக எடுத்துக் காண்பித்தார். அதற்குள் ஸூர்யாஸ்தமயமாகவே ஸங்கம் கலைந்தது.

அன்றிரவு, ததீயாராதநாநந்தரம், புதிய விதிகளைப் பரிசீலநம் செய்யும் பொருட்டு அன்று காலையில் நியமிக்கப்பட்ட கமிடியார், ஸ்ரீ மடத்தில், அக்ராஸநாதிபதி தங்கியிருந்த ஓரிடத்தில் சேர்ந்தார்கள். ஸபையின் நோக்கங்களைக் கிஞ்சித் விஸ்தரிப்பதைப் பற்றியும், ததநுகுணமாக ஸபையின் பெயரை மாற்றுவதைப் பற்றியும் பூர்ண சர்ச்சை நடந்தது. முடிவில் இரண்டொருவர் நீங்கலாக மற்றை எல்லாரும், விஸ்தரிப்பது உசிதமென்றும், பெயரையும் அந்த விஸ்தாரத்துக்குத் தக்கபடி மாற்றுவது ஸரியென்றும் அபிப்ராயப்பட்டு, அந்தப்படி மறுநாள் காலையில் மஹாஸங்கத்தில் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறதென்று தீர்மானித்தார்கள்.

மறுநாள் காலையில் 9-மணிக்கு, மஹாஸங்கம் சேர்ந்தது. அக்ராஸநாதிபதி பூர்வதிநத்தில் கமிடியார் செய்த நிர்ணயத்தை ஸதஸ்ஸுக்கு விஜ்ஞாபநம் செய்துகொண்டு, அதைப்பற்றி ஸங்கத்தின் அபிப்ராயம் எப்படி என்பதைத் தெரிவிக்கும்படி ஸதஸ்யர்களை ப்ரார்த்தித்தார். ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், டி. ராஜகோபாலாசார்யர், ஏ. கோவிந்தாசார்யர் முதலிய அநேகர் அந்த நிர்ணயத்தைப் பலவாறாக ஆமோதிக்க, ஸ்ரீ. உப. திருக்கள்ளம் ஸ்ரீநிவாஸராகவாசார்யர் என்னும் ஒரு ஸ்வாமி அதைப்பற்றி ஆக்ஷேபித்து, ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபையால் உத்தேசிக்கப்பட்ட மநோரதங்கள் இன்னும் பூர்த்தியாகாமலிருக்க, ஸபையை விஸ்தரிப்பதைப்பற்றி இப்பொழுது ஆலோசிப்பது அவஸர ப்ராப்தமன்று என்று சொல்லி அதைத் தடுத்தார். அப்பொழுது, இதைப்பற்றி தீர்க்காலோசனை செய்தவர்களுள் சிலர், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் முக்கிய நோக்கமாகிற ஸ்ரீ வைதிக ஸித்தாந்தாபிவ்ருத்தியை ஸாதித்துக் கொள்வதில் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களிடமிருந்து இப்பொழுது கிடைக்கும் ஸஹாயம் போதாமல் இருக்கின்றதென்றும், இப்பொழுது உத்தேசிக்கிறபடி ஸபையை விஸ்தரித்தால் அந்த மநோரதத்தை நன்றாக ஸாதித்துக்கொள்ள அவகாசம் அதிகமாக ஸம்பவிக்கின்றதென்றும், ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்தியைத் தேடுவது முதலிய மற்றை நோக்கங்களை ஆத்யந்திகமாக த்யஜித்து விடாமல் அவைகளுக்கு அநுகுணமாக ஒரு உள்பிரிவு இந்தப் புதிய விதிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்றும், இப்பொழுது தென்கலை-வடகலையென்றும், மடம்-முநித்ரயமென்றும், அத்யாபகம்-வேதபாராயணமென்றும் நாம் பரஸ்பரம் ஸ்பர்த்தை செய்துகொண்டிருப்பதுபோல, ஸதா ஸ்பர்த்தை செய்துகொண்டு, நமது ஸித்தாந்த விஷயத்தில் அத்யந்தம் அநபிஜ்ஞர்களாக இருக்குமவர்களிடம் போய், நாம் நமது விவாத சமநார்த்தம் காத்து நிற்பது அதீவ பரிஹாஸாஸ்பதமாக இருக்கிறபடியால், அந்த ஸ்பர்த்தையை விட்டு ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஒன்று சேர்ந்து ஸித்தாந்தாபிவ்ருத்தியைத் தேடுவதுதான் யுக



வம் முகோல்லாஸகரமாக இருக்குமென்றும் எடுத்து உரைக்க, அந்த ஆக்ஷேபத்தை ஆமோதித்தவர்களுள் அநேகர் த்ருப்தரானார்கள். திருக்கள்ளம் ஸ்வாமி மாத்ரம் த்ருப்தியடையாமல், தமக்கு இதைப்பற்றி சொல்லிக்கொள்ளவேண்டிய அம்சம் பஹுவாக இருக்கின்றதென்றும், அவைகள் பத்ரிகையில் எழுதி ப்ரசுரம் செய்யப்படுமென்றும் சொல்லிவிட்டு உட்கார்ந்தார். பிறகு, இது விஷயமாக ஸதஸ்யர்களின் நிர்ணயம் தெரியவேண்டுமென்று அக்ராஸநாதிபதி ஸதஸ்யர்களை ப்ரார்த்திக்க, திருக்கள்ளம் ஸ்வாமி ஒருவர் நீங்கலாக மற்றை எல்லாரும் கமிடியாருடைய நிர்ணயத்தை ஆமோதித்தார்கள். அதன்படி விதிகளில் நோக்கங்களை விஸ்தரித்து, ஸபையின் பெயரையும் "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை" என்று மாற்றி, அதற்குத் தகுந்தபடி மற்றை விதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இதனுடன் பூர்வாஹ்ந ஸங்கம் முடிந்தது.

மறுபடியும் மத்யாஹ்நம் 2-மணிக்கு ஸதஸ் உபக்ரமித்தவுடன் பின்வருமாறு புதிய வருஷத்திற்கு ஸபையின் நிர்வாஹக ஸங்கத்தினர் நியமிக்கப்பட்டார்கள்:—

ஸபாத்யக்ஷர்: ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர்.
தத்ப்ரதிநிதிகள்: ,, ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.
,, டி. ராஜகோபாலாசார்யர்.
கார்யதர்சியும் கோசாதிகாரியும்: ,, எஸ். வாஸுதேவாசார்யர்.
கார்யதர்சிமட்டில்: ,, டி. கோதண்டராம ஐயங்கார்.
மற்றை அங்கத்தினர்: ஸ்ரீ. உப. ஸி. ராஜகோபாலாசார்யர்.
,, டி. நரஸிம்ம ஐயங்கார்.
,, வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.
,, டி. அநந்தாசார்யர்.
,, எஸ். ராஜகோபாலாசார்யர்.
,, குமார சக்ரவர்த்தி ஐயங்கார்.
,, பிள்ளாநத்தூர் ஸுந்தராசார்யர்.
,, எஸ். கிருஷ்ண ஐயங்கார்.
,, டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர்.
,, ஆர். நரஸிம்ம ஐயங்கார்
,, குளத்தூர் ராகவாசார்யர்.

புதிய விதிகளில் கண்டிருக்கும் ஸங்க்யைக்கு அதிகப்படாமல், மற்றை அங்கத்தினர்களை நியமித்துக்கொள்ள இந்தக் கமிடியாருக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர் "சாஸ்த்ர வச்யதை" என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யாஸம் செய்தார். பாச்சாத்ய வித்

பையை அப்யஸித்து, ஐஹிக போகங்களையே பரமபுருஷார்த்தமாகப் பாவித்து வரும் சில ப்ரபுக்களால் இக்காலத்தில் நமது ஶ்ருதி முதலிய ஶாஸ்த்ரங்களின் பேரில் ஆரோபிக்கப்படும் அப்ராமாண்ய ஶங்கையை ஸர்வஸம்மதங்களான அநேக ப்ரமாணங்களைக் கொண்டு நிராகரித்து, ஶ்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறபடி, நமது வர்ணாஶ்ரம தர்மங்களை நாம் யதாஶக்தி லோபமின்றிக்கு அநுஷ்டித்து வந்தால், அவ்வநுஷ்டாநம் ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் நமக்கு ஸர்வவித ஶ்ரேயஸ்ஸையும் ஸாதித்துக் கொடுக்குமென்றும், அஶக்தியினாலாவது வேறுவித நிர்பந்தங்களினாலாவது அந்தத் தர்மங்கள் ஶாஸ்த்ரோக்தமாக நம்மால் அநுஷ்டிக்கக் கூடாவிட்டால், ஶாஸ்த்ரங்களில் அத்யந்தம் அவஶ்யமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஸ்நாநம் ஸந்த்யோபாஸநம் முதலிய கர்மங்களைக் காலங்களில் ஶ்ரத்தையுடன் அநுஷ்டித்தும், மஹாபாதகங்களான அஸத்யவசநம் பரத்ரவ்யாபஹாரம் முதலிய பாபங்களை நிவ்ருத்தித்தும், தர்மங்களைப் பூர்ணமாக அநுஷ்டிப்பதில் இருக்கும் அஶக்தியைப்பற்றி ஹார்த்தமாக அநுதபித்தும், நாம் வர்த்தித்து வந்தால், ஸ்ரீ பகவாந், நமது குறைவுகளைப் பூர்த்திசெய்துகொண்டு, நம்மை க்ருபையுடன் அநுக்ரஹிப்பனென்றும் சொல்லி உபந்யாஸத்தை நிகமநம் செய்தார். அது முடிந்தவுடன் ஸ்ரீ. உப. ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீநிகமாந்த மஹாதேஶிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட "ஸங்கல்ப ஸூர்யோதயம்" என்னும் நாடகத்தைப்பற்றி உபந்யஸிக்க ஆரம்பித்து, பூர்வாங்கமாக, சில மிதஜ்ஞர்களால் ஸ்ரீதேஶிகனுடைய திவ்யஸூக்திகளின் ஶய்யையின் பேரில் ஆரோபிக்கப்படும் காடிந்யாதி தோஷங்களுக்கு எவ்வித அவகாஶமும் இல்லையென்றும், ப்ரத்யுத 'யாதவாப்யுதயம்' 'ஹம்ஸ ஸந்தேஶம்' முதலிய காவ்யங்களைப் பரிஶீலநம் செய்து பார்க்குமளவில், ஸ்ரீ தேஶிகன் ஸாரள்யத்திலும் ஸரஸதையிலும் காளிதாஸனை அதிஶயித்திருக்கிறாரென்றும் அநேக நிதர்ஶநங்களால் நிரூபித்துவிட்டு, பிறகு க்ருஷ்ணமிஶ்ரனால் இயற்றப்பட்டுள்ள 'பூர்ணசந்த்ரோதயம்' என்னும் நாடகத்தையும் 'ஸங்கல்ப ஸூர்யோதயம்' என்னும் ப்ராக்ருதநாடகத்தையும் விஸ்தாரமாகப் பரிஶோதித்து, அவைகளுக்குள் இருக்கும் தாரதம்யத்தை அதிகமான சமத்காரத்துடன் எடுத்து விவரித்தார். கவிஹ்ருதயத்தை நன்றாக அறியக்கூடிய திறமையையுள்ள இந்த வித்வாந் செய்த உபந்யாஸத்தை ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநத்தையுடைய ஸதஸ்யர்களெல்லாரும் நிரம்பவும் ஶ்லாகித்தார்கள். அதற்குப் பிறகு அங்கு எழுந்தருளியிருந்த ஒரு வித்வாந் இந்த ஸதஸ்ஸில் தாம் ஒரு விஷயத்தைப்பற்றி விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேணுமென்னும் ஆஸ்தை தமக்கு இருப்பதாகவும், அதற்கு அநுமதி வேண்டுமென்றும் அக்ராஸநாதிபதியைக் கேட்டுக்கொண்டதன் பேரில், அக்ராஸநாதிபதியும் அதற்கு இணங்கி அப்யுபகமம் செய்ய, அந்த ஸ்வாமி, ஸ்ரீராமனுடைய ப்ரஸித்தமான ஏக பார்யா வ்ரதத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார். ததநந்தரம், மைஸூர் ஸ்ரீ. ஏ. கோவிந்தாசார்யர், அப்பொழுது கிடைத்த சிறிது அவகாஶத்தை அவ



லம்பித்து, ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் ப்ரௌடிமையையும், அப்படிப்பட்ட அதிகம்பீரமான மதத்தை இப்பொழுது இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அஜ்ஞதையால் பரஸ்பரம் கலகம் செய்துகொண்டு வீணில் கெடுப்பதையும் பார்த்து, மிகஶோகித்து, 'ஜகத்தில் மற்றவர்களெல்லாரும் ஐகமத்யத்தை அடைந்து நன்றாக வாழும் ஸ்திதியைத் தேடும் காலத்தில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் மாத்திரம் ஏன் வீணில் நஶிக்கவேணும்?' என்று நிரம்பவும் கதறி வருத்தப்பட்டார். பிறகு அன்றைய ஸங்கம் கலைந்தது.

அன்றிரவு 9 - மணிக்குமேல், அந்தக் கொலுமண்டபத்திலேயே ஸ்ரீ. உப. எம். கெ. தாதாசார்யர், 'பாஞ்சாலீ மாந ஸம்ரக்ஷணம்' என்னும் கதையை அத்யத்புதமாகவும் எல்லாரும் கேட்டு அதிமாத்ரம் ஆநந்திக்கும்படியாகவும் சொல்லி, ஒரு யாம காலத்தை ஒரு முஹூர்த்தம்போல நயிப்பித்தார். அவருடைய ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநத்தையும் ஞாநத்தின் ஸ்வாதுத்வத்தையும் கதா ஸந்தர்ப்பங்களைச் சேர்ப்பதில் அவருடைய நைஸர்க்கிகமான கௌஶலத்தையும் எல்லாரும் மிக ஶ்லாகித்தார்கள்.

மறுதிநம் காலை 9 - மணிக்கு மறுபடியும் ஸங்கம் சேர்ந்தது. ஸ்ரீ. உப. கபிஸ்தலம் ரங்காசார்யர், ஏற்கெனவே நியமித்திருந்தபடி தமது உபந்யாஸத்தை ஒரு வ்யாஸரூபமாக எழுதி, அதை ஸதஸ்ஸில் படிக்கும்படித் தமது ஶிஷ்யர்களில் ஒருவரை அனுப்பியிருந்தார். "முமுக்ஷுவுக்கு குருபாஸநம் அவஶ்யம்" என்பது அந்த உபந்யாஸத்தின் விஷயம். அதில் வெளிப்படுத்தப்பட்டிருந்த, அவருடைய ஜ்ஞாந பாகமும் விஷயத்தின் உபபாதந ரீதியும், வாக்ய பங்க்திகளின் ப்ரவாஹமும் அந்யாத்ருஶமாகவே இருந்தன. அதற்குப் பிறகு ஸ்ரீ. உப. திருப்பதி ஜகந்நாதாசாரியர் கர்மத்தைப்பற்றிய நமது ஸித்தாந்தத்தின் விஷயமாக அநேக லௌகிக யுக்திகளையும் ப்ரமாணங்களையும் கொண்டு ஸங்க்ரஹமாகவே ஒரு உபந்யாஸத்தைச் செய்தார்.

மத்யாஹ்நம் 2 - மணிக்கு மறுபடியும் ஸங்கம் சேர்ந்தபொழுது, ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர், ஸ்ரீ பாஷ்யகாரர் வைபவத்தைப் பற்றி அதி விஸ்தாரமாகவும், அதைக்கேட்குமவர்க்கெல்லாம் ஸ்ரீ பாஷ்யகாரரிடத்தில் விஶேஷித்த பக்தி உண்டாகும்படியாகவும், அத்யாஶ்சர்யமானதோர் ஆதராதிஶயத்துடன் ஒரு உபந்யாஸம் செய்தார். அந்த வைபவத்தைப்பற்றி அவர் ப்ரஸங்கிக்கும்பொழுது, அவரிடத்தில் காணப்பட்ட ஓர் ஆர்ஜவமும் ஹார்த்தமான ஶ்ரத்தையுமே அதீவ ஆகர்ஷகமாக இருந்தது. அதற்குப் பிறகு ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் "வைதிக

மதங்களின் ஐகரஸ்யம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீஸங்கராசார்யராற் செய்யப்பட்டுள்ள ஸூத்ர பாஷ்யத்திலும் கீதா பாஷ்யத்திலும் ஜீவாத்ம பரமாத்ம பேதப்ரதிபாதகங்களான அநேக வாக்யங்களை ஆதாரமாக அவலம்பித்து, ஸ்ரீ ஸங்கராசார்யருக்கு அப்படிப்பட்ட பேதத்திலேயே தாத்பர்யமென்றும், ஸ்தலாந்தரங்களில் ஐக்யத்தைச் சொல்லும் வாதங்கள் காணப்பட்டால், அவை அதிவாதங்களாகவே இருக்கவேண்டுமென்றும் ப்ரஸங்கம் செய்தார். அது முடிந்தவுடன் ஸ்ரீ. உப. நாச்சியார்கோவில் க்ருஷ்ணமாசார்யர் "ஸ்ரீ வேதாந்த தேஸிக வைபவம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யாஸம் செய்தார். அவகாஸம் மிதமாக ஸம்பவித்து விட்டபடியால், அந்த ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளுடைய ஸ்வாரஸ்யத்தை ஸதஸ்யர்கள் பூர்ணமாக அநுபவிக்கக் கூடாமல் போய்விட்டது. ப்ரஸங்கங்களெல்லாம் இந்த மாதிரி க்ரமப்ரகாரமாக முடிந்தவுடன், ஸ்ரீ. உப. அஷ்டாவதானம் லக்ஷ்மீகுமார தாதாசார்யர் என்னும் திருவெவ்வுளூர் நிவாஸியான ஒரு ஸ்வாமீ, மூன்று நாளாக அவ்விடத்தில் நடந்த ஸதஸ்ஸைப் பற்றியும், உபந்யாஸங்களைப் பற்றியும் பஹுவாக ஸ்லாகித்து, 'எல்லாருக்கும் ஹ்ருதயங்கமங்களாக இருக்கும் ஸ்ரீ ஸபையின் மநோரதங்களை ஸ்ரீ வீரராகவன் கடாக்ஷித்துப் பூர்த்திசெய்து வைக்கவேண்டும் என்பது ஸ்ரீ திருவெவ்வுளூர் நிவாஸிகளான ஆஸ்திகர்களுடைய ப்ரார்த்தனை' என்று விஜ்ஞாபநம் செய்துகொண்டார். 'ஸபையை விஸ்த்ருதமாகச் செய்தது சிலருக்கு அநபிமதமாக இருக்குமோ?' என்று சிலர் மநஸ்ஸில் ஜநித்த ஒரு அதிஸங்கையை, இந்த ஸ்வாமியின் ஆமோதநம் நிவ்ருத்திசெய்தது.

பிறகு, அக்ராஸநாதிபதி, இன்னும் அநேக வித்வாங்கள் அநேக விஷயங்களைப்பற்றி உபந்யஸிக்க ஆஸ்தாளுக்களாக இருக்கிறார்களென்று தனக்குத் தெரியவந்ததென்றும், அப்படி அவர்களை அங்கீகரிக்கும் விஷயத்தில் தமக்குப் பூர்ணமான அபிப்ராயம் இருக்கையிலும் அவகாஸம் இல்லாததால் அவர்களுடைய உபந்யாஸங்களைக் கேட்டு ஆநந்திக்க ப்ராப்தி இல்லாமல் போய்விட்டதென்றும் ஸோகித்து, அந்த மூன்று திநங்களிலும் அத்யாஹ்லாதகரமாக ப்ரஸங்கங்களைச் செய்த வித்வாங்கள் விஷயத்திலும், அதிதிகளாக வந்திருந்த விதேஸீயர்களுக்குத் தமது தேஹ ஸ்ரமத்தையும் அர்த்த வ்யயத்தையும் கிஞ்சித்தேனும் பாராட்டாமல் பூர்ண ஆதித்யம் செய்து வைத்த ஸ்ரீ. உப. ஈக்காடு ராகவாசார்யர், டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், அஷ்டாவதாநம் லக்ஷ்மீகுமார தாதாசார்யர், டி. வி. வேதாந்தாசார்யர் முதலிய ஸ்ரீ திருவெவ்வுளூர் நிவாஸிகளான ஸ்வாமிகள் விஷயத்திலும், ஸப்யர்களுக்கு ஜநித்திருக்கும் க்ருதஜ்ஞதையைப் பலவாறாக வெளியிட்டு மஹாஸங்கத்தைப் பூர்த்திசெய்தார்.



பிறகு, ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், இந்த 5-வர்ஷ காலமாக ஸபாத்யக்ஷராக விருந்து, இப்பொழுது அந்த பாரத்தை நிவ்ருத்தித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலா சார்யருக்கும், அதே 5-வர்ஷ காலமாக கார்யதர்ஸியாக இருந்து, இப்பொழுது சில அஸக்திகளால் கொஞ்சம் விராமத்தை அபேக்ஷித்து நிவ்ருத்தித்திருக்கும் ஸ்ரீ. உப. வி. ராஜகோபாலாசார்யருக்கும், இந்த ஸப்யர்கள் அதிமாத்ரம் க்ருதஜ்ஞர்களாக விருக்கிறார்களென்றும், இந்த மூன்று திநங்களாக எல்லாருக்கும் ஸந்தோஷ முண்டாகும்படி அக்ராஸநாதிபதியாக இருந்து ஸதஸ்ஸின் கார்யங்களை நிர்விக்நமாகப் பாதுகாத்து ஸதஸ்ஸைப் பூர்த்திசெய்து வைத்த ஸ்ரீ. உப. ராவ் பஹதூர் ராமஸ்வாமி ஐயங்கார் செய்த மஹோபகாரத்தை ஸப்யர்களெல்லாரும் க்ருதஜ்ஞதையுடன் ஆதரிக்கிறார்களென்றும் விஜ்ஞாபித்துக்கொண்டார்.

பிறகு, இந்த ஸங்கத்தின் உபயோகத்திற்காக ஸ்ரீ மடத்தையும் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியையும் க்ருபையாக ப்ரஸாதித்தருளின ஸ்ரீ அழகியசிங்கருக்கும், இம்மாதிரியான ஸதஸ்ஸை நிர்வஹிப்பதிலுள்ள பரிஸ்ரமம் முழுவதையும் தாங்களே ஏற்றுக்கொண்டு தங்களால் கூடியவரையில் ஸகல வித உபகாரத்தையும் செய்த ஸ்ரீ திருவெவ்வுளூர் ஸர்க்கார் அதிகாரிகளுக்கும், கோயில் அதிகாரிகளுக்கும், பாடஸாலா ஸம்பத்தர்களான உபாத்யாய மாணவகர்களுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும், ஸப்யர்களுடைய க்ருதஜ்ஞதை பூர்ணமாக ஆவிஷ்கரிக்கப்பட்ட பிறகு இந்த வர்ஷத்திய மஹாஸங்கம் கலைந்தது. அன்றிரவு, ஸ்ரீ வீரராகவன் மிக்க விபவத்துடன் அத்யாஸ்சர்யகரமாக உத்ஸவம் கண்டருளினன்.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

(திருப்பதிப் பிரிவு.)

---

சென்னைப்பட்டணத்தைச் சேர்ந்த மயிலாப்பூரில் அதிஷ்டித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையை அநுஸரித்துத் திருப்பதியில் நாளது ஜனவரிமீ 26வ ஓர் பிரிவு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக அவ்விடத்திய ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணர்கள் யாவரும் ஸ்ரீ நம்மாழ்வார் ஸந்நிதியில் மாலை 6-மணிக்குக் கூட்டம் கூடினார்கள். ஷை ஸதஸ்ஸில்,

(1) ஸ்ரீ. விசிஷ்டாத்வைத மதஸித்தாந்தங்களை அறிந்து அதை வ்ருத்தி செய்துவதும்,

(2) அந்த மதஸம்பந்தமான ப்ராசீந க்ரந்தங்களை ப்ரசுரப்படுத்துவதும்,

(3) ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஐகமத்யபாவமும் பரஸ்பர ப்ரீதியும் அத்வேஷமும் உண்டுபண்ணி அந்த மதஸ்தர்களில் இப்பொழுது வ்ருத்தி யடைந்திருக்கும் வ்யத்யாஸங்களையும் வைஷம்யங்களையும் நசிக்கச்செய்வதும்,

(4) ஷை ஸபையின் பத்ரிகையாகிய "ஸ்ரீ வேதாந்ததீபிகை" யைப் பரவச்செய்வதற்காகக் கூடியவரையில் ப்ரோத்ஸாஹம் செய்வதும்,

இவை முதலானவைகள் இந்த உபஸபையின் உத்தேசங்களென்று இவ்விடத்திய ஸம்ஸ்க்ருத பாடசாலை ப்ரதாந பண்டிதர் ஸ்ரீமான் கபிஸ்தலம் தேசிகாசாரியர், இவ்விடத்திய டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் ஸ்ரீமாந் தட்டை அநந்தாசாரியர் அவர்கள் பீ-ஏ., பி-யல். (வக்கீல்), ஸ்ரீமாந் மலையாங்குளம் ஜகந்நாதாசாரியர், (வக்கீல்) இவர்கள் அந்த ஸப்யர்களுக்கு நன்றாய் எடுத்துரைத்தனர். அந்த உபஸபைக்குத் தத்காலம் அக்ராஸநாதிபதியாக ஏற்பாடு செய்யப்பட்ட வக்கீல் ஸ்ரீமாந் இடாம்பி கிருஷ்ணமாசாரியர், ஷை உபஸபைக்கு, ரூ. 50 உசிதமாகக் கொடுத்தது தெரியப்படுத்தப்பட்டது. பிறகு கீழ்விவரிக்கப் பட்டிருக்கும் ஸ்வாமிகளை ஷை ஸபா கார்ய நிர்வாஹகர்களாக ஏற்படுத்தும் பொருட்டு வக்கீல், ஸ்ரீமாந் தாமரைப்பூ சேஷாசாரியரால் ப்ரஸ்தாபிக்கப்பட்டுப் பண்டிதர் ஸ்ரீமாந் சங்கரம்பாடி கிருஷ்ணமாசாரியாராலும் வக்கீல் ஸ்ரீமாந் சக்ரவர்த்தி கோபாலாசாரியாராலும் ப்ரோத்பலப்படுத்தப்பட்டபடி நியமிக்கப்பட்டார்கள்.



அக்ராஸநாதிபதி :— ஸ்ரீமாந் திருமலை நல்லான் சக்ரவர்த்தி கிருஷ்ணமாசாரியர், (வக்கீல்)

கார்யதர்சிகள்.
1. ஸ்ரீமாந் கபிஸ்தலம் கிருஷ்ணமாசாரியர் பி-ஏ. எல். டி, (மிஷன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்.)
2. ஸ்ரீமாந் சக்ரவர்த்தி கோபாலாசாரியர், வக்கீல்.

பொக்கிஷதார் :— ஸ்ரீமாந் வேலாமூர் அநந்தாசாரியர், (வக்கீல்)

கார்ய நிர்வாஹக ஸபையார்.
- மேற்கூறிய 4 ஸ்வாமிகள்,
- ஸ்ரீமாந் கபிஸ்தலம் தேசிகாசாரியர், (ஸம்ஸ்க்ருத பாடசாலை ப்ரதாந பண்டிதர்)
- ஸ்ரீமாந் தட்டை அநந்தாசாரியர் பி-ஏ. பி-யல். (டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்)
- ஸ்ரீமாந் மலையாங்குளம் ஸ்ரீநிவாஸாசாரியர் பி-ஏ. (பென்ஷன் தாசில்தார்)
- ஸ்ரீமாந் இடாம்பி கிருஷ்ணமாசாரியர், (வக்கீல்,)
- ஸ்ரீமாந் மலையாங்குளம் ஜகந்நாதாசாரியர், (வக்கீல்,)

பின்பு அக்ராஸநாதிபதி, ஷை ஸபையில் வந்திருக்கும் வடகலை தென்கலை ஸம்ப்ரதாய ஸ்ரீ வைஷ்ணவர்கள் தம் தமக்குள்ளிருக்கும் அபிப்ராய பேதங்களைப் பாராட்டாமல் ஐகமத்யமும் ஸமபாவமு மடைந்து அனைவரும் ஒன்று சேர்ந்து ஏகக்ரீவமாய் ப்ரவர்த்திக்கும்படி ஸப்யருக்குப் போதகராகவும் மநோரஞ்சகமாகவும் உபந்யஸித்தார்.

அதன்மேல் அவருக்கு வந்தநத்துடன் ஸபை கலைந்தது.

Tirupathi 27—1—16.

K. KRISHNAMA CHARIAR,
Secretary
The Sri Vaishnava Siddhanta Sabha
(Tirupathi Branch.)

# கடிதங்கள்.

1.

**ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸந்நிதி வ்யவஹாரங்கள்.**

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸந்நிதி வ்யவஹாரங்களைப்பற்றி ஒரு ஸ்வாமி தீபிகைக்கு எழுதுகின்றார். வ்யவஹாரங்கள் கோர்ட்டில் விசாரணைபிமுகங்களாய் நிற்கின்றன. இதை எண்ணியே, அந்த ஸ்வாமி ஸாவதாநத்துடன் எழுதியிருக்கின்றாராகிலும், அவருடைய கடிதத்தைக் கிடைத்தபடி வெளியிடல் யுக்தமாகத் தோன்றவில்லை.

அந்த ஆலயத்தில் ஸ்ரீ வேதாந்ததேசிகனுக்கு ஒரு ஸந்நிதி இருக்கின்றது. மேற்குறித்த வ்யவஹாரங்கள் அந்த ஸந்நிதியைப்பற்றி உண்டாயிருக்கின்றன. தென்கலையார்களாகிய கோவில் அர்ச்சக பரிசாரகர் முதலானவர்களில் அநேகர், தேசிகனுக்குத் தென்கலைபுண்ட்ரம் இட்டுத் தென்கலையாராலேயே, தென்கலை ஸம்ப்ரதாய வழக்கப்படி உத்ஸவங்கள் நடத்தவேண்டுமென்று பாத்யம் கொண்டாடுகின்றனரென்றும், அந்தப் பாத்யத்தைக் கோவில் விசாரணைகர்த்தர் மூவரில் இருவர் மறுக்கின்றனரென்றும், தேசிகன் மர்யாதை விஷயத்தில் அர்ச்சகபரிசாரகர்கள் விசாரணைகர்த்தர்களுடைய ஆஜ்ஞைகளை அதிக்ரமித்தபடியால் அவரால் நிவர்த்திக்கப்பட்டனரென்றும், ஆதலால் மேற்படியார் தாம் கொண்டாடும் பாத்யங்களை ஸ்தாபித்துக்கொள்ளவும், தங்களுடைய ஸ்தாநங்களை அடைவதற்கும் வ்யவஹாரங்கள் செய்தனரென்றும், அவர்க்கு அநுகூலராயிருந்த இதர ஸந்நிதி கைங்கரியபரரும் விசாரணைக்கர்த்தருடன் விவாதப்பட்டு, வேறு வ்யவஹாரங்கள் செய்திருக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது. வ்யவஹாரங்கள் பரிசீலநமான பிறகு அவற்றின் முடிவை விவரமாகத் தெரிவித்தால், அதைத் தீபிகையில் வெளிப்படுத்துவது யுக்தமாயிருக்கும். அந்த முடிவை ப்ரதீக்ஷித்துக்கொண்டு மேற்படி நிருபத்தை வைத்துக்கொண்டிருக்கின்றோம்.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.

*　　*　　*　　*　　*　　*



2.

உ. வே. பு. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி எழுதுகின்றார்:—

**ஸ்ரீஜயந்தி விஷயம்.**

"இந்த வர்ஷம் ஸ்ரீ ஜயந்தியானது, தோழப்பர் என்கிற வைதிக ஸார்வபௌமரால் அருளிச்செய்யப்பட்ட தசநிர்ணய க்ரந்தத்தின் 24-வது பக்கத்தில் சொல்லுகிற ப்ரகாரம் புதன்கிழமை ஸப்தமி க்ருத்திகா வேதை யிருந்தாலும், புதவாரயோக மிருப்பதால், அது சுத்தை தான் என்றும், வைஷ்ணவர்களும் அப்படியேதான் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், ஸ்புடதரமாய் ஏற்படுகிறது. அப்படியிருக்க, அநேகம் ஸ்வாமிகள் வ்யாழக்கிழமையே ஜயந்தீவ்ரதாநுஷ்டாநம் செய்தார்கள். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியிலிருந்தும் வியாழக்கிழமைதான் அநுஷ்டிக்கவேண்டுமென்று நியமநம் வந்ததாயும் பத்ரிகை காட்டுகிறார்கள். மற்ற எல்லா விஷயத்திற்கும், ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரனுடைய காலம் முதல், தோழப்பர் க்ரந்தம் ப்ராமாணிகமென்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவுள்ளம்பற்றி அநுஷ்டித்துவர, இந்த ஜயந்தீ விஷயத்தில் மாத்ரம் அந்த க்ரந்தத்தை அநாதரித்து, வேறு விதமாய் அநுஷ்டித்தபடியினால், இது விஷயத்தில் க்ரந்தாந்தர ப்ரமாணத்தையோ, அல்லது, தசநிர்ணய க்ரந்தத்திற்கே வேறு விதமான அர்த்த க்ரஹணத்தினாலோ, சிஷ்டர்கள் அநுஷ்டித்திருக்கவேண்டும். ஆகையால், தஜ்ஜ்ஞர்களான ஸ்வாமிகள் க்ருபைசெய்து, புதவாரதிநாநுஷ்டாந த்யாகத்துக்கு மூலத்தை இந்தப் பத்ரிகை மூலமாக நியமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்."

*　　*　　*　　*　　*　　*

3.

அந்த ஸ்வாமி மறுபடியும் எழுதுகின்றார்.

**ஆர்ய தர்ம பத்ரிகை.**

"சில மாஸங்களாய் 'ஆர்யதர்ம'மென்கிற ஓர் பத்ரிகை கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்களால் அநுக்ரஹிக்கப்பட்டு, அருமையான அத்வைத மதவிஷயங்களும், மற்றும் பொதுவான வைதிக தர்மங்களும் எளிதான தமிழ் நடையில் வெளிப்படுத்தப்பட்டு வருவதில், அநேகமான மிதஜ்ஞர்களும் விசேஷ உபகாரத்தை அடைந்து வருகிறார்கள் என்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயமே. அதில் யாவரும் ஆச்சர்யப்படத்தக்க விஷயங்களை அநேக பண்டிதர்கள் ஸ்ரத்தையுடன் எழுதுகிறதினால், கூடிய சீக்ரத்தில் அப்பத்ரிகை மேன்மேலும் விளங்கும் என்பது நிச்சயம்,

"மேற்படி பத்ரிகையில் இரண்டொரு விஷயங்களில், எழுதியிருப்பவர்களுடைய அபிப்ராயம் எனக்கு நன்ருக விளங்காததினுல், அவற்றை நன்கு உணரும்பொருட்டு எனது ஸந்தேஹத்தை விவரிக்கின்றேன். ச. க்ருஷ்ணசாஸ்த்ரி அவர்கள் உபந்யஸித்திருக்கும் விஷயத்தில் 96-வது பக்கத்தில், அஜ்ஞாந ஸ்வரூப நிரூபணத்தில், 'அவித்யை என்ருல் அஜ்ஞாநம், அதாவது - அறியாமை; அதை அறிவினுடைய அபாவமாகச் சிலர் சொல்லுகின்றனர்; அது அங்ஙனமாகாது' என்று ஆரம்பித்து, 97-வது பக்கத்தில் 'விக்ஷேபசக்தியை மாத்ரம் யோகிகள் அவித்யையாக அங்கீகரித்தனர்' என்றும், 98-வது பக்கத்தில், 'அமித்ரர்கள் என்ருல், எப்படி மித்ரனுடைய அபாவமாத்ரம் அர்த்தமாகாமல் மித்ரனுக்கு எதிரிடையான சத்ருவைத் தெரிவிக்கின்றதோ, அங்ஙனமே, அவித்யை என்ருல், வித்யை என்கிற உண்மையான உணர்வுக்கு எதிர்த்தட்டான ப்ராந்தி ஜ்ஞாநமென்று பாவவஸ்துவாக மொழிந்தனர்' என்பதாக எழுதப்பட்டிருக்கின்றது.

"மேற்படி பத்ரிகை 147-வது பக்கத்தில் பரமதத்துக்குத் தூஷணம் சொல்லிவிட்டு, ஸித்தாந்தத்தில் இதற்கு என்ன பதில் என்ருல், அஜ்ஞாநத்தினுல் அநாதி என்பதே; அந்த அஜ்ஞாநம் என்றைக்கு வந்தது? என்று கேட்டால், 'அந்தக் கேள்வியைக் கேட்கத் தெரிந்தவன் கேளான்; ஒரு பதார்த்தம் உண்டாகிறதற்குக் காலமுண்டேயன்றி, அதன் இல்லாத தன்மைக்கு ஆரம்பகாலமுண்டா? இவ்வித கேள்விகேட்க அறிவின்மை எப்போது வந்தது? ஏன் வந்தது? என்று, இதை ஆலோசித்தே ஸமாதாநம் செய்து கொள்ளலாம்' என்று எழுதியிருக்கிறது. இதைப் பார்த்தால், அஜ்ஞாநம் ஜ்ஞாநாபாவரூபமாய் அபிப்ராயப்பட்டு இருப்பதுபோல் தோன்றுகின்றது. ஆகையால் இது முன் பாவரூபமென்று எழுதினதற்கு விரோதம் போல் தோன்றுகின்றது.

"முதலாவது ஸஞ்சிகையில், ஸ்ரீ சங்கராசார்யருடைய மாஹாத்ம்ய நிரூபணப்ரகரணத்தில், சிஷ்யர்களுடன் காசியில் சொல்லுங்கால், ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு எதிரில் ஒரு நீசன் வரவும், சிஷ்யர்கள் அவனை ஒதுங்கும்படிச் சொல்லவும், அதைக் கேட்ட நீசன், 'எங்கும் அத்வைதபாவனை உள்ளவர்களுக்கு ஜாதிபேதம் தோற்றலாமோ?' என்று மொழிந்ததாகவும், அதை ஸ்ரீ ஸ்வாமிகள் இசைந்ததாகவும் எழுதியிருக்கிறது. இது மேற்படி பத்ரிகைகளில் ப்ராஹ்மணுதி ஜாதிகள் ஜந்மஸித்தமென்று பலவிடங்களில் சொல்லப்பட்டிருப்பதுடன் எப்படிப் பொருந்தும்? வ்யாவஹாரிகபேதம் உளதுதானே."

---

OFFICE OF THE REGISTRAR ... 7-MAR 1916 MADRAS.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ ஸம்வ தைமீ [ஸஞ்சிகை 12.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**தர்பங்கா மஹாராஜர்.**

தர்பங்கா மஹாராஜர் நம்முடைய ராஜதாநியில் பல நகரங்களுக்குச் சென்று, ஸநாதந தர்மமெனப்பட்ட வர்ணுச்ரம தர்மங்களை நம்மவர் யதோசிதம் அநுஷ்டிக்க வேண்டுமென்றும், நம்முடைய அநாதி மதத்தை விச்வெவஸிக்க வேண்டுமென்றும், அதன் க்ஷேமத்தை உத்தேசித்து, வைதிக ஸம்ப்ரதாயங்களினுடைய ப்ரவர்த்தகாசார்யர்கள் தம் ஸம்ப்ரதாயங்களுக்குள் உண்டான பரஸ்பர பேதங்களைத் தமக்குள் நிலைக்கத்தக்க ஐக்யத்துக்கு ப்ரதிபந்தகங்களாகவொட்டாமல், யாவர்க்கும் ஸமாநமாகவிருக்கின்ற ஸம்ப்ரதாயாம்சங்களைப் பரவச்செய்ய வேண்டுமென்றும், மிகவும் ப்ரார்த்தித்தனர்.

ராஜதாநி கலாசாலையைச் சேர்ந்த ஸம்ஸ்க்ருத ஸபையார் முன்பாக அவர் பின்வருகின்றபடி உபந்யாஸம் செய்தனர்:—

"மதஸம்பந்தமாக நமது தேசம் ஓர் கஷ்ட தசையைத் தத்காலம் அடைந்திருக்கின்றது. நம்முடைய ஶாஸ்த்ரங்கள் அதை முன்னமே காட்டியிருக்கின்றன; கலியுகத்தில் பரமார்த்த தத்வங்களில் ஸம்ஶயமும், பகவதாராதநவைமுக்யமும், உண்டாவதாகச் சொல்லியிருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் இங்கிலீஷ் தேசத்தார்க்குள்ளும், ஐஹிகங்களில் ஆசை மேற்பட்டு, ஆமுஷ்மிகத்தில் ஸம்ஶயமும் ஔதாஸீந்யமும் உண்டாயிருந்தன. நம் தேசத்திலும், ஶரீரஸம்பந்த வ்யாபாரங்களுக்கும் ஆத்ம விவேகத்துக்கும் விரோதம் ஜநித்திருக்கின்றது; பாஶ்சாத்ய வித்யாப்ரேரிதமான வைஷயிக ருசிக்கும், நைஸர்க்கிகமாக நம் பூர்வீகர்க்குள் உண்டாயிருந்த ஆத்மதத்வ விவேகத்துக்கும் விரோதம் வளர்கின்றது.

"இதற்கு எனதென்று ஒரு ஸமாதாநம் நான் அளிக்கின்றேனல்லேன். உபநிஷத்வசநத்தால் அவையளிக்கும் ஸமாதாநத்தைச் சொல்கின்றேன். பகவத்பக்தியும், நமக்குக் கஷ்டம் நேரிட்ட ஸமயங்களில் பகவானுடைய ஸௌஹார்த்தத்திலும் நாம் பகவானுடைய ஸஹாயத்தை ப்ராத்திக்குங்கால் அவன் எல்லையற்று நமக்கு உபகரிப்பானென்பதிலும் ஶ்ரத்தா பூர்வகமான விஶ்வாஸமும், அவனுடைய அத்யக்ஷதையின்கீழ் ஸர்வலோகவ்யாபாரமும் ஜகத்ஹிதத்தின் பொருட்டு நடக்கின்றதெனும் உத்ஸாஹ புரஸ்ஸரமான சிந்தையும், நமக்கு ஸம்ஶய நிவாரகங்களாக நின்று, நமக்கு ஶாந்தியையும் ஸந்தோஷத்தையும் கொடுக்கவேண்டும். பகவானுடைய நாமஸ்மரண மாத்ரத்தால், நாஸ்திகதையும் மநஸ்ஸின் சஞ்சலவ்ருத்தியும் ஶமத்தை அடையும். உபநிஷத்தானது, ஸத்யத்தைச் சொல்லென்றும், தர்மத்தை ஆசரியென்றும், மாதாபிதாக்களையும் ஆசார்யர்களையும் தைவம்போல் பாவியென்றும், ஸ்வாத்யாயத்தையும், அதற்கு அநுஸாரியாயிருக்கும் கர்மங்களையும் அநாதரணம் செய்யாய் என்றும், தேவபித்ரு கார்யங்களை த்யாகம் செய்யாய் என்றும், நமக்கு விதிக்கின்றது. நீங்கள் நிஜமாகவும் ஶ்ரத்தையுடனும் இவ்விதிகளின்படி வர்த்திப்பீராகில், நம்முடைய ஸம்ஸார பரிணமங்களிலும், அவற்றால் நேரிடும் துக்கங்களிலும், மநோதார்ட்யத்தை விடாமல் வர்த்திக்கத்தக்க ஒரு மநோநிஶ்சயத்தையும் அடைவீர்கள்.



"நம்தேசத்தில் அநாதியாக ஏற்பட்ட தர்மங்களைப்பற்றியும், ஆசாரங்களைப்பற்றியும், நீங்கள் இருக்கவேண்டிய ப்ரகாரத்தைப் பற்றியும் கொஞ்சம் காட்டுகின்றேன்: இவ்வுலகத்தைப்போல் பழமையானதும் எகிப்து தேசத்தின் பிரமிட் எனும் கட்டிடங்களைக்காட்டிலும் மூப்படைந்ததுமான நாகரிகத்தில் பிறந்த பிள்ளைகளாயும், நிஸர்க்கமாக ஆபாதசூடம் அநபாயமானதாலும் ஸர்வாகர்ஷகமானதாலும் காலங்களின் கேடுகளையும் அந்யதேசத்தாருடைய ஆக்ரமங்களையும் நிராகரித்து நின்றதும், என்றும் போல் இன்றுவரையில் நிஷ்களங்கமாய் நிற்பதும், ஹிமாசலமெனச் சலநமற்றிருப்பதுமான வைதிக ஸம்ப்ரதாயாநுஸாரிகளாயும், மஹிமைபொருந்திய ஆத்மஜ்ஞாநமென்ன, தத்வஸாக்ஷாத்காரமென்ன, இத்தகைய தாயதநத்தை அடைவதற்குப் பாத்யமுள்ள பாகஸ்தர்களாயுமிருக்கப்பட்ட நீங்கள், நமது மதத்துக்கும், வித்யைகளுக்கும் பொருந்திவளர்ந்த பல ஆசாரங்கள், ஏற்பாடுகள், கர்மங்கள், இவற்றை மாற்ற நினைப்பதன்முன்னர், நிதானித்து, விஸ்தாரமாகவும் விவேகத்துடனும் ஆலோசிக்கக்கடவீர்கள். ஒரு தேசஸ்தரின் கொள்கைகள் ஒருநாளில் ஏற்படக்கூடியவையல்ல. அவை ஒவ்வொரு க்ஷணமும் மநஸ்ஸுக்குத் தோன்றியவண்ணம் உண்டாக்கவும் அழிக்கவும் தக்கவையல்ல. அவை காலக்ரமத்தால் பரிணமிக்கின்றன; காலம் வளர அவை பழுக்கின்றன; காலம் அவற்றைப் பரிபூர்ணமாக்குகின்றது. ஆதலால் நம் நாட்டிற்குரிய அநாதி தர்மங்களை ஶ்ரத்தையுடனும் பக்தியுடனும் ஆதரிக்க வேண்டியவர்களாக நம்முடைய பித்ருக்களுக்கும், நமக்கும், நம் ஸந்ததியார்க்கும், நாம் கடமைப்பட்டிருக்கின்றனம்."

என்றிவ்வண்ணம் மொழிந்து, நான்கு வர்ணங்கள் நமதுதேசத்தில்போல் இங்கிலாந்து தேசத்திலும் உளவென்றும், பராபரவித்யாநிஷ்டர்களும், ராஜ்யரக்ஷகர்களும், தநாட்யர்களான வ்யாபாரிகளும், கைத்தொழிலாளர்களும், எக்காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் ஏற்பட்ட பெரிய வகுப்புகளென்றும், இவை குணகர்ம விபாகங்களால் ஏற்பட்டனவென்கிற கீதாவசநம் ஸத்யமென்றும், இந்த ஏற்பாட்டுக்குப் பாரம்பர்யமெனும் அம்ஶமொன்றை நம்முன்னோர் ருஜுமார்க்கத்தில் உண்டாக்கினர் என்றும், இப்படி ஏற்பட்ட வ்யவஸ்தைகளை நாம் அழிக்கத்தகாதென்றும்,

இந்த வ்யவஸ்தைகள் ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்களால் காப்பாற்றப்பட்டு வந்தனவென்றும், ப்ரஹ்மசர்ய மொன்றால்தான் அர்த்தகாமத்ருஷ்ணைகளடக்கக்கூடியவை யென்றும், இதைப் பால்யத்தில் அநுஷ்டிக்காதவன் பின்னால் இந்த்ரிய ஜயத்தை அடையான் என்றும், ஜாதிவ்யவஸ்தைகள் போகத்தின் பொருட்டும் ஐஶ்வர்ய ப்ராப்திக்காகவும் ஏற்படவில்லை யென்றும், யாவரும் அவ்வவர் கர்மங்களை லோகோபகார நிமித்தம் காமரஹிதர்களாய்க் கர்த்தவ்ய மெனும் புத்தியுடன் செய்யத்தக்கவர் என்றும், ஆதலால், மஹர்ஷிகளுடைய வம்ஶஸ்தரெனப்பெயர் கொண்ட நாம், அவர்கள் விதித்த தர்மங்களின் அநுஷ்டாநத்தாலும், வித்யையின் அப்யாஸத்தாலும், அவர்களைக் கௌரவப்படுத்த வேண்டியவர் என்றும் சொல்லிமுடித்தனர்.

இந்த ரூபமான உபந்யாஸங்கள் அந்த மஹாராஜர் பலவிடங்களில் செய்தார். அவர் ஸநாதந தர்மாபிமாநிகளுக்குள் ஶ்ரேஷ்டர். அந்தத் தர்மத்தைச் சக்தியுள்ளவரையில் ரக்ஷிக்கவேண்டுமெனும் ஶ்ரத்தையுள்ள வர்ணாஶ்ரம தர்மஸபையார்களும், நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையார்களும் அந்த மஹாராஜர்க்கு ‘அட்ரஸ்’ எனப்பட்ட க்ருதஜ்ஞதா ப்ரகடந பத்ரிகைகளை, அவர் தங்கியிருந்த ஸ்தாநத்தில், ஸங்க்ராந்தியன்று அளித்தார்கள்.

ஆஸ்திகாக்ரேஸரரான அந்த மஹானைப் பஹுமாநிக்கப் பச்சையப்பன் மண்டபத்தில் சென்னையில் வஸிக்கும் ஹிந்துக்கள் கூட்டமென்றொரு கூட்டம் கூடியது. அப்போது அந்த மஹாராஜர் தமது மநோர்தங்களின் விஸ்தாரங்களை விஶதமாக வெளியிட்டு ஒரு பெரிய உபந்யாஸம் செய்தனர். அவர் செய்த ஸர்வோபந்யாஸங்களுடைய ஸாராம்ஶமென யாம் எண்ணியதை முன்னமே வரைந்தோம்.

பச்சயப்பன் ஹால் கூட்டத்தில் ஹிந்துக்களுக்குள் ஶ்ரேஷ்டர்களென மதிக்கத்தக்கப் பல கனவான்கள் ப்ரகாசித்தார்கள். ஹாலில் நிற்பதற்குக்கூட இடமின்றி ஶ்ரோதாக்கள் நிறைந்தனர். ஹிந்துக்களாய்ப் பிறந்து மதிப்படைந்த சிலர், அவ்விடம் வந்தாரில்லை. அஸௌகர்யத்தால் அவர்களில் சிலர் அவ்விடம் தர்ஶிக்கப்படவில்லை யென்று அயிர்க்கின்றோம். வராத யாவர்க்கும் இவ்வநுமாநம் பொருந்துமெனத் தோன்றவில்லை. ஸநாதந தர்ம



விரோதமே அவர்களில் சிலர் அதர்ஶநத்துக்குக் காரணமாகலாம்.

**அவருடைய தூஷகர்கள்.**

இத்தகையவர் உக்திகளெனத்தக்க இரண்டு யோசனைகள் ஹிந்து பத்ரிகையில் வெளியாயின. ஒன்று ப்ரயாகையில் ப்ரசுரமாகும் ‘லீடர்’ எனும் பத்ராதிபர் அபிப்ராயம். அவர் ஆசார சீர்திருத்தமெனப் பெயர்கொண்ட வர்ணாஶ்ரமதர்மவிரோதி ஸபையைச் சேர்ந்தவர். அவர் அந்த ஸபா ப்ரயத்நமே இந்தியாவுக்கு க்ஷேமத்தைத் தருமென்பர். உபநிஷத் வசநங்கள் வர்ணாஶ்ரமங்களுடைய நாசத்தை ஸஹிப்பதுபோலவும், அவ்வசநங்கள் அவர் கொள்கைட்கு ஆதாரம்போலவும், அவர் ப்ரமிக்கின்றார். மந்த ப்ரஜ்ஞை மதிப்ரம்ஶத்துக்கு நியமேந காரணமாகும். மற்றொரு யோசனை ஹிந்து பத்ரிகைக்கு எழுதப்பட்ட கடிதத்திலடங்கியது. கடிதமெழுதியவர் கிறிஸ்தவரென ப்ரகாசிக்கின்றனர். இனி வரும் மதம், ஒவ்வொருவனும் (பரமண்டல) தகப்பன் இஷ்டத்தைச் செய்வதுதானென்று அவர் முடிக்கின்றனர். அதனால் இதன் முன்னின்ற மதங்கள் அத்தகப்பன் இஷ்டாநுஸாரிகளன்றென அவர் தீர்மாநிப்பதாக வெண்ணலாம். அவர் அத்தகப்பனைக் கண்டாரோ? அவன் இஷ்டத்தை யறிந்தாரோ? இரண்டுமில்லை யென்பது தத்யம். ஶாஸ்த்ரத்தால் ஜநார்த்தநனை அறிகின்றேன் எனவும், கார்யாகார்ய நிச்சய நிமித்தம் ஶாஸ்த்ரம்தான் ப்ரமாணமென்றும், அவன் ஶாஸ்த்ர மொன்றினாலேயே அறியத்தக்கவன் என்றும் வசநங்கள், ஹிந்துக்களெனும் பெயர் பூண்டவர்க்கெல்லாம் ப்ரமாணங்கள். ஶாஸ்த்ரம் வெளியிட்ட தர்மங்கள்தாம் வர்ணாஶ்ரம தர்மங்கள். அவையே ஸநாதந தர்மங்கள்.

ஶாஸ்த்ரங்களில் எங்கள் புத்திக்கு அநுகூலமாகத் தோற்றியதை ஒப்புக்கொண்டு மற்ற பாகங்களைத் தள்ளிவிடுகின்றோமென்பாருளர். இவர்கள் நம்தேசத்தில் நூதநமாகக் கல்பிதங்களான ஸமாஜங்களில் சேர்ந்தவர்கள். அல்பயோசனையால் இவர்கள் ஶாஸ்த்ரப்ரமாணத்தை ஒப்பாதவரென்றும், கேவலம் தமது புத்தியையே ப்ரமாணமாக ஒப்புக்கொள்பவரென்றும் வெளியாகும். கேவலம் அநுமாநத்தை ஆஶ்ரயித்த புத்தி, நாஸ்திக மதத்தைத்தான் ஆதரிக்கும். ஆஸ்திகத்வம் ஶாஸ்த்ரப்ரமாணம் விநா ஸித்

திக்கமாட்டாது. “க்ருதிக் ஶ்ருவதஃ ஶாஸ்த்ராதந்ருத்ய க்ஷயம் தஸ்ய ஶ்ருஹ்ரூ உவஹ்ருதே”, என்றும் “ஶாஸ்த்ர யோநித்வாத்”, என்றும் ஈஶ்வரஜ்ஞாநம் கேவல புத்திக்குப் புலப்படாதென நிஷ்கர்ஷிக் கப்பட்டது. ஜீவாஸ்தித்வமும் விஶ்வாஸ விஷயமாகத்தான் முடியும்.

**ஹிந்துகலா ஸங்கம்.**

குளவி ஓர் புழுவைப் பிடித்துத் தன் நிறமாக்கு மென்பர். தாயதநமாக ப்ராப்தமான வித்யைக்கு ஸ்வரூபத்யாகத்தைப் போதிக்கும் அத்யந்தம் விதேசஸ்தர் கற்பிக்கிறவராய் நிற்க, அவருடைய பாஷையில் அவர் வித்யையை க்ரஹிக்கும் நம் சிறுவர் எவ்வண்ணம் ஆர்ய ஜந்மத்தைக் காப்பாற்றுவார்கள்? ஸம்ஸர்க்கம் ஸதா அந்யருடையது. உறங்காதபோதில் ஒருநாழிகையளவுகூட ஸத்ஸங்கம் கிடையாது. இதனுடன் போதாமல் நம் சிறுவர் ஸ்வமததூஷணையையும் அந்யமத போதனையையும் இடைவிடாமல் பல பள்ளிக்கூடங்களில் கேட்கும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இவ்வித அந்யாயமான அவஸ்தையை நம் சிறுவர் அடைவதைப்பற்றி ஶோகித்த சில ஆர்யதர்மிஷ்டர்கள், பதார்த்த ஶாஸ்த்ர க்ரஹணமும், ராஜபாஷா பரிசயமும், ஸ்வதர்ம த்யாகமின்றி அமையவேண்டுமென்று கருதி ஹிந்துகலாஸங்கமொன்று ஏற்படுத்த முயல்கின்றனர். ஸர்வசேதநாசேதந நியமந சதுரனை பகவான் அவர்கள் ப்ரயத்நத்தைக் காப்பாற்றுவானென்று ப்ரார்த்திக்கிறோம். இவ்வண்ணம் ஹிந்து கலாஸங்கங்களும், ஹிந்து கலாசாலைகளும், தேசமெங்கும் உத்பந்நங்களாகும்படி பரமன் கடாக்ஷிப்பானென்று ப்ரார்த்திக்கின்றோம். ஆர்யதர்மத்துக்கும் வைதிக மதத்துக்கும் ஒரு ஸந்தாந பீஜமளவாவது மிகுதியாய் நிற்கும்படி நாராயணன் க்ருபைசெய்ய வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கின்றோம்.

**வெங்கடகிரி மஹாராஜர் ஜாதி தர்மங்களைப் பற்றிச்சொல்லியது.**

ஜனவரி மாஸம் 25-ம் தேதி சென்னை ராஜதானி ஜமீந்தார்கள் ஸபையின் கூட்டம் கூடியது. அதில் அக்ராஸநம் வஹித்த வெங்கடகிரி மஹாராஜர், தர்பங்கா மஹாராஜருடைய ப்ரயத்நத்தை ஸந்தோஷித்து, அவர் நமது மத தத்வார்த்தங்களின் அவதார மென்றும், ஸநாதந தர்மவிஷயத்தில் அவர் யாவர்க்கும் மார்க்கதர்ஶியென்றும் சொன்



னர். உபநிஷத்தில் ‘த்யக்தேந புஞ்ஜீதா’ வென்றும், பகவத்கீதையில், கர்த்தவ்யம் எனும் புத்தியால், ஒவ்வொருவரும் ஸ்வகர்மத்தை பகவதாராதநமாக நினைத்து, ஸங்கத்யாக பலத்யாக பூர்வகமாய்ச் செய்யவேண்டு மென்றும் சொல்லியிருக்கிற ப்ரகாரம் விதிக்கப்பட்ட கர்மங்கள் போகைஶ்வர்யங்களின் பொருட்டு ஆகமாட்டா. காமப்ரவ்ருத்தி நிஷேத மாத்ரத்தால், வைஷயிக ஸுகேச்சையை வ்ருத்திசெய்கின்றவர் நமது மதத்தை அந்யதா க்ரஹணம் செய்யக்கூடாதென்றும், நமது சிறுவர் நடை உண்டி உடைகளை மாற்றுவது அந்யாயமென்றும், இவை நம்முடைய பழைய நாகரிகத்தை அநுஸரித்து உண்டானவை யென்றும் ஹிந்து கலாஸங்கம் நம்முடைய வித்யையையும் நாகரிகத்தையும் ரக்ஷிக்குமென்றும் வெங்கடகிரி மஹாராஜர் சொன்னர்.

**அதைப்பற்றி ஐரோப்பியர் வசநம்.**

ஜனவரி மாஸம் 27-ம் தேதி மெயில் பத்ரிகையால், நகர நிர்மாண சதுரரென நம்தேசத்திற்கு வந்திருக்கும் லான்செஸ்டர் துரை தத்காலம் ஐரோப்யர் களிக்கின்ற கைத்தொழில் ப்ரவ்ருத்திகள் மநுஷ்யருடைய க்ஷேமத்தின் பொருட்டு ஆகவில்லை யென்றும், பாரம்பர்யமாக ஏற்பட்ட நம்முடைய ஜாதிகர்மங்கள் ஐரோப்பாவின் கேடுகளை நிராகரிக்கின்றன வென்றும், இந்திய ஜாதி மர்யாதைகளை அழிக்கக்கூடாதென்றும், அவை முன்காலத்தில் நன்மை செய்தவண்ணம் பிற்காலங்களிலும் நன்மை செய்யுமென்றும், அதனுல் ஸர்வ ஜாதிகளும் ஸுகமடைய விரோதமில்லை யென்றும் சொன்னர். வட ஆற்காடு கலெக்டர் ரிசர்ட்ஸ் துரையவர்கள், பிப்ரவரி மாஸம் 3-ம் தேதி மதராஸ் லிடரெரி ஸபையில் உபந்யஸித்தபோது, ஸர்வ வர்ண நாசத்தை இந்தியர் சாந்தசித்தராய் எண்ணக்கூடாதென்றும், அது பகுகாலமாக நிலைத்திருந்ததென்றும், அதை முற்றிலும் வேர்பிடுங்கி ஐரோப்ய ஆசாரங்களை வழக்கத்தில் கொண்டுவரத்தகாதென்றும், அப்படிச் செய்தால் மிக்க அபாயத்தில் முடியுமென்றும் சொன்னர்.

**ப்ருஹ்ம ஸ்ரீ கே. ஸுந்தரராம ஐயர் உக்திகள்.**

வேதாந்த கேஸரி பத்ரிகையில், ப்ருஹ்ம ஸ்ரீ. கே. ஸுந்தரராமய்யர் அவர்கள், நம்முடைய ஜாதிகள் வ்யவஸ்தையானது ருக்வேதகாலமென்று ஐரோப்யர்களால் சொல்லப்பட்ட காலத்துக்கும் முற்பட்டதென்றும், ஐராநியர் எனும் அஸுரோபாஸிகளுக்குள்ளும் அந்த வ்யவஸ்தை இருந்த

தென்றும், அவர்களும், நம் பூர்வீகரான ஆர்யர்களும், ஒன்ருய் வஸித்ததாக வெண்ணப்பட்ட அநாதி காலத்திலேயே அது ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும், ஐரோப்யர் வசநங்களால் நிரூபித்துக், கேவலம் த்வேஷத்தால் அந்த வ்யவஸ்தைகளை அழிக்க முயல்கின்றவர் ஜகத்ஹிதம் செய்பவராகார் என்றும் எழுதியிருக்கின்ருர். இவ்வண்ணம் வர்ணாச்ரம தர்மங்கள் ரக்ஷிக்கவேண்டியவை என்று காட்டினேம்.

**வர்ண தர்மங்கள் கேடும் காரணங்கள்.**

26-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் எழுதப்பட்டிருக்கின்ற ஓர் விஷயத்தைச் சொல்கின்றேம். அதை எழுதினவர் இன்னுரென்று ஏற்படவில்லை. முகத்தில் புண்ட்ரதாரணமும், நாமத்தில் ஜாதியைக் காட்டும் அம்சமும், இக்காலத்தில், வ்ருத்த்யுபாய ஸம்பாதநத்துக்கும், அதன் வ்ருத்திக்கும் ப்ரதிபந்தகங்களாய் முடிகின்றன வென்றும், அதனுல் அவற்றை நம் சிறுவர் த்யஜிக்கின்ருரென்றும், உடை உண்டி முதலானவைகளை மாற்றுகின்ருரென்றும் சொல்கிருர். இது இப்படியாகில், வ்ருத்தி யளிப்பவரும் வ்ருத்தியைத் தேடுகின்றவரும் இருவரும் நிந்தார்ஹரே. நமது தேசம் இந்த ஸ்திதிக்கு வந்ததைப் பற்றி யோக்யன் எவன் தான் சோகிக்கமாட்டான்?

பேபர்களெங்கும் கிறிஸ்தவ பாதிரிமார் ப்ரயத்நங்களையும் அவை பலிக்கும் வகைகளைப்பற்றியும் விஸ்தாரமாக விவரிக்கின்றன. அவர்கள் ஒற்றுமையும், விடாமுயற்சியும், பொருளுடைமையும், செல்வாக்கும், இவையாவும் இல்லாத நம்நாட்டினரில் ஸ்வரூப நாசத்தை விஸ்தரிப்பதில் ஆச்சர்யமென்ன? வெளிப்படையாக அவர் நம் பிள்ளைகளைக் கிறிஸ்தவராக்கவே பள்ளிக்கூடங்கள் வைப்பதாகச் சொல்கின்ருர்கள். நம் பிள்ளைகள் அங்கே போகாமல் இருக்கலாமே யென்ருல், அவர் போகத்தக்க வேறு பள்ளிக்கூடங்கள் இல்லை. பள்ளிக்கூடப் படிப்பே வேண்டாமென்ருல், வேறுவிதமாக ஜீவநோபாயம் ஸித்திக்கவில்லை. பாதிரிகள் முயற்சி பலிக்கும்படி நம்பிள்ளைகள் தம் தநத்தையும் சம்பளமெனக் கொடுக்கின்றனர். ராஜாங்கத்தாரும் பொது த்ரவ்யத்தினின்று பாதிரிமார் பள்ளிக்கூடங்கட்குப் பொருளுதவி செய்கின்றனர். இப்படிப்பட்ட துர்த்தசையில் ஸ்வரக்ஷணத்தில் சக்தியற்



றும், ப்ரயத்நமற்றும் நிற்கின்ற ஸநாதநதர்ம நிஷ்டர்கள் ஈஷத் ப்ரயத்நமும் ஹிந்துக்களெனும் பெயரைவிடாமல், ஆர்யர்களுடைய ஸ்வரூபநாசகராய்ப் பரிணமிக்கின்ற ஸோஷல் ரிபாரத்தைச் சேர்ந்தவர் ஸஹிக்கின்ருரில்லை. பர்யாலோசனையில் இவர்களைக்காட்டிலும் ஆர்யமத விரோதிகளைக் காண்பதரிது.

**மடாதிபதிகளும், தர்மகர்த்தர்களும் இது விஷயத்தில் செய்யக்கூடியது.**

பாகவத ஸம்ருத்தி யின்றிப் பகவதாராதந மெனும் சடங்கை மாத்ரம் அநுகரணம் செய்கின்ற மடாதிபதிகளும், திவ்யதேசங்களின் விசாரணைக் கர்த்தர்களும், நம் வைதிக ஸம்ப்ரதாயங்கட்குத் தத்காலம் ஸம்பவித்திருக்கிற அபாயங்களைப்பற்றிச் சிந்திக்கின்றனரோ? பகவானுக்கு நிவேதிதமெனப்பட்ட ப்ரஸாதங்களை அஸத்கல்பர் உண்ணவும், உத்ஸவங்களென்று சொல்லிக்கொண்டும் பொருளைக் கரியாக்கிக்கொண்டும் நிலைக்கின்றவர்கள், ஸர்வதேவ மந்திரங்களும், அவனுடைய பாதபக்தி ஜ்ஞாநாதிகளை ஸேவார்த்திகளாய் வருபவர்களுக்கு முக்கியமாக உண்டாக்கவே ஏற்பட்டனவாகத் தெரிந்துகொள்ள மாட்டாரோ? ஸர்வாலயங்களிலும் பகவத்ஸேவார்த்தமாகவே, வேதபாராயணமும் ஸ்தோத்ராதிகளுடைய படநமும், தத்வார்த்தங்களின் உபதேசமும், இவை ஸம்யக் நடக்கும்படிப் பாகவத ஸம்ருத்தி ஏற்படக்கூடாதோ?

"நாஹம் ததாத்மி யஜமாந ஹவிர்விதாநே
ச்யோதத்க்ருதப்லுதமதந் ஹுதபுங்முகேந ।
யத்ப்ராஹ்மணஸ்ய முகதஶ்சரதோऽநுகாஸம்
துஷ்டஸ்ய மய்யவஹிதைர் நிஜகர்மபாகை: ॥"

[யஜ்ஞங்களிலே யஜமானனுல் ஸமர்ப்பிக்கப்பட்டதும், பெருகும் நெய்யால் வ்யாப்தமுமான சருபுரோடாசாதி ஹவிஸ்ஸுக்களை அக்நிமுகத்தால் ஸ்வீகரித்தபோதிலும், அவற்றை அவ்வளவாக நான் ஸந்தோஷிக்கின்றேனில்லை. ஸ்வவர்ணாச்ரமோசிதங்களான கர்மங்களை ச்ரத்தையுடன்செய்து, அவற்றின் பலங்களை என்னிடம் ஸமர்ப்பித்து ஸந்துஷ்டராக நிற்கின்ற ப்ராஹ்மணர்களுடைய ப்ராதிகபளத்தையும் புஜிக்கின்ற முகத்தால் அதை ஸ்வீகரிக்கின்றதுபோல் முன்சொன்ன ஹவிஸ்ஸை ஸ்வீகரிக்கின்றேனில்லை.]

என்றிப்படி வைகுண்டநாதன் திருவுள்ளம் ஸ்ரீ பாகவதத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட பரமைகாந்திகள் விஷயமாகப் பகவாந் ஸந்நிதிகளில் பகவத் ப்ரஸாத மெனப்பட்டது உபயோகப்படுத்தப்படுகின்றதா ? மடங்களும் ஆலயங்களும் ஜநங்களுக்கு ஜ்ஞாநத்தை உண்டாக்கத்தக்க ஸ்தாநங்களாகவேண்டும்.

கலா வைஷம்யம்.

இன்னும் நம்மிராமாநுஜன் தர்சநத்தைப் பரர் பரிஹஸிக்கும் வண்ணம் செய்துவிட்ட கலா வைஷம்யத்தை, அந்த வைஷம்யத்தால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் புருஷர்கள் த்யாகம் செய்யமாட்டாரே? யுத்தம் தெரிந்தவர்கள் யோதர்களாய் நின்றால் ஒரு பாரதம் எழுதலாம். அவர்கள் தர்மமார்க்கத்தை அநுகரணம் செய்வதாக எண்பிக்கக்கூடும். மோஹவ்யாப்தராயும் பத்தவைரர்களாயும் தமோகுண ப்ரகடநார்த்தம் குமார்க்கத்தில் பரஸ்பரம் ஹிம்ஸிப்பவர்கள் ராமாநுஜ ஸம்ப்ரதாயிகளென்றால் ராமாநுஜன் சிரிக்கமாட்டாரோ?

ஸம்ப்ரதாய பேதங்கள் உண்டானால் வாதங்களால் பரபக்ஷநிரஸந பூர்வமாக ஸ்வபக்ஷஸ்தாபநம் அநாதிவழக்கத்தில் சேர்ந்தது. ஸர்வஸாங்கர்ய காலம் வந்துவிட்டதாகையால் வாதங்கட்கு இப்போது அவ்வளவாக அவகாசமில்லை. ஸ்வபக்ஷத்துக்கும் பரபக்ஷத்துக்கும் அநுகூலமாயுள்ள விஷயங்கள் அறியாதவராய்க் கேவலம் தாம் கொண்ட அகாரண விப்லவாஸங்களின் நிமித்தம் பரர்க்குப் பரிபவம் செய்வதையே புருஷார்த்தமாய் எண்ணும் ஜநங்கள் எப்போது ஶாந்தியடையவர்? அதைப்பற்றிச் செங்குன்றம் க்ராமவாஸியான கரிச்சங்கால் கிடாம்பி ஸு..ந்தராசார்யர் என்றொருவர் எழுதிய கடிதத்தை இங்கே வெளிப்படுத்த முடியவில்லை. அவரிடம் ஒரு தென்கலை வைஷ்ணவர் வந்து வடகலை ஸம்ப்ரதாய தூஷணையையும், தேசிகன் நிந்தையையும் விஸ்தாரமாகச் செய்து, தம்முடைய வாதத்துக்கு ப்ரத்யுத்தரம் அபேக்ஷித்தனராம். ஜ்ஞாநபாலத்தால் தாம் ப்ரத்யுத்தரம் சொல்லாமல், தூஷகருடைய வாதங்களையும் அவர் காட்டிய ப்ரமாணங்களையும் நமக்கு எழுதியிருக்கிறார். 'இக்கடிதம் அச்சிட்டால் 12 - பக்கம் கொள்ளும்; 'இன்னும் வரு'மென்றும் எழுதியிருக்கின்றார். இத்தூஷணைகளைத் தேசிகபக்தர்களான



பண்டிதர்களுக் கனுப்பினால் ப்ரத்யுத்தரம் மிகவளரும். இவ்வண்ணம் கலாவைஷம்யத்தை விஸ்தரிக்க இப்பத்ரிகை பிறக்கவில்லை. தூஷணைகட்கு ஸமாதாநத்தை வேண்டிப் பெருமாள் கோவில் முதலான ஸ்தலங்களில் வஸிக்கும் தேசிக ஸம்ப்ரதாயஸ்தரான பண்டிதர்களிடம் அவர் சென்று அவர்களைக்கேட்டால் அவர்கள் இனவறச் சொல்வார்கள்.

ஆனாலும் ஆபாதமாக நமக்குத் தோன்றும் சில விஷயங்களை எழுதுகின்றோம். ப்ரமாணங்களாக எடுத்துக் காட்டப்பட்ட ஶ்லோகங்கள், ப்ரமாணங்கள் தாமோ என்பதை நாமறியோம். வடகலையார் பின் குறித்தவண்ணம் ஸமாதாநம் சொல்லக்கூடும் என்பதை மாத்ரம் காட்டுகின்றோம். வாத்ஸல்ய - ஶப்தத்துக்குத் [illegible] . [illegible] - என்று இரண்டர்த்தம் ஏற்பட்டதாகில், ப்ரகரணாநுஸாரியாக இரண்டும் ஏற்படும். சில ப்ரமாணங்களில் தோஷபோக்யதை என்று அர்த்தம் செய்யப்பட்டாலும் இதரார்த்தம் நிரஸ்தமாகாது. பட்டர் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் வத்ஸல: எனும் ஶப்தத்துக்கு ப்ரீதிகொண்டவன், அதாவது, பக்தரிடம் விருப்பம் கொண்டவன் என்றும், அவிஜ்ஞாதா எனும் ஶப்தத்துக்குத் [illegible] என்றும் அர்த்தம் செய்கின்றார். மேலும் இங்கே "[illegible]" எனும் கடவல்லீவாக்யம் எடுத்தது உசிதமன்று. [illegible] எனும் பதங்கள் முன் 5 - வது வாக்யத்தில் இருக்கின்றன. அதற்கு ஶங்கராசார்யர், பூர்வ நிர்த்திஷ்டனான் பூதபவ்யங்களுக்கு ஈஶ்வரனை அறிந்த பிறகு, ஸ்வாத்மாவை ரக்ஷிக்கவேண்டுமெனும் இச்சையற்றவனாகிறான் என்று அர்த்தம் செய்கிறார். ரங்கராமாநுஜ ஸ்வாமி, அதற்கு ஆத்மாவையும் ஈஶ்வரனையும் அறிந்தவனை நிந்திக்க வேண்டாமென்று பொருள்படுத்துகிறார். அதே பதங்கள் '[illegible]' எனும் வாக்யத்தில் வருகின்றன. ஶங்கராசார்யர் பூர்வவத் அர்த்தம் செய்கின்றார். ஆனால் ரங்கராமாநுஜ ஸ்வாமி அர்த்தவிவரணம் செய்வதில் '[illegible]' என்று சொல்லுகிறார். இதனால் வாத்ஸல்ய சப்தத்துக்குத் தோஷபோக்யத்வம் அர்த்தமாகாது. இரண்

அவ்வவர் ஸம்ப்ரதாயத்தில் விஶ்வாஸம்கொள்ளக் குறையில்லை. வாதாபேக்ஷையிருந்தால் வாதிஹம்ஸாம்புதாளிடம் செல்லவும். அநதிகாரிகளிடம்போய் அவர்களுடைய ஆசார்ய தூஷணையைச் செய்வது நிந்திக்கத்தக்க விஷயம். ராமாநுஜ தர்ஶநத்துக்குப் பரரால் பரிபவம் வந்தால் தேஶிகன் வேண்டப்படுகின்றார். அப்போது ஸ்ரீரங்கநாதனும் அவரை வேதாந்தாசார்யரென்று நாமமிட்டழைத்தனர். ஸ்ரீரங்கநாயகியும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்று நாமஞ்சாற்றினார். அவர்செய்த தர்ஶநோபகாரத்தை ஸ்மரித்துத் தொட்டாசார்யரும் “ஆவிஷ்க்ருத ஸம்ப்ரதாயே ரக்ஷித யதிராஜ ஸூக்திதாத்பர்யே । ஆஸ்திக த்ருஷ்டிமவே ரகூத்தமே நாமாங்கிதாயே ॥” என்றருளிச்செய்தார். லோகமெங்குமறிய வித்வத் கோஷ்டிகளால் கவிதார்க்கிக ஸிம்ஹமென்று பிருதளிக்கப்பட்டவரும், ஸர்வாசார்யர்க்குள்ளும் பாண்டித்யத்தாலும், கவித்வத்தாலும் ஜ்ஞாநாதிக்யத்தாலும் ஸமாதிகரற்றவரென்று மஹாகவி வெங்கடாசார்யரால் கொண்டாடப்பட்டவரும், ஸமஸ்த கல்யாணகுண விஶிஷ்டருமான தேஶிகன் மந்தசித்தரால் தூஷிக்கப்பட்டாராகில், அவர் பக்தர் தூஷகரைப்பற்றி “ஶ்ருத்வா நந்தோஹாதி ரோஹந வ்யாக்யாநீதி ஸந்தீக்ஷிணா । ஸூதநா ஶதகம்வேத நரகாவிஷ்டிஷ்டிய நம ॥” எனும் வசநங்களைச் சிந்திக்கத்தக்கவர்.

---

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

# ஶாஸ்த்ர மர்யாதை.

யம் நித்யம் நாரதமுக்யா முநயோ வேதாந்தவேத்யம் ।
ஸ்ருஷ்ட்வா ஸகலம் ஜகதேகோ பாதி தேவ: ஸநாதந ஸ்ரீதர: ॥

ஸ்ருஷ்ட்வா யாஸ் ஸ்ருஷ்ட்வா ப்ரஜா ஸ்ருஷ்டயே ஜீவநிவஹாந்
தயாளுர்யஸ்ஸம் காருண்யதந்த்ரோ யோகம் விதநோதி ।
தத்ஸேவார்த்தம் ஶாஸ்த்ரம் ஶாஸ்தி நியோகமேவ ஹிதகரமேவ:
ஸஸ்வேஶ்வ: ஶாஸ்த்ரு நியமநதந்த்ர: நம் வாஸுதேவ: ॥

ஸர்வே ஸர்வஸ்வதயே வ நம:.

பரம காருணிகனான ஸ்ரிய:பதியினால் த்ரிகால ஜ்ஞாநிகளாயுள்ள மஹர்ஷிகளையும் பூர்வாசார்யர்களையும் நிமித்தமாகக் கொண்டு தர்ம ஸம்ஸ்தாபநார்த்தம் விவரிக்கப்பட்டிருக்கும் விதி நிஷேத ஸம்பந்தங்களான விஷயங்களுள் சிலவற்றை யதாமதி ஸங்க்ரஹித்து இப்பொழுது இவ்விடத்தில் அடியேன் விஜ்ஞாபநம் செய்யத் துணிகின்றேன். இந்த ப்ரவ்ருத்திக்கு பாகவத நியமநம் காரணமே தவிர அஜ்ஞாத ஜ்ஞாபநம் காரணமன்று. இக்காலத்தில் நடைபெற்றுவரும் சில அநுஷ்டாநங்களின் ஶாஸ்த்ர விருத்த ஸ்வபாவத்தைப் பற்றிச் சொல்லும்படி நேர்ந்தால், அதை இதம் பரமாகச் செய்யப்படும் பரீவாதமாக நினையாமல், நிர்பந்த வஶாத் ப்ரஸ்தாவிக்கப்பட்டதாகவே கருணாநிதிகளாக இருக்கும்

மஹாங்களெல்லாரும் திருவுள்ளம் பற்றவேண்டும். ஒருகால், அடியேனுடைய இந்த ப்ரவ்ருத்தி, ஶாஸ்த்ரோக்த தர்மங்களை ஆத்யந்திகமாக அநாதரிக்கும் சிலரை அவைகளின் அநுஷ்டாநத்தில் அபிருசி யுள்ளவர்களாகச் செய்து, அவர்களுக்கு அவைகளில் ஒருவித ஶாஸ்த்ரீய ப்ரவ்ருத்தியை ஜநிப்பித்தால், அது, ‘நித்யஞ்ஜநௌஷதியின் மூலம் தனக்கும் அகப்படுமோ?’ என்று நிர்வேதத்துடன் தேடித்திரியும் ஓர் அந்தகனுக்கு நிதியே காலால் இடறி அகப்பட்டாற்போல, மஹத்தான ஸந்தோஷத்திற்கு ஹேதுவாகுமே தவிர, எவ்வித ஶோகத்திற்கும் காரணமாகாது.

இக்காலத்தில் ஶாஸ்த்ரோக்த தர்மங்கள் அநேகமாக லோபத்தை அடைந்துவிட்டன. தேஹாதிரிக்தமான ஆத்மா வொன்றுண்டென்றும், அதன் உஜ்ஜீவநத்தைத் தேடுவதே தமது தர்மங்களுள் அந்யதமமென்றும், ஸர்வேஶ்வரனாகவும் ஸர்வாந்தர்யாமியாகவும் பரமாத்மா ஒருவன் இருக்கிறான் அவனுடைய த்ருப்தியே நமக்கு உத்தேஶ்யமென்றும், இத்யாதியான நினைவே லுப்தமாகிவிட்டது. வர்ணாஶ்ரம தர்மங்களெல்லாம், கரைபுரண்டு. எவ்வித நையத்யத்திற்கும் உட்படாமல் அதிகாரி அநதிகாரி வரம்பின்றிக்கே மனம்போனபடியெல்லாம் அநுஷ்டிக்கப்படுகிறவையாகவும், சில தர்மங்கள் ஆத்யந்திகமாக அநாத்ருதங்களாகி வெளியிற் ப்ரசாரம் பெறாமல் தர்மஶாஸ்த்ர புஸ்தகங்களில் மாத்திரம்காணப்படுமவையாகவும், மற்றும் சில ஶாஸ்த்ரோக்த விதிக்கு விருத்தமாக அந்யதா க்ருதங்களாகவும், அதிமாத்ரம் அவ்யவஸ்திதங்களாகத் தடுமாறி நிற்கின்றன. பாஷாந்தரத்தில் ஒருவித ப்ராவீண்யத்தை ஸம்பாதித்தவர்களுள் சிலர், ஶாஸ்த்ராவலம்பத்தைக் கைவிட்டு, ஜந்மாந்தர கர்மமடியாக உபசியமாந ஐஹிக ஶ்ரேயஸ்ஸை யுடையவர்களாய், தமது அல்ப புத்தியின் பலத்தைக் கைப்பற்றி ஊஹாபோஹ பாவனைகளைச் செய்து, ஸ்ரீ கீதாஶாஸ்த்ரத்தில் ஸ்ரீ பகவானால் வர்ணிக்கப்பட்டிருக்கும் ஆஸுர ப்ரக்ருதிகள் போல, ஜகத் ஸ்வபாவஜ மென்றும், ப்ரத்யக்ஷ த்ருஶ்யங்களான பதார்த்தங்கள் தவிர மற்றொன்றும் இல்லை யென்றும், கர்மாநுஷ்டாநங்களெல்லாம் அஸம்பத்தங்களென்றும் இத்யாதியான அநேக அபஸித்தாந்தங்களைச் செய்துகொண்டும், காமோபபோகமே பரமபுருஷார்த்த மென்றெண்ணி ஆஶாபாஶ ஶதங்களால் பத்தர்களாய்க் காமக்ரோதபராயணர்களாய் அர்த்தஸஞ்சயம் செய்வதையே பெரிதாக நினைத்துக்கொண்டும், புருஷோத்தமனுடைய அவதார சேஷ்டிதங்களின் விஷயமாகக் குயுக்தி ஶதங்களால் தோஷத்தை ஆரோபித்துக்கொண்டும் ஶாஸ்த்ரீய தர்ம பராங்முகர்களாய் ஜீவித்து வருகிறார்கள். இவர்கள், தமது அநுபவ பலத்தை நிதர்ஶநமாக்கி, ‘ஶாஸ்த்ர விருத்தாநுஷ்டாநம் ஐஹிக ஶ்ரேயோபிவ்ருத்தியை ப்ரதிபந்திக்காது, அத்ருஷ்ட பலத்தை நம்பிப் பேசுமவரெல்லாம் அஜ்ஞாநாவ்ருதர்களாய் ப்ரஜைகளை வீணில் வருத்துகிறார்கள்’ என்று சொல்லிக்கொண்டு, தாம் பதநமடைவதல்லாமல் அஶிக்ஷித மதிகளான ஸாமாந்ய ஜநங்களையும் அதஃபதநமடையும்படி செய்கிறார்கள். மற்றும் சிலர், ஶாஸ்த்ர பந்தத்திற்கு உள்ளடங்கி நடக்கும் ஜநங்களைப்பார்த்து ஶோகித்து, ‘ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸுக்கு ப்ரத்யூஹங்களாக இருக்கும் இவர்களை எவ்விதத்தில் நிவ்ருத்திக்கலாம்?’ என்று ஆலோசித்து, ஶாஸ்த்ர ஶைதில்யத்தை ஶாஸ்த்ரமென்னும் வ்யாஜத்தைக்கொண்டே ஸம்பாதிக்கவேண்டு மென்றெண்ணி, ஜாதிஸாங்கர்ய கரங்களான அநேக துரநுஷ்டாநங்களுக்கு ஶாஸ்த்ர ஸம்மதியைக் கல்பித்து, வ்யாதியினால் வருந்தும் ஶிஶுவுக்குக் கைப்புள்ள ஔஷதத்தை ஶர்க்கரையில் மறைத்துக்கொடுக்கும் மாதாவைப்போலத் தம்மைப் பாவித்துக்கொண்டு ஹிதபுத்தியினால் ஜநங்களை சீர்திருத்த ப்ரயத்நப்படுபவர்கள்போலக் காட்டிக்கெடுக்க ப்ரயத்நப்படுகிறார்கள். இவர்களுக்கு நாம் சொல்லும் ஸமாதாநம் முழுவதும் பதிரஜாபமாகுமே தவிர இஷ்ட ப்ராப்தியின்பொருட்டாகாது என்பது நிஶ்சயம்.

“𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤”

என்று திருவாய்மலர்ந்தருளிய பகவானே இந்தத் துர்தஶையை நிவர்த்திக்கவேணும். ஆனாலும்,

“𑌯𑌤𑍍𑌨𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌯𑌦𑌿 𑌨 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 𑌕𑍋𑌽𑌤𑍍𑌰 𑌦𑍋𑌷𑌃?”

என்னும் ந்யாயத்தை அவலம்பித்து அடியேன் அவர்கள் செய்யும் ஆக்ஷேபத்திற்கு யதாஶக்தி ஸமாதாநம்சொல்ல யத்நிக்கின்றேன்.

ஶாஸ்த்ர மென்பது; பகவதாஜ்ஞா ரூபங்களான ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்குப் பெயர்.

"ஶ்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா"

என்று ஸ்ரீ பகவானே சொல்லியிருக்கிருன். ஶ்ருதி யென்பது - வித்யாத்மகமாகவும் மந்த்ர அர்த்தவாதாத்மகமாவு மிருக்கும் வேதத்திற்குப் பெயர். ஸ்ம்ருதியென்பது - தர்ம ஶாஸ்த்ர இதிஹாஸ புராணங்களுக்குப் பெயர். நாம் அநுஷ்டிக்கவேண்டிய தர்மத்திற்கு இவையே ப்ரமாணங்களாகின்றன. முதலில் ஶ்ருதியும், அதற்கு அடுத்தபடியாக ஸ்ம்ருதியும், பிறகு ஶ்ருதி ஸ்ம்ருதிகளின் அர்த்தத்தை ஸரிவர அறிந்திருப்பவர்களின் ஶீலமும், ஸாதுக்களின் ஆசாரமும் யதாக்ரமம் ப்ரமாணங்களென்றும், இப்படிப் பட்ட ப்ரமாணங்கள் அகப்படாத ஸமயங்களில் அநுஷ்டாதாக்களின் மநஸ்ஸின் ருசியே தர்மமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

"வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூநாம் ஆத்மநஸ்துஷ்டிரேவ ச ॥"

என்று மநுவும்,

"ஶ்ருதி: ஸ்ம்ருதி: ஸதாசார: ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மந: ।
ஸம்யக்ஸங்கல்பஜ: காமோ தர்மமூலமிதம் ஸ்ம்ருதம் ॥"

என்று யாஜ்ஞவல்க்யரும் இந்த அர்த்தத்தை வெளியிட்டிருக்கிருர்கள். இந்த ஶாஸ்த்ரம், ஜகத்தின் தத்வத்தைப் போதிப்பதுடன், நாம் தினந்தோறும் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்களிற் சில நியமங்களையும் போதிப்பிக்கின்றது. ஜந்மாந்தர கர்மத்திற்கு அநுகுணமாக நாம் சிற்சில வர்ணங்களில் பிறப்பை அடைகிருேமென்றும், அந்தந்த வர்ணத்திற்கு அநுரூபங்களான சிற்சில ஸம்ஸ்காரங்களை நாம் பெறவேண்டுமென்றும், வயஸ்ஸுக்கும் யோக்யதைக்கும் அநுகுணமாகச் சில ஆஶ்ரமங்களை விதித்து, அந்தந்த ஆஶ்ரமத்திற்கு உரிய தர்மங்களைச் செய்ய வேண்டு மென்றும், இப்படிப்பட்ட அநுஷ்டாநங்களுக்கு லோப மேதாவது ப்ரமாதாதிகளால் ஸம்பவித்தால் அதற்கு நிஷ்க்ருதியாகச் சிற்சில ப்ராயஶ்சித்தங்களைச் செய்ய வேண்டு மென்றும் இந்த ஶாஸ்த்ரம் விதிக்கின்றது. இப்படி ஶாஸ்த்ரம் விதிப்பதை ப்ரமாணமாகக்கொண்டு, அதன்படி யதாஶக்தி அநுஷ்டித்துவர நாம் முயலவேண்டியதுதான் நமது தர்மம் என்று நமது ஸித்தாந்தம் சொல்லுகின்றது.



ஆனல்,

"ஏகம் யதி பவேச்சாஸ்த்ரம் ஜ்ஞாநம் நிஸ்ஸம்ஶயம் பவேத் ।
பஹுத்வாதிஹ ஶாஸ்த்ராணாம் ஜ்ஞாநதத்வம் ஸுதுர்லபம் ॥"

என்கிறபடி 'ஶாஸ்த்ரங்கள் பலவாக இருக்கிறபடியால், அவைகளுள் எதற்கு ப்ராமாண்யத்தை நாம் அங்கீகரிப்போம்?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். ஶாஸ்த்ரங்கள் பலவுண்டு என்பதும், அவைகளிற் சிலவற்றுற் சொல்லப்படும் விதிநிஷேதங்களிற் சில மற்றவைகளில் காணப்படவில்லை யென்பதும், உண்மையே. இந்தக் காரணத்தினுல் ஶாஸ்த்ரமே அநுபாதேயமென்று சொல்வது ந்யாய்யமாகாது. ப்ரம விப்ரலம்பத்திற்குப் பாத்ரமல்லாத மஹர்ஷிகள், பகவத் ப்ரேரிதர்களாய் ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டு ஶாஸ்த்ரங்களை ஏற்படுத்தியிருக்கிருர்கள் என்பது உண்மையாக இருந்தால், அவர்கள் நாம் மோஹிக்கும்படி பரஸ்பர விருத்தங்களான ஶாஸ்த்ரங்களைச் செய்திருக்க மாட்டார்கள் என்றே நாம் நினைக்கவேண்டும். ஶாஸ்த்ர கர்த்தாக்களின் அபிப்ராயத்தை ஸரியாகத் தெரிந்துகொள்ள வொட்டாமல் தடுக்கும் நமது அஜ்ஞதையே இம்மாதிரியான விரோதத்தைத் தோற்றுவிக்கலாம்.

ஶாஸ்த்ரார்த்தங்களை எவ்வித விரோதமுமின்றிக்கே நாம் எளிதில் தெரிந்துகொள்ளும்பொருட்டு, நமது பூர்வாசார்யர்களும் வைதிக ஸார்வபௌம ப்ரப்ருதிகளான மஹாந்களும், ஶ்ருதி ஸ்ம்ருதிகளின் அர்த்தத்தை நிஷ்கர்ஷித்து வெளியிட்டிருக்கிருர்கள். அப்படி வெளியிட்டிருக்கும் அர்த்தத்தை நாம் ஆதரிக்காமலிருப்பது யாருடைய தோஷமாகும்? விகத மத்ஸரர்களாகவும் நிரஹங்காரர்களாகவும் டம்பாதிகளால் வர்ஜிதர்களாகவுமுள்ள அத்யாத்ம வித்தமர்கள், ஶாஸ்த்ரங்களுள் ஆபாதத: தோன்றும் விரோதத்தை உள்ளபடி ஸமந்வயம் செய்ய ஶக்தர்களே. ஸ்ரீ பகவத் கீதை யென்னும் ஶாஸ்த்ர ரத்நத்தின் அர்த்தத்தை வெளியிட்டிருக்கும் மஹாந்களுடைய ப்ரபாவத்தை இதற்கு நிதர்ஶநமாக நாம் பார்க்கலாம். ஸ்தூலமாகப் படிக்குமவனுக்கு, இந்தக் கீதா ஶாஸ்த்ரம் பூர்வாபரவிருத்தம் நிரம்பினதும் எவ்வித நிஷ்கர்ஷமுமில்லாததும் உந்மத்த ப்ரலபிதத்தை அநுகரிப்பதும் போலத் தோன்றும். மஹா ஜ்ஞாதாக்களென்றும் நமது தேஶத்துப்

பண்டிதர்கள் போல விவேகஶூந்யர்களாக இல்லாமல் குணதோஷ விவேசநத்தில் விஶேஷித்த ஒரு திறமையை உடையவர்களென்றும் ஆதுநிகர்களால் கொண்டாடப்படும் பாஶ்சாத்ய வித்வத் ஶிரோமணிகள், இந்தக் கீதா ஶாஸ்த்ரத்தைப் படித்துவிட்டு,

"வ்யாமிஶ்ரேணேவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே"

என்று அர்ஜுநன் கதறினது போலப் பிதற்றுவதை நாம் பார்க்கவில்லையா? குயுக்தி ஶதங்களைக் கல்பித்துக்கொண்டு, 'கீதையின் ஏகதேஶம் மட்டில் ஸ்ரீ பாரத ஸம்பந்தம் பெற்றது, மற்றவை முழுதும் ப்ரக்ஷிப்தம்' என்றும், 'அதற்கு இந்தப் பூர்வாபர விரோதமே சிஹ்நம்' என்றும் இவர்கள் சொல்லித் திரிகிறார்கள். பகவத் யாமுந முநி ப்ரப்ருதிகள் இந்தக் கீதையின் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்காமலும், பகவத் ராமாநுஜன் அதற்கு பாஷ்யம் விவரிக்காமலும், ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் அந்தப் பாஷ்யத்தின் தாத்பர்யத்தை ப்ரகடநம் செய்யாமலும் இருந்தால், இந்த அஜ்ஞர்களுடைய நிந்தைக்கு நாம் மூக பாவத்தையே ஆஶ்ரயித்து நிற்கும்படி ஸம்பவித்திருக்கும். தத்வ வித்துக்களான இந்தப் பூர்வாசார்யர்களின் திவ்ய ஸூக்திகளை அநுஸந்தாநம் செய்யும் நமக்கு, 'இந்தக் கீதா ஶாஸ்த்ரத்தைவிட அநுகதமான ஶாஸ்த்ரமும் உண்டோ? இதன் வைஶத்யமும் நிஷ்கர்ஷமும், ஶ்ருத்யர்த்தத்தை போதிப்பிக்கும் மற்றை எந்த க்ரந்தத்திலும் தென்படவில்லை' என்றே தோன்றுகின்றது. ஸூக்ஷ்மார்த்தத்தை யதாவஸ்திதமாக அறிந்திருக்கும் மஹான்களுடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாமலிருக்கும் ஜநங்களுக்கு மாத்திரம், நமது ஶாஸ்த்ரம் வ்யாமோஹத்தை ஜநிப்பிப்பதுபோலத் தோன்றுமே தவிர, அப்படிப்பட்ட மஹான்களைத் தேடி அடைந்து,

"தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா,"

என்கிறபடி தத்வார்த்தத்தைத் தெரிந்துகொள்வதில் ஶ்ரத்தையுடனும் த்வரையுடனும் கூடியிருக்கும் பாக்ய ஶாலிகளுக்கு, அது, விஶத தமமாகத் தத்வத்தை உணர்த்தும் ஶாஸ்த்ரமாகவே ப்ரகாஶிக்கும். ஆகையால், நமது அஜ்ஞதை ஆலஸ்யம் இவற்றினடியாக ஜநிக்கும் துர்போதத்வத்தைக் காரணமாகக்கொண்டு, நாம் ஶாஸ்த்ரத்தை த்யஜிப்பது ஸரியன்று. தவிரவும், நமது அஶக்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 MAR 1916

தியையும் அகௌஶலத்தையும் நன்றாக உணர்ந்திருக்கும் மஹா க்ருபாளுக்களான நமது ஆசார்யர்கள்,

"அநந்தபாரம் பஹு வேதிதவ்யம்
அல்பஶ்ச காலோ பஹவஶ்ச விக்நா: ।
யத்ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்
ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம் ॥"

என்கிறபடி, நமக்கு ஆத்யந்திக நிஶ்ஶ்ரேயஸத்தை ஸாதித்துக்கொடுக்கும் ஶாஸ்த்ரங்களின் ஸாரதமமான அம்ஶத்தைத் தமது திவ்ய ஸூக்திகளினால் நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள். அவைகளை ஸேவிக்கும் விஷயத்தில் ஆலஸ்யத்தை வஹித்துக்கொண்டு 'ஶாஸ்த்ரம் நிஸ்ஸாரம், அப்ரமாணம்' என்று சொல்வது எப்படி உசிதமாகும்?

இப்படிப்பட்ட ஶாஸ்த்ரமொன்று இருக்கலாம்; அது நமக்கு ஹிதமென்பதிலும், அதன்படி நடப்பது நமக்கு ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்குமென்பதிலும் ப்ரமாணமென்ன? விவேகிகளாகிய நாம், நமக்கு இயற்கையாயுள்ள புத்தியை ப்ரயோகித்து ஹிதாஹிதத்தை விசாரித்துகொள்ளவேண்டிய அம்ஶங்களை அறிந்து கொள்ளாமல், மூடர்கள் போல, பர ப்ரத்யயத்தினால் நயிப்பிக்கப்படுவானேன்? ஒருகால், ஆப்தர்களென்று தெரியப்பட்டுள்ள ப்ரத்யக்ஷ வ்யக்திகளை ஸர்வ ப்ரகாரத்திலும் ப்ரமாணமாகவும் அவர்கள் சொல்வதை ஹிதமாகவும் அங்கீகரிப்பது ஒருவாறு ஸஹ்யமானாலும் ஆகலாம்; அப்ரத்யக்ஷர்களாயும் ப்ராசீந காலத்திய அரண்ய வாஸிகளாயுமிருக்கும் தபஸ்விகளால் எழுதப்பட்டுள்ள இந்த ஶாஸ்த்ரத்தை நம்புவது நம்முடைய ஸ்வரூபத்திற்கு விருத்தமன்றோ? இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்கும் அதற்கு நியாமகனாக இருப்பதற்கும் ஒரு ஈஶ்வரன் வேண்டுமோ? என்பதையும், அப்படி ஒருவன் உண்டானால் அவனுக்கும் நமக்கும் எவ்வித ஸம்பந்தம் இருக்கக் கூடும்? என்பதையும், இவைபோன்ற மற்றை விசாரங்களையும் நமது புத்தி கௌஶலத்தைக்கொண்டு சர்ச்சைசெய்து, எவ்விதமான நிர்ணயம் நமது புத்திக்கு ஸமீசீநமாகத் தோன்றுகிறதோ அதை அப்யுபகமம் செய்வதன்றோ நமக்கு லக்ஷணமாகும்? ஆசார விஷயங்களிலும் யுக்தியுக்தங்களாகத் தோன்றுமவைகளை நாம்

வாதமே ஆப்ரயிக்கத்தகுந்தது என்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

பாப்சாத்ய வித்வாங்களும் அதீந்த்ரிய விஷயங்களில் இம்மாதிரியான ஸித்தாந்தத்தைச் செய்திருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். ஆகையால், பூர்வபக்ஷிகள், ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமாகாத வஸ்துவே இல்லையென்றுவது, இல்லாவிட்டால் தர்க்கத்தை த்யஜித்து பாஸ்த்ரமே ப்ரமாணமென்றுவது ஒத்துக்கொள்ளவேணும். ப்ரத்யக்ஷ அகோசர வஸ்துவை லோபம் செய்ய அவர்கள் இஷ்டப்படாதவர்க ளாதலால், ஶாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யத்தை அவர்கள் அங்கீகரிக்கும்படி ஸம்பவிக்கின்றது.

“ஆஜ்ஞா தவாஸ்து ஸவதீ விஹிதா த்ரயீ'ஶா
தாம் ஹி வ்யதீத்ய ஜனிமஜ்ஜன ரதீஷு நிபதந்தி ।
ஆஸாஸஹஸ்ர விபாகஸ்வபராணி ஷோடஷ-
ரேஷ கத்தோஷரஹிதா விஹிதா வராணி ॥”

என்று ஸ்ரீ கூரேஶன் இந்த அர்த்தத்தை வெளியிட்டிருக்கிறுர்.

இந்த பாஸ்த்ர ப்ராமாண்யம் கேவலம் ப்ரஹ்ம விஷயகம் மாத்திரமன்று ; இந்த லோகத்தில் நாம் அநுஷ்டிக்க வேண்டிய ஆசாரத்திலும் அதற்கு ப்ராமாண்ய முண்டு என்பது நமது ஸித்தாந்தம். ‘ கார்யாகார்ய வ்யவஸ்திதியை எந்த விதமாக ஏற்படுத்தலாம்?’ என்னும் இந்த விசாரம், அநேக தேஶங்களில் அநேக மஹாங்களால் பஹு காலமாகச் செய்யப்பட்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், அப்படிச் செய்யப்பட்ட விசாரம் த்ருப்திகரமான ஒரு நிர்ணயத்தைக் கொடுத்தது என்று இன்னும் ப்ரவணவிஷயமாகவில்லை. மதவிஷயமான ஆசாரங்களிலோ, ஜந ஸமவாய ஸம்பந்தங்களான கார்யங்களிலோ, ராஜநீதிகளிலோ, ஒன்றிலாவது அப்படிப்பட்ட விசாரத்தின் பலமாக, இதம் பரமாகச் சர்ச்சை செய்யும் மஹாங்களுக்குள் எவ்வித ஐகமத்யமும் அத்யாபி ஏற்படவில்லை. சிலர் அநுமாந பலத்தினுலேயே இந்த வ்யவஸ்தையை ஏற்படுத்த வேண்டு மென்றும், சிலர் அந்தஃகரண ப்ரவ்ருத்தியை அவலம்பித்துத் தததுஸாரிகளான விதிகளைச் செய்யவேண்டு மென்றும், சிலர் தெய்வமொன்று உண்டு என்றெண்ணி அந்த எண்ணத்திற்கு



அநுகுணமாக அநுஷ்டாநத்தை நிர்ணயிக்கவேண்டு மென்றும், சிலர் தத்வவிசாரம் செய்து அதன் ஸித்தாந்தத்தின் படிக்கு நாம் நடந்துகொள்ளவேண்டு மென்றும், சிலர் லோகரீதியையும் வஸ்து ஸ்வபாவத்தையும் யதாவஸ்திதமாக ப்ரத்யக்ஷீகரித்து அதன்படி ஸித்தாந்தத்தைச் செய்யவேண்டு மென்றும், மற்றும் சிலர் விஷயஸுகாநுபவத்தை ஆதாரமாகக்கொண்டு அதற்கு விரோதமின்றிக்கே நியமங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டு மென்றும் இவ்வாறு நாநாவிதமான முறைமைகளை ஏற்படுத்தி, ஏற்கெனவே கலங்கிக் கிடக்கும் ஸாமாந்ய ஜநங்களின் மநஸ்ஸை இன்னும் கலக்கிவிடுகிறுர்கள். ஐரோப்பா முதலிய தேஶங்களில் இம்மாதிரியான தடுமாறுதலை எல்லாரும் பார்க்கலாம். அவ்விடங்களில், ப்ராயேண Machiavelli, Voltaire, Darwin முதலிய மஹாங்கள் செய்த உபதேஶத்தின் பரிபாகம் இன்னமும் காணப்படுகின்றது. நமது தேஶத்திலோ, புத்தி கௌஶலத்தை அவலம்பிக்காமல் பாஸ்த்ரத்தை அவலம்பித்தே தர்மாதர்ம நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. ‘ பூர்வகாலத்தி லிருந்த மஹர்ஷிகள், அதீத அநாகத வர்த்தமாந விஷயங்களெல்லாவற்றிலும் யோக ஸாக்ஷாத்காரத்தைப் பெற்று, எந்த மாதிரியான தர்மாதர்ம வ்யவஸ்தை செய்தால் ஜகத்திற்கு க்ஷேமகரமாக இருக்குமோ, ஸர்வ காலத்திலும் ஸுலபமாகவே அநுஷ்டாந ஸாத்யமாகுமோ, அம்மாதிரியான வ்யவஸ்தைகளை ஶாஸ்த்ர த்வாரா வெளிப்படுத்தியிருக்கிறுர்கள். புருஷமதி வைரூப்யத்தினுல் அடிக்கடி மாறிக்கொண்டே எவ்வித நிர்ணயத்தையும் அடையாமலிருக்கும் புத்தி ஸாத்யங்களான தர்மாதர்ம நிரூபணங்கள் எப்படி ஜகதுபகாரகங்கள் ஆகுமென்பது அடியேனைப் போன்றவருக்கு விளங்கவில்லை. ஆகையால், அதீந்த்ரிய வஸ்துவில் பாஸ்த்ர ப்ராமாண்யத்தை ஒத்துக்கொள்வதுபோல, ஆசார வ்யவஸ்தையிலும் ஶாஸ்த்ரமே ப்ரமாண மென்பதை ஒத்துக்கொள்ள வேண்டியே வருகின்றது.

இந்த ப்ராமாண்ய விஷயமாக, நமது பெரியோர்கள் பின்வருமாறு சொல்லியிருக்கிறுர்கள். ஸ்ரீபகவாந், ஸம்ஸாரத்தில் ப்ரஜைகளுக்கு நேரக்கூடிய விபத்துக்களை ஆலோசித்துப்பார்த்து, அப்படிப்பட்ட விபத்துக்களிலிருந்து தம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு உபகாரகமாக ஶாஸ்

த்ரமென்னும் பெரியதொரு அவலம்பத்தைக் கொடுத்திருக்கிறான். அந்த ஶாஸ்த்ரத்திலிருந்தே, ப்ரஜைகள், பகவத் ஸ்வரூபத்தையும், தமக்கும் பகவானுக்குமுள்ள ஸம்பந்தத்தையும், தாம் இந்த லோகத்தில் அநுஷ்டிக்க வேண்டிய தர்மாதர்மங்களின் நிர்ணயத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். இந்த விஷயங்களில், ஶாஸ்த்ரம் சொல்வதே, பர்யவஸாநத்தில் ஹிதமாகுமே தவிர, தர்க்கத்தை அவலம்பித்து யுக்திவாதங்களினால் செய்யப்படும் நிர்ணயங்கள் ஹிதங்களாகா.

“ஶ்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா”

“ஶாஸ்த்ர யோநித்வாத் ஜநார்தநம்”

“தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ”

இத்யாதியான வாக்யங்கள் இதற்கு ப்ரமாணங்கள். ஸ்ம்ருதிகர்த்தாக்களுள் ஶ்ரேஷ்டரான மநுவும், ஶ்ருதியும் ஸ்ம்ருதியுமே தர்ம நிர்ணயத்திற்கு முக்ய ஆதாரங்களென்றும், அவைகளிற் சொல்லப்பட்டுள்ள நிர்ணயங்களை ஹேதுவாதங்களைக் கொண்டு ஆக்ஷேபிக்கக்கூடாதென்றும், அப்படி ஆக்ஷேபித்து அந்த நிர்ணயங்களுக்கு அப்ராமாண்யத்தைக் கல்பிக்குமொருவன் நாஸ்திகவானாய், ஸாதுக்களால் த்யஜிக்கத்தகுந்தவனாவனென்றும்,

“ஶ்ருதிஸ்து வேதோ விஜ்ஞேயோ தர்மஶாஸ்த்ரம் து வை ஸ்ம்ருதி: |
தே ஸர்வார்த்தேஷ்வமீமாம்ஸ்யே தாப்யாம் தர்மோ ஹி நிர்பபௌ ||
யோऽவமந்யேத தே மூலே ஹேதுஶாஸ்த்ராஶ்ரயாத் த்விஜ: |
ஸ ஸாதுபிர் பஹிஷ்கார்யோ நாஸ்திகோ வேதநிந்தக: ||”

இத்யாதி ஶ்லோகங்களினால் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ பட்டரும்,

“[illegible]
ஶாஸ்த்ரம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி |
தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்
தத்ரைவ கேசிதசபா: ஶலபீபவந்தி ||”

[பரம காருணிகனான ஸ்ரீ பகவான் அஜ்ஞாந ரூபமாகிய அந்தகாரத்தை நிவ்ருத்திக்கும் பொருட்டுப் பெருவிளக்கைப் போன்ற



ஶாஸ்த்ரத்தை நமக்குக் கொடுத்திருக்கிறான்; பாக்யாதிகரான சிலர் அந்தத் தீபத்தைக் கைப்பற்றி ஸதஸத் விவேசநம் செய்து எம்பெருமானை அநுபவிக்க, துஷ்க்ருதிகளான சிலர் விட்டில்கள்போல விருத்த ப்ரதிபத்தி செய்து அதிலேயே நஶிக்கிறார்கள்] என்று ஸ்ரீரங்க ராஜ ஸ்தவத்தில் அநுக்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனும்,

“[illegible] ஶாஸ்த்ர [illegible] ஸ்ரீயபதிநா [illegible] ஸ்யேத ஸ்ரேயஸி [illegible] வ்ரஜநாம் ஶாஸ்த்ர [illegible] ஸ்பஷ்ட தீபேந ||”

என்று இந்த அர்த்தத்தையே அநுக்ரஹித்திருக்கிறார். இவையெல்லாம் பரப்ராமகமாகவாவது ஸ்துதிரூபமாகவாவது சொல்லப்பட்ட வாக்யங்களன்று; வஸ்துஸ்திதியை நமக்குத் தெளிவிக்கும் பொருட்டுச் சொல்லப்பட்டவைகளே. அப்படிப்பட்ட ஶாஸ்த்ரத்தை நாம் அநாதரிப்பது ஸாதுக்ருத்யமாகுமா?

இந்த மஹர்ஷிகளுக்கு யோக ஸாக்ஷாத்காரமுண்டென்றும், அதனால் கேவலம் நமது மதியின் பலத்தைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட வ்யவஸ்தையை விட, இந்த மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டுள்ள வ்யவஸ்தை உபாதேயதரமென்றும் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட யோக ஸாக்ஷாத்காரமுண்டு என்பதற்கு ப்ரமாணம் தான் என்ன? என்று கேட்கக்கூடும். அதற்கு ப்ரத்யுத்தரமாக அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்ளவேண்டிய அம்ஶம் அதிகமில்லை. பூர்வபக்ஷிகளால் ப்ரமாணமாக ஒத்துக்கொள்ளப்பட்ட பாஶ்சாத்ய ஶாஸ்த்ரஜ்ஞர்களே, அவ்விதமான ஸாக்ஷாத்காரம் ஸாத்யமென்றும், ‘நம்முடைய இந்த்ரியங்களுக்கு அகோசரங்களான சில வஸ்துக்களுண்டு; அவைகளை ஸாக்ஷாத்கரிப்பதும் யோகரூபமான சில வ்யாபாரத்தினால் ஸாத்யம்’ என்றும் ஸ்வல்ப காலமாகச் சொல்லி வருகிறார்கள். தத்வ ஶாஸ்த்ரஜ்ஞர்களுள் அதி ப்ரஸித்தரான Sir Oliver Lodge இப்பொழுது செய்துவரும் ஸித்தாந்தங்களைப் பார்த்தால், நமது யோக ஸாக்ஷாத்காரத்தை மித்யை என்று சொல்லமுடியாது; அப்படிப்பட்டவர்களின் ப்ரமாணத்தைக் கொண்டாவது, நமது மஹர்ஷிகளின் உக்திகளில் இவர்கள் விஶ்வாஸத்தைச் செய்யக்கூடாதா?

" [illegible] "

என்று ஸீதா பிராட்டி கதறினது போல, ஜகத்திற்கெல்லாம் ப்ரமாணகோடியிற் புகுந்த மஹர்ஷிகள், இப்பொழுது பாஶ்சாத்யர்களுடைய ஶலாகாபத்ரங்களைக் கொண்டு தமது போக்யதையை வெளிப்படுத்திக்கொள்ளும்படி யன்றோ ஸம்பவித்திருக்கின்றது?

இப்படி ஸர்வத்திற்கும் ஶ்ருதி ஸ்ம்ருதிகள் ப்ரமாணமாகி விட்டால், ஹேது வாதமென்பதே நிரர்த்தகமாக ஆகிவிடுமே! வாதிக்கும்படியான திறமையையும் குணதோஷ விவேசந ஶக்தியையும் நமக்கு அஸாதாரண குணங்களாகக் கொடுத்த ஸ்ருஷ்டி கர்த்தாவின் அபிப்ராய மென்ன? மூடனுக்கும் விவேகிக்குமுள்ள தாரதம்யத்தை அநாதரிக்கும் இந்தச் சொல் அப்யுபகமம் செய்யத்தகுந்த தாகுமா? என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். நமது ஸித்தாந்தம் தர்க்கத்திற்கு ஆத்யந்திக ஸங்கோசத்தைக் கல்பிக்கவில்லை.

" ஆர்ஷம் த⁴ர்மோபதே³ஶம் ச வேத³ஶாஸ்த்ராவிரோதி⁴நா ।
யஸ்தர்கேணாநுஸந்த⁴த்தே ஸ த⁴ர்மம் வேத³ நேதர: ॥ "

என்கிறபடி, வேத ஶாஸ்த்ரத்திற்கு விரோதமில்லாத விடங்களிலெல்லாம் தர்க்கத்திற்கு ப்ரசாரத்தை நாம் அங்கீகரித்திருக்கிறோம். வேத விருத்தங்களான அநுமாநங்களில் மாத்திரம் தர்க்கத்திற்கு அவகாஶமில்லை யென்று ஏற்படுகின்றது. வேத ப்ராமாண்யத்தை அங்கீகரிக்காதவர்களுக்கு, அஜ்ஞாநத்தைப் போக்கி ஸம்யக் ஜ்ஞாநத்தைப் போதிப்பிக்கும் விஷயத்திலும், நமது ஶாஸ்த்ரங்களில் ஆபாதத: விருத்தங்கள் போலத் தோன்றும் வாக்யங்களை ஐககண்ட்யம்செய்து ஶாஸ்த்ரார்த்தத்தைத் தெளியத் தெரிந்துகொள்ளும் விஷயத்திலும், தர்க்க கௌஶலம் அபேக்ஷிதமே. இப்படி தர்க்கத்திற்குப் பூர்ண ப்ரசாரம் இருக்கிறபடியால், ஶாஸ்த்ர ப்ராமாண்ய அப்யுபகமம் புத்தி மாந்த்யத்தை ஜநிப்பிக்கக்கூடியது என்று சொல்வதற்கு அவகாஶமில்லை.

நமது ஶாஸ்த்ரம் ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தங்களான சில அம்ஶங்களைச் சொல்லுகின்றது என்று சொல்வது ஸரியன்று.



பித்தோபஹதனுக்குப் பால் கைக்குமாறுபோல தோஷதுஷ்டர்களாக இருக்கும் நமக்கு ஶாஸ்த்ரம் ப்ரத்யக்ஷ விருத்தமாகத் தோன்றுகின்றதே தவிர, ஶாஸ்த்ரம் சொல்வது பொய் என்று சொல்லமுடியாது. ப்ரத்யக்ஷத்தை விஷயீகரிக்கும் நமது இந்த்ரியங்கள் பூர்ணபாடவம் பெற்றவையல்ல. ப்ரதி திநமும் ஸாமாந்ய ப்ரத்யக்ஷங்களிற்கூட நாம் தவறிப்போவதை நாம் அறிகிறோம். இப்படி ப்ராயேண நமது ப்ரத்யக்ஷம் முழுவதும் பாதிதமாகவே இருக்கிறபடியால், ஶாஸ்த்ர விருத்த மில்லாமலிருக்கு மிடங்களில் ப்ரத்யக்ஷத்தை ப்ரமாணமாகவும், அப்படி விருத்திப்பதுபோலத் தோன்றும் இடங்களில் ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாகவும் அங்கீகரிப்பது தான் ந்யாய்யமாகும்.

" தே³வாந் பா⁴வயதாநேந தே தே³வா பா⁴வயந்து வ: "

என்று நமது ஶாஸ்த்ரம் சொல்வது உண்மையே. தவிரவும், அஷ்டகா பார்வண ஶ்ராத்தாதிகளை நாம் செய்யவேண்டு மென்றும், அதனால் பித்ருக்களுக்கு த்ருப்தி ஜநிக்கின்றது என்றும், அவைகளைச் செய்யாவிட்டால் நமக்குத் தோஷம் ஸம்பவிக்கின்றதென்றும் நமது ஶாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வகளெல்லாம் ப்ரத்யக்ஷ அதீதங்களானவை யாதலால், ஶாஸ்த்ர பலத்தினாலேயே நம்பத்தக்கவை. ப்ராஹ்ம ஸ்ரீ. ஸுந்தரராம ஐயர் ஓரிடத்திற் சொல்லியிருப்பதுபோல, ஒரு தேஶத்தில் ஒரு பாங்கியிற் செலுத்தப்படும் த்ரவ்யம், மற்றொரு தேஶத்தில் மற்றொரு பாங்கி த்வாரா வேறு நாணயமாகப் பரிணமித்து நம்மால் உத்தேஶிக்கப்பட்ட வ்யக்தியினிடம் சேர்வது ஸாத்யமாக இருக்கையில், இந்த லோகத்தில் அக்நியினிடத்தில் நாம் செய்யும் தாநம், நம்மால் உத்தேஶிக்கப்பட்ட லோகாந்தரத்திலுள்ள தேவதைகள் பித்ருக்கள் முதலியவர்களுக்கு அவரவர்களுக்குத் தகுந்த அந்நமாக ஏன் பரிணமிக்கக்கூடாது என்பது விளங்கவில்லை. மர்த்யர்கள் இப்படிப்பட்ட ஸம்விதாநத்தைச் செய்ய ஶக்தர்களானால், அமர்த்யர்கள் எவ்வளவு செய்யக்கூடாது?

இந்த ஶாஸ்த்ர பந்தம் மஹத்தான அஸௌகர்யங்களுக்குக் காரணமாகி க்லேஶாவஹங்களாக இருந்துகொண்டு போகாநுபவங்களுக்கு ப்ரதிபந்தகமாகின்றன என்பதும் உண்மை தான், ஆத்

யந்திகமான பரமஶ்ரேயஸ்ஸை அடைய இச்சிக்கும் ஒருவன், சில துக்கங்களைப் பொறுத்தே இருக்கவேணும்.

" ந ஸுகால்லப்⁴யதே ஸுக²ம் "

என்றன்றோ ஸுகஸம்பாதந ந்யாய மிருக்கின்றது?

ஜகத்தின் அபிவ்ருத்திக்கு முக்ய ஹேதுக்களாயுள்ள ப்ரஜைகளின் ஐகமத்யமும் பரஸ்பரம் ஸௌஹார்த்தமும் இந்த ஶாஸ்த்ர பந்தத்தினால் தடைபடுகின்றனவே! ஶ்வபாக சண்டாளர்களைத் திரஸ்கரிப்பதும், த்விஜர்கள் தாம் உத்தமஜாதியர்களென்பதும், ஸ்த்ரீகள் ஸ்வாதந்த்ர்யாநர்ஹர்கள் புமான்களுக்கு அடங்கியே நடக்கவேண்டியவர்களென்பதும், ஜ்ஞாநத்தினாலன்றி ஜந்மமாத்ரத்தினால் உயர்வும் தாழ்வும் ஏற்படுகின்றனவென்று சொல்வதும் எப்படி பரஸ்பர ஸௌஹார்த்தவர்த்தகமாகும்? இதனால் ஐகமத்யம் தான் எப்படி ஏற்படும்? இந்த மாதிரியான நியமங்கள் அந்தஶ்சித்ரத்தை வ்ருத்திசெய்து ஐஹிகஸம்பத்தை நசிப்பிக்குமன்றோ? தேஹயாத்ரை கர்மாதீநமானாலும், புருஷப்ரயத்நத்தை அபேக்ஷித்து நிற்கிறபடியால்,

" [illegible]
[illegible] "

என்கிறபடி, நம்முடைய புத்திக்கும் ஶக்திக்கும் எட்டினவரையில் புருஷப்ரயத்நம்செய்து, அந்தஶ்சித்ரத்தை ஜநிப்பிக்கக்கூடிய காரணங்களை நிவ்ருத்தித்து, எவ்வித பேதஜ்ஞாநமுமின்றிக்கே ஸகலரிடத்திலும் துல்யதா பாவனையுடன் ஸஹபோஜநாதிகளைச் செய்து பரஸ்பரம் ஸௌஹார்த்தத்தை வ்ருத்திசெய்வதன்றோ ஜகத்தின் ஹிதத்தைத் தேடுமவர்களின் லக்ஷணமாகும்? ஸௌஹார்த்தமும் ஐகமத்யமும் குறைவுபட்டால், பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டு ப்ரஜைகள் நாஶத்தையன்றோ அடைவார்கள்? நிஷ்பக்ஷபாதிகளும் ஸர்வஜந ஸுஹ்ருத்துக்களுமான மஹர்ஷிகள் இம்மாதிரியான ஶாஸ்த்ரத்தைச் சொல்லியிருப்பார்களா? நைர்க்ருண்யம் வைஷம்யமற்றிருக்கும் பகவாந் இப்படிப்பட்ட ஶாஸ்த்ரத்தையா நமக்கு ஸ்திரப்ரதீபம்போலக் கொடுத்தருளினது? இது, ஜகத்தின் நாஶத்தைக் கோரும் தூர்த்தைவங்களுக்கு அநுரூபமே தவிர, கருணாநிதியான ஸர்வேஶ்வரனுக்குத் தகுந்த



தன்று என்பது நமது பூர்வபக்ஷிகளின் பலமான ஆக்ஷேபங்களுள் ஒன்று.

இந்த ஆக்ஷேபம் துராக்ரஹிகள் சொல்லும் வார்த்தைபோல இருக்கிறதே தவிர, தத்வாந்வேஷணத்தில் ப்ரவ்ருத்தர்களாக இருக்கும் நிராக்ரஹிகளின் தர்க்கமாகத் தோன்றவில்லை. முதலில், நமது ஶாஸ்த்ரம் சண்டாளாதிகளைத் திரஸ்கரிக்கச் சொல்லுகின்றது என்றும், அவர்கள் எவ்வித ஜ்ஞாநத்திற்கும் அநர்ஹர்கள், ஸதா அஜ்ஞர்களாகவே வர்த்தித்து வரவேண்டியவர்களென்று நியமிக்கிறதென்றும் சொல்வது ஶுத்த மித்யை. அப்படி அவர்களைத் திரஸ்கரித்தும், அவர்களை எவ்வித ஸுகத்தையும் பெறவொட்டாமல் ஸதா ஸர்வவித க்லேஶங்களுக்கும் பாத்ரமாக்கியுமே அவர்களை த்விஜர்கள் நடத்திவரவேண்டுமென்று நமது ஶாஸ்த்ரம் போதித்தால் அந்த ஶாஸ்த்ரம் ஸர்வதா த்யாஜ்யமே ஆகும். அப்படி நமது ஶாஸ்த்ரம் சொல்லவேயில்லை. ஸ்வகபோலகல்பிதமாக இந்த மித்யையைக் கூசாமற் சொல்லிக்கொண்டு, க்ரூரர்களான த்விஜர்கள் வஶமாகி எவ்வித அபராதமுமின்றிக்கே சண்டாளாதிகள் கஷ்டப்படுவதாக எண்ணி, அவர்களை உத்தரணம் செய்வதுதான் தமது தர்மமென்று நினைத்து, சில தநிகர், இக்காலத்தில் 'ஆபந்ந ஜாதியர்களை உத்தரணம்செய்யும் ஸபை' என்று ஒன்றை ஏற்படுத்தி, அவர்களுக்குப் பாடஶாலைகளையும் ஜீவநோபாயங்களையும் கல்பிக்க ப்ரயத்நப்பட்டு வருகிறார்கள். இந்த ஜகதுபகாரகர்கள் இம்மாதிரியாக உதவி புரிவதைப்பற்றி நமக்கு ஸந்தோஷமே தவிர எவ்வித வருத்தமும் இல்லை. மநோகதமான அபிப்ராயம் எப்படியிருந்தாலும், இவர்கள் தமது இந்த்ரியங்களின் த்ருப்தியைத் தேடுவதை ஒரு க்ஷணமாவது மறந்து, இம்மாதிரியான ஸஹாயத்தை அபேக்ஷித்துநிற்கும் ஆபந்நர்களுக்கு உபகரிக்கிறார்களென்னும் விஷயத்தில் நாம் அதிமாத்ரம் ஆஹ்லாதிக்கிறோம். வீணில் ஒரு மித்யை சொல்லாமலே இந்த உபகாரத்தைச் செய்யக்கூடாதா என்பது மாத்ரம் ஸ்வல்ப ஶோகத்திற்கு ஹேதுவாகின்றது. இது விஷயமாக நமது ஶாஸ்த்ரம் சொல்லுகிறது என்னவென்றால்,—ப்ராஹ்மணன் முதல் ஶ்வபாகன் வரையிலுள்ள ஜீவன்களெல்லாம் ஜ்ஞாநாம்ஶத்தில் ஏகாகாரத்தையே உடையவர்கள்; எல்லாரும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் இந்த ஸம்ஸாரதஶையில் ஜ்ஞாந ஸங்கோசத்தை அடைந்திருக்கிறார்கள்;

எல்லாரும் ஜ்ஞாநத்தின் அபிவ்ருத்தியைத் தேட அர்ஹர்களே; எல்லாரும் சீதவாதாதபாதிகளிலிருந்து தம்மை ஸம்ரக்ஷித்துக் கொள்ள ப்ரயத்நப்படுவது உசிதமே; இவர்களுள் பரஸ்பரம், ஜீவஸ்வரூபம் பற்றின வரையில் கிஞ்சிதபி பேதமில்லை; எல்லாரும் பகவத் க்ருபைக்குப் பாத்ரர்களே என்பதுதான். சண்டாளாதிகள் தநிகர்களாகக்கூடாது என்றுவது, ஐஹிக போகங்களை அநுபவிக்கக் கூடாது என்றுவது ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. அவர்கள் தாரித்ர்யத்தால் வருந்தினல், மற்றவர்கள் விஷயத்திற்போல, அந்தக் கஷ்டம் ஜந்மாந்தர கர்மமடியாக ஏற்பட்டிருக்கிறதே தவிர, எவ்வித ஶாஸ்த்ரநிர்பந்தத்தாலு மன்று. ஸ்வஸாமர்த்யத்தினல் அவர்களும் நல்ல ஸ்திதியை அடையும் பக்ஷத்தில் அது அஶாஸ்த்ரீயமென்று ஒருவராலும் சொல்லமுடியாது. இப்படி இருக்க: இந்த ஜகதுத்தாரகர்கள் என் வீணில் ஶாஸ்த்ரத்தை நிந்திக்கவேணும்? தவிரவும், த்விஜயோநியிற் பிறந்தவர்கள் மாத்திரம் மோக்ஷத்திற்குத் தகுந்தவர்கள், சண்டாளாதிகள் அநர்ஹர்களென்று எவ்விடத்திலும் ஶாஸ்த்ரத்திற் சொல்லப்படவில்லை.

"பஶுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா:"

பஶுவாக விருந்தாலும் மநுஷ்யனுக விருந்தாலும் பக்ஷியாகவிருந்தாலும், விஷ்ணுவினிடத்தில் பக்திசெய்யு மவர்களின் ஆஶ்ரயத்தினுலேயே எல்லாரும் கரையேறுகிருர்களென்றன்றே நமது ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது?

"[illegible] ஸர்வ[illegible] மோக்ஷயிஷ்யதி கேஶவ:"

என்னும் வார்த்தை ப்ராஹ்மணர்களுக்கு மாத்திரம் சொல்லப்பட்டதன்றே?

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே |
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ||"

என்று சக்ரவர்த்தித் திருமகன் ஸமஸ்தமான ப்ரபஞ்சத்தையும் உத்தேஶித்தன்றே சொன்னுன்? திர்யக்யோநியில் ஜநித்த கஜத்திற்குமன்றே நமது பகவாந் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுத்ததாக நாம் படிக்கிறேம். விஶ்வ பரிபாலந ஜாகரூகமன்றே அவனுடைய ஸங்கல்பம்?



"ஸாதாரணே த்வயி க்ருபா! [illegible]"

என்கிறபடி ஸ்வாமித்வ ஸம்ரக்ஷகத்வங்களாலே ஸர்வ ஜநங்களுக்கும் ஈஶ்வரன் ஸமாநன் என்றுதானே நமது ஶாஸ்த்ரம் போதிக்கின்றது? இப்படி ஐஹிக போகாநுபவ விஷயத்திலும் மோக்ஷ ஸாம்ராஜ்ய லாப விஷயத்திலும் இவ்வளவு நிஷ்பக்ஷபாதமாக ப்ரவ்ருத்தித்திருக்கும் ஶாஸ்த்ரத்தைக் கீழ்க்கூறியவாறு தூஷிப்பது தத்வாந்வேஷிகளின் லக்ஷணமாகுமா? ஆராய்ந்து பார்க்குமளவில், எவ்விதவைஷம்யமு மில்லாமல் எல்லாருக்கும் ஸமாநமாக இருக்கும் அம்ஶத்தில், நமது ஶாஸ்த்ரத்தை விட உயர்ந்தது மற்றென்று இருக்கின்றதென்று சொல்வது துஸ்ஸாத்யம். அளவற்ற குணங்களுக்கு ஆகரமாக விருக்கும் நமது ஶாஸ்த்ரத்தின்மீது இவர்கள் இம்மாதிரி தோஷாரோபணம் செய்வது,

"[illegible] -
[illegible] |"

என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அநுக்ரஹித்திருக்கிறபடி, பரதூஷண தத்பரர்களாக விருக்கும் அஜ்ஞாநிகளுடைய க்ருத்யமேயாகும்.

ஜந்மாந்தர கர்மாநுகுணமாக நேரும் இஹலோகத்துப் பிறப்பில், அவரவர்கள் அதிகாராநுகுணமாகச் சிற்சில நியமங்களை நமது ஶாஸ்த்ரம் விதித்திருப்பது உண்மையே. ஒவ்வொரு வர்ணத்திற்கு ஒவ்வொரு தர்மமும், ஒவ்வொரு ஆஶ்ரமத்திற்கு ஒவ்வொரு தர்மமும், ஆஹாரம் ஶௌசம் முதலிய அம்ஶங்களில் அந்தந்த வர்ணுஶ்ரமங்களுக்குத் தகுந்தபடி சிற்சில நிர்பந்தங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதாநம் முழுவதும் அவரவர்களின் ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்தே செய்யப்பட்டிருக்கின்றது என்று நாம் அறியவேண்டும். ப்ராஹ்மணனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மம் ஶூத்ரனுக்கு விதிக்கப்படாவிட்டால், அது, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் காரணத்தினு லன்று; அதிகாரி அநதிகாரி பேதமே அதற்குக் காரணம். ஜந்மாந்தரங்களில் விஶ்வஸிக்கும் நமது மஹர்ஷிகள், பூர்வ ஜந்ம ப்ரவாஹங்களில் நாம் செய்திருக்கும் புண்ய பாபங்களுக்கு அநுகுணமாக இந்த ஜந்மத்தில் நமக்குச் சிற்சில ஜாதியில் பிறப்பு நேர்கின்றதென்றும்,

எல்லாரும் ஜ்ஞாநத்தின் அபிவ்ருத்தியைத் தேட அர்ஹர்களே; எல்லாரும் பீதவாதாதபாதிகளிலிருந்து தம்மை ஸம்ரக்ஷித்துக் கொள்ள ப்ரயத்நப்படுவது உசிதமே; இவர்களுள் பரஸ்பரம், ஜீவஸ்வரூபம் பற்றின வரையில் கிஞ்சிதபி பேதமில்லை; எல்லா ரும் பகவத் க்ருபைக்குப் பாத்ரர்களே என்பதுதான். சண்டா ளாதிகள் தநிகர்களாகக்கூடாது என்றாவது, ஐஹிக போகங்களை அநுபவிக்கக் கூடாது என்றாவது ஓரிடத்திலும் சொல்லப்பட வில்லை. அவர்கள் தாரித்ர்யத்தால் வருந்தினால், மற்றவர்கள் விஷ யத்திற்போல, அந்தக் கஷ்டம் ஜந்மாந்தர கர்மமடியாக ஏற்பட் டிருக்கிறதே தவிர, எவ்வித ஶாஸ்த்ரநிர்பந்தத்தாலு மன்று. ஸ்வ ஸாமர்த்யத்தினால் அவர்களும் நல்ல ஸ்திதியை அடையும் பக்ஷத் தில் அது அஶாஸ்த்ரீயமென்று ஒருவராலும் சொல்லமுடியாது. இப்படி இருக்க: இந்த ஜகதுத்தாரகர்கள் என் வீணில் ஶாஸ்த் ரத்தை நிந்திக்கவேணும்? தவிரவும், த்விஜயோநியிற் பிறந்தவர் கள் மாத்திரம் மோக்ஷத்திற்குத் தகுந்தவர்கள், சண்டாளாதிகள் அநர்ஹர்களென்று எவ்விடத்திலும் ஶாஸ்த்ரத்திற் சொல்லப்பட வில்லை.

“ பஶுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: ”

பஶுவாக விருந்தாலும் மநுஷ்யனாக விருந்தாலும் பக்ஷியாகவிருந் தாலும், விஷ்ணுவினிடத்தில் பக்திசெய்யு மவர்களின் ஆஶ்ரயத்தி லேயே எல்லாரும் கரையேறுகிறார்க ளென்றன்றோ நமது ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது?

“ ஜ்ஞாநாக்நி ஸம்ஸ்காரவிஶேஷாத் மோக்ஷயோக்யாதி ஶூத்ர: ”

என்னும் வார்த்தை ப்ராஹ்மணர்களுக்கு மாத்திரம் சொல்லப் பட்டதன்றோ?

“ ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥ ”

என்று சக்ரவர்த்தித் திருமகன் ஸமஸ்தமான ப்ரபஞ்சத்தையும் உத்தேஶித்தன்றோ சொன்னான்? திர்யக்யோநியில் ஜநித்த கஜத் துக்குமன்றோ நமது பகவான் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுத் ததாக நாம் படிக்கிறோம். விஶ்வ பரிபாலந ஜாகரூகமன்றோ அவ னுடைய ஸங்கல்பம்?



“ ஸாதாரணே த்வயி க்ஷமேஶ ! ஸர்வஸ்ய ஜந்தோ: ”

என்கிறபடி ஸ்வாமித்வ ஸம்ரக்ஷகத்வங்களாலே ஸர்வ ஜநங்களுக் கும் ஈஶ்வரன் ஸமாநன் என்றுதானே நமது ஶாஸ்த்ரம் போதி க்கின்றது? இப்படி ஐஹிக போகாநுபவ விஷயத்திலும் மோக்ஷ ஸாம்ராஜ்ய லாப விஷயத்திலும் இவ்வளவு நிஷ்பக்ஷபாத மாக ப்ரவ்ருத்தித்திருக்கும் ஶாஸ்த்ரத்தைக் கீழ்க்கூறியவாறு தூஷி ப்பது தத்வாந்வேஷிகளின் லக்ஷணமாகுமா? ஆராய்ந்து பார்க்கு மளவில், எவ்விதவைஷம்யமு மில்லாமல் எல்லாருக்கும் ஸமாந மாக இருக்கும் அம்ஶத்தில், நமது ஶாஸ்த்ரத்தை விட உயர்ந் தது மற்றொன்று இருக்கின்றதென்று சொல்வது துஸ்ஸாத்யம். அளவற்ற குணங்களுக்கு ஆகரமாக விருக்கும் நமது ஶாஸ்த் ரத்தின்மீது இவர்கள் இம்மாதிரி தோஷாரோபணம் செய்வது,

“ நிரவதி குணஶ்ரேணீ ஶாலிநீ நாமலீ வாமலீ -
ஸ்மரண ஸூசி தாநேகா நேகா வஹந்தி ஸமாதிகா । ”

என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அநுக்ரஹித்திருக்கிறபடி, பர தூஷண தத்பரர்களாக விருக்கும் அஜ்ஞாநிகளுடைய க்ருத்யமே யாகும்.

ஜந்மாந்தர கர்மாநுகுணமாக நேரும் இஹலோகத்துப் பிறப் பில், அவரவர்கள் அதிகாராநுகுணமாகச் சிற்சில நியமங்களை நமது ஶாஸ்த்ரம் விதித்திருப்பது உண்மையே. ஒவ்வொரு வர் ணத்திற்கு ஒவ்வொரு தர்மமும், ஒவ்வொரு ஆஶ்ரமத்திற்கு ஒவ் வொரு தர்மமும், ஆஹாரம் ஶௌசம் முதலிய அம்ஶங்களில் அந்தந்த வர்ணாஶ்ரமங்களுக்குத் தகுந்தபடி சிற்சில நிர்பந்தங்க ளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதாநம் முழுவதும் அவ ரவர்களின் ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்தே செய்யப்பட்டிருக்கின் றது என்று நாம் அறியவேண்டும். ப்ராஹ்மணனுக்கு விதிக்கப் பட்டிருக்கும் தர்மம் ஶூத்ரனுக்கு விதிக்கப்படாவிட்டால், அது, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் காரணத்தினா லன்று; அதி காரி அநதிகாரி பேதமே அதற்குக் காரணம். ஜந்மாந்தரங்களில் விஶ்வஸிக்கும் நமது மஹர்ஷிகள், பூர்வ ஜந்ம ப்ரவாஹங்களில் நாம் செய்திருக்கும் புண்ய பாபங்களுக்கு அநுகுணமாக இந்த ஜந்மத்தில் நமக்குச் சிற்சில ஜாதியில் பிறப்பு நேர்கின்றதென்றும்,

அந்தப் புண்ய பாபங்களின் பரிசயத்திற்கு அநுகுணமாகவே இந்த ஜந்மத்தில் சிற்சில தர்மங்களுக்கு அதிகாரம் நேர்கின்ற தென்றும் அறிந்து, ஜாதிக்குத் தகுந்தபடி அதிகார அநதிகாரங்களை விபஜித்திருக்கிறார்களே தவிர, எவ்வித வைஷம்யத்தினுலும் இப்படி ஒரு விபாகத்தை ஏற்படுத்தவில்லை. தனது தர்மங்களை ஸரிவர அநுஷ்டிக்காம லிருக்கும் ப்ராஹ்மணனைத் தூஷித்தும், தனக்கு விஹிதமான தர்மாநுஷ்டாநத்தை ஸரிவரச் செய்து வரும் அந்த்ய ஜாதியரைப் பூஜித்தும் பேசும் ஶாஸ்த்ரத்தை நாம் அறியோமா?

"வர்ணாஶ்ரமாணாம் யா ஸ்ருஷ்டா மயா க்ருதா ।
தாம் யே ஸம்ரக்ஷந்தி ... ஸாத்விகாஸ்தே மம ப்ரியா: ॥"

என்றும்,

"ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ:"

என்றும், ஸ்ரீபகவானே, 'வர்ணாஶ்ரமதர்மத்தைப் பரிபாலநம் செய்கிறவன் எனது ப்ரஸாதத்திற்குப் பாத்ரமாகிறான்; அதை அதிலங்கநம் செய்கிறவன் எனது த்ரோஹீ' என்று ஜாதி பக்ஷபாதமின்றிக்கே அநுக்ரஹ நிக்ரஹங்களைச் செய்திருக்கிறான். இப்படிப் பட்ட பகவானிடத்திலாவது, அவனுடைய ஶாஸ்த்ரத்திலாவது எவ்வித பக்ஷபாதத்தை நாம் ஆரோபிக்கக்கூடும்? ஸமஸ்தமான ஜீவகோடிகளும் ஒரே விதமான ஸம்ஸ்காரத்தையும் ஒரே விதமான பரிபாகத்தையும் பெற்றிருந்தால், ஒரே விதமான தர்மத்தை எல்லாருக்கும் விதிக்கலாம்; அப்படியில்லை யென்பதை நமது பூர்வபக்ஷிகளே நன்றாக அறிவார்கள்.

தவிரவும், ப்ரஜைகளுக்குள் ஸம்பவிக்கும் ஸௌஹார்த்தமும் ஐகமத்யமும், எல்லாரையும் துல்யாதிகாரிகளாகப் பரிகணநம் செய்வதைப் பொறுத்ததன்று என்பதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கக்கூடும். ஸகல ஜாதியரும் ஜாதி வ்யத்யாஸமின்றிக்கே ஸகல தர்மத்திற்கும் துல்ய அதிகாரிகளென்று விஹார ஶய்யாஸந போஜநாதிகளில் பரிபூர்ண ஸமாநதையைப் பாவித்து வரும் ஐரோப்பியர்களுக்குள்ளும் பரஸ்பரம் தீவ்ரவைரம் ஸம்பவித்திருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோமன்றோ? தம்மைப் போல ஸகல ஸ்வாதந்த்ர்யத்தையும் ஸ்த்ரீகளும் அநுபவித்து வர வேண்டுமென்று [illegible]



இப்பொழுது அந்த ஸ்த்ரீகள் கெட்டுப்போவதைப் பார்த்துத் தாம் நினைத்தது பிசகு என்பதை உணர்வது போலவன்றோ தோன்றுகின்றது? ஆகையால், நாம், ஶாஸ்த்ர பந்தத்தை அநாதரித்து, ஆஹாராதிகளிலும் விவாஹாதிகளிலும் எவ்வித நியமத்தையும் கொள்ளாமல் வர்த்தித்து வந்தால் பரஸ்பரம் ஸௌஹார்த்தாதிக்யம் ஏற்படுமென்று எண்ணி, இவைகளுக்குப் பரஸ்பரம் கார்ய காரண பாவத்தைக் கல்பிப்பது மௌட்யக்ருத்யமே. நமது ஶாஸ்த்ரார்த்தத்தை ஸரியானபடி அறிந்துகொண்டு, அதை அநுஷ்டாந பர்யவஸாயியாகச் செய்வதுதான் ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தை வ்ருத்திசெய்யத் தகுந்தது என்று சற்று ஆலோசித்துப் பார்க்குமவர்களுக்கு நன்கு விளங்கும்.

ஆகையால், ப்ரஜைகளெல்லாரும் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டுமென்றும், எவ்வித க்ஷோபமுமின்றிக்கே ஐஹிகத்திலும் யதோசிதம் ஸுகிகளாக இருக்கவேண்டுமென்றும் நாம் விரும்பினால், அதை ஸாதித்துக்கொள்ள, நமது வைதிக ஶாஸ்த்ரத்திற்கு உட்பட்டு நடப்பது தவிர வேறு ஸாதீயஸ்ஸான மார்க்கம் ஒன்றும் தெரியவில்லை.

"குஶலாய யஜ்ஞாநாம் பாலநாய ஜகதஸ்ச ।
ஸம்ரக்ஷணாய ச லோகஸ்ய யஜ்ஞாதீநாம் ஸ்தாபநாய ச ॥
ப்ரியாய ச விஷ்ணோர்ஹி தேவதேவஸ்ய ஶார்ங்கிண: ।
உத்கர்ஷோ வைதிகாசாரம் ஸந்ததேஸ்து ந ஸம்ஶய: ॥"

ஒருகால் ஶக்த்யபாவத்தினாலோ, தத்துல்யமான மற்றை அநுபபத்திகளினாலோ யதா ஶாஸ்த்ரம் பூர்ணமாகத் தர்மங்களை அநுஷ்டிப்பது கஷ்டமானால், பகவந்முகோல்லாஸத்தைத் தேடும் நாம், அந்த ஶாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டிருக்கும் கௌண கல்ப ரீதியாகவாவது ஶாஸ்த்ரத்தை அநுஸரிக்க வேண்டும். அப்படிப் பட்ட கௌணகல்பத்திற்கு அவகாஶம் எப்பொழுது என்பதையும், முக்கிய கல்பத்திற்கு ஒரு விதமான ஸங்கோசத்தைச் செய்வது எங்கெங்கெந்தத் தர்மாநுஷ்டாநங்களில் தோஷாவஹமாகா தென்பதையும் தர்மஶாஸ்த்ரஜ்ஞர்களாயுள்ள மஹான்களிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு விஜ்ஞாபநம் மாத்திரம் இது ஸம்பந்தமாக அடியேன் செய்துகொள்ளத் துணிவேன். காலத்தில்

ஸ்நாநத்தைச் செய்வதிலும், "அஹரஹஸ் ஸந்த்யாமுபாஸீத" என்னும் விதிப்படி ச்ரத்தையுடன் ஸந்த்யோபாஸநத்தை அநுஷ்டிப்பதிலும் யதாசக்தி, பகவதாராதநாதிகளைச் செய்வதிலும் ஆத்யந்திக லோபம் வரவொட்டாமல் தடுத்துக்கொண்டும், 'ஸத்யம்வத' என்னும் விதிக்கு ப்ராணாத்யய காலத்திற்கூட ஸங்கோசத்தைச் செய்யாமலும், பரத்ரவ்யாபஹாரம் முதலிய மஹாபாதகங்களுக்குத் தம்மைப் பாத்ரமாக்கிக் கொள்ளாமலும், டம்பமாநம் முதலிய துஷ்டபாவங்களுக்குக் கிஞ்சிதபி இடங்கொடாமலும், "ஆஹார ஶுத்தௌ ஸத்வஶுத்தி:" என்கிறபடி ஸத்வ ஶுத்தியானது ஆஹார ஶுத்தியைப் பொறுத்ததானதால் ஆஹாராதிகளில் கூடியவரையில் நியமத்தை அநுஷ்டித்தும், ஸாத்யப்பட்டவளவு பகவத் த்யாநத்தைச் செய்துகொண்டும் நாம் வர்த்தித்து வந்தால், நம்மைப் பகவாந் அநுக்ரஹிப்பன் என்பதில் ஸந்தேஹமில்லை. எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் எந்த வ்ருத்தியை அவலம்பித்தாலும், கீழ்க்கூறிய தர்மங்களை லோபமின்றிக்கே அநுஷ்டிப்பது ஸாத்யமே. சாஸ்த்ரோக்த தர்மங்களைப் பூர்ணமாக அநுஷ்டிப்பதில் நமக்கு நேர்ந்திருக்கும் அசக்தியை உத்தேசித்து ஹார்த்தமான அநுதாபத்தை நாம் கொண்டால், பகவாந் நம்முடைய அநநுஷ்டாநத்தை க்ஷமித்து, நம்முடைய பக்திக்குறைவைத் தீர்த்து அநுக்ரஹிப்பன் என்பதும் நிச்சயம்.

> "நிரவதிக க்ருபாதிஷு ஸாமக்ரீ
> மதிரந ஶரணீ யஸ்ய தத் ।
> வரத! ஹி தயைவ ந ஸம்ஶயோஹி
> நிரநுஶயமேவ ஹதாத்ம வயம் ॥"

என்னும் ஸ்ரீ கூரேசனுடைய திவ்யஸூக்தியும்,

> "ஸக்ருத் ப்ரண ப்ராபகோத்ய யேநயே நஷ்ட ஹேதவ: ।
> ஸ ஸ ஏவ ஸ்மரதி வரத்ஸ்யாக்ஷஸம்ஶயம் ॥"

என்னும் அபியுக்தர்களின் ஸங்க்ரஹமும், இவைபோன்ற மற்றை ஆசார்யர்களுடைய அநுக்ரஹங்களும் இந்த நம்பிக்கைக்கு ப்ரமாணம். *

---

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் ஸ்ரீ திருவெவ்வுளூரில் நடந்த மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ. பு. எஸ். வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

ஸ்ரீ:.

# தத்வவிசாரம்.

## ப்ரபந்நன் க்ருதக்ருத்யன், க்ருதார்த்தனுமாகின்றான்.

இந்த ப்ரபத்தி நிஷ்டன் நிர்ப்பரனாய், நிஸ்ஸம்சயனாய், நிர்ப்பயனுமாய், ஹ்ருஷ்டமநாவாய், பகவத்விஷயத்தில் ஆஜ்ஞாநுஜ்ஞாரூபகைங்கர்யரஸிகனாகையாலே முக்ததுல்யனாய், க்ருதக்ருத்யனென்றும், க்ருதார்த்தனென்றும் கொண்டாடப்பட்டிருக்கிறானென்றருளிச்செய்கிறார். அதெப்படியென்றால்: ப்ரபத்யநுஷ்டாந காலத்தின் பிறகு, அபேக்ஷித்த புருஷார்த்தத்தைக்குறித்து யாதொன்றும் அவன் செய்யவேண்டியதில்லை. நிர்யாண காலத்தில், ப்ரஹ்மநாடீப்ரவேசம் முதலாக ஸர்வாபேக்ஷிதங்களையும், அவன் பரத்தை ஏற்றுக்கொண்ட சரண்யன்தானே செய்வானாதலால் அவ்வம்சங்களில் அவனுக்கு அந்வயமில்லை. அவன் ஸக்ருத் ப்ரபத்யநுஷ்டாநம் செய்த மாத்ரத்தால், கர்த்தவ்யாம்சம் அவனுக்கு ஸித்தித்துவிட்டது. ஸ்வதந்த்ரனும், ஸத்யஸங்கல்பனுமான ஈச்வரன், தன்னைச் சரணமடைந்தபிறகு (மாஶுச:) சோகிக்க வேண்டாமென்றருளிச்செய்தபடியால், அவன் பரந்யாஸம் செய்த பிறகு நிர்ப்பரனாயிருக்கத்தக்கவன். (மாமேகம் ஶரணம் வ்ரஜ) 'என்னை யொருவனைச் சரணமாகவடை' என்ற ஸர்வேச்வரன், அவன் அபேக்ஷித்த பலத்தைப்பற்றி ஸித்தோபாயமாக நின்று, 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று, புருஷார்த்தத்தைத் தடுக்கும் விரோதி நிரஸநத்தை முன்னிட்டுப் புருஷார்த்தத்தைக் கொடுப்பதாக ஸங்கல்பம் பண்ணுகையாலே, அந்த சரண்யனிடம் அவனுக்கு விச்வாஸமுண்டாகி, பகவான் பலத்

தைத் தர ஸமர்த்தனுய், அப்பலத்தைக் குறித்து உபாயாந்தர ஸ்தா நத்தில் நிவேசிதனுய் இருப்பதைப் பார்த்துப் பலஸித்தியில் அவன் ஸம்சயமற்றவனுய், நிர்ப்பயனுமா யிருக்கத்தக்கவன். அகிஞ் சநனுன அவன், ஒருவன் தன் ப்ரயத்நமின்றி மஹாநிதியைப் பெறுவதுபோல், தான் செய்த ஶரணாகதி யெனும் வ்யாஜமாத் ரத்தால் பெறப்போகின்ற பரமபுருஷார்த்தத்தைப் பார்த்தும், வாஸநாஸஹிதமாகத் தான் விட்டுவிட்ட இதர புருஷார்த்தங்களை யும், அவற்றின் ஸாதநங்களுடன் கூடத் தான் பரித்யாகம் செய்த அந்ய உபாயங்களையும் யோசித்தும், ஹ்ருஷ்டமநாவாய், அதா வது ஸந்துஷ்டனுய் இருக்கக்கடவன்.

அன்றியும், "தேவர்ஷிபூதாப்தந்ருணாம் பித்ரூணாம் நகிங்கரோ நாயம்ருணீ ச ராஜந் । ஸர்வாத்மநா யஶ்ஶரணம் ஶரண்யம் நாராயணம் லோககுரும் ப்ரபந்ந:" ॥ [ஸர்வப்ரகா ரத்தாலும், அதாவது ப்ராப்யனென்றும், ப்ராபகனென்றும், ஸர்வ ரக்ஷகனும் லோக குருவுமான நாராயணனைச் சரணமடை ந்த இவன், தேவர்களெனும் ஆத்மாக்களுக்கும், ருஷிகளெனும் நரர்க்கும், பித்ருக்களுக்கும், யஜ்ஞாதிகளால் ஆராதநம் பண்ண வேண்டிய கிங்கரனல்லன், கடன்காரனுமல்லன்.] என்கிற ஶ்லோ கத்தின்படியே, ப்ரஜைகட்கும், பசுவென்னும் பத்தஜீவர்க்கும், பதிகளென்று போரடைந்தவர் போன்ற தேவதைகள் கர்மவஶ்ய ராகையால், தன்னைப்போன்ற க்ஷேத்ரஜ்ஞர்களா யிருக்கின்றனர். ஆகிலும் லோகத்தில் ஓரோர் அவஸரங்களில் அடிமையாட்களு க்குத் தாஸ்யரூபமான கைக்கூலி தருவதொத்து, மநுஷ்யன், அவன் செய்த பூர்வகர்ம பலமாக ப்ராஹ்மணுதி வர்ணங்களில் பிறந்த மாத்ரத்தால் தேவர் முதலானவர்க்கு அவனைக் கிங்கர னுக வேதத்தில் சொல்லியிருக்கிற ப்ரமாணரூபமான அடிமைச் சீட்டையும், கர்மபலரூபமான அவனுடைய ஜந்மத்தால் அவன் கடன்பட்டவனெனத் தேவதைகள் கைங்கர்யமாக ப்ரதி திநமும் ப்ருத்யக்ருத்யங்கள் பண்ணக்கடவனென்கிற வேதவாக்யத்தைப் பற்றி, அவன் பண்ணும் க்ருத்யங்களெல்லாம் அக்கடனின் வ்ருத்



யம்சத்தில் கழிவதன்றி, முதலை ஈஷத்தும் குறைக்காமல் இரு க்குமப்படி ஏற்பட்ட அந்தக் கடன் சீட்டையும், ப்ரபந்நன் கழித் தவனுகின்றுன். ஆகையால், பஞ்சமஹா யஜ்ஞம் முதலான நித்ய நைமித்திக கர்மங்கள் செய்யுங்கால், தேவதைகள் முதலா னவருடைய நாமோச்சாரணம் அவன் பண்ணும்போது, "யே யஜந்தி பித்ரூந்தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாஶநாந் । ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே" [பித்ருக் களையும், தேவர்களையும், ப்ராஹ்மணரையும் அக்நியையும், யஜிக்கின்ற பரமைகாந்திகள் ஸர்வப்ராணிகட்குள்ளும் அந்தரா த்மாவா யிருக்கின்ற விஷ்ணுவையே யஜிக்கின்றனர்.] என்கிற ப்ரமாணப்படி, அவர்களைச் சரீரங்களாயுடைய பரமாத்வை யஜிப் பதாக எண்ணுவன். பின்னும், "ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:", எனும் ஸூத்ர நிஷ்கர்ஷத்தின்படி, அக்நி, இந்த்ரன், ஸூர்யன் முதலான சப்தங்கள், அவற்றின் அவயவங்களின் அர்த்தபர்யாலோசனையால், பகவானையே ஸாக்ஷாத்தாகக் குறிக் கின்றன வென்று, அவ்வோஶப்தங்களால் பகவானையே யஜிப்ப தாய் எண்ணுவன். ஆதலால் அந்த ஶப்த உச்சாரணத்தால், தன் னுடைய பரமைகாந்தித்வம் குலையாமல் நிற்கின்றதென நிரூப ணம் பண்ணுவன். அவன் பிறந்த வர்ணத்துக்கும், நிற்கும் ஆஶ் ரமத்துக்கும் அநுகுணமாக, அவன் செய்யும் ஸ்நாநஸந்த்யோ பாஸநம், இஜ்யை, உபாதாநாதி கர்மங்களையும், புத்ரஜநநம், உப நாகம் முதலானவற்றின் நிமித்தம் செய்யப்பட்ட வைஶ்வாந ரேஷ்டி உபாக ஶ்ராத்தம் முதலான கர்மங்களையும், வைஷ் ணவத்வாதி குணங்களால் நேரிடும் தேவதாந்தர வர்ஜநாதி க்ரி யைகளையும், அவன் செய்யவேண்டிய அதிகாரியாய் இருக்கும் தசையில், அந்தக் கர்மங்கள், அவனை அடிமைகொள்ள ஸங்கல் பித்திருக்கும் ஈஶ்வரனுடைய ஆஜ்ஞாரூபமானவையும் அநுஜ்ஞா ரூபமானவையுமான கைங்கர்யங்களாக ஶாஸ்த்ரங்களால் அறி யப்படுவதால், அவற்றை அவன் அநுஷ்டிக்கும்போது, பரமபுரு ஷனுடைய அபிப்ராயத்தை ப்ரத்யக்ஷமாய் அறிந்து செய்யும்

முக்தரைப்போல், ஶாஸ்த்ரமுகமாய் அதை யறிந்து அநுஷ்டிக்குமாதலால் முக்ததுல்யனாகின்றான். தாஸத்வ ப்ரயுக்த கைங்கர்யங்களும் செய்கின்றவனாகின்றான்.

ஆதலால் உபாயபூர்த்தியால், அவனுக்கு க்ருதக்ருத்யனென்றும், அவன் புருஷார்த்தமாய் வேண்டிய பகவத் கைங்கர்யத்தை அடைந்தவனாகையால், க்ருதார்த்தனென்றும், ஶாஸ்த்ரங்களால் கொண்டாடப்படுகின்றான்; ஶாஸ்த்ர நிஷ்டரான பூர்வாசார்ய வாக்யங்களாலும், அவ்வண்ணமே இவன் கொண்டாடும்படி யிருக்கும்.

இப்படி க்ருதக்ருத்ய னென்றும், க்ருதார்த்தனென்றும், ப்ரபந்நனுக்கு அநுஸந்தாநம் வேண்டுமென்று கருத்து. ஸ்ரீபாஷ்யகாரரும் ஶரணாகதி கத்யத்தின் முடிவில், "ததஸ்த்வம், தத்த்வத:, மஜ்ஜ்ஞாந தர்ஶந ப்ராப்திஷு, நிஸ்ஸம்ஶய: ஸுகமாஸ்வ," [ஆதலால் நீ, என் விஷயமான வாஸ்தவ ஜ்ஞாநத்தை ஶாஸ்த்ரத்தால் அடையும் விஷயத்திலும், என்னை யதாவத்தாக ஸாக்ஷாத்காரம் பண்ணும் விஷயத்திலும், நிஜமாக என்னுடைய ப்ராப்தி விஷயத்திலும் ஸம்ஶயமற்றவனாய் ஸுகமாயிரு] என்று நிகமநம் செய்திருக்கும் ப்ரபந்நனுடைய க்ருதக்ருத்யத்வ அநுஸந்தாநம் இருக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, அந்த வாக்யத்தின் அர்த்தவிசாரத்தைப் பின்வருகிறபடி பண்ணுகின்றார். ஸ்ரீபாஷ்யகார வசநமும், கீதை பதிநொராவது விஶ்வரூபாத்யாயம், 54 - வது ஶ்லோகத்தை யநுஸரித்துண்டாயது.

"பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப" ॥

[ஓ சத்ருக்களைத் தபிக்கச்செய்யும் அர்ஜுநா! ஸர்வகரணங்களுக்கும் நான்தவிர மற்றொன்றும் விஷயமாகாதபடிப் பரிணமிக்கும் அநந்ய பக்தியினால் மாத்ரம், நான், யதாவஸ்திதனாக ஶாஸ்த்ரத்தால் அறியவும், அறிந்தபடி ஸாக்ஷாத்கரிக்கவும், முடிவில் மோக்ஷதசையில் அடையவும் கூடினவன்] என்று இவ்விதமாக



வுந்த ஶ்லோகம் இருக்கின்றது. இப்படிப் பகவானுடைய யதாவஸ்திதஜ்ஞாநம், ஸாக்ஷாத்காரம், ப்ராப்தி, இவற்றை அடைவதில், ஸம்ஶயமற்று ஸுகமாயிருத்தல் தான் க்ருதக்ருத்யனுடைய ஸ்வரூபம் என்று தேசிகன் திருவுள்ளம்; அப்படியே ஸ்ரீபாஷ்யகார வாக்ய தாத்பர்யத்தை நிஷ்கர்ஷிக்கின்றார். அஃதெங்ஙனமென்றால், அநாதி காலம் பகவானுடைய ஆஜ்ஞைகளை அதிக்ரமித்து நடந்த சேதநன், அதனால் பகவானுடைய நிக்ரஹத்தை ஸம்பாதித்துக்கொண்டவனாய் ஸம்ஸரித்துக்கொண்டிருக்கின்றான். இப்படியிருக்கையில்,

"ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா ।
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகை: ॥
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யாசார்யப்ராப்திஹேதவ:" ॥

[ஒரு காலவிஶேஷத்தில் யாத்ருச்சிகமான, அதாவது, இவனுடைய ப்ரயத்நம் விநா உதிக்கின்ற ஸுக்ருத ரூபமான வ்யாஜ விஶேஷமுண்டாய், ஈஶ்வரனுடைய நிக்ரஹ மெனப்பட்ட லீலா வ்யாபாரம் கழிந்து, அவனுடைய ஸௌஹார்த்தமெனும் அநுக்ரஹ ஸங்கல்பமும் அதனடியாக அவன் ஸஹஜகாருண்யமும் இவனிடம் ப்ராவர்த்தித்து, ஸாதுக்களிடம் முதலில் த்வேஷமில்லாமையும், பிறகு விஶ்வாஸாரம்பமும், முடிவில் அவர்களுடன் ஸம்பாஷணமும், ஆக இப்படி ஒன்றிற்கொன்று கார்ய காரணரூபமாயுண்டாகின்ற ஸந்நிவேசங்கள், இவனுக்கு ஆசார்ய ப்ராப்திஹேதுக்களாகின்றன.] எனும் ப்ரமாணத்தின்படியே, பகவத்க்ருபையானது இவனுடைய யத்ருச்சா ஸுக்ருதமெனும் அவஸரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்து, அது நேர்ந்தவுடன் இவனை ஒரு ஸதாசார்யனிடம் சேரவைத்து, அந்த ஆசார்யனுடைய அநுக்ரஹத்தை ஸம்பாதித்துக் கொடுக்கின்றது. பிறகு ஆசார்யனிடம் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளியவுணர்ந்து, உபாயாநுஷ்

[வ்ருதாவாக அநேக ஜந்மங்கள் உனக்குப் போய்விட்டன. அவற்றுள் ஒன்ருக இந்த ஜந்மத்தை எண்ணிச் சரணாகதி பண்ணு.] என்று, தேவனைக்குறித்து, ஸ்ரீ ஶாண்டில்ய பகவான் அருளிச்செய்தானிறே. 'ஶரண்யம் ஶரணஞ்ச த்வாம் ஆஹுர்திவ்யா மஹர்ஷய:', [பாரலௌகிக ஜ்ஞாநமுள்ள மஹர்ஷிகள் உன்னை ரக்ஷகனென்றும், உபாயமென்றும் சொல்வார்கள்.] என்றதுவும், மஹர்ஷிகளுக்கே விஶ்வாஸம் கூடுவது. இவர்கள் வாக்யத்தையிட்டு மந்தவிஶ்வாஸரைத் தெளிவிக்கவேண்டும் என்றபடி" என்று அருளிச்செய்கின்ருர். இந்த வாக்யங்களையும், க்ருதக்ருத்யாதிகார முடிவில் ஸாதித்த ஸ்லோகத்தில், "ஸாதிஹ விதௌ ராஜாஜ்ஞாவத் ஸ்தித்வா பக்தயோ நாத்யாஸிதே" [இதன்மேல், இங்கு பகவானுடைய ஆஜ்ஞாரூபமான வரம்புகள் ஜ்ஞாதாக்களால் பரிபாலிக்கப்படுகின்றது.] எனும் முடிவான பாதத்தின் அர்த்தத்தையும் யோசித்தால், விஶ்வாஸமற்றவன் செய்யும் ப்ரபத்தி நிஷ்பலம். விஶ்வாஸம் ஸம்ஶயமற உண்டாய் ப்ரபத்தி பண்ணுகிறவனுக்கு, பண்ணின காலம்தொடங்கி, இங்கிருந்தபோதும் ப்ரபத்தி பலமாகக் கிடைத்த ஆஜ்ஞாநுஜ்ஞா ரூபமான கைங்கர்ய ப்ராப்தியும், அதனுல், மேலே விவரித்தபடி முக்ததுல்யனுகையும் உண்டாகும். மந்தவிஶ்வாஸம் உள்ளவனுக்கும், 'நஹ்யஸ்தி க்ருதநாஶோஸ்தி', எனும் ந்யாயத்தால் இங்குற்ற பகவத் கைங்கர்யரூபமான ப்ரபத்தி பலம், விஶ்வாஸ பூர்த்தியானது பகவத் க்ருபையால் உண்டாகும் பர்யந்தம் விளம்பிக்கு மென்றபடி. இப்படியாகிலும் ப்ரபந்நனுனவன் விஷயத்தில் 'கௌரவீகரோதி ஶ்ரத்தா:' எனும் வசநம் ஸ்மரிக்கத்தக்கது.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

THE REGISTRAR OF ... 9 - NOV 1916 ... MADRAS

ஸம்புடம் - 6.

1916.

(ராக்ஷஸ - நளஹூ)

பத்ராதிபர்:-திவான்பகதூர் தி-த. ரங்காசார்யர் ...

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

கார்யதர்சியால் ப்ரதிமாஸம்

ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்

1916.

Copy-right Reserved.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# அட்டவணை.

## (அகராதி.)


| | பக்கங்கள். |
|---|---|
| இவ்வர்ஷத்திய மஹாஸங்கம் | 241 |
| **கடிதங்கள் :—** | 242, 243, 285 |
| குருபரம்பராஸாரசிந்தனை | 186, 173, 234, 301 |
| சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபகம் | 88 |
| சதுஸ்ஸம்ப்ரதாய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸபை ... | 332 |
| த்ரிதஸாலயம் ... | 156, 183, 270 |
| தத்வவிசாரம் ... ... | 50 |
| தென்கலைவடகலை த்வேஷம் | 278, 318 |
| பண்டிதர்கள் ... ... | 55, 96 |
| **பத்ராதிபரின் குறிப்புகள் :—** | |
| "ஆர்யா" பத்ரிகை ... | 85 |
| ஆர்யமதத்தின் ஏற்றம் ... | 201 |
| ஆர்யாவர்த்த ப்ராஹ்மணருடைய தத்காலஸ்திதி | 289 |
| "ஆர்ய தர்மம்" ... ... | 299 |
| ஓர் விஜ்ஞாபகம் ... ... | 42 |
| கஞ்சம் ஸோஷல் ரிபாரம் ஸங்கம் ... ... | 170 |
| கண்ணப்பா பண்ணிய யோசனை ... | 11 |

| | பக்கங்கள். |
|---|---|
| கும்பகோணம் வர்ணாச்ரம தர்ம ரக்ஷக ஸங்கம் | 245 |
| "குமுதவல்லி திருமங்கை மன்னன்" ... | 133 |
| சென்னை கலாஸங்க உபந்யாஸங்கள் ... ... | 8 |
| தவிலாமா ... ... | 43 |
| திருப்பூர் ஸோஷல் ரிபாரம் ஸங்கம் ... ... | 171 |
| "திருமந்த்ர ப்ரதாநம்" ... | 129 |
| தீபிகைக்கு விஷயப்ரதாந அபேக்ஷை ... | 128 |
| தென் இந்திய ஜநங்கள் உத்பத்தி ... ... | 10 |
| தேசிக த்வேஷம் | 205, 250, 295 |
| நம் ஸபையின் வ்ருத்தி ... | 1 |
| நம் தேச நாகரிகத்திலுடைய உத்தராவஸ்தாவிசாரம் | 247 |
| பத்ராதிபர்க்கு ஒரு ஸ்வாமி எழுதின விஷயம் ... | 49 |
| பதார்த்த ஸாஸ்த்ர நிபுணர்கள் நம் ஸம்ப்ரதாயாநுஷ்டிகளை யிருத்தல் ... | 4 |

யாபிமானிகள் இது விஷயத்தில் ஆலஸ்யத்தில் மூழ்மென்று நம்புகின்றோம். ஸம்ப்ரதாயத்தின் க்ஷேமத்திற்கும் யோகத்திற்கும் இதைவிட அவர்கள் யோசிக்கத்தக்கது நமக்கு புலப்படவில்லை.

அபிமானிகளாகாமல், ஸர்வ வைதிக தர்ஶநங்கட்கும் ப்ரதிபந்திகளாய் நிற்பவர் நிற்கட்டும். அவர் விஷயத்தில் நாம் யாது சொல்லிப் பயன்படும்? சில வர்ஷங்கட்கு முன் திரிசிராப்பள்ளியில், ரோமன் காதலிக் வகுப்பினரான க்றிஸ்தவ பாதிரிகளால் அபஹ்ருத சித்தர்களான ப்ராஹ்மண ஜந்மத்தை யடைந்த சில சிறுவர்கள், தம்முடைய ஜந்மங்களுக்கு ஸந்நிஹிதங்களாய் நின்ற ப்ரயோஜநங்களை த்யாகம்செய்ய நிச்சயித்திருக்குமளவில், மஹா காருணிகர்களும், தேசாந்தர வித்யையிலும் ஸ்வதேச வித்யையிலும் பாரங்கதர்களுமான சில பரமோதாரர்கள், அச்சிறுவர்கள் விஷயமாக ஹிதத்தில் ப்ரவ்ருத்தர்களாய், ஸர்வத்ர அப்யுபகமார்ஹமாயும், நிரஸநார்ஹமாயுமுள்ள உபந்யாஸங்கள் செய்து, அவர்களைத் திருப்ப ப்ரயத்நித்தும், அந்த ப்ரயத்நம் நிரர்த்தகமானதை யாமறிவோம். பராகர்ஷிதமான மநஸ் விவேகஶரங்களுக்கு லக்ஷ்யமாகாது. சில பகவத் ஸந்நிதிகளில் உத்ஸவாதிகள் நடக்கும்போது, தர்ஶநாபிநிவேசத்தில் மூழ்கிப் பஜனைசெய்பவர்களில் சிலர், யாதேனுமோர் ஸாமக்ரீவசத்தாலோ, ஸாமக்ரீ நிரபேக்ஷமாகவோ, வைகுண்டாதி ஸாக்ஷாத்காரம் செய்வதுபோல் நடிப்பதைக் கண்டிருக்கின்றோம். அவ்வண்ணம் சில சிறுவர் பாதிரிமார் ப்ரியத்தில் ஈடுபட்டு, மதாந்தர ப்ரவேசத்தில் த்ருடசித்தராய் இருக்குமளவில், பூர்வ பந்துக்களால் அவ்வகை பரிணமிக்காமலிருக்கும்படி ப்ரார்த்திக்கப்படுவதும், அப்போது அவர்கள் ஓர் அபூர்வமான வெளிச்சத்தைக் காண்பதுபோல் ப்ரலபிக்கிறதும் அநுபவஸித்தமே. இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில், ஹித ப்ரவ்ருத்திகள் வ்ருதாவாகின்றதுபோல், ப்ரமையாலோ, தீர்க்க ஸஹவாஸங்களாலோ, ஐஹிகஸுகாபாஸங்களில் விருப்பத்தாலோ, வேறு துரூஹங்களாலோ, ஜந்மத்தால் கிடைத்த தாயதநத்தை



த்யாகம்செய்ய நிச்சயித்தவர்கள் விஷயத்திலும் ஹிதப்ரவ்ருத்தி ஸபலமாகாது.

ஆனாலும், அவர்க்குள் யுக்தாயுக்த விசாரஸாமர்த்யம் உள்ளவராய், அதைத் தமது அந்தராத்மா ஸந்தோஷிக்கும்படி விநியோகிக்க இசைந்தவர்களாய் சிலர் இருக்கமாட்டார்களோ? அவர்களை ஸந்மார்க்கத்தில் திருப்பும்படி, ஸம்ப்ரதாய ப்ரவசநங்கள் பத்ரிகைகள் மூலமாகவும், ஸங்கங்கள் மூலமாகவும், இதர ப்ரகாரமாகவும் ஆங்காங்கு நடத்தப்படவேண்டியதாகையால், நமது ஸபை தன் நிமித்தமாக ஸ்திரப்படுவதை மிகவும் வேண்டுகின்றோம். பால்யத்தில் பொருள்தேட உதவும் வித்யாப்யாஸமும், யௌவநத்தில் விஷயோந்முகதையும் வேண்டாமென்று தடுக்கின்றோமில்லை. யாவரும் ப்ரஹ்லாதனைப்போலவும், த்ருவனைப்போலவும், சுகரைப்போலவும் பால்யதசையில் பரிணமிக்க இயலாது. வார்த்தகத்தில் பாரலௌகிகயோசனையும், அதற்கு அநுகூலமான வ்ருத்தியும், இதற்குப் பொருந்திய ஸாமக்ரிகளைப் பால்யத்தில் தேடிவைக்காதவர்க்கு அமையமாட்டா. தத்காலம் ஸாமக்ரீ அபாவத்துடன் நிற்காமல், வாஸனையுடன் அதன் த்யாகமும் நியமேந நம் சிறுவர்க்கு ஏற்படுகின்றபடியால், கிந்நஹ்ருதயராய், நாம் இவ்வண்ணம் முறையிடுகின்றோம். நம் ஸபையானது வ்ருத்தியடைந்து, அதன் ப்ரயத்நங்கள் பலித்தனவாகில், பகு ஜீவன்கள் ஶ்ரேயஸ்ஸை அடையலாம். காலதேச வைகுண்யங்களால், 'ஸூவசஸ் வஸந்தாவ்ருத்தி:' என்பதை அநுஷ்டாநத்துக்குக் கொண்டு வருகின்றவர்களும், தமக்கு அவ்வண்ணம் நடக்க நேர்ந்ததேயென்று ஶோகிப்பதைவிட்டு, ஜீவநார்த்தம் பற்றிய பிழைப்பைப் புருஷார்த்தமாகக் கொள்ளுதல் கூடாது. பாஹ்யவிஷய ப்ராவண்யமே யுடையார்க்கு மோக்ஷமில்லையென்று ப்ரபாவ ரக்ஷாதிகாரத்தில் தேசிகன் ஸாதித்தருளினார். ஸ்வலாபஸந்துஷ்டி, ஸாதுத்வம், ஸர்வபூதங்களிடமும் ஸுஹ்ருத்வம், அஹங்காரமில்லாமை, ஶாந்தி - இவை பகவான் உகந்தருளிய ப்ராஹ்மண குணங்கள். ஜந்மத்தால் ஸித்திக்கவேண்டிய இந்தக் குணங்களை,

போதும் இல்லை. பகவத் ப்ராப்தியின் பொருட்டு ஶாஸ்த்ரங் காட்டின உபாயபூர்த்தியின்றி ஒரு ஜீவனுக்கு ஸம்ஸார நிவ்ருத்தியில்லை. ஈஶ்வரன் ஸர்வத்ர ஸமன், வைஷம்ய நைர்க்ருண்யம் இல்லாதவன். நமது லோகம்போன்றும், அதைக் காட்டிலும் வேறுபட்டும், பல லோகங்கள் உள. ஜீவன்களுக்குச் சரீரப்ராப்தி நிமித்தமாகத்தான் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ஏற்படுகின்றது. ஸ்ருஷ்டியும் ப்ரளயமும் ஸார்வத்ரிகமாகக் கால விசேஷங்களிலும், அவாந்தரமாக அதிக காலங்களிலும் ஸம்பவிக்கின்றன. சித்தும் அசித்தும் ஈஶ்வர சக்திகளாய் எப்போதும் அவனைவிட்டுப் பிரியாமல் இருக்கின்றன. கர்மாநுகுணமாகச் சரீரங்களையடையும் க்ஷேத்ரஜ்ஞனெனும் ஜீவன்கள் ஈஶ்வரனுடைய க்ஷேத்ரஜ்ஞ ஶக்தியென வ்யவஹரிக்கப் படுகின்றனர்.

‘தயா திரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா ।
ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந லக்ஷ்யதே ॥
அப்ராணவத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோதிகா ।
ஸரீஸ்ருபேஷு தேப்யோப்யதிஶக்த்யா பதத்ரிஷு ॥
பதத்ரிப்யோ ம்ருகாஸ்தேப்யஸ் தச்சக்த்யா பஶவோதிகா: ।
பஶுப்யோ மநுஜாஶ்சாதி ஶக்த்யா பும்ஸ: ப்ரபாவிதா: ॥
தேப்யோபி நாககந்தர்வ யக்ஷாத்யா தேவதா ந்ருப ।
ஶக்ர: ஸமஸ்ததேவேப்யஸ் ததஶ்சாதி ப்ரஜாபதி: ॥
ஹிரண்யகர்போபி தத: பும்ஸ: ஶக்த்யுபலக்ஷித: ’ ।

[க்ஷேத்ரஜ்ஞை எனப்பட்ட ஶக்தியானது அந்தக் கர்மஶக்தியால் மறைக்கப்பட்டபடியால், எல்லா ப்ராணிகளிடத்தும் தாரதம்யத்துடன் காணப்படுகின்றது; ப்ராணன் அற்றவைகளில் அந்த க்ஷேத்ரஜ்ஞ ஶக்தியானது ஸ்வல்பமாகவும், மரம் முதலான ஸ்தாவரங்களில் அதனிலும் அதிகமாகவும், ஊர்கின்ற ஜந்துக்களில் அதைக் காட்டிலும் மிகுதியாகவும், பக்ஷிகளில் இன்னும் விசேஷித்தும் ப்ரகாசிக்கிறது; பக்ஷிகளைக்காட்டிலும் ம்ருகங்களும், ம்ருகங்களைக் காட்டிலும் பசுக்களும் அந்த ஶக்தியின் ப்ரகாஶத்தால் அதிகங்களாகின்றன; பசுக்களைக்காட்டிலும் மநுஷ்யர்கள் பரமாத்மாவின் ஶக்தியதிஶயத்தால் உத்க்ருஷ்டராகச் செய்யப்பட்டார்கள். அவர்களைக்காட்டிலும், நாகர், கந்தர்வர், யக்ஷாதிகள், தேவர்கள் மேற்பட்டவர். எல்லாத் தேவர்களிலும் இந்த்ரன் அதிஶயித்தவன். அவனைக்காட்டிலும் ப்ரஜாபதிகளும், அவரைக்காட்டிலும் ஹிரண்யகர்ப்பனும் பரமபுருஷனுடைய க்ஷேத்ரஜ்ஞ ஶக்தியால் ப்ரகாஶிக்கின்றவராகக் காணப்படுகின்றனர்.] என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் விவரிக்கப்பட்ட வண்ணம், ஸர்வஜீவன்களிலே ஸமாநாகாரர்களாயிருந்தும், கர்மமடியாகச் சரீரபேதங்களையடைந்து, அச்சரீரங்களின் நிர்மாணாநுரூபமாகத் தம்முடைய ஜ்ஞாநத்தின் ப்ரகாஶ விஷயத்தில் ஸங்கோச விகாஸாதிகளைக் காட்டுகின்றனர்; ‘ஜ்ஞாநஸ்வரூபஷ:’ எனும்படியே, ப்ரக்ருதியின் பரிணாமத்தால் (evolution) சரீராதிகள் உண்டாகின்றனவெனும் ப்ரமாணம், சரீராதிகளும் ஸ்தூலஸூக்ஷ்ம (gross and subtle) தாரதம்யங்களைப் பரிணாம க்ரமத்தால் (evolution) அடைகின்றனவெனும் நிஷ்கர்ஷையை ஆதரிக்கும். பரிணாமம் ஶரீரங்களை ஆஶ்ரயித்ததேயன்றி, அவற்றில் நிற்கும் ஜீவன்களை ஆஶ்ரயிக்கவில்லை. ஜீவன்களுடைய தர்மபூத ஜ்ஞாநம் ஶரீராநுகுணமாக ஸ்வப்ரகாஶத்தில் ஸங்கோச விகாஸத்தை அடைகின்றது.

இப்படிப்பட்ட உண்மைகள் நமக்கு ஶப்தப்ரமாணத்தாலும் தத்வதர்சிகளுடைய ஸாக்ஷாத்காரத்தாலும் கிடைத்திருக்கின்றன. பதார்த்த ஶாஸ்த்ரங்கள் இவ்வுண்மைகளை மறுக்கமாட்டா; ஸந்தோஷத்துடன் ஒப்புக்கொள்ளும். மதாந்தரங்கள் உண்டாவதற்கு முன்னே நம் பூர்வீகர் இவ்வுண்மைகளையறிந்துகொண்டார்கள். மதாந்தரங்கள் தத்வங்களில் நிலையை இன்னும் அறியவில்லை. பதார்த்த ஶாஸ்த்ரங்களில் ஶ்ரமப்பட்ட புத்தியானது நம்முடைய ப்ராசீந தர்ஶநங்கட்கு ஸஹாயமாய் நிற்கின்றதென்பதைப் பாஶ்சாத்ய வித்யாவாஸனையில் ஆழ்ந்தவர் யோசிக்க வேண்டும்.

* * * * * *

**சென்னை கலா ஸங்க உபந்யாஸங்கள்.**

சென்னை கலாஸங்கத்தார் தமது ஸங்கத்தில் தேறிய வித்யார்த்திகளுக்கு விசேஷஜ்ஞாந மளிப்பதற்கென்று, சில நவீந ஶாஸ்த்ராதிகாரிகளெனப் பெயர் கொண்டவர்களை வித்யார்த்திகளுடைய ஜ்ஞாந விஸ்தார நிமித்தமாக உபந்யாஸம் செய்வதற்கென்று நியமித்தார்கள். இந்த ப்ரயத்நம் ஸபலமாகவில்லை யென்றும், வ்ருதாவாக அர்த்த வ்யயத்தில் விஶ்ரமிக்கின்ற தென்றும், நம் நாட்டிற்குத் தக்காலம் வேண்டியது அர்த்தார்ஜந ஸௌகர்யங்களுக்கு இயன்ற பதார்த்த ஶாஸ்த்ர பரிசயமென்றும், கலாஸங்கத்தார் வ்ருத்யுபாயமாகாதவற்றில் ப்ரமப்படுவது ஶோசிக்கத்தக்க தென்றும் ஹிந்து பத்ரிகைக்கு எழுதுவார்கள் உண்டு.

நம்முடைய சக்ரவர்த்தி இந்தியாவுக்கு வந்தபோது, கல்கத்தா கலாஸங்கத்தார் முன்பாக நம்தேசத்தின் ப்ராசீந வித்யையை நாம் காப்பாற்றக் கடமைப்பட்டிருப்பதாகவும், அதே காலத்தில், பாஶ்சாத்ய பதார்த்த ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தையும் நமக்குள் விஸ்தரிப்பிக்க வேண்டுமென்றும் சொன்னார். இவை, நம் நாட்டினர் விஷயத்தில் ஸஹ்ருதயர்களா யிருப்பவர் சொல்லக்கூடிய சொற்கள். சென்னை கலாஸங்கத்தார் இச்சொற்களை ஆதரிக்கின்றவராகத் தோன்றவில்லை.

தேசவித்யை தேசஸ்தரால் ரக்ஷிக்கப்படவேண்டும். தேசாந்தரஸ்தர் ஸஹாயமின்றி அது வ்ருத்தியடைந்தது. தேசாந்தரஸ்தரால் அது ரக்ஷிக்கப்படவேண்டுமென்று நினைத்து, ஸம்ஸ்க்ருத பாஷைக்கும், த்ராவிட பாஷைக்கும், ப்ரதாந உபாத்யாயர்களை விதேசங்களினின்று நியமேந வரவழைப்பது யுக்தமெனத் தோன்றவில்லை.

* * * * * *



**சரீர ராஶிகளின் க்ரமபரிணாமம்.**

சரித்ரமுள்ள வரையில் விஷயபர்யாலோசனையில் ஸமர்த்தர்கள் ஒரு ஜந்துவினுடைய சரீரம் மற்றொன்றின் சரீரமாகப் பரிணமிக்கக் கண்டாரில்லை. சரித்ர காலங்கட்கு முன்னும் ஏற்பட்ட க்ரந்தங்கள் உள. அவற்றிலும் ஶரீரங்களின் பரிணாமக்ரமம் சிந்திக்கப்பட்டதில்லை. சில ஆதுநிக பாஶ்சாத்ய வித்வான்கள் ஜீவ ஶரீரங்களுடைய க்ரமபரிணாமத்தை(evolution) ஊஹிக்கின்றனர். அந்த ஊஹத்தை விவேகிகள் பலர் ஒப்புக்கொள்கின்றார். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியில் பரிணாமவாதத்தை ஆதரிக்கின்ற நாமும் அவ்வூஹத்தை ஆதரிக்கப்பொருந்தும்.

ஆனாலும் ஜீவராசிகளுடைய சரீரபரிணாமம் (evolution of species) தத்கால ஊஹப்படியே வ்ருத்தியடைந்தனவோ என்பதில் நிச்சய ஜ்ஞாநம் துர்லபம் என்று தோன்றுகின்றது. அந்த விஷயம் எப்படியிருந்தபோதிலும், மநுஷ்யன் லோகத்தில் முதலில் இவ்வண்ணமாகத்தான் உண்டானான் என்பதும், அவன் முதலில் அபிவ்யக்தியை அடைந்தபோது, அவனது சரீரத்துக்கு அவ்யவஹித காரணமாய் நின்றதென நினைக்கப்பட்ட வாநர விசேஷங்களுடைய ஜ்ஞாநத்துக்கு ஸந்நிஹிதமான ஜ்ஞாநஸாமக்ரியுடன் ப்ரகாசித்தான் என்பதும், ஸித்தாந்தமெனக் கொள்ளக்கூடுமென்பதைப் புத்திமான்கள் யோசிக்கத்தக்கவர். இந்த க்ரமம் (evolution species) ப்ராயிகமென்று யோசித்தாலும், லோகஹிதத்தில் உத்யுக்தனான ஈஶ்வரன் அந்த ஹிதத்தின் பொருட்டே விசேஷஜ்ஞாந ஸம்பந்நரான புருஷரை, பரிணாமக்ரமத்தை க்ஷிப்ரமாக நிறைவேற்றியோ, அல்லது தன்னுடைய ஸத்யஸங்கல்பத்தாலோ ஸ்ருஷ்டித்திருக்கக்கூடாதோ? விஷய பர்யாலோசனையில் ஆழ்ந்தவர்கள் விஷயிலை நினைக்கின்றாரில்லை; ஈஶ்வராஸ்தித்வத்தையும் சிந்தியாமல் விடுகின்றனர்.

* * * * * *

**தென் இந்திய ஜநங்கள் உத்பத்தி.**

இந்திய ஜநங்களின் உத்பத்தியைப்பற்றி எல். கே. அநந்த க்ருஷ்ணய்யர் என்பவர் உபந்யஸித்ததில், இந்தப் பூகோளத்தின் பூர்வாவஸ்தைகளைப்பற்றித் தர்கிக்கின்றவர்களுடைய யோசனைகளை வெளியிட்டனர். அவற்றால், இந்தியாவின் தக்ஷிண பாகம் உத்தரபாகத்தினின்று ஒரு கடலால் முன் பிரிக்கப்பட்டிருந்ததாகவும், தக்ஷிண பாகமானது ஆஸ்த்ரேலியா கண்டம் முதல் ஆபிரிக்கா கண்டம்வரையில் பரவியிருந்ததும், லுப்தமாய்ப் போய்விட்டதுமான ஒரு கண்டத்தில் சேர்ந்ததென்றும், தென்னிந்தியா, ஸிம்ஹலத்தீவு முதலான ப்ரதேசங்களின் ஆதி ஜநங்களும், ஆபிரிக்கா ஜநங்களும், ஆஸ்த்ரேலியா ஜநங்களும், ஆஸ்த்ரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் மத்யே இருக்கின்ற த்வீபங்களின் ஜநங்களும் ஒரே ஜாதியாய் இருந்து, லுப்தமான கண்டத்தில் வஸித்தாரென்றும் ஊஹிக்கப்படுகின்றது. இவ்வூஹம் நாம் ஸந்தோஷிக்கத்தக்கது. இன்னும் அண்டமான் நிகோபர் திட்டுகளின் பூர்வஜநங்கட்கும் ஆபிரிக்கா ஜநங்கட்கும் ஜாதி ஸாமாந்யம் சொல்வாரும் உளர்.

ஸ்ரீமத்ராமாயணத்தையும் அதன் உத்தர காண்டத்தையும் நன்றாய்ப் படித்தால், வால்மீகியால் வர்ணிக்கப்பட்ட ராக்ஷஸருக்கும், ஆபிரிக்கா மலேயா ஜநங்கட்கும் ஜாதிஸாமாந்யம் சொல்லக்கூடும். லங்கையில் முன்வஸித்த ஸுமாலி முதலான ராக்ஷஸர்கள் உபேந்த்ரனால் துரத்தப்பட்டு, அதற்கும் தென்புறத்திலிருந்த பாதாளம் போய்ச்சேர்ந்தார்கள் என்று, உத்தர ஸ்ரீராமாயணத்தில், ‘ த்யக்த்வா லங்காம் கதா வஸ்தும் பாதாளம் ஸஹபத்நிபி: ’ இத்யாதி வாக்யங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு, ஹிமவத் பர்வதவாஸியான யக்ஷராஜன் லங்கையில் வந்து வஸித்தான். ஸுமாலியின் துஹித்ரனான ராவணன் குபேரனை ஜயித்து லங்கையை மீட்டுக்கொண்டான். அவனுடைய கூட்டப்பட்ட ராக்ஷஸர்கள் லுப்தமான கண்ட ஜநங்களாயிருக்க வேண்டும் பங்காள தேசத்துக்குத் தென்புறத்தில் தத்காலம் ஸமுத்ரமாயிருக்கும் ப்ரதேசத்திலும் பாதாளமிருந்ததாகப் புராணங்கள் சொல்லும். நிகோபர்முதலான தீவுகள் அதன் சேஷமென்று அவ்விடம் வஸிக்கும் ஜநங்களுடைய ஆகாரத்தால் ஊஹிக்கக்கூடும். ராக்ஷஸரல்லாத சில ஜாதியார் தென்னிந்தியாவின் மலைப்ரதேசங்களில் வஸித்தனர் என்றும் ஜாத்யுத்பத்தி சாஸ்த்ர பரிசயமுடையோர் சொல்வதால், ஸ்ரீமத் ராமாயணத்தின் பூர்வ வ்ருத்



தாந்தங்கள் அபூர்வமான தத்கால சாஸ்த்ர யோசனைகட்கு ஸஹாயமாயும் நிற்கின்றன. மிகவும் அவஸரப்பட்டுப் பரித்யாகம் செய்யப்படும் பூர்வகதைகளை மேலே விவரிக்கப்பட்ட சாஸ்த்ர நிர்ணயங்களைக்கொண்டு பர்யாலோசித்தால், அவற்றின் ஸமுதாய நிர்ணயங்களை யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடும். நாம் பலமுறைகாட்டிய வண்ணம், ஸம்ஸ்க்ருத பாஷாக்ரந்தங்கள் யாவத்தையும் போதித்தாலும், ராமாயண பாரத புராணாதிகள் புத்தன் காலத்துக்கு முற்பட்டன வென்றும் தோன்றும்.

*           *           *           *           *           *

**கண்ணப்பா பண்ணிய யோசனை.**

கண்ணப்பா என்றொருவர் சென்னை கலாசாலையில் ஓர் உதவி வாத்யாராம். ஒரு வருஷகாலத்தில் நம் ராஜதானியில் எழுதப்பட்ட புஸ்தகங்களைப் பற்றி யோசித்து, ஜனவரி மாஸம் 28-ம் தேதி ஹிந்து பத்ரிகைக்கு அவர் எழுதுகிறார். முடிவில் ப்ரிடிஷ் ராஜ்யத்தின்கீழ் தென்னிந்தியா மாறுதல் அடைகின்றதென்றும், அது பழையஜாதிகளையும் ஆசாரங்களையும் தொலைத்து விடுகிறதென்றும், சட்டத்தாலும் ஒழுங்காலும் புதிய ஸர்வே கற்களை நடுகின்றதென்றும், அது ஜாதியால் உண்டாகும் த்வேஷங்களை நீக்குகின்றதென்றும், ஒரு புதிய குடியரசை உண்டாக்குகின்றதென்றும், நம் நாட்டிற்கும் நல்ல காலம் வருவதை ஸூசிப்பிக்கின்றதென்றும் எழுதுகின்றார். நமக்குத் தெரிந்தவரையில் 30-ஸம்வத்ஸரத்தின் முன்னால் நம்தேசத்தில ஜாதிப்ரயுக்த த்வேஷம் இல்லை. எல்லா ஜாதியர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். சிலர் தாம் கொண்ட உத்தேசங்களை ஸுலபமாக அடைவதற்காக அந்த ஜாதி க்ருதமான த்வேஷத்தை ஸ்ருஷ்டித்தார்கள். அதன் பரிணாம பலங்களாக ஸம்பவித்த புருஷர்களில் கண்ணப்பா ஒருவர். அவர்கள் தாங்களின்னாரென்று அறியத்தகாத ஒருமாறுபாட்டை அடையலாம். மஹம்மதியர் மஹம்மதியராகவே நிற்பர். கிறிஸ்தவர் கிறிஸ்தவராகவே நிற்பர். மற்றோர் இவ்விரண்டு வகுப்புகளில் ஒன்றில் சேரலாம். இல்லாவிட்டால் அநாமதேயர்களாய் நிற்கலாம். வைதிக ஸம்ப்ரதாயஸ்தர், தொகையில் குறைந்தாலும் வேறாகத்தான் நிற்பர். சட்டமும் ராஜாங்கத்தார் பலமும் இவர்க்குள் கலகத்தை ஒழிக்கலாம். மஹம்மதியர் தம் மதத்தை விடாமலும், கிறிஸ்தவர் தம் மதத்தை விடாமலும், ஹிந்துக்கள் தம் மதத்தை விடாமலும், குடியரசு கிடைக்கக் கூடுமானால், ஹிந்துக்கள் மாத்ரம் ஸ்வஜந்ம விரோதிகளாவானேன்? அவர்கள் த்ருணத்தை இச்சித்து மற்றதைத் துறந்தார். ஏனையோர் அவ்வண்ணம் செய்தாரில்லை. குடியரசு ஏற்பட்டால் ஹிந்து பதிதர்க்காக மாத்ரம் அது ஏற்படமாட்டாது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# முமுக்ஷுவுக்கு குரு ஸேவையின் ஆவஶ்யகத்வம்.*

[illegible]

[illegible]

[illegible]

இந்த மஹாஜந கோஷ்டியில் அடியேன் விஜ்ஞாபநம் பண்ணப் போகிற விஷயங்களில் அசதுரங்களான ஶப்தங்களும் யுக்திகளும் உபபாதநங்களு மிருந்தாலும் ஹம்ஸங்களுடைய க்ஷீர நீர விவேசந ந்யாயத்தினால் ஸாரக்ராஹிகளான பெரியோர்கள் ஸாநுக்ரஹர்களாய் க்ஷமித்து அடியேன் விஜ்ஞாபநம் செய்யு

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் ஸ்ரீ திருவெவ்வுளூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தில், ஸ்ரீ. உ.வே. கபிஸ்தலம் ரங்கநாதாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தில் ஒரு பாகம்.



மெல்லாவற்றையும் ஶ்ருதியுக கோசரங்களாகச் செய்துகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

முமுக்ஷுக்களால் ஆசைப்படத்தக்கதான புருஷார்த்தம் எது? என்னில்:—இஹத்தில் ஶாஸ்த்ர சோதிதமான ஓர் உபாயாநுஷ்டாநத்தினால் ஸர்வ கர்ம பந்தங்களையும் விட்டு, அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதம் சென்று, அவ்விடத்தில் 'ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய' இத்யாதிகளிற் சொல்லியிருக்கிறபடி தீப்யமானனை ஸர்வ ஸ்வாமியாகிற ஸ்ரீயஃபதியின் திவ்ய குண விக்ரஹ சேஷ்டித விபூதிகளாகிற ஸர்வ ப்ரகாரங்களுடன் அந்த ஸர்வ ஸ்வாமியை அநுபவிப்பதனால் உண்டாகும் மஹாநந்தமே. இது தான் மோக்ஷ ஸுகமென்னப்படும். தாஸனுக்கு ஸ்வாமிஸேவை ஸ்வரூப ப்ராப்த மென்று லோகத்திலும் ஸித்தமா யிருக்கிற படியாலும், இங்கும்

"பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்"

"தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:"

இத்யாத்யநேக ப்ரமாணங்களில் 'ஸ்ரீயஃபதி ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வாமி' என்றும், 'ஆத்மாக்கள் அவனுக்கு தாஸர்கள்' என்றும், ஶ்ருதிகள் உத்கோஷிக்கிறபடியாலும், இந்த மோக்ஷ ஸுகமானது இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுசிதமன்று. இந்த ஸுகம்,

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்"

இத்யாதிகளிலே அளவில்லாதபடி அவாங்மநஸ கோசரமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

"ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே - ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே"

இத்யாதி ஶ்ருதிகளிலும்,

"[illegible]"

" [illegible]
[illegible] "

இத்யாதி ஸ்ம்ருதிகளிலும் இந்த ஸுகம் நித்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

" [illegible] "

என்று ஸூத்ரகாரரும் அருளிச்செய்திருக்கின்றார். ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸர்வஜகத் காரணத்வாதி விஶிஷ்டனான ஈஶ்வரன் ஒருவன் இருக்கிறான் என்று ஶாஸ்த்ர ரூபஶப்த ப்ரமாணத்தினால் எப்படி அறியப்படுகிறதோ, அப்படி அவ்வீஶ்வரனை ஸர்வகர்மபந்த விநிர்மோக பூர்வகமாய் அடைந்தவர்களுக்குப் புநராவ்ருத்தி இல்லை யென்றும, அந்த ஶப்த ப்ரமாணத்தினாலேயே அறியப்படுகின்றது என்பது இந்த ஸூத்ரார்த்தம். ஏவம் விதமான மோக்ஷஸுக ப்ராப்திக்கு ப்ரதமமான உபாயம் ஸதாசார்ய ஸம்பந்த மென்பதை ஶாஸ்த்ர ப்ராமாண்யத்தை அவலம்பித்தே உபபாதநம் செய்யத்துணிகின்றேன்.

" [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] " என்று முண்டகோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எவனொருவன் ஸாங்க வேதாத்யயநம்செய்து மீமாம்ஸா ந்யாயங்களினால் 'யாகாதிகர்ம பலங்களான ஸ்வர்க்காதிகள் அல்பங்கள் அஸ்திரங்கள்' என்றும், 'அநல்பமாயும் ஸ்திரமாயுமுள்ள ப்ரஹ்மாநுபவ பலம் கர்ம ஸாத்யமன்று' என்றும் ஒரு நிஶ்சயத்தை அடைந்து, 'அந்த ப்ரஹ்மாநுபவத்தை எப்படி ஸாதித்துக்கொள்ளலாம்?' என்று நிர்வேதப்படுகிறானோ, அவன், ப்ரஹ்மாநுபவோபாய விஜ்ஞாநார்த்தமாக, வேதாந்த ஶாஸ்த்ரத்தில் ஜ்ஞாந வைஶத்யத்தையும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காராநுகுணமான குண பௌஷ்கல்யத்தையும் உடையனை ஸதாசார்யனையே யத்கிஞ்சி துபஹார ஹஸ்தனாய் விநய



பூர்வகமாக அடைய வேண்டும். அந்த ஆசார்யனும், ஸச்சிஷ்ய னாக வந்த இவனுக்கு ப்ரஹ்ம வித்யையை யதாவத்தாக ஏகாந்தத்திலே உபதேஶிக்க வேண்டும் என்பது இந்த ஶ்ருதியின் அர்த்தம். இந்த ஶ்ருதியில் 'ஆசார்யனையே அடையவேண்டும்' என்பதிலுள்ள அவதாரணத்தினால் விவக்ஷிதமான அர்த்தத்தை மஹர்ஷிகள் பின்வருமாறு விவரித்திருக்கிறார்கள்:—

" [illegible]
[illegible] "

ஸதாசார்யாநுக்ரஹமில்லாவிட்டால், உத்க்ருஷ்ட குலத்தில் ஜந்மம் அடைவதனாலேயும், ஷடங்கவேதாத்யயநம் செய்வதனாலேயும், யாகாதி கர்மங்களை அநுஷ்டிப்பதனாலேயும், ப்ரஹ்மசர்யம் முதலிய ஆஶ்ரமங்களில் வர்த்திப்பதனாலேயும், ஸ்வதந்த்ரமாக அநுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்தியினாலேயும் ப்ரஹ்ம ப்ராப்தி லபிக்காது என்பது இந்த ஶ்லோகத்தின் அர்த்தம். [இந்த ஶ்லோகத்தில் 'த்யாக' என்னும் ஶப்தத்திற்கு

" [illegible]
[illegible] "

என்று ஸ்ரீரஹஸ்ய த்ரய ஸாரத்தில் பரிகர விபாகாதிகாரத்தில் ஆசார்யோதாஹ்ருத ப்ரமாணத்தினால் ப்ரபத்தி பரத்வம் ஸித்தம். ப்ரஸித்தி இல்லாவிட்டால், இந்த 'த்யாக' என்னும் ஶப்தம் ப்ராசுர்யத்தினால் தாந பரமென்றும் சொல்லலாம்.]

தவிரவும்,

" [illegible]
[illegible] "

இத்யாதிகளிலும் முமுக்ஷுவுக்கு ஆசார்ய ஸம்பந்தம் ஆவஶ்யக மென்று நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள். ம்ருக பக்ஷி முதலியவைகளின் ஹிம்ஸா ரூபங்களான அதிக்ரூர பாபங்களை யாவத்தேஹம் செய்து கொண்டிருந்த க்ஷத்ரபந்து என்னும் பெயருடைய ஒருவனும், மஹா புண்யக்ருத்தான புண்டரீக ரென்பவரும் ஆசார்ய ஸம்பந்தத்தினாலேயே முக்தர்களானபடியால், மோக்ஷார்த்தியானவன் ஆசார்யனையே ஆஶ்ரயிக்கவேண்டுமென்பது இந்த ஶ்லோகத்தின்

அர்த்தம். ப்ராணிஹிம்ஸாஜீவியான க்ஷத்ரபந்து என்னும் ஒருவன், ஒருநாள் அரண்யத்தில் வழிதப்பி வந்த ஒரு ப்ராஹ்மண ஶ்ரேஷ்டனுக்குப் பத்மம் நிறைந்த ஒரு ஸரஸ்ஸைக்காட்டி ஶ்ரமம் தீரும்படி பண்ணினபடியால், ஸாநுக்ரஹனை அந்த ப்ராஹ்மணன் க்ரூரமான ப்ராணிஹிம்ஸா வ்ருத்தியை விடச்சொல்லியும், விடமாட்டேனென்று சொல்ல, இவனுடைய தக்ஷிண ஶ்ரோத்ரத்தில் 'கோவிந்த' என்னும் மூன்று அக்ஷரங்களை உபதேஶித்து

"𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌾 𑌪𑍍𑌰𑌸𑍍𑌵𑌪𑌤𑌾 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌨 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌾 ।
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤𑌿 𑌸𑌦𑌾 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌤𑍃𑌟𑍍𑌪𑍍𑌰𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑍇𑌷𑍁 𑌚 ॥"

என்று 'இதை எப்பொழுதும் சொல்லிக்கொண்டு உனது வ்ருத்தியைச் செய்யக்கடவாய்' என்று சொல்லிப்போன பின்பு, இந்த க்ஷத்ரபந்துவும், அந்த ப்ராஹ்மண ஶ்ரேஷ்டன் சொன்னபடியே யாவஜ்ஜீவம் கோவிந்த நாமோச்சாரண பூர்வகமாகவே தனது வ்ருத்தியைச் செய்துகொண்டு ஶரீர வியோகாநந்தரம் அந்தக் கோவிந்த நாமோச்சாரண மாஹாத்ம்யத்தாலே ப்ராஹ்மண ஜந்மத்தை அடைந்து, பூர்வஜாதி ஸ்மரணத்தினால் மிகவும் கிந்நனாய் ஸ்தோத்ராதி ரூப பக்தியினால் பகவானை ஸாக்ஷாத்கரித்து அந்த ஜந்மத்திலே மோக்ஷத்தை அடைந்தானென்று விஷ்ணு தர்மத்திலே க்ஷத்ர பந்துவின் உபாக்யாநம் சொல்லப்பட்டிருக்கின்றது. யாகதாநாத்யநேக புண்யகர்மங்களையே செய்துகொண்டிருந்த புண்டரீக ரென்பவர் ஸ்ரீநாரத பகவானால் உபதேஶிக்கப்பட்ட ப்ரஹ்ம வித்யையை அநுஷ்டித்து முக்தரானாரென்று மஹாபாரதத்திலே மோக்ஷதர்மத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி இந்த ஶ்லோகத்திற் சொல்லியிருக்கிறபடியால், ஸதாசார்யாநுக்ரஹம் பிறந்தால் பூர்வாநுஷ்டிதங்களான மஹா பாதகங்களும் மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகங்களாகமாட்டா. அந்த அநுக்ரஹமில்லாமற் போனால் புண்யகர்மங்களும் மோக்ஷத்திற்கு ஸாதகங்களாகா வென்று ஸித்தமாயிற்று.

இப்படியானால் மோக்ஷார்த்திக்குப் புண்யகர்ம ப்ரவ்ருத்தி அநாவஶ்யகமாக ப்ரஸங்கியாதோ என்று ஶங்கிக்கலாம்.

"𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿,
𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾𑌽𑌨𑌾𑌶𑌕𑍇𑌨"



இத்யாதி ஶ்ருதிகள், யஜ்ஞதாநாதி புண்யகர்மம் ப்ரஹ்ம வித்யையில் ப்ரவ்ருத்தியை உண்டாக்குமென்று சொல்லுகிறபடியால், புண்ய கர்ம ப்ரவ்ருத்தி அநாவஶ்யமென்று சொல்லக்கூடாது.

"𑌕𑌷𑌾𑌯𑍇 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌪𑌕𑍍𑌵𑍇 𑌤𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇"

இத்யாதிகளில் மஹர்ஷிகளும் இப்படியே சொன்னார்கள். ப்ரஹ்ம ஜ்ஞாந விரோதிகளான ப்ராசீந பாபங்கள் புண்ய கர்மங்களினால் நஷ்டங்களான பின்பு ப்ரஹ்மஜ்ஞாநம் ப்ரதிஷ்டிதமாகு மென்பது இந்த ஶ்லோகார்த்தம். ஆகையால், நம்முடைய ஸித்தாந்தத்தில் ஜ்ஞாநம் அங்கி யென்றும், கர்மம் அங்கமென்றும் சொல்லப்படுகின்றது.

'புத்தி மாந்த்யத்தை யுடையவர்களுக்கு ப்ரஹ்மஜ்ஞாந ஸம்பாதநார்த்தமாக ஆசார்ய ஸமாஶ்ரயணம் அவஶ்யமாகக் கூடும். ஶாஸ்த்ரங்களில் பண்டிதர்களாக இருக்கிறவர்களுக்கும் ஆசார்யோபதேஶம் வேண்டுமோ? அது இல்லாமலேயே புத்தி ஸௌக்ஷ்ம்யத்தினால் தாமே புஸ்தகாவலோகநாதிகளைச் செய்து ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொள்ள ஶக்தராயிருக்கிறபடியால், பண்டிதர்களுக்கு ஆசார்யோபதேஶம் அவஶ்யமில்லை' என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். இதற்கு,

"[illegible]
... 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 ... ॥"

இத்யாதிகளினால் மஹர்ஷிகளே உத்தரம் சொல்லியிருக்கிறார்கள். மந்த்ரமும் மந்த்ரார்த்தமும், யத்ருச்சையாய் ஶ்ருதமானாலும், சுவர் மறைவில் நின்று ஶ்ருதமானாலும், ஆக்ஷேப வ்யாஜத்தினால் ஶ்ருதமானாலும், புஸ்தகத்தில் த்ருஷ்டமானாலும், வ்யர்த்தமாகப் போவதன்றிக்கே அநிஷ்ட பலத்தையும் கொடுக்கும் என்பது இந்த ஶ்லோகத்தின் அர்த்தம். யத்ருச்சையாய் ஶ்ரவணமாவது— இதர கார்யார்த்தமாக ப்ரவ்ருத்திக்கும்பொழுது தைவாத் ப்ராப்தமாகும் ஶ்ரவணமே.

"𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍇𑌦"

"𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌸𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌤𑍍"

"யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ ।
தஸ்யைதே கதிதா ஹ்யர்த்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந: ॥"

என்கிற ஶ்ருதிகளிலும் 'ஆசார்யோபாஸநம் பண்ணுகிறவனே ஆசார்ய ப்ரஹ்மஸ்வரூபத்தை யதாவத்தாக அறியத்தக்கவன். ஆசார்யனிடத்தில் நின்றுமே விதிதமான ப்ரஹ்ம வித்யை ஸாதுவாக இருக்கும். பகவானிடத்தில் போல ஆசார்யனிடத்திலும் பக்தி பண்ணுகிறவனுக்கே இந்த அர்த்தங்கள் விஶதங்களாகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஆசார்யவாந் புருஷோ வேத' என்னுமிடத்தில் 'குருமேவ' ப்ரத்யயத்தினால் ஸம்யக் ஆசார்யோபாஸநம் விவக்ஷிதமென்று அதிகரண சிந்தாமணியில் வ்யக்தமாக இருக்கின்றது.

"தேவமிவாசார்யமுபாஸீத"

என்று ஆபஸ்தம்பரும் அருளிச் செய்தாரிறே.

உபாஸநமாவது—ப்ரீதி பூர்வகமான த்யாநம்.

"ப்ரஶாந்தசித்தாய ஶமாந்விதாய"

இத்யாதிகளில் ஶாஸ்த்ரார்த்த ஶ்ரவணத்தில் ஶ்ரத்தையையும் ஶாஸ்த்ரோக்தங்களான குணங்களையு முடையவனான ஸச்சிஷ்யனுக்கு மோக்ஷ ப்ராப்த்யுபாயமான ப்ரஹ்ம வித்யையை ஆசார்யன் உபதேஶிக்கவேண்டுமென்று மஹர்ஷிகள் நியமித்தார்கள்.

ஶாஸ்த்ரோக்தங்களான ஶிஷ்ய குணங்கள் எவையென்றால் - ஆசார்யோபதிஷ்டங்களான அர்த்தங்களில் ப்ராமாணிகத்வ புத்தியும் கௌதம மஹர்ஷியால் சொல்லப்பட்டிருக்கும் எட்டு ஆத்ம குணங்களுமே.

"அதாஷ்டாவாத்மகுணா: — தயா ஸர்வபூதேஷு, க்ஷாந்தி:, அநஸூயா, ஶௌசம், அநாயாஸ:, மங்கலம், அகார்பண்யம், அஸ்ப்ருஹா இதி"

என்பது கௌதம ஸூத்ரம். ஸர்வ பூதங்களினிடத்தும் தயை, க்ஷமை, அநஸூயை, ஶௌசம், அநாயாஸம், மங்களம், அகார்பண்யம், அஸ்ப்ருஹை, ஆகிய இந்தக் குணங்களுடைய ஸ்வரூபங்களை



"பரே வா பந்துவர்கே வா மித்ரே த்வேஷ்டரி வா ஸதா ।
ஆபந்நே ரக்ஷணம் யத்து ஸா தயா பரிகீர்த்திதா ॥
பாஹ்யே சாத்யாத்மிகே சைவ து:கே உத்பாதிதே பரை: ।
ந குப்யதி ந வா ஹந்தி ஸா க்ஷமா பரிகீர்த்திதா ॥
யோ யதேஷ்டம் காமம் வா லபதே ஸௌக்யமேவ வா ।
ந த்விஷ்யாத்தம் ஸதா ப்ராஜ்ஞ: ஸாநஸூயா ஸ்ம்ருதா புதை: ॥
அபக்ஷ்யபரிஹாரஶ்ச ஸம்ஸர்க: ஶாஸ்த்ரநிந்திதை: ।
ஸ்வதர்மே ச வ்யவஸ்தாநம் ஶௌசமேதத் ப்ரகீர்த்திதம் ॥
யதாரம்பே ஹ்யவேத்யா நிவ்ருத்திஸ்தத்ர சோதநம் ।
தஜ்ஜந்யேஷ்வப்ரவ்ருத்திர்யா ஸோऽநாயாஸ: ப்ரகீர்த்தித: ॥
ப்ரஶஸ்தாசரணம் நித்யம் அப்ரஶஸ்தவிவர்ஜநம் ।
ஏதத்தி மங்கலம் ப்ரோக்தம் ருஷிபிஸ்தத்த்வதர்ஶிபி: ॥
ஸ்தோகாதபி ஹி தாதவ்யம் அதீநேநாந்தராத்மநா ।
அஹந்யஹநி யத்கிஞ்சித் அகார்பண்யம் ஹி தத் ஸ்ம்ருதம் ॥
யதோத்பந்நேந ஸந்தோஷ: கர்த்தவ்ய: ஸ்வார்ஜிதேந து ।
பரார்த்தம் நாபிவாஞ்சேத ஸாऽஸ்ப்ருஹா பரிகீர்த்திதா ॥"

என்று ப்ருஹஸ்பதி விவரித்திருக்கிறார். இதன் அர்த்தமாவது—ஶத்ரு மித்ராதிகளின் ஆபத்தை நிவாரணம் செய்வது தயை ; அபகாரம் பண்ணினவன் விஷயத்தில் கோபமில்லாமல் இருக்கை க்ஷாந்தி ; இதரர்களுடைய அப்யுதயத்தில் த்வேஷம் பண்ணாமல் இருக்கை அநஸூயை ; அபக்ஷ்ய பரிஹாரமும் ஸத்ஸங்கமும் ஸ்வதர்மாநுஷ்டாநமும் ஶௌசம் ; தர்மமாயிருந்தாலும் ஸர்வதா மிகவும் ஶாரீர மாநஸ பீடாகரமான கார்யத்தில் அப்ரவ்ருத்தி அநாயாஸம் ; லோக ப்ரஶஸ்தமானதைச் செய்கிறதும் அப்ரஶஸ்தத்தை விடுகிறதும் மங்களம் ; அல்பமானாலும், ப்ரீதி பூர்வகமான தாநம் அகார்ப்பண்யம் ; ஸ்வார்ஜிதமாயுள்ள தநத்தினாலேயே ஸந்தோஷமும் பரதநாபேக்ஷையும் அஸ்ப்ருஹை.

"யஸ்யைதே சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரா ந சாஷ்டாவாத்மகுணா:
ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோகதாம் ச கச்சதி"

என்னும் ஸூத்ரத்தினால், கர்ப்பாதாநாதி சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரங்கள் பூர்ணங்களாக இருந்தாலும், இந்த எட்டு ஆத்மகுணங்கள் இல்லாமற்போனால் ப்ரஹ்ம ப்ராப்தி கிடைக்காது என்று கௌதமரே அருளிச்செய்திருக்கிறார். இதனால், ஶாரீரங்களான ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் ஆத்ம குணங்கள் ப்ரதாநமென்று ஸூசிதமாயிற்று. இப்படி இந்த எட்டு ஆத்மகுணங்களை உடையனை ஸச்சிஷ்யனுக்கு மோக்ஷ ப்ராப்த்யுபாயமான ப்ரஹ்ம வித்யையை கோபநம் பண்ணாமல் உபதேஶிப்பது ஸதாசார்ய க்ருத்யம் என்பது ஸித்தம்.

இப்படிப்பட்ட ஸதாசார்ய ஸம்பந்தத்திற்கு உபாய விஶேஷம் ப்ரமாண ஸித்தமாக இருக்கிறபடியால், அந்த ஸம்பந்தம் ஸர்வருக்கும் அநாயாஸமாகவே கடிக்கமாட்டாது. அந்த ப்ரமாணமாவது—

"ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சாஸுக்ருதம் ததா ।
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகை: ॥
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யாசார்யப்ராப்தி ஹேதவ: ।"

என்னும் ஸ்ம்ருதிவாக்யம், ஈஶ்வரனுக்கு ஸர்வசேதந ஸாதாரணமாய் அநாதியாக இருக்கும் ஸஹஜகாருண்யம் 1, யாத்ருச்சிக ஸுக்ருதம் 2, சேதநனிடத்தில் ஜந்மகாலத்தில் உண்டாகிற விஷ்ணு கடாக்ஷம் 3, விஷ்ணுவினிடத்தில் அத்வேஷம் 4, விஷ்ணுவினிடத்தில் ஆபிமுக்யம் 5, ஸாத்விகர்களுடன் ஸம்பாஷணம் 6; இந்த ஆறும் ஆசார்ய ஸம்பந்தத்திற்குக் காரணங்களென்று போதிக்கின்றது. இவைகளுள் பூர்வபூர்வம் உத்தரோத்தரத்திற்குக் காரணமாக இருக்கும். இங்கு "ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம்" என்னுமிடத்தில் "ஈஶ ஐஶ்வர்யே" என்று ஐஶ்வர்யார்த்தகமான 'ஈஶ' தாதுவினால் நிஷ்பந்நமான ஈஶ்வர ஶப்தத்திற்கு அவயவார்த்தமானது நியமநம். தன்னுடைய இச்சையினால் இதர வஸ்துக்களுக்கு ஒரு வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகனாய் இருப்பது 'நியமநம்' என்று சொல்லப்படும். இந்த அவயவார்த்தத்தினால், 'ஈஶ்வரன், சேதநனை அநாத்யபராதங்களினால் இவ்வளவு காலம் ஸம்ஸாரத்தில்



தள்ளுவித்திருந்தாலும், இப்பொழுது ஒரு ப்ராசீந ஸுக்ருத விஶேஷ பரிபாக மென்னும் வ்யாஜத்தினால் ஸாநுக்ரஹனாகி இச்சேதனுக்கு மோக்ஷோபாயத்தில் ஒரு வித ப்ரவ்ருத்தியை உண்டாக்குவதற்கும் வல்லன்' என்று ஸூசிதமாயிற்று. ஈஶ்வர ஶப்தத்திற்கு ஸமுதாயார்த்தமானது ஸ்வாமித்வம் என்பது தான். இதனாலே, அவயவார்த்தமான நியமநத்திற்கு ஔசித்யம் வ்யஞ்ஜிதமாகிறது. உடையவன் தனது வஸ்துக்களை யதேஷ்டமாக உபயோகிக்கலாமிறே. இப்படி ஈஶ்வர ஶப்தத்திற்கு யோகரூடத்வமானது,

"யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்த்யவ்யய ஈஶ்வர:"

என்னும் ஶ்லோக பாஷ்ய வ்யாக்யாந ப்ரகரணத்தில்,

"கேவல நியந்த்ருத்வாதி விஶிஷ்டேஷ்வபி ஈஶ்வரஶப்த[illegible] [illegible] ஸ்வாமித்வவிஶிஷ்ட நியந்த்ருத்வேஷ [illegible] ஈஶ்வர ஶப்த[illegible] [illegible]"

என்னும் ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீ ஸூக்தியினால் ஸித்தம். 'யோகம்' என்பது அவயவஶக்திக்கும், 'ரூடி' என்பது ஸமுதாய ஶக்திக்கும் பெயர்.

யாத்ருச்சிக ஸுக்ருதமாவது - அசிந்திதமாய் தைவாத் ப்ராப்தமான ஸுக்ருதம். அதாவது - கார்யாந்தரார்த்தமாக ப்ரவ்ருத்திக்கும் பொழுது ஆகஸ்மிகமாய் லபித்த பகவத் பிம்ப தர்ஶநாதிகளினால் உண்டாகிற ஸுக்ருதம். 'விஷ்ணோ: கடாக்ஷம்' என்னுமிடத்தில் 'விஶ ப்ரவேஶநே' என்னும் ப்ரவேஶநார்த்தகமான 'விஶ' தாதுவினால் நிஷ்பந்நமான விஷ்ணு ஶப்தத்திற்கு அவயவார்த்தமானது - ஸர்வஜந்துக்களிலும் அந்த: ப்ரவேஶம். இதனால்,

"அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா"

இத்யாதி ஶ்ருதிகளில் சொல்லுகிறபடி, ஈஶ்வர ஶப்தாவயவார்த்தமான ஸர்வ நியமநம், அந்த: ப்ரவேஶ பூர்வகமென்று விஶேஷிக்கப்படுகிறது. இதனால், ஈஶ்வர கர்த்ருகமான நியமநத்திற்கு

ராஜாதி கர்த்ருக நியமநங்களைக்காட்டிலும் வைலக்ஷண்யம் ஸித்திக்கின்றது. ராஜாதிகள், ஜநங்களை அந்த: ப்ரவேசமில்லாமலே யன்றோ நியமிக்கிறார்கள்? இப்படி 'விஷ்ணு' சப்தத்தின் அவயவார்த்தத்தை,

"விஷ்ணு: இதி - ஸ்வ வ்யாப்தி ஸாத்யம் விதாரகத்வம் ஆஹ | விஶதீதி - ஶ்ரீஹரிவம்ஶே, 'வ்யாப்ய ஸர்வாநிமாந் லோகாந் ஸ்திதஸ்ஸர்வத்ர கேஶவ: | ததஶ்ச விஷ்ணுநாமாஸி விஶேர் தாதோ: ப்ரவேஶநாத்' - 'விஶ ப்ரவேஶநே' இதி தாது:"

என்று ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீ பட்டர் அருளிச்செய்திருக்கிறார். ப்ரயோக ப்ராசுர்யத்தினால், 'விஷ்ணு' சப்தத்திற்கு ஸமுதாயார்த்தம் நாராயணன் என்பதே. இந்த ஸமுதாயார்த்தத்தினால், பூர்வோக்தமான ஈச்வர சப்த ஸமுதாயார்த்தமான ஸ்வாமித்வம் விசேஷிக்கப்படுகின்றது. இப்படி யோகரூடங்களான 'ஶர்வஶ்ஶாஸ்வ்யோ' 'விஷ்ணு:' என்னும் இரண்டு சப்தங்களினால், 'ஸர்வ வஸ்துக்களையும் அந்த: ப்ரவிஷ்டனாய் நியமிக்குமவனான ஸ்வாமி நாராயணனே' என்று ஸித்தமாயிற்று. இவ்வர்த்தம்,

"பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்"

"ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:"

இத்யாதி ச்ருதிகளில் வ்யக்தம். இப்படிப்பட்ட விஷ்ணுவினுடைய கடாக்ஷத்திற்கு ஜந்மகாலத்தில் பாத்ரனான சேதநனை,

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: |
ஸாத்த்விகஸ்ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ||"

இத்யாதி ஸ்தலங்களில், ஸாத்விகனென்றும் மோக்ஷோபாயத்தைச் சிந்திக்கத்தக்கவனென்றும் மஹர்ஷிகள் ப்ரசம்ஸித்திருக்கிறார்கள். சேதநனுக்கு ஜந்மகாலத்தில் விஷ்ணுகடாக்ஷமுண்டாயிற்று என்பதை, உத்தரகாலத்தில் அவனுடைய மோக்ஷோபாய ப்ரவ்ருத்தியாதிகளினால் ஊஹிக்கலாம். சிலருக்கு ஜந்மகாலத்தில் உண்டான விஷ்ணு கடாக்ஷமானது, மத்யகாலத்தில் ப்ரா



ரப்த கர்ம விசேஷமடியாக அவர்களுக்கு ரஜஸ்தம: கார்யங்களில் ப்ரவ்ருத்தி உண்டாயிருந்தாலும், தேஹாவஸாநத்திற்குள்ளாகவே க்ஷத்ர பந்துவுக்குப் போல ஸதாசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கிவிடும். சிலருக்கு ஜந்ம காலத்தில் தேவதாந்தர த்ருஷ்டிகளால் யாவத்தேஹம் ரஜஸ்தம: கார்யங்களிலேயே ப்ரவ்ருத்தி யிருந்தாலும், ஸாத்விகனுக்குப் பூர்வம் அலப்தமான விஷ்ணு கடாக்ஷமானது, இந்த ஜந்மத்தில் ஒரு ப்ராசீந ஸுக்ருத விசேஷ பரிபாகத்தினால் உண்டானாப்போல, இவர்களுக்கும் இந்தக் காரணத்தினாலேயே ஜந்மாந்தரத்தில் விஷ்ணுகடாக்ஷம் உண்டாகலாம். ஆகையினால், மோக்ஷோபாயமான ஸதாசார்ய ஸம்பந்த யோக்யதை ஸர்வருக்கும் உண்டு. இவ்வர்த்தம்,

"ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்"

என்னும் ச்ருதியில் 'ஈச்வரன் ஸர்வருக்கும் சரணமென்றும் ஸுஹ்ருத் என்றும் சொல்லுகிறபடியால் ஸித்தம்.' இப்படியானால்,

"ஸாத்த்விக: ஸ து விஜ்ஞேய:"

என்னும் ப்ரசம்ஸை எந்தக் காரணத்தினால் செய்யப்பட்டது?' என்னில் - ஜந்மாந்தர விளம்பமில்லாமல் இந்த ஜந்மத்திலேயே ஸதாசார்ய ஸம்பந்தோபாயம் லபித்திருக்கும் காரணமடியாகத்தான் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

ஈச்வரன் ஸர்வ சேதநர்களுக்கும் ப்ரவ்ருத்தி சக்தியைக் கொடுத்திருக்கிறபடியால், லௌகிக கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கிறதுபோல வைதிக கார்யத்திலும் கதாசித்தாவது ப்ரவ்ருத்திக்கிறது சேதந க்ருத்யம். இவ்வர்த்தத்தை

"ப்ராப்ய நாவம் த்ருடாம் விஷ்ணோ: ஶேஷவ்ருத்த்யுடுபாந் ஜநா: |
யேயம் வேலா ஹ்யஹோராத்ரே ந்யூநா ஸம்ஸாரஸாகராத் ||"

என்று மஹர்ஷிகளும் சொன்னார்கள். கோவானது, புணைகட்டி ஓட்டும் ஸமயத்திலும் வணங்கி த்ருணத்தைப் பக்ஷிக்கிறாப்போல மநுஷ்யனும், மநஸ் லௌகிக கார்யத்தில் ப்ரவ்ருத்தமாயிருந்தாலும், மத்யே மத்யே விஷ்ணுவை ஸ்மரிக்க வேண்டு மென்பது இந்த ச்லோகத்தின் அர்த்தம். சேதநனுடைய ப்ரவ்ருத்தி சக்தி

யைக்குறித்துச் சொல்ல வேண்டிய அம்சம் பஹுவாக இருந்தாலும் விஸ்தார பயத்தினுல் விரமிக்கப்படுகிறது.

உபந்யாஸாந்தரத்திற் சொல்லப்படும் 'அத்வேஷம்' (விஷ்ணுவினிடம் த்வேஷமில்லாமலிருக்கை),

"யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேஶவம் |
ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதிஸ்ஸம்ஸர்க்கிணாமபி ||"

இத்யாதிகளில் 'விஷ்ணு த்வேஷமுடையவர்களுக்குக் கங்காதி புண்யதீர்த்த ஸ்நாநங்களினுலேயும் நல்லகதி கிடைக்காது' என்று மஹர்ஷிகள் சொல்லியிருக்கிருர்கள். விஷ்ணுவினிடத்தில் ஆபிமுக்யமாவது - அந்த விஷ்ணுவின் கதைகளை ஶ்ரவணம் செய்வதான ப்ரவ்ருத்தி முதலியவைகளே. ஸாத்விகர்களுடன் ஸம்பாஷணமாவது - அவர்களுடைய லௌகிக வாக்ய ஶ்ரவணமன்று. ஆனல்,

"புமாந் ந தேவோ ந நரோ ந பஶுர் ந ச பாதப: |"

இத்யாதிகளிற் சொல்லுகிறபடி ஶரீர ஆத்ம விவேகத்தையும்,

"ஶாஸ்த்ரமாஜ்ஞாய மஹதா ஸக்ருச்சாஸ்த்ர தேவிஷி ஜநார்தநம் |"

இத்யாதிகளிற் சொல்லுகிறபடி மநஸ்ஸின் ஶுத்தி ஹேதுவான ஈஶ்வர விஷயக ஸாமாந்ய பக்தியையும் உண்டாக்கத்தக்கதான ஸத்துக்களுடைய வாக்ய ஶ்ரவணமே. இது, ஆசார்யனிடத்தில் வேதாந்தார்த்த ஶ்ரவணத்திற்கு யோக்யதாபாதகமாக இருக்கும். இப்படி உபயுக்தார்த்தங்களை க்ரோடீகரித்து மஹாஜந கோஷ்டியில் ஸம்க்ஷேபமாக உபந்யாஸ ரூபமான வாக்ய ஶ்ரவணமானது ஸாத்விக ஜந ஸம்பாஷணத்தில் சேரும். ஆனல், இந்த ஶ்ரவண மாத்ரத்தினுலேயே த்ருப்தர்களாகாமல், இதனல் கர்த்தவ்யாம்ஶத்தை நிஷ்கர்ஷித்து. ஶாஸ்த்ரோக்த ப்ரக்ரியையினுல் ஒரு ஸதாசார்யனை ஆஶ்ரயித்து அவனுலே உபதேஶிக்கப்படும் மோக்ஷோபயுக்தார்த்தங்களைத் தெரிந்துகொண்டு ஸர்வர்களும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது.



டதி ஸத்ஸங்க ஸம்பாஷணம்.

ஸம்ஸேவ்ய ஸத்கவேஶ்ஶ்ரேயஸே ஸூக்தே வாக்ஸ்ருஜ: ப்ராணிநாம் வத்ஸாநாம் பாராஷாய நிவேதிதம் ஸம்வாதயந் ஸ்வவாஸ: | ஹ்ருஷீகேஶ ஜநார்தந ரஞ்ஜந மிரள தேவஸ்ய ஸம்ஸாரிணி ஸ்ருதி: காமிதம் பாபீஹ க்லேஶந் நிர்ப்ராணி ப்ராணி ந: ||

யத்ப்ராஜ்ஞம் ஶைவ த்ருடத்ருடம் வா கிம்வி நயாட ஜேத ஶ்ருத்வாஸ்த்ர ஶம்மேத்ய மோக்ஷஸ்ருதயா ஸ்வஸேவ்ய பாகோக்ஷம் யயா | நோவிதத்த விக்ருதிஸ்வ யே தகிதரே நடிகா நிடி க்ஷேவா ஸவ்யஸ்ராவி ஸ்வஶயே க்ருதவைதஸ்தாக்ஷீ ஸுக்ஷிவதி: ||

உத்ஸ்வ ரமநாய காமா களஶிகவம்ஶோ கவிஸ்ஸோதவாத: | மாராவலே ஸேவ்ய ஶாஶாலேகா ஶா வேத்ருக் ஸதாம் வ்ருஜிநவ தொஷ்த்ரம் ||

கபிஸ்தலம் - ரங்கநாதாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

அசிந்த்ய திவ்யாத்புத நித்ய யௌவந-
ஸ்வபாவ லாவண்யமயாம்ருதோததிம் |
ஶ்ரிய: ஶ்ரியம் பக்தஜநைகஜீவிதம்
ஸமர்த்தமாபத்ஸகமர்த்திகல்பகம் || 45.

45. "விராஜமாநோஜ்ஜ்வல பீதவாஸஸம்" என்னும் 32-வது ஶ்லோகம் முதலாகக் கீழ்ச் சொல்லப்பட்ட 44-வது ஶ்லோகம் வரையில் எம்பெருமானை ஸமஸ்த கல்யாண குண திவ்ய மங்கள விக்ரஹாதி விஶிஷ்டனாகத் தனித்தனியே அநுஸந்தித்துவிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், இந்த 45-வது ஶ்லோகத்தில், பூர்வம் ப்ரஸ்துதமாயும் எல்லாருடைய சித்தத்தையும் ஆகர்ஷிக்கக்கூடியதாயுமுள்ள அவனுடைய ஸமுதாய ஶோபையையும், பக்தர்களெல்லாருக்கும் ஆஶ்ரயணீயனாகவும் போக்யனாகவுமுள்ள ஸமஸ்த குண விஶேஷங்களையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கிறார். கீழ் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவித்திருக்கிறபடி பிராட்டியை உகப்பிக்கிற ஸ்வபாவங்களுக்கு ஆஶ்ரயமான வடிவையும் குணங்களையும் அநுஸந்திக்கிறார் என்றும் ஒரு அவதாரிகை.

யதாவஸ்திதமாகவே அந்வயம்.

அசிந்த்ய திவ்யாத்புத நித்ய யௌவந ஸ்வபாவ லாவண்யமயாம்ருதோததிம் - 'அசிந்த்யமாயும் திவ்யமாயும் அத்புதமாயும் நித்யமாயுமுள்ள யௌவநத்தையே ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கும்



லாவண்யமயமான ஒரு அம்ருதோததி' என்பது அர்த்தம். அசிந்
த்யம்-அவாங்மநஸகோசரம்; பரமயோகிகளாலுங் கூடப் பரிச்சேதிக்
கக்கூடாதது என்பது தாத்பர்யம் : 'இப்படிப்பட்ட யௌவநம்
அஸம்பாவிதம்' என்று எவ்வித தர்க்கத்தினாலும் ப்ரதிக்ஷேபிக்கக்
கூடாதது என்றும் தாத்பர்யம் சொல்லலாம். திவ்யம் - அப்ரா
க்ருதம் : அதாவது - ஶுத்தஸத்வ மென்றபடி. தத்வம் - பரம்
அவரம் என்று இரண்டுவித மென்றும்; அவர தத்வம் - சேதநம்
அசேதநமென்று இரண்டுவித மென்றும்; அசேதந அவர தத்வம் -
த்ரிகுணம் அத்ரிகுணமென்று இரண்டுவித மென்றும்; அசேதந
அவர அத்ரிகுண தத்வம் - காலம் ஶுத்தஸத்வமென்று இரண்டு
விதமென்றும் நமது ஸித்தாந்தம். இந்த ஶுத்த ஸத்வத்தின்
ரீதியானது, தத்வ மாத்ருகை யென்னும் ரஹஸ்யத்திற்
சொல்லியிருக்கிறபடி, "பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்ய ஸ்வரூப
ஸ்வபாவமாய், சேணுயர் வானமென்றும் தெளிவிசும்பென்றும்
பொன்னுலகென்றும் கலங்காப்பெருநகரமென்றும் மாகவைகுந்த
மென்றும் சொல்லப்பட்ட வேறுபாட்டையுடைத்தாய், ப்ரஹ்மாதி
பதங்களெல்லாம்கூட நரகதுல்யங்களாய்த் தோற்றும்படி அபரிமித
ஐஶ்வர்யங்களான போக்ய போகோபகரண போக ஸ்தாநங்களை
யுடைத்தாய், ஸர்வேஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும்
விக்ரஹாதிரூபேண விசித்ர ப்ரவாஹமாய்" இருக்கும். இந்த யௌவ
நம் அப்படிப்பட்ட ஶுத்தஸத்வத்தின் ப்ரவாஹமென்று சொன்ன
தாயிற்று. அத்புதம் - எப்பொழுதும் அநுபவிக்கப்பட்டுக்கொ
ண்டிருந்தபோதிலும், அநுபவிக்க அநுபவிக்கப் புதியதுபோலவே
தோன்றும் ஸ்வபாவத்தை உடையது. நித்யம் - கௌமார அவ
ஸ்தை போய் இந்த யௌவந அவஸ்தை ஜநிக்கிறது என்றாவது,
இந்த யௌவந அவஸ்தை நீங்கினால் வார்த்தக அவஸ்தை வரு
மென்றாவது சொல்லக்கூடிய ஸ்வபாவ மில்லாதபடி எவ்வித பரிச்
சேதமுமின்றிக்கேயிருக்கும் என்று அர்த்தம். யௌவநம் - யௌவந
மென்று ஜகத்தில் ப்ரஸித்தமான ஒரு அவஸ்தா விஶேஷம்; அது,
மிகவும் ரமணீயமாக இருக்கும் ஸ்வபாவத்தை யுடையது. இப்
படி அசிந்த்யமாயும் திவ்யமாயும் அத்புதமாயும் நித்யமாயுமுள்ள

யௌவனம் பகவானுக்கு ஸ்வாபாவிகமே யென்பதைக் குறிக்கிறது 'ஸ்வபாவ' என்னும் பதம். இதனால்,

" தருணௌ ரூபஸம்பந்நௌ "

என்னும் ஸ்ரீமத் ராமாயண ஸ்லோகம் ஸ்மரிக்கப்படுகின்றது. 'லாவண்ய' - லாவண்யம் நிறைந்துள்ள. லாவண்யமாவது - ஸாமாந்ய சோபை; அத்யந்தம் ம்ருதுவாயும் கண்களுக்கு ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியதாயுமுள்ள ஏராளமான தேஜஸ்ஸுக்கே 'லாவண்யம்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட பெரியோர் அம்ருத ஸமுத்ரம் என்று பகவான் உபசரிக்கப்படுகிறான்; ஸமுத்ரம்போல எவ்விதத்திலும் பரிச்சேதிக்கக்கூடாதவன் என்பது தாத்பர்யம்.

ஸ்ரியஃ ஸ்ரியம் - லக்ஷ்மிக்கும் மங்களாவஹனாய் அவளுடன் கூடியிருக்குமவனை. " க: ஸ்ரீ: ஸ்ரிய: ? " என்னுமிடத்தில் ஸர்வஸ்மாத் பரத்வம் த்யோதிதமாயிற்று; இவ்விடத்தில் ஸபத்நீகனாக இருந்துகொண்டு எல்லார்க்கும் கைங்கர்யோத்தேஸ்யமாயிருக்கும் ஸ்திதியை வஹிக்கிறான் என்பது ஸூசிப்பிக்கப்படுகின்றது.

பக்தஜநைகஜீவிதம் - ஆஸ்ரிதருக்கு ப்ரதாந ஜீவிதமாயிருக்குமவனை.

" மச்சித்தா மத்கதப்ராணா: "

என்றன்றோ சொல்லப்பட்டிருக்கிறது ஆஸ்ரிதர்களுடைய ஸ்திதி? 'ஆஸ்ரிதர்களையே ப்ரதாந ஜீவிதமாக உடையவனை' என்றும் அர்த்தம் சொல்லக்கூடும். அதாவது -

" மம ப்ராணா ஹி பாண்டவா: "

" ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் "

இத்யாதிகளிற் சொல்லியிருக்கிறபடி, அவன் ஆஸ்ரிதர்களையே தனக்கு தாரகர்களாக உடைத்தாயிருக்கிறானன்றோ? அதாவது - அவன் அவர்களிடம் அவ்வளவு ப்ரீத்யதிசயத்தைச் செய்கிறான் என்பது தாத்பர்யம்.



பவந்தமேவாநுசரந் நிரந்தரம்
ப்ரசாந்த நிச்சேஷமநோரதாந்தர: ।
கதாஹமைகாந்திக நித்யகிங்கர:
ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: ? ॥ 46.

ஸமர்த்தம் - ஸாமர்த்யமுடையவனை. இதற்கு இரண்டுவிதமாகப் பெரியோர்கள் தாத்பர்யம் சொல்லியிருக்கிறார்கள் :—(1) ஆஸ்ரிதர்களை ஸம்ரக்ஷிப்பதிலும், தனக்கு ஸமமான போகத்தை அவர்களுக்குக் கொடுப்பதிலும், ஆஸ்ரிதர்களுடைய விரோதிகளை விலக்குவதிலும் எவ்வித ப்ரதிபந்தகங்களினாலும் தடுக்கக்கூடாத அளவு ஸாமர்த்யமுடையவனை; (2) நித்யஸூரிகள், ஸம்ஸாரத்தில் அகப்பட்டுள்ள ஆஸ்ரிதர்கள் இவர்களெல்லாரையும் ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்குமளவு ஸாமர்த்யமுடையவனை.

ஆபத்ஸகம் - ஆபத்காலத்தில் ஸமதுக்கஸுகனான ப்ரிய ஸகன்போல உதவும் ஸ்வபாவமுள்ள.

அர்த்திகல்பகம் - கல்பத்ருமம் போல அர்த்திகளுக்கு ஸமஸ்தங்களான அபேக்ஷிதங்களையும் கொடுக்குமவனை. " 'தன்னைத் தந்த கற்பகம்' என்கிறபடியே தன்னை ஔதார்யம் பண்ணுமவனை" என்பது, இங்கு ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அநுக்ரஹித்திருக்கும் தாத்பர்யம்.

46. கீழ்ச் சொன்னபடி ஸ்வரூப ரூப குணவிபூதிகளால் பூர்ணனான பகவானை யதாவஸ்திதமாக அநுஸந்தித்துவிட்டு, அதனால் மிக்க ஸந்தோஷமடைந்தவராய், ஸ்ரீ ஆளவந்தார், பரமபுருஷார்த்தத்திற்கு எல்லைநிலமாயுள்ள நித்ய கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறார்.

அஹம், பவந்தமேவ நிரந்தரம் அநுசரந், ப்ரசாந்த நிச்சேஷ மநோரதாந்தர:, ஐகாந்திக நித்யகிங்கர:, ஸநாத ஜீவிதச்ச ஸந் கதா ப்ரஹர்ஷயிஷ்யாமி ? [இடைவிடாமல் உன்னையே அநுவர்த்தித்துக்கொண்டும், உன்னை யொழிந்த விஷ

யங்களில் மநோவ்யாபாரங்களை ஸ்வாஸநமாகத் தவிர்த்துக்கொண்டும், ஏகரூபமாய் ஶாஶ்வதமான கைங்கர்யத்தைச் செய்துகொண்டும், அதனாலேயே பரம ப்ரயோஜநத்தைப் பெற்றிருக்கும் ஸத்தையையுடையனாய் எக்காலத்தில் அடியேன் உன்னை உகப்பிக்கப் போகிறேன்? ]

த்வாமேவ - கீழ்ச்சொன்னபடி ஸ்வரூப ரூப குண விபூதிகளால் பரிபூர்ணனாக இருக்கும் உன்னையே. இவ்விடத்திலுள்ள 'ஏவ' என்னும் பதத்திற்கு ஸ்ரீ நிகமாந்தாசார்யர் இரண்டுவிதமாகத் தாத்பர்யம் அநுக்ரஹித்திருக்கிறார்:— (1) 'பகவானைத் தவிர்த்து மற்றைத் தைவங்களெல்லாம் கர்மாதீநங்கள்; சில ப்ரகாரங்களில் அந்தத் தைவங்கள் ஸேவ்யங்களானாலும், அவைகளெல்லாவற்றையும் த்யஜித்து ஸ்ரீமந்நாராயணனையே அநுவர்த்திக்க வேணும்' என்பது முதலாவது தாத்பர்யம். (2) 'சிலவிடங்களில் பகவத் பரிஜந ஸேவை உத்தேஶ்யமானாலும், அவர்களளவிலேயே விஶ்ராந்தமாகும் ஸேவையை த்யஜித்து, ஸ்ரீமந்நாராயணனிடத்தில் விஶ்ரமிக்கு ஸேவையே நமக்கு உத்தேஶ்யதமம்' என்பது இரண்டாவது தாத்பர்யம்.

"வேறொன்றும் நானறியேன்"

இத்யாதியான திவ்ய ஸூக்திகளிலும் ஸர்வஶேஷியான ஸ்ரீமந்நாராயணன் பர்யந்தம் போகும் புத்தியே விவக்ஷிதமென்று ஸூசிதமாயிற்று. 'ஸமஸ்த பரிஜந ஸேவாऽபி தத்ஸேவாப்யுதே ஸவிஶேஷ விஷயா' என்பது ஸ்ரீ நிகமாந்தாசார்யனுடைய வாக்யம்.

நிரந்தரம் - இடைவிடாமல். மற்றை எவ்வித அவாந்தர ஸேவையும் வேண்டாம் என்பது திருவுள்ளம்.

யதாவஸரம் - அந்தந்த அவஸ்தைக்குத் தகுந்த கைங்கர்யங்களினால் ஸேவித்துக்கொண்டு.

"காலே காலே யதாவஸரம்"



என்னும் ஸ்ருதி இதனால் ஸூசிப்பிக்கப்படுகிறது. இப்படி அநவரதம் ஸரித்துக் கைங்கர்யம் செய்வது முடிவில்லாததாய் ஶாஶ்வதமாக இருக்க வேணுமென்பதை, 'யதாவஸரம்' என்னுமிடத்திலுள்ள நிகழ்காலரூபம் காண்பிக்கின்றது.

ப்ரஸாதநிஜேஷு ஸமஸ்தகாம: - மாற்றப்பட்ட மற்றைக் காமங்களெல்லாவற்றையுமுடையவனாய். 'கீழ்ச்சொன்ன கைங்கர்யம் ஸித்திக்கும் பொருட்டு மற்றை ப்ரயோஜநங்களிலுள்ள இச்சை முழுவதையும் நீயே ஶமிப்பிக்க வேணும்' என்பது அபிப்ராயம்.

ஐகாந்திக நித்ய கிங்கர: - ஒரு வஸ்துவிலேயே நியதமாக இருக்குமது ஐகாந்திகம்; அதாவது - 'தேவதாந்தரங்களிடத்தில் மநஸ் ப்ரவ்ருத்திக்காமல் பரதேவதையான எம்பெருமானிடத்திலேயே ஏகரூபமாய்ச் செய்யப்படும்' என்று அர்த்தம். அப்படிப்பட்ட கைங்கர்யம் நித்யமாக இருக்கவேணும்; அதாவது - யாவதாத்மபாவியாக இருக்கவேணுமென்பது தாத்பர்யம்.

ஸநாத ஜீவித: - 'அப்படி என்னைக் கைங்கர்யம் கொண்டாலொழிய என் ஸத்தை ஸப்ரயோஜநமாகாது' என்பது தாத்பர்யம். அல்லது, 'இதுவரையில் உன்னால் உபேக்ஷிக்கப்பட்டவனாய்க் கொண்டு, ஸநாதனாக இருந்தபோதிலும் நாதஹீநன்போல இருந்தேன்; அப்படிப்பட்ட என்னுடைய தீந ஸ்திதி உன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே நிவ்ருத்திக்கப்படவேணும்' என்பது இதனால் ஸூசிதமாகின்றது.

ப்ரஹர்ஷயிஷ்யாமி - உகப்பிக்கக்கடவேன் - உன்னுடைய ப்ரஹர்ஷமே முக்கியதாஸனாக இருக்கும் எனக்கு உன்னுடைய அநுமான ப்ரயோஜநம் என்பது தாத்பர்யம். "தன்னுடைய அநுமான ப்ரயோஜநம் ... சேதநவ்ருத்தியினால் ஈஶ்வரனுக்குப் பிறந்த ப்ரஹர்ஷமிறே சேதநனுக்கு ப்ராப்யம்" என்பது, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் திவ்யஸூக்தி.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

# ஜநகநந்திநீ.

ஜநகநந்திநிக்குக் கல்யாணம் முடிந்து நாலு ஸம்வத்ஸரம் ஆயிற்று. விவாஹாநந்தரம் அவளுடைய பிதா, ராமாநுஜாசார்யரைக்கொண்டு அவளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்வித்து வைத்தனர். ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் யதோசிதம் ஜ்ஞாநத்தை அவளுடைய பிதாவினிடமே ஸம்பாதித்துக்கொள்ளும்படியாக அந்த ஸ்வாமி அவளுக்கு ஆஜ்ஞாபித்தனர். இது ந்யாயமே. லோக வழக்கப்படிச் சிறு பெண்கள் மாமனார்களிடம் வித்யாக்ரஹண நிமித்தம் போவது அயுக்தமாயிருக்கும். குருவினிடம் போல் மாமனாரிடம் மர்யாதையுடன் வர்த்திப்பது ஸுலபமேயானாலும், தக்க அவஸரங்களில் ப்ரச்நைகள் மூலமாக விஷயங்களைக் கேட்டறிவதற்குத் தத்கால வழக்கப்படி மாமனார் உசிதமான ஆசார்யன் ஆகமாட்டார்.

ப்ரத்யங்க ஸௌஷ்டவம் கலந்தும் கலவாமலும் ஸமுதாய சோபை சில பெண்கட்குப் பொருந்தும்; கலவாத சோபை தூர தர்சநத்தில் மாத்ரம் ரமணீயமாய்த் தோன்றும். பல பெண்கட்கு ஸமுதாயசோபையு மிலது. அவர்க்கும் அநிர்வசநீயமாய் ஓர் ஆகர்ஷக சக்தியானது யௌவநாரம்பத்தில் ஸஹஜமாயுண்டாகின்றது. ஆதலால், "சித்ரே நிவேஶ்ய பரிகல்பித ஸத்வயோகா",

எனும்வண்ணம், அவளுடைய சரீர நிர்மாண பூர்வமே, ப்ரத்யங்க ஸௌஷ்டவம் கொஞ்சமும் தவறாதபடி, அவற்றைச் சித்ரமூலமாக த்ருப்தியாயமைத்துப் பின், அந்தச் சித்ரப்படிப்பிதாமகன் அவள் சரீரத்தை உண்டாக்கினானென்னும்படித் தோற்றுகின்ற ஜநகநந்திநியானவள், யௌவநாரம்பத்தில் எவ்வண்ணம் ப்ரகாசித்தாளென்பதைச் சொல்லவும் வேண்டுமோ. அவள் பிதாவின் ப்ரஹ்ம தேஜஸ்ஸும் அவருடைய பாரமைகாந்த்யமும் அவளுடைய நன்னடத்தையும் பாமர த்ருஷ்டிபாதங்களினின்று அவளை ஸம்ரக்ஷித்தன.



பிதாவின் ஆஜ்ஞையை அநுஸரித்து முதலில் ஸ்ரீமத் ராமாயணம் அவரிடம் கேட்டாள். அதன் பிறகு பாஷ்யஸஹிதமாகக் கீதையைப் பாராயணம் செய்தனள். பின்பு பகவத் விஷயத்தைக் காலக்ஷேபம் செய்தாள். முடிவாக ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தை நியமத்துடன் பிதாவினிடம் கேட்டாள். இவற்றைக் கேட்டறிந்த தத்வஜ்ஞாநம் த்ருடப்படவேண்டிப் பிதாவின் நியமநத்தின்பேரில் அவரிடம் ஸ்ரீ பாகவதமும் ஸ்ரீ விஷ்ணுபுராணமும் ஸம்சயமறப் படித்தறிந்தனள்.

இப்படி ப்ரஹ்மவாதிநீ யெனத் தகுந்தவளாய் வளர்ந்த ஜநக நந்திநியை ஒரு நாள் காலையில், காலக்ஷேபாவஸரத்தில் கேசவாசார்யர் அழைத்துப் பின்வருகிறபடி உபதேசிக்கத் தொடங்கினார்:-

"ஜநகம்! கேசவாசார்யர் பெண் காலக்ஷேபம் செய்திருக்கின்றாள் என்று லோகத்தார் புகழ்வதால் உனக்காவது, எனக்காவது ப்ரயோஜநம் உண்டானதாய் எண்ணாதே. படித்தவரென க்யாதி யடைந்த பெண்பாலர், ப்ராயேண, வயக்ரமத்தால் சரீரவிஸ்தாரத்தை யடைவதுபோல், புத்தி விஸ்தாரத்தை அடைகின்றாரில்லை. அவர் கற்ற கல்வியெல்லாம் அவர்க்குக் கேவலம் அஹங்காரம் ஜவ லிக்க உதவுகின்றதுமன்றி, அவருடைய ஸ்த்ரீ ப்ரஜ்ஞையைப் பழையபடியே நிலைக்கவும் செய்கின்றது. ஸ்த்ரீகள் அல்ப வ்யாஜங்களைக்கொண்டு பரர் தங்களை அநாதரணை செய்தனரென்றும், தங்கட்குத் தீங்குசெய்தனரென்றும் எண்ணுகின்றார்கள்; எண்ணத் தகாத அல்ப வ்யாபாரங்களைப் பெரிதாக்குகின்றனர்; போதுமான காரணமின்றிக் கோபமும் வ்யஸநமும் கொள்கின்றனர்; பராமர்சையின்றி வாக்வ்ரயம் செய்கின்றனர்; தமது குற்றங்களைச் சுட்டிக் காட்டுபவரிடம் த்வேஷம் பாராட்டுகின்றனர்; நச்வரங்களில் ஆசை கொள்கின்றனர்; சாச்வதமான நன்மைகளைத் தேடாது விடுகின்றனர். அநேகம் ஸ்த்ரீகள் அவர்களுடைய மௌட்யத்தால் பெரியோருடைய ஸஹவாஸார்ஹதையை அடைகின்றனரல்லர்.

"காமத்தால் பரஸ்பரம் ஆகர்ஷிக்கப்பட்ட ஸ்த்ரீ புமான்கள் ப்ராயேண, அவருடைய காமம் நிலைக்குமட்டும், தாங்கள் அநுரூப தம்பதிகளென மூடவிச்வாஸம் கொள்கின்றனர். அந்தக் காமத்தின் தீவ்ரம் அடங்கியபின் அவர் ஒருவரையொருவர் வெறுக்க

ஆரம்பிக்கின்றனர். அப்போது, அவர் விஷயத்தில், 'நல்லது கெட்டால் நாய்க்கும் வழங்காது' எனும் பழமொழி ஊர்ஜிதமாகின்றது. பசு பெயர்க்குக் காமமும் ஸம்பந்த காரணமாகின்றதில்லை. அநுரூபதாம்பத்யம் தான் லோகத்தில் மிகுந்து நிற்கும். அநுரூபமாக அது ஏற்பட்டபோதிலும் ஒரு புருஷாயஸ்ஸினுடைய அல்ப ஸ்வபாவத்தை அறிந்துகொண்டு, தாம்பத்யத்தை ஜந்மபலமாக நினைக்காமல், ஜந்மத்தாலடையக்கூடிய புருஷார்த்தத்துக்கு அதை ஒரு ஸஹகாரியாக நமது ப்ராசீநர் நிர்த்தாரணம் செய்தனர். ஆதலால் கேவலகாமத்தால் அது புஷ்பிக்கும்படி அவர் அவகாசம் கொடுத்தாரில்லை.

"இப்போது ஆர்யாவர்த்தமெனப்பட்டது அநார்யவ்யாப்தமாய் விட்டது. காலதேச வைகுண்யங்கள் மிகுந்தன. ஒவ்வொரு ஜீவனும், அவ்வைகுண்யங்களால், விபரீத ஸம்ஸர்க்கங்களில் சிக்கி, தனது ஜந்மத்தின் உத்தேசயமான பலத்தை இழந்து போகும்படி நேரிட்டிருக்கின்றது. உன்னுடைய ஜந்மத்தின் ப்ரயோஜநத்தை நீ யடையவேண்டுமென்று நினைத்து அதற்கேற்றபடி உனக்கு நான் விவாஹம் முடித்தேன். பகவத் ஸங்கல்பம் எப்படி இருக்குமோ தெரியாது. நீ என்னிடம் அறிந்த விஷயங்களின் ஸாராம்சங்களை நமது ப்ரமாண க்ரந்தங்கள் காட்டினபடி உரைக்கின்றேன். கேள்.

"காலமும் தேசமும் அநாதியென்றும் அநந்தமென்றும் அறி. அவற்றுள் அந்தர்க்கதமாகும் சேதநாசேதந ரூபமான வஸ்துக்களின் மொத்தமும் எல்லையற்றதாகத் தெரிந்துக்கொள். இவற்றை ப்ரகாரமா யுடையவன் ஈச்வரன். இவற்றின் ஸங்கோச விகாஸங்களைத் தான் ப்ரளயமென்றும் ப்ரபஞ்சமென்றும் சொல்வர்.

"வஸ்துக்களில் பூர்வம் இல்லாததொன்று நடுவில் உண்டாவதில்லை. பூர்வம் இருந்ததொன்று பின்னால் நசிப்பதும் இல்லை. சேதநவஸ்து விகாராநர்ஹம். அசேதநம் ஸததவிகாரி. அதன் பரிணமமான சரீராதிகள் ஸம்பந்தமடியாகச் சேதநனும் ஜந்மம் முதலான விகாரங்களை அடைவதாக வ்யவஹரிக்கப்படுகின்றான். அவற்றை அவன் அடைவதற்கு அவனுடைய ஸுக்ருத துஷ்க்ருதங்கள் காரணங்களாகின்றன. சேதநனுக்கும் அவன் கர்மங்களுக்கும் இப்படிப்பட்ட ஸம்பந்தங்களையும் ப்ரயோஜநங்களையும் விளைவிப்



பது ஈச்வரனுடைய கர்மசக்தி. அக்கர்மசக்தியானது, தனது நிஸர்க்கமான தயையால் ப்ரேரிதனான ஈச்வரனால், ஜீவன்களுடைய ஹிதத்தை உத்தேசித்துக் கார்யகரமாகின்றது.

"பகவான் ஜீவன்களுக்குக் கரண களேபரங்களைத் தந்தது, ஜீவன்கள் புருஷார்த்தங்களை அவற்றைக்கொண்டு ஸாதித்துக் கொள்ள வேண்டுமென்பதற் கென்று அறி. ஜீவன்கள் கரண களேபரங்களை ஸத்விநியோகம் செய்வதற்கும் துர்விநியோகம் செய்வதற்கும் ஸ்வதந்த்ரர்கள்.

"ஜீவன்கட்கு ஸ்வரூப ப்ராப்தி தான் பரம புருஷார்த்தம். ஸ்வரூபத்தை அறிந்துகொண்டு, தத்ப்ராப்தி நிமித்தமாக விதிக்கப்பட்ட உபாயத்தைப்பற்றி நின்றானாகில் புருஷார்த்தம் தானே ப்ராப்தமாகின்றது.

"க்ஷுத்ராநம் வைசா விஜாநீயாத் ஸாயஸ்வோ திவ்ரூஷம் ।
க்ஷிஷ்ணு ஸுக்ஷ்ம ஸங்காராய ஸ்ரீரஸ்நாவஸஜ்ஞெள" ॥

என்று உபநிஷத் சொல்லிற்று. உனது ஆத்மாவைப்பற்றி, நான் இப்படிப்பட்டவனாகின்றேன் என்று அதன் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டாயாகில், லோகரீதியின்படி, உனக்காகவாவது உனது சரீர ஸம்பந்திகள் இஷ்ட பூரணத்திற்காகவாவது, சரீர கஷ்டத்துடன் கூடிய ஒரு ப்ரவ்ருத்தியில் நீ இழியமாட்டாய்.

"ஜீவஸ்வரூபம் என்னெனில், தத்வமஸி, எனும் வாக்யத்தையும் ப்ரணவத்தின் அக்ஷரத்ரயங்களையும் ஸமுதாயமாக யோசித்து, அத்வைதிகள் ஜீவன்தான் ப்ரஹ்மம் என்கிறார்கள். திருவஷ்டாக்ஷரத்தையும் காயத்ரீ மஹாமந்த்ரத்தையும் யோசித்தால், ஜீவப்ரஹ்ம ஐக்யம் ஸித்திக்காது. அவர்க்குள் நிர்ஹேதுகமாக ஸித்தித்த ஸ்வாமித்வ தாஸத்வ ஸம்பந்தம் தான் நிலைக்கும். ப்ரணவ விவரணம்தான் அஷ்டாக்ஷரம், ஷடக்ஷரம், த்வாதசாக்ஷரம் முதலான மஹா மந்த்ரங்கள். இவை எல்லாம் நாலாம் வேற்றுமையென்று தமிழில் சொல்லப்பட்ட சதுர்த்தியில் தான் முடிகின்றன. கீதையில் ஸர்வேச்வரனும் ஜீவனைத் தனது அம்சபூதனென்றான். முண்டகோபநிஷத்தும் அதை ஸ்பஷ்டமாய் விளக்குகின்றது.

“ தான் பகவத்ஶேஷனென்று ஸ்வருபத்தை அறிந்துகொண்டவன், அந்த ஶேஷவ்ருத்தியைத்தான் நியமேந அநுஷ்டிக்கத் தக்கவன். முக்ததசையில் பகவானுடைய திருவுள்ளத்தை ஸாக்ஷாத்தாக அறிந்து அதை நடத்துவன். பத்த தசையில் ஈஶ்வராஜ்ஞை ஶாஸ்த்ரைகவேத்யமாகையால், பகவானுடைய ஆஜ்ஞா கைங்கர்யங்களை ஶாஸ்த்ரத்தா லறிந்து செய்யக்கடவன்.

“ ஜீவன்கள் பல விதமாயிருக்கின்ற பகு ஜந்மங்களெடுத்து முடிவில் மநுஷ்யராய்ப் பிறக்கின்றனர். ப்ரக்ருதியின் குணங்கள் ஸமமாய் ஸர்வ சரீரங்களிலும் ஏற்படமாட்டா. ஆதலால் அக்குணங்களின் தரதமபாவம் ப்ரதி சரீரமும் ஸித்தம். அவற்றைக் காரணமாகக் கொண்ட சேதநருடைய ப்ரவ்ருத்திகளும் ஏகரூபமாக அமைவதில்லை. இந்த வித்யாஸங்கள், சேதநர்களுடைய தத்கால ஜந்மங்களால் மாத்ரம் ஸித்திக்கவில்லை ; அநேக ஜந்மபரம்பரைகளால் ஏற்பட்டன.

“ குணகர்ம விபாகத்தால் மநுஷ்யர்க்குள் வர்ணபேதம் ஈஶ்வரக்ருதம். இந்த லோகத்தில் இப்போது வ்ருத்தியடைகின்ற மநுஷ்ய ஸ்ருஷ்ட்யாரம்பத்தில் வர்ணபேதம் உண்டாயிருக்கலாம். புராணங்கள் காட்டுகிறபடி முதலில் உண்டாயிருந்த ஆர்யருடைய ப்ரவ்ருத்தி பேதங்களால் காலக்ரமத்தில் வர்ணபேதம் அவர்க்குள் உண்டாயிருக்கலாம். எப்படி உண்டாயிருந்தபோதிலும், ப்ராஹ்மணாதி ஜந்மங்கட்கு அர்ஹனான ஜீவன்தான் அந்த ஜந்மங்களைக் கர்மாத்யக்ஷன் ஸங்கல்பத்தால் அடைகின்றான். மநுஷ்ய ப்ரயத்நத்தால் வர்ணபேதம் நஶித்தால், அக்காலஸ்திதியை அநுஸரித்தே ஜீவன்கட்குப் புநர்ஜநநம் நேரிடும்.

“ வர்ணஸாங்கர்யம் மிகவும் உண்டாகின்ற தத்காலத்தில், வர்ணாந்தரங்களிலும் வர்ணபாஹ்யர்க்குள்ளும் ஜநிக்கத்தக்க ஸம்ஸ்காரமுடைய பலர், ப்ராஹ்மணரென ஜந்மத்தால் தோற்றி, அவ்வவருடைய ஸம்ஸ்காரோசிதமான வகுப்புகளை ஸம்ஸர்க்கங்களால் சேர்ந்துவிடுவர். “ ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ।” எனும் கீதாவாக்யம் ஆநுஶாஸநிக பர்வத்தில் மதங்கோபாக்யாநத்தைப் பார்த்தால் விளங்கும்.



“ குணகர்மவிபாக க்ருதமான வர்ணங்கள் ரக்ஷிக்கப்பட்டால், பகு மநுஷ்யர் ஸ்வரூபப்ராப்தி யடைய ஸௌகர்யங்கள் உண்டு. ஜந்மத்தால் ப்ராஹ்மணனாய்ப் பிறப்பவனுக்கு ஸத்ஸங்கம், ஸதாசார்யப்ராப்தி, ஸத்கர்மம் முதலானவைகள் ஸித்திப்பதையொத்து மற்றவர்க்கு அமையமாட்டா. வர்ணபேத மற்றதாகில், ஸர்வஸமமான கூட்டமொன்றில், ப்ராஹ்மணர்க்குரிய குணகர்ம ஸம்பந்தம், யாரோ ஒருவர்க்குக் கஷ்டத்தால் ஸித்திக்கலாம். ஸம்ஸர்க்கத்தால் அதுகெட்டாலும் கெடலாம்.

“ குணங்கள் சேதநனைக் கர்மங்களில் ஏவுகின்றன. ஸத்வ குண ப்ரதாநரான ப்ராஹ்மணரும், அவருடைய ஸம்ஸ்கார விசேஷங்களாலும், ஸம்ஸர்க்கங்களாலும் ப்ராயேண ஸத்கர்மங்களிலே அந்வயிக்கின்றனர். இவர்க் கேற்றபடி நம்முடைய பெரியோர், பகவத் ஸங்கல்பத்தை முன்னிட்டுக்கொண்டு, ஸத்வம் வ்ருத்தியாகும்படியாயும், சித்தம் சுத்தமாகும்படியாயும், ஜ்ஞாநம் த்ருடப்படும்படியாயும், ஸ்வரூப ப்ராப்தியுண்டாகும்படியாயும், தகுந்த கர்மங்களை விதித்திருக்கின்றனர். அப்படி வர்ணங்களையும் ஆஶ்ரமங்களையும் அநுஸரித்து ஏற்பட்ட ஸ்வகர்மத்தை மநுஷ்யன் பகவதாராதநமாகப் பண்ணிக்கொண்டு, சித்தசுத்தியை ஸம்பாதித்து, ஶாஸ்த்ரத்தால் பகவத் ஸ்வரூபத்தையும் தன் ஸ்வரூபத்தையும் தனக்கு ஹிதமாயுள்ள உபாயஸ்வரூபத்தையும் புருஷார்த்த ஸ்வரூபத்தையும் அறிந்து, ஸம்ஸார சக்ரத்தைத் தாண்டுகின்றான். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், “ இயாஜ ஸோऽபி ஸுபஹூந் யஜ்ஞாந் ஜ்ஞாநவ்யபாஶ்ரய: । ப்ரஹ்மவித்யாமதிஷ்டாய தர்தும் ம்ருத்யுமவித்யயா ॥ ” எனும் ஶ்லோகத்தைச் சிந்திப்பாய். மஹா ப்ரஹ்மவித்தான கேசித்வஜ ராஜனைப்பற்றி இந்த ஶ்லோகம் பிறந்தது. ஜ்ஞாநவ்யபாஶ்ரயன் என்பதால் ஆத்மஜ்ஞாநத்தை அந்த ராஜா நன்றாகப் பொருந்தினவன் என்று ஏற்பட்டது. ‘ ப்ரஹ்மவித்யாமதிஷ்டாய ’ என்பதால் பக்தியோக நிஷ்டன் என்று அர்த்தமாகின்றது. அவன் ராஜாவானபடியால் பகு யஜ்ஞங்கள் செய்தான். பக்தியோக ப்ரதிபந்தகங்களாய் நிற்கும் கர்மரூபமான பாபங்களை நிவர்த்திக்கும் பொருட்டு அப்படிச் செய்தான். ஸம்ஸார ஹேதுவாகின்ற கர்மங்கள் ம்ருத்யு சப்தத்

தால் வ்யவஹரிக்கப்படுகின்றன. இவற்றை அவித்யை எனப்பட்ட ஸ்வகர்மத்தால் தாண்டவேண்டும். இந்தக் கர்மம், அதற்கு உரிய பலத்தை விளைவிக்காதபடிப் பகவதாராதந ரூபமாகப் பண்ணப்பட்டதாகில், பக்தியோகத்திற்கு ஸஹகாரியாகின்றது.

"அப்படியே ஒவ்வொரு ஜ்ஞாதாவும், பகவத்ப்ராப்தி நிமித்தமாக ஓர் உபாயத்தில் அந்வயித்தவனைக்கொண்டு தனக்கென்று ஏற்பட்ட ஸங்க்ரஹித கர்மங்களைப் பகவதாராதநமாய்ச் செய்யவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. உனக்காக ஏற்பட்ட கர்மம் பர்த்தாவின் ஸேவை. அதில் நீ ஜாகரூகையாய் இருக்கவேண்டும். அந்த வ்யாபாரத்தையே நீ பகவதாராதநமாகக் கொள்ளவேண்டும். ப்ராஹ்மணர் காமத்தின்பொருட்டு விவாஹம் செய்துகொள்ளார். தர்மத்தின் பொருட்டும் ப்ரஜையின் பொருட்டும் உன்னை உன் பர்த்தா மணந்தார். அவருடைய க்ருஹஸ்தாச்ரமதர்மம் உன்னையன்றி நிறைவேறமாட்டாது. உனக்கு அபேக்ஷையுண்டான காலத்தில், உன் பர்த்தாவின் அநுமதியின் பேரில் நீ விச்வஸித்த ஆசார்யன் க்ருபையை முன்னிட்டு ஓர் உபாயத்தில் அந்வயிப்பாய். பர்த்தாவின் உபாயாநுஷ்டாந காலத்தில் உனக்கும் உபாயாநுஷ்டாநம் ஸித்திக்கக்கூடும்.

"ஸர்வத்ர ஸமனாய், ஸர்வத்தின் ஹ்ருதயங்களிலும், ஸர்வத்தையும் வ்யாபித்து நிற்கும் வாஸுதேவனை நோக்கு. அவனுடைய அம்சபூதையான உன்னையும், அம்சபூதரான மற்ற யாவத் ஜீவரையும் சிந்திப்பாய். நச்வரமான உனது சரீரத்தையும், நச்வரங்களான மற்ற சேதநருடைய சரீரங்களையும், ஒரே ப்ரக்ருதியின் விகாரங்களென அறி. அந்த ப்ரக்ருதியும், அதற்குள் சிக்கிய எல்லா ஜீவன்களும் பகவானுடைய ப்ரகாரங்களென்று அறி. ஆதலால், யாவர்க்கும் அஹங்காரமமகாரங்கள் அஜ்ஞாநத்தால் உண்டாகின்றன. பார்வைக்குத் தோற்றும் பேதங்களை அநாதரித்து, ஸர்வத்ர பேதமின்றி நிற்கும் பரமனையே பஜிப்பாய். ஸர்வமும் அவனிடம் ஜநித்தன; அவனிடம் இப்போது உயிர்ப்பன; முடிவில் அவனிடமே லயிப்பன; ஆதலால் ஸர்வமும் அவனே. இப்படி யறிந்து சித்தத்தில் சாந்தியை யடைந்து அவனையே உபாஸிப்பாய்.

**பத்ராதிபர்.**

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

## (திருப்பதிப் பிரிவு.)

I. மைஸூரிலிருந்து ஸ்ரீமாந் வித்யா பூஷணம், ஏ. கோவிந்தாசார்யர் ஸ்வாமி இந்த ஸபையாரின் ப்ரார்த்தனைக்கு இணங்கி, இவ்விடம் எழுந்தருளி, நம்மாழ்வார் ஸந்நிதியில், நாளது பிப்ரவரிமீ 6வ முதல் 8-நாள் பல விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார். சித்தூர் முதலிய பல விடங்களினின்றும் ச்ரோதாக்கள் சிலர் வந்திருந்தனர். உபந்யாஸக்ரமம் வருமாறு:

6வ - நமது ஹிந்துதேசத்தில் தத்காலம் வ்யாப்தமாயுள்ள விவித ப்ராசீநாதந மதங்கள் பலவற்றில் வைஷ்ணவமதம் சிறந்ததென்றும், அந்த வைஷ்ணவமதமும் தேச பேதத்தாலும், கால பேதத்தாலும், புத்யபிப்ராய பேதத்தாலும் பலவாறாக இருக்கிறபடியால், அவைகளில், ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யரால் இயற்றப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ மதம் ஸர்வவேத ஸம்மதமும் ஸர்வோத்க்ருஷ்டமும் நிர்துஷ்டமும் நிராக்ஷேபமுமாயிருப்பதால், மிகவும் மேலானதென்றும் உபந்யஸித்தார்.

7வ - ப்ரஸ்தாநாத்யாயத்தில் ஸ்ரீ பகவான் ஸாக்ஷாத்தாகத் திருவாய் மலர்ந்தருளின முக்கியமான "பகவத்கீதை" என்னும் மோக்ஷசாஸ்த்ரம் அவதரித்த காரணங்களும் ஸமய ஸந்தர்ப்பங்களும்,

8வ - அந்த பகவத்கீதையிலுள்ள 18-யோகங்களென்னும் அத்யாயங்களின் ஸங்க்ரஹார்த்தங்களும்,

9வ - அந்த சாஸ்த்ரத்தின் மேன்மையும், அதனால் நமக்கு உண்டாகும் ப்ரயோஜனங்களும்,

10வ - பரமகாருணிகனான பகவான் ஸ்ரீமந்நாராயணன் சேதநோஜ்ஜீவநார்த்தமாக பரமபதத்திலிருந்து வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாரூபியாய் அவதரித்த விதங்களும் உத்தேசங்களும்,

11வ - வேத ஸம்மத மதங்களில் தத்காலம் ப்ரமுகமாக அங்கீகரிக்கப்பட்ட ஏகதத்வ தத்வத்வய தத்வத்ரய ப்ரதிபாதகங்களான அத்வைத த்வைத விசிஷ்டாத்வைத மதங்களில், விசிஷ்டாத்வைதம் மற்றவைகளைக்காட்டிலும் விசேஷச்ரேஷ்டமென்றும் நம் ஆசார்யர்கள் நிரூபணம் செய்ததைப்பற்றியும் விசதமாகக் கூறினர்.

12வ - நம் ஸம்ப்ரதாயமாகிறபடி ஷை விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் நிர்த்தேசிக்கப்பட்ட சித் அசித் ஈச்வரன் என்னும் தத்வங்களின் ஸ்வரூப ஸ்வபாவ ஸ்திதி ப்ரவ்ருத்திகளில் பரஸ்பர பேதமும், ஈச்வரனுக்கு மற்றை இரண்டும் ஸ்வாதீநமாகவும் சரீரமாகவும் இருக்கும் விதமும், கார்யகாரணங்களில் அவைகளுக்கு உரிய பரஸ்பர ஸம்பந்தங்களும், சேதநர் கடைத்தேறும் வழிகளும் தெளிவாய் உரைத்தனர்.

14வ - ஸர்வ சரண்யனும் மோக்ஷப்ரதனுமாகிய ஸ்ரீமந் நாராயணனை அடையும் உபாயங்களாகிய பக்தி ப்ரபத்தி மார்க்கங்களைத் தான் சில அவதாரங்களில் உபதேசித்தபடி, மறுபடியும் ஜனங்களுக்கு அப்போதைக்கப்போது

தெரியப்படுத்தி, பகவானுடைய திருக்கல்யாண குணங்களை நன்கு விவரிக்கப் பகவானால் நியமிக்கப்பட்ட விஷ்வக்ஸேநர் முதலான திவ்யஸூரிகள் பரமபதத்திலிருந்து பூலோகத்திற்கு எழுந்தருளி ஆழ்வார்களாக அவதரித்து, பக்தர்களுக்குச் செய்த ஜ்ஞாநோபதேசமும் அந்தந்தத் திவ்ய தேசத்திய பகவானுடைய கல்யாண குணங்களையும் சரித்திரங்களையும் திவ்யப்ரபந்த ரூபமாய்ப் பாடி, அவ்வகையால் சில உபநிஷதர்த்த ஸந்தேஹங்களை நிவ்ருத்தி செய்ததையும் இன்பமாக இயம்பினர். அந்த ஸ்வாமியின் கல்வியையும் ஜ்ஞாநத்தையும் சாதுர்யத்தையும் பார்த்து யாவரும் ஸந்தோஷித்தனர்.

## ஸ்ரீ பாஷ்யகார விரோதிவரூதிநீ ப்ரமாதிநீ.

II. ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யரால் ஸ்தாபிக்கப்பட்டு ஸித்தாந்த ஶிரோமணி என்று ப்ரஸித்தியடைந்த நம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குக் கண்டகரூபமாய் அந்யமதஸ்தரில் ஒருவர் "ஸ்ரீ பாஷ்யகாரவிரோதி வரூதிநீ" என்னும் பெயரால் ஓர் க்ரந்தத்தை ஸுமார் 200 - வருஷங்கட்கு முன் செய்தார். அதைக் காளஹஸ்தியில் ஒருவர் இப்போது ப்ரசுரம் செய்திருக்கிறார். ஸர்வோத்க்ருஷ்டமான நம்மதத்தைப் பலவாறாக தூஷிக்கும் இக்ரந்தத்திற்கு நாம் ஸமாதானமாய்க் கண்டனம் எழுதவேண்டிய அவஶ்யமேயில்லை. அந்த க்ரந்தகர்த்தாவுக்கு ஏறக்குறைய ஸமகாலிகராயும், நம் மத ஸித்தாந்தத்தை அநேக க்ரந்தங்களால் நிலைநிறுத்தினவரும் வித்வத்வரேண்யருமான ஸ்ரீ ஸூரபுரம் அண்ணயாசார்யர் அந்த தூஷண க்ரந்தத்தை "ஸ்ரீ பாஷ்யகாரவிரோதி வரூதிநீப்ரமாதிநீ" என்ற க்ரந்தத்தால் நூறுவிதமாய்க் கண்டித்து நம் ஸித்தாந்தம் நிர்துஷ்டமென்று நிர்ணயித்திருக்கிறார். அப்படிப்பட்ட க்ரந்தரத்னத்தை நாம் இப்போதாகிலும் வெளியிடாவிட்டால் அந்த க்ரந்தம் லுப்தமாவதுமன்றி, நம் ஸித்தாந்தத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கைக்குறைவும் நேரிடும். இந்த க்ரந்தத்தை அச்சிடுவதற்குச் சுமார் ரூபாய் 250 ஆகுமென்று தெரியவருகிறது. 1000 - ப்ரதிகள் அச்சிடும்படி உத்தேசமாகையால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் யாவரும் இம் மஹா கைங்கர்யத்திற்கு உதவிசெய்ய ப்ரார்த்திக்கிறோம்.

III. இவ்விடத்தில் ஸ்ரீ கோவிந்தராஜன் ஸந்நிதிவீதியின் உட்புறத்திலிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஶிதிலமாயிருக்கும் வண்ணம் முன் அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றி ஜீர்ணோத்தாரணத்திற்காக இதுவரையில் ரூ. 450 அனுப்பினதாகவும், அதற்குத் தொடர்ச்சியாக இப்போது அந்த ஆஸ்தானத்தை அலங்கரிக்கும் அழகிய சிங்கரும் சுமார் 10-நாளைக்கு முன் ரூ. 500 அனுப்பினதாகவும் தெரியவருகிறது. இப்படிப்பட்ட முக்ய திவ்யதேசத்தில் மடம் அநாத்ருதமாய் ஶைதில்யமடைவது யுக்தமன்றென்று ஸ்ரீ ஜீயருக்குத் திருவுள்ளத்திற்பட்டு, இதைக்குறித்து ஸ்வாமி ஶ்ரத்தைவைக்கிறார் என்பதைக்கேட்டு, அந்தத் திருவடி ஸம்பந்தமுள்ளார்யாவரும் மிகவும் ஸந்தோஷிக்கிறார்கள். த்வரையில் அந்த கார்யத்தைப் பூர்த்திசெய்வித்து, ஸ்ரீ அழகிய சிங்கர் எப்போது இவ்விடம் எழுந்தருளி அநுக்ரஹிக்கப்போகிறார் என்று ஶிஷ்யவர்க்கங்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

திருப்பதி, 28—2—16.

ஸி. கோபாலாசார்யர்,
கார்யதர்ஶி, ஸ்ரீ வை. ஸி. ஸபை, திருப்பதிப் பிரிவு

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] ராக்ஷஸ ௵ பங்குனி ௴ [ஸஞ்சிகை 2.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸநாதந தர்ம மஹாஸங்கம்.**

மார்ச்சு மாஸம் 22 - தேதி முதல் 25 - ம் தேதிவரையில் ஸநாதந தர்ம மஹா ஸம்மேளநமெனும் ஸங்கமானது முக்தி தரும் நகர்களில் ஒன்றான மதுராபுரியில் நடந்தது. அந்நகர்க்கு உண்டாயிருக்கும் விசேஷமென்னென்றால், ஸர்வேஶ்வரன் தன்னுடைய ஐஶ்வர்யத்தைக் கொஞ்சமும் ஸங்கோசிக்காமல் அந்நகரத்தில் அவதரித்தான் என்பதுதான். அப்படிப்பட்ட மஹா க்ஷேத்ரத்தில் கூடுகின்ற ஸங்கத்தை ஆர்ய ஸம்ப்ரதாயாபிமாநிகள் யாவரும் வந்து தர்சிக்கவேண்டுமென்று ஸங்கப்ரவர்த்தகர்களால் ப்ரார்த்திக்கப்பட்டது. அக்காலம் ஸ்ரீ க்ருஷ்ணன் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளும் காலமென்றும் வெளியிடப்பட்டது. வ்ரஜபூமி யென்றும், பகவானுடைய லீலைகட்கு இடமான ஸ்தாநமென்றும், பகவானுடைய பாதரேணுக்களால் வ்யாப்தமாயிருக்

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK COMPANIES
16 MAY 1916
MADRAS



கும் புண்யபூமியென்றும், அவன் நித்யவாஸம் செய்கின்ற திவ்ய க்ஷேத்ரமென்றும், கீர்த்திபெற்ற மஹாஸ்தலத்தில் பாகவதர்கள் கூடினார்கள்; ஸநாதந தர்மத்தை ரக்ஷிக்கவேண்டிய ப்ரகாரங்களை யோசித்துப் பல தீர்மாநங்களும் செய்தார்களென்று தெரிய வருகின்றது.

மதத்தை ரக்ஷிக்கவேண்டு மெனும் யோசனையானது ஸமீப காலத்தில்தான் நம்மவர்க்குள் சிலர்க்கு உண்டாயிருக்கின்றது. நம்மவரில் சிலர் இவ்வித ப்ரயத்நங்களுக்கு விரோதிகளாகவும் ப்ரகாசிக்கின்றனர். இந்த விஷயத்தில் பகுபெயர் உதாஸீநராக நிற்கின்றார்கள். பரமபுருஷன் அவர்களுடைய புத்தியை அநுப்ரவேசித்து நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்.

* * * * * *

**ஓர் விஜ்ஞாபநம்.**

தைமாஸம் ஸஞ்சிகை 464-வது பக்கம், 18-வது வரியில், "செய்திருக்கும்" என்பதற்குப் பதிலாக, "செய்திருக்கும்படி" என்றும், 466-ம் பக்கம், 2-வது வரியில், "அநுச்சாரணம்" என்பதற்குப் பதிலாக, "அநூச்சாரணம்" என்றும், அதே பக்கம் -14-வது வரியில் "ஸத்ய" என்பதற்குப் பதிலாக "கத்ய" என்றும் திருத்திக்கொள்ள ப்ரார்த்திக்கப்படுகின்றது.

ஜநகநந்திநீ -7-வது பாகம் மாசிமாஸம் ஸஞ்சிகையில் அச்சிடப்பட்டது. அந்த அத்யாயம் அந்த ஸஞ்சிகையில் முடிவு பெறவில்லை. அதன் சேஷமும் அடுத்த அத்யாயமும் இந்த ஸஞ்சிகையில் அச்சிடப்படுகின்றன.

**ஹார்டிஞ்சு ப்ரபு.**

சென்ற ஐந்தரை ஸம்வத்ஸரங்களாய் நம்முடைய தேசரக்ஷணார்த்தம் ராஜப்ரதிநிதியாய் நின்று, ராஜாங்கத்தை நடத்திவந்த ஹார்டிஞ்சு ப்ரபுவானவர் இந்த மார்ச்சு மாஸத்தோடு தம்முடைய பாரத்தை நிவர்த்தித்துக் கொள்கின்றனர். இந்தத் தேசவாஸிகளான ஜநங்களுடைய அபிப்ராயத்தில், நம் தேசத்திற்கு ராஜப்ரதிநிதிகளாய் வந்த ப்ரபுக்களில் ஹார்டிஞ்சு ப்ரபு



ச்ரேஷ்டரெனத்தக்கவர். நம் தேசத்தார் உகந்தவர்களை ப்ராயேண ஐரோப்யர்கள் உகப்பது துர்லபம். அவர்கள் ச்ரேஷ்டராக எண்ணப்பட்ட ராஜப்ரதிநிதிகளை இந்தியர் அவ்வண்ணம் எண்ணுகின்றார்களில்லை.

நம் தேசத்தார் அபேக்ஷிக்கும் அம்சங்களைத் தருவதற்கு ஒரு ராஜப்ரதிநிதிக்கும் அதிகாரமில்லை. நம்முடைய அபேக்ஷைகளைத் தயையுடன் கேட்பவர் நமக்கு ஹிதர். அவற்றைக் கேளாமலிருப்பவரும், கேட்டபோது பருஷோக்திகளால் அவற்றை நிராகரிப்பவரும் நம்தேசத்தவர்க்கு அஹிதராவார். நம்முடைய சக்ரவர்த்திக்கும் நாம் வேண்டும் வரங்களை யெல்லாம் கொடுக்கத்தக்க அதிகாரமில்லை என்பார்கள். இவ்வதிகாரம் இங்கிலீஷ்க்காரர் குடியரசைச் சேர்ந்ததாம். அது இந்தியர்க்கு அநுகூலமாக ப்ரவர்த்திக்கப் போகின்ற காலம் யோசனைக்கு எட்டவில்லை. ஆனாலும் அதிகாரம் உள்ளவரையில் நம் தேசஜநங்கள் அபேக்ஷித்த வழிகளில் அவர்களுடைய அநுகூலத்தில் சிந்தையும் ப்ரவ்ருத்தியும் உள்ள உத்யோகஸ்தர்களை நம் தேசத்தார் விச்வஸிக்கின்றனர். இப்படி ஸுஹ்ருத்தமரான ஹார்டிஞ்சு ப்ரபுவுக்கு ஆயுஸ் ஆரோக்யம் முதலான ஸர்வாநுகூலங்களையும் உண்டாக்க வேண்டுமென்று பகவானை ப்ரார்த்திக்கின்றோம்.

* * * * * *

**தஷிலாமா.**

திபத் தேசத்தில், தசிலுன்போவெனும் ஸ்தாநத்தில் வஸிக்கும் பௌத்த ஸம்ப்ரதாயாசார்யரான தஷிலாமா வெனப்பட்ட யதீச்வரனைப்பற்றி, அவரைத் தர்சித்த ஸ்வென்ஹெடின் எனும் ஐரோப்யர் எழுதுகின்றதை, மார்ச்சு மீ 'மாடர்ன் ரிவ்யூ' பத்ரிகையில் பார்த்து இவ்விடம் எழுதுகின்றோம். தஷிலாமா எனும் யதியை புத்தருடைய பரஸ்வரூபமாகின்ற அமிதாபருடைய அவதாரமென்று பௌத்தர் விச்வஸிக்கின்றனர்.

"தஷிலாமாவின் தர்சநம் ஆச்சர்யமானது; என்றும் மறக்கத்தகாதது. என் மநஸ்ஸில் எக்காலத்திலும் யாதொரு புருஷனும் அவ்வளவு ஆழ்ந்ததும் அழிக்கக்கூடாததுமான ப்ரதீதியை உண்டாக்கவில்லை. மநுஷ்ய ரூபத்துடன்கூடிய தெய்வமென்று அவ்வெண்ணம் எனக்கு உதிக்கவில்லை. ஸௌஹார்த்தத்திலும்,

நிர்த்தோஷதையிலும், பரிசுத்ததையிலும், ஸம்பூர்ணமான நிலையை ஸாத்யமானவரையில் எட்டியிருக்கும் மநுஷ்யனென, அவரைப்பற்றி எனக்கு எண்ணம் உண்டாயிற்று. அவருடைய முகப்ரகாசத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். எல்லையற்ற ப்ரியமும், சாந்தியும், பூததயையும் அதில் ப்ரகாசித்தன. அத்தகைய மந்தஸ்மிதத்தை நான் எங்கும் கண்டதில்லை. அவ்வளவு அழகாய் அமைந்தவாயும், கம்பீரமான தோற்றமும் (மற்றெங்கும் நான் கண்டேனில்லை.) தூங்கும்போது ஸ்வப்நத்தில் ரம்யமானதும், மதுரமானதுமான வஸ்துக்களைக் கண்டவன் கொள்ளும் புன்சிரிப்பைப் போன்றது அவர் புன்சிரிப்பு. அது அவரைவிட்டு எப்போதும் அகலவில்லை. எங்களுடைய கண்கள் ஸந்தித்தபோதெல்லாம் அந்த மந்தஹாஸம் விகஸித்தது; ப்ரீதியுடனும், நமக்கு அவரிடம் ப்ரியம் வளரும் வண்ணமும், அவர் ஶிரஃகம்பம் செய்தபோதெல்லாம், 'எனது ஸ்நேஹத்தைப் பூர்ணமாய் நம்பு; ஏனெனில் எனது சித்தம் எல்லா மநுஷ்யரிடமும் அநுகூலமாயிருக்கின்றது.' என்று அவர் சொல்வதுபோல் தோன்றியது."

"அவர் அமிதாபரின் அவதாரம்! ஶாஶ்வதமாயிருக்கும் அமிதாபரின் ஆத்மாவானது தக்காலம் வர்த்திக்கும் ப்ராக்ருத ஶரீரம்! ஆதலால் அப்ராக்ருத ஜ்ஞாநமும், ஸர்வஜ்ஞதையும் பூர்ணமாய் நிறைந்த ஒரு தேவதை! திபத் தேசத்தார்கள் அவரைப் பூத பவிஷ்யத் வர்த்தமாந காலங்களில் நடக்கும் யாவற்றையும் அறிந்தவரென்று நம்புகின்றார்கள். அவர் அமிதாபர் தானோ நானறியேன். அவர் அத்யந்தம் அஸாதாரண புருஷர் என்பதும் அந்யாத்ருஶமானவர், அத்விதீயர், ஸத்ருஶரற்றவர் என்பதும் நிச்சயமே. அவருடைய தர்சநம் எனது பாக்யவிசேஷமென்றும் அவர் ஸமீபத்தில் நான் இருந்த காலத்தை நான் என்றும் மறவேனென்றும் அவருடன் சொன்னேன். தஷிலாமாவையும் அவர் என் மநஸ்ஸை ஆகர்ஷித்த விஶேஷத்தையும் தவிர, மற்றொன்றை நான் எண்ணக்கூடியவனல்லேன். அவரது தர்ஶநத்தால் நான் அபஹ்ருத சித்தனாய், உன்மத்தனென, லாப்ராங் எனும் அவர் மடத்தை விட்டு வெளிப்பட்டேன். நான் திபத்தில் கழித்த பஹு-திநங்களைவிட அந்த ஒருநாள் எனக்கு விசேஷித்தது; அந்த தேசத்தில் உத்க்ருஷ்ட வஸ்துவை நான் கண்டதாக நினைத்தேன்."



"சிலர் பரரால் தர்சிக்கப்பட்ட உடனே, அவரது சரித்ரம் பூர்ணமானதென்றும், லோகத்தில் மதிக்கத்தக்கதென்றும் எண்ணும்படிச் செய்வார்கள். அப்படிப்பட்ட துர்லபராயும், சுத்தராயும், ஸத்வ்ருத்த முடையவராயும் இருப்பவரில், தஷிலாமா ஒருவர். ஸத்யமாய்ச் சொல்கின்றேன். 'தஷிலாமாவின் ஜ்ஞாபகமானது நான் இருக்கும் வரையில் என்னைவிடாது; அவருடைய ஸ்நேஹம் ஹார்த்தமானது; அவர்சரித்ரம் நிர்த்தோஷமாய் ப்ரகாசிக்கின்றது; சுத்த மநஸ்ஸுடனும், விநயத்துடனும்கூடி அவர் ஸத்யாந்வேஷியா யிருக்கின்றார். தர்மத்தில் விஶ்வாஸத்துடனும், அந்தராத்மாவுக்கு த்ருப்தியாயும் நடப்பதால், தமது ஶரீரம் ஸர்வஶக்தரான அமிதாபருக்கு யோக்யமான வாஸஸ்தாநமாகின்றதென்பதை அவர் அறிகின்றார்."

ஸ்வென்ஹெடின்துரை கீழ்த்தேசத்தாருடைய நாகரிகத்தில் விஶேஷ மதிப்பைக் கொண்டவர் அன்றும். அவர் தஷிலாமாவைப்பற்றிச் சொன்னதை ஸந்தோஷத்துடன் வரைந்தோம். நம்முடைய மடாதிபதிகளும் வைதிக ஸம்ப்ரதாயாசார்யர்களும் மேலெழுதியவற்றைச் சிந்திப்பாராக.

* * * * * *

**பலதேசத்து ஸ்த்ரீகளினுடைய குணங்கள்.**

ஸத்யபலாதேவி யென்றொரு பங்காள ஸ்த்ரீரத்நம் பூமியில் பல தேசங்களையும் போய்ப் பார்த்தவள். இந்திய ஸ்த்ரீகளுடைய வித்யா விஷயத்தைப் பற்றிக் காசியில், ஹிந்து கலாஸங்கத்தின் ஆரம்போத்ஸவ காலத்தில் அவள் உபந்யாஸம் செய்தனள். அப்போது பலதேசங்களுடைய ஸ்த்ரீகளைப் பற்றி வர்ணித்தாள். பர்மாதேசத்தில் பெண்களெல்லாம் படித்தவராம். எவ்விதமான தொழிலிலும் இஷ்டப்படி அவர்கள் ப்ரவேசிக்கலாமாம். இஷ்டப்படி எல்லா ஜாதியரையும் மதத்தினரையும் அவர்கள் கல்யாணம் செய்துகொள்கின்றனராம். மநோபலமும், தர்மத்தில் நிலையும் அவர்களுக்கு ப்ராயேண இல்லையாம். ஓரே நிமிஷத்தில் இஷ்டப்படித் தம் மதத்தை அவர் மாற்றிக்கொள்வராம். ஆதலால் ஐம்பது வர்ஷங்கட்குள் பர்மா ஜாதியார் அற்றுப்போவராம்.

சைனாதேசத்து ஸ்த்ரீகள் ப்ராயேண படிக்காதவராம். ஆனால் அவர்கள் உழைப்பாளிகளாம். தம் புருஷரிடமும் பிள்ளைகளிடமும் ப்ரியமுள்ளவராம். செட்டாகப் பிழைப்பவராம். புருஷர்க் கடங்கினவராம். புருஷர் தொழில்களில் அவர்களுக்கு உதவி செய்பவர்களாம். ஸ்வாதந்த்ரியம் குறைந்திருந்தும், த்ருப்தராயிருக்கின்றாராம். ஆதலால் சைனாதேசத்தார் எங்கு சென்றாலும் வ்ருத்தியாகின்றனராம், பணக்காரரும் ஆகின்றனராம்.

ஜபான்தேசத்து ஸ்த்ரீகள் எத்தொழில்களிலும் தைர்யமாக ப்ரவேசிக்கின்றனராம். மிகவும் கஷ்டப்பட்டு வேலைசெய்கின்றனராம். சித்ர வேலைகள் செய்வதில் அவர்களுக்கு மிகவும் ஸந்தோஷமாம். அமெரிக்கா ஸ்த்ரீகளைப்போல் பரிணமிக்கின்றனராம். கலாசாலைகளில் படிக்கின்றனராம். கல்யாணம்செய்து கொண்ட ஸ்த்ரீகள் ஸாதாரணமாய் நெறியில் நின்றாலும், அந்ய ஸ்த்ரீகள் பலவித நடத்தைகளுடன்கூடி அந்நாட்டில் காணப்படுகின்றனராம். பணத்திற்காக அவர்களில் அநேகர் தர்மலோபம் செய்யத் துணிந்தவராம்.

அமெரிக்கா ஸ்த்ரீஜநங்கள் புத்தியையும், தர்மத்தையும், மதத்தையும் பற்றி மிகப் படித்தவராம். யாவரும் எளிதாகவே மிகவும் அந்நாட்டிற் படிக்கக்கூடுமாம். அமெரிக்கா ஸ்த்ரீகள் ஸ்வஜீவந விஷயத்தில் ஸ்வதந்த்ரராம். குடும்பத்துக்கும், பொது நன்மைக்கும் அவர் மிகவும் ஸஹாயமாய் இருக்கின்றனராம். ஆதலால் அமெரிக்காவுக்கு நல்லகாலம் உண்டாகுமாம்.

ஐரோப்யஸ்த்ரீகளில், தென்பாகத்தில் வஸிப்பவர் அதிகமாக ஸுகத்தை இச்சிப்பவராம். ஐரோப்ய ஸ்த்ரீகள் ப்ராயேண புத்திசாலிகளாம்; உழைப்பாளிகளாம்; படித்தவராம்; நாகரிகமுள்ளவராம். ஆனால் புருஷர்களுடைய சக்தியை அதிக்ரமித்துச் செலவை அபேக்ஷிக்கின்றனராம்: அதனால் எப்போதும் அத்ருப்தராய் இருக்கின்றனராம். தமது குணங்களை விசேஷித்து மதிக்கின்றபடியால், அடிக்கடி துக்கமடைகின்றனராம். எளிதில் கோபம் கொள்கின்றனராம்: அதனால், படித்தவர் குடும்பங்களிலும் கலஹங்கள் விளைகின்றனவாம். ஐரோப்ய ஸ்த்ரீகள் செலவழிப்பதில் சிறந்தவராதலால், புருஷர்கள் ப்ராயேண விவாஹத்தை இச்சிப்பதில்லையாம். ஐரோப்ய தென்னாட்டுப் பெண்க



ளும் விவாஹத்தில் களிக்கின்றனர் இல்லையாம். பணமில்லாப் பெண்கள் பிராஞ்சு தேசத்தில் விவாஹம் காண்பது அரிதாம். ஆதலால் அங்கே ஜநங்கள் குறைகின்றனராம்.

**ஆர்யநாட்டு ஸ்த்ரீகளினுடைய குணங்கள்.**

இப்படிப் பல தேசங்களிலும் ஸ்த்ரீகளைப் பார்த்துவிட்டுப் பெண்கட்குள் உத்தமிகள் இந்தியாவில்தான் இருக்கின்றாரென ஸத்யபலாதேவி கண்டுகொண்டனள். மற்ற தேசத்தார் அநுபவத்தைக் கண்டுதான், நமக்குள்ள குணங்களை நாமறியவேண்டுமாம். பள்ளிக்கூடங்களில் கிடைக்கும் தத்கால படிப்பினால் ஸரியான ஸ்த்ரீரத்னங்கள் தேறமாட்டாராம். ஒரு குடும்பமென்றால் - எஜமானன், பத்நீ, பிள்ளைகள், மற்றோர் யாவரும் பலவாறு தம்முடைய ப்ரியங்களை த்யாகம்செய்ய வேண்டியதாகின்றதாம். அக்குடும்பத்தில் தான் பெண்கட்குத் தக்க கல்வி கிடைக்குமாம். நம்தேசம் ஏழைதேசமாம். பல குடும்பங்களில் அல்பமான ஆகாரம் கிடைத்தபிறகு மிகுதியாவது ஒன்று மில்லையாம் இப்படிப்பட்ட ஏழை ஜநங்கள் தங்கள் குழந்தைகளையெல்லாம் எவ்விதம் படிப்பிக்கப் பொருந்தும்? முடிவில் பார்த்தால், போதுமான ஆகாரமின்றி, நம்தேசத்தில் சிசுக்களும் ஜநங்களும் விஸ்தாரமாக இறக்கின்றனராம். நம் ஸ்த்ரீகள் காலை 4-மணிக்கு எழுந்து ராத்ரி பத்துமணி பர்யந்தம் இடைவிடாமல் வேலைசெய்கின்றனராம்; தாந்யத்தை எந்திரம் பிடித்து மாவாக அரைக்கின்றனராம்: ஜலாசயங்கட்குப்போய் ஜலம்கொண்டு வருகின்றனராம்; வீட்டைப் பெருக்குகின்றனராம்; குழந்தைகளை ஸ்நாநம் செய்விக்கின்றனராம்; பாத்ரங்களைச் சுத்திசெய்கின்றனராம்; சமையல் செய்கின்றனராம்; வீட்டில் ரோகிஷ்டரை ஆதரிக்கின்றனராம்; பர்த்தாவான வீட்டு எஜமானனுக்கு [illegible]ரூஷை செய்கின்றனராம்; இத்துடன் இளங் குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டுமென்றால், பாலெப்படிச் சுரக்கும் என்று கேட்கின்றாள் ஸத்யபலாதேவி.

நம் தேசத்து ஸ்த்ரீஜநங்கள் தெய்வப்பிறப்பினராம்; ஸத்யம் தவறாமல் தர்மத்தை ரக்ஷித்துக்கொண்டு, ஸந்துஷ்டரான ஸ்த்ரீகள் இந்தியா தேசத்தில் தான் உள்ளனராம். மேல் விவரித்தபடி ஒரு ஏழைக் குடும்பத்தை நிர்வஹிக்க ஸஹாயமாயிருக்கும் அவர்களுடைய த்யாகசீலதையும், உயர்ந்த பாதிவ்ரத்யமும், குடு

ம்ப நிர்வாஹ ஶாஸ்த்ரங்களில் ஸமர்த்தரான ஐரோப்ய வித்வான்கள் யோசனைக்கும் எட்டமாட்டாவாம். இப்படித் தர்மத்தில் நிலைகொண்ட ஸ்த்ரீகளை நாம் இழக்கவொண்ணாதாம். இப்படிப்பட்ட தெய்வப் பிறப்பெனக்கூடிய மாதர்களை யுண்டாக்கும் க்ரஹ ஸம்ஸர்க்கங்களை நாம் அழிக்க ஒண்ணாதாம். இந்தக் குணங்களை விடாமல், இவற்றுடன் சரீரபலமும், புத்திபலமும், குடும்பவகையில் வேண்டிய படிப்புதான் இந்திய ஸ்த்ரீகட்குத் தேவையானதாம்.

இப்படி யெல்லாம் ஸத்யபலாதேவி சொன்னாள். ஸ்த்ரீகட்குள் பரவும் தத்காலநாகரிகம், இன்னும் இவ்வண்ணமே அநுவர்த்தித்ததாகில், ஐம்பது வர்ஷங்கட்குள்ளாகவே, ஆர்யஜாதியென்பது பேருடன்கெடும். ஸ்த்ரீகள் க்ரஹ வ்யாபாரங்களை ப்ராயேண விட்டு விட்டார்கள். பள்ளிக்கூடம் போகின்றார்கள்; கலாசாலைகளும் அவர்க்காக உண்டாகின்றன; கலாஸங்கமும் வரப்போகின்றது; க்ரஹங்களில் ஸத்ஸங்கம் அற்றுப்போகின்றது. ஸ்வாதந்த்ரியத்தை வஹிக்கின்றார்கள்; ஸூர்யன் உதித்தபிறகுதான் அவர்களுடைய கண்களாகிய தாமரைகள் மலர்கின்றன. எழுந்தவுடன் காப்பியை அபேக்ஷிக்கின்றனர். ஆகாரத்துக்கு வேண்டிய அளவு ஒருவன் ஸம்பாதித்தால், அந்யர்தான் அவன் வீட்டில் சமைக்கவேண்டும். வீட்டை வேலைக்காரி சுத்திசெய்வள். பிள்ளைகளை அவளே குளிப்பாட்டுவள். குழந்தைகட்கு முலைப்பால் போய் விலைப்பால்கள் வளர்கின்றன. தூங்கும் வேளையும் சாப்பிடும்வேளையும் தப்ப, மற்ற வேளைகளைப்போக்க, நாவலுண்டு, பாட்டுண்டு, வாத்யமுண்டு, வம்பளப்புண்டு; பட்டணத்தில் கடற்கரையுண்டு, க்ளப்புண்டு, ஸுகார்த்தம்கூடும் ஸபைகளுண்டு; ஸுந்தர நாடகசாலைகளுமுண்டு; பார்ட்டிகள் உண்டு; உபந்யாஸங்களுண்டு; சிற்றுணவுகளும் பாநங்களுமுண்டு. நாகரிகம் ஓங்கிவளர்கின்றது. இதை யோசித்துத்தான்.

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

என்று பகுகாலத்துக்குமுன் சொல்லப்பட்டது.

*  *  *  *  *  *



பத்ராதிபர்க்கு ஒரு ஸ்வாமி எழுதின விஷயம்.

தை மாஸ ஸஞ்சிகையில், தேசிகனையும் ததீயர்களையும் தூஷித்து எழுதப்பட்ட ஒரு கடிதத்தை நாம் அச்சிடாமல் விட்டோம். கலாவைஷம்யம் பெருகுமென்றும், வாதம் வளருமென்றும், அவ்வண்ணம் விட்டோம். தூஷணங்கட்கு ஸமாதாநம் அபேக்ஷித்த ஒரு வடகலை ஸ்வாமிக்காக, “வடகலையார் பின் குறித்தவண்ணம் ஸமாதாநம் சொல்லக்கூடும் என்பதை மாத்ரம் காட்டுகின்றோம்”, என்று சில விஷயங்கள் எழுதினோம். இதைக் கடாக்ஷித்த தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தராயும் ஸ்ரீரங்கவாஸியாயு மிருக்கின்ற ஒரு ஸ்வாமி, “[illegible]” என்று ஒருகடிதம் எழுதுகின்றார். வைஷம்ய நிவாரணத்துக்காகவே ஸபை விஸ்தரிக்கப்பட்டது. வைஷம்ய ப்ரதிபாதநாவஸரங்களை நாம் வேண்டுகின்றோமில்லை. உபயகலாநிஷ்டர்களுக்குள் அபிப்ராய பேதமுண்டென்பதை அந்த ஸ்வாமியே ஒப்புக்கொள்கின்றார். அதனிமித்தமாகத் தத்காலத்தில், பரஸ்பரம் நிந்தையும், த்வேஷமும்விலகவேண்டு மென்பதுதான் நம்முடைய ப்ரார்த்தநை. ஸ்ரீரங்கத்து ஸ்வாமி கடிதத்தில் நாம் ஸந்தோஷிக்க வேண்டிய அம்ஶம் என்னவென்றால், ஸ்வாசார்யோக்திகளில் பூர்ணவிஶ்வாஸம் இருக்கும்போதும், அந்த ஸ்வாமி தேசிகனிடம் த்வேஷத்தையும் நிந்தையையும் விலக்கி மர்யாதையுடன் எழுதுகின்றார். கரிச்சங்கால் கிடாம்பி ஸுந்தராசார்யரிடம் வந்த ஸ்வாமியும் அவ்வண்ணம் நின்றனராகில் நாம் இந்த வாக்யங்களை எழுத இடமில்லாமல் போயிருக்கும்.

# தத்வவிசாரம்.

## ப்ரபந்நன் தன் ஸ்வரூபத்தில் நிஷ்டையை அறிந்துகொள்ளல்.

ப்ரபந்நன் இப்படித் தனக்கு நிஷ்டையுண்டென்று தானறியும்படியைப்பற்றி விமர்ஶிக்கின்றார். இதரர்களால் தனக்கு அவமாநம் நேர்ந்தபோது, அவர்கள் தன் விஷயமாகச் சொல்லுகின்ற குற்றங்கள் தன் தேஹத்தைப் பற்றுகின்றன வென்றும், அவை தன் ஸ்வரூபத்தில் தட்டுகின்றதில்லை யென்றும் அறிந்து, அதனால் வருத்தப்படானாகில் தனக்கு நிஷ்டையுண்டென் றறியலாம். '[illegible]'। [சபிக்கப்பட்டவனிடம் எந்தப் பாபம் உளதோ அதுசபிக்கின்றவனைப் போய்ச் சேர்கின்றது] எனும் ஶாஸ்த்ரார்த்தப்படியே, தன்னைத் தூஷித்துத் தன் பாபத்தை வாங்கிக்கொள்கின்ற மதிகேடரை நோக்கி, '[illegible]'॥ [ப்ராணிகள் புத்தவைரம் கொண்டனவாய் த்வேஷிக்கின்றனவாகில், புத்திமானால் ஐயோவென்றும், அஜ்ஞாநத்தால் மூடப்பட்டன வென்றும், ஶோகிக்கத்தக்கவை] '[illegible]'॥ [பரனைத்தூஷித்து அவன் பாபத்தைக் கைக்கொண்டு தன் ஆத்மாவுக்கு த்ரோஹம் செய்பவனை, தன் நிஜஸ்வரூப மறியாத மூடனை, லோகமர்யாதையைக் கடந்தவனை, ஸந்மார்க்கத்தைத் துறந்தவனை, ஆதலால் நரகத்தின் தீக்கு விறகாகப்பட்டவனைப்பற்றி வித்வான்



மிகவும் இரக்கம் கொள்ளக்கடவன்] என்கிற ஶ்லோகங்களின்படியே, அவர்களிடம் கரைபுரண்ட க்ருபையைப் பாராட்டினானாகில் தனக்கு நிஷ்டையுண்டென்று அறிந்துகொள்ளலாம். இன்னும், தன்விஷயமாக '[illegible]' [வரம்புகடந்து நடப்பவன், அல்பன், கபடி, அஸூயைக்கு மூலஸ்தாநம், நன்றிமறந்தவன், துரபிமாநமுள்ளவன், காமமுள்ளவன், வஞ்சனைசெய்பவன், ஹிம்ஸகன் பாபி] என்று ஆளவந்தார் ஸாதித்ததிலும், 'வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால்' என்று ஆழ்வார் பாசுரங்களாலும் உதாஹரிக்கப்பட்டுத் தன்னிடம் நின்ற தோஷங்களை யெல்லாம், பரிவாதங்களால் தான் மறவாதிருக்கச் செய்தாரேயென்று, அவரிடம் உபகார ஸ்மரணமும் உண்டாயிற்றாகில், தனக்கு நிஷ்டையுண்டென்று அறிந்துகொள்ளலாம். எல்லா ஜீவர்களுக்கும் பகவானைக்குறித்துப் பரதந்த்ரபாவம் அவ்வவர் ஸ்வரூபத்துடன்கூடியிருக்கின்றதென்பதையும், அவர்க்குள் ஸம்ஸார சக்ரத்தி லகப்பட்டவர்களெல்லோரும் கர்மவஶ்யரா யிருப்பதையும் யோசித்து, நமக்கும், நமக்குத் துன்பம் செய்யும் சேதநர்க்கும், உள்ள கர்மாநுகுணமாகக் கர்மாத்யக்ஷனான பரமபுருஷன் ப்ரேரகனாய் நின்று, அவர்கள் தன் விஷயத்தில் அவ்வண்ணம் நடந்தாரென்று நினைத்து, அவர்கள் பண்ணின பரிவாதாதிகளால் சித்தம் விகாரமற்றிருக்குமாகில், தனக்கு நிஷ்டையுண்டென்று அறியலாம். இன்னும் ப்ராரப்தமான தன்னுடைய பாபவிஶேஷமானது, இத்தகைய பரிவாதங்களால் கழிகின்றதென ஸந்தோஷித்தானாகில் நிஷ்டையுண்டென்று அறியலாம். மேலே விவரித்தவண்ணம் மநஸ்ஸுக்குப் பரிபாகம் உண்டாக வேண்டியதற்கு ஹேதுக்களை விவரிக்கின்றார். எப்படி யென்றால், தானும் தன்னைப்போன்ற ஸர்வசேதநரும் ப்ரக்ருதி விலக்ஷணரென்னும், ஜ்ஞாநத்தால், பரரால் பரிபவங்கள் உண்டாம்போது அவை ஆத்மாவைத் தொடமாட்டாவென்று வருந்தாம லிருக்கையும்; ஸர்வபூதங்களும் தனை

யொத்து ஈச்வரனுக்கு சேஷபூதமாயும், ஸமாநமான ஆகாரத்துடன் கூடினவையாயு மிருத்தலால், அஜ்ஞாநத்தால் தன்னிடம் த்வேஷங்கொண்டு பாபங்களை ஸம்பாதித்துக் கொள்கின்றனவென்று, ஸர்வபூதங்களிடமும் அநுகூலத்தைச் செய்ய யோக்யமான தன் ஜ்ஞாநத்தால் அவற்றினிடம் கரைபுரண்ட க்ருபையைப் பண்ணுவதும்; தன்னிடம் நின்ற குற்றங்களை மறவாமல், தனது ஸர்வதோமுகமான ஆகிஞ்சந்யமெனும் தாழ்ந்த நிலைமையைத் தெரிந்துகொண்டு, அதை, அவர் மறவாதிருக்கச் செய்தாரென்று உபகார ஸ்மரணமும்; ஸ்வரூபத்தில் ஸர்வபூதங்களினிடமும் ஸமனுய், கர்மாநுகுணமாகப் பலப்ரதனும், ஸ்வதந்த்ரனும், ஸர்வஸ்வாமியுமான ஈச்வரனுக்குத்தான் அவனிஷ்டப்படி விநியோகிக்கத்தக்கவன்; மற்றொருவர்க்கு ஆகாதபடி அவனுக்கே நிருபாதிகதாஸன்; பரதந்த்ரன்; தனக்கு ஹிதத்தை அவனே யறிந்து செய்ய வேணுமென்று நிச்சயித்து, தனக்கு ஹிதமுண்டாவது அவனுடைய அதீநம்; என்றிப்படியறிந்து, பரர்செய்யும் பரிவாதாதிகளால் நிர்விகாரசித்ததையும், ஸந்தோஷமும் நடைபெற்றதாகில் தன் ஸ்வரூபத்தில் தனக்கு நிஷ்டையுண்டென்றறியலாம்.

இன்னும் ஸர்வேச்வரனைத் தவிரத் தனக்கு ரக்ஷகரில்லையென்கிற அத்யவஸாயமும், க்ருதக்ருத்யர்கள் ம்ருத்யுவை ப்ரியமான அதிதியைப்போல் எதிர்பார்க்கின்றன ரென்று தெரிவிக்கும், 'க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்' எனும் வசநப்படி, மரணாநந்தரம் என்ன படுவோமோ என்று கலக்க மின்மையும், வரப்போகின்ற புருஷார்த்தத்தில் ஆசையால் ஸந்தோஷமும், வநப்ரவேசகாலத்தில், 'கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வராநநா। நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ஶ்ரிதா'॥ [யானையையோ, ஸிம்ஹத்தையோ, புலியையோ கண்டு ஸீதை பயங்கொண்டாளில்லை. ஏனென்றால் ஸ்ரீராமனுடைய புஜத்தை அவள் ஆச்ரயித்திருந்தாள்] என்



றும், "அஸந்தேஶாத்து ராமஸ்ய தபஸஶ்சாநுபாலநாத்। ந த்வாம் குர்மி தஶக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா" ॥ [ராமன் ஆஜ்ஞையில்லாதபடியாலும், பாதிவ்ரத்யரூபமான தபஸ்ஸை ரக்ஷிக்கவேண்டியும், சாம்பலாகத்தக்க ராவணா! என் பாதிவ்ரத்யரூப தேஜஸால் உன்னைச்சாம்பலாக்குகின்றேனில்லை] என்றும், 'ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்தந:। மாம் நயேத்யதி காகுத்ஸ்தஸ் தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்'॥ [வைரிகளின் ஸேனையை நாசஞ்செய்யுங் காகுத்ஸ்தன், தனது பாணங்களால் லங்கையை நாசஞ்செய்து என்னை அழைத்துக்கொண்டு போனானாகில் அது அவனுக்குத் தகுந்திருக்கும்.] என்றும், பிராட்டி நடத்திக்காட்டினபடி, ரக்ஷகனுடைய ஆச்ரயத்தால் உண்டாகும் நிச்சயமும், தான் சரணாகதி பண்ணிவிட்டபடியால், அதன்மேல் தனக்கு யாதேனுமொரு அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பகவானுடைய அதீநமென்று, அவற்றைப்பற்றி ஸ்வப்ரயத்ந மற்றிருக்கையும் உண்டானதாகில் ப்ரபத்தியில் தனக்கு நிஷ்டையுண்டென்றறியலாம்.

தனது ஜந்மமும் மரணமும் தன் ப்ரயத்நமின்றி யுண்டாக, ஸ்திதிரூபமான தேஹயாத்ராதிகளைப்பற்றிக் கரைதலற்று, ஈச்வர ஸங்கல்பமின்றிக்கு ஒன்றும் நடவாதென்று அறிந்து,

'அப்ரயத்நாகதா: ஸேவ்யா: க்ருஹஸ்தைர் விஷயா: ஸதா।
ப்ரயத்நேநாபி கர்தவ்ய: ஸ்வதர்ம இதி மே மதி:॥
நாஹாரம் சிந்தயேத் ப்ராஜ்ஞ: தர்மமேவாநுசிந்தயேத்।
ஆஹாரோ ஹி மநுஷ்யாணாம் ஜந்மநா ஸஹ ஜாயதே'॥

[ப்ரயத்நமின்றிக் கிடைத்த வஸ்துக்களை எப்போதும் க்ரஹஸ்தர் அடையலாம். ஸ்வதர்மம் ப்ரயத்ந ஸஹிதமாக அவரால் செய்யத்தக்க தென்று என் நிச்சயம். வித்வான் ஆஹாரத்தைப்பற்றிச் சிந்திக்கத்தகாது. அவன் தர்மத்தையே சிந்திக்கவேண்டும். மநுஷ்யர்க்கு ஆஹாரம் ஜந்மத்துடன் உண்டாகின்றது.] என்று சொல்லுகிறபடித் தான் ஒரு ப்ரயத்நம் பண்ணுதிருக்க, சாஸ்

த்ரம் நிஷேதிக்காத வஸ்துக்கள், பகவத் ஸங்கல்பத்தால்தானே வரக்கண்டு, அவற்றை, ப்ராரப்த கர்மபலரூபமான கடன்தீருகின்றதென்று விலக்காமல் அநுபவிக்கையும், இப்படிக் கர்மபலமாகவரும் வஸ்துக்களின் லாபத்திலும், அலாபத்திலும், ஹர்ஷசோகங்களற்று, ஸ்வரூபத்திற்கு அநுரூபமான பகவத் கைங்கர்யத்தில் ருசியும், கதாகதாவென்று பகவானுடைய ப்ராப்தியில் த்வரையும், நடையாடித்தாகில், இவ்வளவென்று அளவிடக்கூடாத பரம புருஷார்த்தத்திலே தனக்கு நிஷ்டையுண்டென் றறியலாம். இப்படி மந்த்ரத்ரயங்களைக்கொண்டு தனது ஸ்வரூபமென்ன, அதை அடைவதற்குத் தான்பற்றின உபாயமென்ன, அந்த உபாயத்தால் வசீக்ருதனான ஸர்வேச்வரனுடைய க்ருபையால் அடையப்போகின்ற புருஷார்த்தமென்ன, இவற்றில் தன்னுடைய நிஷ்டையை யுணர்ந்து வர்த்திக்கும் இவ்வதிகாரிக்கு, 'நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் । ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி' ॥ [இந்த ஸீதையானவள் ராக்ஷஸ ஸ்த்ரீகளையாவது, புஷ்பங்களோடும் பலங்களோடும் கூடின வ்ருக்ஷங்களையாவது பார்க்கின்றாளில்லை. நிஜமாக ஒன்றிலேயே நிலைத்த ஹ்ருதயத்துடன் கூடினவளாய் ராமனையே பார்க்கின்றாள்.] என்கிறபடியே, ஸுகதுக்க மிச்ரமயிருக்கப்பட்ட லோகத்தை நோக்காமல், லோகநாதனையே ஸதா ஸாக்ஷாத்கரிக்கும்படி நேரும்; ஒவ்வொரு காலத்தில் ஸம்பாவிதங்களான ப்ரஹ்மவித் அபசாரவ்யதிரிக்தமான ஏதேனுமொரு பீதிஹேதுக்களிலும், ஸ்வரூப ப்ராப்த கைங்கர்ய வ்யதிரிக்தமான யாதேனுமொரு ப்ரீதி ஹேதுக்களிலும் கண்ணோட்டமுண்டாகாது; உண்டானாலும் அவற்றால் பீதியும் ப்ரீதியும் உண்டாகா.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# பண்டிதர்கள்.

"பச்யந்தி பரதோஷாந் அஸதோऽபி ஜந:
ஸதோऽபி நைவ குணாந் । விபரீதமிதம்
ஸ்வவிஷயே தோஷாம்ச ந பச்யதி ॥"

பிறரைப் பற்றிய விஷயங்களில் இல்லாத தோஷங்களைக்கூட இருப்பவை போலவும், இருக்கும் குணங்களைக்கூட இல்லாதவை போலவும், தம்மைப்பற்றிய விஷயங்களில் இல்லாத குணங்களைக்கூட இருப்பவை போலவும், இருக்கும் தோஷங்களைக்கூட இல்லாதவை போலவும், இவ்வாறு தடுமாறி நினைப்பது பாமர ஜனங்களின் ஸ்வபாவ மென்று நாம் படித்திருக்கின்றோம். வித்வான்கள் நிறைந்துள்ள வித்யாலயாதிகளில் அவர்களோடு பழகிப் படித்தும், ஸாக்ஷாத் ஸம்பர்க்கத்தினாலும் புஸ்தகம் முதலியவைகளைப் படிப்பதனாலும் லௌகிக பரிபாடிகளில் சிறந்த ஜ்ஞானத்தைப் பெற்றும், வ்யபதிஷ்டர்களென்று மற்றவர்களால் பஹுப்ரகாரமாகக் கொண்டாடப்பட்டுமுள்ள மஹான்கள் கூட, இவ்விதமான தடுமாற்றத்திற்குப் பாத்ரமாவதை நாம் இதுவரையில் கேட்டதில்லை. ஸ்வல்ப காலமாக நமது தேசத்திய வைதிக பண்டிதர்களின் மீது படையெடுத்து வரும் சில லௌகிகர்களைப் பார்க்கும்பொழுது, இந்தத் தடுமாற்றம் ஸர்வஜந ஸமமென்றே தோன்றுகின்றது. சிறந்த வித்யைகளை அப்யஸித்து, அதனால் தமது புத்திக்குத் தெளிவையும் விகாஸத்தையும் அடைந்து வைஷம்யமற்று நிற்கும் இந்தத் தேசாபிமானிகள், நமது தேசத்திற்கும் நமது ஜாதியார்க்கும் அஸாதாரணமாயுள்ள நடை உடை

பாவனைகளையும் ஜ்ஞாநத்தையும் பாதுகாத்துவரும் நமது வைதிக பண்டிதர்களை வீணில் நிந்தித்து வருத்துகிறார்களென்பதைப் பார்க்க நாம் மிகவும் துக்கிக்கிறோம்.

பண்டிதர்களைப்பற்றிய நிந்தை, சற்றேறக்குறைய 15-வருஷ காலமாகத்தான் காணப்படுகின்றது. அதற்கு முந்தி, மஹாராஜர்களாலும் ப்ரபுக்களாலும் மாத்ரமல்லாமல் ஸாமாந்ய ஜநங்களாலுங்கூடப் பண்டிதர்கள் மிகவும் நன்குமதிக்கப்பட்டு வந்தார்கள். ஒவ்வொரு ராஜகாரத்திலும் ஆஸ்தாந வித்வான்கள் இருந்திருப்பதையும், ப்ரபுக்களுடைய க்ருஹங்களில் அநேக பண்டிதர்கள் பலவித மர்யாதைக்குப் பாத்ரமாகி யிருப்பதையும், ஶுபாஶுபாதி காலங்களில் ஸாமாந்ய ஜநங்களால்கூட இவர்கள் பெரிய புரஸ்காராதிகள் செய்யப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். இங்கிலீஷ் பாஷை ப்ரசாரமாகியும், அநேக பெரியோர்கள், நமது தேஶத்து வித்வான்களை மிக்க மர்யாதையுடனும் உபசாரத்துடனும் நடத்தி வந்தது எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கூடும். நமது தேஶத்தின் அபிவ்ருத்திக்கும் ஶ்ரேயஸ்ஸுக்கும் பண்டிதர்களின் ஸ்திதியும் மேன்மையும் ஆவஶ்யகமென்று இவர்களெல்லாரும் உணர்ந்தவர்களே. அந்தப் பண்டிதர்களுக்கு லோபம் வந்தால் நமது தேஶத்திற்கு க்ஷோபம் ஜநிக்குமென்றே இவர்கள், அவர்களுக்கு எவ்வித ஹாநியும் வராமல் ஸம்ரக்ஷித்து வந்தார்கள். ஸ்வல்பகாலமாகத்தான் ராஜகாரங்களில் பண்டிதர்களுக்கு நடந்துவந்த மர்யாதை முழுவதும் குன்றிவிட்டது; ப்ரபுக்களென்று பெயர் வஹித்துவரும் பெரியோர், அவர்களைக் கேவலம் உதரம்பரிகளென்று நினைத்துவிட்டார்.

"யத்யதாசரதி ஶ்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந:"

என்கிறபடி மற்றை ஜநங்களும் இந்தப் பெரியோர்களை அடியொற்றிப் பண்டிதர்களை நிந்திக்க யத்நித்துவிட்டார்கள். இது மாத்ரமன்று; பண்டிதர்களின் ஸுஹ்ருத்துக்களென்றும் அவர்களின் க்ஷேமத்தைக் கருதுவோரென்றும் நினைக்கக் கூடிய ஸ்திதியிலுள்ள சில ஆஸ்திகர்கூட, 'பண்டிதர்கள் இக்காலத்தில் எந்த ஸ்திதியில் இருக்கிறார்' என்பதைச் சற்றேனும் ஆலோசியாமல், ஸதஸ்ஸுகளிலும் பத்ரிகைகளிலும் பண்டிதர்களின் தர்மத்தைப் பற்றியும் அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய ரீதியைப்பற்றியும்



அஜ்ஞான பாலருக்கு உபதேஶம் செய்வதுபோல உபதேஶம் செய்ய ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். அபதத்தில் ப்ரவ்ருத்திப்பவரை உபதேஶித்து ஸந்மார்க்கத்திற்குக் கொண்டுவருவது ஹிதைச்சுக்களின் லக்ஷணமே. ஆனால், 'அப்படிப்பட்ட அபத ப்ரவ்ருத்தி இந்தப் பண்டிதர்களிடம் ஸம்பாவிதமா?' என்பதை இவர்கள் பூர்வம் ஆலோசிக்கவேண்டுவது அவஶ்யமன்றோ?

பண்டிதர் என்பவர் யாவர்? என்று கேட்கக்கூடும். ராஜபாஷையில்லாமல் ஸம்ஸ்க்ருதம் முதலியபாஷைகளையும் தேசபாஷைகளையும் அப்யஸிக்கவேண்டும் என்னும் ஆவலுடன் அவைகளை நன்றாக உபதேஶிக்கக்கூடிய ஆசார்யர்களைத் தேடி ஆஶ்ரயித்து, அவர்களிடமிருந்து நமது தேஶத்திய மஹர்ஷிகளாலும் ஆசார்யர்களாலும் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களின் ரஹஸ்யார்த்தங்களை ஸந்தேஹ விபரீதமில்லாமல் அறிந்துகொண்டு அதனால் மநஸ்ஸுக்குச் சிறந்ததொரு தேர்ச்சியை அடைந்திருக்கும் வித்வான்களே இவ்விடத்தில் பண்டிதரென்று வ்யவஹரிக்கப்படுகிறார்கள். தாம் படித்த க்ரந்தங்களில் விஶ்வாஸத்தைச்செய்து, இஹத்திலும் பரத்திலும் ஶ்ரேயஸ்ஸை அடைவதற்கு நமது மஹர்ஷி ப்ரோக்தங்களான க்ரந்தங்களே உபாயங்களென்றும், அவைகளுக்கு விருத்தங்களான வசநங்களெல்லாம் விஶ்வாஸாநர்ஹங்களென்றும் த்ருடமான ஒரு நம்பிக்கையைக் கைப்பற்றி, அவைகளிற் சொல்லியிருக்கும் நியமங்களை இவர்கள் அநுஷ்டாந பர்யவஸாயிகளாகச் செய்துவந்தால், அப்பொழுது இவர்களுக்கு வைதிகபண்டிதர் என்னும் பெயரும் பொருந்தும். இப்படிப்பட்ட பண்டிதர்கள், ஸம்ஸ்க்ருத பாஷையை அப்யஸித்தவரும், தமிழ் தெலுங்கு முதலிய மற்றை ஸ்வதேஶ பாஷையை அப்யஸித்த வருமாகப் பலருண்டு. ஆனால், சிலர், பகவத் கடாக்ஷமடியாக ஐஹிக ப்ரயோஜநங்களில் ஸ்ப்ருஹையற்றவராய் எம்பெருமானுடைய ஆஜ்ஞா கைங்கர்யமும் அவனது திவ்ய சரணாரவிந்தங்களின் அநுத்யாநமுமே பெரியதொரு போகமென்று உணர்ந்து மற்றவர்களாற் செய்யப்படும் ஸம்மாந அவமாநாதிகளைத் துல்யமாகப் பாவித்து, தேஹயாத்ரை கர்மாதீநையென்றும் ஆத்மயாத்ரை பகவததீநையென்றும், இவ்விதமான மநோதார்ட்யத்துடன் சிற்சில விடங்களில் வர்த்தித்து வருகிறார்கள். இக்காலத்திய ஜநங்களின் தூஷணமும் பூஷணமும் இவர்களுடைய குறைவுக்

காவது மேன்மைக்காவது காரணமாகா. இவர்களைத் தவிர்த்து, இன்னும் பல பண்டிதர்களுளர். பாஷாஜ்ஞாநத்திலும் ஆஸ்திக்யத்திலும் எவ்வித குறைவுமில்லாமலிருந்தபோதிலும், 'தேஹயாத்ரை நடப்பதற்கும் குடும்ப போஷணம் செய்வதற்கும் புருஷப்ரயத்நம் அவஶ்யம் வேண்டும்' என்னும் எண்ணங்கொண்டவராய் அநேக பண்டிதர்கள், தாம் ஸம்பாதித்த ஜ்ஞாநத்தை உபயோகித்துப்பகவதாராதநோபயுக்தமாக அர்த்தார்ஜ்ஜநம்செய்வதில் ப்ரவ்ருத்திக்கிறார்கள். இப்படி ப்ரவ்ருத்திப்பதை அதர்மமென்று சொல்வது சரியன்று; ப்ரத்யுத, வைதிக பண்டிதர் போலவன்றிக்கே, இவர்கள் பாமர ஜநங்களுடன் கலந்து ஸம்பாஷிப்பதனாலும், அவர்களுடன் கூட வஸிப்பதனாலும், இந்த ப்ரவ்ருத்தி ஸாமாந்ய ஜநங்களுக்குப் பலவித நன்மைக்குக் காரணமாகுமென்றே சொல்லக்கூடும். இவர்களுடைய ஜ்ஞாநம்தான் நம் எல்லார்க்கும் ப்ரயோஜநப்படக்கூடியது. ஜகத்தின் நல்ல ஸ்திதி இவர்களுடைய வ்ருத்தியைப் பொறுத்ததே. இவர்களுக்கு லோபம் வராமல் பாதுகாப்பதே நமது தர்மம். 'வேதங்களிலும் ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளிலும் நமது மூலதநம் இருக்கின்றது' என்று அப்புஸ்தகங்களை அச்சிட்டுப் பாதுகாப்பது மாத்திரம் நம்முடைய ஶ்ரேயஸ்ஸுக்குப் போதாது. அந்தப் புஸ்தகங்களை ஸமர்மகமாகப் படித்து, அவைகளிற் சொல்லியிருப்பதை அநுஷ்டித்துக்காண்பிக்குமவரே நமக்குப் பரம உபகாரகராவார்கள். 'அப்படிப்பட்ட இந்தப் பரமோபகாரகர்களுக்கு எவ்வித லோபமும் வரக்கூடாது; அவர்களைத் திரஸ்கரிக்கவேண்டாம்; தகுந்த ப்ரகாரம் அவர்களை உபசரித்து, இன்னும் அநேகரை அந்த மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி ப்ரோத்ஸாஹநம்செய்து, அவர்களுடைய வர்க்கத்தைப் புங்காநுபுங்கமாக வ்ருத்தியாகும்படி நாம் வளர்த்து வரவேண்டும்' என்பது தான் நம்முடைய ப்ரார்த்தனை. அவர்கள் வேரற்றுப்போகவேண்டுமென்று கோருபவர்களின் மௌட்யத்தைப்பற்றித் தான் நாம் அதிமாத்ரம் ஶோகிக்கிறோம்.

ப்ராயேண, இப்படிப் பண்டிதர்களை வெறுப்பவர்களெல்லாரும் இங்க்லீஷ் பாஷையை அப்யஸித்தவர்களாகவே இருக்கிறார்கள். கேவலம் இங்க்லீஷ் பாஷையின் அப்யாஸம் இப்படிப்பட்ட மூடத்தனமான வெறுப்பை ஜநிப்பிக்கின்றது என்பது நம்முடைய கருத்து அன்று. ஆனால், அந்தப் பாஷையில் எழுதப்பட்டு நம்



முடைய படிப்புக்குக் கோசரங்களாயுள்ள புஸ்தகங்கள், பெரும்பாலும் நம்முடைய மநஸ்ஸுக்கு ஒருவித ஸ்வாதந்த்ர்யத்தைப் போதிக்கத்தக்கவையாகவும், அந்தக் காரணத்தினாலேயே நம்மை மனம்போன போக்கெல்லாம் நடக்கும்படி ஏவத்தக்கவையாகவுமே இருக்கின்றன. ஸாமாந்யமாக எவ்வித நிர்பந்தத்தையும் வெறுக்கும் ஸ்வபாவமுள்ள பாலர்களுக்கு, இவ்வித ஸ்வாதந்த்ர்ய உபதேஶமும் ஸம்பவித்தால், அவர்கள், நிர்பந்தங்களை விதிக்கும் ஶாஸ்த்ரத்தில் த்வேஷத்தையும், அந்த ஶாஸ்த்ரப்படி அநுஷ்டிக்குமவர்களிடத்தில் வெறுப்பையும் ஏன் கொள்ளமாட்டார்கள்? இந்தப் புஸ்தகங்களைப் படிப்பிக்கும் உபாத்யாயர்களும் ப்ராயேண அந்தப் புஸ்தகங்களுக்கு அநுரூபமான குணம்பொருந்தினவர்களாக இருப்பதை நாம் அறிவோம். சிலர் நீங்கலாக நமது பாடஶாலைகளிலுள்ள மற்றை உபாத்யாயர்களெல்லாரும், நமது ஶாஸ்த்ர விதிகளில் விஶ்வாஸம் கொள்ளாமலிருக்கும் ஹூணர்களாகவாவது, அல்லது அப்படிப்பட்ட ஹூணர்களிடமிருந்து உபதேஶம்பெற்று அவர்களுடைய நடத்தையை அநுஸரிப்பவர்களாகவாவது இருக்கிறார்கள். இவர்களிடத்தில் ஶிஷ்ய பாவம் கொண்டு அதனால் வித்யா நிஷ்பத்தியை அடைந்திருக்கும் நமது பாலர்கள், நமது பண்டிதர்களை த்வேஷிக்கிறார்கள் என்பது என்ன ஆஶ்சர்யம்? ஆஸந்ந ம்ருத்யுவானவன் தனக்கு ஔஷதம் கொடுக்கவரும் வைத்யனை த்வேஷிப்பது போலவும், துர்விநீதனான புத்ரன் தனக்கு ஹிதத்தை உபதேஶிக்கும் பிதாவை த்வேஷிப்பதுபோலவுமே, இந்த அஜ்ஞர்கள், தமக்கு ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுப்பதற்கு உபகாரகர்களாயுள்ள இந்தப் பண்டிதர்களை த்வேஷிக்கிறார்களென்று நாம் நினைக்கிறோம். ஸ்வபாவத்தினாலேயே எவ்வித அடக்கத்திற்கும் உட்படாததாயும் அதிசஞ்சலமாயுமுள்ள நமது மநஸ்ஸை ஒருவகைக் கட்டுப்பாட்டுக்கு வசப்படுத்தி நாம் அடக்கிக்கொண்டு வந்தாலொழிய, எவ்விதத்திலும் நமக்கு ஶ்ரேயஸ் துர்லபமாகிவிடுமென்பதை இந்த உபதேஷ்டாக்கள் அறிகின்றார்களில்லை. எவ்வித ஶிக்ஷைக்கும் பழக்கப்படாத மநஸ்ஸுடன் வளர்ந்துவரும் ஒருவன், ஹிதம் போதிக்குமவனையெல்லாம் விவேகமின்றிக்கே த்வேஷிப்பன் என்பது திண்ணம். இங்க்லீஷ் பாஷை அப்யஸிக்கப்படும் பாடஶாலைகளில், மநஸ்ஸுக்கு நல்ல ஸம்ஸ்காரத்தைக்கொடுக்கக்கூடிய ஶிக்ஷைக்கு அவ

காஶமில்லை யென்பதும், அந்தக்காரணமடியாகவே அப்படிப்பட்ட பாடஶாலைகளில்நின்று வெளிவரும் மாணவகர்களில் பலர், ஶாஸ்த்ர விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் வைதிக பண்டிதர்களை வெறுக்கிறார்களென்பதும் நாம் ஆழ்ந்து ஆலோசிக்குமிடத்துத் தோன்றும் தோற்றமாக இருக்கின்றது.

தவிரவும், இங்க்லிஷ் பாஷையிலுள்ள க்ரந்தங்கள், பெரும்பாலும் ஐஹிக ப்ரயோஜநங்களையே பெரியனவாகப் பேசுகின்றன; நமது வைதிக ஶாஸ்த்ரமோ ஆமுஷ்மிக ப்ரயோஜநத்தையே பெரிதாக வற்புறுத்துகின்றது. ஸாமாந்ய ஜநங்களுக்கு ஐஹிக ப்ரயோஜநமே ஆகர்ஷகமாயுள்ளதாதலால், ஆமுஷ்மிகத்தை ப்ரதாநமாக நம்பி நடந்துவரும் நமது பண்டிதர்கள், ஸாமாந்ய ஜநங்களால் பரிஹஸிக்கப்படுகிறார்களென்பதில் ஆஶ்சர்யமில்லை.

தைவமும் இந்தப் பண்டிதர்கள் விஷயத்தில் கொஞ்சம் விபரீதமாய் இருக்கின்றது போலவும் தோன்றுகின்றது. பாஷாந்தரம் அப்யஸித்தவர்கள்போல ஸ்வதேஶபாஷையை அப்யஸித்தவர்களும் ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டு, ஜீவநத்திற்குக் கஷ்டப்படாதவளவு உபபத்தியுள்ளவர்களாய் இருக்கும் பக்ஷத்தில், இப்பொழுது இவர்களுக்கு நேர்ந்திருக்கும் துர்தஶை ஸம்பவித்திராது என்பது நிஶ்சயம். இந்த லோகத்தில் ப்ராயேண பஹுமாநமும் அவமாநமும் அர்த்தத்தைச் சார்ந்தனவாகவே காணப்படுகின்றன.

“ஸர்வே குணா: காஞ்சநமாஶ்ரயந்தே”

என்று சொல்லப்படும் நீதி பெரும்பாலும் உண்மையே. தநவான்களாயிருக்கும் சில அல்பஜ்ஞர்கள், தமது தந மதத்தால் ஈஶ்வரனைக்கூட நிந்திப்பதை நாம் பார்த்ததில்லையா? தவிரவும், தமது பாஷையிலுள்ள ஒருவித ஆஸ்தையினால் பால்யம் முழுவதையும் மிகுந்த ஶ்ரத்தையுடன் அந்தப் பாஷாப்யாஸத்தில்போக்கி, அநேக பெரியோர்களுடைய ஸூக்திகளிலிருந்து சிறந்த ஜ்ஞாநத்தைப் பெற்றுப் பெரியதொரு வைதுஷ்யத்தை அடைந்திருக்கும் வித்வான்கள், அந்தப் பாஷாப்ரவசநத்தில் திறமையற்றவர்களென்றும், அந்தப் பாஷையின் ஸ்வல்ப பதங்களை ஹ்ருடமாகப்படித்துச்



சரியானபடி உச்சரிக்கக்கூட அஶக்தர்களாக இருக்கும் தேஶாந்தரீயர்களோ, இல்லாவிட்டால் பாஷாந்தராப்யாஸத்தைச்செய்து அதனுடன் தேஶபாஷையில் மிதமான ஜ்ஞாநத்தை ஸம்பாதித்திருக்கும் இந்தத் தேஶத்து லௌகிகர்களோ, இவர்களுள் ஒருவரே அந்த ப்ரவசநத்திற்குத் தகுந்த அதிகாரிகளென்றும், இவர்களுக்குப் பூர்ண ஸம்மாநத்தைச் செய்வதும் அவர்களை இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி ப்ரவ்ருத்திப்பிப்பதும் உசிதமே யென்றும் நம்மவருக்குத் தோன்றினால், அதைத் தைவதுர்விபாகமென்றே தவிர வேறு என்னவென்று சொல்லக்கூடும்? சற்றேறக்குறைய 60 - வர்ஷம் முன்னதாக ‘இந்தத் தேஶத்து ஜநங்களுக்கு ஜ்ஞாநோத்பாதநத்தை இங்க்லீஷ் பாஷாத்வாரா செய்யலாமா? இல்லாவிட்டால் தேஶபாஷை வழியாக ஏற்படுத்தலாமா?’ என்பதை ராஜாங்கத்தார் ஆலோசிக்குங் காலத்தில், ‘லார்ட் மெகாலே’ என்னும் அக்காலத்திய மந்த்ரியொருவர், இங்க்லிஷ் பாஷைக்கே ப்ராதாந்யத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் தேஶபாஷை கூடாதென்றும் மந்த்ராலோசனையைச் செய்தார் என்பதை எல்லாரும் கேட்டிருக்கலாம். அவர் அப்படிப்பட்ட ஆலோசனையைச்செய்யாமல் இருந்திருந்தால், தேஶபாஷைக்கு ப்ரக்ருத விபத் வந்திருக்காது என்பது நிஶ்சயம். ‘லார்ட் மெகாலே’ என்பவருக்கு அப்பொழுது அப்படித் தோன்றியதும், இப்பொழுது நமது கலாஶாலைகளின் நியாமகர்களாக இருக்கும் நமது தேஶத்தவர்களுக்குத் தேஶபாஷை ஸர்வ ப்ரகாரத்திலும் அநுபாதேயமென்று தோன்றுவதும் விதிவிலஸிதமென்றே நாம் நினைக்கிறோம்.

இப்படி நமது தேஶபாஷையும் அதை அப்யஸித்த பண்டிதர்களும் தைந்யஸ்திதியை அடைவதை நாம் பார்த்திருப்பது விவேகிகளான நமக்கு லக்ஷணமாகாது. நமக்குத் தாயதநமாகக் கிடைத்திருக்கும் நமது பாஷாக்ரந்தங்களில் ஸாத்விகங்களான ஆசாரங்களும் ஜ்ஞாந ஸம்பத்தும் பூர்ணமாக இருக்கின்றனவென்று நாம் நினைத்தால் அவைகளை வ்ருத்தி செய்வதற்கு வேண்டுமவையான முயற்சிகளை நாம் செய்யவேணும். முதலில், அவைகளையும் அவைகளை அப்யஸித்தவர்களையும் ‘இவர்கள் பாஷாந்தராநபிஜ்ஞர்கள்’ என்னும் காரணத்தைக்கொண்டே நிந்திக்கும் அஜ்ஞர்களுடைய மௌட்யத்தை வெளியிட்டு, இப்படி

சிந்திப்பதால் தமக்கு ஒருவித ஶ்லாகை ஏற்படுகின்றது என்று
அவர்கள் கொண்டிருக்கும் தவறுதலான எண்ணத்தை அவர்க
ளுடைய மனத்திலிருந்து விலக்கி, ஶாஶ்வதமான ஶ்ரேயஸ் நம
க்கு அபேக்ஷிதமானால், அந்தப் பண்டிதர்களின் ஸஹாயத்தைக்
கைப்பற்றியே அதை அடைய வேண்டுமென்பதை அவர்களுக்கு
நாம் நன்றாக வற்புறுத்தல் வேண்டும்.

இரண்டாவது, இப்பொழுது நமது பாலர்களுக்கு நாம்
போதிக்கும் வித்யை முழுவதையும் பாஷாந்தரத்தைக்கொண்டு
போதிக்காமல் நமது பாஷையின் வழியாகப் போதிப்பதுடன், வித்
பாலயங்களில் நமது பாஷைக்கு ப்ராதாந்யத்தைக் கொடுத்து,
பாஷாந்தரத்தை அப்ரதாநமாகச்செய்து, லௌகிக வ்யவஹாரங்
கள் ஸமஸ்தத்தையும் நமது பாஷையிலேயே நடத்திக்கொள்ளும்
படியான திறமையை அவர்களுக்கு ஏற்படுத்தல் வேண்டும். இது
இக்காலத்தில் துஸ்ஸாதமன்று. ஒருகால், 'லார்ட் மெகாலே'
காலத்தில் இது துஸ்ஸாதமாக இருந்திருக்கலாம். அப்பொழுது
பாஷாந்தரத்தில் தேர்ச்சியை அடைந்த ஹிந்துக்கள் அத்யந்தம்
மிதமாக இருந்திருப்பார்கள்; அது காரணமாகவே அந்த ப்ரபு
இங்க்லிஷ் பாஷைக்கு ப்ராதாந்யத்தைக் கொடுத்திருக்கக்கூடும்.
இக்காலத்தில் பாஷாந்தரம் அப்யஸித்திருக்கும் ஹிந்துக்கள் பஹு-
வாக இருக்கிறபடியால், பாஷாந்தர ஸம்பத்தமான ஶாஸ்த்ர மனை
த்தையும் நமது தேஶபாஷைகளில் மொழிபெயர்ப்பது கஷ்ட
மன்று. உத்க்ரந்தங்களிற் சொல்லப்படும் அம்ஶங்களைக்கூட நமது
பாஷைகளில் மொழிபெயர்த்து எளிதில் நமது பாலர்களுக்கு உப
தேஶிக்கக்கூடும். இந்த ஏற்பாட்டை நாம் ஸரியாக ஸாதித்தால்,
நமது பாஷா பண்டிதர்களுக்கு, அவர்களுக்கு உரிய மேன்மை
கிடைப்பதுடன், பாஷாந்தரத்வாரா ஶாஸ்த்ராப்யாஸம் செய்வத
னால் இப்பொழுது நமது பாலர்களுக்கு ஜநிக்கும் க்லேஶமும்
பெரும்பாலும் நிவ்ருத்தியாகிவிடும்.

மூன்றாவது, இப்பொழுது உயர்ந்த பதவியில் இருக்கும்
நமது தேஶத்தவர்களெல்லாரும், தேஶாந்தரவாஸிகள் எண்ணு
வதுபோல, நமது பாஷாபண்டிதர்களைப் புத்தியினாலும் பயிற்சியி
னாலும் பிறருக்கு நிஹீநர்களாக எண்ணாமல், குணதோஷங்களை
ஸரியாக விவேசநம் செய்து, யோக்யதையுடன் கூடிய பண்டிதர்



களைத் தாம் ஸத்கரித்தும், ராஜாங்கத்தாரையும் அவர்களுக்கு யதார்ஹம் ஸத்கரிக்கும்படி செய்வித்தும் எவ்வித பக்ஷபாதமுமின்றிக்கே வர்த்தித்தல் வேண்டும். நமது பாஷைகளாகிய தமிழுக்கும், தெலுங்குக்கும், ஸம்ஸ்க்ருதத்திற்கும், இந்தப் பாஷைகளுக்கு யாதொரு ஸம்பந்தமுமில்லாத ஜர்மனி முதலிய தேஶத்திலிருந்து நமது கலாஶாலைகளில் முக்ய உபதேஷ்டாக்களை அழைப்பிப்பது நமக்கு மிக்க லாகவத்தை ஜநிப்பிக்கின்றதன்றோ? அவர்களுடைய ஜ்ஞாநம் நமது பண்டிதர்களின் ஜ்ஞாநத்தின் பதினாயிரத்தில் ஒரு பங்களவு இருக்குமா? ஸம்மாநம் மாத்திரம் நூறுமடங்கு அதிகமாகக் கொடுக்கப்படுகின்றதே! இது எந்த ந்யாயத்தை அநுஸரித்தது என்று நமக்கு விளங்கவில்லை.

நான்காவது, பண்டிதர்களின் தைந்யம் எவ்வளவுதூரம் ப்ரவஹித்திருக்கின்றது என்பதைச் சரியாக உணராமல், 'பண்டிதர்கள் தமது தர்மத்தைச் சரியாக அநுஷ்டிக்கவில்லை' என்று மாத்திரம் ஸர்வகாலத்திலும் சொல்லிக்கொண்டு அவர்களுக்கு ஸ்வரூப ஶிக்ஷணம் செய்யும் பண்டிதாபிமாநிகளும், அப்படி ஸ்வரூப ஶிக்ஷணம் செய்யு முன்னதாகவே அவர்களுடைய ஸ்திதி இக்காலத்தில் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்பதை ஆலோசித்துப் பார்த்து, அவர்களுடைய துர்தஶையை நிவ்ருத்திக்க முயலவேண்டும். ஐஹிக ஶ்ரேயஸ் ஸாதகமான எவ்வித வித்யையையும் அநாதரித்து, ஜந்மாந்தர ஸுக்ருதமடியாகவோ, நமது ஆர்ஷ வித்யையிலுள்ள அபிநிவேஶாதிக்யத்தினாலோ, இல்லாவிட்டால் ஜகத்தின் அபூர்வமான ஒரு அத்ருஷ்டவிஶேஷத்தினாலோ, இந்தப் பண்டிதர்கள், பால்யத்தில் இதம்பரமாகத் தமது வித்யாப்யாஸத்தில் ப்ரவ்ருத்தித்து, பிந்தியும் தமது கஷ்டங்களைப் பாராட்டாமலே ஆயுள் நாள் முழுவதையும் ஜ்ஞாநாபிவ்ருத்தியிலேயே செலுத்தி அதையே பரம ப்ரயோஜநமாக எண்ணி வருகிறார்களே! அவர்கள் எப்பொழுதாவது க்லேஶம் தாங்கமாட்டாமல் நமது ஸஹாயத்தை அபேக்ஷித்தால், அக்காலத்தில் அவர்களை நாம் அநாதரிப்பதும், அவமதிப்பதும், ஸ்வரூப ஶிக்ஷணம் செய்வதும் உசிதமாகுமா? கேவலம் ஜ்ஞாநமே அவர்களுக்கு ஸாக்ஷாத் குடும்ப போஷண ஸாதகமாகிவிட்டால், அவர்கள் நம்மை அணுகுவதே நேராது. ஈஶ்வரன் அவ்விதமாக ஸங்கல்பிக்கவில்லை. நமக்கு

இருப்பதுபோல அவர்களுக்கும் அர்த்தாபேக்ஷை இருக்கின்றது; தேஹயாத்ரையும் நமக்குப் போலவே அவர்களுக்கும் நடத்தல் வேண்டும். அந்தக் கஷ்டத்தின் நிவ்ருத்திக்கு ஒருவாறு மார்க்கத்தைக் கல்பித்தபிறகன்றோ நாம், 'அவர்கள் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாக அநுஷ்டிக்க வில்லை' என்று அவர்கள்மீது தோஷாரோபணம் செய்யலாம்? அப்படிப்பட்ட மார்க்கமொன்றையும் தேடிக்கொடுக்காமலே அவர்கள்மீது தோஷாரோபணம் மட்டில் நாம் செய்ய யத்நித்தால், அவர்கள் ஏன் வருந்தமாட்டார்கள்? மற்றவர்கள்தாம் அந்தப் பண்டித வ்ருத்தியில் எப்படி ப்ரவ்ருத்திப்பார்கள்? ஸர்வவித புரஸ்காரார்ஹர்களாக அவர்கள் இருக்க, அவர்களை நாம் திரஸ்கரிப்பது நமக்குக் கொஞ்சமேனும் ச்ரேயஸ் ஸாதகமாகாது."

இந்த உபாயங்களில் நாம் எவ்விதமாக ப்ரவ்ருத்திக்கலாமென்பதை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

" [illegible]
[illegible]
[illegible]
[illegible] "

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

# ஜநகநந்திநீ.

"ஸர்வ த்வந்த்வ மோஹங்களையும் த்யாகம்செய். ஒன்றாலும் உன் மநஸ் கலங்கவேண்டாம். ஆசை, கோபம், துக்கம் முதலானவை உன் சித்தத்தை எப்போதும் கலக்கவேண்டாம். எல்லா அவஸரங்களிலும் உனது அந்தக்கரணம் ஒரே ப்ரகாரமாக இருக்கட்டும். அதனின்று ஸ்ரீ க்ருஷ்ணன் எப்போதும் விலகாதபடி அதை வசப்படுத்தி வைத்துக்கொள்.

"என்னை உனக்கு ஜ்ஞாநமளிக்க வேண்டிய ஆசார்யனாக வரித்தாய். உனக்குப் பிதாவென்றும், ஹிதனென்றும், ஆசார்யனென்றும் எண்ணி இவற்றை உனக்கு உரைத்தேன். நாராயணன் உன்னைக் காப்பாற்றட்டும்."

இப்படிக் காலக்ஷேபாவஸாநத்தில் ஆசார்யனுடைய அநுபாஷணத்தை ஜநகநந்திநீ தன் பிதாவினிடம் அடைந்தாள். உடனே, "[illegible]", எனும் வண்ணம் பிதாவைப் பலதரம் ஸேவித்து எழுந்து நின்றனள். "ஜநகம்! இன்னும் ஏதாவது கேட்க அபேக்ஷிக்கின்றையோ?" என்று கேசவாசார்யர் சொன்னார்.

"அப்பா! தேவரீருடைய அநுமதியாலும், அடியேனைப்பற்றித் தேவரீர் ஆவிஷ்கரிக்கின்ற ஸௌலப்யாதிசயத்தாலும், தேவரீரிடம் சில ஸம்சயங்களை விஜ்ஞாபநம்செய்து அவற்றை நிவ்ருத்தித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஸ்ரீ பகவானிடம் மோக்ஷமறக் கேட்ட அர்ஜுநனுக்கும், 'தத்வித்தி ப்ரணிபாதேந' எனும் ச்லோகத்தினால், தத்வதர்சிகளாய் நின்ற இதர ஜ்ஞாநிகளிடம் விஷயங்களை மறுபடியும் கேட்கும்படி, ஸ்ரீ க்ருஷ்ணன் ஆஜ்ஞாபித்தனரன்றோ? பெண்ணாகப் பிறந்த அடியேன் அய்யரிடம் கேட்

படதெனும் ஸந்தர்ப்பம் நினைக்கத்தக்க தன்று. ஆதலால் தேவரீரே அடியேனுக்கு க்ருபையாகத் தந்த ஜ்ஞாநதார்ட்யத்தின் பொருட்டும், அடியேன் சித்தத்தி லுதிக்கும் ஸம்சய நிவ்ருத்தியின் பொருட்டும், வேண்டியமட்டும் ஜ்ஞாநோபதேசம் அளிக்கவேண்டும்." என்று ஜநகநந்தினி மொழிந்தாள்.

அதற்குக் கேசவாசார்யர், "குழந்தாய்! உன் வார்த்தைகளால் நான் மிகவும் ஸந்தோஷிக்கின்றேன். நான் சொன்னதைக் கேட்டுக் கொண்டு நீ புறப்பட்டுப் போய்விட்டால், உன் மநஸ்ஸில் ஜ்ஞாநம் ஸம்யக் அமைந்ததென நான் எவ்வண்ணம் திருப்தனுவேன்? நீ ஸம்சயப்படும் ஸ்தாநங்களைப்பற்றி ப்ரச்நம் பண்ணினால் தான், நான் உன் விஷயமாகப் பட்ட ச்ரமம் ஸபலமாயிற்றென்று எனக்குத் தெரியக்கூடும். எவ்வளவு கேட்கவேண்டு மென்று விரும்புகின்றனையோ அவ்வளவையும் கேட்டுத் தெளிந்துகொள். அதனிமித்தம் நாளைக்கு நாம் இவ்விடம் கூடுவோம்" என்று விடை தந்தனர். ஜநகநந்தினி அகத்துக்குள்ளே சென்றனள். கேசவாசார்யரும் சிறிது காலம் க்ரந்தங்களைப் பார்த்துவிட்டு, மாத்யாஹ்நிக ஸ்நாநநிமித்தம் எழுந்து சென்றனர்.

மறுநாள் காலையில் வழக்கப்படி ரேழித்திண்ணைமீது உட்கார்ந்திருந்த பிதாவை நமஸ்கரித்து ஜநகநந்தினி வினவினள். "அப்பா! ஸ்த்ரீசூத்ரர்களைச் சேர்த்துப் பகவான் கீதையில் 'பாபயோநிகள்' என்று திருவுள்ளம் பற்றுவானேன்? ப்ராஹ்மணரைப் புண்யரென்றும், ராஜர்ஷிகளைப் பக்தரென்றும் சொன்னது புருஷரைமாத்ரம் உத்தேசித்தன்றோ? ப்ராஹ்மணாதி ஜந்மங்கள் ஸ்த்ரீகட்குக் கிடையாதா? மைத்ரேயி ப்ரஹ்மவாதிநியா யிருந்தாளென்றும், உபநிஷத் வித்யோபதேசத்தைத் தன் பர்த்தாவினிடம் பெற்றனளென்றும் உபநிஷத் கூறவில்லையா? கார்கிக்கு யாஜ்ஞவல்க்யரை ப்ரச்நம்செய்ய அர்ஹதை ஏற்படவில்லையா? அவளுடைய ப்ரச்நங்கட்கு ப்ரதிவசநங்கள் நமக்கு ச்ருதியாக விளங்கவில்லையா? இன்னும் தேவரீர் பண்டிதர்களுடன் ஸம்பாஷிக்க, அடியேன் கேட்டபடிச் சொல்கின்றேன். அத்ரிகோத்ரோத்பந்நையான விச்வவாரா என்பவள், ருக்வேதம் 4-வது அஷ்டகத்தில் மந்த்ரத்ரஷ்டாவாக விளங்கவில்லையா? இன்னும், 7-வது அஷ்டகத்தில், வஸுக்ர ருஷி யஜ்ஞம் செய்கையில் ப்ரச்



சந்நனக ஸாந்நித்யம் செய்த இந்த்ரனை அவர் பத்நீ முதலில் அறிந்து ப்ரதம மந்த்ரத்தினால் ஸ்துதிக்கவில்லையா? இன்னும் ஊர்வசி, இந்த்ராணி, யமி முதலான தேவஸ்த்ரீகள் மந்த்ரத்ரஷ்டாக்களாக அங்கீகரிக்கப்படவில்லையா? இப்படி ப்ராஹ்மணஸ்த்ரீகட்குப் புருஷர்க்குப்போல் ஏற்பட்ட ஏற்றமெல்லாம் போய்ப் பாபயோநித்வம் ஸம்பவித்ததேனோ? அடியேன் ஸ்த்ரீஜாதியானபடியால் கேட்கின்றேன்: க்ஷமித்தருளவும்." என்று ஜநகநந்தினீ மொழிந்தாள்.

இதைக் கேட்ட கேசவாசார்யர் ஈஷத் விஸ்மயத்துடன் சொல்ல ஆரம்பித்தனர். "குழந்தாய்! உனது ப்ரச்நங்கள் மிகுந்த யோசனைகட்கு இடந்தருகின்றன. பாஷாந்தர ஸம்ஸ்காரமுள்ளவர்கள் இத்தகைய யோசனைகள் செய்கின்றார்கள். பகவான் பாபயோநிகள் என்றது ஸ்த்ரீ புமாங்களுடைய ஜந்மக்ஷேத்ரங்களை உத்தேசித்தன்று; ஜந்மகாரணங்களாகும் ப்ராசீந கர்மங்களை உத்தேசித்து அவ்வண்ணம் ஸாதித்தருளினது. ச்ருதியும், "யதாகாரீ யதாசாரீ ததா பவதி, ஸாதுகாரீ ஸாதுர்பவதி பாபகாரீ பாபோ பவதி, புண்ய: புண்யேந கர்மணா பவதி பாப: பாபேந" என்று வெளியிட்டது. [அதாவது, எப்படிச்செய்ய, எப்படி ஆசரிக்க, ஒருவனுக்கு ஆபிமுக்யம் உளதோ, அவன் அதற்கேற்ற பலத்துடன் கூடினவனாகின்றான்: ஸத்கர்மம் செய்கின்றவன் ப்ராஹ்மணாதி சரீரயுக்தனாகின்றான். பாபம் செய்கின்றவன் சண்டாளாதி சரீரப்ராப்தி அடைகின்றான். இந்தப் புண்ய பாபகர்ம ஸம்பந்தமும் ப்ராசீந புண்ய பாப ப்ரயுக்தம். ஆனால் ஸ்த்ரீகளையும் வைச்ய சூத்ரர்களையும், ப்ராசீந பாபகர்மத்தால் பிறந்தவரென அநுமிப்பதேனோவென்று கேட்பாய். சொல்கின்றேன் கேள். ஜந்மப்ரயோஜநம் பரமபுருஷார்த்த ப்ராப்தியன்றோ? ஸ்த்ரீ சூத்ரர்களுடைய சரீரங்களும், வ்ருத்திகளும் அதனுடைய ப்ராப்திக்கு விரோதிகளாய் நிற்கின்றன. ஸ்த்ரீகளுக்கு க்ருஹவ்யாபாரங்கள், சிசுக்களுடைய ஸம்ரக்ஷணை, கர்ப்பம், ப்ரஸவம் முதலான துன்பங்கள், நச்வரங்களில் ஸ்ப்ருஹை, ஸ்வசரீராதிகளுடைய அலங்காரத்தில் இச்சை, இவை ஸ்வபாவத்தால் ஸம்பந்திக்கின்றன. ஸ்த்ரீப்ரஜ்ஞை என்று அவர்களுடைய சித்தவ்ருத்தியும் ப்ரதக்காக ஏற்பட்டிருக்கின்

றது. வைஶ்யன் த்விஜனானபோதிலும், ஸதா அர்த்தார்ஜந பரனாகின்றபடியால், ரஜோகுண ப்ரசுரன். சூத்ராதிகள் தமோகுண ப்ராசுர்யத்தாலோ, சுத்த தமோகுணத்தாலோ மூடப்பட்டவர்கள். இவர்களுக்குப் பரகதியைப்பற்றி ப்ரவ்ருத்தி கஷ்டத்தால் உண்டாகத்தக்கது. ஆதலால் இவரைப் 'பாபயோநிகள்' என்றார். "[illegible]" என்று, புண்யஜந்மத்தை அடைந்தவனும், ஸம்ஸர்க்காதி தோஷங்களால் பாபங்களை ஆசரிப்பவனாவான் என்று திருவுள்ளம். இவர்கள் யாவரும் பகவானை ஆஶ்ரயித்த மாத்ரத்தால் பரமகதியை அடைவார்கள் என்று ஸாதிக்கும்படி யிருந்தது. கைமுதிக ந்யாயத்தினால், ப்ராசீந ஸுக்ருதமடியாக ப்ராஹ்மண ஜந்மமடைந்து, புண்யகர்மங்களை யநுஷ்டிப்பவரும், அர்ஜுநனைப்போல் ராஜர்ஷிகளாய், பரமபக்தராய் நின்றவரும், பகவதாஶ்ரய பலமாகப் பரமபதத்தை அடைவார்கள் என்பது ஸித்தம். பகவானுடைய கர்மஶக்தியையும் ஜீவனுடைய ஜந்ம ஸந்ததியையும் ஒப்பாதவர்கள், மநுஷ்யர் யாவரும் ஸமாநமான சரீரசித்த ஸம்ஸ்காரங்களுடன் பிறக்கின்றாரென்பர். இது லோகாநுபவ விரோதம். நம்மிராஜாங்கத்தார் மதத்திலும், ஈஶ்வரன் ஒரு ஜாதியரைத் தனியாக நிறுத்தி அபிமானித்தனனென்றும், அவர்பொருட்டு நிர்துஷ்டரான ஜாத்யந்தரர்களை நாசம்செய்தா னென்றும் கதையுண்டு. இப்படி யபிமானித்ததும் அவரைக்கொண்டு அந்யரைச் செம்மைப்படுத்த வென்பர். இந்த ஈஶ்வர ப்ரயத்நம் பலிக்கவுமில்லை யென்பர். இது ஈஶ்வரனுக்குத் தகாதசெயல். அதனால் ஒருவர்க்கு நிர்ஹேதுக பக்ஷபாதமும், மற்றவரிடம் நிர்ஹேதுக நைர்க்ருண்யமும் ஈஶ்வரனுக்கு நேரிடும். நம் ஸம்ப்ரதாயஸ்தர், ஈஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யதோஷத்தை ஆரோபிக்கத் துணியமாட்டார். ஸர்வசேதநனும் அவ்வவனுடைய கர்மாயத்த சரீரஸ்திதி ப்ரவ்ருத்தியுடன் கூடினவன் ஆகின்றான். ஈஶ்வரன் கேவலம் கர்மாத்யக்ஷன். ஆதலால் ஸ்த்ரீ சூத்ரர்கள் ஸ்வகர்மங்களடியாகப் பாபயோநிகள் ஆனார்கள். ஆனால் சில ஸ்த்ரீகளுக்குச் சில ஏற்றம் ஏற்படுகின்றதென்பாய். அது அபவாதத்தால் ஏற்பட்ட விஷயம். சில ஸ்த்ரீகள் ஏற்றமடைந்தாரென்றால், ப்ராயேண ஸ்த்ரீகள் அப்படியில்லை யென்பது ஸித்தமன்றோ? மைத்ரேயீ ப்ரஹ்மவாதிநீயாய் இருந்தாளென்று சொன்ன ஶ்ருதியானது அநந்தரமேவ, யாஜ்ஞ-



வல்க்யரின் இதர பார்யையான காத்யாயநி ஸ்த்ரீப்ரஜ்ஞையுடன் கூடினவளே என்று சொல்லவில்லையா? ஆதலால் ஸ்த்ரீ ப்ரஜ்ஞை என்பது ப்ரஹ்மவாதித்வ விரோதியென்பது ஏற்படவில்லையா? ப்ராஹ்மணனாய்ப் பிறந்தவனெல்லாம் புண்ய வ்ருத்தியில் நிற்கின்றானா? சூத்ரனெல்லாம் பாபாத்மாவா? இந்த வகுப்புகள் யாவும் ப்ராசுர்ய பாவத்தையிட்டு ஏற்பட்டன. எல்லா ஏற்பாடுகட்கும் விலக்குண்டு. காலதேச வைகுண்யத்தால் ஸாங்கர்ய காலம் நெருங்கிவிட்ட இப்போது, ப்ராஹ்மணன் ப்ராயேண சூத்ரதுல்யனே. பகு ப்ராஹ்மணர் சண்டாளத்வ ம்லேச்சத்வக்யாதியையும் ஸம்பாதித்துக்கொண்டனர். அநார்யனான சூத்ரனுக்கு வேதாத்யயநத்தில் அதிகாரமில்லை யென்பது அபசூத்ராதிகரணத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்த்ரீகளுக்குத் தாத்ருஶ நிஷேதம் ஸாக்ஷாத்தாக ஏற்படவில்லை. அவர்களுக்கு வேதாத்யயநம் முதலான வ்ருத்தி இல்லாமல் போனதற்குக் காரணம் அவர்களுக்கு ப்ரசுரமாய் ஏற்பட்ட ஸ்த்ரீ ப்ரஜ்ஞதை தான். ஆனாலும் மோக்ஷகாரணமாகும் பகவதாஶ்ரயணத்துக்கு அவர்களும் அதிகாரிகளே. அந்த அதிகாரத்தை அவர்கள் ஸ்வகர்மங்களைப் பகவதாராதநமாகச் செய்து, ஸத்ஸங்காதிகளால் ஸம்பாதித்துக் கொள்கின்றனர்." என்று சொல்லி முடித்தனர்.

"குணங்களின் விபாகத்தாலும் அவற்றிற்குப் பொருந்திய கர்மங்களின் விபாகத்தாலும் பகவான் வர்ணங்களை உண்டாக்கியதாகச் சொன்னார். தத்கால ஸ்திதியில் வர்ணஸாங்கர்யம் வ்ருத்தியடைகின்றதே." என்றாள் ஜநகநந்திநீ.

"ஆனால் என்ன? வர்ணம் நஶித்துப்போய், ஜநங்கள் யாவரும் ராஜ்யலோபத்தாலும், தநத்தில் ஆசையாலும், போகத்தில் இச்சையாலும், அவற்றிற்கு ஏற்றபடி ப்ரவ்ருத்திகளில் ப்ரவிஷ்டர்களானால், கேவல ஸத்வகுணத்தை உகந்த ஜீவன்கள் மிகுதியாக ஜந்மம் எடுக்கமாட்டா. லோகாதீதராயும், ஜந்மாபிமுகராயும் அப்படிப்பட்ட சேதநர் உண்டேயாகில், அவர் விஷயத்தில், ஈஶ்வரஶக்தியின் ப்ரவ்ருத்தியை நம் தேசத்தில் ம்லேச்ச ப்ராயராய்ப் பரிணமிக்கும் மநுஷ்யர் தடுத்து விடுவார்களா என்ன? கர்மாத்யக்ஷன் அவர்க்குத் தக்க ஜந்மங்களை, இந்த லோகத்தில் இல்லாவிட்டால் லோகாந்தரங்களில் தரமாட்டானோ? ஜநகம்! உனது

ப்ரஶ்நைகள் நாஸ்திக வாதங்களைப்போல் தோன்றுகின்றன." என்று சொன்னார் கேசவாசார்யர்.

"தேவரீர்க்கு அப்படித் தோன்றுவது ந்யாயமே. தேவரீருடைய க்ருபையால் அடியேனுக்குக் குறையொன்று மில்லை. ஆனாலும் ஸ்நாந நிமித்தமாகக் குளங்கட்குப் போகின்றேன். பகவத்ஸேவையை உத்தேசித்து ஸந்நிதிக்குச் செல்கின்றேன். அக்காலங்களிலும், காலாந்தரங்களிலும் நம்மவரெனப்படும் ஸ்த்ரீகள் அடியேனுடன் சேர்கின்றார்கள். அடியேனுடைய ப்ரயத்நமின்றி அவர்கள் ஸம்பாஷிக்க அடியேன் கேட்க நேரிடுகின்றது. அவர்கள் ஸம்பாஷணையால் ஜநித்த ஸம்ஶயங்களைப்பற்றிக் கேட்கின்றேன். அவற்றிற்குத்தக்க ஸமாதாநங்கள் தேவரீரைப்போல் அடியேன் யோசிக்கச் சக்தியற்றவள். திருவுள்ளம் இசைந்தால் கேட்கின்றேன்." என்று மொழிந்தாள் ஜநகநந்தினி.

"குழந்தாய்! கேள். நிவ்ருத்திக்கப்படாத ஸம்ஶயங்கள், மூலத்தில் வைக்கப்பட்ட கோடாலிபோல், நான் உன் விஷயமாகப் பட்ட கஷ்டங்களை யெல்லாம் நாசம் பண்ணிவிடும். காலவைகுண்யம் யாரைத்தான் தாக்கவில்லை? உன் ஸம்ஶயங்களைச் சொல்" என்றனர் கேசவாசார்யர்.

"ஸ்த்ரீகள் ஸமாஜங்களாய்ச் சேர்கின்றனர். ஒருவர் யோசனைகளைப் பிறர்க்குச் சொல்கின்றார்கள். ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டாம். அவர்களைப் புருஷர் இஷ்டப்படி விநியோகம் செய்ய யோக்யரல்லராம். புருஷர் பலதாரம் விவாஹம் செய்து கொள்கின்றனராம். ஸ்த்ரீகட்கு ஏகவிவாஹாநந்தரம் விவாஹநிஷேதம் ந்யாய விரோதமாம். சரீரப்ரக்ருதிகள் இருவர்க்கும் ஸமாநமாம். ஸ்த்ரீகட்குப் பால்யவிவாஹம் சரீரதௌர்பல்யத்தை உண்டாக்குகின்றதாம். சிசுக்களும் துர்பலத்துடன் பிறக்கின்றனவாம். புருஷர்களைப்போல் ஸ்த்ரீகளும் பாஷாந்தரம் படித்து, அவர்களுக்குத் தோன்றியபடி விவாஹாதிகள் பண்ணிக் கொள்ளப்போகின்றனராம். இந்த யோசனைகட்கெல்லாம் ஶிஷ்டர்களுடைய ஸமாதாநம் என்னோ?" என்றனள் ஜநகநந்தினி.

"இப்படி யோசிக்கும் ஸ்த்ரீகள் ஸமாதாநத்தையா அபேக்ஷிக்கின்றனர்? அதை அபேக்ஷிக்கும் உனக்கு அதைச் சொல்



கின்றேன். ஸ்த்ரீகளென்றும், புருஷரென்றும், ஜாதிபேதம் உண்டா? ஒரே மதாபிதாக்கட்கே, ஸ்த்ரீப்ரஜைகளும், புருஷப்ரஜைகளும் ஸந்ததிகளாகின்றன. ஒவ்வொரு புருஷனும் பெற்ற தாயையும், உடன்பிறந்த ஸஹோதரிகளையும், கொண்ட மனைவியையும், பிறந்த பெண்களையும் விஶ்வஸித்து, அவ்வவர்க்குரிய ஹிதங்களைச் செய்யவேண்டியவனன்றோ? ஸ்த்ரீகளென்று அவரைக் குளத்திலா தள்ளுகின்றான். அப்படியே ஒவ்வொரு பெண்ணும், தகப்பனையும், புருஷனையும், ஸஹோதரர்களையும், குமாரர்களையும் விஶ்வஸிப்பதில்லையோ? ப்ரஜாவ்ருத்திக்கு ஸ்த்ரீகள் முக்ய காரணமாய் நிற்க, ப்ரஜைகளை கர்ப்பத்தில் ரக்ஷிக்குமவர், புருஷரால் ரக்ஷிக்கத்தக்கவராகின்றார். க்ருஹஸ்ததையானது, அதை நடத்திவர வெளியில் சென்று ஆர்ஜிக்கும் புருஷரை அபேக்ஷிக்கின்றது; அதற்குரிய க்ருஹவ்யாபாரங்களைச் செய்யும் பெண்களையும் அபேக்ஷிக்கின்றது. இருவருடைய பிந்ந ப்ரவ்ருத்திகளும் கலந்து இல்லறம் நடக்கின்றது. இதில் வயஸ்ஸாலும், லோகாநுபவத்தாலும், யுக்தாயுக்த விவேகத்தாலும், ப்ராயேண சிறப்படைந்த புருஷன் க்ருஹஸ்வாமி யென்றும், அவனுடைய ஆஜ்ஞைக்குள்பட்டு க்ருஹவ்யாபாரத்தை நடத்திவரும் ஸ்த்ரீ க்ருஹிணி யென்றும், வ்யவஹரிக்கப்படுகின்றனர். இதில் ஸ்த்ரீகட்கு ஏற்படும் ஈஷத்பாரதந்த்ர்யம், அதிமநோஜ்ஞமான ஸ்வாதந்த்ரியம் எனத்தகும். பகவானின்பொருட்டு ப்ரஹ்லாதனுடைய நிருபாதிக பாரதந்த்ர்யம் ஸுகமா? அவன் பிதாவினுடைய மித்யாபூதமான ஸ்வாதந்த்ர்யம் ஸுகமா? ஸ்த்ரீகள் இஷ்டப்படி ஸ்வாதந்த்ர்யம் வஹித்தால் தடுப்பவரார்? யோக்யரான புருஷர் அவருடன் வாழமாட்டார். அதற்குமேல் ஆகப்போகின்ற தொன்றில்லை. இப்போது ஸ்த்ரீகளும், அவர்க்குண்டாயிருக்கும் நூதந ஸ்நேகிதரான புருஷர்களும், தூஷிக்கும் தர்ம ஶாஸ்த்ரங்கள் ஶிஷ்டாசாரங்களை அநுஸரித்து ஏற்பட்டன. ஶிஷ்டரென்றால் ஶிஷ்டரென ஸம்மதித்து பஹுமாநிக்கப்பட்டவர்கள். அவர்கள் ப்ராஹ்மணர்க்குக் காமப்ரேரிதமான விவாஹத்தைச் சிந்தித்தாரில்லை. விவாஹத்தை ஒரு ஸம்ஸ்காரமாக விதித்தனர். ஸ்த்ரீகளுடைய மநோவாக்காயங்கள் காமதூஷிதங்கள் ஆகாதிருக்கும் ஸ்திதியில், அவற்றிற்கு உத்தேஶ்யனாகும்படியான பதியை மாதாபிதாக்கள் பெண்களைக் குறித்து வரிக்கத்தக்கவர். இப்படி ஸ்த்ரீ

கட்கு உத்தேசியனை பதி ஏற்பட்ட பிறகு, பத்யந்தர சிந்தை
ஸ்த்ரீகட்குக் காமத்தால்தான் உண்டாகவேண்டும். பெரியவர்கள்
காமப்ரசாரத்துக்கு மார்க்கம் காட்டியிலர். அதை அடக்கத்தான்
வழிகாட்டியுள்ளர். ஆதலால் ஸ்த்ரீகட்கு ப்ரௌடாவிவாஹமும்
புநர்விவாஹமும் நிஷேதிக்கப்பட்டன. புருஷர்க்கும் காமப்ர
யுக்தமான விவாஹநிஷேதம் உண்டு. காமத்தால் கந்யைகளைப்
புருஷர் மணக்கின்றாரெனத் தகுமோ? அவர் மணம்செய்து
கொள்வதும் தர்மத்தின் பொருட்டும் ப்ரஜைகளின் பொருட்டும்.
ப்ரதமபத்நீ வியோகம் நேரிட்டால், அக்காரணங்களைக்கொண்டே
புருஷர் புநர்விவாஹம் செய்துகொள்கின்றனர். ப்ரஜைகள் உண்
டாயிருந்தால் தர்மார்த்தம் செய்துகொள்கின்றனர். ஸந்யாஸம்
பண்ணிக்கொள்ளத்தக்க வைராக்யம் இல்லாதிருந்தால், நிராச்ர
மிகளாய் இருக்கக்கூடாதாகையால், புநர்விவாஹம் செய்துகொள்
கின்றனர். இவையாவும் ஶாஸ்த்ரப்படி இப்போது நடக்கின்ற
னவா? எனக் கேட்கலாம். காலவைகுண்யத்தால் நடவாது நிற்க
லாம். அநேகமாக ஶாஸ்த்ராநுகரணம்தான் மிகுதியாய் நிற்க
லாம். ஆனால், லோகமறிய ஶாஸ்த்ராதிலங்கநம் செய்பவர் செய்
யட்டும். காமப்ரேரிதராய்த் தர்மவிரோதிகளாய் ப்ரவ்ருத்திக்
கின்றவர்கள், தாங்கள் இன்னும் ப்ராஹ்மணர் என்று அபிமா
னத்தை வஹிப்பானேன்? மற்றோர்க்குப் பால்யவிவாஹ நிஷேத
மில்லையே? ப்ராஹ்மணரைப்போல் மற்றோர் நடந்தாராகில், அவ
ரிடம் பஹுமாநத்தால் நடக்கின்றனர். பஹுமாநம் நீங்கியதா
கில், அவர் செயல்களைத் தடுப்பவரார்? ஜாதிக்குரிய வழக்கங்களை
அதிக்ரமித்துவிட்டு, ஜாதியைவிடமாட்டே னென்பவர் யோக்
யரா? அவரைச் சேர்த்துக்கொள்ளாத ஜாதியார் அயோக்யரா?
ஐஹிகத்தில் ஸுகமாக விருப்பதை யாவரும் காலக்ரமத்தில்
தேடிக்கொள்வர். ஶாஸ்த்ர மர்யாதையும் காலக்ரமேண குன்றும்.

ஆனால் ஸ்ரீகளுடைய ஸ்வாதந்த்ரியம் ப்ரௌடாவிவாஹத்
தாலும், விதவா விவாஹத்தாலும் மாத்ரம் ஏற்படாது. காமத்
தாலோ, காரணாந்தரத்தாலோ, விவாஹம் செய்துகொள்பவரில்,
ஒருவர்க்கோ, இருவர்க்குமோ, மற்றவரைப்பற்றிக் காமம் நீங்கி
யோ, அந்யத்ர காமம் உண்டாகியோ, ஸௌஜந்யம் போனதாகில்,
அவர்க்குள் விவாஹ நிவ்ருத்தியும், பிறகு ஒவ்வொருவரும் அந்
யத்ர இஷ்டப்படி விவாஹம் செய்து கொள்ளுவதும் ஏற்பட்



டால்தான் ஸ்வாதந்த்ர்ய பூர்த்தியுண்டாகும். பிரிந்தவரின் ப்ரஜை
களையும், புநர் விவாஹம் செய்துகொண்ட ஸ்த்ரீகளின் ப்ரஜை
களையும் ராஜாங்கத்தார் காப்பாற்றவேண்டும்.

பாஷாந்தராப்யாஸம் ப்ராயேண நம்முடைய மதத்துக்கு
விரோதியே. வித்யை பாஷாந்தரமாத்ர நிஷ்டமன்று. வ்ருத்தி
நிமித்தமாக நம்மவர்கள் பிள்ளைகட்குப் பாஷாந்தராப்யாஸம்
பண்ணிவைக்கின்றனர். அது வ்ருத்தியை மாத்ரம் ஸாதித்துக்
கொடுக்கவில்லை. ஸ்வதர்மத்வேஷத்தையும் உண்டு பண்ணுகின்
றது. நம்முடைய தர்மத்வேஷிகளும், மதாந்தர நிஷ்டர்களும்
வித்யாகுருவாகில் வேறு விளைவை உத்தேசிக்க வழியில்லை. ஸ்த்ரீ
களுக்குப் பாஷாந்தரப் பயிற்சிசெய்ய நிர்ப்பந்தமில்லை. செய்தா
ராகில், அவரும் அப்பயிற்சியுடன் கூடிய புருஷரைப் போலாவார்.
ஸ்த்ரீகள் கெடாது நின்றால், ஜாதி தர்மம் அத்யந்தம் கெடாது.
அவரும் கெட்டால் வைதிகாசாரத்தை ஏட்டில்தான் பார்க்கவே
ண்டும். உன் ஸந்தேஹ நிவ்ருத்திக்காக இவ்வளவு தூரம் சொன்
னேன். இதை நீ தெரிந்துகொண்டு ஸ்த்ரீ ஸமாஜங்களுக்கு
உபதேசிக்கப்போனால் அது பயன்படாது. பள்ளிக்கூடம் போ
கும் பையன் ஸந்த்யாவந்தநத்தை விட்டானாகில், யுக்தாயுக்த
விசாரம் செய்தா விடுகின்றான்? எச்சிலையும் தீட்டையும் விசா
ரம் செய்தா மேற்கொள்ளுகின்றான்? விசாரம் செய்தா அபக்ஷ்ய
பக்ஷணமும், அக்ருத்யகரணமும் செய்கின்றான்? இவை பள்ள
மடை. இழிவதற்கு எளிதாய் இருக்கின்றன. ஸம்ஸர்க்கங்களால்
உண்டாகின்றன. பள்ளிக்கூடம் போகும் பெண்களும் பள்ளி
களாய்த் தான் பரிணமிப்பர். ப்ராயேண நாஸ்திகரும் ஆய்விடு
வர். உன் வார்த்தைகளைக் கேளார். ஸமாதாநம் உனக்கென்று
சொன்னேன். அவர்க்காகச் சொல்லவில்லை.” என்று கேசவா
சார்யர் முடித்தனர்.

அதைக்கேட்ட ஜநகநந்தினி, “தேவரீர் ஸாதித்ததெல்லாம்
நிஜமே. ஸம்ஸர்க்கங்களால் கெடுகின்றவர்கள் ஸதஸத்விவேசநம்

செய்யமாட்டார். முநிகள் வார்த்தைகளைக்கேட்ட கிளி, முநிகள் வசநங்களைச் சொல்லும். வேடர் சொற்களைக் கேட்டால் வேடரெனக் கூவும். இன்னுமொரு ப்ரச்நம் கேட்கின்றேன். இந்த லோகத்தில் கார்யாகார்ய நிச்சயங்கட்கு சாஸ்த்ரம் ப்ரமாணமென்றான் ஈச்வரன். ஸ்ம்ருதிகர்த்தாக்கள் பிந்நாபிப்ராயங்களைக் கொள்கின்றார்களே. ப்ராசீநகாலங்களில் ப்ரௌடையான ஸ்த்ரீகள் விவாஹம் செய்துகொண்டனரே. 'நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே' எனும் மநுவாதிகளுடைய வசநமும் உண்டே." என்று சொன்னாள். "ஆசார்யர்களென ருஷிகளும் நமது பக்திக்கு அர்ஹர். அந்தந்த காலத்திய சிஷ்டாசாரங்களை உத்தேசித்து அவர் அபிப்ராயங்கள் பேதிக்கின்றன. ப்ரௌடையான பெண்கள் விவாஹமும், 'நஷ்டே ம்ருதே' எனும் ச்லோகப்படி ஆசாரமும் க்வசித் க்வசித் யுகாந்தரங்களில் நடந்திருக்கலாம். அவை சிஷ்டாசாரமன்றென்று தான் த்யாகம் செய்யப்பட்டன." என்று கேசவாசார்யர் சொல்ல, ஜநகநந்திநி, "அப்படியே தத்காலம் ப்ராசீநகால வழக்கங்களே ஸாதுவாகத் தோன்றக்கூடாதோ? பால்ய விவாஹத்தால், ஸ்த்ரீகட்கும், சிசுக்களுக்கும் தேஹதுர்ப்பலம் உண்டாவதை யோசித்தும், வைதவ்ய மடைந்த அநேக சிறு பெண்கள் காமவசராய்ப் போய் அதை அடக்கத் திறனற்றிருப்பதை யோசித்தும், ப்ராசீந ஆசாரங்களை இப்போது அநுஸரிக்கத் தகாதா?" என்றனள்.

"குழந்தாய்! "யே தத்ர ப்ராஹ்மணாஸ் ஸம்மர்சிநஃ, யுக்தா ஆயுக்தாஃ, அலூக்ஷா தர்மகாமாஸ்ஸ்யுஃ" என்று ஆசாரங்களை மாற்றத்தகுந்த அதிகாரிகளை ச்ருதி விவரிக்கின்றது. அந்த அதிகாரம், ப்ரஷ்டர்க்கும், பதிதர்க்கும், தத்துல்யராய் நம்மவரெனும் பெயரை த்யஜிக்காதவர்க்கு உண்டாகாது. அதை அவரே அறிந்திருக்கின்றனர். ஆதலால் ஸமீபகாலத்தில் நம் ஸந்நிதியில் பண்டிதர்களை வரவழைத்துத் தாம் கொண்ட கருத்தை "அவர் கருத்தென்று லோகத்தார்க்கு எண்பிக்க ஆரம்பித்தனர். அது



பயன்படவில்லை. ஸாதுக்களான ப்ராஹ்மணர் தர்ம காமர்களாய் ஆசாரங்களை மாற்ற வெண்ணினால் பழிக்கமாட்டோம். அது பர்யந்தம் ஆசாரத்திலிருக்கும் ஸ்ம்ருதிகள் பகவதாஜ்ஞையென ஆதரிக்கத்தக்கன. அப்போதும், காமத்தைக் காப்பாற்ற செய்யப்பட்ட ப்ரயத்நங்கள் ப்ராஹ்மணர்க்கு உதவா. பகவான் ஆசார்யர்கள் ஜிஹ்வையில் எழுந்தருளியிருக்கின்றான். அவ்வண்ணமே தர்மப்ரவர்த்தகர்களுடைய வசநங்களையும் ஆதரிக்கின்றான். தர்மமானது யுகங்களைப்பற்றியும், காலங்களைப்பற்றியும் பேதிக்கப் பொருந்தும். பகவான் மர்யாதைகளை ஸ்தாபிக்க அவதரிக்கின்றான் என்றால், வைதிகாசாரத்தை வேரில் வெட்டுகின்றவர் க்ரியைகளை உகப்பனோ? உகக்கமாட்டான்." என்று கேசவாசார்யர் சொல்லிமுடித்தார். ஜநகநந்திநியும் பிதாவைத் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு உள்ளே சென்றனள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஶ்ரியை நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

திகஶுசிமவிநீதம் நிர்தயம் மாமலஜ்ஜம்
பரமபுருஷ! யோऽஹம் யோகிவர்யாக்ரகண்யை: |
விதிஶிவஸநகாத்யைர் த்யாதுமத்யந்ததூரம்
தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த: || 47.

47- கீழ் 17 ஶ்லோகங்களினால் த்வயத்திலுள்ள நான்காம் வேற்றுமைப் பதத்தின் அபிப்ராயத்தை விஸ்தரித்துப் பேசி, அவைகளுள் 17 - வது ஶ்லோகத்திலுள்ள 'ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்னும் பதத்தினால் 'ஸர்வதேஶத்திற்கும் ஸர்வகாலத்திற்கும் உசிதமான நிருபாதிக ஸர்வவித கைங்கர்யமே தமக்குப் பரமப்ரயோஜநமாயுள்ளது' என்னும் தாத்பர்யத்தை ஸூசிப்பித்த பிறகு, ஸ்ரீ ஆளவந்தார், 'திகஶுசிம்' என்று தொடங்கும் இந்த ஶ்லோகத்தினால் தம்மை நிந்தித்துக் கொள்வதான வ்யாஜத்தைக்கொண்டு, 'தம்மால் அபேக்ஷிக்கப்படும் பரம புருஷார்த்தமானது மற்றைப் புருஷார்த்தங்களெல்லாவற்றையும்விட மிகவும் உயர்ந்தது' என்பதையும், 'அந்தப் பரமபுருஷார்த்தத்தை அடைவதில் தமக்கு உள்ள த்வரை மிகவும் அதிகம்' என்பதையும் வ்யஞ்ஜிப்பிக்கிறார். அதாவது - ப்ராப்யனான ஈஶ்வரனுடைய ஸர்வ வைலக்ஷண்யத்தையும் தமது அந்யாத்ருஶமான தைந்யத்தையும் அநுஸந்தித்து, 'ஸர்வ பரித்யாஜ்யனாக இருக்கும் நான் எவ்விதத்தில் பகவத் ப்ராப்திக்கு யோக்யனாவேன்?' என்று அகலப் பார்க்கிறார் போலும்.



ஹே பரமபுருஷ! யோகிவர்யாக்ரகண்யை: விதி-ஶிவ-ஸநகாத்யை: (அபி) த்யாதும் அத்யந்ததூரம் தவ பரிஜநபாவம் யோऽஹம் காமவ்ருத்த: காமயே, (தம்) அஶுசிம் அவிநீதம் நிர்தயமலஜ்ஜம் மாம் திக் | [ஹே புருஷோத்தமனே! யோகி ஶ்ரேஷ்டரில் ப்ரதம பரிகணனீயரான ப்ரஹ்ம ருத்ர ஸநகாதிகளாலுங் கூட நினைக்கைக்கும் அத்யந்தம் தூரமாயுள்ளதான உன்னுடைய கைங்கர்யத்தை நிஹீநாக்ரகண்யனான நான் யுக்தாயுக்தம் விசாரியாமல் இஷ்டப்படியெல்லாம் நடக்கிறவனாய்க்கொண்டு அடைய விரும்புகிறேனே; அப்படிப்பட்ட அத்யந்தம் அஶுசியாகவும் ஸுஶிக்ஷிதனல்லாதவனாகவும் நிர்தயனாகவும் லஜ்ஜையற்றவனாகவுமிருக்கும் என்னை வெறுக்கிறேன்.]

ஆத்ம ப்ரஶம்ஸையும் ஆத்ம நிந்தையும் கூடாதென்று ஶாஸ்த்ரம் நிஷேதிக்கையில், ஸ்ரீ ஆளவந்தார், எவ்வாறு இவ்விடத்தில் ஆத்மநிந்தையில் இறங்குகிறார்? என்று கேட்டால், ஶாஸ்த்ர நிஷேதத்தின் தாத்பர்யம், 'தோஷாவஹமாகும்பொழுது மாத்ரம் அவை கூடா, குணத்தின் பொருட்டு ஆகும்பொழுது கூடும்' என்று மறுமொழி சொல்லக்கூடும். ஆஞ்ஜநேயாதிகளின் விஷயத்தில் ஆத்ம ப்ரஶம்ஸை குணமாவது போல, இவ்விடத்தில் ஆத்மநிந்தை குணமே ஆகின்றது. அதாவது - ஹார்த்தமாக உணரப்படும் தமது தைந்யத்தை க்யாபநம் செய்யுமிடத்தில் ஆத்ம நிந்தை தோஷாவஹமன்று என்பது தாத்பர்யம். "வளவேழுலகில்" ஆழ்வார் தம்மை நிந்தித்துக் கொண்டிருப்பதை நாம் அறியோமோ? உண்மையாகவே, தமது நிஹீநதையை அநுஸந்திக்கும் ஸ்ரீ ஆளவந்தார், 'ஸர்வோத்க்ருஷ்டனான அந்தப் பரமபுருஷன் நம்மால் விரும்பப்படுகிறான்' என்னும் இந்த ஒரு ஸம்பந்தத்தால் அந்தப் பரமபுருஷனுக்கு எங்கே தோஷம் ஏற்பட்டுவிடுமோ? என்று பயப்படுகிறார்.

ஹே பரமபுருஷ - ஹே ஸர்வாதிகனான புருஷோத்தமனே! ‘பகவான் நித்ய ஸூரிகளாலன்றோ ஸேவிக்கத்தகுந்தவன்? அவ்வளவு உயர்ந்தவனுச்சுதே!’ என்பதை இந்தப் பதம் வ்யஞ்ஜிப்பிக்கின்றது.

யோகிவர்யாக்ரகண்யை: விதிஶிவஸநகாத்யை: - பகவத் பக்தர்களுக்குள் அக்ர கண்யரான ப்ரஹ்ம ருத்ராதிகளென்ன, ஸநகாதிகளென்ன இவர்களாலேகூட. ஸநகாதிகள் ப்ரஹ்ம பாவநா நிஷ்டர்கள், ப்ரஹ்மருத்ராதிகள் உபய பாவநா நிஷ்டர்கள் என்று ஒரு விபாகமுண்டு. அதை அவலம்பித்து எல்லாரையும் ஸங்க்ரஹிப்பதற்காகவே, இவ்விடத்தில் இவர்களெல்லாரும், துல்யாதிகாரத்தை வஹிக்காமல் இருக்கையிலும், ஒரே பதத்திற் சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கிறார்கள்.

த்யாதும் அத்யந்ததூரம் - நினைக்கைக்கும் அதிமாத்ரம் தூரமாயிருக்கும். மாநஸிகமான நினைக்கைக்கே அவ்வளவு தூரமாக இருந்தால் காயிகமான ப்ராப்திக்கு எவ்வளவு தூரமாக இருக்கவேண்டும்? என்பது குறிப்பு.

தவ பரிஜநபாவம் - உன்னுடைய கைங்கர்யத்தை. ‘கொம்புத்தேன் போல அத்யுந்நதமான இடத்தில் இருக்கையிலும் அதன் நிரதிஶய போக்யதையன்றோ இந்த முடவனை ஆகர்ஷித்துவிட்டது?’ என்று வருத்தப்படுகிறார். தவிரவும், ‘உனக்கு அநுரூபமாயுள்ள அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் கணக்கற்றவர்களாக நான் முன்னே நான் முன்னே என்று கைங்கர்யம் செய்யக் காத்திருக்கையில், அத்யந்தம் அநநுரூபமாயிருக்கும் என்னுடைய கைங்கர்யத்தை நீ அபேக்ஷிப்பது எப்படி?’ என்றும் ஶோகிக்கிறார்.

காமவ்ருத்த: யோஹம் காமயே - லோக ஶாஸ்த்ரங்களை ஆதரிக்காமலே இஷ்டப்படி யெல்லாம் நடந்துகொண்டு விஷய



ப்ரவணனா யிருக்கும் நான் அடைய விரும்புகிறேனே. ‘கேவலம் ஸங்கத்தை மாத்திரம் நான் அபேக்ஷிக்க வில்லை; ‘கதா ஸாக்ஷாத்கரவாணி’ என்றும் ‘கதா ப்ரஹர்ஷயிஷ்யாமி’ என்று மன்றோ நான் என்னுடைய த்வரையை வெளியிட்டுக் கூப்பிட்டேன்?’ என்பதை ‘காமயே’ என்னும் பதம் ஸூசிப்பிக்கிறது.

திக் அஶுசிம் அவிநீதம் நிர்பயம் மாம் அலஜ்ஜம் - ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றிருப்பதனாலேயே அஶுத்தனாயிருக்கும். தேஹ ஸம்பந்தமே இல்லாமலிருக்கும் நித்யான்றோ ஶுத்தராவார்? தவிரவும், ‘எனக்குப் பாவஶுத்தியே இல்லையே! அப்படி இருக்கையிலும் அது இருப்பது போலவே நான் நடிக்கின்றேன்; ஆகையால், நான் அத்யந்தம் அஶுத்தன்’ என்றும் தாத்பர்யம். ‘அவிநீதம்’ அஶிக்ஷிதனை. ‘பெரியோர்களைத் தேடி அடைந்து, ‘ஸாத்விகை ஶாஸிதாரம்’ என்கிறபடி அவர்களால் ஶிக்ஷிக்கப்பட்டிருந்தாலன்றோ எனக்கு உன்னுடைய ப்ராப்தி உண்டாகும்; அது இல்லாததனால் அவிநீதன்’ என்பது தாத்பர்யம். எனக்கு ஆசார்ய ஸம்ஶ்ரயம் நேர்ந்தும் அது விடம்பநத்தின் பொருட்டன்றோ ஆகிவிட்டது? என்பது கருத்து. ‘நிர்பயம்’ பயமில்லாத. ‘அயோக்யன் துர்லபமான வஸ்துவை ஆசைப்படுவது, நாய் புரோடாஶத்தை இச்சிப்பது போலவன்றோ? அப்படி இச்சிக்கும் ஶ்வாவுக்குத் தடியடி பலமாகக் கிடைப்பது போல எனக்கும் ஶிக்ஷை கிடைக்குமே!’ என்னும் பயமற்றவன் என்பது கருத்து. ‘நிர்தயம்’ - என்று ஒரு பாடமுமுண்டு. அப்பொழுது ‘நான் செய்யும் அபசாரம் எனக்கு ப்ரத்யவாயத்தை ஜநிப்பிக்கிற தன்றிக்கே என்னைச் சேர்ந்தவர்களையும் நஶிப்பிக்கும் என்பதை நான் அறிந்திருக்கையிலும் அந்த அபசாரத்தில் நான் ப்ரவ்ருத்திக்கிறேனே! இதைவிட வேறு நிர்த்தயத்வமும் உண்டோ?’ என்பது தாத்

பர்யம். 'அம்ருதத்தை விஷந்தாலே தூஷித்தாற்போல, விலக்ஷண போக்யமான பகவத் தத்வத்தைக் கண்ணுற்றுத் தூஷிக்கப் பார்த்த நிர்த்தயனை' என்பது ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அநுக்ரஹித்திருக்கும் தாத்பர்யம். 'அலஜ்ஜம்' - வெட்கமற்ற. 'ஸார்வபௌமனைப் பரிஷ்வங்கம் செய்துகொள்ள வேணும் என்னும் அபிலாஷை கொண்டிருக்கும் கடதாஸிபோல, அநுசித விஷயத்தில் மனோரதம் கொண்டிருக்கும் நான் எல்லாராலும் பரிஹஸிக்கப்படுவேனே என்று லஜ்ஜிக்கவு மறியாத என்னை' என்பது கருத்து. ஊம் - என்னை. அஹங்காரம் முதலிய பிசாசங்களினால் பிடிக்கப்பட்டிருக்கும் என்னை என்பது தாத்பர்யம். தீக் - இதனால் தம்மை வெறுத்துக்கொள்ளுகிறார்.

"லோகயாத்ரா பயம் லஜ்ஜா தாக்ஷிண்யம் த்யாகஶீலதா ।
பஞ்ச யத்ர ந வித்யந்தே ந குர்யாத் தத்ர ஸம்ஸ்திதிம் ॥"

[எவனொருவன், லோகத்திற்குக் கட்டுப்படாமலும், பயம் லஜ்ஜை தாக்ஷிண்யம் இல்லாமலும், தர்ம விருத்தமாகவும் நடக்கிறானோ அவன் ஸங்கத்திற்கே அநர்ஹன்] என்று சொல்லுகிறபடி, நிர்பயனாகவும் நிர்லஜ்ஜனாகவும் துர்விநீதனாகவும் அஸூசியாகவும் தம்மை அநுஸந்தித்துக் கொள்வதனால், ஸ்ரீ ஆளவந்தார், 'நாமும் ஸர்வ விதத்திலும் பரித்யாஜ்ய ராகிறோம்' என்று தம்மை வெறுத்துக் கொள்ளுகிறார்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ அஹோபில மடம்.

சென்ற வைகாசி மாஸத்தில், ஸ்ரீ அஹோபில மடத்தின் திவ்ய ஆஸ்தானத்தை நாலு ஐந்து வருஷங்களாக அலங்கரித்து வந்த ஸ்ரீ பராங்குஶ யதீந்த்ர மஹாதேஶிகன் திருநாட்டை யலங்கரித்த வுடனே, அவருடைய நியமனத்தின் பேரில் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் என்னும் அபரநாமம் பெற்றிருக்கும் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திவ்ய ஆராதனத்தை அங்கீகரித்து அந்தத் திவ்யஆஸ்தானத்தின் அதிபதியாக எழுந்தருளினர் என்னும் வ்ருத்தாந்தம் ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இந்த ஸ்ரீ ஸ்வாமியின் ஜ்ஞாந அநுஷ்டாந ஸம்பத்தும் ஆத்மகுண பூர்த்தியும் அதிமாத்ரம் ஶ்லாகநீயங்களாக இருப்பதை அந்த ஸ்வாமியை நேரில் தண்டன் ஸமர்ப்பித்தவர் எல்லாரும் அநுபவித்து அறிந்திருக்கிறார்கள். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவாராதநம் குறைவற நடக்கவேண்டு மென்பதிலும், பகவத்ராமாநுஜ ஸித்தாந்தம் தழைத்து ஓங்க வேண்டு மென்பதிலும், ஶாஸ்த்ரோக்தமாக எம்பெருமானுடைய திருவடிகளை ஆஶ்ரயித்து ஜகத் முழுவதும் ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டு மென்பதிலும் அந்த ஸ்வாமிக்கு இருக்கும் அபிநிவேஶம் இவ்வளவு என்று சொல்லமுடியாது. ஏற்கெனவே இந்தப் பத்திரிகையில் ஒருகாலத்தில் விஜ்ஞாபநம் செய்யப்பட்டிருக்கிறபடி, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் ஐகாந்திக நித்ய கிங்கரத்வத்தை வஹித்து, அதனால் தமது ஜீவிதத்திற்கு க்ருதக்ருத்யதையை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்னும் ஆஸ்தையே அந்த ஸ்வாமியை இந்த ஆஸ்தானத்தை அங்கீகரிக்கும்படி செய்தது. அவர், இந்த ஆஸ்தானத்தின் தர்மம் முழுவதையும் பூர்ணமாக உணர்ந்தவரே. அந்தத் தர்ம பரிபாலனத்தையே பெரிதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்பதற்கு நிதர்ஶநமாக இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் யாத்ரோத்ஸவம் கண்டருளுவதை நாம் பார்க்கலாம். ஸ்ரீ ஸ்வாமி ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினவுடன், ஸாமாந்யஜனங்களில் அநேகருக்குப் பற்பல ஶங்கைகள் மனத்தில் ஜநித்தன. அநேக ஔத்தரர்கள், 'இனி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தாம்ரபர்ணீ தீரத்திலேயே நித்ய வாஸம் கண்டருளப்போகிறார்' என்று சொன்னதையும், அநேக தாக்ஷிணாத்யர்கள் 'ந்ருஸிம்ஹனுடைய விஶேஷ கடாக்ஷத்திற்குத் நாமே பாத்ரமாகி விட்டோம்' என்று நினைத்ததையும் நாம் அறிவோம். அந்த ஶங்கைகளெல்லாவற்றையும் வ்யுதாஸம் செய்து கொண்டு, எவ்வித வைஷ

ம்ய கைங்கர்யமு மின்றிக்கே, ஆஸ்ரிதர்களின் ஆத்மோஜ்ஜீவநத்தையே பெரிதாகக் கருதி இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் திருநாராயணபுரம் ஸ்ரீ அஹோபிலம் முதலிய திவ்யதேசங்களுக்கு யாத்ரையாக எழுந்தருளுவதைப் பார்க்க நாம் அத்யந்தம் ஆஹ்லாதிக்கிறோம். ஒருகால், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய விபூதியின் அபிவ்ருத்தி விஷயத்தில், பரம்பராகதமான ஆசாரங்களுக்கு விரோதமின்றிக்கே இக்காலத்திற்கு அநுகுணமாகச் சில நூதந வ்யவஸ்தைகளைச் செய்ய ஸ்ரீ ஸ்வாமி இன்னும் முயலவில்லையென்று சிலர் நினைக்கலாம். அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தியின் ஸ்வரூபத்தை விஸதமாக ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் அவர்கள் விஜ்ஞாபநம் செய்யும் பக்ஷத்தில், குணக்ரஹண ஸீலமுள்ள அந்த ஸ்ரீ ஸ்வாமி அந்த விஜ்ஞாபநங்களை ஆதரவுடன் திருச்செவியிற் சாத்திக்கொண்டு யதோசிதம் அவைகளுக்கு ஸமாதாநத்தை நியமித்தருளுவர் என்பதில் கிஞ்சித்தேனும் ஸந்தேஹமில்லை.

இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் பெங்களூர் துளஸீதோட்டத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறதாகவும், இன்னும் 10 தினங்கள் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கப் போகிறதாகவும், பிறகு அஹோபிலம் மார்க்கமாக கெத்தவாலுக்கு எழுந்தருளி வரப்போகிற ஸரத்காலத்தில் ஸ்ரீ அஹோபிலத்தை மறுபடியும் அலங்கரிக்கப்போகிறதாகவும் இப்பொழுது ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து கிடைத்திருக்கும் ஸ்ரீமுகத்தினால் தெரியவருகிறது.

மைஸூரில் மஹாராஜா அவர்கள் ஸ்ரீ ஸந்நிதிக்கு உத்தம மர்யாதையைச் செய்வதில் நோக்கம் இல்லாமல் இருப்பதைத் தெரிந்துகொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் அவ்விடம் எழுந்தருளாமலே பெங்களூருக்கு எழுந்தருளி விட்டதாகக் கேள்விப்படுகிறோம். இந்த மர்யாதை விஷயமாகப் பற்பல ஸமயங்களில் பலபெயர்கள் மஹாராஜா அவர்களுக்கு மனுச்செய்துகொண்டார்கள்; பிறகு மைஸூர் ராஜாங்கத்தார், இந்த மனுக்களை மிக்க ஸ்ரத்தையுடன் தாம் ஆலோசித்ததாகவும், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் மர்யாதை ஸம்பந்தமான வ்யவஸ்தையை மாற்றுவதற்குத் தகுந்த காரணம் தமக்குப் புலப்படவில்லையென்றும், சென்ற பிப்ரவரி மாஸம் 1௨ ஒரு உத்தரவு செய்திருக்கிறார். அந்த உத்தரவை அநுஸரித்தே இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விஷயத்தில் அந்த ராஜாங்கத்தார் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். அந்த உத்தரவில் ஏதாவது தர்ம விரோதமாவது பழைய பரிபாடிக்கு வேற்றுமையாவது இருந்தால், அதை அறிந்த ஆஸ்திகர்கள் அந்த ராஜாங்கத்தாருக்கு அந்த விரோதங்களைக்கண்டு மறுபடியும் மனுச்செய்துகொள்வார்களென்று நம்புகிறோம். பெங்களூரில் தகுந்த பதவியில் இருக்கும் ஸ்ரீ உ. வே. பி. கே. கருடாசார்ய ஸ்வாமி தாம் இதில் நேதாவாக இருக்கவேண்டுமென்பது நம்முடைய ப்ரார்த்தனை.

எல். வாஸுதேவன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள வருஷ சித்திரை மீ [ஸஞ்சிகை 3.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்

ஆர்யா பத்ரிகை.

மஹா வித்வானான அரவிந்த கோஸ் என்பவர் "ஆர்யா" எனும் மாஸாந்தர பத்ரிகையை இங்லீஷில் ப்ரசுரப்படுத்துகின்றார். இந்தியாவிலும் தேசாந்தரங்களிலும் தத்கால ஐரோப்ய வித்யையை அப்யஸித்தவர்க்குள் அவரைக்காட்டிலும் ஏற்றமுள்ளவரை நினைப்பதரிது. வேத வேதாந்த மதமானது ஸர்வோத்க்ருஷ்டமான மதமென்பதை இங்க்லீஷ் படித்தவர் அறிந்துகொள்ளும்படி அவர் எழுதுகின்றாராதலால், அந்த விஷயத்தில் அங்யதாப்ரமைகொண்ட மதியுடையோர் முற்றிலும் மதி ப்ரம்சம் அடைவதன் முன்னர் அவர் வசநங்களைப் படிப்பாரென்று நம்புகின்றோம்.

வேத ரஹஸ்யம்.

அவர் வேத ரஹஸ்யமென்று சில விஷயங்கள் அப்பத்ரிகையில் மாஸந்தோறும் வெளிப்படுத்தியுள்ளார். வேத மந்த்ரங்களுடைய ஏகதேச விவரணம் ப்ராஹ்மணங்களிலும் உபநிஷத்துக்களிலும்

கிடைக்கின்றது. ப்ராசீந ஸம்ப்ரதாய விவரண மெனத் தகும் ஶாயநபாஷ்யம், பூதேந்த்ரியாதிகாரிகளான இந்த்ராதி தேவர்களை உத்தேசித்துச் செய்யப்பட்ட யாகம் முதலான க்ரியா கலாபங்கட்கு ஸஹகாரிகளாக, வேதங்களின் மந்த்ரபாகங்களை விவரித்திருக்கின்றது. இத்தகைய மதம் ஸாதாரண ஜநங்களால் முன் காலங்களில் விஶ்வஸிக்கப்பட்டதென்றும், அது வேத மந்த்ரங்களின்மேல் ப்ரதிஷ்டித மென்றும், அரவிந்த கோஸ் ஒப்புக்கொள்கின்றார். இவ்விதமாக ஏற்பட்ட ப்ராசீந ஆர்யமதமானது, வேதம் படித்த ஐரோப்பியர் பஹுமாநத்தை அடையாமல், அம் மந்த்ரஸாக்ஷாத்காரம் செய்த ருஷிகளுடைய ஜ்ஞாநமாந்த்யத்தையும் பற்றி அவர் யோசிக்க இடம் தருகின்றது. மந்த்ரங்களில் ஶப்த ப்ரயோகம் க்லிஷ்ட கல்பனையாகவும் ஸுகரமாய் அர்த்தம் விளங்காமலும் இருக்கின்றன வென்றும், பூர்வோத்தர வாக்யங்கள் மேலெழுந்தபடி ஸம்பந்தமற்றுக் கிடக்கின்றனவென்றும், அவற்றின் ஸமுதாயார்த்தம் க்லேசத்தால் நிஶ்சயிக்கும்படி யிருக்கின்றதென்றும் ஐரோப்பியர் சொல்வதை அரவிந்த கோஸும் அநுவதிக்கின்றனர்.

சிலர் இம்மந்த்ரங்களில் பூர்வாபர விபாகங்கள் செய்து, வேதாந்த விசாரமும் தர்ம நிஶ்சயமும் ப்ரதிபலிக்கும் மந்த்ரங்கள் காலத்தால் பிற்பட்டனவென்று யோசித்து, அவற்றிற்கும், இதர மந்த்ரங்கட்கும் ஸங்கதியின்மையைக் கண்டதா யெண்ணி, பிற்பட்ட மந்த்ர விஷயங்கள் த்ராவிடரிடமோ, மற்றவரிடமோ, ஆர்ய ருஷிகள் கற்றனரெனச் சொல்லவும் துணிகின்றனர். அம் மந்த்ர காலத்தில் வேதாந்த ஜ்ஞாநம் அந்யத்ர இருந்ததாகக் காணவேண்டுமெனும் நிர்ப்பந்தம் கூட இப்படி யோசிக்கின்றவரைக் கட்டுப்படுத்தவில்லை.

"ஐரோப்யர் நிஜமான வேதமெனக் கொள்கின்ற ருக்வேதத்தில், நிவர்த்திக்கக்கூடாத அநேக கஷ்டங்களை ஆவிஷ்கரிக்கின்ற அத்யந்தம் அநாதியான பாஷையில் அமைக்கப்பட்டவைகளும், யஜ்ஞோபயுக்தங்களுமான பாட்டுகளின் கூட்டத்தைக் காண்கின்றோம். அதில் பிற்பட்ட (ஸம்ஸ்க்ருத) பாஷையில் அகப்படாத ப்ராசீந முறைகளும் பதங்களும் மிகுந்திருக்கின்றன. புத்திமான்களால் அவற்றின் அர்த்தம் கிஞ்சித் ஸம்ஶயத்துடன் நிஷ்கர்ஷிக்க



வேண்டியதாகின்றது. பிற்பட்ட பாஷையில் வழங்கும் பல பதங்கள் அவ்விடத்தில் பிந்நமான அர்த்தங்களைக் கொள்கின்றன; அல்லது, ப்ருதக்கான அர்த்த சிந்தனைக்கு அவகாஶம் தருகின்றன." என்றெழுதி, வேதபாகங்களில் காணப்பட்ட பஹு ஸாமாந்ய பதங்கள், விசேஷார்த்த ப்ரதிபாதகங்களாய் நின்று, அத்யந்தம் பரஸ்பரம் பேதிக்கின்ற பொருள்களைத் தருகின்றன வென்றும், அப்பொருள்களில் நாம் ஸ்வரஸமா யெண்ணக்கூடியவை, பல வாக்யங்களுக்கும், பல ஸூக்தங்களுக்கும், வேதத்தின் முழுதாத்பர்யத்துக்கும், ஸம்ப்ரதாயாபிப்ராயங்களைக் காட்டிலும் வேறுபட்ட அபிப்ராயங்களை உண்டாக்குகின்றன என்றும் ஆர்யா பத்ராதிபர் முடிக்கின்றார். லோகத்தில் உண்டான பல உத்க்ருஷ்ட மதங்களுக்கும், ஸூக்ஷ்மமான தத்வ நிருபணங்களுக்கும், இந்த வேதமந்த்ரங்கள் மூலஸ்தாநமாக அங்கீகரிக்கப்பட்டுள என்றும், ப்ராஹ்மணங்களிலும் உபநிஷத்துக்களிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் வைஷ்ணவ சைவாகமங்களிலும் ஸாங்க்யாதி தர்ஶநங்களிலும் அடங்கிய தத்வ நிருபணங்கட்கெல்லாம் வேதம் மூலப்ரமாணமென்பது பஹுஸஹஸ்ர ஸம்வத்ஸரங்களாக நம்பப் படுகின்றது என்றும், வேதமெனும் சப்தத்தின் அர்த்தம் ஜ்ஞாநமென்று ப்ரஸித்தமாயிருக்கிறது என்றும், இப்படிப்பட்ட க்யாதியானது, ஶாயநாசார்ய பாஷ்யப்படியும், ஐரோப்பியர் யோசனைகளின் படியும் வேதத்திற்குத் தகாது என்றும் அவர் அபிப்ராயப்படுகின்றார்.

பின்னும் அவர், காரணமின்றிக் கார்யம் உதிக்காதாகையால், உபநிஷத்துக்கு மூலஸ்தாநமான வேதம் அப்படி யிருக்கத்தகாது எனவும், அதன் மூலத்தை அந்யத்ர தேடவேண்டுமெனும் நிர்ஹேதுகமான ஊஹங்கள் படன்பட்டா எனவும், ஆதலால் வேதமந்த்ரங்கள் ஸாமாந்ய ஜநங்கட்கு அவர்க்குத் தக்க மதமொன்றை அளிக்கும்படியாயும், விசேஷார்த்த மறியத்தக்கவர்க்கு விசேஷார்த்த ப்ரதிபாதங்களாகவும் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டன வெனவும், அந்த விசேஷார்த்தங்களை வெளியிடத் தான் ப்ரயத்நப்படுவதாகவும் அவதாரிகையில் சொல்லுகின்றார்.

இந்த ஸங்கல்பப்படியே சில ஸூக்தங்களைப் பொறுக்கி யெடுத்து இங்கிலீஷ் படுத்தியதுமன்றி, அவற்றிற்கு வ்யாக்யாநமாகவும் விஶேஷித்து எழுதுகின்றார். இவையெல்லாம் ஸாதுக்

களுக்கு ஸந்தோஷமுண்டாக்கு மென்பதில் ஸந்தேஹமில்லை. ஸாயனாசார்யருடைய பாஷ்யங்களினின்று அரவிந்த கோஷி னுடைய விவரணம் எவ்வளவு வ்யாவர்த்திக்கின்ற தென்பதை யாம் இவ்விடம் யோசிக்கின்றோ மில்லை; அதற்கு வேண்டிய க்ரந்தாவலோகநமும், பராமர்சையும் தக்காலம் நமக்கு ஸாத்யமன்று. ஆனாலும், மந்த்ரம் என்றால் ரஹஸ்யார்த்தங்களுடன் கூடிய தென்பது தான் கருத்து. மேலெழுந்தவாருகப் புலப்படும் அர்த்தம் ரஹஸ்யமாகாது. ரஹஸ்யார்த்தம் குருவால் சிஷ்யர்க்கு வெளிப்படுத்தத்தக்க தாகையால், பாஷ்யகாரர்களால் வெளிப்படுத்தாமல் விட்டிருக்கக்கூடும். வேதபாஷ்யகாரர் கர்மகாண்ட மந்த்ரங்களைக் கொண்டவைகட்குக் கர்மத்தில் அந்வயிக்கின்றவர்க ளறிய வேண்டியபடி அர்த்தம் செய்திருப்பர். அந்த மந்த்ர ப்ரகரணங்களில் பரமாத்மாவினுடைய அஸாதாரண தர்ம வ்யபதேசமிருந்தால், அவ்விடம் காணப்பட்ட ஸர்வ தேவதா சப்தங்களும் பரமாத்ம வாசகங்களாய் விடுகின்றன. “[illegible]” என்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸூத்ரவ்யாக்யாநமிருக்கின்றது. அன்றியும், “ஸாக்ஷாத3ப்யவிரோத4ம் ஜைமிநி:” எனும் ஸூத்ரப்படி அக்நி முதலான தேவதா நாமங்கள் அவற்றின் அர்த்தங்களைப் பர்யாலோசித்தால், ஸாக்ஷாத்தாகப் பரமாத்மாவையே குறிக்கின்றதாக ஜைமினிராசார்யர் அபிப்பிராயப்பட்டிருந்தால், ப்ராயேண ஸர்வவேத ப்ரகரணங்களும் பரமாத்மாவை விஷயமாயுடையன வென்று அநேக ஸஹஸ்ர ஸம்வத்ஸரங்களாய் மஹர்ஷிகளால் கொண்டாடப்பட்டிருக்கின்றன. ஐந்நூறு வர்ஷங்களுக்கு மேற்பட்ட ஸந்த்யாவந்தந பாஷ்யங்களால் ஸந்த்யோபாஸநத்துக்கு உபயோகமான ஸர்வவேத மந்த்ரங்களும் பரமாத்ம விஷயமாகவே வ்யாக்யாதங்கள்.

ஆனால் கர்மகாண்ட ப்ரகரணங்களனைத்தும் பரமாத்ம விஷயமென்றும், இந்த்ராதி ஸர்வ சப்தங்களும் பரமாத்ம வாசகமென்றும், அந்த சப்தங்களால் நிர்த்தேசிக்கப்பட்ட தேவதா விசேஷங்களை மறுத்தும், தயாநந்த ஸரஸ்வதி முதலானவர்கள் நூதநமாக வேதார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கின்றனர். இவர்கள் ஸாயநாசார்யருடைய பாஷ்யம் முற்றிலும் அபார்த்தம் என்பர். தாங்கள் செய்யும்



அர்த்தம் தான் ப்ராசீந ஆசார்யர்களான யாஸ்கர் முதலானவர் அபிப்ராயத்தை ஒத்திருக்குமென்பர். இப்படி ஸாயந பாஷ்யங்களை அரவிந்தகோஷ் நிந்திப்பவரன்று. அந்தப் பாஷ்யங்களும் உண்மையாய் இருந்ததோர் கர்ம மார்க்கத்திற்கு அநுகூலமென்றும், அப்படிக் கர்மமார்க்கத்திற்கு உபயோகமாகும் மந்த்ரங்களும் ப்ரஹ்ம விஷயமான கூடார்த்த கர்ப்பமாக இருக்கின்றன வென்றும் அவர் நிச்சயிக்கின்றனர்.

**வேதத்தின் கர்ம ப்ரஹ்ம பாகங்கள்.**

“அத2 பரா யயா தத3க்ஷரமதி4க3ம்யதே” என்று, உபநிஷத் பாகங்களைப் பரவித்யை யென்றும், ருக்வேதாதிகள் அபரவித்யை யென்றும், இரண்டும் முமுக்ஷுவால் அறியவேண்டியவை என்றும் முண்டகோபநிஷத்தில் சொல்லியிருக்கின்றது. அவ்விடமே, “பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்3ராஹ்மணோ நிர்வேத3மாயாத்” என்று, வேதத்தில் கர்மபாகத்தை ஒப்புக்கொண்டு அதன்படி அடையக்கூடிய பலங்களில் நிர்வேதம் கொள்ளும்படி உபதேசித்து, “தத்3விஜ்ஞாநார்த2ம் ஸ கு3ருமேவாபி4க3ச்சே2த்” என்றாரம்பித்து, “ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்3ரஹ்மவித்3யாம்” என்று முடித்து, ப்ரஹ்ம வித்யையின் ஏற்றத்தை ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விடம், “யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவத3ந்தி” என்றாரம்பித்து, “தாவாந் ஸர்வேஷு வேதே3ஷு ப்3ராஹ்மணஸ்ய விஜாநத:” என்று முடியும், ஸ்ரீமத் பகவத்கீதை, இரண்டாம் அத்யாயம், 42-வது ச்லோகம் முதல் 46-வது ச்லோகம் வரையில், உள்ள வாக்யங்கள் யோசிக்கத்தக்கன. அந்த ச்லோகங்களின் ஸமுதாயமான அர்த்தமாவது:—“ஸ்வர்க்காதி பலன்களைச் சொல்லுகின்ற வேதவாக்யங்களில் ருசியுடையவராயும், ஸ்வர்க்காதிகளைக் காட்டிலும் அதிக்ரமிக்கின்ற பலம் இல்லை யென்று சொல்பவராயும், காமங்களில் ப்ரவணமாகும் மநஸ்ஸுடன் கூடினவராயும், ஸ்வர்க்கமே புருஷார்த்தமென்று எண்ணுகின்றவராயும் இருக்கின்ற அவிவேகிகள், ஸ்வர்க்காதி பலாநுபவத்தின் முடிவில், தாங்கள் செய்த கர்மாந்தர பலமாகப் புநர் ஜந்மத்தைத் தருகின்றதும்,

போகமென்ன, ஐச்வர்யமென்ன, இவற்றை அடைவதற்கு ஸாதநமாகின்ற அநேக க்ரியா விசேஷங்களுடன் கூடியதுமாய் இருக்கின்ற கேவலம் புஷ்பித்த மரமெனப் பார்வைக்கு ப்ரகாசத்துடன் கூடிய யாதொரு இந்த வார்த்தைகளைச் சொல்கின்றனரோ, போகங்களிலும் ஐச்வர்யங்களிலும் இச்சைகொண்டு மேற்சொன்ன வார்த்தைகளால் அபஹரிக்கப்பட்ட மநஸ்ஸுடன் கூடின அவர்களுடைய சித்தத்தில், ஆத்மாவின் ஸ்வரூப நிச்சய பூர்வகமாய் அநுஷ்டிக்கத்தக்க கர்மயோக விஷயமான புத்தியானது ஒருபோதும் உண்டாகமாட்டாது. ஸத்வ ப்ரசுரராயும், ரஜோகுண ப்ரசுரராயும், தமோகுணப்ரசுரராயும் மநுஷ்யர் வேறுபட்டு இருக்கின்றபடியால், அவர் எல்லோர்க்கும் அவ்வவர்க்குத் தகுந்தபடி வேதங்கள் ஹிதங்களைப் போதிக்கின்றன. அர்ஜுநா! நீ த்ரைகுண்யன் (முக்குணமும் கலந்தவன்) ஆகாதே. (ஸத்வப்ரதாநனாய் நில்.) ஸுகதுக்க ஹேதுகங்களான த்வந்த்வமெனப்பட்ட ஸாம்ஸாரிக ஸ்வபாவமற்றவனாய், இதரகுண ஸம்பந்தமற்ற ஸத்வகுணத்திலேயே நித்யம் நிலைகொண்டவனாய், இல்லாத விஷயத்தைத் தேடாமலும், இருப்பதின் ரக்ஷணத்தில் ப்ரவர்த்திக்காமலும், ஆத்ம ஸ்வரூபஸித்தியைத் தேடுபவனாயிரு. தாகமுள்ளவனுக்கு ஜலம் நிறைந்த தடாகம் எவ்வளவு ப்ரயோஜநமாமோ, பரமாத்மாவை அறிந்த ப்ராஹ்மணனுக்கு ஸர்வ வேதங்களிலும் அவ்வளவே ப்ரயோஜநம். அதாவது முமுக்ஷுவுக்கு வேதபாகங்களில் மோக்ஷ ஸாதநமாய் நிற்கின்ற பாகம்தான் வேண்டும். ஸ்வர்க்காதி பலங்களைத் தருவன வேண்டியவையன்று."

இப்படிக் கர்மகாண்டம் ஒன்றுண்டெனவும், அது அல்பமாயும் அஸ்திரமாயுமிருக்கும் ஸ்வர்க்காதி பலங்களைத் தருமெனவும், ப்ரஹ்மகாண்டம் காட்டினவழியே ப்ரஹ்மோபாஸ்தி செய்பவர்க்குத்தான் அநந்தமானதும் ஸ்திரமானதுமான பரமபுருஷார்த்தம் கிடைக்குமென்பதும் முண்டகோபநிஷத்தைப்போல் கீதையாலும் நிச்சயிக்கப்பட்டது. ஆதலால் இப்படி ப்ராசீநமாய் ஏற்பட்ட வேதவிபாகத்தைப்பற்றி ஸாயநாசார்யரைப் பழித்தல் யுக்தமாகத் தோற்றவில்லை.

ஆனால் ஸாதாரணமாக தேவதாஸ்தோத்ரரூபமான மந்த்ரங்கள் பரமாத்மவிஷயமாகவும் உபநிஷத்துக்களில் எடுத்துக்கொள்



ளப்பட்டன. தேவதா நாமங்களும் பரமாத்ம வாசகங்களாக அங்கீகரிக்கப்பட்டுள. யாவர்க்குள்ளும் அந்தராத்மாவாக நின்று, நியமநம் செய்யும் ஈச்வரனை அவ்வவ்வதிகாரி தேவதா நாமங்களால் ஸ்துதிக்கப் பொருந்தும். நாமங்களின் பதவ்யுத்பத்தியாலும் பரமாத்ம தர்மங்கள் ப்ரகாசிக்கின்றபடியால், ஸாக்ஷாத்தாக அவை பரமாத்ம வாசகங்களாகவும் குறையில்லை. இதை ஸர்வ உபநிஷத்துக்களிலும் காணலாம்.

ஆதலால், போகைச்வர்ய மென்று கீதையில் விவரித்த ஸ்வர்க்கம், தநம், பசு, புத்ராதிகளை அபேக்ஷிப்பவர்க்கும், முமுக்ஷுக்களுக்கும் ஸாதநமாகத்தக்க உபாயங்களையும் ஸ்தோத்ரங்களையும் வேதம் காட்டினதென்றும், தன் அதிகாரத்துக்குத் தக்கபடியே வேண்டிய வேதபாகங்களை ஒவ்வொருவனும் தான் தேடிய ப்ரயோஜநார்த்தமாக அங்கீகரிக்கவேண்டியதென்றும், பரிமித பலார்த்திகள் அப்பலங்களை க்ஷிப்ரம் தருகின்ற தேவதைகளை அதநிமித்தம் விஹிதமாக நின்ற உபாயங்களைப்பற்றி ஆராதிக்க வேண்டுமென்றும், ப்ரதி புத்தர்கள் மோக்ஷப்ரதனை மோக்ஷத்தின் பொருட்டு உபாஸிக்க வேண்டு மென்பதும் நிஸ்ஸம்சயமாய் ஏற்படுகின்றது.

**அவற்றைப் பற்றிய தத்கால யோசனைகள்.**

ஸர்வவேத பாகங்களையும் பரமாத்ம பரமாக்கிப் பரமாத்மோபாஸ்தி செய்வதை நாம் பழிக்கின்றோமில்லை. யஜ்ஞாதிகளை அதற்குரிய பலங்களை அபேக்ஷிக்காமல் பகவதாராதநமாகப் புரிவதை வேதாந்திகள் அபேக்ஷிக்கின்றனர். " [illegible] ", என்று பகவானை ப்ரஹ்லாதன் ஸ்துதித்தனன். ஆனால் தேவதைகளின் அஸ்தித்வத்தை நிராகரித்து வேதத்தில் சொல்லப்பட்ட ஸர்வ தேவதாநாமமும் பரமாத்ம வாசகமென்று சிலரும், தேவதைகளின் அஸ்தித்வத்தை நிராகரித்தும், அவரிடம் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ப்ரயோஜநங்களை அர்த்தித்துச் செய்யப்பட்ட யஜ்ஞாதிகளைப் பழித்தும், வேதங்களின் ப்ரமாண பாவத்தையே நிராகரித்தும் ஸமாஜங்கள் ஏற்படுவானேன்?

இது நமது ஜனங்களின் ஸ்வபாவம். கிறிஸ்தவர்கள், நமது மதத்தில் பழிக்கும் அம்சங்கள் அவர் மதங்களிலும் இருக்க, நம் மதத்தை விட்டு அவர் மதத்தைச் சேர்கின்றனரன்றோ? மகம்மதியரில் பாதிரிமார் இன்றியே, நம்மவர் ஏராளமாய் மகம்மதியர் ஆய்விட்டனரே! இப்போது நம் தேசத்தில் யாராவது கிறிஸ்தவ மதத்தைப்பற்றியும் மகம்மதிய மதத்தைப்பற்றியும் தூஷிக்கின்றனரோ? ஆர்யமததூஷகர் ஆர்யராய்ப் பிறந்தவரிலேயே மிகுகின்றனர். இரண்டு கிறிஸ்துவின் சரித்ர விவரணமான காஸ்பல்களை யெடுத்தால், புருஷ பரம்பரையாகக் கிறிஸ்து, டேவிட் என்பவரின் இரண்டு புதல்வரிடம் ஆரம்பித்த ஸந்ததியை வஹிக்கின்றனர். டேவிட் புத்ரர் முதல், கிறிஸ்துவின் பாட்டன் வரையில், இரண்டு பரம்பரையும் பின்ன புருஷரால் வ்ருத்தியாகின்றன. ஸங்க்யாதீதமான காஸ்பல்களுக்குள், பொறுக்கி யெடுத்த நாலு காஸ்பல்களில் இப்படியும், மற்றபடியும், பல அஸம்பாவித ப்ரலாபங்கள் உண்டு. அக்கால சரித்ரங்களெழுதினவர்கள் கிறிஸ்துவின் பெயரையையே குறித்திலரென்று கிப்பன் துரை எழுதியிருக்கின்றனர். 1900 வருஷத்திற்குமுன் நடந்த கதை இவ்வண்ணமாகில், அநேகமாயிரம் வருஷங்கட்கு முற்பட்ட ராமக்ருஷ்ண சரித்ரங்களில் உள்ள ப்ரக்ஷிப்த பாகங்களை யெடுத்துத் தூஷிக்கின்ற நம்மவரைப்பற்றி என் சொல்வோம்? எந்தக் காரணத்தினாலோ பகவான் அவதரிப்பதில்லை யென்று முதலில் அவர்க்கு நிச்சய முண்டாய்விட்டபடியால், அவதார கதைகளாக இதிஹாஸங்கள் முதலில் உண்டாகவில்லை யென்பர். ப்ராசீநமாய் இவை வால்மீகி வ்யாஸ க்ருதமென்று ஸம்ப்ரதாயம் ஏற்பட்டிருக்க, அவை அவர்க்குப் பிற்பட்ட காலங்களில் பேர் தெரியாத யாரோ சிலரால் கல்பிதமென்பர். ப்ரக்ஷிப்த ப்ரகரணங்களில், கதா காலத்தில் அஸம்பாவிதமான அம்சங்கள் சொல்லப்பட்டால், இதிஹாஸங்கள் பின் காலங்களில் மாற்றி யெழுதப்பட்டன வென்பர். பௌத்தரும் ஜைநரும் ஸ்ரீராமனையும் ஸ்ரீ க்ருஷ்ணனையும் அவதார புருஷராகத் தம் கதைகளில் எழுதியிலர்; ஆதலால் நமது பூர்வீகர் தாம் அவ்வண்ணம் பொய்யாக எழுதினர் என்பர். ஈச்வரனையே பௌத்தரும் ஜைநரும் ஒப்புக்கொள்ளவில்லையே; அவனுடைய அவதரணத்தை எவ்வண்ணம் அவர் ஒப்புக்கொள்வர்?

அவை தோஷக்ருதம்.



அவர் நம்பாத ஈச்வரனை நமது தூஷகரும் மறுக்கக்கூடாதோ வென்றால், மறுக்கார்; ஏனெனில் கிறிஸ்தவர் ஈச்வரனை ஒப்புக்கொள்கின்றனரே; அதனால் தாமும் ஒப்புக்கொள்வர்போலும். தசரதஜாதகமெனும் பௌத்த கதையானது பொருத்த மில்லாத ஆபாஸமென்பது ஏன் அவர்க்குப் புலப்படவில்லையோ? பௌத்த க்ரந்தங்களில் புத்தனை ருத்ரனுக்கும் க்ருஷ்ணனுக்கும் ஒப்பிட்டு எழுதியிருக்கின்றது. தசரதஜாதகத்திலேயே புத்தன் தான் பூர்வ ஜந்மத்தில் ஸ்ரீராமனாக இருந்ததாகச் சொன்னதாய்க் கண்டிருக்கின்றது. இதனாலும் ஸ்ரீராமனும் க்ருஷ்ணனும் அவதார புருஷரெனப் புத்தன் காலத்தில் விச்வஸிக்கப்பட்டாரென்பது ஏற்படவில்லையா? அவர்க்கு அக்காலங்களில் தேவாலயங்கள் உண்டென்பது க்ரீக் தேசத்தார் எழுத்தாலும், ருக்விதாநமெனும் க்ரந்தத்தாலும், பாஞ்சராத்ராதி ஸம்ஹிதைகளாலும் ஸித்தமன்றோ?

பழைய புஸ்தகங்களை மாற்றிப் புதியவையாக யாராவது எழுதிவிட்டால், யாவத் ஜநங்களும் அதை ஒப்புக்கொள்வரோ? அவதாரமெனும் யோசனைக் கிடமற்ற காலத்தில் ஒருவன் அவ்வித யோசனையைக் கல்பித்தானாகில், அதைத் தேசமெங்கும் நம்பிவிடுவரோ?

இப்படி யெல்லாம் யோசிக்காமல் விபரீத புத்தியைக் கொள்கின்ற ஸமாஜங்களைச் சேர்ந்தவர் தேவர்களுடைய அஸ்தித்வத்தை நிராகரிப்பது ஸஹஜந்தானே. ஒரு உண்மையான தேவனைப் பற்றிச் சொல்பவரும், ‘[illegible]’ என்று வேதம் சொன்னவண்ணம், அவனுக்குப் பகு ஏஞ்ஜலெனப் பெயர்கொண்ட தூதர்களைத் துணையாக்குகின்றனர். ஸர்வவ்யாபியான ஈச்வரனுக்குத் தூதர் வேண்டப்பட்டார்போலும். இவரை நம் ஸம்ப்ரதாயஸ்தர் ஒப்புக்கொள்ளும் நித்யருடன் ஒப்பிடலாம். நித்யர்க்கும் முக்தர்க்கும் அத்யந்தம் நிஹீநரான தேவதா வர்க்கங்களையும், அவருடைய ஆராதநமாய் உத்பந்நமான யாகங்களையும் மறுப்பதேனோ? இது ஸம்ஸர்க்க தோஷம். தேவரை நம்பினால், ஈச்வர பாஹுள்யத்தை நம்புவதாகக் கிறிஸ்தவர் சொல்லிவிட்டார். அதனால் இவரும் அந்த நம்பிக்கையை விட்டனர். மரணாந்தரம் ஜீவனுடைய இருப்பை நம்பாமலும், இவ்வுலகில் நச்வரங்களையே தேவனிடம் அபேக்ஷித்தும், முதலில் யூதர் வளர்ந்த

னர். தேவதாந்தரங்களிடம் ஸ்வர்க்காதி பலன்களையும் ஐஹிக ஸுகங்களையும் அபேக்ஷித்து, நம் முன்னோர் யாகம் செய்தனராயின் பாதிரிமார் இகழ்ந்தார்கள். நம்மவர் வெட்கப்பட்டார்கள். இந்த யாகங்களின் மஹிமை யாதொன்று மின்றித் தேவனுக்காகப் பல ஜந்துக்களைக் கொன்று யூதர் செய்த பூஜைகளை இவர் யோசித்தாரில்லை. இவர்க்குள் சிலர் கிறிஸ்தவரானார். சிலர் ஸமாஜம் உண்டாக்கினார். பாதிரிமார் சொல்படி, உண்மையான ஒரு தேவனை இவர் தொழுவதாகச் சொல்வர்; தேவரையும் பித்ருக்களையும் நம்பினவரைப் பார்த்து, அவர் இருப்பை ருஜுப்படுத்தக் கேட்பார்கள். உண்மையான ஒரு தேவன் இருப்பு இவர்க்கு ருஜுவாய் விட்டதுபோலும். மநுஷ்யர்க்கும் இவர் காணாத தேவனுக்கும் மத்யே ஜீவன்கள் இருப்பதும் இல்லாமையும் இவர் மனத்தை ப்ரமப்படுத்த மாட்டாதோ? மனிதர் இறந்தால், கிறிஸ்தவர் அவரில் சிலரை ஶாஶ்வதமாய்ப் பரமண்டலத்துக்கும் பலரை ஶாஶ்வதமாய் எரிகின்ற நரகத்துக்கும் பகுத்து அனுப்புகின்றனர். விஶ்வாஸம் கெட்ட ஹிந்துக்கள் அவ்விஷயத்தில் என் சொல்வரோ? முக்தர் மோக்ஷத்துக்குப் போவார் என்றும், புண்யம் செய்த பத்த ஜீவர் ஸ்வர்க்காதி லோகம் போவார் என்றும், அவர்க்குள் சிலர் மஹா ஸுக்ருதம் செய்து இந்த்ராதி தேவர்களுடைய பதவியை அடைகின்றனர் என்றும், பெரும்பான்மையோர் இவ்வுலகில் மறுபடியும் பிறக்கின்றாரென்றும், இவ்விதமாய் நமது மதம் சொல்வதை இவர் நகைக்கக் காரணமென்னோ? இது அஸம்பாவிதமா? லோகாதிகாரம் பெற்ற தேவதைகள் லோகஹிதத்தைச் செய்பவராய், லோகத்தார் அவர் நிமித்தம் செய்த பூஜைகளை அங்கீகரித்தனர். இப்போது யதார்த்த ஸூக்ஷ்மங்கள் அறிந்த மனிதர், தமக்கு வேண்டிய ஐஹிக ஸுகங்களைத் தேவர்களுடைய அநுகூலமின்றிக்கே அடைகின்றாராதலால், இப்போது தேவரைப்பற்றி அவர்க்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. ஆஸ்திகர்கள் பகவதாஜ்ஞையைப் பஹுமானித்துப் பகவதாராதநமாகத் தேவதா ஸம்பந்தமான சில வைதிக கர்மங்களைச் செய்கின்றனர். இக்கர்ம ஸமூஹங்களிலும் தேவதைகளிலும் அவிஶ்வாஸத்துக்குக் காரணம், தத்காலம் பெருகப்பட்ட நாஸ்திகை தான். இது நிஜம். உண்மையான ஒரு தேவன் மறுக்கப்பட்டிலன் என்றால், அது, பாஷன் (Fashion) எனப்பட்ட லோக ஸங்க்ரஹத்தால் ஏற்



பட்டதேயன்றி, அபரோக்ஷத்தின்பேரில் ஏற்பட்ட விஶ்வாஸத்தாலன்று சிலர் யாவருமறிய அவனையும் மறுக்கின்றனர்.

நமது அநாதி ஸம்ப்ரதாயத்தின் ஏற்றம்.

ஆதலால் ப்ரக்ருதி, சேதநவர்க்கம், ஈஶ்வரன் எனப்பட்ட தத்வத்ரயங்களை ஒப்புக்கொண்டு, சேதநருடைய நித்யத்வத்தையும், பத்த ஜீவர் மரணாநந்தரம் அநுவர்த்திப்பதையும் ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகர் வைதிக மதத்தைத் தூஷிக்கமாட்டார். அதைப்போல் யுக்தி யுக்தமாகவும், ஸம்ஶய நிவாரகமாகவும், தத்வங்களின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்களை மற்றோர் மதம் ப்ரகாஶிப்பிக்கமாட்டாதென்பதையும் ஒப்புக்கொள்வர். நாஸ்திகவாதம் நமது பூர்வாசார்யரால் ஸம்யக் நிரஸநம் செய்யப்பட்டது. ஆதுநிக நாஸ்திகர்களும், ஸமாஜத்தினர்களும், மதாந்தரஸ்தர்களும், வாதங்களில் ஜயித்துத் தம் கக்ஷியை ஸ்தாபித்திலர். ஸம்ஸர்க்காதி தோஷங்களும், போகேச்சையும், இவர் மநஸ்ஸுகளைப் பள்ளமடையில் இறங்கச்செய்தன. தத்காலம் அவர் ஸந்தோஷிக்கும் மித்யா ஸுகங்கள், பரமார்த்த ஸ்வரூப ஶோதனைக்கு அவர்க்கு அவகாஶங் கொடுத்தில. பரமார்த்த ஸ்வரூபத்தில் மநஸ்ஸைச் செலுத்துபவர், எவ்வளவு நன்றாய்ப் போதித்தபோதிலும், அவர் வார்த்தைகள் நாஸ்திகர் மநஸ்ஸில் இழியமாட்டா. ஆனாலும், சிலராகிலும் அவர் வார்த்தைகளின் ப்ரமாண பாவத்தைக்கொண்டு, ஸத்வர்த்மாவில் நடக்கக்கூடுமன்றோ? ஆதலால் அரவிந்தகோஸ் செய்யும் முயற்சியை யாம் மிகவும் ஸந்தோஷிக்கின்றோம்.

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

# பண்டிதர்கள்.

சென்ற ஸஞ்சிகையில், சில லௌகிகர்கள், நமது தேஶத்து பாஷா பண்டிதர்களை நிஷ்காரணமாக வெறுக்கிறார்களென்றும், அப்படி அவர்கள் வெறுப்பது நமது தேஶத்திற்கு ஶ்ரேயஸ்கரம் அன்றென்றும் நாம் சொன்னோம். 'நமது தேஶம் வ்ருத்திக்கு வருவதானது, இந்த லௌகிகர்கள் ப்ரமித்திருப்பது போல ஸாஹேபர்களுடைய நடை உடை பாவனைகளை நாம் அநுகரிப்பதைச் சார்ந்தது அன்று; ஆனால், நமது ஶாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிறபடி, நாம், தம் தமக்கு உரிய தர்மாநுஷ்டாநங்களைச் செய்ய முயல்வதைச் சார்ந்ததே' என்பது தான் நாம் அப்படி சொன்னதற்குக் காரணம். கால வைபரீத்யத்தின் பலமாக நமது அநுஷ்டாநங்களெல்லாம் தடுமாறி நிற்கின்றன; அவை சீர்திருத்தத்தை அடையவேண்டுமானால், அவைகள் சொல்லப்பட்டிருக்கும் ஶாஸ்த்ரங்களையும் அந்த ஶாஸ்த்ர ஸம்பத்தங்களான மற்றை க்ரந்தங்களையும் பரிஶீலநம்செய்து அவைகளிற் சொல்லியிருக்கிறபடி அநுஷ்டிக்கும் திறமையுடைய பண்டிதர்களின் அவலம்பத்தைக் கொண்டே அது ஆகவேண்டும். ஆகையால், நமக்கு முக்கிய அவலம்பமாக இருக்கும் அந்தப் பண்டிதர்கள் நஶிப்பதை நாம் ஸஹிக்கிறோமில்லை.

ஆனால், பண்டிதர் என்று இப்பொழுது பெயர்பூண்டிருக்கும் எல்லாரும் அப்படிப்பட்ட ஸத்காரத்திற்கு அர்ஹர்கள் என்று நாம் சொல்வது ஸாத்யமில்லை. பாண்டித்ய கந்தமே இல்லாமலிருக்கும் சிலர், தாமும் பண்டிதர் என்று அநேகம் ஸாமாந்ய ஜநங்களை மோசம்செய்வதையும், ஜந்மாந்தர வாஸநையி



னாலோ ஆசார்ய அநுக்ரஹத்தினாலோ பாஷா ஜ்ஞாநத்தையும் ஶாஸ்த்ரஜ்ஞாநத்தையும் பூர்ணமாக அடைந்திருக்கும் சிலர், தாம் படித்துள்ள ஶாஸ்த்ரங்களில் எவ்வித விஶ்வாஸத்தையுங் கொள்ளாமலே, தர்மாநுஷ்டாநத்திலிருந்தும் ஸதாசாரத்திலிருந்தும் நழுவினவர்களாய் அஸத்யவசநம் பரத்ரவ்யாபஹாரணம் முதலிய மஹா பாதகங்களை எவ்வித கூச்சமுமின்றிக்கே செய்து கொண்டு வருவதையும் நாம் அறிவோம். அவர்களை ஸத்கரிக்க வேண்டுமென்றாவது, அவர்களிடத்தில் இருக்கும் தோஷங்களை போக்யங்களென்று பாவிக்கவேண்டுமென்றாவது நாம் சொல்ல வரவில்லை. நன்னடத்தை யற்றிருக்கும் ஒருவனுடைய பாண்டித்யம் எவ்வித ஸத்காரத்திற்கும் அநர்ஹமே.

“ஶுந: பஶ்வ்ருதிவா நயநம் வாணீத்ரம் யச்சுவஜீவநம்”

என்றும்

“க்ஷாராம்ஶும் யதா தோயம் ஶ்ருத்யம் ச யதா பய: ।
துஷ்டம் ஸ்யாச்ச ஸாநதோஷேண வ்ருத்தஹீநே ததா ஶ்ருதம் ॥”

என்றுமன்றோ நமது ஶாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கின்றன? கேவலம் பண்டிதர்களை நாம் புரஸ்கரிக்கின்றோமென்றும், ஜ்ஞாநியினிடத்தில் வ்ருத்த ப்ரம்ஶம் இருந்தாலும் நாம் அதை அவ்வளவாகப் பாராட்டவில்லையென்றும் நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள் நம்மைப் பற்றி க்ரஹித்திருக்கக்கூடும். அது தவறுதலான எண்ணம்.

“ஆசாரஹீநம் ந புநந்தி வேதா
யத்யப்யதீதா: ஸஹ ஷட்பிரங்கை: ।
சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி
நீடம் ஶகுந்தா இவ ஜாதபக்ஷா: ॥”

'ஒருவன் வேதாத்யயநத்தை ஸாங்கமாகச் செய்திருந்தாலும், துராசாரனாக இருந்தால் அவன் அந்த வேதாத்யயநத்தினால் எவ்வித பலத்தையும் பெறுகிறானில்லை; இறகு முளைத்த பக்ஷிகள் தங்களுடைய கூட்டை த்யஜிப்பதுபோல, தேஹ வியோக காலத்தில் இந்த வேதங்களும் அவனை த்யஜிக்கின்றன' இத்யாதிகளான

பரஸ்ஸஹஸ்ர வாக்யங்கள் வ்ருத்தத்தில் கௌரவத்தை விஸ்தரிக்கையில், அவைகளுக்கு விருத்தமாக நாம் எவ்விதத்தில் துராசார ஶீலனாக இருக்குமவனை ஶாஸ்த்ரத்தை அதிலங்கநம் செய்யாமல் ஆதரிக்கக்கூடும்? மற்றை ஜநங்களின் விஷயத்திற்போலப் பண்டிதர்களின் விஷயத்திலும் நாம் குணதோஷ விவேசநஞ் செய்ய வேண்டுமென்பதும், அப்படி விவேசநஞ் செய்த பிறகு குணிகளாகக் காணப்படும் பண்டிதர்களை ஆதரிக்கவேண்டு மென்பதும் தான் நம்முடைய ப்ரார்த்தனை. கேவலம் பண்டிதர்கள் என்னும் காரணத்தைக் கொண்டு மாத்திரம் அவர்களை வெறுக்கக்கூடாது என்றே நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிப்பட்ட ஸாதுக்களான பண்டிதர்களின் அபிவ்ருத்தியே நமக்குப் பரமமான ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கத் தகுந்த உபாயமானால், அந்த உபாயத்தில் நாம் எவ்விதமாக ப்ரவ்ருத்திக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிப்பதுதான் நமக்கு இப்பொழுது ப்ரக்ருதமாக இருக்கின்றது. இதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்திருக்கும் அநேகர், பலவிதமான ப்ரவ்ருத்தியைப் பற்றிப் பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். அப்படி அவர்களால் காண்பிக்கப்பட்டிருக்கும் மார்க்கத்தில் சிலர் துணிந்து தமது ஶ்ரமத்தையும் க்லேஶத்தையும் பார்க்காமல் இறங்கியும் இருக்கிறார்கள். ஆனால், நமது சிற்றறிவுக்கு எட்டின வரையில், இந்த மார்க்கமொன்றும் நமது இஷ்டத்தைப் பூர்ணமாக ஸாதித்துக்கொடுக்கத்தகுந்த தன்றென்றும், ஸ்வல்பமும் க்ஷணிகமுமான ப்ரயோஜநத்தையே உடையதென்றும் தோன்றுகின்றது. பூர்ணமான ஸித்தி கிடைக்கவேண்டுமானால், அதற்கு மார்க்கம் வேறு. அதைப்பற்றி மாத்திரம் இப்பொழுது நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம். ஒருகால், சிலர், அதை அஸாத்யமென்று நினைக்கலாம். நமக்கு அவ்விதமாகத் தோன்றாமலிருப்பதனாலும், ப்ரக்ருதமான ஸ்வதேஶபாஷையின் அபிவ்ருத்தி மாத்திரமின்றிக்கே நமது ஸர்வவித ஶ்ரேயஸ்ஸும் அதைச் சார்ந்திருப்பதாக நமக்குத் தோன்றுகிறபடியாலும், அதைப்பற்றி இப்பொழுது ப்ரஸ்தாவிக்கத் துணிகின்றோம். மஹான்களெல்லாரும், அதைச் சற்று மனத்தில் வாங்கிக்கொண்டு, அதன் ஸாதுத்வத்தை விசாரித்து, அதில் இருக்கும் குறைவுகளைப் பூர்த்திசெய்து, இப்பொழுது நமக்கு நேர்ந்திருக்கும் துர்தஶையை நிவ்ருத்திக்க எவ்-



விதத்திலாவது ப்ரவ்ருத்திக்க முயலவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இக்காலத்தில் அநேக காரணங்களடியாக தேஹயாத்ரையை அதிகமான மாநபங்கமின்றிக்கே நடத்திக்கொள்வது மிக ஶ்ரமஸாத்யமாக இருக்கின்றது என்பதை எல்லாரும் அறிந்திருக்கக் கூடும். கேவலம் தேஹதாரணத்திற்காக வேண்டுவனவான ஸாதாரணப் பொருள்கள்கூட ஶ்ரமமின்றி அகப்படுவது அரிதாகிவிட்டது. லௌகிக வ்யாபாரங்களில் திறமையை ஸம்பாதித்திருக்கும் ஜநங்களும் இம்மாதிரி ஶ்ரமப்படுவதை நாம் அறிவோம். இப்படியிருக்க, எவ்வித லௌகிக ஸாமர்த்யமு மில்லாமல் கேவலம் பாண்டித்யத்தை மாத்திரம் அவலம்பித்திருக்கும் பண்டிதர்கள் ஶ்ரமப்படுகிறார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பாண்டித்யத்தையும் ஶாஸ்த்ரோக்த அநுஷ்டாநாதிகளையும் ஆதரிப்பவரை இக்காலத்திற் காணோம். பெரியவையான பால குடும்பங்களை வைத்துக்கொண்டு அவைகளைச் சரிவரப் போஷிக்கக் கூடாமல் வருந்தியும், அஶாஸ்த்ரீயமான வ்ருத்தியில் இறங்குவதற்குக் கூசியும், எப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்தபோதிலும் தர்மத்தைப் பாதுகாப்பதே பெரிதென்று எண்ணிக்கொண்டும், தாரித்ர்யத்தினாலும் க்ஷாமத்தினாலும் அஸஹ்யங்களான க்லேஶங்களை அநுபவிக்கும் பெரியோர்கள் அநேகர் இருப்பதை எல்லாரும் பார்க்கலாம். ஒரு பக்கத்தில் பசி வருத்தவும், மற்றொரு பக்கத்தில் மாநமும் ஶாஸ்த்ரபயமும் பாதிக்கவும், இன்னுமொரு பக்கத்தில் குடும்ப க்லேஶங்கள் மனத்தைப் புண்படுத்தவும், இம்மாதிரியான தாபங்களின் நடுவில், கொழுந்து விட்டெரியும் விறகின் நடுவில் அகப்பட்டுள்ள புழுப்போலத் துடித்து நிற்கும் ஜநங்களுக்குப் பாண்டித்ய ஸம்பாதநத்திலும் வித்யாபிவ்ருத்தியிலும் எவ்விதத்தில் புத்தி ப்ரவ்ருத்திக்கும்? இவ்விதங்களான க்லேஶங்களுக்குக் கொஞ்சம் ஆறுதலையாவது நாம் தேடிக்கொடாமலிருக்கும் வரையில், 'பண்டிதர்கள் வ்ருத்தியாக வேண்டும்' என்று நாம் ப்ரார்த்திப்பதெல்லாம் வீணேயாகாதோ? ராஜ பாஷையைப் படித்து அத்ருஷ்ட விஶேஷத்தினால் உயர்ந்த பதவியைப் பெற்றிருக்கும் ப்ரபுக்களுக்குப் போல இவர்களுக்கும் லக்ஷ்மீ கடாக்ஷம் ஸம்பவிக்க வேண்டுமென்று நாம் கோராமற் போனாலும், அந்த வஸ்த்ராதிகளுக்கு [illegible]

நாம் செய்துவைக்க ப்ரவ்ருத்தித்தால்தான், நம்மால் கோரப்படும் மார்க்கத்தில் அவர்களை இறங்கச்செய்வது ஸாத்யமாகும். அவர்கள் ஸம்பாதித்துக்கொள்ளும் வித்யை அவர்களுடைய ஜீவநத்திற்கு ஒருவித ஸாதகமாகாவிட்டால் அவர்கள் கூச்சமற்று அதில் ப்ரவ்ருத்திக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இப்படி அவர்களுடைய பாண்டித்யத்தை அவர்களுக்கு ஒரு ஜீவநோபாயமாகச் செய்துவைக்கவேண்டும் என்பது தான் நமக்கு இப்பொழுது க்ரமப்ராப்தமாக இருக்கும் தர்மம் என்று அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றேன்.

இதைச் சரியாக அறியாமலிருக்கும் சிலர், 'பாடஶாலைகளை ஏற்படுத்துவது வித்யாபிவ்ருத்திக்கு ஓர் உபாயம்' என்று எண்ணிச் சிற்சில விடங்களில், ஸ்வதேஶ பாஷா பாடஶாலைகளைக் கல்பிப்பதை நாம் பார்க்கிறோம். அந்தப் பாடஶாலைகளில், எவ்வித சம்பளமுமின்றிக்கே வித்யை படிப்பிக்கப்படுவதுடன்கூட, அப்படிப் படிக்கவரும் மாணவகர்களுக்கு ப்ரதிதினமும் அன்னம் அளிப்பதற்கு வேண்டுவதான வ்யவஸ்தையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வளவு ப்ரோத்ஸாஹநம் இருக்கையிலும், அந்தப் பாடஶாலைகளுக்கு வித்யார்த்திகள் பூர்ணமாக வருவதைக் காணோம். சில மிக்க எளியவர்கள் மட்டில், தத்காலத்தில் அன்னம் அகப்படுகின்றது என்னும் காரணத்தைக் கொண்டு தமது ப்ரஜைகளை அந்தப் பாடஶாலைகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த ப்ரஜைகளும் அன்னம் அகப்படுங் காலம் முழுவதும் அவ்விடத்தில் இருந்துவிட்டு, பிறகு, தமக்கு உபதேசிக்கப்பட்ட வித்யைகளைச் சிறிதேனும் கணிசியாமல், வேறு அநுசிதங்களான வ்ருத்திகளில் இறங்குவதை நாம் பார்க்கிறோமல்லவா? இந்த ப்ரவ்ருத்தி எவ்விதத்தில் நமது மநோரதத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்? பாடஶாலைகளில் படித்து வெளிவரும் மாணவகர்களுக்கு, அவர்களால் ஸம்பாதிக்கப்பட்டுள்ள ஜ்ஞாநம் உபயோகப்படும்படியான சில வ்ருத்திகளை நாம் கல்பித்தாலன்றோ அப்பொழுது நம்முடைய வேறுவித ப்ரோத்ஸாஹநமின்றிக்கே ஆயிரக் கணக்காக ஜநங்கள் அந்த வித்யையில் ப்ரவ்ருத்திப்பார்கள்?

இங்க்லிஷ் பாஷையை அப்யஸிப்பதற்கும் அதில் தேர்ச்சியை அடைவதற்கும் ப்ரோத்ஸாஹநம் ஏதாவது நடக்கின்றதோ? அதில் ஜநங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரவ்ருத்தியைக் குறைப்பதற்குப் பல பெயர்கள் பலவிதமாக முயற்சிசெய்வதை நாம் பார்க்கவில்லையா? இங்க்லிஷ் பாஷை போலவே, நமது தேஶபாஷாபரிசயமும் வ்ருத்தி ஜநகமாக இருந்தால், இந்த ஶோச்ய தஶை இந்தப் பாஷைகளுக்கு ஸம்பவிக்காது என்பது நிஶ்சயம். ஆகையால், நமது பாஷைகளின் அபிவ்ருத்தியைத் தேட முயல்வோரெல்லாரும் இப்பொழுது இங்க்லிஷ் பாஷையால் நமது தேஶத்தில் அநுபவிக்கப்பட்டுவரும் புரஸ்காரத்தை நமது பாஷைகளுக்கு ஸம்பாதித்துக்கொடுத்து, அந்தந்த ராஜதாநியின் ஜநங்கள் அவரவர்களின் பாஷையில் லோக வ்யவஹாரத்தை நடத்தும்படியாகவும், அந்தந்த ஸ்தலத்து அதிகாரிகளும் அந்தந்த ஸ்தலத்துக்குரிய பாஷையைக் கற்றுக்கொண்டு அந்தந்தப் பாஷையின் வழியாகவே ஸகல நடவடிக்கைகளையும் நடத்தும்படியாகவும், அப்படியே பாடஶாலைகளிலும் ஸகல ஶாஸ்த்ரங்களும் தேஶபாஷையைக் கொண்டே கற்பிக்கும்படியாகவும், இங்க்லிஷ் பாஷையை ஓர் உபபாஷையாகமட்டில் எல்லாரும் அப்யஸிக்கும்படியாகவும், இவ்விதமான ஒரு வ்யவஸ்தையை ஏற்படுத்த முயலவேண்டுமென்பதுதான், நமது மநோரதத்தைச் சரியாக ஸாதித்துக்கொள்வதற்கு உசிதமான ப்ரவ்ருத்தியென்று நமது சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது.

இந்த வ்யவஸ்தை அஸாத்யமன்று என்பது இதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இன்னும் நன்றாக ஆலோசித்துப் பார்க்குமவர்கட்கு, 'இது தானே ந்யாய்யம்! ந்யாய விருத்தமான வேறு வ்யவஸ்தை எப்படி ஏற்படுத்தப்பட்டது?' என்று ஒரு வியப்பும் ஜநிக்கும். இப்பொழுது இங்க்லிஷ் பாஷையின் அப்யாஸத்தால் நாம் அநுபவித்துவரும் ஸகல நன்மைகளும், அப்பொழுது பல மடங்கு அதிகமாக நம்மால் அநுபவிக்கப்படுமே தவிர, எவ்விதத்திலும் குன்றாது. தேஶாந்தரீயரின் பரிசயம் நமக்கு அபேக்ஷிதமே! தேஶாந்தரீயர்களுடைய ஶாஸ்த்ரத்தின் ஜ்ஞாநமும் நமக்கு வேண்டுவது தான்; ஜகத்துக்கு உதாஸீநர்களாக, நமது தேஶத்து ஜ்ஞாநத்தையும் வ்யவஹாரங்களையும் மாத்திரங்கொண்டு நாம் த்ருப்தர்களாக இருந்தால் போதுமென்பது நமது அபிப்ராயமன்று. அப்படி வர்த்திப்பதன் தோஷங்களை நாம் உணர்ந்தவர்களே! நாம் ஆஸ்





162026
JL
R65 m211, N130
N10.5-6

தைப்படும் வ்யவஸ்தையில் இந்த நன்மைகளெல்லாம் இப்பொழுது இருப்பதை விடப் பலமடங்கு மேற்பட்டனவாக இருக்குமென்பது நமது நிச்சயமான அபிப்ராயமானபடியால் தான் நாம் இவ்வாறு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிந்தோம். வித்வத் ஸதஸ்ஸும், வித்வத் ஸம்மாநமும், பாஷா பாடசாலைகளும், சிரோமணி பரீக்ஷைகளும், மஹாமஹோபாத்யாய பட்டங்களும் இன்னும் இவைபோன்ற மற்றை ப்ரோத்ஸாஹநங்களும் ஓரிடத்தில் வளருகையில், மற்றும் பலவிடங்களில், நமது தேசத்தின் ச்ரேயஸ்ஸைத் தேடும் அபிமாநிகளெல்லாரும், பத்ரிகாத்வாரவோ ப்ரஸங்கங்கள் வழியாகவோ, ராஜாங்கத்து ஆலோசனை ஸபையின் மூலமாகவோ, இன்னும் வேறுவித ப்ரவ்ருத்திகளினாலோ, ஸர்வ தேசங்களிலும் ஸர்வ காலங்களிலும் ஸர்வருக்கும் எட்டும்படி, இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்திருக்கும் வ்யவஸ்தை போன்ற வ்யவஸ்தைகளைப்பற்றிப் பேசி, அவைகளைக் கைக்கொள்ள முயலவேண்டுமென்பதுதான் நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை. 'இந்தியா தேசத்து ஜநங்கள்' என்னும் சிந்ஹம் நம்மைவிட்டு அழியக்கூடாது என்னும் எண்ணம் நமக்கு உண்டானால், இது ஒன்றே நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ளும் வழி. நமது பண்டிதர்களின் கௌரவமும் நமது மாநமும் அப்பொழுதுதான் நிலைத்து நிற்கும்.

எஸ். வாஸுதேவன்.

# பதிவ்ரதா மாஹாத்ம்யம்.

(மார்க்கண்டேய புராணம் 16-வது அத்யாயம்.)

ப்ரயாகையில் கௌசிகனெனும் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அந்யஜந்மங்களில் செய்த பாபங்களின் பொருட்டுக் குஷ்டரோகத்தால் அவன் பீடிக்கப்பட்டான். அவ்வண்ணம் வ்யாதியால் வருந்தின அந்தப் புருஷனை அவன் பார்யையானவள் தேவனைப்போல் பூஜித்துவந்தனள். கால்களுடைய அப்யங்கநத்தாலும், உடலைப் பிடிப்பதாலும், ஸ்நாநம் செய்வித்தும், வஸ்த்ரம் உடுத்தியும், போஜநம் அளித்தும், கோழை, மூத்ரம், மலம், கெட்ட ரக்தம் இவற்றின் விஸர்ஜநங்களைச் செய்வித்தும், பின் சுத்தி செய்வித்தும், ஏகாந்தத்தில் உபசாரம் செய்தும், ப்ரியமாக ஸம்பாஷித்தும் அவள் பதியை அர்ச்சித்து வந்தாள். மிகவும் விநீதையான அவளால் இடைவிடாமல் அவ்வண்ணம் பூஜிக்கப்பட்டபோதிலும், அந்த ப்ராஹ்மணன் மிகவும் தீவ்ரமான கோபத்துடன் அவளை க்ரூரமாய்த் திட்டி விரட்டுவன். அப்படியிருந்தும், அந்தப் பத்நீயானவள் வணக்கத்துடன் கூடினவளாய், அவனைத் தெய்வமாக நினைத்தாள். துர்க்கந்தமான வ்யாதியால் பார்க்கக் கூடாதவனும், க்ரூர வார்த்தைகள் சொல்பவனுமான தன் புருஷனை அவள் ஸர்வச்ரேஷ்டனாக எண்ணினாள். அந்த ப்ராஹ்மணன் ஸஞ்சரிக்க யோக்யதை யற்றிருந்தும், ஒரு நாள் பார்யையைப் பார்த்துச் சொன்னான்:—"ராஜமார்க்கத்தில் ஸ்வக்ரஹத்தில் நின்ற ஒரு வேசியானவள் என்னால் பார்க்கப்பட்டாள். அவள் வீட்டுக்கு என்னைக் கொண்டுபோ. தர்மமறிந்தவளே! எனக்கு அவளை ஸம்பாதித்துக் கொடு. அவள்தான் என் ஹ்ருதயத்தில் நிற்கின்றாள். அந்தவாலை ஸூர்யோதயத்தில் எனக்குக் கண்பட்டனள். இதோ ராத்ரி வந்துவிட்டது. அவளைப் பார்த்தபிறகு அவள் எனது ஹ்ருதயத்தை விட்டு விலகவில்லை. அழகான ஸர்வாங்கங்களையுடையவளும், பருத்த இடையும் மார்பும் பொருந்தினவளும், மெல்லிய சரீரமுள்ளவளுமான அந்த வேசி என்னை ஆலிங்கநம் செய்யாமல்

போனால், என்னைப் பிணமாகப் பார்க்கப்போகின்றாய். மநுஷ்யர்க்குள் காமம் கெட்டது. அவளோ பகுபெயரால் ப்ரார்த்திக்கப்படுகின்றாள். எனக்குச் சக்தியின்மையால், அவ்விடம் போவதற்கு வழியில் மிகுந்த கூட்டம் தடுக்குமென்று யோசிக்கிறேன்."

காமத்தால் வருந்தும் தன் பர்த்தாவினுடைய இந்த ரூபமான வசநங்களைக் கேட்டு, ஸத்குலத்தில் பிறந்தவளும், மஹாகுணவதியும், பதிவ்ரதையுமான அந்தப் பத்நீயானவள், புடவையை இழுத்துக்கட்டிக்கொண்டு, மிகுந்த த்ரவ்யத்தையும் எடுத்துக்கொண்டு, பர்த்தாவைத் தோளில் தூக்கிக்கொண்டு மெதுவாகப் புறப்பட்டுப் போயினள். அப்போது இரவில் ஆகாசம் மேகங்களால் சூழப்பட்டுச் சலிக்கின்ற மின்னல்களால் ராஜமார்க்கம் அல்பமாகக் காட்டப்படுகையில், அந்த த்விஜாங்கனையானவள் பர்த்தாவுக்கு ப்ரியத்தைச் செய்ய இச்சித்தவளாய்க்கொண்டு நடந்தாள். அப்போது வழியில் திருடன் என பாங்கிக்கப்பட்டுச் சூலத்தின்மீது ஏற்றப்பட்ட திருடனல்லாதவரும், மிகவும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவருமான மாண்டவ்யரை, பத்நீயின் தோளில் ஏறிநின்ற கௌசிகனெனும் அந்த ப்ராஹ்மணன் அந்தகாரத்தில் சலிப்பித்தார்.*

* மாண்டவ்யர் மஹா தபஸ்வீ. திருடின பொருள்களுடன் திருடர்கள் அவருடைய ஆஶ்ரமத்தின் ஸமீபத்தில் வரவும், ராஜஸேவகர் அவர்களைத் தேடிக்கொண்டு அவ்விடம் வந்தார்கள். திருடர்கள் ஆஶ்ரமத்தில் மறைந்தனர். ராஜஸேவகர், திருடர் சென்ற வழியைப்பற்றி ருஷியைக் கேட்கவும், ருஷி மௌனமாயிருந்துவிட்டார். பின்னால் திருடரும் பொருளும் ஆஶ்ரமத்தில் சிக்கவே, ஸேவகர் ருஷியைத் திருடனென ஶங்கித்துத் திருடர்களுடன் அவரையும் ராஜனிடம் கொண்டுபோனார்கள். ராஜா யாவரையும் சூலங்கள்மீது ஏற்றிக் கொல்ல ஆஜ்ஞாபித்தான். தபோமஹிமையால் ருஷி ப்ராணனை விடாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். ராஜாவும் அவர் மஹிமையை அறிந்து அபராதக்ஷாபணம் செய்துகொண்டான். சூலத்தை வெட்டியெடுக்கவும் முனை அவர் சரீரத்தில் நிலைத்து நின்றது. அவ்வண்ணமே ருஷியிருந்துவிட்டனர். பிறகு, தர்மராஜனைத் தான் எந்தப் பாபம் செய்து அந்தக் கஷ்டம் உண்டானது என்று கேட்டார். தர்மராஜன், அவர் பால்யத்தில் பக்ஷிகளின் புச்சங்களில் புற்களின் முனைகளை ஏறிட்டபடியால், அக்கஷ்டம் அவர்க்கு உண்டானதென்றான். ருஷி யமனைக் கோபித்துப் பால்யத்தில் புரிந்தது பாபமன்று எனவும், அல்பமான பாபத்துக்குத் தண்டனை மிகப் பெரிதென்றும் சொல்லி, யமனை சூத்ரயோநியில் பிறக்கும்படி ஶபித்தார். பிறகு யமனுடைய அம்சத்தால் விதுரர் பிறந்தார். இது மஹாபாரதம் ஆதி பர்வம், 109 - வது அத்யாயத்தில் காணலாம்.



காலினால் தாக்கப்பட்டுக் கோபமடைந்த மாண்டவ்யர் அந்த ப்ராஹ்மணனைக் குறித்துச் சொன்னார்:—"இவ்விதமாக மிகவும் துக்கத்தை அடைவிக்கப்பட்டுக் கஷ்ட தசையை யடைந்த நான் எவனுடைய கால்களால் அசைக்கப்பட்டேனோ, அந்தப் பாபிஷ்டனான நராதமன் ஸம்ஶயமின்றி ஸூர்யன் உதித்தவுடன் அவஶனாய் ப்ராணன்களால் விடப்படப்போகின்றான். ஸூர்யனைப் பார்த்த மாத்ரத்தில் அவன் விநாசத்தை அடையப்போகின்றான்." இப்படி மஹா பயங்கரமான அந்த சாபத்தை அந்த ப்ராஹ்மணனுடைய பார்யையானவள் கேட்டு, மிகவும் வருந்தி, "ஸூர்யன் உதயத்தையே அடையப்போவதில்லை" என்று சொன்னாள். அதன் பிறகு ஸூர்யோதயமின்றி ராத்ரியானது விடாமல் அநேக திநங்களுடைய ப்ரமாணமாக வளர்ந்தது. அதனால் தேவர்கள் பயத்தை அடைந்தனர்.

"ஸ்வாத்யாய வஷட்காரமற்றும், ஸ்வதாஸ்வாஹாவர்ஜிதமாயும், இந்த ஸர்வஜகத்தும் நாசத்தை எவ்வண்ணம் அடையாமல் போகும்? அஹோராத்ரி எனும் வ்யவஸ்தையின்றி மாஸம் ருது முதலானவை க்ஷயிக்கும். பிறகு தக்ஷிணாயந உத்தராயணங்கள் அறியப்படமாட்டா. அயநங்களின் ஜ்ஞாநமின்றி ஸம்வத்ஸரமெனும் காலம் எப்படி உண்டாகும்? ஸம்வத்ஸரமின்றி மற்ற காலபரிமாணங்களின் ஜ்ஞாநம் ப்ரவர்த்திக்கமாட்டாது. பதிவ்ரதையின் வாக்கால் திவாகரன் உதிக்கின்றானில்லை. ஸூர்யோதயமின்றி ஸ்நாந தாநாதி க்ரியைகள் இல்லை; அக்நி கார்யங்களும் இல்லை; யாகங்களின் இன்மையும் தெரிகின்றது. ஹோமமின்றி நமக்கு த்ருப்தியும் உண்டாகப்போகின்றதில்லை. நம்மை யதோசிதமான யஜ்ஞ பாகங்களால் மநுஷ்யர் திருப்திசெய்வதால், நாமும், தாந்யங்கள் விளைவதற்கு அநுகூலமான வ்ருஷ்டிகளைக் கொடுத்து அவர்களை அநுக்ரஹிக்கின்றோம். ஓஷதிகள் உண்டானால்தான் மநுஷ்யர் யஜ்ஞங்களால் நம்மைப் பூஜிக்கின்றனர். யஜ்ஞங்களால் பூஜிக்கப்பட்ட நாம் அவர்களுக்குக் காமங்களை அளிக்கின்றோம். நாம் கீழே ஜலத்தை வர்ஷிக்கின்றோம். மர்த்யர் மேலாக ஹவிஸ்ஸை வர்ஷிக்கின்றார்கள். நித்ய கர்மங்களையும் நைமித்திக கர்மங்களையும் அநுஷ்டித்து யஜ்ஞ பாகங்களை நமக்கு ஸமர்ப்பிக்காமல், துராசையுடன் கூடின எந்த துராத்மாக்கள், ஸ்வயம் அந்நாதிகளைப் புஜிக்கின்றனரோ, அப்படிப்பட்ட அப

காரிகளான பாபிகளின் நாஶத்தின் பொருட்டு நாம், ஜலம், வெயில், அக்நி, காற்று, பூமி முதலானவற்றைக்கொண்டு கேடு செய்விக்கின்றோம். அந்தத் துஷ்கர்மகாரிகளுக்கு, அதிவ்ருஷ்டி அநாவ்ருஷ்டி முதலானவற்றை அநுபவிப்பதால், மரணத்தில் முடிகின்ற வ்யாதிகள், துர்பிக்ஷம், முதலான மஹா பயங்கரமான தீங்குகள் உண்டாகின்றன. யாதொருவர் எங்கட்கு த்ருப்தி செய்து சிஷ்டாந்நத்தைப் புஜிக்கின்றனரோ, அந்த மஹாத்மாக்களுக்கு நாங்கள் புண்யலோகங்களைக் கொடுக்கின்றோம். ஸூர்யோதயங்கள் அநுஸ்யூதமாக ப்ரவர்த்திக்காவிட்டால், அவர்களுக்கு மேற்சொன்னவை யாவும் ஸம்பவிக்கமாட்டா. ஆகையால் தினங்கள் எவ்வண்ணம் உண்டாகும்?" என்றிவ்விதமாகத் தேவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். 'யஜ்ஞங்கள் அற்றுப் போகும் என்று ஶங்கையிலாழ்ந்துகூடிய அந்தத் தேவர்களுடை வாக்யங்களைக் கேட்டு ப்ரஜாபதி யெனும் ப்ரஹ்மா சொன்னார்:—

"அமரர்களே! தேஜஸ்ஸானது பரமதேஜஸால் ஶாந்தியடையும். அப்படியே தபஸ்ஸானது தபஸ்ஸால் ஶாந்தியடையும். ஆதலால் என் வசநத்தைக் கேளுங்கள். பதிவ்ரதையின் மாஹாத்ம்யத்தால் ஸூர்யன் உதிக்கின்றானில்லை. அவன் உதிக்காதபடியால் மநுஷ்யர்க்கும், அப்படியே உங்களுக்கும் ஹாநி உண்டாகின்றது. ஆதலால் பாநுவின் உதயத்தை அபேக்ஷித்தவர்களாய்த் தபஸ்ஸால் சிறந்தவளும், பதிவ்ரதையுமான அநஸூயை எனும் அத்ரியினுடைய பத்நியை ப்ரார்த்திப்பீர்கள்" என்றிவ்வண்ணம் சொன்ன ப்ரஜாபதி வசநத்தைத் தேவர்கள் கேட்டு அநஸூயையினிடம் சென்று அவளை வேண்டினார்கள். அவளும் "உங்களுடைய இஷ்டத்தைக்கேட்பீர்கள்" என்றனள். தேவர்களும், "முன் போல தினம் உண்டாகட்டும்" என்று யாசித்தார்கள். அவளும், "பதிவ்ரதையின் மாஹாத்ம்யம் எவ்வண்ணம் குறையும்? ஆதலால், தேவர்களே! அந்தப் புண்யவதியைப் பூஜித்து எவ்வண்ணம் அஹோராத்ரிகளின் வ்யவஸ்தை மறுபடியும் ஏற்படுமோ, எவ்வண்ணம் அப்பதிவ்ரதையினுடைய புருஷன் நாஶத்தை அடையமாட்டானோ அவ்வண்ணமாக நான் நாள்களை யுண்டாக்குகின்றேன்." இப்படித் தேவர்களுக்குச் சொல்லிவிட்டு அந்த சுத்த சரித்ரத்துடன் கூடிய அநஸூயையானவள் அந்தப் பதிவ்ரதையின் க்ருஹத்துக்குச் சென்றாள்; அவளைப்பற்றியும் அவள் பர்த்தாவைப்பற்றியும்



குஶலப்ரஶ்நம் கேட்டுவிட்டுத் தர்மம் சொல்ல ஆரம்பித்தனள்:—

"கல்யாணி! உன் பர்த்தாவின் முகதர்ஶநத்தினால் ஸந்தோஷிக்கின்றனையா? எல்லாத் தேவர்களைக்காட்டிலும் பர்த்தாவை அதிகமாக எண்ணுகின்றையா? பர்த்தாவின் ஶுஶ்ரூஷையொன்றினாலேயே என்னால் மஹாப்ரயோஜநம் ஸம்பாதிக்கப்பட்டது. ஸர்வகாமரூபமான பலத்தை நான் அடைந்தமையால் இடைஞ்சல்களெல்லாம் நிவர்த்திக்கப்பட்டன. மநுஷ்யர்களால் எப்போதும் ஐந்து கடன்கள் கொடுக்கப்படவேண்டும். அவ்வவனுடைய வர்ணாஶ்ரம தர்மத்தை அநுஸரித்து ஒவ்வொருவனாலும் பொருள் சேகரிக்கப்படவேண்டும் சேகரித்த பொருள் ஶாஸ்த்ரமிட்ட கட்டளையின்படிப் பாத்ரமறிந்து விநியோகிக்கப்பட வேண்டும். மநுஷ்யன், ஸத்யம், ருஜுபாவம், தபஸ், தாநம் முதலான குணங்களுடன் கூடினவனும், எப்போதும் ஸர்வப்ராணிகளிடமும் தயையுள்ளவனும் இருக்கவேண்டும். இன்னும், ஒவ்வொரு நாளும், சக்தியுள்ளவரையில் ஶ்ரத்தையுள்ளவனாக ஶாஸ்த்ரசோதிதங்களான கர்மங்களை இச்சாத்வேஷாதிகளற்றுச் செய்யக்கடவன். புண்யமுள்ளவளே! மநுஷ்யன் தன்னுடைய ஜந்மத்துக்கு அநுகுணமாகச் சொல்லப்பட்ட ப்ராஜாபத்யம் முதலான லோகங்களை மஹாக்லேஶத்தால் க்ரமப்படி அடைகின்றான். ஸ்த்ரீகளோவென்றால், பதிஶுஶ்ரூஷையொன்றினாலேயே, மநுஷ்யர்கள் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கும் ஸமஸ்த புண்யங்களிலும் பாதி பாகத்தை அபஹரிக்கின்றனர். அவர்களுக்குத் தனியாக யஜ்ஞமில்லை, ஶ்ராத்தமில்லை, உபவாஸமுமில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட புண்யகர்மங்களால் ஸம்பாதிதங்களான அந்த ப்ரியமான லோகங்களைப் பர்த்தாவின் பணிவிடை யொன்றினாலேயே அவர்கள் அடைகின்றார்கள். ஆதலால், பதிவ்ரதையே! மஹாபாக்யமுள்ளவளே! பதியினுடைய கைங்கர்யத்தின் பொருட்டு, உன்னால் எப்போதும் சிந்திக்கப்படவேண்டும். ஏனென்றால் ஸ்த்ரீகட்குப் பர்த்தாதான் பரமமான கதியாகின்றான். எந்த ஸத்கர்மங்களால் பர்த்தாவானவன், தேவர்கள், பித்ருக்கள், அதிதிகள் இவர்களை உத்தேசித்துப் பூஜை செய்கின்றானோ, அக்கர்ம பலன்களில் பாதியைப் பர்த்தாவினிடம் கேவலம் அநந்ய பக்தியுடைய ஸ்த்ரீயானவள் பதிஶுஶ்ரூஷை யொன்றினாலேயே அநுபவிக்கின்றனள்."

என்றிவ்வண்ணம் அந்த அத்ரிபத்நியான அநஸூயை மொழிந்த வசநங்களை அப்பதிவ்ரதையானவள் கேட்டு அவளை ஆத

ரத்துடன் பூஜித்துப் பின்வருகிறபடி 'ப்ரதிவசந மளித்தனள். "நான் தந்யையானேன்; அநுக்ரஹிக்கப்பட்டவளானேன்; தேவர்களால் கடாக்ஷிக்கப்பட்டவளானேன். ஏனென்றால் ஓ ஸ்வபாவஸித்தமான மங்களத்துடன் கூடினவரே! என்னுடைய ப்ரார்த்தனையை நீர் இன்னும் வ்ருத்தி செய்கின்றீரன்றோ? ஸ்த்ரீகட்குப் பதிக்கு ஸமாநமான ப்ராப்யம் வேறொன்றில்லையென்பதை நான் அறிவேன். பதியினிடம் பக்தியானது இந்த லோகத்திலும் லோகாந்தரத்திலும் ஸ்த்ரீகளுக்கு உபகாரமாகின்றது. ஓ கீர்த்தி பொருந்தினவரே! பதியின் ப்ரஸாதத்தால் இவ்வுலகிலும், மரணாநந்தரமும் ஸ்த்ரீயானவள் ஸுகத்தை அடைகின்றாள். ஏனென்றால், பெண்பாலர்க்குப் பர்த்தாதான் தேவதை. மஹாபாக்யவதீ! ரூபத்துடன் கூடினவரே! என் க்ருஹத்துக்கு வந்த உம்பொருட்டு, என்னாலாவது, என் பர்த்தாவினாலாவது செய்யத்தக்கதைச் சொல்லும்."

இவ்வார்த்தைகளைக் கேட்டு அநஸூயையானவள், "இந்த தேவர்கள் இந்த்ரனுடன் கூடினவர்களாய் உன் வாக்யத்தால், ஸத்கர்மாநுஷ்டாந நிமித்தம் ஏற்பட்ட இராப்பகல் என்கிற வ்யவஸ்தை அற்றுப்போனதைப் பார்த்துத் துக்கித்தவர்களாய், என்னிடம் வந்து, முன்போல் இடைவிடாமல் நடக்கவேண்டிய அஹோராத்ரியின் நிலைமையை யாசிக்கின்றனர். நான் அதற்காக உன்னிடம் வந்தேன். இந்த என் வார்த்தைகளைக் கேள். தினம் என்பது அபாவத்தை அடைந்ததால் யாகாதி ஸமஸ்த கர்மங்களும் அபாவத்தை அடைந்தன. ஓ தபஸ்விநி! அக்கர்மங்களின் அபாவத்தால் தேவர்கள் புஷ்டியை அடைகின்றாரில்லை. நாள்களின் நாசத்தால் மநுஷ்யர்க்குள் ஸர்வ வ்யாபாரங்களும் நின்றுபோயின. அதனால், அநாவ்ருஷ்டியுண்டாகி ஜகத்தே நாசத்தை அடைகின்றது. ஆனபடியால் இந்த ஆபத்தினின்று ஜகத்தை உத்தரிக்க நீ இச்சிக்கின்றாயாகில், ஓ பதிவ்ரதா ஶிரோமணியே! தயவு பண்ணு; முன்போல் ஸூர்யன் லோகத்துக்கு உதிக்கட்டும்" என்று சொன்னாள்.

இதைக் கேட்டு அந்த ப்ராஹ்மண ஸ்த்ரீயானவள், "ஓ மஹாபாக்யத்துடன் கூடினவரே! மிகுந்த கோபிஷ்டரான மாண்டவ்யரால் எனக்கு ஈஶ்வரனான பர்த்தாவானவர், 'ஸூர்யோதயத்



தில் நீ நாசத்தை அடையப்போகின்றாய்' என்று சபிக்கப்பட்டார்" என்று சொன்னாள். அதைக் கேட்டு, அநஸூயை "நீ இவ்வண்ணம் சொல்கின்றபடியால், ஓ மங்களமுள்ளவளே! உனக்கு இஷ்டமுள்ள பக்ஷத்தில், நான் உன் பர்த்தாவின் சரீரத்தை முன்போல் செய்கின்றேன்; உனக்கு நூதநமாகப் பர்த்தாவைச் செய்கின்றேன். ஶ்ரேஷ்டமான வர்ணமுடையவளே! பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுடைய மஹிமையானது ஸர்வப்ரகாரத்தாலும் என்னால் பூஜிக்கத்தக்கதன்றோ? ஆதலால் உன்னைக் கௌரவப்படுத்துகின்றேன்" என்று சொன்னாள்.

பதிவ்ரதை அப்படியே ஆகட்டுமென்று சொல்ல, தபஸ்விநியான அநஸூயையானவள் அர்க்ய ஜலத்தைத் தூக்கி ஸமர்ப்பித்து, ஸூர்யனை ஆஹ்வாநம் செய்தனள். அப்போது ராத்ரியானது பத்து ராத்ரியளவு கடந்தது. உடனே ஸூர்ய பகவான் விகஸித்த பத்மம்போன்ற அருணாகாரத்துடன்கூடிய மஹாமண்டலத்துடன் உதயகிரியின்மீது ஏறினார். உத்தரக்ஷணமே பதிவ்ரதையினுடைய பர்த்தாவும் ப்ராணனால் விடப்பட்டுப் பூமியின்மீது விழுந்தனர். அப்படி விழுந்தவரை அவருடைய பத்நீ பிடித்துக்கொண்டாள்.

உடனே அநஸூயையும் "மங்களமுள்ளவளே! நீ வ்யஸநப்படாதே. பதி கைங்கர்யத்தால் ஸம்பாதிதமான என்னுடைய சக்தியைப் பார். விளம்பிப்பதால் உனக்கென்ன குணம்?" என்று சொல்லிவிட்டு, "ரூபத்தாலும், ஶீலத்தாலும், புத்தியாலும், மதுரமான வசநங்கள் முதலான பூஷணங்களாலும், என் பர்த்தாவுக்கு ஸமமாக வேறு புருஷனை நான் எங்கும் கண்டதில்லையென்பது ஸத்யமாகில், அந்த ஸத்யத்தால் இந்த ப்ராஹ்மணன் வ்யாதி நீங்கி, மறுபடி யௌவநத்தை யடைந்து, ஒரு நூற்றாண்டளவும் தன் பத்நீக்கு ஸஹாயனாயிருக்கும்படிப் பிழைத்தெழக்கடவன்; என் பர்த்தாவுக்கு ஸமமான வேறு தெய்வத்தை நான் காண்கின்றேனில்லையென்பது ஸத்யமாகில், அந்த ஸத்யத்தால் இந்த விப்ரன் ரோகம் நீங்கிப் பிழைக்கட்டும்; மநோவாக்குக்காயங்களினால் என் பர்த்தாவின் ஆராதநத்தின்பொருட்டு நான் என்றும் யத்நபரையாக இருந்தது ஸத்யமாகில், அதனால் இந்த த்விஜன் ஜீவிக்கட்டும்" என்று ப்ரதிஜ்ஞை செய்

தாள். உடனே, வ்யாதி நீங்கி, யௌவநமடைந்து, அந்த விப்ரன் எழுந்தான். மூப்பற்ற ஓர் தேவனெனத் தனது காந்தியால் அந்த வீட்டை ப்ரகாசிப்பித்தான். உடனே புஷ்பவர்ஷம் பெய்தது; தேவர்களுடைய வாத்யங்கள் முழங்கின. தேவர்கள் களிப்பையடைந்தனர். "ஓ கல்யாணி! உனக்கு வேண்டிய வரம் கேள். தேவர்களுடைய மஹாகார்யம் உன்னால் ஸாதிக்கப்பட்டது. ஆதலால், ஓ தபஸ்விநி! தேவர்கள் உன் முன் வரப்ரதர்களாய் நிற்கின்றார்கள்" என்று அநஸூயையைப் பார்த்துத் தேவர்கள் சொன்னார்கள்.

அநஸூயை அதைக் கேட்டு, "பிதாமஹன் முதலான தேவர்கள் என்னிடம் க்ருபையுள்ளவராயும், எனக்கு வரந்தருபவர்களாயும் இருக்கும் பக்ஷத்தில், நானும் வரங்களைப் பெற யோக்யையாயிருக்கின்றேனென உங்களால் நிஶ்சயிக்கப்பட்ட பக்ஷத்தில், ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இவர் மூவரும் எனக்குப் புத்ரர்களாய்ப் பிறக்கட்டும். என் பர்த்தாவுடன்கூட, ஸர்வதுக்க நிவாரணார்த்தமாக யோகத்தை அடைகின்றேன்" என்று கூறினாள்.

ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலான தேவர்கள் 'அப்படியே ஆகட்டும்' என்று அவளுடன் சொல்லிவிட்டு, அவளை ந்யாய ப்ரகாரம் பஹுமாநித்துச் சென்றனர்.

[குறிப்பு.—த்ரிமூர்த்திகளின் அம்சபூதர்களான சந்த்ரன், தத்தாத்ரேயர், துர்வாஸர், இவர்கள் அநஸூயைக்குப் புத்ரர்களாய்ப் பிறந்தனர். விஷ்ணுவின் அம்சபூதரான தத்தாத்ரேயர் மாஹாத்ம்யம், புராணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்படுகின்றது.]

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# ஜநகநந்திநீ.

இப்போது நம்முடைய கதாஸ்தாநம் மாறுகின்றது. நிரந்தரம் அநுபவிப்பதால், போதுமெனச் சித்தத்திற்கு த்ருப்தியைத் தாராத திவ்யாம்ருதம் போன்று, க்ஷீராப்தி நிகேதநன் நித்யவாஸம் செய்வதற்கு உகந்தருளிய திருக்குடந்தையைச் சிந்திப்போம். தெளிந்த நீர் பெருகும் பொன்னியெனும் நங்கையானவள், பகவான் ஶயநித்த ஸ்தாநமெல்லாம் க்ஷீராப்தியெனக் கீர்த்திகொள்ள வேண்டுமென்று இச்சை கொண்டவளாய்த் தானே இருபுறமும் வளைந்தோடின குடந்தையில் மால்வண்ணன் கிடந்தவாறு யார்க்குத் தெரியும்? அதை அவன்தான் சொல்லப் பொருந்தும். ஆதலின் பக்திஸாரன் ப்ரார்த்தித்துக் கேட்கவும், அவன் மறுமொழி அளித்திலன். திருவயோத்தியைத் துறந்து இலங்கைமாநகர் வரையில் நடந்த கால்கள் நொந்தவோவென ஆழ்வார் வினவ, அஃது அங்ஙனம் இல்லாதபடியால் விடையளித்திலன். ஏனமாய் ஞாலம் இடந்தபடியால் மெய் குலுங்கிப் படுத்தையோவென ஆழ்வார் வினவ, அதற்கும் விடையளித்திலன். ஏனென்றால், ஸகல ஜகந்நிர்மாண சதுரனுக்கு நோவேது? குலுக்கமேது? அவன் யோகநித்ராவஶனெனக் கிடக்கவேதான், அடியார் அவனை அநுபவிக்க அநுபவிக்க அபர்யாப்ததையே மிகுதியாய் நின்றது. இப்படிப் பக்தர் பெருகி அநுபவிக்கப்பெற்ற ஸ்தலவிசேஷத்தில் பக்திஸாரன் ரமித்தனர்.

இத்தகைய அபர்யாப்தாம்ருதம் இன்னும் திருக்குடந்தையில் நிற்கும்போது, மர்த்யமாய் நிற்கும் சரீரங்களின்மேல், வஸ்துவொன்றை நினைக்காத பேர்கள், இப்போது, மர்த்யோப போக்யமான விஷயங்களில் தம் மநஸ்ஸுக்களை ஸதா ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு காலம் கழிக்கின்றார்கள். பரமபுருஷார்த்தப்ரதன் பள்ளிகொண்டவிடத்தில் அநர்த்த ஹேதுவான கேவலம் அர்த்த சிந்த

னையில் ஆழ்ந்தவர் அவனை மறந்து திரிகின்றனர். அவர்க்காக இக்காலம் காப்பி ஹோட்டல்களும் நாடகசாலைகளும் கணக்கற்றுப் பெருகி வளர்கின்றன. ஆதாயம் செலவென அநவரதம் சொல்லிக்கொண்டிருப்பார்க்கு ஆதாயம் ஓர் புறமும் செலவு மற்றோர் புறமும் கும்பகோணத்தில் அமைந்து நிற்கின்றன. அனைவரும் அந்நகரத்தின் ஈசாந்ய பாகத்தில் கட்டியுயர்ந்த கட்டிடங்களில் காலங்கழித்துக் களிக்கின்றனர். அதனால் ஸர்க்காருக்கு லாபம்; வக்கீல்களுக்கு லாபம்; ஸாக்ஷி சொல்வோர்க்கு லாபம்; லாயர் குமாஸ்தாக்கட்டு லாபம்; வ்யவஹாரப் பயிர் வளர்ப்போர்க்கு லாபம். ஜயித்த கக்ஷிக்காரன் ஜயம் மிகுதிபட வீட்டிற்குப் போகின்றான். தோற்றவனோ தொலைந்து போகின்றான். இந்நகரத்தில் இப்போது ஈச்வரன் நிற்கின்றானென்பது ஸந்தேஹிக்க வேண்டியிருக்கின்றது. விக்ரஹ ரூபத்தைவிட்டு விபவ ரூபத்துடன் அவன் வந்தானாகிலும் அவனைக் கணிசிப்பவர் அங்கே ஏற்படுவது துர்லபம்.

ஜநகநந்தினி தனக்குக் கிடைக்கமாட்டாளெனும் உண்மையறிந்தபின் ஸ்ரீநிவாஸன் கச்சிநகரை விட்டொழிந்தானென்று முன்பே சொன்னோம். ‘கிட்டாதாயின் வெட்டென மற’ எனும் வசநம் அவனுக்குப் பயன்படவில்லை. நாடகங்களைப் படித்து, கண்டமாத்திரத்தில் கருத்தைக் கவர்கின்ற கண்மணிகளைப்பற்றி அவன் எண்ணத் தொடங்கினான். ‘[illegible]’ என்று காளிதாஸன் வர்ணித்தபடிகளை யோசித்துத் தனக்கும் வேண்டுமோர் ஹ்ருதய நாயகியைப்பற்றிச் சிந்தித்தவன், பார்த்தவுடன் பற்றளிக்கும் புதுப்பெண்களை நினைத்தானில்லை. சிரகால பரிசயத்தால் ஜநகம் அவன் மநஸ்ஸில் குடிகொண்டாள். ரூபாதிசயத்தால் அவள் அவன் மநஸ்ஸில் மற்றொரு பெண்ணினுருவம் குடிகொள்ள இடம் தந்தாளில்லை; குணாதிசயத்தால், அவன் சித்தம் அந்யத்ர சலிக்க விட்டாளில்லை. ஜ்ஞாநாதிசயத்தால் அவளைப்பற்றித் தன்னை அடிமையெனப் பாவித்தனன். யௌவநம் கொஞ்சமும் ஆரம்பிக்காதவளவில், வயஸ்ஸில் குன்றிய ஓர் பெண்ணினிடம் அபிலாஷை உதிப்பது ஸஹஜமன்று. ஆயினும் அவன் குலத்துக்கேற்ற மரியாதையானது, இப்படிப்பட்ட பெண்களிடமே விருப்பம் உதிக்க அவகா



சம் தருகின்றது. அவளை மணப்பதால் பிற்காலம் உண்டாகும் ஸுகாதிகளை ஸ்ரீநிவாஸன் யோசனையால் விஸ்தாரப்படுத்தினன். ஆயினும் அவன் மநோரதமெல்லாம் மநோரதமாகத்தான் முடிவுபெற்றது.

விவேக முள்ளவர்க்கும் இவ்வித ஸந்தர்ப்பங்களில் விவேகம் பயன்படுவதில்லை. விவேகிகள் சொல்லும் ஹிதவசநங்களும் காமுகர்க்கு வீண் சொற்களாய்ப் போகின்றன. கச்சி நகரத்தைத் துறந்த பின்பு, ஸ்ரீநிவாஸன், தனக்குள்ள விவேகத்தையும் துறந்து சென்றனன். தத்காலத்திய பாஷாந்தர வித்யாப்ரகாரமானது படிக்கும் சிறுவர்க்குக் கடைச் சோற்றையும் கைகொடுத்துக் காக்கும் நண்பர்களையும், குறைவின்றி யளிக்கின்றது. ஸ்வயம் ஸம்பாத்ய ஸாமர்த்யமற்ற சிறுவர், பெற்றோரும் உற்றோரும் ப்ரீதியாதிக்யத்தால் கொடுக்கும் பொருள்களைக் குன்றாமல் செலவு செய்கின்றார்கள். இதற்கென்றும் அதற்கென்றும், இங்கிலீஷ் படித்தோர்க்கும் இன்னதென்று தெரியக்கூடாத வண்ணம், உபாத்யாயர்கள்மீது பாரத்தைப் போட்டுப் பொருள் உதவும் உறவினரிடம் பொருள் பல வாங்கும் சிறுவர்க்குத் தாம் செலவுகளில் ஆழ்வதுடன், ஸ்நேஹிதர்க்கும் செலவுக்கு உதவ வழியுண்டாயிருக்கின்றது. இத்தகைய பிள்ளைகளைப் பெற்றுப் பாரியாய்ப் போந்த பெற்றவரும் உளர். ஆதலால் ஸ்ரீநிவாஸனுக்கு ஆஹாரநிமித்தம் வருத்தம் தோன்றியிலது. உன்மத்தன்போல் அகப்பட்டவிடங்களில் உண்டி யருந்தி, நேர்ந்த விடங்களில் நித்திரை செய்து, படிப்பைவிட்டுக் காலம் போக்கினன்.

இவ்வண்ணம் பதினெட்டு மாதங்கள் கழிந்தன. அப்போதைக்கப்போது காஞ்சீபுரம் சென்று ஸ்ரீநிவாஸன் மாதாபிதாக்களைப் பார்ப்பான். அவரிடம் கொஞ்சம் பொருள் பெற்றுக்கொண்டு மீளவும் போய்விடுவான். அவர் சொல்லும் மதிகள் அவன் காதுகளுக்குள் செல்லமாட்டா. அக்காலங்களில் ஜநகநந்தினியைத் தூர நின்று சற்று நோக்குவன். அவளை நெருங்கவும் அவன் பயப்படுவன். முடிவில் ஒரு தை மாஸத்தில் அவன் காஞ்சீபுரம் வந்திருக்கையில், அவனுடைய பெற்றோரும், அம்மானை கேசவாசார்யரும், அவனுக்கு விசேஷமாக நல்வார்த்தைகள் சொல்லவும், அவன் அவற்றைக் கொஞ்சம் செவியுற்றான். அவன் இஷ

டம் விபலமாய்ப்போன ஸமீப காலத்தில் அவ்வார்த்தைகள் குணம் செய்யாமற்போனாலும், அந்த வருத்தம் காலக்ரமத்தால் சிறிது குறையவும், ஹிதவசநங்களை அவன் நின்று கேட்டனன். அவற்றின் ப்ரயோஜநம் அவ்வளவோடு முடிந்தது. அது முதல் அடுத்த வைசாகமாஸ பர்யந்தம் அவன் பிதாவின் க்ரஹத்தில் வஸித்தான்.

மீண்டும் வைசாக உத்ஸவம் வந்தது. ஜநகநந்தினி இரண்டு வேளைகளிலும் வீதியலங்காரம் செய்தனள். அவ்வவஸர மொன்றில் தற்செயலால் ஸ்ரீநிவாஸன் ஜநகநந்தினியை நெருங்க நேர்ந்தது. அவளும் முகம் திரும்பி அவனைப் பார்த்தனள். அந்தக் காட்சியை விட்டகல அவனுக்குச் சக்தியில்லை. "ஜநகம்! ஸுகமாயிருக்கின்றையோ?" என்றனன்.

"ஸ்ரீநிவாஸா! உன்னைக் காண விரும்பினேன். உனக்கு ஹிதம் சொல்ல வேண்டினேன். உனக்கு வயதாகவில்லையா! நீ படிக்கவில்லையா? உன் புத்தியை யெல்லாம் நீ காற்றில் பறக்கவிட்டையே! நீ கெடுவதுமன்றி என்னையும் வீண் வார்த்தைகளுக்கு விஷயமாக்கிவிட்டையே! எல்லோரும் என்ன வம்பளக்கின்றார்கள்? அது உனக்குத் தெரியாதா? 'ஜநகத்தை ஸ்ரீநிவாஸன் கல்யாணம் செய்துகொள்ள இச்சித்தானாம். அவள் பிதா அதற்கு ஸம்மதிக்கவில்லையாம். அதனிமித்தம் அவன் ஊரையும் நாட்டையும் படிப்பையும் விட்டுப் பராரியாய்ப் போய்விட்டானாம்?' என்று உன்னையும் என்னையும் சேர்த்து ஊரார் பேசும்படி பண்ணிவிட்டையே! நீ தான் ஊரையும் உறவினரையும் விட்டுவிட்டாய். ஜனங்கள் பேசுவது உனக்குத் தெரியவில்லை. நான் பெண்ணாச்சுதே! உன்னைப்போல் ஓடிப்போக எனக்கு அடுக்குமோ? எனக்கு இந்த வார்த்தைகளைக் கேட்க வெட்கமா யிருக்கின்றதே." என்று சொன்னாள் ஜநகநந்தினி.

அதைக் கேட்டு ஸ்ரீநிவாஸன், "என்னை என்ன செய்யச்சொல்கின்றனை?" என்றனன்.

"நீ மாதா பிதாக்களின் அதிகாரத்தைக் கடந்தவன். ப்ராஹ்மணர்க்குள் ஸ்வயம்வரமில்லை. காமப்ரேரித விவாஹமுமில்லை. மாதா பிதாக்கள் இருக்கையில் பிள்ளைகட்கும் பெண்கட்கும் விவாஹம் அவர்கள் அதீநம். நீ பாஷாந்தரப் பழக்கத்தால் உனக்



கேற்ற பெண்ணைப்பற்றி ஸ்வயமே யோசித்துவிட்டாய். நான் அவ்வண்ணம் யோசிக்க இடமில்லை. என் பிதாவின் இஷ்டம் தான் எனது இஷ்டம். ஆதலால் உன் இச்சை விபலமாயிற்று. உடனே அதை மறந்து, உனக்கு ஆகவேண்டிய கார்யங்களைப் பார்ப்பதை விட்டு, உன்மத்தனெனத் திரிந்துகொண்டு என்னையும் வார்த்தைகட்கு விஷயமாக்கி விட்டையே?" என்றனள் ஜநகம்.

"இனி அவ்வண்ணம் செய்யவில்லை. நான் யாது செய்யட்டும்?" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"போய்ப் பள்ளிக்கூடம் சேர். இன்னும் கற்கவேண்டிய கல்வியைக் கற்பாயாக. உனக்கு வயதும் இருபது ஆயிருக்குமன்றோ? யாதேனுமோர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்" என்றனள் ஜநகநந்தினி.

"நீ சொன்னபடி படிக்கப் போகின்றேன். கல்யாண வார்த்தையை எடுக்காதே" என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸா! நடுத் தெருவில் நாமிருவரும் நின்று பேசல் கூடாது. லோகரீதியை அநுஸரித்து நட. என் கிட்ட வரவேண்டாம். இதுவரையில் நாம் பேசியதைப் பலர் பார்த்திருப்பார்கள். நான் பர்த்ருமதி. உன்னையும் என்னையும் சேர ஜநங்கள் பேச இடமுண்டாயிற்று. ஆதலால் நாம் ஸமீப பந்துக்களாயிருந்தபோதிலும், ஒருவர்க்கொருவர் தூரமாகத்தான் ஸஞ்சரிக்க வேண்டும். என்னைப்பற்றின எண்ணத்தை விலக்கு. "[illegible]" எனும் ஸீதாவசநத்தை என் வசநமாக நினைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு ஜநகநந்தினி உள்ளே சென்றனள்.

ஸ்ரீநிவாஸனும் அவ்விடம் விட்டு மெள்ள நடந்தான். அவன் மநஸ்ஸில் யோசனைகள் பலவாறாகப் பெருகின. 'விச்வாஸத்துடன் ஒரு பார்வை, ஒரு சொல், ஒரு புன்னகை, இவற்றுள் ஒன்றும் கிடைக்காமல் போயிற்றே' என்று சிந்தித்தான். "ஆம். அவள் ஜ்ஞாநமுள்ளவள். சீலமுள்ளவள். பெரிய வம்சத்தில் பிறந்தவள். பரமைகாந்தியின் பெண். அவள் சொன்னவண்ணம் அவள் பர்த்ருமதி. நான் நினைப்பதெல்லாம் ந்யாயவிருத்தம். அவள் எனக்கு

ஹிதம்தான் சொன்னாள். பைத்யம் பிடித்தவன்போல் திரிவதில் பயனென்ன? பெற்றோரையும் வருத்துகின்றேன். இனிப் படிப்பைப்பற்றி ப்ரயத்னிக்கின்றேன்" என்று யோசித்தான்.

அன்றிரவே பிதாவைப்பார்த்து, "அப்பா! வாசிக்கவேண்டிய வித்யையின் சேஷத்தை வாசிக்கலாமென்று நினைக்கிறேன்" என்றனன்.

"குழந்தாய்! எனக்கு இப்போது மிகவும் ஸந்தோஷமாயிருக்கின்றது. ஏதோ நல்ல காலம் வந்ததென நினைக்கின்றேன். எப்போது பட்டணம் போகின்றாய்?" என்றனர் வரதாசார்யர்.

"பட்டணம் போகமாட்டேன். என்னுடன் வாசித்தவரெல்லாரும் மேலே போய்விட்டார்கள். அவர்கள் காண நான் கீழ் வகுப்பில் சேர்ந்து வாசிக்கமாட்டேன்" என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

"ஆனால் என்ன யோசனை செய்கின்றாய்?" என வினவினர் பிதா.

"கும்பகோணம் போய்ப் படிக்கின்றேன். செலவுக்குக் கொடுத்தால் போகின்றேன்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"உன்னிஷ்டப்படி செய்" என்றனர் பிதா.

இந்த வார்த்தைகள் நடந்தபின்பு ஆனி மாஸத்தில் கும்பகோணம் கலாசாலையில், பி. ஏ., பரீக்ஷைக்காக முதல் ஸம்வத்ஸரம் வகுப்பைப் போய் ஸ்ரீநிவாஸன் சேர்ந்தனன். ஒரு வருஷம் கழிந்த பிறகு க்ரமமாக மேல் வகுப்பிலும் சேர்க்கப்பட்டனன். அவ்வகுப்பின் படிப்பை முடித்து, பி. ஏ. பரீக்ஷைக்குப் போவதாயிருக்கும் தருணத்தில் நம்முடைய கதை திருக்குடந்தையில் ஆரம்பிக்கின்றது.

ஜநகநந்தினியின் விக்ரஹம் ஸ்ரீநிவாஸன் ஹ்ருதயத்தை விட்டு எப்போதும் அகன்றதன்று. பரதாரசிந்தனை பாபமென்பர். நீடித்து விரும்பிய பொருள் கிட்டாமற் போனாலும் அதன் ஸ்மரணை மாத்ரம் நீடித்து நிற்பது லோகத்தில் ஸஹஜம். ஸ்ரீநிவாஸனுடைய சித்தவ்ருத்தியில் பாபஸம்பந்தம் ஈஷத்தும் இல்லை. ஜநகநந்தினியின் சீலமும் குணங்களும் எத்தகைய மனிதர் மனத்திலும் அஸாதுயோசனைகளை விலக்கிவிடும். மேலும் ஸ்ரீநிவாஸன் அவளை



ஓர் தேவதையைப்போல் பாவித்தனன். ஆதலால் அவளால் தனக்கு ஒரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்காமல், அவளுடைய ஸௌக்யத்தையே முக்யமாகக் கருதி, அப்படிப்பட்ட ஸௌக்யம் அவளுக்கு வாராமல் போய்விடுமோ என்று பயந்தான். அவள் சொல்லாவிட்டால் அவன் படிப்பில் இறங்கியிரான். ஆதலால் அவன் படிக்கும்போதும் அவள் நினைவை விலக்கத் திறனற்று நின்றான்.

பல ஸமயங்களில், அவன் முன்கொண்டிருந்த சித்தகாலுஷ்யம் அவனைப் பாதித்துக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட ஓர் ஸமயத்தில் அவன் வஸித்துக்கொண்டிருந்த கலாசாலைக் கருகில் கட்டப்பட்டிருந்த வித்யார்த்திகள் க்ரஹத்தை விட்டுச் சுற்றிலும் பரவிய தோட்டத்தில் ஸஞ்சரித்தான். ஸஞ்சரித்துக்கொண்டே நீரற்றுச் சென்ற காவிரி நதிக்குள் இறங்கினான். அதன் தென்கரையில் பாதை மீதேறினான். அப்பாதை வழியே மேற்கே சென்று சங்கரமடத் தெருவே தென்புறம் நோக்கி நடந்தான். அங்கே போர்ட்டர் மண்டபத்துக்குள் சென்று, கும்பகோணம் பெரிய மனிதர்கள் பந்தாடவும், சீட்டாடவும், பேசவும், சிரிக்கவும், ஸோடாஜலம் குடிக்கவும், சிற்றுணவுகள் உண்ணவும் கண்டு, இவர்கள் சரீரம் இதற்காகத்தான் எடுத்தனரோ என்று எண்ணிக்கொண்டு, "நீரிற் குமிழி யிளமை நிறை செல்வம், நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்—நீரில், எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே, வழுத்தாத தெம்பிரான் மன்று" எனும் செய்யுளைச் சிந்தித்தான். தான் பட்டணத்தில் படிக்கையில், தானும் அவ்வண்ணமிருந்ததையும், தன் நண்பர்கள் "நாளைச் சாவோம் ஆதலால், இன்று உண்போம், குடிப்போம், விளையாடுவோம்" என்று சொல்வதையும் நினைத்தான். தனது புத்தியின் விகாரத்தை, அதற்கென்று ஒரு ப்ரயத்நமும் செய்யாது, ஜநகநந்தினி எவ்வளவு மாற்றிவிட்டாளென்றும் யோசித்தான்.

ஆதலால் போர்ட்டர் ஹால் காட்சியில் வெறுப்படைந்து வெளியே வீதியில் வந்தான். ஆராவமுதன் கோவில்கோபுரத்தைக் கண்டான். ஸாதாரணமாக ஸ்ரீநிவாஸன் பகவானுடைய ஸந்நிதிக்குப் போவதில்லை. பகவானிடம் அவனுக்குப் பக்தி விளைந்ததெனக் கூறவும் இடமில்லை. நள்ளிரவில் கடலில் வழிதப்பி அலையும் நாவம் ஓட்டுபவனுக்கு ஓர் வெளிச்சம் கண்டால், அதை நோக்கி அவஸரமாய் அவன் செல்வதை யொத்துச் சாரங்கதான்

கோபுரங்காணும் திக்கை நோக்கி நடந்தான். ஸந்நிதிக்குள்ளே சென்ருன்.

அப்போது ஸூர்யன் அஸ்தமிக்கும் வேளை. த்வஜஸ்தம்பத்தினருகே ஒரு ஸந்யாஸி ஸேவிக்கவும், அவரைச் சுற்றிப் பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிற்கவும் கண்டான். அப்போது அவனுக்கு மறந்துபோன ஒரு விஷயம் ஜ்ஞாபகத்துக்கு வந்தது. அவன் பெருமாள்கோவிலில் இருக்கையில், ஜநகநந்தினியினுடைய பர்த்தா திருக்குடந்தைக் கருகாமையில் ஒரு ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்வதாகக் கேள்விப்பட்டனன். அந்த ஸ்வாமி தான் கண்ட ஸந்யாஸி தானே, அவருடைய பரிவாரத்தில் ஜநகத்தின் புருஷன் இருக்கின்ருரோ என்று ஸ்ரீநிவாஸன் யோசித்தனன்.

தத்காலம் இங்கிலீஷ் வித்யாசாலையில் கற்பவர்க்கு வேஷங்கள் விதம்விதமாக ஏற்பட்டிருக்கின்றன. கத்திரித்த தலைமயிர், முகக்ஷௌரம், பாழ்நெற்றி, நெருக்கமான சட்டை, கழுத்தில் நெக்டை, அஜகளம்போல் அங்கே தொங்கும் துணிகள், காலில் நிஜார், இடுப்பில் சர்மபந்தநம், இத்தகைய வேஷம் நாகரிகத்தில் சிறந்த தென்பார். இதற்குக் குறைந்தபடிகள் பல முடிவான படியாவது, கணைக்கால் மறையத் துணியை மடித்துக் கட்டல், உடலை மறைக்க ஓர் சட்டையோ சிறு துணியோ, தலையில் ஓர் சிறு குடுமி, நீர்த்திருமண், இவ்வளவுடன் நிற்கும். ஸ்ரீநிவாஸன் கச்சிநகரில் பிறந்தவனுனதாலும், தத்காலம் கும்பகோணத்தில் வஸிப்பதாலும், ஜநகத்தை மறக்காத காரணத்தாலும், நாகரீத்தில் கடைப்படியில் உடை தரித்தனன். ஆனுலும், ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸந்யாஸியையும், அவருடன் சென்ற வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களையும் நெருங்க அஞ்சினுன்.

இதற்குள், அந்த ஸ்வாமியும் அவருடைய அந்தேவாஸிகளும் ஸந்த்யாவந்தநாதி ஆஜ்ஞா கைங்கர்யங்களை நிறைவேற்றுவதற்காக ஹேமாப்ஜ புஷ்கரிணிக்குச் சென்ருர்கள். அங்கே அவர்கள் போய்ச் சேரும்வரையில் ஸ்ரீநிவாஸனும் அவர்கள் பின் ஸந்நிதி ப்ரதக்ஷணமாய்ச் சென்ருன். அவர்கள் புஷ்கரிணியி லிறங்கவும், தானும் மற்ருேர் புறமாகக் குளத்தி லிறங்கி ஸந்த்யாவந்தநம் செய்வதாகப் பாவனை செய்தான். அவர்கள் ஸந்நிதிக்குள் மீண்டும் புகவும், அவனும் அவர் பின்னுல் புக்கு, ஸந்நிதி ப்ரதக்ஷணமாய்ச் சென்ருன். அவர்கள் பெருமாள் தாயார் ஸந்நிதிகளில் போய் ஸேவிக்கும் காலங்களில் தானும் தூர நின்று திவ்ய தம்பதிகளைத் தர்ஶித்தான். அவர்களைப் பின்தொடர்ந்து ஸந்நிதியை விட்டான்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

### (திருப்பதிப் பிரிவு.)

இந்த் ஸபையாரின் ப்ரார்த்தனையினுல் சென்னைப்பட்டணத்திலிருந்து, பகவத் விஷய வித்வாந் ஸ்ரீ. உப. சேட்டலூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி இவ்விடம் எழுந்தருளி நம்மாழ்வார் ஸந்நிதியில் நாளது ௵ மார்ச்சுமீ 29,30,31 - தேதிகளில் பகவத் விஷயத்தைக் குறித்துப் பின் வருமாறு உபந்யஸித்தார். த்ராவிட ப்ரபந்தங்களில் அவர்க்குள்ள பாண்டித்யமும், வாக்தோரணியும், அர்த்தங்களைத் தெளிவாக உரைக்கின்ற ஸஹஜ ஸாமர்த்யமும் எழுதி முடியா. அவர் உபந்யாஸத்தைக் கேட்பதற்குப் பண்டித பாமரர்கள் அனைவரும் வந்திருந்தனர். எல்லோர்க்கும் எளிதாய் விளங்கும்படி விஶதமாகவும் இனிதாகவும் அவர் உபந்யஸித்ததைக் கேட்டு ஸந்தோஷப்படாதவர் ஒருவரும் இல்லை. அந்த ஸ்வாமியை மறுபடியும் வரவழைத்து, பகவத் விஷயம் முழுதும் கேட்கவேண்டு மென்று இங்குள்ளார் மிக்க ஆவலுடன் இருக்கிருர்கள்.

ஸி. கோபாலாசார்யர்,
Secretary, Sri Vaishnava Siddhanta Sabha,
Tirupathi.

திருப்பதி,
11—4—16.

### நடந்த உபந்யாஸத்தின் விவரம்.

**முதல் நாள்:**—இந்தப் பூலோகத்திலிருக்கும் ஸகல ஜநங்களும் அடைய வேண்டிய ஶாஶ்வதமான ப்ரயோஜநம் மோக்ஷம். அதை அடைவதற்கு உபாயம், பக்தி ப்ரபத்தி என்னும் இரண்டே. அவைகளில், பக்தியை மோக்ஷத்திற்கு உபாயமாகக் கொண்டவர்கள் பக்தர்கள் என்றும், ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் ப்ரபந்நர்கள் என்றும் சொல்லப்படுகிருர்கள். இவ்விருவரும் பகவானுடைய குணங்களை ஸதா அநுஸந்தாநம் செய்துகொண்டே இருக்கவேண்டும். ஏனெனில் பக்தர்களுக்குப் பகவானிடத்தில் ப்ரீதியாகிற பக்தி தினந்தோறும் வளர்ந்துவரவேண்டியது அவ

ஶ்யமன்றே? ப்ரபந்நர்களுக்கும் "நிஜகர்மாதி ஸக்த்யஸம் ஸாபத்யாச வ்ரதைத்ய ஸாஸிக:" என்று ஸ்ரீ ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ர ஹத்தில் அருளிச்செய்தபடியே, நித்ய கர்மங்களையும் பகவானிடத்தில் உண்டாகிய ப்ரீதியினால் கைங்கர்யரூபமாய்ச் செய்யவேண்டுமென்று விதிக்கப் பட்டிருப்பதனால், அப்படிப்பட்ட ப்ரீதி உண்டாவதற்கு மேற்கூறிய பகவத் குணநுஸந்தாநம் அவஶ்யமே. அப்படிக் குணநுஸந்தாநம் செய்வதற்கு முக்யமான ஸாதநம் ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களே. இது "தொண்டர்க்கமு துண்ணச்சொன் மாலைகள்சொன்னேன்," "சீர் கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை, என்னினைந்துபோக்குவரிப் போது?", "இவ்வர்த்தங்களைச் சித்த ரஜ்ஜுநத்தோடு எளிதாகத் தெரிவிப்பதில் தொண்டர்க் கமுதுண்ணலான அருளிச்செயல்கள் ப்ரதாநம்" என்றிவை முதலிய பூர்வாசார்களின் ஸ்ரீ ஸூக்திகளினால் வ்யக்தமாக ஏற்படுகிறது. ஆகையினால் தான் ஸ்ரீ பாஷ்யகாரர், தம்முடைய சரம தசையில் தம்முடைய பிரிவினால் முதலிகள் கலங்கிநிற்க, ப்ரபந்நர்கள் ப்ரபத்திக்குப் பிறகு செய்யவேண்டிய கார்யங்கள் இன்னின்னவை என்று நிரூபிக்கும் ஸந்தர்ப்பத்தில் "ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல், அதற்குச் சக்தியில்லையாகில் அருளிச்செயல்களைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில் த்வயத்தின் அர்த்தாநுஸந்தாநம் செய்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில் உகந்தருளின நிலங்களில், அமுதுபடி, சாத்துபடி, திருமாலை, திருவிளக்கு ஸமர்ப்பித்தல், திருநந்தவநம் உண்டாக்குதல் முதலிய கைங்கர்யம் செய்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில், என்னுடையவனென்று அபிமானித் திருப்பானொரு பாகவதனுடைய அபிமாநத்தில் ஒதுங்கி வர்த்தித்தல் செய்ய வடுக்கும்" என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் ஶக்தி இல்லாதவர்களுக்கு மாத்திரம் பகவத் விஷயம் அவஶ்யம் என்பதில் தாத்பர்யமில்லை. ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களைப் பரிசயம் செய்வது புத்திக்கு ஶ்ரமத்தை உண்டுபண்ணு மாகையினாலும், அருளிச்செயல்களிலே போல் அந்த பகவானுடைய குணங்கள் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படாமையினாலும், அதைப் பரிசயம் செய்யத்தகாத அநத்யயந காலங்களிலும் எல்லா ப்ரபந்நர்களுக்கும் இந்த பகவத் விஷயமே உபஜீவ்யம் என்பதில் தாத்பர்யம். இவ்வர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றியே நம் தேசிகனும், "ஜ்ஞாநஸார ப்ரஸ்தரா விஸ்தரேண ஸம்ஸாரகாரண தாபஸிந்த்வ ஸுப்ஸாஶ்ரய ஶ்ரவண மத்ஸ்ய நவமேண ஹ்ருதயாவப்ய ஸாநுஜம் । தத்ரார்ஜ்ஜித்யவணீய ஸ்தமத ஸம்ஜீவந்ருஷ்ட ஸுஷ்டுபஸாஸா மாயா தாதீ யஜ்ஞதாவஸ் ஶவீஷ ஸயோத்தரணீ யாரணீயா ॥" என்று அருளிச்செய்திருக்கிறார்.



இதற்குப் பகவத்விஷயம் என்கிற பெயர் பெரியோர்களால் வழங்கப் பட்டு வருகிறது. இதர க்ரந்தங்களில் அநேகம், பகவானுடைய குணங்களைச் சொன்னாலும், அவைகள் வெவ்வேறு விஷயங்களை நிரூபிப்பதற்காக ஏற்பட்டு இடையிடையே தாத்பர்யங்களைக் கொண்டு அப்படி நிரூபிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இந்த க்ரந்தமோ, பகவானுடைய குணங்களையே முக்யமாகவும் ஸ்பஷ்டமாகவும் நிரூபிப்பதற்காகவே ஏற்பட்டதென் பது இக்ரந்தத்தின் ஆரம்பத்தில் "உயர்வற வுயர்நல முடையவன்" என்பதனாலேயே தெரிவிக்கப்படுகிறது. இது தான் 'பகவாந்' என்னும் பதத்திற்கு அர்த்தம். "ஜ்ஞாநஶக்தி பலைஶ்வர்ய வீர்யதேஜாம்ஸ்ய ஶேஷத: । பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி:" என்றல்லவோ புராணத்தில் அந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டது. அந்த அர்த்தம் முழுதும் இந்த முதல் பாட்டின் முதலடியில் ஸங்க்ரஹமாக அருளிச்செய்யப்பட் டிருப்பதனால் இந்தத் திருவாய்மொழி முழுதும் 'பகவாந்' என்னும் பதத்திற்கு விவரணமானதுபற்றி இதற்குப் பகவத் விஷயம் என்னும் பெயர் வந்ததென்று நினைக்க இடமுண்டாகிறது. இவ்வர்த்தத்தை நம் ஆசார்யனும் "ப்ரதித பகவதாக்யா ஸம்ஸ்கார்யாநு ஸாரணை ஷோடஶஸஹஸ்ர ஸந்தீர்ண:" என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்திருக்கிறார்.

இக்ரந்தத்தை அருளிச்செய்தவர் **நம்மாழ்வார்.** ஆழ்வார் என்றால், பகவானுடைய குணங்களின் அநுபவத்தில் ஆழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்று அர்த்தம். அன்றிக்கே, கர்மங்களால் அளவுபட்டிருக்கும் நம்முடைய ஜந்மங்களை விட, பகவானுக்கு அளவிட முடியாத கருணையினால் உண்டாகும் ஜந்மங்கள் பல என்பது 'பஹூநி மே வ்யதீதாநி" என்கிற பகவத் கீதையின் ஶ்லோகத்தின் கருத்து. "அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினன், அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே" என்கிறபடி பகவானுடைய அந்த கருணையை விட எத்தனையோ மடங்கு அதிகமான கருணையை உடையதாயிருக்கும் ஆழ்வாரது ஜந்மம். ஆகையால் பகவானுடைய ஜந்மங்களை விட ஆழ்வாரது ஜந்மம் உயர்ந்தது. ஆகவே, ஜந்ம பரம்பரைகளினால் மற்றெல்லாரையும் விட ஆழ்ந்துபோகிறவர் என்று அர்த்தமாகவுமாம். இது "த்ருதிஶோதவிஷ நிர்வேஶ ஸம்ஜ்ஞாதவி" என்கிற ஶ்லோகத்திலும் வ்யக்தமாய் அருளிச்செய்யப்பட்டது.

**இரண்டாவது நாள்:—** இந்த நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள், திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என நான்கு. முதல் ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில், ஸம்ஸாரம் மிகவும்

கொடியது என்பதை எம்பெருமானிடத்தில் விண்ணப்பம் செய்கிறபடியினால் 'வ்ருத்தம்' என்னும் பதம் 'விருத்தம்' எனத் திரிந்து, அதனால் நடந்த ஸமாசாரத்தைத் தெரிவிக்கிறது என்று அர்த்தமாகிறபடியால், ஸம்ஸாரம் நமக்கும் விரோதம் என்பது ஏற்படுகிறது. 'திருவிருத்தம்' என்பதில் 'திரு' என்பது மேன்மையைக் காட்டும். திருவாசிரியத்தில் இவருடைய ஆர்த்தியைக் கண்டு பெருமாள், தம்முடைய திருமேனியைக் காட்ட அதை அநுபவிக்கிறார். பெரிய திருவந்தாதியில் இப்படிப் பகவானுடைய திருமேனியைக் கண்டதனால், அதைப் பரிபூர்ணமாய் அநுபவித்தல்லது தரிக்க வொண்ணாத த்வரை உண்டான தென்பது தெரிவிக்கப்படுகிறது. அந்த மிகுந்த த்வரையினால் பெரிய ஆர்த்தியோடே அவனை வளைத்துக் கூப்பிட்டுத் தாம் புருஷார்த்தத்தை அடைந்தமை திருவாய்மொழியில் தெரிவிக்கப்படுகிறது. இவ்வர்த்தத்தை நம்தேசிகனும், "[illegible] ॥" என்று அருளிச்செய்தார். அன்றிக்கே, திருவிருத்தம் பரபக்தியையும், திருவாசிரியம் பரஜ்ஞானத்தையும், பெரிய திருவந்தாதி பரமபக்தியையும், திருவாய்மொழி ப்ராப்தியையும் சொல்லுகிறதாகவுமாம். அதுவுமன்றிக்கே, திருவிருத்தத்தில், பரதனைக் கைகேயி 'ராஜந்' என்று அழைத்த பொழுதும், ப்ராதஃகாலத்தில் ராஜோபசாரங்களைக் கேட்டபொழுதும் அந்தப் பரதாழ்வானுக்கு உண்டான தசையையும்; திருவாசிரியத்தில் பெருமாள் சித்ரகூடத்தில் வஸிக்கிறார் என்பதைக் கேட்டு த்வரித்துக்கொண்டு நடந்த தசையையும்; பெரிய திருவந்தாதியில், நந்திக்ராமத்தில் பெருமாளுடைய வரவை எதிர்பார்த்து நாள் எண்ணிக்கொண்டிருந்த தசையையும்; திருவாய்மொழியில், அந்தப் பகவானுடைய திருவடியில் அயத்ந லப்தமாய் யதா மநோரதமான கைங்கர்யம் செய்யப்பெற்ற தசையையும் போல, இவ்வாழ்வார் தம்முடைய தசையைப் பேசுகிறாராகவுமாம்.

இந்தத் திருவாய்மொழியில் ஆயிரம் பாட்டுக்களினாலும் எம்பெருமானை அடைவதற்கு அவனே உபாயம் என்கிற அர்த்தமே நிரூபிக்கப்படுகிறது. அதற்கு ஸாதகங்களாகப் பத்துப் பத்துக்களினாலும் ஸௌலப்யத்வம் முதலிய குணங்களை நிரூபிக்கிறார். அந்த ஸௌலப்யத்வாதி குணங்களை நிரூபிப்பதற்காக ஒவ்வொரு பத்திலும் பத்துத் திருவாய்மொழிகளினால் பரத்வம் முதலிய குணங்களை நிரூபிக்கிறார்.



இதில் சொல்லப்பட்ட எம்பெருமான்தன்னை அடைவதற்கு அவனே உபாயம் என்னும் அர்த்தமே வேதாந்தங்களிலும் ஓதப்படுகிறபடியால், உபய வேதாந்தங்களென்று இவை இரண்டும் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. இதுவும் "[illegible]" என்று ஸ்ரீ பாஷ்யத்தைப்பற்றி அதிகரணஸாராவளியிலும் "[illegible]।" என்று இப்பகவத் விஷயத்தைப் பற்றி த்ரமிடோபநித் தாத்பர்ய ரத்நாவளியிலும் நம் ஆசார்யனால் வெளியிடப்பட்டது.

அதில் திருவிருத்தத்தில் முதற்பாட்டில் "பொய்ந்நின்ற ஞானமும்" என்று ஆரம்பித்து மேலே தம்மால் ப்ரார்த்திக்கப்படுகிற எல்லா அம்சங்களுக்கும் ஸங்க்ரஹமாக எம்பெருமான் இந்த ஜீவாத்மாவிற்கு முன்பு செய்த உபகாரங்களை அநுவாதம் செய்துகொண்டு, இனிச் செய்யவேண்டிய உபகாரங்களை ப்ரார்த்திக்கிறார். அந்தப் பாட்டில் சொல்லப்படுகிற முன்னுபகாரம் பின்னுபகாரம் என்கிற பிரிவுகளை "உபகார ஸங்க்ரஹம்" என்னும் ரஹஸ்யத்தில் மணிப்ரவாளரூபமாக நம் ஆசார்யன் அருளிச்செய்துள்ளார். அப்படியே திருவாசிரியத்தில் "செக்கர் மாமுகில்" என்று ஆரம்பித்துத் திருமேனியின் ஸௌஷ்டவத்தையும் அதற்கு, உபயோகமான குணங்களையும் அநுபவித்தார். பெரிய திருவந்தாதியில் "முயற்றி சுமந்தெழுந்து" என்று ஆரம்பித்துத் தம்முடைய திருவுள்ளம் தமக்கு முன்பே அவன் திறத்தில் ப்ரவணமானபடியை அநுஸந்தித்துத் தம்மையும் சேர்த்துக்கொண்டு, பகவானை அநுபவிக்கப் பாராயென்று அருளிச்செய்ததனால் தமக்கு உண்டான த்வரையின் மிகுதியைக் காண்பித்தார். இத்திருவாய்மொழியில் அந்த த்வரையின் மிகுதியால் அவனை ஆணையிட்டு வளைத்துக் கூப்பிட்டுப் பரிபூர்ணாநுபவம் பெற்றுத் தாம் க்ருதார்த்தமான படியை அருளிச்செய்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

**மூன்றாவது நாள்:**—முதற் பத்தில் பகவானே ஆஶ்ரயிக்கத்தக்கவனாகையால் அவனே உபாயம் என்று அருளிச்செய்கிறார். அதற்குக் காரணமாகப் பரத்வம் முதலிய பத்துக் குணங்களைப் பத்துத் திருவாய்மொழிகளினால் அருளிச்செய்கிறார். முதல் திருவாய்மொழியில் அவனே எல்லாவற்றையும்விட மேலானவன் என்றும், இரண்டாம் திருவாய்மொழியில் பக்ஷ

பாதமில்லாதவனென்றும், மூன்றாம் திருவாய்மொழியில் ஸுலபனென்றும், நான்காம் திருவாய்மொழியில், ஆஶ்ரிதர்கள் செய்யும் அபராதத்தைப் பொறுக்கும் ஸ்வபாவமுடையவனென்றும், ஐந்தாம் திருவாய்மொழியில் ஸுஶீலன்: அதாவது தான் மிகவும் உயர்ந்தவனா யிருந்தபோதிலும் மிகவும் தாழ்ந்தவர்களிடத்தும் வ்யத்யாஸமில்லாமல் கலக்கும் ஸ்வபாவத்தை உடையவன் என்றும், ஆறாம் திருவாய்மொழியில் ஸுலபமாய் ஆராதநம் செய்யக்கூடியவன்: அதாவது, தன் ஶக்திக்கு அநுகுணமாகக் கிடைத்த பொருளைக் கொண்டு பக்தி ஒன்றை மாத்ரம் முன்னிட்டு எவர்களாலும் ஆராதநம் செய்யக்கூடியவனென்றும், ஏழாம் திருவாய்மொழியில் அப்படி அவனை ஆஶ்ரயிப்பது மிகவும் ஸுகமாயிருக்கும் என்றும், எட்டாம் திருவாய்மொழியில் வாத்ஸல்யத்தை யுடையவன்: அதாவது தன்னை ஆஶ்ரயித்தவர்களிடத்தில் இருக்கிற ஜாதி குணம் முதலிய வ்யத்யாஸங்களைப் பாராதவ னென்றும், ஒன்பதாம் திருவாய்மொழியில், தம்முடைய அநுபவம் ஜீர்ணமாக ஜீர்ணமாக மேலே இன்னும் அநுபவத்தைக் கொடுப்பவன் என்றும், பத்தாம் திருவாய்மொழியில் இப்படித் தான் பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்வதைத் தன்னுடைய ப்ரயோஜநமாக எண்ணியிருப்பவ னென்றும், ஆகையினால் அவனே ஆஶ்ரயிக்கத்தகுந்தவன் அவனே உபாயம்என்றும் அருளிச்செய்தார். இந்த அர்த்தங்கள் எல்லாவற்றையும் ஸங்க்ரஹித்து, முதல் பாட்டில் அருளிச்செய்கிறார். அதில் "உயர்வற" என்னும் முதல் அடியினால் பரத்வமும், "மயர்வற" என்னும் இரண்டாவது அடியினால் 3,4,5,6 - திருவாய்மொழிகளின் அர்த்தங்களும், இரண்டாவது மூன்றாவது அடிகளினால் இரண்டாம் திருவாய்மொழியின் அர்த்தமாகிய பக்ஷபாத மில்லாமையும், எட்டாம் திருவாய்மொழியின் அர்த்தமும், "துயரறு சுடரடி" என்கிற நான்காம் பாதத்தினால் இதர திருவாய்மொழிகளின் அர்த்தங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இந்தப் பத்தில் நாம் முக்யமாய் அறியவேண்டியது, பகவான் ஒருவனே ஆஶ்ரயிக்கவேண்டியவன் என்பது. அவனை ஆஶ்ரயித்தால் ஸர்வ பாபங்களும் நிவ்ருத்தியாகும்; ஸகல நன்மைகளும் உண்டாகும்; மேலே நடப்பதெல்லாம் நன்மையாக இருக்கும். அப்படி அவனை ஆஶ்ரயிப்பதற்குக் காலம் முதலிய நியமங்கள் வேண்டா. வேறு புண்ய பாபங்களினாலாவது தடுக்கவும் அழிக்கவும் ஒண்ணாது. மரண மடைவதற்குள் எந்த இடத்திலாவது எந்தக் காலத்திலாவது எம்பெருமானைச் சரணமாக ஆஶ்ரயிப்பது உசிதம். இதை "நாளு நின்றடும் நம பழமை" என்கிற பாட்டில் இவர்தாமே அருளிச்செய்தார். இந்த அர்த்தத்தையே ஸ்ரீ ஆளவந்தாரும் "[illegible]" என்கிற ஶ்லோகத்தில் விஶதமாக நிரூபிக்கிறார். இந்த ஶ்லோகத்தின் அர்த்தம் "அஞ்ஜலி வைபவம்" என்னும் ரஹஸ்யத்தில் மணிப்ரவாளரூபமாக நம் ஆசார்யனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தேடும் முயற்சியில் அவர்களை மூட்டலாமே. வைதிக மதங்கள் வேத மார்க்கத்தை விச்வஸித்து, வேத தாத்பர்ய விரோதமின்றித் தம் கொள்கைகளை ஆதரிக்கக்கூடாதோ? விரோதம் இல்லாதபோதும், வேதம் ஸம்மதிக்காத அம்சங்களில் பிறந்த வித்யாஸங்களை த்வேஷகாரணங்கள் ஆக்காமல் வைத்துக்கொள்ள அமையாதோ? அடி முதல் உச்சி வரையில் நிர்த்தோஷமாக ஏற்பட்டதென நம்பப்பட்ட நம்முடைய தர்சநத்தின் விஷயமாக, அந்யரால் பரிபவாதிகள் யோசிக்கப்பட வேண்டாமென்றும், தர்சநஸ்தர்களுக்குள் ஒருவர்க்கொருவர் அஸூயை மேலிட்டு அதனால் தர்சநம் பரிபவமடையாமல் இருக்கவேண்டுமென்றும், " [illegible] " எனும் ச்லோகத்தால் கவிதார்க்கிக ஸிம்ஹமன் ப்ரார்த்தித்தது வீணானதாகத் தோன்றுகின்றது. இந்த ஸ்திதிக்கு மாறுதல் உண்டோ? உண்டாகுமானல் எப்போது உண்டாகும்?

' [illegible] ', என்று ப்ரபந்நன் உத்தர க்ருத்ய விஷயமாகத் தேசிகன் ச்லோகம் ஸாதித்தனர். அந்த ச்லோக தாத்பர்யத்தை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவர நமக்கு யோக்யதையில்லை. வேதாந்த தீபிகையின் முதல் இரண்டாம் ஸம்வத்ஸர ஸஞ்சிகைகளைச் சில நாள்கட்கு முன் படிக்கப்புக்கோம். முன்படித்த விஷயங்களாயினும், இப்போதும் அவை நவம் நவமாக நமக்குத் தோற்றி மிகவும் ஸந்தோஷம் அளித்தன. அவ்விஷயங்களை நமக்கு விச்வாஸத்தால் ஸமர்ப்பித்த மஹான்கள், மீண்டும் அவ்வண்ணம் க்ருபை பண்ணமாட்டார்களோ? இந்த ரூபமாக லோகஹிதத்தை அவர்கள் அங்கீகரிக்கப் பொருந்தாதோ? ' [illegible] ' எனும் க்யாதிதான் அந்த ஸ்வாமிகளுடைய க்ருபையைத் தீபிகை இழந்துவிட்டதற்குக் காரணமாமோ?

**தீபிகைக்கு விஷயப்ரதாந அபேக்ஷை.**



**"விஷ்ணுஸ்தல மஞ்சரி"**

இப்பெயர்கொண்ட புஸ்தகமொன்று ம-ா-ா-ஸ்ரீ., மயிலை கொ. பட்டாபிராம முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு நம் பார்வைக்கு அநுப்பப்பட்டது. இது ஆஸ்திகராய் நிற்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகுந்த உபகாரம் செய்யத்தக்கது. பகவான் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்களின் நாமங்களே பலர்க்குத் தெரிவதில்லை. ஆதலால் ஒவ்வொரு ஸ்தலத்தின் ப்ரபாவமும், அதற்கு மார்க்க ஸௌகர்யங்களும், யாத்ரை செய்பவர்களுக்குத் தெரியவேண்டிய ஸர்வாம்சங்களின் விவரணமும் விஷ்ணுஸ்தல மஞ்சரியில் விசேஷமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. யாத்ரை செய்ய அசக்தராயிருக்கும் பாகவதர்களும் இந்நூலைப் படித்துக் களிப்படையப் பொருந்தும். ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளில் விசேஷ ஜ்ஞாநம் பெற்றவர் பலருளர். அவர்க்குள் முதலியாரவர்கள் ஜ்ஞாநமானது லோகோபகார நிமித்தமாக ப்ரயோஜநப்பட்டது. திருப்பதி ஸ்தல விமர்சம் எனப்பட்ட விஷயம் த்ராவிட பாஷையில் க்ரந்தகர்த்தாவினுடைய விசேஷ ப்ரஜ்ஞையை ஆவிஷ்கரிக்கின்றதுமன்றி, அந்த ஸ்தலஸம்பந்தமாகச் சில மந்தமதிகளால் ப்ரமிக்கப்பட்டபடியே யாம் கேள்விப்பட்ட துரூஹங்கட்குத் தக்க ஸமாதாநத்தையும் அளிக்கின்றது.

**திருமந்த்ர ப்ரதாநம்**

இப்பெயர் கொண்டதோர் சிறு நூல் நம்முடைய பார்வைக்கு வந்தது. இந்த க்ரந்தகர்த்தா மதுரையில் வக்கீலாயிருக்கும் ஸ்ரீமான் உ. வே. சேஷய்யங்கார். இதன் விஷயம் கம்பராமாயணத்தில் ஸுந்தரகாண்டம் உருக்காட்டுப்படலச் செய்யுள்களின் உள்ளுறை. இதைப் படிக்க நாம் மிக வியப்புற்றோம். இந்நூல் செய்தவரைப்போல் ஆங்கிலேய பாஷையில் விசேஷ பாண்டித்யம் பெற்ற பலரால் ப்ரசுரமாக அநாதரிக்கப்பட்ட தேசபாஷையிலும், கவிச்ரேஷ்டரான கம்பருடைய செய்யுளிலும், விச்வாஸ பூர்வகமான ஆராய்ச்சியை இந்நூலாசிரியர் பொருந்தினவர்; ஜந்மத்தால் ஸித்திப்பதோர் மஹாதநமென விளங்கும் ஜந்ம மதத்தை அமதமாக வைத்துக்கொள்பவர் வகுப்பில் அவர் நின்றிருந்தும், ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தை அவர் ஸம்பாதித்தவர்; அந்த ஜ்ஞாநத்தால் ஸித்தித்த விசேஷார்த்தங்களைக் கம்பர் செய்யுள்க

ளில் ஸாக்ஷாத்கரிக்க நன்கு முயன்றவர். இவை நம்முடைய விஸ்மய காரணங்கள்.

ஸ்ரீராமனுடைய கணையாழியை ஹநுமான் ஸீதைக்குக் கொடுத்ததை ஆசார்யன் ஶிஷ்யனுக்குச் செய்யும் திருமந்த்ரப்ரதாநமாய்க்கொண்டு, அதனால் ஸீதைக்கு உண்டான ஸந்தோஷத்தையும், அதன் பரீவாஹமாய் வந்த சேஷ்டிதங்களையும், ஹநுமானிடம் அவள் பாராட்டின க்ருதஜ்ஞதையையும், திருவஷ்டாக்ஷரத்தின் உபதேசம் பெற்ற ஶிஷ்யனுடைய ஆநந்தமாகவும், அதன் அநுபவமாகவும், அதனால் அந்த ஶிஷ்யன் சரீரத்தில் தோற்றிய தேஜஸ்ஸாகவும், அவன் குருவினிடம் செய்யும் உபகார ஸ்மரணமாகவும், கம்பர் செய்யுள்களின் உள்ளுறையானது க்ரந்த கர்த்தாவால் விவரிக்கப்பட்டது. அவர் இவ்வண்ணம் செய்ததற்குக் காரணம் பெரியோர்களால் வால்மீகி க்ருதமான ஸுந்தரகாண்டத்தின் முதல் ஶ்லோகத்தைப்பற்றிச் சிந்திக்கப்பட்ட அர்த்த விசேஷங்களென்று அவரால் காட்டப்பட்டது.

ஸுந்தரகாண்ட ஆரம்ப ஶ்லோக வ்யாக்யாநத்திலும், அக்காண்டத்தின் 27-வது ஸர்க்கத்தின் முடிவான ஶ்லோக வ்யாக்யாநத்திலும், கோவிந்தராஜரால், “சரீரே ஹ்ருதயஸ்தம்பம் யத: வேதநஸ்ய உஜ்ஜீவநே ப்ரவ்ருத்தஸ்ய ஆசார்யஸ்ய ப்ரவ்ருத்தி: ஶிஷ்யஜ்யதே” என்று ஆரம்பித்து, லங்கை சரீரமென்றும், ராவண கும்பகர்ணர்கள் அஹங்கார மமகாரங்களென்றும், இந்த்ரஜித் முதலானோர் காம க்ரோதாதி துர்க்குணங்களென்றும், அந்த லங்கையில் தகையப்பட்ட ஸீதையைப் போன்றவன் சேதநன் என்றும், பகவதாஜ்ஞையால் அந்தச்சேதநன் உஜ்ஜீவநத்தில் ப்ரவ்ருத்தனான ஆசார்ய துல்யன் ஹநுமான் என்றும் விவரிக்கப்பட்டது. இந்த வ்யாக்யாதாவுக்கு முன்பே இவ்வர்த்தங்களை விஶதமாக, “தேஹே ஶ்ருதிஶைலயா நநஶோ நக்ஷத்ராயஷ்டிதே தேஹஹவிஷ ஹவஸிம்யு நாவரிமதே தீநாம்ஜஶரோஷிதஃ । ஶக்ரஜிஹ்ம நஷ்டஶிந மூர்ணா ப்ரவ்ருத்தாவிதாயுஃ பூரோநு ஸம்ஸாரமூல விச்சேத ராஜதநயா ந்யாயேந ஸாத்யதே” என்கிற ஶ்லோகத்தால் தேசிகன் ஸமர்த்தித்திருக்கின்றனர். நமக்குத் தெரிந்த



வரையில் தேசிகன் ஸாதித்ததற்கு மூல ப்ரமாணமான, “ஜீமூத ஶ்யாமநம் வொராம் யோகிநா ரஜநீசரம் । விவேகஶரஜாலேந ஶமநயந்தம் யோகிநாம் ॥ த்யேயம் ஸர்வாவஸ்தாஸு ஸததாயஜஸ்ர ப்ரஹ்ம । ரக்தராஜீவநயநம் ரகுவம்ஶகுலாங்கிதம் ॥” என்கிற ஸ்ரீஸாத்வதஸம்ஹிதா ஶ்லோகங்களின் தாத்பர்யம் என்னவென்றால்:-

நீருண்ட மேகம்போன்ற வர்ணமும், செந்தாமரைக் கண்களும், வில்லையும் அம்பையும் கொண்ட கைகளும் பொருந்திய ஸர்வாந்தராத்மாவான ஸ்ரீராமசந்த்ரன், த்யாநத்தில் ப்ரவர்த்திக்கின்ற யோகிகளின் சித்தத்துக்கு சுபமான ஆஶ்ரயமாகின்றான். மநுஷ்யருடைய சித்தமானது எப்போதும் இங்குமங்கு மோடிச் சலித்துக்கொண்டிருக்கும். அந்தச் சித்தத்தைப் பகவான் தன்னுடைய ரூபாதிஶயத்தால் அபஹரிக்கின்றான். மநுஷ்யர் மநஸ்ஸானது அஜ்ஞாநமென்றும், அந்தகாரமென்றும் சொல்லப்பட்ட பாஹ்ய விஷயங்களைப்பற்றி ஸதா ஸஞ்சரிக்கின்றது. ஆதலால் அதை ரஜநீசரன் (அதாவது இரவில் ஸஞ்சரிக்கும் ராக்ஷஸன்) எனச் சொல்லலாம். அதற்கு ஸஹகாரியாக நிற்கின்ற பத்து இந்த்ரியங்களையும் பத்துத் தலையாகச் சொல்லலாம். இப்படிப்பட்ட ராக்ஷஸன் முமுக்ஷுக்களுடைய யோசனையில் அதி கோரஸ்வரூபன் எனப்படலாம். ஆதலால் தம் மநஸ்ஸைப் பகவத் த்யாநத்தில் செலுத்த முயல்கின்ற யோகிகள், அது தங்களுக்கு அவஶமாகப் போய், இந்த்ரியங்கள் த்வாரா விஷய ஸஞ்சாரம் செய்ய யத்நிக்கையில், ‘தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே’, என்றும், ‘தேஷாமேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம: நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா’ என்றும் கீதையில் புருஷோத்தமன் சொன்னபடியே, ஆத்மபாவஸ்தனாக அவன் த்யாநிக்கப்பட்டானாகில், விவேகமெனும் ஶரஜாலங்களைக்கொண்டு, அவர்கள் ஹ்ருதயங்களில் அவன் ஜ்ஞாநதீபத்தை ஏற்றி, அஜ்ஞாந ரூபமான ப்ரதிபந்தகங்களைப் போக்கி, தன்னை அவர்கள் அடையும்படியான ஜ்ஞாநத்தையும் பக்தியையும் அவர்கட்குத் தந்து, அவர்கள் மநஸ்ஸுக்கு ஶாந்தியை உண்டாக்குகின்றான். இந்த அர்த்தத்தை, ‘ஜீவஸ்யைவ ஶரீரம் ப்ரஹ்மஶாலா ஸம்ஸாரம் மஹோரோ நதித்

வீதஶோகா:,' என்று ஶ்ருதியும் உதாஹரித்தது: "யேஷாமிந்தீவரஶ்யாமோ ஹ்ருதயஸ்தோ ஜநார்த்தந: । லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராஜய: " ॥ என்று, ஸ்ரீ ராகவனுடைய விக்ரஹம் குடிகொண்ட மனத்தருக்கு, இந்த்ரிய ஶத்ருக்களால் அபஜயம் கிடையாதென்றும், அவற்றின் ஜயமும் புருஷார்த்த லாபமும் ஸித்தமென்பதும் சொல்லப்பட்டது. இது பகவானுடைய ஸ்வபாவம். ஸர்வத்ர ஸமனான ரக்ஷகன், தன் ஸத்யஸங்கல்பத்தால், தன்னை விரும்பியவரை விரும்புகின்றவனாகின்றான்; உதாஸீநர்க்கு உதாஸீநனாகின்றான்; ஶத்ரு பாவத்தைப் பாராட்டுபவர்க்கு ஶத்ருவுமாகின்றான். நெருப்பானது ஶுஷ்க பர்ணங்களைப்பற்றிக் காற்றுடன் கூடி அவற்றைப் பஸ்மம் செய்கின்ற ஸ்வபாவமுடையது. அவ்வண்ணமே, யோகிகளுடைய சித்தத்தில் நின்ற விஷ்ணுவானவர் அவர்களுடைய யோகத்துக்குத் தடையாகப் பரிணமிக்கும் அவர்களுடைய பாபங்களைத் தன் ஸ்வபாவத்தால் நாசம் செய்துவிடுகின்றார். இந்த அர்த்தம், "யதாக்நிருத்ததஶிக: கக்ஷம் தஹதி ஸாநில: । ததா சித்தஸ்திதோ விஷ்ணு: யோகிநாம் ஸர்வகில்பிஷம் " ॥ என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் வெளியிடப்பட்டது.

ஸாத்வத ஸம்ஹிதா ஶ்லோகங்கள் இவ்வளவு யோசனைக்கு இடங்கொடுக்கும். மநஸ்ஸைத் தமேந்த்ரியாநநான நிஶாசரனாகவும், யோகிகள் விஷயத்தில், அவர்களால் த்யாநிக்கப்பட்ட ஸ்ரீராமன் விவேக ஶரஜாலங்களால் அப்படிப்பட்ட மநஸ்ஸை ஶமிக்கச் செய்கின்றானென்றும், ஶ்லோகங்கள் சொல்வதனால், தேசிகன் தம்முடைய ஶ்லோகத்தால் ராமாயணார்த்தத்தை விஸ்தரித்தார். சரீரமானது தமேந்த்ரியாநநான மநஸ்ஸால் அதிஷ்டிதம். சரீரம் போன்ற லங்கை தஶாநநனான ராவணனால் அதிஷ்டிதம். சரீரம் ஸம்ஸாரக் கடல் நடுவிலும், லங்கை ஸமுத்ர நடுவிலும் நிற்கின்றது. ஸீதை லங்கையில் தகையப்பட்டு தைந்ய ஸ்திதியை அடைந்தாள். ஜீவன் சரீரத்தில் தகையப்பட்டு தீந ஸ்திதியிலிருக்கின்றான். ஸ்ரீராமன் வ்ருத்தாந்தத்தை ஹநுமான் ஸீதைக்குச் சொன்னவண்ணம், ஆசார்யர்கள் சேதநனுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை உபதேசிக்கின்றனர். தேசிகனுடைய ஶ்லோக தாத்பர்யம் இவ்வண்ணம் இருக்கின்றது. இதை அநுஸரித்தது



கோவிந்தராஜர் வ்யாக்யாநம். ஸுந்தரகாண்ட ப்ரதம ஶ்லோகமும், அதனுடைய 27-வது அத்யாயம் சரம ஶ்லோகமும், கோவிந்த ராஜீய வ்யாக்யாநத்துக்கு ஸாக்ஷாத்தாக இடம் தருவதாக யோசிக்க ஹேதுவில்லை.

தேசிகனும் கோவிந்தராஜரும் கம்பருக்குப் பிற்பட்டவர்கள். சடையன் வாழ்வு நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன், மறைவேதியருடன் ஆராய்ந்து ராமாயணம் பாடினாராயினும், ஸ்ரீமந்நாதமுனிகள் தர்சநம் கம்பருக்கு ராமாயணம் அரங்கேற்றிய காலத்தில் தான் ப்ராப்தமானபடியால், ஸ்ரீமந்நாதமுனிகள் ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரமாணமாய் நின்ற பகவத் ஶாஸ்த்ர பரிசயம் கம்பர்க்கு வெண்ணெய்நல்லூரில் உண்டாயிருக்குமென்று யோசிக்க ஹேதுவில்லை. ஆதலால் உருக்காட்டுப் படலச் செய்யுள்களில், ஆசார்யன் ஶிஷ்யனுக்கு அஷ்டாக்ஷரோபதேசம் செய்வதெனும் உத்ப்ரேக்ஷை, கம்பர் புத்தியில் ஸ்புரித்ததாய் எண்ணுவது ருஜுவாகத் தோன்றவில்லை. ஆனாலும் வால்மீகி விஷயத்தில் போலக் கம்பரைப்பற்றியும், 'ஜீர்ணாம் அபி நவாந்ருதாம் வாசம் யேந ந்யாயவதி' என்று யோசிக்கப்பொருந்தும்.

**"குமுதவல்லி-திருமங்கை மன்னன்".** இப்பெயர்கொண்டதோர் நூல் நமக்குக் கிடைத்தது. இதை இயற்றியவர், நாகப்பட்டணம் வித்வான் ஜெ. ராஜகோபாலப்பிள்ளையவர்கள். நூலாசிரியருடைய பாண்டித்யமானது, நூலின் ஒவ்வொரு வாக்யத்திலும் ப்ரதிபலிக்கின்றது. ஆரிய தமிழ் நூல்கள் பலவும் ஆராய்ச்சி செய்தவராதலால், க்ரந்த கர்த்தாவானவர் க்ரந்தத்தில் பலவிடங்களிலும், தக்க அவஸரங்களில், பழைய நூல்களில் விளங்கும் செய்யுள்களைத் தம்முடைய க்ரந்தத்தில் பொருந்தக் கோத்திருக்கின்றார். திருமங்கை மன்னன் கதையானது ஸ்ரீ வைஷ்ணவர்க்குள் வழங்கும் வண்ணம் படிப்பவர்க்கு இனிதாக நாடகச்செயலில் இந்நூலில் அமைத்திருக்கின்றது. இந்நூல் நடையோ கற்றவர்க்கு எளிதாம்; கல்லாதார்க் கரிதேயாம்; மற்றோர்க்கு மாலடியார் மலரடிக்கண் அன்பு மிகும்படியாகக் கற்றுணரத்தக்கதாம். இவ்வண்ணமே மற்ற ஆழ்வார்கள் சரிதங்களை இந்நூலாசிரியர் விவரிக்க வேண்டுமென யாவரும் விரும்புவர். ஆனால் ஆழ்வார்களைப்பற்றித் தத்

காலம் வழங்கும் கதைகள் யாவும் சரித்ரமெனக் கருத இடமில்லை. இவற்றில் தோன்றும் அதிமாநுஷ சேஷ்டிதங்களும் அஸம்பாவிதாம்ஶங்களும், ஸம்ப்ரதாய பாஹ்யர் அப்யுபகமம் செய்யமாட்டார். தேஜோவான்களும் தக்க அவஸரங்கள் நேர்ந்தாலன்றி லோகாநுபவத்தை அதிக்ரமித்து நடக்கமாட்டார். இது நிற்க மஹநீயர்கள் அநுஷ்டாநங்கள் லோகத்துக்கு ப்ரமாணங்களாகின்றன. ஆதலால் அவற்றில் தர்மலோபத்தைக் கிஞ்சித்தும் ஶங்கிக்க இடமிராமல் சரித்ரம் வளர்ந்தால் யுக்தமாயிருக்கும். ஶ்ரீ ராமனையும் க்ருஷ்ணனையும்பற்றி, "ராமோ விக்ரஹவாந் தர்ம:, க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று வசநங்கள் இருக்கின்றபடியால், அவனடியார்கள் தர்மலோபம் செய்யாரென்றே கொள்ளல் வேண்டும். தமிழ் மறையில் நாம் கண்டபடி பகவத்பக்தியை நமக்குக் காட்டி ஸம்ரக்ஷித்த அவதார புருஷர்கள் சரித்ரம் தர்மத்தில் தான் நிலைத்து நின்றிருக்குமென்பதை நாம் பல தரம் வரைந்திருக்கின்றோம். ஆதலால், ராஜகோபாலப் பிள்ளையவர்கள் மாலுகந்த வாசிரியர் சரிதங்களைத் தமது இனிய நடையில் இன்னும் எழுதும்போது, அவற்றுள் கதாபுருஷர்களைப்பற்றிச் சாயாமாத்ரமளவுகூட வைகுண்யம் தட்டாமலிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

**ஹரப்ரஸாத ஶாஸ்த்ரி உபந்யாஸம்.**

மஹாமஹோபாத்யாயர் ஹரப்ரஸாத ஶாஸ்த்ரி என்று ஸம்ஸ்க்ருதத்திலும் பாஷாந்தரத்திலும் பேர்பெற்ற வித்வான் ஸம்ஸ்க்ருத வித்யா விஷயமாகக் காசியில் ஹிந்து கலாசாலையில் உபந்யஸிக்கும்போது, மௌர்ய சந்த்ரகுப்தனெனும், மாகத ஸார்வபௌமன் மந்த்ரியாயிருந்த கௌடில்யர் என்பவர், பாஸரெனும் நாடக கவியின் வசநங்களைத் தமது க்ரந்தத்தில் உதாஹரித்திருக்கின்றாரென்கின்றார். இதனால் பாஸ கவி 2300 - வருஷங்கட்கு முற்பட்டவர் என்று ஸித்திக்கின்றது. பாஸர் நாடகங்கள் தக்காலம் வழங்குகின்றபடி ராமாயண பாரத பாகவத வ்ருத்தாந்தங்களை விவரிக்கின்றன. வால்மீகி ராமாயணம், மஹாபாரதம், வ்யாஸோக்த புராணங்கள் இவை யாவும் 2300 வருஷங்கட்கு முன்பட்ட ருக்விதாநமெனும் க்ரந்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றனவென்று முன்பே சொன்னோம்.



அந்த ஶாஸ்த்ரியே, இந்தியாவானது, 13 - 14 - வது நூற்றாண்டுகளில் துலுக்கரால் ஆக்ரமிக்கப்பட்டுப் போய் ஸம்ஸ்க்ருத பாஷையில் க்ரந்தகர்த்தாக்கள் அகப்படுவதே துர்லபமாய்ப் போன காலத்தில், 'கர்நாடகத்தில் மாதவாசார்யரும், த்ராவிடத்தில் வேதாந்ததேசிகனும், மிதிலையில் கண்டேஶ்வரரும், விஶேஷமாக ப்ரகாஶித்தனர்' என்று சொல்லுகின்றார். "ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந:", தத்வ ஸ்வரூபம் ஸங்க்ஷிப்தமாக வேண்டுமானால், தேசிகனைப்போல் அதற்காக ஶ்ரமப்பட்டவர்களை யோசிக்கப் பொருந்தாது.

ஸம்ஸ்க்ருத வித்யை கண்களை மூடச்செய்யுமென்றும், இங்கிலீஷ் வித்யை கண்களைத்திறக்குமென்றும் சென்ற நூற்றாண்டில் ஒரு பேர்பெற்ற இந்தியர் சொன்னதாக ஶாஸ்த்ரி மொழிகின்றார். அந்த அபிப்ராயத்தை ஶாஸ்த்ரிகள் ஆதரிக்கின்றாரில்லை. ஆதரித்தாலும் குற்றமில்லை. ஏனென்றால் கண்டோக்தமாய்க் கடோபநிஷத் சொன்னதாவது:—இந்த்ரியங்கள் விஷயங்களை க்ரஹிக்கின்றன. அவை அந்தராத்மாவைக் காணமாட்டா. புத்திதார்ட்யமுடைய யாரோ ஒரு புருஷன் இந்த்ரியங்களைத் தடுத்து, ஆத்ம ஸாக்ஷாத்காரம் செய்கின்றான்' என்பது தான். ஆதலால், ஸம்ஸ்க்ருத வித்யை தத்வஹித புருஷார்த்த ஜ்ஞாநமளிக்கும். ஐஹிக ஸுகங்கட்கு உதவமாட்டா. அதை அபேக்ஷித்தவர் இங்கிலீஷ் வித்யைக்குத் தான் போகவேண்டும்.

# குருபரம்பராஸாரசிந்தனை.

## (1) அத்யாத்ம ஸம்ப்ரதாயம் பரவிய க்ரமங்கள்.

ஸகல ஸம்ப்ரதாயங்களுக்கும் பரமாசார்யன் ஸர்வேஶ்வரன். அவன் மர்த்யர்க்கு ஜ்ஞாநப்ரதாநம் பண்ணும் ப்ரகாரங்கள் பல. அவன் ஜ்ஞாநத்தைத் தானே நேராக உபதேசிக்கும் வகை ஒன்று. முதலில் சதுர்முகனுக்குத் தானே வேதங்களை உபதேசித்தான். ராஜஸ தாமஸ குணங்கள் மதுகைடபர் என உருவெடுத்துச் சதுர்முகனிடத்தில் நின்று வேதங்களை அபஹரிக்கவும், பகவான் தானே அவர்களை ஸம்ஹரித்து, மறுபடியும் நான்முகற்கு வேதங்களைத் தந்தனன். இந்த விஷயத்தைப்பற்றி, "அப்போது தேவரீர் ஹயக்ரீவ ரூபத்தைத் தரித்தவராய்க்கொண்டு, ரஜோகுண தமோகுண ரூபராயும், மஹா பலிஷ்டர்களாயும், வேதங்களை அபஹரித்தவராயுமிருந்த மதுகைடபர் எனும் அஸுரர்களை ஸம்ஹாரம் செய்து அவர்க்கு (ப்ரஹ்மாவுக்கு) ஶ்ருதிகணங்களைத் தந்தருளினீர். அதனால் சுத்தஸத்வமயமான ஹயக்ரீவரூபத்தை (அவதார தத்வம் அறிந்தவர்கள்) தேவரீருக்கு அத்யந்தம் ப்ரியமான சரீரமென்று அறிகின்றார்கள்." (1) என்று ஸ்ரீ பாகவதத்தில் ப்ரஹ்லாத ஸ்தோத்ரத்தில் சொல்லியிருக்கின்றது. "பாஞ்சராத்ரம் முழுதும் நாராயணன் நேராக அருளிச்செய்தது" (2) என்கிறபடியே, பகவத் சாஸ்த்ரத்தை க்ருதயுகத்தில் பகவான் தானேயருளிச்செய்தனன். திருநாராயணீயத்தில் உபரிசரோபாக்யானத்

(1) 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌹𑌯𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌨𑍁𑌵𑌂 𑌹𑌿 𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑍍𑌵𑍇𑌦𑌦𑍍𑌰𑍁𑌹𑌾𑌵𑌤𑌿𑌬𑌲𑍌 𑌮𑌧𑍁𑌕𑍈𑌟𑌭𑌾𑌖𑍍𑌯𑍌 । 𑌹𑌤𑍍𑌵𑌾𑌽𑌨𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌾𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 ॥

(2) 𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍.



தில், அதாவது ஶாந்தி பர்வம், 343 - வது அத்யாயத்தில், இந்த பகவத் ஶாஸ்த்ர மாஹாத்ம்யத்தை ப்ரபஞ்சிக்குமிடத்தே, "அந்த (உபரிசரவஸு எனும்) ராஜன் இறந்த பிறகு, ஸநாதநமான இந்த ஶாஸ்த்ரம் அந்தர்தாநத்தை அடையப்போகின்றது. இதெல்லாம் என்னால் உங்கட்குச் சொல்லப்பட்டது." (1) என்று, புருஷோத்தமன்தானே ஸப்தருஷிகளுக்கு உரைத்தான் என்று வசனமிருக்கின்றது. "த்வாபரயுகத்தின் முடிவிலும் கலியுகத்தின் முதலிலும், ஸங்கர்ஷணனால் சொல்லப்பட்ட ஸாத்வதம் எனும் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் விவரிக்கப்பட்ட அநுஷ்டாந ப்ரகாரத்தை அவலம்பித்து, க்ரமமாக நித்யமும் அவ்வவர் கர்மங்களை அநுஷ்டிக்கும் ப்ராஹ்மணராலும், க்ஷத்ரியராலும், வைஶ்யராலும் ஊர்த்வபுண்ட்ரம் முதலான பாகவத சிந்நங்களுடன் கூடின ஶூத்ரர்களாலும் (பகவான்) அர்ச்சிக்கத்தக்கவன்; ஸேவிக்கத்தக்கவன்." (2) என்று சொல்லியிருக்கிறபடியே, விச்சிந்நமாய்ப் போன அதே ஸம்ப்ரதாயத்தைத் தானே மறுபடியும் பகவான் ப்ரகாஶிப்பித்தான். இன்னும் ஹம்ஸ, மத்ஸ்ய, ஹயக்ரீவ, நர நாராயண, ஸ்ரீக்ருஷ்ணாதி அவதாரங்கள் செய்து, தானே நேராக, லோகத்தார் அறிய நின்று, தத்வஹித புருஷார்த்தங்களை லோகாநுக்ரஹார்த்தமாக ஶரண்யன் ப்ரகாஶிப்பித்தனன். பகவத்கீதை நாலாவது அத்யாயம் முதலில், "ஶாஶ்வதமான இந்த (க்கர்ம) யோகத்தை மந்வந்தரம் முதலில் நான் விவஸ்வானுக்கு உபதேசித்தேன். விவஸ்வான் மனுவுக்கும், மனு இக்ஷ்வாகுவுக்கும் உபதேசித்தனர். இப்படி ஸம்ப்ரதாய பரம்பரையாக ப்ராப்தமான இதை (ப்பூர்வம்) ராஜர்ஷிகள் அறிந்தனர். அந்த யோகம் பஹு காலத்தின் பிறகு இவ்வுலகில் நஷ்டமாய்விட்டது. புராதநமான அந்த யோகமே என்னால் இப்போது உன்பொருட்டு சொல்

(1) 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌚 𑌨𑍃𑌪𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌃 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾 ।

(2) 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑍈𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 । 𑌅𑌰𑍍𑌚𑌨𑍀𑌯𑌶𑍍𑌚 𑌸𑍇𑌵𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 । 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌗𑍀𑌤𑌃 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑌃 । 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑌸𑍍𑌯 𑌯𑍁𑌗𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌆𑌦𑍌 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌸𑍍𑌯 𑌚 ॥

லப்பட்டது. ஏனென்றால், நீ என்னிடம் பக்தியுள்ளவனென்றும், என் ஸ்நேஹிதன் என்றும் இந்த உத்தமமான ரஹஸ்யம் (உனக்கு உரைக்கப்பட்டது)" (1) என்று ஸ்ரீ பகவான் அர்ஜுநனுக்கு வெளியிட்டார்.

இவ்விதமாகப் பரமபுருஷன் ஸ்வயமே பல அவஸரங்களில் ஜ்ஞாநோபதேசம் பண்ணியருளினன்.

இதரர்களிடம் விசேஷமாகத்தானே அதிஷ்டாநம் செய்தும் உபதேசித்தனன் என்பது ஒரு ப்ரகாரம். முக்யமாக வ்யாஸர் முதலானவர்களை அநுப்ரவேசித்து நின்று மஹாபாரதம், ப்ரஹ்ம ஸூத்ரம் முதலான க்ரந்தங்களை லோகரக்ஷணார்த்தம் ப்ரவர்த்திப்பித்தான். இதனாலன்றோ வ்யாஸர் விஷ்ணுரூபி யென்றும், விஷ்ணு வ்யாஸரூபீ யென்றும் (2) வசனமுண்டு. இன்னும் "க்ருஷ்ண த்வைபாயநரான வ்யாஸரை ஸர்வேச்வரனை நாராயணனென்று அறி. ஏனெனில், ஓ மைத்ரேய! பூலோகத்தில் மற்ற யாவர் தான் மஹாபாரத கர்த்தா ஆகவல்லவர்?" (3) என்றும், "அந்த மஹர்ஷியின் நாமோச்சாரண மாத்ரத்திலே பீஷ்மர் கைகூப்பிக்கொண்டு சொன்னார்." (4) என்றும், வேதவ்யாஸரிடம் பகவானுடைய விசேஷ அநுப்ரவேசம் அங்கீகரிக்கப்பட்டுளது.

இதரர்களை உபதேசார்த்தம் பகவான் நியமிப்பதுமுண்டு. இது மற்றோர் ப்ரகாரம். ப்ரஹ்மாவுக்கு வேதங்களைத் தந்தும், விசேஷஜ்ஞாநங்களை உபதேசித்தும், அவர் முகமாக சாஸ்த்ரங்களை லோகத்தில் ப்ரவர்த்திப்பித்தான். முண்டகோபநிஷத்திலும் சாந்தோக்யோபநிஷத்திலும், அதர்வ ருஷிக்கும் இந்த்ரனுக்கும் ப்ரஹ்மா அத்யாத்மவித்யா ப்ரதாநம் செய்ததைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ப்ரஹ்மாவினிடம் ஜ்ஞாநத்தை அடைந்தவர் பலர். "இந்த ஜந்மத்திலேயே தம்முடைய ப்ரயத்நமின்றிப் பகவானுடைய க்ருபாவிசேஷத்தினடியாகவே, பராவர தத்வஜ்ஞாநங்களை அடைந்தவராய்க்கொண்டு, நிவ்ருத்திமார்க்கத்திலிருந்தவர்கள்"(1) எனப்பட்ட ப்ரஹ்மபுத்ரர்களான ஸநத்குமாராதிகளையிட்டும், லோகத்துக்கு ஹிதப்ரவர்த்தநத்தை ரக்ஷகன் செய்தருளினன். மீண்டும், நாரதர், பராசரர், சுகர், சௌநகர் முதலான பல மஹர்ஷிகளைக்கொண்டு அத்யாத்ம ஸம்ப்ரதாயம் குலையாதபடி நடத்திவைத்தான்.

இன்னும், தான் அருளிச்செய்த அர்த்தங்களை யெல்லாம், ஜ்ஞாநாதிகர் என்று லோகத்தில் ப்ரஸித்திபெற்ற பீஷ்மர் முதலானவர்களைக்கொண்டு அந்த அர்த்தங்களே ப்ராமாணிகங்கள் என, அவற்றை யுதிஷ்டிரர் முதலானவர்கள் முன்பாக, ஸம்வாத விஷயங்களாக்கி வைத்தனன். இது பகவான் அத்யாத்ம ஸம்ப்ரதாயம் தழைக்கச் செய்தவகைகளில் மற்றொன்று. ஆதலால் "அந்த ஸர்வேச்வரனை ஆசார்யனும்பிதாவும் குருவுமாயிருக்கின்றவனை"(2) என்றும், "நாராயணனுக்கும் குரு எனக்கும் எல்லா லோகங்கட்கும் குரு," (3) என்றும், "நீ தான் பந்து; குருவும் நீ தான் (4) என்றும் "ஜகத்துக்குக் குருவாகின்றாய்; கதியாகவுமிருக்கின்றாய்," (5) என்றும், சொல்லுகிறபடியே ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனானவன் நாராயணன் என்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகின்றது.

அவன் யுகாந்தரங்களில் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பித்தபடியை மேல் விவரித்தவண்ணம் காட்டியருளி, இந்த

(1) இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் । விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேऽப்ரவீத் ॥ ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: । ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ॥ ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதந: । பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேதது3த்தமம் ॥

(2) வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே ।

(3) க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் । கோ ஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரதக்ருத் பவேத் ॥

(4) தஸ்யர்ஷே: கீர்த்தநாதேவ பீஷ்ம: ப்ராஞ்ஜலிரப்ரவீத்.



(1) ஸ்வயமாகத விஜ்ஞாநா நிவ்ருத்திம் தர்மமாஸ்திதா:.

(2) தமீஶம் ஸர்வபூதாநாம் ஆசார்யம் பிதரம் குரும்.

(3) குரோரபி ச லோகாநாம் குருர் நாராயணோ குரு:.

(4) த்வமேவ பந்துஶ்ச குருஸ்த்வமேவ.

(5) குருர்குருணாமஸி ஜகதாம்.

யுகத்தில் அவனே, நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்குப் பரமாசார்யனாகவும் உபகாரகனாகவும் இருந்தபடியை யோசிக்கின்றார். "முன்னமே உண்டாயிருந்த அந்தந்த விக்ரஹ விசேஷங்களை, அச்யுதன், கலியுகத்தில் அநுப்ரவேசம்செய்து தன்னிஷ்டத்தை நடத்துகின்றான்." (1) என்கிறபடியே ஆழ்வார்களை அநுப்ரவேசித்து லோகோபகாரம் செய்தருளினான். தத்வத்ரயாதிகாரத்தில் ஈச்வரன் சில ஜீவர்களை விக்ரஹ விசேஷத்தாலும் சக்திவிசேஷத்தாலும் அதிஷ்டித்து, அதிசயித கார்யங்களை நடத்துகிறதும் விபவாவதாரங்களின் பேதம் என்றருளிச் செய்யப்பட்டிருக்கின்றது. ஆதலால், பகவானே பராங்குச பரகாலாதி ரூபங்களாக அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணியருளி, மேகங்கள் ஸமுத்ர ஜலத்தில் ஸாரமான பாகங்களை ஆகர்ஷித்து, அவற்றை ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக வர்ஷிப்பதுபோல், வேதார்த்தங்களில் மநுஷ்யர் உஜ்ஜீவிக்க வேண்டிய ஸாரதமமான அம்சங்களை, யாவர்க்கும் அதிகரிக்கலான தமிழ் மொழியில் ஸங்க்ரஹித்துக் காட்டினான். இப்படி ஆழ்வார்களும் ஈச்வரனுடைய விபவாவதார விசேஷங்களென்று கருத்து. ஆழ்வார்கள் கலியுகத்தில் முமுக்ஷுக்களுக்கு மிகவும் உபகாரகராக நிற்கின்றார்கள். ஆதலால், க்ரந்தாரம்பத்தில் 'பொய்கைமுனி பூதத்தார்' என்று, இவர்களை அவ்வவர் நாமங்களினால் சொல்லி, அவர்கள் பண்ணின உபகாரம் வெளிப்படுத்தப்படுகிறது. அது எங்ஙனே யென்னில்: "பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், குளிர்ந்த தாம்ரபர்ணீ நதியின் கரையில் அவதரித்த சடகோபன், விஷ்ணுசித்தன், (ஆண்டாள்,) ஸ்ரீ வைஷ்ணவரிடம் தோஷமொன்றும் காண இசையாத குலசேகரன், தேசிகனிடம்போல் ஸ்ரீரங்கநாதன் விசேஷமாக க்ருபை பண்ணின பாணர்க்குள் ச்ரேஷ்டர், தொண்டரடிப்பொடியாழ்வார், அதிக்ஷேபம் செய்த ஆஸுரத்தன்மையுடையவரான சிலர்க்குச் சித்ரகூடத்தில் ஜ்யோதிஸ் சப்தவாச்யனை ஸர்வேச்வரனாகத் தோன்றியருளிய திருமழிசைப்பிரான், வாளும் வேலு மேந்தி, ஸர்வார்த்தாபஹாரம் பண்ணிப் பிறகு நாராயணனை ஆசார்யனாக

(1) [illegible]



வடைந்து, அவனிடம் ஸர்வ விசேஷார்த்தங்களையும் க்ரஹித்து, தமது க்ரந்தங்கள் மூலமாக லோகத்திற்கெல்லாம் வேதார்த்தங்களை ப்ரகாசிக்கும்படிசெய்த திருமங்கை மன்னன், ஆக இவர்கள் பகவானுடைய அநுபவத்தில் மூழ்கினவராய், ஆநந்த நிர்ப்பரர்களாய்ப் பாடிய ருஜுபாவங்களுடன்கூடிய ப்ரபந்தங்களை நாம் அவற்றின் தாத்பர்யார்த்தங்கள் நெஞ்சில் படும்படியாகப் படித்து, ஸ்வதஃ ச்ரமத்தா லறியக்கூடிய விசேஷார்த்த கர்ப்பமான உபநிஷத் ப்ரதேசங்களின் அர்த்தங்களை யெல்லாம் நிஷ்கர்ஷிக்கின்றோம்." (1)

## (2) அஸ்மதாசார்ய பரம்பரை.

மேல் விவரித்த ப்ரகார மெல்லாம், முதலில் நான்முகற்கு உபதேசம் செய்தது தொடங்கி, ஆழ்வார்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் பர்யந்தம், ஸாக்ஷாத்தாகவும், மஹர்ஷிகளை அநுப்ரவேசித்தும், அங்யர்களை அத்யாத்ம வித்யாப்ரசாரத்தில் நியமித்தும், ஜ்ஞாநாதிகர்களைக் கொண்டு அந்த வித்யையை ஸம்வாத விஷயமாக்கியும், ஆழ்வார்களை ஸ்வாம்சபூதர்களாய் அவதரிப்பித்து ஸாரார்த்தங்களை அவர்களைக்கொண்டு ப்ரகாசிப்பித்தும், தான் ப்ரவர்த்திப்பித்த ஸந்மார்க்கத்துக்கு, வெளியாகவும் மறைந்தும் நின்ற சத்ருக்களாகிய பாஷண்டிகளால் தீங்கு விளையாதிருக்கும்படி, சரண்யன் மறுபடியும் ஸங்கல்பித்தான். ஏனென்றால், கலியுகத்தில் அத்தீங்கு விளைந்ததே. ஆதலால், "ஸாக்ஷாத்தாக நாராயணனே சில மநுஷ்ய சரீரங்களை ஸ்ருஷ்டித்து, அவற்றைக் கொண்டு அத்யாத்ம சாஸ்த்ரங்களை க்ரந்தங்களாகப் பண்ணுவித்து, ஸம்ஸாரக் கடலில் மூழ்கிப்போன லோக ஜநங்களைத் தன் பேரருளால் அந்த சாஸ்த்ர ரூபமான கையால் உத்தாரணம் செய்கின்றான்" (2) என்றும், "பீதாம்பரதரனை பரமோபகாரகன்

(1) பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன், துய்யகுலசேகரனம் பாணநாதன் தொண்டரடிப் பொடிமழிசை வந்தசோதி, வையமெலா மறைவிளங்க வாள்வேலேந்து மங்கையர்கோ 'னென்றிவர்கள் மகிழ்ந்துபாடும், செய்யதமிழ் மாலைகள்நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே.

(2) [illegible]

அத்யாத்மவித்யாப்ரதாநம்செய்யும் ஆசார்யனுய் அவதரித்து,"(1) என்றும் சொல்லுகிறபடியே, " அகஸ்த்யரால் பஹுமாநிக்கப் பட்ட த்ராவிட தேசத்தில், அநேக ஆசார்ய ரூபங்களாக அவதாரம் செய்தருளினுன். இவர்களாவார்: ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார், பாஷ்யகாரர். இவர்களிலும் நமக்கு இந்த விஷயத்தில் மிகவும் கொண்டாடத்தக்கவர் நம் வேதாந்ததேசிகன். அவர் குமாரர் சொன்னபடி, தேசிகன் ராமாநுஜன் அவதாரம். ஸ்ரீநிவாஸன் தேசிகனுய் அவதரித்தார். அவர் நமக்குக் குரு, தெய்வம், ப்ராப்யன், ப்ராபகன். ஆதலால், பவக்கடலில் மூழ்கிப்போய்த் தவிப்பவரைக் கரை யேற்ற ப்ரவர்த்தித்தவர்கள் நம்முடைய ஆசார்ய பரம்பராந்தர்கதர்களான நாதயாமுந ராமாநுஜ வேங்கடநாதார்யாதிகள் என்பது ஸ்புடமாக ஏற்படுகின்றது. ஸர்வேச்வரன் ஸர்வத்ர அந்தர்யாமியாக இருந்தவனுகிலும், ஆசார்யர்களிடம் விசேஷமாக ஸாந்நித்யம் செய்து லோகோபகாரம் செய்கின்றுன். உபோத்காதாதிகாரத்தில் இவ்வாசார்யர்களைக் குறித்துப் 'பரம காருணிகனுன பரமசேஷியாலே ப்ரேரிதர்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகிலும், மேல்குறித்த ச்லோகத்தில் ஸாக்ஷாச் என்று சொல்லியிருப்பதால், ஆசார்யர்களுடைய சரீரங்களில் சரண்யன், அவருடைய ஜீவாத்மாக்களால் மறைக்கப்படாமலிருக்கும்படியாக ப்ரவேசித்து, அவர் சரீரங்களைத் தன்னுடையதாக்கிகின்று, ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் செய்கின்றுன் என்று ஏற்படுகின்றது. க்ரந்தத்தின் முடிவில், ஆசார்யர்களின் ஜிஹ்வாக்ரங்களை ஸிம்ஹாஸநமாக ஸ்வீகரித்து அவ்விடம் ஹயக்ரீவன் எழுந்தருளி ப்ரகாசிக்கின்றுனென்றும், என்றும், அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைக தாநனுன ஸ்ரீமந் நாராயணன், ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிப்போனவரைக் கரையேற்ற ஸங்கல்பித்து, ஒவ்வோர் அவஸரத்தில் அவர்களுடைய சரீரங்களைத் தானே ஆச்ரயிக்கின்றுனென்றும், ச்லோகத்தாலும் (2) தமது ஆசார்யன்

(1) பீதகவாடைப்பிராஞர் பரமகுருவாகி வந்து.

(2) ஸத்யாஸீந தத்ரோமவத்ர விமலஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸநா [illegible]
வாபீஶ்வரதேவதா ஸம்ஸயிதா ஸந்த்ரம் ஸந்த்ர ஸிம்ஹ । யஸ்யா
ஸௌஹ்ருத கதோத்திதைர்ஜீவநம் ஸம்ப்ரோக்ஷ்யதே ஸ்புரிதா [illegible] நாம் ஸமி
நாம் ஹவாணம்வஸம் [illegible] நாராயணம் ॥



ஹயக்ரீவனே யென்பதை ஒரு பாட்டினுலும் (1) திருவுள்ளம் பற்றி யிருப்பதை இவ்விடம் ஸ்மரிக்கவேண்டும். இப்படி மஹாத்மாக்களாயும், பகவானுடைய அம்சபூதராயும் இருக்கும் நம்முடைய ஆசார்யர்களுக்கு, இக்கலியுகத்திலும், த்ராவிடதேசம் அவதார யோக்யமானபடியை யோசித்து "நாராயண பராயணுளான மஹாத்மாக்கள் கலியுகத்தில் ஒவ்வோரிடங்களிலும் அவதாரம் செய்வார்கள். தாம்ரபர்ணீ, க்ருதமாலா, பயஸ்விநீ, காவேரீ, ப்ரதீசீ முதலான நதிகள் ப்ரவஹிக்கும் த்ரமிடதேசத்தில் விசேஷமாக அவதரிக்கப்போகின்றனர்." (2) என்று மஹர்ஷியான வ்யாஸர் புராணமூலமாக அருளிச்செய்தான். நம்மாழ்வார் நம் ஸம்ப்ரதாயத்துக்குக் கூடஸ்தராலும், பாஷண்டிகள் நிரஸநார்த்தம் இதம்பரமாய் அவதீர்ணர்களான ஆசார்யர்களில் நாதமுனிகள் முன்பட்டவர். 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்' என்னும்படி யிருந்தது. ஆகையால் ஆசார்ய வம்சத்தை அவரைத் தொடங்கி அருளிச்செய்யும்படியாயிற்று. அவர்களுடைய புத்ரசிஷ்ய க்ரந்தாதிகளுடைய கீர்த்தநம் குரு ப்ரசம்ஸநத்துக்காக வாகும். புத்ராதிகளுடைய உத்தேச்யதா ஸூசநார்த்தமாகவுமாம். ஸ்ரீமந் நாதமுனிகளை முதலில் சொல்லி, அவர்க்கு நம்மாழ்வா ராசார்யராறென்று ஸாதித்தருளினுர். மதுரகவி வம்சயரான ஸ்ரீ பராங்குசதாஸர் நாதமுனிகளுக்கு கண்ணிநுண் சிறுத்தாம்பு உபதேசித்தார். ஆதலால் மதுரகவி ஸம்ப்ரதாயம் நாதமுனிகளுக்குண்டு. திருவாய்மொழியால் அவர்க்குத் தத்வஜ்ஞாநம் உத்பந்நமாயிற்று. அவருடைய யோகதசையில் நம்மாழ்வார் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவராய், அவர்க்கு ஸர்வாபேக்ஷிதங்களையும் உபதேசித்தருளினுர். இப்படி நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யரானபடி. நாதமுனிகள் ந்யாயதத்வம் என்கிற சாஸ்த்ரமும் யோகரஹஸ்யமும் அருளிச்செய்தார். நாதமுனிகள் பிள்ளை ஈச்வரபட்டாழ்வான். அவர்

(1) வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம் உள்ளத்தெழுதிய தோலையிலிட்டனம்.

(2) கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: । க்வசித் க்வசிந் மஹாராஜ த்ரமிடேஷு ச பூரிச: ॥ தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ । காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ச மஹாநதீ ।

பிள்ளை ஆளவந்தார். ஆளவந்தார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள்: ஆகமப்ராமாண்யம், புருஷநிர்ணயம், ஆத்மஸித்தி, ஈஶ்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி, கீதார்த்தஸங்க்ரஹம், ஸ்தோத்ரம், சதுஶ்லோகி, ஆக எட்டு. நாதமுனிகள் ஶிஷ்யர் உய்யக்கொண்டார் எனப்பட்ட புண்டரீகாக்ஷர். புண்டரீகாக்ஷர் ஶிஷ்யர் மணக்கால்நம்பி எனப்பட்ட ஸ்ரீராமமிஶ்ரர். இவர் ஆளவந்தாரெனும் யாமுனாசார்யர்க்கு ஆசார்யரானார். ஆளவந்தார் ஶிஷ்யர்கள் பதினைவர். பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருமாலையாண்டான், திருமலைநம்பி, ஆளவந்தாராழ்வார், முதலானோர் அவர்க்குள் அடங்கியவர்கள். பெரியநம்பியெனும் மஹாபூர்ணரிடம் இராமாநுஜன் ஆஶ்ரயித்தார். திருக்கச்சிநம்பியும் அவரிடம் ஆஶ்ரயித்தார். இராமாநுஜன் திருக்கோட்டியூர் நம்பியிடம் ரஹஸ்யார்த்தங்களை க்ரஹித்தார். திருமாலையாண்டானிடம் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார். திருமலை நம்பியிடம் ஸ்ரீமத்ராமாயணம் கேட்டார். ஆளவந்தா ராழ்வாரிடம் திருவாய்மொழி யோதினார்; ஸ்தோத்ராதிகள் அருளிச்செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். இராமாநுஜன் செய்தருளின ப்ரபந்தங்கள் ஒன்பது. அவையாவன: ஸ்ரீபாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சிறியகத்யம், பெரியகத்யம், ஸ்ரீ வைகுண்டகத்யம், நித்யம். இராமாநுஜன் திருவடிகளில் ஆஶ்ரயித்த ப்ரதானர்களை, அவ்வவர் ஸம்ப்ரதாய ப்ரகாரங்களில் அறிந்துகொள்ளல் வேண்டும் என்று அருளிச்செய்து முடிக்கின்றார்.

தேசிகன் திருவடிகளில் விஶ்வாஸமுடையவர்கள், ப்ராயேண, இராமாநுஜன் முதற்கொண்டு ஷஷ்டபராங்குஶ யதீந்த்ர மஹாதேசிகன் பர்யந்தம், ஆசார்யபரம்பரை ஓரான்வழியாய் நிற்கின்றதை அறியலாம். ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்கட்கு, திருக்குருகைப்பிரான் பிள்ளான், விஷ்ணுசித்தர், நடாதூர் அம்மாள், இவர்கள் பரம்பரையில் ஆத்ரேய ராமாநுஜாசார்யருக்குப் பாஷ்யகாரர் பூர்வாசார்யரானார். ரஹஸ்யார்த்தங்களுக்குக் கிடாம்பி ஆச்சான், ராமாநுஜாசார்யர், ஸ்ரீ ரங்கராஜர், இவர்கள் மூலமாக அவர்க்கு இராமாநுஜன் பூர்வாசார்யராயினார். ஆத்ரேய ராமாநுஜாசார்யர், வேதாந்ததேசிகன், ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி, கடிகாசதம் அம்மாள், ஆதிவண்சடகோபஸ்வாமி, வரதவிஷ்ணவாசார்யர், வரதாசார்யர், நரஸிம்மாசார்யர், வரதாசார்யர், ஷஷ்டபராங்குஶ



ஸ்வாமி, என்றிவ்விதமாகத் தத்காலம் ஆசார்யபரம்பரை ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

## (3) நம் ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரமாணங்கள்.

நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு முக்ய ப்ரமாணமாகின்றது நாராயணன் ப்ரஹ்மாவுக்கு முதலில் தந்தவேதங்கள். இவற்றுள் உபநிஷத்துகள் அந்தர்க்கதங்கள். இவை நித்யமாயினும், அநாத்யநந்தமாயினும், இவ்வுலகம் வரையில், அப்போதைக் கப்போது திரோதாநமடைந்துபோய், மந்த்ரத்ரஷ்டாக்கள் எனப்பட்ட மஹர்ஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டு லோகத்தார்க்கு உதவுகின்றன. ப்ரஹ்மா மூலமாக அத்யாத்ம வித்யை லோகத்தில் ப்ரவர்த்தித்தது என்பது உபநிஷத்துக்களால் வெளியாகின்றது. இவர் புத்ரர்களான ஸநகஸநத்குமாராதிகள் ஹிதப்ரவர்த்தநம் செய்தனர். நாரத பராசரசுகஶௌநகாதிகள் அத்யாத்ம ஸம்ப்ரதாயத்தை நடத்தி வந்தனர். வால்மீகி வ்யாஸாதிகள் வேதோப ப்ரஹ்மண ரூபமான பல க்ரந்தங்கள் செய்தருளினார்கள். பகவான் ஸ்ரீபகவத் ஶாஸ்த்ரத்தைத் தானே ப்ரவர்த்திப்பித்தான்.

ஆதலால் வேதம், வேதாந்தம், கீதை, இதிஹாஸங்கள், ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஶாரீரகஸூத்ரம், மந்வாதி ஸ்ம்ருதிகள், ஸ்ரீ பாஞ்சராத்ரம் முதலானவை நமக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களாயும், அத்யாத்ம வித்யையை நமக்குக் காட்டுகின்றனவும் ஆகின்றன. இவை யெல்லாம் யுகாந்தரவிஷயம்.

இக்கலியுகத்தில் ஸகல ஜநங்களுக்கும் உபயோகப்படும்படியாக வேதார்த்தங்களை ஆழ்வார்கள் மூலமாக ஈஶ்வரன் ப்ரகாசிப்பித்தான். ஆழ்வார்கள் ப்ரபந்தங்கள், வேதபாகங்களில் அபிப்ராய பேதங்கள் உண்டாகத்தக்க ப்ரதேசங்களில், அர்த்தங்களை நிஷ்கர்ஷித்துக் கொடுக்கின்றன. இதனால் தேசிகன் அருளிச்செய்கின்ற அர்த்தங்களெல்லாம் உபய வேதாந்த ஸித்தமென்று ஸூசிதம்.

இவற்றை யெல்லாம் ப்ரமாணமாகக் கொண்டவர்கள், ஸ்ரீமந் நாதமுனிகள் முதலாக ஏற்பட்ட நம்முடைய ஆசார்யர்கள். இவர்கள் பஹு-க்ரந்தங்களை எழுதி, ஸம்ப்ரதாய சத்ருக்களையும், பாஷண்டிகளையும் நிரஸநம் செய்து ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தருளினார்

கள். இவர்கள் மூலமாக நமக்கு ஸம்ப்ரதாயம் கிடைத்தபடியால், இவர்கள் பரம்பரையை அநுஸந்திக்கவேண்டிய ஆவஶ்யகதையைத் திருவுள்ளம்பற்றி, அதனிமித்தமாக அதிகாரத்தின் முதலில் ஒரு ஶ்லோகத்தை அருளிச்செய்தார். அதாவது, “குருக்களின் பொருட்டும், அவர்கள் குருக்களின்பொருட்டும் நமஸ்காரோக்திகளை அப்யஸிக்கின்றோம். அவர்க்குள் ஆதிபுருஷரும் ஜகதீஶ்வரர்களுமான தம்பதிகளை ஶரணமடைகின்றோம்.” (1) என்று ஸாதிக்கின்றார்.

இதனால் க்ரந்தகாலக்ஷேபாரம்ப காலங்களிலும், அதனுடைய உபதேசகாலங்களிலும் ஆசார்ய பரம்பராநுஸந்தாநம் கர்த்தவ்யம் என்றும்; அந்த அநுஸந்தாநத்துக்கும், வித்யாக்ரஹணத்துக்கும் ப்ரயோஜநம் பகவத் ஶரணாகதி என்றும் வெளியாகின்றது.

(இன்னும் வரும்)

பத்ராதிபர்.

(1) 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌮𑍋𑌵𑌾𑌕𑌮𑌧𑍀𑌮𑌹𑍇 । 𑌵𑍃𑌣𑍀𑌮𑌹𑍇 𑌚 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍌 𑌦𑌮𑍍𑌪𑌤𑍀 𑌜𑌗𑌤𑌾𑌂𑌪𑌤𑍀 ॥

ஸ்ரீ:

# ஜநகநந்தினீ.

கோபுர த்வாரத்தில் பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவரை நெருங்கி, “ஸ்வாமிந்! அந்த யதி யார்? எங்கே எழுந்தருளியிருக்கின்றார்?” என்றனன்.

“அவர் ரங்கநாத ஸ்வாமி; உப்பிலியப்பன் கோவிலில் இருக்கின்றார்” என்று அந்த வைஷ்ணவர் சொன்னார்.

“அந்த ஸ்வாமியுடன் செல்கின்றவர்கள் யாவர்?” என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான்.

“அவர்கள் யாரோ? எங்கானும்! உமக்கு வேலை ஒன்றுமில்லையா?” என்று அந்த ஸ்ரீ வைஷ்ணவர் சொன்னார்.

ஸ்ரீநிவாஸனுக்கு முகம் சுஷ்கித்தது. ஆனால் கோபங்கொண்டானில்லை. நிலா வெளிச்சத்தில், தன் கலாசாலைக்குப் போகப் புறப்பட்டான். போகும் வழியில் தன் தேசஸ்தரான ஆதிவராஹாசார்யரை ஸந்தித்தான். அவரும் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தவுடன், ஏது ஸ்ரீநிவாஸா! இந்தப் பக்கம் வந்துவிட்டாய். ஊரில் அண்ணா அம்மா ஸௌக்யமாக இருக்கின்றார்களா?” என்று கேட்டனர்.

“ஆதிவராஹாசார்யா! பெருமாள் கோவிலில் எல்லாரும் க்ஷேமந்தான். நேற்றுகூட அண்ணா கடுதாசி எழுதியிருக்கிறார். ஏதோ இப்படி வந்தேன். பெருமாளை ஸேவிக்கலாமென்று தோன்றிற்று. கோவிலுக்குப் போனேன். அங்கே யாரோ ஒரு ஸ்வாமி எழுந்தருளினார். அவருடன் பகு ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்தார்கள்” என்று ஸ்ரீநிவாஸன் சொல்ல,

“அவர் ரங்கநாத ஸ்வாமியாய்த் தானிருக்க வேண்டும்” என்றனர் ஆதிவராஹாசார்யர்.

“அப்படித்தான் அங்கொரு ஸ்ரீ வைஷ்ணவர் சொன்னார். இன்னும் அந்த ஸ்வாமி உப்பிலியப்பன் ஸந்நிதியில் எழுந்தருளியிருப்பதாகவும் சொன்னார்” என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

"ஆம். ஆம். அந்த ஸ்வாமிதான்" என்றார் ஆதிவராஹம்.

"என் மாமா கேசவாசார்யர் மாப்பிள்ளை அந்த ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்கிறாரோ?" என்று கேட்டான் ஸ்ரீநிவாஸன்.

"ஆர்? நாவல்பாக்கம் ராமாநுஜாசார்யர் குமாரரா? அவர் அங்கேதான் காலக்ஷேபம் செய்கிறார். எனக்கு ஸந்நிதியில் கொஞ்சம் கார்யமிருக்கிறது. நீ ஏனப்பா அடிக்கடி இந்தப் பக்கம் வருகிறதில்லை? உன்னோடு வார்த்தை சொல்லவேண்டும். வருகிறையா? எனக்கு அவஸரமாய்ப் போகவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே ஆதிவராஹாசார்யர் போய்விட்டார். ஸ்ரீநிவாஸனும் தன்னிடம் போய்ச் சேர்ந்தனன்.

ஜநகநந்தினியின் புருஷனைப்பார்க்கவேண்டுமெனும் இச்சை ஸ்ரீநிவாஸன் உள்ளத்தில் குடிகொண்டது. அதெப்படிக் கைகூடுமென்று யோசித்தனன். உப்பிலியப்பன் கோவிலுக்குப் போனால் ரங்கநாத யதியையும், அவர் பரிவாரத்தையும் பார்க்கலாம். பக்கத்தில் யாரையாவது கேட்டால் பார்க்க விரும்பியவரைக் காட்டுவார்கள். ஆனால் அப்படிப் போய்ப் பார்த்து வர ஸ்ரீநிவாஸன் இசைந்தானில்லை. முதலில், அவன் அநாமதேயனைப் போய் வர வேண்டும். அவனுடைய அவைதிகத் தோற்றம், வைதிகர் நடுவே பரிஹஸிக்கப்படலாம். இன்னும் ஜநகநந்தினி புருஷன் அவனையும், அவன் வந்தவாறையும், அவன் அபிப்ராயத்தையும் அறிந்தாராகில், அப்பரிஹாஸம் வ்ருத்தியாவதற்கு இடம் தரும். ஆதலால் உப்பிலியப்பன் கோவிலுக்கு இதம்பரமாகப் போகும் எண்ணத்தை விட்டொழிந்தான். இப்படி யோசனை செய்துகொண்டு, சிலநாள் கழித்த பிறகு, ஒரு சனிக்கிழமை மத்யாஹ்ந வேளையில் ஆதிவராஹாசார்யர் க்ரஹத்தை நோக்கி நடந்தான். அந்த வீட்டை அவன் நெருங்கவும், வீதித் திண்ணைமீது உட்கார்ந்து வெற்றிலைபாக்கு மென்றுகொண்டிருந்த ஆதிவராஹாசார்யர் அவனைப் பார்த்தவுடன், "ஸ்ரீநிவாஸா! வா. உன்னைப் பார்த்து வார்த்தை சொல்லவேண்டுமென்று அன்றைக்குச் சொன்னேனே. தெய்வாதீனமாய் வந்துவிட்டையே. ஸந்தோஷம். உட்கார்." என்றனர்.

ஸ்ரீநிவாஸனும் வீதித்திண்ணைமீது உட்கார்ந்தனன். "ஏனப்பா! நீ இங்கு வந்திருக்கிறதாகப் பகு நாளாய்க் கேள்விப்படுகிறேன்.



இந்தப் பக்கமே வருகிறதில்லை. ஸ்வஜநங்களைப் பார்ப்பதில் உனக்கு வெறுப்பா?" என்று சொன்னார் ஆதிவராஹாசார்யர்.

"அப்படிக்கு ஒன்றுமில்லை. கலாசாலையின் அருகில் எங்களுக்கு வாஸஸ்தாநமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. விடுமுறை நாள்கள் தவிர, மற்றை நாள்களில், அந்தத் தோட்டத்தைவிட்டுவருவது ஸாத்யமாயினும், புஸ்தக நிரீக்ஷணத்திற்கு அந்நாள்கள் தான் அவகாசம் தருகின்றன. ஆதலால் ப்ராயேண எங்களுக்கு வெளியில் ஸஞ்சரிக்க இடமில்லை" என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

"சென்னைப்பட்டணத்தில் உனக்குப் படிக்கச் சரிப்படாதா? திருக்குடந்தைக்கு ஏன் வந்தாய்?" என்றனர் ஆதிவராஹாசார்யர்.

"என்னமோ வந்துவிட்டேன். படிப்பில் பின்னடைந்தேன். கூடவாசித்தவர்கள் மேல் வகுப்புகளுக்கு ஏறவும், அவர் முன்னிலையில் கீழே இருக்க வெட்கப்பட்டு இவ்விடம் வந்துவிட்டேன்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"உனக்குக் கலாசாலை வஸதியில் ஆஹாராதிகள் ஸௌக்யமாயிருக்கின்றனவா?" என்றார் ஆதிவராஹாசார்யர்.

"நாம் விரும்பியபடி ஸௌக்யம் கிடைக்குமோ? கிடைத்ததைத்தான் பெரிதாயெண்ணவேண்டும்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸா! கொஞ்சம் பலஹாரம் பண்ணுகிறையா? கோவிலிலிருந்து பெருமாள் ப்ரஸாதம் வந்திருக்கிறது. எழுந்திரு, உள்ளே போவோம்" என்றுகொண்டு ஆதிவராஹாசார்யர் எழுந்திருந்தார். ஒன்றும் வேண்டாம் என்றும், பசியில்லையென்றும், ஸ்ரீநிவாஸன் சொல்லியும் கேட்காமல், அவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோய்க் கை கால் சுத்திசெய்ய ஜலம் கொடுத்து, ஒரு மணை போட்டு, அதன்மீது ஸ்ரீநிவாஸனை உட்காரவைத்தார். ஸ்ரீநிவாஸனும் அவர்கொடுத்த பக்வத் ப்ரஸாதம் ஸ்வாதுதம்மாக இருக்க த்ருப்தியுடன் புசித்தனன்.

"ஸ்ரீநிவாஸா! நீ அடிக்கடி இந்தப் பக்கம் வா. இதோ பெருமாள் சித்ரோத்ஸவம் கண்டருளப்போகின்றார். நீ ஏன் ப்ரதிதிநமும் வந்து பெருமாளை இரண்டு வேளையும் ஸேவிக்கக்கூடாது? காவிரிக்கு அக்கரையினின்று வருவது கஷ்டமாயிருந்தால், நம்மு

டைய க்ரஹத்திலேயே உத்ஸவம் பத்து நாளும் இருந்துவிட லாமே. கலாசாலை உனக்கு மூடப்பட்டு இருக்கின்றதன்றோ?" என்று சொன்னார் ஆதிவராஹாசார்யர்.

"கலாசாலை மூடித்தான் கிடக்கின்றது. ஆனால் பரீக்ஷை ஸமீபித்துவிட்டது. இது க்ரந்தங்களைச் சிந்திக்கவேண்டிய ஸமயம். உத்ஸவவிபவத்தை அநுபவித்துக்கொண்டிருந்தேனாகில், கும்பகோணவாஸம் எனக்கு வ்யர்த்தமாய்ப் போய்விடும்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"ஆனால் நீ ப்ரதிதினமும் வரவேண்டாம். நாலாம் திருநாள் ராத்ரி கருடோத்ஸவம். அது மிகவும் விபவமாய் நடக்கும். அதற்கும், பெருமாள் ரதாரோஹணத்துக்கு எழுந்தருளும்போதும், ஒரு ரதோத்ஸவத்துக்கும் வந்தாயானால் போதும்" என்றார் ஆதிவராஹாசார்யர்.

"ஸௌகர்யப்பட்டால் வருகின்றேன். அந்த உத்ஸவங்கட்கு ரங்கநாதஸ்வாமி எழுந்தருளுவரோ?" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"அவரைப்பற்றி உனக்கென்ன? ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பிக்கப் போகின்றையோ? ஓஹோ! உன் அம்மான் மாப்பிள்ளையைப் பார்க்கவேண்டுமோ? ஆம். அன்றைக்கே நீ கேட்டாயன்றோ? அந்த ஸ்வாமி ஸந்நிதியில் அவர் காலக்ஷேபம் செய்கின்றாரோ என்று கேட்டாய்." என்றார் ஆதிவராஹாசார்யர்.

"அவரைப் பார்க்கக் கொஞ்சம் இச்சை யுண்டு" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"ஆனால், தேருக்குப் பெருமாள் மத்யாஹ்நம் எழுந்தருளுவர். அப்போது ஸ்வாமியும் வருவர். நாவல்பாக்கம் பிள்ளையும் தென்படுவர். நீ அவஶ்யம் வரவேண்டும்" என்று சொன்னார் ஆதிவராஹாசார்யர்.

இவ்விதமாகச் சிறிது காலம் ஸம்பாஷித்த பிறகு, ஸ்ரீநிவாஸன் எழுந்திருந்து ஸ்வஸ்தாநத்துக்குச் சென்றனன். திருத்தேர் உத்ஸவம் முதல்நாள் வரவேண்டுமெனும் நிஶ்சயத்துடன் சென்றனன். கூடுமானால் இதர உத்ஸவங்களையும் காண விரும்பினான்.

உத்ஸவ மத்யே ஒருநாள் காலையில் ஸ்ரீநிவாஸன் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு, ஆதிவராஹாசார்யர் க்ரஹத்துக்கு வந்தான்.



அப்போது அவர் வீட்டில் இல்லை. வீட்டில் பெண்டுகள் அவர் ஸந்நிதிக்குச் சென்றதாகச் சொன்னார்கள். ஸ்ரீநிவாஸனும் ஸந்நிதிக்குப் போனான். கோபுர த்வாரத்தை நெருங்கும் தருணத்தில், பகவான் திருவீதி யலங்கரிக்க எழுந்தருளிவிட்டார். கொஞ்சம் தூரத்தில் நின்றே அவனுடைய ஸுந்தர விக்ரஹத்தை ஸ்ரீநிவாஸன் தர்ஶித்தான். பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹங்களில் முன் விஶ்வாஸமற்று வளர்ந்தவனுக்கு, ஜநகநந்தினியின் யோசனைகளில் கௌரவமுண்டாகிப் பகவத் விக்ரஹத்தை நின்று ஸேவிக்க ஆபிமுக்யமும் உண்டாயது. அந்த அவஸரத்தில் ஶார்ங்கதரன் தர்ஶநம் ஸ்ரீநிவாஸனுக்கு ப்ராப்தமானது அவன் ப்ராசீந ஸுக்ருத பலமாய் ஸம்பவித்த ஈஶ்வரனுடைய ஸௌஹார்த்தமன்றோ? ஆபிமுக்யம் இல்லாமல், குடந்தையிலும் பலர்க்கு ஆராவமுதன் அழியாவழகும் அநாகர்ஷகமாய்ப் போகின்றது. ஆனால் ஸ்ரீநிவாஸன் விஷயத்தில், ஸத்ஸங்கம் ஸகல ஶ்ரேயஸ்ஸையும் தரவல்லதாயிற்று. பகவானைத் தர்ஶித்துக்கொண்டு ஓர் புறமாய் அவன் நிற்கவும், பகவான் எழுந்தருளிவிட்டார். பின்னால் ஸ்ரீ வைஷ்ணவர்கள் வேதபாராயணம் செய்துகொண்டு வந்தனர். அவர்கள் ஸமீபத்தில் வந்த ஆதிவராஹாசார்யரும் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தவுடன், அவனிடம் சென்று அவன் கையைப் பற்றினார். "ஸ்ரீநிவாஸா! வந்தையா? மிகவும் ஸந்தோஷம். பெருமாளை ஸேவித்தையா? இந்த ஸேவை எங்கு கிடைக்கும்? வரதனை ஸேவித்தவர்கள், பிறகு இந்தப் பெருமாளை ஸேவித்துத் தான் த்ருப்தராவார்" என்று சொன்னார்.

பின்பு இருவரும் வேத கோஷ்டியின் முன்னும் பின்னுமாக அநுயாத்ரையாய்ச் செல்லுகையில், ஸ்ரீநிவாஸன் நாற்புறமும் சுற்றிப் பார்த்தனன். "என்ன பார்க்கின்றாய்? ரங்கநாத ஸ்வாமியையும் அவர் அந்தேவாஸிகளையும் தேடுகின்றையோ? ஸ்வாமி எழுந்தருளக்காணோம். ஒரு வேளை எழுந்தருளலாம். இல்லாவிட்டால், நாளைய தினம் மத்யாஹ்நம் திருத்தேரின் மீது ஆராவமுதன் எழுந்தருள லக்நம் வைத்திருக்கின்றது; அப்போது ஸ்வாமியை நிஜமாய்த் தர்ஶிக்கலாம்" என்று ஆதிவராஹாசார்யர் சொன்னார்.

இதற்குள், பகவான் கீழ்வீதியைக் கடந்து தென்னண்டை வீதியில் ஸஞ்சரித்தனர். "ஆதிவராஹாசார்யா! என்ன இந்த

ஸ்வாமிகள் வேதாக்ஷரங்களை வெளிவிடாமல் உச்சாரணம் செய்கின்றனரே. பெருமாள் கோவிலில் வேத பாராயணம் கம்பீரமாய் நடக்குமே" என்று ஸ்ரீநிவாஸன் சொன்னான்.

"இப்படித்தான் இந்த ஊர் வழக்கம். நம்முடைய தேசத்தாரைப்போல் கஷ்டப்பட்டுப் பாராயணம் செய்யமாட்டார்கள். இன்னும் இந்த வேடிக்கையைப் பார்த்தையா? இதோ இந்த வீதிக்குள் பெருமாள் திரும்புங்கால், அய்யங்கார் வீதி ஸ்வாமிகள் வந்து பெருமாளை ஸேவித்துவிட்டு யாவரும் அப்படியே திரும்பிப் போய்விட்டார்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்முடைய தேசத்தில் போல் பெருமாளுடன் அநுயாத்ரையாகத் தொடர்வது இங்கு கிடையாது. இன்னும் ஸ்ரீராமன் ஸந்நிதியினிடம் பார். அய்யங்கார் வீதி மேலண்டை பாகத்தில் வஸிப்பவர் அவ்விடம் பகவானைத் தர்சித்துவிட்டுப் போய்விடுவார்கள். அப்படித்தான் பாட்ராசார் வீதி ஸ்வாமிகளும். பெரிய தெருவிலும் அவ்வவர் அகங்களின் வாசலில் நின்று தான் பகவத்தர்ஶநம் செய்வார்கள். இது இந்த ஊர் வழக்கம்" என்று சொன்னார் ஆதிவராஹாசார்யர்.

"ஆமாம்; பெருமாளுடன் செல்லும் ஸ்ரீவைஷ்ணவர்கள் மிதமாகக் காண்கின்றனர். நான் புறப்பட்டுப் போகின்றேன். நாளை மத்யாஹ்நம் ஸந்நிதிக்கு வருகின்றேன். இன்னும் ஒரு வாரத்துக்குள் பரீக்ஷை ஆரம்பிக்கின்றது. எனக்கு இந்தப் புறம் வருவதற்கு அவகாசம் குறைவு" என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் நடந்தான். திருக்குடந்தை வழக்கப்படி ஆராவமுதன் வீதிகளில் உத்ஸவம் கண்டருளி ஸந்நிதிக்குள் சென்றனர்.

மறுநாள் மத்யாஹ்நம் பகவான் ஸந்நிதியினின்று புறப்பாடாகி ரதாரோஹணத்துக்கு எழுந்தருளுங்கால், ஸேவார்த்திகள் விசேஷமாகக் கூடினார்கள். ஶங்கம், சக்ரம், கதா, ஶார்ங்கம் முதலான திவ்யாயுதங்களும், ஹார, கேயூர, கிரீட, குண்டலாதி திவ்ய பூஷணங்களும், ஸூர்யனுடைய தேஜஸ்ஸைக் குன்றச்செய்யவும், சிரித்த பங்கயத்தைபோன்ற திருமுகத்தின் சீர்மை ஸேவார்த்திகள் த்ருஷ்டி சித்தங்களை அபஹரிக்கவும், சத்ரு ஸம்ஹாரார்த்தமாக முன் மாதலியால் ப்ராத்திக்கப்பட்டு இந்த்ரரதமேறியவண்ணம் ஆழ்வார் மங்களாசாஸந மணிந்த திவ்யரதமேற வெழுந்தருளும் ஶரண்யனைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காண உடன்படுமோ? இந்தத் தர்ஶநம் ஸ்ரீநிவாஸனுக்குக் கிடைத்தது. பகவத் கடா



க்ஷம் அவனுக் குண்டாக வேண்டிய காலம் நெருங்கினபடியால் முன் திவ்யமங்களரூபியாக விளங்கிய எம்பெருமானிடம் அவனுக்கு உண்டாயிருந்த த்வேஷம் விலகி, அவனைத் தர்ஶிக்க ஆபிமுக்யம் ஜநித்தது. பெருமானை நிலைத்து நின்று ஸேவித்துக் கொண்டிருக்கையில், தான் அவ்விடம் வந்த காரணத்தையும் மறந்துவிட்டான். அத்தருணத்தில் ஆதிவராஹாசார்யர் அவனைக் கூப்பிடவே அந்யசிந்தை அவனுள்ளத்தில் புகுந்தது.

"என்ன ஸ்ரீநிவாஸா! பெருமானை மிகுந்த பக்தியுடன் ஸேவிக்கின்றையே. ஶார்ங்கபாணி உன்னை வசப்படுத்தி விட்டனரோ? நான் உன்னைக் கூப்பிடுமட்டும் என்னைப் பார்த்தாயில்லையே!" என்று ஆதிவராஹாசார்யர் சொன்னார்.

"ஆம்! பகவத்ஸேவை மிகவும் ஆகர்ஷகமாயிருக்கிறது. உப்பிலியப்பன் கோவிலிலிருந்து ஸ்வாமி எழுந்தருளி யிருக்கின்றாரோ?" என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான்.

"ஸபரிவாரமாக எழுந்தருளி இருக்கின்றார். பெருமாள் எழுந்தருளும் பர்யந்தம் இவ்விடம் நிற்போம். பின்னால் அந்த ஸ்வாமி ஸேவை ஸாதிப்பர்" என்று ஆதிவராஹாசார்யர் சொன்னார். அவ்வண்ணமே இருவரும் அவ்விடம் நின்றார்கள். பின்னால் யதியும் அவர் சிஷ்யர்களும் வந்தனர். "அதோ பார்த்தையோ! ஸ்வர்ணச்சாயையுடன் மஹா தேஜஸ்வியாய்க் காஞ்சீபுரம் தேகுரன்ஸூ வேஷ்டியைத் தரித்துக்கொண்டு, இருபத்தைந்து இருபத்தாறு வயஸ்ஸுள்ளவரெனத் தெரிகின்றாரே! அவர்தான் உன் மாதுலன் மாப்பிள்ளை. கல்யாணத்தில் நீ அவரைப் பார்க்கவில்லையோ? இதுவரையில் நீ அவரைக் கண்டதில்லையோ!" என்றார் ஆதிவராஹாசார்யர்.

"கல்யாண காலத்தில் நான் இல்லை. இப்போது தான் நான் அவரைப் பார்க்கிறேன்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"வா; உங்களுக்குள் பரிசயம் செய்துவைக்கிறேன்" என்று கொண்டு ஆதிவராஹாசார்யர் ஸ்ரீநிவாஸன் கையைப்பற்றி இழுக்கவும், "வேண்டாம்; எனக்கு லஜ்ஜையாயிருக்கிறது. இப்போது அவருடைய தூரதர்சநம் போதும்" என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீநிவாஸன் தன்னிடத்தில் தானே நின்றான்.

"எனக்கும் அவருடைய பரிசயம் மிதந்தான். அவருக்கு ஶ்ரிதபாஷியென்றும், ஸதா க்ரந்தாவலோகநம் செய்பவரென்றும்

க்யாதி உண்டாயிருக்கின்றது. கூட காலக்ஷேபம் செய்கின்றவர்களுடனும் அவர் ஸ்நேஹ பாவத்தை வ்ருத்தி செய்வதில்லையாம்" என்று சொன்னார் ஆதிவராஹாசார்யர்.

"ஆனால் நாம் அவரை நெருங்குவது உசிதமன்று. என் வேஷத்தை அவர் பார்த்தாராகில் என்னுடன் அவர் ஸம்பாஷிப்பதே துர்லபம்" என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீநிவாஸன் ஆதிவராஹாசார்யருடன், அலங்க்ருதமான சித்திரைத் தேர் முன்பாகப் போய் நின்றான். யதியும் சிஷ்யர்களுடன் அப்புறமே நின்று ரதஸ்தனான கேசவனைத் தர்சநம் செய்துகொண்டிருந்தார். தேர் வடங்களின் கீழ்ப்புறமாக அவரும் அவர் சிஷ்யர்களும் நின்றுகொண்டிருக்க, அவரை நன்றாகப் பார்க்க வெண்ணி ஸ்ரீநிவாஸன் வடங்களைத் தாண்டப்போகவே, ஆதிவராஹாசார்யர் ஸ்ரீநிவாஸனை இழுத்துக்கொண்டார்.

"ஏன் இழுக்கின்றீர்? அந்தப் பக்கம் இன்னும் ஸுகமாய் இருக்குமே" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"ஸுகமாய்த்தான் இருக்கும். வடங்களைத் தாண்டக்கூடாது" என்றனர் ஆதிவராஹாசார்யர்.

"ஏன் தாண்டக்கூடாது? இதோ பாரும்; எத்தனை பெயர் தாண்டிச் செல்கின்றனர்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"பெருமாள் ரதத்தின்மீது எழுந்தருளுமுன்னும் தாண்டக்கூடாது. ஸ்வாமி எழுந்தருளின பிறகு ரதம் பகவானுடைய திருமேனியெனப் பாவிக்கத்தக்கது. பெரியவர்கள் வடங்களைத் தாண்டமாட்டார்" என்றனர் ஆதிவராஹாசார்யர்.

"அப்படியா? இதோ த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்களுடன் கூட ஸ்வாமிகள் தாண்டிப் போகின்றார்களே" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"அவர்கட்குத் தெரியாது. நாம் வடங்களைத் தாண்டப்படாது" என்றார் ஆதிவராஹாசார்யர்.

இவ்விதமாக ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில், ரதத்தை இழுப்பதற்கு யாதொரு ப்ரயத்நத்தையும் காணாமல், ஸ்ரீநிவாஸன் ஆதிவராஹாசார்யரை அதைப்பற்றிக் கேட்டான். அவரும் அன்று ஆள்கள் கூடவில்லையென்றும், ரதம் இழுப்பது துஸ்ஸாத்யமென்றும் சொல்லவே, ஸ்ரீநிவாஸன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடம் போகப் புறப்பட்டான்.



போகும் வழியில் பாதையை நோக்கினானில்லை. பக்கங்களில் உயர்ந்த வீடுகளையும் பார்த்தானில்லை. எதிராக நடந்த ஜநங்களையுங் கண்டானில்லை. கால்கள் அப்யாஸத்தால் அவன் வஸதிக்கு அவனைக் கொண்டுபோயின. மநஸ்ஸானது அந்ய சிந்தையில் ஆழ்ந்துவிடவே, அவனது கரணங்கள் விஷயங்களை அந்த மநஸ்ஸுடன் ஸம்பந்தப்படுத்தவில்லை. ஜநகநந்தினியைப்பற்றிப் பூர்வ யோசனைகளை த்யாகம் செய்தானாயினும், அவளிடம் அவன் முன் கொண்ட ஸகாரண விச்வாஸம் அகாரண விச்வாஸமாக மாறி நிலைத்து நின்றது. "அவள் வைதிக ஸார்வபௌமனுடைய பெண். விசேஷமாகத் தத்வ நிரூபணம் செய்தவள். ஸதாசாரத்துடன் கூடினவள். அவளுக்கு யான் எவ்வண்ணம் அநுரூபமான பர்த்தா ஆவேன்? அவள் பர்த்தாவின் விலக்ஷணமான ப்ரஹ்ம தேஜஸ்ஸையும், அவர் முகத்தில் ப்ரகாசிக்கும் அவரது ப்ரஹ்மவித்தமத்வத்தையும் இன்று கண்டேன். அவரன்றோ அவளுக்கு அர்ஹர். அவளன்றோ அவருக்குத் தகுந்த பத்நீ. நானோ தத்வஜ்ஞாநவாஸனை அற்றவன். அநவரதம் அநார்ய ஸம்ஸர்க்கத்தில் மூழ்கிப் போனவன். அநாசாரங்கட்கெல்லாம் ஏகாச்ரயமாயிருக்கப்பட்டவன். எனக்கு அவள் பத்நீயாகாமல் தப்பித்துக்கொண்டனளே. அது அவளுடைய ஸுக்ருதவிசேஷம். ஆனாலும் அவளுடைய ஸ்மரணமொன்றே எனக்கு உத்தாரகமாக வேண்டும். என் படிப்பு என்னை ஸத்வர்த்மாவில் செல்லவொட்டாது. வ்ருத்திக்கென்று மாதாபிதாக்கள் என்னை இவ்வழியில் விட்டனர். இஷ்டியமையாத அஸத் ஸம்ஸர்க்கம் என் புத்தியைக் கெடுத்துவிட்டது. என் சரீரஸுகம் தான் எனக்குப் பெரிதாகி நின்றது. சரீராவஸாநத்தில் அநுவர்த்திப்பதோர் ஜீவதத்வத்தை மறந்தேன். காமப்ரேரிதனாய் ஜநகநந்தினியை இச்சித்தேன். அவளிடம் நான் கொண்ட காமம் கர்மத்தின் பொருட்டுப் பயன்படவில்லை. அது காமத்தைக் கொன்றுவிட்டது. எனக்கு அவள் யாதொரு உபதேசம் செய்தாளில்லையானாலும், ஸந்மார்க்கதர்சியாய் விட்டாள்" என்றிவ்வண்ணம் யோசித்துக்கொண்டு ஸ்ரீநிவாஸன் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

பத்ராதிபர்.

# த்ரிதசாலயம்.

கைலாஸ பர்வதமும் மாநஸஸரஸ்ஸும் தக்ஷிண தேசத்தார்க்கு அநுபவஸாத்யங்களன்று. உத்தர நாட்டாரிலும் சில ஸுக்ருத விசேஷமுள்ளவர்தான் அந்த ப்ரதேசங்களைத் தர்சிக்கின்றார்கள். ஸ்வேன் ஹெடின் எனும் ஐரோப்பியர் அந்த ப்ரதேசங்களைத் தர்சித்தார். அவர் இவ்வண்ணம் எழுதுகின்றார் :—

“லோகத்தில் எல்லாத் தடாகங்களுள்ளும் மாநஸரோவரம் புண்யதமமானது ; க்யாதியால் விசேஷித்தது ; இந்தியாவின் பூர்வ காநங்களாலும் க்ரந்தங்களாலும் கொண்டாடப்பட்டது. இந்த ஸரஸ்ஸைத் திபத்தேசத்து பௌத்தரும் புண்ய தீர்த்தமாக எண்ணுகின்றார்கள். இரண்டு மதங்கள், கைலாஸத்தையும் மாநஸத்தையும் இவ்வண்ணம் பூஜிப்பதற்குக் காரணம், அவற்றை நேராகத் தர்சித்து, அந்த ஸ்தல விசேஷத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட சித்தமுடையவர்க்குத்தான் தெளிவாய் விளங்கும். அது பூமியைச் சேர்ந்ததன்று ; பரலோகத்தின் ஓர் பாகம். அத்தடாகக் கரையில் ஓர் குன்றின் மீதேறி அதை முதலில் நான் தர்சித்தேன் ; அந்த ஆச்சர்யகரமானதும், மஹிமை பொருந்தியதும், நிஸ்ஸமமான அழகுடையதுமான தோற்றத்தைப் பார்த்தவுடன் என் கண்களினின்று ஆநந்த பாஷ்பம் ப்ரவஹித்தது. கைலாஸ மந்தத்தக் கிரிகள் மத்யே ஏறக்குறைய பதினைந்து பதினாறு மைல் குறுக்களவு பொருந்தியதும் வர்த்துளாகாரமாக அமைந்ததுமான அந்த ஸரஸ்ஸானது, ஒரு விஸ்தாரமான இந்த்ரநீலக் கல்லானது அவ்விடம் ஸ்தாபிக்கப்பட்டதெனக் காணப்படுகின்றது. சித்ரமெழுதுகின்றவன் அந்தத் தோற்றத்தைக்காட்டிலும் அழகுடைய தோற்றமொன்றைச் சிந்திக்கவும் மாட்டான். அந்தத் தடாகத்தின் தீர்த்தத்தைவிட ருசியுடையதும் ஸுகம் தருவதுமான மற்றொரு ஜலத்தை நினைக்கக்கூடவில்லை. எவ்வளவு காலம் இங்கே வஸித்தாலும் எனக்கு த்ருப்தி குறையாது. இந்தத் தேவலோக தடாகக்கரையில் வஸித்து, இங்கே



மரணமடைய எனக்கு மிகவும் இஷ்டம். சரித்ரங்களும் கதைகளும் இந்த ப்ரதேசத்தைப்பற்றி வளர்ந்தன. தேவர்க்கும், மநுஷ்யர்க்கும் இது ரமணீய தர்சநயோக்யமானது. ஸம்ஸாரக் கடலைத் தாண்ட விரும்பியவர்க்கு இது ஒரு கரையாக நிற்கின்றது. பூலோகத்தில் ஸர்வ புண்ய க்ஷேத்ரங்களுக்குள்ளும் அது புண்யதமமானது. ஏஷியா கண்டத்திற்கு நாபீகமலம் போன்றது ; கங்கை, ஶுதுத்ரி, ஸிந்து, ப்ரஹ்மபுத்ரா முதலான நதிகளுக்கு உத்பத்தி ஸ்தாநம் ; லோகத்தில் முதன்மையான க்யாதியைப் பொருந்திய கைலாஸம் முதலான பர்வதங்களால் சூழப்பட்டது. வேத காலம் முதல் எவ்வளவோ கணக்கற்ற யாத்ரை செய்பவர்கள் அப்புண்யபூமி தர்சந நிமித்தமாக அவ்விடம் வந்துளர் ; ஸரஸ்ஸில் நீராடி, நீருந்தி, ஆத்ம த்ருப்தியை ஸம்பாதித்துளர் ; இருபத்தெட்டுமைல் சுற்றளவு பொருந்திய கைலாஸத்தை ப்ரதக்ஷிணம் செய்து ஆத்மரக்ஷணத்தையும் ஸம்பாதித்துக்கொண்டார்கள். இது லோகத்தில் ஸர்வோத்க்ருஷ்டமான பர்வதம். எவரஸ்ட் பர்வதம்கூட இதற்கு இணையன்று. இந்த ப்ரதேசத்தில் சப்தம் யாதொன்றும் கேட்கவும் கிடையாது. விவிக்த ஸ்தலம் என்றால், இதைக் காட்டிலும் அப்பெயர்க்குத் தக்கது மற்றெங்குமிலது. “நாம் (கிறிஸ்தவர்) இந்த ஸ்தலத்துக்கு யாத்ரையாக வருகின்றவரைப் பார்த்து நகைத்து, நமது ஜ்ஞாநாதிக்யத்தைப்பற்றிக் கர்வம் கொள்வோம். நம்முடைய மதம் நமது விச்வாஸம் இவற்றை அவருடைய மதவிச்வாஸங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். மரணாநந்தரம் நமது அநுவ்ருத்தியின் ஸ்வரூபம் எல்லா ஜநங்கட்கும் கிட்டாத விஷயம். பல ஜநங்கள் அதைப் பலவாறாக யோசித்துளர். நம்முடைய புத்தியில் பருடைய யோசனைகள் தப்பாகக் காணப்பட்டபோதிலும், அவை மலையையும் அகற்றக் கூடிய விச்வாஸ தார்ட்யத்துடன் ஆதரிக்கப்படுகின்றன வென்பதைப் பார்த்து நாம் விஸ்மயம் கொள்ளப்பொருந்தும்.”

கிறிஸ்தவர் இதற்குமேல் எழுத நாம் எதிர்பார்க்கக்கூடுமோ? அந்த ஸ்தலத்தின் ரமணீயதை அந்யத்ர தர்சிக்கக் கிடைக்காது ; அதன் விவிக்தத்வம் அநிர்வசநீயம் : லோகாதீதம் : தேவதா ஸாக்ஷாத்காரத்துக்கு அதைப்போன்ற தேசம் லோகத்தில் மற்றெங்குமில்லை. ஜ்ஞாநரூபமான தபஸ்ஸுக்கும், அவிச்சிந்நமான ஸ்மரண ஸந்ததியென்று சொல்லப்பட்ட த்யாநத்துக்கும், பகவ

தாராதநத்துக்கு அநுகூலமான சித்தைகாக்ரியத்துக்கும், இது முதன்மையாக உத்தேசிக்கப்பட்ட ஸ்தாநம். ஆதலால் மஹர்ஷிகள் எல்லோரும் இவ்விடத்தில் வஸிக்க உகந்தனர். ஸர்வேப்ச்வரனும் தானே ஆசார்ய சிஷ்ய ரூபதரனாய் நரநாராயணரெனப் பெயர் கொண்டு வாஸம்செய்த பதர்யாப்ச்ரமம், இந்த ப்ரதேசத்தின் ஸமீபத்திலுள்ளது. அதை ஆப்ச்ரயமாக வ்யாஸர் முடிவில் அடைந்தனர். அவ்விடம் கைலாஸகிரியில் ஸர்வஜ்ஞனும் பஹுருஷிகளுக்கு ஜ்ஞாந ப்ரதனுமான சங்கரன் ஸாந்நித்யம் செய்கின்றார். இந்தப் புண்யக்ஷேத்ரங்களைப்பற்றி நம்முடைய பூர்வ க்ரந்தங்கள் ஸ்மரிப்பதை இங்கே விவரிப்போம்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், “कैलासपर्वते राम मनसा निर्मितं परम् । ब्रह्मणा नरशार्दूल तेनेदं मानसं सरः ॥ तस्मात्सुस्राव सरसः सायोध्यामुपगूहते । सरःप्रवृत्ता सरयूः पुण्या ब्रह्मसरश्च्युता ॥” எனும் ப்ச்லோகங்கள் பாலகாண்டத்தில் 24-வது அத்யாயத்தில் இருக்கின்றன. மாநஸ ஸரஸ்ஸானது சதுர்முகன் ஸங்கல்பத்தால் உண்டானதென்றும், அது கைலாஸ பர்வதத்திலே இருக்கின்றதென்றும், அதினின்று ஸ்ரவித்த ஒரு நதிக்கு ஸரயூ என்று க்யாதியுள்ள நாமம் லபித்ததென்றும் மேல்குறித்த ப்ச்லோக தாத்பர்யம். प्रक - जने, हासः - हसनं, दीप्तिश्च, इति, प्रकाशहासः, எனும்படி, மாநஸ ஸரஸ்ஸின் ஸமீபத்தில் ப்ரகாசிக்கின்ற பர்வதம் என்றும், மாநஸ ஸரஸ்ஸில் ப்ரதிபலிக்கின்ற பர்வதம் என்றும் கைலாஸத்தைச் சொல்லப் பொருந்தும்.

அநுசாஸந பர்வத்தில் ப்ரக்ஷிப்தமாய்க் கிடக்கும் உபமந்யூபாக்யாநம் எனப்பட்ட கதையொன்று உண்டு. அதன்படி, ஸ்ரீ க்ருஷ்ணன் ஜாம்பவதிக்குப் புத்ர ப்ராப்தியை சங்கர ப்ரஸாதத்தால் உண்டுபண்ணத் திருவுள்ளம்பற்றித் தார்க்ஷ்யன் மீதேறி ஹிமவத் பர்வதமடைந்து அங்கே சிவபக்தராய்த் தபஸ் செய்துகொண்டிருந்த உபமந்யுவினுடைய ஆப்ச்ரமத்தை நெருங்கி, அவரை வந்தநம் செய்தார். ஸ்ரீ க்ருஷ்ணனைக் கண்டவுடன் உபமந்யு ருஷியும்,



“स्वागतं ते पुण्डरीकाक्ष सफलानि तपांसि नः ।
यः पूज्यः पूजयसि नो द्रष्टव्यो द्रष्टुमिच्छसि ॥
[illegible] ।”

[ஹே புண்டரீகாக்ஷ! உனக்கு நல்வர வளிக்கின்றேன். எங்கள் தபஸ்ஸு பலித்தது. ஏனென்றால், யாவராலும் பூஜிக்கப்பட்ட நீ என்னைப் பூஜிக்கின்றாய். யாவரும் காண விரும்பும் நீ என்னைக் காண இச்சித்தாய். ஸர்வ வ்யாபியான உன்னை மநுஷ்யத்வத்தை அநுஸரிப்பதாக நினைத்து இருக்கின்றோம்.] என்று மொழிந்தார். ஆதலால் வீரசைவர் ஸந்தோஷிக்கும்படி ஏற்பட்ட இந்தக் கதையானது, மாநுஷத்வத்தைப் பகுமாநித்து அவதரித்த ஸர்வேப்ச்வரன் விஷயத்தில் நிந்தையின் பொருட்டாகமாட்டாது. ஆகிலும், சிவபக்தனிடம் சிவ தீக்ஷையைப் பெற்றும், சிவனைக் குறித்துத் தபஸ் செய்தும், சிவனை ப்ரத்யக்ஷமாய்த் தர்சித்தும், புத்ரப்ராப்தி முதலான ஐஹிக ப்ரயோஜநங்களை அபேக்ஷித்து வரம் பெற்றாரென்று அக்கதை வளர்கின்றது. இவை நப்ச்வரங்களை அபேக்ஷிக்கும் ஒரு புருஷன் புரியத்தக்க விஷயங்கள். சைவர் ஒப்புக்கொண்ட த்ரிமூர்த்திகளில் ஒருவரான விஷ்ணு செய்யப் புகும் வ்யாபாரங்களல்ல. ஆகிலும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய கைலாஸ யாத்ரை ப்ரஸித்தமாய் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. அதைப் பற்றி ஹரிவம்சத்தில் கைலாஸயாத்ரை யெனும் ப்ரகரணமொன்றுண்டு. அங்கே ஸ்ரீ க்ருஷ்ணன் தார்க்ஷ்யனை வரவழைத்து, ‘श्रीमन् द्रष्टुमिच्छामि शङ्करं शाश्वतं शिवम्’, என்று சொல்லிக் கருடன் மீதேறிப் பதர்யாப்ச்ரமத்துக்குச் சென்றதாகக் கண்டிருக்கின்றது. எழுந்தருளின ஸ்தலத்தைப்பற்றியோ, “यत्र विष्णुर्जगन्नाथः [illegible] । [illegible] नरनारायणावृषी ॥ [illegible] । यत्र [illegible] ॥ ब्रह्म [illegible] । यत्र [illegible] जनार्दनम् ॥ देवा[illegible] । यत्र [illegible]

[illegible] ”

என்று ஹரிவம்ஶத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இப்படி ஸ்ரீ க்ருஷ்ணன் பதர்யாஶ்ரமம் எழுந்தருளினதாகக் கண்டிருக்கின்றது. அது ஸித்தக்ஷேத்ரம். பகவான் நரநாராயண ரூபத்துடன் வஸித்த ஸ்தாநம். தேவர்களும் ருஷிகளும் பகவானை உபாஸித்து ஸித்திபெற்றவிடம். அவ்விடம் ஸ்ரீ க்ருஷ்ணன் முதலில் எழுந்தருளினர். அங்கே மஹர்ஷிகள் பகவானை வந்து தண்டன் ஸமர்ப்பித்தார்கள். அவர்களை அனுப்பிவிட்டுப் பகவான் தபோவநத்தில் தம்முடைய ஆஶ்ரமத்தில் ஸமாதியில் எழுந்தருளியிருந்தார். அப்போது இரண்டு கோர ரூபத்துடன்கூடிய பிசாசர்கள் பயங்கரமான சப்தம் செய்துகொண்டு ஸ்வாமியின் ஸமாதியைக் கெடுத்தார்கள். அவர்கள் குபேரன் ஸேவகர். இருவரும் ஸஹோதரர்கள். அவர்களில் ஒருவன் கண்டாகர்ணன்; விஷ்ணுவின் நாமத்தையே காதால் கேட்க ஸஹியாதவன்; சிவ பக்தன்; அவன் சிவனை ஆராதித்து ஸ்தோத்ரம் செய்யச் சங்கரனும் அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி வேண்டிய வரங்களைக் கேட்கச்சொல்லி ஆஜ்ஞாபித்தனர். கண்டாகர்ணன் முக்தியை வேண்டவும், “[illegible]”

என்று, ஶங்கரனால் ஸ்வஹிதத்தைக் கண்டாகர்ணன் அறிந்தனன். விஷ்ணு தான் அம்ருதப்ரதன் என்பது ஸுப்ரஸித்தம். ஆதலால் ஶங்கரன் தன்னுடைய பக்தனைத் தத்காலம் பதர்யாஶ்ரமத்தில் எழுந்தருளியிருந்த கோவிந்தனை உபாஸிக்கும்படி ஆஜ்ஞாபித்தனர். பிறகு கண்டாகர்ணனும் அவன் ஸஹோதரனும் பகவானைத் தர்ஶிக்கவேண்டிப் பதர்யாஶ்ரமம் வந்து சேர்ந்தார்கள். அங்கே எழுந்தருளியிருந்த ஸ்ரீ க்ருஷ்ணனை ஒரு மர்த்யனாக நினைத்து, அவரிடம் தாம் வந்த கார்யத்தைப்பற்றிச் சொல்லும்போது, “[illegible]



[illegible] ।” இத்யாதி பல ஶ்லோகங்களால் விஸ்தரித்துச் சொல்லிவிட்டுத் தாங்களும் யோகத்தில் உட்கார்ந்தனர். “[illegible]”, என்று ஆரம்பிக்கின்ற ஶ்லோகங்களால் பகவானை த்யாநித்தார்கள். முடிவில் பகவான், “[illegible] ॥” என்கிறபடி அவர்கள் ஹ்ருதயத்தில் ப்ரகாசித்தார். அதை கண்டாகர்ணன் அறிந்துகொண்டு, “[illegible] ।” என்று, தனக்குப் பகவத் ப்ரஸாதம் கிடைத்ததென்றும், தான் க்ருதக்ருத்யனானென்றும் நிச்சயித்துக் கண்களைத் திறந்து பார்த்தான். ஹ்ருதய கமலத்தில் கண்டபடியே வெளியிலும் ஜநார்த்தனனை ஸேவித்து அநுபவித்தான். “[illegible]” என்று அநுபவித்தான். பிறகு ஸ்ரீ க்ருஷ்ணன் அவனைத் தம்முடைய ஹஸ்தத்தால் தடவிக்கொடுத்து, அவனுடைய பிசாசரூபத்தைப் போக்கித் திவ்யரூபத்தைத் தந்தார். அவனையும் அவனுடைய அநுஜனையும் இந்த்ரன் இருக்கும்வரையில் ஸ்வர்க்கவாஸம் செய்யும்படி ஆஜ்ஞாபித்து, இந்த்ரனுடன் தனது ஸாயுஜ்யத்தையும் கொடுப்பதாக வரமளித்தார்.

அதன்பிறகு பகவான் கருடாரூடராய்க் கைலாஸம் எழுந்தருளினர். ருஷிகளையும் அவ்விடம் வரும்படி ஆஜ்ஞாபித்தார். அவ்விடமானது இவ்வண்ணம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது:— “[illegible]

[illegible] ॥ [illegible]" என்று கைலாஸத்தில் குபேரன் சங்கரனை உபாஸிப்பதாயும், அங்கே ஹம்ஸங்களுக்கு இருப்பிடமான மாநஸஸரஸ் இருக்கின்றதென்றும், அதனின்று கங்கை முதலான நதிகள் உத்பந்நங்களென்றும், அங்கே உமாஸஹாயனுய்ச் சங்கரன் நித்யவாஸம் செய்கின்றுரென்றும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. "[illegible] ॥ [illegible] ॥" என்கிறபடியே அந்தப் பர்வதமேறி ஸ்வயம் ஸர்வேச்வரனுய் இருந்தும், மாநுஷத்வத்தை அவலம்பித்துப் பகவான் தபஸ் செய்ய ஆரம்பித்தார். இப்படி ஏன் பகவான் தபஸ் செய்தாரோ என்பதைப்பற்றி, "[illegible]", என்கிறபடி நமக்கு அது அறியக்கூடாத விஷயமென்று ச்லோகமிருக்கின்றது. கருத்மானும், ஸ்வாமியினுடைய திவ்யாயுதாபிமாநி தேவர்களும் அக்காலம் ஸ்வாமிக்குப் பரிசர்யை செய்தார்கள். தபஸ்ஸின் அவஸாந காலத்தில் இந்த்ராதி தேவர்களும், நாரதாதி ருஷிகளும் அவ்விடம் வந்து, விஸ்மயத்துடன் ஸ்வாமியினுடைய தபஸ்ஸைத் தர்சித்து, "[illegible]" என்று யாவராலும் த்யாநிக்கப்பட்ட பகவான் தபஸ் செய்வதேன் எனச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். "[illegible] ॥ [illegible] ॥ [illegible] ।" என்கிறபடியே பகவான் எடுத்த வ்ரதம் முடி



வுக்கு வரவே, சங்கரன் ஸர்வலோக நாதனை ஸ்ரீ க்ருஷ்ணனைத் தர்சிக்க, உமையுடனும் பூதஸங்கங்களுடனும் கூடினவராய் ப்ராப்தரானுர். பிறகு ஸ்ரீ க்ருஷ்ணன் "[illegible]" என்றாரம்பித்துப் பசுபதியை ஸ்துதிசெய்தார். முடிவில், "[illegible] ॥ [illegible] ।" என்கிறபடி, சிவன் ஸ்ரீ க்ருஷ்ணன் கைகளைப் பிடித்துக்கொண்டு, யாவரும் கேட்கும்படிப் பின்வருமாறுசொல்ல ஆரம்பித்தனர். "[illegible] ॥" என்றாரம்பித்து "நீயும் தபஸ் செய்ய வேண்டுமோ? உனக்கு வேண்டியதும் ஒன்றுண்டோ? புத்ரன் பொருட்டா உன் தபஸ்? புத்ரன் முன்பே என்னால் கொடுக்கப் பட்டான்" எனச் சில வார்த்தைகள் சொல்லி நீலகண்டர், "[illegible] ॥" எனும்படி உமையுடன் அஞ்ஜலிபத்தராய் நின்று, பகவானை ஸர்வ காரண காரணமாகச் சொல்லி ஸ்தோத்ரம் செய்தார். பின்பு "[illegible]" என்றாரம்பித்துப் பகவானைப் புருஷஸூக்த வாக்யங்களால் தத்ஸூக்த ப்ரதிபாத்யனுக ஸ்துதித்தார். மறுபடியும் "[illegible] ॥ [illegible] ॥ [illegible] । [illegible] । [illegible]

[illegible] ।'' இவ்விதமாகப் பகவானுடைய ப்ரஸித்த நாமங்கட்கு வ்யுத்பத்தியால் ஸித்தித்த அர்த்தங்களை வெளியிட்டுப் பின், "[illegible]", என்றும் "[illegible]", என்றும், "[illegible] ।'' என்று ஸ்ரீ பகவத்கீதை விஷ்ணுபுராணம் இவற்றின் அர்த்தங்களையொட்டித் தான் பகவத் விபூதியில் அந்தர்க்கதராயிருப்பதை வெளிப்படுத்தினர். பிறகு, "[illegible] ॥'' என்று சங்கரன் ஸ்ரீ க்ருஷ்ணனை நமஸ்கரிக்கின்றார்.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 3 AUG 1916 MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள ஆனி [ஸஞ்சிகை 5.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே(அ)நவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸங்கங்களின் ப்ரயோஜநங்கள்.**

இந்த சைத்ர வைசாக மாஸங்களில் இங்கிலீஷ் படித்தவர்கள் பல விடங்களில் ஸங்கங்களாகக் கூடினார்கள். இக்கூட்டங்கள் ப்ரதமத்தில் ராஜாங்க சீர்திருத்தத்தை உத்தேசித்து ஆரம்பித்தன. இவர்கள் யோசனைகளை அங்கீகரிப்பதற்கும் த்யஜிப்பதற்கும் ராஜாங்கத்தார் ஸ்வதந்த்ரர். இதர ப்ரயோஜநங்களை உத்தேசித்துக் கூடும் ஸங்கங்கள், அந்த ப்ரயோஜநங்களை அபேக்ஷிக்கும் ஜநங்கள் பெருகப் பெருகக் காலக்ரமத்தில் வ்ருத்தியடைகின்றன.

விதேச வித்யா பரிசயம், விதேசஸ்தர் ஸம்ஸர்க்கம், இவை இரண்டும் ஸர்வத்ர அவற்றிற்கு அநுகுணமான பலங்களை விளைவிக்காமல் போகமாட்டா. அவற்றை உடையவர்க்குத் தேசவித்யா பரிசயமும் ஸ்வஜநங்களுக்குள் ச்ரேஷ்டரென எண்ணப்பட்டவர்கள் ஸஹவாஸமும் அற்றால், மேலே சொன்ன பலங்கள் பரி

பாக விசேஷங்களுடன் பரிணமிக்கின்றன. "ஊஹஸம்ஸேதாநவா ஸம்ஸி ஸஹேதாவாநா நவதஸ்ஸே । தயோர்ஹிவ்யஸீசாந்தேத பு- ஷிராவாரா வஜிருதா ॥ நயதேகும்ஸாம் விஜாநீஷே வ்ருஜநே நாவா ஸிகாக்ஷயா" எனும் வசநங்கள் இங்கே ஸ்மரிக்கத்தக்கன. விதேசஸ்தர் ராஜங்கத்தாருமாயின், அவரிடம் உத்க்ருஷ்ட புத்தியும், தமரிடம் நிக்ருஷ்ட புத்தியும் ஸஹஜமாய் உண்டாகின்றன. நீண்ட காலம் ஸ்வராஜ்யமற்றவர் பக்கல் இவ்வுண்மை மிகுதியாய் விளங்கும். மேலே ப்ரஸ்தாபித்த கூட்டத்தார்களில் பலர் இப்படிப்பட்ட புத்தி பரிபாக விசிஷ்டர்கள்.

நம் பெரியோர் "பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந:" என்று நம்பினவர்கள். ஜலம் பள்ளத்தில் பெருகும். மநஸ் விஷயத்தில் தான் ப்ரஸரிக்கும். இப்படிப்பட்ட மநஸ்ஸை யுடைய பெரும்பாலர் ஸம்ஸார சக்ரத்தைத் தாண்டமாட்டார்கள். இவர்கள் மநஸ் ப்ரபலமான ப்ராசீந ஸுக்ருத மில்லாமல் நிர்விஷயத்தில் இறங்கமாட்டாது. தன் ப்ரக்ருதியால் விஷயோந்முகமான மநஸ்ஸை யாரோ ஒரு புருஷன் கஷ்டப்பட்டுத் தன் வசமாக்கிக் கொள்கின்றான். பிறகு அது பகவதைக விஷயமாகத் தகும். அப்போது தான் அதை நிர்விஷயமெனச் சொல்வர். ஒரு ஜந்மத்திலோ, பல ஜந்மங்களின் முடிவிலோ, மநஸ்ஸுக்கு நிர்விஷயாகாரத்தை ஸம்பாதித்துக் கொடுக்கவும், மநுஷ்யர்க்கு ஸம்ஸாரத்தில் நிர்வேதத்தையும் மோக்ஷத்தில் இச்சையையும் உண்டுபண்ணவும் வேண்டி, வர்ணங்களையும் ஆச்ரமங்களையும் மஹர்ஷிகள் விச்வாஸத்துடன் ரக்ஷித்தார்கள். கர்மம், ஜந்மாந்தரம், புநர்ஜந்மம், ஈச்வரனுடைய கர்மாத்யக்ஷத்வம், லோகாந்தரம் இவற்றை நம்பினவர்கள் நம் முன்னோர்கள். இந்த நம்பிக்கைக்கு வேதசாஸ்த்ரம் ப்ரமாணம். அந்த சாஸ்த்ரத்தில் விச்வாஸமில்லாவிட்டால், மேற்சொன்ன நம்பிக்கைகளும் ஸ்வயம் அத்ருஷ்ட விஷயங்களாகின்றபடியால் விச்வாஸ மற்றுப்போகின்றன.

ஆதலால் த்ருஷ்டங்களான ஐஹிக ப்ரயோஜநங்களையும் ஸுகங்களையும், அத்ருஷ்டங்களென்றும் தேஹாந்தரங்களால் லோகாந்தரங்களில் அநுபவ யோக்யங்களென்றும் சொல்லப்பட்ட ப்ரயோஜந ஸுகங்களின் பொருட்டு, நாம் த்யாகம் செய்யமாட்டோம் என்று சொல்வார்கள் பாச்சாத்ய வித்யாநிஷ்டர்கள். இவர்கள் நியமேந ஐஹிக போகங்களிலும் ஸுகங்களிலும் ப்ரவ்ருத்தியைத் தடுக்கும் சாஸ்த்ரங்களை அநாதரிக்கின்றனர். அவை மநுஷ்யர்க்கு ஸஹஜமாக ஏற்பட்ட ஸ்வாதந்த்ரியங்களைத் தடுக்கின்றன வாதலால், இங்கிலீஷ் படித்தவர்கள் தூஷிக்கவும் விஷயங்களாகின்றன. இங்கிலீஷ் படிப்புக்கு விஸ்தாரமும் தேசவித்யைக்கு ஸங்கோசமும் காலஸ்வரூபத்தால் ஏற்பட்டன. ஆதலால் ஆசார சீர்திருத்தமென்று சொல்லப்பட்ட வர்ணாச்ரம நாசத்தை உத்தேச்யமாய்க் கொண்ட ஸபைகளும் ஸங்கங்களும் பகு வர்ஷங்களாக நம் தேசத்தில் மிகுதி யடைந்துகொண்டிருக்கின்றன.



வர்ணாச்ரம தர்மரக்ஷண ஸங்கங்கள்.

இவற்றின் ப்ரவ்ருத்திக்கு எதிர்தட்டாய் யாதொரு முயற்சியும் பகுகாலம் கண்டோமில்லை. "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம், சால மிகுத்துப் பெயின்" என்று சொன்னார் திருவள்ளுவர். காலதோஷத்தால் சாஸ்த்ரமிட்ட வரம்புகளெல்லாம் நாசமடைவதைக் கண்ணுற்றுக்கொண்டே நம்மவர் நின்றனர். ஆகிலும் நம் முன்னோர் வித்யையிலும் அநுஷ்டாநங்களிலும் விச்வாஸம் குன்றாத சில இங்கிலீஷ் படித்தவர்கள் வர்ணாச்ரம தர்மங்களும் ரக்ஷணார்ஹமென்றும், அவை சத்ருக்களால் தத்காலம் பீடிக்கப்படுகின்றதென்றும் தெளிந்து, அவற்றின் ஸம்ரக்ஷணார்த்தம் ஸபை சேரவும் ஸங்கமாகக் கூடவும் ஆரம்பிக்கவே, வைதிகரெனப்பட்ட ஆஸ்திகர்களும் அவர்களுடன் சேர்ந்தார்கள். இவ்வண்ணம் வர்ணாச்ரம தர்ம ரக்ஷண ஸங்கங்கள் உண்டாயின.

இவ்வருஷம் முதல் ஸங்கம், சென்னைப்பட்டணம் ஸபையாரால் கச்சிநகரில் கூட்டப்பட்டது. இரண்டாம் ஸங்கம், மதுரை ஸபையாரால் மதுரையில் கூட்டப்பட்டது. முதல் ஸங்கத்தில் பண்டிதர்கள் பல விஷயங்களைப்பற்றி விசேஷ உபந்யாஸங்கள் செய்தார்களென்று தெரிகின்றது. அவை ஒரு க்ரந்தரூபமாக வெளிப்படுத்தப்பட்டால் தர்ம ரக்ஷணத்துக்கு அநுகூலமாயிருக்கும். அந்த விஷயம் சென்னை ஸபையார் யோசிக்கத்தக்கவர். மதுரை ஸங்கத்தில் அக்ராஸநம் வஹித்தவர், ப்ரஹ்மஸ்ரீ என். ஸுப்ரஹ்மண்யர் அவர்கள். அவர் எம் - ஏ பரீக்ஷை கொடுத்த

வர். திருவாங்கூர் ஸம்ஸ்தாநத்தில் ப்ரதம திவான் பேஷ்கார். இவ் வருஷம் நடந்த பல ஸங்கோபந்யாஸங்களுக்குள்ளும் அவருடைய உக்திகள் பராமர்சையால் விசேஷித்தவையாகக் காணப்படுகின்றன. ஐரோப்பா கண்டத்தினுடைய சரித்ராரம்ப காலத்தின் முன்னமே, ஆர்யாவர்த்தத்தினுடைய வர்ணாச்ரம தர்மங்கள் ஸ்திரப்பட்டு நின்றன. நமது ப்ராசீந க்ரந்தங்களைப் படித்துப் பார்த்தால், அந்தத் தர்மங்கள் தேசத்தின் ஸுகத்துக்கும் நாகரிகத்துக்கும் சாந்திக்கும் அநுகுணமாக நின்றனவென்று ஸ்பஷ்டமாகத் தெரியும். ஒரு வர்ணத்தார் மற்றொரு வர்ணத்தாரைப் பகைத்தனர் எனும் வார்த்தையே இல்லை. தத்கால சரித்ர மெழுதுகின்ற ஐரோப்யர்களும் அவ்வண்ணமே கூறுகின்றனர். "சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் ராஜ்யம் நன்றாக ஆளப்பட்டது. அதிகாரிகள் குடிகளுடைய இஷ்டங்கட்குக் கூடியவரையில் விரோதம் செய்திலர். ஆதலால் குடிகள் க்ஷேமமாய் வஸித்தனர்; பணக்காரரும் ஆனார்கள். பாடலீபுரத்திலும், தாம்ரலிப்தியிலும் வித்யார்த்திகள் யதேச்சையாக வித்யாக்ரஹணம் செய்தார்கள். ப்ரயாணிகட்கு ராஜமார்க்கங்கள் திருடர் உபத்ரவமற்றிருந்தன. பா-ஹீன் (சைனதேசத்து யாத்ரி) என்பவன் இத்தேச முழுதும் ஸஞ்சாரம் செய்து ஒரு தரம் கூடத் திருடரால் துன்பமடைந்தானில்லை. விக்ரமாதித்யன் காலத்தைக் காட்டிலும் மற்றெப்போதும் பூர்வ தர்மப்படி இந்தியா தேசம் நன்கு ஆளப்பட்டதில்லை. ராஜாங்கத்தார் தம்மளவுக்கு மீறி யாதொன்றும் செய்தாரில்லை; ஜநங்கள் இஷ்டப்படி இருக்கவிட்டார்கள்; ஆகையால் ப்ரஜைகளால் கொண்டாடப்பட்டனர். அதி நிக்ருஷ்ட ஜநங்கள் தவிர மற்ற யாவரும் பௌத்த தர்மாக்ருஷ்ட மநஸ்கராய் பூததயையுடன் கூடியிருந்தார்கள். சக்ரவர்த்தி ப்ராஹ்மண மதாநுஸாரியாயிருந்தபடியால், பௌத்தரும் ஜைநரும் மதாபிநிவேசத்தால் செய்த ஜநஹிம்ஸை முற்றிலும் நீங்கி, எல்லோரும் தாம் நம்பியபடி அவ்வவர் ஸம்ப்ரதாயங்களை அநுஷ்டித்து வந்தனர்." இப்படி ஒரு சைனதேசத்து பௌத்தன் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்கட்கு முன் ஆர்யதேச நிலைமையைப்பற்றிப் பேசினபடியைப் படித்து ஒரு ஐரோப்யர் எழுதுகின்றார்.

பின்பட்ட பகு காரணங்களால் வர்ணாச்ரம தர்மங்கள் ஜநங்கட்குள் பரஸ்பரம் விரோதங்களை உண்டாக்கினதாக ஈஷத்தும்



காட்டப்படவில்லை. 1880-ம் வருஷம் வரையில் ஜாதி ப்ரயுக்த த்வேஷங்கள் நம் தேசத்தில் ஜநங்களுக்குள் இல்லையென்று நம்முடைய அநுபவத்தால் நாம் த்ருடமாகச் சொல்வோம்.

துலுக்கனை ஹிந்து ஜந்ம துலுக்கனைவிட ஹிந்துக்களை த்வேஷிக்கின்றான். பிறப்பால் கிறிஸ்தவனாயிருப்பவன், ஹிந்துவாய்ப் பூர்வம் இருந்து பின்பு கிறிஸ்தவனாய் மாறினவன் ஹிந்துக்களை த்வேஷிப்பதுபோல் த்வேஷிக்கின்றானில்லை. ஆதலால் ஜாதி கெட்டவன் ஜாதி நிஷ்டர்களை த்வேஷிப்பதில் ஆச்சரியமென்ன? அதிலும் ப்ராஹ்மணனாய்ப் பூர்வமிருந்து பின் ஜாதி கெட்டவன் மிகவும் ப்ராஹ்மண விரோதியாகின்றான். முதலில் பாதிரிமார்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு, தேசகிறிஸ்தவரால் ஆதரிக்கப்பட்டு, ராஜாங்கத்தில் உத்யோக ஸம்பாதந ஸௌகர்ய நிமித்தம் ப்ராஹ்மணேதரரால் பரிபாலிக்கப்பட்டு, ப்ராஹ்மண ப்ரஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்டு, ப்ராஹ்மண த்வேஷமாய் உதித்து, வர்ணாச்ரம த்வேஷமாய்த் தத்காலம் பரிணமித்த விஷத்ருமம் விஸ்தாரத்தையடையுமென்பதில் ஸந்தேஹமில்லை.

பகவத் ப்ராப்திக்கு ஸர்வ வர்ணஸ்தரும் அதிகாரிகள். ஒவ்வொரு வர்ணஸ்தரும், தம்தம் கர்மங்களால் பகவானை ஆராதித்து அவனை யடையலாமென்பதை "ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி" என்கிற வாக்யத்தால் கீதாசார்யன் அருளிச்செய்தார். ப்ராஹ்மணாதிகளுக்குப் பகவானுடைய முகாதிரூப நிர்தேசமும், அவ்வவர் ப்ரவ்ருத்திக்கு அநுகுணமாய் ஏற்பட்டதே. ப்ராஹ்மணன் முதலானவர் ஜாத்யந்தருடைய பஹுமாநத்தை அபேக்ஷிப்பதாய் எண்ணக்கூடாது.

"ஸம்மாநாச் ப்ராஹ்மணோ நித்யம் உத்விஜேத விஷாதிவ।
அம்ருதஸ்யேவ சாகாங்க்ஷேத் அவமாநஸ்ய ஸர்வதா॥"

என்று, மநுஸ்ம்ருதியில் ஸம்மாநத்தை விஷம் போலவும், அவமாநத்தை அம்ருதம் போலவும் ப்ராஹ்மணன் எண்ணவேண்டுமென்று விதித்திருக்கின்றது. வர்ண பேதங்கள், ஒருவன் தான் உத்க்ருஷ்டனென்றும் பிறர் நிக்ருஷ்டர் என்றும் பாவிக்கும்படி உண்டாகவில்லை. ப்ராஹ்மணன் எங்காவது ஸம்மாநிக்கப்பட்டானாகில் அவனிடம் நின்ற யோக்யதைதான் அதற்குக் காரணம். அவ

னுடைய வர்ணமாத்ரம் காரணமாக ஹேதுவில்லை. ஒவ்வொருவர்
ஸ்வதர்மமும், அவ்வவருடைய பகவதாராதநத்துக்கு அங்கமாகக்
குறையில்லை. பாரம்பர்யமாக ஏற்பட்ட வ்ருத்தியானது அதில்
நிலைத்தவனுக்கு ப்ராயேண ஸாமர்த்யாதிபயத்தைத் தருமென்ப
தும் லோகப்ரஸித்தம். ஒவ்வொருவரும் தமக்கு நியதமாய் ஏற்
பட்ட வ்ருத்தியினால் லோகோபகாரமும் செய்கின்றனர். அவ்ய
வஸ்தையினால் ஏற்பட்ட வ்ருத்திகளுக்கு இத்தகைய குணங்கள்
அமையமாட்டா. ஜநங்கள் இச்சாநுகுணமாய் வ்ருத்திகளை மேற்
கொள்வாராகில் பரஸ்பரம் ஈர்ஷைக்கும் இடந்தருவார்கள். பாரம்
பர்யாகதங்களான வ்ருத்திகளில் உத்க்ருஷ்டாபக்ருஷ்ட யோசனை
கள் செய்பவர்கள், இச்சாநுகுணமாய் ஏற்றுக்கொண்ட வ்ருத்தி
களிலும் அந்த யோசனை செய்யவேண்டியவர்களே. எல்லா ஜநங்
களும் ஸமாந வ்ருத்தியில் புக லோகம் இடந்தராது. ப்ரசுரமாக
ஒவ்வொருவனுக்கும் பரம்பராகதமான வ்ருத்தியில்தான் ஆபிமுக்
யம் ஜநிக்கும். லோகாநுபவத்தை நன்கு யோசித்தால், ஜநங்கள்
ஸுகமாக வாழ்வதற்கு வர்ணாச்ரம தர்மத்தைப்போன்ற ஏற்பாடு
வேறெங்கும் காண்பது அரிது. அந்தத் தர்மத்தை அநுஷ்டிக்கப்
பிறந்தவர்களுடைய தவறுதலால் தத்காலம் அது கொஞ்சம் நிலை
மாறியும், அதற்கு உண்டாயிருக்கும் த்வேஷிகளின் ப்ரயத்நத்
தால் அது தூஷிக்கப்பட்டும் இருந்தபோதிலும், அதற்கு அபிமா
நிகள் உள்ளவரையில் அது காலோசிதமாக ரக்ஷிக்கப்படவேண்டு
மென்பது நமது ப்ரார்த்தனை.

**கஞ்சம் ஸோஷல் ரிபாரம் ஸங்கம்.**

கஞ்ஜம் ஸோஷல் ஸங்கத்தில் அத்யக்ஷதையை வஹித்தவர்
இவ்வண்ணம் கூறுகின்றனர். 'மநுஷ்யர் பூர்வ
வழக்கத்தை ஆதரிக்கும் ஸ்வபாவமுடையவர்
கள்; ஆதலால் பூர்வாசாரத்தை அவர் திடீ
ரென்று த்யாகம் செய்து புதிய வழக்கங்களை
மேற்கொள்ளார்; ஆதலால் வழக்கங்களின் மாறு
பாடு காலக்ரமத்தால்தான் ஏற்படும்; ஒருவன் புத்தி பழைய வழ
க்கத்தின் குற்றங்களையும் புதிய ஏற்பாட்டின் உண்மையையும் ஸா
க்ஷாத்கரிக்கப் பொருந்தும்; ஆனால் குற்றமுள்ள புராதந வழக்
கத்தை ஒட்டி வந்த அபிமாநம், அதற்கு ஒரு கௌரவத்தைக்
கொடுத்துவிடுகின்றது; இந்த அபிமாநமும் கௌரவமும் புதிய
உண்மை விஷயமாக உண்டாகக் கஷ்டப்படும்;' என்றிப்படி அவர்



யோசிப்பர். இந்த யோசனைகளில் புதிய உண்மை, பழைய குற்றம்
எனும் வ்யவஹாரம்தான் பலம் உள்ளது. பழைமையை ஆதரிப்
போர் இவ்வார்த்தைகளை மாற்றிச் சொல்வர்.

ஆனால், அந்த ஸங்காத்யக்ஷர் பழமையின் நாசம் காலக்ரமத்
தில் உண்டாகுமென்றும், அப்போது புதியது தேசமெங்கும் பரவு
மென்றும் சொல்கின்றனர். இது இப்படி யாகலாம். வர்ணாச்ரம
தர்மத்தை ஆகரிப்பவர் இருக்கும் பர்யந்தந்தான் அது அவரால்
ரக்ஷிக்கப்படவேண்டும். அவர் ஸங்க்யை வரவரக் குறையலாம்.
அவர் முற்றிலும் போனால் தர்மமும் போய்விடும். அப்போது
இன்னதென்று ஏற்படாத ஸோஷல் ரிபாரம் தர்மந்தான் மிகுதி
யாமோ? மஹம்மதிய தர்மம் மிகுதியாமோ? கிறிஸ்தவ தர்மம்
மிகுதியாமோ? நாஸ்திக தர்மம் மிகுதியாமோ? நமக்குத் தெரி
யாது.

**திருப்பூர் ஸோஷல்ரிபாரம் ஸங்கம்.**

திருப்பூர் ஸங்கத்துக்கு நல்வரவளித்தவர் தாசில்தார் தங்க
வேலு முதலியார். அவர் உபந்யாஸம் முழுதும்
ஹிந்து பத்ரிகையில் வெளியாயின. விப்ரத்வே
ஷம், வேதநிந்தை, நம்முடைய இதிஹாஸங்
களில் லாகவபுத்தி, தமிழ் பாஷா க்ரந்தங்க
ளில் அலக்ஷ்யதை, இவை அவ்வுபந்யாஸத்தில்
ப்ரகாசிக்கின்றன. ஸங்காத்யக்ஷரான ஸ்ரீநிவாஸய்யங்காரும் முத
லியார் தைர்யத்தை வியந்தனர். த்வேஷவிஷயமாகின்ற மதங்
களையும் மநுஷ்யர்களையும் திட்டவேண்டுமானால், பீனல் கோட்
ஒன்றுக்கு மாத்ரம் தத்காலம் பயப்படவேண்டு மாகையால், ப்ரா
யேண அதற்குத் தப்பினதாக வெண்ணிக்கொண்டு யார் எதைத்
தான் வையக்கூடாது? ஆதலால் ஐஹிகத்தில் ப்ரதீகார பயங்கைக்
கிடமின்றியே, ஸாதுக்களையும் ஸத்ஸம்ப்ரதாயங்களையும் தூஷித்
தல் தைர்ய லக்ஷணமாமோ?

**தேவாலய**

**மதுரை வர்ணாச்ரம தர்ம ரக்ஷண ஸங்கம்.**

த்ரவ்யங்களை இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்
காகச் செலவு செய்யக்கூடாதென்று மதுரை
வர்ணாச்ரம தர்ம ரக்ஷண ஸங்கத்தார் ஒரு தீர்
மாநம் செய்தார்கள். இந்தத் தீர்மாநாநுகுண
மாகச் சிலவற்றை நாம் முன்னமே எழுதியிருக்
கின்றோம். இங்கிலீஷ் படித்தவர்க்குள் சிலர்

)ப்படிப்பட்ட செலவை க்ரமமென்று யோசிக்கின்றார்கள். ஜூன்
ாஸம் 5-ந்தேதி ஹிந்து பேபரில் ஒரு வர்ணாச்ரம த்வேஷி, தேவ
ஸ்தாந தநம் ப்ராயேண துராத்மாக்களால் கொள்ளையடிக்கப்பட்ட
)தன்றும், அந்ய மதஸ்தர் ஹிந்துமதத்தில் சேராதபடியால் ஹிந்து
மதத்தில் ஜநங்களைச் சேர்க்க அந்த த்ரவ்யம் உபயோகப்பட
வேண்டாமென்றும், ஹிந்து மதத்தை அம்மதஸ்தர்க்குள் வ்ருத்தி
செய்வதைக் காட்டிலும் படிப்பைப் பரவச் செய்வதற்காகத்
தேவஸ்தாந த்ரவ்யம் செலவிடப்படலாமென்றும், வேண்டுமா
னால் படிப்பவர்க்கு ஹிந்து மதத்தையும் சொல்லிவைக்கலா மென்
றும் எழுதுகின்றார். துராக்ரஹக்ரஸ்தமான சித்தம் தன்னிலை
யைப் பிறரிடம் அத்யாஸம் செய்வதுடன், ந்யாய ஸஞ்சாரத்துக்கு
அத்யந்தம் அநர்ஹமாகவும் போய்விடுகின்றது. தேவஸ்தாந த்ர
வ்யம் கொள்ளையால் சேகரிக்கப்படவில்லை. சில தர்மத்வேஷி
கள் அதைக் கொள்ளை யடிக்கின்றாராயினும், வர்ணாச்ரம விரோ
திகள் அதைக் கைப்பற்றுவது ந்யாயமாமோ? இவ்வண்ணம் திரு
டனும் தன் செயற்கு ந்யாயம் சொல்லக்கூடும். மேற்குறித்த வர்ண
விரோதியானவர் தத்காலம் கவர்ன்மெண்டு பாடசாலைகளில் கற்
கும் ஹிந்து சிறுவர்களில் பலர் ராஜாங்க விரோதிகளாயும், நாஸ்
திகராகவும், மர்யாதையற்றவராகவும் பரிணமிக்கின்றார்கள் என்
பதை ஒப்புக்கொள்கின்றார். இவர்கள் இப்படியாவதைத் தேவ
ஸ்தாந த்ரவ்யத்தைச் செலவிட்டுத் தடுக்கவேண்டு மென்கிறார்.
ஹிந்து சிறுவர்கள் இங்கிலீஷ் படிப்பதும், வர்ணாச்ரம விரோதி
களாவதும் காலத்தின் தன்மை! அவர்கள் படிக்கும் படிப்பின்
பயன்; அவர்கள் அடைகின்ற ஸஹவாஸத்தின் தோஷம். இவை
தினம் அரைமணி ஹிந்து மத க்ரந்தாவலோகநம் செய்வதால்
மாறமாட்டா. இப்படிப்பட்டவர் கெடாமலிருக்க யத்நப்படுவ
தும் தேவஸ்தாநங்களின் கடமையல்ல. வர்ணாச்ரம தர்மாபிமா
நிகளும் ஹிந்து மதத்தை ஸர்வத்ர உபந்யாஸம் செய்வித்துச் சிறு
வர்களும் மற்றோர்களும் கெட்டுப்போகாமலிருக்கும்படிச் செய்வ
தற்காகத் தேவஸ்தாநம் மிகுதி பணத்தைச் செலவிடலாமென்பர்.
அது பண்டிதர்களை ஸம்ரக்ஷித்து அவர்களைக்கொண்டு செய்ய
வேண்டிய கார்யம். இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களை ரக்ஷிப்பதால்
அது ஏற்படமாட்டாது.

# குருபரம்பராஸாரசிந்தனை.

## ஆசார்யனைத் தேடி அடையவேண்டு மென்பது.

‘ஜ்ஞாநம் உண்டானால் போதாதோ? முமுக்ஷுவுக்கு ஆசார்
யாபேக்ஷை அதன் பிறகு நியமேந வேண்டுமோ? குருபக்தி பஜ
நம் வேணுமென்று நிர்ப்பந்தம் கூடுமோ? பக்தி ப்ரபத்திகளால்
மோக்ஷம்பெற வொண்ணாதோ? ஶாஸ்த்ராந்தரங்களில் பண்டித
னாயிருப்பவனுக்கு ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளுக்கு உபதேஷ்டா
வேண்டுமோ? ஆசார்ய நிரபேக்ஷமாக உபயுக்தார்த்தங்களை
அவன் அறிந்துகொள்ளக்கூடாதோ? அநந்ய பக்தியால் தன்னை
அறிந்து அடையக்கூடுமென்று கீதாசார்யன் மொழியவில்லையோ?
ஆதலால் முமுக்ஷுக்கள் எல்லார்க்கும் ஆசார்யவத்வம் வேண்
டுமோ?’ என்று இவ்வண்ணம் சங்கைகள் உதிக்கக்கூடும். அதற்
காகத் தர்மம் அறிந்தவர் அநுஷ்டாநம் ப்ரமாணமெனும் வசநப்
படி மதுரகவிகளுடைய அநுஷ்டாநத்தை ப்ரமாணமாகக் காட்டு
கிறார் இன்பத்தில் என்று ஆரம்பிக்கின்ற செய்யுளால். (1)

இன்பத்தில், இறைஞ்சுதலில், இசையும்பேற்றில், இகழாத
பல்லுறவில், இராகமாற்றில், தன்பற்றில், வினைவிலக்கில், தக
வோக்கத்தில், தத்துவத்தை யுணர்த்துதலில், தன்மையாக்கில்,
என்று இந்தப் பத்து விதமாக, மதுரகவிகள் அருளிச்செய்த ‘கண்
ணிநுண் சிறுத்தாம்பினால்’ எனும் பத்துப் பாட்டுகளுடைய அர்த்
தங்களை ஸங்க்ரஹிக்கின்றார். ‘குருகூர்நம்பி யென்றக்கால் அண்
ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே’, என்றும், ‘நாவினால் நவிற்றி
இன்ப மெய்தினேன்’ என்றும், சடகோபன் பெயரைச் சொல்லி

(1) இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும்பேற்றி லிகழாத பல்லுறவி லிரா
கமாற்றில், தன்பத்தில் வினைவிலக்கில் தகவோக்கத்தில் தத்துவத்தை
யுணர்த்துதலில் தன்மையாக்கில், அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க வரு
மறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு, துன்பற்ற மதுரகவி தோன்றக்
காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே.

மதுரகவி ஆநந்தமடைந்தார் என்பதை 'இன்பத்தில்' எனும் பதத் தால் காட்டுகிறார். 'மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மை யே' என்று மதுரகவிகள் சடகோபன் திருவடிகளை ஆச்ரயித்த விஷயத்தை 'இறைஞ்சுதலில்' என்று அநுவதிக்கிறார். 'தேவபிரா னுடைக் கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்' என்று மதுரகவி வேண்டிய புருஷார்த்தத்தை 'இசையும்பேற்றில்' எனும் சொற்க ளால் விவரிக்கின்றார். 'அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும் தன் மையான்' என்று மதுரகவிகள் தமக்கு ஸ்வரூப ப்ராப்தமான ஸகல வித பந்துத்வத்தைச் சடகோபனிடம் பாராட்டியதை, 'இகழாத பல்லுறவில்' என்று ஸமர்த்திக்கிறார். 'நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும், நம்பினேன் மடவாரையு முன்னெலாம், செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக், கன்பனாய் அடியேன் சதிர் ந்தேனின்றே' என்று மதுரகவிகள் அநுசித விஷயப் பற்றுகளை ...ெல்லாம் நிவர்த்தித்தபடியை, 'இராகமாற்றில்' என்று அநுஸந் ...க்கிறார். 'இன்று தன் புகழேத்த வருளினான்' என மதுரகவிகள், நம் ஆசார்யனை சடகோபன், தாமே க்ருபைகொண்டு, தம்மிடம் ...க்தியை உண்டாக்கினானெனச் சொன்ன அர்த்தத்தைத் 'தன்பத் ...தில்' என ஸங்க்ரஹித்தார். 'பண்டை வல்வினை பாற்றி யருளினான்' ...என்று, மதுரகவிகள் தம்முடைய குரு, தம்முடைய பூர்வ கர்மங் ...களைப் போக்கியதை ஸ்மரித்தார் என்பதை, 'வினைவிலக்கில்' ...எனும் சொற்களால் காட்டியருளினார். 'அருள்கண்டீர் இவ்வுலகி ...னில் மிக்கதே' எனச் சடகோபனுடைய க்ருபையின் ஆதிக்யத் ...தை மதுரகவி வர்ணித்ததைத் 'தகவோக்கத்தில்' என மறுமொ ...ழிப்படுத்தியுள்ளார். 'வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ் சுள் நிறுத்தினான்' என்று மதுரகவி, தமதாசார்யன் வேதாந்தார்த் தங்களின் தத்வங்களை, அதாவது சித் அசித் ஈச்வர தத்வங்களின் நிலையைத் தம்முடைய ப்ரபந்தங்களால் பாடி, தமக்கு அவற்றை நன்றாக வுபதேசித்து, 'நெஞ்சுள் நிறுத்தினான்' என அருளிச்செய்த தைத் 'தத்துவத்தை யுணர்த்துதலில்' என்று ஸாதித்தருளினார். 'செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்' என்று, மதுரகவி, சடகோபன் தம்மை ஸ்வரூபத்தில் நிறுத்தியதை, அதாவது, தமக் குப் பாகவதத்வத்தை உண்டாக்கிப் பகவத் பாகவத கைங்கர்யங் களைத் தந்தருளியதை மொழிந்தார். அதையே 'தன்மையாக்கில்' என்று தேசிகன் திருவுள்ளம்பற்றினார்.

இவ்வகையாக, நாம ஸங்கீர்த்தநத்தால் ... ...ன்ன, ஆச்ரயண மென்ன, பகவதநுபவரூபமான புருஷார்த்த மென்ன, ஸகலவித பந்துத்வமென்ன, விஷயத்தில் ஆசையை விலக்குதல் என்ன, தன்னிடம் பக்தியை உண்டுபண்ணுதல் என்ன, ஸர்வபாப விமோக்ஷண மென்ன, க்ருபாதிக்ய மென்ன, தத்வார்த்த ப்ரதர்சந மென்ன, ஸ்வரூப ப்ராப்தி யென்ன, இவ்வுப காரங்களை யெல்லாம் ஆச்ரிதர்க்குத் தானே பண்ணும்படியாக அவதாரம் செய்தருளிப் ஆச்சர்யகுண சேஷ்டிதங்களுடன் கூடின ஸர்வேச்வரன் அவஸர ப்ரதீக்ஷனாய் நிற்க, அவனை அநா தரித்து, ஸூக்ஷ்மார்த்த கர்ப்பங்களான வேதங்களை த்ராவிட பாஷையில் பண்ணின நம்மாழ்வாருடைய திருவடிகளை அவலம் பித்து, ஸம்ஸாரத்துக்குரிய எல்லாத் துன்பங்களையும் நிவர்த்தித்த மதுரகவிகள், நிஸர்க்க ஸுஹ்ருத்தராய், ஸர்வபலப்ரதனாய், ஸர் வேச்வரன் இருந்தாலும், ஸதாசார்ய ஸமாச்ரயண மில்லாதார் க்கு மோக்ஷம் கிடைக்கமாட்டாதென்று, ஜகத்துக்கெல்லாம் ஸ்பஷ்டமாகத் தோற்றும்படி காட்டும் ப்ராசீந மார்க்கமானது, அத்யவஸாய முடையவர்களுக்கு நல்ல மோக்ஷ மார்க்கமாயிருக் கின்றது என்று ஸாதித்தருளினார்.

இப்படி மதுரகவிகள் நடந்ததை அநுஸரித்து, "பாபிஷ்ட னான க்ஷத்ரபந்துவும், புண்யங்கள் செய்த புண்டரீகனும் ஆசார்யர் களை ஆச்ரயித்தபடியால் மோக்ஷ மடைந்தார்கள். ஆகையால் முமுக்ஷுவானவன் ஆசார்யவான் ஆகக்கடவன்" (1) என்னும் ப்ரமாணம் எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் முமுக்ஷுக் களுக்கு ஆசார்ய வம்சம் பகவானளவும் செல்லும்படி அநுஸந் திக்கவேண்டுமென்பதும் விதிக்கப்பட்டதாகச் சொல்லுகின்றார். ஆசார்ய ஸமாச்ரயண மில்லையாகில் புண்யக்ருத்வம் மோக்ஷகார ணமாகமாட்டாது; அது உண்டேயாகில் பாபிஷ்டத்வம் மோக்ஷ ப்ரதிபந்தகமாகாது. ஆதலால் ஆசார்ய ஸமாச்ரயணம் ஸர்வ முமுக்ஷுக்களாலும் அவச்யம் கர்த்தவ்யம் என்று கருத்து. இது ச்ருதிப்ரஸித்தம். "ஆசார்யவானான புருஷன் (ஸத்சப்தவாச்ய

(1) பாபிஷ்ட2: க்ஷத்ரப3ந்து4ஶ்ச புண்ட3ரீகஶ்ச புண்யக்ருத் ।
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதா3சார்யவான் ப4வேத் ॥

ஞனை பரமாத்மாவை) அறிகின்றான்", (1) "ஆசார்யனிடமிருந்தே அறிந்த வித்யை ஸாதுவாக இருக்கும்" (2) "அதை (ப்ரஹ்மத்தை) அறியும்பொருட்டு (நிர்வேதம் பிறந்து முமுக்ஷுவான) அவன் குரு ஸமீபத்திற்கே செல்லக்கடவன்" (3) என்பவை ஶ்ருதி ப்ரமாணங்கள். இவற்றைக் கணிசித்தால், மோக்ஷத்திற்கு உபயுக்தமான ஜ்ஞாநத்தின்பொருட்டுக் கேவல பகவத்பஜநம், கேவல புண்ய கர்மங்கள், புஸ்தக நிரீக்ஷணங்கள் முதலானவை பயன்படமாட்டா என்று விளங்கும் ஆசார்யவத்தையை மோக்ஷ காரணமென்று அருளிச்செய்தார். அதன் தாத்பர்யம் என்னெனில், மோக்ஷோபயுக்த ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுதல் ஆசார்யாதீநமாயிருக்கின்றது என்பதே. உத்பந்நமான ஜ்ஞாநத்துக்கு அபிவ்ருத்தியும் வேண்டும். அவற்றிற்குத் தக்கபடி ஶீலவ்ருத்தத்தில் நிஷ்டையும் அபேக்ஷிதம். இவை ஆசார்யவத்வமின்றி ஏற்படமாட்டா. 'அநந்ய பக்தியால் நான் யதாவத்தாய் அறியப்படுவேன்' என்று ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னதும், 'ஆசார்யவானுக்குத் தான் அநந்ய பக்தி முதலான தத்வஜ்ஞாந ஸாதநங்களாய் எடுக்கப்பட்ட ஸஹகார்யந்தரங்கள் கிடைக்கும் எனும் தாத்பர்யத்தால்' என்று ஒப்புக்கொள்ளத்தக்கது.

## ஆசார்யபரம்பராநுஸந்தாநம்.

இன்னும் ஆசார்ய வம்சம் பகவானளவும் செல்ல அநுஸந்திக்க வேண்டுமென்றார். அதனால் தான், அதிகாரத்தின் முதல் ஶ்லோகத்தில் 'குருக்களின் பொருட்டும் அவர்கள் குருக்களின் பொருட்டும் நமஸ்காரோக்திகளை அப்யஸிக்கின்றோம்' என்று ஸாதித்தருளினர். குருபங்க்தியை அநுஸந்தாநம் பண்ணவேண்டுமென்றால், அவரைப் பக்தியுடன் நினைத்து த்யாநிக்கவேண்டுமென்று கருத்து. அதற்கு ப்ரமாணங்கள் "அந்த ஆசார்யவம்சம் அறியத்தக்கது" (4) என்றும், "பகவான் முதற்கொண்டு ஆசார்யர்களில் ஒவ்வொருவரையும் நாமஞ் சொல்லி" (5) என்றும், ஶ்ருதி

(1) ஆசார்யவாந் புருஷோ வேத (2) ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத் (3) தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத். (4) ஸ ஆசார்ய வம்ஶோ ஜ்ஞேய: (5) ஆசார்யாணாம் அஸாவஸாவித்யா பகவத்த:.



களை உதாஹரித்தன. இந்த ஆசார்ய பரம்பரையானது அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை உபதேசித்தவர்கள் பரம்பரை. அத்தகைய பரம்பரையைச் சொல்லிக்கொண்டு தான் முண்டகோபநிஷத்தில் ஆசார்யன் ஶிஷ்யனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசித்தனர். ப்ருஹதாரண்யகோபநிஷத்திலும், '[illegible]," என்றாரம்பித்து ஆசார்ய வம்ஶம் விஸ்தாரமாக, 'ஸநாதநஸ் ஸநகாத், ஸநக: பரமேஷ்டிந:, பரமேஷ்டீ ப்ரஹ்மண:, ப்ரஹ்ம ஸ்வயம்பு ப்ரஹ்மணே நம:" என்று முடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த பரம்பரையானது நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்க்குப் பகவானில் ஆரம்பித்து, லக்ஷ்மீ, விஷ்வக்ஸேநர், சடகோபன், நாதமுனிகள், ஆளவந்தார், பாஷ்யகாரர், வேதாந்த தேசிகன் முதலானவர்களால் நோக்கப்பட்டிருக்கின்றது. மேலே குறித்த ஒவ்வொரு ஆசார்யரிடமும் பகவானுடைய அநுப்ரவேஶமானது ப்ரமாணஸித்தம் என்பது முன்னமே காட்டப்பட்டது. இந்த பரம்பராநுஸந்தாநம் முமுக்ஷுவுக்கு நியமேந வேண்டுமென்று ஸாதித்தருளினர். ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யன் பகவான் என்பதை '[illegible]' என்றாரம்பித்த பாரதாதி வசநங்களால் ஸமர்த்தித்தனர். பிறகு சதுர்முக ஸநத்குமார நாரத பராஶர வ்யாஸாதி பரம்பரைகளாலும், அவதார விஶேஷங்களாலும், உபதேச க்ரமத்தாலும், பகு க்ரந்தங்களாலும், அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை லோகஹிதார்த்தம் யுகாந்தரங்களில் ப்ரவர்த்திப்பித்த பரமேஶ்வரன், அந்தப் பரம்பரைகளை நமக்கு உபகார பரம்பரைகளாகச் செய்தருளினன். கலியில் பாஷண்டிகள் பெருகி, ஶ்ருத்யர்த்தங்களை பகுமதிகள் கலக்கிவிட்ட பிறகு, அவற்றை ப்ராசீந ஸம்ப்ரதாயங்களோடொக்க, அப்பாஷண்டிகள் நிரஸந பூர்வகமாக, லோகத்தில் நிலைநிறுத்த ஸர்வேஶ்வரனே நம்முடைய ஸம்ப்ரதாய ஆசார்யர்களிடம் அநுப்ரவேஶம் பண்ணினபடியால், அஸ்மதாசார்யர்கள் மற்றோரைக் காட்டிலும் நமக்கு விசேஷமாக உபகரித்தவர்களாகின்றார்கள். '[illegible] ப்ராஹ்மண: காருண்ய வீக்ஷண:" என்று, குத்ருஷ்டிகளாகின்ற வேஷதாரிகள் வாயில் விழுந்து மூழ்கிப்போகும் வேதங்களைக் கைகொடுத்துக் கரையேற்றிய

ஸர்வஜ்ஞன் என்றும், '[illegible]' என்று ஶ்ருதிகள் விஷயமாகப் பரர் செய்யும் அபார்த்தங்களை வேர் பிடுங்கினரென்றும், தேசிகனே ஸ்ரீ பாஷ்யகாரரை வர்ணித்திருக்கின்றார். யதிராஜ ஸப்ததி முழுவதும் இந்த யோசனை மிகுந்து நிற்கின்றது.

பகவத் விஷயத்தில் போலே குரு விஷயத்திலும், பரையான பக்தியுடையவனுக்குத் தான் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் ப்ரகாஶிக்கும் என்று திருவுள்ளம்பற்றி அதற்கு நிதர்சநமான கட ஜாபாலாதி ஶ்ருதிகளையும் ஸஞ்ஜயாதி வ்ருத்தாந்தங்களையும் எடுத்துரைத்தார். "எவனுக்குப் பகவானிடம் அதிஶயித பக்தியுளதோ, பகவானிடம்போல் குருவிஷயமும் உளதோ, அந்த மஹாத்மாவுக்கு மேலே சொன்ன அர்த்தங்கள் ப்ரகாசிக்கின்றன" (1) என்று கடஶ்ருதி. "ஆசார்யனிடமிருந்தே அறியப்பட்ட வித்யை ஸாதுமத்வத்தை அடையும் என்று தேவரீரைப் போன்றவரிடம் என்னால் கேட்கப்பட்டது" (2) என்று சாந்தோக்யோபநிஷத்தில் ஸத்யகாமரெனும் ஜாபாலர் வசநம். ஶ்வேதாஶ்வதரஸுப் பாலோபநிஷத்களில் இதர ஶ்ருதிகளும் உண்டு. ஸஞ்ஜய வ்ருத்தாந்தம், "வ்யாஸருடைய அநுக்ரஹத்தினாலே யோக மெனப்பட்ட இந்தப் பரம ரஹஸ்யத்தைத் தானே சொல்லுகிற ஷாட்குண்ய பரிபூர்ணனாகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடம் நான் நேரில் கேட்டேன்" (3) எனும் ஶ்லோகத்தில் கண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட குரு பக்தியற்றவர்க்கு ஜ்ஞாந ஸம்பத்து உண்டாகமாட்டது என்பதை ஶிஷ்யர்களுடைய ஜ்ஞாந தாரதம்யத்தில் கண்டுகொள்வது என்று ஸாதிக்கின்றார். மேற்குறித்த ஶ்ருதிகளை அநுஸரித்து, ஒரு ஸ்ம்ருதி ப்ரமாணமும் எடுக்கப்பட்டிருக்

(1) 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍁𑌰𑍌 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

(2) 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌮𑍇 𑌭𑌗𑌵𑌦𑍍𑌦𑍃𑌶𑍇𑌭𑍍𑌯 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌸𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌤𑌿𑌤𑌿 (3) 𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍇𑌤𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌹𑌂 𑌪𑌰𑌂 । 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌕𑌥𑌯𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 ॥



கின்றது. "ஜ்ஞாதாவானவன் குருவை ப்ரகாஶிப்பிக்கக்கடவன்; குருவால் உபதிஷ்டமான ரஹஸ்ய ரஹஸ்யார்த்தங்களை ப்ரயத்நத்துடன் ரக்ஷிக்கக்கடவன். குருவை ப்ரகாசியாமையாலும், ரஹஸ்யாதிகளை ப்ரகாசிப்பதாலும் ஸம்பத்தும் ஆயுஸ்ஸும் க்ஷயிக்கும்" (1) என்பது ஸ்ம்ருதி. ஒருவன் குருவை ப்ரகாசிக்கிறதும், மற்றொருவன் ப்ரகாசியா தொழிகின்றதும் குருபக்தியில் தாரதம்யத்தைப் பொறுத்துள.

ஆசார்யர்களுடைய அநுஸந்தாநமின்றி அவரை ப்ரகாஶிப்பதென்பது ஸித்திக்கமாட்டாது. அந்த அநுஸந்தாநமும் குரு பக்தியின் அதிஶயம் இல்லாமல் நேரிடாதென்று கருத்து. மேல் எடுத்த ஸ்ம்ருதி வசநத்தால் குருப்ரகாஶநம் செய்யாமைக்கு ப்ரத்யவாயம் சொல்லியிருக்கின்றது. ஆனபடியால் தேசிகனால் ஸாதிக்கப்பட்டிருக்கிற "ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம்" எனும் ஶ்லோகத்தில் கண்டிருக்கும் குணங்கள் பொருந்தியிருக்கும் புருஷனிடம் தான் ஆசார்யத்வம் பொருந்தும். அப்படியொரு புருஷன் கிடைக்கானாகில், யதோசிதம் அக்குணங்கள் ப்ரகாசிக்குமிடமே ஆசார்யவரணம் உசிதம் என்பது ஸ்பஷ்டம். ஶ்ருதியிலும், "[illegible]" என்று துடங்கி, "[illegible]" எனும் வரையில், பின்னால் சொல்லப்பட்ட தத்வார்த்தங்கள் ஸாம்ப்ரதாயிகமென்று ஜ்ஞாபிக்கும்பொருட்டு, மஹாத்மாக்களாகிய ஆசார்யர்களுடைய ப்ரகாஶநம் செய்யப்பட்டிருக்கின்றது. "அந்த ஆசார்யவம்ஶம் அறியத்தக்கது, அதாவது அநுஸந்திக்கது", (2) எனும் ஶ்ருதி குருபரம்பராநுஸந்தாநத்தை விதித்தபடியால், அதைச் செய்யாதொழிதல் ப்ரத்யவாயமென்பது ஸித்தம். குரு பக்தி பரீவாஹமான குரு ப்ரகாஶநம், மேல்குறித்த கடஶ்ருதியால், பகவத் பக்தியை எப்படியொருவன் ப்ரகாஶிக்கவேண்டுமோ, அவ்வண்ணமே நிற்கவேண்டுமென்று த்ருடப்படுத்தப்பட்டிருக்கின்றது.

(1) [illegible] । 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌯𑍇𑌤𑍇 𑌸𑌮𑍍𑌪𑌦𑌾𑌯𑍁𑌷𑍀 ॥

(2) 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌂𑌶𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 ।

குருபக்தி பூர்ணமாயிருந்தால் தான் ஜ்ஞாந ஸம்பத்தி யுண்டாகுமென்று கருத்து. மேல்குறித்த ஶ்லோகத்தில் ஸம்பத் ஶப்தத்துக்கு 'விஶதமான ஜ்ஞாநத்துடன் கூடின பகவதநுபவம்' என்று அர்த்தம் செய்கின்றார்கள். கேவலம் போகங்களுக்கு ஸாதநமாயிருக்கும் தநம், அந்த ஸம்பத் சப்தத்தால் சொல்லப்படவில்லை. சொன்ன அர்த்தத்தை த்ருடப்படுத்தும்படி "அபயம்ஸத்த்வஸம்ஶுத்தி:" என்றாரம்பித்து, "பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய" என்று முடியும் கீதா ஶ்லோகங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. அதாவது 'இஷ்டங்களின் நிவ்ருத்தியாலும் அநிஷ்டங்களின் ப்ராப்தியாலும் உண்டாகும் துக்கரூபமான பயம் இல்லாமை, ரஜோகுண தமோகுண ஸம்பந்தமற்ற ஸத்வத்தின் சுத்தி, ப்ரக்ருதி வியுக்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபஜ்ஞாநமும் அதில் நிஷ்டையும், தாநம், மநோஜயம், பகவானுடைய ஆராதநரூபமான நிஷ்காமகர்மம், ஸ்வாத்யாயம், தபஸ், த்ரிகரணங்களின் ருஜுபாவம், அஹிம்ஸை, ஸத்யம், கோபமில்லாமை, த்யாகம், இந்த்ரியஜயம், கோள்சொல்லாமை, பூதங்களினிடம் தயை, விஷயங்களில் ஆசையில்லாமை, ம்ருதுஸ்வபாவம், துஷ்கர்மம் செய்வதில் வெட்கம், சபலமில்லாமை, தேஜஸ், பொறுமை, தைர்யம், ஶௌசம், த்ரோஹம் செய்யாமை, அதிகர்வமில்லாமை இவைகள் பகவதாஜ்ஞாநுஸாரிகளான தேவதைகளுடைய ஸம்பத்து; இவற்றை உத்தேசித்துப் பிறந்தவனுக்கே அவை உண்டாகின்றன' எனும் ப்ரகரணத்தில் ஸம்பத் சப்தம் விஶத ஜ்ஞாநத்துடன் கூடிப் பகவதாஜ்ஞையை அநுஸரித்து நடத்தல் என்று ஏற்படுகின்றது. மேற்படி ஶ்லோகத்தில் 'ஆயுஸ்' என்பதால் ஜீவாத்மாவின் ஸத்தைக்குக் காரணமான பகவத் ஶேஷத்வாநுஸந்தாநமும், ஸ்வ ஸ்வரூபத்தில் நிஷ்டையும் விவக்ஷிதம். உத்பந்ந ஜ்ஞாநாநுவ்ருத்தியும் அதற்கேற்றபடி அநுஷ்டாநமும் ஆயுஸ் சப்தார்த்தமென்பர். இதற்கு ஆதாரமாக "அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத, ஸந்தமேநம் ததோ விது:", எனும் ஶ்ருதியை உதாஹரிக்கின்றனர். அதாவது, பகவானுடைய அஸ்தித்வத்தில் விஶ்வஸித்து, அந்த விஶ்வாஸத்துக்கு அநுரூபமாக பகவத் ஸ்வரூபம், ஸ்வஸ்வரூபம், தனக்கும் பகவானுக்கும் உண்டாயிருக்கின்ற ஸம்பந்தம், இவற்றின் ஜ்ஞாநமும், அந்த ஜ்ஞாநத்துக் குரித்தான நிஷ்டையு முள்ளவனைத்தான் இருக்கின்றவனாக ஶ்ருதி சொல்லுகின்றது. இதரர் இல்லாதவர் போலாம். தேசிகனே ஶிஷ்யக்ருத்யாதிகாரத்தில், '[illegible] ப்ரகாஶயேச்ச தீமாந்,' எனும் ஶ்லோகத்தை எடுத்து, ஸம்பதாயுஷீ எனும் பதங்கட்கு, 'ஜ்ஞாந வைஶத்ய பூர்வகமான பகவதநுபவ ஸம்பத்தும், ஆத்மாவுக்கு ஸத்தா ஹேதுவான ஶேஷத்வாநுஸந்தாந பூர்வக ஸ்வநிஷ்டையும்' என்று வ்யாக்யாநம் செய்தருள்கின்றார்.



ஆசார்யனிடம் பல ஶிஷ்யர்கள் அர்த்தங்கள் ஸமமாகக் கேட்டபோதும், அவர்களுக்குள் ஆசார்ய பக்திக்கு அநுரூபமாக ஜ்ஞாந ஸம்பத்தும் நிலைக்குமென்பதை ப்ரத்யக்ஷமாகக் காணலாம் என்று அருளிச்செய்கின்றார். ஆசார்யன் தானறிந்த அத்யாத்ம விஷயங்களைக் குணாதிகர்களான ஶிஷ்யர்களுக்கும் கடுக ப்ரகாஶியாம லிருப்பதால் அவனுடைய நிஷ்டை குலையாது. இதற்கு த்ருஷ்டாந்தமாகக் குணபூர்த்தியுள்ள ஜாநஶ்ருதியெனும் ராஜனுக்கு மிகவும் பரீக்ஷித்து ஸம்வர்க்க வித்யையை உபதேசித்தவரைக் கவரச் சொல்கின்றார். '[illegible]' என்பதால், குணாதிகர் விஷயத்திலும் பரீக்ஷித்து உபதேசம் செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது. "பல உபாயங்களால் பரீக்ஷித்து, ப்ரதிப்ரயோஜநாபேக்ஷையின்றி க்ருபையால் சொல்லக்கடவன்" (1) என்கிறபடியும், "ராஜ்யத்தில் செய்யப்பட்ட பாபம் ராஜாவைச் சேரும்; ராஜாவின் பாபம் புரோஹிதனைச் சேரும்; பத்நீ செய்யும் பாபம்புருஷனைச் சேரும்; சிஷ்யனுடைய பாபம் குருவையும் சேரும்"; (2) என்கிறப்படியும் பரீக்ஷித்து உபதேசிக்கவேண்டுமென்றும், இப்படிக்கின்றி ஶிஷ்யனிடம் தோன்றினதே போதுமான குணமென்று நினைத்து, அநர்ஹனான ஶிஷ்யனுக்கு உபதேசித்தானாகில்,

(1) பரீக்ஷ்ய ஸர்வோபாயைஶ் க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோ வதேத்।

(2) ராஜா ராஷ்ட்ரக்ருதம் பாபம் ராஜபாபம் புரோஹித:।
பர்த்தா ச ஸ்த்ரீக்ருதம் பாபம் ஶிஷ்யபாபம் குருஸ்ததா॥

அந்த ஶிஷ்யன் செய்யும் பாபம் ஆசார்யனைச் சேரும் என்றும் ஏற்படுகின்றது. அதனால் ஆசார்யனுடைய நிஷ்டையும் குறைந்து போகும். ஶிஷ்யனென ஒருவன் வந்த மாத்ரத்தாலே விசாரியாமல், உபதேசிக்கக்கூடாது என்பதற்கு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார். ப்ரஹ்மா, அவரிடம் கபடரூபமாய் வந்த இந்த்ரனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசம் பண்ணினார்; அதனால் அவர் ப்ரஹ்மவித்யையை மறக்கும்படி நேரிட்டது. அவர்க்கு ஶிக்ஷா ரூபமாகப் பகவான், அவர் ஶிஷ்யனை நாரதரைக்கொண்டு மீளவும் அவர்க்கு ஜ்ஞானத்தை உணர்த்துவிக்கவேண்டியிருந்தது. இந்த வ்ருத்தாந்தத்தைக் காட்ட, "நாராயண முகத்தால் உத்பந்நமான பாஞ்சராத்ரத்தை நாரதர் தான் அறிந்தபடியும் கேட்டபடியும் ப்ரஹ்மாவினுடைய ஸ்தாநத்தில் மறுபடியும் கேட்பித்தார். ருத்ரன் ப்ரஹ்மாவினிடம் (அதைக்) கேட்டு மீண்டும் தேவிக்கு உரைத்தார்" (1) என்று பாரதம் மோக்ஷ தர்மவசநம் எடுக்கப்படுகின்றது.

குருவின் ப்ரகாஶநம் செய்யாதொழிந்தால் ஜ்ஞாந ஸம்பத்தின் க்ஷயமும், ரஹஸ்யங்களின் ப்ரகாஶத்தால் ஸ்வநிஷ்டையாகும் ஆயுஸ்ஸின் க்ஷயமும் நேரிடுமென்பது, வாக்யத்தில் சொற்களின் க்ரம ஔசித்யத்தாலும், மேலே காட்டப்பட்ட ப்ரமாணங்களின் ப்ரஸித்தியாலும் ஏற்படும். ஒவ்வொரு அதிக்ரமத்துக்கும் இரண்டு ப்ரத்யவாயங்களும் உண்டாமென்று அர்த்தம் சொல்வதற்கு ப்ரமாணந்தரங்கள் சொல்லாவிட்டாலும், வாக்ய வ்யுத்பத்தியில் விரோதமில்லை.

பத்ராதிபர்.

---

(1) பாஞ்சராத்ராநுஸம்ஸ்ருதம் । நாராயணமுகோத்கீதம் நாரதோ ஶ்ராவயத் புந: । ப்ரஹ்மண: ஸதநே தாத யதாத்ருஷ்டம் யதாஶ்ருதம் । ஶங்கராய ப்ரஹ்ம ஸம்ஸாத்ரோ ருத்ர: ஸ்கந்தாய தேவ்யை கதயாமாஸ ஹ ।

# த்ரிதசாலயம்.

அதன் பிறகு அங்கு ஸமீபத்தில் நின்ற முநிகளை நோக்கி, ஸ்ரீ க்ருஷ்ணனைக் காட்டி, அவர்தான் பரமவஸ்து வென்றும், ஸநாதந தர்மமென்றும், மோக்ஷப்ரதனென்றும், தஶர்த்தம் மார்க்கமுமாகின்றாரென்றும், அவரே ஸதா த்யாநிக்கத்தக்கவரென்றும், "ஹரிரேக: ஸதா த்யேயோ பவத்பி: ஸத்வஸம்ஸ்திதை: । * * ஓமித்யேவம் ஸதா விப்ரா: படத த்யாத கேஶவம் । * * ஶமெஜ ஷட்கர்மணைஷ்டா: ப்ரவிஶந்தி யோகா: । யஸ்யாக்ஷரோம்ஸவஸ்ய தேத ததோ ஜாநீத கேஶவம் । உபாஸ்யோயம் ஸதா விப்ரா உபாயோஸ்மி ஹரிஸ்ம்ருத: । உபாயோயம் மயா ப்ரோக்தோ நாந்ய: ஸம் தேஷாமிஹ க்வசித் । கல்யாணீ ஸதா விப்ரா யத்ஸ்வம் ஸேவநாம்ஸஹ । யதோ வாசோ நிவர்த்தந்தே ஸம்ஸாராவதியத்நத: । ததாக்ரம்ய விஷ்ணுஶ்ரு யதா தேவம் ப்ரவிஶதி ।" என்கிற ஶ்லோகங்களைச் சொல்லிப் புராரி பகவானை ஸ்துதித்துவிட்டு, ஶங்கரன் அந்தர்தாநமடைந்தார். பகவானும் கருடன்மீதேறிப் பதரிக்குச் சென்றனர்.

இவ்விடம் காட்டப்பட்ட பகு ஹரிவம்ஶ ஶ்லோகங்கள் ஸ்ரீ ஶங்கராசார்யக்ருத ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் எடுக்கப்பட்டுள. ஸர்வ முமுக்ஷுக்களுக்கும் உபாயபூதனையும் உபேயனையும் ஸ்ரீ க்ருஷ்ணன் இருந்தபோதிலும், சங்கரனுடைய க்ருபையால் பகவானைப்பற்றின ஜ்ஞாநபக்திகள் பகு பெயர்க்கு உண்டாயிருக்கின்றபடியால், ஸ்ரீ ஶங்கராசார்யரும் தாம் செய்த ஸர்வஸித்தாந்த ஸங்க்ரஹத்தில், 'ஶாஸ்த்ராணி ஜ்ஞாநஸம்ஹிதா' என்றும், 'ஶோகநிவ்ருத்த ஜநார்தந:' என்றும் காட்டியிருக்கின்றார். 'ஸவ்ய

[illegible] எனும் ச்ருதி வாக்யத்தை மேலே விவரித்த விதமாகக் கைலாஸ பர்வதத்தில் ஸர்வ தேவர்கள் ருஷிகள் முன்னிலையில், உமாபதியைக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணன் வ்யாக்யானம் செய்வித்தார். ஸ்ரீ ஶங்கரோபாஸ்தி செய்கின்றவர்களும் அவிதி பூர்வகமாய்ப் பகவானை உபாஸிக்கின்றவர்களே. இவ்வர்த்தத்தை ஸுரேச்வராசார்யரும்,

[illegible]

எனும் ச்லோகங்களால் ஸங்க்ரஹித்திருக்கின்றார்.

மஹாபாரதம், பீஷ்மபர்வம், ஆறாவது அத்யாயத்தில், நாம் மேலே விவரித்த பூபாகத்தை மேருபர்வத பாகமாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. " [illegible]



[illegible] ''

என்றும், மறுபடியும்

" [illegible]

* * * * * *

[illegible] ''

என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் கைலாஸம், மானஸம், பதரீமுதலான ஸ்தல விசேஷங்களுடன்கூடிய ஹிமாசல ப்ரதேசத்தினுடைய ரமணீயதை மனுஷ்யனுடைய புத்திக்கு எட்டாததென்றும், அங்கே தேவ கந்தர்வாதிகள் ப்ரதி தினமும் கூடி விளையாடுகின்றன ரென்றும், ப்ரஹ்மா சிவன் இந்த்ரன் முதலான தேவர்கள் அவ்விடங்களில் சேர்ந்து பகவதாராதந ரூபமான பல யாகங்களை நடத்துகின்றார்களென்றும், குபேரன் அங்கே வஸிக்கின்றானென்றும், ஒரு கர்ணிகார வநத்தில் உமாஸஹாய

னாய்ப் பசுபதியானவர் ப்ரீதியுடன் வஸிக்கின்றாரென்றும், அவர் தமது பாதங்களில் கர்ணிகார மாலையைத் தரிக்கின்றாரென்றும், மஹாத்மாக்கள் அவரைத் தர்சிக்கின்றன ரென்றும், சந்த்ரப்ரபா எனும் மடுவில் ஆகாசகங்கையானவள் இடைவிடாமல் விழுகின்றனளென்றும், அவளே பல நதிகளாக ஆர்யாவர்த்தத்தில் ப்ரவஹிக்கின்றாளென்றும், அப்படிப்பட்ட ஸ்தானம் தபஸ்ஸுக்கு மிகவும் யோக்யமான ப்ரதேசமென்றும், பகவான் ஶங்கரன் தேவதைகள் இவர்களுடைய ஸாந்நித்யம் அவ்விடத்தில் தபஸ் செய்பவர்க்கு ஸ்திரமாக ஏற்பட்டிருக்கிற தென்றும், தேவகங்கையானவள் அவ்விடங்களில் எல்லாம் ப்ரவஹிக்கின்றாளென்றும் வெளியாகின்றது. இதன்மேல் அந்த ப்ரதேசத்தைப் பற்றிய மற்றொரு கதாவிசேஷத்தை வரைகின்றோம்.

வநவாஸாவஸாநத்தில் யுத்தம் நிஶ்சயமென்றும், பீஷ்ம த்ரோண க்ருப கர்ண அஶ்வத்தாமாதிகள் துர்யோதந ஸஹாயரா யிருக்கின்றாரென்றும் தர்மபுத்ரர் அறிந்தவராய்க்கொண்டு, தம்முடைய பக்ஷத்திற்கு ஏகாஶ்ரயமா யிருந்த பார்த்தனைப் பார்த்து, “அந்தந்த காலத்தை யோசித்துத் தேவதைகளுடைய ப்ரஸாதாபிமுகனாய் இரு. உனது புத்தியை உக்ரமான தபஸ்ஸில் செலுத்து. வில்லை ஏந்திக் கவசம் தரித்துக் கட்கத்துடன் கூடினவனாய், ஸாதுவான வ்ருதங்களை யநுஷ்டித்துக்கொண்டு மநநசீலனாய் இரு. வடக்கு திக்கை நோக்கிச் செல். நீ செல்லும் மார்க்கத்தை யார்க்கும் சொல்லாதே. வ்ருத்ராஸுரனிடம் பயம்கொண்ட தேவர்களால் ஸமஸ்த திவ்யாஸ்த்ரங்களும் தம்முடைய முழு பலமும் இந்த்ரனிடம் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸர்வாஸ்த்ரங்களும் இவ்வண்ணம் ஓரிடத்தில் இருப்பதால், நீ அவற்றை ஸம்பாதித்துக் கொள்வாயாக. ஶக்ரனை அடைவாய். அவர் உனக்கு ஸர்வாஸ்த்ரங்களையும் தருவார். ஆதலால் நீ உடனே தீக்ஷிதனாய்க்கொண்டு புறப்பட்டுப் போய்ப் புரந்தரனைத் தர்சிப்பாயாக” என்று சொல்லி, அவர் தானே விதிப்படி அர்ஜுநனுக்குத் தீக்ஷை பண்ணிவைத்து, இந்த்ரனைத் தர்சிக்கப்போகும்படி அநுஜ்ஞை பண்ணினார். அவ்விடம் கூடின ப்ராஹ்மண ஶ்ரேஷ்டர்களுக்குத் தநஞ்ஜயன் இஷ்டபூர்த்தி செய்தான். தர்மபுத்ரரையும் பீமஸேநனையும் வந்தநம் செய்தான். நகுல ஸஹதேவர்கள் அர்ஜுநனை வணங்கி நின்று, “வேண்டிய அஸ்த்ரங்களையும்



உன்னுடையஇஷ்டங்களையும் வாஸவனிடமிருந்து பெற்றுக்கொள். தர்மமறியாதவன், ஸித்தியில்லாதவன், சலசித்தன், ஶடன், இவர்களுக்குத் தேவர்கள் தர்ஶநம் தரமாட்டார்கள். பருஷோக்தியுடன் கூடினவன், பொறாமையுள்ளவன், தற்புகழ்ச்சி செய்கின்றவன், ஹிம்ஸை செய்கின்றவன், கொலை செய்பவன், நன்றி மறந்தவன், கோபமுள்ளவன், பொய் சொல்லுகின்றவன், அதிகமாக உண்பவன், நாஸ்திகன், மித்ரத்ரோஹம் செய்கின்றவன், கொடையற்றவன், பேராசைக்காரன், திருடன், குடியன், கொடியன் முதலானோர் நல்ல லோகத்தை யடைய மாட்டார்கள். நீயோ தயையுள்ளவன்; யாவரிடமும் ஹிதப்ரவ்ருத்தி யுள்ளவன்; இந்த்ரிய மநோஜயமுள்ளவன்; தைர்யமுள்ளவன்; தர்மமறிந்தவன்; பொறுமையுள்ளவன்; நற்செய்கைகளுடன் கூடினவன். ஆதலால் நீ இந்த்ரனைப் பார்ப்பாய். உன் போன்றவர்தான் தேவர்களுடைய ஸமாகமத்தை அடையக்கூடியவர்” என்று சொன்னார்கள். பாஞ்சாலியும் தநஞ்ஜயனுடைய க்ஷேமத்தை ப்ரார்த்தித்து, எல்லாத் தேவர்களையும் வணங்கினின்றாள். அவள் உரைத்தபடியே பாண்டவர்களுடைய ஸுக துக்கங்களும், பிழைப்பும், இறப்பும், ராஜ்யமும், ஐஶ்வர்யமும் பார்த்தனிடம் ப்ரதிஷ்டிதங்களாய் நின்றன. “கௌந்தேய! உனக்கு விடை தந்தேன். மங்களத்தைப் பொருந்துவாய். ஸர்வாஸ்த்ரங்களையும் அறிந்தவனாகத் திரும்பும் உனைக் காண்பேனாக!” என்று க்ருஷ்ணை மொழிந்தாள்.

இப்படி விடைபெற்றுக்கொண்டு உத்தர திக்கை நோக்கி அர்ஜுநன் நடந்தான்; மஹர்ஷிகள் வாஸம்செய்த பர்வதங்களைத் தாண்டிச் சென்றான். புண்யதமமானதும் தேவதைகள் ஸாந்நித்யமுள்ளதுமான ஹிமவத்கிரியை அடைந்தான். கொஞ்சமும் இளைப்பின்றிப் பகு வேகமாக ஹிமாசலத்தையும் கந்தமாதந பர்வதத்தையும் கடந்து, இந்த்ர கீலமெனும் பர்வதத்தை யடைந்து அவ்விடம் நின்றான். அப்போது அந்தரிக்ஷத்தில் ‘நில்’ எனும் சப்தம் உண்டானதைக் கேட்டான். உடனே நாற்றிசையிலும் கண்களைச் செலுத்தினான். பிறகு ஒரு வ்ருக்ஷமூலத்தில் ஒரு தபஸ்வியைத் தர்ஶித்தான். அவர் ப்ரஹ்ம தேஜஸ்ஸால் ஜ்வலித்துக்கொண்டிருந்தார். அவர் அர்ஜுநனைப் பார்த்து, “நீ யார்? தநுஸ்ஸைக் கைக்கொண்டு கவச மணிந்துகொண்டு இங்கே வந்தாய்? க்ஷத்ர தர்மத்தை அநுஷ்டிக்கின்றாய். இந்த ஸ்தானம் சாந்த

சித்தர்க்கு ஆலயமாயிருக்கின்றது. இங்கே வில்லுக்கும் அம்புக்கும் ப்ரயோஜநமில்லை. யாருடனும் சண்டைக்கு இடமில்லை. நீ உத்தம கதியை அடைவதற்கு வந்தாய். தநுஸ்ஸைக் கீழே எறி” என்று சிரித்துக்கொண்டு சொன்னார். இந்த வசநங்கள் த்ருடமான நிச்சயத்துடன் கூடிய அர்ஜுநனுடைய தைர்யத்தைச் சலிப்பிக்கவில்லை. பிறகு அவர் ப்ரீதராய்ச் சிரித்துக்கொண்டு, “ஶத்ருக்களை நாசம் செய்கின்றவனே! நான் ஶக்ரன். வேண்டிய வரங்களைக் கேள்” என்றனர். உடனே அர்ஜுநன் கைகளைக் கூப்பிக்கொண்டு ஸஹஸ்ராக்ஷனை வணங்கினான். “இதைத் தான் நான் ப்ரார்த்தித்தேன். எனக்கு வரந் தந்தருளும். ஓ பகவந்! தேவரீரிடம் இருக்கின்ற ஸர்வாஸ்த்ரங்களையும் நான் அறிந்துகொள்ள இச்சிக்கின்றேன்” என்று சொன்னான். இந்த்ரன் அவனைப் பார்த்துத் “தநஞ்ஜய! இவ்விடம் வந்த உனக்கு அஸ்த்ரங்களால் ஆகவேண்டியதென்ன? அபேக்ஷித்த லோகங்களைக் கேள். பரமகதியை அடைந்திருக்கின்றாய்” என்று சொன்னார். அதற்கு அர்ஜுநன், ஓ தேவஶ்ரேஷ்ட! எனக்கு அமரத்வம் வேண்டாம்; வேறு ஸுகமும் வேண்டாம். அமரைஶ்வர்யத்தையும் வேண்டுகின்றேனில்லை. அப்படிப்பட்ட ஸஹோதரர்களைக் காட்டில் விட்டுவிட்டும், ஶத்ருக்களை நிரஸநம் செய்யாமலும், எல்லா லோகங்களிலும் நீண்ட அபகீர்த்தியை அடைந்தவனாவேன்” என்று சொன்னான். “அர்ஜுந! எப்போது பூதேஶனும் த்ரிநேத்ரனும் சூலதரனுமான சிவனை நீ தர்சிக்கின்றையோ, அப்போது ஸர்வப்ரகாரத்தாலும் திவ்யாஸ்த்ரங்களை உனக்கு நான் கொடுத்தவனாவேன். ஆதலால் அந்தப் பரமேஷ்டியினுடைய தர்ஶந விஷயத்தில் ப்ரயத்ந பரனாகி நிற்பாயாக. அத்தர்ஶநத்தால் ஸர்வ ஸித்தியையும் அடைந்து ஸ்வர்க்கத்துக்கும் வரப்போகின்றாய்” என்று சொல்லிவிட்டு இந்த்ரன் மறைந்துபோனார். அர்ஜுநனும் அவ்விடம் யோகத்தில் நிலைத்திருந்தான்.

இப்படி அர்ஜுநன் உக்ரமான தபஸ்ஸில் நிலைத்து நிற்கவும், அவ்விடம் வஸித்த தபோதநர்கள் அதைப்பற்றி மஹாதேவனிடம் விஜ்ஞாபநம் செய்துகொண்டார்கள். ஶங்கரனும் அம்முநிகளை நோக்கிப் “பல்குநன் தபஸ்ஸைப்பற்றி உமக்கு ஶங்கைவேண்டாம். அவன் ஸ்வர்க்கத்தையும் ஐஶ்வர்த்தையும் இச்சித்தவனல்லன். அவன் அபேக்ஷை எனக்குத் தெரியும். அதை உடனே நான்



நிறைவேற்றப்போகின்றேன். நீங்கள் ஸுகமாய்ச் செல்லலாம்” என்று மொழிந்தார்.

பிறகு பக்தர்களுடைய பாபங்களை ஹரிக்கின்ற பகவான் பிநாகபாணியானவர், ஸ்வர்ணச்சாயையோடு கூடிய சரீரத்துடன் ஓர் கிராதனைப்போல் வேஷம் தரித்து, வில்லையும் அம்புகளையும் கைக்கொண்டு, அதே வேஷத்துடன் கூடிய கௌரீஸஹாயனாய், அம்மாதிரியான ரூபங்களைக் கொண்ட ஸ்த்ரீ புருஷ பூதங்களால் பின்தொடரப்பட்டவராய் அந்த ப்ரதேசத்தில் ஆவிர்ப்பவித்தார். உடனே அந்த வநம் முழுதும் நிஶ்ஶப்தமாய் விட்டது. அப்போது மூகனெனும் தாநவன் வராஹ ரூபத்தைக்கொண்டு அர்ஜுநனைப் பயமுறுத்தவெண்ணி அவ்விடம் வந்தான். அவனை அர்ஜுநன் பார்த்துத் தன் வில்லை நாணேற்றி ஶரத்தை வராஹத்தின் மேல் விட யத்தனித்தான். கிராத ரூபதரனான சிவன் அர்ஜுநனைப் பார்த்து, “உன் அம்பைப் போடாதே. இந்த ம்ருகம் பூர்வமே என்னால் இச்சிக்கப்பட்டது” என்று சொன்னார். அர்ஜுநன் அவர் சொல்லை அநாதரித்து வராஹத்தை யடித்தான். கிராதனும் அதே காலத்தில் தமது சரத்தால் வராஹத்தை யடித்தார். இரண்டு சரங்களும் ஒருமிக்க அதன்மேல் விழ, அந்த ராக்ஷஸன் ம்ருக ரூபத்தை விட்டு ஸ்வரூபத்துடன் பர்வதம்போல் கீழே விழுந்து மாண்டனன்.

பிறகு கிராதவேஷத்தால் மறைக்கப்பட்ட சூலபாணியைப் பார்த்து அர்ஜுநன், “ஸ்த்ரீகளால் சூழப்பட்டு ஶூந்யமான இந்த வநத்தில் ஸஞ்சரிக்கின்ற நீர் யாவர்? இவ்வநத்தைப் பார்த்து நீர் பயங்கொள்கின்றீர் இல்லை. என்னால் இலக்கிடப்பட்ட வராஹத்தை நீர் ஏன் அடித்தீர்? நான் உம்மை விடுவதில்லை. நீர் செய்தது வேட்டையின் தர்மத்துக்கு விரோதம். ஆதலால் உம்மைக் கொல்கின்றேன்” என்றனன்.

அதைக் கேட்டு உமாஸஹாயன், “இவ்வனத்தின்கண் என் பொருட்டு நீ பயம் கொள்ளவேண்டாம். நாங்கள் இவ்விடம்

வஸிப்பவர்கள். நீயோ ஸுகுமார சரீரத்துடன் கூடினவன்; ஸுகார்ஹன். ஏகாகியாக இந்த ஶூந்ய ப்ரதேசத்தில் வாஸம் செய்ய உனக்கு எவ்வண்ணம் ருசித்தது?" என்றனர்.

அதற்கு அர்ஜுனன், "எனது காண்டீவத்தையும் அக்நி போன்ற சரங்களையும் துணையாகக்கொண்டு, இரண்டாவது கார்த்திகேயனைப்போல் இந்த மஹாரண்யத்தில் வஸிக்கின்றேன். ம்ருகரூபம்கொண்டு என்னைக் கொல்லவந்த இந்த ராக்ஷஸன் என்னால் கொல்லப்பட்டான்" என்று சொன்னான்.

பிறகு சந்த்ரசேகரன், "இவன் என் பாணத்தால் முதலில் அடிக்கப்பட்டு யமலோகம் சென்றான். நீ உன் பலத்தால் கர்வமடைந்து உன் தோஷத்தை என் மீது ஏற்றுகின்றாய்; புத்தி கெட்டவனே! ஜீவனுடன் என்னால் விடப்படப்போகின்றாயில்லை. அங்கே நில். என்னுடைய அசநி போன்ற சரங்களைப் போடுகின்றேன். அவற்றை உனக்குச் சக்தியிருந்தால் ஸஹித்துக்கொள் நீயும் பாணம் போடு" என்று சொன்னார்.

இதன் மேல் அர்ஜுனனுக்கு மிகுந்த கோபம் உண்டாயது. கிராதரூபியான பகவான்மீது சரவர்ஷங்களைப் பெய்தான். அவற்றால் சிறிதும் வருந்தாமல் பகவான் அசலமாக நின்றார். அர்ஜுனன் தனது சரங்கள் அவ்வண்ணம் வீணாகப் போனதை யோசித்து ஆஶ்சர்யமுற்றனன். அவற்றை ஸஹிக்கக்கூடியவர் பிநாகியொருவர்தானென்று ஸந்தேஹமும் அவனுக்கு உண்டாயிற்று. இதற்குள் தூணீரத்தில் ஸாயகங்கள் குறைந்தன. அக்ஷய்யமென்று அக்நிதேவனால் அநுக்ரஹித்துத் தரப்பட்ட தூணம் அவ்வண்ணம் போனதைப்பற்றிச் சிந்தித்தான். பிறகு வில்லால் சங்கரனை அடித்தான். பகவான் வில்லை க்ரஹித்துக்கொண்டார். கத்தியைக் கொண்டு அவர் தலையில் மோதினான். அது பகவானுக்கு ஈஷத்தும் துன்பம் விளைவிக்காமல் சுக்கல் சுக்கலாய்ப் போய்விட்டது. பிறகு அர்ஜுனன் மரத்தையும் கல்லையும் சங்கரன் மீதெறிந்தான். அவை பயன்படாமல் கீழே விழுந்தன. அதைப்பார்த்து முஷ்டி



யால் பகவானைத் தாக்கினான். மஹாதேவன் கொஞ்சமும் ஆயாஸமின்றி அதைத் தாங்கிக்கொண்டு, பல்குநனைத் தமது முஷ்டியால் ப்ரஹரித்தார். அர்ஜுனன் நொந்துபோனான். பிறகு ஒருவர்க்கொருவர் தோள்களால் வளைந்து சண்டையிடவே, பகவான் தமது தோள்களால் கட்டி அர்ஜுனன் காத்ரத்தைப் பீடித்தார். அர்ஜுனன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். முஹூர்த்தம் அவ்வண்ணமிருந்து எழுந்தான். அவனுடல் ருதிரவ்யாப்தமாய்ப் போயிற்று. தன் நிலையை எண்ணி மிகவும் துக்கித்தான். பிறகு சங்கரனைத் தனக்கு ரக்ஷகனாக மனஸ்ஸால் ஸ்மரித்துப் பூமியில் பகவானை ஆவாஹனம் செய்து பூமாலையால் பூஜித்தான். அப்போது அந்த மாலை கிராதனுடைய சிரஸ்ஸில் ப்ரகாசிக்கக் கண்டான்; ஸந்துஷ்டனானான்; அவர் பாதங்களில் விழுந்தான்.

சங்கரனும், "பல்குந! உன்னிடம் நான் ஸந்தோஷமடைந்தேன். உனது கர்மம் மற்றெவர்க்கும் இல்லை. உன்னுடைய ஶௌர்யம், தைர்யம், தேஜஸ், வீர்யம் இவை மற்றொரு க்ஷத்ரியனுக்குக் கிடையாது. இவற்றில் நீ எனக்கு ஸமானமானவன். முன் நீ ருஷி. உனக்குத் திவ்ய சக்ஷுஸ்ஸைத் தருகிறேன். என்னைத் தர்சநம் செய். யுத்தத்தில் நீ யாவரையும் ஜயிப்பாய். எனது அஸ்த்ரத்தைத் தரிக்க நீ சக்தன்" என்று சொன்னார்.

பிறகு உமாதேவி ஸஹிதரான சூலபாணியை அர்ஜுனன் தர்சித்தர்ன். ஸாஷ்டாங்கமாக அவரைத் தண்டன் ஸமர்ப்பித்தான். தன் அபராதத்தைப் பொறுக்கும்படிப் பலவிதமாக வேண்டினான். "ஓ கபர்தின்! ஸர்வதேவேஶ! ஶங்கர! அடியேனுடைய வ்யதிக்ரமத்தை க்ஷமித்தருளும். இந்த மஹாகிரிக்குத் தேவரீருடைய தர்சநத்தை ப்ரார்த்தித்து அடியேன் வந்தேன். தேவரீருடைய உத்தமமான தாபஸாலயமானது யாவர்க்கும் ப்ரியமானது. ஸர்வலோக நமஸ்க்ருதரான தேவரீரை வேண்டுகின்றேன். இந்த ஸாஹஸமான அபராதம் அடியேனிடமிருந்து விலகட்டும். அஜ்ஞானத்தால் தேவரீருடன் அடியேன் யுத்தம் செய்

தேன். தேவரீரைச் சரணமாக அடைகின்ற என்னை க்ஷமித்தருளவேண்டும்” என்று சொன்னான்.

பகவான் சிரித்துக்கொண்டு அர்ஜுனனுடைய கையைப் பிடித்தார். பொறுத்தேனென்று மதுரமாக மொழிந்தார். தமது தோள்களால் அர்ஜுனனை ஆலிங்கனம் செய்தார். அவனிடம் ப்ரீதி கொண்டார். மறுபடி அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, அர்ஜுன! நீ பூர்வஜந்மத்தில் நாராயண ருஷியை ஸஹாயமாய் அடைந்த நரன். பகுகாலம் பதர்யாஶ்ரமத்தில் தபஸ் செய்தாய். உன்னிடமும் புருஷோத்தமனிடமும் பரமமான தேஜஸ் ப்ரதிஷ்டிதமாயிருக்கின்றது. உங்களுடைய தேஜஸ்ஸால் ஜகத்தானது தரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த்ரன் பட்டாபிஷேக காலத்தில் உன்னாலும் விஷ்ணுவாலும் தாநவர்கள் ஶரங்களால் அடிக்கப்பட்டனர். நான் பிடித்த வில்லன்றோ உன் கையில் காண்டீவமாக விளங்குகின்றது. உனது தூணிகள் அக்ஷயங்களாயிருக்கும். உன் சரீரத்தில் துன்பம் ரோகம் முதலானவை உண்டாகமாட்டா. உனக்கு ஸமானமான புருஷன் எங்குமில்லை. என்னிடம் உனக்கு வேண்டிய வரங்களைக் கொள்” என்று சொன்னார்.

அர்ஜுனன் பாசுபதாஸ்த்ரத்தைச் சங்கரனிடம் ப்ரார்த்தித்தான். பகவானும், “பாசுபதத்தைத் தருகின்றேன், பாண்டவ! அதைத் தாரணம் செய்யவும், விடவும், ஸம்ஹாரம் செய்யவும் நீ ஸமர்த்தன். அது மஹேந்த்ரனுக்கும் தெரியாது. மற்ற யமன், குபேரன், வருணன், வாயு முதலானவர் அதை எவ்வண்ணம் அறிவார்கள்? அதை யோசியாமல் யார் மேலும் ப்ரயோகிக்கவேண்டாம். அல்ப தேஜஸ்ஸுடன் கூடினவர் மேல் போட்டால் ஜகத்தே கொளுத்தப்பட்டுப்போகும். மூவுலகிலும் இந்த அஸ்த்ரத்தால் கொல்லப்படாத புருஷன் இல்லை” என்று சொன்னார். அர்ஜுனனும் கைகால்கள் சுத்திசெய்துகொண்டு ஆசமநம்செய்து சங்கரன் ஸமீபத்தில் வந்து நின்றான். பகவானும் அவ்வஸ்த்ர மந்த்ரத்தை அவனுக்கு உபதேசித்தனர். பிறகு பகவானிடம்போல்



அர்ஜுனனிடமும் அவ்வஸ்த்ரம் மூர்த்திகரித்து ஜ்வலித்துக்கொண்டு வந்து நின்றது.

பிறகு அர்ஜுனனுடைய சரீரம் சம்புவினுடைய கரஸ்பர்ஶத்தால் பரிசுத்தமாயிற்று. பகவான் காண்டீவத்தை மறுபடியும் அர்ஜுனனிடம் தந்தார். ஸ்வர்க்கத்துக்குச் செல் என்று ஆஜ்ஞாபித்துவிட்டு அர்ஜுனன் பார்த்துக்கொண்டிருக்கையில் உமையுடன்கூட ஆகாஶத்தில் மறைந்தார்.

அர்ஜுனன் மஹாதேவனை ஸாக்ஷாத்தாகத் தர்சித்தும், அவருடைய கரஸ்பர்ஶத்தை யடைந்தும், அவருடன் யுத்தம் புரிந்தும், தனக்கு நேர்ந்த அத்ருஷ்ட விஶேஷத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது, அப்பர்வதத்தின் நால்புறத்திலும் சிகரங்கள்மீது வருணன், குபேரன், யமன், வாஸவன் முதலான தேவர்கள் மூவர் விமானங்களேறியும், ஶக்ரன் ஐராவதத்தின்மேலும் அர்ஜுனனுக்குத் தர்சனம் தந்தார்கள். அவர்களை ஒருமிக்கத் தர்சித்து அர்ஜுனன் விஸ்மயமடைந்தான். அவரால் தன்னுடைய பூர்வ ஜந்மத்தையும், தேவகார்ய நிமித்தமாகத் தான் லோகத்தில் வந்ததையும், பகு தாநவ ராக்ஷஸர்கள் லோகத்தில் மநுஷ்யராய்ப் பிறந்து தர்ம விரோதம் செய்கின்றதையும், அவர்களும் பீஷ்ம த்ரோண கர்ணாதிகளும் யுத்தத்தில் மடியப்போகின்றதையும் அறிந்துகொண்டான். யமன், வருணன், குபேரன் முதலானோரிடம், அவரவர் அஸ்த்ரங்களைப்பற்றிய தாரண மோக்ஷ ஸம்ஹார மந்த்ரங்களை க்ரஹித்துக்கொண்டான். பிறகு பாகஶாஸநன் மாதலி ஸாரத்ய யுக்தமான ரதத்தைத் தான் அனுப்புவதாயும், அதன்மீது ஏறி ஸ்வர்க்கத்துக்கு வரும்படிக்கும் சொல்லி மறைந்தான். மற்றைத் தேவர்களும் மறைந்தனர்.

பத்ராதிபர்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌅𑌪𑌰𑌾𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌂
𑌪𑌤𑌿𑌤𑌂 𑌭𑍀𑌮𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑍋𑌦𑌰𑍇 ।
𑌅𑌗𑌤𑌿𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌂 𑌹𑌰𑍇 ।
𑌕𑍃𑌪𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁 ॥ 48.

48. "𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲 𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌸𑌂" என்கிற ஶ்லோகம் முதலாக "𑌭𑌵𑌨𑍍𑌤𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌚𑌰𑌨𑍍𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌂" என்கிற ஶ்லோகத்தளவும், பர்வக்ரமத்தாலே அவயவ ஆபரண ஆயுத மஹிஷீ பரிஜந பரிச்சேதங்களுடன் சேர்த்தி யழகை அநுபவித்து, 'அநுபவஜநித ப்ரீதி காரிதமான கைங்கர்யத்தாலே உன்னை நான் உகப்பிப்பது எப்பொழுது?' என்று கதறி, ஸ்ரீ ஆளவந்தார், பிறகு, ப்ராப்யனான ஈஶ்வரனுடைய வைலக்ஷண்யத்தையும் தம்முடைய பூர்வ வ்ருத்தத்தையும் அநுஸந்தித்து, 'ஸம்ஸாரியான நாம் இதை ஆசைப்படக்கடவோமோ?' என்று '𑌧𑌿𑌗𑌶𑍁𑌚𑌿𑌂' என்னும் ஶ்லோகத்தால் தம்மை நிந்தித்துக்கொண்டார். பின்பும் ருசியாலே அகலமாட்டாதே 'இப்படி விளம்பிக்கைக்கு ஹேதுவான பாபமனைத்தையும், நீ, இவன் ஶரணாகதன் என்னும் ஒரு வ்யாஜத்தைக்கொண்டு, வேறு ஸாதநாந்தரங்களை அபேக்ஷியாமல் உன்னுடைய கேவல க்ருபையாலே போக்கி, இவன் நம்முடையவன் என்று விஷயீகரித்தருள வேணும்' என்று இந்த '𑌅𑌪𑌰𑌾𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌂' என்னும் ஶ்லோகத்தால் ப்ரார்த்திக்கிறார்.

[நமக்குள் ஒரு வேதாந்த ரஹஸ்யமுண்டு. அதாவது - ஶ்ரவணம் மநநம் நிதித்யாஸநம் முதலான நம்முடைய ப்ரயத்நத்தினாலேயே நாம் மோக்ஷமென்னும் ஸாம்ராஜ்யத்தை வென்று விடலாம் என்று நினைப்பது பிசகு என்பது தான்.

"𑌯𑍇𑌽𑌨𑍍𑌯𑍇𑌽𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌕𑍍𑌷 ! 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌿𑌨-
𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑌸𑍍𑌤𑌭𑌾𑌵𑌾𑌦𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌆𑌰𑍁𑌹𑍍𑌯 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌂 𑌤𑌤𑌃
𑌪𑌤𑌨𑍍𑌤𑍍𑌯𑌧𑍋 𑌨𑌾𑌦𑍃𑌤 𑌯𑍁𑌷𑍍𑌮𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌯𑌃 ॥"

என்றும்,

"𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌯 𑌶𑍍𑌰𑌮𑌾𑌃 𑌕𑌾𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂"

என்றும் ஸ்ரீ பாகவதத்திற் சொல்லியிருக்கிறபடி, பகவத் பக்தி விஹிதமான ப்ரயத்நமெல்லாம் வீணே! எம்பெருமானுடைய திருவடிகளில் பக்திசெய்து அவனை ஶரணமாக அடைந்தவர்களே, அவனால் ரக்ஷிக்கப்பட்டவர்களாகக்கொண்டு எவ்வித் ப்ரமமும் இல்லாமல் நிர்பயர்களாக ஸஞ்சரிக்கிறார்கள். எம்பெருமானுடைய கடாக்ஷமின்றிக்கு நமக்கு மோக்ஷம் ஸித்தியாது. நாம் யோகம் முதலியவற்றை அவலம்பித்து மோக்ஷத்தை ஸாதித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது கேவலம் அஹங்கார கார்யமே, என்பது தான் நமது வேதாந்த ரஹஸ்யம்.

"𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋
𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 ।
𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯
𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌂 ॥"

என்று ஶ்ருதியும், 'கேவலம் ஶ்ரவண மநந நிதித்யாஸநாதிகளால் பரமாத்ம ஸ்வரூப ப்ரகாஶம் ஏற்படாது; அந்தப் பரமாத்மா எவனொருவனை வரிக்கிறானோ அவனுக்கே அது ஜநிக்கும்,' என்று சொல்லுகின்றது.

ஹீஉஹவாணீவொஷெ வதிதம் - "நிஉஜகொ்நஜ உஹாணுவாஶஃ" என்று ஏற்கெனவே சொல்லப்பட்ட அர்த்தம் இவ்விடத்தில் மறுபடியும் அநுவதிக்கப்படுகின்றது. 'ஹீஉ' என்பதற்கு பயங்கரமான என்று அர்த்தம். 'ஹவாணுவ' என்ருல் ஸம்ஸாரக்கடல் என்ருயிற்று. 'இப்படி அளவிடக்கூடாததாயும் துஸ்தரமாயும் அதி பயங்கரமாயும் இருக்கும் இந்தக்கடலின் நடுவில் திசை தடுமாறிக்கிடக்கிறேனே, என்று கதறுகிருர். 'நீ எடுக்கப் பார்த்தாலும் உனக்கும் எட்டாதபடி அவ்வளவு நடுவிலன்றே நான் விழுந்து கிடக்கிறேன்' என்றும் த்வநிக்கிறதாம்.

ஸமதிம் - விஷ்ணுபோத மொழிய, இந்தக்கடலில் நின்றும் கரையேறுவதற்கு வேறு புகலில்லை என்பதை இந்தப்பதம் குறிக்கின்றது.

"வைகுந்த னென்பதோர் தோணி பெறுதொழல்கின்றேன்"

"கவதூஷவொகெந உஹகூகெந
கவருணி ஶொவ்வஷம் ஹவாஜிம் ॥"

என்கிறபடி ஸம்ஸாரிகளாகிற நமக்கு வேறுகதி ஒன்றுமில்லை. "கநகூமதிஃ" என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருப்பதை இவ்விடத்தில் அநுஸந்தித்துக் கொள்ளவேணும்.

ஶரணாமதம் உாம் - ஶரணமடைந்திருக்கும் என்னை. இந்த ஶப்தத்தில் ரக்ஷண வ்யாஜும் வெளியிடப்படுகின்றது. நாம் ஶரணமடையாவிட்டால், நம்முடையவிஷயத்தில் ரக்ஷணம் ஸம்பவிக்காது என்பதை இது ஸூசிப்பிக்கின்றது. பகவான் ரக்ஷாபேக்ஷையை ப்ரதீக்ஷிக்கிருன் என்பது நம்முடைய கொள்கை. 'யிம ஶவிம்' என்னும் பூர்வஶ்லோகத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்வாத்ம திரஸ்காரத்தை அநுவ்ருத்தித்தே, இந்த ஶ்லோகத்திலும்



தன்னிடத்தில் ஓர் அநாதரவு த்யோதிப்பிக்கும் பொருட்டு 'உாம்' என்னும் விஶேஷ்யத்தை ஸ்ரீஆளவந்தார் ப்ரயோகிக்க வில்லையாம்.

ஹரெ! கஷ்டப்படும் நம்மிடத்தில் தயையும், அந்தக் கஷ்டங்களை நிவ்ருத்திசெய்வதில் ஶக்தியும் பொருந்தினவனே, நம்மால் ஶரணமாக அடையத்தகுந்தவனுவான். அப்படிப்பட்ட குணங்கள் இரண்டும் பகவானிடத்தில் பூர்ணமாக இருக்கின்றன என்பதை இந்த 'ஹரெ' என்னும் ஶப்தம் காண்பிக்கின்றது.

"ப்ரஹ்மாணஉிமம் ருஉமேவ யமம் வருணமேவ ச।
ப்ரஸஹ்ய ஹரதெ யஸ்மாத்தஸ்மாத்ஹரிரிதீயுதெ ॥"

[ப்ரஹ்மா முதலான ஸகல தேவதைகளையும் ஆக்ரமித்து நிற்கிறபடியால் இவனுக்கு 'ஹரி' என்னும் பெயர் உபபந்நமாகின்றது] என்று சொல்வதனுல் அவனுடைய அபார ஶக்தியும்,

"ஹரி ஹருதி பாபாநி"

[ஆஶ்ரிதர்களுடைய அநிஷ்டங்களெல்லாவற்றையும் ஹரிக்கிறபடியால் 'ஹரி' என்னப்படுகிருன்] என்பதனுல் அவனுடைய அபாரதயையும் வெளியிடப்படுகின்றன. "மித்ரபாவமேயடியாக ஸமஸ்த துக்கங்களையும் போக்குகையே ஸ்வபாவமாக உடையவனே" என்பது ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநம்.

கெவலம் க்ருபயா - 'நான் ஶரணுகதிசெய்து விட்டபடியால் உன்னுடைய க்ருபைக்கு ஒரு அவகாஶம் ஏற்பட்டுவிட்டது; அந்த க்ருபையைக் கைக்கொண்டே' என்பது குறிப்பு. அதாவது - 'என்னுடைய ப்ரதிபந்தக நிவ்ருத்தியும் பொருட்டு, இனி என்னிடமிருந்து வேறு ஒரு வ்யாபாரத்தையும் ப்ரதீக்ஷியாமலே' என்ருயிற்று. ஏனென்ருல், ப்ரதிபந்தக ரூபங்களான பாபங்களைப் போக்குகைக்கு நாம் ப்ரயத்நப்பட்டாலும் அது அஶக்யமா

குமாகையால், பகவானுடைய தயையே அவைகளை ஶமநம்செய்ய வேணும் என்பது தாத்பர்யம்.

> '' ஸ்வநந்யஸித்தௌவளவம் நாதஸோமாதிகாரஃ
> ஸ்வஸம்பந்த்யோபாய்யசேஷம் நிக்ஷிப்ய யாஸி நந்மஸ்க்ரம் ।
> ஸ்வயம்ஸித்திர் ஹி உபயே ஸ்வம் ஸ்வீக்ருத ஸ்ரீநிவாஸா
> ஸரிஸ்ரீத ஸம்வஹ்நிதி: ச்ரேயஸே ஜாயஸே ந: ॥ ''

என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அநுக்ரஹித்திருக்கிறாரன்றோ ?

ஆத்மஸாத்குரு - ஆத்மஸாத்தாகப்பண்ணியருளவேணும். அதாவது - நம்முடையவனென்று விஷயீகரித்தருளவேணும். வேறு உபாயம் வேறு உபேயம் இவைகளிலிருந்து என்னை விமுகனாகச்செய்து, உன்னுடைய தாஸனாக என்னைத் திருவுள்ளம் பற்றி, உன்னுடைய கைங்கர்யத்திலேயே அபிருசியுள்ளவனாக என்னைச் செய்தருளவேணும் என்பது தாத்பர்யம்.

எஸ். வாஸுதேவன்.

THE REGISTRAR OF ... AUG 1916 MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள ௵ ஆடி ௴ [ஸஞ்சிகை 6.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆர்யமதத்தின் ஏற்றம்.**

கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜ் உட்ராப் துரையவர்கள், உலகத்தில் மற்றெல்லா மதங்களைக் காட்டிலும், ஹிந்து மதமானது பாஶ்சாத்ய வித்யா நிர்ணயங்களுடன் ஒத்திருக்கின்றதெனச் சொன்னராம். அவ்வித்யா நிஷ்டர்களும், பரமார்த்த தத்வங்களைப்பற்றி ஆலோசிக்க ஸமர்த்தர்களுமான பகு ஐரோப்ய வித்வான்களும் அமெரிக்கா வித்வான்களும் அவ்வண்ணமே அபிப்ராயப்படுகின்றனர். அதனாலென் பயன்?

**அது தத்காலம் பயன்படாமை.**

இந்தியர் ராஜாங்க விஷயத்தில் பராதீநர். ஆதலால் அவர் மதமும் வித்யையும் ப்ராயேண ஐரோப்யர் மதிக்கத்தக்க ஸ்திதியில் இல்லை. ப்ரபல உத்யோகஸ்தர்களான ஐரோப்யர்களில் பலர் தம்முடைய ஸ்தாந கர்வத்தாலும், தம்மால் ஆளப்

பட்ட ஸாதாரண ஜநங்களுடைய அஜ்ஞாநத்தைக் கண்டும், இந்தியர் கல்வியில் தம்முடைய அறிவின்மையாலும், இந்தியர் மதத்தைக் கௌரவப்படுத்துகின்றாரில்லை. கிறிஸ்தவ பாதிரிமார் இந்தியர் மதத்தை அழிப்பதற்கென்றே இந்தத் தேசத்துக்கு வந்திருக்கின்றார்கள். இவர்களால் படிப்பித்த பல இந்தியர்கள் இவர்களைப் போலவே இந்திய மதவிஷயமாய் எண்ணத் தொடங்குகின்றார்கள். இது கால ஸ்வபாவம். இதைப்பற்றிச் சிந்தித்துப் பயனில்லை.

**அது பரஹிம்ஸையை விலக்கி வளர்ந்தது.**

கிறிஸ்தவ மஹம்மதிய மதங்களைப்போல் ஹிந்து மதம் மதாந்தரஸ்தர்களை பலாத்காரமாக ஆகர்ஷிப்பதில்லையென்று அதன்மீது ஒரு குற்றம் சாட்டுவார்கள். கிறிஸ்தவ மஹம்மதிய மதங்கள் யூத மதக் கதைகளை ஆச்ரயித்துப் பிறந்தன. அக்கதைகள், யூதர் அந்ய ஜாதியர்களைக் காரணமின்றி வேரறுத்துவிட்டதாகக் காட்டுகின்றன. அவர் தேவன் அயலார்களைக் கொல்வித்து அவர்க்கு நன்மை யளித்ததாக எழுதியிருக்கின்றார்கள். மஹம்மதியர்களோ கீழ் ரோமன் அதிராஜ்யம், பெர்ஷியன் அதிராஜ்யம் இவற்றை மதபேதத்தையே காரணமாகக்கொண்டு அழித்தனர். அங்குள்ள ப்ரஜைகளைப் பலவந்தமாக மஹம்மதியராக்கினர். தத்காலம் ஆப்கன் தேசமென்றும், பெலூசி தேசமென்றும், துர்கிஸ்தாநமென்றும் பெயர் வழங்கும் தேசங்களையும் அவ்வண்ணமே நடத்தினார்கள். இந்திய தேசத்தைப் பலதரம் படையெடுத்தார்கள்; தேவஸ்தாநங்களைச் சூறையாடினார்கள்; பல ஜநங்களைக் கொன்றார்கள்; முடிவில் இந்திய தேசத்தையே பிடித்தார்கள்; இந்தியர் தேவாலயங்களை அழித்தார்கள்; பகு ஹிந்துக்களை மஹம்மதியராக ஆக்கினார்கள்.

கிறிஸ்தவர்களும் அவ்வண்ணமே அமெரிக்காவில் முக்யமாகவும் இதர தேசங்களில் கொஞ்சமாகவும் நடந்திருக்கின்றார்கள்.

**அதற்குக் காரணம்.**

இந்து மதத்துக்கும் பௌத்தமதத்துக்கும் இந்த க்யாதி இல்லை. இது குற்றமாயின் குற்றமே. மற்ற மதங்களை ஆத்யந்திகமாகப் பொய்யென்று இந்து மதம் நம்பவில்லை. ஈச்வரன் ஸர்வத்ர ஸமனென்றும், அவ்வவர் ஜ்ஞாநத்துக்கும் பக்திக்கும் தக்கபடி



எல்லா ஜநங்களையும் அவன் ரக்ஷிக்கின்றானென்றும் ஹிந்துக்கள் நம்புகின்றார்கள். யாவர்களுக்குள்ளும் அவன் அந்தர்யாமியாக நிலைக்கின்றானென்றும் அவர்கள் நம்புகின்றார்கள். “ஸமோஹம் [illegible]” எனும் பகவத் [illegible] வாக்யங்களை அவர்கள் ஆதரிக்கின்றனர். ஸர்வத்ர ஆத்மாவாக நிலைத்து நிற்கின்ற ஈச்வரனை நினைத்து சாந்தியடைந்து அவனை உபாஸிக்கவேண்டுமென்று வேதம் சொல்லிற்று. ஸர்வ பூதங்களுக்குள்ளும் நியாமகனாய் நின்ற பரமாத்மாவை நோக்கி ஒருவரிடமும் அமித்ர பாவத்தைப் பாராட்டவேண்டாமென்று விஷ்ணு புராணம் சொல்லிற்று. ப்ரியங்களின் வியோகத்தாலும் அப்ரியங்களின் ஸம்யோகத்தாலும் உண்டாகப்பட்ட துக்கத்தால் ஸகல ஜந்துக்களும் இவ்வுலகில் பீடிக்கப்படுகின்றன. அஹங்கார மமகாரரூபமான அஜ்ஞாநத்தையிட்டு ஒருவன் மற்றொருவனை மித்ரனென்றும், வேறொருவனைச் சத்ருவென்றும் நினைக்கின்றான். ப்ராயேண இவ்வுலகில் ஆத்யாத்மிகாதி துக்கங்களால் வருந்ாதவர் எவரும் இல்லை. விலக்கக்கூடிய துக்கஜநகமான ப்ரவ்ருத்திகளை யாவரும் த்யஜிப்பது நம்முடைய சாஸ்த்ர ஸம்மதம். ஆதலால் பலாத்காரமாய் மதாந்தர நிஷ்டர்களை ஸ்வமதத்தில் சேர்ப்பதற்கு ஹிந்துக்கள் ப்ரயத்நித்தவர்களல்லர்.

**அதைப் பரவச் செய்யும் ப்ரயத்நங்கள்.**

அவ்வண்ணம் இருப்பதால், மதத்திற்கே அபாவம் உண்டாய் விடுமென்றும், ஸர்வோத்க்ருஷ்டமான மதம் நாசமடைவது லோகத்தின் ஹிதத்தின் பொருட்டு ஆகமாட்டாதென்றும் நினைத்து, விவேகாநந்தர் முதலானவர்கள் வர்ணாச்ரம வரம்புகளைத் தாண்டி, ஹிந்து மதத்தைப் பரவச் செய்ய ஆரம்பித்தனர். விசேஷ ஜ்ஞாநத்துடன் கூடி மஹாப்ரயத்நபராய் நின்று, பல ஐரோப்பியர்களையும் அமெரிக்கா தேசத்தாரையும் தம் சிஷ்யர்களாக்கிய விவேகாநந்தர் அகால ம்ருத்யுவை அடைந்தார். ஆதலால் அவருடைய ப்ரயத்நம் அத்யாபி ஜீவித்திருந்தபோதிலும், ப்ரபலப்படுகின்றதாக எண்ணக்கூடிய ஸ்திதியில் இல்லை.

பரரால் செய்யப்பட்ட ஆர்ய மதநிந்தை மோக்ஸ்தாநமன்று.

ஜூலை மாஸம் 'மாடர்ன் ரிவ்யூ'வில், லாலா லாஜபட்ராய் என்பவர், "நமது வேதாந்தத்தையும் யோகாப்யாஸத்தையும், நம் முன்னோரால் ஸாதிக்கப்பட்ட ஆத்ம ஜ்ஞாநத்தையும் உலகம் வேண்டிய மட்டும் வியக்கின்றது. ஆகிலும் நம்மை உலகத்தவர் அலக்ஷ்யம் செய்கின்றார்கள்; ஏனென்றால், ஆத்ம கௌரவம், அஹம்பாவம், தைர்யம், ஆத்மாஶ்ரயம் முதலான குணங்கள் நமக்கில்லை. * * * * உலகத்தில் எல்லாரைக்காட்டிலும், நாம் மிகவும் நிந்திக்கப்படுகின்றோம்" என்றெழுதி, நமது தத்கால படிப்பு பிழைப்புக்கு உதவாதென்று நிச்சயித்தார். அப்படிப்பும், பிழைக்கும் வழி காட்டும் படிப்பும், வேதாந்த விசாரத்துக்கு ஸஹாயம் செய்யமாட்டா.

விஷய ப்ராவண்ய முள்ளவர்கள் இக்காலத்தில் விஷயத்யாகம் செய்பவரை நிந்திக்கின்றார்கள். அதனால் கெடுவதொன்றுமில்லை. ஸர்வபூதங்களும் தூங்குமிடத்து இந்த்ரிய ஜயமுள்ளவர் விழித்து நிற்கின்றார்கள். ஸர்வபூதங்களும் விழிக்குமிடத்து அவர் நித்ரை செய்கின்றார்கள். ஒருவர் மற்றவரை நிந்தித்தால், நிந்திக்கப்பட்டவர்களும் நிந்தை செய்பவரை நிந்திக்கலாகாதோ? மற்ற தேசத்தார்கள் செல்வமும் ஐஶ்வர்யமும் பொருந்தி, நம்மை அலக்ஷ்யம் செய்தால், அவற்றை வேண்டாதவர் அவரை லக்ஷ்யம் செய்யாமலிருக்கக்கூடுமே? ஆதலால் பரர் நிந்தையைக் காரணமாய்க் கொண்டு ஒருவன் ஸ்வமதத்தை விட்டு அகலவேண்டாம். தேஹ விலக்ஷணமான தத்வ ஸாக்ஷாத்காரத்தை யாவரும் அடையமாட்டார். அவ்விஷயத்தில் அநதிகாரிகள் தநத்தையும், ஸுகத்தையும், ஐஶ்வர்யத்தையும் தேடுவதை மதம் நிராகரிக்கவில்லை. ஸர்வமதங்களும் இப்படிப்பட்ட அதிகாரிகளை ஶ்ரேஷ்டர்களாக எண்ணவில்லை. ஒவ்வொரு காலத்தில் ஜநங்களின் இச்சைகளும் ப்ரவ்ருத்திகளும் ஒவ்வொரு விதமாய் ஏற்படுகின்றன. மரணத்தை முக்யமாக முன் காலத்தில் பெரியோர் சிந்தித்தார்கள். பிழைப்பைப்பற்றி இப்போது கவனிக்கின்றார்கள்.

தர்மாதர்ம நிச்சய விஷயத்தில் தத்காலம் யாவரும் ஸ்வதந்த்ரர். ஒவ்வொருவர்க்கும் ப்ரவ்ருத்தியானது இச்சாநுஸாரியாய் இருக்கின்றது. ஶாஸ்த்ரவஶ்யதை க்வசித் க்வசித் அங்கீகரிக்கப்படுகின்



றது. ஐஹிகத்தால் ஆகர்ஷித சித்தர்களுக்கு முற்காலம் ஸத்துக்க
ளிடம் மர்யாதை குன்றவில்லை. அப்படிப்பட்டவர் மிகுந்து பெரு
கும் இக்காலம் ஸாதுக்களின் பரிபவமும் விளையாட்டாய் முடி
கின்றது. அழிந்துபோன புராதந ராஜ்யங்களின் ஆலயங்களை
ஆதுநிகர் கண்டு விஸ்மயிக்கின்றனர். அதனால் அவ்வாலய நிர்மா
ணம் செய்தவர்கள் அடையும் ப்ரயோஜநமென்? விவேசந சீலர்க
ளான சில ஐரோப்யர் புகழ்வதால் ஆர்யமதம் பொருந்தும் குண
மென்னே? மற்றை ஐரோப்யர்கள் அதன் விஷயமாக உதாஸீ
நர்களாகவோ சத்ருக்களாகவோ வர்த்திக்கின்றார்கள். விவேசந ஸா
மர்த்யமற்ற தசையில், ஸம்ஸர்க்கங்களுடைய குணதோஷங்களால்
ஆகர்ஷிக்கப்படக்கூடிய வயஸ்ஸில், நம் பிள்ளைகளை நாமே நம்
பொருளைச் செலவுசெய்து, வ்ருத்யுபாயம் கல்பிப்பதாக ப்ர
மித்துக்கொண்டு, மதவிரோதிகள் கையில் கொடுத்துவிட்டு, நம்
மதத்தின் தத்கால நிலைமையைப்பற்றிச் சிந்தித்துப் பயன் என்ன?

* * * * * *

தேசிக த்வேஷம்.

சென்ற ஐப்பசி மாஸம் ஸஞ்சிகையில் 'வேதாந்த தேசிகன் வைபவம்' என்று சில விஷயங்கள் வரைந்தோம். இப்பத்ரிகை அக்காலம் ஸ்ரீ அஹோபில மட ஸம்ப்ரதாய ஸபையைச் சேர்ந்தது. அந்த ஸம்ப்ரதாயஸ்தர்க்குத் தேசிகன் பரமாசார்யன். தேசிகன் வைபவம் அவர்கள் உகந்து சிந்திக்கத்தக்கது. ஆதலால் அதைப்பற்றி எழுதலானோம்.

அதைக் கண்ணுற்ற ஒரு தென்கலை வைஷ்ணவர் தம் மனத்தில்
அடங்காத தாபத்தை வளர்த்துவிட்டார். கருத்தில் பத்த வைர
மும் கையில் காசும் மிகுதியாய் நிற்கவே, அவர் தேசிக நிந்தை
யைச் சக்திகொண்ட மட்டும் செய்து, புஸ்தக மெழுதி அச்சிட்டு,
அதை நம் பார்வைக்கும் அனுப்பிவிட்டார்.

தென்கலையார் தேசிகன் தூஷணம் செய்யும் வகைகள் ஒருவா
றாகக் காலக்ரமத்தில் தெளிந்து, அவர்க்குள் துராக்ஹரக்ரஸ்த
சித்தர்களால் பாடம் படிக்கப்பட்டன. இவற்றைத் தேசிகன் ஸம்
ப்ரதாயிகளும் கண்டித்திருக்கின்றார்கள். இந்த வித்யையை யாம்
பயின்றிலோம். இனிப் படித்து இங்கு எழுதப்போகின்றோமில்லை.
இதை ஶ்ரமமின்றிச் செய்யத்தக்கவர் பலருளர். அவர்க்கு இத்

திட்டுச் சுவடி அனுப்பப்பட்டதாகில், அவர் அதைப் பாக்கத் தூஷிப்பார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. அப்புஸ்தக விஷயமாக நமக்குத் தோற்றும் சில யோசனைகளை நாம் எழுதுகின்றோம்.

தேசிக தூஷணையும், ததீயர்கள் பரிபவமும், ஸ்வாசார்ய கைங்கர்யமாகக் கொண்டோர்க்கு ஹிதத்தைச் சொல்லிப் பயனில்லை. "ஹம்ஸதைஶ்ச ராகேக்ருஷ்ண த்ருஷ்ணாஹியாயிநாம் கிம் நாம வித்வேஷ்யேத ராவணாநயாயிநாம்" என்று பூர்வகாலமே தேசிக பக்தர் ஸித்தாந்தித்திருக்கின்றார்.

இப்படித் தூஷிக்கவந்த வைஷ்ணவர்க்கு மனவருத்தம் உண்டாவதற்கு நாம் காரணம் தந்தோமில்லை. தென்னாசார்யர்கள் விஷயமாகக் கொஞ்சமும் நாம் குற்றம் சொல்லவில்லை. இவர்க்கு நாமும் தேசிகனும் அபராதிகளாவதற்குக் காரணமே வேண்டாம். நம் ஸத்தையே அதற்குப் போதும்போல் காண்கின்றது.

யேநகேந ப்ரகாரேண, தேசிகனுக்குக் கவிதார்க்கிக ஸிம்ஹம், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், வேதாந்தாசார்யர் என்கிற பிருதுகள் உண்டென்பதை அவ்வைஷ்ணவர் ஒப்புக்கொள்கின்றார். தேசிகன் காலத்தின்கண்ணே அப்பெயர்கள் அவர்க்கு வாய்த்தனவென்று காட்ட, தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளையும், நைனாராசார்யர் வசனங்களையும் எடுத்துரைத்தோம். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "ஸ்ரீரங்க ராஜதிவ்யாஜ்ஞயா ஜுஷ்டவேதாந்தாசார்யபதம்" என்றும், தயாஶதகத்தில், "வேதாந்ததேஶிகபதே விநிவேஶ்ய பாலம்" என்றும் தேசிகன் ஸாதித்ததைப் பரஸ்பர வ்யாஹத மென்கிறார் இந்த நிபுணர். தயாஶதக ஶ்லோகத்தில் தேசிகன் தமக்குப் பதமளித்த தேவனை ஸ்ரீநிவாஸ நாமத்தால் வ்யவஹரித்தாரில்லை. அன்றியும், தேசிகன் ஸ்ரீ ஶைலத்தில் எழுந்தருளி யிருப்பவர்க்கும் ஸ்ரீரங்கத்தில் படுத்தவர்க்கும் இந்த வைஷ்ணவரைப்போல் பேதம் கண்டிலர். மேலும், 'க்ருஷ்ணாக்ய விப்ர வேதாந்த தேஶிகத்வப்ரதாயிநே' என்று ஸ்ரீநிவாஸனுடைய அஷ்டோத்தர ஶதநாமாவளியில் இருப்பதற்கு அநுகுணமாக ப்ராக் ஜந்மத்தில் க்ருஷ்ணனென்று பெயருடைய ஒரு விப்ரஶ்ரேஷ்டரை வேதாந்ததேசிகனாக ஸ்ரீநிவாஸன் அவதரிப்பித்தார் என்று ஐதிஹ்யம் உண்டு.



இதை யோசித்தும் தயாஶதக ஶ்லோகம் பிறந்திருக்கலாம். தேசிகன் ஸ்வயமே ஸத்துக்களுடைய ஸதஸ்ஸில் ஸமஸ்யா ஸஹஸ்ர நிர்வாஹாநந்தரம், கவிதார்க்கிக ஸிம்ஹமென்றும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும் பிருதளிக்கப்பட்டதாய் ஸாதித்தது நிஜமே. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரெனப் பிராட்டி பிருதளித்ததாய் யாமெழுதியதை அவ்வண்ணமும் விவரித்த புஸ்தகங்களைக் கண்டெழுதினோம். இரண்டு ஐதிஹ்யமும் உண்மையா யிருக்கலாம். கவிதார்க்கிக ஸிம்ஹமெனப் பிராட்டி பிருது தந்ததாயும் புஸ்தகங்களில் கண்டிருக்கின்றோம்.

விக்ரஹரூபமான தெய்வங்கள் நடக்கமாட்டா; பேசவும் மாட்டா. ரங்கநாதன் நாமம் அளித்தாரெனில் அர்ச்சக முகத்தால் தான் அவ்வண்ணம் நடந்திருக்கக்கூடும். அர்ச்சகர்க்குப் பகவான் ஸ்வப்ந மளித்திருக்கலாம். தேசிகன் விபவத்தில் ஈடுபட்ட பாகவதர் இஷ்டத்தை அர்ச்சகர் பகவதாஜ்ஞையாய்ப் பாவித்தும் வெளியிட்டிருக்கக்கூடும்.

கண்டாவதார விஷயமாகத் தேசிகன் தாயார் ஸ்ரீநிவாஸன் கண்டையை விழுங்கினதாக ஒரு ஸ்வப்நம் கண்டாரென்றும், அதன் பிறகு பகவத்ஸந்நிதியில் கண்டை காணமலிருந்ததென்றும், அதனால் ஜநங்களுக்குள் தாபம் ஜநிக்கவும், பகவான் அர்ச்சக முகேந தானே தனது கண்டையை அநந்தஸூரி குமாரராக அவதரிக்கும்படி ஆஜ்ஞாபித்து அனுப்பினதாகத் தெரிவித்ததாகவும் ஐதிஹ்யம் உண்டு. புதஜநங்களுக்குள் இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷையுண்டென்று தேசிகனே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்திருக்கின்றார். அவர் திருக்குமாரர், வேங்கடேஶாவதார மென்றும், தத்கண்டாம்ஶ மென்றும், யதீந்த்ராம்ஶ மென்றும் தேசிகனைப் பற்றித் தர்க்கிக்கின்றார்களென ஸாதித்தருளினார். கண்டையென்றால் ததபிமாநி தேவதை. அதனம்ஶம் தேசிகன் திருமேனியில் ப்ரவேசித்திருந்ததென உத்ப்ரேக்ஷை. தேவசத்ருக்களை விரட்டியோடச் செய்வதும், பகவத் கைங்கர்யோபகரணமா யிருப்பதும் கண்டை. வேதநிந்தகரையும், அதற்கு அபார்த்தம் செய்பவரையும் தேசிகன் நிரஸித்தார். ராமாநுஜ ஸம்ப்ரதாய ரக்ஷகத்வம் ஸ்வாமியை விசேஷமாக ஆஶ்ரயித்த படியால் ராமாநுஜன் அவதாரமெனப்பட்டார். ஸ்ரீநிவாஸன் திருநக்ஷத்ரத்தில் ஜநித்தபடியால்

அவருடைய அவதாரமென்றும் யோசிக்கப்பட்டார். ஆதலால் இந்த ரூபமான ஐதிஹ்யங்கள் தேசிகன் காலம் முதல் உண்டென்று காட்டினோம். நம் தூஷகர் இதை ஸஹித்திலர். இப்படிச் சொல்பவர் முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைத்தவனுக்கு ஸஹோதரனும். தேசிகன் மாதாவுக்குக் களவு ஸெக்ஷன்படித் தண்டனையும் உண்டாயிருக்குமாம். இது திருமலை மால் திருமணியாய்ச் சிறக்க வந்த சிறப்பாம்.

ஐதிஹ்யம் தேசிகன் காலம் முதல் உண்டென்பதை மந்தமதிகளும் மறக்கப் பொருந்தாது. ஐதிஹ்ய காரணம் ஒரு ஸ்வப்நமென்பதை விமர்சிப்பவர் அங்கீகரிக்கலாம். ஸ்வப்நாநுகுணமாக ஸந்நிதியில் கண்டை மறைந்ததென்பது தத்கால ரீதிக்குப் பொருந்தாமல் நிற்கலாம். தத்கால ரீதியைக் கணிசித்து ஸம்பாவிதாஸம்பாவிதாம்சங்களை நிஷ்கர்ஷிக்கின்றவர்கள், அநேக இதிஹாஸ புராண கதைகளையும் பூர்வாசார்யர்கள் கதைகளையும் மறுக்கவேண்டும். நம் தூஷகரோ “ஸ்ரீரங்கநாதனால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்னும் திருமந்த்ரத்தை * * * திருவேங்கட முடையானால் அருளிச்செய்யப்பட்டதாக வரைந்தனரேல், அப்போது அத்தனியனுடைய உண்மையை ப்ராமாணிகர்கள் எங்ஙனே கொள்வர்?” என்றெழுதி, வேதாந்தாசார்ய பதம் தேசிகன் பெற்றபடியை ஸங்கல்ப ஸூர்யோதய ப்ரஸ்தாவ வாக்யங்கள் விவரிப்பதைப் பரஸ்பரம் வ்யாஹதமாக நிச்சயித்தனர். விக்ரஹ ரூபமாய்க் கோவிலில் எழுந்தருளி யிருப்பதாக விச்வஸிக்கப்பட்ட தேவன், மணவாள மாமுனியிடம் காலக்ஷேபம் செய்தா ரென்பதும், தனியன் சொன்னாரென்றும் வழங்கும் கதை ஓர் யானையைச் சோற்றில் மறைப்ப தொவ்வாதோ? இதைக் கேட்ட கண்டூரவாசார்யர், இது உண்மையாகில், ‘[illegible]’ வென்று சொல்லவில்லையா? இந்தக் கதையின் ஸம்பாவிதாம்ஸ யோசனை தூஷகர் செய்தாரோ? இக்கதைக்கு மூலமாக மணவாளமாமுனி எழுதிய க்ரந்தங்களிலோ, அவர் காலத்திலிருந்தவர் எழுதிய க்ரந்தங்களிலோ ஓரெழுத்துண்டோ? ஸ்வகோஷ்டி நிஷ்டமாக இந்த ஸங்கேதம் தென்கலையாரால் ஆதரிக்கப்படுவதைப்பற்றி யாம் தோஷம் சொல்வோமில்லை. நிஜமாகத் தேசிகன் காலமுதல் வழங்கிவந்த ஐதிஹ்யத்தை வடகலையார்



நம்பினால் தூஷகர்க்குத் துயரம் ஏனோ? கண்ணாடி யறையில் வீற்றிருந்து வழிப்போக்கர்மேல் கல்லெடுத்து வீசுகின்றார் நம் தூஷகர். வடகலையார் சொல்லும் ஐதிஹ்யம் ஒரு ஸ்வப்நத்தில் ஜநித்தது. விக்ரஹமே எழுந்து வெளிவந்து உலாவிற்றென்ற கதையைப்போன்றதன்று. ஸ்வப்நத்தின் பொருட்டு இத்தூஷகர் நீலகோட்டைச் சரணமடைவானேன்? தேசிக பக்தர் இச்சித்தாராகில் இத்தூஷகரே நீலகோட்டின் நிர்ப்பந்தத்தை அநுபவித் தறியலாம். ஸ்வப்ந விஷயமாக,

“ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாநோ பவந்தி அத ரதாந் ரதயோகாந் பதஸ் ஸ்ருஜதே - ந தத்ராநந்தா முதஃ ப்ரமுதோ பவந்தி அதாநந்தாந் முதஃ ப்ரமுதஸ் ஸ்ருஜதே - ந தத்ர வேஶாந்தாஃ புஷ்கரிண்யஸ் ஸ்ரவந்த்யோ பவந்தி அத வேஶாந்தாந் புஷ்கரிணீஸ் ஸ்ரவந்தீஸ் ஸ்ருஜதே ஸ ஹி கர்த்தா - ஸ்வப்நாந்த உச்சாவசமீயமாநோ ரூபாணி தேவஃ குருதே பஹூநி” - என்கிறபடியே உபநிஷத் வாக்யங்களை நம் தூஷகர் விமர்சிக்கத்தக்கவர். அன்றியும், “ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி” என்கிற ஸூத்ர பாஷ்ய பங்க்தியில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்வப்நாநுபவங்களுக்கும் கர்த்ருத்வம் பகவானிடம் நிற்கின்றதெனக் கூறுகின்றார். அதித்வேஷம் ஸாராஸார விவேகோத்பத்தியை ப்ரதிபந்திக்கு மென்பதை நம் தூஷகர் பக்கல் கண்டறியலாம். மற்ற யோசனைகள் பின் ஸஞ்சிகைகளில் வரைவோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ வைஷ்ணவ மதமும் த்ரிகால ஸ்திதியும்.

[இது, சென்ற மார்கழி மாஸத்தில் நடைபெற்ற திருவெவ்வுளூர் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில், ஸ்ரீ. உ. வே. வித்யா பூஷணம் ஆள்கொண்டவல்லி கோவிந்தாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸங்களின் ஸங்க்ரஹம்.]

## I. முதல் உபந்யாஸம். [28-12-1916.]

ஸ்ரீமத் ஸ்வாமிகள், இந்த ஸபையில் உபந்யஸிக்க அடியேனை வரவழைத்த பஹுமாநத்தைக் குறித்து முதலில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்கிறேன். அரிய பெரியோர்கள் நிறைந்துள்ள கூட்டத்தின் முன்னிலையில் இருப்பதனால் அடியேனுக்கு மோக்ஷம் நிச்சயமாய் உண்டு என்று நினைக்கிறேன். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் இரு பிளவுபட்டிருக்கும் 'வடகலை' 'தென்கலை' என்னும் த்விவித கொள்கைக்காரர்களும் ஒத்த மனத்தினராய்ச் சேர்ந்துவாழ நாம் எல்லோரும் எம்பெருமானை ப்ரார்த்திக்க வேண்டும்.

தற்காலத்தில் காங்க்ரஸ் என்றும் கான்பரன்ஸ் என்றும் பெரிய கூட்டங்கள் நடந்தேறி வருகின்றன. அவைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று சிலர் கேட்பார்கள். மற்றும் சிலர் ஒருவித்து உண்டாகுமிடத்தில் இரண்டு ஆகுமா? (ஒரே வித்து இரு வித செடிகளாகுமா?) என்று கேட்பார்கள். இதற்கு உத்தரம் ஆத்மா ஸுரக்ஷிதமாயிருந்தால் எல்லாம் கூடும் என்க.

ஆனால் அந்தப் பெருங் கூட்டங்களின் முக்ய கருத்து, உலகத்தில் ஸம்பந்தாஸம்பந்தமின்றி வெவ்வேறாகப் போகும் ஸித்



தாந்தங்களை ஒரு வழிப்படுத்துவதே தான். இப்படி ஒற்றுமைப்படுகை ஆத்ம வித்யையால் கூடுமே தவிர, வேறு விதமாக ஏற்பட அவகாசமில்லை. எல்லா விதமான வித்யைகளிலும் ஆத்ம வித்யையே பெரியது. "பூகோள தத்வம், நக்ஷத்ர தத்வம் முதலிய தத்வங்களை நன்றாகக் கற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஆத்ம வித்யையைச் சிறிதும் கற்க முடியவில்லை" என்று நாரதர் ஸநத்குமாரனிடம் சொன்னதாக ஓர் உபந்யாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்ம வித்யையானது நமது ஸநாதந தர்மங்களால் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வைஷ்ணவ ஸபையானது பாரமார்த்திகமான முடிவுகளையே கொண்டதாக ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் தங்களுடைய பாதுகாப்புக்கும், தத்கால சிறுவர்களின் நன்மையின் பொருட்டும் (Moral and religious education) மதவித்யாபிவ்ருத்தியும் நன்னெறிப் பழக்கமும், அவச்யாபேக்ஷிதமென்று அபிப்ராயப்பட்டார்கள்.

லோகத்தில் புராதந புஸ்தகங்களில் எழுதப்பட்டிருப்பதே மதத்தின் மூலாதாரம். கிறிஸ்தவர்களுக்குப் பைபில் எப்படியோ, முஸல்மான்களுக்குக் கொரான் எப்படியோ, பார்ஸிகர்களுக்கு ஜெண்டவெஸ்தா எப்படியோ, பௌத்தர்களுக்கு த்ருபிடகம் எப்படியோ, அப்படியே நமக்கும் நம் மதத்திற்கும் வேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

லோகத்தில் புராதந மதங்களுக்கெல்லாம் புராதநம் வைஷ்ணவமே. "விஷ்ணோ: பரமம் பதம்" என்று ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

புருஷஸூக்தமானது நான்கு வேதங்களுக்கும் பொதுவானது. அந்த ஸூக்தத்துக்குப் புருஷன் யார்? விஷ்ணு; நாராயணனே புருஷன். இந்தத் தத்வத்தை விவரிக்கிற புருஷ ஸூக்தத்திற்கு 108 - உபநிஷத்துக்கள் இருக்கின்றன. அவைகளில் முத்கலோபநிஷத் இதற்கு ஆதாரமாயிருக்கிறது. அதைப் பார்த்தால் இந்த ஸூக்தத்திற்கு நாராயணன் என்பவன் ரிஷி.

நம்முடைய பழைய காலக் கதைகள் என்பவைகளை விட்டுவிட்டு இதர தேசத்து ஸாக்ஷிகளைக் கொண்டு நாம் பார்க்கும்

போது, புராதந மெக்ஷிகன்களுக்குள்ளே ராமன் ஸீதை - இவர்களுடைய கதைகள் வழங்கி வந்தனவாகத் தெரிகிறது. அதனாலேயும் ராமன் விஷ்ணுவின் அவதாரம் என்று ஏற்படுகிறதல்லவா?

பார்ஷியர்கள், ரோமானியர், க்ரேக்கர், இவர்கள் நாகரிகமடைவதற்கு முந்தியே ஏற்பட்டிருந்த (Babylonian Tablets) பாபிலோனியன் சித்ரபீடங்களில் ந்ரஸிம்ஹனைக் குறித்துங் கூட சில விஷயங்கள் ஏற்பட்டிருந்தன. ந்ரஸிம்ஹன் விஷ்ணுவின் ஓர் அவதாரமே. மத்ஸ்யாவதாரத்தில் நடந்த சில விஷயங்களும் (Babylonian) பாபிலோனியன் ஜாதியார்களில் வழங்கிவந்தனவாகத் தெரிகிறது.

பௌத்தர்களின் 'ஜடாக' கதைகளில் ஒன்றாகிய 'தசரதா ஜாடகம்' என்னும் ஓர் புத்தகத்தில் பௌத்தர் "நான் முன் ஒரு காலத்தில் ராமனாக இருந்தேன்" என்று சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது. (Dr. Paul Corus) டாக்டர் பால்கோரஸ் என்பவர் தாம் பௌத்தமதத்தைக் குறித்து எழுதும் புஸ்தகத்தில் க்ருஷ்ணோபாஸநம் பழமையான பாரமார்த்திக வ்ரதம் என்று எழுதுகிறார்.

மேலும் ஜைனர்களின் தீர்த்தங்கரர்களில், ராமன் க்ருஷ்ணன் என்னும் இருவர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. (Megasthenes) மெகஸ்தெனிஸ் என்பவர் கிருஷ்ண ஸேவையைப்பற்றிச் சொல்லுகிறார்.

வைஷ்ணவம் பழமையான மதம் என்பதற்குப் பர்ஷியன் யக்கம் ஆதாரம் வேண்டும் என்றால், 'Mazdaism in the light of Vaisnavam' என்னும் (அடியேன் இயற்றிய) புஸ்தகத்திற் காணலாம்.

### முற்கால நிலைமையும் தற்கால நிலைமையும்.

இக்காலத்தில் புதிய இந்து மதத்தினர் சிலர் தோன்றி, ப்ரஹ்ம ஸமாஜம் என்றும், ஆர்ய ஸமாஜம் என்றும், ப்ரார்த்தந ஸமாஜம் என்றும், வெவ்வேறு கோட்பாடுகளை உடையவர்களாகித் தாங்கள் (Impersonal God) அமூர்த்த ப்ரஹ்மத்தை த்யானிப்பவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அவதாரமும் அதைப் பற்றிய அர்ச்சா ஸேவையையும் கண்டநம் செய்கிறார்கள். ராம



னும் க்ருஷ்ணனும் இன்றிக்கே இந்து மதம் ஏற்படவில்லையே! நமது மதமாகிற கோட்டைக்கு இவ்விருவர்களும் அஸ்திபாரம் அல்லவா? ஐயோ! நம்முடைய மதம் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது! அயல் தேசத்தவர்களன்றோ நம்மை நம்முடைய மதத்திற்கு அழைக்க தியாஸபிஸ்ட் என்று பெயர்பூண்டு முன்வந்திருக்கிறார்கள். இக்காலத்தில் அவர்கள் ரிஷிகள் போன்றவர் அல்லவா? ப்ரஹ்ம ஸமாஜத்தவர்கள் இந்து மதத்துக்குச் செய்த கொடுமையை, இராமனும் க்ருஷ்ணனும் ஆகிய இவ்விருவர்களும் சேர்ந்து ஓர் அவதாரமானாற்போல் 'பகவான் ராமக்ருஷ்ண பரமஹம்ஸ தேவர்' என்பவர் அவதரித்து, அவதாரம் இல்லை என்னும் தோஷத்தை நிவர்த்தித்தார்.

புதிய இவ்விந்து மதக் கொள்கைகளால் முடிந்தது என்னவென்றாலோ, ஸ்திரீகளுக்குக் கல்வியை ஓர் விதத்தில் வ்ருத்தி செய்யப்போய், அவர்கள் பழைய இந்திய ஸ்த்ரீகளுக்குள்ள கௌரவமான அபேக்ஷிதங்களையெல்லாம் அறவே விட்டு, அந்ய தேசத்து வழக்கங்களையும் நடையுடை பாவனைகளையும் கற்றுக்கொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள். உண்மையாகவே இந்திய பெண்களுக்குக் கல்வியைத் தரவேண்டும் என்ற விருப்பமிருக்கும் பக்ஷத்தில், சரியான வழிகளில் ஸ்வதேசாசாரங்களை அநுஷ்டிக்கக் கற்பித்துவந்தால், அவர்களுக்கு நல்ல நடவடிக்கைகள் வருமே. இல்லாவிட்டால் ப்ரயோஜநம் இல்லாமல் வ்யர்த்தமாகவன்றோ முடியும்? ஸ்திரீகளுக்கு வித்யை எவ்வழியாகக் கற்பிக்கப்படவேண்டும் என்பதை நம் வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் பெரியோர்கள் நன்கு விவரித்திருக்கிறார்கள். ஆகையால் இவ்விஷயம் வைஷ்ணவ ஸபையில் சொல்லவேண்டி வந்தது. அது சொல்லியாயிற்று.

ஹிந்து மதத்தில் வழங்கிவரும் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் ஸித்தாந்தங்களெல்லாம், நாம் வைஷ்ணவம் என்று சொல்லும் ப்ரஹ்ம தத்வத்தின் வெவ்வேறு அம்சமபிப்ராயங்கள் தாம். இதை உடையவர் நன்றாகக் காட்டியிருக்கின்றார். தவிர, கீதாசார்யனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன், தாம் அடிக்கடி அவதரித்து சிக்ஷை செய்வதாகக் கூறியிருக்கிறார். கீதையானது விஷ்ணுவே ஸநாதந தர்மம் என்று சொல்லும் பாஞ்சராத்

ரம் அல்லது பகவத்சாஸ்த்ரத்தின் ஸாராம்சம். காலக்ரமத்தில்
சங்கரர் அவதாரிகை எழுதத் தொடங்கியது முதலில் விஷ்ணு
ஸஹஸ்ரநாமமே. சங்கருடைய சிஷ்யர்களும் முதல் குருவா
கிய நாராயணனையே வணங்கினார்கள். நாராயணனே அவர்களு
டைய யதிகளுக்கு மூலமந்த்ரமாக ஏற்பட்டார். தவிர, வல்
லப, நிம்பௌக, மாத்வ, முதலிய பிற்பட்ட மதங்களும் 11-
ஆவது நூற்றாண்டில் ராமாநுஜனால் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்
தை அநுஸரித்தே வைஷ்ணவத்தின் (Universal Nature) ஸர்வ
வ்யாபகத்வத்துக்கு ஸாக்ஷ்யங்களாகின்றன. பங்கால் ராஜதானி
பக்கலும், அடியேன் இயற்றியுள்ள 'சைதந்ய சரிதாம்ருதம்' என்
னும் சரித்ரத்தில், சைதந்யரின் ஆசார்யர் கேசவபாரதி என்ப
வர் ராமாநுஜனுக்குப் பின் 6-ஆவது ஆசார்யர் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. மற்றொரு வைஷ்ணவ ஆசார்யர் ராமாநுஜ சிஷ்
யரான ராமாநந்தருக்கு மகம்மதிய வம்சத்தைச் சேர்ந்த கபீர்,
கமால், என்ற இரண்டு சிஷ்யர்கள் உண்டு என்று சொல்லி
யிருக்கிறார். அவர்கள் இருவரும் ராம மந்த்ரமே மோக்ஷஸாத
னம் என்று கொண்டார்கள். சிக் ஜாதியாரின் ஆதி க்ரந்தத்தில்
கடவுளுக்கு ஹரி, நாராயணன், கோவிந்தன் என்னும் நாமதேயங்
கள் முக்யமாக வழங்கிவந்தனவாகச் சொல்லப்பட் டிருக்கிறது.
ஆகையால் அதுவும் வைஷ்ணவமே ஆகிறது.

வால்மீகருக்குப் பின் மூன்று பெரிய ராமாயண சாஸ்திரி
கள் ஏற்பட்டார்கள். அவர்கள், வட இந்தியாவுக்குத் துளஸீ தாஸ
ரும், மேற்கு இந்தியாவுக்குத் துக்காராமும், தென்னிந்தியாவிற்
குக் கம்பரும் ஆவர். அவர்களுடைய ராமாயணங்களும், ஹிந்தி,
மஹாராஷ்ட்ரம், தமிழ், என்னும் பாஷைகளிலே முறையே ஏற்
பட்டிருக்கின்றன. இத்தேசத்தில் தமிழ் ராமாயணத்தை யாவரும்
கொண்டாடுகின்றார்களென்பது ப்ரஸித்தம். பங்காளி முதலிய
பாஷைகளிலும் ப்ரஸித்தமான பங்கிம் சந்தசதுர்ஜி முதலியவர்க
ளால் மொழிபெயர்க்கப்பட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது
என்பதை நான் துணிந்து சொல்லுகிறேன். ஆகையால் அத்
தேசத்திலும் வைஷ்ணவம் நிறைந்திருக்கிற தென்னும் விஷயத்
திற்கு இது ப்ரமாணம்.

உத்தர காண்டத்தில் ஆராயவேண்டியநாதனாகிய விஷ்ணுவே,
தான் வேதத்தில் பூர்வகாண்டத்தில் கடைசி அதிகாரத்தில் சொல்

MADRAS



லும் 'ப்ரஹ்மம்' என்னும் பதத்துக்குப் பொருள் என்று விஸ்த
ரித்திருக்கிறது.

ஆகையால் வைஷ்ணவமே த்ரிகாலங்களிலும், எவ்விடத்தி
லும், வழங்கிவரும் தத்வப்பொருள் என்னும் ஸித்தாந்தத்திற்கு
யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. கிறிஸ்து மதம், பௌத்த மதம்,
மகம்மதிய மதம் இவைகள் ஒவ்வொன்றிலும் உள்ள அநேக
கிளைகளில் துச்சேஷ்டிதங்களுண்டா யிருந்தும் எப்படி வ்ருத்தி
யடைகின்றனவோ, அப்படியே வடகலை தென்கலை முதலிய சணக்
கிடக்கூடாத சில்லரை ஸபைகள் உண்டாயிருந்தும் வைஷ்ணவ
மதம் வ்ருத்தி யடையும் விஷயத்தில் ஸந்தேகமில்லை.

தவிர 1896-ம் வருஷம் அடையாற்றில் தியஸாபிகல் ஸொஸைடி
யில் உபந்யஸித்த பெஸண்ட் அம்மாளால் உச்சரிக்கப்பட்ட
["That Great Saint Ramanuja"] "அந்தப் பெரிய ஆசாரி
யன் ராமாநுஜன்" என்னும் வார்த்தைகள் இப்போது உபந்யஸிக்
கும் அடியேன் காதுகளில் உத்கோஷமாகப் பட்டது. ஆகையால்
தியாஸபி ஸொஸைடிகாரர்களுக்கு க்ருஷ்ண பக்ஷபாதம் அல்
லது விஷ்ணு பக்ஷபாதம் என்னும் விஷயம் வ்யக்தமாகின்றது.

வடகலை தென்கலைகளைப் பற்றி ஆசார்ய க்ரந்தங்களில்
வேதாந்த தேசிகனாலாவது, மணவாளமாமுனிகளாலாவது, ப்ரதி
வாதி பயங்கரம் வரதாசார்யராலாவது, எங்கேயாகிலும் சொல்லப்
பட்டிருக்கிறதா? இப்போதிருக்கும் நாம் தான் சண்டை போடுகி
றோம். எதற்குப் போடவேணும்? கோவில் ப்ரஸாதத்திற்கும்
தீர்த்த ப்ரஸாதத்திற்கும் தானே! Revd J. N. Farquhar என்ப
வர், உபந்யஸிப்பவரிட மிருந்து வைஷ்ணவத்தின் உண்மையை
(ஸ்வபாவத்தை) அறியவேண்டுமென்று கேட்டு அறிந்துகொண்டு,
மதத்தில் அதன் பெருந்தன்மையைப் புகழ்ந்து, தென்கலை வடகலை
சண்டையில்லாவிடில் உலகமே மோக்ஷம் அடையக்கூடும் என்று
அபிப்ராயப்பட்டார். இதை ஸபையோர் நம்பமாட்டார்கள். வட
கலை தென்கலை சண்டைகள் வைஷ்ணவத்தைக் கெடுத்துவிட்டது
என்னும் விஷயத்தைக் குறித்து இங்கிலாந்தில் ஒரு புஸ்தகம்
வெளியிடப்பட்டது. அது உண்மையே.

இருந்தபோதிலும் நாம் பயப்பட வேண்டியதில்லை. தேசி
கன், மணவாளமாமுனிகள், வாதிகேஸரி முதலியவர்கள் நமது மத

த்தை வ்ருத்தி செய்து ஆதரித்து வந்தார்கள். அற்ப விஷயங்களிலிருக்கும் வித்யாஸங்களினால் உண்டாகும் பயன் என்ன? ப்ரத்யக்ஷ அநுமாந விஷயங்களில் இன்றை தினம் உபந்யாஸகர்களும் அக்ராஸநாதிபதியும் எப்படி வெவ்வேறு அபிப்ராயப்பட்டார்கள் என்பதை ஸபையோர்களே பார்த்திருக்கக்கூடும் அல்லவா? இந்த அபிப்ராய பேதங்களால் நாம் பயப்பட்டுச் சண்டை போட்டுக்கொள்ளக் காரணமில்லை. இதற்கு உதாரணமாக வேதாந்த தேசிகன் ‘[illegible]’ என்று உறுதியாக அருளிச் செய்திருக்கிறானன்றோ?

வடகலையாரும் தென்கலையாரும் ஒன்று சேர்வதற்கு அஹோபிலமடமே தகுந்தது என்பது அடியேனுடைய கருத்து. இப்போதிருக்கிற மடாதிபதியவர்கள் உபய ஸம்ப்ரதாயஸ்தர்களிடத்திலும் அன்பு வைத்திருப்பதால், நாம் பாக்யசாலிகளாக இருக்கிறோம். உபந்யாஸகனாகிய அடியேன் தென்கலையாயிருந்தபோதிலும், பகவத் விஷயத்தில் ஆசார்ய ஸ்தாநத்தை வஹித்த ஸ்ரீ அஹோபிலமடத்து ஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்சடகோப ஸ்வாமிகளுடைய ஆத்மீக ஸம்பந்தத்தைப் பற்றிப் பெருமையுடைத்தானவனாயிருக்கிறேன்.

கிறிஸ்தவர்களுக்குள் ப்ராடெஸ்டெண்ட்ஸ், ரோமன் காதலிக்ஸ் என்ற இருவகையார்களுக்குள்ள சச்சரவுகள், நமக்குள்ளிருக்கும் சச்சரவைக் காட்டிலும் குறைந்தனவல்ல. மேற்படி இருகக்ஷிக்காரர்களும் ரக்த ப்ரவாகமாகும்படி சண்டை போட்டுக்கொள்ள, St. Francis of Assisi என்பவர் இருகக்ஷிக்காரர்களையும் ஒன்று சேர்க்க மிகவும் ப்ரயாஸப்பட்டார். இராமாநுஜரும் ஒன்று சேர்த்தார் என்பதை இச்சபையோர் மறக்கக்கூடாது. இக்காலத்திலும் மறுபடியும் இது ஸாத்யமாகும். கிறிஸ்து மதக்கிளைப் பிரிவுகள் பொதுப் பிரயோஜநத்தை உத்தேசித்து உண்டாயிருக்கின்றன. உதாரணம் Y. M. C. A. தான். வைஷ்ணவ மதத்தைத் தடை செய்ய அநேக அபாயங்கள் நேர்ந்தன. அவை, இந்து மதத்தையே தடை செய்ய நேர்ந்தனவென்றே சொல்லலாம். எல்லாவற்றிற்கும் முதலில் ஜாதி என்பது அழிந்துபோக ஏற்பட்டது. நீண்ட காலமாக ஏற்படுத்தப்பட்ட எல்லைகளை அழித்துவிட்டால், நம் ஜநங்கள் எவ்வளவு கெட்டுப்போவார்கள் என்ப



தையும், நம் சிறுவர் எவ்வளவு ஹீந ஸ்திதியை அடைவார்கள் என்பதையும் ஊஹித்துப் பாருங்கள். சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதையும், மாம்ஸ பக்ஷணம் செய்வதையும் இங்கிலாந்துக்குப் போய்க் கற்றுக்கொண்டு வந்த நம் சிறுவர்களே! நம்முடைய தற்காலநிலைமையின் கொடுமை தான் என்ன? ஜாதியை நிலைநிறுத்தும்பொருட்டு ஸாதநோபாயங்களை அதிசீக்ரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஜாதியை நிலைநிறுத்தும்பொருட்டே ஊக்கமுள்ள கார்யங்களைச் செய்துவந்த ‘பாரததர்ம மஹாமண்டலி’ ஸபையில் உபந்யாஸகர் ஒரு அங்கத்தினர். அந்த ஸபையில் உபந்யாஸகரின் அபிப்பிராயங்களை எடுத்துக்கொண்டிருக்கக்கூடும். மற்றைப் பிரிவுகளைப்போல வைஷ்ணவத்தின் பலமும் ஜாதியைப் பாதுகாப்பதிலேயே இருக்கிறது.

இக்காலத்தில் ப்ரம்ஹ மத த்வேஷ மென்கிறது (பிராஹ்மணர்களைத் தூஷித்தல்) அதிகமாய்க்கொண்டு வருகிறது. இவ்வாபத்துகளுக் கெல்லாம் மாற்றாக நம்முடைய வைஷ்ணவ ஸபை ஏற்படவேண்டும். விஷ விருக்ஷம் போல் மேற்படி த்வேஷம் பரவிவருகிறது. சாஸ்த்ரத்தில் உள்ள விதி விலக்குகளைத் தெரிந்து, உண்மையாயும் பரிசுத்தமாயும் நடந்துகொள்ளுகிறவனே ப்ராஹ்மணன். இவன், அந்நிலைமையினின்றும் வழுவிவிட்டதால் பலரும் தன்னைக் குறைகூறும்படி செய்துகொள்ளுகிறான். இந்தக் குறை உண்டாவதற்குக் காரணம் பொருளாசையும், உத்யோகங்களில் உயர்ந்து செல்லவேண்டுமென்கிற விருப்பமும், ராஜாங்கத்தை ஜயிக்கவேண்டும் என்னும் நோக்கங்களுமே. தத்கால இந்து ஸமூஹத்தின் ஒரு சிறிய பாகத்தில் இந்தக் குறைகள் உள என்று சொல்லலாம். தன்னுடைய ஆத்மாவானது அதி ஆவலுடன் மோக்ஷத்தை விரும்பிக்கொண்டிருக்கும்போது உண்மையான ப்ராஹ்மணன் இந்த இஹலோக ஸாதநங்களுக்கு ஏன் ஆசைப்பட முயலவேண்டும்? மேலும் அவன் மற்றவர்களுக்கும் மோக்ஷம் தரக்கூடுமே. தன்னுடைய கையிலிருப்பது போல மோக்ஷத்தைத் தான் ஸ்வல்பமாகக் கொடுக்கச் சக்தியுள்ள அவனுக்கு, லௌகிக பக்தி ஸம்பாதித்துக்கொள்ள என்ன தேவை? இக்காலத்தில் தான் பிராஹ்மணனாக ஜீவநம் செய்யவேண்டுமென்றால் மிகக் கஷ்டம். ஏனெனில் தனக்குள்ள எல்லா விதமான ஸ்வாதந்த்ர்யங்களையும் அநுஷ்டாந நிர்ப்பந்தங்களை வைத்துக்கொண்டு

குறைத்துக்கொண்டான். இவ்விதமாக க்ஷத்ரியருக்கு ராஜரிகமும், (Royalty) வைப்ரயனுக்குத் தங்மும் சூத்ரனுக்கு ரூப்ரூஷையாகிற ஸ்வாதந்த்ரியமும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் நன்ருக அறிந்து நடந்துகொண்டால் ப்ரஹ்ம த்வேஷமே இராது. இருந்தபோதிலும் அது யாதொரு தீங்கும் செய்யாது.

ஹரித்வாரத்தில் உள்ள 'The All-India Hindu Sabha' என்பது ப்ராஹ்மணனை முன்னுக்குக் கொண்டுவர வேதங்களைப் படிக்கச்செய்ய முயன்றது. அப்படிச் செய்தது வேறு வித அபாயத்திற் கிடமாயிற்று. இதற்காகவே வைஷ்ணவ மதத்தைப் பாதுகாக்கவேண்டும். கோவில்களை ஸம்ரக்ஷணம் செய்ய வேண்டும். மடங்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். வைஷ்ணவத்தின் கூடார்த்தங்களைப் பாதுகாப்பதற்குக் கோவில்களும் மடங்களுமே தகுதியான ஸ்தலங்களாகும். கோவில் முதலான கற்கோட்டைக்கு ஜ்ஞாநமாகிற கோட்டை சிறந்தது. ஜ்ஞாநக் கோட்டை பலமாக இருந்தால் கல் முதலியவைகளால் கட்டப்பட்ட கோட்டைகள் உறுதியாக நிற்கும். இது போனலும் அது போகாமலிருந்தால் பின்னொரு காலத்தில் இது உண்டாகத் தட்டில்லை. ஆகையால் ஜ்ஞாநத்தைப் போதிக்கும் பொருட்டு,' கோவில்களிலும் மடங்களிலும் ஸம்ஸ்க்ருத பாடசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். தற்காலத்தில் வேத பாடசாலைகளில் கேவலம் சில விதிகளைத் திருப்பிச் சொல்ல மாத்ரமே கற்றுக் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி கற்றுக்கொடுக்கப்படுவதை மாற்றவேண்டும். இல்லாவிடில் வேதங்களுக்குத் தயாநந்த ஸரஸ்வதி முதலியவர்கள் வெவ்வேறு விதமான அர்த்தங்களைக் கற்பிக்க நேரிடுமே! இதற்கு த்ருஷ்டாந்தம், மதராஸில் ஓர் ப்ரபு, வேதங்கள் இமயமலையின் பனிக்கட்டிகளையும் கற்களையும் பற்றிய கதை என்றே அபிப்பிராயம் கொண்டிருந்தார். ஆங்கில முணர்ந்த இந்துக்களும் அயல் தேசத்தவர்களும் இவ்விதமாகவே அபிப்ராயப்பட்டார்கள். ப்ராஹ்மணர்களுக்கு இக்காலத்தில் அவப்ரயம் செய்ய வேண்டியது இன்னொன்றுண்டு. அவர்கள், தாங்கள் இதரர்களுக்குச் செய்யவேண்டிய கர்த்தவ்யங்களைச் செய்வது அவப்ரயம். செய்யவேண்டிய கர்த்தவ்யங்களை விட்டுவிட்டால், ஒரு வீட்டில் ஒரு ப்ராத்ருஸமூஹத்துக்குக் கட்டுப்பாடு இல்லாமல் தவறிப்



போனல் எப்படியோ, அப்படியே, நம் இந்து ஸங்கமாகிற குடும்
பத்துக்குப் பெரிய ஆபத் நேரிடும்.

கார்யம் செய்வதற்கு உரியவன் தன்னுடைய கார்யத்தைச்
செய்யாமல் விட்டுவிட்டபோது, மற்றவர்கள் சாஸ்த்ர ஸம்பந்தங்
கள் இல்லாமலே சில வைதிக அதிகாரங்களை (Holy offices) வஹி
க்க ஆரம்பித்து விட்டார்கள். உதாரணமாக ப்ராஹ்மண ரல்லா
தவர்கள் தங்களைப் போலுள்ள வர்ணத்தாருக்கு ஸமாப்ரயணம்
முதலியன செய்வித்துத் தமக்குத் தோன்றிய மந்த்ரங்களையும்
உபதேசிக்கத் தலைப்பட்டார்கள். இப்படிச் செய்யுமவர்கட்குள்
சண்டையும் நேரிடுகிறது. வைஷ்ணவ ப்ராஹ்மணன் மாத்ரமே
தொன்றுதொட்டுச் செய்துவரும் கார்யங்களை அந்யர்கள் செய்
வது வ்யஸநத்தை உண்டாக்குகிறது.

மடாதிபதிகளுக்கும் சிஷ்யக் கூட்டத்திற்கும் ஸம்பந்தம் மிக
வும் தளர்ந்துவிட்டபடியால் இம்மாதிரி அநர்த்தங்களுக்கு ஆஸ்
பதமாய்விட்டது. இடையனுக்கும் மாடுகளுக்கு முள்ள இந்த
தூரமானது நெருங்கினலொழிய உண்மையான ஸம்பந்தங்கள்
நிலைக்கமாட்டா. அவப்ரயமான கோட்பாடுகளும் செய்ய முடியா.
மடாதிபதி சிஷ்ய கோஷ்டி வ்ருத்தியில் எப்போதும் ஊக்கமா
யிருக்கவேண்டும். சிஷ்யர்களும் தாங்கள் நன்கு நடந்துகொள்வ
தற்கு மடாதிபதிகள் மூலமாகவே விஷயங்களை அறிந்துகொள்ள
வேணும்.

வர்ணாப்ரம தர்மத்தால் நம் இந்தியா தேசத்துக்கு எல்லா
விதமான அபாயங்களும் நேரிட்டிருக்கின்றனவென்று ஸோஷல்
ரிபார்மர்கள் முறையிடுகிறார்கள். தேசாந்தரங்களில் இந்த வர்ணா
ப்ரம தர்மங்களே வெவ்வேறுவிதமாக வழங்கிவருகிறதை இந்த
ஸோஷல் ரிபார்மர்கள் மறந்துவிட்டார்கள். நம் பரதகண்டத்தில்
அநாதியாக நம்முடைய ஸ்வபாவத்துக்குத் தக்கபடி வர்ணாப்ரம
தர்மம் ஏற்பட்டிருப்பது ஸஹஜமே. அவ்வோதேசத்துக்கு அவ்
வோ ஜநங்களுடைய அபிப்ராயம், அநுகூலம், ருசி, பாஷை,
கொள்கை, இவைகளைப்பற்றி வர்ணாப்ரம தர்மங்கள் வெவ்வேறு
விதமாக ஒவ்வொரு தேசங்களில் நிலைபெற்றிருக்கின்றனவே.
இப்படியிருக்க நம் தேசத்தில் வழங்கும் வர்ணாப்ரம தர்மக்கொள்
கைக்கு மாத்ரம் ஸோஷல் ரிபார்மர்களின் ஆக்ஷேபம் எப்படி

கூடும்? தவிர, ரிஷிகள் நம்முடைய ஸமுதாய க்ஷேமத்துக்காகவே வர்ணாச்ரம தர்மங்களை பரீக்ஷித்துவிட்டார்களே தவிர, ஸோஷல் ரிபார்மர்கள் எண்ணுகிறபடி நம்முடைய அநர்த்தத்திற்கு ஏற்படுத்தினார்கள் என்று புத்திசாலிகள் சிந்திப்பார்களா?

இவ்வித விசாரங்களையெல்லாம் செய்து துர்மார்க்கத்தில் போகும்படியான ஜநத்தை ஸந்மார்க்கத்தில் சேரும்படியாகச் செய்யும் உபாயங்கள் எவையென்று சிந்தித்துத் தக்க கார்யங்களைச் செய்யவேண்டியது இந்த வைஷ்ணவ ஸபைக்கு முக்யமான அபிப்ராயமாக இருக்கிறது.

## II. இரண்டாம் உபந்யாஸம். [29-12-1915.]

[இதுகாறும் செய்து வந்த உபந்யாஸத்தில், வைஷ்ணவத்தின் நிலைமையை அசைக்கும் ஸூக்ஷ்ம வழக்கத்திலிருக்கும் அபாயங்களை முன்னிட்டு வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை முக்யம் என்ற அம்சம் எடுத்துரைக்கப்பட்டது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்யப்பட வேண்டும் என்று ஸபையில் எழுந்தருளின அநேகர் ஆமோதித்ததுடன், இன்னின்ன கார்யங்கள் செய்யப்பட வேண்டும் என்று தெளிவான வார்த்தைகளால் எடுத்துரைத்தார்கள்.] வைஷ்ணவர்களிடத்திலிருந்து அபேக்ஷிக்கும் ஒற்றுமையானது முடியாத கார்யமல்ல. லோகசரித்ரத்தில் உதாஹரணங்கள் அநேகம் உள. ஐரோப்பாவில் வழங்கிவரும் கிறிஸ்துவ மதமே நமக்கு உதாஹரணம். ஆங்கிலம் கற்காத இந்தியர்கட்குக் கிறிஸ்தவ மதத்தில் அநேக ஸித்தாந்தங்கள் உள என்பதும், ஒவ்வொரு ஸித்தாந்தமும் ஒவ்வொரு மடத்தின் கோட்பாடுகளை அநுஸரித்தவை என்பதும் தெரியாமலிருந்திருக்கலாம். இங்கிலாந்து, ஸ்காத்லாந்து மடங்கள் என்றும், Presbyterian Non-Conformist ஸித்தாந்தங்கள் என்றும், அமெரிக்கன் பாப்டிஸ்ட், ஜெர்மன் லூதர்ன் மிஷன்களென்றும், வெஸ்லியன் ஸால்வேஷனிஸ்ட் என்றும், இன்னும் அநேக ஸித்தாந்தங்கள் கிறிஸ்தவ மதத்தில் இருக்கின்றன. இப்படி அநேகம் இருந்தபோதிலும் அவைகளை எல்லாம் ஒன்று சேர்க்க Y. M. C. A. என்ற ஸபை ஏற்பட்டது. இதனால் அதற்கு அதிக ப்ரயாஸையாவது கஷ்டமாவது ஏற்படவில்லை. உலகத்தையே தங்களுடைய பொதுவான மதத்திற்குக் கொண்டுவர கிறிஸ்து மதத்தில் பல ஸித்தாந்திகள் ஒன்று சேர்ந்தார்கள் என்



றால், வைஷ்ணவத்திலுள்ள சில ஸித்தாந்திகள் ஒன்று சேர்வது ப்ரயாஸமோ?

மடத்துச் சிஷ்யர்களுக்கும் முநித்ரயர்களுக்கும் ஏற்கெனவே ஒற்றுமை உண்டு என்று அறிகிறோம். ஆகையால் வடகலை தென்கலை வைஷ்ணவர்களையே நாம் ஒன்று சேர்க்க வேண்டும். உபயகலையாரையும் ஒன்று சேர்க்க ஸபையோர்களுக்கு மடாதிபதிகளின் ஒத்தாசை வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் அவர்களுக்கு அவச்யமான கோட்பாடுகளையும், வேண்டிய புத்திமதிகளைச் சொல்பவர்கள். ஆகையால் அடியேன் ஸபையோரின் தீர்க்காலோசனைக்கு மடாதிபதிகளின் முக்யமான சடங்குகளை சொல்லத் துணிகிறேன். ஸபையோர்கள் தங்களுடைய ஜ்ஞாநத்தால் கூடார்த்தத்தைப் பார்த்தால் அடியேனுடைய உண்மையான அபிப்பிராயம் இனிது விளங்கும்.

மடாதிபதிகளின் சடங்குகள் பின்வருமாறு:—

1. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையோர் ப்ராஹ்மணர்களல்லாத வைஷ்ணவர்களையும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. கோவில்களும் மடங்களும் இல்லாத விடங்களில் அவைகளை ஏற்படுத்தி வ்ருத்திசெய்ய வேண்டும். ஒவ்வொரு கோவிலிலும் வேதாந்த தேசிகனையும் மணவாளமாமுனிகளையும் பக்கம் பக்கமாக எழுந்தருளப்பண்ணி ஒவ்வொருவர்க்கும் உரிய பாத்ரங்களையும் அநுஸந்திக்க வேண்டும்.

3. திவ்ய தேசங்களின் ஸ்தலபுராணங்களைப் பரம்பரையாயும், சரித்ரமாயும் பௌராணமாயும் சாஸநமாய்க் காட்டும்படி எழுதவேண்டும். இந்து தேசசரித்திரத்தில் அநேக விஷயங்கள் விட்டுப் போயிருக்கின்றன. அவைகளில் முக்யமானவைகளை சரித்திரத்தில் எழுதவேண்டும். ரயில்வே கம்பெனியார் ப்ரசுரம் செய்திருக்கிறபடி திவ்யதேசங்களுக்குப் படங்களுடன் Guide books ஏற்படுத்த வேண்டும்.

4. வைஷ்ணவ மதத்தைக் குறித்த கீர்த்தி வாய்ந்த புத்தகங்கள், பத்ரிகைகள், ஏடுகள், இவைகளை ஆயிரக்கணக்காக அச்சிட்டு ப்ரசுரப்படுத்த வேண்டும்.

5. கோவில்களிலும் மடங்களிலும் அருமையான எட்டுச்சுவடிகளைச் சேகரித்து வைக்கவேண்டும். அவைகளைப் புத்தகமாகவாவது 'வேதாந்ததீபிகை' போன்ற மாஸ ஸஞ்சிகைகளிலாவது ப்ரசுரிக்கவேண்டும். மூலங்களையும் அவைகளின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களையும் வ்யாக்யாநங்களையும் ப்ரசுரப்படுத்தவேண்டும். எட்டு ப்ரதியிலுள்ள சில முக்யமான க்ரந்தங்களை வெளியிடாமல் விருப்பதினாலேயே உலகம் தாழ்ந்த நிலைமையை அடைந்திருக்கிறது. அநேக க்ரந்தங்கள் தநீசெயலாகவோ அல்லது க்ரூரமான ஜனங்களாலேயோ நெருப்புக் கிரையான. மற்றும் சில வெள்ளத்தால் அழிப்புண்டன. செல்லரித்துக் கெட்டன சில. லண்டன் ப்ரிட்டிஷ் ம்யூஸியத்திலேயோ அல்லது பர்லினிலேயோ இந்திய பழைய க்ரந்தம் ஒன்று காணப்படுகிறது என்று கேள்விப்பட்டால், அழிந்துபோன க்ரந்தங்கள் எத்தனை யென்று ஊஹிக்கலாம். பார்ஸிகளுடைய சில அருமையான உத்தம புத்தகங்கள் Louvain-ல் இருந்தன. அவைகள் இப்பால் இல்லை.

6. கோவில்களிலும் மடங்களிலும் க்ரந்தங்களை அர்த்தங்களுடனும் வ்யாக்யாநங்களுடனும் போதிக்கத்தக்க பாடசாலைகள் இருந்தே தீரவேண்டும். பேதையான வித்யார்த்திகள் இம்மாதிரி இருந்தால், தங்களுடைய க்ருதக்ருத்யங்களை எப்படி நடத்த முடியும் என்று நீங்கள் ஸந்தேகிக்கலாம். இந்தப் பாடசாலையில் பயின்றுவரும் சிஷ்யப் பிள்ளைகளை சம்பளத்திற்கும், போஜனத்திற்கும் தாங்களே ஸம்பாதித்துக் கொள்ளும்படியாகச் செய்து, பாடசாலையை வ்ருத்திக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு 'இண்டஸ்ட்ரியல் ஸெக்ஷன்' என ஒன்றை ஏற்படுத்தி, அதில் பிள்ளைகளை வேலைசெய்யும்படி செய்து, அவர்களால் செய்யப்பட்ட வேலைக்குத் தக்க கூலியும் கொடுக்கப்பட வேண்டும். யாசகத்தினும் இது கௌரவமான தொழிலே. ஐரோப்பாக் கண்டத்தில் Educational Colony என்று ஊஹிக்கப்பட்டு Bolpur-ல் Sir Rabindranath Tagore என்பவர் C. J. Andrews என்பவரின் அளவிடக்கூடாத உதவியால் நடத்திவரும் National School போலப் பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும். வித்தை கற்றுக்கொடுப்பதுடன், வரும்படி ஸம்பாதிக்க அடியில்கண்ட கைத்தொழில்களை இதில் ஏற்படுத்தி நடத்திவரலாம்.



நெசவு:—நெசவு ப்ராஹ்மணனுக்கு அடுக்காது என்றிராமல், தங்களுக்கு வேண்டிய உடை முதலியவற்றைத் தாங்களே செய்து கொள்ளப் பழகச் செய்யவேண்டும். அதிகமாக அவர்கள் நெய்யும் உடைகளை விற்பனைசெய்து பாடசாலையின் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும். பூணூல் நூற்பது நமக்கு ஸகஜந்தானே. இப்படியே துணிகளையும் தாங்களே நெய்து உடுத்திக் கொள்ளுவதில் தங்களுக்கு ஓர் அவமதிப்பும் இல்லையே!

அச்சு:—அச்சடிப்பது இக்காலத்தில் அவச்யமான தொழிலே. கோவில்களிலும் மடங்களிலும் அச்சுயந்திரம் கட்டாயமாய் இருக்கவேண்டும். அவ்விடங்களில் வித்யார்த்திகள் வைஷ்ணவ க்ரந்தங்களை அச்சு கோக்கவும், பிழைபார்க்கவும், ப்ரதிகள் செய்யவும் கற்கவேண்டும். புத்தகங்களைக் கட்டிக்கொடுக்கும் செக்ஷனும் அடுத்தாப்போல் பழகவேண்டும். தற்காலத்தில் க்ரந்த கர்த்தாக்கள் அச்சுயந்திரசாலைகள் தோறும் அலைந்து கடைசியாக அச்சுச்சாலைக்காரர் கேட்கும் தொகைக்கே வேலை கொடுக்கும்படி நேரிடுவது ஒருவாறு நிவ்ருத்தியாகும்.

போடகிராப் பிடிப்பது:— இது மிகவும் வருமான முள்ள தொழில். முந்தி சொல்லப்பட்ட ஸ்தலபுராணங்களை விவரித்துக் காட்டும் பொருட்டு 108 - திவ்யதேசங்களைப் படம் பிடிக்கக்கூடும். தற்காலத்தில் அச்சடிக்கிறவனுக்குப் போடோ பிடிக்கிறவன் உதவி அவசியமே இவ்விரண்டு தொழில்களாலும் கோவில்களையும் மடங்களையும் வெகு நன்றாக வ்ருத்திசெய்யலாம்.

வைத்யம்:—பாடசாலைகளில் ஆயுர் வேதசாஸ்த்ரமும் கற்பிக்கப்படவேண்டும். ஆயுர்வேத நிபுணர்களை தேசாந்த்ரிகளுக்காகத் திவ்ய தேசங்கள் தோறும் அனுப்பி, உள்நாட்டு மருந்துகளையே உபயோகப்படுத்தச் செய்யவேண்டும். நமது பழமையான வைத்ய சிகித்ஸைகளை வ்ருத்திசெய்ய வேண்டியது அவச்யத்திலும் அவச்யம். அந்ய தேசமருந்துகள் விலக்கப்பட வேண்டும் என்பதைத் தற்கால யுத்தம் நமக்கு இனிது விளக்குகின்றதன்றோ? ஆகையால் நமது பலத்தாலே தான் நாம் வாழவேண்டும் என்பது தெரியவில்லையா? திவ்யதேசத் திருவிழாக் காலங்களில் வீடு முதலியன சுத்தமாயிருக்கவேண்டியது அவசியம்.

வைதிகப் பிராஹ்மணர்களை அவர்களின் அருமையான வித்தையின் பொருட்டுக் கௌரவப்படுத்தி உத்ஸாக முண்டுபண்ண வேண்டும். படிப்புக்கும் தேவ பக்திக்கும் அவர்கள்தாம் முக்ய காரணம்.

நமது ஸ்த்ரீகளின் நன்மையை நாம் மறக்கக்கூடாது. ஒழுக்கமான படிப்பையே அவர்களுக்கு ஊட்டவேண்டும். அவர்களுடைய முக்ய ப்ரயோஜநார்த்தமாக உபந்யாஸங்கள், புராணம், இதிஹாஸம், ப்ரபந்தம், ரஹஸ்யம், ஸ்தோத்ரம் முதலியன படிப்பித்து, அவற்றின் ஸாரங்களைத் தெரிந்து கொள்ளும்படி செய்வதே தகுந்த வழி. ஆதி முதல் அபிமாநிக்கப்பட்டதும், தேசத்துக்கு ஒற்றுமையானதுமான இவ்வித பெண்கல்வி ஏற்பட்டால், அந்ய தேசாசாரங்களை அநுஸரித்துக் கெட்டுப்போகாமல் நம் ஸ்த்ரீகள் பெருந்தன்மையான மனதுக்கடுத்த கோட்பாடுகளால் விளங்குவார்கள். ஸ்திரீகள் தங்கள் இஷ்டப்ரகாரம் நடப்பதை சில விஷயங்களில் நாம் அபிமாநிக்கவேண்டும். உதாரணமாக, பேதமையான விதவைகள் தாங்கள் தலையில் மயிரோடிருத்தலை வடகலை ப்ராஹ்மணர்கள் வெறுக்கிறார்கள். தீங்கில்லாத இந்த ஸ்வதந்த்ரத்தையும் கூட அவர்களுக்குக் கொடுக்காமல் அதிலேயும் அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவது Social tyranny என்று சொல்லலாம். தென்கலையாரில் இந்த நிர்ப்பந்தமில்லை.

பொது நன்மைக்காக வடகலைக்கும் தென்கலைக்கும் உள்ள வியவகாரம் ஒழியும்பொருட்டு மத்யமமான ஒரு அடையாளம் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

வைஷ்ணவ ஸ்த்ரீபுருஷர்களின் விவாஹாதி க்ரமங்கள் முன்னிலும் பலமடையும்படி ஸத் ஸந்ததி எப்படி ஏற்படக்கூடுமோ அப்படிக்குத் திருத்தி யமைத்துக்கொள்ளவேண்டும்.

தவிர, ஒவ்வொரு வடகலையாரும் தென்கலையாரிடத்திலும், தென்கலையார் வடகலையாரிடத்திலுமாக ஸம்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானஞ்செய்து அதன்படி நடந்துவந்தால், இவ்விருவரும் ஒற்றுமைப்பட்டு ரக்த வ்ருத்தியும் உண்டாகும். இம்மாதிரியான திருத்தங்களால் தான் வைஷ்ணவர்கள் முன்னுக்கு வரலாம்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

# ஜநகநந்தினீ.

“பெண்ணுக்கு விவாஹமாய் நாலு ஸம்வத்ஸரம் ஆயிற்று. அவள் ருதுமதியாய் இரண்டு ஸம்வத்ஸரம் கழிந்தது. உபயுக்த ஜ்ஞாநத்தை உத்தேசித்தப்படி கல்பித்தோம். ஜாமாதா அவளை அழைத்துக்கொள்ளும் ப்ரயத்நத்தைக் கொஞ்சமும் காட்டவில்லையே! அவர் அபிப்ராயம் என்னமோ? நாம் பலதரம் எழுதியும் ஒரு ப்ரத்யுத்தரமும் அவர் தரவில்லையே! என் செய்வோம்?” என்று அடிக்கடி யோசனையில் கேசவாசார்யர் ஆழ்ந்தனர். அவர் பார்யையும் மாப்பிள்ளையின் செயல் விபரீதமாயிருக்கின்றதெனப் பலதரம் சிந்திப்பள். புருஷனிடம் மர்யாதையால் அவரைக் கேட்கத் துணியமாட்டாள். அண்டை அசல் பெண்பாலர் அவளை அதைப்பற்றிப் பிச்சிவிடுவார்கள். ஹரிப்ரியை யாது பதில் சொல்லக்கூடும்? எப்போதும் மௌநமாயிருப்பள். இவ்வார்த்தைகள் எல்லாம் ஜநகநந்தினியின் காதில் விதியின்றி விழுந்தன. அவற்றைப்பற்றித் தன் மாதா கஷ்டத்துடன் வஹித்த மௌநத்தைக் கண்டனள்; தன்பிதா யோசனையில் ஆழ்வதையும் பார்த்தனள்; எல்லாம் அவளுக்குத் தெரியும்; தத்கால ஸ்திதிக்குப் பரிஹாரம் தான் கண்டிலள். தனக்குப் பிதாவாயும், வித்யாப்ரதாநம் பண்ணின ஆசார்யனாயுமிருந்த கேசவாசார்யருக்கு ஸர்வவித கைங்கர்யமும் செய்துகொண்டு, அதுதான் தன்னுடைய ஜந்மப்ரயோஜநமென்று நினைத்துக்கொண்டு காலம் போக்கினள்.

கேசவாசார்யர் முன்போல் ஸம்பாஷிக்காம லிருப்பதையும், தங்கள் முன்னிலையில் சிந்தையில் ஆழ்வதையும் பலதரம் கண்டு, பத்மநாபாசார்யரும் மாதவாசார்யரும் வருத்தங் கொண்டனர்.

அதற்குக் காரணத்தையும் தமது புத்தியால் ஊஹித்துக்கொண்டார்கள். இப்படிச் சிலநாள் கழித்தவுடன் பத்மநாபாசார்யர் இவ்வண்ணம் யோசித்தார்.

“இந்தக் கல்யாணம் பகவத்ஸங்கல்பத்தால் முடிந்ததாயினும், இதற்கு நான் வ்யாஜமாக நின்றேன். ஸம்பந்தத்தில் ராமாநுஜாசார்யர் குதூஹலத்தைக் கண்டு, அவர் குமாரர் உதாஸீநராயிருந்ததை யோசிக்காமல் விட்டேன். அது என் மநஸ்ஸில் பட்டது. பட்டும் ஆலோசனைக்கு இடங்கொடுக்காமல் போயிற்று. இப்போது ஒன்றும் கெடவில்லையே! பெண்ணைப் பிள்ளை வரவழைத்துக்கொள்ளலாமே எனக்கூடும். ஆனால் கேசவாசார்யரும் நானும் அவனுக்குப் பலதரம் எழுதியும் அவன் ஒரு ப்ரத்யுத்தரமும் அளிக்கின்றானில்லையே! அந்த ஸ்வாமி பரமஸாதுவாச்சுதே! தோளில் மூட்டையைத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஊர் ஊராய்ப் போய் முறையிட்டுக்கொள்ளப் போகின்றாரோ! நான் தான் உப்பிலியப்பன் ஸந்நிதிக்குப் போய் இதன் வாஸ்தவ ஸ்வரூபத்தை விசாரித்துவர வேண்டும்” என்று யோசித்து முடித்தார்.

மறுநாள் ஸந்நிதியில் கேசவாசார்யரைப் பார்த்தார். “ஸ்வாமிந்! அடியேன் உப்பலியப்பன் ஸந்நிதிக்குப் போவதாக நிச்சயம் செய்திருக்கின்றேன்” என்று அவருடன் சொன்னார்.

“ஏது? என்ன விசேஷம்? அவ்வளவு தூரம் ப்ரயாணம் ஏன் வைத்துக்கொள்ளவேண்டும்?” என்றார் கேசவாசார்யர்.

“ஸாதுக்களுடைய மநோவ்ருத்தி மற்றவர்க்கு ஸாதாரணமாகத் தெரியாது. தேவரீருடன் நெருங்கி ஸ்நேஹம் செய்தபடியாலும், தேவரீருடைய குடும்ப யோகக்ஷேமங்கள் அடியேனுக்குத் தெரிந்திருக்கிறபடியாலும், தத்காலம் தேவரீருக்குச் சித்தகாலுஷ்யம் உண்டென்று ஊஹிக்கின்றேன். ஜநகத்துக்குப் பதியின் க்ரஹத்தில் வாஸயோக்யகாலம் வந்து பகு காலமாயிற்று. தேவரீரும் அடியேனும் மாப்பிள்ளைக்குப் பலதரம் பத்ரிகா மூலமாய் அதைப்பற்றி ஜ்ஞாபித்தோம். அவர் ப்ரத்யுத்தரம் தராமல்



பராங்முகராய் இருக்கின்றார். அடியேன் புறப்பட்டுப் போய் அதை விசாரித்து வருகின்றேன்” என்றனர் பத்மநாபாசார்யர்.

“அவ்வளவு ச்ரமம் தேவரீர்க்குக் கொடுக்க அடியேன் எவ்விதம் துணிவேன்? அது ஸரியன்றே!” என்றார் கேசவாசார்யர்.

“அப்படியன்று. இந்த ச்ரமத்தை அடியேன் வஹிக்கத்தான் வேண்டும். ஹ்ருதயத்தில் தேவரீரை வருத்தம் பாதிக்காமலிருக்குமோ? தேவரீரைப்போல் அத்யந்தம் உபசாந்தர்க்கும் இது க்லேசகாரணம். இருந்தவிடத்தை விட்டுத் தேவரீர் ஒரு நாளும் சலித்ததில்லை. க்லேச நிவாரண நிமித்தமாக யாதொரு ப்ரயத்நமும் செய்யத் தேவரீர்க்கு ப்ரவ்ருத்தி ஜநிக்காது. ஆதலால் தேவரீருடன் பரமஸ்நேஹம் பண்ணின அடியேன் ப்ரயத்நரஹிதனாயிருந்துவிடக் கூடுமோ? அடியேன் ஊர் ஊராய்த் திரிகின்றவன். திருக்குடந்தை வரையில் போய்வருவதால் அடியேனுக்கு அதிக ச்ரமம் இல்லை. தேவரீரைப்போல் அடியேன் தூமஶகடத்தை த்யாகம் பண்ணினவன் அன்று” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

“தேவரீருடைய அத்யவஸாயம் அடியேனுக்கு அநுகூலத்தைச் செய்வது. ஆனபடியால், கத்யந்தரம் இல்லாத அடியேன் அதைத் தடுப்பது கூடுமோ? ஆகிலும் இப்படி ச்ரமப்படுத்த வேண்டுமே என்று ஶோகிக்கின்றேன்” என்று சொன்னார் கேசவாசார்யர்.

இந்தவண்ணம் ஸம்பாஷித்த பிறகு சில நாட்குள் பத்மநாபாசார்யர் திருக்குடந்தைக்கு ப்ரயாணமாகப் புறப்பட்டுப் போய், ஒரு நாள் காலை ஐந்து நாழிகைப் பொழுதில் ஆதிவராஹாசார்யர் நிவாஸத்தின் எதிரில் நின்றனர். அப்போது க்ரஹஸ்வாமி க்ரஹத்தில் இல்லை. வீதித் திண்ணைமீது உட்கார்ந்தனர். இதற்குள் ஆதிவராஹாசார்யருடைய பந்துவான ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் அவ்வழியாகச் செல்பவர், பத்மநாபாசார்யரை நோக்கி, “ஸ்வாமிந்! எவ்விடம்? ஏன் இங்கே உட்கார்ந்திருக்கின்றது?” என்று வினவினர்.

“அடியேன் இருப்பது பெருமாள்கோவில். ஆதிவராஹாசார்யரை விசாரித்துக்கொண்டு வந்து, இது அவர் க்ருஹமென்று கேள்விப்பட்டு உட்கார்ந்தேன். அந்த ஸ்வாமியைக் காணேன்; அவர்க்காகக் காக்கின்றேன்” என்று பத்மநாபாசார்யர் சொன்னார்.

“ஆதிவராஹாசார்யர் காவேரிக்குப் போயிருப்பர். தேவரீரும் காவேரிக்கு எழுந்தருளலாம்” என்று ஸ்ரீவைஷ்ணவர் சொல்லிவிட்டுப் போனார். அவ்வண்ணமே காவேரியாற்றை நோக்கிப் பத்மநாபாசார்யர் நடந்தார். காவேரியை நெருங்குகையில், அவ்விடம் நின்று வருகின்ற ஆதிவராஹாசார்யரைப் பார்த்தார். அவரும் பத்மநாபாசார்யரைக் கண்ணுற்று, “எப்போது எழுந்தருளியது? திருக்குடந்தையில் தேவரீர் தர்சநம் பகு ஆச்சர்யமாயிருக்கின்றதே! அகத்தண்டை போகவில்லையோ?” என்றனர்.

“அங்கே போய்த்தான் வருகின்றேன்” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

“ஸந்தோஷம். ஆற்றுக்கு அக்கரையில் வயல்கள் இருக்கின்றன. பஹிர்தேசத்துக்கு அவ்விடம் போய்க் காவேரியில் நீராட்டம் செய்துகொண்டு அகத்துக்கு எழுந்தருள வேணும். இப்போதுதான் மேற்கே மழைபெய்து ஆற்றில் கொஞ்சம் ஜலம் வருகின்றது. நீராட்டத்துக்குப் போதும். அடியேன் அகத்தில் தேவரீர் எழுந்தருளுவதை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கின்றேன். மற்ற ஸமாசாரங்களை யெல்லாம் பின்னால் வார்த்தை சொல்லிக்கொள்வோம்” என்று சொல்லிவிட்டு ஆதிவராஹாசார்யர் நடந்தார். பத்மநாபாசார்யரும் காவேரியாற்றைப் பாலவழியாகக் கடந்து வடபுறம் சென்றனர்.

பத்மநாபாசார்யர் காவேரியில் நீராடி வஸ்த்ரங்களை உலர்த்திக்கொண்டு காலையில் செய்யவேண்டிய நித்யகர்மங்களையும் முடித்துக்கொண்டு ஆதிவராஹாசார்யர் இல்லத்துக்குத் திரும்பி வந்தார். பிறகு ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரித்து, மாத்யாஹ்நிக கர்மங்களையும் செய்துமுடித்தனர். இதற்குள் ஸூர்யன் உச்சியேறினான். ஆதிவராஹாசார்யர் பகவதாராதநம் பண்ணின பிறகு இருவரும் பகவந்நிவேதிதமான ப்ரஸாதத்தை அருந்தினார்கள். பின்னால் தாம்பூலங்கொண்ட கையுடன் வீதித்திண்ணைமீது போய் உட்கார்ந்தார்கள்.



“ஸ்வாமி திருக்குடந்தை பக்கம் வருவது அபூர்வமாச்சுதே! என்ன விஷயம் தேவரீரை இவ்வளவு தூரம் ப்ரயாணிக்கச் செய்தது? தெரிவிக்கக் கூடுமானால் ஸாதிக்கலாம்” என்றார் ஆதிவராஹாசார்யர்.

“நாவல்பாக்கம் ராமாநுஜாசார்யர் குமாரர் உப்பிலியப்பன் கோவிலில் ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்கின்றார். பெருமாள்கோவில் கிடாம்பி கேசவாசார்யர் ஸ்வாமி புத்ரியை அவர் கல்யாணம் செய்துகொண்டு நாலு ஸம்வத்ஸரம் ஆயிற்று. பெண்ணுக்குப் பதினாறு வயது ஆயிற்று. அவளை அழைத்துக்கொள்ளும்படிப் பலதரம் ஜ்ஞாபகப்படுத்தியும் ஜாமாதா ப்ரத்யுத்தரம் கொடுப்பதில்லை. கேசவாசார்யர் ஸ்வாமி பரமஸாது. அந்த ஸ்வாமிக்காக அவருடைய மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போகும்படி இந்த ப்ரதேசம் வந்தேன்” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

“அப்படியா? அடியேனும் நாவல்பாக்கம் ஸ்வாமி குமாரரைப் பார்த்திருக்கின்றேன். கேசவாசார்யர் மருமான் இங்கே பாஷாந்தரம் வாசித்துக்கொண்டிருந்தானே, தேவரீருக்குத் தெரியுமோ?” என்றார் ஆதிவராஹாசார்யர்.

“ஆமாம். அடியேனும் கேள்விப்பட்டிருக்கின்றேன்” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

“ஆனால் எப்போது புறப்படப்போகிறது உப்பிலியப்பன் ஸந்நிதிக்கு?” என்றனர் ஆதிவராஹாசார்யர்.

“வெயில் தாழ்ந்தவுடன் புறப்படலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றேன். அவ்விடம் ஸ்வாமி பாங்காய் எழுந்தருளியிருக்கின்றாரோ? எத்தனை பேர் காலக்ஷேபம் செய்கிறார்கள்?” என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"சித்ரோத்ஸவத்திற்கு ஸ்வாமி எழுந்தருளியிருந்தார். பகு சிஷ்யர்கள் ஸ்வாமியோடு வந்திருந்தார்கள். நாவல்பாக்கம் பிள்ளையும் அப்போது வந்திருந்தார். பின்னால் ஸ்வாமிக்குத் திருமேனி கொஞ்சம் பாங்கில்லை யென்று வதந்தி. காலக்ஷேபம் நடக்கிறதும், இத்தனை பெயர் காலக்ஷேபம் செய்கின்றார்கள் என்பதும் அடியேனுக்குத் தெரியாது. தேவரீர் ஸ்வாமியை முன்னே தண்டன் ஸமர்ப்பித்திருக்கின்றதோ?" என்றார் ஆதிவராஹாசார்யர்.

"ஸ்வாமியினுடைய ப்ரதம தர்ஶநம் இப்போதுதான் அடியேனுக்கு நேரப்போகின்றது" என்று பத்மநாபாசார்யர் சொன்னார்.

இந்தப்ரகாரம் இருவரும் சிலகாலம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள். அன்று ஸாயங்காலம் பத்மநாபாசார்யர் உப்பிலியப்பன் ஸந்நிதிக்குப் புறப்பட்டுப் போனார். அவர் அவ்வூரில் ப்ரவேசிக்கவும் ஸூர்யாஸ்தமநம் ஆய்விட்டது. ஸந்நிதி புஷ்கரிணியில் ஆஜ்ஞா கைங்கர்யங்களைச் செய்து முடித்தனர். பிறகு நாவல்பாக்கம் பிள்ளை இருக்கும் இடத்தைப்பற்றி விசாரித்துக்கொண்டு அந்த க்ரஹத்தைக்குறித்து நடந்துபோனார். அங்கே வீதித் திண்ணைமீது உட்கார்ந்திருந்த ஸ்ரீ வைஷ்ணவரைப் பார்த்து, நாவல்பாக்கம் வீரராகவாசார்யர் இங்கே இருக்கின்றாரோ?" என்று கேட்டனர். அதற்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர், "இவ்விடம் தான் அவர் ஜாகை செய்துகொண்டிருக்கின்றார். இப்போது ஆஶ்ரமத்திலிருக்கின்றார்" என்று சொன்னார்.

"அவரைச் சேர்ந்தவர்கள் இன்னும் ஆராவது அகத்திலிருக்கின்றார்களோ?" என்று கேட்டார் பத்மநாபாசார்யர்.

"ஒருத்தருமில்லை. சாப்பாடெல்லாம் ஆஶ்ரமத்தில் தான் அவர்க்கு நடக்கின்றது. சில காலம் இங்கே படுத்துக்கொள்வர். இங்கே புஸ்தகம் பார்ப்பர். வேஷ்டிகளை உலர்த்துவர். இப்படி இருந்துகொண்டிருக்கிறார்" என்று ஸ்ரீ வைஷ்ணவர் சொன்னார்.

"இப்போது இங்கே வருவரோ?" என்றார் பத்மநாபாசார்யர்.



"அநேகமாக எட்டு ஒன்பது மணிக்கு வருவர்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீவைஷ்ணவர் உள்ளே சென்றார். பத்மநாபாசார்யரும் பகவத்ஸந்நிதிக்குப் போய், எம்பெருமானைத் தர்ஶித்துவிட்டுத் தேசாந்திரி ப்ரஸாதம் கிடைத்ததைப் புஜித்துவிட்டு, ஒரு ஜாம காலத்துக்குப்பின் மறுபடியும் முன்சொன்ன இல்லத்தினிடம் வந்தார். வீதித் திண்ணைமேல் வீரராகவாசார்யர் இருப்பதையும் பார்த்தார். எதிர்த் திண்ணைமீது உட்கார்ந்துகொண்டு, வீரராகவாசார்யரைப் பார்த்தனர். அவரும் இவரைப் பார்த்தனர். இவ்வண்ணம் சில க்ஷணங்கள் கழிந்தபிறகு, வீரராகவாசார்யர் பத்மநாபாசார்யரைப் பார்த்து "ஸ்வாமி எவ்விடம் எழுந்தருளி யிருக்கின்றது?" என்றனர்.

"அடியேன் இருக்கிறது பெருமாள்கோவில். பத்மநாபன் என்று அடியேனை அழைப்பார்கள்" என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"அப்படியா. அபசாரமாச்சுது. இருட்டில் அடியேனுக்குத் தெரியாமல் போச்சுது. க்ஷமித்தருளவேண்டும்" என்றனர் வீரராகவாசார்யர். பிறகு ஒருவர்க்கொருவர் குஶலப்ரஶ்நைகளைப் பண்ணிக்கொண்டார்கள். வீரராகவாசார்யர் வந்த காரியத்தைப் பற்றிப் பத்மநாபாசார்யரைக் கேட்கவில்லை. அப்படிப்பட்ட வினா ஒன்று உதிக்குமென்று பத்மநாபாசார்யர் எதிர்பார்த்தும் அது வாராதென நிச்சயம் பிறந்தபிறகு, விதியில்லாமல் தான் வந்த வழியைத் தானே ப்ரஸ்தாபிக்கத் தொடங்கினார்.

"கேசவாசார்யர் அனுப்பி அடியேன் தேவரீரிடம் வந்திருக்கின்றேன்" என்றனர் பத்மநாபாசார்யர்.

"ஏது? என்னவிசேஷம்? ஸாதிக்கவேண்டும்."

"அந்த ஸ்வாமியும் தேவரீருக்கு எழுதினார். அடியேனும் பத்ரிகாமூலமாய் விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டேனே?"

"ஆமாம். என்னமோ கடிதங்கள் வந்ததாக ஜ்ஞாபகம். விஷயம் விஸ்ம்ருதமாயிருக்கின்றது."

"கந்யை பாருடைய அர்த்தமன்றோ? பரிக்ரஹீதாவினிடம் அவளை அனுப்பியபிறகு அன்றோ பெற்றவர்களுடைய அந்தராத்மா தெளிவையடையும்?" என்றனர் பத்மநாபாசார்யர்.

"அது காளிதாஸோக்தியன்றோ? அந்த ஶ்லோகம் தேவரீரைக் கஷ்டப்படுத்துவானேன்?" என்று சொன்னார் வீரராகவாசார்யர்.

"கேசவாசார்யருடைய கஷ்டத்தை அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொண்டேன்."

"அந்த ஶ்ரமம் தேவரீர் ஏற்றுக்கொள்வானேன்? அதை வஹிக்க அவர் அஶக்தரன்றே!"

"அந்த ஸ்வாமி பரமைகாந்தி; ஸாது; ஹ்ருதயமசகடம் ஏறுவதில்லை; —"

"ஆனால் அந்தஸ்வாமி கஷ்டப்படமாட்டாரே! ஜ்ஞாதாக்கள் ஸம்ஸார ஸுகதுக்கங்களை லக்ஷ்யம் செய்யமாட்டார்களே!"

"இதென்ன? இப்படியும் தேவரீர் சொல்லலாமோ? அடியேன் வந்த கார்யம் பரிஹாஸயோக்யமானதோ?" என்று வருந்தி மொழிந்தார் பத்மநாபாசார்யர்.

"பரிஹாஸமில்லை. பரமார்த்தமாகத்தான் சொல்கின்றேன்?"

"ஸ்வாமிந்! அடியேன் ப்ரயத்நத்தால் இந்த விவாஹம் முடிந்தது. தேவரீருடைய பிதாவும் அதை த்ருப்தியுடன் அங்கீகரித்தனர். பித்ருக்ருதமான தாரம் புத்ரனுக்கு ப்ரீதிவிஷயமாகத் தக்கது. தேவரீர் பார்யையை எப்போது அழைத்துக்கொள்ளப் போகின்றது?" என்றார் பத்மநாபாசார்யர்.

"என்ன இவ்வளவு நிர்ப்பந்தமாக ஸாதிக்கின்றதே! அடியேன் வித்யாக்ரஹண நிமித்தம் இவ்விடம் வந்திருக்கின்றேன். வந்த கார்யம் முடிந்தபிறகுதானே மற்ற விஷயங்களை யோசிக்கப் பொருந்தும்?" என்றார் வீரராகவாசார்யர்.

"ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களில் கரைகண்ட பிறகு விஶேஷ ஶாஸ்த்ர க்ரஹண நிமித்தமாகத் தேவரீர் இவ்விடம் எழுந்தருளி



நாலு ஸம்வத்ஸரமாயிற்று. இப்படிப்பட்ட வித்யாக்ரஹண காலத்துக்குப் பரிமிதியில்லையோ?" என்றனர் பத்மநாபாசார்யர்.

"ஸதாவத் அநுஶாஸநம்" என்று ஆசார்யனன்றோ க்ரந்தோபதேசத்தை முடிக்கவேண்டும். அடியேனுக்கு அப்படிப்பட்ட அநுஶாஸநம் இன்னும் கிடைக்கவில்லை. அது கிடைக்கும் காலத்தைக் குறிப்பிடவும் அஶக்தனாயிருக்கின்றேன். அடியேனைத் தேவரீர் க்ஷமித்தருள வேணும்." என்றார் வீரராகவாசார்யர்.

"ஆனால் கேசவாசார்யர் ஸ்வாமியிடம் போய் அடியேன் என்ன விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்வேன்! பிடிகொடாமல் வார்த்தை சொல்கின்றதே!" என்றார் பத்மநாபாசார்யர்.

"நடந்ததை நடந்தபடி சொன்னால் அந்த ஸ்வாமி குறைப்படக் காரணம் இல்லை" என்றார் வீரராகவாசார்யர்.

"தேவரீர் யோசனைகள் லோக வ்யவஹாரத்துக்கு ஒத்தனவாகத் தோன்றவில்லை. நடாதூர் அம்மாள் குமாரர் விஷயவ்யாவ்ருத்த சித்தராயிருந்தாரென்றும், அவர் வாசிக்கவேண்டுமென்று ஶ்ருங்காரரஸம் பெருகிய நாடகமொன்று ஸ்வாமி செய்தருளினரென்றும் கேள்வியுண்டு. தேவரீர் விஷயத்தில் அந்த உபாயத்தை ஸ்வீகரிப்பவர் இன்னாரென்று ஏற்படவில்லை. அந்தப் பெண்மணியின் பாக்யம் எப்படியிருக்குமோ தெரியவில்லை. இவ்வண்ணம் அடியேன் இவ்விடம் வந்து திரும்புவதைக் காட்டிலும் வராமலே இருந்தேனாகில் நன்றாயிருக்கும். இங்கு நடந்ததை அந்த ஸ்வாமி கேட்டாராகில் இன்னும் ஶோகார்ணவ மக்நராவா ரென்பதில் ஸந்தேஹமில்லை" என்று சொல்லிவிட்டுப் பத்மநாபாசார்யர் எழுந்து நடந்தார். அவர் புறப்பட்டுப் போவதை வீரராகவாசார்யர் மௌநமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அன்று ராத்ரி ஓரிடத்தில் படுத்திருந்து, பின்மாலை திருக்குடந்தைக்குப் பத்மநாபாசார்யர் திரும்பிப் போனார். அங்கே நடந்த ஸங்கதியை ஆதிவராஹாசார்யருடன் சொன்னார். அவரும் அதைக் கேட்டு வருத்தப்பட்டார். அன்று ஸாயங்காலமே பத்மநாபாசார்யர் பெருமாள்கோவிலுக்கு ப்ரயாணப்பட்டுப் போனார்.

பத்ராதிபர்.

# குருபரம்பராஸார சிந்தனே.

(தொடர்ச்சி)

இப்படி ஆசார்ய பக்தியின் அதிசயமென்ன, ரஹஸ்யங்களுடைய ரக்ஷணமென்ன, இவற்றின் இன்மையால், ஜ்ஞாந ஸம்பத்துக்கும் ஸ்வநிஷ்டைக்கும் அபாவம் வருமாகையால், நிஷ்பந்ந ஜ்ஞாநமுடையார்க்கும் அந்நிலேயிலும் உண்டான ஜ்ஞாநம் நிலேத்து நிற்கக் குருபக்தி வேண்டும். ஜ்ஞாநம் உண்டாகு முன்னும், ஜ்ஞாநத்தை உபதேசிக்கப்பெறும் காலத்திலும், ஜ்ஞாநம் வ்ருத்தியாகும் காலத்திலும், ஜ்ஞாந நிஷ்பத்தி உண்டான பின்பும், குருபக்தியின் பரீவாஹமாகக் குருவை ப்ரகாசித்தல் வேண்டும். குருபக்தியானது உண்மையாக மநஸ்ஸில் நிறைந்ததாகில், அதன் பரீவாஹமானது, மநஸ்ஸைக்கடந்து வெளிப்படு மென்பதில் ஸந்தேஹமில்லே. இன்னும் ஆசார்யனைவன் மஹாரத்நத்தை உட்கொண்ட ஒருமாணிக்கச் செப்பையொத்த திருமந்த்ரத்தினுடைய உத்கர்ஷமும், தன்னுடைய நிஷ்டையும் நாசமாகா திருக்கும்படி, சில க்யாதிலாபாதிகளே அபேக்ஷித்து ஶிஷ்யகுண பூர்த்தி யற்றிருந்தும், சபலமுடையார்க்கு, மந்த்ரத்தை வெளியிடாமல் ரக்ஷிக்க வேண்டு மென்பது ஸித்தம்.

குருவை ப்ரகாசிக்க வேண்டுமென்ற விடத்தில், குருஶப்தம் உபலக்ஷணமாகப் பரம குருக்களேயும் சொன்னதாயிற்று. குருஶப்தார்த்தம் அஜ்ஞாந நிவர்த்தகன் என்றிருப்பதால், அவனேச் சொன்னபோது அவர்களேயும் சொன்னதாயிற்று. இன்னும் குருஶப்தம் குருபரம்பரைக்கெல்லாம் பொருந்தும். அப்படியே மந்த்ர சப்தம் மந்த்ரார்த்தம் முதலான ரஹஸ்யங்களுக்கும் ப்ரதர்ஶநபரம். ஆசார்ய வம்சம் அறியத்தக்க தெனும் விதிபலத்தால், ஒருவன் இந்த க்ரந்தத்துக்கு விஷயமாகும் ரஹஸ்யங்களே அநுஸந்திக்கும் போதெல்லாம் ஆசார்ய பரம்பரையை அநுஸந்திக்கக்கடவன். "எப்போது இவன் ரஹஸ்யங்களேத் தன் ஶிஷ்யர்களுக்கு உரைக்க இச்



சிக்கின்றனே, அப்போ தெல்லாம் நன்ருகத் தன்னுடைய குரு பரம்பரையை அநுஸந்திக்கக்கடவன். ஆசார்யனைவன் தன்னுடைய ஆசார்யர்களே மநஸ்ஸால் த்யாநித்து (ப்பிறகு) மந்த்ரத்தை உபதேசிக்கக்கடவன்." (1) என்றிப்படி விதிக்கும் ஶ்ருதி ப்ரமாணங்கள் உண்டு. ஆதலால் இப்படிச் செய்யாளுகில் ப்ரத்யவாயம் உண்டு.

இன்னும் இந்த ஆசார்ய ஸ்மரணத்துக்கு மற்ருேர் ப்ரயோஜநம் சொல்லப்பட்டது. "ம்லேச்சர்கள், அபஶுத்தர்கள், அதார்மிகர்கள், இவர்களுடன் ஸம்பாஷிக்க வேண்டாம். ஸம்பாஷித்தால் புண்யக்ருத்துக்களே மநஸ்ஸால் த்யாநிக்கக்கடவன்" (2) எனும் கௌதம வசநப்படி, புண்ய க்ருத்தமர்களாகிய ஆசார்யர்கள் அவ்வசநத்துக்கு முக்ய விஷயமாகின்றன ராதலால், ப்ரதிஷேதிக்கப்பட்ட ஸம்பாஷணுதிகளுக்கு ஆசார்யாநுஸந்தாநம் ப்ராயஶ்சித்தமுமாகின்றது.

உபநிஷத் அத்யயநத்துக்கு 'ஶந்நோமித்ராதி' பாடம் போலும், திருவாய்மொழிக்குக் கண்ணிநுண் சிறுத்தாம்பு போலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபத்துக்கு இந்த குருபரம்பராஸாரம் ஶேஷபூதம்.

மேல் விவரித்தவண்ணம் ப்ரமாணங்களே எடுத்துக்காட்டி, முமுக்ஷுவுக்கு ஸர்வாவஸ்தைகளிலும் குருபக்தி பஜநம் கர்த்தவ்ய மென்று நிஷ்கர்ஷித்த பின், இதை எல்லாரும் ஸுகரமாக அநுஷ்டிக்கும்படியைக் காட்ட ப்ரயோகரூபமாக 'என்னுயிர்தந்தளித்தவரை' என்று ஒரு பாசுரத்தை அருளிச்செய்கின்ருர். அப்பாசுரார்த்தம், "எனக்கு ஆத்மஸத்தையை உண்டாக்கி ரக்ஷித்தவரை, அதாவது, பகவத் ஶேஷத்வ ஜ்ஞாநமில்லாமையால் பூர்வம் நஷ்டமாய்ப் போயிருந்த என் ஆத்மாவை அந்த ஜ்ஞாநோப

(1) [illegible]

(2) [illegible]

தேசத்தால் ஸத்தாக்கி, அதை ஶேஷியினுடைய அதிஶயாதாநத்திலே விநியோகிக்கலாம்படி, எனக்குக் காட்டித்தந்து என்னை ரக்ஷித்தவரை, அல்லது எனக்கு 'உயிர்க்குயிராய், என்னுள் அந்தர்யாமியாய் இருக்கும் பரமாத்மாவை, '[illegible]' (இந்த நித்யனை பரமாத்மா உனக்குள் அந்தர்யாமியாய் இருக்கின்றான்) என்று உபநிஷத் வெளிப்படுத்தின வண்ணம், எனக்குக் காட்டித்தந்து என்னை ரக்ஷித்த ஆசார்யனை ஶரணமாய் அடைந்து, க்ரமமாக அவர் குருபங்க்தியை ஒவ்வொருப்ராசார்யனுடைய நாமத்தைச் சொல்லி நமஸ்கரித்து, அதன்பின்பு ஸம்ஸாரிகளிடம் க்ருபைகொண்டு அவர்கள் கடைத்தேறத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த மஹோபகாரகனை பாஷ்யகாரர், பெரியநம்பி, ஆளவந்தார், மணக்கால்நம்பி, அவர்க்குப்ரபத்தி மார்க்கத்தை உபதேசித்த உய்யக்கொண்டார், நாதமுனி, சடகோபன், விஷ்வக்ஸேநர், இனிய அம்ருதத்துடன் பிறந்து, தாத்ருஶ அம்ருத ஸ்வரூபத்தை அடியார்க்கு அளித்து, பகவானுக்கும் இனிய அம்ருதமென யோக்ய பூதையான மஹாலக்ஷ்மீ, இவர்கள் திருவடிகளை முன்பாக வணங்கி, இவர்களை முன்னிட்டுக்கொண்டு நான் எம்பெருமான் திருவடிகளை ஆஶ்ரயிக்கின்றேன்." (1) என்றிவ்வண்ண மிருக்கின்றது.

இப்படி ஶ்ருதி விதித்த ப்ரகாரம், குருபரம்பராநுஸந்தாந ப்ரயோகத்தைச் செய்தருளி, இனி இவ்வநுஸந்தாநம் '[illegible]' எனும் ஶ்ருதி காட்டிய வண்ணமும், '[illegible]' எனும் வசநப்படியும், பரபக்திரூபமாக வேண்டுமென்று நினைத்து, அது ஸம்ஸாரதசையில் துர்லபமாகையால், அதற்கு ப்ரதிபந்த நிவ்ருத்தியை ப்ரார்த்தித்துக்கொண்டு, அந்த ப்ரார்த்தநம் நித்யகர்த்தவ்யமென்று, அதற்கு ஒரு ப்ரயோக ப்ரகாரம் '[illegible]' எனும் ஶ்லோகத்தால் அருளிச்செய்கிறார்.

(1) என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம்புக்கி யானடைவே யவர் குருக்கள் நிரைவணங்கிப், பின்னருளால் பெரும்பூதூர் வந்தவள்ளல் பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி, நன்னெறியை யவர்க்குரைத்த உய்யக்கொண்டார் நாதமுனி சடகோபன் சேனைநாதன், இன்னமுதத் திருமகளென் றிவரைமுன்னிட் டெம்பெருமான் திருவடிக ளடைகின்றேனே.



ஶ்ருதியினால் ஶ்லாகிக்கப்பட்டது ரைக்வர் மாஹாத்ம்யம். "லோகத்தில் ப்ரஜைகள் எந்தெந்த ஶோபநமான கர்மங்களை அநுஷ்டிக்கின்றனரோ, அவை யாவும் ரைக்வரைப் போய்ச் சேர்கின்றன. அதாவது, ஸர்வ ஸாது கர்மங்களும் ரைக்வர் அநுஷ்டாநத்தில் அந்தர்க்கதமாகின்றன. அவர் எதை அறிந்தனரோ அதைத் தான் மற்ற யாவரு மறிகின்றனர். அதாவது, உலகத்தில் மற்றவருடைய ஜ்ஞாநமெல்லாம் அவர் ஜ்ஞாநத்தில் அந்தர்க்கதம்." (1) என்றிப்படி ஜ்ஞாநம், அநுஷ்டாந மிரண்டிலும் ரைக்வருக்கு ஸத்ருஶர் லோகத்தில் இல்லையென்று ப்ரஸித்தம். இவ்வண்ணம் ஶ்ருதிகளில், ப்ரஹ்மவித்யாதிகாரிகள் விஷயமாக, "பாபம் இவனை ஆக்ரமிக்காது; ஸர்வபாபங்களையும் இவன் ஜயிப்பன். பாபம் இவனைப் பாதிக்காது ஸர்வபாபங்களையும் இவன் கொளுத்திவிடுவன்" (2) "அந்தரிந்த்ரியங்களையும் பாஹ்யேந்த்ரியங்களையும் ஜயித்தவன், ஈஷணாத்ரய விநிர்முக்தன், த்வந்த்வங்களை ஸஹிக்கிறவன், ஏகாக்ரசித்தன், இவ்வண்ணமாகித் தனது ஆத்மாவினிடம் அந்தர்யாமியான பரமாத்மாவைத் தர்ஶிப்பன். ஸர்வத்தினிடமும் பரமாத்மாவைத் தர்ஶிப்பன்" (3) "அந்தப் பகவானை ஸ்தோத்ரம் செய்யும் ஜநங்கள் ஒருவராலும் சலிக்கப்படார், அதாவது ஸகல புருஷார்த்தங்களையு மடைந்து நிஶ்சலராயிருப்பர்" (4) என்றிவ்வண்ணம் குணப்ரஶம்ஸை உண்டு.

இப்படி வேதாந்தங்களால் ஶ்லாகிக்கப்பட்ட விவிதங்களான வ்ருத்தாந்தங்களுடன் கூடினவர் நமது ஆசார்யர்கள் என்று ஶ்லோகத்தின் இரண்டாம் பாதத்தால் அருளிச்செய்கின்றார். அதாவது, வேதாந்தத்தில் ஶ்லாகிக்கப்பட்டபடியே ஜ்ஞாநாநுஷ்டாந ஶீலர்கள் என்றபடி.

(1) [illegible] (2) [illegible] (3) [illegible] (4) [illegible]

"இரண்டு வார்த்தைகள் ராமன் சொல்கின்றதில்லை." (1) "முன் நான் பொய்சொன்னதில்லை. இனியும் எப்போதும் சொல்லமாட்டேன்" (2) "தேவலோகம் கீழே விழலாம், பூமி பிளக்கலாம், ஹிமாசலம் பொடியாய்ப் போகலாம், ஸமுத்ரம் வற்றிப் போகலாம். ஸ்ரீ க்ருஷ்ணன் விஷயத்தில் என் வார்த்தை பொய்யாகாது" (3) "ஓ ஹநுமானே! பாபிகளானாலும், புண்யக்ருத்துக்களானாலும், மரணதண்டனை யடையத்தக்கவர் விஷயத்தில் மஹாபுருஷர்களால் தயை செய்யத்தக்கது; ஏனெனில் (பார்க்கப்போனால்) அபராதம் செய்யாதவர் யாருமில்லை." (4)

இத்யாதி வசனங்களால், நம்முடைய ரக்ஷகரான லக்ஷ்மீநாராயணர்கள், யாவராலும் நம்பத்தக்கவர்கள் என்பது ப்ரஸித்தம். இன்னும் அவர்களுடைய தயை நம் விஷயத்திலும் ப்ரவர்த்திக்கும் என்று விஶ்வஸிக்க வேண்டும்.

"கருணையே ரூபீகரித்ததென நிற்கும் தேவியான லக்ஷ்மியுடன் கூடிய ஹ்ருஷீகேஶன், எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் ரக்ஷகனாக உத்கோஷிக்கப் படுகின்றான்." (5) என்பதுபோல் பல ப்ரமாணங்களால் ரமையும் ரமாநாதனும் நம் ரக்ஷகரென்பது ப்ரஸித்தம்.

அவர்களுடைய தயையே ஓர் கங்கை. "விபீஷணனானாலும் ஸரி; ஒருக்கால் ராவணனே வந்தாலும் ஸரி" (6) என்கிறபடியே அது யாவரிடமும் ப்ரவஹிக்கின்றபடியால், யாவர்க்கும் பாபங்களைப் போக்கும் கங்கையை யொத்திருக்கின்றது.

(1) 𑌰𑌾𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿𑌰𑍍𑌨𑌾𑌭𑌿𑌭𑌾𑌷𑌤𑍇. (2) 𑌅𑌨𑍃𑌤𑌂 𑌨𑍋𑌕𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑍇 𑌨 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌕𑌦𑌾𑌚𑌨 । (3) 𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑌤𑍇𑌤𑍍, 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌶𑍀𑌰𑍍𑌯𑍇𑌤𑍍, 𑌹𑌿𑌮𑌵𑌾𑌨𑍍 𑌶𑌕𑌲𑍀𑌭𑌵𑍇𑌤𑍍, 𑌶𑍁𑌷𑍍𑌯𑍇𑌤𑍍 𑌤𑍋𑌯𑌨𑌿𑌧𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌨 𑌮𑍇 𑌮𑍋𑌘𑌂 𑌵𑌚𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 । (4) 𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌵𑌧𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮 । 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌮𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿 ॥ (5) 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾 । 𑌰𑌕𑍍𑌷𑌕𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌗𑍀𑌯𑌤𑍇 ॥ (6) 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑍋 𑌵𑌾 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।



அந்தத் தயாரூபமான கங்கையை நம் போன்றவர் விஷயத்திலும் ப்ரவ்ருத்திக்கும்படி நம்முடைய ஆசார்யர் செய்கின்றார்கள். "பகீரதனுடைய மார்க்கத்தில் நிற்கும் பராஶர ப்ரப்ருதிகளை வணங்குகின்றேன். ஏனெனில் கமலாகாந்தனுடைய கருணையாகின்ற கங்கையால் ப்லாவனம், அதாவது, நிர்த்தோஷர்களாய் எங்களைப் போன்றவர்களை அவர் பண்ணுவித்தார்கள்." (1) என்று தயாஶதகத்தில் தேசிகன் ஸாதித்திருக்கின்றார். இந்த யோசனை நம் பூர்வாசார்யர்கள் விஷயத்தில் முக்யமாகப் பொருந்தும்.

ஆகையால், யாவராலும் விஶ்வஸிக்கக்கூடிய நமது ரக்ஷகரான இந்திரை இந்திராஸஹசரன் என்னும் தம்பதிகளுடைய தயாரூபமான கங்கையை நம் போன்றவர்மீதும் ப்ரவஹிக்கும்படிச் செய்யத்தக்கவர் நம்முடைய பூர்வாசார்யர்கள் என்று ஶ்லோகத்தின் மூன்றாம்பாத தாத்பர்யம்.

ஶ்ருதி ஶ்லாகித்த வ்ருத்தாந்தங்களுக்கு விரோதிகளைப் பின் ஸ்மரிக்கப்படுகின்றது. ஸ்பர்த்தையென்றால் அந்யரைப் பரிபவம் செய்யும் இச்சை; விப்லவம் என்றால் அநாசாரங்கள், ஸதாசாரங்களை அநாதரித்தல், நாஸ்திகதை; விப்ரலம்பம் என்றால் வஞ்சனை. இப்படிப்பட்ட துர்க்குணங்களெல்லாம் ஸஞ்சரிக்கும் ப்ரதேசங்கட்கு நம்முடைய ஆசார்யர்கள் விதேசஸ்தர்கள்; அதாவது அவற்றிற்கு அதி தூரத்திலிருக்கப்பட்டவர்கள் என்கின்றார் ஶ்லோகத்தின் நாலாவது பாதத்தால்.

இப்போது ஶ்லோகார்த்தம் இருக்கின்றபடி; "வேதாந்தங்களால் ஶ்லாகிக்கப்பட்ட பல உத்க்ருஷ்ட வ்ருத்தாந்தங்களுடன் கூடினவரும், யாவராலும் விஶ்வஸிக்கத்தக்க ஸத்ய ஸ்வரூபிகளான லக்ஷ்மீநாராயணர்களெனும் ஶரண்யருடைய கங்காஸத்ருஶமான கருணைக்குத் தாம் விஷயீபூதராய், அக்கருணையை நம் போ

(1) 𑌪𑌰𑌾𑌶𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑍍 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌭𑌗𑍀𑌰𑌥𑌨𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 । 𑌕𑌮𑌲𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌗𑌙𑍍𑌗𑌾𑌪𑍍𑌲𑌾𑌵𑌿𑌤𑌮𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 ॥

லியர்க்கும் உதவும்படிச் செய்கின்றவரும், ஸ்பர்த்தை துராசாரம் நாஸ்திகதை வஞ்சனை முதலான துர்க்குணங்கள் அண்டக் கூடாத நிலையில் இருப்பவருமான ‘என்னுயிர் தந்து, எனும் பாசுரத்தில் நிர்த்தேசிக்கப்பட்ட நாதமுனி முதலான நம் தேசிகர்கள், இந்த ஸம்ஸார தசையிலேயே மந்மத பாணங்களால் உண்டாகும் துன்பங்களின் நாசத்தின் பொருட்டு, அதாவது, ப்ராக்ருத விஷயங்களில் இச்சையானது எனக்கு நிஃஶேஷமாக நிவ்ருத்தமாம் படியாக, எனக்கு ப்ரீதிபூர்வக த்யாநவிஷயர்கள் ஆகட்டும்; அதாவது அவரிடம் எனக்குப் பக்தி நிலையாக நிற்கட்டும்.” (1) “அவிவேகிகளுக்கு விஷயங்களில் ஸ்திரமாய் எந்த ப்ரீதியுண்டாகின்றதோ, உன்னை விடாது த்யாநிக்கும் எனக்கு அந்த ரூபமான பக்தி ஹ்ருதயத்தை என்றும் விடாதிருக்கட்டும்” (2) என்று, ப்ரஹ்லாதன் தோஷமொன்றுமில்லாமல் ஸர்வ கல்யாண குணங்கட்கும் ஆஶ்ரயமாயிருக்கும் பகவானை ப்ரார்த்தித்தான். ஶ்லோகத்தின் நாலாமடியால் ஸர்வ தோஷங்களும் அற்றவரும், இரண்டாம் பாதத்தால் ஸகல கல்யாண குணாகரரும், மூன்றும் பாதத்தால் பகவானுக்கு அத்யந்தம் க்ருபா விஷய பூதருமான நம் பூர்வாசார்யர், நமக்குப் பகவானைப்போல் போக்யதமராகட்டு மென்று ஶ்லோகதாத்பர்யம்.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்)

---

(1) [illegible] (2) [illegible]

ஸ்ரீ:

[illegible]

## இவ்வருஷத்திய மஹாஸங்கம்.

“ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஸப்யர்களுக்கும் இதா ஆஸ்
காக்ஷேஸார்களுக்கும் விஜ்ஞாபநம் :—

ஸ்ரீ வேங்கடாத்ரி நாதனுடைய கடாக்ஷத்தை முன்னிட்டு, ஸ்ரீ திருப்ப க்ஷேத்ர வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையார், வருகிற ஆவ அல்லது புரட்டாசி மாஸத்தில் ஸ்ரீ வேங்கடேஶனுடைய திருவடிவாரத்தி பெரியதொரு ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தை நடத்துவதாக நிஶ்சயி திருக்கிறார்கள். அக்காலத்தில், இது வரையில் அம்மாதிரியான மஹாஸ ங்கங்களில் நடந்துவருவதுபோல, வைதிக தர்ம ஸம்பத்தமாகவும் வேதாந் விசார ஸம்பத்தமாகவும் அநேக பண்டித ப்ரவரர்களால் உபந்யாஸங்க நடைபெறும் என்று தெரியவருகின்றது. அநேக லௌகிக ஆஸ்திகர்களு இது விஷயமாக ஸோத்ஸாஹர்களாக இருக்கிறார்களாம். ஒருகால், வி வத் ஸதஸ் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வாக்யார்த்த சர்ச்சையும் நடக்கலா இவைகளைப்பற்றின வ்யவஸ்தைகளெல்லாம் ஒருவிதமான நிர்ணயத்தை அடைந்தவுடன், எல்லாருக்கும் இதை விஜ்ஞாபநம் செய்துகொள்ளு பொருட்டு பத்ரிகைகள் அனுப்பப்படும். அந்தப் பத்ரிகைகளை யதோசித ஆதரித்து, வைதிக லௌகிக ஆஸ்திகர்களனைவரும் அக்காலத்தில் அவ்விட தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, மஹாஸங்கத்தை நிர்விக்நமாக நடத் வைக்கவேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம். புரட்டா மாஸத்தில் ஸ்ரீ திருவேங்கடமுடையான் வர்ஷ மஹோத்ஸவங் கண்டருளு கிறான் என்பது ஸர்வ விதிதம். அந்த உத்ஸவத்திற்கு ஸமீப காலத்திலே இந்த் ஸங்கம் நடைபெறும்படி அநேகமாக வ்யவஸ்தைகள் செய்யப்படு மா -லால், அக்காலத்தில் திருப்பதி யாத்ரையாக வருபவரெல்லாரும், பகவ கைங்கர்ய ரூபமான இந்த ஸங்கத்தை நடத்திவைப்பதுடன், ஸ்ரீ ஸ்ரீநிவா னுடைய மஹோத்ஸவத்தையும் அநுபவித்து ஆத்மோஜ்ஜீவநத்தையும் பெ லாமென்பதை இதனால் ஸ்மரிப்பிக்கத் துணிகின்றோம்.

“[illegible]
[illegible]
[illegible]”

என்கிறபடி, புருஷோத்தமனிடத்தில் பக்திசெய்பவர்களாயுள்ள நம ஸ்ரீ வைஷ்ணவ புண்ய புருஷர்களெல்லாரும், அல்ப வ்யாஜத்தைக்கொண் தமக்குள் பரஸ்பரம் ஜநிக்கும் கோபம் லோபம் மாத்ஸர்யம் முதலான அ

புத்தியைத் தூரத்தில் விலக்கி, பாகவத ப்ரதிபத்தியைப் பெரிதாக உணர்ந்து ஏகமநஸ்கர்களாக அக்காலத்தில் கோஷ்டியை அலங்கரித்தருளுவார்களென்று நாம் த்ருடமான ப்ரத்யாஸை கொண்டிருக்கிறோம். அந்த ப்ரத்யாஸையை விதத்மாக்காமல் எல்லாரும் அவ்விதமாக ஐகமத்யத்துடன் ஸேவை ஸாதிக்கும் பக்ஷத்தில், அவ்வித ஐகமத்யத்தைப் பெரிதாக நினைக்கும் அஸ்மதாதிகள், 'எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களிலும் திருவவதாரங்களிலும் திவ்ய சேஷ்டிதங்களிலும் ஈடுபட்டிருக்கும் இந்தப் பாகவத கோஷ்டியின் ஸேவையைவிட வேறு எது அபேக்ஷிக்கக்கூடிய விஷயம்?' என்றும்,

'[illegible],
[illegible]'

என்றும்,

'[illegible]'

என்றும், நமது ஆசார்யனுடைய அநுஷ்டாநத்தை அடியொற்றி நடறுவோமன்றோ? அக்காலமும் ஸம்பவிக்குமோ? ஸ்ரீ ஸ்ரீநிவாஸனே ப்ரமாணம்.

மயிலாப்பூர், 28-7-16. } [illegible]

---

ஸ்ரீ:.

[illegible]

# கடிதங்கள்.

## (1)

## கல்கத்தா ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஶாஸ்த்ரோக்தங்களான ஸமஸ்த தர்மங்களுக்கும் மஹத்தான நாஶத்தை விளைவிக்குமளவு கரை புரண்டு வரும் இக்காலத்திய அதர்ம ப்ரவாஹத்தின் நடுவில், சிற்சில விடங்களிலாவது தர்ம பீஜம் நிலைநிற்குமளவு சில ப்ரயத்நங்கள் நடைபெறும்படி ஸ்ரீ பகவான் ஸங்கல்பித்து வருகிறான் என்பதைப் பார்க்க நாம் அதிமாத்ரம் ஆநந்திக்கிறோம். சென்ற ஏப்ரல் மாஸம் 16, 17, 18-ம் தேதிகளில் கல்கத்தா நகரத்தில் சித்பூர் ரோட் ஜொராஸங்கா ராஜபாடி என்னும் ஸ்தலத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம் சேர்ந்ததாம். முதல் இரண்டு தினங்களில் ஸ்ரீ உ.வே. காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமியும், மூன்றாவது தினத்தில் ஸ்ரீ. உ.வே. வித்யா பூஷணம் மைஸூர் ஆள்கொண்டவல்லி கோவிந்தாசார்ய ஸ்வாமியும் அந்த ஸங்கத்தின் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்தார்களாம். சற்றேறக்குறைய 5000 ஜநங்கள் சேர்ந்ததாகவும், அநேக பண்டிதர்கள் ஸம்ஸ்க்ருத ஹிந்தி பெங்காலி முதலிய பாஷைகளில் உபந்யாஸங்களைச் செய்ததாகவும், ஸங்கத்தின் முடிவில் கல்கத்தாவில் ஸ்ரீவைஷ்ணவ ஸபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அது ஸம்பந்தமான அநுஷ்டாநங்கள் இவைகளைப்பற்றிப் பத்ரிகைகள் அடிக்கடி ப்ரசுரம் செய்யப்பட வேண்டுமென்றும், இப்பொழுது ஸ்ரீமாந் மதந மோஹந மாளவியா முதலிய சில மஹாந்களுடைய பரிஶ்ரமத்தால் நமது ராஜாங்கத்தாருடைய உதாரமான அநுமதியை முன்னிட்டு ஏற்படுத்தப்படும் ஹிந்து மஹாகலாஶாலையில் அத்வைத ஸித்தாந்த ப்ரவசநத்திற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளுடன்கூட ஸ்ரீ விஶிஷ்டாத்வைதஸித்தாந்த ப்ரவசநத்திற்கு உசிதமான வ்யவஸ்தைகளும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அந்தக் கலாஶாலையின் அதிகாரிகளுக்கு ஒரு விஜ்ஞாபந பத்ரிகை அனுப்பப்பட வேண்டுமென்றும், இவ்வாறு பல நிர்ணயங்கள் செய்யப்பட்டனவாகவும் நமக்கு வ்ருத்தாந்தம் கிடைத்திருக்கிறது. ஸாத்விகமும் பகவானுக்கு ப்ரீதிகரமுமான இப்படிப்பட்ட ப்ரவ்ருத்திகளுக்கு ஆதி உபகாரகர்களாயிருக்கும் ஸ்ரீ. உ.வே. ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமிக்கும், ஸ்ரீ. உ.வே. ஆள்கொண்டவல்லி ஸ்வாமிக்கும் இவ்விடத்திலுள்ள ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் அதிமாத்ரம் க்ருதஜ்ஞர்களாக இருக்கிறார்கள் என்பதை இதனால் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம்.

மயிலாப்பூர், 28-7-16. } எஸ். வாஸுதேவன்.

---



## (2)

## ஸ்ரீ அஹோபில மடம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தை அலங்கரிக்க எழுந்தருளின தினம் முதல் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திவ்ய யாத்ரை ஆராதநம் க்ரந்த காலக்ஷேபங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய யாத்ரை இவையெல்லாம் மஹத்தான ஸம்ருத்தியுடனும் விமர்ஶத்துடனும் நடைபெற்று வருகின்றன என்பதை ஏற்கெனவே ஒரு ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்து கொண்டிருக்கிறோம். சென்ற வைகாசி மாஸத்தில் ஸ்ரீ ஸ்வாமி பெங்களூர் துளஸீ தோட்டத்தில் எழுந்தருளியிருந்தபொழுது, அந்தத் தேஶத்திய ஜ்வரத்தினால் ஸ்ரீ ஸ்வாமியின் திருமேனிக்குக் கொஞ்சம் க்லேஶம் ஜநித்ததென்றும், பிறகு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தினால்

அந்த க்லேஶம் நிவ்ருத்தமாயிற்று என்றும் கேள்விப்பட்டோம். ஸ்ரீ ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி யிருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனு டைய கைங்கர்யத்தை அவனுடைய திருவுள்ளம் உகக்கும்படி நடத்திவர வேண்டுமென்று மநோரதங்கொண்டிருக்கும் ஆஸ்திகர்களெல்லாரும், ஸ்ரீ ஸ்வாமியின் திருமேனி பாங்காக வந்ததுபற்றி இது நமது பாக்யமே! என்று மிகவும் ஆநந்தித்தார்கள்.

இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீ அஹோபிலத்தில் எழுந்தருளி யிருக்கிறதாகவும், அவ்விடத்திலேயே ஸ்ரீ ஸ்வாமி சாதுர்மாஸ்ய ஸங்கல்பத் தைச் செய்தருளுகிறதாகவும், ஶீக்ரத்தில் அவ்விடத்திலுள்ள பகவத் ஸந்நிதி களின் ஜீர்ணோத்தாரணத்தைச் செய்வித்து, அதற்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமி அவைகளுக்கு ஸம்ப்ரோக்ஷணத்தைச் செய்யப்போகிறதாகவும் செய்தி கிடைத்திருக்கின்றது. இது எல்லாருக்கும் மஹத்தான ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கக் கூடிய ஸமாசாரம். பஹு காலமாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அந்த ப்ரதேஶத்திற்கு எழுந்தருளவில்லையென்றும், நமது மடத்தின் மூல ஸ்தாநமாகிய ஸ்ரீ அஹோபிலம் அத்யந்தம் அநாத்ருதமாகிவிட்டதென்றும், அவ்விடத்தில் பகவதாராதநாதிகள்கூட நன்றாக நடத்தப்படுவதில்லையென் றும் இத்யாதியான அநேக காரணங்களைக்கொண்டு அநேக ஆஸ்திகர்கள் பெரியதொரு ஶோகத்தை அடைந்திருந்தார்கள். இப்பொழுது அந்த ஶோ கம் ஆத்யந்திகமாகத் தீர்ந்துவிட்டது. ப்ரதிதிநமும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ம னுடைய ஸேவையை உத்தேஶித்து அநேக ஜநங்கள் அவ்விடம் போகிறார்க ளாம். ஸம்ப்ரோக்ஷணத்திற்குப் பூர்வாங்கமாக, ஜ்யோதிஶ் ஶாஸ்த்ரத்தி லும் மந்த்ர ஶாஸ்த்ரத்திலும் நிஷ்ணாதர்களான சில ஆஸ்திகர்கள் சில ஜப கர்மங்களைச் செய்யப்போகிறதாகவும் கேள்விப்படுகிறோம். இந்த ஸமயத் தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவிப்பது விஶேஷமாதலால், தங்கள் தங் கள் லௌகிக வ்யாபாரத்திலிருந்து கொஞ்சம் விராமத்தை ஸம்பாதித்துக் கொண்டு, ஆஸ்திகர்களெல்லாரும் ஸ்ரீ அஹோபில யாத்ரையை அநுஷ்டிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். உத்தாநத்திற்குப் பிறகு ஸம்ப்ரோக்ஷ ணம் நடைபெறும்பக்ஷத்தில், நவராத்ர ஸம்பந்தமான லௌகிக வ்யாபார விராமம் ஏற்படுவதால், அநேக லௌகிகர்களுக்கு அப்பொழுது ஸ்ரீ அஹோ பில யாத்ரையைச் செய்வது மிகவும் ஸௌகர்யமாக இருக்கக்கூடும். இதர அம்ஶங்கள் ஒன்றும் உபரோதமாகாவிட்டால், ஸ்ரீ ஸ்வாமியும், ஆஶ்ரிதர்க ளுடைய ஸௌகர்யத்தை ஆலோசித்து அப்படியே செய்தருளவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

'ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் மறுபடியும் ஸ்ரீ அஹோபிலத்திற்கு எழுந் தருளப்போகிறாரோ?' என்று கலங்கி நின்ற ஜநங்களின் கலக்கத்தை நிவ் ருத்திசெய்து, அநாதகத்தில் வர்ஷம் பொழிவதுபோல ஆஶ்ரிதர்களுடைய மனத்தில் பேராநந்தத்தைப் பொழியும் ஸ்ரீ ஸ்வாமி விஷயமாக ஸகல ஜநங்க ளும் ஸர்வகாலத்திலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. மேல் நடக்கவேண்டிய கார்யங்களையும் நிர்விக்நமாகப் பூர்த்தி செய்துவைத்து, தர்மாநுஷ்டாநமும் ஸித்தாந்த ப்ரசாரமும் ஸார்வத்ரிகமாகப் பரவும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ மன் கடாக்ஷித்தருள வேண்டுமென்பதுதான் நமது ப்ரார்த்தனை.

மயிலாப்பூர். }

**எஸ். வாஸுதேவன்.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள ௵ ஆவணி ௴ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே |
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா || [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**கும்பகோணம் வர்ணாஶ்ரம தர்ம ரக்ஷக ஸங்கம்.**

இந்த ஜூலை மாஸத்தில் கும்பகோணத்தில் வர்ணாஶ்ரம தர்ம ரக்ஷக ஸங்கமொன்று பல நாள்களில் கூடியது. த்ரிமதஸ்தர்களும், அவர்களுக்குள் பண்டிதர் களும் அந்த ஸங்கத்தில் ப்ரகாசித்தார்கள். ஸ்ரீ. க்ருஷ்ண ஶாஸ்த்ரிகள், மணேஶ ஶாஸ்த்ரிகள், குப்பாசார், வீரராகவாசார்யர், சேஷாசார்யர், வெங்கடராம ஶாஸ்த்ரிகள், வைத்யநாத ஶாஸ்த்ரிகள், ராமசந்த்ரா சார், அருணாசல ஶாஸ்த்ரிகள், ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரிகள், ஶிவராமக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள், பஞ்சாபகேச ஶாஸ்த்ரிகள் முத லான வித்வத் ஶிரோமணிகள் பல விஷயங்களைப்பற்றி ஸங்கத்தில் உபந்யாஸம் செய்தார்கள். ஸ்ரீ. ஸுந்தரராமய்யர், காமேஶ்வரய்யர், ஏ. வி. கோபாலாசார்யர் முதலான வைதிக லௌகிக வித்யாபாரங் கதர்களும் உபந்யஸித்தார்கள். ஹிந்துக்களுடைய ஸநாதந தர்மம்,

31 AUG 1916
MADRAS



வர்ணாச்ரமங்களுடைய பாதுகாப்பின்றி லுப்தமாய்ப் போய்விடு
மென்றும், ஹிந்துக்கள் ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் ஸர்வ
புருஷார்த்தங்களையும் ஸம்பாதித்துக்கொள்ள வர்ணாச்ரம தர்மம்
அத்யந்தம் வேண்டியதென்றும் ஸங்கத்தார் தீர்மானித்தார்கள். வர்
ணாச்ரம தர்மம், ச்ராத்தாதி கர்மங்கள், பஞ்சமஹா யஜ்ஞங்கள்,
பகவதாராதநம், ஸந்த்யாவந்தநம், ப்ராஹ்மண தர்மம், ஹிந்து விவா
ஹம், வேதப்ராமாண்யம், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம், காயத்ரீ, ஆசார்ய
பக்தி, தேவாலய த்ரவ்ய விநியோகம், மடங்களின் த்ரவ்ய விநியோ
கம் இத்யாதி விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் நடந்தன.
ஸுந்தரராமய்யர் அவர்கள் ப்ரௌடா விவாஹம், விதவா விவா
ஹம், வர்ணங்களை அதிக்ரமித்த விவாஹம் இவற்றை சாஸ்த்ர
விரோதமென்று ஸாதிக்கவும், அவ்வண்ணமே ஸங்கத்தார் தீர்மா
நம் செய்தார்கள். வர்ணஸ்தர்கள், ஒருவரோடொருவரும் வர்ண
பாஹ்யருடனும் ஸஹபோஜநம் செய்தல் சாஸ்த்ர விரோதமென்
றும், ஸமுத்ரயாநம் ப்ராஹ்மணர்க்கு சாஸ்த்ரங்களால் நிஷேதிக்
கப்பட்டதென்றும் தீர்மானித்தார்கள். ஹிந்து மதத்தின் அபி
வ்ருத்திக்காக மாத்ரம் தேவாலய த்ரவ்யமும் மடங்களின் த்ரவ்ய
மும் செலவிடப்படலாமென்றும் தீர்மானித்தார். முடிவில், உள்
ளும் புறமும் சத்ருக்களால் பீடிக்கப்பட்ட ஹிந்து மதம் ரக்ஷிக்கப்
படவேண்டியதென்றும், அதற்காக த்ரிமதஸ்தர்களும் ஒருமித்து
ஸங்கங்கள் கூடவேண்டுமென்றும் முடிவுசெய்தார்கள். ஸங்காவ
ஸாநத்தில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளும் ஆர்யமதத்தைப்பற்றி
யும் வர்ணாச்ரம தர்மத்தைப்பற்றியும் இரண்டு உபந்யாஸங்கள்
செய்தார்கள்.

இந்த ஸங்கம் நடந்ததைப்பற்றி நாம் மிகவும் ஸந்தோஷிக்
கின்றோம். ஸ்வரக்ஷணார்த்தமாக யாதொரு ப்ரயத்நமுமற்று நம்
மதத்தை அபிமானிக்கின்றவர் இருத்தல் கூடாது. அதற்காக த்ரி
மதஸ்தரும் ஒருமித்தல் வேண்டியது. அது கும்பகோணம் ஸங்கத்
தில் நன்றாக அமைந்தது. ஸமுதாயமாக நமது வைதிக தர்சநத்தை
ரக்ஷித்துக்கொண்டு தான், அதனுடைய உட்பிரிவுகளை ரக்ஷித்தல்
ஸாத்யமாம். ஸம்ப்ரதாய பேதங்களையே நோக்கிக்கொண்டிருந்தால்
ஸம்ப்ரதாய மூலம் வேரற்றுப் போய்விடும்.

பாச்சாத்ய வித்யையால் உண்டாக்கப்பட்ட புத்தி பேதங்கள்
வர்ணாச்ரம ஸங்கங்களால் முற்றிலும் மாறிவிடமாட்டா. ஸாமக்ரீ



இருந்தே தீரும். இப்படி
இருக்கும் வரையில், அதன் கார்யமும் இருந்தே தீரும். இப்படி
யும் அப்படியும் போகாமல் இருக்கும் சலசித்தர்களுக்கு ஸங்கங்
கள் மூலமாக ஸம்ப்ரதாயம் ரக்ஷிக்கப்பட்டதாகில், அதுவே போ
துமான குணம். பேதிக்கும் ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஸங்கங்களில்
சேர்ந்து ஸம்ப்ரதாய பேதங்களால் உண்டாகும் த்வேஷங்களை
நீக்கி, ஸமாநாம்சங்களைக்கொண்டு பரஸ்பரம் ஸ்நேஹம் பாராட்
டவும் கூடும்.

ஸங்கோபந்யாஸங்களின் ஸாராம்சங்களைப் புஸ்தகங்களாக
அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்பதை முன்னமே வேண்டி
யிருக்கின்றோம்.

* * * * * *

**நம் தேச நாக ரிகத்தினுடைய உத்தராவஸ்தா விசாரம்.**

ப்ரமதாநாதபோஸ் என்பவர் லண்டன் கலாஸங்கத்தில் பதார்
த்த சாஸ்த்ர பரீக்ஷை கொடுத்து வித்வத் பட்
டம் பெற்றவர். அவர் ஐரோப்பா கண்டத்தில்
பல தேசங்களையும் அவற்றின் நாகரிகங்களையும்
பார்த்து யோசித்தவர். நாகரிகங்களின் கால
க்ரமங்களைப்பற்றி 1913-ம் வர்ஷம் அவர் எழு
தின புஸ்தகத்தில், நம் இந்தியா தேசமானது
நாகரிகத்தில் உந்நத தசையெனத் தகும் ஆத்மகுண பூர்த்தியை
யும் தர்மாநுஷ்டாநத்தையும் முன்பே அடைந்ததெனவும், கேவ
லம் புத்திபலத்தால் அமையப்பட்ட நாகரிக ஸ்திதியில் ஐரோப்பா
கண்டம் இன்னும் இருக்கின்றதெனவும் சொன்னார். ஆத்மகுண
பூர்த்தியானது, ஸர்வத்ர ஸமனாய் நியாமகனாய் சேஷியாய் இருக்
கின்ற பரமாத்மாவின் சரீரம் தான் சேதநாசேதந ரூபமாகப் பரிண
மித்த இந்த ஜகத்து என்பதை யறிந்து, இச்சாத்வேஷாதி த்வந்த்வ
மோஹங்களை விலக்கி, சித்தத்துக்கு சாந்தியை ஸம்பாதித்தவர்
பக்கல் தான் உண்டாகும். இந்த ரூபமான ப்ரஜ்ஞை சிலர்க்கு
ஸ்திரப்பட்டாலும் யாவர்க்கும் உண்டாகாது. உண்டானவர்க்
குள்ளும் யாவர்க்கும் நிலைப்படாது. இது ஸ்திரப்பட்ட மஹாங்
கள் இந்தியாவில் போல் மற்றெங்கு மிருந்தாரில்லை. அவர்களால்
தான் உத்க்ருஷ்ட ஜ்ஞாநஸாக்ஷாத்காரம் நம் தேசத்தில் பிறந்த
தெனும் க்யாதி உண்டாயது. இதுதான் ஆநந்தமயனான ஈச்வர
தர்சநமெனத் தகும். புத்தியில் நிலைகொண்டவர்கள் ஐரோப்யர்.
அவர்கள் ப்ரவ்ருத்தி, மநஸ்ஸையோ விஜ்ஞாநத்தையோ ஆச்ர

யித்து நிற்கும். அதனால் அவர்கள் ஐஹிக ஸுகங்களை அபேக்ஷித்து
இடைவிடாமல் வ்யாபார பரர்களாய் இருக்கின்றார்கள் ; அவர்கள்
த்வந்த்வ மோஹங்களுக்குள் அகப்பட்டவர்கள் ; ரஜோகுண
ப்ரசுரர்கள்.

இந்த சித்தவ்ருத்தி புராதந காலத்தில் நம் தேசத்தார்க்குள்
ளும் பெருகியது. பதார்த்தங்களின் தத்வஜ்ஞானத்தால் ஸுக
வ்ருத்தியையும் துக்க நிவ்ருத்தியையும் ஐரோப்யர் வாதிக்கின்றனர்.
அந்த ஜ்ஞானம் இல்லாதபோது, பூர்வகால இந்தியர்களும் மற்ற
தேசத்தார்களும், தேவதைகளின் ஆராதநத்தால் ஸுகத்தையும்
துக்க நிவ்ருத்தியையும் ஸம்பாதிக்க முயன்றனர். ஸம்பாதிக்கும்
ப்ரகாரம் மாறிவிட்டது. ப்ரயத்நங்களின் உத்தேசயமானது
முன் இந்தியர்க்குள் இருந்ததுபோல் இப்போதும் ஐரோப்யர்க்
குள் நிலைக்கின்றது. தத்வதர்ஶிகள் மிகுந்து நின்ற காலத்திலும்,
புத்திவ்யாபாரத்தால் ஸுகத்தையும் துக்கநிவ்ருத்தியையும்தேடின
பெயர்களே இந்தியாவிலும் பெருகி நின்றார்கள். இந்தியர்விலும்
ஐரோப்பாவிலும் தமோகுணப்ரசுரராய், இச்சித்த விஷயங்களைக்
குறித்து வ்யாபாரவத்வம் அற்றவர்களாய்ப் புத்திக்கு ஶ்ரமம்
கொடாமல் பிழைப்பவர்களும் உண்டு. ஆனால் உத்க்ருஷ்டாதி
காரிகளைப்பற்றியே தேசத்தின் நாகரிக ஸ்திதி மதிக்கப்படுகின்றது.
இப்போது ஐரோப்யர் ராஜாக்களானபடியாலும், வ்ருத்தி நிமித்
தமாக ஐரோப்யவித்யையே யாவராலும் அப்யஸிக்கப்படுகின்ற
படியாலும், 'யதாராஜா ததா ப்ரஜா:' எனும் ந்யாயத்தின்படியே,
நமது தேசத்திலும் ஆத்மகுண பூர்த்தியடைய அதிகாரிகளாகத்
தக்கவர்களும், புத்தி பலத்தை ஆஶ்ரயித்து, ஸுகாபேக்ஷையை
மிகவும் பொருந்தி வ்யாபாரவான்களாக ப்ரயத்நப்படுகின்றனர்.
இதை யோசித்து ப்ரமதாநாதரென்பவர் 'ஆதுநிக இந்தியர்களின்
ப்ரமைகள்' என்று ஒரு க்ரந்தம் எழுதியிருக்கின்றார். ஐரோப்யர்
நாகரிகம் ஏற்றமானது என்பது தான் ப்ரமை. நம்முடைய பூர்
விக நாகரிகத்தை நம்மவர்கள் துறக்கக்கூடாதென்பது தான் ப்ரம
தாநாதர் அத்யவஸாயம். ஐரோப்ய தேச ஸஞ்சாரத்தாலும்,
ஐரோப்யர்களுடன் பழகிய பழக்கத்தாலும், இப்போதும் ஹிந்
துக்கள் த்யாக புத்தியாலும் பூததயையாலும் சிறந்தவர்கள் என்று
அவர் முறையிடுகின்றார். ஐரோப்யர் ஆசாரங்களையும் ப்ரவ்ருத்தி



களையும் நம் தேசத்தார் மேற்கொள்ளல் அநர்த்தாவஹமென்று
அவர் சொல்கின்றார்.

ப்ரமதாநாதர் இந்தியாவில் இங்கிலாந்து வாஸமெனும்
ஸம்ஸ்காரமடைந்தவர்களுடன் நீண்ட காலமாய்ப் பழக்கமுள்ள
வராம். அவர்களோ, நடை உடை உண்டி பாஷை முதலான
யாவதம்ஶங்களிலும் ஆங்கிலேயரை வழிபடுபவர்கள். ப்ரமதா
நாதர் அபிப்ராயத்தைக் கண்டிக்க ஆரம்பித்து, ஜுலை மாஸம்
'மாடர்ன் ரிவ்யூ' பத்ரிகைக்கு எழுதிய பாஶ்சாத்ய வித்யாபக்ஷ
பாதியும், இங்கிலாந்து வாஸம் பெற்று வந்த இந்தியர்கள் விஷய
ப்ரவணரென்றும், தேசாபிமாநமும் ஆர்ஜவமும் அற்றவரென்றும்
ஒப்புக்கொள்கின்றார். இருவர்களும் இந்தியாவின் ப்ராசீந வித்யை
யும் தர்மமும் ஆத்யந்திக நாஶத்தை யடையத்தகாதனவென்றும்,
அவற்றின் அழிவின்றி, அநுகூலப்படுமளவும் பாஶ்சாத்யர் வித்யா
தர்மங்களை நாம் மேற்கொள்ளவேண்டுமென்றும் சொல்கின்றார்
கள். ஆனால் ப்ரமதாநாதர், வர்ணாஶ்ரம தர்மங்கள் பூர்வகால
மிருந்தவண்ணம் சீர்திருத்தப்பட்டுப் புருஷார்த்தங்களை நம் பூர்வீ
கர் அபிப்ராயப்படி நிலைப்படுத்தி, அவற்றை யடையவேண்டிய
உபாயங்களைத் தத்கால வித்யாவழக்கங்களின்படி மாற்றலாமென்று
அபிப்ராயப்படுவதாய் யாம் எண்ணுகின்றோம். அவருடைய ப்ரதி
வாதியோ, தேசாந்தரம் போகாமலே ஸ்வஜாதியையும் மதத்தை
யும் இழந்தவர். பாஶ்சாத்யர் வித்யாப்ரேரித ப்ரயத்நங்களில் ஸங்
தோஷம் கொண்டவர். வர்ணாஶ்ரம தர்ம நாஶங்களை வேண்டு
கின்றவர். இவ்வண்ணம் யாவரும் இந்தியாவில் நிலைப்படவேண்டு
மென்று கருதுகின்றவர். இப்படியெல்லாம் ஆனபிறகு, நம் பூர்
வீகரால் நாம் அடைந்தவற்றையும் மறுபடியும் வரப்பெற்றப்
போகின்றனராம். அதெங்ஙனம் ஆகுமோ அதைச் சொன்னாரில்லை.
ஜோஷல்ரிபாரம் ஸபையாரில் சிலர் ஹிந்துக்களுடைய ப்ராசீந
வித்யைக்கு வாக்கினால் மட்டும் விஜயம் சொல்லிவிட்டு,தம்முடைய
ஸர்வப்ரயத்நங்களாலும் அதன் நாஶத்தைக் கருதுகின்றனர். அவர்
களுடைய சித்தவ்ருத்தியைப் பொருந்ினவர் ப்ரமதாநாதருடைய
ஶாஸகர். புத்திமான்கள் ப்ரமதாநாதர் எழுதிய புஸ்தகங்களையும்,
அவற்றின் கண்டனங்களையும் கண்ணுற்று, நம் நாகரிகத்தினுடைய
உத்தராவஸ்தையைப்பற்றி யோசித்தல் நலம்.

* * * * * *

தேசிகத்வேஷம்.

அப்பய்ய தீக்ஷிதர் தேசிகனைப்பற்றி '[illegible]' என்று சொல்லியிருக்கின்றாராம். ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் தேசிகனே "தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச்செய்தேயிறே நாம் ப்ரமாண ஶரணராய்ப் போருகிறது" என்று சொன்னாராம்.

தட்டான் மோசம் செய்வதில்லையென்றாலும் நம்பத்தகாதவனும். திருடன் திருடவில்லை யென்றாலும் தண்டிக்கத்தக்கவனும். ஆதலால் ப்ரமாணஶரணராய்ப் போருகிறதாகத் தேசிகன் சொன்னாலும், அவர் தார்க்கிகராதலால் விஶ்வாஸாநர்ஹராம். தூஷகர் அபிப்ராயம் தர்க்க பாண்டித்யம் ந்யாய விரோதத்திலேயே பர்யவஸிக்கும்போலும். மற்றோரிடத்தில் நம்பிள்ளை முதலானோர்கள் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்திற்காக ந்யாயமீமாம்ஸைகளை அதிகரித்தவர்கள் என்றும், அவர்களைப்போல் ஸம்ஸ்க்ருதச் சுவடறிந்தார் இவ்வுலகில் முன்னும் பிறந்தாரில்லை, பின்னும் இருக்கப்போகின்றாரில்லையெனவும் தூஷகர் உரைப்பர். இந்தக் குதூஹலம் தூஷகர் அடைவதைப்பற்றி யாம் வருந்துகின்றோ மில்லை. ஆனால் நம்பிள்ளை முதலானோர்களுடைய தர்க்க பாண்டித்யம் அவர்களை ந்யாய விரோதத்தில் செலுத்தவில்லையோ? தூஷகருடைய ந்யாய ஸஞ்சாரம் விலக்ஷணமானது. அது எப்படியிருந்தாலும், "[illegible]" எனும் மஹா கவி வசநம் தூஷகர் உக்திகளால் தடஸ்தர்களிடம் மாறப்போகின்றதென நாம் நினைக்கவில்லை. நம்பிள்ளை முதலானோரையும் சேர்த்துத் தான், '[illegible]' என்று மஹாசார்யர் ஸாதித்தார். தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரான அநந்தாழ்வானும் தமது வேதாந்த க்ரந்தங்களில் தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளை எடுத்து உரைத்தவண்ணம், நம்பிள்ளை முதலானோர் வாக்யங்களை எடுத்தாரில்லை யென்று யாம் கண்ட மட்டும் கேட்ட மட்டும் தெரிகின்றது



நம்பிள்ளை முதலானோர் பண்டிதர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. முப்பத்தாறாயிரப்படியும் பகவத் குணாநுபவார்த்தம் யாவராலும் கேட்கவும் படிக்கவும் தக்கதே. ஸம்ப்ரதாய பேதம் தோற்றின விடங்களில் மட்டும், நாம் அதன் வாக்யங்களை வழிபடமாட்டோம். இவ்வண்ணமே தேசிகன் க்ரந்தங்களைத் தென்கலையார் அவலோகநம் செய்வதில் நாம் குற்றம் சொல்லமாட்டோம்.

தேசிகத்வேஷம் சில தென்கலையார்க்குப் போலவே, தூஷகருக்கும் விஶ்வாமித்ர பர்யந்தம் வந்து உதித்தது. காயத்ரி மந்த்ர த்ரஷ்டாவை ப்ராஹ்மணனெனப் பெயர்பூண்டு தூஷிக்கத் துணிவதுண்டோ? ரகுநாதனுக்கு ஸர்வாஸ்த்ர மந்த்ரோபதேசம் அளித்தவர்கூட இவ்வண்ணம் தூஷிக்கப்பட்டாராகில், ஒரு ப்ரஹ்மவித்தினிடம் அபசாரப்பட்டவன், அதன் பலமாக 'அநேக ப்ரஹ்மவிதபசாரத்தை ஸம்பாதிக்கத் துணிவன்' எனும் பெரியோர் வசநம் பலிதமாயிற்று.

தென்னாசார்யர்களுடைய சில அபிப்ராயங்களைத் தேசிகன் அங்கீகரிக்காமை தூஷகர்க்குக் குற்றமாகத் தோன்றுகின்றது. நமக்கு அவ்வண்ணம் தோன்றவில்லை. ஒவ்வொரு ஆசார்யனும் தத் வார்த்தங்களைப்பற்றி யோசிக்கவும் நிர்ணயிக்கவும் அதிகாரி. நிர்ண யங்களில் பேதம் ஸம்பாவிதமாகையால், அதன்பொருட்டும் பெரியோர்களைத் திட்டுதல் கேவலம் துராக்ரஹத்தைக் காட்டுகின்றது. ராமாநுஜன் உக்திகளைத் தேசிகன் பல தரம் பஹுமாநிக்கின்றார். அவற்றை வழிபடுவதாகவும் உரைக்கின்றார். "ஏரணிகீர்த்தி ராமாநுசமுனி யின்னுரைசேர், சீரணி சிந்தையினோம்", என்றும், '[illegible]' என்றும், '[illegible]' என்றும் தேசிகன் ஸாதித்ததைத் தூஷகர் பரிஹஸிக்கின்றார். ராமாநுசனுக்கும் தேசிகனுக்கும் அபிப்ராய பேதம் ஈஷத்தும் இலது என்று வடகலை பண்டிதர்கள் ஸமர்த்தித்திருக்கின்றார்கள். அர்த்தவிசாரம் செய்வதில் ஸமர்த்தனான ஶிஷ்யன் அபரவ்யாக் யாநம் செய்தானாலும் அது குற்றமாகாது.

தூஷகர் சொல்வார்:—"இங்குள்ளார் அனைவரும் அவர் (தேசிகன்) நெற்றியில் நாமம் போடுமவர்களே யன்றி, அவர்(தேசிகன்) மோசத்திற்கு ஆளாவார் ஆருமில்லை." தூஷகருடைய திட்டுச்

சுவடி அதில் காணப்பட்டபடிக் காஞ்சீபுரத்திலோ ஸ்ரீரங்கத்திலோ பிறந்தபடியாலும், இரண்டிடத்திலும் வடகலையார் ஏராளமாக இருக்கின்றபடியாலும், தூஷகர் சொற்கள் அவரறிந்த மற்ற உண்மைகளோடு ஒத்தனவே. தேசிகனுக்கு நாமம் போடுவதே தூஷகர் தொழிலாகலாம் என்பதை நாம் ஒப்புக்கொள்வோம்.

தேசிகன் 'தத்தக பித்தக தாலேலோ' வென்று எழுதுபவராம். இந்தப் பரிபாஷையைத் தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளில் நாம் கண்டோமில்லை. ஸர்வாசார்யர்கட்குள்ளும் ஏகரீதியாக ஸ்வாபிப்ராயத்தை வெளியிடுவதில் தேசிகன் ஶ்ரேஷ்டர் என்பது நம்மவர் கொள்கை. விஸ்தாரமாக எழுதுகின்றவர்கள் முன்பின் வசநவிரோதமின்றி எழுதுவது துஸ்ஸாத்யம். தேசிகனைக் காட்டிலும் விஸ்தாரமாக எழுதினவர் யாருமில்லை. தென்னசார்யர்கள் செய்த ஒவ்வொரு புஸ்தகத்திலும் தத்தக பித்தக தாலேலோவைப் பலவாறாகக் காட்டியுள்ளாரும் உண்டு. ராமாயண பாரதங்கள் முன்பின் வசந விரோதமின்றியிருக்கக்காணோம். இதை வேதத்திலும் யோசித்துத் தான் மீமாம்ஸாஶாஸ்த்ரம் ஸமரஸப்படுத்த ப்ரவர்த்தித்தது.

தேசிகன் புஸ்தகமெழுதினரென்றும் வாதத்தில் எப்பொழுதும் ஜெயித்ததில்லையென்றும் தூஷகர் சொல்வர். "[illegible]" எனும் தேசிகனுடைய உக்திகளை அவர் அநாதரிக்கின்றார். தேசிகன் வைபவ ப்ரகாசிகைகளும் அவர்க்கு வேண்டாம். பண்டிதர்களால் கவிதார்க்கிக ஸிம்ஹம் என்று தேசிகன் பஹுமாநிக்கப்பட்டதையும் அவர் கேட்கமாட்டார். '[illegible]' என்று திநசரியில் தேசிகன் குமாரர் சொன்னாராம். அதைத் தூஷகர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். '[illegible]' என்றால், ஸம்மாநத்தை விஷமாயும், ஜநக்கூட்டத்தைப் பாம்பென்றும், மாதர்களைப் பிணம் போலும் தேசிகன் மதித்து அவற்றை விலகி நின்றார் என்று பொருள். தார்க்கிகர்களுள் ஸிம்ஹம் தார்க்கிகரிடம்பயங்கொண்டால், த்வேஷிகளின் வைரம் செல்லும் எல்லையைக் குறிக்கும்.



வடகலை திருமண் இட்ட தேசிகன் விக்ரஹம் அவதாரஸ்தலத்தில் ப்ரஸித்தமாகப் பரிபவமடைகின்றதெனத் தூஷகர் களிக்கின்றார். தென்கலையார் தூப்புல் ஸந்நிதியிலும் மற்ற விடங்களிலும் தேசிகனைப் பரிபவப்படுத்துவதால் தேசிகனுக்குக் குறையில்லை. இது குறையாகில், இதை ஸ்ரீராமக்ருஷ்ணர்களுடன் தேசிகனும் அநுபவிக்கின்றார். ஸ்ரீராமன் அயோத்தியில் அவதரித்த விடமும், ஸ்ரீக்ருஷ்ணன் மதுரையில் அவதரித்த ப்ரதேசமும் தத்காலம் கோரிகள். அங்கு பூர்வமிருந்த ஸந்நிதிகள் துருஷ்கரால் நாசமடைந்தன. காசியில் முன்னிருந்த மாதவன் விஶ்வநாதன் கோவில்களும் கோரிகளாயின. ஸ்ரீரங்கம் கோவிலும் மல்லிக்காபூர் எனும் துருஷ்க தளகர்த்தன் வஶமாக அநேக ஸம்வத்ஸரம் இருந்தது. அப்போது தேசிகனைப்போல் தென்னசார்யர்களும் அந்த ஸ்தலத்தை விட்டவர்களே. விக்ரஹங்களை ப்ராக்ருத பலம் உள்ள எவரும் பரிபவம் செய்யலாம். அதனால் விக்ரஹங்களை ஸாந்நித்யம் செய்வதாக நம்பப்பட்டவர்கள் வருத்தமடையார்கள்.

ஸ்ரீ பெரும்பூதூரிலும் திருவல்லிக்கேணியிலும் தேசிகன் விக்ரஹத்துக்குத் தென்கலை நாமமிட்டு அவர் செவியில் பிள்ளைலோகாசார்யர் தனியனைத் தென்கலையார் சொல்லுகின்றனராம். ஆதலால் தென்கலையாரைத் தேசிகத்வேஷிகள் என்பவர்க்கு நாக்கு வேமாம் வாய் புழுக்குமாம். தூஷகர் உக்திகள் ப்ராயிகமாக இப்படித்தான் இருக்கின்றன.

தேசிகன் கோணல்கூத்துகளை எடுத்து உரைத்தால் பாரதத்திலும் பெருகுமாம். தூஷகர்க்கு அமைந்தவண்ணம் தேசிகனுக்கு ஆத்மகுண பூர்த்தியில்லையாம். அவர் வயஸ்ஸில் கொழுத்துத் திரிந்தாராம். அவர் அஹங்காரைக ரஸிகராம். அதனால் அவர் தம்மைப்பற்றி, அண்டப்புரட்டி சண்டப்ரசண்டன் என்று தாமே எழுதிக்கொண்டனராம். ஆளவந்தார் தம்மைப்பற்றி '[illegible]' என்றும், '[illegible]' என்றும், சொன்ன

தைத் தூஷகர் புறங்காட்டி வைத்தார். தேசிகனும் ஆளவந்தாரும் வாதிஹம்ஸாம்புதாசார்யர் முதலானவர்களும் வாத ரங்கங்களில் அத்வைத நிரஸநார்த்தமாக இப்படி உரைத்திலராகில், தூஷகரால் தத்காலம் அபிமாநிக்கப்பட்டதோர் மதமொன்று ஜீவித்திருக்குமென்று தடஸ்தர் கொள்ளமாட்டார்கள். இப்படிச் சொல்லி ஜயத்வஜம் நாட்ட யோக்யதையும் அவஸரமும் வேண்டும். அவை யில்லாவிட்டால் அவ்வித உக்திகளும் உண்டாகமாட்டா.

தேசிகனிடம் விச்வாஸம் கொண்ட வடகலையார் கலியரக்கராம். ராக்ஷஸ க்ருத்யம்-ப்ராஹ்மண நாசமும், தேவ சத்ருத்வமும். "ஸோயம் ப்ராஹ்மண பூயிஷ்டோ வாநப்ரஸ்த கணோ மஹாந் | த்வந்நாதோ(அ)நாதவத் ராம ராக்ஷஸைர் வத்யதே ப்ருசம் || ஏஹி பச்ய சரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் | ஹதாநாம் ராக்ஷஸைர் கோரைர் பஹூநாம் பஹுதா வநே ||" என்று ஆரண்யகாண்டத்திலும், "தே தைவதாநி ஸர்வாணி ஹ்ருஷ்டாநி ஸஹிதாநி ச | ஸம்வாஸ ஸஹாயாணா: | த்ராஸநம் நாக ம்ருத்யுதி" என்று உத்தர ஸ்ரீராமாயணத்திலும் வாக்யங்கள் இருக்கின்றன. பகவத் த்விட்டுக்களான அஸுரராக்ஷஸர்கள் விரும்புவதை, "தாவத் யாத புவம் யூயம் ப்ரஹ்மக்ஷத்ர ஸமேதிதாம் | ஸூதயத்வம் தபோ யஜ்ஞ ஸ்வாத்யாய வ்ரததாநிந: || விஷ்ணுர் த்விஜக்ரியா மூலோ யஜ்ஞோ தர்மமய: புமாந் | தேவர்ஷி பித்ருபூதாநாம் தர்மஸ்ய ச பராயணம் | யத்ர யத்ர த்விஜா காவோ வேதா வர்ணாச்ரமக்ரியா: | தம் தம் ஜநபதம் யாத ஸந்தீபயத வ்ருச்சத ||" எனும் ஹிரண்யகசிபுவின் கட்டளையைக் கண்டறியலாம். இதனால், ராக்ஷஸத்வம் எவ்விடம் உண்டென்றும், எவ்விடம் இலதென்றும் யோசிக்க அமையும்? "மகாமீதாநாம் நிர்தேவ்ஷடீ [illegible] ப்ரணஷ்டஸ்வாத்யாய வஷட்கார [illegible] மேதம்" என்றெடுத்துக் காட்டிய சங்கை வடகலையாரிடம் உதிக்கவில்லை. இப்ரமாணங்களை ஆதரிக்கின்றவர் வேதத்தை வழிபடுபவர். யஜ்ஞாதிக்ரியைகளைப் பகுமாநிப்பவர் அரக்கராகார். அந்த பிருது இவரைப் பரிபவப்படுத்துவோரிடமே விப்ரமிக்கும். (இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 AUG 1916
MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# ஸ்ரீ வைஷ்ணவ மதமும் த்ரிகால ஸ்திதியும்.

(தொடர்ச்சி.)

[இது, சென்ற மார்கழி மாஸத்தில் நடைபெற்ற திருவெவ்வுளூர் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில், ஸ்ரீ. உ.ஹ. வித்யா பூஷணம் ஆள்கொண்டவில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸங்களின் ஸங்க்ரஹம்.]

## III. மூன்றுவது உபந்யாஸம். [30-12-1916.]

மேல் நோக்காய்ப் பார்க்குமவர்க்கு வைஷ்ணவம் ஒரு சார்பினருக்கு உரித்தான மதமாகத் தோன்றும். ஆனால் அதன் உற்பத்தி மேலாதாரங்களை ஆழ்ந்து பார்க்கும்பொழுது, அது, ஸர்வவ்யாபகமான மதமாய்க் காணப்படும். அவ்வித தாத்பர்யத்தைக் கொண்டே அடியேன், அடியேனால் ப்ரசுரிக்கப்பட்ட நூல்களில் தீர்மானப்படுத்தி யிருக்கிறேன். லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற க்ரேட் ப்ரிடனுக்கும் ஐயர்லாந்துக்கு முரிய ராயல் ஏஷியாடிக் ஸபையாரால் வெளியிடப்பட்ட அர்த்தபஞ்சகத்தில், முக்யமாய் அவ்வித தீர்மாநத்தைக் காணலாம். "விஷ்ணு" என்கிற பதத்திலிருந்து "வைஷ்ணவம்" என்கிற பதம் பிறந்திருக்கிறது. "விஷ்ணு" என்கிற பதம் "விஷ்" என்னும் க்ரியாபதத்திலிருந்து உத்பத்தி. "விஷ்" என்பதற்கு வ்யாபி அல்லது பரவு என்பது பொருள். ஆகையால் வைஷ்ணவம் என்பது ஸர்வ வ்யாபகமாகிய பொருளைக் குறித்துச் சொல்லுகிற தத்வஜ்ஞாந மதமாகும். ஆகையால் வைஷ்ணவம் ஸர்வ வ்யாபகமானது. இதைப் பொதுவாய் விரித்துக் கூறுவது நாராயணபதம்.

உள்ளும் புறமுமான ஸாக்ஷ்யங்களால் இச்சமயத்தின் பழமை முன்னமேயே வேண்டிய அளவு ரூபிக்கப்பட்டிருக்கின்றது. ராம க்ருஷ்ண ந்ருஸிஹ்ம மத்ஸ்யாதி விஷ்ணு அவதாரங்களைக் காட்டும் புறம்பான ஸாக்ஷ்யங்கள், ஸர்வவ்யாபகக் கடவுள் அல்லது பரப்ரஹ்மத்தினுடைய பர விபவ தோற்றங்களில் ஒன்றுக்கும் மற்றொன்றிற்கு முள்ள ஸம்பந்தத்தைக் காட்டுகின்றன. விபவ அல்லது அவதார விசேஷங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஹிந்துக்களல்லர். ப்ரஹ்ம ஆர்ய ப்ரார்த்தந தேவ வேத ஸமாஜத்தவர்கள், தாங்கள் அறிவுறுவண்ணம் இவ்விஷயத்தைத் தக்க காலத்தில் கவனிக்கக்கடவர்கள். "உத்பத்த்யஸம்பவாத்" என்ற வேதாந்த ஸூத்ரத்தால் நிரூபிக்கப்பட்ட ப்ரகாரம் பகவத் சாஸ்த்ரம் அல்லது பாஞ்சராத்ரங்கள் புராதநமாகும். ஸ்ரீ க்ருஷ்ணனே இதை வெகு காலத்திற்கு முன்னமேயே பல் தரம் உபதேசித்ததாகவும், மநுஷ்யன் மறந்துவிட்டதால், அதை மறுபடியும் உபதேசிக்கத் தாம் அவதாரம் செய்ததாக பகவத்கீதையில் தாமே சொல்லுகிறார். ஆகவே பகவத்கீதை, பகவத்சாஸ்த்ரம் அல்லது ஸாமாந்ய வைஷ்ணவத்திற்கு ஸாராம்ஸமாகிறது. இக்காலத்தில் கீதை மநுஷ்ய ஜாதிக்கு இன்றியமையாத ஸாமாந்ய புஸ்தகமாய் விட்டது. இவ்விஷயத்தை யாவரு மறியக் காட்டிய பெருமை, தியஸாபிகல் ஸபையாருக்கும், முக்யமாய் இப்படிப்பட்ட சிறப்புற்ற தத்வஜ்ஞாநத்தையும் மதத்தையும் ஆங்கிலேயத்தில் அழகுற மொழிபெயர்த்த அன்னிபெஸண்ட் அம்மையாருக்கும் உண்டு. மிகவும் மேன்மை பொருந்திய ஒரு பார்ஸீ ப்ரபு கீதையை ஸர்வஜந ஸாதகமான புஸ்தகமென்று பேசியிருக்கிறார். அடியேனும் பகவத் சாஸ்த்ரத்தைப்பற்றி ராயல் ஏஷ்யாடிக் ஸொஸைடி ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறேன்; அதுவும் படிக்கத்தக்கது. வைஷ்ணவத்தின் பழமையைப் பற்றியும், ஸகாஹூண முதலிய மற்ற ஜாதியாரும் தங்கள் மதத்தைவிட்டு வாஸுதேவ மதத்தை கைக்கொண்ட விஷயம் பெஸ்நகர் சாஸநத்தில் காணப்படுவதையும் அதில் நான் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறேன். வாஸுதேவ மதம் என்பது வைஷ்ணவ மதம் என்பதற்கு ப்ரதி மதம். வாஸுதேவம் என்றாலும் ஸர்வ வ்யாபகம் என்றே பொருள். டாக்டர் பண்டர்கர் என்பவரால் இப்பொழுது தான் பரிசோதிக்கப்பட்ட புராதந நகரமாகிய பெஷ் என்னும் இடிந்துபோன பட்டணத்தில் சிதை



வுற்ற சின்னங்களைக்கொண்டு க்ரேக்க ஜாதியினராகிய டெமிட்ரியஸ் என்பவர் ஒரு யாகத்தில் யஜமானனாக இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிதாகிரெஸ்ஸும் இயேசுநாதரும் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டார்கள். பாரஸீகர்களாலும் (வேத ஸம்பந்தமானவர்கள்) இந்தியாவிலுள்ள த்ராவிடர்களாலும் ஹீப்ரு ஜாதியார் முன் செலுத்தப்பட்டார்கள். பார்ஸிகள் அல்லது ஜொராஸ்டிரியர்கள் வேத ஆர்யர்களுக்கு நெருங்கிய ஸம்பந்தமுள்ளவர்கள். ஜெண்டவஸ்தா முதலிய அவர்களுடைய வேதங்களில் அதிக பழமையும், மனத்தைக் கவரத்தக்கதுமான குறிப்புகளால் வைஷ்ணவமதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அதி புராதந சரித்ரம்.

நிகழ்காலமே என்று எண்ணும்படியாயுள்ள அவ்வளவு ஸமீப காலத்தில், பம்பாய் நாராயணவடி ப்ருந்தாவந கோவிந்த ரங்காசார்யர் ரங்க மந்திரம் முதலியன, ஹைதராபாக்கத்தில் பரசுராம பாக் சீதாராம பாக் என்னு மிடங்களிலுள்ள கோவில்கள், அநந்தாசார்யர்களுடைய புஷ்கரங்கள் முதலியன, குஜராத்தில் ஸ்வாமி நாராயணர் ஸங்கம், ரீவா அலஹாபாத் ஜஹோரா முதலிய விடங்களில் அவ்வப்போது கூடும் சதுர் வைஷ்ணவ ஸபைகள், மதுராஸ் யோகி பார்த்தஸாரதி ஸ்வாமிகளின் அயோத்யா ஸீதாராம மந்திரம், கஞ்சி காதி அநந்தாசார்ய ஸ்வாமிகளின் பம்பாய் Projected கோவில், வாநமாமலை ஸ்வாமி முதலிய மடாதிபதிகளாலும் ஆசார்யர்களாலும் செய்யப்படும் மதாபிவ்ருத்தி யாத்ரைகளும், திருப்பதி தூத்துக்கொடி மதுரை முதலிய இடங்களில் வருஷவாரி இராமாநுஜம் மாத்வம் ஆகிய இருதிறத்தாராலும் நடைபெறும் அநேக வைஷ்ணவ ஸபைகளும், பலவிடங்களிலும் நடைபெற்று வரும் அநேக கூட்டங்களும், ஸங்கங்களும், அவற்றுள் முக்யமாய் மதராஸிலுள்ளவைகளும், மேல்கோட்டை உபய வேதாந்த ஸபை, திருப்பதி மத்வ ஸித்தாந்த ஒன்னஹிநீ ஸபை, பெங்களூர் ஸ்ரீநிவாஸ மந்திரமும் அதன் தர்மங்களும், ப்ராஹ்மணர்களும் மற்றவர்களும் ஆகிய இருதிறத்தாரும் ஏகோபித்து உழைத்து வரும் மற்றும் பலவிடங்களிலுமுள்ள எண்ணிறந்த சில்லரை ஸபைகளும் ஆகிய பலவற்றினுலும் வைஷ்ணவ மதம் லோகமறிய ப்ரஸித்தப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றது. அப்படிப்பட்ட ஸபைகளுள் மத

ராஸ் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரோபோத ஸங்கம் முதன்மையானது; அதற்கு ஜீவாதாரமாய் விளங்குபவர் கனம் ஸ்ரீ C. முத்துகிருஷ்ணப்பிள்ளை அவர்கள்.

தென்கலையார் வடகலையாருக்குள்ள வித்யாஸங்களை எப்படி ஸமாதானமாக ஸமரஸப்படுத்தவேண்டுமென்பதற்கு த்ருஷ்டாந்தமாகத் திருப்பதி ஸபா மாத்வர்களுக்குள் பிரதம தீர்த்த விவாதம் விமரிசையானதைக் கவனிக்கலாம். உத்தராதி ஸ்வாமி, தீர்த்த ப்ரஸாத மரியாதையை மற்ற ஒவ்வொரு மடமும் சிற்சில வருஷங்கள் பெறலாம் என்று உடனே தீர்மானித்து விட்டார். இம்மாதிரியாகவே நமக்குள் இருக்கும் வித்யாஸங்களையும் ஸுலபமாய் ஸமாதானப்படுத்தி ஒழுங்குபடுத்தலாம். ராயல் ஏஷியாடிக் ஸபையாரால் நடத்தப்படும் வர்த்தமான ஸஞ்சிகையில் வடகலை தென்கலையார்களுக்குள்ள 18-வித (உபதேசித்தற்குரிய) வித்யாஸங்களை அடியேன் எழுதியிருக்கிறேன். நம் ஸஹோதரர்கள் அதை வாசித்துப் பார்க்கலாம். மாத்வர்களுக்குள் தசகூட, வியாஸ கூடங்கள் அந்யோந்யமாய் ஏகோபித்து உழைக்கின்றன. அதே மாதிரி நாம் ஏன் செய்யக்கூடாது?

மடங்கள் கோவில்கள் இவைகளின் கடமைகளைப் பற்றி அடியேன் முன்னமே சில சொல்லியிருக்கிறேன். அவற்றின் தொடர்ச்சியாக இப்பொழுதும் சில சொல்லத் தொடங்குகிறேன்:—

1. மடங்கள், கோவில்கள், இவைகளில் லௌகிக பாரமார்த்திக க்ருத்யங்களைப் பிரித்து அவ்வவற்றுக்கு ப்ரத்யேகமாக உத்யோகஸ்தர்களை ஏற்படுத்துவது அவசியம். இந்த விஷயத்தில் அடியேன் சொல்வது நம் ஜாதிய ஸங்க சூசிபத்திரத்தில் ஸிவில் அமுல் இலாகாக்களைப் பிரிவுபடுத்த வேண்டுமென்று சொல்வதை ஒக்கும்.

2. எவை இல்லாவிட்டால் கோவில்களில் தூய்மையாகிய தெய்வத்தன்மை மோசம் போய்விடுமோ, அப்படிப்பட்ட இன்றியமையாதவைகளான பாஞ்சராத்ர வைகாநஸக் கொள்கைகளுங் கோட்பாடும் ஸாதனையும் ஆகிய இவற்றில், ஆகம அல்லது பட்டர் வகுப்பைப் பழகச்செய்தலின் ஆவச்யகம். கோவில்களில் ஊழியம், உத்ஸவம், ஸாதாரண உத்யோகம் ஆகிய இவைகளைச் செய்வோர் இவ்வகுப்பினர் தாம். இவ்வகுப்பினர் நல்லொ



ழுக்கம் குன்றி, தங்கள் தூய வ்ருத்தியையும் மறந்தனர். பாஞ்சராத்ர படிப்பில் கணிதமும், சிற்ப வேலையும், சிலாசித்ரவேலையும், வர்ண வேலையும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் இவ்வகைப் படிப்புகள் உத்ஸாகப்படுத்தப்படுவது மல்லாமல் மந்த்ரசாஸ்த்ரமும் வ்ருத்தி யடையும்.

3. வைஷ்ணவாபிவ்ருத்திக்கு வேண்டிய தநம் சாத்தாதவர்களிடமிருந்து வஸூலிக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய இதர ஸ்வதந்த்ரங்களையும் கொடுக்கவேண்டும். ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் முக்ய அம்சம் என்னவென்றால், ப்ராஹ்மணர்களும் ப்ராஹ்மணேதரர்களும் பொதுவாய் ஆத்ம உஜ்ஜீவநார்த்தம் ஏகோபித்துச் சேரக்கூடுமென்பது.

4. பௌத்த மதம் வைஷ்ணவத்தினின்று பிறந்த ஒரு கிளை மதமென்றதை மறந்த பௌத்த மத அத்யக்ஷர்களாலும் கிறிஸ்தவ பாதிரிகளாலும் வைஷ்ணவ கொள்கையின் பேரில் அநுதாபமின்றி த்வேஷ புத்தி கற்பிக்கப்பட்ட தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லப்படும் பஞ்சமர்களுக்குப் பஞ்சஸம்ஸ்காரம் செய்தல். பௌத்தர் விஷ்ணு அவதாரங்களிலொருவரென்று எல்லாரும் அறிந்து சொல்லுகிறார்கள். பஞ்சமோபாயம் பஞ்சமர்களுக்கே முக்யமாய் உரியது. அயோத்யா தாஸர் வைஷ்ணவர். பரிதாபமின்றி நடத்தப்பட்டபடியால் அவர் பௌத்த மதத்தைக் கைக்கொள்ள நேரிட்டது. கர்னல் ஆல்காட் துரை உயிருடனிருந்திருப்பராயின், இவ்வளவு காலத்தில் பிழை திருத்தமடைந்திருக்கும். பஞ்சமனுக்குப் பஞ்சஸம்ஸ்காரம் செய்வதைக் காட்டிலும், அவனால் கைக்கொள்ளப்பட்டுள்ள பஞ்சக்ருத்யங்களாகிற பூசார, ஜலசார, கேசார, அண்ட கொலைகள், பலவித லாகிரி பாநங்கள் முதலியவைகளை நீக்கிவிடும்படி போதிக்கவேண்டும். ஐரோப்ய தேசங்கள் மதுபாநத்தை விலக்கி விட்டது போலவும், சீனா தேசம் அபினியை விட்டுவிட்டது போலவும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவைகளின் பேரில் விதித்துள்ள தீர்வையை நீக்கிவிடவேண்டும்.

5. மடங்கள் கோவில்கள் எல்லாவற்றிலும் பொறுப்பாளிகளாகிற ட்ரஸ்டிகள் தென்கலை வடகலை வைஷ்ணவர்களும், நம் சார்பினராகிய ஸ்மார்த்த மாத்வ ஸஹோதரர்களுமாய்க் கலந்

திருக்கவேண்டும். விவகாரங்களையும் அதனால் ஏற்படும் கெடுதிகளைத் தடுக்கும் பொருட்டும் ஐக்ய ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

6. நம் ஜாதி விஷயங்களாகிற இஹபர தர்மங்களை அவ்வப்போது ஒன்றுகூடி தர்க்கித்து, தங்கள் தங்களுக்குள்ள கருத்துக்களையும் ஸௌகர்யங்களையும் ஒருவரோடொருவர் கலந்துபேசி, ஒருவரை யொருவர் ஐககண்ட்யம் செய்துகொண்டு நம் மடாதிபதிகளை உத்ஸாகப்படுத்தல்.

7. கோவில் தேவதாஸிகள் விஷயத்தில் ஸுசீலமான ஏற்பாடு செய்தலும், நம் சிறுவர்கள் வேஷமாறுதலும், மமதை யடைவதும், மந்தமும் சோர்வும் படுதலும், பரிஹஸிப்பும் ஆகிற இன்னும் மற்ற துர்நடத்தைகளை மறக்கச் செய்தலும்.

8. திவ்ய க்ஷேத்ரங்களில், நெடுநாள் தேங்கியிருத்தலாலும், பல விதமான அசுசி யடைந்திருத்தலாலும் புனிதம் நீங்கிய திவ்ய புஷ்கரணிகளில் ஆரோக்யத்திற்கு அநுகூலமான ஏற்பாடுகள் செய்தல். இதைப் பாதுகாக்கவேண்டிய கடமை ராஜாங்கத்தாருடையது. பட்டணங்கள் ஒழுங்குபடும்படிச் செய்வதில் மேதாவிகளாகிய கெட்டிஸ், லாங்காஸ்டர் முதலிய கனவான்களை இந்த விஷயத்தைப்பற்றி விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். வட இந்தியாவிற் செய்வதுபோலவே, ஜநங்கள் கைகால் முதலியன சுத்திசெய்வதற்குப் பாத்ரங்களை எடுத்துச் செல்ல தூண்டப்படவேண்டும்.

9. தாரதம்யமின்றி சாப்பாடு போடுவதிலும், உபயஞ் செய்வதிலும், தீய விஷயங்களில் செலவு செய்தலிலும், துர்விநியோகத்திலும் பொது நிதியை உபயோகப்படுத்துவதை நிறுத்தி, கூடுமானால் அவைகளுக்குப் பதிலாக ரொக்கபணத்தைக் கொடுத்து இவ்வித ஏற்பாட்டா லுண்டாகும் தகரார்களை நிறுத்துதல்.

10. (a) கப்பல் யாத்ரை விஷயம், (b) ஜாதி விஷயம், (c) வரசுல்கம் அல்லது சீதனம் இவற்றையும், இவற்றிற்கு ஸம்பந்தமான விவாஹத்திற்குரிய வயஸ் செலவு சடங்குகளாகிய விஷயங்களும், உத்தரக்ரியை அதன் செலவுபற்றிய விஷயங்களும். (d)



ஆரோக்யமான சீர்திருத்தத்திற்கு வேண்டிய ப்ரமாணம் ப்ரமேயம் ப்ரமிதமாகிய மூன்றி லொன்றும் பொருந்துதலில்லாத ஆசார சீர்திருத்தக் கள்வர்களின் இயக்கம் நடத்துவோ ரற்றும் கேட்போ ரற்றும் நசிக்க வாதித்தல். ஜாதி கூடாதென்று கூக்குர லிடுபவர்கள் ஹிந்து மதத்தின் ஜீவாதாரத்தையே நாசமாக்குகி றார்கள். அவர்கள் ப்ருஹதாரண்ய உபநிஷத், ராமநியசரண கபித்யசரண வாக்யங்களுக்கு விரோதியான வேதவிருத்தர்கள். (e) அபக்ஷ்ய பக்ஷணம், மது புகையிலை இவைகளின் விலக்கு. (f) பொறுப்பேற்காத யாசகாவ்ருத்தி (g) ஹிந்து ஸமூகம் மலிந மடையாமல் காப்பாற்றும் பொருட்டுப் பிற மதங்களில் பிரவேசித்தவர்களையும், மதஹீநர்களையும் வைஷ்ணவ சின்னங்களை அணிவித்துத் திருப்புதல். ப்ராம்மணர்களையும் மற்றவர்களையும் ஐககண்ட்யம் பண்ணுவதற்கு வைஷ்ணவம் எவ்வளவு ஸாதகமோ அவ்வளவு இவ்விஷயத்திற்கும் ஸ்ரீ வைஷ்ணவம் மற்றெல்லா விதமான ஹிந்து மதங்களை விட அதிஸாதகமானதாக இருக்கிறது. இந்த விசேஷ சக்தி அதனிடத்துள்ள உபய வேதாந்த லக்ஷணத்தால் ஏற்படுகிறது. (h) ஸம்ஸ்காரங்கள், கோவில்கள், வ்ரதங்கள், உத்ஸவங்கள் முதலியவற்றின் ஆவஸ்யகவிசாரங்கள்.

11. ராமாநுஜனும் தேசிகனும் கூட ப்ரத்யக்ஷ பசு யாகம், அதாவது, நிஜமாக ப்ராணிகளைக் கொன்று யாகம் செய்தது கிடையாது. யாகங்கள் செய்வதற்குப் பதிலாகக் கோவில்கள் கட்டப்பட்டன. இது நம் காலத்திற்குப் போதுமானது. தென்கலையாரும் மற்ற வைஷ்ணவர்களாகிய மத்வர்கள் முதலானோரும் யாகங்கள் செய்யுங் காலத்தில் பிஷ்ட பசு அல்லது தாவர வர்க்கங்களாலான ரூபங்களைப் பர்த்தி செய்யும் வழக்கங்களைக் கைக்கொண்டார்கள். இதர ஜாதியார்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஹிந்துக்கள் ஸாஹஸ பக்ஷிணிகளா யிருத்தல் ஒரு மேலான தர்மமாகக் கொண்டாடுகிறார்கள்; ஆதலால் ஹிந்துக்களுள் மேலானவர்களான ப்ராஹ்மணர்கள் மந்த்ர சக்தியால் யாகம் செய்யப்பட்ட ப்ராணிகள் திரும்பி உயிர் பெற்று எழும்படி செய்யும் ஆற்றலுடைமையாகிய உத்தரவாதத்தின்பேரில் கொலை செய்தலை யாகத்தில் கொலை செய்தலென்பது ஏற்பட்டிருந்தபோதிலும், யாகத்தில் நிஜமாகக் கொலை செய்யும் பழைய வழக்கத்தைக் கைக்கொள்ள இஷ்டப்பட்டார்கள். ஆனால் இந்தப் பாப யுகத்தில்

அந்த சக்தி ப்ரத்யக்ஷமாகிறதில்லை; அது அழிந்துபோய் விட்டது. ஆகையால் நிஜமாகவே கொலை செய்தல் நிறுத்தப்பட வேண்டும். (யாகத்தில்) அவ்வித சக்தி ஏற்படுகிற காலத்தில் நிஜமாகக் கொலை செய்வதைத் திரும்பவும் கைக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அது பாபம். இக்காலத்திற்கு அது ஏற்காது.

12. மடாதிபதிகளைக் குருக்களும் சிஷ்யர்களும் ஏகோபித்துத் தெரிந்தெடுத்தல். இந்த ஸங்கடமான விஷயத்தை இப்பொழுது விவரிக்க அடியேனுக்கு இஷ்டமில்லை.

13. மதத்தையும் ஆசாரத்தையும் தத்வ ஆராய்ச்சி செய்யும் ஒரு பத்ரிகை தனித்தனியாய் ஆங்கிலத்திலும் தமிழிலும் எல்லா வகுப்பினராலும் ஏகோபித்து ஆதரிக்கப்படவேண்டும். இது விலக்கவொண்ணாதது. ஏற்கெனவே 'வேதாந்த தீபிகை' இதற்கு வழிகாட்டியாக வந்துளது. இதனுடன் மதபேதிகள் ஆசாரத்தில் நெருங்கச் செய்தலும், வெளியூர்களில் சென்று போதித்தலும் ஆகிய ஒழுங்குபடுத்து வேலையும் உளது. பாரத தர்ம மண்டலத்தோடு சேர்க்கை வேண்டும். மாதவ செட்டியார் முதலானவர்களின் தர்மங்களை இதனோடு ஒத்து ஆதரணை செய்யும்படி கேட்க வேண்டும். நம்முடைய விஷயங்கள் என்னுடைய சொந்த முயற்சியால் பிறருடைய ஸகாயமின்றி சிறிது செய்யப்பட்டிருப்பது போல ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படவேண்டும்.

14. ஸ்திரீ புருஷர்களுக்கு திவ்ய ப்ரபந்தங்களில் அறிவு ஜநிக்கும்படி ஒருவரோடொருவர் கலந்து பரிமாற காலக்ஷேப கூட்டங்களை வ்ருத்தி செய்து காலக்ஷேப ஸ்வாமிகளையும் அப்படியே உத்ஸாகப்படுத்த வேண்டும். அப்படியே ஹரி கதைகளையும், ஹரி கதை செய்யும் பாகவதர்களையும் உத்ஸாகப்படுத்த வேண்டும். இவைகள் முக்யமாய்ப் பெண்களுக்கு மிக்க உபயோகத்தை உண்டு பண்ணக்கூடிய கல்வி ஸங்கங்கள். நல்லொழுக்கத்தைப் போதித்து, வ்ருத்திசெய்து, அப்யாஸத்துக்குக் கொண்டுவரக் கூடியதென்று ஆழ்ந்து எண்ணக்கூடிய பெண் கல்வி இவ்விடங்களில் தான் இருக்கிறது. இவ்வெண்ணங்களை முற்கொண்டே ஒவ்வொரு கோவிலையும் மடத்தையும் ஒட்டி ஒவ்வொரு காயன பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படவேண்டும்.



15. முக்யமான கோவில்களிலும், மடங்களிலும் மற்ற ப்ரஸித்திபெற்ற விடங்களிலும் வைஷ்ணவர்களின் வருஷாந்தர ஸங்கங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

16. உள்நாடுகளிலும் க்ராமாந்தரங்களிலும் தங்கள் கார்யங்களைக் கூடுமான வரையில் தங்கள் இஷ்டப்படி நிர்வஹிக்கப் போதுமான வஸதி பெற்ற ஸங்கங்கள் ஒரு ப்ரதாந ஸங்கத்தால் நடத்தப்படவேண்டும்.

17. பெங்களூரிலுள்ள ஸ்ரீநிவாஸ மந்திரம் போன்ற ஏழைப் பிள்ளைகளுக் கென்ற கலாசாலைகள், ஒவ்வொரு கோவில் மடம் முதலியவற்றை ஒட்டி ஒவ்வொன்று ஏற்படவேண்டும்.

அடியேன் உபந்யாஸத்தை முடிக்கின்றேன். வைஷ்ணவம் அந்தரங்கத்தில் அதன் ஸகல சாகைகளிலும், நோக்கத்திலும் பொது வ்யாபகமுள்ளதாயிருக்கிறது. அதன் ப்ரதம கிளையாகிய பௌத்த மதம் அதினின்று பிரிந்தது. பஹிரங்கமாகக் கிறிஸ்தவம் மகம்மதியம் ஆகிய இரண்டு முக்ய மதங்களும் ஒன்று சேர்ந்து தங்கள் தங்கள் குறை நிரப்பியவிடத்து வைஷ்ணவத்தின் ஸர்வ வ்யாபகம் காணப்படும். "ஜலங்களின் பேரில் வ்யாபித்திருக்கின்ற ஆவி" என்று பைபிலில் சொல்லியிருப்பது, நாராயணன் அல்லது விஷ்ணு என்ற பதத்தினால் குறிப்பிடப்பட்ட உண்மையே கொரானில் ப்ரதிபாதிக்கப்பட்ட பொருளின் பெயர் "தீநதயாபரவஸ்து" என்ற பொருளமைதியுடையது. அது ஸ்ரீ என்ற பதத்தை ஒத்திருக்கிறது. இரண்டு பதங்களும் சேர்ந்து ஸ்ரீ வைஷ்ணவ மாகிறது. ஹிந்து ஸமூகங்கள் மாத்திரமல்ல; உள் நாட்டு பௌத்தர்களும், வெளிநாட்டு கிறிஸ்தவர்களும், மஹம்மதியர்களும் கூட ஸர்வமயமாகிய ஸ்ரீ வைஷ்ணவம் தங்கள் தங்களுடையதாகக் கொண்டாடக் கூடும். ஜொராஸ்டிரிய மதத்திற்கும் வைஷ்ணவ மதத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை அதற்கென்றே எழுதிய ஒரு தனிப் புஸ்தகத்தில் அடியேன் விளக்கி யிருக்கிறேன். ஸ்ரீ வைஷ்ணவர்களின் பலம் இப்படி யிருக்கையிலும், அவ்வைஷ்ணவத்தின் ஸர்வ வ்யாபகத்வமும் ஸர்வ தேசாபிமாநமும் இவ்வாறு இருக்கையிலும், அதைக் கையாள்வோராகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்கள் சில்லரைக் குடும்பச் சண்டைகளையும், மாத்ஸர்யத்தையும் பொதுச்சண்டைகளாக உருவகப்படுத்தி

வெளியிட்டு, அந்த ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு அபகீர்த்தி யுண்டு பண்ணிவிடுகிறார்கள். அப்படிச் செய்வது கூடாது. சைவத்திற்கிடையே வைஷ்ணவத்திற்கு ஸர்வ வ்யாபகத்வம் எப்படி யுண்டாகுமென்று கேட்கலாம். 'ஶிவஶ்ச நாராயண:' என்ற உபநிஷத் வாக்யமே அதற்கு உத்தரம். இது ஸகல தர்க்கத்திற்கும் வாய்ப்பூட்டிடும். வைஷ்ணவத்தைத் தழுவியதாகிய சைவர்களின் தத்வ சாஸ்த்ரத்தைப் பற்றிய வரையிலும் கூட சைவர்கள் நமக்கு மிகவும் நெருங்கிய ஸ்நேகிதர்கள். "தாழ்சடையும்........இரண்டுருவு மொன்றாயிசைந்து" என்ற பேயாழ்வார் அருளிச்செயலும் இவ்விடத்தில் பொருத்த முடையது.

யோகி யாமுனாசார்யரின் ப்ரஸித்தி பெற்ற ச்லோகமாகிய 'ஸ்வாபாவிகாநவதிக' இத்யாதி ஸ்தோத்ரரத்நத்தைக் கொண்டு வைஷ்ணவத்தின் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலத்தையும் பற்றிய இந்த விஷயத்தை முடித்தல் தகுதி. இப்படியாக இந்த மூன்று தினங்களிலும் வைஷ்ணவத்தின் முன் பின் வரலாறுகளைக் கூடிய அளவு போதுமானபடி சொல்லியிருக்கிறதாக நம்புகிறேன். முடிவுரையாக சிலவற்றைச் சொல்லத் தொடங்குகிறேன்.

தியஸாபிஸ்ட்களுடைய 'ஒயிட்லாட்ஜ்' என்பது 'பதரி' அல்லது 'நர நாராயணாச்ரமம்' தவிர வேறொன்றுமல்ல வென்றும், அந்த லாட்ஜின் நர நாராயண நாரதாதிகள் பூமியில் ஸர்வ ஸமரஸமான மதத்தைத் தியஸாபிகல் ஸொஸைடி மூலமாக ஸ்தாபிக்க மேற்கொண்ட மஹாத்மாக்களே என்றும், ப்ரஸித்தி செய்கிற இஸாடரிக் ஆர்க்கனைஸேஷன் (Esoteric Organisation) என்ற விஷயத்தைப்பற்றி ஸர். எஸ். ஸுப்ரம்ஹண்ய அய்யர் அவர்கள் 1915௵த்திய தியாஸபிஸ்டஸ் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாத ஸஞ்சிகைகளில் எழுதியுள்ள விஷயதாநங்களுக்கு, வைஷ்ணவத்தின் ஸர்வ வ்யாபகத்தை உத்தேசித்து, உங்கள் கவனத்தைச் செலுத்தும்படி வேண்டுகின்றேன். இந்த ஸர்வ வ்யாபக ஒயிட்லாட்ஜுக்குப் பாரத தர்ம மஹா மண்டலம் அதன் அதிச்லாக்ய கவனத்தைச் செலுத்துகிறது. 'ஸ்ரீ' யைப் பற்றி அடியேன் எழுதிய விஷயம் தற்செயலாய் ஸர். ஸுப்ர



ஹ்மண்ய அய்யரால் எழுதப்பட்ட விஷயத்திற்கு அடுத்தாப்போலேயே ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்ற விஷயத்தின் ஸர்வவ்யாபகப் பொருளை உணர்த்துகின்றது. ஆகவே நீங்கள் ஸ்ரீ வைஷ்ணவமதம் என்ற பெயரால் ப்ரஸித்தி பெற்ற ஸநாதந மதத்திற்கு ஸ்வதந்த்ரவாதிகள். அந்த ஸ்ரீ வைஷ்ணவம் ஸர்வ ஜனங்களிடத்தும் சாந்தம், நல்லெண்ணம், ஸ்நேகம் ஆகிய இவற்றைக் கற்பிக்கிறது. அந்த ஸர்வ ஜநங்களும் ஸர்வ வ்யாபகியும் ஒரே கடவுளுமாகிய விஷ்ணுவினிடத்து அதாவது ஸ்ரீ வைஷ்ணவம் ஜநிக்கிற 'ஸ்ரீ விஷ்ணு' என்றும் ஒரே தாய்தந்தையராகிய கடவுளருக்குப் பிறந்தவர்கள். நீங்கள் உங்கள் கொள்கைகளுக்கும், பழக்கங்களுக்கும் விரோதமாய் நடக்காதீர்கள்! அந்த ஸநாதந ஆவியானது நம் எல்லாரிடத்தும் பரிணமிக்கட்டும்.

ஸ்ரீ வைஷ்ணவ மதத்தினிடத்தில் ஸர்வ ஸாமாந்ய தோற்றம் ஒன்று மாத்ரமே யன்றி அது மனிதனுடைய அந்தரங்கத்தில் கிளம்புகிற ஆத்மார்த்தமான பசியையும் ஆற்றும் சிலவிதங்களிலும் ச்ரத்தை யடைந்திருக்கிறது. இப்படி அது உலகத்தில் பரதத்வ நிர்ணயத்திற்கு ஏராளமாய் உதவுகிறது. இதுவுமன்றிக்கே, இந்தியாவில் ஆர்யர்கள் த்ராவிடர்கள் ஆகிய இருதிறத்தார் நாகரிகத்தையும் ஒருமிக்க கலந்த ஒப்பற்ற பெருமையையும் அது அடைந்திருக்கிறது. இன்னும் அது உலகத்திலுண்டான வெவ்வேறு மதங்களையும் ஒன்றும்படி செய்யும் ஆதாரங்களையும் உடைத்தாயிருக்கின்றது. எப்படியிருந்தபோதிலும் ஸமீபத்திலிருக்கிற உலக ஸம்பந்திகளான நாம், நம்முடைய வீட்டை சீர்படுத்தக் கூடுமானால், தூரத்திலும் ஸமீபத்திலுமுள்ள நம் அயலார்களுக்குள் நம் நல்லெண்ணத்தைப் பரவச்செய்யலாம். 'ஒரே உள்ளங்கையினின்று முளைத்திருக்கிற இரண்டு பக்க விரல்கள்' என்று சொல்லும்படியாயுள்ள கிறிஸ்தவர்களிடம் ஒரு பக்கத்திலும் மஹமதியர்களிடத்தில் மற்ற பக்கத்திலும் ஸ்நேகிக்க வேண்டுமானால் நாம் ஒருவருக்கொருவர் உதவி யுள்ளவர்களா யிருக்க வேண்டும். ஒருவரை யொருவர் விரோதிக்கக் கூடாது. வாய்த்த ஒவ்வொரு ஸமயத்தையும் கைநழுவ விடாமல், என்னுடைய ஸ்நேகிதர்கள் ஒவ்வொருவரிடத்திலும் அவர்கட்கு எவ்வித கஷ்டம் வந்தாலும், அவர்கள் கவனித்தாலும், திரஸ்கரித்தாலும்,

நான் போதிப்பது ஸமாதாநமே. இரண்டு ஸமயத்தினர்களின்றும், உண்மையாய் உழைக்கும் ஒரு கூட்டத்தார் இந்த உண்மையான சீர்திருத்தத்தை வ்ருத்திசெய்ய எனக்குத் துணையாக நான் பெறுவது நிச்சயம். தென்கலை வடகலை இணக்கம் இயலாதது என்று நினைக்கிறார்கள். அது எப்படி இருக்கிறதென்றால் ஒரு பக்கத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிந்த ஒரு நதியானது மற்ற பக்கத்தில் மறுபடி ஒன்று சேராது, என்று சொல்வதுபோலிருக்கிறது. உலக முழுதும் விவகாரப்பட்டு மாறுபாடடைந்து கொண்டிருக்கும்பொழுது வீட்டிலுள்ள சிறு வித்யாஸங்களைப் பாராட்டுவது துக்கத்தை உண்டுபண்ணுகிறது.

வைஷ்ணவம் ஒரு ஸமயத்தினர்க்கு அடுத்த மதமாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஒரு ஸமயத்தினர்க்கு உரித்தான மதமாயிருத்தல் குற்றமாயின், இந்தியாவிலும் மற்ற தேசத்திலுமுள்ள வைஷ்ணவத்திற்குப் புறம்பான மற்றெல்லா மதங்களும் ஒரு ஸமயத்தினர்க்கு உரியதல்லாத மதங்களென்று நம்மால் நிரூபிக்கக்கூடும். ஒரு விதமான அறிவில் மாத்திரமே தேர்ச்சி யடைந்தது எதுவோ, அது, ஒரு ஸமயத்தினர்க்கு உரிய மதம் என்பது, என்று பொருள்படுத்தும்பொழுது வைஷ்ணவ மதம் அத்தகையதாகும். ஏனெனில், வைஷ்ணவமானது ஸாதாரண வைதிக மதத்தின் இதர கிளைகளாகிற மதத்தின் கொள்கைகளைத் தழுவாது ஒரு சார்பான ஸநாதந தர்மங்களின் மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தேவர்களால் சொல்லப்பட்டதென்றோ அல்லது அநுபவ ஸித்தாந்தமென்றோ கொள்ளும்பொழுது, வேதங்கள் அதி புராதந ஆதரவுகளென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அடியேனுடைய முதல் நாள் உபந்யாஸத்தில், எல்லா உலக விவஸாய நூல்களும் வேதத்தினை மூலாதாரவாகக் கொண்டனவென்று காட்ட ப்ரயத்நப்பட்டேன். ஆகையால் நாம் சொல்லுகிறபடி இந்தியா தேசத்தில் வைதிக பாஷையில் பாரத தர்மம் அல்லது பாரத்திரிய தர்மமென்று ப்ரஸித்தி பெற்ற ஸநாதந தர்மமாகிய ஜீவாத்மா பரமாத்மாவின் உண்மைகள் வேதங்களில் அடங்கியிருக்கின்றன. வைதிக மதத்தை மிக்க ப்ரதிபாதிக்கின்றது வைஷ்ணவமே என்று நாம் நம்புகின்றோம். வைஷ்ணவ மதத்தின் ஸாதாரண கொள்கைகள் ஆதியோடந்தமாய் முன்னமேயே ஒருவாறு விவரிக்கப்பட்டன. வைஷ்ணவத்திற்குரிய சில தத்வங்களின் விசேஷ உற்பத்தி எத்தன்மையதென்று இச்சமயத்தில் குறிப்பிட முடியாது. அதற்கு



வேறு ஸமயம் வேண்டும். ஆங்கிலேயத்தில் அடியேனால் அநேகம் சொல்லப்பட்டு ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. வாசிக்க ப்ரியமுள்ள யாவரும் அவைகளைப் பொறுக்கி எடுக்கக்கூடும். ஆனால் வைஷ்ணவ மதத்தின் இரண்டு முக்ய சாயல்கள் ரஹஸ்யங்களல்ல. உத்தர தேசத்து ஆர்யரும், தக்ஷிண தேசத்து த்ராவிடரும் கொண்ட வித்யாஸப்பட்ட இரண்டு வகையான ஹிந்து நாகரிகத்தால் ஏற்பட்ட தத்வஜ்ஞாந பரமானதும் மதஸம்பந்தமானதுமான கருத்துக்களை அது ஒன்றுபடுத்தியிருக்கிறது. இச்சேர்க்கை காரணமாகவே, ஆர்ய வர்ணாச்ரம கொள்கைகளும் அநுஷ்டாநங்களும் அழியாமல் காப்பாற்றப்பட்டு, ஹிந்து ஸமூகத்தினர்களுள் ப்ராஹ்மணர்களும் இதரர்களுமாகிய எல்லாரும் ஒருப்படியாய் அன்றிக்கே, ப்ராம்மணர்களை விட மற்றவர்கள் அதிகமாகவே மோக்ஷத்திற்கு அர்ஹர்களாக ஏகோபித்துச் சேருகின்றார்கள். வைஷ்ணவம் இப்படிப் பொதுவாயிருக்கையில், அது குடும்பத்தில் ஒழுங்கின்மையையும் மயக்கத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை. ஜாதியாலும் வர்ணத்தாலும் அல்லது தேசத்தாலும் ஏற்படும் பல வித்யாஸங்களை எண்ணாது எல்லாரும் வைஷ்ணவம் என்ற ஒரு கொடிக்கீழ் கூடலாம். மேலும் ஏற்கெனவே உள்ளவைகள் மாறுதலடைவதில் விருப்பும் வெறுப்புங்கொள்ளுகிறவர்களுடைய மதங்கள் வைஷ்ணவ மதத்தில் ஒத்துக் கூடியிருக்கின்றன. வடபாகத்தை ப்ரபலிக்கச் செய்யும் பாரத தர்ம மஹாமண்டலமென்கிற சுத்தமான ஆர்யத்தைவிட, தெற்கில் மதத்திலும் ஒழுக்கத்திலும் ஜநங்களை வ்ருத்தியடையச்செய்கிற சக்தியும்கூட அதற்கு இருக்கிறது. பாரத தர்ம மண்டலத்தின் கிருத்யங்களையும் தன்னுள் ளடக்கிக்கொண்டு வைஷ்ணவம் பாந்து கிடக்கின்றது. நாம் இவ்விடத்தில் கூடி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிற இச்சமயத்தில் தற்செயலாய் மண்டல ஸபா நாயகரும் தெற்கே யாத்திரை செய்ய நேரிட்டிருக்கிறது. அச்சபையின் ப்ரதிநிதியாகிய அடியேன் இவ்வித ஸஞ்சாரத்தை அநேக வர்ஷங்களுக்கு முன்னமேயே குறிப்பிட்டிருந்தது மல்லாமல் ஒவ்வொரு வர்ஷமும் வற்புறுத்திக்கொண்டுமிருந்தேன். அது இப்பொழுது நிறைவேறியது. இது முதல் முக்யவிஷயங்கள் நடைபெறுவதை நாம் எதிர்பார்க்கலாம். ஒரு வைஷ்ணவன் வடக்கே யாத்திரைசெய்து, வைஷ்ணவம் ஒரு சார்பினருக்கே உரியதாயினும் பல மதகொள்கைகளையும்

தழுவி தன்னுள்ளடக்கி அதற்கு மேலும் பிரகாசித்துப் பரவியிருக்
கின்றதை வெளிப்படுத்த இதுதான் சமயம். அப்பொழுது தான்
ஒற்றுமையும் ஒப்புரவும் உண்டாகும். வைஷ்ணவ ஸமயத்தின
ரின் விசேஷமான சில வெளி அநுஷ்டானங்களில், வைஷ்ணவ
மதம் ஒருசார்பினர் மதம் என்றதன் கண்டிதமானதும் பிசகுள்ளது
மான பொருள் அடங்கியிருக்கிறது. ஆனால் அவ்வகை அநுஷ்
டானங்கள் உலக முழுதும் பல ரூபங்களில் காணப்படுகின்றன.
வைஷ்ணவத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள ஸநாதந தர்மங்களைப்
பற்றியும் அவைகள் சில வழிகளில் விசேஷமாக விவரிக்கப்பட்டி
ருக்கின்றதைப்பற்றியுமே, வைஷ்ணவம் ஒருசார்பினர் மதமென்றது
குறிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் அவை
கள் தத்வ ஆராய்ச்சியைச் சார்ந்தவை. லௌகிகம் அல்லது அஸத்
துக்களில் தனித்தகுறிகளும் குணங்களும் பெரும்பாலும் ப்ரகா
சிக்கின்றன. அவை ஒரு சார்புடையதாகின்றன. விசேஷ ஜ்ஞா
னிகள் அதைத் தெரிந்து பாமர ஜநங்களுக்குப் பொறுமை, ஸமா
தாநம், ஒற்றுமைபோன்ற எல்லாராலும் ஒப்புக்கொள்ளத்தக்க
கொள்கைகளை உதாரணமாகக் காட்டி அதை விவரிக்கவேண்டும்.

வைஷ்ணவ மதம் என்று சொல்லப்பட்ட ஆத்ம விசாரணை
யில் அடியேன் எடுத்துக்கொண்ட உபயோககரமான பாகத்தை
முடிக்கிறேன். மாந்த்ரீகத்தால் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்
ஆகுமா? அல்லது ஒரு ஆயுதவலகு இருக்கிற விடத்தில் இரண்டு
உண்டு பண்ணுமா? இதற்கு உத்தரம், இவையும் இவற்றிற்கு அதிக
மானவையும் சேதநனின் வைராக்யத்தை அல்லது ஆத்மஜ்ஞாநத்
தைப் பொறுத்திருக்கின்றது. இதை அடைவதே எல்லா மதத்தின்
எண்ணம். சேதநன் தர்மத்திலும் மதத்திலும் அழிவடையும்
பக்ஷத்தில் ஒன்றிற்குப் பதிலாக ஆயிரம் ஆயுத வலகுகளும் ஆயிர
ரூபாய்களும் இருந்தாலும் ப்ரயோஜனமில்லை. ஆகையால் தன்
னிடத்தில் குறைகள் அநேகம் இருந்தபோதிலும், மதமானது சே
தநனைப் பரிபூரணத்துக்கு முக்கியமாய் ஸர்வஜ்ஞத்துவமாகிய
ஆத்ம உஜ்ஜீவநத்தையும் அடைவிக்கக் கருதுகிறது. அம்மதம்
கெடாதிருந்தால் ஒழுக்கம் நீதிக்குத்தக்கபடி இம்மை மறுமை
ஸுகங்களுக்குண்டாகும் அழிவைத் தடுக்கிறது. ஜீவாத்மா பர
மாத்மாவை ஜயிக்கக்கூடுமானால் அது இக பர ஸௌக்ஷ்மமாகிய
ஒவ்வொன்றையும் ஜயித்திருக்கும்.



திருமங்கையாழ்வார் ஸாதிக்கிறதுபோல் "செல்வம் தரும்."
நாம் அடையவேண்டிய வழி இதுதான் என்று நாம் கருதியிருக்
கிறவரையில் மதத்தை எந்தப் பெயரால் வழங்கினால் என்ன?
வைஷ்ணவமென்றாலும் அல்லது வேறொன் றென்றாலும் சரியே.
மதத்தைப்போல் அவ்வளவு உறுதியாக ஆத்மாவுக்கு வைராக்யத்
தையும் ஒழுக்கத்தையும் தரக்கூடியது எதுவுமில்லை. ஜீவன் தன்
இருப்பின் முடிவைப்பெற புண்ணியம் இன்றியமையாத முஸ்தி
ப்பு. ஆனால் மதம் பொய்யும் பிசகுமானதா யிருப்பின், சேதநன்
தான் பிறந்ததுமுதல் அதை அநுஸரித்து அதுமுதல் எக்காலமும்
அதை விடாது தொத்திக்கொண்டிருப்பது அதிசயிக்கத்தக்கதே.
மதத்தின் ப்ரயோஜனத்திற்கு இது ஸாக்ஷ்யமாகவும், அது எந்த
ஸங்கதியைக் கற்பிக்கவந்ததோ, அந்த விஷயத்தில் நம்பிக்கை
யை உண்டுபண்ணக் கூடியதாகவும் இல்லையாகில், அது வேறு
என்ன விதமாக இருக்கவேண்டு மென்று என்னைப் பொறுத்த
மட்டில் நான் அறியக்கூடவில்லை. ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவ
ஸித்தாந்த ஸபையென்ற புதுப்பெயர் படைத்துத் தன் எண்ண
த்தை அபிவ்ருத்தி செய்துவருகிற இந்த ஸங்கத்தை ஸ்தாபித்த
தில் செலவிட்ட காலமும் முயற்சியும் பொருளும் நமக்குப் பய
ன்படா தொழியவில்லை யென்று நான் நினைக்கின்றேன்.

ஆகையால் எல்லா மடாதிபதிகளுக்கும், மஹாராஜாக்களுக்
கும், பல ஸங்கங்களுக்கும், ஸமாஜங்களுக்கும், அநேக தர்மரக்ஷண
ஸபைகளுக்கும், கீர்த்தி வாய்ந்த கனவான்களுக்கும், பாரத தர்ம
மண்டலம், ப்ரஹ்மஜ்ஞாநஸபை, பௌத்த ஸங்கம் முதலான
ஸபையினருக்கும், எல்லா கவரன்மெண்டுகளுக்கும், இவ்வர்ஷத்
தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில் நிகழ்ந்த விஷயங்களைப்
பரக்க ப்ரசுரித்து அறிவிக்கவேண்டும்.

# த்ரிதசாலயம்.

(தொடர்ச்சி.)

தேவர்கள் மறைந்த பிறகு அர்ஜுநன் தேவராஜ ரதத்தை ஸ்மரித்தான். உடனே மாதலியால் ஸாரத்யம் செய்யப்பட்ட அந்த ரதம் தர்சநபதத்தை யடைந்தது. ஆகாசத்தில் கோடி ஸூர்யோதயம் ஆனதுபோல் ஸர்வ திக்குகளையும் ப்ரகாசிப்பித்தது. ஸர்வாயுதங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்தீவரச்யாமமானதும், மஹா ப்ரகாசத்துடன் கூடியதுமான வைஜயந்தமெனும் கொடி விளங்கும்படி அந்தத் திவ்யரதம் அர்ஜுநன் நின்றவிடம் வந்து சேர்ந்தது. உடனே மாதலி "ஓ சக்ராத்மஜ! சக்ரன் உன்னைப் பார்க்க இச்சிக்கின்றார். ஸர்வ ஸ்வர்க்கவாஸிகளும் உன்னைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகின்றார்கள். தேவர்ஷி கந்தர்வ அப்ஸரஸ்ஸுக்களால் சூழப்பட்டவராய் மஹேந்த்ரன் உனது வரவை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறார். ஆதலால் ரதத்தில் ஆரோஹணம் செய். ஸ்வர்க்கத்தில் ஸர்வாஸ்த்ரங்களையும் ஸம்பாதித்துக்கொண்டு திரும்புவாய்" என்று அர்ஜுநனைப் பார்த்துச் சொன்னான்.

அர்ஜுநன், "மாதலே! நூறு ராஜஸூய அச்வமேத யாகங்கள் செய்தவர்களும், மற்ற தேவர்களும், தபஸ் அற்றவர்களும், இந்த ரதத்தைத் தர்சிக்கவாவது ஸ்பர்சிக்கவாவது ஆரோஹணம் செய்யவாவது அர்ஹர் அல்லர். நீர் ரதத்தின்மீது உட்காரும். பிறகு நான் ஏறுகின்றேன்" என்று சொன்னான்.

பிறகு அர்ஜுநன் ஸந்தோஷத்துடன் கங்கையில் ஸ்நாநம் செய்து, நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு, பித்ரு தர்ப்பணம் செய்துவிட்டுத் தான் அதுவரையில் வஸித்த மந்தரகிரியைப் பார்த்து, "ஸ்வர்க்க மார்க்கத்தைத் தேடுகின்ற ஸாதுக்களாயும் புண்ய சீலராயு மிருக்கின்ற முநிகளுக்கு நீ எப்போதும் ஆச்ரயமாயி



ருக்கின்றாய். ஓ பர்வத ச்ரேஷ்ட! உன்னிடம் ஸுகமாக வாஸம் செய்தேன். இப்போது உன்னிடம் விடைபெற்றுக்கொள்கின்றேன். உன்னுடைய தாழ்வரைகளையும், குகைகளையும், நதிகளையும், மலையருவிகளையும், புண்ய தீர்த்தங்களையும் பலதரம் தர்சித்தேன். அங்கங்கே மதுரமான பழவர்க்கங்களைப் பக்ஷித்தேன். உன்னிடம் அங்கங்கே ஸ்ரவித்த அம்ருததுல்யமான ஜலங்களைப் பாநம்செய்தேன்" என்று மொழிந்தான். பிறகு இந்த்ரரதமேறினான். ஆகாசமார்க்கமாய் அந்த ரதம் சென்றது. ஸுரவீதியென்று க்யாதி பெற்ற நக்ஷத்ர மார்க்கமாய் அர்ஜுநன் சென்றான். முடிவில் அர்ஜுநன் தேவேந்த்ரனுடைய அமராவதியெனும் நகரத்தைத் தர்சித்தான். அது ஸித்தசாரணர்கள் பூஜிக்கும் நகர். மஹா தபஸ்விகளும், ஸித்தியடைந்த ராஜர்ஷிகளும், யுத்தங்களில் இறந்த சுத்த வீரர்களும் அடைந்த நகர். மஹர்ஷிகள், கந்தர்வர், அப்ஸரஸ்ஸுகள் வாஸஞ்செய்யும் நகர். எல்லா ருதுக்களிலும் மலர்கின்ற புஷ்பங்கள் எக்காலும் அங்கே மலர்கின்றன. புண்ய வ்ருக்ஷங்களால் அந்நகர் சூழப்பட்டது. புஷ்ப கந்தத்துடன் வாயு அங்கே எப்போதும் ஸஞ்சரிக்கும். அப்ஸரஸ்ஸுகள் விளையாடும் நந்தநமெனும் உத்யாநவநம் அவ்விடம் உளது. தபஸ் செய்யாதவர், அநாஹிதாக்நிகள், யுத்தத்தில் ஓடிப்போனவர், யஜ்ஞம் செய்யாதவர், வ்ரதமற்றவர், வேதச்ரவணமற்றவர் இவர்கள் புண்யவான்களால் அடையப்பட்ட அந்த நகரத்தைக் காணமாட்டார்கள். ஆதலால் யஜ்ஞநாசம் செய்கின்றவர்களும், தாநம் செய்யாதவரும், க்ஷுத்ரர்களும், குடியர்களும், மாம்ஸபோஜநம் செய்பவர்களும், துராத்மாக்களும் அந்நகரத்தைக் காணமாட்டார்கள். அங்கே அர்ஜுநன் எண்ணிறந்த விமாநங்களைக் கண்டான். நகரத்தில் ப்ரவேசித்தவுடன் அவனைக் கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் ஸ்தோத்ரம் செய்தார்கள். தேவர்களும், ஸித்தர்களும், பரமர்ஷிகளும் அவனை ஆசீர்வதித்தார்கள். திவ்ய வாத்யங்கள் வாசிக்கப்பட்டன. சங்கங்களும் துந்துபிகளும் முழங்கின. ஸாத்யர், விச்வதேவர், மருத்துக்கள், அச்விநி தேவர்கள், ஆதித்யர், ருத்ரர்கள், வஸுக்கள், நிர்தோஷரான ப்ரஹ்மர்ஷிகள், திலீபன் முதலான ராஜர்ஷிகள், தும்புரு, நாரதர், ஹாஹா ஹூஹூ எனும் கந்தர்வர்கள், இவர்கள் அனைவருடனும் விதிப்படி அர்ஜுநன் ஸமாகமம் செய்தான்.

பிறகு வெண் குடையின் கீழ், அழகிய பொன்தண்டத்துடன்
கூடித் திவ்ய கந்தத்தை வீசுகின்ற வெண்சாமரம் வீசப்படவே,
விச்வாவஸு முதலான கந்தர்வர்கள் ஸ்தோத்ரம் செய்யவும்,
மூன்று வேதமறிந்த ப்ராஹ்மணர்கள் வேதஸூக்தங்களால் ஸ்து
திக்கவும் நின்ற பாகசாஸநனை அர்ஜுநன் கண்டான். அவரு
டைய திருவடிகளின் கீழ் தலைவணங்கினன். இந்த்ரனும் தம்மு
டைய பருத்த தோள்களால் அர்ஜுநனை எடுத்து ஆலிங்கநம்
செய்து, கைபிடித்து அழைத்துக்கொண்டு போய், தேவர்ஷி பூஜி
தமான தம்முடைய ஆஸநத்தின்மீது தமது பக்கத்தில் உட்கார
வைத்தனர். விநயத்துடன் வணங்கி நின்ற அர்ஜுநனை இந்த்ரன்
தமது மடியின்மீது உட்காரவைத்து உச்சிமோந்தனர். அவன்
முகத்தைப் பலதரம் பார்த்தனர். அவன் புஜங்களைத் தடவிக்
கொடுத்தனர். அப்போது அர்ஜுநன் இரண்டாவது இந்த்ரனைப்
போல் ப்ரகாசித்தான். இருவரும் அவ்வாஸநத்தின்மேல் ஸூர்ய
சந்த்ரர்போல் ஸபையெல்லாம் விளங்க ப்ரகாசித்தார்கள். பிறகு
கந்தர்வர்கள் காநம் பாடினார்கள். க்ருதாசீ, மேநகா, பூர்வசித்தி,
ஸ்வயம்ப்ரபா, ஊர்வசீ, மிச்ரகேசீ, தண்டகௌரீ, வரூதிநீ, கோ
பாலீ, ஸஹஜந்யா, கும்பயோநி, ப்ரஜாகரா, சித்ரலேகா, சித்ர
ஸேநா, ஸஹா, மதுரஸ்வநா முதலான அப்ஸரஸ்ஸுகள் நர்த்
தநம் செய்தார்கள். இவ்வண்ணம் சிலகாலம் கழிந்தது.

பிறகு இந்த்ரனுடைய அபிப்ராயமறிந்த தேவகந்தர்வர்கள்
அர்க்யபாத்யாசமநீயங்களால் அர்ஜுநனைப் பூஜித்துப் புரந்த
ரன் நிவேசநத்திற்கு அழைத்துப்போனார்கள். அங்கே பல்குநன்
பகுகாலம் வாஸம்செய்தான். அநேக அஸ்த்ரங்களை அவற்றின்
ஸம்ஹார மந்த்ரங்களுடன் இந்த்ரனிடம் க்ரஹித்துக்கொண்
டான். அவரிடம் வஜ்ரம் அசநீ முதலான ஆயுதங்களையும் பெற்
றுக்கொண்டான். இவ்வண்ணம் ஐந்து வர்ஷங்கள் சென்றன.
அப்போது பார்த்தன் தன்னுடைய ப்ராதாக்களை ஸ்மரித்தான்.
அப்போது இந்த்ரன் பின்வரப்போகின்ற கார்யங்களை உத்தே
சித்து, சித்ரஸேநனெனும் கந்தர்வராஜனைக் கொண்டு அர்ஜுந
னுக்கு தேவலோக ந்ருத்ய கீதங்களைக் கற்பித்தான். அவற்றின்
ஜ்ஞாநம் பூலோகத்தில் இல்லை. இப்படிச் சித்ரஸேநனுடைய
ஸஹாயத்தை யடைந்து ஸந்தோஷிக்கக் காரணங்கள் இருந்தும்
விஜயனுக்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதர்ம த்யூதத்தால்



தாம் ராஜ்ய மிழந்து வநவாஸம் பண்ணுகிறதையும், துச்சாஸ
நன் சகுநி இவர்களுடைய துர்வ்ருத்தங்களையும் ஸதா நினைத்து
நின்றான். ஆனாலும், அந்யத்ர கிட்டாத காந்தர்வ ந்ருத்யவித்யை
யும் காநவித்யையும் கற்றுச் சிலகாலம் களிப்புற்றான்.

பின்காலம் அவனுடைய நன்மையைக் கருதி, இந்த்ரன், அவ
னுக்கு ஊர்வசியெனும் அப்ஸரஸ்ஸினுடைய சாபத்தையும் ஸம்
பாதித்துத் தந்தான். அப்ஸரஸ்ஸுக்களுடைய நர்த்தந காலம்
ஒன்றில், பார்த்தன் கண்கள், ஊர்வசியினிடம் நிலைத்ததைக் கண்டு,
இந்த்ரன் சித்ரஸேநனைக்கொண்டு ஊர்வசி அர்ஜுநனை உபசரிக்
கும்படி ஆஜ்ஞாபித்தனன். ஊர்வசி, முன்பே அர்ஜுநனிடம் இச்
சைகொண்டவள். சித்ரஸேநன் வசநத்தைக் கேட்டு ஸந்தோஷங்
கொண்டாள். தன் சரீரத்தை நன்றாக அலங்கரித்துக்கொண்டு
அன்றிரவு அர்ஜுநன் நிவேசநத்துக்குச் சென்றனள். அப்போது
அவள் சௌந்தர்யாலங்காரங்களைப் பற்றியும், கமந வைசித்ரி
யத்தைப்பற்றியும் மஹாபாரதத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டு
இருக்கின்றது. அவள் வரவை த்வாரஸ்தர்கள் அர்ஜுநனுக்குத்
தெரிவித்தார்கள். அர்ஜுநன் சங்கித்தவனாய்க்கொண்டு அவளை
எதிர்கொண்டான்; தர்சித்தான்; லஜ்ஜைகொண்டு கண்களை
மூடிக்கொண்டான்; அவள் பாதங்களில் வணங்கினான்; அவளைக்
குருஜநமாக் வெண்ணிப் பூஜித்தான். "உனக்கு அபிவாதநம் செய்
கின்றேன். தேவி! நான் உனக்கு ப்ரேஷ்யன். என்ன ஆஜ்ஞாபிக்
கின்றாய்" என்றனன்.

"ஓ நரச்ரேஷ்டனே! ஸர்வதேவர்களும் ருஷிகளும் கூடிய
மஹேந்த்ர ஸபையில் திவ்யகாநம் வளரவும், அப்ஸரஸ்ஸுகள்
ஆடவும், நீ என்னையே பார்த்துக்கொண்டிருந்தாய். பின் மஹேந்
த்ரன் ஆஜ்ஞையால் நான் உன்னிடம் சுச்ரூஷை செய்ய வந்
தேன். அவருடைய இஷ்டத்தையும், என்னுடைய இஷ்டத்தை
யும் நீ பூர்த்தி செய்வாயாக. உன்னுடைய குணங்கள் என் மநஸ்
ஸைக் கவர்ந்தன. பகுநாளாக உன்னிடம் நான் காமங்கொண்ட
வள்" என்று அர்ஜுநனைப்பார்த்து ஊர்வசி சொன்னாள்.

உடனே அர்ஜுநன் தன் செவிகளைக் கைகளால் மூடிக்கொ
ண்டான். "இதை நான் கேட்கமாட்டேன். நீ எனக்குக் குருபத்
நியைப் போன்றவள். எனக்குக் குந்தி எப்படியோ, இந்த்ராணி

எப்படியோ, நீயும் அப்படியே. உன்னை நர்த்தந ஸமயத்தில் விடாமல் பார்த்தது நிஜம். ஏனென்றால், எனது குலமாகிய பௌரவ வம்சத்துக்கு நீ முதல் மாதாவாச்சுதே. ஆதலால் க்ருபை செய்து என்னை அந்யதா நினைக்கவேண்டாம். உன்பாதங்களை ஶிரஸ்ஸால் நமஸ்கரிக்கின்றேன்" என்று ஊர்வசியுடன் சொன்னான்.

ஊர்வசி கோபங்கொண்டாள். "காமபாண வசமடைந்து உன் இல்லம் வந்த என்னை த்ருப்திசெய்தாயில்லை. ஆதலால் மாநம்கெட்டு, ஸ்த்ரீகள் மத்யே நட்டுவனாகக்கடவாய்; நபும்ஸகன் போல் வர்த்திக்கக் கடவாய்" என்று ஶபித்துவிட்டுச் சென்றனள்.

பார்த்தன் அன்றிரவைத் துக்கத்துடன் போக்கினன். காலையில் சித்ரஸேநனைக் கண்டு நடந்ததை நடந்தவண்ணம் சொன்னான். சித்ரஸேநன் மூலமாக அந்த வ்ருத்தாந்தங்களை இந்த்ரன் அறிந்தான். பிறகு அர்ஜுநனைக் கண்டு, அவனுக்கு ஸமாதாநம் சொன்னான். "ப்ருதா உன்னால் ஸத்புத்ரனைப் பெற்றவளானாள். உனது தைர்யத்தால் நீ ருஷிகளையும் ஜெயித்தாய். ஊர்வசிஶாபமும் உனக்குப் பயன்படும். அஜ்ஞாதவாஸம் நீ செய்யப்போகின்ற வர்ஷத்தில் அது உனக்கு ஸாதகமாக நின்று, பின் கழியப் போகின்றது" என்று இந்த்ரன் சொல்லவே அர்ஜுநன் ஸந்தோஷமடைந்தான்.

அக்காலத்தில் ஸுரலோகம் வந்த லோமஶ ருஷியின் மூலமாய்க் காம்யக வநத்தில் வஸித்த யுதிஷ்டிரர் முதலானவர்கள் அர்ஜுநன் வ்ருத்தாந்தம் அனைத்தும் தெரிந்துகொண்டார். பிறகு அவர்கள் தீர்த்தயாத்ரை செய்துகொண்டு பகு பூப்ரதேசங்களைத் தர்சித்துக்கொண்டு போயினர். இவ்வண்ணம் பகு வர்ஷங்களாக அர்ஜுநனைக் காணாத நிமித்தம் பாண்டவர்களும் த்ரௌபதியும் ஶோகாதுரர்களாய்ப் போய், அர்ஜுநனைப் பார்க்கவேண்டுமென்று அவர்களுக்குத் தீவ்ரமான விருப்பம் உண்டாயிற்று.

'தேவயந்தம் நரவ்யாக்ரம் ஸர்வே வீரா யுதிஷ்டிரம் । ப்ரவேக்ஷ்யாமோ மஹாபாஹோ பவதா ஸஹிதா வயம் । விஶாலா பதரீ யத்ர நரநாராயணாஶ்ரம: । தம் ஸதா ரக்ஷிதம் யக்ஷை ரக்ஷ்யாமோ கிரிமுத்தமம் ' என்கிறபடியே, அர்ஜுநாந்வேஷிகளாய் நரநாராயணாஶ்ரமத்தையும் கந்தமாதந பர்வதத்தையும் தர்



ஶிப்பதற்காக யுதிஷ்டிர ப்ரப்ருதிகள் நடந்தார்கள். கந்தமாதந
த்தை அவர்கள் அடைந்தவுடன் ஒரு பெருங் காற்றுமழை யுண்
டாயிற்று. அங்கங்கே வ்ருக்ஷங்களை ஆஶ்ரயித்துக்கொண்டு
காற்று மழையின் வேகத்தை ஸஹித்தார்கள். பிறகு ஒரு க்ரோ
ஶம் நடந்தவுடன் பாஞ்சாலீ கீழே விழுந்து மூர்ச்சையடைந்தாள்.
அதை ஸமீபத்தில் நின்ற நகுலன் கண்டான். உடனே ஓடி அவ
ளைத் தாங்கிக்கொண்டான். முன் நடந்த யுதிஷ்டிரரைக் கூப்பிட்டு
நடந்ததைச் சொன்னான். யுதிஷ்டிரரும் பீம ஸஹதேவர்களும்
உடனே அவ்விடம் வந்தனர். தர்மபுத்ரர் மிகவும் துக்கித்தவராய்க்
கொண்டு, பாஞ்சாலியை மடியின்மீது வைத்துக்கொண்டு புலம்
பினார். "ரக்ஷிக்கப்பட்ட அரண்மனைகளில் ஸுகார்ஹையாய் நல்ல
மேல் விரிப்புடன்கூடிய படுக்கைகளில் படுக்கத் தகுந்தவள் எவ்
வண்ணம் கீழே விழுந்து தரையில் படுப்பள்? ஸுகுமாரமான
அவளுடைய பாதங்களும் கமலம்போல் விளங்கும் அவள் முக
மும் என்பொருட்டு இவ்வண்ணம் கறுத்துப்போயினவே? புத்தி
யற்றவனும், த்யூதத்தில் ஆசைகொண்டவனுமான நான் என்ன
பண்ணிவிட்டேன்? ம்ருகக் கூட்டங்கள் ஸஞ்சரிக்கப்பட்ட வநங்
களில் க்ருஷ்ணையை அழைத்துக்கொண்டு ஸஞ்சரிக்கின்றேனே!
இந்த விஶாலமான கண்களையுடைய பாஞ்சாலியை த்ருபதராஜன்
நம்மிடம் அவள் ஸுகம் அடைவாள் என்று நம்பியன்றோ நமக்கு
அளித்தான்? பாபியான என் செயலால் ஒரு ஸுகத்தையும்
காணாமல், அவள் ஶ்ரமப்பட்டு, ஶோகமடைந்து, வழிநடந்து, களை
த்துப் போய்ப் பூமியில் விழுந்து படுத்துக் கிடக்கின்றாளே!"
என்றிப்படி ராஜன் புலம்பும்போது, அவர் புரோஹிதரான தௌம்
யர் முதலானவர் அவ்விடம் வந்து கூடினார்கள். ப்ராஹ்மணர்கள்
ரக்ஷோக்ந மந்த்ரங்களை ஶாந்திநிமித்தம் ஜபித்தார்கள். பாண்ட
வர்கள் பாஞ்சாலியைத் தடவிக்கொடுத்தார்கள். சீதத்துளியுடன்
கூடிய காற்று அவள் முகத்தில் அடித்தது. த்ரௌபதி ப்ரஜ்ஞை
யை அடைந்தாள். பிறகு க்ருஷ்ணாஜிநத்தைக் கீழே விரித்து,
அதின் மேல் அவளைப் படுக்கச்செய்தார்கள். அவள் பாதங்களையும்
மெல்லப் பிடித்தார்கள். இதற்குள் தர்மபுத்ரர், பீமஸேநனைப் பார்
த்து மேல் ப்ரயாணம் நடந்தவண்ணம் நடத்தமுடியாதென்று அறி
வித்தனர். உடனே பீமன் கடோத்கசனை ஸ்மரித்தான். கடோத்
கசனும் உடனே ப்ராப்தமாய்ப் பீமஸேநனை நமஸ்கரித்து அபிவா

தாம் பண்ணினன். அவனும் அவனுடன் வந்த ராக்ஷஸர்களும், பாஞ்சாலியையும் சில ப்ராஹ்மணர்களையும் எடுத்துக்கொண்டு நடக்கப் பாண்டவர்கள் ' [illegible] ' என்கிறபடியே பதரீ ப்ரதேசங்களைக் கண்டார்கள். அத்தேசங்களையும், கந்தர்வ வித்யாதர யக்ஷ கிந்நராதி ஜநங்களையும், நாநாவித ம்ருகங்களையும், பக்ஷிகளையும், வ்ருக்ஷங்களையும், நதிகளையும் பார்த்துக்கொண்டு, உத்தர குருநாட்டைத் தாண்டி, " [illegible] * * * [illegible] * * * [illegible] * * * [illegible] " என்கிறபடியே கைலாஸ பர்வதத்தையும் அதன் ஸமீப தேசத்திலிருக்கும் மரங்களால் சூழப்பட்டதும், அவற்றின் விசாலமான கிளைகளால் நிழல் மிகுந்ததும், மஹாசோபையுடன் கூடி லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்றதும், குளிர்ச்சியுடன் கூடியதும், முட்களற்றதும், ஸர்வப்ராணிகளுக்கும் ஆச்ரயமானதும், ப்ரஹ்மர்ஷிகளும் வ்ருத்த தபஸ்விகளும் இந்த்ரிய ஜயத்துடன்கூடிய யதிகளும் வேதஸ்வரூபரான ப்ராஹ்மணர்களும் வஸிக்கும் நரநாராயணாச்ரமத்தைப் பாண்டவர்கள் தர்சித்தார்கள். அவ்விடம் வஸித்த மஹாத்மாக்களும் அவர்களை எதிர்கொண்டார்கள்; ஆசீர்வதித்தார்கள்; விதிப்



படி ஸத்காரம் செய்தார்கள்; பரிசுத்தமான புஷ்ப மூல பலாதிகளைத் தந்து பூஜித்தார்கள்., பிறகு பாகீரதீ கரையில் தேவராலும் தேவருஷிகளாலும் பூஜிதமான நரநாராயணர்களுடைய ஸ்தானத்தைத் தர்மராஜன் மற்றவருடன் கூடிச்சென்று தர்சித்தார். அவ்விடத்தில் அங்கங்கே ஸஞ்சரித்து ஸந்தோஷித்தார். மைநாக பர்வதத்தைப் பார்த்தார். ஹிரண்ய சிகரத்தை நோக்கினர். மத்தியில் மங்களகரமான பிந்து ஸரஸ்ஸைக் கண்டார். குளிர்ந்த புண்ய ஜலத்துடன் கூடிய பாகீரதியையும் நெருங்கி ப்ரீதி நிறைந்த மநஸ்கராய் நமஸ்கரித்தார். அந்தத் தீர்த்தத்தில் தேவருஷி பித்ருக்களுக்குத் தர்ப்பணம் பண்ணினர். இவ்வண்ணம் சில காலம் பாண்டவர்கள் தங்களுடன் வந்த விப்ரர்களுடன் அந்த ப்ரதேச வாஸம் செய்தார்கள்.

பத்ராதிபர்.

---

ஸ்ரீ:.

## ஸ்ரீ அஹோபில மடம்.

ஸ்ரீ அஹோபிலத்தில் ஸ்ரீ ஸந்நிதி நித்ய ததீயாராதநோபய வேதாந்த காலக்ஷேபாதிசயங்களெல்லாம் ஸுகமாய் நடந்துகொண்டு வருகிறதென்றும், நாளது ஆவணிமீ 26வ ஞாயிற்றுக்கிழமை ஸிம்ஹ லக்நத்தில் கீழ் ஹோபிலம் மேலஹோபிலம் ஸந்நிதிகளில் அஷ்ட பந்தந ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் நடக்கப்போகின்றதென்றும் ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ஸ்ரீ முகம் கிடைத்திருக்கின்றது. 23வ வியாழக்கிழமை தினம் உத்ஸவத்தின் உபக்ரமாம். இது அபூர்வமான விசேஷித்த உத்ஸவமாதலால், இந்த மஹோத்ஸவத்தை ஸேவிக்கும் ஆஸ்திகர்களெல்லாரும் தந்யர்களே !

24-8-16. ஸ்ரீ. வை. ஸபை கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# தென்கலை வடகலை த்வேஷம்.

---

Too often religion merely serves to cut men asunder and to divide them into hostile sects, the members of which consider it to be God's will that they should hate their brethren whose views differ from their own. True religion is a bond of union between man and man, and man and God; and one may judge the truth either of a whole religious system or of a single individual's religious views by the test of their uniting or dividing tendencies.

பாபத்தினிடத்தில் பயமும் தைவத்தினிடத்தில் பக்தியும் ஒருவனுக்கு உண்மையாகவே இருக்குமானல், அவன் மற்றவர்களை வெறுப்பதற்கும் அவர்களின்மீது துராக்ரஹம் கொண்டு அவர்களுக்குத் தீங்கு செய்வதற்கும் எப்படி ப்ரவ்ருத்திக்கக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. கீழ்ச்சொல்லியிருக்கிறபடி மநுஷ்யர்களுக்குள் பரஸ்பரம் விஶ்வாஸத்தையும் ஸர்வ பூதங்களிடத்திலும் ஸௌஹார்த்தத்தையும் உணர்த்தும் மதமே உண்மையான மதம்; ஒருவருக்கொருவர் த்வேஷத்தை ஜநிப்பித்து, அதனுல் உண்டாகும் ஶத்ரு பாவத்தை வளர்த்தி ப்ரஜைகளெல்லாம் பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டு நாஶம் அடையும்படி போதிக்கும் மதம் உண்மையானதன்று; தைவ ஸம்மதமாகாது என்றே சொல்லவேண்டும். அம்மாதிரியான மதங்களைக் கொண்டாடுபவரெல்லாரும் தைவ ஶத்ருக்களே தவிர தைவத்தைத்தேடி அடையும் ஸ்வபாவமுள்ளவர் ஆகார்.

இப்பொழுது நாம் அவலம்பித்திருக்கும் வேத மதம் எப்படிப்பட்டது? என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்த்தால், ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தைப் போதிக்கும் விஷயத்தில் லோகத்திலுள்ள மதங்களுக்குள் இது முதன்மையானது என்றே சொல்லலாம்.



“அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச,”

“யஸ்மாந்நோத்விஜதே லோகோ லோகாந்நோத்விஜதே ச ய:”

என்று உபாதேய குணங்களைச் சொல்லுமிடத்திலும்,

“தயா பூதேஷு”

என்று தேவாஸுர ஸம்பத் விபாக ப்ரகரணத்திலும்,

“அஹிம்ஸா” “அநுத்வேககரம் வாக்யம்”

“தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசம்”

என்று தபஸ்ஸின் ஸ்வரூப பேதத்தைச் சொல்லுமிடத்திலும் நமது பகவத் கீதை பூதஸௌஹார்த்தத்தையே முக்கியமாக உபதேஶிக்கின்றது. நமது இதிஹாஸ புராணங்களிலுள்ள ஒவ்வொரு உபாக்யாநமும் இந்த அர்த்தத்தையே வற்புறுத்துகின்றது. ஸ்ரீ பாகவதம் முழுவதும் பூத தயையைப் பற்றிப் பேச ப்ரவ்ருத்தித்தது போலவே தோன்றும். எல்லாவிடத்திலும் ஒவ்வொரு ஜந்துவினுள்ளும் வ்யாபித்து அந்தர்யாமி ரூபமாகப் பகவான் நிற்கிறுன் என்று நமது மதம் போதிப்பது உண்மையானல், அந்தத் தைவத்தினிடத்தில் ப்ரீதி செய்யவும் அந்தத் தைவத்தின் அநுக்ரஹத்தைப் பெறவும் நமது மதத்தின் ஸஹாயத்தைக் கைப்பற்றி முயலும் ஒருவன் எவ்விதத்தில் மற்றவர்களை த்வேஷிக்கவும் பிறருக்குத் தீங்கு செய்யவும் துணிவான் என்பது நமக்குத் தெரியவில்லை. அப்படிச் சிலர், தங்களை வைதிகர் போல வெளிப்படுத்திக்கொண்டு மனத்தில் மற்றவர்களைக்குறித்துப் பத்துவைரர்களாய்த் தென்பட்டால், அவர்களைக் கபடவைதிகர்களென்றும் மோசக்காரர்களென்றும் நாம் அழைக்க அஞ்சோம்.

இதனுல், மநுஷ்யர்களெல்லாரும், மத ஸம்பந்தங்களான விஷயங்களில் ஒரே கொள்கைகளை அவலம்பிக்க வேண்டுமென்றுவது, தம்முடைய ஸஹாபோஹங்களுக்கு ஸாதுவாகத் தோன்றுமவை யெல்லாவற்றையும் உதறிவிட்டு மற்றவர்கள் சொல்லுமவைகளையே எவ்வித விசாரமும் செய்யாமல் கைப்பற்ற வேண்டுமென்றுவது நாம் சொல்லவரவில்லை. விவேகிகளான நமக்கு அப்படிச் செய்வது உசிதமன்று. வேதத்தையே ஆதாரமாகக் கொள்ளும் நமக்குள்ளாகவே வெவ்வேறுன அபிப்ராயங்கள் உண்டாவது ஸ்வாபாவிகமே. ஒருவனுடைய புத்திபோல மற்றொருவனுடைய புத்தி இல்லாதபடியாலும், ஜந்மாந்தர ஸம்ஸ்காரங்களும் ஆசார்யாநுக்ரஹமும் வ்ய

க்தி தோறும் வேறுபட்டிருக்கிறபடியாலும், ஒருவனுக்கு விளங்கும் அர்த்த விஶேஷங்கள் மற்றவனுக்கு விளங்காமலும் வ்யத்யஸ்தங்களான நாநாவித அபிப்ராயங்கள் விளங்கியும் இவ்விதமான வைவித்யங்கள் பற்பல ஸம்பவிக்கக்கூடும். ஆனால், அது காரணமாக நாம் பரஸ்பரம் வெட்டிக்கொண்டு மடிவது நமது ஶாஸ்த்ர ஸம்மதமாகுமா? என்பதைத்தான் நாம் ஆலோசிக்கவேணும். 'அப்படி வெட்டிமடிவது ஶாஸ்த்ர ஸம்மதமன்று; அபிப்ராயங்கள் எவ்வளவு வேறுபட்டாலும் நாம் ஒருவரை ஒருவர் த்வேஷிக்கக்கூடாது; பரஸ்பரம் அதிமாத்ரம் ஸுஹ்ருத்துக்களாகவே இருத்தல் வேண்டும்; தம்மால் இயன்றமட்டில் மற்றவர்களுக்கு எல்லாரும் உதவி புரிதல் வேண்டும்;

"വ്യസനേഷു മനുഷ്യാണാം ഭൃശം ഭവതി ദുഃഖിതഃ ।
ഉത്സവേഷു ച സര്വേഷു പിതേവ പരിതുഷ്യതി ॥"

என்கிற ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அநுஷ்டாநத்தை அடியொற்றி, மற்றவர்களுக்கு விபத் நேர்ந்தால் அதில் ஸந்தோஷத்தை அடையாமலும், மற்றவர்களுக்கு ஸம்பத் ஸம்பவித்தால் அதில் பொறாமையை அடையாமலும், மற்றவர்களுடன் ஸமதுக்கஸுகர்களாய் நாம் வாழ்தல் வேண்டும்' என்றன்றோ நமது வைதிகமதம் கதறுகின்றது? இவையெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல இக்காலத்தில் ஆகிவிட்டனவே! என்றுமட்டில் நாம் துக்கிக்கிறோம்.

ப்ராக்ருதத்தில், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸம்பத்தமாகத் தென்கலையார் வடகலையார் என்று இரண்டு விபாகங்கள் ஏற்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இவர் இருவர்களும் ஸ்ரீமந் நாராயணனையே பரதேவதையாகக் கொண்டவர்கள்; நமது தேஶத்திய ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளே இந்த இருவருக்கும் ப்ரமாண க்ரந்தங்கள்; ஆசார்ய பரம்பரையும் ப்ராயேண இருவருக்கும் துல்யம்; ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் இவர் முதலியவருடைய அருளிச்செயல்களே இருவருக்கும் உபாதேய க்ரந்தங்கள் ஆகின்றன. ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பிற்பட்ட ஆசார்யர்களுக்குள் சில அபிப்ராய பேதங்கள் ஜநிக்க, இந்த இரண்டுவகை ஸம்பவித்தது. சிற்சில விடங்கள் நீங்கலாக மற்றையிடங்களிலெல்லாம், இக்காலத்தில்கூட இவர்களுக்குள் போஜந ப்ரதிபோஜநமும் விவாஹ ரூபமான ஸம்பந்தங்களும் நடைபெற்று வருகின்றன.



இப்படி அநேக ஸௌஹார்த்த ஹேதுக்கள் இருக்கையிலும், இவர்களுக்குள் பரஸ்பரம் ஸம்பவித்திருக்கும் த்வேஷமானது இவ்வளவுதான் என்று சொல்லக்கூடாததாக இருக்கின்றது. ஒருவருடைய ஆசார்யரை மற்றொருவர் தூஷிப்பதும், மற்றவர்களுடைய ஆசார்யர்களின் ஸ்தோத்ரங்களை இவர்கள் அஸஹ்யமாக நினைப்பதும், இப்படிப்பட்ட அஸஹ்யாபசாரம் காரணமாகவே பரஸ்பரம் ஸௌஹார்த்தத்தை இழந்து தங்கள் தங்களால் கூடியவரையில் மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதும், ராஜஶிக்ஷைக்குப் பாத்ரமாகும்படி ஒருவரை ஒருவர் ஆக்ரமித்து அடிப்பதும் இப்பொழுது ப்ரதிதினம் செய்யப்படும் க்ருத்யங்களாகிவிட்டன. அத்யந்தம் ஆஸ்திகர்களாகவும் பாபபீருக்களாகவும் ஶாஸ்த்ர மர்யாதையைக் கடவாதவர்களாகவும் இருக்கும் பரம வைதிகர்கள்கூடத் தங்களுடைய விரோதிகளாக இருக்கும் மற்றொரு கலையார்களுக்குப் பாகவதராகிறார் இல்லை. அவர்களுக்கு யதாஶக்தி உபத்ரவம்செய்வதையே இவர்கள் பரம ப்ரயோஜநமாகக் கொண்டாடுகிறார்கள். உபத்ரவிப்பது ஒருகாலும் பாபமாகாதாம்; அந்த ப்ரவ்ருத்தியில் பொய் சொல்லும்படி ஸம்பவித்தாலும் அது பொய்யன்றாம்; திருடும்படி நேர்ந்தாலும் திருடன்றாம். இவ்விதமான அநேக தவறுதலான எண்ணங்களை த்ருடமாக உட்கொண்டு, ஶாஸ்த்ர நிஷித்தங்களும் ஆத்ம விநாஶ ஹேதுக்களுமான ஜுகுப்ஸித வ்யாபாரங்களில் தீவ்ர ப்ரவ்ருத்தியைச் செய்து, அநந்ய ப்ரயோஜநர்களாய் துராக்ரஹத்துடன் மீளாத நாஶத்தை ஸம்பாதித்துக்கொள்ளும் அநேகரை நாம் ப்ரதிதினம் பார்க்கிறோம். தமது நாஶத்தை விளைவித்துக்கொள்வதன்றிக்கே, இவர்கள் நன்மை தீமை அறியாதவர்களாயிருக்கும் அநேக பாலர்களையும் அந்த மார்க்கத்தில் போகும்படி செய்து நஶிப்பிக்கிறார்கள். இதுவும் ஶாஸ்த்ர ஸம்மதமாகுமோ?

கேவலம் எவ்வித ஹிதாஹித ஜ்ஞாநமுமில்லாமல் இருக்கும் சில அஜ்ஞர்கள் மட்டில் இப்படி அபதத்தில் ப்ரவ்ருத்திக்கிறார்கள் என்று இருந்தால் நாம் அவ்வளவாக ஶோகிக்க அவகாஶமிராது. அஜ்ஞர்களுடைய ப்ரவ்ருத்திகள் நீடித்து நிற்கமாட்டா. விவேகமும் லோகாநுபவமும் வ்ருத்தியடைந்தவுடன் அபத ப்ரவ்ருத்தி தனக்குத்தானே விலகிவிடும். ப்ராக்ருதத்திலோ, அப்படி இல்லை. லோகாசார்யர்களென்று கொண்டாடப்பட்ட சில பெரியோர்களும் மஹாவம்ஶ ப்ரஸூதர்களாயும் ஸர்வ ஶ்லாக்யமான வைதுஷ்யத்தை ஸம்பாதித்தவர்களாயுமிருந்த சில மஹான்களும் முற்காலத்தில் இந்தக் குமார்க்கத்தில் ப்ரவ்ருத்தி செய்திருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். தென்கலை ஸந்நிதிகளை வடகலையாகச் செய்வதிலும், வடகலை

ஸந்நிதிகளைத் தென்கலையாகச் செய்வதிலும் மஹத்தான ஆக்ரஹம் கொண்டு, இவர்கள், ஸாமாந்ய ஜநங்களால் கூட இகழப்படும் அகார்ய ஶதங்களைச் செய்திருக்கிறார்களாம். இக்காலத்திலும், இதர கலையார், அவர்களுடைய ஆசார்ய விக்ரஹமொன்றை ப்ரதிஷ்டை செய்து உத்ஸவம் முதலியவற்றைக் கண்டருளப்பண்ணுகிறார்கள் என்னும் காரணத்தை மட்டில் அவலம்பித்து, அஸூயாக்ராந்தர்களாய் இவர்களும் தங்கள் ஆசார்ய விக்ரஹமொன்றை ப்ரதிஷ்டை செய்வதும், அவர்களுக்குப் போட்டியாக இவர்கள் உத்ஸவாதிகளைச்செய்ய யத்நிப்பதும், அந்த உத்ஸவாதிகளில் பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டு ராஜஶிக்ஷைக்கு எல்லாரும் பாத்ரமாவதும் ஆகிய இந்த வ்யாபாரங்களில், பரிகணிதர்கள்கூட ப்ரவேஶிப்பதை நாம் அறிவோம். இது எந்தத் தைவத்திற்கு த்ருப்தியை ஜநிப்பிக்கின்றது? உதர போஷணத்திற்காக உதயமானல் அஸேவ்ய ஸேவநம் செய்யத்துணியும் இவர்கள், இதர கலையாருடைய ஆசார்ய விக்ரஹத்தின் முகாவலோகநம் செய்யக்கூடாது என்று நினைப்பதும், அந்த ஆசார்யன் எழுந்தருளின வீதி அஶுத்தமாகி விட்டதென்று அதைப் பரிஶுத்தம் செய்ய நினைப்பதும் எந்த மௌட்யத்தின் பரீவாஹமென்று நமக்குத் தெரியவில்லை. ஒரு கர்மம் குத்ஸிதமென்று நமக்குத் தெரிந்தால் நாம் அதை விலக்கவேண்டுவதில்லையோ? த்ரோஹம் குத்ஸிதமென்று எல்லாரும் அறிந்திருக்கையிலும் அதை விலக்க இவர்கள் மனங்கொள்ளவில்லையே! சில பாஶ்சாத்யர்கள், 'மார்க்கம் எவ்வளவு இகழத்தகுந்ததானாலும் பர்யவஸாநம் ஸாதுவாக இருந்தால் அந்த மார்க்கத்தில் செல்வது நிந்திக்கத்தகுந்தது அன்று' என்று எண்ணி அந்தப்படி நடப்பதைப் பலர் பரிஹஸித்துப்பேசுவது நமது கோசரமாகியிருக்கின்றது. ஹிந்துக்களுடைய ஶாஸ்த்ரம் அப்படிப்பட்ட பாடம் ஒன்றையும் படிப்பிக்கவில்லையே. எந்த ப்ரமாணத்தைக் கொண்டு, இந்தப் பெரியோர்கள் திருட்டிலிருந்தும் பிரட்டிலிருந்தும் தங்களை ஸம்ரக்ஷித்துக் கொள்ளப்போகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை.

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"



இத்யாதியாகக் கதறியிருக்கும் ஆசார்யர்களுடைய திருவடி ஸம்பந்தம் பெற்றவர்கள் நாம்' என்று எப்படி வாய் கூசாமல் இவர்கள் சொல்லத்துணிகிறார்கள்?

கேவலம் லௌகிக ரீதியை ஆலோசித்துப் பார்க்கையிலும், 'நாம் ஒற்றுமையற்றிருப்பது நமக்கு நாஶ ஹேதுவாகின்றது' என்பதை நாம் நன்கு உணரலாம். ஆதிகாலம் முதல், நமது தேஶத்திற்கு அந்தச்சித்ரமே பெருத்த ஶாபம்போல நின்றுகொண்டு அளவற்ற தீங்கை விளைவித்திருக்கின்றதன்றோ? ஐகமத்யத்துடன் நாம் ஒன்று சேர்ந்து நிற்காததே நமக்கு ஶக்திக்குறைவையும் பராதீநதையையும் ஏற்படுத்தி, பிறரெல்லாரும் வெளிவந்து வாழுங்காலத்தில் நாம் மட்டில் கீழே அமிழ்ந்து வருந்தும்படி செய்யவில்லையா? பரஸ்பரம் பெரிய பழியைக் கொண்டாடி நின்ற பாண்டவரையும் தார்த்தராஷ்ட்ரர்களையும்

"ஸம்ப்ராப்தே வயம் பஞ்சோத்தரம் ஶதம்"

என்று உணரும்படி செய்த அக்காலத்திய ஐகமத்யம் அக்காலத்திலேயே நஶித்து விட்டதுபோலத் தோன்றுகின்றதே. 'நமது வ்ருத்தியும் ஶ்ரேயஸ்ஸும் ஜகத்தின் வ்ருத்தியுடனும் ஶ்ரேயஸ்ஸுடனும் பிரிவு பெறாமல் ஒன்று சேர்ந்து நிற்கின்றன வென்றும், ஜகத்தின் மேன்மையை நாம் கோராத வரையில் நமக்கு மேன்மை ஸம்பவிக்காது என்றும், ஸ்வ ப்ரயோஜநத்தையே பெரிதாகப் பாராட்டாமல் நம்மைவிட ஹீநஸ்திதியில் இருக்குமவர்களை யதாஶக்தி உபகரிப்பது நமது கடமை யென்றும் இவ்வாறு ஒரு பெருந்தன்மையை உணர்ந்து நடக்க ஹிந்துக்கள் ஸர்வ ப்ரகாரத்திலும் அஶக்தர்கள்' என்று பாஶ்சாத்யர்கள் நம்மைப் பரிஹஸிப்பதை நாம் யதார்த்தமாகச் செய்துகொள்ளுகிறதுபோல அநுஷ்டித்து வருகிறோமே! இது அறிவில்லாதவர்களின் அநுஷ்டாநமன்றோ? ஆத்மோஜ்ஜீவநம் பெரிதாகத் தோன்றாமற் போனாலும், லௌகிக ஶ்ரேயஸ்ஸைக் கருதியாவது நாம் ஒன்று சேர்ந்து வாழ ப்ரயத்நப்பட வேண்டுவதில்லையோ? 'நாம் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டும், ஒருவர்மீது மற்றொருவர் வ்யாஜ்யம் செய்துகொண்டும். பரஸ்பரம் ஆமரணம் வைரம் பாராட்டி நிற்கும் வரையில் நமக்கு எவ்வித ஶ்ரேயஸ்ஸும் ஸம்பவிக்காது' என்பதை இவர்கள் எப்பொழுது தான் உணரப்போகிறார்கள்?

"தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி"

[பகவத் ஸங்கல்பமில்லாமல் த்ருணம்கூட அசையாது] என்று நம்பியிருக்கும் நாம், இந்தத் துர்தஶையை நிவ்ருத்தித்துக்கொள்ளப் பகவானையே ஶரணமாக அடையவேண்டும். ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் பகவானே, தென்கலையார் வடகலையார் என்னும் இவர்களுடைய மனத்திலும் புகுந்து, அதி கோரமாக இப்பொழுது ஆவிர்பவித்து நிற்கும் துஷ்டமான அபிஸந்தியை நிவ்ருத்திக்க வேண்டுமே தவிர வேறு எவ்வித ப்ரதிகாரமும் நமக்குத் தோன்றவில்லை. 'ஸ்வ வம்ஶ ப்ரஸூதர்களான யாதவர்களுடைய நாஶத்தை ஸ்ரீக்ருஷ்ணன் ஸங்கல்பித்ததுபோல, ஸ்ரீமந் நாராயணனும் அவன் பெயரைப் பூண்டு நிற்கும் இந்த வைஷ்ணவர்களுடைய நாஶத்தை இப்பொழுது ஸங்கல்பித்திருக்கிறானோ?' என்று நினைக்க நமக்கு மனம் வரவில்லை. ஸ்ரீமந் நாராயணனே ப்ரமாணம்.

It is the duty of all religious leaders to teach and preach union between man and man, caste and caste, sect and sect; and above all to drive home the fact that to differ from a man in birth or doctrine does not justify our cutting ourselves aloof from him and despising or hating him in the ordinary affairs of life.

**எஸ். வாஸுதேவன்.**

---

ஸ்ரீ:.

## இவ்வருஷத்திய மஹாஸங்கம்.

இவ்வருஷத்திய மஹாஸங்கத்தை ஸ்ரீ திருப்பதி ஸபையார் ஸ்ரீ திருப்பதியில் நாளது ஆவணி அல்லது வருகிற புரட்டாசி மாஸத்தில் நடத்தப் போகிறதாக சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்திருந்தோம். அந்த ஸங்கத்திற்கு அபேக்ஷிதங்களான பூர்வ ஸம்விதானங்களைச் செய்து கொள்வதற்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டியிருப்பதால், அச்சங்கத்தை முன் ஆலோசித்தது போல புரட்டாசி மாஸத்தில் நடத்துவது கொஞ்சம் ஶ்ரம ஸாத்யமாக இருக்கின்றது. அப்படி புரட்டாசி மாஸத்தில் அது நடைபெறாவிட்டால், அற்பிசி மாஸத்தில் நடை பெறும் என்பதை இதனால் விஜ்ஞாபநம் செய்கின்றோம்.

24—8—16. **ஸ்ரீ. வை. ஸபை கார்யதர்ஶி.**

# கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

இம்மாதாந்த்ரத் தமிழ்ப் பத்ரிகை ஜனம்பி ஆறுவது வர்ஷம் நடைபெறுகின்றது. இது நாளுதேய வர்த்தமானங்களை மட்டுந் தெரிவிக்கும் பத்ரிகைகள் போலாது, தெய்வவழிபாடு, கர்மம், ஞானம், பக்தி முதலிய துறைகளில் மாந்தர்க் கறிவை விளக்கும் பத்ரிகையாம். இக்கலிக்கு இன்றியமையாத தொன்றும்.

> **ஒழுக்கம் விழுப்பந் தரலாலொழுக்கம்**
> **உயிரினு மோம்பப் படும்.** (குறள்.)

இதன்படி ஒழுக்கம் மாந்தர்க்கு முக்யமாகின்றது. இக்கலி நாளில் நூதந விவேகிகள் தோன்றிப் புதுவழிகளில்இறங்கி அகங்கார மமகாரங்களைத் தினந் தோறும் வளர்த்துப் பிறவிப் பெருங்கடலி லாழ்ந்து கதியின்றிச் சுவர்க்க நரகங்களிற் புக்குச் சுகித்தும் வருந்தியும் திரும்பத்திரும்பப் பிறந்து பிறந்து இடர்ப்படுகின்றனர். இவர்கள் புராதநமாகிய வேத உபநிடத மார்க்கங்களின்படி சற்குருவைப்பெற்றுப் பேரின்ப சுகத்தில் பிறவி யோய்ந்து சுகிக்க இப்பத்ரிகை வழி காட்டிக்கொடுக்கும் ஸாதநமாகின்றது.

இக்கலி நாளில் பெருந்தொகையார் நூதந விவேகிகளாகி ஆன்மசுகம் பெறும் வழியை மறந்து இவ்வுலக ஸுகபோகங்களை மட்டும் புசித்துச் சுகிப்பதே பிறவிப்பயனெனக் கருதி இடர்ப்படுகின்றனர். கன்ம பரிபாகத்தால் மறுபிறப்பும் உயர்ந்த தாழ்ந்த ஜந்மங்களும் வருகின்றன வென்பதை முற்றும் மறந்து களிக்கின்றனர். "அவரவர்விதிவழி யடையநின்றனரே" என்கின்ற முதுமொழிப்படி மாந்தர்களுக்குப் பலபடிகள் காணப்படுகின்றன. வர்ணாச்ரம தருமங்கள், ஜந்மாந்தரம், கன்மபரிபாகம் இவைகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. இவ்வுண்மைக்கு மாறாக இக்காலத்துப் புதுக் கல்வி நடையாடுகின்றது. இக்கல்வி துன்பத்திற்குக் காரணமாகின்றது.

நற்கல்வியல்ல. மறுமைப் பயனைத் தலைமையாய்க்கொண்டு இவ்வுலக யாத்திரையைச் சீராக்குங் கல்வியே நற்கல்வியாம். ஆர்யர் முன்னாளில் இக்கல்வியை நன்கு காத்துவந்து பிற்காலத்தவர்க்கு நற்பலனளிக்கும் பல நூல்களையும் செய்து பேருபகாரஞ் செய்துள்ளார்.

மாந்தர்க்கு உணவின் வகைகளும், ஒழுக்கமும், சரீரநிறமும், திடமும், மனோதிடமும் ஆன்ம உணர்வும், பேரறிவும், பூஸாரத்தாலும் சீதோஷ்ண நிலையாலும் பற்பல தேயத்திலும் பற்பல பேதமாயிருக்கின்றன. பற்பல காலங்களில் மகான்கள் தோன்றி அக்காலத்திற்கேற்றபடி நூல்கள் செய்து போதித்து வந்ததால். உலகெங்கும் ஸித்தாந்தங்களும், வேதாந்தங்களும் பலவாய் மலிந்துள்ளன.

காலநிலையையும் தந்தம் நிலையையும் நன்கு ஆராய்வோர்க்கு ஆராய்ச்சிக் குறைவும், குதர்க்கமும், மததூஷணையும் ஆதாரமற்ற நூதனச் சீர்திருத்தமும் பெருந் தடைகளாம். தடைகளைப் போக்கிக்கொள்வதால் வெகு ஜந்ம பலனாக நல்லறிவு உதிக்கும். இது பெருந்தொகையார்க்கு ஆகாது. சிற்சிலருக்கே கைகூடும்.

வேதாந்த தீபிகையின் ஆராய்ச்சித் துறை சீராயமைந்திருப்பினும் பாஷைநடை வைணவ ஸித்தாந்திகட்கே பயனளிப்பதாகின்றது. அவர்களுள்ளும் தமிழ்த்துறையி லிறங்காதார் பலர்க்குப் பயனளிப்பதன்று. உபய வேதாந்திகளிற் பலர் தமிழிலக்கண விலக்கியப் போக்கில்லாமலே ஆழ்வார் ப்ரபந்தங்களின் ஸாரமா முண்மையை யுணர்ந்து ஆநந்திக்கின்றார்கள். இவ்வாநந்தம் போலியா மத்தனையே. உபய பாஷையிலும் யதோசிதம் சுத்தமாய் எழுதவும் பேசவும் படிக்கவும் பாடல்களைச் சந்தவின்பங் கெடாது நிறுத்து மிடங்களைப் பாதங்கள் தோறும் நன்கறிந்து படிக்கவும் முதலிற் பழக்கஞ் செய்துகொள்ளல் முக்யம்.

வைணவ மடாதிபதிகள் தமிழையும் அதன் வாயிலாக வடமொழியையும் மடங்கள்தோறும் தக்க பண்டிதர்களை ஏற்படுத்திச் சிறுவர்களைப் படிப்பித்தா லன்றி, உபய வேதாந்தப் படியி லேறுதல் நம்மவர்க்கு ஸித்திக்க மாட்டாது. மடாதிபதிகள் மூலமாய்ச் சீர்திருத்தங் கோருதல் விவேகிகளுக்கு இன்றியமையாததாம். ஆராய்ச்சி திடமுறுவிடில் நம்பிக்கையும் ஒழுக்கமுந் திடமுறா. மூடபக்தி முதலி லுதிப்பதுண்டானாலும் பக்தியின்மையி



லும் அதனுண்மை குணமுள்ளதானாலும் ஸந்தேஹ விபரீதங்கள் ஒழிந்தாலன்றி திடபக்தியும் ஒழுக்கமும் திடம்பெறா. ஸித்தாந்த உண்மை அச்சித்தாந்தத்தவர்க்கு முக்யமாயினும், ஸித்தாந்த உண்மை இனிது விளக்கப்படாமையாலும் கால வித்யாசத்தாலும் நம்மவரிற் பலர் அபஸித்தாந்தத்தி லிழிந்து ஸ்வரூபமற்று இடர்ப்படுவதை நாம் தினந்தோறும் காண்கின்றோம். வேதாந்த தீபிகையின் நடை பரிபாஷைகள் அதிகமாய்த் தலைநீட்டாமலும் இன்றியமையாத இடங்களொழிய மற்றைய இடங்களில் வடமொழிப் பதங்கள் நடை காட்டாமலு மிருந்தால் அபஸித்தாந்தப் பிரவேசமும் ஸித்தாந்தத்தி லுள்ளாரின் ஸங்க்யைக் குறைவும் தலைகாட்டா. உண்மையுணர்வால் வைணவ ஸித்தாந்தத்திற் புகுதலும் நேரும்.

பத்ராதிபரின் சொற்பிரயோகத்தையும் ஆராய்ச்சியின் சீரையும் குறைகூற நமக்கு வாயில்லை. இன்றியமையாத இடங்களிலன்றி ஸம்ப்ரதாய பரிபாஷைகளும் வடமொழிப் பதங்களும் பாஷையின் தெளிவான நடையைக் கடினமாக்கும்படி மலியாமையை வேண்டுகின்றேன். பரிபாஷைகளைப் பத்திரிகைத் தாள்களின் அடியில் சிறிய எழுத்தில் விளங்கவைத்தலும் நற்பயனளிப்பதாம்.

இங்ஙனம்

குடந்தை
16—7—16.

தி. வேங்கடராம ஐயங்கார்
தமிழ்ப்பண்டிதர்.
(வேறு பாஷைகளிலும் பயின்றவர்.)

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

## நியமங்களின் ஸங்க்ரஹம்.

1. ஸ்ரீ பகவத் ராமாநுஜனால் ப்ரவர்த்திதமாயுள்ள ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்தியே இந்த ஸபையின் முக்கியமான உத்தேசம்.

2. ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் ஸபையின் அங்கத்தினராவதற்கு அதிகாரிகள்.

3. ஸபையைச் சேரவேண்டுமென்று இச்சிக்கிறவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் நிராகரிக்கிறதற்கும் ஸபையின் நிர்வாஹக கமிடியாருக்கே ஸர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

4. ஸபையின் முதல் வகுப்பு அங்கத்தினராகச் சேர வர்ஷம் ஒன்றுக்கு ரூ 5—0—0 ம், இரண்டாவது வகுப்பு அங்கத்தினராகச்சேர வர்ஷம் ஒன்றுக்கு ரூ. 3—0—0 ம், சந்தாதொகையாகச் செலுத்தவேண்டும். முதல் வர்ஷத்திய சந்தாவை ப்ரதம ப்ரவேசகாலத்திலேயே செலுத்தவேண்டும்.

5. ஒவ்வொரு வர்ஷத்திலும் அக்டோபர் மாஸம் முதல் தேதி முதல் அடுத்த வர்ஷத்திய ஸெப்டெம்பர் மாஸம் 30உ வரையில் ஸபையின் வர்ஷமாகக் கணிக்கப்படும்.

6. ஸபையின் அங்கத்தினரெல்லாருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை என்னும் பத்ரிகை வேறு எவ்விதச் சந்தாவுமின்றிக்கே ப்ரதிமாஸமும் அனுப்பப்படும்.

☞ ஸபையின் சந்தாதொகையும் ஸபை ஸம்பந்தமான மற்றை ஸகலவித பத்ரிகைகளும் கீழ்க்கண்டிருக்கும் விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

எஸ். வாஸுதேவாசார்யர் பி.எ., எல்.டி.

கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

11, கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதி, மயிலாப்பூர், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
4 - OCT 1916
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீவேதவ்யாஸ [illegible] நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள ௵ புரட்டாசி ௴ [ஸஞ்சிகை 8.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆர்யாவர்த்த ப்ராஹ்மணருடைய தத்கால ஸ்திதி.**

கபிஸ்தல ஸமீபத்தில் ஓம்புலப்பாடியெனும் க்ராமவாஸியான ஓ. ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர் எனும் நம் ஸபா மெம்பர் ஒருவர், தென்னிந்தியா ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய உத்பத்தியைப்பற்றியும், ஆர்ய ப்ராஹ்மணர்களுடைய பல கோத்ரங்களைப் பற்றியும், புண்ட்ரங்களுடைய தத்வார்த்தங்களைப்பற்றியும், புண்ட்ரதாரண ப்ரமாணங்களைப் பற்றியும், புண்ட்ரதாரணங்களால் உண்டாகும் த்ருஷ்டாத்ருஷ்ட ப்ரயோஜநங்களைப்பற்றியும் விவரணத்தை அபேக்ஷிக்கின்றார். இதை வாசிக்கும் வித்வான்களில் ஆராவது அவர்க்குத் தக்க ஸமாதாநம் அளிப்பாரென்று எதிர்பார்க்கின்றோம்.

அன்றியும், ஆர்ய ப்ராஹ்மணர்களுடைய உத்பத்தியைப்பற்றியும் அவர்கள் பரவினபடியைப் பற்றியும் ‘ இந்தியாமான் ’ எனும்

இங்கிலீஷ் பத்ரிகையானது, 'ஸேனையில் சேர்கின்ற ப்ராஹ்மணர்கள்' என்று வெளியிட்ட விஷயத்தையும், நம் பார்வைக்கு அவர் அனுப்பியிருக்கின்றார். அந்த விஷயம் இருக்கின்ற வண்ணத்தை இங்கு ஸங்க்ரஹிக்கின்றோம்.

பழையகாலத்தில் ப்ராஹ்மணர்கள் இருவகைப்பட்டனர். விந்த்ய பர்வதத்திற்கும் நர்மதா நதிக்கும் வடக்கே வஸித்தவர்கள் கௌடர்; தெற்கே வஸித்தவர்கள் த்ராவிடர். வேண்டிய ஸேனைகளை இந்தியாவின் வடமேற்கு பாகத்தில் வஸித்தவர்களுக்குள் நின்று சேர்த்துக்கொள்ளும்படி மநு இராஜாக்கட்கு விதித்தார். அதற்குக் காரணம் தெரியவில்லை. இங்கிலீஷ்காரர் த்ராவிட ப்ராஹ்மணர்களை ஸேனைக்குள் சேர்க்காமல் விட்டார்கள். மஹாராஷ்ட்ர ப்ராஹ்மணர்களோ யுத்தத்தில் மரிக்கத் தெரிந்தவர்கள். ப்ராஹ்மணர்கள் பல கோத்ரங்களால் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கட்குப் பட்டப்பெயர்களுமுண்டு. திவாரி என்றால் த்ரிவேத மறிந்தவன். பண்டே என்றால் பண்டிதன். 1857-ம் வருஷம் கலஹத்தில் ஒரு பண்டே தான் முதல் குண்டு சுட்டான். அந்தக் கலகக்காரர்களைப் பொதுவாகப் பண்டே என்று இன்னும் அழைக்கின்றார்கள். ஒரு கோத்ரத்தில் சேர்ந்தவர்க்கு எல்லாம் கோத்ரருஷி மூலபுருஷன். ஒரே கோத்ரத்தவர்கள் பரஸ்பரம் விவாஹம் செய்துகொள்ள மாட்டார்கள். ஸேனைக்குக் கௌடப்ராஹ்மணர் தாம் இப்போது எடுக்கப்படுகின்றனர். அவர்களில் கானோஜ்யர், ஸாரஸ்வதர், கௌடர், மைதிலர், உத்கலர் என்று ஐந்து பிரிவு உண்டு. இப்போது மைதிலரும் உத்கலரும் ஸேனைக்கு உதவவில்லை. கானோஜ்யர் முக்யமாக ஐக்யமாகாணத்தில் ஷாஜிஹான் பூர், கேரி, ஹார்டாய், பரகபாத், இடாவா, ஜாலோன், கான்பூர், ஊனோ, லக்னோ, பாரபங்கி, பெஹ்ரேய்ச், ரேபேரீல்லி, பட்டிபூர், பாண்டா, ஹமீர்பூர் முதலான ஜில்லாக்களில் இருக்கின்றார்கள். அவர்களில் ஒரு வகுப்பினர் குலீநர் எனப்படுகின்றார்கள். அவர்கள் ஆறு கோத்ரங்கட்கு உட்பட்டவர்கள். மற்றொரு வகுப்பினர் பன்னிரண்டு கோத்ரங்கட்கு உள்ளடங்கிய டாகரி என்பவர்கள். குலீநர் டாகரியர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வார்கள். தம் மகளை அவர்க்குக் கொடுக்கமாட்டார்கள். ஸேனையில் சேர்ந்த ப்ராஹ்மணர்கள் விசேஷமாகக் கானோஜ்யர். அவர்க்குத் தேஹபலமுண்டு. அவர்களுக்குள் ஆசாரநியமங்கள் குறைவு.



அவர் வெள்ளாடு, ஆடு, மான், முயல், மீன், சில பக்ஷிகள் முதலானவற்றின் மாம்ஸங்களைப் புஜிக்கின்றார்கள்; பங்கியடிக்கின்றார்கள்; அபினி தின்கின்றார்கள்; புகையிலை மெல்வார்கள்; தங்கள் ஆகாரத்தைத் தாமே சமைப்பார்கள்; நெய்யில் பசநமானவற்றை எடுத்துக்கொண்டுபோய்ப் பல நாள் உண்பார்கள். ஜலத்தால் சமைத்ததை அன்றே உண்பார்கள்.

ஸார்வரீயர் எனப்பட்டவர் கானோஜ்யருடைய பிரிவினராக நினைக்கப்படுகின்றனர். ப்ராஹ்மணனான ராவணனை ஸம்ஹரித்த பிறகு, ஸ்ரீராமன் ப்ராஹ்மண போஜநம் செய்வித்தாரென்றும், அதில் அந்வயித்த கானோஜ்யரைத் தாங்கள் பஹிஷ்காரம் பண்ணிவிட்டதாகவும், தாங்கள் அவர்களை விட்டுக் கொரக்பூர் நாட்டுக்குப் போனதாகவும் அவர்கள் சொல்வார்கள். நேபாள தேசத்தையடுத்த விடங்களிலும் அஜிம்கர், ஜௌன்பூர், மிர்ஜாபூர், காஜிபூர், அலஹாபாத், பெனாரஸ், ஷஹாபாத் முதலான ஜில்லாக்களிலும் அவர்கள் வஸிக்கின்றார்கள். அவர்கள் பரம்பரை சுத்தமானதன்றெனச் சிலவிடங்களில் எண்ணப்படுகின்றது. பாகேல் அரசனான ராமராஜா வென்பவன் ஒரு யாகத்துக்காக ஒன்றேகால் லக்ஷம் ப்ராஹ்மணரை அபேக்ஷித்தானென்றும், அந்த ஸங்க்யை கிடைக்காதபடியினால், பல ஜாத்யந்தரர்களை அவன் ப்ராஹ்மணராக்கினானென்றும் ஒரு கதையை ஸார்வரீயர் ஒப்புக்கொள்கின்றனர். அதனால் அவர்க்கு ஸாவலாக்யரெனப் பெயரும் கிடைத்தது. அதன் அர்த்தம் ஒன்றேகால் லக்ஷத்தவர். இவர்க்குள் கோத்ரஸங்க்யை நூற்றொன்று. அதனாலும் அவர் பரம்பரை சங்கிக்கப்படுகின்றது. முன் காலம் இவர் மாம்ஸம் புஜித்தாரில்லை. இப்போது கானோஜ்யரைப்போல் மாம்ஸம் தின்கின்றார்கள்; பங்கியடிக்கின்றார்கள்; அபினி புகையிலை இவற்றை உண்கின்றார்கள்.

ஸாநாதியர் கானோஜ்யர் நாடுகளில் வஸிக்கின்றார்கள். அநேகமாய் அவர் சாகங்களைப் புஜிக்கின்றனர். சுருட்டு பிடிப்பார்.

ஜாஜோத்யர் பண்டல்குண்டிலும் நர்மதைக் கரையிலும் வஸிக்கின்றார்கள். மற்றோரைப்போல் இவர்க்குள் ஸேனைக்கு ஆள்கள் விசேஷமாய் அகப்படுவதில்லை.

பூநஹார்கள் ப்ராஹ்மண க்ஷத்ரியர்களுடைய கலப்பால் ஜநித்தவர்களாக நினைக்கப்படுகின்றார்கள். ஐக்ய மாகாணங்களுடைய

கீழ்-தென்கீழ் பாகங்களில் அவர்கள் வஸிக்கின்றார்கள். ப்ராஹ்மண கர்மங்களை அவர்கள் அநுஷ்டித்தபோதிலும், அவர்கள் அவற்றைப் பண்ணுவிப்பதில்லை; தக்ஷிணைகளும் பெறுவதில்லை. ப்ராஹ்மணரென அந்யர்களை அநுக்ரஹிக்கின்றார்கள். அவர்களைத் தாகூர் என்று அழைப்பார்கள். சிப்பாய் வேலைக்கு அவர்கள் தகுந்தவர்கள்; சண்டைக்கு முந்துகின்றவர்கள். இந்த வகுப்பினர்க்குப் பெனாரஸ் மஹாராஜா தலைவராயிருக்கின்றார்.

கௌட ப்ராஹ்மணர்கள் முக்யமாக ஐக்ய மாகாணங்களின் வடமேல் பாகங்களிலும், பஞ்சாப்பில் கர்நால் ரோடாக் கர்கான் ஜில்லாக்களிலும் இருக்கின்றார்கள். இவர்கள் நல்ல சிப்பாய்கள் ஆவதில்லையாம்; ஜ்ஞாநமற்றவராம்; மதத்தில் பிடிவாதம் உள்ளவராம்; மற்றோரைத் தாழ்மையாக நினைப்பவராம்.

ஸாரஸ்வதர்கள் பஞ்சாப் ராஜதாநியெங்கும் பரவியிருக்கின்றார்கள். ஸரஸ்வதி நதியைப்பற்றி அவர்க்குப் பெயர் வந்தது. அவர்கள் ப்ராயேண ஸேனையில் சேர்வதில்லையாம். சேர்ந்தாலும் டோக்ராளென்று சேர்கின்றனராம். அவர்கள் பரரை நிந்தை செய்வதில்லையாம்.

மேற்சொன்ன வகுப்பினர் யாவரும் அவைதிக ப்ராஹ்மணராம். அவர்கள் ஸேனையில் விசேஷமாகச் சேர்கின்றார்களாம். ஜப்பல்பூர் லலித்பூர் ஸமீபங்களில் இரு சிறு நாடுகளை விலக்கிப் பார்த்தால், ஸேனையில் சேரும் ப்ராஹ்மணர் யாவரும் ஐக்ய மாகாணத்தவர்கள். இம்மாகாணம், (‘[illegible]’ என்கிறபடியே) க்ருஷ்ண ம்ருகம் ஸ்வபாவமாக ஸஞ்சரிக்கும் நாடு. இங்கே ஸத்ப்ராஹ்மணன் வஸிக்கத்தக்கவன். அங்கே வஸிக்கும் ப்ராஹ்மணர் இப்போது சிப்பாய்கள் ஆகின்றனர்.

இன்னும் அங்கே டாகாவென்பவர் வஸிக்கின்றார்களாம். இவர்கள் பாதிதுலுக்கராம். ஓஜாக்காள் [illegible]க்காரராம். மஹாப்ராஹ்மணரென்றும் ஆசார்ஜி என்றும் சொல்லப்பட்டவர் அபரக்ரியைகளைச் செய்விக்கின்றனராம். இவர்கள் ப்ராஹ்மணபாஸர்களாம்.



இந்த விஷயங்களின் உண்மை நமக்குத் தெரியாது. இன்னும் ஸத்ப்ராஹ்மணர்கள் அத்தேசத்தில் வஸிப்பதாய் எண்ணுகின்றோம்.

ஆர்யாவர்த்தமும் ப்ரஹ்மாவர்த்தமும் ஹிமாசலத்துக்கும் விந்த்யத்துக்கும் நடுவிலிருக்கின்றன. ஸரஸ்வதீ த்ருஷத்வதீ நதிகளின் மத்யத்தில் தேவநிர்மிதமான ப்ரஹ்மாவர்த்த ப்ரதேசம் இருக்கின்றது. அவ்விடமே ஸதாசாரம் உண்டாயது. குருக்ஷேத்ரம், பாஞ்சாலதேசம், மதுரை, மத்ஸ்யதேசம் முதலான ப்ரஹ்மர்ஷி தேசங்கள் ப்ரஹ்மாவர்த்தத்தின் அருகாமையிலிருக்கின்றன. ஹிமவத் விந்த்ய மத்யமாயும், ஸரஸ்வதி மறைந்தவிடமான விநஸநத்துக்குக் கீழும், ப்ரயாகைக்கு மேலும் உள்ளதேசத்துக்கு மத்யதேசமென்று பெயர். ஹிமவத் விந்த்ய பர்வதங்களின் நடுவே, கீழ்மேல் ஸமுத்ரங்கள் வரையில் ஆர்யாவர்த்தம் எனப்படும். உத்க்ருஷ்டரான விப்ரர்கள் ப்ரஹ்மாவர்த்தம் ப்ரஹ்மர்ஷி தேசங்களில் முக்யமாகவும், மற்ற விடங்களில் குறைந்தும், மநுஸ்ம்ருதி காலத்தில் வஸித்தார்கள். மஹா பாரத காலத்திலும், பின்னால் புத்தன் கால பர்யந்தம் இந்த ஏற்றம் மேல்சொன்ன தேசங்களுக்கு இருந்தது. ஸ்வாத்யாயம், வ்ரதம், ஹோமம், யஜ்ஞம், பஞ்சமஹாயஜ்ஞம் முதலான ஸத்கர்மங்கள் ப்ராஹ்மணர்க்குள் ப்ரதிஷ்டிதங்களாய் நின்றன. ச்ருதிஸ்ம்ருதிகளால் சொல்லப்பட்ட ஆசாரங்களும் பரம தர்மங்களாய் நினைக்கப்பட்டன. “[illegible]” என்கிறபடியே வேதமறிந்தும் ஆசாரமற்றவன் கெட்டவனென்றே மதிக்கப்பட்டான். இந்த நிலை யாவும் இப்போது மாறிவிட்டனவாக ‘இந்தியாமான்’ பத்ரிகையால் தெரியவருகின்றது. அதற்கு ஸமாதாநமாகச் சிறிது எழுதுகின்றோம்.

புத்தன் காலம் முதற்கொண்டே பல ம்லேச்ச ஜாதிகளால் ஆர்யாவர்த்தமானது பீடிக்கப்பட்டதாகச் சரித்ரம் சொல்லும். பாரதகாலத்திலும் பஞ்சாப் ராஜதாநியின் பச்சிம பாகமான மத்ர தேசத்தைப்பற்றிக் கர்ணன் பாபதேச மென்று சொல்லியிருக்கின்றான். “[illegible]” “[illegible]” “[illegible]” “[illegible]

"[illegible]" என்கிறபடி கர்ணவசநங்கள் உள. இன்னும் பிதா, மாதா, புத்ரர்கள், மாதுலர், ஸஹோதரர், ஸஹோதரிகள், மற்ற பந்துக்கள், மித்ரர்கள், வந்தவர், போனவர் எல்லோரும், "[illegible]" என்று மத்ர தேசத்தாரைக் கர்ணன் தூஷித்தான். இன்னும் "[illegible]" என்றும் "[illegible]" என்றும் "[illegible]" என்றும் சொல்கின்றான். இவ்வண்ணம் பாரத காலத்திலேயே ஆர்யதேச பாகங்கள் கெட்டன. ம்லேச்சர் பரவப்பரவ ப்ரஹ்மாவர்த்தம், ப்ரஹ்மர்ஷி தேசம், மத்யதேசம் யாவும் கெட்டன. துருஷ்கரால் ஆக்ரமிக்கப்பட்ட பிறகு அந்த ப்ரதேசங்களில் ப்ராஹ்மணனா யிருந்தவன், வைதிக தர்மங்களையும் வைதிகாசாரத்தையும் எவ்வண்ணம் காப்பாற்றுவன்? த்விஜர்களுடைய தேஜஸ்ஸை அபஹரிக்கின்றவர் யவநர்கள் என்று மஹாகவி வேங்கடாசார்யர் கூறினார்.

ஆதலால் ஸத்ப்ராஹ்மணர்கள் தக்ஷிண பதத்தை அடைந்தார்கள். ஆபஸ்தம்பர் காலத்தின் முன்பாகவே அவர்கள் ஆந்த்ர தேசத்தில் பரவினார்கள். முடிவில், வைதிகாசாரம் ஸத்ஸம்ப்ரதாயம் முதலானவைகள் த்ராவிடதேசத்தில் நிலைத்தன. அங்கும் தத்காலம் அவற்கு நாசம் எட்டிப்பார்க்கின்றது.

த்ரிமத ஸ்தாபநாசார்யர்களும் தக்ஷிண தேசத்தவர்கள். 'வடமம் முற்றி வைஷ்ணவம்' எனும் பழமொழியின்படியே, ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணர்க்குள் பெரும்பாலோர் முன் வடமரா யிருந்தவர்கள் என்று சொல்லக்கூடும்.

முன் இருந்த ஸ்திதியைப்பற்றி இப்போது நினைத்துப் பயனென்ன? ஸம்பவித்த கேடுகளெல்லாம் நிலைத்திருக்கவே ஸம்பவித்தன.



ஆதலால் தத்காலம் செய்யவேண்டிய தென்னவென்று ஸத்ஸம்ப்ரதாயாபிமானிகள் யோசிக்கத்தக்கவர்கள்.

* * * * * *

தேசிக தூஷணம்.

இவ்வளவு நிந்தைக்கும் திட்டுக்கும் சிகரமாகத் தூஷகர் முடித்தபடி; — தேசிகன் சரீராவஸாநத்தில் ஸ்வாசார்யர்களுடைய பரித்யாக பூர்வகமாகப் பிள்ளை லோகாசார்யரை ஆசார்யனாக வரித்தாரென்பதே. இன்னும் சில தென்கலையார் ஸமீப காலத்தில் தேசிகனுக்குப் பெரியவாச்சான் பிள்ளையை ஆசார்யனாக்கினார்கள். இந்த ரூபமான ப்ரயத்நம் தூஷகரும் ஒரு நாள் தேசிகனுக்கு ஆசார்யனாக முடியலாம்.

இப்போது இருக்கிறபடி தேசிகன் காலத்திலும் தத்ஸமீப காலத்திலும் இருந்த தென்னாசார்யர்கள் எழுதிய புஸ்தகங்களில் அவர்களில் யாரேனும் தேசிகனுக்கு ஆசார்யனானதாக ஓரெழுத்தும் இல்லை. தேசிகனே, "[illegible]" என்று ஸ்வாசார்ய ப்ரகடநம் செய்திருக்கின்றார். இன்னும், "[illegible]" என்றுரைத்துத் தமக்கு ரஹஸ்யார்த்தங்கள், ஆத்ரேய ராமாநுஜாசார்யருடைய ப்ரபிதாமஹனான கிடாம்பி ஆச்சான் பரம்பரையில் கிடைத்ததாகவும் ஸாதித்தருளினார். தேசிகன் குமாரர், "[illegible]" என்று, தேசிகனுடைய ஆசார்யனை வெளியிட்டார். அண்ணனும் [illegible] என்று தேசி

களை விவரித்தார். இதற்கு எதிர் தட்டாகச் சொல்ல ப்ரமாண ரூபமான ஓரெழுத்துகூடத் தூஷகர்க்கு இல்லை. ஆனாலும் தன் இச்சையால் தேசிகன் உக்திகளும், அவர் குமாரர் முதலானோர் உக்திகளும் பொய்யென்று தூஷகர் தள்ளிவிட்டார்.

இன்னும் நிந்தைகளுண்டு. அவற்றைச் சிந்திக்கப் புக்கால் விஷயம் வளரும். இதற்கு அதிகாரிகள் இருக்கின்றார்கள். நாம் அதிகாரம் பெற்றிலோம். பத்தவைரத்தால் தூஷிதமான சித்தமுள்ளவன் '[illegible]' எனும் வசநத்தைத்தான் பின்தொடர்வன். நாம், தேசிகன் வைபவத்தை மஹநீயர்கள் ச்லோகங்களைத் தமிழ்ப் படுத்தி வரைந்தோம். இத்தூஷகர் சொற்கள் அவற்றை மாற்ற மாட்டா. திட்டவேண்டுமென்று இவ்வண்ணம் மஹாப்ரஹ்மவித்தான நிகமாந்தாசார்யனைத் தூஷகர் திட்டினாராகில் திட்டட்டும். பதில் திட்டவேண்டுமானால் சதஸஹஸ்ரக்ரந்தம் எழுதலாம். அதனால் குணமென்ன? பாருடைய மனவருத்தம் நமக்கு ஸுகமாகமாட்டாது. ஆதலால், "[illegible]" எனும் ப்ரமாணங்களை நினைத்து இவ்வளவில் முடிக்கின்றோம்.

ராமாநுஜன் லீலாவிபூதியைவிட்டு எட்டு நூற்றாண்டு முடியவில்லை. அவர்க்குமுன் ப்ராஹ்மணர்களால் ப்ரபலமாய்க் கொள்ளப்பட்டது அத்வைத ஸம்ப்ரதாயம். இப்போதும் நம் ராஜதானியில் ப்ராஹ்மணர்க்குள் ஒரு ஸ்ரீ வைஷ்ணவனுக்குப் பத்து பேர் அத்வைதிகளில் ஏற்படுகின்றார்கள். ராமாநுஜன் காலமுதல் ஸ்ரீ வைஷ்ணவர்களானவர்கள் ப்ராயேண ஸ்மார்த்தர்களே. பூர்வம் இவர்கள் வைதிக ஸ்மார்த்தாசாரங்களை வழிபட்டவர்கள். இவ்வாசாரங்களை இவர்கள் அநுஷ்டிக்க வேண்டிய நியமத்தை ராமாநுஜன் தமது நித்யக்ரந்தத்திலும் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்க



ளின் ப்ரகரணங்களிலும் நன்றாக ஸ்திரப்படுத்தியிருக்கின்றார். தேசிகன் ராமாநுஜ திவ்யஸூக்திகளைச் சிலவிடங்களில் அநுஸரிக்கவில்லை யென்று சொல்கின்றவர்கள், தாங்கள் அந்த ஸூக்திகளை எம்மட்டும் வழிபடுகின்றார்க ளென்பதை யோசிக்கத்தக்கவர்கள். பூர்வம் அநுஷ்டிதங்களான வைதிகாசாரங்களைத் துறக்காமலும் ராமாநுஜனுடைய க்ரந்தரூபமான ஸூக்திகளை வழிபட்டுக் கொண்டும் இருப்பவர் வடகலை ப்ராஹ்மணர்கள். ஸ்ரீ வைஷ்ணவத்துக்கு வைதிகாசாரங்கள் விரோதங்களென்று எண்ணி, அவற்றின் ஸ்வரூபத்யாகத்தில் தத்பரர்களாய், வடகலையார் ஒப்புக்கொள்ளாத சில ஐதிஹ்யங்களை நம்பி நடக்கின்றவர்கள் தென்கலையார்கள். நம் இராஜதானியில் ஆறு வடகலை ப்ராஹ்மணர்களுக்கு நாலு தென்கலை ப்ராஹ்மணர்கள் உளர். செங்கல்பட்டு, சித்தூர், வேலூர், கூடலூர், தஞ்சாவூர் முதலான ஜில்லாக்களில் ஒவ்வொரு தென்கலை ப்ராஹ்மணர்க்கும் மூன்று அல்லது நாலு வடகலை ப்ராஹ்மணர்கள் ஏற்படுகின்றார்கள். சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், சேலம் முதலான ஜில்லாக்களில் இருவருடைய ஸங்க்யையும் ஸமம். மதுரை ஜில்லாவில் வடகலை விப்ரர் நால்வருக்குத் தென்கலையார் அறுவர். திருநெல்வேலியில் இவர் மூவருக்கு அவர் எட்டுப் பெயராகின்றார். இதர ஜில்லாக்களில் இருவரும் தொகையில் மிகக் குறைந்தவர். இதை நாம் 1891-ம் ௵ ஜநஸங்க்யை ரிபோர்ட்டுகளைக் கண்டெழுதுகின்றோம். இராமாநுஜ மதம் ப்ராஹ்மணர்க்குள் பரவிய க்ரமம் மேலெழுதிய உண்மைகளைக்கொண்டு ஊகிக்கப்படலாம். இராமாநுஜன் நிர்யாணத்தின் பிறகு நூற்று முப்பது ஸம்வத்ஸரம் கழிந்தவுடன் தேசிகன் அவதரித்தார். இதற்குள்ளாகப் பழநடையென்றும் புது நடையென்றும் வ்யுவஸ்தை ஏற்படமாட்டாது. ப்ராஹ்மணர்க்குள் அபிஜநஸம்ருத்தி யுள்ளது காஞ்சீ மண்டலம். அங்கு அவர்களில் மிகவும் பரவியது வடகலை ஸம்ப்ரதாயம். ஸ்மார்த்தர்களுக்குள்ளும் சோள தேச வடமர்களைக்காட்டிலும் வடதேசமெனும் காஞ்சீமண்டல வடமர்கள் அத்யாபி பகுமாநிக்கப்படுகின்றனர். அபிஜநர்களு

டைய குடிப்பெயர்களைக் காஞ்சி மண்டலத்தில் தான் விசாரிக்க வேண்டும். பாண்டிய நாட்டில் அதைத் தேடவும் அமையாது. பூர்வம் வைதிக ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்தவர்கள், அத்வைத மார்க்கத்தைத் துறந்து விசிஷ்டாத்வைத மதத்தை அங்கீகரித்தார்கள். அவர்கள் வேதமார்க்க நிஷ்டர்களாய்ப் பெருகியது காஞ்சி ப்ரதேசத்திலும் சோழநாட்டிலும் என்றால், அவர்கள் தர்சநத்தைத் தான்தோன்றி' யென்று வைதிகாசாரத்தில் குன்றியவர்கள் கூறினாராகில், இதைவிட வியக்கத்தக்கதொன்று உலகத்தில் காணமாட்டாது.

ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரதமஸூத்ரபாஷ்யம் மிக விஸ்தரித்தது. அங்கே பூர்வபக்ஷி அத்வைதி. அம்மாள் காலக்ஷேபத்தில் அத்வைத நிரஸநம் இன்னும் பெருகி அதன் ஸாரம் ச்ருதப்ரகாசிகையாய் அமைந்தது. இன்னும் அத்வைதிகள் வாதம் வாதிஹம்ஸாம்புதாசார்யர் காலத்திலும் வளர்ந்தே அப்பெயர் அவர்க்கு வந்தது. பிறகு தேசிகனுடைய காலம். தேசிகன் பகு வாதங்களாலும் வாதக்ரந்தங்கள் செய்தும் பரவாதி நிரஸநம் மிகுதியாகச் செய்தார். அன்றுமுதல் இன்றுவரையில் அத்வைதிகளால் உபரோதம் நேரிட்ட ஸமயங்களில் ராமாநுஜ ஸம்ப்ரதாயாபிமாநிகளான வித்வாங்கள் தேசிகன் க்ரந்தங்களைக்கொண்டு ஸ்வமதத்தை ரக்ஷிக்கின்றார்கள். ஸம்ப்ரதாயத்தை இவ்வண்ணம் ரக்ஷிக்க ஈடு, இயற்பா வ்யாக்யாநம், அஷ்டாதசரஹஸ்யம் முதலான க்ரந்தங்கள் உதவமாட்டா.

தென்கலையார், ஸமீபகாலத்தில் பழநடைவிளக்கம் த்ரிம்சத் ப்ரச்நோத்தரம் முதலான புஸ்தகங்களெழுதித் தேசிகனையும் தூஷித்தார்கள். அவற்றைக் கண்டித்து வடகலையார்களும் தொன்னடைத் துலக்கம், த்ரிம்சத் ப்ரச்நோத்தர கண்டநம், தென்னாசார்ய ப்ரபாவ கண்டநம், சதஸம்வாதம், முதலான க்ரந்தங்கள் எழுதினார்கள். இது நமக்குக் கேள்வி. அப்புஸ்தகங்களனைத்தும் நாம் படித்திலோம். சிலவற்றைப் பார்க்க முயன்றோம். பாச்சாத்யவித்யா பரிசயத்தால் நடுவுநிலைமையை ஆச்ரயிக்க விரும்



பிய் நமக்கு இந்நூல்களில் காணப்பட்ட கதைகளும் வாதங்களும் ஸந்தோஷம் தரவில்லை.

ஆனால் அரங்கமாண்டான் எனப் பெயர்பூண்ட தேசிகதூஷகருடைய துராக்ரஹ நிராக்ருதியைப்பற்றி இவ்வளவு தூரம் யோசித்த காரணம், அவர் எமை உத்தேசித்தே தமது துராக்ரஹத்தைப் பெருகவிட்டார். தீபிகையைப் படிக்கின்றவர்கள் அதற்குக் கிஞ்சித் ஸமாதாநம் அபேக்ஷிப்பார்கள். அந்யரைக்கொண்டு ஸமாதாநம் அளிக்கத் தீபிகை இடந்தராது. நமது நிஷ்டைக்கு அநுகுணமாகச் சிறிது வரைந்தோம்.

ப்ரஹ்மவிதக்ரேஸரனும், கவிதார்க்கிக ஸிம்ஹமனும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனும், வேதாந்தாசார்யனும், ஸமஸ்த கல்யாண குண சாலியும், ஜ்ஞாந வைராக்ய பூஷணனும், ஆசாரம் விநயம் பக்தி க்ஷமை முதலான குணங்களால் அலங்க்ருதனும், ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமனும், வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யனும், ஸச்சரித்ரநிதியும், பகு வித்வத் சிரோமணிகளால் அத்யந்தம் கொண்டாடப்பட்டவரும், வைஷ்ணவ விப்ரர்களில் பெரும்பான்மையோர்க்குப் பரமாசார்யனுமான தேசிகன் அஸப்ய வசநங்களாலும் அந்ருதோக்திகளாலும் மந்தசித்தரால் அவமதிக்கப்பட்டாராகில், இங்நிலைக்கு ஸ்ரீ ஜாநகீகாந்தனும் கீதாசார்யனும் விலக்கானாரில்லை யென்பதை ஸாதுக்கள் சிந்தித்து சாந்த மநஸ்கராய் இருப்பார்கள்.

* * * * * *

**ஆர்ய தர்மம்.**

'ஆர்யதர்மம்' எனும் மாஸாந்தர தமிழ் பத்ரிகையைப்பற்றியும் அதனால் நம்முடைய வைதிக மதத்துக்கு உண்டாகும் நன்மையைப்பற்றியும் முன்பே எழுதியிருக்கின்றோம். கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய அநுமதியின்பேரில் மேற்படி மடம் ஆஸ்தாந பண்டிதராகிய ப்ரஹ்மஸ்ரீ. ப. பஞ்சாபகேச சாஸ்த்ரிகளால்

அது எழுதப்பட்டு வருகின்றது. பல வித்வாங்கள் அப்பத்ரிகைக்கு விஷயதாநம் செய்கின்றார்கள். விஷயங்கள் விலக்ஷணமாய் இருக்கையில் அவை யாவும் யாவரும் படித்தறியக்கூடியவையாக எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டுள. தமது மதம் இன்னதென்று அறியக்கூடாத நிலைமைக்குள் நம் நாட்டுச் சிறுவர்கள் நிலைக்கத்தக்க காலம் வந்துவிட்டதாகையால், ஆர்யதர்மம் போன்ற பத்ரிகைகள் நம் தேசத்தில் பரவிப் பலராலும் படிக்கப்படவேண்டியதை யாம் மிகுதியாக ப்ரார்த்திக்கின்றோம்.

**பிழை திருத்தம்.**

இவ்வருஷம் 'தீபிகை' 238-ம் பக்கத்தில் (ஆடிமாஸம் ஸஞ்சிகை) "𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑌤𑍇𑌤𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑍀𑌰𑍍𑌯𑍇𑌤 𑌹𑌿𑌮𑌵𑌾𑌨𑍍 𑌶𑌕𑌲𑍀𑌭𑌵𑍇𑌤𑍍, 𑌶𑍁𑌷𑍍𑌯𑍇𑌤𑍍 𑌤𑍋𑌯𑌨𑌿𑌧𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌨 𑌮𑍇 𑌮𑍋𑌘𑌂 𑌵𑌚𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍" எனும் ச்லோகமானது தப்பாகத் தமிழ்படுத்தப்பட்டது. அங்கே 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 என்பது ஸம்புத்தி; த்ரௌபதியைக் குறிக்கின்றது. அந்த ச்லோகம், மஹாபாரதம், ஆரண்யபர்வம், பதினோராவது அத்யாயத்தில், ஸ்ரீ க்ருஷ்ணன் த்ரௌபதீக்குச் சொல்லும் ச்லோகம். அதன் தமிழ் அர்த்தம்: "தேவலோகம் கீழே விழலாம், பூமி பிளக்கலாம், ஹிமாசலம் பொடியாய்ப் போகலாம், ஸமுத்ரம் வற்றிப் போகலாம், ஓ த்ரௌபதீ! என் வார்த்தை பொய்யாகாது" இவ்வண்ணம் இருக்கவேண்டும்.

---

162026
600 008

# குருபரம்பராஸார சிந்தனை.

(தொடர்ச்சி)

இப்படிக் குருபக்தி ப்ரார்த்தநாப்ரகாரத்தை அருளிச்செய்து, அப்பக்தியின் ப்ரகாசத்துக்கு ஜயோக்திரூபமாக மற்றோர் ப்ரயோகம் அருளிச்செய்கின்றார், '𑌹𑍃𑌦𑌿' என்று ஆரம்பிக்கும் ச்லோகத்தால்.

பத்மாகாரமாயிருக்கும் ஹ்ருதயமானது ஹயக்ரீவனுக்கு ப்ரியமான ஸிம்ஹாஸநம். ஹ்ருதயம் 'பத்மகோஶ ப்ரதீகாஶம்' என்று ச்ருதி சொல்லிற்று. '𑌹𑍃𑌦𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌯𑌤𑌨𑌂 𑌮𑌹𑌤𑍍' என்பதால், விச்வத்துக்கும் ஆத்மாவாயிருக்கும் பரமாத்மாவினுடைய உத்க்ருஷ்ட ஸ்தாநங்களில் ஹ்ருதய மொன்று. '𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌶𑌿𑌖𑌾𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃' என்பதால், ஹ்ருதயாந்தர்கதமான அக்நியின் மத்யே, அதிஸூக்ஷ்மமாயும் ஊர்த்வாக்ரமாயும் இருக்கும் அக்நியின் சிகையைப்போன்ற ஆத்மாவாகும் ஜ்வாலை இருக்கின்றது; அந்த ஆத்ம ஜ்வாலையின் மத்யே பரமாத்மா அதை விசேஷ ஸ்தாநமாகக்கொண்டு வீற்றிருக்கின்றான் என்று ச்ருதியால் ஏற்படுகின்றது. கீதாசார்யனும், '𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃', என்றும், '𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿', என்றும், எல்லா ப்ராணிகளின் ஹ்ருதயங்களில் தனது இருப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த உண்மை எல்லா ப்ராணிகட்கும் பொருந்தும். ஆசார்யர்களுடைய ஹ்ருதயங்களில் பகவான் விசேஷித்து அநுப்ரவேசம் செய்கின்றானென்பது ப்ரமாணஸித்தம். லோகத்தார்க்குத் தத்வஹித புருஷார்த்தங்களைக் காட்டும் அத்யாத்மசாஸ்

த்ர ப்ரவர்த்தகம், அந்த அநுப்ரவேசத்துக்கு முக்ய தாத்பர்யமாகையால், '[illegible]' எனும் வசநப்படி, இதர ப்ராணிகளிடம் அநுப்ரவேசம் கார்யாந்தரங்களைப்பற்றி இருந்தபோதிலும், ஆசார்யர்களிடம் அநுப்ரவேசத்தைப் பகவான், அவனுக்கு ப்ரியதமமாயும், கேவலம் ஸத்வப்ரதாநமாயும் இருக்கப்பட்ட ஹயக்ரீவ ரூபத்தோடும் செய்கின்ருன். இந்த பகவத்ரூபம், கேவலம் ஜ்ஞாநாநந்தமயம் என்றும், ஸர்வவித்யைகளுக்கும் ஆதாரம் என்றும் தேசிகனே ஸாதித்திருக்கின்ருர். ஆதலால் ஆசார்யர்களுடைய ஹ்ருதய பத்மமாகின்ற ஸிம்ஹாஸநத்தில், ஹயக்ரீவன் ரஸிகனயிருக்கின்ருன் என்று சொல்லுகிருர். அது அவன் மிகவும் உகந்தருளிய ஸ்தாநம். ஹயக்ரீவன் வெள்ளைப்பரிமுகராதலால், அவர் திருவாக்கின் மொழிகளை ஹேஷையென்று ஸாதிக்கின்ருர். ஹேஷையென்ருல் அச்வத்வநி. அதனல், ஆசார்யர்களுடைய வாக்யங்களெல்லாம் ஹயக்ரீவன் சொற்கள் என்று கருத்து. இந்த ஹேஷையெனப்பட்ட ஹயக்ரீவாவதாரங்களான ஆசார்யர்களுடைய உக்திகள், ஸமுத்ரத்தின் அலைகளின் கோஷத்தை யொத்தனவென்று ஸாதிக்கின்ருர். ஏனென்ருல், அவ்வலைகளைத்தடுக்க யாவராலும் முடியாது. அவற்றின் சப்தம், மற்ற எல்லா சப்தங்களையும் அடக்கிக்கொண்டே எப்போதும் பரவுகின்றது. அவ்வண்ணமே, ஆசார்யரூபதாரியான ஹயக்ரீவன் வாக்யங்கள், ப்ரதிவாதிகள் சொல்லும் யுக்திகளால் கொஞ்சமும் சலிக்கப்படாமல், அந்தப்ரதிவாதிகளுடைய கர்வத்தையும் நிவர்த்திக்கின்றன. ஆதலால் ஹயக்ரீவனுடைய அநுக்ரஹத்தாலேயே நம் பூர்வாசார்யர்கள் வாசாலரான அந்ய ஸம்ப்ரதாயஸ்தருடன் வாதம்செய்து, அவர்களை ஜெயித்துப் பரமதங்களை நிரஸித்தார்கள். அவர்களுடைய வாதகோஷங்களை ஹயக்ரீவனுடைய ஹேஷாகோஷங்களாகச் சொல்லப்பட்டன. வாதிகள், தங்களுக்குவாதத்தில் துர்ப்பலம் நேரிட்டாலும் தங்களுடைய மதங்களுக்குத் துர்ப்பலம் நேரிடவில்லை யென்று சொல்லலாம். ஆதலால் '[illegible]' என்று சொன்



ஞர். மதங்கள் துர்ப்பல மற்றனவாக நினைத்துக் கர்வங்கொள்ளவும் இடங்கொடாமல், அவர்களே ஒப்புக்கொள்ளும்படி '[illegible]' என்று பாஷ்யகாரர் ஸாதித்த க்ரமத்திலே, ஸத்யுக்திகளால் அவர் மதங்களை நம் பூர்வாசார்யர்கள் நிரஸித்தனர் என்று திருவுள்ளம்.

இப்படி '[illegible]' என்பதால் நம்முடைய ஆசார்யர்களுக்கும் ஹயக்ரீவனுக்கும் அபேதத்தை ஸ்மரித்து, அவர்களுடைய ஹ்ருதய கமலங்களில் நித்யவாஸம் செய்தருளிய ஹயக்ரீவனுடைய திரஸ்கரிக்கக்கூடாத வாக்யங்களால் ப்ரதிவாதிகளெனப்பட்டவர்கள் அவ்வவர் மதங்களுடைய தௌர்பல்யத்தை ஒப்புக்கொண்டு கர்வபங்க மடைந்தனர் என்று ஸாதித்தருளினர்.

இப்படி வாதங்களால் மதாந்தர நிரஸநத்தை வர்ணித்து, ஆசார்யர்கள் பகு க்ரந்தங்கள் செய்தருளிப் பரஸித்தாந்தங்களை நிராகரித்தபடியை வர்ணிக்கின்ருர்.

பத்துத்திக்குக்களும் பத்து ஸௌதங்களாம், அதாவது அரண்மனைகளாம். அவற்றின்பேரில் ஜயத்வஜ படங்கள் ஸ்தாபிக்கப்பட்டனவாம். அந்தக் கொடிகளின் ஸம்பந்தத்தை யடைந்த காற்று மேல்மேல் வ்ருத்தியடைந்து, தகையக்கூடாத வேகத்துடன்கூடி அடிக்கின்றதாம். அந்தக் காற்ருல் ராஜமார்க்கத்தில், அம்மார்க்கம் மறையும்படி அங்குமிங்கும் சிதறிக்கிடந்த பஞ்சுக் கொத்துகளின் கூட்டங்களெல்லாம் பறக்கடிக்கப்பட்டனவாம். அதன் பிறகு அந்த மார்க்கம் சுத்தமாய் ப்ரகாசித்ததாம்.

பத்துத் திக்குகள் என்றதால், ஸர்வதேசங்களு மென்றர்த்தம். ஸௌதங்களென்பதால் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் உந்நத ஸ்தாநங்கள் ஸூசிதம். அவ்விடம் ஸ்தாபிதங்கள் என்பதால், ஸர்வதேசங்களிலும் மஹாவைபவத்துடன் ப்ரகாசிக்கின்றன வென்று தாத்பர்யம். நம் பூர்வாசார்யர்கள், ஜகத்தில் ஸர்வதேசங்களிலும் க்யாதியடையும்படி, ஜயத்வஜங்களென தம்முடைய ந்யாயதத்

வம், ஸித்தித்ரயம், ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தங்களை வ்யாபிக்கச்செய்தனர். அக்ரந்தங்கள் ஸம்பந்தத்தை யடைந்தன, பின்னால் ஆசார்யர்கள் செய்த ஸ்ரீபாஷ்யாதிகளுடைய உத்தரோத்தர ப்ரவசநங்களும், ஶததூஷணீ முதலான க்ரந்தங்களும், இவை அதிவேகமான காற்றைப்போன்றன. மோக்ஷமார்க்க மென்பது தான் ராஜமார்க்கமாக வர்ணிக்கப்பட்டது. ஶ்லோகத்தில் ஸத்வர்த்தநீ அதாவது ஸந்மார்க்க மென்று சொல்லப்பட்டது. இதை அங்கங்கே மூடி நின்ற, தத்தத் ஸித்தாந்தங்க ளெனப்பட்ட பரமதங்களின் ஸ்தோமத்தைத் தூலஸ்தபகங்களென்றார்; அதாவது பஞ்சின் கொத்துக்கள். ஜயத்வஜ படங்களாகின்ற ஸ்ரீபாஷ்யாதிகளுடைய ஸம்பந்தத்தால் வ்ருத்தியடைந்த மஹா வேகத்துடன் கூடிய காற்றாகிற ப்ரவசநங்களும், ஶததூஷணீ முதலான ப்ரபந்தங்களும், ஸந்மார்க்கமெனும் மோக்ஷமார்க்கத்தை மநுஷ்யர்க்குத் தெரிய வொட்டாமல் மறைத்துநின்ற பஞ்சுக்கொத்துகளின் கூட்டம்போன்ற அந்ய ஸம்ப்ரதாயங்களின் கூட்டத்தை, அவற்றிற்கு ஸாதகப்ரமாணங்க ளின்மையாலும், அவை அநேக பாதகங்களால் மூடப்பட்டிருக்கையாலும், பறக்கடித்தபடியால், இப்போது மோக்ஷமார்க்கம் ஸ்பஷ்டமாகத் தெரிகின்றதாம். தேசாந்தரங்களில் வஸிக்கும் ஶிஷ்டர்களான புருஷர்களும், அங்கே பரவியிருக்கின்ற நம்முடைய பூர்வாசார்ய க்ருதங்களான க்ரந்த விசேஷங்களைப் பார்த்துப் பரமதங்களின் தௌர்பல்யத்தையும், நம் ஸித்தாந்தத்தின் மஹிமையையும் கண்டறிந்து, மோக்ஷமார்க்கத்தை விஶதமாகத் தர்சிக்கின்றாரென்று தாத்பர்யம். இப்படி மோக்ஷமார்க்கத்தை ப்ரகாசிப்பித்தவர்கள் நம்மாசார்யர்கள்.

'[illegible] * * [illegible]' என்பதால், ஸர்வதேஶங்களிலும் ஜகத்தெங்கும் க்யாதியடைந்த விபவத்துடன் கூடிய ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்கள் என்ன, அவற்றின் ப்ரவசநங்களென்ன, அவற்றை அநுஸரித்துண்டான ஶததூஷணீ முதலான க்ரந்தங்களென்ன, இவற்றால் நிரஸிக்கப்பட்ட ஸர்வபாஹ்ய ஸித்தாந்தங்களும் லோபத்தையடையவே, மோக்ஷமார்க்கமானது ஸரியாய் ப்ரகாசிக்கும்படிச் செய்தவர்கள் என்றுகருத்து.



அப்படிப்பட்ட நம்முடைய ஆசார்ய பரம்பரையானது பஹு குணங்களுடன் கூடியது. அது ஜயதி, அதாவது ஸர்வோத்கர்ஷமாய் இருக்கின்றது. ஆதலால் அது [illegible] அதாவது, மிகுந்த பக்தியுடன் த்யானிக்கத்தக்கது என்று ஶ்லோகார்த்தம். (1)

இதன் பிறகு தேசிகன் தம்முடைய ஆசார்ய பரம்பரையில் விசேஷித்தவர்களும், ஸம்ப்ரதாயத்துக்கு க்ரந்தங்கள் செய்தருளி அதிஶயித உபகாரம் செய்தவர்களும், மதாந்தர நிரஸநம் செய்தவர்களுமான பாஷ்யகாரர், ஆளவந்தார், ஸ்ரீமந்நாதமுனிகள் இவர்களை மூன்று செய்யுட்களால் தனித்தனியே அநுஸந்திக்கின்றார்.

வேதாந்த ஶாஸ்த்ரத்தினுடைய ருஜுவான மார்க்கத்தை அழித்தவரும், ஹேதுவாதங்கள்செய்வதில் பலிஷ்டருமானபாஹ்ய குத்ருஷ்டிகளுக்கு, ஒரு அத்விதீயமான கஜேந்த்ரன் போல்வந்து அவதரித்து, அவர்களுடைய வாதங்களாகின்ற வாழைகளை த்வம்ஸம் செய்த லோகோபகாரகனும், ஸ்வரூபாநுரூபமாகவும், லோகத்திற்கே யலங்காரமா யிருக்கின்றதுமான யஶஸ்ஸுடன் கூடிய இராமாநுஜ முனியினுடைய ஸ்வாதுக்களான ஸ்ரீபாஷ்யம் முதலான திவ்யஸூக்திகளை ஸதா சிந்திப்பதால் உண்டான ஶமதமாதி குணங்களால் அலங்க்ருதமான மநஸ்ஸை யுடைய

(1) [illegible]

நாம், இனி, ப்ராசீந துஷ்கர்ம நிமித்தமாகச் சிந்திக்க மாட்டோம்; பகவானுக்கு அநபிமதமான கர்மங்களையும் நினைக்கமாட்டோம். (1)

தீர்க்க காலமாய் ஸம்ஸாரத்தில் ஸஞ்சரித்து வந்து, இந்த ஜந்மத்தில் பகவானுடைய க்ருபா ப்ரயுக்தமான பாக்யவிசேஷத்தால், ஆத்மாவின் ஸ்வரூப ஜ்ஞாநத்தையும், அதற்கேற்ற பரம புருஷார்த்தத்தில் இச்சையையும் அடைந்தவர்களான நாம், மறுபடியும் ஸம்ஸாரத்தில் ப்ரவேசித்து, துஷ்கர்மத்தால் உண்டானவையும் துஷ்கர்மங்களுக்குக் காரணமா யிருக்கின்றவையுமான சரீரங்களை யடைந்து, அந்த சரீரங்களே ஆத்மா வெனும் ப்ரமையுடன்கூடி, நரகாதிகளில் விழுந்து யாதனைப்படாத வண்ணம், நம்மை ரக்ஷிக்கவந்தவ ரென்று யாவராலும், கொண்டாடும்படி க்ரந்தங்கள் செய்தருளி மஹாபுருஷ ஸ்வரூபாதி நிர்ணயங்களாலே நாம் அநந்யார்ஹசேஷர் எனும் ஜ்ஞாநத்தை நமக்கு உண்டு பண்ணி நம்மை ரக்ஷித்து, ப்ரதிவாதிகளை ஜயித்தும் லோகத்தார்க்கு க்ருபைபண்ணியும் 'விளங்காநின்ற கல்யாணகுண விசிஷ்டரான ஆளவந்தார்க்கு அடிமையானோம். ஆதலால், அவருடைய கடாக்ஷத்திற்கு விஷயரான பின்பு, அந்யாயரூபமானவையும் ஸம்ஸார மூலமானவையும் அஹங்கார மமகாரங்களை வ்ருத்திபண்ணுமவையும், அசேஷத்வ அந்ய சேஷத்வ ப்ரமைகளை அதாவது, நான் ஸ்வதந்த்ர னென்றும், பகவானைத் தவிர மற்றொருவர்க்குப் பாரதந்த்ர னென்றும் உண்டாகும் ப்ரமைகளை நிலைக்கச்செய்பவையுமான அஸத் சாஸ்த்ரங்களைப் படிக்கமாட்டோம்; குமதிமதங்களாகின்ற பாதாள குஹரங்களில் கால்படியோம். (2)

(1) ஆரணநூல்வழிச்செவ்வை யழித்திடுமைது கர்க்கோர், வாரணமாயவர் வாதக்கதலிகள் மாய்த்தபிரான், ஏரணிகீர்த்தி யிராமாநுசமுனி யின்னுரைசேர் சீரணிசிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே.

(2) நீளவந்தின்று விதிவகையால் வினைவொன்றியநாம், மீளவந்தின்னும் வினையுடம்பொன்றி விழுந்துழலா, தாளவந்தாரெனவென் றருள்தந்து விளங்கியசீர், ஆளவந்தாரடியோம் படியோமினி யல்வழக்கே.



பரம புருஷனுடைய சக்ரம்போலும், வலம்புரிசங்கம்போலும், வாதகாலங்களில் கம்பீரமான உக்திகளால் ப்ரதிவாதிகளுக்குப் பயங்கரராயும், 'என்றும் பகவானுடைய அதிசயாவஹராயு மிருந்து குருபக்தியுள்ளவரும், மருமக்களுமான மேலையகத்தாழ்வான் கீழையகத்தாழ்வா னென்று பெயர்கொண்ட தம்முடைய அடியார்க்கு, காந்தர்வவித்யையை உபதேசித்து த்ராமிட வேதத்தினுடைய போக்யமான காநத்தை உபதேசித்த மஹோதாரனும், முமுக்ஷுக்கள் ஆதரத்துடன் அநுஷ்டிக்கத்தக்க பக்தி ப்ரபத்தி மார்க்கங்களை, அல்லது, யோகரஹஸ்யமெனும் ப்ரபந்தத்தால் முமுக்ஷுக்கள் ஆதரத்துடன் ஸ்வீகரிப்பதும், கர்மயோகத்தால் ஸாத்யமானதுமான பக்திமார்க்கத்தை ப்ரவர்த்திப்பித்தவருமான ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளை ப்ரதிதிநமும் ஸேவித்து உஜ்ஜீவிப்போம். இந்த ஸர்வலோகத்திலும் நம்மைப்போன்ற பாக்யவந்தர் யார் உளர்? (1)

ஆதலால் க்ரந்தாரம்பமாகின்ற உபோத்காதாதிகாரத்தில் இவ்வாசார்ய பரம்பராநுஸந்தாநத்தை மீண்டுமோர் ச்லோகத்தால் செய்தருளுகின்றார். அந்தப்பரம்பரை அவருடைய ஆசார்யன் முதல் பகவத் பர்யந்தமாக நின்றது. பல கல்யாணகுணங்களால் ப்ரஸித்தமானது. ஸகல நிஷித்தகுணங்களுமற்றது. ஆதலால் அவ்வாசார்ய பரம்பரையில் ஒவ்வொரு புருஷனும் பகவானைப்போல் அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணகுணைகதாநர் என்று ப்ரஸித்தமாக ஏற்படுகின்றது. பகவானையும் ஆசார்யர்களையும் சேர்த்து இவ்வண்ணம் சொல்வதால் அவர் எல்லோர்க்கும் பகவத் ஸாம்யம் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஆசார்ய ஸந்ததியை ஸேவிக்கின்றார். ஏனென்றால், அவர்கள் செய்தருளின மஹோபகாரமின்றித் தமக்கு க்ரந்தாரம்பமே ஸம்பவிக்காது என்று திருவுள்ளம். அவர்களுடைய ப்ரஸாதத்தால் தம்முடைய

(1) காளம்வலம்புரியன்னநற் காதலடியவர்க்குத், தாளம்வழங்கித் தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல் மூளும்தவநெறி மூட்டியநாத முனிகழலே, நாளுந்தொழுதெழுவோம் நமக்கார்நிகர் நானிலத்தே.

மநஸ்ஸில், ரஹஸ்யத்ரயங்களெனப்பட்ட மஹாமந்த்ரங்களுடைய ஸாரார்த்தம் ஸ்திரமாய் ப்ரகாசிப்பதாய் ஸாதித்தருளுகின்றார். (1)

க்ரந்தாரம்பத்தில் மங்களாசாரமாக ஆசார்யபரம்பரையை நமஸ்கரித்து தாம் சொல்லப்போகின்ற அர்த்தங்கள் ஸாம்ப்ரதாயிகம் என்று காட்டியருளுகின்றார். இவ்வண்ணம் குருபரம்பரா ஸாரத்தின் உத்தேச்யத்தின்படிக் குருபரம்பராநுஸந்தானம் கர்த்தவ்யம் என்றும் ஸமர்த்திக்கின்றார்.

'சீரொன்று தூப்புல்............வாழ்வு' என்றபடியே, ஸ்வாமியின் ஒவ்வொரு சொல்லும் நமக்குப் பகவத் ப்ராப்தி பர்யந்தம் ஸஹகரிக்கப் போதுமானது. அப்படிப்பட்டச் சொற்களால் கட்டப்பட்ட ஓர் அதிகாரத்தைச் சிந்திக்கச் சிந்திக்க அத்யல்ப மதியான எனக்கும், தோன்றியவற்றிலோர் லேசத்தைமட்டும் இவ்வண்ணம் எழுதலானேன். இந்த யோசனை இவ்விடத்தில் இனி விஸ்தாரத்தை ஸஹிக்கமாட்டாது. யானே இதை இன்னும் விஸ்தரிக்கப் பொருந்துமாகில், மஹாஜ்ஞாதாக்களான தேசிக பக்தர்கள் இன்னும் எம்மட்டும் யோசிப்பார்களோ அறியேன். அப்படிப்பட்ட வாதிஹம்ஸாம்புதாசார்யருடைய சிஷ்யரிடம் பக்தியொன்றே யாவர்க்கும் உத்தாரகமாயிருக்கும். அஃதின்றேல் யதீந்த்ரனுடைய அப்ரியத்வம், பகவத் கடாக்ஷத்தினின்று விலக்கு, இவை ஸம்பவிக்குமென்று அண்ணன் ஸாதித்தார். நம் வேங்கடநாதன் தம் பூர்வாசார்யாநுஸந்தானம் பண்ணினபடியை யோசித்தால், அவரிடம் நாம் எத்தகைய பக்தியைச் செய்ய வேணுமோ அதை அளவிடக்கூடவில்லை. தேசிக பக்தரான கவி வேங்கடாசார்யர் '[illegible]........[illegible]' எனும் ச்லோகத்தால், ஆசார்யபரம்பரையாகின்ற ஹாரத்துக்குத் தேசிகன் நடுநாயகமென்று நிச்சயித்தனர்.

பத்ராதிபர்.

(1) [illegible]

ஸ்ரீ:

# ஜநகநந்திநீ.

கேசவாசார்யர் ஜாமாதாவுக்கு விஷயாபிமுக்யம் என்றுமிலது. கல்யாண காலத்தில் தனது சித்தவ்ருத்தியை அவர் தெளிவாய் அறிந்துகொள்ளவில்லை. அதனாலும், பிதாவின் ஆஜ்ஞையை அநுஸரிக்க வேண்டுமெனும் ந்யாயத்தால் ஜநகநந்தினியைப் பார்யையாக க்ரஹித்துக்கொண்டனர். துர்யாச்ரம லக்ஷணத்தைக் குறைபடாமல் பொருந்திய யதிச்ரேஷ்டரை ஆசார்யராக அடைந்தார். அந்த ஸ்வாமியினிடம் அத்யாத்ம வித்யையை அப்யஸிக்க, அப்யஸிக்க, அவர் மநஸ்ஸும் விஷயங்களில் ஸஞ்சாரத்தை மிகவும் குறைக்கத் தலைப்பட்டது. அவருடைய ஸர்வ ஸம்சயங்களும் நிவ்ருத்திக்கப்படவே, ஹ்ருதய க்ரந்திகள் பேதிக்கப்பட்டன. ஆத்மஜ்ஞாநமும், பகவத் பக்தியும் நிலைத்துக் குடிகொண்டன. மநஸ்ஸில் கர்மங்களில் ப்ரவ்ருத்திக்கு ஹேதுவாகின்ற ப்ரயத்நங்கள் உதிக்கவில்லை. அவர்க்குக் கொஞ்சகாலமாக ஸந்யாஸம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று அத்யவஸாயம் உண்டாயது. ஸ்வாமியை இரண்டொருதரம் அதனிமித்தமாக ப்ரார்த்தித்தனர். முதலில் ஸ்வாமி மறுமொழி தந்தாரில்லை. மறுபடியும் வீரராகவாசார்யர் தம்முடைய இஷ்டத்தை ப்ரஸ்தாபிக்கவும், ஸ்வாமியானவர், "வீரராகவாசார்யரே! இதென்ன விபரீத புத்தி! ஒரு பெண்ணை விவாஹம் பண்ணிக்கொண்டீர். அவளுடன் கூடி க்ரஹதர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றுதானே அவ்வண்ணம் செய்தீர்? இப்போது அவளைத் தெருவில் விட்டுவிட்டு யதியாகப் போகவேண்டுமென்கின்றீர்" என்றனர்.

"அடியேன் யாது சொல்லக்கூடும். க்ரஹஸ்தாச்ரமத்தை இச்சித்து விவாஹம் செய்துகொண்டாலும், இப்போது அடியேன் சித்தத்தில் வைராக்யம் நிலைத்துவிட்டதே! வைராக்யம் நிலைத்த

வனுக்கு விஷயத்தில் ப்ரவ்ருத்தியுண்டாக மாட்டாதே! ஸந்யாஸமும் விளம்பிக்கக்கூடாதே!" என்று சொன்னார் வீரராகவாசார்யர்.

"ஆமாம். ஶாஸ்த்ரம் வகுத்த சப்தங்களை ஸரியாகத்தான் வ்யவஹரிக்கின்றீர். நீரோ சிறு பிள்ளை. புத்தியில் பட்டதெல்லாம் நிலைத்ததாக எண்ணத்தக்கவர். பகு வர்ஷங்கள் நீர் காக்கவேண்டும். அதுவரைக்கும் பார்யையுடன் வாஸம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது, உமக்கு இப்போதுண்டான யோசனையானது குன்றாமல் நிலைத்திருப்பதாகத் தோன்றியதாகில் என்னிடம் வாரும். அப்போது தக்கபடி யோசிக்கின்றேன்" என்று சொன்னார் ஸ்வாமி.

அதன் பிறகு வீரராகவாசார்யர் ஸ்வாமியினிடம் அந்த விஷயத்தைப்பற்றி ப்ரார்த்திக்கிலர். ஆனால் அவ்விஷயம் அவர் மநஸைக் கவர்ந்துவிட்டதே. கேவலம் அவஸர ப்ரதீக்ஷராய் அவர் நின்றனர். அப்படி அவர் நிற்கையில் பத்மநாபாசார்யர் அவரிடம் வந்தனர். இருவருடைய சித்தவ்ருத்தியும் பிந்நப்பட்டிருக்கவே, அவர்களுக்குள் நடந்த வார்த்தைகள் இருவர்க்கும் ஸுகம் தரவில்லை. ஆனால் பத்மநாபாசார்யருடைய ஆகமநம் வீரராகவாசார்யருடைய ஹ்ருதயத்தில், அவர் கொண்ட கருத்தைப்பற்றி ஒரு தீவ்ரமான இச்சையை உண்டாக்கிவிட்டது. கல்யாண காலத்தில் அவர் பார்யையைப் பார்த்தவரே. ஆனால் பரர் ப்ரவ்ருத்தியைப் பகுமானித்துக் கல்யாணம் செய்துகொண்டவர், பெண்ணின் ரூபாதிஶயத்தை நன்றாய் அறிந்துகொள்ளும் வகையாக அவளைக் கண்டாரில்லை. அவளுடைய புத்தியையும் ஜ்ஞானத்தையும் தெரிந்துகொண்டாரில்லை. ஆதலால் ஜநகநந்தினியின் ரூபமும் ஜ்ஞாநமும் குணமும் அவர்க்கு இத்தன்மையனவெனத் தெரியவேயில்லை.

அது பகவத்ஸங்கல்பம். அதற்காக யார்தான் யாரைத்தான் பழிக்கக்கூடும்? காவல்பாக்கம் ராமானுஜாசார்யர் தம் குமாரர்க்கு விவாஹயோக்யமான வயஸ் வந்ததென்றும், தக்க குடும்பத்தில் பிறந்தவளாய், ஜ்ஞானம், ஶீலம், ரூபம் முதலான ஏற்றங்கள் உள்ளவளாய்க் கந்யை கிடைக்கின்றாளென்றும் நினைத்து விவாஹத்தை முடித்தார். அவர் குமாரரோ விவாஹத்தில் ப்ரியமில்லாதவராயிருந்தும், ப்ரவ்ருத்திமார்க்



ஹும் ஆபிமுக்யம் இல்லாதிருப்பதாகத் தெரிந்துக்கொள்ளாதவராய்க் கல்யாணம் செய்துகொண்டார். கேசவாசார்யரோ குலத்தாலும் வித்யையாலும் சிறப்புற்ற வரன் கிடைத்ததா யெண்ணி வீரராகவாசார்யருக்குத் தமது கந்யையைத் தானம் செய்தார். இப்படி ஜநகநந்தினிக்கு விவாஹமெனப்பட்ட ஸம்ஸ்கார விசேஷம் அமைந்தது. வீரராகவாசார்யர் ப்ரஹ்மவித்யையை அப்யஸிக்கவும், லோக வ்யாபாரங்களில் நிர்வேத மடைந்தனர். "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" எனும் வாக்யத்தை யோசித்துத் தமக்கு வைராக்யம் முற்றினதாக வெண்ணித் தாம் ஸந்யஸித்துக்கொள்வதில் யாதொரு க்ரமவிரோதமும் இல்லையென்று நிச்சயித்தனர். தம்மை யடைந்த பத்நீ தம்மைப்போல் வைராக்யத்தில் நிஷ்டையை அடையக்கூடுமென்றும், அவள் அப்படிச் செய்வதுதான் ந்யாயமென்றும் எண்ணினார். தாம் அவளுக்கு ஓர் கேடு விளைவிப்பதாக எண்ணினாரில்லை.

இப்படிப்பட்ட சித்த பரிபாகத்துடன் கூடினவருக்குப் பத்மநாபாசார்யருடைய வரவும், அவருடைய வார்த்தைகளும் கஷ்டத்தை விளைவித்தன. அவர்க்கு ஸந்யாஸத்தில் த்வரையுண்டாய்விட்டது. ஸ்வாமியை மறுபடியும் ப்ரார்த்திக்கப் பயந்தார். ஸ்வாமியோ பார்யையுடன் சில காலம் வாஸம் செய்துவிட்டுப் பிறகு ஹ்ருதய ஸ்திதியைப்பற்றி ஶோதிக்கச்சொன்னார். அது அநாவஶ்யகம் என்று வீரராகவாசார்யர் நினைத்தார். இப்படி இருக்கையில், ஸ்வாமிக்குத் திருமேனியில் பாங்கு வரவரக் குறைந்தது. சிஷ்யர்கள் ஸ்வாமியினுடைய வியோகத்தைப்பற்றிச் சிந்திக்கவும் ஆரம்பித்தார்கள். ஆதலால் ஒரு ராத்ரி ஸ்வாமி ஏகாந்தமாய் ஶயனித்திருக்கையில் வீரராகவாசார்யர் ஸ்வாமியை நெருங்கினார்.

"ஆர் அங்கே?" என்று ஸ்வாமி வினவினார்.

"அடியேன்தான், வீரராகவன்." என்றார் வீரராகவாசார்யர்.

"இந்த ராத்ரியில் எங்கே வந்தீர்? என்ன விசேஷம்?" என்று கேட்டார் ஸ்வாமி.

"திருமேனி நோவு சாத்திக்கொண்டிருக்கின்றதே." என்றனர் வீரராகவாசார்யர்.

" ஆம். சரீரம் சரீரப்ரக்ருதியை அநுஸரிக்கின்றது. அதைத் தடுக்க யார்க்கு முடியும்? " என்றார் ஸ்வாமி.

" ஒவ்வொரு வஸ்துவும் அதன் ஸ்வபாவத்தில்தான் நிற்கும். ஒவ்வொரு சேதநனும் ஸ்வகர்மாயத்த சரீரஸ்திதியுடன் கூடின வன் தான். ஆனாலும் அடியேனுடைய ஜீவநம் ஸ்வாமியை ஆச்ர யித்து நிலைக்கவேண்டியிருக்கின்றது. ஆதலால் ஸ்வாமி துர்ப்பல மடைவது அடியேனுக்கு சோககாரணமாகின்றது " என்று சொன்னார் வீரராகவாசார்யர்.

" நீர் அபிஜாதரன்றோ? ஸ்திதப்ரஜ்ஞரன்றோ? ஜ்ஞாதாக்க ளுக்கு சோககாரண மென்று ஒன்றுண்டா? எல்லா சேதந ருடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி ஈச்வராதீந மன்றோ? ஒரு சிஷ் யன் ஆயுஸ் உள்ள வரையில் ஆசார்யன் ஜீவித்திருக்கவேண்டு மென்று எண்ணவுங் கூடுமோ? பக்வமான பழம் முன்னே விழும். மற்ற பலன்கள் விழுவதற்குத் தம்முடைய பக்வ காலத்தை ப்ரதீ க்ஷிக்கும். அப்படியே வ்ருத்தர் முன்பு மரணத்தை அடைகின் றார்கள். யுவாவானவன் தனக்கு வார்த்தக காலம் வருமுன் மர ணத்தைப்பற்றிச் சிந்திக்கலாமோ? " என்று சொன்னார்.

" க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் " என்று வசநமிருக்கின்றதே " என்றார் வீரராகவாசார்யர்.

" அதனால் க்ருதக்ருத்யனுக்கு மரணத்தைப்பற்றிப் பயங் கூடா தென்று தாத்பர்யம். மரணம் நேரிட்டால் இஷ்டந்தான். அது ப்ராப்தகாலம் வந்தால் தான் நேரிடும். எப்போதும் மரணத்தைப் பற்றி யொருவன் சிந்திக்கவேண்டுமென்பது ச்லோக தாத்பர்ய மன்று. இங்கே இருக்கும்போதும் க்ருதக்ருத்யன் பகவத் கிங்க ரன்தான் " என்று சொன்னார் ஸ்வாமி.

இந்த வார்த்தைகள் வீரராகவாசார்யர் வேண்டிய ப்ரஸ்தா பத்துக்கு இடந்தரவில்லை. ஆதலால் அவர் மௌநமாயிருந்துவிட் டார். அவ்விடத்தைவிட்டுச் செல்லவுமில்லை. கண்களை மூடின வராய் ஸ்வாமியும் இருந்தார். மறுபடியும் கண்களைத் திறந்தார். வீரராகவாசார்யர் நின்றவிடத்திலேயே நிற்பதைக் கண்டார். " ஏன் நிற்கின்றீர்? ஏதாவது சொல்லவேண்டுமோ? " என்று ஸ்வாமி சொன்னார்.



" அடியேன் யாது சொல்லப்போகின்றேன்? அடியேன் விஜ
ஞாபிக்கவேண்டிய அம்சம் ஸ்வாமிக்குத் தெரிந்ததே " என்று
சொன்னார் வீரராகவாசார்யர்.

ஸ்வாமி அவரைக் கண்களை நன்றாகத் திறந்து பார்த்தனர்.
பிறகு, " ஸந்யாஸாபேக்ஷை இன்னும் உம்மை விட்டிலதோ? "
என்று சொன்னார்.

" அடியேனுக்கு க்ரஹஸ்த தர்மத்தில் ஈஷத்தும் இச்சை
இல்லை. ஐஹிக விஷயங்களில் ஸ்ப்ருஹை இல்லை " என்றார்
வீரராகவாசார்யர்.

" தத்வதர்சிகளான மஹர்ஷிகள் க்ரஹஸ்தர்களாயிருக்கவில்
லையா? குருகேசன், நடாதூர் அம்மாள், அப்புள்ளார், தேசிகன்
முதலானவர்கள் க்ரஹஸ்தர்களாயில்லையா? அவர்களை யெல்லாம்
பரமைகாந்திகளாக லோகம் ஒப்புக்கொள்ளவில்லையா? அவர்கள்
த்ருணலோஷ்ட காஞ்சநர்களாயிருக்கவில்லையா? எக்காலும் நீர்
அவர்களுக்கு ஸமமாவீரோ? மஹா ப்ரஹ்மவித்தான கேசவா
சார்யருடைய ஏகபுத்ரியைக் கண்ணால் ஒரு தரம் காணாமலே பரி
த்யாகம் செய்ய இச்சிக்கின்றீரே! அதனால் அந்த மஹாந் எவ்வ
ளவு கஷ்டப்படுவர்? அந்தப் பெண்ணினுடைய துக்கம் தீர்க்க
மாய் வளராதோ? அவள் தாயார் துடித்துப்போகமாட்டாளோ?
அஹிம்ஸை பரமதர்மமாச்சுதே. அவ்வளவு ஹிம்ஸையை உண்
டாக்கத் துணிந்த ஸந்யாஸேச்சை எப்படிப்பட்டதோ? ஏன் யோ
சிக்கமாட்டீர்? " என்று ஸ்வாமி வருந்திச் சொன்னார்.

" அடியேன் ப்ரதிவசநமளிப்பதாய்த் திருவுள்ளம் பற்றக்
கூடாது. அடியேனை க்ஷமிக்கவேண்டும். ஜந்மாந்தர வாஸனை
தான் காரணமோ? இப்போது அடியேன் ஸ்வாமி க்ருபையால்
அடைந்த ஜ்ஞாநந்தான் காரணமோ? அடியேனுக்குத் தெரிய
வில்லை. அடியேனுடைய சித்தமோ இப்போது விஷயத்தைத் திர
ஸ்கரிக்கின்றது. அந்த ஸ்திதியில், மநோவ்ருத்தியை அநுஸரித்
தன்றோ வாக்வ்ருத்தியும் காயவ்ருத்தியும் ஏற்பட வேண்டும்.
தேஜீயஸர்களான தேசிகாதிகளுடன் அடியேனை ஒப்பிடலாமோ?

நிவ்ருத்தராகர்க்கு க்ரஹம் தபோவநம். அவர்கள் ஸம்ஸார்த்தி
லிருந்துகொண்டே ஸந்யாஸிகளென வர்த்திப்பார்கள். அவ்வ
ளவு த்ருடமான சித்தபரிபாகம் அடியேனுக்கு உள்ளதாய் எண்
ணமாட்டேன். அதனுடைய தத்கால ஸ்திதியை ஸந்யாஸத்தால்
காப்பாற்ற இச்சிக்கின்றேன்" என்று வீரராகவாசார்யர் சொன்
னார்.

ஸ்வாமி அந்த வார்த்தைகளைக் கேட்காதிருந்ததுபோல் இருந்து
விட்டார். வீரராகவாசார்யரும் சற்று இருந்து பார்த்துவிட்டு
வெளியே சென்றார்.

இரண்டு மூன்று திங்களுக்குள் ஸ்வாமிக்கு நோய் வ்ருத்தி
யடைந்தது. பலவிடங்களில் வஸித்த சிஷ்யர்கள் ஸ்வாமியின்
தேஹஸ்திதியைத் தெரிந்துகொண்டு உப்பிலியப்பன் கோவிலில்
வந்து சேர்ந்தார்கள். ஸ்வாமியின் க்ருபையை நம்பி யிருந்தவர்
களெல்லோரும் ஆத்மோஜ்ஜீவநத்தின் பொருட்டு அநுஷ்டிக்க
வேண்டிய உபாய பூர்த்தியை ஸ்வாமியின் க்ருபையால் ஸம்பா
தித்துக்கொண்டார்கள். ஸ்வாமிக்கு தேஹத்தில் துர்ப்பலம் நீள
வும், மநோவ்யாபாரம் விஸ்தரித்தது. ஸ்வாமியினுடைய நிர்யா
ணம் ஸமீபித்து விட்டதாக எண்ணிய பலர், பிற்காலம் ஸ்வாமியி
னுடைய ஸ்தாநத்தில் ஒரு யதி ஏற்பட வேண்டிய ப்ரயத்நத்தில்
ஆழ்ந்தனர். தேரெழுந்தூர் ஆராவமுதய்யங்கார் என்கிற ஒருவெள்ள
கிகர் அந்த ப்ரயத்நத்தை முதன்மையாக வஹித்தார். ஸ்ரீ வைஷ்
ணவர்கள் கும்பல்கும்பலாகக் கூடிப் பேசினார்கள். ஸ்வாமி திரு
நாட்டுக்கு எழுந்தருளிவிட்டால் சிஷ்யர்களில் யாராவது ஸந்ய
ஸித்துக்கொள்ளலா மென்று த்ருப்தி யடையாதவர்களாய், ஸந்ய
ஸித்துக்கொள்ள வேண்டியவரை ஸ்வாமியே நியமிக்க வேண்டு
மென்றும், அவர்க்கு ஸ்வாமியே மந்த்ரோபதேசம்செய்ய வேண்டு
மென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

அதன்பிறகு, அந்த ஊரில் அப்போது கூடியிருந்த சிஷ்யர்க
ளெல்லோரும், ஸ்வாமி பயநித்திருந்த ஸ்தலத்தில் வந்து கூடினார்



கள். ஜநங்களின் கூச்சலும் தொந்தரவும் நீங்கி ஏகாந்தமாக இருக்
கவேண்டிய காலத்தில் ஸ்வாமிக்குக் கஷ்டம் மேலிட்டது. பகு
சிஷ்யர்களைப் பரிக்ரஹிக்கும் ஸ்வாமிகள் அவஸாந காலத்தில்
படும் கஷ்டத்தைப்பார்த்து ஸஹிப்பது கூடுமோ? அப்போது
புத்தியோ வ்யாபரிக்க முற்றிலும் சக்தியற்றதாய்ப் போகின்றது.
மநஸோ ஸம்மோஹத்தை அடைகின்றது. ஆவியோ நிலையினி
ன்று சலிக்கின்றது. வேறு ஸ்வாமி ஏற்படவேண்டிய கவலையோ
சிஷ்யர்களைப் பாதிக்கின்றது. தெய்வாநுகூலத்தால் ரங்கநாத
ஸ்வாமி மடத்து ஸ்வாமியல்லர். மட்டமானால் ஸ்தாநத்தை அபே
க்ஷிப்பவர்கள் பலர் ஏற்படுவார்கள். ஒவ்வொருவர்க்கும் ஸஹா
யம் செய்பவராகப்பலர் கூடுவார்கள். இவர்கள் ஒருவரோ டொரு
வர் கலகப்படுவார்கள். மடமிருந்த ஸ்தாநத்தில் யார்க்கு மநுஷ்
யக் கட்டுப்பாடு மிகுந்ததோ அவர் ஆஸ்தாநத்தைக் கொண்டு
போவது வழக்கம். இவ்வளவு துக்கம் ஏகாந்த ஸந்யாஸிகளு
டைய சிஷ்யர்களை இதுவரையில் பாதிக்கவில்லை. ஆனாலும் ஒரு
ஸந்யாஸியை மிகவும் அபிமாநித்தவர்கள், அவருடைய ஸம்பந்தத்
தைப் பெற்ற மற்றொருவரை அவருடைய நிர்யாணகாலத்தில்
ஸ்வாமியாக அபேக்ஷிக்கின்றார்கள்.

கூட்டமும் கூச்சலும் மிகுதியடையவே, ஸ்வாமி கண்களைத்
திறந்தார். சுற்றிநின்றவரைப் பார்த்துப் பயந்தார். "ஏன் இவ்
வண்ணம் என்னை ஹிம்ஸிக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

உடனே, ஆராவமுது அய்யங்கார், "ஸ்வாமியை நம்பியிரு
ந்த அடியேங்களுக்குக் கதியொன்று காட்டி ரக்ஷிக்க வேண்டு
மென்று ப்ரார்த்திக்கிறேன். இந்த சிஷ்யர்கள் எல்லோரும் அவ்
வண்ணமே ப்ரார்த்திக்கிறார்கள்" என்று சொன்னார்.

"நான் என்ன கதி உங்களுக்குக் காட்டக்கூடும். நானோ
ரக்ஷகன். இருந்த காலம் ஆச்ரிதர்களுக்கு ஹிதத்தை யதாசக்தி
செய்தேன். இன்னும் என்ன செய்யவேண்டும்?" என்று ஸ்வாமி
சொன்னார்.

"இந்தத் திருவடி ஸம்பந்தத்தைப் பின் காலத்தில் பகு ஆஸ்திகர்கள் அபேக்ஷிப்பார்கள். அந்தப்படியே அநுக்ரஹ மடைந்த ஓர் ஸ்வாமியை அடியேங்களுக்குக் காட்டித்தர வேண்டும்" என்றனர் ஆராவமுது அய்யங்கார்.

"நான் என்ன காட்டித்தர வேண்டும்? எனக்கு சிஷ்யர்கள் இருக்கின்றார்களே. ப்ராசார்ய ரூபமான என்னுடைய ஸம்பந்தம் வேண்டியவர், அவர்களில் எவரிடமாகிலும் ஆச்ரயிக்கலாமே" என்றனர் ஸ்வாமி.

"சிஷ்யர்க்குள் ப்ரதானரை ஸ்வாமியே குறிப்பிட்டுத் துர்யாச்ரமத்தையும் அவர்க்குத் தந்தருள வேண்டும்" என்றனர் அய்யங்கார்.

"ஒரு ஸ்ரீ வைஷ்ணவரைப் பார்த்து, "நீர் ஸந்யஸித்துக்கொள்ளும் என்று நானா சொல்வது! வைராக்ய முள்ளவர் தாமே ஸந்யஸித்துக் கொள்வர். இல்லாதவரை நான் கேட்கலாமோ?" என்றனர் ஸ்வாமி.

இதற்குள், ஆராவமுதய்யங்காரும் மற்றோரும், பண்டிதர்களாக அவ்விடம் கூடியிருந்த பல ஸ்ரீ வைஷ்ணவர்களை ப்ரார்த்தித்தார்கள். ஒருவர் தனக்குக் குடும்பம் பெரிதென்றும், தான் ஸந்யஸித்துக்கொண்டால் குழந்தைகள் கஷ்டப்பட்டுப்போம் என்றும் சொன்னார். மற்றொருவர் தம்முடைய பத்நீ ஸம்மதிக்க மாட்டாள் என்றனர். வேறொருவர் குமாரர் பட்டணத்தில் பாஷாந்தரம் படிப்பதாயும், அவருக்கு ஒரு வ்ருத்யுபாயம் ஏற்பட்டால், பிறகு ஸந்யஸித்துக்கொள்வதாயும் சொன்னார். ப்ரார்த்திக்கப்படாத மற்றொருவர், தனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் பார்யையிடம் அதைத் தந்து, அவளுக்கு ஸமாதாநம் சொல்லிவிட்டு ஸந்யாஸத்துக்கு வருவதாகச் சொன்னார். இன்னுமொருவர் பார்யை யிடம் தமக்கு விருப்பம் குறையவில்லை யென்றார். தக்க வயதடைந்தவரும், ஸந்யஸித்துக் கொள்ளத்தக்கவருமான பண்டிதர்கள் யாவரும் இவ்வண்ணமே வார்த்தைகள் சொல்லி ஸந்யாஸம் பெற்றுக்



கொள்ள இணங்கினாரில்லை. இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்வாமியானவர், "அய்யங்காரே! என்ன சொல்லுகின்றீர்?" என்றனர்.

அய்யங்காரும், "இது என்ன அந்யாயம்! ஸ்வாமியினுடைய க்ருபையை ஸம்பாதித்துக்கொண்ட பண்டிதர்களுக்குள் ஒருவர்க்காவது வைராக்யம் நிலைத்திலதா? இதற்குத்தானா அத்யாத்ம சாஸ்த்ரம் அப்யஸித்தது? நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயத்தை ரக்ஷிக்கத்தக்கவர் இங்கே யாரும் இலரா?" என்றனர்.

"ஸ்வாமி அநுக்ரஹித்தால் அடியேன் ஸந்யஸித்துக் கொள்கின்றேன்" என்று ஒருசப்தம் உண்டாயிற்று. சப்தம் உண்டான ஸ்தலத்தை யாவரும் பார்த்தார்கள். அஞ்ஜலியில் குவிந்த கைகளுடன், ப்ரஹ்மதேஜஸ் ஜ்வலிக்க, ஹித்தமாக நின்றார் நாவல்பாக்கம் வீரராகவாசார்யர். அவரை ஸ்வாமி கடாக்ஷித்தார். ஸ்வாமி முகத்தில் வ்யஸநக்குறி விளங்கியது. "பகுநாளாக ப்ரார்த்திக்கின்றேனே. இப்போதாகிலும் க்ருபைசெய்யக்கூடாதா?" என்று சொன்னார் வீரராகவாசார்யர்.

அவ்விடம் நின்ற யாவரும் கைகளைக் கூப்பிக்கொண்டு வீரராகவாசார்யர் ப்ரார்த்தனையை அங்கீகரிக்கவேண்டுமென்று ஸ்வாமியை வேண்டினார்கள். ஸ்வாமி அவரைக் கிட்டவரச் சொல்லி மந்த்ரோபதேசம் செய்தனர். காஷாயத்தை எடுத்து அவரிடம் கொடுத்தார். எல்லாரும் த்ருப்தி யடைந்தார்கள். ஸ்வாமிக்கும் தொந்தரவு நீங்கிற்று.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

[illegible] நம:

# தென்கலை வடகலை த்வேஷம்.

"What is it to be a great man? Is it to have lofty aims, t lead a pure life, to keep your honour virgin; to have the esteei of your fellow citizens, and the love of your fire-side; to bea good fortune meekly; to suffer evil with constancy; and throug- evil or good to maintain truth always? Show me the happy man whose life exhibits these qualities, and him we will salute as gentleman, whatever his rank may be; show me the prince who possesses them, and he may be sure of our love and loyalty."

[W. M. Thackeray.

"[illegible] நம:"

[[illegible]

சென்ற ஸஞ்சிகையில், தென்கலையார் வடகலையார் என்று இருவகைப் பட்டுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் பரஸ்பரம் அபரிமிதமான த்வேஷம் இருக்கின்றதென்றும், அந்த த்வேஷம் நமக்கு ஸ்வரூப விருத்தமென்றும் எழுதியிருந்தோம். பாகவதர்களாகிய ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பரிஹஸிக்க வேண்டு மென்றாவது, அவர்களுக்கு ஸ்வரூபபரீக்ஷணம் செய்யவேண்டு மென்றாவது நாம் அதை எழுதுவதில் ப்ரவ்ருத்திக்க வில்லை. நம்முடைய அபிவ்ருத்தியின் பொருட்டு நாம் தேடிக்கொள்ள வேண்டிய நன்மை ஏராளமாக இருக்க, அதைத் தேடிக்கொள்வதில் நமது கரணகளேபராதிகளை உபயோகியாமல், நமது நன்மைக்கு அதிமாத்ரம் விருத்தமா



யுள்ள காம க்ரோதாதிகளில் அவைகளைச் செலுத்துகிறோமே! என்னும் வருத்தமே நம்மை அம்மாதிரி ப்ரவ்ருத்தியில் ஏவிற்று. இப்பொழுது, அந்த த்வேஷம் நமக்கு எவ்விதத்திலாவது ஶ்ரேயஸ்கரம் ஆகுமா? என்பதைச் சற்று விசாரிப்போம்.

ஐஹிகத்திலோ, நமது தேஶத்தவர்கள் மிகவும் ஹீநஸ்திதியில் இருக்கிறார்கள் என்பது நிஷ்பக்ஷபாதிகளான எல்லாப் பெரியோர்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயம். அந்த ஹீந ஸ்திதியை நிவ்ருத்தித்துக் கொள்ளும் மார்க்கம் பல விருக்கின்றனவென்றும், அவைகளுக்கு வேண்டுவனவான உறுதியையும் பரிஶ்ரமத்தையும் நாம் கைக்கொண்டால் நமக்கு மிக்க மேன்மை கிடைக்கு மென்றும் இதைப்பற்றித் தீர்க்கமாக ஆலோசித்திருக்கும் பல மஹான்கள் உபதேஶிக்கிறார்கள். நிதர்ஶநமாக, நம்மைவிட அதிக கஷ்ட தஶையில் வருந்திக் கிடந்த சில தேஶாந்தரீயர்கள் தமது புத்தி ஶக்தியினுடையவும் தேஹ பரிஶ்ரமத்தினுடையவுமான அவலம்பத்தைக் கைப்பற்றி உந்நத பதவியை அடைந்திருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். நாமும் அவ்விதமாக மேன்மையை அடைய வேண்டுமானால், நமது புத்தி ஶக்தியையும் தேஹ பரிஶ்ரமத்தையும் பரஸ்பரம் த்வேஷம் செய்து கொள்வதில் செலவிடாமல், நமக்குள் ஒருவித ஐகமத்யத்தைப் பாவித்துக் கொண்டு, நம்மைப் பலவிதத்தில் வருத்தும் அளவற்ற துன்பங்களை விலக்கும் பொருட்டன்றோ நாம் ப்ரயத்நப்பட வேண்டும்? அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தியிற் செல்லாமல், எவ்வித ஹிதாஹித ஜ்ஞாநமுமின்றிக்கே, தமது துராபிநிவேஶங்களுக்குத் தாத்காலிகமாக அல்ப ப்ரீதியை விளைவிக்கும் த்ரோஹ கர்மங்களில் இவர்கள் இறங்குகிறார்களே! இது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு எவ்விதத்தில் அநுரூபமாகும்? தம்மையே நம்பி நிற்கும் களத்ர புத்ராதிகளைப் பசியினாலும் தாஹத்தினாலும் தபிக்கும்படி உபேக்ஷித்துவிட்டு யத்ருச்சையாகத் தமக்குக் கிடைக்கும் ஸ்வல்ப தநத்தை க்ஷணிகமான த்ருப்தியை ஸம்பாதித்துக் கொடுக்கும் மத்ய பாநாதிகளிற் செலவிடும் பாமர ஜநங்களுக்கும் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் வாசி யென்னவென்று நமக்குத் தெரியவில்லை. இந்த இருவர்களும் தமது ஹிதாஹிதங்களைக் கிஞ்சித்தும் அறியாதவர்களே; க்ஷணிகமான அல்பத்ருப்தியைத் தேடி ஶாஶ்வதமான தீங்கை விளைவித்துக்கொள்ளுகிறவர்கள்; தாம் நஶிப்பதல்லாமல், தம்மைச் சார்ந்தவர்களையும் நஶிக்கும்படி செய்கிறவர்கள். நமது ஆயுஸ் முழுவதும், ஶக்தி முழுவதும் நமக்கு ஸம்பவித்திருக்கும் துர்தஶையை நிவ்ருத்தித்துக்கொள்ளப் போதாமலிருக்கையில், அவை முழுவதையும், அபத ப்ரவ்ருத்தியிற் செலுத்தி வீணாக்குவது மௌட்யமன்றோ? இது எப்படி ஐஹிகத்தில் ஶ்ரேயஸ் ஸாதகமாகும்?

ஆமுஷ்மிகத்திலும், இம்மாதிரி நாம் பரஸ்பரம் த்வேஷத்தைப் பாராட்டுவது நமக்கு ஶ்ரேயஸ்கரமாகாதென்றே நமது ஶாஸ்த்ரம் உபதேஶிக்கின்றது.

" யஸ்யாமக்தி நிக்ருஹ்யா தேவதா ஸாஸாநிஷிகாரு "

என்னும் வாக்யத்தைச் சொல்லிக்கொண்டே பரஸ்பரம் அடித்துக்கொள்வ
திலும் மற்றும் பலவகைத் துன்பங்களை விளைவித்துக்கொள்வதிலும் ப்ரவ்ரு
த்திக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள், உண்மையாக ஶாஸ்த்ரத்திலுள்ள விஶ்வா
ஸத்தினாலும் அதனிடமிருக்கும் ஒரு பயத்தினாலும் அம்மாதிரி நடக்கிறார்
கள் என்று சொல்வது ஸாத்யமில்லை; இயற்கையாயுள்ள தௌர்ஜந்யமே
அம்மாதிரி ப்ரவ்ருத்திக்குக் காரணமாகின்றது என்று சொல்லவேண்டும்.
சில ஸுக்ருத விஶேஷத்தினால் ஸத்ஸந்ததியில் ஜந்மத்தைப்பெறும் சில
சேதந விஶேஷங்களுக்குக்கூட, ஜந்மாந்தர கர்மமடியாகத் துர்வாஸநைகள்
ஸம்பவிப்பதுண்டு. அந்தத்துர்வாஸநைகளுக்கு அநுகுணமான ப்ராணிஹிம்
ஸை முதலிய நீசவ்யாபாரங்கள் ப்ராஹ்மண ஜந்மத்திற்கு அஸம்பாவிதங்
களாகையால், அந்தத் துர்வாஸநைகளுக்குப் போக்கு விடும்பொருட்டு ஹிம்
ஸைக்குத் துல்யமான இம்மாதிரி இதர ஜுகுப்ஸித வ்யாபாரங்களில் இவர்
கள் ஶாஸ்த்ர வாக்யங்களில் ஏதாவதொன்றை வ்யாஜமாகக் கைப்பற்றி ப்ர
வ்ருத்திக்கிறார்களென்றே தோன்றுகின்றது. கீழ்ச்சொல்லப்பட்ட ஶாஸ்த்ர
வாக்யத்தின் தாத்பர்யமாவது — 'தைவமொன்று உண்டென்று தாம் அறி
ந்தும் மற்றவர்களுக்கு அதைத் தெளியப் போதிக்கும் ஶக்தியைப் பெற்று
மிருக்கும் பெரியோர்கள், தைவமில்லை யென்றும் அப்படி ஒரு தைவ
மிருந்தால் அது தோஷதுஷ்டமென்றும் நிந்திக்கும் அஸத்துக்களை யதா
ஶக்தி உபதேஶாதிகளால் திருத்தவும், அது ஸாத்யமில்லாவிடில் அவர்
களை யதாஶக்தி பரித்யாகம் செய்யவும் முயல வேண்டும்' என்பதுதான்.
'நிக்ருஹ்யாண' என்பதற்கு 'தமது ஶக்திக்கு வஞ்சனையில்லாமல் தடி
யடியால் ஸம்பாவிக்க வேண்டும்' என்பது அர்த்தமாகாது. அப்படிப்ப
ட்ட நிக்ரஹம் உபஶாந்தர்களாக இருக்கவேண்டும் ப்ராஹ்மணர்களுடைய
தர்மமாகாது. தமக்கு ப்ராப்தமில்லாமல் இதரர்களுக்கு ப்ராப்தமாக இருக்
கும் ஶிக்ஷணரூபமான அந்தத் தர்மத்தை இவர்கள் தமக்கு ஆரோபித்துக்
கொண்டால், தமக்குள் அடித்துக்கொண்டு நிற்கும் இயற்கையான தௌர்
ஜந்யத்திற்கு ஒரு வித கடைப்போக்கை இவர்கள் தேடி அதனால், துர்ஜநர்க
ளால் பஹுமதிக்கப்படும் ஒருவித துஷ்ட நிர்வ்ருதியை அடைய ப்ரயத்நப்
படுகிறார்களென்று சொல்லாமல் வேறு என்ன சொல்லக்கூடும்?

இன்னும் சிலர், 'இதர கலையார் தமது ஆசார்யர்களின் ஶத்ரு;
ஆகையால், அவர்களுக்கு த்ரோஹம் செய்வது ஆசார்ய கைங்கர்யமாகும்'
என்னும் ஒரு அநுமாநத்தைப் பாராட்டிக்கொண்டு பரத்ரோஹம் முதலிய
அக்ரமங்களில் ப்ரவ்ருத்திக்கிறார்கள். அந்த அக்ரமங்களை, இவர்கள் பாமர
க்ருத்யங்களென்றும் பகவந்நிக்ரஹஹேதுக்களென்றும் எண்ணுகிறதில்லை;
அவைகளால் நேரும் நித்ய கர்மங்களுடைய ஸங்கோசத்தையும் பெரிதா
கப் பாராட்டுகிறதில்லை; அதனால் தமக்கு ஸம்பவிக்கும் க்லேஶங்களையும் கொ
ஞ்சமேனும் கவனியாமல் இவர்கள் இரவும் பகலும் ஓடி ஆடி அலைவதை எல்



லாரும் பார்க்கலாம். இதுவும் ஶாஸ்த்ர ஸம்மதமாகுமோ? 'இதரகலையார்
தமது ஆசார்யர்களின் ஶத்ரு' என்று நினைப்பதே பிசகு; அப்படி அவர்
கள் ஆசார்ய ஶத்ருக்களாக இருந்தாலும், அவர்களுக்கு த்ரோஹம் செய்
வது ஆசார்ய கைங்கர்யமாகும் என்று நினைப்பது மிகப்பிசகு. ஶாஸ்த்
ரம் உபாதேயமானால், முழுவதும் உபாதேயமாக வேண்டுமேதவிர, நமக்கு
அபேக்ஷிதமான அம்ஶம் உபாதேய மென்றும் மற்றவையெல்லாம் அநுபாதே
யமென்றும் சொல்வது ஸரியன்று. ஆசார்ய கைங்கர்யத்தை யதாஶக்திசெய்
யவேண்டும் என்று விதிக்கும் ஶாஸ்த்ரமே, அத்ரோஹம் அஹிம்ஸை தயை
க்ஷமை முதலிய ஆத்மகுணங்களும் அவஶ்யம் அபேக்ஷிதங்களென்று விதி
க்க வில்லையா?

" அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ஶௌசமிந்த்ரியநிக்ரஹ: "

" ஸத்யம் வத "

" தர்மம் சர "

இத்யாதியான பல ஆஜ்ஞைகளையும் விதிக்கவில்லையோ? அவைகளை உல்லங்
கநம் செய்வது பகவத்ஸம்மதமாகுமோ? மஹத் ஸந்ததியில் ஜநித்து, ஸதா
சார்யனைத்தேடி அடைந்து ஆத்மவித்யையைக்கற்று, ஶாஸ்த்ரம் உல்லங்க
நம் செய்யத்தகுந்ததன்று என்னும் எண்ணத்துடன் அத்யந்தம் உபஶாந்தர்க
ளாய் பகுகாலம் ஸந்த்யோபாஸந ஔபாஸநாதிகளைக் குறைவறச் செய்து,
பிறகு அபர வயஸ்ஸில், 'இதர கலையாரை நிக்ரஹிக்காமல் காலமெல்
லாம் வீணாகிவிட்டதே!' என்னும் அநுஶயத்துடன்போல, ப்ராஹ்மணனுக்கு
உரிய க்ஷமை முதலிய நல்லகுணங்களைத் துறந்து அதிகுத்ஸிதங்களான
த்ரோஹ கர்மங்களில் ப்ரவ்ருத்திப்பதும், ப்ராத:ஸ்நாநாதிகளைக் கொஞ்ச
மேனும் கவனியாமல் அவைகளை இழந்தோமேயென்னும் அநுதாபமுங்
கொள்ளாமல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், ஜில்லாக்கோர்ட், ஹைக்கோர்ட் முத
லிய இடங்களில் அந்த்ய ஜாதியர்களுடன் நித்ய கர்மாநுஷ்டாந காலங்
களில் பேதமறக்கலந்து நிற்பதும், பகவத்யாகத்திற்கு என்று நிர்தேஶிக்
கப்பட்ட காலங்களில் வ்ராத்யர்களுடன் கலந்து இதர கலையாருக்கு எவ்
விதமான தீங்கு செய்யலாமென்று ஆலோசிப்பதும், இதுவரையில் அஶா
ஸ்த்ரீயமென்று விலக்கப்பட்டிருந்த ரயில்வண்டி ஸஞ்சாரம் பட்டண வா
ஸம் இவையெல்லாவற்றையும் பரமபோக்யமென்று நினைப்பதும் இவை
முதலான நிஷித்த வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கும் சில வைஷ்ணவர்
களை நாம் ஸாக்ஷாத்தாக அறிவோம். 'ஐயோ!'

" ஸம்ஸார ஸாகர: "

என்கிறபடி ஸம்ஸாரமாகிற கடலை அநேகமாகக் கடந்துநிற்கும் இவர்கள்
ஸ்வல்ப தூரத்தில் பதநத்தை அடைகிறார்களே!' என்று இவர்களைப் பார்க்
கும் ஒருவனுக்கு எப்படி வருத்தமுண்டாகாமல் இருக்கும்?

தவிரவும், ப்ராஹ்மணர்களுக்கு இம்மாதிரியான வ்யாபாரத்தை ஒரு தர்மமாக நமது ஶாஸ்த்ரம் உபதேஶிக்கவில்லையே. ப்ராஹ்மணர்களுக்கு வேண்டுவனவான நாற்பது ஸம்ஸ்காரங்களைப்பற்றிப் ப்ரக்கப் பேசின பிறகு, கௌதம மஹர்ஷி,

"அதாஷ்டாவாத்மகுணா:— தயா ஸர்வபூதேஷு க்ஷாந்திரநஸூயா ஶௌசமநாயாஸோ மங்கலமகார்ப்பண்யமஸ்ப்ருஹேதி"

'ப்ராஹ்மணர்களுக்கு அவஶ்யம் ஆத்ம குணங்களென்று எட்டுக் குணங்கள் அபேக்ஷிதங்கள்; அவையாவன— ஸர்வபூதங்களிடத்திலும் தயை, க்ஷாந்தி, அநஸூயை, ஶௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை' என்று சொல்லியிருக்கிறார். இந்தக் குணங்களின் லக்ஷணங்கள், ப்ருஹஸ்பதி மஹர்ஷியால் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கின்றன:—

"பரே வா பந்துவர்கே வா மித்ரே த்வேஷ்டரி வா ஸதா ।
ஆபந்நே ரக்ஷணம் யத்து ஸா தயா பரிகீர்த்திதா ॥
பாஹ்யே சாத்யாத்மிகே சைவ து:கே உத்பாதிதே பரை: ।
ந குப்யதி ந வா ஹந்தி ஸா க்ஷமா பரிகீர்த்திதா ।
[illegible] ।
ந [illegible] ஸாநஸூயா [illegible] ॥
அபக்ஷ்யபரிஹாரஶ்ச ஸம்ஸர்கஶ்சாப்யநிந்திதை: ।
ஸ்வதர்மே ச வ்யவஸ்தாநம் ஶௌசமேதத் ப்ரகீர்த்திதம் ॥
[illegible] ।
[illegible] ஸோ நாயாஸ: ப்ரகீர்த்தித: ॥
ப்ரஶஸ்தாசரணம் நித்யம் அப்ரஶஸ்தவிவர்ஜநம் ।
ஏதத்தி மங்கலம் ப்ரோக்தம் ருஷிபிஸ்தத்த்வதர்ஶிபி: ॥
ஸ்தோகாதபி ப்ரதாதவ்யம் அதீநேநாந்தராத்மநா ।
அஹந்யஹநி யத்கிஞ்சித் அகார்ப்பண்யம் ஹி தத் ஸ்ம்ருதம் ॥
யதோத்பந்நேந ஸந்தோஷ: [illegible] ।
[illegible] ஸாஸ்ப்ருஹா பரிகீர்த்திதா ॥"

இதன் அர்த்தமாவது:—



(1) ஶத்ருவாக இருந்தாலும் மித்ரனாக இருந்தாலும், ஒருவனை ஆபத்தி லிருந்து யதாஶக்தி ஸம்ரக்ஷிப்பதுதான் தயை.

(2) மற்றவர்கள் நமக்கு எவ்விதமான தீங்கைச் செய்தபோதிலும், அவர்கள்மீது கோபமில்லாமல் இருக்கைதான் க்ஷாந்தி.

(3) மற்றவர்களுக்கு எவ்வித ஶ்ரேயஸ் ஸம்பவித்தாலும், அதில் அஸூ யை கொள்ளாமல் ஆநந்திக்கும் குணமே அநஸூயை.

(4) அபக்ஷ்யங்களை விலக்குவதும், ஸத்துக்களுடன் ஸங்கம் செய்வதும், ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதுமே ஶௌசம்.

(5) தர்மத்தை ஒட்டியிருந்தபோதிலும் எப்பொழுதும் பீடாகரமாக இருக்கும் வ்யாபாரத்தை விலக்குவதே அநாயாஸம்.

(6) ப்ரஶஸ்தங்களான கார்யங்களைச் செய்வதும், அப்ரஶஸ்தங்களை விலக்குவதுமே மங்களம்.

(7) தமக்கு இருப்பது அல்பமாக இருந்தாலும், அதில் ஒரு அம்ஶத்தை ப்ரதிதினமும் ப்ரீதியுடன் மற்றவர்களுக்கு தானம்செய்வதே அகார்ப்பண்யம்.

(8) தம்முடைய ந்யாய்யமான பரிஶ்ரமத்தால் தமக்குக் கிடைக்கும் பொருளைக் கொண்டு த்ருப்தி யடைவதும், பிறருடைய பொருளுக்கு ஆசை ப்படாமல் இருப்பதுமே அஸ்ப்ருஹை.

இப்படி இந்த எட்டுக் குணங்களையும் ப்ராஹ்மணர்களுக்கு அவஶ்யம் அபேக்ஷிதங்களென்று சொல்லிவிட்டு, கௌதமர், பிறகு

"யஸ்யைதே சத்வாரிம்ஶத்ஸம்ஸ்காரா ந சாஷ்டாவாத்மகுணா ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி"

'ஒரு ப்ராஹ்மணனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களும் பூர்ணமாக இருந்தாலும், இந்த எட்டு ஆத்மகுணங்கள் இல்லாமற்போனால், அவனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி இல்லை' என்று சொல்லியிருக்கிறார். அதாவது— தேஹஸம்பந்தங்களான ஸம்ஸ்காரங்களைக்காட்டிலும் ஆத்ம குணங்களே ப்ரதானங்கள் என்பது தாத்பர்யம்.

இந்தக் கௌதம வாக்யம் நமக்கு ப்ரமாணமானால், இப்பொழுது பரஸ்பரம் ஸதா கலஹம் செய்துகொண்டிருக்கும் தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் எவ்விதத்தில் ப்ரஹ்மப்ராப்தி ஸம்பவிக்குமென்று நமக்

குத் தெரியவில்லை. உண்மையாகவே, இந்த எட்டு ஆத்மகுணங்களுமே முக்கியமான குணங்கள். இவைகளால் நிறைந்தவனை, "Him we wil salute as gentleman whatever his rank may be" என்று 'தா கெரே' என்பவரும், « [illegible] » என்று பா த்ருஹரியும் சொல்லியிருப்பதுபோல, நாம் உயர்ந்த பூஜையுடன் கொண் டாடலாம். இவை இல்லாதவன், மற்ற எல்லாவிதத்திலும் சிறந்தவனு இருந்தாலும் ஏற்றம் பெற்றவனென்று நம்மால் கொண்டாடத் தகுந்தவ னல்லன். இப்பொழுது நமது தேசத்தின் அபிவ்ருத்தியைத் தேடும் மஹான் ளெல்லாரும், முதலில், தமக்கும் தம்மைச்சேர்ந்த மற்றவர்களுக்கும் இந்த ஆத்மகுண பூர்த்தியை ஸம்பாதித்துக்கொள்ள ப்ரயத்நப்பட்டு அந்த ப்ர யத்நத்தில் தேர்ச்சியை அடைந்தாராகில், அவர்களால் கோரப்படும் அபி வ்ருத்தியின் அர்த்தாம்ஶம் ஸாதிதமாகிவிடும் என்பதில் ஆக்ஷேபமில்லை இந்த ஆத்மகுணங்களினால் நிறையாதவர்கள், இந்த ஆத்மகுணங்கள் இல் லாத விடத்தில் அபிவ்ருத்தியைத் தேட முயல்வது, எவ்விதக் கட்டட வேலையு மறியாத ஒருவன் உறுதியில்லாத களிமண்தரையில் அஸ்திபாரமின் றிக்குக் கட்டடங்கட்ட முயல்வதற்கே ஒக்கும். பகவத் கைங்கர்யமோ, ஆசார்ய கைங்கர்யமோ, மஹாஜந கைங்கர்யமோ, எதுவாக இருந்தாலும் ஆத்மகுண விருத்தமான மார்க்கத்தில் அது நோக்குமானால், அது அஸாது வான கைங்கர்யமே யாகும்! என்று நாம் சொல்லத் துணிவோம்.

தவிரவும்,

« [illegible] தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே »

என்று திருவாய் மலர்ந்தருளிய பகவான், 'கேவலம் உபதேசத்தினால் மாத்திரம் போதாது; அநுஷ்டாநத்தினாலும் தர்மத்தைக் காண்பிக்க வேண் டும்' என்று எண்ணியன்றோ திருவவதாரங்களைச் செய்தருளினது? ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்த காலத்தில் அவனுடைய கல்யாண குணங்கள் எப்படிப்பட்டன வென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்ப் போம்.

« [illegible] பூர்வபாஷீ ப்ரியம்வத: »
« ஸ ச நித்யம் ப்ரஶாந்தாத்மா »
« உச்யமாநோऽபி பருஷம் நோத்தரம் ப்ரதிபத்யதே »



« [illegible] »
« ஸாநுக்ரோஶ: »
« தீநாநுகம்பீ »
« அநஸூயோ ஜிதக்ரோத: »
« ந சாவமந்தா பூதாநாம் »
« [illegible] »
« ப்ரியவாதீ ச பூதாநாம் »

இத்யாதியான ஆத்மகுணங்களினால் நிறைந்தவனாகவன்றோ அவனை நாம் பார்க்கிறோம்?

« ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: »

என்று எல்லா ப்ரஜைகளும் 'ராமன்' 'ராமன்' 'ராமன்' என்று எப் பொழுதும் கொண்டாடிக் கொண்டிருந்தால் அதற்குக்காரணம், அவனுடைய ஸர்வ ப்ரஜா காந்தங்களான குணங்களன்றோ? அந்த குணங்களுக்கு விருத்தமான அநுஷ்டாநத்தில், அவனுடைய அடிமைகளாகிற நாம் ப்ரவ் ருத்திக்கத் துணிந்தால், அவனுடைய அநுக்ரஹத்திற்கு நாம் எப்படிப் பாத்ரமாவோம் என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படி ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் அத்யந்தம் அஶ்ரேயஸ்கர மாக இருக்கும் இந்த மார்க்கத்தில் ஏன் நமது ஸ்ரீ வைஷ்ணவர்கள் ப்ர வ்ருத்திக்க வேணும்? கீழ்ச்சொல்லப்பட்டுள்ள ஶாஸ்த்ரங்களை அவர்கள் அறியாதவர்களா? இன்னும் இதற்குச் சிறந்தவையான நூறு மடங்கு அதிகக் கணக்குள்ள ஶாஸ்த்ர வாக்யங்களை அவர்கள் சொல்ல ஶக்தர் களே. ஆனால், துராக்ரஹம் என்னும் பிஶாசத்தால் பிடிக்கப்பட்டவர்க ளாய்த் தமது ஹிதாஹிதங்களை அவர்கள் அறிகிறார்களில்லை. நாம் இம்மா திரி விஜ்ஞாபநம் செய்து கொள்வதும் அவர்களுக்கு மிக அப்ரியமாக இருக்கும். அப்படி அப்ரியமாக இருந்த போதிலும், 'இது பத்யமன்றோ?' என்பதைக் கொஞ்சம் ஶாந்த மநஸ்கர்களாய் அவர்கள் ஆலோசிக்கவே ண்டு மென்று மட்டில் நாம் மிக்க விநயத்துடன் ப்ரார்த்திக்கிறோம். தம் முடைய ஶ்ரேயஸ்ஸை அவர்கள் பெரிதாக நினைக்காவிட்டாலும், அவர்க ளுடைய இந்த அபத ப்ரவ்ருத்தி நிரபராதிகளான மற்றைக் கணக்கற்ற சேதநர்களை நஶிப்பிக்கிறபடியால், அந்தச் சேதநர்களின் ஶ்ரேயஸ்ஸை

உத்தேஶித்தாவது அந்த ப்ரவ்ருத்தியிலிருந்து அவர்கள் ஒழிவார்களென்று நம்புகிறோம். க்ரோதமென்பது பொல்லாத ஶத்ரு. அதைக் கொஞ்சம் ஆதரித்து அது வழியாகவே நாம் ஒரு தடவை சென்றால், பிறகு அதனிடமிருந்து நம்மை விடுவித்துக்கொள்வது துஸ்ஸாத்யமான கார்யம். நம்மை ஆக்ரமிப்பதுடன் நமது ஸம்ஸர்க்கம் பெற்றவர்களையும் அது ஆக்ரமிக்கும். அப்படி துஷ்டமான க்ரோதத்தைத் தூர விலக்கி ப்ராஹ்மணர்களுக்குரிய க்ஷாந்தியையும் தாந்தியையும் நமது ஸ்ரீவைஷ்ணவர்கள் கைக்கொள்ள மாட்டார்களோ? அக்காலத்தை பகவான் எப்பொழுது ஸங்கல்பிக்கப்போகிறான் என்று சாதக பக்ஷிபோல நாம் ப்ரதீக்ஷித்து நிற்கிறோம்.

“ விஹவெஷ்வபி வொஷமய ஹீ நஃ
வ்யஜமயடவி ஷ்யிதி ஈக்ஷயாம் டியா நஃ ।
விஷமெஷ்வபி ஸாவயது ஸஈக்ஷம்
வராவஷஃ கொடவி ஸ்ரீஷ்யிதஃ ஷ்யஜா நாஃ ॥ ”

[ ஸ்ரீநிகமாந்த மஹாதேஶிகன்.

“ A great man is one who never inflicts pain. He is patient forbearing and resigned on philosophical principles. He has too much good sense to be affronted at insults, he is too well employed to remember injuries and too indolent to bear malice.”

[J. H. Newman.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

## வில்லியம்பாக்கம் கோபால தாதார்யர்.

டுஷ்ஷ்ரேவத மொகொயம் யதஸ்ஸாய டுஷ்டி நஃ ।
நிஷமரெஜவிஷஜா ஶ்யமெ நிதரரம் கஜள ॥
“ நஷ் ஜாநவடம் டுஃவெகஃ மொவி தஃஷடுதி ”

என்கிறபடி பஹுஜந ஸம்பந்தமான துக்கத்தைப் பற்றி ஒருவன் தனிமையாகக் கரைவதில் பயனில்லையென்பது உண்மையாக இருந்தாலும், லோகத்திற்கு ஆத்மோஜ்ஜீவநத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய ஸதாசார்யர்கள் வர வர ம்ருக்யமாவதைப் பார்த்தால், ‘தத்வோபதேஷ்டாக்கள் இருக்கும் பொழுதே இந்தலோகம் தடுமாறிநின்றதே! இனி அவர்களும் அந்தர்தாநத்தை அடைந்தபிறகு லோகம் என் செய்யும்?’ என்று மிகக்கடிந ஹ்ருதயனுடைய நெஞ்சும் கொஞ்சம் வருந்தும். கேவலம் வாக்யார்த்த ஜ்ஞாநம் பலருக்கு ஸம்பவிப்பது உண்டு; ஆனால்,

“ ஶ்ருதா ஸஂஸ்க்ருதஂ ஸஂஸ்க்ருதஂ வரொவகாணீஷ்டஃ ”

என்கிறபடி கேவலம் அர்த்த ஸம்பாதநத்திற்கு மட்டில் அந்த ஜ்ஞாநம் அநேக விடங்களில் உபயோகப்படுவதையும், இன்னும் சிலவிடங்களில் அந்த ஜ்ஞாநம் ஸ்வபாவத்தினால் துஷ்டர்களாயிருக்குமவரிடம் அகப்பட்டுக் கொண்டு கேவலம் தௌஷ்ட்யத்திற்கு வர்த்தகமாகவும் அதனால் ஜகத்திற்குப் பெருத்த தீமையை விளைவிப்பதாகவும் பரிணமிப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். அம்மாதிரியான ஜ்ஞாநத்தை யுடையவர்கள் ஸதாசார்யர்களாகார். ஶ்ரமப்பட்டு ஸம்பாதிக்கப்பட்ட ஜ்ஞாநம் ஸ்வாநுஷ்டாநத்தில் எவருக்குப் பர்யவஸிக்கின்றதோ, எவரிடத்தில் ஜ்ஞாநத்துடன் கூடி ஆத்மகுணங்களும் வஸிக்கின்றனவோ, அவரே ஸதாசார்யராவார். அவர் க்ரந்த

காலக்ஷேபாதிகளைச் செய்விக்காமற் போனாலும், மற்றை எவ்வித ஸாக்ஷாத் உபதேஶத்திலும் ப்ரவ்ருத்தியாமலிருந்தாலும், அவருடைய ஸத்தையே ஜகத்திற்கு உத்தாரகமாகும். அப்படிப்பட்ட மஹான்கள், “ க்வசித் க்வசித் ” என்கிறபடி சிற்சிலவிடங்களிலும் சிற்சில காலங்களிலும்தான் தென்படுவார்கள். ‘ அவர்கள் இக்காலத்தில் அத்யந்தம் லோபத்தை அடைந்துவிடுகிறார்களே ! ’ என்பது தான் நமக்கு ஶோகத்தை விளைவிக்கின்றது. நமக்குத் தென்படாத விடங்களில் பல ஸாதுக்கள் இருக்கலாம் ; நமக்குத் தென்பட்ட வரையில், அந்த மஹான்கள் ஒவ்வொருவராக இந்த லோகத்தை விட்டு லோகாந்தரம் போய்விடுவதும், அவர்கள் ஸ்தானத்திற்கு வருபவர்கள் குணத்தில் குறைந்தவர்களாக இருப்பதும் இக்காலத்து ஸ்திதியாக இருக்கின்றதே! இதுவும் பகவத் விசேஷ்டிதமோ !

ப்ரக்ருதத்தில், ஸ்ரீ பெருமாள் கோயில் என்னும் திவ்ய தேஶத்தைச் சென்ற 62 ஸம்வத்ஸரமாக அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீ வில்லியம் பாக்கம் கோபால தாதார்யர் என்று ப்ரஸித்திபெற்ற ஒரு மஹான், நாளது ஆவணிமாஸம் 6ᵥ நித்ய விபூதிக்கு எழுந்தருளி விட்டார் என்பது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இவர், ஸ்ரீ தாதார்ய வம்ஶமென்று விக்யாதி பெற்ற ஆசார்யபுருஷவம்ஶத்தில் அவதரித்தவர். பால்யம்முதல் மஹத்தான ஸத்ஸங்கம் பெற்றவராய் ஶாஸ்த்ரீயமான மார்க்கத்தை அநுஸரித்துக்கொண்டு ஆஸ்திக்யத்தில் த்ருடமான விஶ்வாஸத்துடன் வளர்ந்துவந்தவர். ‘ திருப்புட்குழி ஸ்வாமி ’ என்று ஆஸ்திக வித்வச் சிரோமணிகளெல்லாராலும் கொண்டாடப்பட்ட மஹானிடம் இவர் ஆசார்யவரணம் செய்து, அந்தஸ்வாமியினிடமிருந்தே ஆத்ம வித்யாஸம்பத்துங்களான ஸர்வ க்ரந்தங்களையும் ஸேவித்து, அவருடைய கடாக்ஷமடியாகப் பகவத் ப்ரீதிக்குப் பாத்ரமாகி, பகவானிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸமஸ்த பாரத்தையுமுடையவனான ப்ரபந்நனுடைய தர்மாநுஷ்டாநாதிகளைக் குறைவற ஆமோக்ஷம் நடத்திவந்தார். திருப்புட்குழி ஸ்வாமியினிடத்தில் க்ரந்தார்த்வயம் செய்தவர்களுள் இக்காலத்தில் இவரொருவரே ஜ்ஞாந ஸம்பத்தால் நிறைந்தவரென்றும், வேதாந்த விஷயத்தில் இவரைவிடச் சிறந்தவர் இந்த ப்ரதேஶத்தில் ஒருவருமில்லையென்றும், ரஜஸ்தமோ குணங்களுக்கு அதீகமாக விஷயமாகாமல் ஸாத்விகாம்ஶம் தலையெடுத்து நின்ற ஸாதுக்களுள் இவர் அக்ர்யதமரென்றும் இவருடைய க்யாதியைச் சரிவர அறிந்திருக்கும் ஆப்தர்கள் சொல்லநாம் கேட்டிருக்கிறோம். தர்ம ஶாஸ்த்ரத்திலும் இவருடைய ஜ்ஞாநம்



அளவற்றதாம். தமது தேஹ பரிஶ்ரமத்தைக் கிஞ்சித்தேனும் கவனியாமல் ஆஶ்ரிதர்களான ஶிஷ்யர்களிடம் ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரவ்ருத்திப்பிப்பதில் இவருக்கு இருந்த குதூஹலம் அநிர்வசனீயமாம். இப்பொழுது தேஹ வியோகத்திற்கு வ்யாஜமாக நேரிட்ட வியாதியும், ஸமீபத்தில் ஆஶ்ரயித்த சில ஶிஷ்யர்களுக்கு க்ரந்த காலக்ஷேபம் அநுக்ரஹிக்க ப்ரயத்நப்பட்டதால் ஏற்பட்ட க்லேஶத்தையே முக்கிய காரணமாக உடையது என்று ஜநங்கள் சொல்லுகிறார்கள். ஆசார்யகத்தை வஹிக்கும் அநேக ஆசார்ய புருஷர்களை நாம் அறிவோம் ; அவர்களுள் பலர், அந்த ஆசார்யகத்தைக் கேவலம் ஒரு ஜீவந ஹேதுவாக மட்டில் வைத்துக்கொண்டு தமக்கு ஏற்பட்டிருக்கும் ‘ ஆசார்யன் ’ என்னும் பெயரை அந்வர்த்தமாகச் செய்யாமல் வீணாக்கி விடுகிறார்கள். இவர் அப்படியல்லர் ; ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை க்ரமமாக ஸேவித்து ஆத்ம வித்யையையும் பகவதநுக்ரஹத்தையும் பூர்ணமாகப் பெற்றிருக்குமவர்களுக்கு மட்டில் ‘ ஶிஷ்யர்கள் ’ என்னும் பெயர் அந்வயம் பெறுமாதலால், இந்த ஸ்வாமிக்கு ஸம்பவித்திருக்கும் ஶிஷ்ய ஸம்பத் மற்றை எந்த ஆசார்யனுக்கும் இல்லையென்று உறுதியாகச் சொல்லக்கூடும் ! துரீயாஶ்ரமம் வஹிக்குமவர்களுக்குக்கூட இவ்வளவு ஸம்பத் இல்லையென்று பலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட மஹோபகாரகராக இருந்த இந்த ஸ்வாமி இந்த விபூதியை விட்டு மறைந்தது பற்றி நாம் மிகவும் ஶோகிக்கிறோம்.

நிகர்வஸங்க விசார்லோ யதி ஸம்வேத்யம் மதா: ।
ஸநா ஸவிதா லோக ஜதி விஷாக-ஸா வய: ॥

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மதராஸ்.

நாளது ஸெப்டெம்பர் மாஸம் 3ᵥ ஞாயிற்றுக்கிழமை பகல் 3 - மணிக்கு, செங்கல்பட்டு ஜில்லா பல்லாவரத்தில் ஸ்ரீ: உப. திவான் பஹதூர் டி. ரங்காசார்யர் க்ருஹத்தில் ஷை ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்டாருடைய ஸங்கமொன்று நடைபெற்றது. அதில், ‘ ஸ்ரீ வேதாந்த தீபிகையை அபிவ்ருத்தமாகச் செய்யும் பொருட்டு ஒரு மூலதநமும், நமது ஸித்தாந்த ஸம்பத்துங்களான உபந்யாஸங்களைப் பரிகணிதர்களான பண்டிதர்களைக்கொண்டு அடிக்கடி செய்விக்கும் பொருட்டு மற்றொரு மூலதநமும், ஆஸ்திகர்க

42½

ளாக இருக்கும் பெரியோர்களிடமிருந்து யாசித்துச் சேர்க்கப்படவேண்டும்" என்று ஒரு நிர்ணயம் செய்யப்பட்டது. அந்த நிர்ணயத்தை அநுஸரித்து இப்பொழுது அடியேன் இந்தப் பத்ரிகைமூலமாக ஆஸ்திக மஹான்களெல்லாரையும் யாசிக்கத் துணிகின்றேன். இந்த யாசநத்திற்கு இணங்கி யாராவது த்ரவ்ய ஸஹாயம் செய்யும் பக்ஷத்தில், அதன் வரவு செலவு கணக்குத் தனியாகப் பதியப்பட்டு ப்ரதி மாஸமும் அந்தக் கணக்கின் ஸ்திதியும் தீபிகையில் ப்ரசுரம் செய்யப்படும். நாளது வருஷத்தில் தீபிகைக்கு மூலதநமாகப் பின் குறிக்கப்பட்டுள்ள ஸ்வாமிகள் அவரவர் பெயருக்கு நேரில் புதிந்திருக்கிறபடி உபகரித்திருக்கிறார்கள்:—

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், பல்லாவரம் ... | 10—0—0 |
| 2. | ஸ்ரீ. உப. ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர் ... | 10—0—0 |
| 3. | ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர் மயிலாப்பூர் ... | 10—0—0 |
| 4. | ,, டி. கோதண்டராமஐயங்கார், தஞ்சாவூர். | 10—0—0 |
| 5. | ,, எஸ். வாஸுதேவாசார்யர், மயிலாப்பூர் | 10—0—0 |
| 6. | ,, பி. ஆர். க்ருஷ்ணஸாமி ஐயங்கார், எழும்பூர் ... | 10—0—0 |
| 7. | ,, டி. அநந்தாசார்யர், திருப்பதி ... | 10—0—0 |
| 8. | ,, கே. ஏ. வீரராகவாசார்யர், சென்னை ... | 10—0—0 |
| 9. | ,, ஸி. குமாரசக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சிராப்பள்ளி ... | 10—0—0 |
| 10. | ,, எம். நரஸிம்ஹாசார்யர், நெல்லூர் ... | 10—0—0 |
| 11. | ,, கே. எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நாகபட்டணம் ... | 10—0—0 |
| 12. | ,, ஆர். நரஸிம்ஹாசார்யர், திருவல்லிக்கேணி ... | 5—0—0 |
| | ஆக ரூ. | 115—0—0 |

உபந்யாஸத்திற்கு மூலதநமாக இதுவரையில் ஒன்றும் கிடைக்கவில்லை. ... க்தர்களாயுள்ள ஆஸ்திகர்கள் அதற்கும் உபகரிக்க க்ருபை செய்ய வேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

எஸ். வாஸுதேவ...

மயிலாப்பூர்
18—9—16

கார்யதர்ஸி,

ஸ்ரீ. வை. ஸபை...

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

(1)

# ஸ்ரீ அஹோபிலம் ஸம்ப்ரோக்ஷணை.

சென்ற ஆவணி மாஸம் 26உ ஞாயிற்றுக்கிழமை தினம் ஏற்கெனவே நிஸ்சயித்திருந்தபடி ஸ்ரீ அஹோபிலம் ந்ருஸிம்ஹன், ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தை மஹத்தான ஸம்ருத்தியுடன் கண்டருளினனென்று கேட்டு நாம் மிகவும் ஆநந்திக்கிறோம். வர்ஷாகாலமாக இருந்து வர்ஷம் அமிதமாக ஸ்ரமப்படுத்துகையிலும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திவ்யோத்ஸவத்தை ஸேவிக்கவேண்டும் என்னும் ஔத்ஸுக்யத்தால் பஹுதூரத்திலிருந்தும் ஜநங்கள் ஏராளமாக வந்திருந்தார்களாம். ஸாங்கமாக வேதாத்யயநம் செய்தவர்களும் த்ராவிட காதைகளில் தேர்ச்சியடைந்தவர்களும், தர்க்க வ்யாகரண மீமாம்ஸா ஸாஸ்த்ரங்களில் சிறந்த வித்வான்களுமாக சற்றேறக்குறைய ஆயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்களாம். அப்படிப்பட்ட ஸமாஜத்தையும், அந்தப் பகவத் ஸேவையையும் அநுபவித்தவர்களின் பாக்யமே பாக்யம்.

இந்த ஸம்ப்ரோக்ஷணம் பஹுகாலமாக நடைபெறாமல், அந்த ப்ரதேஸத்திலுள்ள ஆஸ்திகர்களெல்லாருக்கும் மிக்க மனக்கலக்கத்தை ஜநிப்பித்துக்கொண்டிருந்தது. 'கலியுகத்தில் 5000 வர்ஷங்களுக்கப்பால், விஷ்ணு இந்தப் பூமியை விட்டு விலகிவிடுகிறார்' என்று ஸாஸ்த்ரம் சொல்லியிருக்கிறபடி ஸ்ரீந்ருஸிம்ஹ ரூபியாக இருக்கும் இந்த விஷ்ணுவும் ஒளிந்து விட்டாரோ? என்றும் சிலர் ஸங்கித்தார்கள். அநேக பட்டங்களாக மஹா க்யாதி பெற்ற மஹான்கள் ஆஸ்தாநத்தை அலங்கரித்து வந்தார்கள் என்பது உண்மையே. ஆனால், பல காரணங்களால் அவர்களுக்கு இந்த அஹோபிலத்தின் ஸ்ம்ருதியே ப்ரஷ்டமாக இருந்தது. இப்பொழுது இந்தத் திவ்யாஸ்தாநத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ ஸ்வாமிக்கு இது விஷயமாக ஜநித்திருந்த தீவ்ர உத்வேகத்தையும், எவ்வித விக்நமுமின்றிக்கு அவருடைய ... பெற்ற முடிவையும் ஆலோசித்துப் பார்க்கும் நமக்கு, 'இந்த மஹோத்ஸவத்தைக்கொண்டே இப்பொழுது நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷண ஸ்ரீ ந்ருஸிம்ஹனை நடத்திக்கொள்ள வேண்டும் என்னும் த்ருட ஸங்கல்பம் ...ண்மையாகவே, ...னுக்கு இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. ...வந்தவுடன் முதல் இந்தத் திவ்யாஸ்தாநத்தின் பூர்ணாதிகாரம் தமது கைக்கு வரும், அவ்விடத்திற்கு வில் ஸ்ரீ அஹோபிலம் யாத்ரை செய்யவேண்டுமென்...